# REPRINTS

## தமிழாக்கம்

தொகுதி *6*


**6/6**

Bible Students

*REPRINTS of the ORIGINAL WATCHTOWER*
*and Herald of Christ's Presence*

# மறுபதிப்புகள்

2018 டிசம்பர் வரை தமிழாக்கம்



Charles Taze Russell

1852 - 1916

# பொருளடக்கம் [INDEX]

## Reprints தமிழாக்கம் 2018 வரை


| S.No. | Reprints .No. | No. Pages | செய்தியின் தலைப்பு | Page No. |
|---|---|---|---|---|
| வருடம் 1879 #R 03 முதல் R 62 வரை | | | | |
| 01. | R 09 [Page -3] | 1 | சிங்காசனத்தில் அமர்த்தி விட்டார் [ Poem] He seats Her on Throne | 1 |
| 02. | R 13 ஜீலை 1879 | 3 | கிறிஸ்துவின் இரத்தம் | 2 |
| 03. | R 56 [Page-3] | 1 | ஓர் அழகுமிகு வஸ்திரம் | 5 |
| 04. | R 57[Page-3] | 4 | யோசேப்பு மற்றும் கிறிஸ்து | 6 |
| வருடம் 1880 #R 63 முதல் R 173 வரை | | | | |
| 05. | R 65 [Page-3] | 2 | [ Poem]உலத்தார்க்குப் பரிச்சயமற்ற மறு உலகத்தார்க்குமிகபரிச்சயமானவர். | 10 |
| 06. | R74 [Page-3] | 1 | [ Poem]சிற்பாசாரி | 12 |
| 07. | R 81 | 1 | இயேசுவோடு சிறிது நேரம் பேச வேண்டும் | 13 |
| 08. | R 84 [Page -5] | 2 | போஜன பலி | 14 |
| 09. | R 94 ஏப்ரல் 1880 | 2 | நம்முடைய பஸ்காவாகியகிறிஸ்து | 16 |
| 10. | R 114 [Page-3] | 1 | நிறைவானது வரும்பொழுது குறைவானது ஒழிந்து போகும் | 18 |
| 11 | R 125 [Page-3] | 1 | என்னுடைய தியாக பலி | 19 |
| 12 | R 144 [Page-3] | 1 | கர்த்தருடைய பர்வதம் | 20 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1881#R 175 முதல்R 310 வரை** | | | | |
| 13. | R 208<br>ஏப்ரல் 1881 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 21 |
| 14. | R 222<br>[Page -3] | 1 | வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள் | 24 |
| 15. | R 225<br>மே 1881 | 2 | நம்முடைய பஸ்கா | 25 |
| 16. | R 230<br>[Page -3 &15] | 1 | தேவன் அறிவார், நானறியேனே | 27 |
| 17. | R 239<br>[Page-3] | 1 | அவரது மேலான நாமத்தைத் தரித்துக்கொள்ளுதல் | 28 |
| 18. | R 241 | 1 | (தெரி. பத்திகள்) யார் பிரசங்கிக்கவேண்டும்? | 29 |
| 18A | R 295 | 5 | எக்ளீஷியா | 30 |
| **வருடம் 1882#R 311முதல் R 424 வரை** | | | | |
| 19. | R 325மார்ச் 1882 | 1 | பஸ்கா | 35 |
| 20. | R 348<br>[Page 3] | 1 | [Poem] முழு தத்தம் | 36 |
| 21. | R 390<br>[Page -5] | | [Poem] கர்த்தருக்காய் காத்திருப்பாய் | 37 |
| **வருடம் 1883 #R 425முதல் R 568 வரை** | | | | |
| 22. | R 427<br>[Page-3] | 1 | உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக. | 38 |
| 23. | R 440<br>[Page-3] | 1 | ஓர் இலவச மீட்பு | 39 |
| 24. | R 465<br>ஏப்ரல் 1883 | 6 | பஸ்கா | 40 |
| 25. | R 485மே 1883 | 3 | பதிலாள் தொடர்புடையகேள்விகள் | 46 |

| | | | | |
|---|---|---|---|---|
| 26. | R 490<br>[Page-3] | 1 | கவர்ந்திழுக்கப்பட்டு சோதனைக்குட்பட்டவரே. | 49 |
| 27. | R 509<br>ஜீலை 1883 | 2 | அப்பம் மற்றும் திராட்சரசம் | 50 |
| 28. | R 516<br>[Page -4] | 1 | [ Poem ] வாழ்க்கை எனும் மலை | 52 |
| 29 | R 525<br>[Page -3] | 1 | [ Poem ] எப்படி வாழ்திடலாம்? | 53 |
| 30. | R 536 | 3 | (தெ. பத்திகள்) சபை நிர்வாகம் | 54 |
| **வருடம் 1884#R 571முதல் R 706வரை** | | | | |
| 31 | R 573<br>[Page 2] | 1 | நில் | 57 |
| 32. | R 610<br>[Page-3] | 1 | வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே சற்றே இளைப்பாறிடுவீரே | 58 |
| 33. | R 611 | 3 | மாம்சம் மற்றும் இரத்தம் | 59 |
| 34. | R 664<br>R 295 | 5 | எக்ளீஷியா | 62 |
| 35. | R 664<br>[Page -4&41] | 3 | [ Poem ] உலகத்தோடு நடக்கும் சபை | 67 |
| **வருடம் 1885#R 707முதல் R 814வரை** | | | | |
| 36. | R 721<br>பிப்ரவரி 1885 | 2 | நம்முடை பஸ்காவாகிய கிறிஸ்து | 70 |
| 37. | R 732<br>[Page 3] | 5 | சரீரம் முழுவதும் கண்ணானால் | 72 |
| 38. | R 740<br>ஏப்ரல் 1885 | 4 | பஸ்கா இராப்போஜனம் | 77 |
| 39. | R 741<br>[Page 3] | 1 | கறிஸ்துவின் சீடன் | 81 |
| 40. | R 748 | 3 | காவல் கோபுரத்தின் ஒருகண்ணோட்டம் | 82 |
| 41. | R 761<br>[Page 3] | 1 | உடனுக்குடனே வருகிறதே | 85 |

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | R 776 [Page 3] | 1 | கர்த்தவே பேசும் | 86 |
| 43. | R 786 [Page 3] | 1 | அவளை விட்டு வெளியேறி உள்ளே வந்திடு. பேரழிவு நிகழுமுன்பே புறம்பே வந்துவிடு | 88 |
| **வருடம் 1886 #R 817 முதல் R 898வரை** | | | | |
| 44. | R 833 [Page 1] | 1 | எங்கள் அனுசரிப்பு | 89 |
| 45. | R 839 மார்ச் 1886 | 7 | கர்த்தருடைய இராப்போஜனம் | 90 |
| 46. | R 843 ஏப்ரல் 1886 | 3 | பாதம் கழுவுதல் | 97 |
| **வருடம் 1887 #R 899 முதல் R 996வரை** | | | | |
| 47. | R 899 பிப்ரவரி1887 | 3 | கர்த்தருடைய இராப்போஜனம் | 100 |
| 48. | R 910 | 1 | [ Poem] முழு தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களின் ஜெபம் | 103 |
| 49. | R 916 [Page 3] | 1 | நம் வாக்களிக்கப்பட்ட வானவில் | 104 |
| 50. | R 936 மே 1887 | 3 | நம்முடைய வருடாந்தர இராப்போஜனம் | 105 |
| 51. | R 943 | 1 | என் தயார் யார்? என் சகோதரர் யார்? | 108 |
| **வருடம் 1888 #R997 முதல் R1088 வரை** | | | | |
| 52. | R 1004 [Page 3] | 1 | [ Poem] தந்தை உன்னையே நேசிக்கின்றாரே | 109 |
| 53 | R 1013 மார்ச் 1888 [Page 3] | 10 | என்னைநினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள | 110 |
| 54. | R 1013 [Page 3] | 1 | (தெ. பத்திகள்) யாரைச் சேவிப்பீர்கள்? | 111 |

| | | | | |
|---|---|---|---|---|
| 55 | R 1021<br>ஏப்ரல் 1888 | 1 | அவர் வருமளவும் | 121 |
| 56 | R 1034 &<br>R 1539 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 122 |
| 57. | R 1075 | 3 | (தெ.பத்திகள்) தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே - பாகம் - 1 | 123 |
| **வருடம் 1889 #R 1089 முதல் R 1170 வரை** | | | | |
| 58. | R 1100<br>மார்ச் 1889 | 6 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான ஆண்டு நிறைவு நாள் | 126 |
| 59. | R 1136 | 1 | (தெ.பத்திகள்) இராஜரீகஆசாரியர்கள் மத்தியில் ஒழுங்கு | 132 |
| 60 | R 1159 | 2 | ஓர் உருவகக் கதை | 133 |
| **வருடம் 1890 #R 1171 முதல் R 1276 வரை** | | | | |
| 61. | R 1188 | 4 | கிறிஸ்துவினால் வரும் நிந்தனை / கிறிஸ்துவைக் குறித்த வெட்கம் | 135 |
| 62. | R 1193<br>[Page 3] | 1 | [ Poem] என்னுடைய ஒரு தாலந்து | 139 |
| 63. | R 1217<br>[Page 3] | 2 | நீங்கள் தான் கிறிஸ்துவினுடையவர்கள் | 140 |
| 64. | R 1268 | 1 | இவையெல்லாம் தேவனால் உண்டாயிருக்கிறது (இரண்டு பத்திகள்) | 142 |
| **வருடம் 1891 # R 1279 முதல் R 1346 வரை** | | | | |
| 65. | R1289<br>[R2270 &<br>R5191<br>பார்க்கவும்] | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 143 |

| | | | | |
|---|---|---|---|---|
| 66. | R 1318 | 1 | [ Poem ] கர்த்தரின் பட்டயம், கிதியோனின் பட்டயம் | 158 |
| **வருடம் 1892 # R 1347 முதல் R 1481 வரை** | | | | |
| 67. | R 1374 | 1 | [Poem] திராட்சைஆலையில் தனித்தே இருந்தே | 159 |
| 68. | R 1382<br>மார்ச் 1892 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 160 |
| 69. | R 1415 | 4 | நமது கர்த்தருடைய இடத்திற்கு | 163 |
| 70. | R 1431<br>[Page -3] | 1 | [ Poem ] வாரி இறைப்பவனே விருத்தியடைவான் | 167 |
| 71 | R 1448<br>[Page 3] | 2 | துன்பப்படுதலின் மூலமே பூரணமடையலாம். | 168 |
| 72. | R 1459 | 4 | ஊதாரி மகனுடைய திரும்பி வருதல் | 170 |
| 73 | R 1475 | 2 | நீர் எனக்குப் பந்தியை ஆயத்தப்படுத்தினீர் | 174 |
| **வருடம் 1893 #R 1485முதல் R 1604 வரை** | | | | |
| 74. | R 1504<br>மார்ச்1893 &<br>R 2436<br>பிப்ரவரி 1899 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 176 |
| 75. | R 1521 | 22 | பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் | 179 |
| 76 | R 1539 &<br>R 1034 | 1 | (தெ.பத்திகள்) யார் ஞானஸ்நானம் கொடுக்கலாம்? | 201 |
| 77 | R 1548 | 12 | தேவனுடைய ஒழுங்கில் புருஷனும், ஸ்திரீயும் | 202 |
| 78 | R 1559<br>[Page 3] | 1 | கர்த்தருக்குள் இளைப்பாருவீர்களாக | 214 |
| 79 | R 1591 &<br>R5882<br>[Page 105] | 4 | உயிர்த்தெழுந்தகிறிஸ்து | 215 |

| | | | | |
|---|---|---|---|---|
| **வருடம் 1894 # R 1605 முதல் R 1747 வரை** | | | | |
| 80 | R 1611 | 1 | [ Poem] புதிய தாள் வேண்டும் (புத்தாடை வேண்டும்) | 219 |
| 81. | R 1625<br>மார்ச்1894 | 3 | வருடாந்தர நினைவு கூருதல் இராப்போஜனம் | 220 |
| 82. | R 1635 | 2 | பொறாமை மற்றும் விரோதம் | 223 |
| 83. | R 1636<br>ஏப்ரல் 1894 | 3 | அடையாளங்களினுடைய முக்கியத்துவம் | 225 |
| 84. | R 1639 | 4 | யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்டார் | 228 |
| 85. | R 1640 | 2 | யோசேப்பு அதிகாரியாக எகிப்தில் | 232 |
| 86. | R 1645 | 4 | யோசேப்பு தனது சகோதரர்களை மன்னித்தல் | 234 |
| 87. | R 1646 | 3 | யோசேப்பின் இறுதி நாட்கள் | 238 |
| 88. | R 1648 | 4 | இப்படிப்பட்டவைகளைக் கேள்விப்பட்டது யார்? | 241 |
| 89. | R 1657<br>ஜீன் 1894 | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 246 |
| 90. | R 1657<br>ஜீன் 1894 | 1 | செங்கடலின் பாதை | 248 |
| 91. | R 1681 | 2 | எகிப்துக்குத் தப்பி ஓடுதல் | 249 |
| 92. | R 1695 | 2 | இயேசு தேவாலயத்தைச் சுத்திகரித்தல் | 251 |
| 93 | R 1704<br>[Page 3] | 1 | நான் கூட அவரைத் தெரிந்துகொள்வேன் | 253 |
| 94 | R 1710 | 4 | நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே | 254 |
| 95. | R 1720 | 4 | அறிமுகக் கடிதங்கள் | 258 |
| **வருடம் 1895 # R 1749 முதல் R 1907 வரை** | | | | |
| 96. | R 1761 | 2 | மறுரூபம் | 262 |
| 97 | R 1786<br>மார்ச்1895 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 264 |

| | | | | |
|---|---|---|---|---|
| 98. | R 1793 | 1 | நினைவுகூருதல் அடையாளங்களின் ஆராதனை ஒழுங்கு | 267 |
| 99 | R 1794 | 3 | நமது கர்த்தருடைய நிழலான வெற்றி | 268 |
| 100 | R 1800 ஏப்ரல்1895 | 2 | கர்த்தருடைய இராப்போஜனம் | 271 |
| 101 | R 1801 ஏப்ரல்1895 | 4 | கெத்செமனேயில் வியாகுலம் | 273 |
| 102 | R 1806 மே 1895 | 8 | உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துதல் | 277 |
| 103 | R 1809 மே 1895 | 1 | பிலாத்துவுக்கு முன்பாக இயேசு | 285 |
| 104 | R 1809 மே 1895 | 2 | பிரதான ஆசாரியனுடைய முன்னிலையில் இயேசு | 286 |
| 105 | R 1810 | 1 | [ Poem] பரிசுத்தமாவதற்கே காலம் இன்னும் வேண்டுமோ? | 288 |
| 106 | R 1815 மே 1895 | 3 | கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் | 289 |
| 107 | R 1832 & R 5284 ஆகஸ்ட்1913 | 11 | தேவசமாதானம் | 292 |
| 108 | R 1836 | 4 | அந்நிய அக்கினியைப் படைத்தல் | 303 |
| 109 | R 1837 | 1 | [ Poem] ஒருநாள்தான் நமக்குண்டு என்றால்? | 307 |
| 110 | R 1847 | 4 | Tract Society -இன் அறிமுகக் கடிதங்கள் | 308 |
| 111 | R 1866 | 9 | பிரயோஜனமான கூட்டங்கள் தொடர்பாக | 312 |
| 112 | R 1883 | 2 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 321 |
| 113 | R 1889 | 23 | நல்லொழுக்கமபயும்,கிரமமாயும் | 323 |
| 114 | R 1898 டிசம்பர்1895 | 7 | கர்த்தருடையபாத்திரம் மற்றும் கர்த்தருடைய போஜனபந்தி | 346 |
| 115 | R 1900 | 2 | வேதாகம ஆராய்ச்சிக்கான டாண் [Dawn] குழுக்கள் | 353 |

| | | | | |
|---|---|---|---|---|
| 116 | R 1900 [Page -5] | 2 | [ Poem ] விநோதனமான ஜனங்கள் | 355 |
| 117 | R 1902 | 2 | ( தெ. பத்திகள்) உண்மையுள்ள வேலையாட்களிடமிருந்து வரும் உற்சாகமூட்டும் வார்த்தைகள் | 357 |
| 118 | R 1904 [Page -285 & 205] | 1 | [ Poem ] தந்தாய் உந்தன் நாமம் வாழ்க | 359 |
| **வருடம் 1896 # R 1911 முதல் R 2081 வரை** | | | | |
| 119 | R 1915 | 3 | கிறிஸ்துவின் முன்னோடி | 360 |
| 120 | R 1937 | 6 | வார்த்தைகளில் நீதிமான் என்று தீர்க்கப்படுதல் அல்லது வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுதல் | 363 |
| 121 | R 1942 மார்ச் 1896 | 4 | நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதல் | 369 |
| 122 | R 1951 | 3 | இடுக்கமானவாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுகள் | 373 |
| 123 | R 1956 | 3 | கைகளை வைத்தல் | 376 |
| 124 | R 1988 ஜீன் 1896 | 2 | கிறிஸ்து இயேசு சிலுவையில் அறையப்பட்டார் | 379 |
| 125 | R 2018 [Page 3] | 1 | இயேசு என்ன செய்திடுவார்? | 381 |
| 126 | R 2068 | 5 | சாலொமோனுடைய பாவம் | 382 |
| 127 | R 2079 | 3 | (தெ. பத்திகள்) பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள் - எண்.2 | 387 |
| | | | **வருடம் 1897# R 2083முதல் R 2236 வரை** | |
| 128 | R 2099 | 4 | உலகத்திற்கான உப்பும், உலகத்திற்கான வெளிச்சம் | 390 |
| 129 | R 2115 | 4 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 394 |

| | | | | |
|---|---|---|---|---|
| 130 | R 2156 | 3 | உன் நாளைப் பொல்லாப்புக்குவிலக்கிக் காத்துக்கொள் | 398 |
| 131 | R 2168<br>[Page 3] | 1 | ராஜரீக ஆசாரியர்களின் மன விருப்பங்கள் | 401 |
| 132 | R 2220 | 4 | பரிசுத்தபவுலினுடைய இருதயம் வெளியானது | 402 |
| **வருடம் 1898 # R 2238 முதல் R 2410 வரை** | | | | |
| 133 | R 2264 | 10 | (தெ. பத்திகள்) ஏதோ புதுமையென்று திகையாமல் | 406 |
| 134 | R 2270<br>[ Page 54] | 1 | [ Poem ] யேசுவின் பாதம் சேரும் என்ன ஆனந்தம்? ஏன்னே பேரின்பம்? | 416 |
| 135 | R 2270<br>( R1289 & 5191 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 417 |
| 136 | R 2278<br>மார்ச் 1898 | 3 | பாதம் கழுவுதல் | 432 |
| 137 | R 2278<br>[ R 3593] | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 444 |
| 138 | R 2282<br>ஏப்ரல் 1898 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 447 |
| 139 | R 2291<br>ஏப்ரல் 1898 | 6 | நினைவுகூருதலின் ஆசரிப்பு | 449 |
| 140 | R 2291 | 3 | தெரிந்தெடுக்கப்பட்டபத்திகள் | 455 |
| 141. | R 2297<br>[ Page 128] | 1 | [ Poem ] நமது ராஜா ராஜரீகம் செய்கின்றார் | 458 |
| 142 | R 2312<br>மே1898 | 4 | பிலாத்துவின் முன்னிலையில் இயேசு - "அவரைநினைத்துக்கொள்ளுங்கள்" | 459 |
| 143 | R 2315<br>ஜீன் 1898 | 6 | சிலுவையில் அறையப்பட்டவர் மீதுஒருபார்வை | 463 |
| 144 | R 2379<br>நவம்பர்1898 | 6 | எசேக்கியாவின் மாபெரும் பஸ்கா | 469 |

| | | | | |
|---|---|---|---|---|
| 145 | R 2408 | 6 | ஒவ்வொருமனுஷனையும் பிரகாசிப்பிக்கிறமெய்யானஒளி | 475 |
| வருடம் 1899 #R 2411 முதல் R 2552 | | | | |
| 146 | R 2417 | 1 | [Poem ]முன்பொருகாலத்தில் | 481 |
| 147 | R2418 | 1 | [Poem] சீசரின் நண்பரா? - கிறிஸ்துவின் நண்பரா? | 482 |
| 148 | R 2424 | 5 | விசுவாசத்திற்கானபலன் அளிக்கப்பட்டது - உன் குமாரன் பிழைத்திருக்கிறான் | 483 |
| 149 | R 2429 பிப்ரவரி1899 | 1 | நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கானதியதி | 488 |
| 150 | R 2433 | 5 | இவைகளைப் பார்க்கிலும் பெரிதானகிரியைகள் | 489 |
| 151 | R 2436 பிப்ரவரி 1899 & R 1504 மார்ச்1893 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 494 |
| 152 | R 2436 [ Page 44] | 1 | [ Poem ] புதிய சிருஷ்டியின் மன விருப்பங்கள் | 497 |
| 153 | R 2437 | 6 | கூடாரப்பண்டிகையின் போது | 498 |
| 154 | R 2438 | 7 | மெய்யாக வேவிடுதலையாவீர்கள் | 504 |
| 155 | R 2441 | 5 | நல்ல மேய்ப்பன் - கிறிஸ்து | 511 |
| 156 | R 2442 | 2 | [தெ. பத்திகள்]தேவனைத் துதித்தலும், மனுஷனைச் சபித்தலும் | 516 |
| 157 | R 2447 ஏப்ரல்1899 | 5 | விலையேறப் பெற்ற நள ததைலமுள்ள வெள்ளைக்கல் பரணி | 518 |
| 158 | R 2449 R 4163 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 523 |
| 159 | R 2449 ஏப்ரல்1889 | 6 | நான் உங்களுக்குமாதிரியைக் காண்பித்தேன் | 524 |
| 160 | R 2453 ஏப்ரல்1899 | 6 | நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் | 530 |

| | | | | |
|---|---|---|---|---|
| 161 | R 2455 ஏப்ரல்1899 | 4 | வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார் | 536 |
| 162 | R 2458 | 1 | [ poem] ஒரு குவளைக் குளிர்ந்த நீர் | 540 |
| 163 | R 2464 மே1899 | 8 | நான் திராட்சச்செடி - நீங்கள் கொடிகள் | 541 |
| 164 | R 2467 மே1899 | 8 | கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் | 549 |
| 165 | R 2469 மே1899 | 5 | மாபெரும் பிரதானஆசாரியன் குற்றம் சாட்டப்பட்டார் | 557 |
| 166 | R 2470 மே1899 | 7 | பிலாத்துவின் முன் நல்லஅறிக்கை | 562 |
| 167 | R 2473 மே1899 | 8 | அவர் அக்கிரமக்காரரில் ஒருவராகஎண்ணப்பட்டார் | 569 |
| **வருடம் 1900# R 2553முதல் R 2747வரை** | | | | |
| 168 | R 2555 | 7 | அந்த வார்த்தை மாம்சமாகி | 577 |
| 169 | R 2558 | 5 | இயேசுவானவர் ஞானத்திலும் விருத்தியடைந்தார் | 584 |
| 170 | R 2562 | 9 | யோவான்ஸ்நானனின் பிரசங்கம் | 589 |
| 171 | R 2565 | 11 | அர்ப்பணிப்பைப் பின் தொடர்ந்தசோதனைகள் | 598 |
| 172 | R 2574 | 6 | மொண்டுகொள்ள பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே | 609 |
| 173 | R 2585 | 13 | நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனைப் பார்த்திரு | 615 |
| 174 | R 2589 | 7 | இராஜரீகப் பிரமாணம் பொன்னானசட்டம் | 628 |
| 175 | R 2590 | 7 | இயேசு அவனை நோக்கி எனக்குப் பின்சென்று வா என்றார் | 635 |
| 176 | R 2592 மார்ச் 1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 642 |
| 177 | R 2606 | 6 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு உவமை | 644 |

| | | | | |
|---|---|---|---|---|
| 178 | R 2620 | 5 | நம்பிக்கை குலைந்துபோன தீர்க்கத்தரிசியினுடைய ஞானமானபோக்கு | 650 |
| 179 | R2622<br>மே1900 | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 655 |
| 180 | R 2623 | 8 | அறிவு,பொறுப்புகளைஅதிகரிக்கின்றது | 657 |
| 181 | R 2625 | 5 | இரண்டு விதமான பாவிகள் | 665 |
| 182 | R 2630<br>[ Page 134] | 1 | [ Poem ] சில வருடம் மாத்திரமே | 670 |
| 183 | R 2635 | 4 | அறுவடையோ மிகுதி - வேலையாட்களோ குறைவு | 671 |
| 184 | R 2646<br>[ Page 168 & 259] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 675 |
| 185 | R 2651 | 7 | ஜீவஅப்பம் நானே | 676 |
| 186 | R 2654 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இனக்கமுள்ளவர்களுமாயிருங்கள் | 683 |
| 187 | R 2660 | 5 | இராஜ்யத்தில் சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் | 688 |
| 188 | R 2701 | 5 | ஏற்கமறுக்கப்பட்ட இராஜ விருந்து | 693 |
| 189 | R 2706 | 6 | காணாமல் போனவர்களுக்கானதெய்வீகஅக்கறை | 698 |
| 190 | R 2715 | 7 | அநீதியுள்ளஉக்கிராணக்காரன் | 704 |
| 191 | R 2722 | 11 | கிறிஸ்தவர்களின் அன்றாட ஜீவியம் | 711 |
| 192 | R 2743<br>டிசம்பர்1900 | 7 | நறுமணம் வீசியதைலம் | 722 |
| 193 | R 2745<br>டிசம்பர்1900 | 6 | ஓசன்னாவருகிறவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவா | 729 |

| வருடம் 1901# R 2751முதல் R 2928வரை | | | | |
|---|---|---|---|---|
| 194 | R 2757 | 7 | கிறிஸ்துவாகியகாந்தம் - நான் எல்லோரையும்இழுத்துக்கொள்ளுவேன். | 735 |
| 195 | R 2764 | 7 | அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக | 742 |
| 196 | R 2771 பிப்ரவரி 1901 | 9 | கர்த்தருடைய இராப்போஜனம் | 749 |
| 197 | R 2773 பிப்ரவரி 1901 | 7 | கெத்செமனே - விழிப்பும், ஜெபமும் | 758 |
| 198 | R 2778மார்ச் 1901 | 6 | இயேசு காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் கைவிடப்பட்டார் | 765 |
| 199 | R 2780 மார்ச் 1901 | 6 | நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துள்ளீர்கள் | 771 |
| 200 | R 2785 மார்ச்1901 | 6 | இந்த மனுஷனிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை | 777 |
| 201 | R 2787 மார்ச்1901 | 8 | பாவநிவாரணபலி நிறைவேற்றப்பட்டது | 783 |
| 202 | R 2793 ஏப்ரல் 1901 | 2 | பஸ்கா காலத்தின்போதான விசேஷித்தச் சோதனைகள் | 791 |
| 203 | R 2794 [Page 121] | 8 | மரித்தேன் ஆனாலும் உயிரோடிருக்கிறேன் | 793 |
| 204 | R 2870 | 1 | [Poem] நீர் பாய்ச்சப்பட்ட லீலி புஷ்பங்கள் | 800 |
| 205 | R 2880 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 801 |
| 206 | R 2885 | 5 | துன்பம் எனும் பள்ளிக்கூடத்தில் | 806 |
| 207 | R 2887 | 6 | ஏனெனில், தேவன் அவனோடே கூட இருந்தார் | 811 |
| 208 | R 2890 [Page 3] | 1 | விலை மதிப்பில்லா முத்து | 817 |
| 209 | R 2893 | 7 | இரக்கமுள்ள யோசேப்பு | 818 |
| 210 | R 2895 | 6 | சிறந்த ஒரு மனுஷனுடைய வாழ்க்கையின் முடிவு | 825 |

| | | | | |
|---|---|---|---|---|
| 211 | R 2909 | 6 | நான் உன்னோடே இருப்பேன் | 831 |
| 212 | R 2917<br>டிசம்பர் 1901 | 4 | நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டார் | 837 |
| 213 | R 2923 | 1 | [ Poem ] எடுத்துக்கொள்ளும் எம் இறைவா, பயன்படுத்தும் எமை உமக்காய் | 841 |
| 214 | R 2924 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 842 |
| **வருடம் 1902# R 2929முதல் R 3124வரை** | | | | |
| 215 | R 2951 | 6 | உதவிக்காரனாகிய ஸ்தேவான், கிறிஸ்தவ இரத்த சாட்சி | 843 |
| 216 | R 2986<br>[R5875] | 8 | ஜனேயாவும், தொற்காளும் | 849 |
| 217 | R 2989<br>[ 5879] | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 857 |
| 218 | R 2995 | 2 | (தெ.பத்திகள்) யுக மாற்றங்களைக் கவனித்தல் | 863 |
| 219 | R 3000 | 9 | ஆவிக்குரிய கணக்குகளை - வருடந்தோறும் கணக்குப்பார்த்தல் | 865 |
| 220 | R 3004 | 1 | (தெ.பத்திகள்) ஆதிகாலக் கிறிஸ்தவ சமயம் பரப்புபவர்கள் | 874 |
| 221 | R 3011 | 4 | (தெ.பத்திகள்) நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவித்தல் | 875 |
| 222 | R 3014 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 879 |
| 223 | R 3017<br>[R4374]<br>[R5892] | 6 | எருசலேமில் கூடின ஆலோசனைச் சங்கம் | 880 |
| 224 | R 3033 | 7 | அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து | 886 |
| 225 | R 3077 | 1 | (தெ.பத்திகள்) தேவனுடைய தாசனாகிய மோசே மரித்தார் | 893 |
| 226 | R 3089 | 5 | நீங்கள் உறுதிப்பட்டிருந்தும் | 894 |
| 227 | R 3092 | 4 | அடைக்கலத்திற்காக தப்பி ஓடுதல் | 899 |

| | | | | |
|---|---|---|---|---|
| 228 | R 3102 [Page 3] | 2 | தங்கம், சொர்ணம், பங்காரு, கோல்டு, பவுன், சோளா, போன்ற குணமுடையோரே | 903 |
| 229 | R 3135 | 10 | நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள் | 905 |
| 230 | R 3142 | 3 | உண்மையான தொழுவமானது ஒரு கூண்டல்ல | 915 |
| 231 | R 3159 & R 5935 | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 918 |
| 232 | R 3171 | 7 | மூப்பருக்குரிய பொறுப்புகள் | 922 |
| 233 | R 3178 ஏப்ரல்1903 | 3 | நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு | 929 |
| 234 | R 3210 | 2 | (தெ.பத்திகள்) தீமோத்தேயுவுக்கான பவுலினுடைய ஆணை | 932 |
| **வருடம் 1903# R 3125முதல் R 3293வரை** | | | | |
| 235 | R 3225 [Page 221] & R 5656 [Page 88] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 934 |
| 236 | R 3243 | 4 | உங்கள் நீதி | 938 |
| **வருடம் 1904# R 3294முதல் R 3478வரை** | | | | |
| 238 | R 3300 | 8 | போதகரும், அவருடைய செய்தியும் புறக்கணிக்கப்பட்டது | 942 |
| 239 | R 3307 | 6 | மனுஷரைப் பிடிக்கிறவர்கள் | 950 |
| 240 | R 3325 | 7 | விலை அதிகமுள்ள பேரம் | 956 |
| 241 | R 3337 | 7 | கிறிஸ்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார் | 963 |
| 242 | R 3354 | 7 | எஜமானுக்குக் காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாக இருங்கள் | 970 |
| 243 | R 3363 மே1904 | 6 | கடைசி இராப்போஜனம் | 977 |

| | | | | |
|---|---|---|---|---|
| 244 | R 3369 மே1904 | 10 | கிறிஸ்து எப்படி மற்றும் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் | 983 |
| 245 | R 3374 | 12 | இயேசுவினுடைய உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம் | 993 |
| 246 | R 3401 | 3 | தேவனுடைய தைரியமுள்ள மற்றும் துணிவற்ற ஊழியக்காரர்கள் | 1005 |
| 247 | R 3431 [Page 3] | 1 | அன்பின் பிரமாணம் | 1008 |
| **வருடம் 1905 # R 3479முதல் R 3687வரை** | | | | |
| 248 | R 3484 | 6 | நிரப்பப்பட்டு மாற்றப்பட்டது | 1009 |
| 249 | R 3500 | 8 | இரக்கத்தின் வீடு | 1015 |
| 250 | R 3508 | 9 | கூடாரப்பண்டிகை | 1023 |
| 251 | R 3517 | 4 | விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள் | 1032 |
| 252 | R 3521 [ Page 77&39] | 1 | [ Poem ] மறைக்கப்பட்ட சிலுவை | 1036 |
| 253 | R 3525 மார்ச் 1905 | 5 | நம்முடைய "பஸ்காவிகன்" நினைவுகூருதல் | 1038 |
| 254 | R 3534 ஏப்ரல் 1905 | 11 | மிகவும் விலையேறப்பெற்ற தைலம் | 1043 |
| 255 | R 3537 ஏப்ரல்1905 | 10 | உன்னதத்திலே ஓசன்னா | 1054 |
| 256 | R 3542 ஏப்ரல்1905 | 6 | ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் | 1064 |
| 257 | R 3544 ஏப்ரல்1905 | 11 | மெய்யான திராட்சச்செடி மற்றும் அதன் கனி | 1070 |
| 258 | R 3548 மே 1905 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1081 |
| 259 | R 3551 மே 1905 | 10 | நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன் | 1084 |

| | | | | |
|---|---|---|---|---|
| 260 | R 3553<br>மே 1905 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸதர் | 1094 |
| 261 | R 3556<br>[Page 3] | 1 | இயேசுவுடனே சிறிது நேரம் பேச வேண்டும் | 1102 |
| 262 | R 3560<br>மே 1905 | 9 | சரித்திரத்தில் நிகழ்ந்த மாபெரும் நிகழ்வு | 1103 |
| 263 | R 3593<br>R2278 | 12 | நாட்கள் பொல்லாதவைகளானதால் | 1112 |
| 264 | R 3606 | 2 | ஆண்டவரே, எனக்கான சிலுவையைத் தெரிந்தெடுத்துத் தாரும் | 1124 |
| 265 | R 3613 | 4 | தலையாயிருப்பவரைப் பற்றிப்பிடித்துக் கொள்ளாமை | 1126 |
| 266 | R 3635<br>செப்டம்பர் 1905 | 1 | யார் நினைவுகூருவது ஏற்றது? | 1130 |
| 267 | R 3638 | 2 | (தெ.பத்திகள்) நம் சார்பாய் இருப்பவர் பெரியவராயிருக்கின்றார் | 1131 |
| 268 | R 3655 | 4 | மகிமையின் மேல் மகிமை | 1133 |
| **வருடம் 1906# R 3693முதல் R 3912வரை** | | | | |
| 269 | R 3700 | 6 | மகிமையான அறிவிப்பு | 1137 |
| 270 | R 3702 | 5 | நம்முடைய இராஜாவுக்கு அன்பளிப்புகள் | 1143 |
| 271 | R 3706<br>ஜனவரி 1906 | 2 | பஸ்கா நினைவுகூருதல், ஏப்ரல் 8, 1906 | 1148 |
| 272 | R 3718<br>[Page 3] | 3 | மனதிரும்பி வந்த கெட்டக் குமாரன் | 1150 |
| 273 | R 3726 | 8 | வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூம் | 1153 |
| 274 | R 3728 | 8 | பாவமன்னிப்பு | 1161 |
| 275 | R 3744 | 2 | சக-அங்கத்தினர்களைத் தண்டித்தல் | 1169 |
| 276 | R 3745 | 5 | தவறிழைக்காத் தன்மையும், சபைக்கான மூப்பர்த்துவமும் | 1171 |

| | | | | |
|---|---|---|---|---|
| 277 | R 3746 | 8 | நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து கவனியுங்கள் | 1176 |
| 278 | R 3749 ஏப்ரல்1906 | 8 | பஸ்காவைப் பலியிட வேண்டிய | 1184 |
| 279 | R 3751 | 4 | ஒருவராலொருவர் பட்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் | 1192 |
| 280 | R 3752 | 9 | ஓய்வுநாளின் கடமைகளும், சிலாக்கியங்களும் | 1196 |
| 281 | R 3754 | 7 | இயேசுவுக்குள் உயிர்தெழுதலின் வல்லமை | 1205 |
| 282 | R 3759 Page [118] | 1 | [Poem] மணவாளனின் புறா | 1212 |
| 283 | R 3759 ஏப்ரல் 1906 | 6 | உனக்காக வேண்டிக்கொண்டேன் | 1213 |
| 284 | R 3769 | 1 | (தெ.பத்திகள்) மே மாதத்திற்கான பெரோயா வேதாகம ஆராய்ச்சி | 1219 |
| 285 | R 3779 | 7 | அவர் பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார் | 1220 |
| 286 | R 3795 | 2 | (தெ.பத்திகள்) பரலோக இராஜ்யத்தில் பெரியவன் | 1227 |
| 287 | R 3800 | 2 | (தெ.பத்திகள்) அன்பின் மீதான பெரோயா வேத ஆராய்ச்சி | 1229 |
| 288 | R 3803 | 8 | எனக்கு பிறன் யார்? | 1231 |
| 289 | R 3820 [R5909] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 1239 |
| 290 | R 3826 | 5 | (தெ.பத்திகள்) ஸ்திரீயானவளின் சரி மற்றும் தவறு | 1243 |
| 291 | R 3831 | 6 | பந்திக்கு முன்பாகவும், பின்பாகவும் மாபெரும் போதகரால் பேசப்பட சம்பாஷணைகள் | 1248 |
| 292 | R 3841 | 7 | தாழ்மையுடன் இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் | 1254 |

| | | | | |
|---|---|---|---|---|
| 293 | R 3850 செப்டம்பர் 1906 | 7 | கர்த்தருடைய நாமத்தில் வருகின்றவர் | 1261 |
| 294 | R 3864 | 11 | லேவியின் புத்திரரைச் சுத்திகரித்தல் | 1268 |
| 295 | R 3867 | 8 | புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் | 1279 |
| 296 | R 3877 அக்டோபர் 1906 | 7 | அவளால் இயன்றதை அவள் செய்தாள் | 1287 |
| 297 | R 3879 அக்டோபர் 1906 | 7 | என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1294 |
| 298 | R 3885 நவம்பர்1906 | 10 | பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் | 1301 |
| 299 | R 3887 நவம்பர்1906 | 6 | அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் | 1311 |
| 300 | R 3895 நவம்பர்1906 | 8 | எத்தரென்னப்பட்டாலும், நிஜஸ்தர் | 1317 |
| 301 | R 3900 டிசம்பர்1906 | 11 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுவேன் | 1325 |
| 302 | R 3906 | 1 | (தெ.பத்திகள்) பயண சகோதரர்களின் ஊழியங்கள் | 1336 |
| **வருடம் 1907# R 3913முதல் R 4108வரை** | | | | |
| 303 | R 3932 | 5 | சகோதர சிநேகமுள்ளவர்களாய் இருங்கள் | 1337 |
| 304 | R 3938 | 1 | (தெ.பத்திகள்) பொருளாசையின் அபாயம் | 1342 |
| 305 | R 3943 | 2 | உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1343 |
| 306 | R 3971 | 5 | சகோதரர்களால் பகைக்கப்பட்டவர் | 1345 |
| 307 | R 3972 | 7 | துன்பத்தின் மத்தியில் பொறுமையாய்ச் சகித்தல் | 1350 |
| 308 | R 3978 | 8 | என்னைக் கணம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன் | 1357 |

| | | | | |
|---|---|---|---|---|
| 309 | R 3980 | 7 | இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 1365 |
| 310 | R 4008 | 9 | அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கான புத்திமதி | 1372 |
| 311 | R 4021 [Page 203] | 1 | [Poem] உங்கள் பிதா உங்களுக்கு இன்னதுதேவை என்றறிவார் | 1381 |
| 312 | R 4022 [ Page 203 & 371 ] | 1 | [ Poem ] உன்னுடனே பேசுகின்ற நானே அவர் | 1382 |
| 313 | R 4030 | 7 | அந்நிய அக்கினியைப் படைத்தவர்கள் | 1383 |
| 314 | R 4033 | 3 | தேவனோடே போர்ப்புரிதல் | 1390 |
| 315 | R 4034 [ Page 229] | 1 | [ Poem ] ராஜாவின் பிரசன்னத்திலுள்ளே | 1393 |
| 316 | R 4057 [ Page 281 & 375] | 1 | [ Poem ] இப்போதே வேண்டாம் எனதன்பு மகனே | 1394 |
| **வருடம் 1908 # R 4109முதல் R 4300வரை** | | | | |
| 317 | R 4112 | 7 | கர்த்தருடைய வழியை ஆயத்தம் பண்ணுதல் | 1395 |
| 318 | R 4115 | 9 | கர்த்தருடைய சம்பத்தைக் கண்டுபிடித்தல் | 1402 |
| 319 | R 4121 | 5 | போதித்தல் என்றால் என்ன? (சகோதரிகளுக்காக ஒரு வேண்டுகோள்) | 1411 |
| 320 | R 4124 | 9 | மறுஜென்மகாலமும் இராஜ்யமும் | 1416 |
| 321 | R 4127 பிப்ரவரி 1908 | 7 | முதலாம் மாதத்தில் பஸ்கா | 1425 |
| 322 | R 4130 | 8 | தாகத்துக்குத் தா | 1432 |
| 323 | R 4146 மார்ச்1908 | 8 | ஜீவ அப்பம் நானே | 1440 |
| 324 | R 4148 மார்ச்1908 | 8 | நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன் | 1448 |
| 325 | R 4153 மார்ச்1908 | 2 | நினைவுகூருதல், ஏப்ரல் 14 | 1456 |
| 326 | R 4157 | 8 | மேய்ப்பன், வாசல், மந்தைகள் | 1458 |

| | | | | |
|---|---|---|---|---|
| 327 | R 4160 | 9 | நான் அவனை எழுப்பப்போகிறேன் | 1466 |
| 328 | R 4163 & R 2449 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள் | 1475 |
| 329 | R 4164 மே 1908 | 9 | வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி | 1476 |
| 330 | R 4167 மே 1908 | 8 | நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்டார் மற்றும் மறுதலிக்கப்பட்டார் | 1485 |
| 331 | R 4171 | 12 | ஏன் நமது கர்த்தர் சிலுவையில் அறையப்பட்டார்? | 1493 |
| 332 | R 4180 | 1 | [ Poem ] வரவேற்பு | 1505 |
| 333 | R 4183 | 5 | (தெ.பத்திகள்) இவர்களிலும் நீ என்னில் அன்பாய் இருக்கின்றாயா? | 1506 |
| 334 | R 4197 | 3 | (தெ.பத்திகள்) ஓர் இராஜாவின் - தேர்ந்தெடுத்தல் | 1511 |
| 335 | R 4203 [Page 205] | 2 | [Poem] இவள் தன்னால் இயன்றதை செய்தாள் | 1514 |
| 336 | R 4251 | 4 | சபை என்றால் என்ன? | 1516 |
| 337 | R 4262 [ Page 311] | 1 | [ Poem ] ஓய்வு நாள் தன்னின் இனிமை | 1520 |
| 338 | R 4286 [Page 157] | 5 | சமாதானத்தின் இராஜா பொறுப்பேற்கப்பட்டார் | 1521 |
| 339 | R 4290 [Page 363] | 8 | விரும்பித் தேடுங்கள், பின்னர் நாடி பெற்றுக் கொள்ளுங்கள் | 1526 |
| **வருடம் 1909 # R 4301முதல் R 4538வரை** | | | | |
| 340 | R 4312 | 3 | சொசைட்டியின் தலைமை அலுவலகத்தின் இடமாற்றம் | 1534 |
| 341 | R 4317 | 1 | [ Poem ] களிமண் | 1537 |
| 342 | R 4345 | 1 | (தெ.பத்திகள்) உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 1538 |

| | | | | |
|---|---|---|---|---|
| 343 | R 4346<br>மார்ச்1909 | 2 | (தெ.பத்திகள்) ஜெபத்திற்கு விடையாக விடுதலை | 1539 |
| 344 | R 4358 | 4 | கிறிஸ்து நமது பஸ்கா | 1541 |
| 345 | R 4359 | 1 | (தெ.பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கான ஆவி | 1545 |
| 346 | R 4363<br>[ Page 393] | 1 | [ Poem ] இன்று பெயர் சபைகளில் போதிக்கப்படும் அநேக போதனைகளில் | 1546 |
| 347 | R 4374<br>[R3017]<br>[R5892] | 6 | எருசலேமில்கூடின ஆலோசனைச் சங்கம் | 1547 |
| 348 | R 4375<br>ஏப்ரல் 1909 | 3 | நினைவுகூருதல் ஆசரிப்பு | 1553 |
| 349 | R 4380 | 3 | (தெ.பத்திகள்) நன்மைக்கு (அ) தீமைக்கு ஏதுவான நாவின் வல்லமை | 1556 |
| 350 | R 4384<br>மே1909 | 3 | பஸ்கா மற்றும் பாவநிவாரணநாளின் பலிகள் | 1559 |
| 351 | R 4417 | 5 | (தெ.பத்திகள்) தெசலோனிக்கேயருக்குப் பரிசுத்த பவுலடிகளார் மேய்ப்பரெனக் கொடுத்த ஆலோசனை | 1562 |
| 352 | R 4458 &<br>R5935 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 1567 |
| 353 | R 4461 | 1 | ( தெ.பத்திகள்) எங்களது மேற்கு மாநாட்டின் சுற்றுப்பயணம் | 1576 |
| 354 | R 4472 | 1 | ( தெ.பத்திகள்) எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் | 1577 |
| 355 | R 4485 | 1 | [ Poem] தேவசித்தமதிலே இளைப்பாறிடுவேனே | 1578 |
| 356 | R 4501 | 8 | சண்டைக்காரராயிருந்து | 1579 |
| **வருடம் 1910 # R 4539முதல் R 4732வரை** | | | | |
| 357 | R 4556 | 3 | கலிலேயாவின் தீர்க்கதரிசி | 1587 |

| | | | | |
|---|---|---|---|---|
| 358 | R 4558 | 4 | உங்கள் பிதா பூரண சற்குராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் | 1590 |
| 359 | R 4566 | 3 | தகுதியான மற்றும் தகுதியில்லாத இலட்சியங்கள் | 1594 |
| 360 | R 4577 | 3 | ஏதிரிாளியானவன் மீது வல்லமை / அதிகராம் | 1597 |
| 361 | R 4587 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பகுதி | 1600 |
| 362 | R 4587 | 3 | பாவமும், வியாதியும் தொடர்புடையவகள் | 1601 |
| 363 | R 4588 | 3 | ஆசீர்வாதத்தின் கால்வாயாகிய விசுவாசம் | 1604 |
| 364 | R 4590<br>ஏப்ரல்1910 | 8 | நினைவுகூருதலான பஸ்கா இராப்போஜனம் | 1607 |
| 365 | R 4593 | 4 | பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது | 1615 |
| 366 | R 4597 | 3 | எந்தளவுக்கு நாம் குற்றங்களை அறிக்கையிட வேண்டும்? | 1619 |
| 367 | R 4602 | 2 | பலிபீடத்திலிருந்து எடுக்கப்படும் அக்கினித்தழலின் முக்கியத்துவம் | 1622 |
| 368 | R 4605<br>மே 1910 | 4 | இரத்தத்தினைச் சதாரணமானதாய் எண்ணுதல் | 1624 |
| 369 | R 4608 | 3 | முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் | 1628 |
| 370 | R 4618 | 3 | ஆண்டவரே என்னை இரட்சியும் பரிசுத்தர் என்று பேதுரு கூப்பிட்டார் | 1631 |
| 371 | R 4634 | 3 | நல்ல நிலத்திற்கான நல்ல விதைகள் | 1634 |
| 372 | R 4635 | 3 | கோதுமை மற்றும் களைகள் | 1637 |
| 373 | R 4636 | 3 | இராஜ்யத்தின் காட்சிகள் | 1640 |
| 374 | R 4637 | 4 | இயேசு பூமிக்குரிய ஜீவனைப் பறிக்கொடுத்திடவில்லை | 1643 |

| | | | | |
|---|---|---|---|---|
| 375 | R 4642 | 1 | ( தெ.பத்திகள்) ஜீவன் கொடுத்துவைக்கப்பட்டது மாறாக செலுத்தித்தீர்க்கப்படவில்லை | 1647 |
| 376 | R 4658 | 1 | [Poem] ஊசியின் காதினிலே | 1648 |
| 377 | R 4658 | 4 | ஒட்டகமும், ஊசியின் காதும் | 1652 |
| 378 | R 4668 | 2 | பெரியவன் ஊழியக்காரன் | 1653 |
| 379 | R 4678 | 3 | தவறாய்ப் பயன்படுத்தப்பட்ட வாய்ப்புகள் எடுக்கப்பட்டன | 1655 |
| 380 | R 4686 | 3 | ஏசாவுடனான யாக்கோபின் நடத்தை இழிவானதா? | 1658 |
| 381 | R 4686 | 3 | சோதிக்கின்ற விதமான மூன்று கேள்விகள் | 1661 |
| 382 | R 4701 | 3 | அக்கினியைக் கட்டகளையிட உமக்குச் சித்தமா? | 1664 |
| 383 | R 4703 அக்டோபர் 1910 | 3 | என்னை நினைகூரும்படி இதைச் செய்யுங்கள் | 1667 |
| 384 | R 4707 நவம்பர் 1910 | 4 | இருளான கெத்செமனே வேளை | 1671 |
| 385 | R 4709 | 1 | ( தெ.பத்திகள்) அவர் அரைக்கட்டிக்கொண்டு அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் | 1675 |
| 386 | R 4710 நவம்பர் 1910 | 5 | தேவனை தூஷிக்கிறவராகக் குற்றஞ்சாட்டப்பட்டார் | 1676 |
| 387 | R 4711 நவம்பர் 1910 | 4 | சுய/தன்நம்பிக்கை ஒரு பெலவீனமாகும் | 1681 |
| 388 | R 4712 நவம்பர் 1910 | 4 | ஜீவாதிபதி சிலுவையில் அறையப்பட்டார் | 1685 |
| 389 | R 4730 | 3 | யோசபாத்தின் ஒரு தவறு | 1689 |
| **வருடம் 1911 # R 4733முதல் R 4942வரை** | | | | |
| 390 | R 4756 பிப்ரவரி 1911 | 3 | 1911 - நினைவுகூருதல் இராப்போஜனம் - 1911 | 1692 |

| | | | | |
|---|---|---|---|---|
| 391 | R 4770 | 1 | (தெ.பத்திகள்) கெட்ட வார்த்தை என்றால் என்ன? | 1695 |
| 392 | R 4771 | 2 | (தெ.பத்திகள்) உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 1696 |
| 393 | R 4794 [Page 104] | 3 | மாம்சத்தில் ஒரு முள் | 1698 |
| 394 | R 4794 [ Page 105] | 4 | திராட்சத் தோட்டத்தின் பாடல் | 1701 |
| 395 | R 4802 | 6 | சோர்ந்துபோகாதபடிக்கு அவரையே நினைத்துக்கொள்ளுங்கள் | 1705 |
| 396 | R 4809 [Page 136] | 6 | சரீரத்தை ஒடுக்குதல் / அடக்குதல் | 1711 |
| 397 | R 4821 | 4 | புதிய வேதாகம வகுப்புகளை ஏற்படுத்தும் பணி | 1717 |
| 398 | R 4838 | 4 | உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு | 1721 |
| 399 | R 4851 | 1 | [Poem] சிலுவையில்லையேல் கிரீடமில்லையே | 1725 |
| 400 | R 4892 | 3 | இரவின் கீதங்கள் | 1726 |
| 401 | R 4895 [Page 3] | 1 | கொஞ்சம் நேரமே | 1729 |
| 402 | R 4905 | 4 | (தெ. பத்திகள்) நமது கர்த்தருடைய ஜீவ - உரிமைகள் மீதான கேள்விகள் | 1730 |
| 403 | R 4915 [Page 413] | 2 | [Poem] ஹ! ஆசிக்கிறேன் | 1734 |
| 404 | R 4917 | 6 | அன்பைக் குறித்து சுயபரிசோதனை | 1736 |
| 405 | R 4927 | 3 | மற்றவர்களிடத்திலான நம்முடைய பொறுப்பு | 1742 |
| 406 | R 4929 | 2 | (தெ. பத்திகள்) அறுவடை என்பது விசேஷித்த சோதனை காலமாகும் | 1745 |
| 407 | R 4939 | 3 | இராஜ்யத்திற்குரிய ஆயத்தங்கள் | 1747 |
| 408 | R 4940 | 3 | மகா பெரிய தீர்க்கதரிசி | 1750 |

| | | | | |
|---|---|---|---|---|
| 409 | R4942 | 3 | ஆலயத்தில் அர்ப்பணிப்பு | 1753 |
| **வருடம் 1912 # R 4955முதல் R 5152வரை** | | | | |
| 410 | R 4968 | 1 | (தெ. பத்திகள்) வார்த்தைகளல்ல ஜீவியமே உண்மையான.... | 1756 |
| 411 | R 4971 [Page 54] | 1 | [Poem] சிலவேண்டாமே, சில வேண்டுமே | 1757 |
| 412 | R 4977 | 8 | நீதியான கண்டித்தல் மற்றும் தவறை மன்னித்தல் | 1758 |
| 413 | R 4979 | 4 | அவர், அவர்களுடைய வியாதிகளைச் சொஸ்தமாக்கினார் | 1766 |
| 414 | R 4984 | 6 | மனஸ்தாபங்களைச் சரிப்படுத்திடுவதற்கான தேவவாக்கிய விதி | 1770 |
| 415 | R 4994 | 4 | சகோதர சிநேகம், தீர்மானிக்கிற பரீட்சையாகும் | 1776 |
| 416 | R 5020 | 4 | உண்மையுள்ள வார்த்தைகள் - அடக்கமான பேச்சு | 1780 |
| 417 | R 5021 | 5 | ஜெபம் ஒரு மாபெரும் சிலாக்கியமாகும் | 1784 |
| 418 | R 5047 | 4 | இராஜ்யம் ஒரு பரிசு | 1789 |
| 419 | R 5050 ஜீன் 1912 | 1 | (தெ. பத்திகள்) புளித்த மா பற்றின உவமை | 1793 |
| 420 | R 5085 | 6 | கிறிஸ்துவினுடைய பலி | 1794 |
| 421 | R 5096 | 4 | தேவனுடைய வார்த்தைகளே தவிர, மனிதர்களுடையதல்ல | 1800 |
| 422 | R 5103 | 4 | அவர் எல்லாவற்றையும் நன்றாயச் செய்தார் | 1804 |
| 423 | R 5111 | 4 | வானத்திலிருந்து ஓர் அடையாளம் | 1808 |
| 424 | R 5120 | 4 | மாபெரும் கேள்வி | 1812 |
| 425 | R 5122 | 1 | தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி | 1816 |
| 426 | R 5122 | 2 | (தெ. பத்திகள்)சுவாரசியமான கடிதங்கள் | 1817 |

| | | | | |
|---|---|---|---|---|
| 427 | R 5128 | 3 | மீட்பின் வேலையினுடைய இரண்டு பாகங்கள் | 1819 |
| 428 | R 5128 | 3 | எல்லாம் கூடும் | 1822 |
| 429 | R 5129 | 3 | ஆவியை அவித்துப்போடாதிருங்கள் | 1825 |
| 430 | R 5131 | 1 | அதிகமான மூப்பர்கள் - அதிகமான வேலை | 1828 |
| 431 | R 5134 | 4 | ஏழெழுபது தரம் மன்னித்தல் | 1829 |
| 432 | R 5142 | 3 | பெரோயா வகுப்புகளுக்கான யோசனைகள் | 1833 |
| 433 | R 5147 [Page 387] | 5 | எதிராளியானவனுடைய சூழ்ச்சித்திறன் | 1836 |
| **வருடம் 1913 # R 5153முதல் R 5372வரை** | | | | |
| 434 | R5158 [ Page 10] | 1 | [ Poem ] நீதிமானின் குணம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிறது | 1841 |
| 435 | R 5161 | 2 | (தெ. பத்திகள்) சுவாரசியமான சில கடிதங்கள் | 1842 |
| 436 | R 5161 | 1 | (தெ. பத்திகள்) சுவாரசியமான கேள்விகள் | 1844 |
| 437 | R 5185 | 4 | மூப்பர்களுக்கான பரிசுத்த பேதுருவின் அறிவுரை | 1845 |
| 438 | R 5186 & R5809 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 1846 |
| 439 | R 5191 மார்ச் 1913 ( R1289 & R 2270 பார்க்கவும்) | 15 | வரவிருக்கின்ற நினைவுகூருதல் இராப்போஜனம் | 1851 |
| 440 | R 5195 [ Page 75] | 1 | [ Poem ] கெத்செமனே | 1866 |
| 441 | R 5195 [Page 3] | 1 | சம்பிரதாய கடமை ஜெபம் | 1867 |
| 442 | R 5208 [Page 3] | 1 | கெத்செமனே | 1868 |
| 443 | R 5214 | 1 | [Poem] கெத்செமனே | 1869 |

| | | | | |
|---|---|---|---|---|
| 444 | R 5214 | 5 | முகாந்தரமில்லாமல் பகைக்கப்பட்டார் | 1870 |
| 445 | R 5216 | 6 | துன்பப்பட்டவர் எனினும் தேற்றுபவர் | 1875 |
| 446 | R 5225 | 6 | விதைத்தலும் அறுத்தலும் | 1881 |
| 447 | R 5231 | 6 | பென்யமீனுக்கு ஐந்து மடங்கான பங்கு | 1887 |
| 448 | R 5232 | 6 | யோசேப்பின் சகோதரர்களால் கற்றுக்கொள்ளப்பட்ட பாடங்கள் | 1893 |
| 449 | R 5234 | 6 | பலியைப் பார்க்கிலும் இரக்கம் உத்தமமாயிருக்கிறது | 1899 |
| 450 | R 5241 [Page 3] | 1 | எத்தனை காலம் தேவனே? ஏத்தனை காலமோ? | 1905 |
| 451 | R 5255 | 1 | பெரோயா பாடங்கள் மற்றும் சாட்சிக் கூட்டங்கள் | 1906 |
| 452 | R 5272 ஜீலை 1913 | 4 | இஸ்ரயேல் தப்புவிக்கப்பட்டது (அ) கடந்து போகப்பட்டது | 1907 |
| 453 | R 5284 [Page 227] R 1832 [Page 153] | 11 | தேவசமாதானம் | 1911 |
| 454 | R 5304 | 2 | (தெ.பத்திகள்) உலகத்திலும், சபையிலும் தேவனுடைய மேற்பார்வை | 1922 |
| 455 | R 5315 | 1 | (தெ.பத்திகள்) ஒரு நல்ல மனிதனின் பாவம் | 1924 |
| 456 | R 5321 | 3 | சீஷயத்துவத்தின் ஆவியாய் இருக்கும் ஊழியத்தின் ஆவி | 1925 |
| 457 | R 5323 [Page 3] | 1 | அவர் நம்மைக் கைவிட மாட்டார், நம்மைத் தவறவிட்டார். | 1928 |
| 458 | R 5326 | 1 | [Poem] இடமிருக்குது, இடமிருக்குது | 1929 |
| 459 | R 5336 | 3 | மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் | 1930 |
| 460 | R 5341 நவம்பர் 1913 | 5 | நமது ஆசீர்வாதத்தின் பாத்திரம் | 1933 |

| | | | | |
|---|---|---|---|---|
| 461 | R 5341<br>(தெ.ப) | 2 | (தெ.பத்திகள்)இரத்தத்தில் ஜீவன் இருக்கிறது | 1938 |
| 462 | R 5342<br>நவம்பர் 1913 | 3 | நமது கர்த்தருடைய மாம்சத்தைப் புசித்தலுக்கும் மற்றும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுதலுக்குமான அர்த்தம் | 1940 |
| 463 | R 5346 | 7 | நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால் | 1943 |
| 464 | R 5350 | 2 | மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல் | 1950 |
| 465 | R 5358 | 3 | கர்த்தருக்கு ஒத்தக்குணலட்சணத்தின் சாயல் | 1952 |
| 466 | R 5362 | 4 | எழுபது ஊழியர்கள் நியமிக்கப்படுதல் | 1955 |
| 467 | R 5368 | 2 | அன்பின் பிரமாணங்கள் மற்றும் பாராளுமன்ற பிரமாணங்கள் | 1959 |
| 468 | R 5370<br>[Page 377] | 3 | அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவிப்பார்கள் | 1961 |
| 469 | R 5370<br>[Page 377]<br>R 5371<br>[Page 378] | 3 | மார்த்தாள் மற்றும் மரியாள் | 1964 |
| **வருடம் 1914 # R 5373முதல் R 5600வரை** | | | | |
| 470 | R 5374 | 4 | காலம் சமீபித்திருக்கறிது | 1967 |
| 471 | R 5375 | 6 | உண்மை ஊழியத்தின் மாபெரும் சிலாக்கியம் | 1971 |
| 472 | R 5377<br>[Page 10] | 4 | அந்தகாரத்தின் அதிபதி மற்றும் வெளிச்சத்தின் அதிபதி | 1977 |
| 473 | R 5377<br>[Page 11] | 2 | ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டோர் | 1981 |
| 474 | R 5378 | 3 | யாரெல்லாம் ஜெபிக்கலாம்? எதற்காக ஜெபிக்கலாம்? | 1983 |

| | | | | |
|---|---|---|---|---|
| 475 | R 5379 | 6 | ஜெபத்தோடும் விண்ணப்பத்தோடும் கூடிய ஸ்தோத்திரம் | 1986 |
| 476 | R 5383 | 3 | நிறைவேற நெருங்கி வருகிற தீர்க்கதரிசனம் | 1992 |
| 477 | R 5384 | 6 | ஜெபம் மற்றும் சாட்சி பகருதலுக்கான மேய்ப்பரது ஆலோசனை | 1995 |
| 478 | R 5388 | 3 | மூப்பர்களுக்கான பரிசுத்த பவுலின் அறிவுரை | 2001 |
| 479 | R 5389 | 4 | பரிசேயர்களே உங்களுக்கு ஐயோ! | 2004 |
| 480 | R 5390 | 4 | நல்ல அறிக்கை மற்றும் மோசமான அறிக்கை | 2008 |
| 481 | R 5391 | 1 | லேவியராகமம் 9 மற்றும் 16ம் அதிகாரங்கள் | 2012 |
| 482 | R 5391 | 8 | மேசியா - கிறிஸ்து - அபிஷேகம் பண்ணப்பட்டவர் | 2013 |
| 483 | R 5394 | 4 | தேவபக்தியாய் நடத்தல் துன்பத்தை வருவிக்கும் | 2021 |
| 484 | R 5396 | 4 | உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ | 2025 |
| 485 | R 5399 | 4 | உண்மையுள்ளோர் எச்சரிப்பாய் இருப்பர் | 2029 |
| 486 | R 5403 | 2 | நல்ல போர்வீரர்களாக தீங்கனுபவித்தல் | 2033 |
| 487 | R 5404 | 2 | தூய்மையற்ற நடத்தையின் ஒரு வடிவம், கவனக்குறைவான வாழ்க்கை | 2035 |
| 488 | R 5405 | 4 | ஓய்வுநாளில் செய்யப்படக்கூடிய நியாயமானவைகள் | 2037 |
| 489 | R 5408 | 3 | சுவாரஸ்யமான கேள்விகள் | 2041 |
| 490 | R 5409 | 3 | (தெ.பத்திகள்) சில சுவாரசியமான கடிதங்கள் | 2044 |
| 491 | R 5420 மார்ச் 1914 | 3 | நினைவுகூருதல் இராப்போஜனம், ஏப்ரல் 10-ஆம் தேதி | 2047 |
| 492 | R 5421 மார்ச் 1914 | 5 | உங்களால் கூடுமா? | 2050 |

| | | | | |
|---|---|---|---|---|
| 493 | R 5425 | 4 | சீஷத்துவத்திற்கான விலை | 2055 |
| 494 | R 5444 | 6 | ஐசுவாரியவான் நரகத்திற்கும் .... ஏழை பரலோகத்திற்கும் | 2059 |
| 495 | R 5445 | 6 | நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் | 2065 |
| 496 | R 5453 | 5 | ஒன்பது பேர் எங்கே? | 2071 |
| 497 | R 5455 | 5 | மேசியாவின் இராஜ்யம் கண்ணுக்குப் புலப்படாதது | 2076 |
| 498 | R 5472 [Page 169] | 4 | ஆரோனைப்போல் தேவனால் அழைக்கப்பட்டாலொழிய...... | 2081 |
| 499 | R 5473 | 5 | திராட்சத்தோட்டத்தில் வேலைக்காரர்கள் | 2084 |
| 500 | R 5474 | 2 | நல்நோக்கமுடையவர்கள், ஆனால் இடையூறானவர்கள் | 2089 |
| 501 | R 5501 | 2 | கொள்கையின் அடிப்படையிலான கிறிஸ்தவ சுயாதீனம் | 2091 |
| 502 | R 5510 | 5 | கலியாண விருந்து | 2093 |
| 503 | R 5517 | 1 | (தெ.பத்திகள்) நாவை அடக்குவது அவசியமாகும் | 2098 |
| 504 | R 5521 | 4 | பிரதான கற்பனைகள் | 2099 |
| 505 | R 5528 | 6 | தீமைபேசுதல் என்றால் என்ன? | 2103 |
| 506 | R 5532 [Page 269] | 1 | [Poem] சிலுவையில்லாமல் கிரீடமில்லை | 2109 |
| 507 | R 5538 செப்டம்பர் 1914 | 6 | இரட்சிப்பின் பாத்திரத்தினுடைய ஆசீர்வாதம் | 2110 |
| 508 | R 5541 செப்டம்பர் 1914 | 5 | பஸ்காவின் இரண்டு நினைவுகூருதல் சின்னங்கள் | 2116 |
| 509 | R 5550 செப்டம்பர் 1914 | 6 | ஏன் கெத்செமனேயில் வியாகுலம்? | 2121 |

| | | | | |
|---|---|---|---|---|
| 510 | R 5552 செப்டம்பர் 1914 | 5 | உண்மையற்ற ஒரு பொருளாளரின் வீழ்ச்சி | 2127 |
| 511 | R 5560 செப்டம்பர் 1914 | 4 | இயேசுவைக் கேலிக்குள்ளாக்கும் விசாரணைகள் | 2132 |
| 512 | R 5563 செப்டம்பர் 1914 | 3 | பரிசுத்தவானாகிய பேதுரு கோதுமையைப்போல் புடைக்கப்பட்டார் | 2136 |
| 513 | R 5570 செப்டம்பர் 1914 | 6 | இயேசு, பிலாத்துவினால் விசாரணைப் பண்ணப்பட்டார் | 2139 |
| 514 | R 5572 | 1 | [Poem] நன்றி சொல்கிறோம் | 2145 |
| 515 | R 5572 [Page 3] | 1 | நன்றி சொல்கிறோம் | 2145 |
| 516 | R 5572 [Page 3] | 1 | இயேசுவின் காலத்தில் நாம் வாழ்ந்திருந்தால் | 2148 |
| 517 | R 5577 | 1 | [ Poem]என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும் | 2149 |
| 518 | R 5577 நவம்பர்1914 | 5 | தேவனால், வாதிக்கப்பட்டவர், சிறுமைப்பட்டவர் | 2150 |
| 519 | R 5587 | 3 | [ தெ. பத்திகள்]சபையின் ஏற்படுத்துதல் | 2155 |
| 520 | R 5587 | 5 | சபையின் ஏற்படுத்துதல் | 2160 |
| 521 | R 5588 | 5 | அவர் தாம் முன்னிருந்த இடத்திற்கு | 2163 |
| **வருடம் 1915 # R 5601முதல் R 5819வரை** | | | | |
| 522 | R 5603 [Page 3] | 4 | நீதியான கோபமும் அநீதியான கோபமும் | 2168 |
| 523 | R 5604 | 3 | முதலாம் அர்மகெதோன் யுத்தம் | 2172 |
| 524 | R 5605 | 4 | துணிவின் நாயகன் - கிதியோன் | 2175 |

| | | | | |
|---|---|---|---|---|
| 524 | R 5606 | 3 | கிதியோனின் தைரியமுள்ள முந்நூறு வீரர்கள் | 2179 |
| 526 | R 5608 | 4 | சபைக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஜீவன் | 2182 |
| 527 | R 5611 [Page 19] | 5 | கல்லறையிலிருந்து வருவது ஆத்துமா, சரீரமல்ல | 2186 |
| 528 | R 5612 [Page 21] | 4 | சிம்சோனின் சோக முடிவு | 2191 |
| 529 | R 5613 [Page 23] | 4 | தாவீது ராஜாவஜின் கொள்ளுப்பாட்டி - ரூத் 1 | 2194 |
| 530 | R 5615 [Page 24] | 4 | கர்த்தருடைய சத்தம் | 2198 |
| 531 | R 5621 [Page 35] | 6 | நமது ஆண்டவரின் மனித ஜீவிய உரிமைகளை சாட்டுதலும் பிரயோகித்தலும் | 2201 |
| 532 | R 5621 | 8 | [ தெ. பத்திகள் ] நமது கர்த்தருடைய மனுஷீக ஜீவ - உரிமைகளின் சாற்றப்டுதல் மற்றும் பயன்படுத்தப்படுதல் | 2207 |
| 533 | R 5623 | 4 | உங்கள் பிதா அறிந்திருக்கிறார் | 2215 |
| 534 | R 5624 [Page 40] | 4 | மிகவும் உறுதியான ஆதாரம் தேவைப்படுகிறது. | 2219 |
| 535 | R 5626 | 3 | பொல்லாதவர்களின் கையில் தேவனுடைய பெட்டி | 2222 |
| 536 | R 5627 [Page 41] | 4 | பாவ அறிக்கை, மன்னிப்பு, வெற்றி | 2225 |
| 537 | R 5628 [Page 45] | 3 | சபை வனாந்தர நிலைமையிலிருந்து திரும்புதல் | 2229 |
| 538 | R 5630 [Page 51] | 9 | பரிசுத்தவான்களின் தற்கால கடமையும் சலுகையும் | 2231 |
| 539 | R 5633 | 4 | தூதர்களின் ஊழியம் | 2239 |

| | | | | |
|---|---|---|---|---|
| 540 | R 5635 [Page 59] | 4 | தக்க தருணம் | 2243 |
| 541 | R 5636 [Page 57] | 4 | குடியரசுக்கு பதிலாக விரும்பப்பட்ட முடியாட்சி | 2247 |
| 542 | R 5638 [Page 61] | 4 | சவுலின் தோல்விகளின் மூலம் கிடைக்கும் பாடம் | 2251 |
| 543 | R 5640 மார்ச் 1915 | 11 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2255 |
| 544 | R 5640 | 9 | பஸ்காவின் தெளிக்கப்படும் இரத்தம் | 2266 |
| 545 | R 5643 [Page 72] | 3 | தியாக அன்பும் கடமை அன்பும் | 2275 |
| 546 | R 5644 | 2 | [ தெ. பத்திகள்] தேவனிடத்திலான நம்முடைய தனிப்பட்டப் பொறுப்பு | 2277 |
| 547 | R 5645 | 5 | கீழ்ப்படியாத இஸ்ரயேலர்களிடத்தில் தேவனுடைய இரக்கங்கள் | 2279 |
| 548 | R 5647 [Page 76] | 6 | சவுல் கர்த்தரால் புறக்கணித்து | 2283 |
| 549 | R 5650 [Page 83] | 8 | பொறுமையுடன் சகித்தல் கடைசி சோதனை | 2288 |
| 550 | R 5652 | 2 | தன்னடக்கத்தின் முக்கியத்துவம் | 2295 |
| 551 | R 5653 [Page 90] | 5 | யேகோவா என் மேய்ப்பராயிருக்கிறார் | 2297 |
| 552 | R 5655 [Page 92] | 3 | கவனத்தை ஈர்க்கிற கேள்விகள் | 2301 |
| 553 | R 5656 [Page 88] & R 3225 [Page 221] | 4 | தாவீது அபிஷேகம் பண்ணப்பட்ட ராஜா | 2304 |
| 554 | R 5660 [Page 103] | 3 | உலகம் ஏன் இன்னும் இழந்ததை திரும்ப பெறவில்லை | 2308 |
| 555 | R 5662 [Page 104] | 2 | · நவீன இராட்சதர்கள் மீதான வெற்றிகள் | 2310 |

| | | | | |
|---|---|---|---|---|
| 556 | R 5662 [Page 105] | 4 | கொடுமைப்படுத்தப்பட்ட ஒருவரின் விசுவாசம் | 2312 |
| 557 | R 5664 | 3 | ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் | 2316 |
| 558 | R 5665 [Page 108] | 3 | குணலட்சணத்தின் விதைப்பின் காலமும் அறுப்பும் | 2319 |
| 559 | R 5666 [Page 109] | 4 | யாருக்கு ஊழியம் செய்வோம் என்பதை இந்த நாளில் தீர்மானியுங்கள் | 2322 |
| 560 | R 5668 [Page 115] | 2 | எல்லா கிருபைகளின் மொத்தம் | 2325 |
| 561 | R 5668 [Page 1180] | 3 | இராஜ்யத்தின் வெண்வஸ்திரம் | 2327 |
| 562 | R 5670 [Page 120] | 5 | இங்கே இலேசான உரபத்திரவம் - பின்வரும் மகிமைகள் | 2330 |
| 563 | R 5672 [Page 122] | 4 | நான் அபிஷேகம் பண்ணினவர்களை தொடாதே | 2334 |
| 564 | R 5673 [Page 123] | 4 | இராஜாவாகிய சவுலின் கடைசி யுத்தம் | 2338 |
| 565 | R 5676 [Page 131] | 3 | யுகங்களின் முடிவு ஒத்த நிலைமைகள் | 2342 |
| 566 | R 5677 [Page 133] | 5 | இவைகளை நாம் செய்ய வேண்டும் | 2345 |
| 567 | R 5678 [Page 135] | 2 | இயேசு அவரது சத்துருக்களை வைதாரா? | 2349 |
| 568 | R 5679 [Page 136] | 5 | தாவீதின் நகரம் - தேவனுடைய நகரம் | 2351 |
| 569 | R 5681 [Page 138] | 3 | நீயே, அந்த மனுஷன்! | 2356 |
| 570 | R 5683 [Page 141] | 2 | ஆவலைத் தூண்டும் கேள்வி | 2359 |

| | | | | |
|---|---|---|---|---|
| 571 | R 5684 [Page 142] | 2 | அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் - பிறகு பின்பற்றுங்கள் | 2361 |
| 572 | R 5685 [Page 147] | 7 | புது சிருஷ்டி தனது மாம்சத்தை ஜெயங்கொள்ளுதல் | 2362 |
| 573 | R 5688 [Page 150] | 2 | ஜீவகிரீடத்தை பெறுவது யார்? | 2367 |
| 574 | R 5688 [Page 151] | 3 | கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாக வளர்ச்சியடைதல் | 2369 |
| 575 | R 5690 [Page 152] | 4 | மன்னிக்கப்பட்டவன் பாக்கியவான் | 2372 |
| 576 | R 5692 [Page 154] | 4 | கேட்கப்படுகிற ஜெபங்கள் | 2376 |
| 577 | R 5693 | 4 | மேய்ப்பருக்கு விரோதமாகத் தீர்க்க தரிசனம் | 2380 |
| 578 | R 5695 [Page 163] | 7 | வருகிற கொந்தளிப்பும் அதன் மகிமையான பலனும் | 2384 |
| 579 | R 5698 | 2 | அர்ப்பணத்திற்கு உந்துவிசை விசுவாசம் | 2391 |
| 580 | R 5698 | 3 | சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2393 |
| 581 | R 5698 | 2 | [ தெ. பத்திகள் ]சாந்த குணம் கிறிஸ்துவின் ஒரு குணலட்சணமாகும் | 2395 |
| 582 | R 5699 [Page 168] | 2 | எனக்கு பிறன் யார்? | 2397 |
| 583 | R 5699 | 1 | [ Poem]தேவனின் யுத்தம் | 2399 |
| 584 | R 5700 | 2 | நன்றிகெட்ட கலகக்கார அப்சலோம் | 2400 |
| 585 | R 5701 [Page 170] | 2 | · இஸ்ரயேல் ராஜாவாகிய சாலொமோன் | 2402 |
| 586 | R 5701 [Page 171] | 3 | சோதனை என்ற வார்த்தையின் பல்வேறு அம்சங்கள் | 2404 |
| 587 | R 5702 | 3 | பிதாவின் ஞானமான ஆலோசனை | 2407 |

| | | | | |
|---|---|---|---|---|
| 588 | R 5703 | 1 | [ தெ. பத்திகள் ] பெரோயா வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் | 2410 |
| 589 | R 5704 [Page 174] | 2 | சுயதேவை பூர்த்தியாகிய பாவம் | 2411 |
| 590 | R 5704 | 3 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2413 |
| 591 | R 5705 [Page 179] | 5 | ஆவிக்குரிய கானானியர்கள் மீதான நமது வெற்றி | 2416 |
| 592 | R 5707 | 6 | ஜெயம் - அதன் உபயோகமும் தகாத உபயோகமும் | 2421 |
| 593 | R 5710 [Page 185] | 5 | உண்மையான ஜெபத்தின் பிறப்பிடம் | 2427 |
| 594 | R 5711 [Page 190] | 3 | கர்த்தருக்காக நாம் எப்படி காத்திருக்க வேண்டும் | 2431 |
| 595 | R 5713 [Page 188] | 3 | ஆலயத்தை அர்ப்பணம் செய்தல் | 2434 |
| 596 | R 5714 [Page 187] | 2 | நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் | 2437 |
| 597 | R 5715 | 4 | காவற்கோபுரத்தின் கருத்துக்கள் | 2439 |
| 598 | R 5716 [ Page 197] | 1 | அட்டவணை | 2443 |
| 599 | R 5716 | 4 | விசுவாசத்தின் தற்கால நன்மைகள் | 2444 |
| 600 | R 5718 | 3 | சோதனைக் காலம் | 2448 |
| 601 | R 5718 | 3 | அவருடைய ஊழியர்களாகிய நாம் யாருக்கு ஊழியம் செய்ய வேண்டும் | 2450 |
| 602 | R 5719 | 2 | நாம் நிற்பது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே | 2453 |
| 603 | R 5720 [ Page 201] | 2 | சத்தியத்தைக் பிரகடனப்படுத்துவது எப்படி? | 2455 |
| 604 | R 5721 [ Page 203] | 2 | இஸ்ரயேலின் ஏழத்தனையான தண்டனை ஓர் ஆசீர்வாதம் | 2457 |

| | | | | |
|---|---|---|---|---|
| 605 | R 5722<br>[ Page 204] | 3 | சோபாவின் ராணி வந்து சாலொமோனை பார்க்கிறாள் | 2459 |
| 606 | R 5722<br>[ Page 205] | 3 | ஞானமுள்ள ராஜா தவறாக வழிநடத்தப்பட்டான் | 2461 |
| 607 | R 5724<br>[ Page 211] | 9 | பிதா மற்றும் குமாரனின் அன்பே நமக்கு உதாரணம் | 2463 |
| 608 | R 5728<br>[ Page 216] | 9 | கேள்வி கூட்டம் - ஓக்லேண்டு கன்வென்ஷன் | 2471 |
| 609 | R 5732<br>[ Page 220] | 4 | அரசியல்வாதிகளும் தவறான மதமும் | 2480 |
| 610 | R 5733<br>[ Page 222] | 3 | ஆசா ராஜாவின் சீர்திருத்த வேலை | 2483 |
| 611 | R 5735<br>[ Page 227] | 3 | துக்கத்தின் ஆரம்பம் | 2486 |
| 612 | R 5736<br>[ Page 228] | 3 | எனது இருதயம் நல்ல நிலமா? | 2488 |
| 613 | R 5737<br>[ Page 230] | 7 | நமது சுத்திகரிப்பு - உள்ளாகவும் புறம்பாகவும் | 2491 |
| 614 | R 5740 | 3 | கொஞ்சத்தில் உண்மையாயிருத்தல் | 2497 |
| 615 | R 5741 | 2 | எலியா ஒரு பெரிய தீர்க்கதரிசி | 2500 |
| 616 | R 5742<br>[ Page 237] | 2 | ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களின் பொறுப்பு | 2502 |
| 617 | R 5744 | 4 | கிருபாசனத்தின் சலுகைகள் | 2504 |
| 618 | R 5746<br>[ Page 245] | 4 | இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் | 2508 |
| 619 | R 5747<br>[ Page2417] | 5 | நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன் | 2512 |
| 620 | R 5749<br>[ Page 250] | 3 | அநீதியான உலகப்பொருளினால் சிநேகிதரை சம்பாதித்தல் | 2517 |
| 621 | R 5750<br>[ Page 251] | 3 | மீறுதல்களும், பாவங்களும் மற்றும் குணலட்சணத்தில் அவைகளின் விளைவும் | 2519 |

| | | | | |
|---|---|---|---|---|
| 622 | R 5751 [ Page 250] | 3 | எலியா திரும்பவருதலும் வெற்றியும் | 2521 |
| 623 | R 5752 [ Page 254] | 3 | எலியாவின் ஓட்டமும் காட்சியும் | 2524 |
| 624 | R 5754 [ Page 259] | 4 | யுத்தமும் கிறிஸ்தவனின் கடமையும் | 2527 |
| 625 | R 5755 | 5 | தேவனுடைய கட்டளையின் முடிவான திட்டம் | 2531 |
| 626 | R 5757 | 2 | தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட முழு விடுதலை | 2536 |
| 627 | R 5758 [ Page 265] | 2 | மனித வேலைகளும் புது சிருஷ்டியின் வேலைகளும் | 2538 |
| 628 | R 5759 | 3 | பரமேறுவதற்கு முன் எலியாவின் வேலை | 2540 |
| 629 | R 5761 | | கீழ்ப்படிதலும் அரசுரிமையும் | 2543 |
| 630 | R 5761 | 2 | அறுவடை வேலையின் இரண்டு பாகங்கள் | 2545 |
| 631 | R 5761 | 1 | [ Poem]கொஞ்சம் நேரம் தான் | 2547 |
| 632 | R 5762 [Page 3] | 1 | கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன் | 2548 |
| 633 | R 5767 | 3 | இயேசுவின் அற்புதமான பிறப்பு | 2549 |
| 634 | R 5768 | 5 | அப்போஸ்தல உத்தரவு அந்த அளவுக்கு குறிப்பிடத்தக்கதாக இருந்ததில்லை | 2552 |
| 635 | R 5770 | 2 | ஆகாபின் பாவம் - பொருளாசை, கொலை | 2557 |
| 636 | R 5771 | 3 | எலியாவின் அக்கினிரதம் | 2559 |
| 637 | R 5773 | 2 | எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர் ( உண்மையுள்ளவர்) | 2562 |
| 638 | R 5774 | 6 | நீதிமானாக்கப்படுதல் - எண்ணப்படுதலும் உண்மையிலும் | 2564 |
| 639 | R 5776 | 2 | இரண்டு பெரிய வேண்டுதல்கள் | 2570 |

| | | | | |
|---|---|---|---|---|
| 640 | R 5777 | 3 | பூமிக்குரியவைகளுக்கான ஆசைகளை மேற்கொள்ளுதல் | 2572 |
| 641 | R 5789 | 1 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2575 |
| 642 | R 5793 | 5 | சபையில் கனம் பெறுவதற்குரிய தகுதியான அடிப்படை | 2576 |
| 643 | R 5809 & R 5186 | 2 | தேவாலயத்தில் கொண்டிருக்க வேண்டிய நல்லொழுக்கம் | 2581 |
| 644 | R 5815 [Page 3] | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 2583 |
| **வருடம் 1916 # R 5821முதல் R 6024வரை** | | | | |
| 645 | R 5829 [ Page 11] | 6 | அவர் பரத்துக்கு ஏறி சிறைப்பட்டவர்களுக்கு வழிகாட்டினார் | 2584 |
| 646 | R 5830 [ Page 13] | 4 | பெந்தெகொஸ்தே நாளின் ஆவி | 2589 |
| 647 | R 5831 [ Page 14] | 4 | பரிசுத்த பேதுரு போதித்த பெந்தெகொஸ்தே நாளின் பிரசங்கம் | 2593 |
| 648 | R 5832 [ Page 19] | 13 | கர்த்தாவே ஜெபிக்க எங்களுக்கு கற்பித்தருளும் | 2597 |
| 649 | R 5836 [ Page 24] | 7 | ஆவிக்குரிய வாக்குத்தத்தங்களுக்கு சுபாவ மாம்சீக இஸ்ரயேலர் சுதந்தரவாளிகள் அல்ல. | 2609 |
| 650 | R 5842 - R 5844 | 8 | உண்மையான மனத்தாழ்மைக்குள் உள்ளடங்கியிருப்பது என்ன | 2615 |
| 651 | R 5846 | 3 | உயர்த்தப்படப்போகின்ற தாழ்மையுள்ளவர்கள் | 2623 |
| | R 5849 | 4 | கிறிஸ்தவ பொதுவுடைமைக் கொள்கை | 2626 |
| 652 | R 5869 மார்ச் 1916 | 10 | நினைவுகூருதல் காலப்பகுதிக்கான சிந்தனைகள் | 2630 |
| 653 | R 5872 [ Page 987] | 8 | மீட்கும் பொருளும், பாவ நிவாரண பலியும் | 2640 |

| | | | | |
|---|---|---|---|---|
| 654 | R 5874 [ Page 94] | 2 | காட்டுபுஷ்பங்களிலிருந்து கற்கும் பாடங்கள் | 2648 |
| 655 | R 5875 & R2986 | 8 | ஐனேயாவும், தொற்காளும் | 2650 |
| 656 | R 5875 [ Page 94] | 1 | [ Poem] பஸ்காவின் நிரூபணம் | 2658 |
| 657 | R 5876 [ Page 99] | 6 | எப்படி நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம்? | 2659 |
| 658 | R 5878 [ Page 101] | 5 | புயலின்மத்தியில் சமாதானம் | 2664 |
| 659 | R 5879 & R 2989 | 8 | பரிசுத்த பேதுருவும் கொர்னேலியுவும் | 2669 |
| 660 | R 5879 [ Page 107] | 7 | மீட்கும் பொருளின் விலையும், அதை நடைமுறைப்படுத்தலும் | 2675 |
| 661 | R 5882 [ Page 105] [R 1591] | 4 | உயிர்தெழுந்த கிறிஸ்து | 2682 |
| 661 | R 5885 [ Page 117] | 4 | கிறிஸ்துவோடு நுகத்தடிக்குப்பட்டோர் | 2686 |
| 662 | R 5886 [Page 118] | 2 | சிறு நரிகள் | 2689 |
| 663 | R 5886 [ Page 125] | 2 | சகோதரர்களை முறையாகவோ, முறையற்றோ நியாயந்தீர்த்தல் | 2691 |
| 664 | R 5888 | 2 | (தெ. பத்திகள்) கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புபவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர் | 2693 |
| 665 | R 5888 | 2 | ( தெ. பத்திகள்) சுவாரசியமான கடிதங்கள் | 2695 |
| 666 | R 5889 [ Page 131] | 4 | பெருமைக்கெதிரான கிறிஸ்தவரின் யுத்தம் | 2697 |
| 667 | R 5890 [ Page 133] | 3 | இயேசு மரித்து எல்லோருக்காகவும் ஈட்டுத்தொகை செலுத்தினார் | 2701 |

| | | | | |
|---|---|---|---|---|
| 668 | R 5891 [ Page 134] | 6 | லிஸ்தீராவில் இருந்த சப்பாணி | 2703 |
| 669 | R 5892 & R 4374 & R 3017 | 6 | எருசலேமில் கூடின ஆலொசனைச் சங்கம் | 2708 |
| 670 | R 5892 | 3 | விசுவாசம் கிரியைகளினால் மெய்ப்பித்துக் காண்பிக்கப்படும் | 2714 |
| 671 | R 5893 | 3 | சுவிஷேத்தைப் பிரசங்கித்தல் அத்தியாவசியமானது | 2717 |
| 672 | R 5893 | 2 | உங்களைப் பகைக்கும் உங்கள் சகோதரர் | 2719 |
| 673 | R 5896 [ Page 147] | 4 | எப்படி தீயோனின் இரகசிய சதித்திட்டங்களை முறியடிப்பது? | 2720 |
| 674 | R 5897 | 3 | தீமையோடு எதிர்த்து நில்லாமை | 2724 |
| 675 | R 5898 [ Page 150] | 3 | சத்தியத்துக்கு சாட்சிகள் | 2727 |
| 676 | R 5899 [ Page 153] | 4 | நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் | 2729 |
| 677 | R 5900 [ Page 154] | 2 | திருமணம் பற்றிய மேய்ப்பரது சில ஆலொசனைகள் | 2732 |
| 678 | R 5903 | 5 | மக்கெதோனியாவிலிருந்து வேண்டுகோள் | 2734 |
| 679 | R 5905 [ Page 163] | 6 | பரத்துக்குரியவைகளை நேசிக்கும்படி நம் சிந்தையைப் பயிற்றுவித்தல் | 2739 |
| 680 | R 5907 [ Page 166] | 5 | பிலிப்பு பட்டணத்தின் சிறை அதிகாரி | 2745 |
| 681 | R 5907 [ Page 165] | 1 | பூரண அழகு பொருந்திய ராஜா | 2750 |
| 682 | R 5908 | 2 | கடைசியாக, சகோதரரே, சிந்தியுங்கள் | 2751 |
| 683 | R 5909 [R3820] | 4 | அறுவடை சேர்த்தலும் தரம்பிரித்தலும் | 2753 |
| 684 | R 5912 | 3 | அவர்கள் பெலத்தின்மேல் பெலனடைந்து | 2757 |

| | | | | |
|---|---|---|---|---|
| 685 | R 5913<br>[ Page 189] | 5 | நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம் | 2760 |
| 686 | R 5916 | 4 | ராஜா பிரசன்னமாயிருத்தலின் அடையாளங்கள் | 2762 |
| 687 | R 5917<br>[ Page 197] | 4 | தேவராஜ்யத்தில் அங்கமாவதைத் தேடுதல் | 2766 |
| 688 | R 5918 | 2 | நல்ல மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி | 2769 |
| 689 | R 5919<br>[ Page 203] | 4 | கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மைபாராட்டுதல் | 2771 |
| 690 | R 5920 | 3 | பட்டுப்போன அத்திமரத்திலிருந்து கற்கவேண்டியவை | 2774 |
| 691 | R 5921 | 4 | சபையில் அன்பு | 2776 |
| 692 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக | 2780 |
| 693 | R 5922 | 1 | [ தெ. பத்திகள் ] சுவாரசியமான கடிதங்கள் | 2781 |
| 694 | R 5923<br>[ Page 211] | 5 | நாம் மறவாதிருக்க நாடுவோம் | 2782 |
| 695 | R 5926 | 5 | கொடுத்தலினால் அடையும் கிருபை | 2787 |
| 696 | R 5928 | 2 | பரிந்து பேசுபவர் மற்றும் மத்தயஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு | 2794 |
| 697 | R 5929<br>[ Page 221] | 2 | உங்களுக்குள் நிலவும் சமாதானம் | 2794 |
| 698 | R 5929 | 2 | உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள் | 2795 |
| 699 | R 5931<br>[ Page 227] | 6 | புது சிருஷ்டிக்குரிய வளர்ச்சியை அடைவது எப்படி? | 2797 |
| 700 | R 5931 | 6 | புது சிருஷ்டிகளாக எப்படி நாம் வளர்ச்சியை எட்டுவது? | 2803 |
| 701 | R 5931 | 1 | [ Poem] தேவனின் யுத்தம் | 2809 |

| | | | | |
|---|---|---|---|---|
| 702 | R 5933 | 3 | தத்தம் செய்வதற்கு முன்பு இருந்த சிறதளவு துணிகரமான பாவங்கள் | 2810 |
| 703 | R 5934 | 3 | மாம்சத்துக்கென்று விதைத்தலின் முடிவு, மரணமே | 2813 |
| 704 | R 5935 & R 4458 | 9 | உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் | 2816 |
| 705 | R 5935 [R 3159] | 4 | எபேசுவில் நடந்த கலகம் | 2825 |
| 706 | R 5938 | 5 | மன்னிப்புப்பெற பாத்தை அறிக்கையிடுதல் அத்தியாவசியம் | 2829 |
| 707 | R 5939 | 2 | உண்மையானதும், தவறானதுமான ஊழிய நியமனங்கள் | 2834 |
| 708 | R 5939 | 5 | உண்மையான மற்றும் தவறான - ஏற்படுத்துதல்கள் | 2836 |
| 709 | R 5941 | 3 | பரிசுத்த பவுல் அடைந்த துக்கங்களும் சந்தோஷங்களும் | 2841 |
| 710 | R 5943 | 3 | தெய்வீக புஸ்தகச்சுரளைத் திறந்துபார்க்க பாத்திரவான் யார்? | 2844 |
| 711 | R 5943 | 4 | தெய்வீக சுரள் - அதை காண்பதற்குப் பாத்திரன் யார்? | 2847 |
| 712 | R 5946 | 5 | கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் | 2851 |
| 713 | R 5948 | 5 | உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் | 2856 |
| 714 | R 5950 | 4 | அறுவடை இன்னும் முடிவடையவில்லை | 2861 |
| 715 | R 5951 | 3 | மிகுதியான உபத்திரவங்கள் மேலான வெகுமதி | 2865 |
| 716 | R 5952 | 4 | தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம் | 2868 |
| 717 | R 5954 | 2 | [ தெ. பத்திகள் ]சுவாரசியமான கடிதங்கள் | 2872 |
| 718 | R 5955 | 12 | ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம் | 2874 |
| 719 | R 5958 | 3 | முதலிடம் தேவனுக்கு - கடைசி இடம் சுயத்துக்கு | 2886 |

| | | | | |
|---|---|---|---|---|
| 720 | R 5959 | 3 | நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? எப்போது? எப்படி? | 2889 |
| 721 | R 5962 | 8 | பாவத்தைப் போக்கும் ஞானஸ்நானம் யூதர்க்கு மட்டுமே | 2892 |
| 722 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கு உரியதான சோதனைகள் | 2900 |
| 723 | R 5965 | 4 | புது சிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை | 2903 |
| 724 | R 5966 [R 4083] | 5 | சுயகட்டுப்பாடே மனவலிமை | 2907 |
| 725 | R 5967 | 3 | கிறிஸ்துவின் நிருபம் | 2911 |
| 726 | R 5970 | 6 | நாம் உபதேசிப்பதும் போதிப்பதும் | 2914 |
| 727 | R 5972 | 5 | மீட்கும் பொருள் பாவநிவாரணபலி | 2920 |
| 728 | R 5973 | 3 | புத்திமதிக்கு சிரமத்தோடு கீழ்ப்படிதல் | 2925 |
| 729 | R 5974 | 3 | உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள் | 2928 |
| 730 | R 5977 | 5 | கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி வளர்ச்சியடைவது? | 2931 |
| 731 | R 5979 | 5 | இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துதல் | 2936 |
| 732 | R 5981 | 12 | சோதனை காலம் | 2941 |
| 733 | R 5981 | 7 | சோதனை நேரம் | 2953 |
| 734 | R 5984 | 12 | [ தெ. பத்திகள்]உலகளாவிய மேய்ப்பரது வேலை | 2960 |
| 735 | R 5989 | 4 | பூமி அதிர்ந்தது - விழுந்தது | 2972 |
| 736 | R 5990 | 4 | நம் போதகரது ஆற்றலுள்ளதும், கருத்தைக் கவர்கின்றதுமான பாடங்களில் ஒன்று | 2976 |
| 737 | R 5992 | 5 | மரணபரியந்தம் உண்மையாயிருத்தல் | 2980 |
| 738 | | 1 | 12. யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட எல்லா உயிர்களின் இரத்தமும் | 2985 |
| 739 | | 1 | 13. அங்கே இருந்தீரோ? | 2986 |

| | | | | |
|---|---|---|---|---|
| 740 | | 1 | 123. கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே. | 2987 |
| 741 | | 1 | இனிமையான தருணங்கள் | 2988 |
| 742 | | 2 | 138. பெத்தானியாவின் மரியாள் | 2990 |
| 743 | | 2 | அவரின் மென்மையான கைகள் | 2992 |
| 744 | | 1 | மொட்டவிழ்ந்த தேவனின் திட்டம் | 2994 |
| 745 | | 2 | கடைசி இராப்போஜனம் | 2995 |
| 746 | | 8 | CR 122 பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விஷே - கூட்டம் | 2997 |
| 747 | | 1 | தேவனுக்கான பகல்நேரக் காணிக்கை | 3005 |
| 748 | | 33 | [ Q232 : 3 ] தேர்ந்தெடுத்தல் மூப்பர்கள் - சபையில் அதிகாரம் | 3006 |
| 749 | | 1 | இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன் | 3039 |
| 750 | | 1 | என்ன அற்புதம் | 3040 |
| 751 | | 2 | சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல் | 3041 |
| 752 | | 17 | யோசேப்பும், அவரது சகோதரர்களும் | 3043 |
| 753 | | 15 | யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம் | 3060 |
| 754 | | 1 | கிறிஸ்துவோடு | 3075 |
| 755 | | 20 | கூட்டங்கள் | 3076 |
| 756 | | 9 | சிறுநரிகளும், செம்மறி ஆடுகளும். | 3096 |
| 757 | | 6 | அந்தகாரமும், விடியல் வேளையும் | 3105 |
| 758 | | 1 | 239. நம் சோதனை எத்தனை இலகுவாக இருக்கும் | 3111 |
| 759 | | 1 | அங்கே இருந்தீரோ? | 3112 |
| 760 | | 1 | உனக்கு முன்பாக | 3113 |

| | | | | |
|---|---|---|---|---|
| 761 | | 1 | நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே | 3114 |
| 762 | | 1 | கவர்ந்திழுக்கபட்டு சோதனைக்குட்பட்டவரே | 3115 |
| 763 | | 1 | கெத்சமனே | 3116 |
| 764 | | 1 | கெத்சமனே | 3117 |
| 765 | | 1 | என் உடன்படிக்கைக்கான அடையாளம் | 3118 |
| 766 | | 1 | பெலன் தாரும் யேசுவே | 3119 |
| 767 | | 1 | இனிமையான தருணங்கள் | 3120 |
| 768 | | 1 | ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவை | 3122 |
| 769 | | 4 | மேய்ப்பரது வேலை | 3124 |
| 770 | | 1 | நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் | 3128 |
| 771 | | 9 | முதற்பேறானவர்களின் கடந்து போகுதல் | 3129 |
| 772 | | 1 | நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள் | 3138 |
| 773 | | 1 | நம்பிக்கையின் ஆசீர்வாதம் | 3139 |
| 774 | | 6 | நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா | 3140 |
| 775 | | 1 | [ Poem 504] நறுமணத்தின் பெருவெள்ளம் | 3146 |
| 776 | | 1 | [பாடல்] அது ஒரு பூமியின் மட்கலயம் | 3147 |
| 777 | | 1 | [பாடல்] மனம் தளர்ந்த பயணியரே | 3148 |
| 778 | | 2 | [ Poem – p 215]மறைக்கப்பட்டச் சிலுவை | 3149 |
| 779 | | 1 | [ Poem - 11] கெத்செமனேயும், கல்வாரியும் | 3151 |
| 780 | | 1 | [ Poem – p- 15] பதிலாக | 3152 |
| 781 | | 1 | [ Poem – p- 33] மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி | 3153 |
| 782 | | 1 | [ Poem – p- 91] நமது உயிர்த்தெழுதல் | 3154 |
| 783 | | 1 | உபத்திரவங்களினாலே பூரணப்படுதல் | 3155 |

| | | | | |
|---|---|---|---|---|
| 784 | | 1 | [ Poem – p- 73]நாம் அங்கே இருந்திருப்போமாகில் | 3156 |
| | | 2 | [ Poem – p- 98] பெத்தானியாவின் மரியாள் | 3157 |
| 785 | | 1 | [ Poem – p- 174] நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள் | 3159 |
| 786 | | 1 | [ Poem – p- 129] அவர்கள் மட்டும் அறிந்திருந்தால் | 3160 |
| 787 | | 1 | [ Poem – p- 164] நான் அவரை அங்குக் காண்கிறேன் | 3161 |
| 788 | | 1 | [ Poem – p- 128] போதகரே, சத்தியமாவது என்ன? | 3162 |
| 789 | | 1 | பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருகே | 3163 |
| 790 | | 9 | பொதுவான கேள்விகள் | 3164 |
| 791 | | 1 | புறங்கூறுதல் | 3173 |
| 792 | | 8 | சபை | 3174 |
| 793 | | 7 | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 3182 |
| 794 | | 5 | சகோதரிகள் | 3189 |
| 795 | | 1 | சீர்பொருந்தும் பூமி | 3194 |
| 796 | | 1 | ஸ்திரீயின் ஊழியம் | 3195 |
| 797 | | 1 | என்னிடத்தில் வா | 3196 |
| 798 | | 2 | இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள்# 108] | 3197 |
| 799 | | 1 | [பாடல்] ஓ! என்னைப் போகவிடாத அன்பே | 3199 |
| 800 | | 1 | [பாடல்]இயேசுவின் சிலுவையின் கீழே | 3200 |
| 801 | | 1 | [பாடல்]நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு | 3201 |
| 802 | | 1 | [பாடல்]என் மீட்பர் | 3202 |

| | | | | |
|---|---|---|---|---|
| 803 | | 1 | [பாடல் 135]சிலுவையின் அருகில் | 3203 |
| 804 | | 1 | [பாடல் 8]அங்கு நீ இருந்தாயா? | 3204 |
| 805 | | 1 | [பாடல் 48]இயேசு, என் கர்த்தர் | 3205 |
| 806 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூருவாயாக | 3206 |
| 807 | | 1 | [பாடல் 65 A]பெலன் தாரும் இயேசுவே | 3207 |
| 808 | | 2 | [பாடல் 122] கிறிஸ்து நமது பஸ்கா | 3208 |
| 809 | | 1 | [பாடல் 172]உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக | 3209 |
| 810 | | 1 | [பாடல் 335]அது சிலுவையாய் இருப்பினும் | 3210 |
| 811 | | 1 | [பாடல் 359]பழைய கரடுமுரடான சிலுவை | 3211 |
| 812 | | 1 | [பாடல் 173]சிலுவையில், இன்னும் இடமுள்ளது | 3212 |
| 813 | | 1 | [பாடல்1] **Abide, sweet, Spirit** | 3213 |
| 814 | | 1 | [பாடல் 2] என்னை நினைவுகூரும் | 3214 |
| 815 | | 1 | [பாடல் 3] என்னிடத்தில் வாருங்கள் | 3215 |
| 816 | | 1 | [பாடல் 4] கிறிஸ்துவே எனது இலக்கு | 3216 |
| 817 | | 1 | [பாடல் 5] ஐயகோ என் மீட்பர் இரத்தம் சிந்தினாரோ | 3217 |
| 818 | | 1 | [பாடல் 125]திருவிருந்து | 3219 |
| 819 | | 1 | [பாடல் 128] | 3220 |
| 820 | | 1 | மணலுக்கு ஏற்பட்டத் தழும்புகள் | 3221 |
| 821 | | 1 | முழங்காலில் தஞ்சம் | 3222 |
| 822 | | 3 | அது ஒரு துன்பத்தின் காலம் | 3223 |
| 823 | | 1 | நினைவுகூருதல் இராப்போஜனம் | 3226 |
| 824 | | 1 | பஸ்கா ஏற்படுத்தப்பட்டது | 3227 |

| | | | | |
|---|---|---|---|---|
| 825 | | 1 | வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள் | 3228 |
| 826 | | 2 | நினைவுகூருதல் இராப்போஜனம் - ஏன் நாம் பங்கெடுக்கின்றோம் | 3229 |
| 827 | | 1 | பஸ்கா | 3231 |
| 828 | | 8 | ஏற்படுத்துதல் | 3232 |
| 829 | | 1 | சீயோனின் தேசிய கீதம் | 3240 |

# நம் கர்த்தராகிய இயேசுவின் உத்வேகமளிக்கும் வாக்குத்தத்தம்

## OUR LORD JESUS' INSPIRING PROMISE

**திறவுகோல் வசனம் : நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' – வெளிப்படுத்தல் 2:10**

நம் மகிமையடைந்த கர்த்தரால், வெளிப்படுத்துபவராகிய பரிசுத்த யோவான் மூலம் பத்மு தீவிலிருந்து கொடுக்கப்பட்ட வார்த்தைகளே இவைகளாகும். இந்த திகைப்பூட்டும் புத்திமதிகள், ஒரு விசேஷித்த ஒப்பந்தத்திற்குள் நுழைந்திருக்கின்ற, கர்த்தரோடு ஒரு விசேஷித்த உடன்படிக்கை செய்துகொண்டவர்களாகிய சபைக்கு கொடுக்கப்பட்டவைகளாகும். நாம் அவரோடுகூட ஆளுகை செய்வதற்கு, இயேசுவோடு துன்பப்படவேண்டும் என்ற தற்காலத்து அழைப்பு, அவரது சரீரத்தின் அங்கமாகுதலை அடைவதை குறிப்பாக சுட்டிக்காட்டுகிறது. அவரது சீஷர்களே அவரது சரீர அங்கங்களாவர். அவர்கள் அவரது அடிச்சுவடுகளில் நடந்துவரும்படி அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டவுடன் அதில் நிலைத்திருக்க வேண்டுமானால், முதலாவதாக அர்ப்பணிப்புக்கு வழிநடத்தப்படவேண்டியது அவசியமானது. இவர்கள் நற்கீர்த்தியிலும் துர்க்கீர்த்தியிலும் தங்களது குரு தங்களை எவ்விடத்துக்கு நடத்தினாலும் இந்த நோக்கத்தில் தொடர்ந்து பின்செல்லவேண்டும். பிரயாணத்தின் எல்லையை அடையும் முன்பாக, இவர்கள் தளர்ச்சியுறக்கூடாது. உலகம், மாம்சம் மற்றும் விரோதி ஆகியோர் தாங்கள் பெற்றுக்கொண்ட இந்த அழைப்பு புரியாததும், அடையக்கூடாததுமான ஒன்று என்று எச்சரிக்கவும், இவர்களது மனதை திசைதிருப்பவும், பின்நோக்கிச் செல்லவும் முயற்சிப்பார்கள்.

ஒரு உண்மையுள்ள ஊழியக்காரன், தன் எஜமானிடத்தில் நம்பிக்கை பெற்றவனாக தன் தகுதியை நிரூபித்து, எப்பொழுதும் அதே நம்பிக்கையை காத்துக்கொள்வான். நாம் அனுதினமும் நமது நேர்மையை அல்லது நேர்மையற்ற தன்மையை நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

''உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை பரீட்சிப்பாராக''



நாம் தகுதியுடையவர்களா என்று அவர் அறிவதற்காகவும், எல்லாவற்றைக்காட்டிலும் அவரை நேசிக்கிறோமா, அல்லது சுயத்தை நேசிக்கிறோமா என்று காணும்படிக்கும், நாம் அவர்பேரில் அப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருப்போமானால், அவர் கொடுக்கக்கூடிய இந்த மாபெரும் பரிசை ஜெயங்கொள்ளும்படிக்கு எல்லாவற்றையும் ஒதுக்கி, விட்டுவிடுகிறோமா என்றும் நம்மை பரீட்சிக்கிறார். இந்த ஜீவகிரீடமாகிய அழகான காரியத்தை கிரகிக்க முயற்சிக்கிறோமா என்றும் அவர் காண்கிறார், பரீட்சிக்கிறார்.

அவரது உவமைகளுள் ஒன்றில், நம் கர்த்தர் சிலரை பிரதிநிதித்துவப்படுத்தி, சூரியனாகிய உபத்திரவம் எழும்போது, அவர்கள் நீதியின்கொள்கைகளில் நிற்பதில் போதுமான நேர்மையும் உண்மையும் உடையோராக இல்லை என்கிறார். அவர்கள் குற்றம்செய்தோராயினர். அவர்கள் அழிவுக்குள்ளாயினர். ஆகவே, உண்மையுள்ளோர் என்ற வார்த்தை குறிப்பாக நேர்மை மற்றும் உண்மையை அடையாளப்படுத்துகிறதாய் தோன்றுகிறது. அதோடுகூட, முழு விசுவாசத்தை உடையோராயிருத்தலையும் சேர்த்து பொருள் தருகிறது. தேவனுடைய பிள்ளைகள் முழு விசுவாசத்தோடு காணப்படவேண்டும். அதோடுகூட, யார் தன் முழு பற்றுறுதியை வெளிப்படுத்தி, தகுதியுடையவரென்று நிரூபிக்கிறாரோ, அவர்களிடத்திலேயே தேவன் நம்பிக்கை வைக்கிறார்.

யார் தம் ஓட்டத்தின் முடிவுவரை முழு விசுவாசத்தோடு இருக்கிறார்களோ, அவர்களைப்பார்த்து நம் கர்த்தர் கூறுவார்; நல்லது உத்தம ஊழியக்கரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால், அநேக பட்டணங்களின்மேல் உன்னை அதிகாரியாக்குவேன்''– லூக்19:17. இவர்களே ஜீவ கிரீடத்தை பெறப்போகிறவர்கள். மரணபரியந்தம் இவர்களது நேர்மையும் உண்மையும் சோதிக்கப்படவேண்டும். இவ்வாறு சொல்லுவது, அவர்கள் கர்த்தரோடு செய்துகொண்ட பிரதிஷ்டையின் பொருட்டு மரிப்பார்கள் என்று பொருளாகாது. இவ்வாறு மரிப்போரில் இரண்டு வகுப்பார் இருப்பர் – ஒன்று சிறுமந்தை, இவர்கள் பலியின் நிமித்தமாகவே மரிப்பார்கள். அடுத்து திரள்கூட்டத்தார் – கர்த்தராகிய இயேசுவின் நாளில் காக்கப்படும்படி இவர்களது மாம்சம் அழிவுக்குள்ளாகி, ஆவியோ இரட்சிப்படையும்.

ஆகவே, மரணபரியந்தம் என்று நம் ஆதார வசனத்தில் கூறப்படும் பொருள் என்னவெனில், பலி மரணத்தில் நிறைவடையும்வரை விசுவாசத்தில் உண்மையாக நிலைநிற்பது ஆகும். எந்த நேரத்திலும் மரணத்தை சந்திக்க ஆயத்தமாயிருத்தலாகிய விசுவாசத் தன்மையாகும். முற்றிலும் தகனமாகும்வரை பலியின் உடன்படிக்கையை செய்து முடிக்க இது வழிநடத்தும்.

**வாடாத ஜீவகிரீடம்**

மாபெரும் கனம் அருளப்படுவதையே ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வதைப்பற்றிய சிந்தனை வெளிப்படுத்துகிறது. பழங்காலத்து ஒலிம்பிக் விளையாட்டுக்களில் ஜெயித்தோருக்கு கொடுக்கப்படும் கிரீடம் பொதுவாகவே என்றும் பசுமையாக இருக்கும் இலைகளால்(Laurel leaves) செய்யப்பட்டிருக்கும். மேலும் யுத்தங்களில் மாபெரும் வெற்றிபெற்றோருக்கு என்றும் பசுமையாக இருக்கும் இலைகளாலான கிரீடத்தையே கொடுத்து கனப்படுத்துவர். புன்னைமரம்(Laurel tree) என்றைக்கும் பசுமையான மரமாகும். இது நிலைப்புத்தன்மைக்கு அடையாளமாய் உள்ளது. உண்மையுள்ள சபைக்கு அருளப்படும் மேலான கனத்தை சித்திரக் காட்சியாக அப்போஸ்தலர் இங்கு இதை விளக்கியிருக்கிறார். மாபெரும் பரிசு அவர்களுக்கு கொடுக்கப்படவுள்ளது. இப்பொழுது தெரிவுசெய்தல் நடைபெற்று வருகிறது. தன் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தவேண்டியது ஒவ்வொருவரது பணியாக உள்ளது – 2பேதுரு1:10,11.

வெற்றிவாகை சூடிய ஒவ்வொருவருக்கும் ஜீவகிரீடம் அளிக்கப்படும். இது விரைவில் வாடிப்போகும் கிரீடமல்ல, அல்லது ஒருசில வருடங்கள் மட்டுமே நிலைத்திருக்கும் கிரீடமல்ல, மாறாக நித்தியகாலத்துக்கும் நிலைத்திருக்கும் கிரீடமாகும். அதுமட்டுமல்ல, இந்த நித்திய ஜீவகிரீடம் உயர்தரமான ஜீவிய கிரீடமாகும். இது மிக உன்னதநிலைமையின் ஜீவன் ஆகும். ஆயிரவருடாட்சியில் நடைபெறும் திரும்பக்கொடுத்தலின்போது, மனுக்குலம் மனிதநிலைமையில் நித்திய ஜீவன்பெறுவர். தேவதூதர்களோ ஆவிக்குரிய நிலைமையில் நித்திய ஜீவனை சுதந்தரிப்பர். ஆனால் “முற்றிலும் ஜெயங்கொண்டவர்களுக்கு” கொடுக்கப்படும் ஜீவகிரீடமோ மற்ற ஜீவிய நிலைமையைக்காட்டிலும் மிக உயர்ந்ததும், இந்த பந்தயசாலையில் ஜெயித்தவர்களுக்கென ஒரு விசேஷ வெகுமதியாகிய மிக உன்னதமான தன்மையை உடைய, சாகாமை வாய்ந்த ஆவிக்குரிய ஜீவனாகும்.

“பெற்றுக்கொள்ளத்தக்கவர்களாக ஓடுவோம்” இலக்கு மிக சமீபம்

அச்சமின்றி முன்னேறியே ஓடு, என் ஆத்துமாவே
கடமை உன்முன் அங்கே ஒளிவீசும்
வனாந்தரங்கள் உன்னைச் சுற்றிலும் அனல் கக்கினாலும்
யோர்தான்கள் அலைபோல் பாய்ந்து சீற்றங்கொண்டாலும்
யோர்தானின் இப்புறத்து நிலம் உன் புத்திரசுவீகார ஆசீர்வாதம் அல்ல,
விரைந்து முன்னேறு, உன் கானானை கண்டடைவாய்,
அங்கே இளைப்பாறுதலில் பிரவேசிப்பாய்

----------------------------

**--2761--**

R 5916

# ராஜா பிரசன்னமாயிருத்தலின் அடையாளங்கள்

# SIGNS OF THE PRESENCE OF THE KING

**ஆதார வசனம் : மல்கியா 3:2**

**“ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்”**

தற்கால சுவிசேஷயுகம் முடிவடைவதைக்குறிக்கும் திறவுகோல்வசனப்பகுதியே தீர்க்கதரிசியின் வார்த்தைகளாகும். அப்போஸ்தலர் பவுலால் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டதும் இதே நாளைக் குறித்தேயாகும். “அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும் (1கொரிந்தியர்3:13). இதே நாளைக்குறித்து அப்போஸ்தலர் பேதுருவும் எழுதும்போது, “கர்த்தரின் மாபெரும் நாளில் வானங்கள் அக்கினியாலும், பூதங்கள் வெப்பத்தால் வெந்துஉருகியும்போகும். பூமியும் அதிலுள்ள எல்லாக் கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்” (2பேதுரு3:10) என்கிறார். இதே நாளைக்குறித்து செப்பனியா தீர்க்கதரிசி பேசுகிறார்; கர்த்தருடைய மாபெரும் நாளில் பூமி அனைத்தும் அவரது எரிச்சலின் அக்கினியினால் அழியும்(செப்3:8). ஏசாயா, எரேமியா, மற்றும் தேவனுடைய உண்மை தீர்க்கதரிசிகளில் அநேகர் இந்நாளைக்குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தனர். கர்த்தருடைய தூதனால் அறிவுறுத்தப்பட்ட தானியேல் தீர்க்கதரிசி, அந்த நாளில் முன்னெப்போதும் இருந்திராதஅளவு மகா உபத்திரவக்காலம் உண்டாயிருக்கும்” என்று எழுதினார்(தானி12:1). இந்த தீர்க்கதரிசனத்தை நம் கர்த்தரும் உண்மை என உறுதிப்படுத்தி, அந்த உபத்திரவத்தைப்போல் இனி ஒருபோதும் நிகழாது என்று அவ்வார்த்தைகளோடுகூட சேர்த்துக்கூறினார்–மத் 24:21,22.



இந்த நாளைக்குறித்து வேத வசனங்கள், “கர்த்தரின்நாள்”, “யேகோவாவின் நாள்”, “தேவனின் நாள்”, “கிறிஸ்துவின் நாள்”, “பழிவாங்கும் நாள்”, “கவனிக்கத்தக்க மாபெரும் நாள்” என்று கூறுகின்றன. இந்த நாளில் பழைய முறைமை அழிக்கப்பட்டு, புதிய மகிமையான முறைமை நடைமுறைக்கு வரும். இந்நாளைக்குறித்து முன்னுரைத்த தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்களும் மற்ற எல்லோரும் விழுந்தபோதிலும் ஒருவகுப்பார் இந்நாளில் நிலைநிற்பர் என்று கூறுகின்றனர். அனைத்தும் அசைக்கப்பட்டு வீழ்த்தப்படும். அதன்பிறகே ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும், அந்த ராஜ்யமோ ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை, அது என்றைக்கும் நிலைத்திருக்கும்(எபி12:25–29). தற்கால சமுதாய முறைமை, பெயர்சபைகளின் அமைப்புக்கள், பொருளாதார அமைப்புக்கள், அரசியல் அமைப்புக்கள் அனைத்தும் அழிவுறும்.

சுவிசேஷயுகத்தின்போது, கிறிஸ்தவராய் ஜீவித்துவந்திராத அநேகர், சபையோடு தங்களை இணைத்துக்கொண்டிருக்கின்றனர். வேதாகம நிலைப்பாட்டின்படி புறஜாதிகளாக அவர்கள் இருந்தபோதிலும், இன்றைய நாகரீக உலகம் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்வதன்மூலம், தங்களை புறஜாதிகள் என்று கூறும் கிறிஸ்தவரல்லாத புறஜாதிகளுக்கு முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. இந்த பல்வேறு தேசங்களிடையே அநேக மதங்கள் இருப்பதை நாம் காண்கிறோம். இந்த மதங்களிலும் பக்தர்கள் தேவனுக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்ததாக உரிமை பாராட்டிக்கொள்கின்றனர். ஆனால் அவர்கள் உரிமை பாராட்டுவதை சோதித்துப் பார்க்கும் நிலைப்பாடு தேவ வசனமே – கலாத்தியர்1:6–9ஐ காணவும். தேவன் மேசியாவின் ராஜ்யத்தை உண்மை திருச்சபைக்கு மட்டுமே அளிக்க இருக்கிறார். கிறிஸ்துவின் பலியின் ஊழியத்தினை தங்களது அஸ்திபாரமாகக்கொண்ட சிலர்மட்டுமே கிறிஸ்துவை நிஜமாக உடையவர்களாயிருந்து, இரட்சிப்பை அடைவார்கள். ஆனால் அவர்கள் தேவசித்தப்படி கிரியைகள் அனைத்தையும் செய்து, அவர்களது குணாதிசயமாகிய அமைப்பை கட்டியெழுப்பி, இன்றையநாளின் “அக்கினி” அதை பட்சிப்பதன்மூலமே மாபெரும் இரட்சிப்பை அடையமுடியும். பெயர்சபைகளிலுள்ள களை வகுப்பார் கட்டப்பட்டு, சுட்டெரிக்கப்படுவார்கள். தனித்தனி நபர்களாக அல்ல, மாறாக முழுதத்தம் செய்த கிறிஸ்தவர்களாக. அதாவது அவர்களது முழுஅர்ப்பணிப்பின் தவறான தோற்றம் அஸ்திபாரமில்லாததாக வெளிப்படுத்தப்படும். அவர்கள் பெருமளவு தவறின்பிடியில் இருந்திருக்கிறார்கள் என்றும், எந்தளவுக்கு சத்தியத்திலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் தங்களைத்தாங்களே அறிந்துணர்வார்கள்.

**அக்கினியின்மூலம் காக்கப்பட்டோர்**

கிறிஸ்துஇயேசு என்ற ஒரே உண்மை அஸ்திபாரமாகிய கற்பாறைமேல் நிற்பவர்கள் யாரெனில், இயேசுவை தங்கள் ஈட்டுக்கிரய பலியாக ஏற்று, தங்களை முழுமையாக தேவனுக்கு கர்த்தர்மூலமாக ஒப்புக்கொடுத்தவர்களாவர். இவர்கள் அனைவரும் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர்(எபேசி4:4). இவர்களில் அநேகர் தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தத்தவறி, பெரும் இழப்பை அடைந்து வேதனைப்படுவார்கள். பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்லாகிய சத்திய அமைப்பினாலும், கர்த்தரிடத்தில் முழு இருதயத்துடனான ராஜரீக விசுவாசத்தாலும், கிறிஸ்துவாகிய அந்த அஸ்திபாரத்தின்மேல் முறையாக கட்டவில்லை. இவர்கள் அதிக உபத்திரவத்தின் மூலமாக கீழான மகிமையை சுதந்தரிப்பர். சிங்காசனத்தின்முன்பாக ஆளுகை செய்பவர்களாக அல்லாமல், ஆளுகை செய்யும் வகுப்பாருக்கு கனமுள்ள ஊழியக்காரர்களாக, இவர்கள் ராஜ்யத்தின் மேலான மகிமைகளை இழந்து வேதனைப்படுவர். பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப் பட்டிருக்கிற எல்லோரும், ஆவிக்குரிய நிலைமையில் பிறப்படைவர், அல்லது ஜீவனை முற்றிலுமாக இழப்பர். தங்களை முழுவதும் உண்மையுள்ளவர்கள் என்று நிரூபித்தவர்கள், தெய்வீக ஜீவிகளாக பிறப்படைவார்கள். தங்களை முழுவதும் உண்மையுள்ளவர்களாக நிரூபிக்கத் தவறினவர்கள் மாபெரும் "பரிசுப்பொருளை" அடையத் தவறினாலும், தங்களை விலைக்கிரயமாக்கின கர்த்தரை மறுதலிக்காதபடியால், ஆவிக்குரிய ஜீவிகளாக கீழான வரிசையில் பிறப்படைவார்கள்.

இந்த யுகத்தின் முடிவை அடையாளமாகக்கொண்ட உபத்திரவங்கள், அலட்சியப்போக்குக் கொண்ட இவர்களை முற்றிலுமாக விழித்தெழச்செய்யும். இந்த யுகமுழுவதிலும் இவ்வகுப்பாராய் இருந்துவருவோர்மேல் குறிப்பிடத்தக்க விசேஷித்த உபத்திரவங்கள் வருவதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆனால், இந்த வகுப்பாரில் இந்த யுகமுடிவில் ஜீவிப்பேரில் பெரும்பாலானவர்கள் மகா உபத்திரவத்திற்குள் செல்லவேண்டியது அவசியமாயிருந்தது. அவர்கள் தங்கள் கரைபட்ட நீதியின் வஸ்திரங்களை, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் வெண்மையாக கழுவிக்கொள்ளவேண்டும்.(வெளிப் 7:9–17). அவர்கள் தங்களை சுத்திகரித்தபிற்பாடு, தங்களது ஆசீர்வதிக்கப்பட்ட பாகத்தைஅடைவார்கள். ஆனாலும் அவர்கள் அழைக்கப்பட்ட மாபெரும் மகிமையோடு ஒப்பிடுகையில் மிகமிக கீழான மகிமையையே அடைவார்கள்.

அப்போஸ்தலர் பவுல், அடிப்படை முக்கியத்துவம்வாய்ந்த சரியான போதனை உபதேசங்களை தன் நிருபங்களில் விசேஷமாக வலியுறுத்துகிறார். பவுலோ அல்லது அப்பொல்லோவோ அல்லது பரலோகத்திலிருந்து வந்த தேவதூதனோ, யார் போதித்தாலும், அது நம் கர்த்தரால் கொடுக்கப்பட்ட அஸ்திபார போதனைகளுக்கு இசைவாக இருக்கவேண்டும்(கலாத்தியர்1:6–12). தாம் அவர்களுக்கு போதித்தவைகள் தேவனிடமிருந்து வந்தவை என்று பவுல் நிச்சயப்படுத்துகிறார். ஆகவே மற்றொரு சுவிசேஷத்தை வானத்திலிருந்து ஒரு தூதன் வந்து அவர்களுக்கு பிரசங்கித்தால், அந்த தூதன் கர்த்தருடைய உண்மையிலிருந்து வழிவிலகியிருக்கிறான் என்பதற்கான நிரூபணமாய் இருக்கும். சபைக்கான அஸ்திபார போதனை என்னவெனில், ஆதாமுக்கும் அவன் சந்ததியாருக்கும் மீட்பின் விலைக்கிரயத்தை செலுத்தி அவர்களை பாதுகாக்கவே இயேசுகிறிஸ்து மரித்தார் என்பதேயாகும். இதை இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் அவரது உண்மையுள்ள பிரதிநிதிகள் மூலமாகவும் தெய்வீக நியாயப்பிரமாணத்தின் அடையாளங்களில் வெளிப்படுத்தப்பட்டதன் மூலமாகவுமே தாம் பெற்றுக்கொண்டதாக பவுல் கூறுகிறார். இந்த அடிப்படை சத்தியத்தை உண்மையுடன் யார் போதித்தாலும், தேவ ஜனங்களுக்கு அது ஒரு நிஜமான உதவியாக இருக்கும். ஒருவேளை அப்படிப்பட்ட ஒரு போதகர் இந்த முறையான அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட அவர்களுக்கு உதவிசெய்திருந்தாலும், விசுவாசம் மற்றும் குணாதிசயஅமைப்பு கர்த்தரின் பெரிதான நாளில் பரீட்சைக்கு உட்படுத்தப்படும்போது நிலைநிற்காமற் போகலாம் ஏனெனில் அந்த நாளின் அக்கினி இந்த அமைப்பின் தன்மை எத்தகையது என்று நிச்சயமாக பரிசோதிக்கும். இதன் தொடர்ச்சியாக போதகரும் கற்பவரும் நஷ்டமடைந்தாலும், "அக்கினியினால்" இரட்சிப்பை அடைவார்கள்.

**சத்தியத்தால் ஊறுவிளைவிக்காதிருத்தல்**

நமது திறவுவசனமாகிய தீர்க்கதரிசனம் நிறைவேறும் செயல்பாட்டிலுள்ளது. "புடமிடுகிறவனுடைய அக்கினி" தனது வேலையை தற்போது செய்துவருகிறது. நம்மைச் சுற்றிலுமுள்ள ஆயிரக்கணக்கானோர், பத்தாயிரம்பேர் விழுகின்றனர். இந்நேரத்தில் தீர்க்கதரிசியின் கேள்வி மிகவும் ஏற்புடையதாயிருக்கிறது. அப்போஸ்தலர்கள் நித்திரையடைந்ததிலிருந்து போலிபோதனைகள் சபையை நிரப்பி, அநேக நூற்றாண்டுகளாக மனுக்குலத்தை மதரீதியான பாடங்களை பகுத்தறிவோடு நிதானிக்க முடியாதபடி திராணியற்றுப்போகப் பண்ணியுள்ளது. இக்காரியத்தைப்பொறுத்தவரை கடந்தகாலங்களில் நாம் நம் சொந்த அனுபவங்களை பெற்றிருக்கிறோம். எப்பொழுதெல்லாம் மதக்கோட்பாடுகள் பேசப்படுகிறதோ, அப்பொழுதெல்லாம் நம் சுபாவஅறிவை(common sense) இழந்தவர்களாக காணப்பட்டோம். தற்பொழுது நமது பகுத்தறிவை பயன்படுத்தி, அகோர தண்டனையாகிய பயத்தை நாம் தொலைத்துவிட்டோம். இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் போதித்த போதனைக்குள் மீண்டும்

வந்து சேர்ந்திருக்கிறோம். அவை மகா மேன்மையானதும் அருமை வாய்ந்ததுமாயிருக்கிறதை கண்டடைந்துள்ளோம்.

சத்தியத்தை இந்நாளின் அக்கினி எல்லோருக்கும் வெளியரங்கமாக்கும்போது, தவறை போதிப்பவர்கள் விரைவில் அவமானத்துக்குள்ளாவர்(ஏசா 66:5). யுகங்களுக்கடுத்த மாபெரும் தெய்வீக திட்டத்தின் வல்லமை சத்தியத்துக்கு முரண்பாடானவற்றை வெற்றிகரமாக வெளிப்படுத்தும். இதற்கெதிராக எந்த நாவும், எந்த எழுதுகோலும் நிற்கமுடியாது. தன் எதிரிகளுக்கு முன்பாகவும், அதன்மேல் திடீர்த்தாக்குதல் நடத்துகிற எல்லோர்மேலும் இது பலம் வாய்ந்ததாயிருக்கும். அது தன் எதிரிகளின் அறிவீனத்தை முன்பே உலகமுழுவதும் அறியப்பண்ணும். "அங்கே புலம்பலும் பற்கடிப்பும் இருக்கும்"

**ராஜா பிரசன்னமாயிருத்தலின் முக்கியத்துவம்**

தம் ராஜ்யத்தை தம் உடைமையாக்க ராஜா வந்திருக்குதல் என்பதன் பொருள் என்னவெனில், சபையாரை பரீட்சித்து, நியாயந்தீர்த்து நடத்துவதும், தனிப்பட்டவர்களையும் தேசத்தையும் பரீட்சித்து நியாயந்தீர்த்து நடத்துவதும் ஆகும். அது உணர்த்தும் பொருளானது, ராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும்போது, பூமிக்குரிய சீர்திருத்தவாதிகள் ஒருபோதும் முயற்சித்திராத அளவுக்கு, தீயசெயல்களை ஒடுக்கும் தன்மை இருக்கும். எந்த வடிவிலும் தீமை செய்வதற்கு உரிமம் அளிக்கப்படாது. நியாயம் செய்வதற்காக சுதந்திரம் வழங்கப்படும். பூமியின் நீதியுள்ள ராஜா ஆளுகைசெய்ய வந்திருப்பதன் பறைசாற்றுதலை ஒருசிலரே அனுபவித்து மகிழ்ந்திருப்பார்கள் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அநேகருக்கு இது, மனிதர்மேல் தற்காலத்தில் ஆதிக்கம் செய்யும் அனுகூலத்தை இழப்பதாக பொருள்படுகிறது. பெரும்பாலானவர்களுக்கோ மனம்போனபோக்கில் பாவத்தின் வழியில் உல்லாசமாயிருப்பதற்கு தடை ஏற்படுத்துவதாகவும், பாவ வழியை வெட்டிவிடுவதாயும் பொருள் கொள்கிறார்கள்.

அப்படி இருந்தபோதிலும், ராஜாவும் ராஜ்யமும் இங்கு வருவதோடு மட்டுமல்லாமல், இங்கேயே நிலைத்திருக்கும். சபையிலும் சமுதாயத்திலும் உள்ள தற்கால உபத்திரவங்களும், அசைக்கப்படுதலும், ஜனங்களை பொதுவாக விழித்தெழச்செய்வதுமே ராஜாவிடமிருந்தும் ராஜ்யத்திலிருந்தும் வெளிப்படும் ஆதிக்கத்தின் முடிவாக இருக்கும். மனுஷர் இதை அறியாதபோதிலும், தேவராஜ்யம் தரும் அடிகள், தற்போது பூமியின் ராஜ்யங்கள் அனைத்தையும் மூழ்கடிக்க ஆயத்தமாக்கப்படுவதன்மூலமும், இதனால் உலகில் நீதி ஸ்தாபிக்கப்படுவதன் வழி திறக்கப்பட்டு, மனிதரது இருதயங்கள் தாழ்மையைக் கற்று, பூமியை கட்டுப்பாட்டிற்குள் கொணரும் தேவ அரசாங்கத்தின் நீதிக்கேற்ப தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்வர். உலக ஆவியையுடைய மனுஷர் இதை அறிந்துணர மாட்டார்கள். இந்த ராஜ்யம் கண்ணுக்குப் புலப்படும்படி காட்சிக்குரியதாக, வெளியரங்கமாய் வராது. ஆகவே, இதோ இங்கே என்றும் அதோ அங்கே என்றும் அவர்களால் கூறமுடியாது.

அச்சந்தருகிற யுத்தம் எவரும் பாதிக்கப்படாதவகையில் தற்பொழுது கொந்தளித்து வருகிறது. ஒவ்வொரு நாளும் பலமாக வளர்ச்சிபெற்று பயங்கரமாய் உருவெடுத்து வருகிறது. இந்த உபத்திரவம் விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும். முன்னிலைமையைப்போல் காரியங்கள் விரைவில் சீர்பொருந்தும் என்று தங்களைத்தாங்களே திடப்படுத்திக்கொண்டு, மற்றவர்களையும் திடப்படுத்தி, சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையில் ஜனங்கள் இருந்துவருகிறார்கள். தேவன் இந்த உபத்திரவத்தை அனுமதிக்க திட்டமிட்டிருக்கிறார் என்றும், அது பரவி முழு உலகையும் ஆக்கிரமித்து, தற்கால ஏற்பாடுகளை முற்றிலுமாக கவிழ்த்துப்போடும் என்பதை நம்ப மறுத்து, உண்மை நிலைமைக்கு தங்களை குருடாக்கிக்கொள்கின்றனர். அவர்களுடைய கண்களை சுயநலம், பெருமை மற்றும் பணஆசை மூடிவைத்துள்ளன.

இந்த நேரத்தில் பாவத்துக்கெதிராக நீதியுள்ள தேவனின் நியாயத்தீர்ப்புகள் வரவேண்டியது அவசியம். ஆனால் அதன் உச்சகட்ட முடிவுகள் மகிமை நிறைந்ததாய் இருப்பதற்காக நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். உலகம் சிட்சிக்கப்பட்டு, கீழ்ப்படுத்தப்பட்டு அச்சம் நிறைந்த அக்கினியின் ஞானஸ்நானத்தாலும் இரத்தத்தாலும் சுத்திகரிக்கப்படும். அப்பொழுது பாவம் சுயநலம் மற்றும் ஊழல்கள் போன்றவை சட்டப்படி வெளிக்கொணரப்பட்டிருக்கும். அவ்வேளையில் மனுக்குலம் கர்த்தருடைய மீட்புக்காக அழுது, ஏங்கித்தவித்து காத்துக்கொண்டிருக்கும். அவரோ அவர்களது மன்றாட்டைக்கேட்டு அவர்களை விடுவித்து ஆசீர்வதிப்பார்.

ஆனால், வரவிருக்கும் ராஜா என்பது, இந்த உலகின் ராஜ்யங்களை பொதுவாகவே கவிழ்த்துப்போடும் என்றும், அதிக உபத்திரவம் இருக்கும் என்பதுமே பொருளாக இருக்கிறது. தேவனுடைய ராஜ்யங்கள் என்று அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கும் ராஜ்யங்களோ, நிஜமாகவே இவ்வுலகின் அதிபதியாகிய சாத்தானின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன. இந்த சாத்தானை வேதம் "ஆகாயத்துஅதிகாரப்பிரபு" என்றும், "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் தற்போது கிரியைசெய்கிற ஆவி" என்றும் குறிப்பிட்டிருக்கிறது(யோவ 14:30; 16:11; எபேசி 2:2). சமுதாயத்தை அசையப்பண்ணும் தன்மை , தேவநீதி நிலைநாட்டப்படும்வரை நீட்டித்திருக்கும் காலம்போன்றவை, முன்னெப்போதும் அறிந்திராததாயிருக்கும். இது முழுமையாக நிறைவேற்றப்படுவதால் மற்றுமொரு அசையப்பண்ணுதல் ஒருபோதும்அவசியமாயிராது(எபி 12:26,27). அதன்பொருள் என்னவெனில், குயவன் செய்யும் பானைபோல் உலகின் ராஜ்யங்களும் பேரரசுகளும் சுக்குநூறாக நொறுக்கப்படும் என்பதேயாகும். அதாவது,

தற்கால சபைக்கடுத்த வானங்களும், அதன் பிரகாசிக்கின்ற நட்சத்திரங்களில் அநேகரும் விழுந்துபோவார்கள். தற்போதைய மெய்சுவிசேஷமாகிய சூரியவெளிச்சமும், நியாயப்பிரமாணமாகிய சந்திரனின் வெளிச்சமும் அதன் நிழல்களும் அடையாளங்களும் எளிதில் புரியாதபடி, உலகஞானத்தின் அடர்ந்த மேகங்களால் மறைக்கப்பட்டுள்ளன. “சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்”(யோயேல்2:30,31).

சுயநலம் மற்றும் ஜீவனை பலம்குன்றச்செய்யும் புண்கள் இவைகளிலிருந்து சமுதாயம் விடுவிக்கப்படுவதால் அநேகர் சந்தோஷமடைவர். அவர்கள் விரும்பி உறுதியாய்ப் பற்றிக்கொண்ட குறிப்பிட்ட நீண்டகாலப் பாவங்களை கர்த்தர்தாமே நீதியும் பாரபட்சமற்ற ஒருநியாயாதிபதியுமாக இருந்து நீக்குவார் என்று அவர்கள் அறிந்துணர்வார்கள் என்று தோன்றுகிறது. அவர்களது உள்ளார்ந்த சுயநலம் அறியப்பட்டுவிடுமோ என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. அவ்வாறே அவர்களது பயங்கள் கண்டறியப்பட்டன. இருளில் மறைந்திருக்கிற அனைத்தையும் அவர் வெளிச்சத்துக்கு கொண்டுவந்து, தனிப்பட்டதும், வெளிப்படையானதுமான பாவம் மற்றும் சுயநலங்களை அடக்கி சரிப்படுத்துவார். முன்பு ஒருபோதும் புரிந்துகொண்டிராதவகையில் ஊழல்களின் ஆழங்களை வெளிப்படுத்துவார்.

“அவர் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாகவைப்பார்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும். மறைவிடத்தை ஜலப்பிரவாகம் அடித்துக்கொண்டுபோகும்” “அவர் உயரத்திலே வாசமாயிருக்கிறவர்களையும் கீழே தள்ளுகிறார், உயர்ந்த நகரத்தையும்(பாபிலோன்) தாழ்த்துகிறார். பொய்களை தங்கள் அடைக்கலமாகக்கொண்டோரை” அவர் தரைமட்டும் தாழ்த்தி, அது மண்ணாகுமட்டும் இடியப் பண்ணுகிறார்”– ஏசா28:15,17; 26:5,6.

**சத்தியத்தின் மகிமையான கொடியை உயர்த்திப்பிடியுங்கள்**

கர்த்தருடைய நாள் உலகின்மேல் திருடனைப்போலவும் கண்ணியைப்போலவும் வரும் என்றும், தேவனிடத்தில் முழுமையாக தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் மட்டுமே வெளிச்சத்திலிருந்து, அஜாக்கிரதையாக விடப்படமாட்டார்கள். தங்களை ஒப்புக்கொடுத்தவர்களில் அநேகர், பரலோக ராஜா மாம்சத்தில் வருவார் என்று எதிர்பார்த்து, வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர் முதலாம் வருகையில் மாம்சத்தில் வந்ததன் ஒரே காரணம், மனிதனுக்கு ஈட்டுக்கிரயமாக, மரணத்தின் பாடுகளை ஏற்பதற்காகவே என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். அவ்வாறு மரணத்தை சகித்ததன் நிமித்தமாக, தற்போது உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டு, ஒரு மகிமையான ஆவிக்குரிய ஜீவியாக வீற்றிருக்கிறார்.

“அவர் மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்”(1பேது3:18). “நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்” என்று பவுல்அப்போஸ்தலனும் கூறியிருந்ததை அவர்கள் மறந்தனர்(2கொரிந்5:16). குரு தம் இரண்டாம் வருகையில் எப்படி வருவார் என்பதைக் காண தேவனுடைய உண்மை குழந்தைகள் அதிகதிகமாக வருகிறார்கள். இவர்கள் தங்கள் மாம்சக்கண்களில் அவரை மாம்சத்தின்படி எதிர்பார்ப்பதில்லை.

மனிதனது துன்பங்களுக்கும் தவறுகளுக்கும் தீர்வை அளிப்பது, மகிமையின் ராஜாவும் அவரது ஆசீர்வதிக்கப்பட்ட ராஜ்யமுமே என்று அறிந்திருக்கிற நாம், பாரஞ்சுமந்து தவிக்கிற சிருஷ்டிகளுக்கு இந்த ராஜ்யத்தைக்குறித்து எடுத்துரைக்கவேண்டும். அதற்குபதிலாக, அவர்களுடைய சொந்த முயற்சிகள் எந்த நிஜமான நன்மையையும் தரமுடியாது. தற்கால உலகமனைத்தின் சூழ்நிலைகளின் காரணத்தை அவர்களுக்கு எடுத்துரைத்து, உலகமுழுவதும் வியாபித்துள்ள துன்பங்களுக்குப்பின்னால், உலகத்தோற்றத்துக்கு முன்பே பரிசுத்த தீர்க்கதரிசிகள் அனைவராலும் முன்னுரைத்த, மகிமை நிறைந்த திரும்பக்கொடுத்தலின் காலங்கள் வரவிருப்பதையும் கூறவேண்டும். ஆதாமுடைய முழு சந்ததியாரையும் மீட்கும் விலையாக இயேசுவின் மரணம் இருப்பதையும் அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும். அதோடு, அவரது சபையாரை மீட்பது மட்டும் அவரது இரண்டாம் வருகையின் நோக்கமாய் இராமல், சாத்தானைக் கட்டுவதும், அவனால் சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பதும், பிரேதக்குழிகளிலுள்ள அனைவரையும் விடுவிப்பதும், புதுஉடன்படிக்கையின் நிபந்தனைப்படி தேவனுடைய புத்திரர்க்குரிய சுதந்திரத்தை அடையும் வாய்ப்பை அனைவருக்கும் தருவதும் மிகவிரைவில் ஸ்தாபிக்கப்படும்.

———————————————

# தேவராஜ்யத்தில் அங்கமாவதைத் தேடுதல்

## SEEKING MEMBERSHIP in GOD'S KINGDOM

திறவுகோல் வசனம் : ''முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்'' – மத்தேயு6:33.

நம் ஆண்டவரது பூமிக்குரிய ஊழியத்தின் ஆரம்பத்தில் யூததேசம் தேவனுடைய இராஜ்யமாக ஆவதற்கு அழைக்கப்பட்டது. தேவன் அருளிய பிரதானமான ஆசீர்வாதம் யூதருக்கே முதலாவதாக இருந்தது. பல நூற்றாண்டுகளாக அவர்கள் தேவனுடைய விசேஷித்த ஜனங்களாக இருந்தனர். அவர்கள் தேவனுக்கு ''ஆசாரிய ராஜ்யமும், பரிசுத்த ஜாதியுமாய்'', அவருக்கு சொந்த சம்பத்தாகவும், ஆசாரியக் கூட்டமாகவும் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்த ஜனங்களாகவும் இருந்தனர்(யாத் 19:5,6). எந்தளவு விசுவாசமுடையவர்களாக இருந்தபோதிலும், இஸ்ரயேலர்கள் எல்லாரும் நியாயப்பிரமாணம் கொடுத்த காலத்திலிருந்தே தேவனுடைய இராஜ்யமாக இருந்திருப்பார்கள் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. இயேசுகிறிஸ்து இப்பூமிக்கு வருவதற்கு முன்பு, ஒருவரும் அந்த ராஜ்யத்தின் வகுப்பாராக ஆகும் வாய்ப்பில்லை. ஏனெனில் அவர்தான் இந்த வகுப்பாருக்கு முன்னோடியாக ஓடினவராக இருந்தார். அவர் வாழ்ந்த நாட்களில் யூதர்களுக்கு இந்த சலுகை அருளப்பட்டது. ஆனால் அதற்கு முன்னதாக அந்த தேசத்தில் வாழ்ந்தவர்கள் அதாவது தேவனிடத்தில் விசுவாசமாயிருந்தவர்கள், தங்களுடைய உடன்படிக்கைக்கு உண்மையாயிருந்தவர்கள் ஆண்டவரால் இந்த மனித நிலைமையில் மேன்மையாக ஆசீர்வதிக்கப்படுவர். ஸ்தாபிக்கப்பட்டுவருகிற தேவனுடைய ராஜ்யத்தில் அவர்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின்கீழ், எல்லா தேசங்களையும் ஆசீர்வதிக்கப் பயன்படுத்தப்படுவர்.

தேவனுடைய உண்மையுள்ள சிநேகிதனாகிய ஆபிரகாமின் வித்து என்ற காரணத்தினாலேயே மாம்சீக இஸ்ரயேல் ஜனங்கள் எல்லா தேசங்களுக்கும் மேலாக தேவனிடத்தில் தயவுபெற்று, தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆபிரகாமின் விசுவாசம், மற்றும் கீழ்ப்படிதலினால் அவருடைய வித்து ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் என்று தேவன் அவருக்கு வாக்குறுதி கொடுத்திருந்தார். மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் மட்டுமே பரிசுத்தமுள்ளவர்கள் அல்லது மற்ற ஜனங்களைவிட மேலானவர்கள் என்பது இதன் அர்த்தம்அல்ல.(பார்க்க யாத் 32:9–13; உபா9:4–8). மாறாக அவர்களின் பிதாக்களின் நிமித்தமே தம்முடைய ஜனங்களாகத் தெரிந்துகொண்டார்.

நம் கர்த்தரின் முதலாம் வருகையில் தேவனுடைய ராஜ்யத்தின் அங்கத்தினராகும் வாய்ப்பும், முழு இஸ்ரயேல் தேசத்திற்கான பரீட்சையும் அவர்கள் இந்த தேர்ந்தெடுத்தலின் ஆசீர்வாதத்திற்கு தயார் என்பதை நிரூபித்துக் காண்பிப்பதற்கான காலமும் வந்தது. இந்த ராஜ்யத்தைக் கொடுக்க இயேசுவால் மட்டுமே முடியும். அவர் பாவ நிவாரணபலியாக தம்மை கையளித்ததே தேவனுடைய ராஜ்யத்தை இந்த பூமியில் ஸ்தாபிப்பதற்கு அடிப்படை கட்டமைப்பாக இருந்தது.

**இராஜ்யத்தைப்பற்றிய சரியான மற்றும் தவறான கருத்துக்கள்**

நாம் தியானிப்பதற்காக எடுத்துக்கொண்ட ஆதார வசனம் இயேசுவின் மலைப்பிரசங்கத்தில் இராஜ்யத்தின் வகுப்பாரின் அங்கத்தினராவதற்கு ஊக்கமும் ஆர்வமும் மற்றும் ஒரே நோக்கமுடைய மனதும் மிகவும் அவசியம் என்று சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. தன்னுடைய செய்தியைக் கேட்க தயவுபெற்ற இந்த தேசத்தின் ஜனங்களெல்லாரும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கமாட்டார்கள் என்று நம் போதகர் அறிவுறுத்துகிறார். அநேகர் எதை குடிப்பது ? எதை உண்பது எதை உடுத்துவது ? என்று இந்த வாழ்க்கைக்குரியவைகளால் ஈர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் அருளப்பட்ட ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள தயாராகவும், தேவனுக்கு ஏற்புடையவராகவும் இருக்கவேண்டுமானால், தேவனுடைய ராஜ்யத்தை தங்கள் முதன்மையான விருப்பமாக ஏற்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். உலகக் காரியங்களை அல்ல. ''முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்'' என்று நம் இரட்சகர் கட்டளையிடுகிறார். முதலாவதாக தேவனுடைய இராஜ்யத்தைத் தேடும்பொழுது, இவ்வுலகத்தேவைகளெல்லாம் நமக்குக் கொடுக்கப்படும். ''இவைகளெல்லாம் உங்களுக்கும்கூடக் கொடுக்கப்படும்'' என்பது அவருடைய வாக்குத்தத்தமாயிருக்கிறது.

அநேக யூதர்கள் தங்கள் போதகரிடத்தில் தீர்க்கமாக இருக்கத் தயாராயில்லை. அவர்கள் தங்களுடைய வியாபாரத்திட்டங்கள், அரசியல் திட்டங்கள் சமூக நிகழ்ச்சிகள் போன்ற தங்களுடைய சொந்த திட்டங்களையே கைக்கொண்டிருந்தனர். எனவே தாங்கள் தொட்டு அறியமுடியாத மற்றும் புரியாததாய்த் தோன்றுகிற ஒரு இராஜ்யத்தைப் பெறுவதற்காக எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள் என்று இயேசு கொடுத்த இந்த அழைப்பை ஏற்று, உடனடியாக சம்மதிக்க அவர்களால் முடியாதிருந்தது. அவர்கள் மத்தியிலிருந்த 12 அப்போஸ்தலர்கள் மாத்திரமே அவர் அளித்த வாய்ப்பை முதலாவதாக ஏற்றுக்கொண்டனர். இயேசுவின் மரணத்தருவாயில் 500க்கும் மேற்பட்டவர்கள் தாங்களாகவே முன்வந்து அவரிடத்தில் சேர்ந்து, அவருடைய சீஷர்களானார்கள். இவர்களில் 120நபர்கள் பெந்தெகொஸ்தே நாளில் மேல்வீட்டு அறையில் ஒன்றுகூடி பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலை பெற்றனர் என்று சொல்லப்பட்டுள்ளது. பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு சில ஆயிரம் யூதர்கள் தேவனுடைய ராஜ்யத்தை உருவாக்குவதே தங்களுடைய முதல்பணி என்ற தீர்மானமான முடிவுக்கு வந்தனர். எனினும் அவர்கள் இஸ்ரயேல் தேசத்தில் மிக சிறுபான்மையோராய் இருந்தனர்.

இந்த சுவிசேஷயுகம் முழுவதிலும் இந்த அழைப்பைக் கேட்டு அதன் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தை உருவாக்குவதே தங்களுடைய வாழ்வில் முதன்மையானதாகக் கருதவேண்டும் என்று உறுதிபூண்டவர்கள் வெகுசிலரே. போப்புமார்க்கமே அந்த ராஜ்யம் அல்லது இந்த உலகராஜ்யங்களாகிய பிரிட்டிஷ்பேரரசு அல்லது ரஷ்ய பேரரசு அல்லது இன்னும் சில

உலகப்பேரரசுகளில் ஒன்றுதான் அந்த ராஜ்யம் என்று அநேகரை சிந்திக்கும்படியாக சாத்தான் முயற்சி செய்திருக்கிறான். மற்றவர்களையே அவன் "தேவனுடைய ராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்கு தவறான விளக்கத்தைக்கொடுத்து, புரிந்துகொள்ளச்செய்து, தேவராஜ்யத்தை சுதந்தரிப்பவர்கள் அனைவரும் பெயரளவில் வெறும் நீதியான காரியங்கள்செய்து, பரிசுத்தவாழ்க்கை வாழ்ந்து, கர்த்தருடைய ஆவியின் மூலமாக பக்தியுள்ள ஜீவியம் ஜீவித்தால்போதும் என்று சிந்திக்கும்படி முயற்சிசெய்கிறான். இவைகளெல்லாம் பரிசுத்த தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவின்மூலம் ஒப்புவிக்கப்பட்ட, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து கற்றுக்கொண்ட பாடங்கள்மூலம் எளிதில் காணக்கூடிய வேதாகமப் பாடங்களுக்கு எவ்வளவு தூரமாயிருக்கின்றன. உண்மையாகவே நாம் ஒரு தந்திரமுள்ள, வஞ்சகமான எதிராளியைப் பெற்றிருக்கிறோம்.

**கிறிஸ்தவர்கள் எப்படி தேவனுடைய பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முடியும் ?**

இந்த தவறான கருத்துக்களின்படி, தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றின உண்மையான சிந்தையானது, மங்கலாக தெளிவற்று காணப்படுகிறது. தேவன் ராஜ்யத்தின் வகுப்பாருக்கான அங்கத்தினரை தேர்ந்தெடுத்து வருகிறார் என்பதே அந்த சிந்தை. கர்த்தருடைய நிபந்தனையின்படி, தேவனுக்கு கொடுப்பதற்கென்று நம்மிடமுள்ள குறைவானவைகள் அனைத்தையும் கர்த்தருக்கென்று முழுதத்தம் செய்திருப்பதோடு மாத்திரமல்ல, நாம் நம் உடன்படிக்கையின் பொருத்தனையை தொடர்ந்து பயிற்சிசெய்து, மற்ற எல்லாவற்றையும் நஷ்டமும் குப்பையுமாக எண்ணும்போது, கர்த்தர் இயேசு தலையாயிருக்கிற அந்த மகிமையுள்ள கூட்டத்தின் அங்கத்தினராக ஜெயங்கொள்ளமுடியும் என்பதே அந்த சிந்தை. இந்த சிந்தை இயேசுவின் நாமத்தை பகிரங்கமாக அறிவிக்கிற பெரும்பான்மையானவர்களிடம் இன்னமும் இருளடைந்து மங்கலாகக் காணப்படுகிறது. ஆனால் கிறிஸ்துவின் முழுமையான சரீர அங்கத்தினர்களும் பாதுகாக்கப்பட்டுள்ளனர், எதிரியான சாத்தானின் தீவிரமான முயற்சிகளிலிருந்து தடுக்கப்பட்டுள்ளனர். இப்போது அந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட நிறைவடைந்துவிட்டது. உண்மையாகவே சிலர்மட்டுமே இப்போது உள்ளே வருகின்றனர். இந்த இடங்கள் அவிசுவாசத்தினால் சிலர் கிரீடங்களை இழந்து, காலிசெய்த இடங்களை புதிதாக உள்ளே பிரவேசித்தவர்கள் நிரப்புகின்றனர். இவர்கள் முன்பாக தற்போது கிரீடம் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்று நாம் விசுவாசிக்கிறோம். ஏனென்றால் 1881ம் வருடத்தோடு பொதுவான அழைப்பு முடிந்து, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுவிட்டனர் என்று நாம் புரிந்துகொண்டுள்ளோம். பார்க்க தொகுதி 3, பாடம் 6 – "அறுவடையின் வேலை".

தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுவதில் அவருடைய பிரமாணங்களைக் கைக்கொண்டு நடக்கும்போதுதான் நித்தியஜீவனைப் பெறமுடியும் என்று அன்று இஸ்ரயேலருக்கு கொடுத்த வாக்குறுதியிலிருந்து தேவன் தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை என்பதை புறஜாதியாராகிய நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். வேறு எந்த வழியும் இல்லை. அவருடைய பிரமாணத்தை மீறி நடக்கிற எவரையும் தேவன் இராஜ்யத்தில் கனத்துக்குரியவர்களாக உயர்த்துவதில்லை. இங்கு அவருடைய பிரமாணங்களை நாம் எப்படி கைக்கொள்வது ? என்ற கேள்வி எழுகிறது. 16 நூற்றாண்டுகள் முழுவதும் கடைப்பிடிக்க முடியாதவற்றை நம்மால் எப்படி கைக்கொள்ளமுடியும் ? எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுவதில்லை என்று அப்போஸ்தலன் மூலமாக கர்த்தர் சொல்லவில்லையா ? இவைகளை புரிந்துகொள்ள நாம் தேவனுடைய சில ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்ளவேண்டும்.அதென்னவென்றால், "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களை (இந்த உலகத்திலிருந்து சுவிசேஷ யுகத்தின் அழைப்பை யாரெல்லாம் ஏற்றுக்கொள்கிறார்களோ) தமக்கு ஒப்புரவாக்கி(2கொரிந்5:19) என்பதாகும்.

**உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள்**

இந்த சுவிசேஷயுகத்தில் அவருடையவர்களாகிற எல்லாருக்காகவும் கிறிஸ்து பிரமாணங்களைக் கைக்கொண்டு தெய்வீக நீதியை நிறைவேற்றினார். யாரெல்லாம் அந்தப் பிரமாணங்களை தங்கள் இருதயத்தில் நிறுத்தி தங்களுடைய கட்டுப்படுத்தமுடியாத விழுந்துபோன மாம்சத்தின் பலவீனத்தால் முழுமையாக கடைப்பிடிக்கமுடியாதநிலையில் இருக்கிறார்களோ அவர்களுக்கே அவருடைய புண்ணியம் அருளப்படுகிறது. அதை அப்.பவுல், நியாயப்பிரமாணத்தின் நீதியானது மாம்சத்துக்குரியவர்களாக நடக்கும்போது அல்ல, ஆவிக்குரியவர்களாக நடக்கும்போதே நமக்குள் பூரணப்படும் என்று கூறுகிறார். எல்லாவற்றிற்கும் முதலாவதாக, அவரது புண்ணியத்தை அவர்களது அழிவுக்குரிய சரீரத்துக்கு கொடுத்து, நம் மீட்பர் அவர்களது சுபாவ அபூரணங்களை மூடுகிறார். இரண்டாவதாக, அந்த சரீரம் அர்ப்பணிக்கப்பட்டு நியாயந்தீர்க்கப்பட்டு, பலியிடப்பட்டிருக்கிறது. அதாவது, அவர்களது மனிதசுபாவம் மரித்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே அவர்கள் ஒரு புதிய ஆவிக்குரிய சுபாவத்தில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுமுதற்கொண்டு அவர்களுடைய அழிவுக்குரிய சரீரம் புதுசிருஷ்டியின் சரீரமாக எண்ணப்படுகிறது. இனி அது மனிதசரீரமாக நீடித்திருப்பதில்லை. ஏனெனில் இது பலியிடப்பட்டாயிற்று. ஆகவே நிஜமாக இது புதுசிருஷ்டியின் ஊழியக்காரனாகும்படி உணர்வூட்டி உத்வேகப்படுத்தவேண்டும். இது இன்னும் மனித சுபாவத்திலேயே இருப்பதால், தற்கால வாழ்க்கை முடிவுக்குவரும்வரை, அணிவதற்கென நீதியின்ஆடை கொடுக்கப்படவேண்டும், இது நமது இரட்சகரால் அளிக்கப்பட்டுள்ளது.

அப்.பவுல், கிறிஸ்துஇயேசுவுக்குள்ளான நம் புதியஉறவின் நிலைப்பாட்டிலிருந்து நம்முடைய சரீரங்களைக் குறித்து பேசும்போது, "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்கள் என்று அறியீர்களா ?"(1கொரிந்6:15) என்று கூறுகிறார். தேவன் நம்முடைய மாம்சசரீரத்தை இனிமேல் மனித சரீரமாகவே

**--2767--**

எண்ணமாட்டார். அது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஒரு அங்கமாகவும், ஆவிக்குரிய புதுசிருஷ்டியின் சொத்தாகவும் உள்ளது. இந்த புதுசிருஷ்டி தேவனுடைய பிரமாணங்களை கைக்கொள்ளும். கிறிஸ்துவின் தூய்மையும் நீதியுமான வெண்வஸ்திரத்தால் மூடப்பட்டுள்ளது. இதில் எங்கேயாயினும் தோல்விஏற்படுமானால், புதுசிருஷ்டி தோல்வியுற்றதாக எண்ணப்படாமல் அபூரண மாம்சமே தோல்வியடைந்தது. இந்த புதுசிருஷ்டியின் கறையற்ற சரீரமாகவே தேவன் நோக்கிப்பார்க்கிறார். இவ்விதமாகவே நாம் தேவனுடைய பிரமாணங்களுக்கு முன்பாக பூரணராக நிற்கிறோம். இவ்வாறு, நாம் மாம்சத்தின்படி நடவாமல், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கும்போது, நியாயப்பிரமாணத்தின் தேவநீதி நம்முள் நிறைவேறுகிறது.

### கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனம் புசிப்பதிலும் குடிப்பதிலும்அல்ல

நம்முடைய இந்தப்பாடம் நாம் தேவனுடைய நீதியை தேடவேண்டுமென வலியுறுத்துகிறது. தேவன் எவர்களை அழைக்கிறாரோ அவர்களுக்கு நீதியை ஏற்பாடுசெய்திருக்கிறார் என்று சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகிறது. அந்த நீதி கிறிஸ்துவுக்குள் இருக்கிறது, தேவனிடத்தில் வருகிற ஒவ்வொருவரும் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஏற்காவிடில், தேவனுடைய நீதியை பெற்றிராவிடில், அத்தோடு இணைந்துசெல்லுகின்ற ஒத்தாசையானது, அந்த நீதியோடுகூட சென்றுவிடும், அவனோ தேவனுடைய ராஜ்யத்தை அடையமுடியாது.

புதுசிருஷ்டியானது நம் கர்த்தருக்குள் மிகவும் இசைவாய் பொருந்தியிருக்குமானால், தன்னுடைய அழிவுக்குரிய மாம்ச சரீரத்தை அன்பின் பிரமாணத்தின் கட்டுப்பாட்டின்கீழ் முழுவதும் ஒப்புக்கொடுக்கத்தேடுவான். அவன் தன் உடன் அங்கத்தினரிடத்திலும் சகோதரரிடத்திலும் நேர்மையுடனும் மற்றும் எல்லாரிடத்திலும் அன்பையும் இரக்கத்தையும் காண்பிக்கவே நாடுவான். பரலோக ராஜ்யத்தில் அங்கத்தினராகும்படிக்கு, தன் முழு ஜீவியத்தையும் ஒப்புக்கொடுக்கவேண்டும். இது அவனை தேவனுடைய நீதியினிமித்தமாக ஊழியம்செய்யும்படிக்கு வழிநடத்தும். எங்கெல்லாம் தேவனுடைய திட்டங்கள் புறக்கணிக்கப்படுகிறதோ, புத்தியறிவின் ஒவ்வொரு வழியிலும் அவற்றை பாதுகாக்க அவன் அழைக்கப்படுவான், அவன் நீதிக்காகவும் சத்தியத்துக்காகவும் நிற்பான். யாரெல்லாம் தேவனுடைய ராஜ்யத்தை உண்மையாகத் தேடுகிறார்களோ அவர்கள் இந்த மனப்பாங்கையே பெற்றிருப்பர்.

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்பும் அல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்தஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாயிருக்கும் என்று அப்போஸ்தலர் பவுல் கூறும்போது, இங்கு இவ்வசனப்பகுதியை அவர் என்ன அர்த்தத்தில் கூறுகிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த ராஜ்யத்தின் வகுப்பாருக்கான சிலாக்கியங்கள், நியாயப்பிரமாணத்தின்கீழ் விலக்கப்பட்டவைகளை புசிப்பது குடிப்பது அல்லது புறஜாதிகளது மூடநம்பிக்கைகளின் அடிமைத்தனத்தில் கட்டுண்டுகிடப்பவைகளிலிருந்து சுயாதீனம் பெற்றிருப்பதை மட்டும் குறிப்பிடாமல், நம்முடைய சுயாதீனம் இவைகளைக்காட்டிலும் மிகவும் மேன்மையானது. அந்த யூதர்கள் இயேசுவின் பின்னடியார்களாக மாறும்போது, நியாயப்பிரமாணத்தின் நிபந்தனைகளில் உள்ள போஜனம் போன்ற மற்ற கட்டுப்பாடுகளிலிருந்து தற்போது விடுவிக்கப்படுகின்றனர் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இருந்தபோதிலும் அவர்கள் இப்போது பன்றிஇறைச்சியையோ மற்ற சிலவற்றையோ உண்ணுவதற்கு உள்ள நிபந்தனைகள் மற்றும் சூழ்நிலைகள் ஆகியவைகள் பிற்பாடு ஒழுங்குபடுத்தப்படும். அவர்கள் முன்பு யூதர்களாய் இருந்தபோது சுயாதீனத்தைப் பெற்றிருக்கவில்லை, கிறிஸ்துவுக்குள் வந்தபிறகே சுயாதீனம் பெற்றனர்.

ஆனால் அப்.பவுல் குறிப்பிடும் இந்த பிரதானமான சுயாதீனம் உண்பதற்கேதுவான சிப்பி, பன்றியிறைச்சி மற்றும் நியாயப்பிரமாணத்தால் விலக்கப்பட்டவற்றை உண்பதில் அல்ல, இந்த அனுமதி அதிக ஆசீர்வாதத்தை தரப்போவதில்லை. தேவனுடைய புத்திரர்கள் அனைவருக்கும் ஆசீர்வாதமும்ஆறுதலுமாயிருக்கிறது என்னவெனில், உண்மையான நீதியும் பரிசுத்தமுமே கிறிஸ்துவுக்குள்ளான அவர்களுடைய சுயாதீனத்தில் பிரதானமான கோட்பாடாயிருக்கிறது. அதுபோலவே, நீதி சமாதானம் மற்றும் சந்தோஷம் ஆகிய இவைகள் அந்த இராஜ்யத்தை உருவாக்கும் என்பது அப்போஸ்தலர் கூற்று அல்ல. மாறாக, இவைகள் ராஜ்யத்து வகுப்பாரின் அங்கத்தினர்க்குரிய ஆசீர்வாதமான முடிவுகள் ஆகும். ராஜ்யத்தின் வாரிசுகளாக உரிமை பெற்றவர்களது ஆசீர்வாதங்களே அவைகளாகும். இவர்கள் பூரணவயதை எட்டாவிடினும், இரண்டாம் திரைக்கப்பால் செய்யவிருக்கும் ராஜ்யத்தின் ஊழியத்துக்காக தற்போது கற்பிக்கப்பட்டு, ஆயத்தமாகிவருகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் தற்போது, தேவனுடைய நீதியாகிய உண்மை நீதியில் சந்தோஷப்பட்டு, மற்ற எல்லாவற்றைக்காட்டிலும் அதையே நாடித்தேடவேண்டும். ஆமென்.

-----------------------------

--2768--

R 5918

# நல்ல, மேம்பட்ட, சிறந்த வேதாகம ஆராய்ச்சி

வேதாகமத்தை, தேவவசனமென மதிக்கச் செய்திடும் ஒவ்வொரு பிரயாசமும் பாராட்டப்படத்தக்கதாகும். ஐம்பது முதல் நூறு வருடங்களுக்கு முன்னதாக கிரேட் பிரிட்டனிலும், அயர்லாந்திலும் கைக்கொள்ளப்பட்ட வேதாகம ஆராய்ச்சியானது, அதாவது வசனங்கள் மற்றும் வேதாகம அதிகாரங்களை மனப்பாடம்பண்ணி ஒப்புவித்தல் மற்றும் வேதாகமத்தைப் பள்ளிக்கூடங்களில் வாசிப்பதற்குப் பயன்படுத்துதல் ஆகியவை பிரயோஜனமானவைகளாகவே இருந்தன. இப்படி வேதாகமத்தின் வசனங்களில் பரிட்சயமாகுகின்றவர்கள், இதினிமித்தம் அவர்கள் ஒருவேளை பிற்பாடு கிறிஸ்தவர்களாகி, தேவவார்த்தைகளின் அர்த்தத்தினை நாடுகையில், விலையேறப்பெற்ற தகவல்களை ஞாபகத்தில் பெற்றவர்களாய் இருப்பார்கள்.

வேறு வேதாகம ஆராய்ச்சிக்கான பிரயாசங்களானது பல்வேறு சபைபிரிவுகளில் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் இவைகள் - சபைபிரிவு விசுவாசப் பிரமாணங்களினால் தடங்கல் பண்ணப்பட்டது. அவ்வப்போது திறமையுள்ள போதகர்கள் தங்கள் சபையாருக்கு வேதாகமத்திலுள்ள வரலாறு காரியங்களைக்குறித்துத் தகவல் கொடுக்கின்றனர்; நிருபங்களின் எழுத்தாளர்களைக்குறித்தும், இவர்களது பிரயாண அனுபவங்கள் முதலானவைகள் குறித்தும் கலந்துரையாடுகின்றனர். சிலசமயம் போதகர்கள் உபதேசங்களுக்குள் கடந்துபோகின்றனர்; ஆனால் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், அதுவும் ஒருவேளை அவர் மிகவும் புத்திசாலித்தனமாகக் காணப்பட்டு, சபையாரைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவில்லையெனில், பாடத்தின் விளைவாக வாக்குவாதமும், சிக்கலும்தான் ஏற்பட்டு, சபையார் இருந்ததைவிட, அதிகமான குழப்பத்தில் விடப்படுவார்கள்.

கொஞ்சம் காலங்களாக ஆதரவைப் பெற்றிருந்த வேதாகம ஆராய்ச்சிக்கான இன்னொரு பாணி, என்னவெனில்: அநேகம் கிறிஸ்தவ ஜனங்கள் ஒன்றுகூடி, வேதாகமத்தின் ஓர் அதிகாரத்தில் ஒவ்வொரு வசனமாக வாசிப்பார்கள். ஒவ்வொருவனும் தனக்கான வசனத்தை வாசித்தப் பிற்பாடு, தன்னுடைய விளக்க் கருத்தினைக் கூறுவான். ஒருவேளை ஓர் அதிகாரத்தில் 40 வசனங்கள் காணப்படுமாயின், அநேகம் சிறுசிறு விளக்கக் கருத்துகள் கிடைக்கப்பெறும். கூட்டம் நிறைவுபெறும்போது, இப்படியாக வேதாகமத்தைக் கையாண்டதிலும், சுவாரசியமான சில வசனங்களை வாசித்ததிலும், ஒருவரோடொருவர் ஐக்கியம்கொண்டதிலும், புத்துணர்வு அடைந்த உணர்வினை அடைகின்றனர்; ஆனால் இத்தகைய வேதாகம ஆராய்ச்சிகளிலிருந்து, தேவனை அல்லது யுகங்களுக்கடுத்த அவரது திட்டத்தைக்குறித்து மிகக்குறைவான அறிவே பெறப்படுகின்றது.

சமீபக்காலங்களாக - அதாவது கடந்த பத்து ஆண்டுகளுக்குள்ளாக, வேதாகமமானது, நம்மால் குறிப்பிடப்படும் பெரோயா ஆராய்ச்சிகளின் - வேதவாக்கிய ஆராய்ச்சிகளின் விதத்தில் ஆராயப்பட்டு வருகின்றது. இப்பொழுது உலகமெங்கும் பெரோயா வகுப்புகளானது நடைப்பெற்று வருகின்றது. மாபெரும் ஆசீர்வாதமும், மாபெரும் வெளிச்சமும் பலனாகக் காணப்படுகின்றது. இவ்வகை வேத ஆராய்ச்சிக்கு ஒரு பாடப் புத்தகமும், ஒரு கேள்வி புத்தகமும் கூடப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பாடப்புத்தகங்களானது வேதாகமப் பாடங்களின் பல்வேறு தொகுதிகளாக (volumes) காணப்படுகின்றன. இந்தத் தொகுதிகளில், வேதாகமத்தின் போதனைகளானது சேகரிக்கப்பட்டு, புரிந்துகொள்ளும் வடிவில் கொண்டுவரப்பட்டுள்ளது. உதாரணத்திற்குப் பரிசுத்த ஆவிக்குறித்த ஆய்வு என்றால், இத்தலைப்பின் கீழான ஆராய்ச்சியானது, வேதாகமத்தின் அனைத்துப் பாகங்களிலுமுள்ள போதனைகளை ஒன்றுசேர்த்து, அதைச் சபையார் முன், வரிசையாய் முன்வைக்கின்றதாய் இருக்கும். ஒருவேளை ஆய்வு "மனிதனாகிய கிறிஸ்து இயேசுவென்றால்," இதுவும் மேற்கூறப்பட்டுள்ளதுபோன்று கையாளப்படுகின்றது. ஒருவேளை ஆய்வு "லோகாஸ்" பற்றி என்றால், இதுவும் அதே விதத்தில் கையாளப்படுகின்றது. ஒருவேளை ஆய்வு "நீதிமானாக்கப்படுதல்," "பரிசுத்தமாக்கப்படுதல்," "பரிசுத்தவான்கள் மகிமைப்படுத்தப்படுதல்" என்றால், ஒவ்வொரு ஆராய்ச்சியும் முறைப்படி கையாளப்பட்டு - அதாவது சபையாருடைய மனங்களுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு, வேதாகமத்தில் இவைகள் குறிப்பிடப்பட்டுள்ளதான பல்வேறு பகுதிகள் குறித்த குறிப்புகளுடன், கலந்தாய்வு பண்ணப்படத்தக்கதாக முன்வைக்கப்படுகின்றது.

வேதாகம ஆராய்ச்சிக்கான இந்த வழிமுறையின் முக்கியத்துவத்தினை அறிந்தவர்களும், இதைப் பின்பற்றுகிறவர்களுமான தேவனுடைய ஜனங்கள் மற்றவர்களைக் காட்டிலும் வேதவசனத்தைக் குறித்தத் தெளிவான புரிந்துகொள்ளுதலைப் பெற்றிருப்பது குறித்து நாம் ஆச்சரியமடைகிறதில்லை. ஆகையால் எவ்வகை வேதாகம ஆராய்ச்சியினை நாம் பரிந்துரைத்திட்டாலும், இந்த அறுவடை காலத்தின்போது தம்முடைய ஜனங்களை வெளிச்சமூட்டத்தக்கதாக, மற்றவைகள் யாவற்றைக் காட்டிலும் கர்த்தர் ஆசீர்வதித்துள்ளதான இந்த வழிமுறையை நாம் விசேஷமாய்ப் பரிந்துரைக்கின்றோம். இந்த வழிமுறையானது முழுச்சபையாரின் பிரயோஜனத்திற்கேதுவானதாகும். திறமையுள்ள வழிநடத்துபவர் கண்டிப்பாய் அவசியம் என்றில்லை. வேறுவகையான எந்த வேதாகம ஆராய்ச்சித் தொடர்புடைய விஷயத்தில் திறமையுள்ள வழிநடத்துபவருக்குரிய ஓர் அபாயமானது, அவர்களது திறமையானது சிலசமயங்களில் தவறான திசையில் செல்லும் காரியத்திலும், தவறாய் வழிநடத்திவிடும் காரியத்திலும் காணப்படுகின்றது.

இந்தப் பெரோயா ஆராய்ச்சிகளானது, வேதவசனத்தில் முழுச்சபையாரையும் தேறின அறிவின் நிலைக்குக் கொண்டுவருகின்றது; காரணம் அவர்கள் முன் முழுப்பாடத்தையும் கலந்தாய்வுக்கு வைக்கப்படுகின்றது. எனினும் பெரோயா ஆராய்ச்சியிலும்கூட, கேள்விகள் பயன்படுத்தப்பட்டாலும், தாழ்மை மனமுள்ள திறமையுள்ள வழிநடத்துபவர், சகோதரருக்கு மிகுந்த உதவியாய்க் காணப்படுவார். இப்படியாகவே உலகம் எங்குமுள்ள கிட்டத்தட்ட ஒவ்வொரு சபையாரின் விஷயத்திலும் காணப்படுகின்றது. வாட்ச் டவரின் வாசகர்கள், ஏன் இந்தப் பெரோயா ஆராய்ச்சியாகிய வேதாகம ஆராய்ச்சியினை நாம் இவ்வளவுக்கு உள்ளார்ந்த விதத்தில் பரிந்துரைக்கின்றோம் என்பதை அறிய நாம் விரும்புகின்றோம். கர்த்தரினால் இவ்வளவுக்கு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு வழிமுறைக்கு விரோதமாக எதிராளியானவன் கிரியைப் புரிகையில் நாம் ஆச்சரியமடையவும் வேண்டாம். பெரோயா வேதாகம ஆராய்ச்சிகளினால் மற்றும் கடந்த காலங்களில் தங்களால் அறியப்பட்டிருக்கும் அல்லது முயற்சிப் பண்ணப்பட்டிருக்கும் மற்றெல்லா-வகையான வேதாகம ஆராய்ச்சிகளினால் தங்கள் மனங்களிலும், தங்கள் இருதயங்களிலும், தங்கள் ஜீவியங்களிலும் உண்டான பலன்களை ஒப்பிட்டு வேறுபடுத்திப் பார்க்க நாம் அனைவருக்கும் வலியுறுத்துகின்றோம்.

---

# கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்து மேன்மைபாராட்டுதல்

## GLORYING IN THE CROSS OF CHRIST

ஆதார வசனங்கள் : 1கொரிந்தியர் 1:18 – 2:2.

**திறவுகோல் வசனம் :** ‘‘நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக’’ – கலாத் 6:14.

கிறிஸ்துவின் சிலுவையைப்பற்றின உபதேசம் படிப்படியாக மரித்துக்கொண்டுவருகிறது என்ற கருத்துக்கு ஒருவரும் ஆட்சேபணை தெரிவிக்கமாட்டார்கள். இதை தொடர்ச்சியாக பிரசங்கிக்கிறவர்கள், இது பாவத்தை வெறுக்கவும், அதனிமித்தம் நிகழக்கூடிய சுயத்தை வெறுக்கவும் ஆழமாகப் பதியச்செய்கிறதென்று கூறுகின்றனர். கிறிஸ்துவின் சிலுவையைப் பற்றி பிரசங்கிப்பதன் முக்கியத்துவத்தை நாம் வாழும் தற்போதைய நாட்களில் பிரசங்கிக்கும் ஊழியக்காரரைக் கண்டுபிடிப்பது மெய்யாகவே அபூர்வமாயிருக்கிறது. உலகின் பாவங்களிலிருந்து மீட்கும் விலைக்கிரயம் இயேசுவின் மரணமே என்பதன் அத்தியாவசியத்தைக்குறித்து அரிதாகவே பேசப்படுகிறது –1தீமோத்2:5,6; மத்தேயு20:28.


ஏன் இந்த நிலை? அவர்கள் கிறிஸ்தவ விஞ்ஞானத்திற்கு மாறிவிட்டார்கள். ஆதலால் பாவம் மற்றும் மரணம் என்ற இரண்டும் ஒருபோதும் இல்லை என்று நம்புவதால், இயேசு பாவத்துக்காக மரித்தார் என்பதை இப்படிப்பட்ட நம்பிக்கையுடையவர்கள் நம்பமாட்டார்கள் என்றும் பதிலளிக்கக்கூடும். வேறுசிலர், மீட்பை ஏற்படுத்தி, பிதாவோடு ஒப்புரவாக்குவதற்கு தெய்வீகத்திட்டத்தின்படி இயேசுவின் மரணம் அவசியமானது என்ற ஞானத்தை அடைந்திருந்து, அதனையே எப்பொழுதும் நம்புவதாக கூறுவர். அவர்களது கருத்துப்படி, இயேசுவும் அப்போஸ்தலர்களும் சிலுவையைக் குறித்து சொல்லும்போது, இருண்டகாலத்தின் வஞ்சனைக்குள் பிரயாசப்பட்டுக் கொண்டிருந்தனர் என்றும், தற்காலத்தோடு இதை ஒப்பிடும்போது, தற்காலக் கல்வி அதிக வெளிச்சத்தின்கீழ் பிரகாசிக்கிறது என்றும் கூறுவர். இன்னும் வேறுசிலரோ, தாங்கள் பரிணாமவாதிகளாகவும், தர்க்க சாஸ்திரிகளாகிவிட்டதாயும், இனியும் வேதாகமத்தை நம்பமாட்டோம் என்றும், தாங்கள் வேதாகமம் கூறும் கொள்கைக்கு எதிரான பரிணாமக்கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதாக கூறுகின்றனர்.

பரிணாமக் கருத்தின் நிலைப்பாட்டின்படி, மீட்பர் செலுத்தும் ஈடுபலியின்மூலமாக, நீதிநியாயம் என்று இருக்கமுடியாது, நடத்தையிலும் பண்புகளிலும் தவறாத தன்மையை காத்துக்கொள்ளவும் முடியாது. ஏன்? பரிணாமக்கொள்கையின்படி மனிதன் நிச்சயமாகவே வளர்ச்சியடைந்துவருகிறான், ஆயினும், இன்னும் பூரணமடையவில்லை. ஆகவே பரிபூரணத் தன்மைக்கான பரீட்சையை சந்திக்க அவன் இன்னும் தயாராகவில்லை. இவன் மிருக நிலைமையிலிருந்து அறிவுள்ள சிருஷ்டி நிலையோடு இரண்டறக் கலந்துள்ளான் என்பதாகும். எந்த மீட்புமின்றி அல்லது தேவனுடைய எந்த குறுக்கீடுமின்றி, பரிணாமக்கொள்கையின் செயல்முறை தொடர்ந்து நடந்து, மனுக்குலக் குடும்பம் தங்கள் சொந்த புத்திக்கூர்மை, ஞானம், திறன், வல்லமை மற்றும் தன்னிகரற்ற ஆளுகை அடையும்வரை நீடித்து, நித்தியத்துக்கும் ஜீவிக்கும்படிசெய்யும் என்று பரிணாமவாதிகள் வலியுறுத்துகின்றனர்.

கடந்தகாலத்திலும் இன்றையநாளிலும் வாழும் பரிணாமவாதிகளுக்கு இக்கருத்தில் ஒருசிறு சௌகரியம் இருக்கிறது. தங்களுடைய குழந்தைகளின் எதிர்காலம் மற்றும் அவர்கள் படிப்படியாக நித்திய ஜீவனுக்கென்று பரிணாம வளர்ச்சி அடைவார்கள் எனஅவர்களைப்பற்றி பெருமை கொள்வதோடு, இந்த சத்தியத்துக்கு மேல் வேறொன்றுமில்லை என ஒத்துக்கொள்கிறார்கள். அதாவது, அவர்கள் சம்பந்தப்பட்ட எந்தஒரு எதிர்கால வாழ்வும் அவர்களுடைய குழந்தைகளை சார்ந்தே இருக்கிறது. மூதாதையர்களாக தங்களையே மிகைப்படுத்த ஒன்றுமில்லையென்றும், அவர்களில் ஒருசிலர் தங்கள் மூதாதையர் வழியைசொல்லி தங்களை பெருமைப்படுத்த எண்ணினாலும், அவர்களது முற்பிதாக்கள் குரங்குகளும், தவளைகளும், அவை அனைத்துக்கும் முந்தி இருந்த உயிர்சத்துப்பொருள் மட்டுமே(Protoplasm)

**சிலுவையின் முக்கியத்துவம் :–**

இந்த கோட்பாடுகள் மனித ஞானத்திலிருந்து பிறந்தவைகளும் தேவவசனத்தை அலட்சியப்படுத்தியும், அதனை தவறாக சித்தரித்தும் காண்பிக்கின்றன. சுவிசேஷம் வெளிப்படுத்தும் சிலுவை, மற்ற எவற்றோடும் ஒப்பிடும்போது எத்தனை அழகாயிருக்கிறது! தேவன் மனுஷனை தமது சாயலாகவும், ரூபத்தின்படியேயும் உண்டாக்கினதாக சுவிசேஷம் நமக்கு தீர்மானமாய் உரைக்கிறது. தெய்வீகப் பிரமாணத்துக்கு கீழ்ப்படியாததன் பலனாக தன்னுடைய தற்போதைய ஒழுக்க சீர்கேட்டுக்கு விழுந்துபோனான். இதனால் தெய்வீக தண்டனையாகிய ‘‘நீ சாகவே சாவாய்’’ என்ற தீர்ப்பு கட்டாயமாக செயல்படுத்தப்பட்டது –ஆதி2:17.




நமது சந்ததி 6000 வருடங்களாக மரித்துக் கொண்டிருக்கிறது. சரீரப்பூர்வமாக மட்டுமல்ல, சிந்தையிலும் ஒழுக்கத் தன்மைகளிலும்கூட மரித்துவருகிறது. தற்காலத்து எல்லாக் கல்வி முறைகளிலும் கடந்தகாலத்தின் எல்லா அனுபவங்களையும் வைத்து பார்க்கும்போது, நமது சந்ததி தற்போதைய திருப்தியற்ற

நிலைமையிலிருந்து பூரணத்தை அடைய உயர்த்தப்படும் என்ற நம்பிக்கை ஒருவரிடத்திலும் இல்லை. நாம் செய்யவேண்டியதெல்லாம், நம்முள் இருக்கிற தீமையோடு போராடவேண்டும், நோய் மற்றும் மரணத்தோடு போராடவேண்டும், அதே நிலைமையில் மற்றவர்களுக்கும் உதவவேண்டும்.

ஆனால் இடைப்பட்டநேரத்தில், தேவன் துவக்கத்திலேயே சிலுவையின் ஆசீர்வாதங்களைக் குறித்து திட்டமிட்டிருந்தார். ஏற்றவேளையில் தம் குமாரனை அனுப்பவும், அவர் மனுஷனுடைய பாவங்களுக்காக மரிக்கவும் வேண்டுமென்று தீர்மானித்திருந்தார். ''அநீதருக்காக நீதிமான் மரித்து'' என்றபடி, மனிதன் தேவதயவுபெறும்படி மீண்டுவரவும், நித்தியஜீவன் பெறும்படியும் வழியைத் திறந்துவைத்தார்.

''மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான்'' – 1கொரிந்15:21–23.

ஆனால் இடைப்பட்டகாலத்தில், கல்வாரியில் நிறைவேற்றப்படும் மீட்புக்காக 4000 ஆண்டுகள் இவ்வுலகம் காத்திருந்தது. அந்த மீட்பினால் கிடைத்த புண்ணியங்கள் ஏறக்குறைய 2000 வருடங்களாக மனுக்குலத்தின் ஒரு விசேஷித்த வகுப்பாருக்காக கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வகுப்பார், ''பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கு'' கிறிஸ்துவின் மணவாட்டியாகும்படி ஒரு விசேஷித்த அழைப்புக்கென்று அழைக்கப் பட்டிருக்கின்றனர்(எபி12:23). தெரிந்தெடுக்கப்பட்ட இக்கூட்டத்தார், தேவனுடைய மாபெரும் இராஜ்யத்தில் இயேசுவோடு இணைந்து, வேதாகமத்தில் எங்கும் கூறுகிறபடி, மனுக்குலத்தின் சாபத்தை அகற்றிவிட்டு, தேவதயவை மீண்டும் கொண்டுவருவர் என்று வேதாகமம் நமக்கு உறுதிபட கூறுகிறது.

ராஜரீகக் குடும்பம் சிம்மாசனத்தில் அமர ஆயத்தப்படும்வரை, இராஜ்யம் வராது. இயேசு மெய்யாகவே நீண்டகாலத்துக்குமுன்பே ஆயத்தமாகிவிட்டார். ஆனாலும் தேவதிட்டத்திற்கு இசைவாக அவர் காத்திருந்து, தம் சகோதரர்களாகிய சபையை தயார்ப்படுத்தும் பணியை செய்துவருகிறார். இவர்கள் இராஜ்யத்தில் அவரோடு உடன் சுதந்திரவாளிகளாகப் போகிறார்கள். வேறுவகையில் கூறுவோமாகில் மணவாட்டி, ''ஆட்டுக்குட்டியானவரின் மனைவி'', என்றும் அழைக்கப்படுகிறாள்(ரோம8:17; வெளி 21:9,10). பின்பு ஆயிரம் ஆண்டுகள் முழு உலக மனுக்குலத்தாருக்கும் திரும்பக் கொடுத்தலின் சிலாக்கியங்கள் அருளப்பட கதவு திறக்கப்படும். இனி பிரசங்கிப்பதற்கான அவசியம் இல்லாமற்போகும். ஏனெனில் சிறியோன் முதல் பெரியவன் வரை எல்லோரும் கர்த்தரை அறிந்திருப்பர். எல்லா முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்கும்; எல்லா நாவுகளும் அறிக்கையிடும்(எரேமி31:34; பிலிப் 2:9–11). இவை அனைத்தும் சிலுவையின் பலனே.

**உலக ஞானம் பரலோக ஞானத்துக்கு எதிரானது :–**

''இரத்தஞ்சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை''(எபி 9:22) என்று அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் சிலுவையை தம் பிரசங்கத்தின் மையமாக அப்போஸ்தலர் ஏற்படுத்திக்கொண்டதில் வியப்பேதுமில்லை. ஏசாயா தீர்க்கதரிசியும்; ''அவரது தழும்புகளால் நாம் குணமாகிறோம்'' (ஏசா53:5) என்று பிரகடனப்படுத்துகிறார். உலகஞானம் தெய்வீகத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாது, அதிலும் குறிப்பாக தேவதிட்டத்தின் மையமாகிய கிறிஸ்துவின் சிலுவையை ஏற்றுக்கொள்ளாது என இப்பாடத்தில் சுருக்கமாக கூறப்படுகிறது. உலக ஞானமோ முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் பார்க்கும்.

ஆயினும், உலகின் ஞானிகளை தேவன் தேடுவதில்லை, மாறாக நீதியை நேசிப்போரையும் முழுவிசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலை காண்பிப்போரையுமே தேடுகிறார். இதன் காரணமாக, மனுக்குலத்தின் பெரும்பான்மையோர், இதிலும் குறிப்பாக ஞானவான்களில் பெரும்பான்மையோர், உலகத்தின் பக்கம் இருக்கிறதையே காண்கிறோம். கர்த்தரை சார்ந்து இருப்போர், அவர்களோடு ஒப்பிடுகையில் வெகுசிலரே முறையாகவும், உண்மையாகவும் கர்த்தருடைய பக்கத்தில், பரத்திலிருந்து வருகிற ஞானத்தை சார்ந்து இருக்கிறார்கள். இவர்கள் உலகத்தின் பார்வையில் பைத்தியக்காரர்கள். ஆனால் கர்த்தரின் பார்வையிலோ இவர்கள் ஞானவான்கள். இவர்கள் தெய்வீக திட்டத்திற்கு அப்பால் எதையும் தேடாமலும், பசி தாகமடையாமலும் தாங்கள் அடைந்திருப்பதில் நன்கு திருப்தியடைந்து, ஞானம் மேன்மை ஒழுக்கம் ஐஸ்வரியம் மற்றும் கல்விமான்களாக விளங்குகின்றனர். கர்த்தருடைய ஏற்பாட்டை ஏற்றுக்கொண்டவர்கள் இயல்பாகவே தரித்திரரும், கல்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் ஞானத்தில் குறைவுபட்டவர்கள் என்று உணர்ந்திருந்து, ஞானத்தின் ஊற்று மற்றும்அதன் வாய்க்காலாக உள்ள வேதாகமத்தின் வழியாக அதை தேடுகின்றனர்.

ஆதிப் பாவத்தின் காரணமாக, முழு உலகமும் அழிந்துகொண்டிருக்கிறது. ஏறத்தாழ உலகிலுள்ள அனைவருக்கும் கிறிஸ்துவின் சிலுவை பைத்தியமாயிருக்கிறது. தேவனது செய்தியை நம்புகிற நாம், மரணத்தினின்று நீங்கி ஜீவனுக்குட்பட்டு, இரட்சிக்கப்பட்டவர்களென்று பேசப்படுகிறோம். ஏனெனில் நாம் ''அவரது இரத்தத்தின்மேல் வைத்த விசுவாசத்தின் மூலமாக,'' நாம் மேலான ஜீவனளிப்பவரிடம் உறவுக்குள் வந்திருக்கிறோம். நமக்கோ நம் மாபெரும் மீட்பரே தேவஞானமாய் விளங்குகிறார். அந்த ஞானம் நம்குருவின் பலியின் வாழ்க்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது. இதை நாம் ஏற்றுக்கொள்ளும்பொழுது, அவர் நமக்கு நியாயாதிபதியாகிறார். அவரால் நியாயந்தீர்க்கப்பட்ட நாம், அவர் உடன்படிக்கையின் பலிகளை ஏற்றுக்கொண்டு, அவரது பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலை நமக்கு தருகிறார். நாம் கர்த்தருக்குள் நிலைத்திருக்கும்போது, கிருபையிலும் அறிவிலும் பரிசுத்தஆவியிலும் வளர்ச்சியடைந்து, நமது இரட்சிப்பு நாளுக்கு நாள் தொடர்ச்சியாக நடைபெறும். இப்படியாக, நமது இரட்சிப்பு முழுமையடைந்து முடிவடையும். இதைக்குறித்தே நம் இரட்சகராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலின்போது, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியமாகிய இரட்சிப்பு நமக்கு அளிக்கப்படும் – 1பேதுரு1:13; தீத்து2:13

ராஜரீக ஆசாரியக்கூட்டத்தார் பரலோக மகிமைக்குள் நுழையும்பொழுது, மேசியாவின் ராஜ்யமாகிய புதுயுகம் ஆரம்பமாகும். இது உலக ஞானத்தின் தவறுகளை முற்றிலுமாக சிதறடித்து, தேவனுடைய ''அமர்ந்த, மெல்லிய சத்தம்'' உலக மனுக்குலத்தார் அனைவரும் கேட்கும்படி செய்யும். அப்பொழுது கர்த்தர் ஜனங்களது பாஷையை சுத்தமான பாஷையாக மாற்றுவார் இதனால் அனைவரும்

-2772-

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்வர்(செப்பனியா 3:8,9). தற்கால சுவிசேஷயுக திருச்சபையாருக்கு பரீட்சை மற்றும் சோதனையின் நாளாகவும், யேகோவாவின் தயவின் முழுமையை அடையவும், நித்தியஜீவனை அடையவும் ஆயத்தப்படுத்தும் நாளாகவும் இருப்பதுபோல், ஆயிரமாண்டு அரசாட்சி உலகின் ஜனங்கள் பரீட்சிக்கப்படும் காலமாக இருக்கப்போகிறது.

இப்படிப்பட்ட கிறிஸ்துவின் சிலுவையின் அவசியத்தையும் மதிப்பையும் அறிந்துணர்ந்து, அப்போஸ்தலர் பவுலுடன் இருதயத்தில் ஒன்றிணைந்து நம் திறவுவசனத்தை அங்கீகரிப்போமாக ! “நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக”.

------------------------------

**--2773--**

# பட்டுப்போன அத்திமரத்திலிருந்து கற்கவேண்டியவை

## LESSON OF THE BLIGHTED FIG TREE

**திறவுகோல் வசனம்** : “இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார்” – மாற்கு 11:22.

இயேசுவும் அப்போஸ்தலர்களும், இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க பெத்தானியாவிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் சாலையை கடந்துகொண்டிருந்தனர். அவர்கள் செல்லும் வழியில் ஒரு அத்திமரத்தைக் கண்டனர். நம் கர்த்தர் பசியாயிருந்தபடியால், அத்திமரத்தில் கனிகளைத்தேடி அதனருகில் சென்றார். அத்திப்பழக்காலம் இன்னும் கடந்துபோகாதிருந்தது. ஆனால் அந்த மரம் கனியற்றிருப்பதை அவர் கண்டார். உடனே அந்த மரத்தைப் பார்த்து, “இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன்” என்றார். அடுத்தநாளில் இயேசுவின் சீஷர்கள் அவ்வழியாய்ப் போகும்போது, அந்த அத்திமரம் வேரோடே பட்டுப்போயிருக்கிறதை கண்டார்கள். “பேதுரு நினைவுகூர்ந்து; ரபீ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்”.இயேசு அவர்களுக்குப் பதிலுரையாக, “தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்” என்றார்(மாற்கு 11:13,14; 20–22). அந்த மரத்தை பட்டுப்போகச் செய்தது தாம் மட்டுமல்ல, பரலோகப்பிதா தான் செய்த செயலுக்கு பக்கபலமாக இருக்கிறார் என்ற உண்மையை புரிந்துகொள்ளவேண்டுமென்று அவர்களது கவனத்தை ஈர்த்தார். பிதாவை கனப்படுத்துவதையே அவர் எப்பொழுதும் தம் இயல்பாகக் கொண்டிருந்தார். தேவனுடைய விரலாக மட்டுமே அவர் செயலாற்றினார்.

“நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும், நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறது”

“நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார்” – யோவா 5:36; 14:10.

### இயேசுவின் அற்புதக் கிரியைகளுக்கான நிஜமான நோக்கம்

தற்காலத்தைப்போலவே,அக்காலத்திலிருந்த சில ஜனங்கள், தீங்கு விளைவிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தனர். அதைப்போன்றே இயேசுவும் அப்படிப்பட்ட ஆதாரங்களைப் பெற்றிருக்கக்கூடும் என்று எண்ணினர். தேவனுடைய செயல்களையே எப்பொழுதும் செய்ததாக கூறி, தம் சீஷர்களுடைய சிந்தையை நேராய் வழிநடத்தி, சாத்தானிடமிருந்து தமது வல்லமையை அவர்களுக்கு வேறுபடுத்திக் காண்பித்தார். அந்த மரம் கனி தராததை தேவன் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று சிலர் வியப்படைந்திருப்பர். ஆனால் இயேசுவோ சாதாரண மனிதரல்ல. அவரது ஜீவியம் நமக்கு முன்மாதிரியாக இருப்பது, நாம் வழியருகே கனியற்ற மரமாக தோற்றமளித்து, “இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன்” என்று கூறுவதற்காக அல்ல. இந்த வழிமுறையை நாம் பின்பற்றுவோமானால், மரங்கள் மட்டுமல்ல மற்ற எல்லாவற்றிலும் குறை காண்பவர்களாக இருப்போம். ஆனால் நம் கர்த்தரோ தேவனால் விசேஷித்தவிதமாக அனுப்பப்பட்டவர். அவர் எங்கு சென்றாலும் நன்மை செய்வதையே பழக்கமாக கொண்டவர். அவர் ஜனங்களை குணப்படுத்தியும், போதித்தும், பலமான நோக்கமுள்ள பாடங்களை அவர்களுக்குக் கொடுத்தும் வந்தார்.

இயேசுவின் சீஷர்கள் தங்களுக்குத் தேவையான விசுவாசத்தில் அவர்களுக்குள் வளர்ச்சியடைவதற்கு முன்பாக, இயேசு தேவனால் அனுப்பப்பட்டவர் என்று அவரைக் குறித்து முழுமையாக நிச்சயமடைந்திருக்கவேண்டியது அவசியமாயிற்று. பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களைப்பெற தயாராகுமுன், இந்த விசுவாசத்தில் அவர்கள் நிலைத்திருக்க வேண்டியிருந்தது. இதன்பொருட்டு, நம் கர்த்தர் தம் பின்னடியார்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடும், மேசியத்துவத்தை ஸ்தாபிக்கும் பொருட்டும், வருங்காலத்தில் உலகின் ஜனங்களுக்கான பணிகளை வெளிப்படுத்தும் நோக்கத்திற்காகவும் கர்த்தரது பணிகள் கண்ணுக்குத்தெரியும் வகையில் பெரும்பாலும் வெளியரங்கமாக அமைந்திருந்தது. தண்ணீரை திராட்ச ரசமாக்கும் அற்புதத்தில் இது எழுதப்பட்டுள்ளது;

“இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய(வரவிருக்கும்) மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்” – யோவா 2:11.

ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் தேவனுடைய ஆழங்களை காணமாட்டான், ஏனெனில் அவைகள் ஆவியின்படி நிதானிக்கப்படவேண்டியவைகள்(1கொரிந் 2:14). ஆகவேதான், இப்படிப்பட்ட வெளிப்படையான ஆதாரங்களின் தன்மையிலான போதனை, இயேசுவின் சீஷர்களுக்கு அவசியமாயிருந்தது. ஏனெனில் அவர்கள் ஜென்ம சுபாவமுள்ள மனுஷராயிருந்தனர். மேசியா என்று அவர்கள் அவரை அங்கீகரித்தபோதிலும், ஆரம்பத்தில் இதை தெளிவாக புரிந்துகொள்வது கூடாததாய் இருந்தது. ஒரு சமயத்தில் இயேசு அவர்களிடத்தில் வினவியதாவது; “நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்”சீமோன் பேதுரு அதற்கு பதிலுரையாக; “நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றார். இயேசு அவரைநோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்” என்றார்(மத் 16:15–17). இதுவே இயேசு தம் சீஷர்களுக்கு கற்பித்த மேன்மையான வழிமுறையாய் இருந்தது.

அத்திமரத்தைக் குறித்தும், பிணியாளிகளை குணமாக்கிய அற்புதங்களையும், மரித்தோரை

எழுப்பினதும், அசுத்தஆவிகளை துரத்தினதும், ஆயிரக்கணக்கானோர்க்கு போஜனம் அளித்ததும் அவ்வாறே கவனிக்கப்படவேண்டும். சில குறிப்பிட்ட நபர்கள் அந்நேரத்தில் சரீர ரீதியாக குணமானதும், இரவுமுழுவதும் தங்கியிருந்த திரளான ஜனங்கள் பசியோடு செல்லக்கூடாது என்பதும், அறிவற்ற மரத்தின்மேல் தெய்வீக அதிருப்தி அடைந்ததும் முக்கியமானவைகள் அல்ல. ஆனால் இவைகளின் மூலம் சீஷர்கள் தேவையான பாடங்களை கற்பதும், தங்கள் நிமித்தமாக கர்த்தருடைய வல்லமை செயல்படுவதை காண்பதும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. கர்த்தர் தங்கள் அருகிலிருந்து வழிகாட்டி பாதுகாக்கிறார், இதனால் திரளான நம்பிக்கையை அவரிடத்தில் வைக்கவேண்டும் என்ற புரிந்துகொள்ளுதலை தந்தது. அவ்வாறே அவரது குழந்தைகளாகிய நம்மீதும் நம் பரலோகப்பிதாவின் அன்பும் அக்கறையும் நிச்சயப்படுத்தப்பட்டுள்ளதை நாம் அடையவேண்டியது இன்றியமையாததாகும். அவரது ராஜ்யத்தின் ஆளுகையின்போது வரவிருக்கும் நம் கர்த்தரின் மகிமையை உதாரணங்களுடன் காண்பிக்கவேண்டியது முக்கியமானதாகும்.

**அத்திமரம் ஒரு அடையாளம்**

அத்திமரத்தைக் குறித்து மற்றுமொரு கருத்து உள்ளது. யூத தேசத்தை குறிக்கிறதாயும் அத்திமரம் இருப்பதை நாம் நம்புகிறோம். தேவனது அத்திமரமாக இந்த தேசம் உள்ளது. அந்த தேசம் கனிகொடுக்கும் என எதிர்பார்த்து ஏற்றவேளையில் தேவன் தம் குமாரனை அனுப்பினார். ஆனால் அவர் எதையும் கண்டடையவில்லை. அந்த மரம் கனியற்றதாய் இருந்தது. ஒரு சில உண்மையுள்ள நபர்களை அவர் கண்டடைந்தாரே தவிர, தேசமாக அல்ல. ஒரு தேசமாக எந்த கனியையும் அடையமுடியவில்லை.

யூததேசத்தின்மேல் கர்த்தருடைய சாபம் வந்து அது பட்டுப்போயிற்று. ஏனென்றால் அவர்களுக்கு எல்லா சிலாக்கியங்களையும் அனுகூலங்களையும் கொடுத்திருந்தும் முறையான கனிகளை கொடுக்கவில்லை. நம் கர்த்தராகிய இயேசு, தாம் சிலுவையில் மரிப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்பாக, அவர்கள் வீடு பாழாக்கிவிடப்படும் என்று தீர்ப்பிட்டார், “இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்” – மத் 23:38,39; லூக் 13:34,35.

அந்நேரத்திலிருந்து துவங்கி, யூதர்கள் ஒரு தேசமாக, பட்டுப்போன மரம்போல் அழிக்கப்பட்டநிலையில் இருந்துவருகின்றனர்.

அத்திமரம், ஒரு ஜீவனுள்ள மரமாக, ஒரு ஜீவனுள்ள தேசமாக மீண்டும் உயிர்பெறும் என்ற வாக்குத்தத்தம் உள்ளது. அவர்கள் தங்கள் இரண்டத்தனையான தேவதயவின்மை நிறைவேறினபின்பு தெய்வீக தயவுக்கு திரும்பவும் சீர்பொருந்தச் செய்யப்படுவர். (வேதாகம விளக்கவுரை தொகுதி 2, பக்கம் 217–230 ஆங்கிலத்தில் ஒப்பிட்டுப் பார்க்க). இந்த இரட்டிப்பான தயவின்மை நிறைவேறித் தீர்ந்தாயிற்று என்று நாம் நம்புகிறோம். இது தற்போது யூதர்களிடையே மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தி, மாபெரும் சீயோன் இயக்கமாக வெளிப்பட்டிருப்பதை அர்த்தப்படுத்துகிறது.

ராஜ்யம் சமீபித்திருப்பதைக் குறித்தும், தம் இரண்டாம்வருகையின் காலத்தைக் குறித்தும் இயேசு பேசும்போது, “அத்திமரத்தினால் ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதிலே இளங்கிளை தோன்றி துளிர்விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்” – மாற்கு 13:28,29.

யூத தேசம் ஒரு நீண்ட பனிக்காலத்தைப் பெற்றிருக்கிறது. ஆனால் இந்த தேசத்தின் இளவேனிற்பருவம் தற்போது சமீபித்திருக்கிறது. இந்த அத்திமரம் துளிர்விடுவதை நாம் ஏற்கனவே கண்டிருக்கிறோம். ஆகவே பட்டுப்போன அத்திமரத்திலிருந்து பாடம் இந்த மணிவேளைக்கு மட்டுமல்ல, அவரது முதலாம் வருகையின் நேரம் துவக்கி, இன்றுவரை கர்த்தருடைய பிள்ளைகள் அனைவருக்கும் பாடமாக இருந்துவருகிறது.

---------------------------------

# சபையில் அன்பு

"நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே" நம்முடைய போதகரின் கட்டளையாக இருக்கின்றது (யோவான் 15:12). "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" என்று அப்போஸ்தலனும் எழுதுகின்றார் (1 யோவான் 3:16). "பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூருகிறான்"(1 யோவான் 5:1). சொல்லப்போனால் கிறிஸ்துவின் சபைக்குரியவர்கள் யாவரும், தாங்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படுகையில் அன்பின் ஆவியினைப் பெற்றிருக்கின்றனர். மேலும் இராஜ்யத்திற்கென்றுள்ள ஆயத்தத்தில் நாம் முன்னேறுகையில், அந்த அன்பின் ஆவியானது, உயிர்த்தெழுதலில் பூரணப்படும்வரை அதிகமதிகமாய்ப் பெருகி அதிகரித்திடும்; உயிர்த்தெழுதலின்போது நாம் நமது புதிய சரீரங்களைப் பெற்றிருப்போம் மற்றும் இது நம்முடைய அன்புள்ள இருதயங்களானது, அன்பை முழுமையாக வெளிப்படுத்திடுவதற்கு அனுமதித்திடும். ஆனால் இதற்கிடையில், கர்த்தருடைய அன்புக்குரிய சகோதரர்கள் எத்தனைதரம் ஒருவரையொருவர் சோதிக்கின்றனர், ஒருவரையொருவர் எரிச்சலூட்டுகின்றனர் மற்றும் அன்பிற்கும், நற்கிரியைகளுக்கும் ஏவத் தவறி, சண்டைகளைத் தூண்டிவிடுகின்றனர்!

இத்தகைய பெலவீனங்கள் புதுச்சிருஷ்டியினுடையதல்ல, மாறாக பழைய சிருஷ்டியினுடையது என்று நாம் சரியாய்க் காரணம் கற்பித்தாலும், புதுச்சிருஷ்டியினுடைய வளர்ச்சி என்பது, பழைய சிருஷ்டியினுடைய மரணத்தைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்றும், பாவத்திற்கும், சுயநலத்திற்கும் நம்முடைய மாம்சமானது எவ்வளவாய் மரித்திருக்கவில்லையோ, அவ்வளவாய் நாம் அடையும்படிக்கு நாடிக்கொண்டிருக்கின்றதான நிலைமையினை, புதுச்சிருஷ்டிகளாகிய நாம் இன்னமும் அடையாமல் இருக்கின்றோம் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும் என்றும் நாம் மறந்துவிடக்கூடாது.

சபையினுடைய மூப்பர்களிடமிருந்து, தாங்கள் எவ்வாறு சபையாரைக் கையாள வேண்டும் என்பதற்கும் மற்றும் சபையாரிலுள்ள அங்கத்தினர்களிடமிருந்து, தாங்கள் எவ்வாறு தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் கையாள வேண்டும் என்பதற்கும் ஆலோசனை வேண்டி எழுதப்படும் கடிதங்களை இதழாசிரியர் அடிக்கடி பெற்றுக்கொள்கின்றார். சபையாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியக்காரர்கள், தங்களைத் தேர்ந்தெடுத்த சகோதரர்கள், தங்களிடத்தில் போதுமான நம்பிக்கைக் கொள்வதில்லை என்றும், சபையாருடைய காரியங்களை நிர்வகிப்பதற்குத் தங்களிடத்தில் முழுமையாய்ப் பொறுப்பைவிடுகிறதில்லை என்றும், சபையார் தங்கள் காரியங்களை நிர்வகித்துக்கொள்வதற்கும் மற்றும் மூப்பர்களுடைய ஆலோசனை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கும் விரும்புகின்றனர் என்றும் பெரும்பாலும் எண்ணுகின்றனர். இப்படியான சந்தர்ப்பத்தில், சபையார் ஒட்டுமொத்தமாகக் கர்த்தருக்குப் பிரதிநிதித்துவமாய் இருக்கின்றனர் என்றும், சபையின் எந்த ஊழியக்காரனுக்கும், சபையார் தங்கள் வாக்கினால் அவனுக்கு அளித்திடும் அதிகாரத்தின் எல்லையைத் தாண்டிடும் உரிமையில்லை என்றும் நினைவில்கொண்டு, மூப்பர்கள் முழுமையாய் மனநிறைவு கொண்டிருக்க நாம் பரிந்துரைக்கின்றோம்.

வேதமாணவர்கள் - கர்த்தர் தங்கள் மீது வைத்திட்டதான தங்களது பொறுப்புகளையும், உரிமைகளையும் பாதுகாத்திடுவதற்கு மிகுந்த அவசியம் இருப்பதாய் உணர்வதை எங்கள் அனுபவத்தில் கண்டிருக்கின்றோம். நம்மைச் சுற்றிலும் புரோட்டஸ்டாண்டினர்கள் மற்றும் கத்தோலிக்கர்கள் மத்தியில் காணப்படும் உலகப்பற்றுள்ள குருமார்களின் அதிகாரம் குறித்தும் மற்றும் வல்லமையையும், அதிகாரத்தையும் பிடித்துக்கொள்வதற்கும், சபையாரைப் புறக்கணிப்பதற்குமான குருமார்களின் மனவிருப்பம் குறித்தும் காணப்படும் உதாரணங்களின் கண்ணோட்டத்தில் - வேதமாணவர்கள் இவ்விஷயத்தில் மிக அதிகமான கவனம் செலுத்தினால்கூட, அது நிச்சயமாகப் பொறுத்துக்கொள்ளப்படலாம்.

இன்னொரு பக்கத்தில் சபையார், தங்களது மூப்பர்கள் தங்கள் மீது ஆதிக்கம் அல்லது அதிகாரம் செலுத்துகின்றார்களென எண்ணுகின்றனர் - இப்படியாக உண்மையிலேயே செலுத்தப்படுகிறதோ அல்லது இல்லையோ, ஆனால் அவர்கள் இப்படி அடிக்கடி எண்ணுகின்றனர். சிலசமயம் மூப்பர்கள் பிரசங்கம் பண்ணிடுவதற்கான பரபரப்பை அடைந்து,

எல்லாத் தருணங்களிலும் போதிப்பதற்கு விருப்பம் அடைகின்றனர்; சிலசமயம் ஜெபத்தினையும், சாட்சிக்கூட்டங்களையும், பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளையும் போதிக்கும் சந்தர்ப்பங்களாக்கிவிடுகின்றனர் என்று சபையார் முறையிடுகின்றனர். ஒருவேளை பெரோயா பாடங்களானது விரும்பப்படுகின்றது என்றும், சபை ஒழுங்குமுறையின் மாற்றங்களானது விரும்பப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறதென்றால், சிலசமயம் மூப்பர்கள் முழுச்சபையாரிடத்திலும் கோபமடைந்து, தாங்கள் மதிக்கப்படுகிறதில்லை என்று கூறுகின்றனர்; மற்றும் இன்னும் சில தருணங்களில், காரியத்தை அன்பாய்த் தங்களிடத்தில் குறிப்பிடுவதற்குத் தைரியமாய் முன்வந்த தனிப்பட்ட நபர்மேல் மூப்பர்கள் கோபமடைகின்றனர் அல்லது அந்நபர் ஒரு விதிவிலக்கு என்று எண்ணிக்கொள்கின்றனர் மற்றும் தாங்கள் சபையாரைப் பிரியப்படுத்திக் கொண்டிருக்கின்றதாகக் கற்பனைபண்ணிக்கொண்டிருக்கின்றனர் - அதாவது இது மிகவும் அதிகமான சுய மதிப்புக்கொடுத்திடும் சந்தர்ப்பமாய்ச் சில சமயங்களில் காணப்படுகின்றது.

## சபையாருக்கான மேய்ப்பனுடைய ஆலோசனை

மூப்பர்கள் கர்த்தருடைய ஆவி இல்லாமல், தெளிந்த மனதினுடைய சீரான நிலைமையினை இழந்து காணப்படுவதாகத் தோன்றும் இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், எப்படிச் சபைகளுக்கு ஆலோசனை கொடுப்பது என்பது சிரமமான காரியமாகவே காணப்படுகின்றது. எங்களிடத்தில் விசாரிப்பவர்களுக்கு நாங்கள் பொதுவாகவே இவ்விஷயம் குறித்து வேதாகம பாடங்களிலுள்ள 6-ஆம் தொகுதியின் கட்டுரையையே குறிப்பிட்டு, அதை மீண்டுமாக வாசித்து, அதன்படி நடந்துகொள்ளும்படிக்குக் கேட்டுக்கொள்வோம். ஆனால் அதை வாசித்தப் பிற்பாடும்கூடக் கர்த்தருடைய அருமையான ஆடுகளில் சிலர், எப்படி வேதவாக்கியங்களின்படியான முறையான ஒழுங்கினை அடையப்பெறுவது என்பதையும், எப்படிச் சபையாருடைய சுயாதீனங்களைக் காத்துக்கொள்வது என்பதையும் மற்றும் எப்படி மூப்பர் தனக்கும், சபையாருடைய நலனுக்கடுத்தவைகளுக்கும் தீங்கு செய்ய அனுமதிப்பதைத் தவிர்ப்பது என்பதையும் அறியாமல் இருக்கின்றனர்!

இத்தகைய காரியங்களை, அதுவும் சபையில் கர்த்தருடைய சித்தமென நாம் நம்பிடுபவைகளைச் செய்திடுவதற்கான எந்த மற்றும் ஒவ்வொரு வாய்ப்பையும் குறித்துக் கவனித்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், சகோதரர்கள் இத்தகைய காரியங்களைக் கர்த்தரிடத்தில் ஜெபத்தில் எடுத்துச் செல்லுங்கள் என்பது நம்முடைய பொதுவான அறிவுரையாக இருக்கின்றது. இன்னொரு பக்கத்தில் மூப்பர் ஒருவரை ஆதிக்கம்பண்ண அல்லது பரிசுத்த பேதுரு அடிகளார் கூறியுள்ளது போன்று "கர்த்தருடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆள" சபையார் அனுமதிப்பது என்பது முற்றிலும் தவறான காரியம் என்று நாம் ஒப்புக்கொள்ளவே வேண்டும் (1 பேதுரு 5:3). இது மூப்பருக்கும், சபையாருடைய நலனுக்கடுத்தவைகளுக்கும் - இருவருக்குமே தீங்காய்க் காணப்படும்.

இன்னொரு பக்கத்தில் பார்க்கையில், சபையார் குற்றங்கண்டுபிடிக்க மற்றும் குறைகூற தவிர்ப்பதற்கு நாடிட வேண்டும். அவர்கள் கர்த்தருடைய ஆவியை, அர்ப்பணிப்பின் ஆவியை, சத்தியத்தின் அறிவை மற்றும் சத்தியத்தை முன்வைப்பதற்கான தாலந்துகளை - இவைகள் எங்குக் காணப்பட்டாலும், இவற்றிற்கு மதிப்புக்கொடுத்திட வேண்டும் மற்றும் கர்த்தரால் ஒவ்வொருவருக்கும் அருளப்பட்டுள்ள தாலந்துகளுக்கு ஏற்பவும் மற்றும் கர்த்தருடைய வசனத்திலுள்ள வழிக்காட்டுதல்களுக்கு இசைவாகவும் - போதிப்பிலும், கிருபையிலும், அறிவிலும் வளர்ச்சியடைந்திடுவதற்கான வாய்ப்புகளுக்கு ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியோடு உதவிட வேண்டும். ஒருவருக்கொருவர் பொறுத்துக்கொள்ளுதல், ஒருவர் இன்னொருவரின் பாதங்களை அடையாளமான விதத்தில் கழுவிடுவதற்கான விருப்பமும், கிறிஸ்துவுக்கொத்த குணலட்சணங்களின் நிமித்தம், ஒருவரையொருவர் மேன்மையாய் எண்ணுதல் ஆகியவைகளை வளர்த்தி உருவாக்க வேண்டும்.

சபையாருடைய அனைத்து ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்புடைய விஷயத்தில், சபையாருடைய விருப்பத்தை அறிந்துகொள்வதற்கென ஒவ்வொரு மூப்பராலும் கவனமாய் நாடப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு சபையாராலும் அது முழுமையாய் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றபோதிலும், எப்படிச் சபையினுடைய விருப்பம் தெரிவிக்கப்படுகின்றது என்பது தொடர்பாய் நாம் மிகவும் இம்மியும் பிசகாமல் எதிர்ப்பார்க்கக்கூடாது. வேறுவார்த்தைகளில் சொல்லப்போனால், சபையாரில் பெரும்பான்மையானவர்களுக்கு எது திருப்தியாய் இருக்கின்றது என்று நாம் கருத்தில்

எடுத்துக்கொள்ள வேண்டும். சபையாருடைய திருப்தியானது ஏதோ சில விசேஷித்த குறிப்பிட்ட விதத்தில் தெரிவிக்கப்படவில்லை என்பதற்காக மூப்பர்கள் குற்றம் சாட்டப்படக் கூடாது. வேறுவார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், சபையாரிலுள்ள சிறுபான்மையானவர்களால் பரிந்துரைக்கப்பட்டதான வழிமுறைகளானது, துல்லியமாய்க் கடைபிடிக்கப்படவில்லை என்பதற்காக, சபையாரை மனக்கலக்கமுறச் செய்து, பிரச்சனையைத் தூண்டிடுவதற்கு இவர்களுக்கு உரிமையில்லை. சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் தகுந்தக் காலங்களில் - விசேஷமாகத் தேர்ந்தெடுத்தல் காலத்தில் தனது கருத்தினைத் தெரிவிப்பதற்கு முழுச்சுயாதீனம் உடையவனாய் இருக்கின்றான்; ஆனால் தனது கருத்தையும், விருப்பத்தையும் தெரிவித்தப் பிற்பாடு, அவன் பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு, அது ஆதரவாகவோ அல்லது எதிர்மறையாகவோ தெரிவிக்கப்பட்டிருப்பினும் அதற்கு இணங்கிடுவதற்கு முழுமையாய்த் திருப்தி கொண்டிருக்க வேண்டும்.

## முதலாவது நீதி - பின்பு அன்பு

நாம் அன்பையும், அதன் பூரண சற்குணத்தின் கட்டையும் நாடிடும் அதேவேளையில், நம்முடைய சொந்த நடவடிக்கையானது, முதலாவதாகப் பூரணநீதியினால் சரிப்பார்க்கப்பட வேண்டும் மற்றும் பின்னர் அன்பானது கூட்டிவழங்கப்படலாம். உதாரணத்திற்குத் தேர்ந்தெடுத்தலின்போது, ஏதோ ஒரு சகோதரன், சபையாருக்கான ஏதோ ஓர் ஊழியத்திற்கென, அந்த ஊழியத்திற்குத் தகுதியற்ற ஒரு சகோதரனை ஞானமற்ற விதத்தில் முன்மொழிந்திடலாம். நாம் அச்சகோதரனிடத்தில் குற்றம் கண்டு பிடிக்கக்கூடாது; ஏனெனில் முன்மொழிந்திடுவதற்கும், தனது ஞானமின்மையை வெளிப்படுத்துவதற்குமான சுயாதீனத்தை அச்சகோதரன் உடையவனாயிருக்கிறார்; ஆனால் இன்னொரு பக்கத்தில் நாம் அவருடைய முன்மொழிதலுக்குக் கட்டுப்பட்டுள்ளோம் என்று நாம் எண்ணிட வேண்டாம்; இவ்விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கின்றது என்று நாம் புரிந்துள்ளதை வாக்கின் (vote) மூலம் நாம் வெளிப்படுத்திடுவதை, முன்மொழியப்பட்டச் சகோதரனை அவமதித்திடுவோமா என்ற அச்சமானது தடைப்பண்ணிட நாம் அனுமதிக்கவும் கூடாது. மேலும் சபையாரால் வாக்கினால் (vote) நிராகரிக்கப்பட்டாரெனில், முன்மொழியப்பட்ட சகோதரன் கோபம் கொள்வதற்கு எந்த உரிமையும் பெற்றிருப்பதில்லை; தன்னை நிராகரிப்பதில் சகோதரர்களால் வெளிப்படுத்தப்பட்டதான தைரியத்தினை அவர் பாராட்டிடவே வேண்டும்.

சபையாரால் நிராகரிக்கப்பட்டவர், சபையாரிடத்திலோ அல்லது அதன் அங்கத்தினர்கள் யாரிடத்திலோ, ஏன் தனக்கு எதிராக வாக்குகள் அளித்தார்கள் என்று கேள்வி கேட்பதற்கு உரிமை பெற்றிருப்பதில்லை. அது அவர்கள் காரியமாகும் மற்றும் இவரது காரியமல்ல. அவர்கள் தாங்கள் பெற்றிருப்பதான உரிமையினை, தங்களது மனசாட்சியின்படி செயல்படுத்த மாத்திரமே செய்துள்ளனர். அது நீதியின் காரியமாகும். சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனாலும் பின்பற்றப்படும்படிக்குக் கர்த்தருடைய வசனமானது விதிகளை முன்வைத்துள்ளதான விஷயங்களில் தீர்மானம் எடுப்பதற்கு, மனித அனுதாபமாகிய அன்பிற்கு இடமில்லை. நீதியின் கொள்கைகளை அடையாளம் கண்டுகொள்ள தவறுவதே, கிட்டத்தட்ட எல்லாச் சபையாருடைய பிரச்சனைகளுக்கான அடிப்படையாக இருப்பதாகத் தோன்றுகின்றது. இம்மாதிரியான பிரச்சனைக்குள்ளாகும் யாவரும், காரியத்தினை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச் செல்லவும், பின்னர் பூரண நீதியின் அடிப்படையில் அக்காரியத்தினைக் கருத்தில் எடுத்துக்கொள்ளவும் நாம் வேண்டிக்கொள்கின்றோம்.

கூடுமானால் சபையாருடைய சித்தமானது பெரும்பான்மையினரால் - அதாவது முழு எண்ணிக்கையில் குறைந்தபட்சம் 85 சதவீதமானவர்களால் தெரியப்படுத்தும்படிக்கு வேதாகம பாடங்களினுடைய 6-ஆம் தொகுதியில் நாம் பரிந்துரைத்திருந்தோம். ஆனால் இது - நீதியோ அல்லது அன்போ, சபையாருடைய காரியங்கள் அனைத்தையும், மீதமிருக்கும் 15 சதமானவர்களிடத்தில் ஒப்படைக்கச் செய்திடும் மற்றும் இவர்கள் காரியங்களை நிர்ணயிக்கும்படிக்கு அனுமதித்திடும் என்று அர்த்தப்படாது; அதாவது உதாரணத்திற்குச் சிறுபான்மையானவர்கள் மொத்த எண்ணிக்கையில் 15 சதவீதமாக இருப்பதினாலும், தங்களது குறிக்கோள்கள் அடையப்பட வேண்டும் அல்லது சபையாருடைய முழு வேலையும் நிறுத்தப்பட வேண்டுமென்று இவர்கள் வலியுறுத்துவதினாலும், எந்த மூப்பர்களும், உதவிக்காரர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டாம் என்று நிர்ணயிக்க சிறுபான்மையானவர்களை அனுமதிக்க

வேண்டும் என்று அர்த்தப்படாது. இப்படி ஒருவேளை அனுமதிக்கப்பட்டால், அது அன்பாகவோ, நீதியாகவோ இருக்காது மற்றும் இப்படியாக ஒப்படைக்கப்படக்கூடாது.

பெரும்பான்மை விதி என்பது நீதியின் தர நிலையாக/அளவுகோலாக இருக்கின்றது மற்றும் இதற்கும் மேலாக நாம் யோசனையாக தெரிவித்தது, அன்பினால் விட்டுக்கொடுக்கப்படுவதை குறிக்கின்றதாய் இருக்கின்றது - அதாவது கூடுமானமட்டும் முழுச்சபையாரின் அல்லது சபையாரில் பெரிதளவிலான பெரும்பான்மையானவர்களுக்காகிலும் இருக்கும் விருப்பங்கள் சந்திக்கப்பட முயற்சிப்பதாகும். முடிந்தமட்டும் சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் பொருத்தமாய் இருக்கும் விதத்தில், சபையின் காரியங்களை ஒழுங்குப்படுத்திட பெரும்பான்மையானவர்கள் அன்புடன் விரும்பிட வேண்டும்; மற்றும் இதைச் செய்ய எந்தளவுக்குத் தவறப்படுகின்றதோ, அந்தளவுக்கு உடன்பாடின்மைக்கும், சபையாரில் பிரிவினைக்கும் வரவேற்பு இருக்கும். விருப்பத்தினுடைய பாகுபாட்டின் காரணமாக இரண்டு சபையாராகப் பிரிந்திடுவது என்பது எப்போதும் வருத்தப்படுவதற்குரியதாகவும், எதிர்த்துப் போராடப்படுவதற்கு நாடப்பட வேண்டியதாகவும் இருப்பினும் மற்றும் "சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக்" காத்துக்கொள்வதற்கென அனைவராலும் தியாகங்கள் பண்ணப்பட வேண்டியதாகவும் இருப்பினும், சிலகாலம் சபையார் பிரிந்திருப்பது என்பது சம்பந்தப்பட்டவர்கள் யாவருடைய ஆவிக்குரிய வளர்ச்சியினைத் தடைப்பண்ணிடும் தொடர்ச்சியான சண்டைச் சச்சரவுக்குப் பதிலாக சிறந்ததாக நிச்சயமாகவே காணப்படும்.

---

# சில சபையாரின் காரியக்கூட்ட முறைமைகள் தொடர்பாக

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

எங்களது சபை ஒழுங்குமுறைக்குள் கொண்டுவரப்பட்டது முதற்கொண்டு, ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் எங்களது காரியக்கூட்டமானது (Business meeting) அதிகளவு நேரம் எடுத்துக்கொள்கின்றது; ஆனால் தற்போதைய ஏற்பாடுகளின் கீழ் அனைத்துக் காரியங்களும் சபையாரால் தீர்மானிக்கப்படுகின்றபடியால், எப்படி இத்தகைய கூட்டத்தைத் தவிர்ப்பது என்பதையும், கூட்டத்திற்குக் குறைவாய் நேரத்தைச் செலவழிப்பது என்பதையும் நாங்கள் அறியோம்.

உங்கள் பரந்த விரிந்த அனுபவத்தின் காரணமாக, இதுவிஷயம் குறித்த சில விலையேறப்பெற்ற யோசனைகளை உங்களால் எங்களுக்குக் கொடுக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம் மற்றும் சில புத்திமதிகளை எங்களுக்குக் கொடுப்பீர்களானால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். உங்கள் மீது கர்த்தருடைய ஐசுவரியமான ஆசீர்வாதம் இருப்பதற்காக ஜெபிக்கின்றோம். உங்கள்

- பரிசுத்த ஜோசப் [MO] சபையார்.

**பதில்:** சோதித்தறிவதன் மூலம், தங்கள் மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களில் ஒருவர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் நல்ல காரிய சமர்த்தமும், உண்மையுமுள்ளவர்களாக இருப்பதை ஒரு சபையார் கண்டுகொள்வார்களானால், அங்கு அத்தகையவர்களுள்ள ஒரு காரிய/ அலுவல் குழுவினை ஏற்படுத்தி, அந்தக் குழுவிடம் காரிய நடைமுறைகளில் பெரும்பான்மையானவைகளை விட்டுவிடுவது சிலசமயங்களில் நல்லதொரு திட்டமாக இருக்கும். எனினும் காரியங்கள் முழுவதையும், சபையாரின் கரங்களினின்று எடுத்துவிடாமல் இருப்பதற்கு மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். அதிகாரத்தைப் பிடித்துக்கொள்வதற்கும், சபையாருடைய விருப்பங்களை மீறிடுவதற்குமுரிய விருப்பங்களைக் கொண்டிருப்பதற்குச் சாட்சி பகருகின்றவர்களின் கரங்களில் அதிகம் வல்லமையைக் கொடுத்துவிடாதபடிக்கும்கூட மிகுந்த கவனம் காணப்பட வேண்டும். எல்லாக் காரியங்களிலும் முடிவுகளை அடைவதற்கு எளிமையான மற்றும் அமைதியான வழிமுறையே நல்லது; ஆனால் சபையாருடைய அதிகாரம் அடையாளம் கண்டுகொள்ளப்பட வேண்டும். சபையாரையும், அவர்களின் விருப்பங்களையும் புறக்கணிக்கும் யார் ஒருவருக்கும் மூப்பர், உதவிக்காரர் போன்ற விசேஷித்த ஊழியம் கொடுக்கப்படாமல் விடப்படுவது நலம்.

# சுவாரசியமான கடிதங்கள்

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - இக்கடிதத்தோடுகூட நான் நான்கு கேள்விகளையும் இணைத்துள்ளேன்; அவைக் குறித்துப் பனாமாவிலுள்ள சபையாராகிய எங்கள் மத்தியில் பெரிதளவில் வேறுபட்டக் கருத்துக் காணப்படுகின்றது. இக்கேள்விகளானது உங்களால் பல தடவைகள் கையாளப்பட்டுள்ளன என்பதை நான் அறிவேன். ஆனால் நாங்கள் புரிந்துகொள்ளும் திறனில் மிகவும் மந்தமானவர்களாகவும், மிகவும் ஒட்டையான பாத்திரங்களாகவும் காணப்படுகின்றோம்!

கேள்விகள்: (1) "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகையில், அவர் பெரோயா ஆராய்ச்சி வகுப்பில் கருத்துக்களை முன் வைப்பதையும் உள்ளடக்கித்தான் கூறுகின்றாரா? (1 கொரிந்தியர் 14:34;1 தீமோத்தேயு 2:11-12).

மேலே உள்ள கடிதம் மற்றும் கேள்விகளுக்குப் பதில்:

உங்கள் கேள்விகளுக்கான எங்கள் பதில்: சகோதரிகள் பெரோயா பாட வகுப்பில் பங்கெடுப்பதில், அப்போஸ்தலனுடைய கட்டளையானது மீறப்படுகிறதில்லை என்று நாங்கள் புரிந்திருக்கின்றோம். அங்கு அர்ப்பணிக்கப்பட்ட அல்லது திறமையுள்ள சகோதரர் இல்லையெனில், சகோதரிகள் பெரோயா வகுப்பினை நடத்திடக்கூடாது என்று சொல்லிடுவதற்கு நான் எந்தக் காரணத்தையும் காண்கிறதில்லை.

- கர்த்தருக்குள்ளான உங்களது சகோதரனும், ஊழியக்காரனும்.

---

# “நாம் மறவாதிருக்க நாடுவோம்”

## LEST WE FORGET

திறவு வசனம் : “யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே” – எபிரேயர் 12:14

கர்த்தருடைய ஜனங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்கவேண்டும் என்ற கர்த்தருடைய வார்த்தையை ஆலோசனையாக பெற்று, சமாதானத்தை நாடித் தேடுகிறவர்களாக இருந்தாலும், அவர்கள் யுத்தம் செய்பவர்களாக இருக்கவேண்டும் என்றும் எச்சரிக்கப்படுகிறார்கள். இந்த கட்டளையானது மேலேழுந்தவாரியாக பார்க்கும்பொழுது, புரியாத புதிராக தோன்றுகிறது. சமாதானமாயிருக்கும்படி புத்திமதி சொல்லப்பட்டிருக்கிற நமக்கு, யுத்தம்பண்ணுங்கள் என்றும் கூறப்படுவது விநோதமாய்க் காணப்படுகிறது. ஆயினும் இந்த இரண்டு முரண்பாடுள்ள வாக்கியங்களும் ஒருவேளை இசைவாக காணப்படலாம். நாம் கர்த்தரிடத்திலும், அவர் நிமித்தமாகவும் உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால், தேவனுக்கு எவையெல்லாம் முரண்பாடாக இருக்கிறதோ, அவைகள் நமக்கு எதிர்ப்பை கொண்டுவரும். நாம் ஜனங்களோடு போராடுவதில்லை, மாறாக நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருக்கவேண்டுமென்று ஆலோசனை தரப்பட்டுள்ளதிலிருந்தே எதிர்ப்பும் இருக்கும் என்ற உண்மையும் வெளிப்படுத்தப்படுகிறது.

ஒருவர் நீதிநியாயத்தை செய்யவிரும்பி, அதற்காக தன்னால் இயன்றஅளவு சிறப்பாக பிரயோகித்து செய்தும், எப்படி எதிர்ப்பை சந்திக்கமுடியும்? நம் போதகரின் வாழ்வில் இப்படியே சம்பவித்தது. அவர் பரிபூரணராய் இருந்தபோதிலும் எதிர்ப்பை அடையப்பெற்றார். இதனைக்கண்டு நாம் ஆச்சரியப்படவேண்டாம். இம்மாதிரியான அனுபவங்களை அடையவேண்டும். தமக்கெதிராக தீமை செய்தவர்களிடம் இயேசு எச்சரிப்பை வெளிப்படுத்த என்ன செய்தார்? அவர் எல்லோருக்கும் நன்மைசெய்து, ஆசீர்வதிக்க வகைதேடினார். பிதாவினிடத்தில் அவர் காட்டின உண்மையும் நேர்மையும், பாவத்தையும் தவறுகளையும் கடிந்துகொள்ளும் அவசியத்தை அவருக்கு உண்டுபண்ணினது. இந்த பாவத்தையும் தவறுகளையும் செய்துகொண்டிருந்தவர்களுக்கு அவரது கடிந்துகொள்ளுதல் கடும் பகைமையையும் முரண்பாட்டையும் அவர்மேல் வருவித்தது. இந்த இருள் வெளிச்சத்தை பகைக்கிறது. ஏனென்றால் இருளை இது நிரந்தரமாகவே கண்டனம் செய்யும்.

ஆகவே, நாம் உலகஆவியின் எதிர்ப்புக்குள்ளாவதோடு, விழுந்துபோன நம் சொந்த மாம்சத்துக்கு எதிராயும், மாபெரும் எதிராளி மற்றும் அவனது படைகளது கொடூரமான எதிர்ப்புக்கும் உள்ளாக நேரிடும். எப்பேர்ப்பட்ட வல்லமைகள் இவைகள்! அன்பான சகோதர சகோதரிகளே, நம் வாழ்வின்ஒரு காலகட்டத்தில் உலகத்தின் எதிர்ப்பு, மாம்சத்தின் எதிர்ப்பு, சாத்தானின் எதிர்ப்பு என்பவைகளின் அர்த்தம் என்ன என்று நமக்குத் தெரியாது. ஆனால் இதன் அர்த்தங்கள் என்னவென்று நாம் கற்றுவருகிறோம். நம் மாபெரும் விரோதி தந்திரம் நிறைந்த பகையாளியாக இருக்கிறான். ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, நம்மை கண்ணிவைத்து அதில் சிக்கவைக்கவும் வீழ்த்தவும் ஜாக்கிரதையாய் இருக்கிறான். நம் பகைவர்கள் நமக்கெதிராக பகைமையும் முரண்பாடு அடையவும் வழிவகுக்கிறான். எல்லாவகையிலும் துன்பத்தையும் எதிர்ப்பையும் அடையும்படி தூண்டிவிடுகிறான். சாத்தான் தான் தவறான வழிமுறையை எடுத்திருப்பதில் திருப்தியடைகிறான் இதனால் அவன் முன்புபோலவே தற்போதும், நான் போதுமான அளவு அடைந்திருக்கிறேன் என்றுகூற தயாராயிருக்கிறான் என்று ஒருவர் நினைக்கக்கூடும். ஏன் இவ்வாறு அவன் கூறவில்லை? ஏனென்றால் அவன் தேவனுக்கு எதிரியாயிருந்து, நன்மையான யாவற்றிற்கும் எளிதில் இணங்காதவனாய் இருக்கிறான். பரிசுத்தமான யாவர்மேலும் அவன் தன் இருதயத்தை கடினப்படுத்திக் கொண்டதினால், தன்னை மாற்றிக்கொண்டு, நேரெதிரான வழிமுறையில் செல்லும்படி மனந்திரும்புதலுக்கேதுவாக அவனை புதுப்பிப்பது கூடாத காரியம்.

**சாத்தானின் நடைமுறை நமக்கு எச்சரிப்பை ஏற்படுத்தட்டும்!**

தேவனுக்கு உண்மையற்றவர்களாகும்படி சோதனை நெருக்கும்போது சிறிதளவிலேனும் எதிர்த்துநின்று அபாயம் நேரிடும் ஒவ்வொருமுறையும் கிருபாசனத்தண்டை நெருங்க துரிதப்படுவதன்மூலம், பாவத்தை அதன் துவக்கத்திலேயே மனஉறுதியோடும், தெளிந்த தீர்மானத்தோடும் எதிர்க்க, எப்பேர்ப்பட்ட பொறுப்புணர்வோடுகூடிய எச்சரிக்கை இது! தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு எதிராகவே, விரோதியின் திட்டம் வடிவமைக்கப்படுவதாகத் தோன்றுகிறது. இவ்வுலகத்தின் நடைமுறைப்படி நடப்போரைக்காட்டிலும், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற தீர்மானித்திருக்கிற எல்லோரையும் ஸ்திரமாக எதிர்க்கிறான். ஏனெனில் இவ்வுலகின் நடைமுறைப்படி நடப்போர் ஏற்கனவே அவனது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றனர். அவன் அவர்களை கண்ணியில் அகப்படுத்த அவர்கள் பின்னே ஓட முற்படுவதில்லை. வெளிச்சத்திற்குள் வராதபடி அவர்களை விலக்கிவைப்பதே அவன் செய்ய வேண்டியது–2கொரிந் 4:4.

மனிதரது இருதயங்களில் மகிமையின் வெளிச்சமாகிய தேவனுடைய நன்மை பிரகாசிக்க சாத்தான் விரும்புவதில்லை. சத்திய வெளிச்சம் எங்கெல்லாம் செல்கிறதோ அது மறுரூபப்படுத்துதலை கொண்டுவரும். நம் இருதயங்களில் சத்தியம் ஒளிர்ந்தவுடன் ஆணாகிலும் பெண்ணாகிலும் மாறுதலுக்குட்படுவர். இந்த மாற்றமடைதல் அன்றாடம் நிகழ்கிறது. சாத்தான் இதைக் காணும்போது, தன் ஆதிக்கத்தின் கீழிருந்த ஒருவன், விலகி ஓடுவதைக்கண்டு, மீண்டும் அவனைச்சுற்றிலும் தன் வலையைப் பின்னுகிறான். அவனை தன் வல்லமையால் குருடாக்குவதற்கு கடும் முயற்சி செய்கிறான். ஒரு ஈ தப்பிக்க போராடும்போது, எட்டுக்கால்பூச்சி தன்னைச்சுற்றிலும் உள்ள வலையை பலப்படுத்த துரிதமாய்

செயல்படும். அந்தகண்ணியிலிருந்து ஈ தப்பிக்குமேயானால், எட்டுக்கால்பூச்சி மீண்டும் அதனை தன்பொறியில் சிக்கவைக்க முயற்சிக்கும்.

ஆனால் நாம் உள்ளேயும் புறம்பேயும் போராடவேண்டிய தவிர்க்கமுடியாத இந்த எதிராளிகளைத்தவிர, நாம் எந்தளவு நம் போதகரோடு நெருக்கமாயிருக்கிறோமோ, அந்தளவு பூரண பாதுகாப்பாய் இருப்போம். நமக்கெதிராக இருக்கின்ற எல்லாவற்றைப் பார்க்கிலும், நம் சார்பாக இருக்கிறவர் பெரியவர், பலமுள்ளவர். நம் பரலோக நண்பரின் குணாதிசயத்தை ஓரளவு கற்றிருக்கிறோம். தேவன் ஒரு உன்னத ஜீவி என்றும், தம்மை ஆராதிக்க விரும்புகிறார் என்றும் கண்டிருந்தோம். ஆனால் தற்போது எந்தளவு அவர் நீதியுள்ளவர் என்றும், எவ்வளவு ஞானமுள்ளவர் என்றும், எவ்வளவு அன்பும் நேர்த்தியுமானவர் என்றும் அதிகதிகமாக கண்டறிந்து வருகிறோம். அவரது மகிமையுள்ள குணாதிசயத்தை வியந்து போற்றும் நிலைக்கு நாம்வந்தவுடன், அவரைப்போல் ஆகவேண்டும் என்ற பேராவல் நம்முள் எழுச்சியூட்டுகிறது. மேலும் நாம் பரலோகத்திலுள்ள நம் பிதாவின் சாயலுக்கொப்பாக வேண்டுமென்று வேதாகமம் கட்டளையிடுகிறதை நாம் காண்கிறோம். இயேசு பிதாவின் சாயலைப் பெற்றிருந்ததுபோலவே, நாமும் தேவனுடைய நேச குமாரனது சாயலை அடையவேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறோம். நாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்கள் எங்களைப் பின்பற்றுவோராகுங்கள் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

**சுயமே நமது விசேஷித்த யுத்தக்களம்**

உலகில் நாம் தற்பொழுது தேவனுடைய விசேஷித்த பிரதிநிதிகளாய் இருந்து, பாவத்துக்கும் தீமைக்கும் எதிராக விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி வருகிறோம். குறிப்பாக நம்முள்ளேயே இப்போராட்டம் நடைபெறுகிறது. உலகத்தின் அசுத்தங்களை சுத்தப்படுத்த நாம் ஒருபோதும் பணிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட அறிவுரைகளை வேதாகமம் நமக்குத் தரவில்லை. நாம் ராஜ்யத்தை சுதந்தரிக்கும்போது இந்த வேலையை படிப்படியாக செய்வதற்கு கர்த்தர் நம்மை உபயோகப்படுத்துவார். தற்போது நம் சொந்த மாம்சத்திலேயே காண்கிற தீமைகளை முழுமையாக அகற்றமுடியாது. ஆகவே நம் அழிவுக்குரிய சரீரங்களில் வேரூன்றியிருக்கிற நம் பாவத்துக்கெதிராக நம் சக்திகளை திசைதிருப்புவது அவசியம். நாம் பிறருக்கு பிரசங்கிக்கும்போது, இதற்கு அதிக கவனம் செலுத்தி பயிற்சி செய்யவேண்டும். இல்லாவிடில் நாம் புறம்பாக்கப்பட நேரிடும். எப்பேர்பபட்ட கருத்து இது! தேவனைக்குறித்தும் அவரது அன்பு வல்லமை மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான இரட்சிப்பு இவற்றையெல்லாம் மற்றவர்களுக்கு அறிவித்திருந்தபோதிலும், நாம் இந்த மகிமையின் இரட்சிப்பிலிருந்து புறம்பாக்கப்பட நேரிடலாம்.

புதிய சிருஷ்டிகளாக நாம் ஆபத்தை எதிர்நோக்கி மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும், தொடர்ந்து வளர்ச்சியடையவேண்டும், மாம்சத்தை ஜெயங்கொள்ள வல்லமையில் பெருகவேண்டும். இவ்வாறு செய்தால் நாம் பாதுகாப்புடன் இருப்போம். நமது விசேஷித்த யுத்தக்களம் சுயமே. கர்த்தருடைய பிள்ளைகளில் அநேகர் போராடும் தன்மையை இயல்பாகவே பெருமளவில் அடைந்திருக்கின்றனர். இது சரியான வழிமுறையில் கட்டுப்படுத்தப்பட்டு, திசைதிருப்பப்படுமானால் இது ஒரு நல்ல பண்பாக உருவெடுக்கும். போராடும் குணம் அத்தியாவசியமானது, இல்லாவிடில் நாம் ஒருபோதும் ஜெயங்கொள்ளமுடியாது. ஆனால் நாம் சகோதரர்களோடு சண்டை பண்ணாதபடிக்கு நம்மைநாமே அடக்கிக் கொள்ளவேண்டும். மேலும் நாம் சாத்தானோடு தனித்து போராடும்படி முயற்சி செய்யக்கூடாது. நாம் அவனுக்கு நிகரானவர் அல்ல. ஆனால் நாம் அவனை எதிர்க்க வேண்டும். கர்த்தர் வெகுசீக்கிரம் அவனைப்பிடித்து, ஆயிரமாண்டுகள் கட்டிவைப்பார். விரோதியானவன் தன் கிரியைகளை செய்யமுடியாதபடிக்கு கர்த்தர் அவனை ஜெயங்கொள்வார். ஆனால் இந்தப்பணி முழுமையாக நிறைவேறுவதற்கு ஆயிரமாண்டுகள் முழுவதும் தேவைப்படுகிறது. நாம் மாம்சத்தில் இருக்கும்போதே சாத்தானையும் அல்லது அவனது கிரியைகளையும் அழித்துவிடமுடியும் என நாம் எதிர்பார்த்தல்கூடாது. இது நம்முடைய வேலையல்ல. பகையாளி நம்மை தொடாதபடிக்கு நம்மைக் காத்துக்கொள்ள, ஆதாமின் விழுந்துபோன சந்ததியார் பெற்றுள்ள இந்த சரீரத்தை அடக்கி கீழ்ப்படுத்தவேண்டும் என்பதே நம்மை ஜெயங்கொள்வதற்கு நாம் செய்யவேண்டிய வேலையாக கர்த்தர் கொடுத்திருக்கிறார் – 1யோவா 5:18.

பாவத்தின்மேல் நாட்டம் கொள்ளும் மனப்போக்கை இயல்பாகவே நாம் அனைவரும் பெற்றிருக்கிறோம். ஆகவே நாம் மாம்சத்தின் விருப்பங்களையும் மாம்சத்தின் இயல்புகளையும் ஜெயங்கொள்வது அவசியமானது. இவை அனைத்துமே ஆவிக்கெதிராக போர்செய்கின்றன. கர்த்தரிடத்தில் சரணாகதி அடைந்த அத்தருணத்திலிருந்து நாம் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டு, புதுசிருஷ்டிகளானோம். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. நாம் இனி ஆதாமின் குடும்பமாகிய பழைய குடும்பத்திற்கு உரியவர்களல்லர்.

நாம் முழுமையாக புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம். நாம் மரணத்திலிருந்து நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம். ஆதாமுக்குள்ளான மரண சாபத்திலிருந்து நீங்கி, கிறிஸ்துவுக்குள்ளாக புதிதான ஜீவனுக்குட்பட்டிருக்கிறோம். இனி தேவபுத்திரர்களாக நாம் விசுவாசத்தில் நிலைத்திருப்பதைப் பொறுத்தே இந்த புதிய ஜீவன் நம்முள் வளர்ச்சியடைவது அடங்கியுள்ளது. பழைய ஜீவியத்தை சார்ந்ததாயுள்ள எல்லாவற்றையும் எதிர்ப்பதில் கர்த்தரிடத்தில் உண்மையை நாம் காண்பிக்கவேண்டும்.

**வேத வசனங்களிலிருந்து திடப்படுத்துதல்கள் வரும்**

நாம் நினைக்கிறபடி எக்காரியத்தையும் முழுமையாக செய்ய நம் ஒருவராலும் கூடாது. சுபாவத்தின்படி சிலர் அதிகமாகவும் சிலர் குறைவாகவும் வீழ்ச்சிக்குட்பட்டிருக்கிறோம். நாம் முழுமையாக வெற்றி காண்கிறோம் என்று நாம் எண்ணுவோமானால், நமது சொந்த குறைபாடுகளால் சிறிதளவோ, அதிகமாகவோ குருடாக்கப்பட்டிருக்கிறோம். நாம் பூரணமாக செய்ய முயற்சிக்கலாம். ஆனால் அது நம்மால் கூடாது. ஆனால் நல்ல போராட்டத்தைப் போராடுவதன் மூலம் நம்மால் முடிந்தளவு சிறப்பாக செய்ய தீர்மானித்திருப்பதை கர்த்தருக்கு நிரூபிக்கிறோம். சிறுமுயற்சி எடுப்பது மட்டும் போதுமானதல்ல, மாறாக நம் முழு பலத்தையும் பிரயோகிக்கவேண்டும். இந்த பலம் கர்த்தரது

கிருபையின்மூலம் நமக்கு கூடுதலாகத் தரப்படும். அவ்வாறு பிரயோகித்தோமானால் சிறப்பாக செய்வதில் குறைவுபட்டாலும், நிச்சயமாக அவரது குமாரனாகிய ''இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிக்கும்''.

இவ்வாறாக நாம் ''கறைதிறையின்றி அல்லது சுருக்கமின்றி அல்லது அதற்கொத்த குறைபாடுகளின்றி ஓடுகிறவர்களாயிருப்போம். இவ்வாறு செய்வதினால், நாம் எப்பொழுதுமே எவ்வித கறைதிறை அல்லது சுருக்கமின்றி நம்மை விலக்கிக் காத்துக்கொள்ளவேண்டும் என்று பொருளாகாது. ஏனெனில் அவ்வாறு நம்மை விலக்கிக் காத்துக்கொள்ள முடியாது. ஆனால் நமக்காக பாடுபட்ட இரட்சகரது இரத்தத்தின் புண்ணியங்கள் மூலம் நாம் அவரிடத்தில் சேர்வதே தேவனுடைய அற்புத ஏற்பாடாக உள்ளது. நமது மகிமை வாய்ந்த திருமண ஆடையை கறை திரையினால் களங்கப்படுத்த அனுமதிக்க அவசியமில்லை. நாம் பிதாவின் குடும்பத்திற்குள் முதன்முதலாக வந்தபோது, நம் கடந்த காலப் பாவங்கள் அனைத்தும் மூடப்பட, நாம் கர்த்தரது புண்ணியத்தைப் பெற்றுக்கொண்டோம். ஆனால் நாம் பெற்றிருக்கிற தற்போதைய பாவங்களும் பலவீனங்களும் கழுவப்படுவதற்கும் இரத்தம் அவசியமாயுள்ளது. இப்படியாக, கர்த்தர் நம் தேவைக்கென்று ஏற்பாடுசெய்திருக்கிறார். பிதாவைக்குறித்த அன்பையும் நம் கர்த்தராகிய இயேசுவைப் பற்றிய அறிவையும் அடையப்பெற்று, நாம் பரலோக கிருபாசனத்தண்டைக்கு தைரியத்தோடும் உற்சாகத்தோடும் சேரக்கடவோம்.

எல்லா பூமிக்குரிய அசுத்தங்களிலிருந்தும் தொடர்ச்சியாக சுத்திகரிக்கப்பட கர்த்தரிடத்தில் சேருதல் தவறான நம்பிக்கை கொண்டது என சிலர் கருதக்கூடும். ஆனால் அப்போஸ்தலர் இதற்கு முரண்பாடான கருத்து கொடுப்பதன்மூலம் நாம் அறிவுறுத்தப்படுகிறோம். மன்னிப்பு பெற கர்த்தரிடத்தில் சேருவதற்கு, தேவவசனம் தரும் உற்சாகம் நமக்கு அவசியமாய் உள்ளது. ''கிருபாசனத்தண்டை அடிக்கடி சேராதே'' என்று மாம்சம் கூறுகிறது. நாம் முதலாவதாக தவறு செய்தபோது, கர்த்தரிடத்தில்அதைக்கொண்டு செல்வதோடு ஒப்பிடுகையில், அப்போது எளிதாக இருந்தது. அதிக கடினம் அல்லது எவ்வித கஷ்டமும் நேரிடாதபடி நாம் வந்தோம். நம் மீறுதல்கள் மனப்பூர்வமாக செய்தவையல்ல என்று நாம் கர்த்தரிடத்தில் கூறி, இருந்தபோதிலும் செய்த தவறுக்கு அவரிடம் மன்னிப்பை கேட்டோம். அதன்காரணமாக, அவரது மன்னிப்பையும் உணர்ந்துகொண்டோம். ஆனால் இரண்டாம்முறை அவ்வாறு செய்வது எளிதாக இருக்கவில்லை. ஒவ்வொரு முறையும் பாவம் செய்யும்பொழுது அவரிடத்தில் அடிக்கடி சேருவது அதிக கடினமாகிவிட்டது. (முதலாவதாக நாம் அதிக கவனமாக இருக்க முயற்சிசெய்வதாக அவரிடத்தில் கூறினோம். ஆயினும் நாம் புரிந்துவைத்திருக்கிற நிலைப்பாட்டை அடையாதபடி தொடர்ச்சியாக ஒருவேளை குறைவுபட்டிருக்கலாம். இதன் காரணமாக, இவ்விஷயத்தில் தேவனிடத்தில் அணுகக்கூடாது என்று நாம் தீமையின் பிடிக்கு ஆட்பட நேர்ந்திருக்கலாம்

**தேவ இரக்கத்தை ஒருக்காலும் முன் அனுமானியாதே :–**

நமக்கு உதவி நேரிடும் ஒவ்வொரு முறையும் இரக்கத்தையும் கிருபையையும் பெற தொடர்ச்சியாக அவரை அணுகி, நம்மை பலப்படுத்தும் வாக்குத்தத்தங்களால் நாம் சிந்தையில் புத்துணர்வு அடைவது நம் அனைவருக்கும் அவசியமானது. இவ்வாறாக, வருங்காலத்தின் இடையூறுகளை மேற்கொள்வதற்கு பலப்படுத்தப்படுகிறோம். ஆயினும் நாம் நம் வார்த்தைகளிலும் சிந்தனைகளிலும் செயல்களிலும் ஓரளவு அலட்சியமாயிருந்து, கர்த்தருடைய இரக்கத்தை முன் அனுமானிக்கக்கூடாது இப்படிப்பட்ட ஆவியை எவ்வகையிலும் கர்த்தர் காண்பாராகில், நம்மை மன்னிக்கத் தயாராயிருக்கவோ, நமக்கு தயவளித்து சீர்பொருந்தச்செய்யவோ மாட்டார். தம் மன்னிப்பின் நிச்சயத்தை அவர் கொடாமல் நிறுத்திவைப்பார். நாம் அவரது அன்பையும் ஆசீர்வாதத்தின் உணர்வையும் உணராமலேயே, மீண்டும் மீண்டும் அவர் சமுகத்திற்கு முன்பாக வந்து நிற்கும்படி நேரிடும். இவ்வாறாக மற்றொரு முறை கைவிடப்பட்டவர்களாக நிற்காதபடிக்கு, இது நம்மை அதிக விழிப்புடன் இருக்கச்செய்யும்.

கர்த்தர் முன்பாக தங்களது கணக்கை சுத்தமாக வைக்கத் தவறுபவர்களது நிலைமை மிகவும் துயரமானதாகும். முதலாவது அல்லது இரண்டாவது குற்றம் செய்தபிறகு, இவர்கள் தங்களுக்குள்ளாக கூறிக்கொள்வதாவது; ''கர்த்தரிடத்தில் மீண்டும் செல்ல என்னால் முடியாது, நான் உறங்கப்போகிறேன், அதை மறந்துவிடுவேன்''. அடுத்தநாள் காலை அவர்கள் எழுந்திருக்கும்போது தேவனுக்கு இசைவாயிராதபடி எழுந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் ''என்னால் இதற்கு உதவ முடியாது'' என்று எண்ணுவார்கள். எல்லாரும் கர்த்தரோடு நீதியாயில்லை என்ற எண்ணம் இரவில் மீண்டும் வரும். ''இன்றையநாளில் ஏராளமான கஷ்டங்களையும், அதிக தோல்விகளையும் நான் பெற்றிருக்கிறேன். ஆனாலும் என்னால் தேவனை அணுக முடியாது. இது எந்த பயனும் அளிக்காது'' என்று அவர்கள் எண்ணுவார்கள். இதனால் விரிசல் அதிகமாகும். கர்த்தருடைய மாபெரும் இரக்கத்தை அவர்கள் மறந்தார்கள். மேலும், ''தகப்பன் தன் குமாரர்களுக்கு இரங்குவதுபோல, கர்த்தர் தமக்கு அஞ்சுபவர்கள்மேல் இரங்குகிறார்; ஏனெனில் நாம் மண் என்று அவர் நினைவுகூருகிறார்'' என்று அவர் கூறியிருந்ததையும் மறந்தார்கள்.

அபாயத்தின் உச்சநிலையை உள்ளடக்கின ஒரு தவறான நடைமுறை இதுவாகும். கர்த்தருடனான நம் கணக்கை ஒவ்வொருநாளும் நாம் சரிசெய்யவேண்டும். மாம்சத்தில் நாம் இனி ஒருபோதும் எழுந்திருக்காதவர்கள்–போல், நாம் செய்ய விரும்பினதிலிருந்து ஒவ்வொரு இரவும் ஒய்வு பெறவேண்டும். அடுத்தநாள் காலையில் எழுந்திருக்குமுன், ''மற்றவர்களுக்கு உதவிகரமாக, எப்படி இன்று கர்த்தரை பிரியப்படுத்துவது என்றும், விசேஷித்தவிதமாக, எப்படி என்னை ஜெயங்கொள்வது ? என்பதுமே நமது சிந்தனையாக இருக்கவேண்டும். சிலர் உதவிதேவைப்படும் ஒவ்வொருமுறையும் அளிக்கப்படும் கிருபையின் ஆதாயத்தைப் பெறத்தவறி, கர்த்தரைவிட்டு வெகுதூரம்விலகி படிப்படியாக தங்களை ஜெயங்கொள்ளுதலையும், கர்த்தருக்குப் பிரியமானவைகளை செய்வதையும் குறித்த சிந்தனை அரிதாக மாறுகிறது. அவர்களிடத்தில் தேவபக்தியின் உணர்வு உள்ளது, ஆனால் அவரை நேசிப்பதில்லை. அவர் அவர்களிடத்தில் நெருக்கமாயில்லை என்பதை அவர்களும் அறிந்திருக்கிறார்கள். சரியான வழியை அவர்கள் அறிந்திருந்தாலும், அதில் நடக்க தங்களால் முடியாது என்று உணர்கின்றனர். தங்களது நீதியின் ஆடையில் கறைபடிந்திருப்பதை புரிந்திருந்தாலும், தங்களுக்குப்

பின்னால் பல கருத்துக்களை ஒளித்துக்கொள்ள முயல்கிறார்கள். இந்நடைமுறை தொடருமேயானால் அது எங்குபோய் முடியும்?

இக்காரியங்கள் நமக்குப்பின்னால் எறிந்துபோடக்கூடாதவைகள். கர்த்தரால் மன்னிக்கப்பட்ட காரியங்களை நமக்குப்பின்னால் எறிந்துபோடவேண்டும். ஆனால் நாம் இன்னும் மன்னிப்பு கேட்காத காரியங்கள், தீர்வுகாணப்படும்வரை நமக்கு துன்பம் கொடுத்துக்கொண்டேயிருக்கும். நாம் கர்த்தருக்கு வேதனை வருவிக்கக்கூடியவற்றை செய்திருப்பதை உணர்வோமானால், கர்த்தரை மாலைவேளையில் தொடர்பு கொள்ளும்வரை காத்திருப்பது நன்மை பயக்காது. நமது பிரத்யேக அறைக்குள் நாம் போகமுடியுமென்றால், நாம் அவ்வாறே செய்யவேண்டும். அல்லாவிடில், நமது கண்களை ஒருவினாடிமூடி, நம் இரட்சகரின் புண்ணியங்கள்மூலம் நம் பரலோகப்பிதாவிடம் தொடர்புகொள்ளவேண்டும். கர்த்தரோடு இடைவிடாது தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு, நம் நடவடிக்கைகள், நம் தவறுகள், மனதார செய்யப்படாத மீறுதல்கள் ஆகியவற்றைப் பற்றி கூறவேண்டும். ஒருவேளை நாம் அறிந்திராதவகையில், நம்மால் அநேக மீறுதல்கள் செய்யப்பட்டிருக்கலாம். சுத்திகரிக்கும் இரத்தத்தைக்கொண்டு, அனுதினமும் நம் வஸ்திரங்களை சுத்தமும் வெண்மையுமாய் காத்துக்கொள்ளவேண்டும்.

**அலட்சியப்போக்கு உடையோர் ராஜ்யத்துக்கு தகுதியற்றோர்**

தங்கள் நீதியின் ஆடைகளை கறைப்படுத்திக் கொண்டு, அதை சுத்திகரிக்காமல் அப்படியே விட்டுவிட்டவர்கள், தேவராஜ்யத்துக்கு தகுதியற்றோர். கிறிஸ்துவின் மணவாட்டி தங்கள் நீதியின் வஸ்திரத்தில் கறை திரையற்றவர்களும் அல்லது மற்ற எந்த குறைபாடுமின்றி உருவானவர்களாக இருப்பார்கள். இந்த வகுப்பாரை குற்றமற்றவர்களும் மாசற்றவர்களுமாக இயேசு பிதாவின்முன்பாக ஒப்புக்கொடுக்கிறார். அவர்கள் கறையற்றவர்களாக பூரணராக நடக்கவில்லை. ஆயினும், கர்த்தரிடத்தில் அடிக்கடிசென்று தங்கள் வஸ்திரங்களை கறையற்றதாக கவனமாக காத்துக்கொண்டனர். தங்களை வழிவிலக்கும் எவற்றையும் அவர்கள் அனுமதிக்கவில்லை. இதுவே மணவாட்டி வகுப்பாரின் ஆவியாகும். பிரியமான நண்பர்களே, நாம் ஒவ்வொருவரும் அந்த வகுப்பாராகும்படி விரும்பவேண்டும். நம் கர்த்தரோடு நாம்அந்த நிலைமையில் நிற்பதில் நிச்சயமற்ற தன்மையை நம்மில் யாரேனும் தற்போது பெற்றிருந்தால், துரிதமாக அவரிடத்தில் சேர்ந்து, நம் நேச மீட்பரும், பரிந்து பேசுபவருமானவரிடத்தில் நம் கணக்கை சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். காத்திருக்காமல் உடனடியாக அவரிடம் செல்வோமாக!

வெளிப்படுத்தல் 7:3,4 மற்றும் 14:1–5 வசனங்களில் உண்மையுள்ள வகுப்பார் சித்தரிக்கப்படுகின்றனர். பிதாவின் நாமம் தங்கள் நெற்றியில் தரித்த 1,44,000பேர் இவர்களே. மற்றவர்கள் யாவரும் பாடக்கூடாததும், 1,44,000பேர் மட்டுமே பாடக்கூடிய புதிய பாட்டை பாடினர். அவர்களோடேகூட நாமும் இருக்க ஏக்கமாயிருக்கிறோம். இதைத் தவிர்த்து வேறு எந்த இடத்தையும் அடைய எண்ணக்கூடாது. தேவன் நமக்கு பரிசுத்த ஆவியைக் கொடுத்தபிறகு, நாம் வெற்றிபெறுவது அல்லது தோல்வியடைவது –இவைகளின் முடிவு நம் சொந்த கரங்களிலேயே உள்ளது. நாம் இராஜ்யத்தை அடையத் தவறினோமானால் அது நமது சொந்த பிழையினிமித்தமே ஆகும். கர்த்தர்மேல் பழி சுமத்தும்படி அவரிடத்தில் குறையேதுமில்லை. ஏனெனில் நம் தொடர்ச்சியான சுத்திகரிப்புக்கென்று அனுதினமும் அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். இவ்வழியில் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் அவரது கிருபை நமக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நாம் நமது சிறந்த ஆற்றலுக்கேற்ப அவரிடத்தில் நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாயிருந்தால், அவரது அன்பு நிறைந்த பாதுகாக்கும் ஏற்பாடுகள் நமக்கு தொடர்ச்சியாக அருளப்படும்.

மற்றவகுப்பார் தங்கள் நீதியின் வஸ்திரங்களில் கறைகளை அதிகமாக குவித்துக்கொள்ள அனுமதிப்பதால், இவர்கள், "ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்(வெளி 7:9). அதாவது, இவர்கள் மணவாட்டி வகுப்பாராகும்படி அபிஷேகம் பண்ணப்பட்டவர்களோ அல்லது முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கைக்குரியவர்களோ அல்லர். இவர்கள் அனைவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட நீதியின் ஆடையை கறைகளாலும், அழுக்கு படியச்செய்தும் இருந்ததால், மகாஉபத்திரவத்தின் மூலமாக ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் தோய்த்து தங்கள் வஸ்திரங்களை வெளுக்கவேண்டும். இவர்கள், பின்பு, சிங்காசனத்தின் முன்பாக நின்று, தேவனுக்கு அவரது ஆலயத்தில் இரவும் பகலும் சேவிப்பார்கள். மணவாட்டி வகுப்பாரோ ஆலயமாக இருப்பார்கள், அல்லது மற்றுமொரு உருவகமாக கூறுவோமாகில், இவர்கள் தங்கள் கர்த்தரும் மணவாளனுமாகிய மேசியாவின் சிம்மாசனத்தின்மேல் அவரோடுகூட உட்காருவார்கள். இந்த வேறுபட்ட உருவக காட்சிகள், வேறுபட்ட நிலைமைகளாகிய மகிமையடைந்த கிறிஸ்துவின் சரீர அங்கங்களது பணியையும், மேன்மைப்படுத்தப்பட்ட ஸ்தானத்தையும், இவர்கள் கிரீடம் அணிந்திருப்பவர்களாகவும், மற்றவர்களோ குருத்தோலைகளை மட்டுமே பிடித்திருப்பதாகவும் பேசப்பட்டிருப்பது இறுதிவெற்றியை சுட்டிக் காண்பிக்கிறது.

நம் அன்பின் பரலோகப்பிதா, போதுமான வைராக்கியத்திலும் விசுவாசத்திலும் குறைவுபட்டு, "பரம அழைப்பின் பந்தயப்பொருளை இழந்தவர்கள்பேரிலும் இரக்கம்காண்பித்து அவர்களுக்கு ஏற்பாடு செய்துள்ளதற்கு நம் எத்தனை மகிழ்ச்சியுடையோராய் இருக்கவேண்டும்! "புத்தியில்லாத கன்னிகைகள்" ஆகிய இவர்கள், எல்லாவற்றையும் இழக்காமல், ஆத்தும வருத்தத்தினாலும் கண்ணீரினாலும் கர்த்தரிடத்தில் முழுமையாகத் திரும்பி வந்ததற்காக நாம் சந்தோஷப்படுகிறோம். அவர்கள் மரணத்தில் தங்கள் ஜீவியத்தை நிறைவுசெய்வார்கள். அவர்களது மாம்சம் வலுக்கட்டாயத்தின்பேரில் அழிவுக்குள்ளாக்கப்படும். அவர்கள் மனப்பூர்வமாக பலியின் உடன்படிக்கை செய்தபோதிலும், அதை நிறைவேற்றத் தவறினர். கர்த்தரையும், நீதியையும் நேசித்தார்கள், ஆயினும் உண்மையிலும் விசுவாசத்திலும் போதுமான அளவு முழுமையை காண்பிக்கவில்லை. இதன் காரணமாகவே கடும் உபத்திரவத்துக்கு உட்படுத்தப்பட நேரிட்டது. இதனால் கர்த்தராகிய இயேசுவின் நாளில் இவர்களது ஆவி இரட்சிப்படையும்.

**உண்மையுள்ளவர்களாயிருக்க ஊக்கமளிக்கும் புத்திமதி**

திரள்கூட்டத்து வகுப்பாராகும்படி ஒருவரும்

தேவனால் அழைக்கப்படவில்லை. ‘‘ஒரே நம்பிக்கையின் அழைப்புக்கென்றே நாம் அனைவரும் அழைக்கப்பட்டிருக்கிறோம்’’. ஆகவே பிரியமான சகோதர சகோதரிகளே, நாம் கர்த்தரோடு அனுதினமும் சுத்த மனதோடு நடக்கக்கடவோம். நம் வஸ்திரங்களை கறைகளின்றி காத்துக்கொள்வோமாக. வஸ்திரங்களில் மேலுள்ள கறையை நீக்குவதைக்காட்டிலும் அதன்மேல் கறைபடியச்செய்வது வெகுசுலபம். மேலும், முன்பே படிந்த கறையைக் காட்டிலும், புதிதாக சேரும் ஒவ்வொரு கறையையும் அகற்றுவது கடினமாயிருக்கும். அலட்சியத்தின் முடிவே கறைபடிதல் என்று நாம் புரிந்து கொள்கிறோம். ‘‘என் நீதியின்வஸ்திரத்தை எப்பொழுதும் கறைபடியாமல் காத்துக்கொள்வது என்னால் கூடாதகரியம்’’ என்று நீங்கள் கூறலாம். ஆனால் கர்த்தர் ஒரு வழியை ஏற்பாடுசெய்திருக்கிறார்; கறைகளை சுத்திகரிக்கும்படி நான் ஊக்கமாக விண்ணப்பிக்கும்போது, கர்த்தர் ஒரு வழியை ஏற்பாடு செய்கிறார், இதற்காக நான் நன்றி செலுத்துகிறேன்’’.

இவ்வகையான ஒவ்வொரு அனுபவமும் நம்மை அதிக பணிவையும் அதிக விழிப்புணர்வையும், நம் பலவீனங்களை மிக விழிப்பாய் கண்ணோக்கவும் நமது வெண்நிற வஸ்திரம் கறைகள் படாதபடி தவிர்க்க மிக ஜாக்கிரதையாயிருக்கவும் செய்யும். இன்னொருவழியில், கர்த்தர் தமது சமாதானத்தை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நிறுத்திவைத்து, நாம் அலட்சிய மனப்பான்மையிலுள்ளதை உணரும்வரை நம்மை சிட்சித்து, பின்பு மற்ற உபத்திரவங்கள் எதுவுமின்றி நம் கறை நீக்கப்படும்படி செய்வார். இது எளிதான விஷயமல்ல என்று நாம் உணரவேண்டும் என்று கர்த்தர் தீர்மானமாய் இருக்கிறார். இதன்மூலம், ‘‘நன்று நல்ல ஊழியனே’’ என்ற போதகரின் இனிமையான குரலை விரைவில் நாம் கேட்கமுடியும்.

R 5926

# கொடுத்தலினால் அடையும் கிருபை

## THE GRACE OF GIVING

"இப்படிப் பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும் வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லாவிதத்திலேயும் உங்களுக்கு காண்பித்தேன்" – அப் 20:35(RV)

ஏழைகளுக்கு கொடுத்தல் – கர்த்தருக்கு கடன் கொடுத்தல் – சுவிசேஷத்திற்கு இஸ்ரயேலர்களுடைய கண்கள் குருடானதின் இரகசியம் – மேம்பட்ட புறஜாதி வகுப்பார் சத்தியத்தால் ஈர்க்கப்படுதல் – முறைப்படுத்தப்பட்ட தானதர்மம் ஒழுங்கற்ற கொடையைவிட மேலானது. தயாளகுணம், மனம் மற்றும் இருதயத்தின் பரந்த நோக்கை தெரிவிக்கிறது – வளமான வாழ்க்கையின் நிலை நம்முடைய இரக்க குணத்தின் அளவுகோலாக இருக்கட்டும்.

இந்தப் பாடத்தில் நாம் மனதில் ஆழமாக பதியவைக்கவேண்டிய படிப்பினை கிறிஸ்தவ உதார குணம் மற்றும் மனமுவந்து செய்கிற தானதர்மங்கள் ஆகும். விழுந்துபோன சுபாவத்தின் பொதுவான மனநிலையானது பலமுள்ளவர்களை சார்ந்தே அல்லது அவர்களுக்கு ஆதரவு தருவதும் மற்றும் பலவீனமுள்ளவர்கள் தங்களை சுற்றி திரண்டிருந்து தங்களை உயர்த்தவேண்டும் என்று எதிர்பார்ப்பதாகும். இது தன்னை பிரியப்படுத்துகிற விழுந்துபோன சுபாவத்தின் வழியாகும். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டியின் ஒழுங்குமுறையானது இதற்கு முற்றிலும் எதிர்மறையானது. அவன், மற்றவர்களது நலன், அவர்கள்மீது அக்கறை மற்றும் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதற்காக காத்திருக்கவேண்டும். அதிலும் விசேஷமாக, தங்கள் சொந்தக்குடும்பம் மற்றும் விசுவாசவீட்டாரின் பலவீனமான அங்கத்தினர்களின் நலன்கருதி இருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் பெலமுள்ள உடன்அங்கத்தினர் பெலவீனமுள்ள மற்றும் இயலாதவர்களுக்கு உதவுவதில் பெருமகிழ்ச்சி கொண்டிருக்கவேண்டும். மேலும் எவ்வளவுதூரம் இயலுமோ அவ்வளவுதூரம் அவர்களை கிறிஸ்துவுக்குள் மேம்பட்ட வளர்ச்சிக்கு ஏகமாக உயர்த்த வேண்டும். சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட அநேகர் ஐஸ்வரியவான்களாகவே இருந்தார்கள் என்று நிதானிக்கலாம். நம்முடைய பாடம் கொரிந்து சபையினருக்கு முகவரியிட்டும் மற்றும் எருசலேமுக்குள்ளேயும் அதை சுற்றிலுமுள்ள கிறிஸ்தவர்களுக்காகவும் அமைந்துள்ளது. அதேசமயத்தில் கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களுக்காக நன்கொடைகளைப் பெற்றதைக் காட்டிலும், எருசலேமிலிருந்த கிறிஸ்தவர்களுக்காக ஏன் அதிகமாக பெறப்பட்டது என்ற கேள்வி இயற்கையாக எழும்பும். ஏன் அது நடந்தது என்பதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. எருசலேமைச் சுற்றிலும் கடுமையான பஞ்சம் மிகுந்து காணப்பட்டது

2. எருசலேம் ஒரு வர்த்தக நகரமல்ல, ஆகையால் அங்கு பணப்புழக்கம் குறைவாகவே இருந்தது

3. எருசலேமிலும் அதனைச்சுற்றிலும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்கள் பெரும்பாலும் ஏழ்மையான ஜனங்கள் என்பது வெளிப்படையான ஒன்று.


எல்லாவற்றிற்கும் மேலாக, அங்கு சத்தியத்திற்கு வெளிப்படையான அடக்குமுறை இருந்ததிலிருந்து, அங்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாரெல்லாம் இசைவாக இருந்தார்களோ அவர்களுக்கு எதிராக, மாபெரும் எதிர்ப்பு இருந்தது என்று உடனடியாக நம்மால் நிதானிக்கமுடியும். சிறிய கடைக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டதுபோலவே காணப்பட்டனர். கூலித்தொழிலாளர்கள், அவர்களுடைய பணி இன்றியமையாதபோது பயன்படுத்திக்கொண்ட நேரங்களைத்தவிர, மற்ற நேரங்களில் எவ்வளவுதூரம் விலக்கிவைக்க முடியுமோ அந்த அளவிற்கு விலக்கப்பட்டனர். இதற்கு மாறாக, ஆசியா மைனரின் மாசிடோனியா மற்றும் அகாயா போன்றவை செல்வசெழிப்புடன் காணப்பட்டன; உதாரணமாக, பாஃபோஸின் துணையாளுநர் செர்ஜியஸ் பவுலோஸ்(அப்13:7), ஏதேன்ஸ் பல்கலைக்கழக பேராசிரியர் டையோனைசியஸ்(அப் 17:34), அதே நகரத்தைச் சேர்ந்த டமாரிஸ், கொரிந்துவின் ஜஸ்டஸ் மற்றும் அந்த நகரின் யூத ஆலயத்தின் தலைவராகிய கிறிஸ்பஸ்(அப்18:8) ஆகியோரின் மனமாற்றங்களை நாம் நினைவுக்கு கொண்டுவருகிறோம்.

### மதரீதியிலான பெருமையினால் குருடாக்கப்பட்டோர்

ஒரே மாதிரியான சுவிசேஷம் ஏன் ஆசியா மைனர் மற்றும் கிரீஸ் நாட்டிலுள்ள செல்வந்தர்களை ஈர்த்து, யூதேயாவிலுள்ள பெரும்பான்மையான ஏழ்மை வகுப்பாரை புறம்பாக்கி தள்ளிவிட்டது என்று இயற்கையாகவே ஒரு கேள்வி எழும்பும். இதற்கு பதில் என்னவாக இருக்குமெனில், மெய்தேவனோடு நீண்ட தொடர்புடைய மற்றும் அவருடைய மேசியாவின் கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களையுடைய யூதர்கள் மத்தியில், அதிலும் குறிப்பாக செல்வந்தர் மற்றும் அறிஞர்கள் மத்தியில் விருத்தியடைந்து காணப்பட்ட மத அடிப்படையிலான பெருமை என்றே தோன்றுகிறது. அதுமாத்திரமல்ல, உலகின் எல்லா மத அமைப்புகளுக்கு முன்பாகவே அவர்களின் மதம் இருந்ததாகவும், அதின் அறிஞர்கள் தங்களைத்தாங்களே மேன்மையாக எண்ணிக்கொண்டனர். அவர்கள் "தங்களை நீதிமான்கள் என்று நம்பி மற்றவர்களை அற்பமாக எண்ணினார்கள்" – லூக் 18:9.

இதுதான் இஸ்ரயேல் ஜனங்கள் சுவிசேஷத்திற்கு குருடாக்கப்பட்டதின் இரகசியம். மதத்தலைவர்களும், குருமார்களும் அதிக தன்னம்பிக்கை உள்ளவர்களாக இருந்து, தெய்வீக வாக்குத்தத்தங்கள் அனைத்தும் தங்களையே மையப்படுத்துகின்றன என எளிமையாக நம்பி, அதனால் ஏழ்மையான நசரேயர் மற்றும் அவருடைய படிப்பறிவற்ற சீஷர்கள் ஏற்றுக்கொள்ளாமால் அவர்களை போலிகள் என்று தள்ளிவிட்டனர். பின்னர், சுவிசேஷம் புறஜாதிகளுக்கு பிரசங்கிக்கத் துவங்கியபோது, யூத குருமார்களின் எதிர்ப்பு அதிகமானது. அவர்களுடைய மதரீதியான ஒவ்வொரு பெருமையான எண்ணத்திற்கும் முற்றிலும் மாறாக, தேவன் ஏழ்மையான யூதர்களையோ அல்லது புறஜாதிகளையோ ஏற்றுக்கொண்டு இவர்களைத் தள்ளிவிட்டார்(யோவான்7:43–53). ஆயினும் புறஜாதிகளின் மத்தியில் இந்த நிலை மிகவும் வேறுபட்டிருந்தது. படிப்பறிவற்ற பாமர ஜனங்கள் தங்கள் வெவ்வேறு வகையான மதங்களின் மூடநம்பிக்கைகளினால் சூழப்பட்டிருந்த அதேவேளையில், நன்கு படிப்பறிவுள்ளவர்கள் மத்தியில் நேர்மையான சிந்தையுடையவர்கள், தங்கள் சொந்த மதத்தின் அநேக அம்சங்கள் வெறும் மூடநம்பிக்கைகள் என மிக விரைவாக உற்றுப்பார்த்து அறிந்துகொண்டனர். அவர்கள் தங்கள் சொந்த மதத்தைவிட யூதமதம் அதிகளவு காரணகாரியத்துடன் பொருந்தியதால் அதன்பால் ஈர்க்கப்பட்டிருக்கலாம். இதன் காரணமாக, புறஜாதிகள் யூதர்களின் வழிபாட்டுத்தலங்களை அடிக்கடி நாட ஆர்வமாயிருந்ததை நாம் காண்கிறோம். ஆனாலும் யூதமதம் அவர்களுக்கு திருப்தியற்றதாக இருந்தது. ஏனெனில், அது மிகவும் குறுகலானதாகவும், விசேஷமாக இஸ்ரயேலர்களுக்கு மட்டும் தெய்வீகஆசீர்வாதமானது வரையறுக்கப்பட்டதாகவும் இருந்தது. இஸ்ரயேல் ஜனங்களை அந்தக் காலகட்டங்களில் கிரேக்கர்கள் கீழானவர்களாகக் கருதினர். ஆனால் சுவிசேஷமானது, எல்லா தேசத்திலும், ஜனங்களிலும், ஜாதிகளிலும், பாஷைக்காரர்களிலும் யார் நீதியை விரும்புகிறார்களோ அவர்களுக்கு கதவை திறந்துவைத்தது. யூத போதனைகளில் நீண்டகாலமாக மறைக்கப்பட்டிருந்த மகத்தான பலனை மேற்கூறிய வகுப்பார் பொதுவாக ஏற்றுக்கொண்டனர்.

### முறைப்படுத்தப்பட்ட தானதர்மத்தின் பலன்கள்:




எல்லா நிகழ்வுகளிலும், கொரிந்துவிலிருந்த பரிசுத்தவான்களைக்காட்டிலும் எருசலேமிலிருந்த பரிசுத்தவான்கள் ஏழ்மையானவர்களாகவே இருந்தனர். ஆகவே அப்போஸ்தலர் கொரிந்து சபையிடம் எருசலேமிலுள்ள சபைக்கு நன்கொடை அனுப்புவது நெறிதவறாநிலை என ஆலோசனை கூறினது மிகவும் பொருத்தமானதாக உள்ளது. இந்நாட்களில் அறிந்திருப்பதைவிட, அக்காலங்களில் வாழ்ந்த மிகவும் ஏழ்மையானவர்களுக்கு அனுப்புவதற்கு, பணப்பரிமாற்றத்திற்கான வசதிகள் மிகவும் குறைவான நிலையில் இருந்ததால், பல்வேறு இடங்களிலிருந்த சபையினர் தங்கள் நன்கொடைகளை, அடுத்த வருடத்தில் அப்போஸ்தலர் எருசலேம் செல்லும்போது அவர் கையில் மட்டுமே கொடுத்தனுப்ப முடிந்தது.

கொரிந்து சகோதரர்களுக்கு அப்.பவுல் கொடுத்த ஆலோசனை கிட்டத்தட்ட ஒருவருடத்திற்கு முன்பிருந்தே சிறப்பாக பெறப்பட்டு, அதன்மீது பேரார்வத்துடன் பங்குகொண்டு வசூலானது என்று அவரின் வார்த்தைகள் தெரியப்படுத்துகிறது. நன்கொடை திரட்டுவதற்கான அவசியத்தை அவர்களுக்கு தெரியப்படுத்த போதுமான விவரங்களை இந்தக் கடிதத்தொடர்பில் எழுதுவது அவருக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது. ஆனால் அவர் அவர்களுக்கு குறிப்பாய் சொல்லுவது என்னவென்றால், ஒரு வருடம் முன்பே பேரார்வத்துடன் ஆரம்பித்த வேலையானது நிதானமாக நிறைவேற்றப்படாதபடிக்கு குறைந்தபட்ச வாய்ப்புகளே இருந்தது என்றும், கர்த்தரிடத்தில் அவர்கள் கொண்டுள்ள அன்பு மற்றும் பேரார்வம் குறித்து, மற்றவர்களிடத்தில் பெருமையாய்க் கூறினபிறகு, எருசலேமிற்கு போகும் வழியில் அவர் அவர்களிடத்தில் போகும்போது, அவர்கள் தங்களது நன்கொடையை தயாராய் வைக்க தவறியதற்காக மனம் வருந்துவதாகக்கூறி, இம்முறை அம்மாதிரி நடவாதபடி பார்த்துக்கொள்ள கூறுகிறார்.

கொரிந்தியருக்கு அவர் இதற்குமுன்பு எழுதிய கடிதத்தில், அப்போஸ்தலர் ஒரு முறைப்படுத்தப்பட்ட தானதர்மம் அளிக்கவேண்டும் என பரிந்துரை செய்கிறார், அவர் கூறுகையில், "பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்ம பணத்தைக்குறித்து நான் கலாத்தியா நாட்டு சபைகளுக்கு பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணம் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும் தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்'' – 1கொரிந் 16:1,2.

முறையான தானதர்மம் ஒழுங்கற்ற உதவியைவிட மேலானது என்ற எல்லா தேறின சிந்தனையாளர்களின் அனுபவ அறிவைப்போலவே, அப்போஸ்தலரின் அனுபவ அறிவும் ஒத்திருந்தது. அதனுடைய முடிவு பொதுவாக பெருமளவில் இருக்கும் என்பது மாத்திரமல்ல, மாறாக, கொடுப்பவர்க்கு அது அதிக நன்மையை வருவிக்கும்; அவ்வாறு கொடுப்பவருக்கு இது ஒரு குறிக்கோளை அவரது சிந்தையில் நிலைநிறுத்தி, அதை கடைப்பிடிப்பது கர்த்தருக்கு தொண்டு செய்ததைப்போல இருக்கும்.

அநேகருக்கு கர்த்தர் நிமித்தமாக, பெரும்பாலும் அவருக்கு ஊழியம்செய்யும் ஒரே வாய்ப்பு, பணம் பங்களிப்பு செய்வதாக இருக்கும். நிச்சயமாகவே ஒரு அர்ப்பணிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளை இவ்வாறு செய்யமுடியுமானால், பரிசுத்த பவுல் மற்றும் அவருடைய பயணக்கூட்டாளிகளின் பாணியில், அதாவது, பொதுப்பிரசங்கங்கள் மூலமாகவோ அல்லது வீட்டுக்கு வீடு சென்று சந்திப்பதன் மூலமாகவோ ஆவிக்குரிய கொடைகளையும் ஆசீர்வாதங்களையும் தருதல் ... அச்சடித்த தாள்கள் மூலமோ அல்லது வாயினாலோ அல்லது இருவகையிலுமோ சத்தியத்தை கொடுப்பது என்பதைப்போல பரிசுத்தவான்களுக்கு கொடுப்பது மிகவும் மேலானது.

ஆனால் தங்களிடத்தில் தாலந்து குறைவுபடுகிறது அல்லது பலமில்லை அல்லது வாய்ப்புகளில்லை என்று எண்ணி, காலத்துக்கு முன்பே துரிதமாக செயல்பட்டு, தங்கள் வாழ்க்கை சூழலை அமைத்துக்கொள்கிறவர்களோ, தடைசெய்யப்பட்டு, குடும்பப் பொறுப்புக்களுக்கு தங்களது நேரத்தை அடமானம் வைத்துவிடுகிறார்கள். இதனால், இப்படிப்பட்டோர் கர்த்தருக்கென்று ஊழியம்செய்யவும், அவர்பேரில் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தவும் நடைமுறையில் இருக்கின்ற ஒரே வாய்ப்பு, தங்களது நன்கொடைகளை அவர் நிமித்தமாகவும், அவரது ஜனங்களுக்கும் அளிப்பதே ஆகும். இந்த வகையில், கர்த்தருடைய ஊழியத்திற்கு தங்களை பயிற்றுவிக்கும் இந்த வாய்ப்பு இழக்கப்படுமானால், அதாவது அவர்களுடைய உதவி தேவையாய் இருக்கும்போது உதவுவதில் குறைவுபடுவதன்மூலமாகவோ, அல்லது தெய்வீக ஊழியத்தின் இந்த வழிமுறையைப் பற்றிய சரியான அறிவுரையை பெறுவதில் குறைவுபடுவதன்மூலமாகவோ இழப்பு ஏற்படும்போது, ஊழியத்தின் மிக முக்கியமான வாய்ப்பை அவர்கள் இழக்க நேரிடுவதோடு, இதனிமித்தமாக இனி கர்த்தருக்கு செய்யும் ஒவ்வொரு ஊழியத்திலும் ஆசீர்வாதங்களை இழக்கநேரிடும்.

## தயாளகுணம் – அன்பின் ஒரு அறிகுறி



ஆகையால் நாம் கவனிக்கும்போது, அப்போஸ்தலர் மிகவும் தாராள உணர்வோடு கொடுத்தலின் கிருபையைப்பற்றி சபைகளுக்கு சிபாரிசு செய்வதோடு, உண்மையாகவே தங்கள் தாராளகுணம், தங்கள் சக்திக்கு ஏற்றவாறு பெரிதான அளவில் இருந்தால் அது கர்த்தருக்கும் சுவிசேஷத்திற்குமான அவர்களின் அன்பின் அளவுகுறியாக இருக்கிறது என்று வலியுறுத்துகிறார். ஆனால் நாம் இங்குள்ள முரண்பாட்டை கவனிக்கும்போது, உண்மையாகவே அப்போஸ்தலர், விசுவாசிகள் கர்த்தருடைய கிருபையைப் பெற்ற துவக்கத்திலேயே அவர்களின் மனதில் ஏதோ கீழ்த்தரமான ஆதாயத்தின்பொருட்டு.. வெட்கக்கேடான இலாப நோக்கத்திற்காக சுவிசேஷம் போதிக்கப்படுகிறதா என்ற எண்ணம் எந்த வகையிலும் அவர்கள் மனதில் பதிந்துவிடக்கூடாது என்பதற்காக அப்படிப்பட்ட விசுவாசிகளிடமிருந்து எந்த நன்கொடைகளையும் கேட்கவில்லை. அப்போஸ்தலர் அதே கொரிந்தியர்களுக்கு ஒரு வருடத்திற்கும் மேலாக பிரசங்கித்திருந்தாலும், அவர் வெகுமதி என்ற ஆலோசனையைகூட முன்வைக்காமலேயே அவர்களுக்கு போதித்துவந்ததை நாம் காண்கிறோம். யாரிடத்திலும் கட்டணம் கோருவதற்கு பதிலாக தன் சொந்த கையினால் தன் கைத்தொழிலான கூடாரம் அமைத்தல் மூலம் உழைத்து சம்பாதித்தார் என்று காண்கிறோம்– 2கொரி11:7–9.

கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் சத்தியத்தின் மதிப்பை சரியாக உணர்ந்துகொண்டதினால் உண்டான மாற்றத்தை நாம் கவனிக்கவேண்டும். முதலில் அவர்கள், அப்போஸ்தலர் தன் சொந்த கைகளால் உழைத்து சம்பாதித்ததின் மூலமாகவும், மற்ற பகுதிகளிலிருந்த விசுவாசிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட உதவிகள் மூலமாகவும் அவர்களுக்கு ஊழியம் செய்தபோது, அவர்கள் தானாக முன்வந்து அவருக்கு பொருளாதார உதவிகள் செய்யவேண்டும் என்பதற்கு ஒத்த கருத்து இல்லாதவர்களாக காணப்பட்டு, தங்களுக்கு கிடைத்த சிலாக்கியத்தின்மீது மிகுந்த அஜாக்கிரதையுள்ளவர்களாக இருந்தனர். ஆனால் தேவனுடைய கிருபை அவர்களுடைய இருதயங்களுக்குள் மேலும் முழுமையாக சென்றடைந்தபிறகு, அவர்கள் பெற்றுக்கொண்ட சத்தியத்தின் மதிப்பை சரியாக உணர்ந்துகொள்ளவும், அது நம்பிக்கையின் விலைமதிக்கமுடியாத ஆசீர்வாதங்களையும், சந்தோஷத்தையும் விசுவாசத்தையும் குணலட்சணங்களையும் கொண்டுவந்திருப்பதை உணர்ந்துகொள்ளவும் துவங்கினர்.

அதன்பிறகு அப்போஸ்தலர் அவர்களிடத்தில் இல்லாதபோது, 'அவர் தேடியது அவர்களுடைய பணத்தை அல்ல, அவர்களையே' என்று அவருடைய நடத்தை அவர்களுக்கு நிரூபித்துக் காண்பித்தது. கர்த்தர் நிமித்தமாக தாராளகுணமுடையவர்களாக அவர்கள் இருப்பதன்மூலமாக, அவர்கள் பெற்றுள்ள திறமை மற்றும் அன்புக்கு சரிநிகராக பெறக்கூடிய பயனாகிய மாபெரும் ஆசீர்வாதத்தின் பொருட்டு, அவர்களுக்கு நன்மை செய்வதற்காகவே கபடற்ற உணர்வுடன் அவர்களுடைய கவனத்தை இழுத்தார் எனவும் நிரூபித்தது. இந்த விஷயத்தை பதியவைக்க ஒரு உவமையை கூறுகையில், "சிறுக விதைக்கிறவன் சிறுகஅறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" என்கிறார். இது நமக்கு,"வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர்

பாய்ச்சப்படும்''(நீதி11:24,25) என்ற நீதிமொழியை நினைப்பூட்டுகிறது. இங்கு நமக்கு கர்த்தர் தம்முடைய ஜனங்கள் இருதயத்திலும் சிந்தனையிலும் பரந்த தன்மையினை பெற்று விருத்தியடைவதைப் பார்ப்பதில் அவர் பிரியமாயிருக்கிறார் என்பதும் .. அவர்களுடைய தயாளகுணம், அவரைப்பற்றி அறிகிற அறிவுக்கு சரிசமமாக வளரவேண்டும் என்பதும் தெளிவான பாடமாயிருக்கிறது.

### நம்முடைய கொடைகள் பற்றி நம் கர்த்தரின் மதிப்பீடு

தேவனுடைய ஜனங்கள் மத்தியில் இருந்த ஏழ்மை நிலைகள், அவர்களுடைய கடந்தகால வாழ்க்கையில் தாங்கள் உடைமைகளை பெற்றிருந்த சமயத்தில், அதன் ஒரு பகுதியை கர்த்தருடைய ஊழியத்திற்கும், மற்றவர்களுக்கு தானதர்மம் செய்வதிலும் தவறியதால் வந்தவை என்று வேதவசனங்களில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் மேலே கூறப்பட்ட வசனம், இந்தப் பாடத்துடன் மிக நெருக்கமாக இசைந்துவருகிறது. இந்த ஒரு சாட்சியை நம்முடைய இருதயத்தில் வைத்து, வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளிலும் தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் கர்த்தரால் அனுதினமும் பெற்றுவருகிற ஆசீர்வாதங்களிலிருந்து ஜாக்கிரதையுடனும், ஜெபத்துடனும், கவனத்துடனும், ஒரு குறிப்பிட்ட அளவு அவர் நமக்கு அளிக்கும் ஞானம் மற்றும் நிதானிப்பின்படி கர்த்தருடைய ஊழியத்தில் விதைப்பின் வேலைக்காக தனியே ஒதுக்கிவைத்தால் நன்மை தரும்.

எத்தனைபேர் தங்களைக்குறித்து இத்தகைய விழிப்புணர்வு கொண்டுள்ளனர், ஒவ்வொரு சிறு பணமும் அது வந்த வேகத்தில் அதை பயன்படுத்துவதிலோ அல்லது தாங்கள் முடிவுசெய்த எதிர்கால திட்டங்களுக்காக சேமித்துவைப்பதில் மிகுந்த விருப்பமுள்ளவர்களாகவோ இருந்து, தாங்கள் தானதர்மம் கொடுப்பதற்கு எதையும் எடுத்துவைக்கவில்லை என்று உணர்கிறார்கள். அவ்வாறு செய்தது ஒரு மாபெரும் தவறு என்று பின்னர் திரும்பிப்பார்க்க முடிகிறது! தங்கள் சேமிப்புகள் உடல்நல குறைவின் மூலமோ அல்லது விபத்தின் மூலமோ அல்லது வங்கி திவாலானதின் மூலமோ அல்லது வேறு எதனாலோ அது திடீரென இல்லாமல்போகும்போது, அப்போஸ்தலர் 2கொரிந்9:6இல் கூறியுள்ள, தாங்கள் எந்த விதையையும் விதைக்கவில்லை என்று வருந்துவதற்கு ஒரு நல்ல காரணம் உண்டாகியிருக்கும்.

நம்முடைய ஆண்டவர் நம்மிடமுள்ள கொடைகளை அதன் பணத்தொகையை சார்ந்து மதிப்பிடுவதில்லை. அதற்கு மாறாக, அந்த வெகுமதியை அளிக்கத்தூண்டிய ஆவியையே பிரதானமாக மதிப்பிடுகிறார் என்பதை, தேவாலயத்து உண்டியலில் இரண்டு காசு போட்ட விதவையை நோக்கி தன் கவனத்தை செலுத்தியதன்மூலம் நமக்கு காண்பிக்கிறார்(லூக்21:1–4). கர்த்தருடைய மதிப்பீட்டின்படி தங்களுடைய மிகுதியானவைகளிலிருந்து கொடுத்த செல்வந்தர்களைவிட இந்த ஏழை விதவை பெருந்தொகையை கொடுத்தாள். இன்று தேவனுடைய ஜனங்களில் எத்தனைபேர் இந்த தாலந்தை, ஊழியம்செய்வதற்கான வாய்ப்பாக பயன்படுத்துவதில் தங்கள் கவனத்தைத் தந்து, ஆவிக்குரியவகையில் மிகுந்த வைராக்கியமாக இருக்கிறார்கள் என்று நம்மால் கூறமுடியாது! அதை தேவன் மட்டுமே அறிவார். ஆனால் இந்த பாடம் இன்று நம்மேல் உள்ள கடமையை வலியுறுத்தி, நமக்கு மிகவும் ஏழ்மையான தேவனுடைய ஜனங்களும் இவ்வழியில் தங்களுடைய சிலாக்கியங்களை அறிந்துணரச்செய்துள்ளது.

### கர்த்தருக்கான ஸ்தோத்திர பலி

அளவுக்கு அதிகமாக கொடுக்கும் ஜனங்களுக்கு எதிரான எச்சரிக்கை அடிக்கடி தேவைப்படுவதில்லை. எனினும் அத்தகைய எச்சரிப்பு சில சம்பவங்களில் தேவையாக இருக்கும், கொடுத்தலானது வேதாகமத்தில் உள்ள சில சம்பவங்களில் கட்டுப்படுத்தப்படும். ஒருவரும் தங்களை சார்ந்தவர்களுக்கு ஏழ்மைநிலை ஏற்படும் அளவிற்கு கொடுக்கக்கூடாது. யாரும் தனக்குத்தானே பொருளாதாரத்தில் திவாலாகும்படியும், இதனால் மற்றவர்கள் நஷ்டம் அடையும்படியும் கொடுக்கக்கூடாது.

கொடுத்தலுக்கான அப்போஸ்தலரின் விதியை நாம் ஏற்கனவே மேற்கோள் காட்டியுள்ளோம். கர்த்தர் எந்தளவு அவனை வலிமையுற செய்திருக்கிறாரோ, அதன்படியே வாரத்தின் முதல்நாளில் காணிக்கையளித்தல் இருக்கவேண்டும்.நம் தானதர்மத்தின் அளவானது, நமது வளமையின் தரத்தின் அளவுக்கேற்ப இருக்கவேண்டும். இதன் அடிப்படையிலேயே வேதாகமத்தின் ஒவ்வொரு பாடமும் இருக்கிறது. தெளிந்தபுத்தியும் பலமுள்ள ஆவியை ஆழ பதியவைக்கிறது.

“உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்''. உற்சாகமான ஆவியைத்தவிர வேறு எந்த முறையிலும் வெகுமதிகளை வாரியிறைப்பதுபோல குவித்தாலும் அது கொடுத்தல் ஆகாது; அவைகள் எந்த ஆசீரையும் கொடுக்காது. கர்த்தர் அப்படி கொடுப்பவர்களை ஒருபோதும் பாராட்டுவதில்லை. அவருடைய மதிப்பீட்டின்படி, அது எவ்வித சுகந்த வாசனையையும் பெற்றிருப்பதில்லை. கர்த்தரால் பாராட்டும்படியாக இருக்க நம்முடைய அன்பளிப்பு ஒரு நன்றிபலியாக இருக்கவேண்டும். ஒவ்வொரு நன்மையான ஈவும் மற்றும் பூரணமான வரமும் யாரிடத்திலிருந்து வருகிறதோ அவருக்கு எப்போதும் நன்றியுடையவர்களாக இருத்தல் என்று உணர்தல் நம்முடைய கடனாக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு “தேவன் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்'' என்று அப்போஸ்தலர் உறுதியளிக்கிறார். யார் ஒருவர் தேவ ஊழியத்தில் நேரம், திறமை, பெலன், பணம் மற்றும் செல்வாக்கு.. இவைகளில்

எதையாகிலும் கொடுத்தால், அதற்கு சரிவிகித அளவாய் வெவ்வேறான கிருபைகளில் பெருகுவதை அவர்களே காணமுடியும். அப்படிப்பட்டோர் – கிருபையில் வளர்வதற்கான முறையான இருதயத்தைப் பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் "எல்லாவற்றிலும் எப்போதும் சம்பூரணமுடையவர்களாயும்", மேலும் "சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாகவும்" இருப்பார்கள் என்பதை அப்போஸ்தலர் குறிப்பாக சுட்டிக்காட்டுவதாகத் தோன்றுகிறது. சம்பூரணமாய் என்பது ஆடம்பரமாக , எல்லாவற்றிலும் போதுமானவர்களாக இருத்தல் என்று அர்த்தமல்ல, மாறாக எங்கு "போதுமென்கிற மனதுடன் கூடிய தேவபக்தி" இருக்கிறதோ அங்கு "எல்லாவற்றிலும் சம்பூரணத்தை" எப்போதும் பெறமுடியும்.

செயல் விளக்கத்தில் அப்போஸ்தலர், தங்களுக்கு வரும் ஆசீர்வாதங்கள் அது இம்மைக்குரியதோ அல்லது ஆவிக்குரியதோ, அதன் ஒருபங்கை மற்றவர்களுக்கு தெளிக்க நாடுகிறவர்கள் மீதான தேவனுடைய கவனம் குறித்து பராமரிப்பு குறித்து புதிய கொள்கை எதையும் மனதில் பதியவைக்கவில்லை. அவர் சங்கீதம் 112:9இல் இருந்தே மேற்கோள் காட்டியுள்ளார்.

வசனம் 11ல் அப்போஸ்தலர் கூறுகையில், "நீங்கள் எவ்விதத்திலும் சம்பூரணமுள்ளவர்களாவீர்கள்" என்கிறார். தேவனுடைய ஜனங்கள் பொருளாதாரத்தில் செல்வச்செழிப்போடு இருப்பார்கள் என்று தவறாக அவர் கூறியதை புரிந்துகொள்ளக்கூடாது. தேவனுடைய ஜனங்கள் செல்வசெழிப்பை அடையமுடியாது என்ற உண்மைக்கு அப்.பவுலே ஒரு உதாரணமாக இருக்கிறார். இங்கு அவர் இருதயத்தின் செழுமையைக்குறித்து பேசுகிறார். வேறொரு இடத்தில் தன்னைப்பற்றியும் சுவிசேஷஊழியத்தில் தன் உடன் வேலையாட்கள் பற்றியும் பேசும்போது, "தரித்திரர் எனப்பட்டாலும் அநேகரை ஐஸ்வரியவான்களாக்கு–கிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களெனப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்(2கொரி6:10) என்று கூறுகிறார். இந்த விசுவாசமுள்ள தேவனுடைய ஊழியக்காரர்கள் அநேகரை நம்பிக்கையிலும், விசுவாசத்திலும், அன்பிலும் மற்றும் இந்த குணங்கள் சுட்டிக்காண்பிக்கிற ஒருங்கிணைந்த பல்வேறு கிருபைகளிலும் ஐஸ்வரியவான்களாக்குகிறார்கள்.

நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிறர் நலனுக்காக தன்னைத்தான் வெறுத்தலுக்கு மிகப்பெரிய உதாரணமாக இருக்கிறார். அவர் ஆவிக்குரிய சுபாவத்தின் மகிமை மற்றும் கனத்தை உடைமையாக பெற்றிருந்து ஐஸ்வரியவானாக இருந்தார். ஆயினும் நம் நிமித்தமாக அவர் தரித்திரரானார். மனுக்குலத்தை மீட்கும் நோக்கத்திற்காக மனிதசுபாவம் எடுத்தார். இந்த இலக்குக்காக கல்வாரியில் தன் ஜீவனை ஒப்புக்கொடுத்தார். அவருடைய தியாகத்தின்மூலம் நாம் ஐஸ்வரியவான்களாகிறோம். கிறிஸ்துவுக்குள் தெய்வீக தயவையும் தெய்வீக கிருபையின் ஐஸ்வரியங்களையும் பெற்றிருக்கிறோம். ஆனால் தேவனுடைய மாட்சிமையின் வலதுபாரிசத்திலிருக்கிற, மேன்மைப்படுத்தப்பட்ட நம் கர்த்தரோடு இணையான உடன்சுதந்திரர் என்பதை அடைய, அவரைப்போல் இருக்க கற்கவேண்டும். அவருடைய ஆவியை பெறவேண்டுமானால், அவர் என்னவெல்லாம் நமக்குக் கொடுக்கிறாரோ அது இம்மைக்குரிய சலுகையோ அல்லது ஆவிக்குரிய சலுகையோ அவைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொடுக்கவேண்டும். அது மற்றவர்களுக்கு(அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு) சந்தர்ப்பசூழ்நிலை நம்மை தூண்டுவதற்கேற்ப இம்மைக்குரிய வகையிலோ அல்லது ஆவிக்குரிய விதத்திலோ உணவூட்டவும், உடுத்துவிக்கவும் வேண்டும்.

"தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" அந்த ஈவு நம்முடைய இரட்சகரும் மீட்பருமேயாவார் (யோவா3:16). இதன்படி நம்மிடத்தில் காண்பிக்கப்பட்ட தெய்வீக கிருபையின் ஐஸ்வரியங்களையும் நமது கர்த்தர்மூலமாக வந்த எண்ணிமுடியாத ஆசீர்வாதங்களையும் இரக்கங்களையும் கூற நம்மால் முடியாது. நம்முடைய நித்திய நன்மைக்காக தெய்வீக ஏற்பாட்டின் முழுமையாகவே அவர் இருக்கிறார். அப்போஸ்தலர் எங்கும் கூறுவதுபோல."தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ2:9)என்கிறார். அவருடைய சொல்லிமுடியாத ஈவுக்காக சபை மாத்திரம் இந்நேரம்வரை நன்றிகளை தெரிவிக்கமுடியும். பிறகு படிப்படியாக, இந்த முழு உலக மனுக்குலமும் அந்த ஈவை கண்டுணரும்நிலையை அடைந்து, அதற்காக நன்றிகளை ஏறெடுப்பர். மேசியாவின் ஆளுகையின்முடிவில், ஆதாமின் சந்ததி முன்பிருந்தநிலைக்கு தங்கள் மெய்யான பரிபூரணத்திற்கு திரும்பும்போது, மனப்பூர்வமாக பாவம் செய்பவர்கள் அழிக்கப்பட்டிருப்பார்கள். பிறகு"முழங்கால் யாவும் அவருக்குமுன்பாக முடங்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்". பிறகு, வானத்திலும் பூமியிலும் சமுத்திரத்திலும் உள்ள சிருஷ்டிகள் யாவும் கேட்கும்படி, அவருடைய சொல்லிமுடியாத ஈவுக்காக,"சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் மகிமையும் கனமும், அதிகாரமும், வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக" என்று உரைக்கப்படும்.

-------------------

R 5928

# பரிந்துபேசுபவர் மற்றும் மத்தியஸ்தர் பணிகளுக்கிடையே உள்ள வேறுபாடு

## OFFICE OF ADVOCATE AND MEDIATOR CONTRASTED

திருச்சபை "தேவனுடைய இரகசியம்" என்பது உண்மையே. கிறிஸ்துவும் சபையும் பிரிந்திருக்கிறதும், ஒவ்வொரு பொருளிலும் உலகிலிருந்து தனித்தன்மை பெற்றவைகளுமாய் உள்ளன. இவர்கள் பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களும் அல்ல; புதிய உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டவர்களும் அல்ல, மாறாக ஒரு விசேஷித்த ஜனங்களாக அழைக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்டு வளர்ச்சியடைந்து, ஒரு விசேஷித்த உடன்படிக்கையின்கீழ் தங்களை உட்படுத்தியிருக்கின்றனர். இதில் உலகின் ஜனங்கள் ஒருபோதும் பங்கேற்கமுடியாது. இதையே வேதாகமம் பலியின் உடன்படிக்கை என்று வேறுபடுத்தி காண்பிக்கிறது.

"பலியினால் என்னோடுகூட உடன்படிக்கை பண்ணின என் பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" என்று கர்த்தர் கூறுகிறார். (சங்50:5). இந்த பரிசுத்தவான்களான விசேஷித்த வகுப்பார், கர்த்தராகிய இயேசுவை தங்களது தலையாக பெற்றிருந்து, பலியின் உடன்படிக்கை செய்துள்ளனர். இந்த கூட்டத்தார் தங்கள் பலியின்உடன்படிக்கையை நிறைவுசெய்யும்போது, இந்த யுகத்தின் முடிவுவேளை வந்திருக்கும். இஸ்ரயேலருக்கு மோசே மூலம்கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கை, மோசேக்கு நிஜமாயுள்ள கிறிஸ்துமூலம் உலகிற்கு அளிக்கப்படவிருக்கிறது. ஆனால் மற்றொருவகையில் கூறுவோமானால், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தர் ஒருவரே. ஆனால் ஆயிரவருட அரசாட்சியின் புதிய பிரமாண உடன்படிக்கையின் மத்தியஸ்தரோ, ஒரு புது மனிதனாக இருக்கிறார். இதில் இயேசுகிறிஸ்துவை தலையாகக்கொண்டும், யூதர்களிலிருந்தும் புறஜாதிகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்படும் அவரது அங்கங்கள் சரீரமாயும் இருப்பர் என்று அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறார்.

இயேசுவின் காலத்திலிருந்து துவக்கி, புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர் தெரிந்தெடுக்கும் செயல்முறையை செய்துவருகிறார். "மேன்மையான பலிகளே" புதிய உடன்படிக்கையின் அடிப்படையாய் இருந்து, பலிகொடுத்தல் நடைபெற்றுவருகிறது. இந்த சுவிசேஷயுகத்தின்போது, இயேசு உலகிற்காக மத்தியஸ்தர் பணியை துவங்கவோ செய்யவோ இல்லை. உலகமும் தேவனோடு எந்த உறவும் வைத்திருக்கவில்லை. அது தீமைக்குள் படுத்து உறங்குகிறது. மத்தியஸ்தர்தாமே வளர்ச்சியடையும் செய்முறையில் இருந்துவருகிறார். அப்போஸ்தலர் அறிக்கையிடுவதுபோல், தேவன் இயேசுவை முதலாவது உயிரோடெழுப்பி, அதுமுதற்கொண்டு, சபையாரை உயிர்த்தெழுப்பிவருகிறார். வெகுவிரைவில் இவர்களது உயர்த்தெழுதல் முடிவடையும். அப்3:22,23இல் பரிசுத்த பேதுரு, இந்த மத்தியஸ்தர் அல்லது தீர்க்கதரிசியைக் குறித்தே பேசினார் (மேலும் 1தீமோ2:5,6ஐயும் பார்க்கவும்). "அநேக அங்கங்களுக்கு" மத்தியஸ்தராக இருந்து, அவர்களை ஊழியத்துக்கு தகுதிப்படுத்தும்வரை, மற்றவர்களுக்கு மத்தியஸ்தராக இருப்பதில்லை. பலியின் உடன்படிக்கையின்படி பலிசெலுத்துபவரே அவர் வைத்திருக்கும் தகுதியை அடைகிறார். இயேசு ஒரு குழந்தையாக இருந்தபோது, இராஜாவும் இரட்சகருமாக வருங்காலத்தில் விளங்குவார் என்று நம்பப்பட்டு பேசப்பட்டதுபோன்ற உணர்விலேயே, தலையும் சரீரமுமாகிய கிறிஸ்து உலகிற்கு மத்தியஸ்தராக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் தற்போது இராஜாவாக மட்டுமே இருந்து, அவரது ஜனங்களில் சிலரை மட்டுமே இரட்சித்திருக்கிறார்.

மத்தியஸ்தரது பணிக்கும், பரிந்துபேசுபவருடைய பணிக்குமிடையே பெரிய அளவில் வேறுபட்ட தனித்தன்மைகள் உள்ளன. தேவனுக்கும் மனுஷனுக்குமிடையே மாபெரும் மத்தியஸ்தராகிய மகிமையடைந்த கிறிஸ்து(சரீரத்துடன் சேர்த்து) ஆயிரமாண்டுகள் மத்தியஸ்தரது பணியைசெய்து, அந்த ஆயிரவருடமுடிவில் அதை நிறைவேற்றிமுடிப்பார். தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக கொண்டுவரப்பட்டவர்கள் அனைவரையும், முழுமையாக சீர்பொருந்தச்செய்து, அவர்களை பிதாவிடம் அவர் ஒப்படைப்பார். பரிந்துபேசுபவரது பணி வேறுபட்டதாயுள்ளது. இந்த யுகத்தின்போது, சபையினிமித்தமாக இயேசு பரிந்துபேசும்பணியை மட்டும் செய்துவருவதாக வேதாகமம் கூறுகிறது. வருங்காலத்தில் சபைக்கு பரிந்துபேசுதல் அவசியமிராது. உலகிற்கு தற்போது பரிந்துபேசுதல் கொடுக்கப்படுவதில்லை. "நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுபவராயிருக்கிறார்".

சபையாகிய அவரது சரீர அங்கங்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் பரிந்துபேசுபவராக இயேசு இருக்கிறார். அவர் முதலாவதாக, தம் ஈடுபலியின் புண்ணியங்களை நமக்கு அருளிச்செய்து, நமது நிமித்தமாக அவர் பரிந்துபேசுகிறார். இவ்வாறாக, பிதாவின் பிரசன்னத்திற்கு முன்பாக, நம்மை ஒப்புவிக்கசெய்து, தேவபுத்திரர்களாக ஏற்றுக்கொள்ளச் செய்கிறார். இந்த பரிந்துபேசுதலின் காரணமாக, நாம் பரிசுத்தஆவியைப் பெற்று, கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளாகிறோம். நாம் புதுசிருஷ்டிகள் நிலைக்கு முன்னேறினாலும், நம்மால் செய்யமுடிந்தவற்றை பூரணமாக

செய்வதற்கு நம்மால் கூடாததாகையால், இன்னும் தொடர்ந்து நமக்கு பரிந்துபேசுதல் தேவை. புதுசிருஷ்டிகளாக மாம்சத்தில் அபூரணத்தைப் பெற்றிருக்கிற நம்மை முழுமையாக அடக்கி ஆளமுடியாது. ஆதலால், கிருபாசனமும், ஒரு பரிந்துபேசுபவரும் நமக்கு தேவையாயுள்ளது. இவர்மூலமே பிதாவுடனான நமது தற்கால உறவை காத்துக்கொள்ளமுடியும், உலகத்தோடுகூட ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படாதிருக்கமுடியும்.

------------------

R 5929

## உங்களுக்குள் நிலவும் சமாதானம்

## AT PEACE AMONGST YOURSELVES

“வைரத்தைக்கொண்டே மற்றொரு வைரத்தை அறுக்கமுடியும்” என்ற பழமொழியை நாம் எல்லாரும் கேள்விப்பட்டிருப்போம். எல்லா சம்பத்துக்களும் மிக கடினமானதும் மிக தூய்மையாயுமுள்ளன. இவைகளது மதிப்பை அதனதன் கடினத்தன்மையே அதிகரிக்கிறது. கர்த்தரது ஜனங்கள் எல்லோரும் சம்பத்துக்களாக உள்ளனர். கர்த்தருடைய கிருபையால் அவர்கள் தூய்மையாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், தெளிந்த குணாதிசயங்களை பெறுகிறார்கள். இதுவே நிஜமாக இருந்து, முன்னர் நாம் குறிப்பிட்டதுபோல், குறைந்த கடினத்தன்மையுள்ள பொருட்கள் ஒன்றிணைவதைக் காட்டிலும், இவைகள் ஒன்றுசேரும்போது, வெட்டப்படுதலும், உராய்தலின் அபாயங்களும் அதிகரிக்கும். களிமண்ணும் மெல்லிய பசைக்கலவையும் எந்தப் பொருளையும் அறுக்காது. மெல்லிய பசை போன்ற குணாதிசயத்தை வெளிப்படுத்தாது.

இதை நினைவில்கொண்டு, கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் மிகவும் இரக்கமுடையோராயும், ஒருவரையொருவர் அதிக உற்சாகப்படுத்துவோராயும் இருக்கவேண்டும். கர்த்தரைப்போலவே நேர்மறையான குணாதிசயம், பலமுள்ள குணாதிசயம், நிலையான நோக்கம் ஆகியவற்றை பெற்றிருந்து சிலவேளைகளில் இந்த குணாதிசயத் தன்மைகள் சில துன்பங்களை வருவித்தாலும், பிறரை உற்சாகப்படுத்த கற்கவேண்டும்.

**கர்த்தரின் பிள்ளைகள் சண்டையை வளர்ப்போரல்ல :–**

கர்த்தருடைய ஜனங்கள் சமாதானம் செய்வோராக இருக்கவேண்டும். சண்டையை வளர்ப்போராக அல்ல என்று நம் போதகரால் விசேஷமாக தடைஆணை பெற்றுள்ளோம். உபத்திரவத்தைத் தூண்டிவிடுவதற்கு சிறப்பாற்றல் எதுவும் தேவையில்லை. சண்டை சச்சரவைத் தடுப்பதற்கும், ஒருவேளை சிறந்த நோக்கங்கள் நிலவினால் கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் சாந்தகுணம், தயாளகுணம், பொறுமை மற்றும் பரிசுத்தஆவியின் மற்ற தன்மைகள் போதுமான அளவு தேவைப்படுகிறது. விரோதியானவன் நம்மை சமாதானத்தின் பாதைகளிலிருந்து வழிவிக்க சோதிக்காதபடிக்கு எந்தளவு நாமனைவரும் விழிப்பாய் காத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது!

நமக்கும் மற்றவர்களுக்குமிடையேயான வேறுபாடு கொள்கையின் அடிப்படையிலானதா என்று நாம் சரியாக நிதானிப்பதற்கு, பரத்திலிருந்து வருகிற ஞானமும், அனுபவமும் போதுமானஅளவு தேவையாயிருக்கிறது. சில அடிப்படை சத்தியங்களை குழப்பங்களுக்கு உட்படுத்தும்போதும், அல்லது கொள்கைகளின் அடிப்படையில் இல்லாமல் எழும் அபிப்பிராயங்களாகவோ, இரண்டில் ஒன்றை தெரிவுசெய்வது பற்றியோ கேள்வி எழும்போதும் பரலோகத்தின் ஞானமும் அனுபவமும் தேவையாயிருக்கிறது. மேற்கண்டவற்றுள், இரண்டாவதாக சொல்லப்பட்ட விஷயத்தில், சமாதானத்தின் நிமித்தமாக, நாம் நம்மை மனப்பூர்வமாக நடைமுறை செயல்பாடுக்கு ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். ஆனால் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சனை எழும்போது, இந்த முறையை செயல்படுத்தக்கூடாது. என்னதான் நமக்குமுன்பாக வஞ்சனை அடிக்கடி முன்வைக்கப்பட்டபோதிலும், சத்தியக்கோட்பாடுகளும் நீதியுமே நம் விருப்பங்களாக இருக்கவேண்டும். இது தவறு என்று அனுபவத்தால் நாம் கற்றுக்கொண்டு, அப்படிப்பட்ட ஒவ்வொரு ஆலோசனையும் தீர்க்கமாக ஆராயப்படவேண்டும். நமது சொந்த கருத்துக்கும் தெய்வீக ஏற்பாட்டின்படியான போதனைகள் மற்றும் கொள்கைகள் உள்ளடங்கிய அந்த கேள்விகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்ள உதவும்படி கர்த்தருடைய ஞானத்தைக் கேட்கவேண்டும்.

# உங்களுக்குள் நிலவும் சமாதானம்

## AT PEACE AMONGST YOURSELVES

“வைரத்தைக்கொண்டே மற்றொரு வைரத்தை அறுக்கமுடியும்” என்ற பழமொழியை நாம் எல்லாரும் கேள்விப்பட்டிருப்போம். எல்லா சம்பத்துக்களும் மிக கடினமானதும் மிக தூய்மையாயுமுள்ளன. இவைகளது மதிப்பை அதனதன் கடினத்தன்மையே அதிகரிக்கிறது. கர்த்தரது ஜனங்கள் எல்லோரும் சம்பத்துக்களாக உள்ளனர். கர்த்தருடைய கிருபையால் அவர்கள் தூய்மையாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், தெளிந்த குணாதிசயங்களை பெறுகிறார்கள். இதுவே நிஜமாக இருந்து, முன்னர் நாம் குறிப்பிட்டதுபோல், குறைந்த கடினத்தன்மையுள்ள பொருட்கள் ஒன்றிணைவதைக் காட்டிலும், இவைகள் ஒன்றுசேரும்போது, வெட்டப்படுதலும், உராய்தலின் அபாயங்களும் அதிகரிக்கும். களிமண்ணும் மெல்லிய பசைக்கலவையும் எந்தப் பொருளையும் அறுக்காது. மெல்லிய பசை போன்ற குணாதிசயத்தை வெளிப்படுத்தாது.

இதை நினைவில்கொண்டு, கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் மிகவும் இரக்கமுடையோராயும், ஒருவரையொருவர் அதிக உற்சாகப்படுத்துவோராயும் இருக்கவேண்டும். கர்த்தரைப்போலவே நேர்மறையான குணாதிசயம், பலமுள்ள குணாதிசயம், நிலையான நோக்கம் ஆகியவற்றை பெற்றிருந்து சிலவேளைகளில் இந்த குணாதிசயத் தன்மைகள் சில துன்பங்களை வருவித்தாலும், பிறரை உற்சாகப்படுத்த கற்கவேண்டும்.

### கர்த்தரின் பிள்ளைகள் சண்டையை வளர்ப்போரல்ல:-

கர்த்தருடைய ஜனங்கள் சமாதானம் செய்வோராக இருக்கவேண்டும். சண்டையை வளர்ப்போராக அல்ல என்று நம் போதகரால் விசேஷமாக தடைஆணை பெற்றுள்ளோம். உபத்திரவத்தைத் தூண்டிவிடுவதற்கு சிறப்பாற்றல் எதுவும் தேவையில்லை. சண்டை சச்சரவைத் தடுப்பதற்கும், ஒருவேளை சிறந்த நோக்கங்கள் நிலவினால் கர்த்தருடைய பிள்ளைகள் மத்தியில் சாந்தகுணம், தயாளகுணம், பொறுமை மற்றும் பரிசுத்தஆவியின் மற்ற தன்மைகள் போதுமான அளவு தேவைப்படுகிறது. விரோதியானவன் நம்மை சமாதானத்தின் பாதைகளிலிருந்து வழிவிக்க சோதிக்காதபடிக்கு எந்தளவு நாமனைவரும் விழிப்பாய் காத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது!

நமக்கும் மற்றவர்களுக்குமிடையேயான வேறுபாடு கொள்கையின் அடிப்படையிலானதா என்று நாம் சரியாக நிதானிப்பதற்கு, பரத்திலிருந்து வருகிற ஞானமும், அனுபவமும் போதுமானஅளவு தேவையாயிருக்கிறது. சில அடிப்படை சத்தியங்களை குழப்பங்களுக்கு உட்படுத்தும்போதும், அல்லது கொள்கைகளின் அடிப்படையில் இல்லாமல் எழும் அபிப்பிராயங்களாகவோ, இரண்டில் ஒன்றை தெரிவுசெய்வது பற்றியோ கேள்வி எழும்போதும் பரலோகத்தின் ஞானமும் அனுபவமும் தேவையாயிருக்கிறது. மேற்கண்டவற்றுள், இரண்டாவதாக சொல்லப்பட்ட விஷயத்தில், சமாதானத்தின் நிமித்தமாக, நாம் நம்மை மனப்பூர்வமாக நடைமுறை செயல்பாடுக்கு ஒப்புக்கொடுத்துவிடவேண்டும். ஆனால் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்சனை எழும்போது, இந்த முறையை செயல்படுத்தக்கூடாது. என்னதான் நமக்குமுன்பாக வஞ்சனை அடிக்கடி முன்வைக்கப்பட்டபோதிலும், சத்தியக்கோட்பாடுகளும் நீதியுமே நம் விருப்பங்களாக இருக்கவேண்டும். இது தவறு என்று அனுபவத்தால் நாம் கற்றுக்கொண்டு, அப்படிப்பட்ட ஒவ்வொரு ஆலோசனையும் தீர்க்கமாக ஆராயப்படவேண்டும். நமது சொந்த கருத்துக்கும் தெய்வீக ஏற்பாட்டின்படியான போதனைகள் மற்றும் கொள்கைகள் உள்ளடங்கிய அந்த கேள்விகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்ள உதவும்படி கர்த்தருடைய ஞானத்தைக் கேட்கவேண்டும்.

சபையின் ஒவ்வொரு அங்கமும் பரிசுத்தஆவியின் கனிகளை உற்பத்திசெய்ய ஊக்கத்தோடு போராடவேண்டும். இவ்வாறு இந்த தன்மைகள் நம்முள் மேம்பாடுஅடைய இந்த ஆவியின் குணாதிசயங்களை நினைவுகூர்ந்து, அதை நம்முள் பயிற்சிசெய்து, பிறகு பரிசுத்தஆவியின் ஆதிக்கத்தை நம் இருதயங்களிலும் ஜீவியத்திலும் செயல்பட செய்து வெளிப்படுத்தி, இதன்மூலம் மற்றவர்களுக்கு முன்மாதிரிகையாக நம்மை நிறுத்தவும் வேண்டும்.

### அடிக்கடி நிகழ்கின்ற தவறுகள் :–

நமது நிதானிப்பை பயிற்சிசெய்து, அதன்மேல் நாம் செயல்படுவதோடு நம் பொறுப்புணர்வு முடிவடைகிறது என்பதை மறந்தவர்களாக, முழு பொறுப்புணர்வின் பாரமும் நம்மேலேயே உள்ளது என்று எண்ணுவதே நாம் அடிக்கடி செய்கிற தவறாகும்.

சில நுட்பமான விஷயங்களில் சபையில் சண்டையை வருவிக்கும் தவறுகள் நிகழ்வதற்கு மிக முக்கிய காரணம்– கர்த்தரிடத்தில் விசுவாசமில்லாததே ஆகும். சபையில் தம் ஜனங்கள் எல்லோருக்கும் நன்மைக்கேதுவான அனுபவங்களை தம் வழிகாட்டுதலின்படி கொடுக்க கர்த்தரால் கூடும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அப்படியிருக்கும் பட்சத்தில், சபையில் நாம் விரும்புகிறபடி காரியங்கள் துல்லியமாக நடக்காது. அது நமக்கு நன்மைக்கேதுவாகவே இருக்கும்.

-----------------------------

**--2794--**

R 5929

# உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்

"வைரம் வைரத்தை வெட்டும்" எனும் பழமொழியினை நாம் அனைவருமே கேட்டிருக்கின்றோம். வைரங்கள் அனைத்தும் மிகவும் கடினத்தன்மை உள்ளவைகளாகவும், மிகவும் தூய்மையானவைகளாகவும் இருக்கின்றன. இந்தக் கடினத்தன்மையானது, அதன் மதிப்பினை அதிகரிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் வைரங்களாக இருக்கின்றனர் - கர்த்தருடைய கிருபையினால் தூய்மையாக்கப்பட்டவர்களாய் மாத்திரமல்லாமல், உறுதிப்பெற்ற குணலட்சணத்தை உடையவர்களாய் இருக்கின்றனர். இது உண்மையாக இருக்கும்பட்சத்தில், நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, குறைவான கடினத்தன்மையுள்ள பொருட்கள் கூடிக் காணப்படுகையில் இருப்பதைக்காட்டிலும் கடினத்தன்மையுள்ளவைகள் கூடிக் காணப்படுகையிலேயே வெட்டப்படுவதற்கும் மற்றும் உராய்வதற்குமான அதிக அபாயம் காணப்படும். களிமண்ணானது வெட்டுதல் எதையும் பண்ணுகிறதில்லை - களிமண் போன்ற தன்மையிலுள்ள பாத்திரங்களும் வெட்டுதல் எதையும் பண்ணுகிறதில்லை.

இதை நினைவில்கொண்டு, கர்த்தருடைய ஜனங்கள் ஒருவருக்கொருவர் மிகவும் அனுதாபம் பாராட்டுபவர்களாகவும், ஒருவரையொருவர் மிகவும் மதிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். "குணலட்சணத்தின் உறுதிநிலை, குணலட்சணத்தின் வலிமைநிலை," நோக்கத்தின் மாறாநிலை என்பவைகளை - அதாவது குணலட்சணத்தினுடைய இத்தன்மைகளானது சில சமயங்களில் சில பிரச்சனைகளை ஏற்படுத்துகிறதாய் இருப்பினும், இவைகளை - கர்த்தர் போன்று நாமும் மதித்திட கற்றுக்கொள்கின்றோம். உலகப்பிரகாரமான அமைப்புகளில் காணப்படுவது போலவே, பெரோயா வேதாகம வகுப்புகளிலும் சிலசமயம் சிரமங்கள் காணப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

## கர்த்தருடைய ஜனங்கள் சண்டையை வளர்ப்பவர்களல்ல

கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமே ஒழிய, சண்டையினை வளர்ப்பவர்களாக இருக்கக்கூடாது என்றுள்ள தங்களது ஆண்டவரின் விசேஷித்த கட்டளையினை நினைவில்கொள்ள வேண்டும். பிரச்சனையைக் கிளறிவிடுவதற்கு எந்த மாபெரும் திறமையும் தேவைப்படுகிறதில்லை. இருப்பதிலேயே சிறந்த நோக்கங்களுடன் கர்த்தருடைய ஜனங்கள் சண்டைச் சச்சரவை தடுத்திடுவதற்கு, அவர்களுக்குச் சாந்தமும், நிதானமும், பொறுமையும், பரிசுத்த ஆவியினுடைய மற்றக் கனிகளும் அதிகமாய்த் தேவைப்படுகின்றது. எதிராளியானவன் நம்மைச் சமாதானத்தின் பாதையினின்று வழிவிலகப்பண்ணத்தக்கதாக, நம்மைச் சோதிக்காதபடிக்கு நாம் அனைவருமே விழிப்பாயிருப்பது எவ்வளவு அவசியமாயிருக்கின்றது!

நமக்கும், மற்றவர்களுக்கும் இடையே காணப்படும் கருத்துவேறுபாடு ஒன்றின் விஷயத்தில், அது கொள்கை சம்பந்தப்பட்டுள்ளதா என்றோ, அதில் அடிப்படை சத்தியம் ஏதாகிலும் சம்பந்தப்பட்டுள்ளதா என்றோ அல்லது அது கொள்கை சம்பந்தப்படாமல், விருப்புவெறுப்புகள் மற்றும் அபிப்பிராயம் சம்பந்தப்பட்டது மாத்திரமா என்றோ நாம் சரியாய் நிதானிப்பதற்குப் போதுமான அளவுக்கு அனுபவமும், பரத்திலிருந்து வருகின்ற ஞானமும் அவசியப்படுகின்றது. ஒருவேளை அது விருப்புவெறுப்பு மற்றும் அபிப்பிராயம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கும்பட்சத்தில், சமாதானம் ஏற்படத்தக்கதாக நாம் எதற்கும் அடிபணிய விருப்பமுடையவர்களாய் இருக்க வேண்டும்; ஆனால் இப்படி, கொள்கைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நம்மால் செய்ய முடியாது. எனினும் சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளினால் ஆதரிக்கப்பட்டதாகவே நம்முடைய விருப்புவெறுப்புகள் காணப்படுகின்றது என்ற வஞ்சனைக்குள் நாம் பெரும்பாலும் உள்ளாகுகின்றோம். இது தவறு என்று அனுபவத்தின் வாயிலாக நாம் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இம்மாதிரியான ஒவ்வொரு எண்ணங்களையும் நாம் கவனமாய் ஆராய்ந்து, நம்முடைய விருப்பு வெறுப்பு மாத்திரமே சம்பந்தப்பட்டதாக இருக்கும் காரியத்திற்கும், கொள்கைகளும், தேவனுடைய போதனைகளும் சம்பந்தப்பட்டதாக இருக்கும் காரியத்திற்கும் இடையிலான வித்தியாசத்தினை நாம் காண உதவும்படிக்கு, கர்த்தருடைய ஞானத்தினை வேண்டிக்கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு ஒரு சபையில், ஒரு விஷயத்தைக் குறிப்பிட்ட விதத்தில் செய்துவருவது முந்தின காலங்களிலுள்ள வழக்கமாக இருக்கின்றபடியினாலோ அல்லது அவ்விதமே சிறந்த விதமாக இருக்கும் என்று நம்பும் காரணத்தினாலோ, அவ்விஷயத்தினை அக்குறிப்பிட்ட விதத்தில் செய்யும்படிக்குச் சகோதரரோ அல்லது சகோதரிகளோ விமர்சித்து, வலியுறுத்துகின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். தங்களது விருப்பத்தின்படி செய்யப்படவில்லையெனில், அவர்கள் சண்டையிட ஆயத்தமாய் இருக்கின்றனர். விடாப்பிடியாகக் காணப்படும் பட்சத்தில், அதுவும் சரியான பலன் அடையப்பெறுமானால் - அதாவது சபையாருடைய சித்தம் உண்மையில் அடையப்பெறுமானால், மற்றவர்களுடைய விருப்பங்களுக்கு ஆதரவாக, நம் விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிடுவது ஞானமான வழிமுறையாகும்; ஏனெனில் சபையாருடைய சித்தமே, கர்த்தருடைய சித்தமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்; இல்லையேல் கர்த்தர் காரியத்தினை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டு, இதன் மூலம் சபையாருக்காக, நமக்குப் படிப்பினை ஒன்றினை அருளுவார்.

சபையிலுள்ள ஒவ்வொரு மற்றும் அனைத்து அங்கத்தினர்களுமே சபையில் பரிசுத்த ஆவியின் கனிகளை - அதாவது சாந்தம், தயவு, பொறுமை, சகோதர சிநேகம், அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆகியவைகளை அபிவிருத்திச் செய்திடுவதற்கு ஊக்கமாய் நாடிட வேண்டும். இந்தப் பண்புகளை நினைவில் கொண்டு, அவைகளை நாம் செயல்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி சம்பவிக்கின்றது; இப்படியாக நாம் மற்றவர்களுக்கு மாதிரியாகக் காணப்பட்டு, நம்முடைய சொந்த இருதயங்களிலும், ஜீவியங்களிலும் கிரியைச் செய்யும் பரிசுத்த ஆவியின் ஆதிக்கத்தினை வெளிப்படுத்துகிறவர்களாக இருப்போம்.

## அடிக்கடி செய்யும் தவறு

நாம் நமது பகுத்துணர்தலைப் பயன்படுத்தி மற்றும் அதன்படி செயல்படுவதோடு நம்முடைய பொறுப்பு நிறைவடைகின்றது என்பதை மறந்துபோய் - முழுப்பொறுப்பும் நம் மீதுதான் காணப்படுகின்றது என்று எண்ணுவது நாம் அடிக்கடி செய்யும் தவறாய் இருக்கின்றது.

சில நுணுக்கமான விஷயங்களில், சபையில் சண்டை சச்சரவுகளைக் கொண்டுவரும் தவறானது, கர்த்தரில் விசுவாசக்குறைச்சல் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றது. சபை மீதும், தம் ஜனங்கள் யாவர் மீதுமான கர்த்தருடைய அக்கறையையும் மற்றும் நம்முடைய அனுபவங்களையும் - மற்றவர்களுடைய அனுபவங்களையும் நன்மைக்கேதுவாக மாற்றிப்போட அவர் வல்லவராகவும், சித்தமுள்ளவராகவும் இருக்கிறதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை காரியங்களானது சபையில் நமக்குப் பிரியமாய் நடந்தேறவில்லையெனில் மற்றவர்களுக்கு அல்லது சபையில் பெரும்பான்மையானவர்களுக்காகிலும் திருப்திகரமாய்க் காணப்படும் அல்லது காணப்படுவதாகத் தோன்றுகிற அக்காரியங்களைக் குறித்துத் தொடர்ச்சியாகக் குற்றங்கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, காரியத்தினை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச்செல்வது மிகவும் நலமானதாயிருக்கும்.

---

# புது சிருஷ்டிக்குரிய வளர்ச்சியை அடைவது எப்படி?

## HOW WE ATTAIN DEVELOPMENT

"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்
ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" - *ரோமர் 8:13.*

தேவனுடைய பரிசுத்த ஆவியின் உதவியுடன் மாம்சத்தின்/சரீரத்தின் செய்கைகளை அழிப்பது என்பதே நித்தியத்திற்குரிய ஜீவனை அடைவதற்கு அவசியமானது என்று அப்போஸ்தலர் பவுல் இங்கு விவரித்துள்ளார். ஆனால், கர்த்தர் தமக்கு சீஷர்களானவர்களை நோக்கி, "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை *உடையவனாய்* இருக்கிறான்" என்றும், "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் கூறியுள்ளார். (யோவான் 3:36; **5:24**). அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய முதலாம் நிருபத்தில், "நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" என்றும்; "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்" என்றும் கூறியுள்ளார். 1 யோவான் 3:14; **5:12**.

பரிசுத்த பவுல், நமது கர்த்தருக்கும் அப்போஸ்தலர் யோவானுக்கும் முரண்பாடாக உள்ளார் என்று இங்கு நாம் புரிந்துகொள்ளக் கூடாது. நமது கர்த்தர் இயேசுவும், பரிசுத்த யோவானும், *"தேவன் கருதுகிற"* கண்ணோட்டத்திலிருந்து, அதாவது, *"நீதியின் கண்ணோட்டத்திலிருந்து"* பேசுகின்றார்கள். கிறிஸ்துவையும், அவருடைய ஒப்புரவாக்குதலின் புண்ணியத்தையும் ஏற்றுக்கொண்டவர்கள், ஆதாமின் மரணத்தீர்ப்பின் கீழ் இருந்து வெளிவந்துள்ளனர். இவர்களுடைய தற்கால பூரணமற்ற தன்மைகளும், கடந்தகால பாவங்களும், அவருடைய புண்ணியத்தினால் மூடப்பட்டுள்ளது. இவர்கள் தங்களை அர்ப்பணித்ததின் காரணமாகவும், பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டதின் காரணமாகவும், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகள் ஆகியுள்ளனர். ஆகவே, இவர்கள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்திற்குள் தங்கியிருக்கையில், இவர்களுக்கு அருளப்பட்ட நித்திய ஜீவன், இவர்களுக்குரியதாக ஏற்கனவே கருதப்பட்டுள்ளது. இவர்கள் இப்பொழுது, "*நம்பிக்கையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கின்றார்கள்.*"

இங்கு அப்போஸ்தலர் பவுல், அதன் முழுமையான நிறைவேறுதலின் கண்ணோட்டத்திலிருந்து பேசியுள்ளார். அதாவது, சபை தங்களுடைய ஆவிக்குரிய சரீரம் பெற்றுக்கொள்ளும்போது, முழு பூரணமடைந்து, முழுமையான நித்தியத்திற்குரிய ஜீவனையடையும் கண்ணோட்டத்திலிருந்து பேசுயுள்ளார். இதை நம்முடைய உயிர்த்தெழுதலின்போதுதான் நாம் அடையமுடியும். நித்தியத்திற்கும் ஜீவிக்க முடியாத எந்த ஜீவனும், நித்திய ஜீவனாய் இராது. மேலும், நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதி செய்யாதவரையிலும், நித்திய ஜீவன் நமக்கு உறுதியாயிராது. ஆனால், நாம் தேவனுடைய நிபந்தனைகளுக்கு உண்மையாய் இருக்கும் வரையிலும், அது நம்முடையதாக கருதப்படுகின்றது. மரணதண்டனை முழுமையாக மாற்றப்பட்டாலும்கூட, தற்கால பூமிக்குரிய சூழ்நிலைகளில் ஜீவன் நித்தியத்திற்கு நீடிக்கமுடியாது. காரணம், இங்கு சூழ்நிலைகள் சாதகமாக இருப்பதில்லை. ஜீவன் நித்தியத்திற்குரியதாய் நீடிப்பதற்கும், ஜீவன் முழுமையாய் அனுபவிக்கப்படுவதற்கும், சூழ்நிலைகள் மற்றும் சுற்றுப்புறமும் தீவிரமான மாற்றத்திற்குள்ளாகக் கடக்க வேண்டும்.

புது சிருஷ்டியாக ஜெனிப்பிக்கப்பட்டதன் மூலம் நாம் பெற்றுக்கொண்ட கருநிலையிலுள்ள ஜீவன் பூரணமானது. ஆனால், அது தொடர்ந்து வளர வேண்டும். அதாவது, முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணமும், முழுமையுமான புது சிருஷ்டிகளாகப் பிறக்கும் வரையிலும், தொடர்ந்து வளர்க்கப்பட வேண்டும். "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை." (வெளிப்படுத்தல் 20:6).

## நமக்குள்ளான பரிசுத்த ஆவியின் செயற்பாடு

ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த வகுப்பாருக்கு அருளப்பட்ட புத்திமதிகள் அனைத்தும், பொதுவான உலகத்தின் ஜனங்களுக்குப் பொருந்துவதில்லை. தேவனுடைய ஜெநிப்பிக்கப்பட்ட புத்திரர்களாகிய நம்மை நோக்கி, அப்போஸ்தலர் பவுல், ஏற்றக்காலத்தில் சம்பவிக்கப்போகும் நம்முடைய பிறப்பிற்கு நாம் எப்படி நம்மை ஆயத்தம்பண்ணிக்கொள்ள வேண்டும் என்றே கூறுகின்றார். தேவனுடைய வல்லமையாகிய ஆவியின் மூலமாக, நாம் இந்த மாபெரும் ஆயத்த வேலையை நிறைவேற்ற வேண்டும் என்றும் பவுல் நமக்குக் கூறுகின்றார். தேவனுடைய வல்லமை அல்லது பரிசுத்த ஆவி பல்வேறு வழிகளில் கிரியை செய்கின்றது. உதாரணத்திற்கு, நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள சத்தியத்தின் தேவ செய்தியானது, தேவனுடைய மாபெரும் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை உருவம் காட்டி, நமக்கான கர்த்தருடைய சித்தம் என்ன என்பதை நமக்குக் காட்டுகின்றது. நாம் எவ்வளவுக்கு அதிகமாய் இந்த திட்டத்தை கற்று, புரிந்துகொள்கின்றோமோ, அந்த அளவிற்கு, நம்முடைய இருதயங்களில் தேவனுடைய இந்த பரிசுத்தமான வல்லமை, மகாபெரிய அளவில் கிரியை செய்கின்றது. நம்முடைய அர்ப்பணிப்பு ஆழமாகும்போது, கர்த்தருடைய அனைத்து நோக்கங்கள் மேலும் அதிக விருப்பம், கவனம் காட்டுகிறவர்களாக நாம் இருந்து, தேவனுக்குப் பிரியம் உண்டாகும் விஷயங்களை வாஞ்சையோடு செய்ய அதிகம் வைராக்கியம் கொள்வோம்.

தேவன் தற்காலத்தில் தமது பரிசுத்த ஆவியின் மூலம், இந்த விசேஷ வகுப்பாரிடத்தில் கிரியை செய்கிறாரேயொழிய மற்றவர்களிடத்தில் இல்லை. உலகத்தில் காணப்படும் விஷயங்கள் அனைத்தும் தேவனுடைய வல்லமையாகிய அவருடைய ஆவியின் பொதுவான கிரியையுடைய விளைவேயாகும். ஆனால், நம்முடைய ஆதார வசனத்திலோ, ஆத்துமாவின் மேல் தேவனுடைய ஆவி செலுத்தும் செல்வாக்கைக் குறித்து மாத்திரமே குறிப்பிடுகின்றார். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இட்ட நிபந்தனைகளின் கீழ், தேவனுடைய ஜனங்களானவர்களிடத்திலேயே பரிசுத்த ஆவியின் கிரியை காணப்படுகின்றது என்று புதிய ஏற்பாட்டின் பதிவுகளில் பார்க்கின்றோம். இத்தகையவர்கள் அனைவரும் கர்த்தருடைய விசேஷமான பராமரிப்பின் கீழ் காணப்படுகின்றனர். தேவன் நம்மிடத்தில் இந்த நற்கிரியையை ஆரம்பித்துள்ளார். அது மனுஷனுடையதுமல்ல, மனுஷனால் ஏற்படுத்தப்பட்டதுமல்ல. ஆகவே, அவர் நம்மில் ஆரம்பித்த இந்த கிரியையை நிறைவேற்ற நாம் தேவனையே நோக்கிப்பார்த்து, நம்முடைய முழு இருதயப்பூர்வமான ஒத்துழைப்பை அவருக்குக் கொடுக்க வேண்டும்.

நாம் தேவனுடைய வார்த்தைகளை ஜெபத்துடன் கற்று, அவர் கொடுத்துள்ள அனைத்து வழிநடத்துதலின் உதவியுடனும் கற்க வேண்டும். இப்படியாக, வேத வாக்கியங்களின் அர்த்தத்தை நாடி முயற்சித்து, நம்முடைய ஜீவியங்களில் அவைகளை செயல்முறைப்படுத்தவும், நாடி முயற்சிக்க வேண்டும். நம்முடைய மாம்சீக சரீரங்கள் பலமடைவதற்கும், ஜீவிப்பதற்கும் உணவுகள் உட்கொள்வது அவசியமாய் இருப்பதுபோல, தேவன் ஆவிக்குரிய உணவையும் நமக்குக் கொடுத்துள்ளார். இதன் மூலம் ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆதாரமும், பலமும் கிடைக்கின்றது. மேலும், அவருடைய சித்தத்தையும் புரிந்துகொள்ள முடிகின்றது. தேவன் தமது பரிசுத்த ஆவியினால் நம்மீதும் நமக்குள்ளும் செய்யும் இந்த கிரியை நாம் ஜெநிப்பிக்கப்பட்ட பின்னர் படிப்படியாக நடக்கின்ற வேலையாகும். நம்மில் அநேகர் நம்முடைய முந்தைய தவறான நம்பிக்கையினால், மிகவும் சூழப்பட்டுள்ளதால் தேவனுடைய ஆழமான விஷயங்களை முதல் தருணத்திலேயே பார்த்துப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, நாம் கற்க வேண்டியது அவசியமாயுள்ளது. இதைப்போன்ற விலையேறப்பெற்ற விசுவாசத்திலுள்ளவர்களோடு கூட வேண்டும். ஒருவேளை சிலருக்கு சகோதர சகோதரிகளோடு ஒன்றுகூடும் வாய்ப்பு இல்லையெனில், அச்சிடப்பட்ட பிரதிகள் படிப்பதின் மூலமாகிலும் அவர்கள் சகோதர சகோதரிகளை சந்திக்க முடியும்.

## அர்ப்பணிப்பின் முக்கியத்துவம்

தேவனுக்கு முழுமையாக அர்ப்பணிக்கும் விஷயத்தைக்குறித்து நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளும்போது, அர்ப்பணிப்பு பற்றின நம்முடைய சிந்தனை படிப்படியாக மாறுகின்றது. நாம் தேவனை முதலாவது அறிந்தபோது, நம்மில் அநேகர் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதும், நல்ல ஒழுக்கமான ஜீவியம் பண்ணுவதும், நியாயமான வழிகளில் சந்தோஷம் கொள்வதும், நம்முடைய சரீரங்களுக்கு நல்ல பராமரிப்புக் கொடுப்பதும், தவறாமல் ஞாயிற்றுக் கிழமைகளில், 2798--

முடிந்தால் மற்ற நாட்களிலும் சபைக்கு வருவதுமே நமக்கான தேவனுடைய சித்தம் என்று கருதியிருந்தோம். மேலும், இவைகளைச் செய்யாதவர்கள் ஜீவனை இழப்பார்கள் என்றும், பிற்பாடு எவ்வித எதிர்காலத்திற்குரிய நம்பிக்கையும் இத்தகையவர்களுக்குக் கிடையாது என்றே எண்ணினோம். ஆனால், இது தேவனுடைய திட்டமே அல்ல. இப்பொழுது நாம் கொஞ்சம் அதிகம் தெரிந்துள்ளோம். மனித சுபாவத்தையும் அதன் விருப்பங்களையும் அழித்து, பூமிக்குரிய அனைத்து நோக்கங்கள் எதிர்பார்ப்புகள் மற்றும் இலட்சியங்களை கைவிடுவதன் மூலமே கிறிஸ்துவின் சபை பரலோக சுத்திகரிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரேவழி என தேவன் நமக்குக் காட்டியுள்ளார்.

இக்கருத்து முதலில் நமக்குப் புதிய கருத்தாக இருக்கும். "நான் என்னுடைய மனித சுபாவத்தை அழிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரா? என்ற கேள்வி எழும்புகின்றது. மேலும், நான் என்னுடைய சுபாவத்தின்படியான திறமைகளை விருத்தி செய்ய நாடி, சிறப்பானவைகளை நிகழ்த்த வேண்டாமோ? என்றும், நான் பாவம் செய்யவில்லை என்றாலும், ஓர் இயல்பான வாழ்க்கை வாழக்கூடாதோ?" என்ற கேள்விகளும் நமக்குள் எழும்பலாம். இக்கேள்விகளுக்கு தேவனுடைய பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத ஒருவரின் பதில் இப்படியாக இருக்கும். அதாவது, "ஏன் கூடாது? நிச்சயமாகக் கூடும். நீ உன்னை எல்லைகளுக்குள் நிறுத்திவைக்க முடியும் என்ற வரையிலும், உன்னுடைய மனுஷீக சுபாவத்தின் விருப்பங்களுக்காக, பேராவல்களுக்காக நாடி முயற்சிக்கலாம். உன்னால் நல்ல திரைப்படத்தை சந்தோஷமாகப் பார்க்க முடியுமென்றால் அல்லது மைதானத்தில் போய் சந்தோஷமாக விளையாட முடியுமென்றால் நீ போய் அவைகளில் நேரத்தை செலவிட்டு மகிழலாம். ஒரு கலசம் மது உன்னைப் பாதிக்காதென்றால், நீ பருகலாம். உனக்கு பாடல் பாடுவதற்கு அல்லது ஓவியம் தீட்டுவதற்கான திறமைகள் இருக்குமாயின் அதை வளர்த்துவது உனது கடமையாகும். என்ன திறமைகள் இருந்தாலும், அதில் சிறப்படைவது உனது கடமையாகும் என்பதே." இது உலக ஆலோசனையாகும்.

தாலந்துகள் பற்றின இயேசுவின் உவமையில், ஒரு குறிப்பிட்ட எஜமான் தன்னுடைய அநேக ஊழியர்களுக்குக் கொடுத்திட்ட தாலந்துகள் என்பது அந்த எஜமானுக்கு ஊழியம் செய்வதற்கான வாய்ப்புகளை அடையாளப்படுத்துகின்றது. எஜமான் ஒவ்வொரு ஊழியக்காரனின் கைகளிலும் வாய்ப்புகளைக் கொடுத்து அதை அவன் பெருக்கிக்கொள்வதை எதிர்பார்த்தார். இதுபோலவே, நம்முடைய பரம பிதாவாகிய தேவனும், எஜமானும் தம்முடைய ஊழியக்காரர்கள் அவருடைய மகிமைக்கு முன்னேறுவதற்கும், முடிந்தளவிற்குப் பயன்படுத்துவதற்கும் சில வாய்ப்புகளை அவர்களுக்குக் கொடுத்துள்ளார். இந்த வாய்ப்புகள் ஒருவரின் சுபாவத்தின்படியான திறமைகளுக்கு இசைவாகவே அருளப்படும். ஆனால், இதற்கென்று நம்மிடத்திலுள்ள ஒவ்வொரு திறமைகளும் அவைகள் தேவனை மகிமைப்படுத்த பயன்படுபவைகள் ஆயினும் சரி, இல்லையென்றாலும் சரி, அவைகள் முன்னேற்றப்பட வேண்டும், பயன்படுத்தப்பட வேண்டும் என்று அர்த்தம் கொள்வதில்லை. புது சிருஷ்டிகளாகிய நாம் நம்முடைய அனைத்து வல்லமையையும், தேவனை மகிமைப்படுத்த பயன்படுத்த வேண்டும். ஆனால், ஒருவேளை அவைகளை தேவ மகிமைக்காக பயன்படுத்த முடியவில்லை எனில் நாம் அவைகளை தியாகம் செய்து, நாம் நம்முடைய பலியின் உடன்படிக்கைக்கு இசைவாய் உள்ள மற்ற திறமைகளைப் பயன்படுத்துவதில் பிராயசம் எடுக்க வேண்டும்.

## திராட்சத் தோட்டக்காரர் எப்படி திராட்சச் செடியை கையாளுகின்றார்

இந்த பரலோக வழிக்குள் பிரவேசித்துள்ள ஒவ்வொரு அர்ப்பணிக்கப்பட்டவரிடம் நாம் கூறுவது என்னவெனில், "நீங்கள் உங்களை தேவனுடைய கரத்தில் ஒப்படைத்துள்ளீர்கள்" என்பதே. மேலும், "நீங்கள் கர்த்தரிடம் அவர் உங்களை மறுரூபமாக்குவதற்கும், உங்கள் மனதை புதிதாக்குகிறதற்கும் உங்களை முற்றிலும் வெறுமையாக்குகிறதற்கும் அவர் வாக்களித்துள்ள மகிமையான ஸ்தானத்திற்கு உங்களை தகுதியடையச் செய்வதற்கும், ஆயத்தம் பண்ணுவதற்கும் கேட்டிருக்கின்றீர்கள்." ஆகவே, உங்கள் எஜமான் உங்களுக்குப் பயிற்சி கொடுக்கும் திசையை நோக்கி, உங்கள் அனைத்து வல்லமைகளும் திருப்பப்பட்டுள்ளது. திராட்சத் தோட்டக்காரரின் பராமரிப்பின் கீழுள்ள திராட்சச் செடியினால் பேச முடிந்திருந்தால் அது இப்படியாகப் பேசியிருந்திருக்கும், அதாவது, "என்னை தாங்குவதற்கு நான் அதிக அளவு இலைகளை உருவாக்கி, கிளைகளையும், கொடிகளையும் ஒவ்வொரு திசையிலும் என்னால் படரச் செய்ய முடியும்." ஆனால், ஞானமுள்ள தோட்டக்காரர், தாவர உயிர்ச்சாற்றை வீணாக்கும் தேவையற்ற/அளவுக்கதிகமாகக் காணப்படும் கிளைகளையும், கொடிகளையும் வெட்டிவிடுகின்றார். இலைகள் மாத்திரமே கொடுக்கும் கிளைகளை வெட்டிவிடுகின்றார். அதாவது, செடியானது சரியில்லாத ஆதரவுகளைப் பிடித்துக்கொள்ளாதபடிக்குத் தேவையற்ற கிளைகளையும்,

--2799--

கொடிகளையும் வெட்டிவிடுகின்றார். தோட்டக்காரர் கனிகளை அதாவது, நிறைய கனிகளை எதிர்பார்க்கின்றார். ஆதலால், கனி கொடுப்பதற்கு தடையாயிருக்கும் அனைத்தும் தியாகம் செய்யப்பட வேண்டும். திராட்சச்செடி கீழே சாயும் தன்மையுடையது. தோட்டக்காரரோ செடியானது மேல் நோக்கி வளர்வதற்கு ஏதுவாக பயிற்சி கொடுக்கின்றார். இதுபோலவே, நம்முடைய மாபெரும் பரலோக தோட்டக்காரரும் தமக்கு துதி சேர்க்கும் வண்ணமான கனிகளைக் கொடுக்கும்படி தனது ஆவிக்குரிய திராட்சச் செடிக்கு பயிற்சியளிக்கின்றார்.

நாம் இனி ஒருபோதும் உலகத்திற்குச் சொந்தமானவர்களல்ல. வேதவாக்கியங்களில், தேவன் நமக்குக் காட்டியுள்ள வழியே, இப்பொழுது நம்முடைய வழியாக இருக்கின்றது. நாம் நம் சரீரத்தின் செய்கைகளை அழிக்கவில்லையென்றால், உண்மையாய் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள நித்திய ஜீவனை நாம் ஒருபோதும் பெற்றுக்கொள்ள முடியாது. நித்தியத்திற்குரிய ஜீவனை - மகிமை, கனம், அழியாமையை - பெற்றுக்கொள்வதற்கு, நம்முடைய மாபெரும் பயிற்சியாளரால் நமக்குப் போதிக்கப்பட்ட விஷயங்களுக்கு நாம் ஒத்திருக்க வேண்டும். இதை நாம் நம்முடைய பெலத்தினால் (உதவியற்ற பெலத்தினால்/தேவ உதவியற்ற நம்முடைய பெலத்தினால்) செய்யக்கூடாது. இது கூடாத காரியமாகும். ஆனால், நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பை *நிறைவேற்ற பிரயாசப்படும்போது*, நம்முடைய பரமபிதா *நம்மில் கிரியை செய்வார்* என்று வாக்களித்துள்ளார்.

## சரீரத்தின் செய்கைகளை அழித்தல்

"சரீரத்தின் செய்கைகளை அழிப்பது" என்பது, சிலர் கருதுவது போன்று நம்முடைய சரீரத்தைக் கொல்லுவது/அழிப்பது அல்ல. நம்முடைய சரீரத்தை சித்தரவதைப்படுத்தி, தண்டிக்க வேண்டுமென்று கருதி, சிலர் செய்யும் விஷயங்களை சரித்திரத்திலும் தற்போதைய சில நடைமுறைகளிலும் காண்கின்றோம். சிலர் இரத்தம் வரும்வரையிலும் சாட்டையினால் தங்கள் சரீரத்தை அடித்துக்கொள்கின்றனர். பின்னர், மயிரினால் உண்டாக்கப்பட்ட சட்டைகளை அணிந்துகொள்கின்றனர். சிலசமயம் சட்டையிலுக்க மயிருகள் காயங்களை இன்னும் புண்ணாக்கி, இன்னும் வேதனையை அதிகரிக்கின்றது. சிலர் சரீரத்தை அழிக்க வேண்டுமென்று தரையில் படுத்துக்கொண்டு தங்கள் மீது மனுஷர்கள் மிதித்து ஏறிப்போவதற்கும், தங்கள் மேல் மற்றவர்கள் அவர்களுடைய பாதங்களைத் துடைத்துக்கொள்வதற்கும் அனுமதிக்கின்றனர். இப்படியாக, செய்பவர்கள் தவறான நோக்கம் கொள்ளவில்லையென்றாலும், வேதவாக்கியத்தின் அர்த்தத்தை முழுதும் தவறாகப் புரிந்துள்ளனர்.

சரீரத்தின் *கிரியைகளை/செய்கைகளை* தான் அழிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் நமக்குக் கூறியுள்ளார். அதாவது, மாம்ச சுபாவத்தின் இயல்பான செய்கைகளை நாம் அழிக்க வேண்டும். "இப்படி செய்வது என் சுபாவம்" என்று சிலர் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். ஆனால், வேதாகமமோ நாம் பிறந்த வழியில் நாம் செல்லக்கூடாது என்கிறது. காரணம், நாம் அனைவரும் பாவிகளாகவே பிறந்தோம். இப்பொழுது நாம் தேவனுடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கின்றோம். இந்த ஆவி நாம் போக வேண்டிய வழிக்கு நம்மை நடத்துகின்றது. நம்முடைய புதிய மனதுக்கு இணக்கம் இல்லாத எல்லாவற்றையும், ஏற்கனவே மரித்ததாகக் கருதப்பட்டுள்ள பழைய சிருஷ்டியின் மரணத்திற்குத் தடையாகக் காணப்படும் எல்லாவற்றையும் புது சிருஷ்டியின் வளர்ச்சிக்குத் தடையாகக் காணப்படும் எல்லாவற்றையும் நமக்குள் அழிக்க வேண்டும். சரீரத்தில் எப்போதும் எதிராகக் காணப்படும் சில விஷயங்கள் அழிக்கப்பட வேண்டும். மனித சரீரத்தின் மற்ற தன்மைகள் நீதியின் ஊழியத்திற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு காலத்தில் நாம் பாவத்தின் கீழ் விற்கப்பட்டோம். ஆனால், இப்பொழுது நாம் மீண்டும் திரும்ப விலைக்கு வாங்கப்பட்டுள்ளோம். மேலும், இப்பொழுது நம்மிடம் கிறிஸ்துவின் சிந்தையே காணப்படுகின்றது.

இப்பொழுது நாம் நம்முடைய மாம்ச சரீரத்தை, தேவனுக்கு மகிமை சேர்க்கும் பூமிக்குரிய பாத்திரங்களாக நாம் பயன்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால், இந்த பூமிக்குரிய பாத்திரத்தை *எப்படி* பயன்படுத்த வேண்டும் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். நாம் கிறிஸ்துவோடு மரிப்போம் என்று உடன்படிக்கை பண்ணினபோது, நம்முடைய சரீரம் மரித்ததாகக் கருதப்பட்டதை நாம் முதலாவது நினைவில்கொள்ள வேண்டும். மேலும், இந்த சரீரம் மரித்தாகக் கருதப்பட்டாலும், இது புது சிருஷ்டிக்கு உரியதாகவும், வேலைக்காரனாகவும், வேலை செய்யும்படி இது உயிர்ப்பிக்கப்பட்டுள்ளதை இரண்டாவதாக நினைவில்கொள்ள வேண்டும். நம்முடைய புது சிருஷ்டி ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றுக்கொள்ளும் வரையிலும், மாம்ச சரீரம்

--2800--

மாற்றாகப் பயன்படுகின்றது. இந்த சரீரத்திற்குரிய ஒவ்வொன்றும், புது சிருஷ்டியின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

"ஒருவேளை நான் என்னுடைய இந்த தாலந்தைப் பயன்படுத்தினால், நான் மற்றவருக்கு சந்தோஷம் அல்லது ஆறுதல் கொண்டு வரமுடியும் அல்லது சில வேலைகளுக்கு உதவியாக இருக்கும்" என்று நாம் சொல்லக்கூடாது. ஆனால், "இந்த திறமையை/தாலந்தை பயன்படுத்துவதன் மூலம், என்னுடைய புது சிருஷ்டிக்கு உதவியாக இருக்கின்றதா? அல்லது கிறிஸ்துவின் மணவாட்டி சேர்க்கப்பட்டு அவளுடைய எதிர்கால வேலைக்கு ஆயத்தம்பண்ணும் வேலைக்கு உதவியாக இருக்கின்றதா?" என்பதே நமக்கான கேள்வியாகும். இதுவே நம்முடைய தற்கால ஊழியமாகும். மற்ற விஷயங்களை செயல்முறைப்படுத்துவதற்கு சிலர் இருக்கின்றனர். நாம் புது சிருஷ்டிகளாக வளருவதற்கும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் சகோதர சகோதரிகளை வளர்த்துவதற்கு உதவி செய்வதற்கும் நம்மிடம் கவனம் *சிதறாத தன்மை* காணப்பட வேண்டும். அதாவது, புது சிருஷ்டி, தொடர்ந்து பழைய சிருஷ்டிக்கு எதிராக யுத்தம் பண்ண வேண்டும். நாம் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக வளருவதற்கு நாம் சமயம் கிடைக்கும் போதெல்லாம் மனுஷருக்கு நன்மை செய்ய வேண்டும். அதாவது, நம்முடைய உடன்படிக்கைக்கு இடையூராக இல்லாதபட்சத்தில் நன்மை செய்ய வேண்டும். அதிலும் விசேஷமாக, விசுவாச வீட்டாருக்கு செய்ய வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்.

நம்முடைய மாம்சம் மரித்ததாக வெறுமனே கருதப்படுவதாலும், அது உண்மையாய் மரிக்கவில்லை என்பதாலும், நாம் தொடர்ந்து விழிப்பாய்க் காணப்பட வேண்டும். கவனமும், ஜெபமும் இல்லையெனில் நம்முடைய நாவுகள் தீமை பேச்சுகளைப் பேசிவிடும்.

நாம் வழிநடத்தப்படுவதற்கு தொடர்ந்து அவரை நோக்கிப் பார்க்க வேண்டும். இப்படியாக, நாம் அவரைப் பார்க்கும்போது, அவருடைய மகிமையான சாயலுக்கு அதிகமதிகமாய் ஒப்பாவோம். நாம் எல்லாவற்றையும் தெய்வீக கண்ணோட்டத்திலிருந்து பார்க்க பிரயாசம் எடுக்க வேண்டும். நாம் மாம்சத்தில் இருப்பது வரையிலும் நாம் ஒருபோதும் பூரணமாக முடியாது. ஆனால், இந்த சரீரத்தில் நாம் குடியிருக்கும் வரையிலும், புதிய சிருஷ்டியின் சித்தத்தின் படி, சரீரம் இயங்குவதற்கு சரீரத்தை கட்டாயப்படுத்துவது நமது கடமையாகவும், நமது சிலாக்கியமாகவும் இருக்கின்றது.

ஒரு காலத்தில் நம்முடைய மாம்ச சரீரம் பாவத்திற்கும், தற்கால தீமையின் உலகத்திலுள்ளவைகளுக்கும் அடிமையாக இருந்தது. இப்பொழுது நாம் கூற வேண்டியது, "இந்த சரீரம் கர்த்தருக்கு உரியது. அவருக்கு மகிமையாக நான் இதை அடக்கி ஆள வேண்டும். இந்த சரீரம் என் இராஜாவுக்கு முழுமையான ஊழியம் செய்ய பயன்படத்தக்கதாக, அதன் மீதான என்னுடைய வல்லமையை/அதிகாரத்தை நான் நாளுக்கு நாள் பெருக்கிக்கொள்வேன் என்று நான் தீர்மானித்துள்ளேன். நான் முட்டாள்தனமான காரியங்களைச் செய்வதில்லை. தேவன் என்னை பாதுகாக்கின்றாரா என்று அறியும்படிக்கு, ஆலயத்தின் உப்பரிகையிலிருந்து நான் குதிக்க மாட்டேன். மாறாக, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலினால் என்னுடைய புதிய எஜமானுக்கு என்னால் முடிந்தமட்டும் ஊழியம் புரிய இந்த சரீரத்தை நான் பயன்படுத்துவேன்.

இவைகள் அனைத்தும், வரப்போகிற யுகத்திற்கு மாத்திரமல்ல, நித்திய காலத்திற்கும் உரிய நம்முடைய மாபெரும் எதிர்கால வேலைக்கு அவசியமான குணலட்சணத்தை வளர்த்துவதற்கும் அவசியமாயுள்ளது. நாம் அனைவரும் கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரராகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம். அது என்னவென்று நம்மால் கிரகிக்கக்கூட முடியவில்லை. நாம் ஜெயங்கொண்டவர்கள் என்று நம்மை நிரூபிக்காவிட்டால், நாம் அத்தகைய உயர்ந்த நிலைக்கு ஒருபோதும் தகுதியடைய மாட்டோம். ஜெயங்கொள்ளுதல் என்பது, குணலட்சணங்களை வளர்த்து கர்த்தருக்குள்ளான பலத்தில் வளருவதாகும். ஜெயங்கொள்ளுகிறவர்களைத்தான் அவர் அழைப்பதாக அறிவித்தும் உள்ளார்.

## பலி செலுத்துபவர்களுக்குரிய தெய்வீக கைமாறு

உலகமானது, தங்கள் சரீரங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு முழுமையான இசைவோடு கொண்டுவருவதற்கு ஆயிரவருட காலம் பெற்றுள்ளனர். மேலும், அவர்கள் அவர்களின் மாம்ச நியாயமான விருப்பங்களை தியாகம் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆனால், தற்போதைய அழைப்பை ஏற்றுக்கொண்டவர்களாகிய நாம் நம்முடைய மாம்சத்தின் விருப்பங்களை --2801--

பலி செலுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், நமக்குத் தேவையான குணலட்சணத்தை வளர்த்துவதற்கு நமக்கு மிகவும் குறைவான காலமே காணப்படுகின்றது. யார் தங்களுடைய ஜீவனை கிறிஸ்துவோடு ஒப்புக்கொடுக்க விருப்பத்துடன் காணப்படுகின்றார்களோ, அவர்களைத்தான் தேவன் இப்பொழுது தெரிந்துகொண்டு வழி நடத்துகின்றார். இத்தகையவர்கள் அவரை பிரதானமாக அன்புகூருவதால், இந்த பரிசுத்தவான்களை தமது சம்பத்து என்று அழைக்க தேவன் பிரியம் கொண்டுள்ளார். தேவன் எவ்வித நன்மையையும் இவர்களுக்கு விலக்கி வைப்பதில்லை. "எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (1 கொரிந்தியர் 2:9). மாம்சத்தின்படி ஜீவியாமல், ஆவியின்படி ஜீவிக்கிற இவர்கள் கிருபையிலிருந்து கிருபைக்குக் கடந்து செல்கின்றனர்.

உலகத்தாரைப் பொறுத்தமட்டில் சபை ஜனங்கள் மிகவும் கஷ்டங்கள் படுகிறவர்களாக தோன்றலாம். "சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (அப்போஸ்தலர் 14:22; 2 தீமோத்தேயு 3:12) என்று வேதாகமம் கூறுகின்றது. ஒரு மனுஷன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவை பின்பற்றாதவரையிலும், அவன் அவருக்கு சீஷனாக இருக்க முடியாது. மாம்சத்தின் செய்கைகள் அழிக்கப்படும் அனுபவங்களில் களிக்கூருமளவு வளர்ச்சியடைய வேண்டும். மற்றவர்கள் வெறுக்கின்ற (வேதனை) விஷயங்களில் நாம் களிக்கூருவதற்கான காரணம், நாம் சுபாவத்தில் அவர்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்றில்லாமல், களிகூருவதற்கான காரணத்தை நாம் அறிந்துள்ளோம் என்பதேயாகும். இதுவே நமக்கான தேவனுடைய திட்டமாக இருக்கின்றது என்று நாம் அறிவோம். மேலும், மாம்சத்தின் சித்தம் மற்றும் மாம்சத்தின் விஷயங்களை அழிப்பதன் மூலம் நாம் தேவ தயவில் வளரலாம்.

"உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறலில்லை" (சங்கீதம் 119:165). ஆகவே, இவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய சமாதானம் ஆளுகை செய்கின்றது. இவர்கள் தங்களின் அனைத்து விஷயங்களும், தெய்வீக பராமரிப்பின் கீழ் இருக்கின்றது என்று அறிவார்கள். உலகத்திடம் பிரச்சனைகளும், உபத்திரவங்களும், பயங்களும் காணப்படுகின்றது. இவ்வுலகத்தின் பொருட்களில் ஐசுவரியவான்களாக இருக்கின்ற சிலர், தாங்கள் ஏழ்மையில் மரித்துவிடுவார்கள் என்று அச்சம் கொண்டுள்ளனர். அநேக கருமிகள் தாங்கள் ஏழ்மைக்குள் போய்விடுவோம் என்ற அச்சத்திலேயே அதிக பணங்களை வைத்துக்கொண்டு, மரித்து போய் உள்ளனர். ஆனால், கர்த்தரிடத்தில் தங்கள் நம்பிக்கையை வைப்பவர்கள் உலகம் அறியாததும், உலகம் எடுத்துப்போட முடியாததுமான சமாதானத்தைப் பெற்றிருப்பார்கள். இந்த சமாதானம் உலகம் கொடுக்கும் அனைத்தைக் காட்டிலும் பெரியதாகும்.

ஆனால், இவைகளை நாம் உலகத்திற்குப் புரியவைக்க முடியாது. இவைகளை அவர்களால் புரிந்துகொள்ளவும் முடியாது. சில சமயம் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டுள்ள ஜனங்களை உலகமானது, "அவன் முட்டாளா?" என்று கூறியுள்ளது. நமக்கு மிகவும் நிஜமாய்/உயிராய் காணப்படும் நம்முடைய நம்பிக்கைகளை அவர்களால் புரிந்துகொள்ள முடியாது. கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்து, அவரைக்குறித்து கற்றுக்கொள்கிறவர்கள் மாத்திரமே இவைகளைப் புரிந்துகொள்ள முடியும். நாம் நம்மை வெறுக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் தேவன் நாம் இங்கு வாழும்போதே நம்முடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் சந்தோஷங்களில் கைமாறு அருளுகின்றார் என்றும், திரைக்கு அப்பால் தமது பரிசுத்தவான்களுக்கு வாக்களித்துள்ள சொல்லிமுடியாத மகிமைகளும் அருளுவார் என்றும் நாம் அனைவரும் அறிவோம். ஆமென்!

---------------------------

**--2802--**

**R 5931**

# புதுசிருஷ்டிகளாக எப்படி நாம் வளர்ச்சியை எட்டுவது?

## HOW WE ATTAIN DEVELOPMENT AS NEW CREATURES

"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள். ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்"– ரோமர் 8:13.

நித்திய ஜீவனையடைய அத்தியாவசியமானவை என்னவென்று அப்போஸ்தலர் பவுல் விளக்குகையில்; தேவனுடைய பரிசுத்தஆவியின் மூலமாக சரீரத்தின் செய்கைகளை மரிக்கச்செய்யவேண்டும் என்கிறார். தம் சீஷராக மாறின சிலரைப்பார்த்து கர்த்தர் கூறுகிறார்; "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான். மேலும், "என் வசனத்தைக்கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"(யோவான் 3:36; 5:24). அப்போஸ்தலர் யோவான் தம் முதலாம் நிருபத்தில் எழுதுகிறார்; "நாம் சகோதரரிடத்தில் அன்புகூறுகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்". மேலும், "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்"(1யோவா3:14; 5:12).

நம் கர்த்தர் பேசின வார்த்தைகளுக்கும், யோவான் அப்போஸ்தலன் பேசின வார்த்தைகளுக்கும், பரிசுத்த பவுல் முரணாக பேசுகிறார் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. நம் கர்த்தராகிய இயேசுவும், பரிசுத்த யோவானும் தேவனுடைய மதிப்பீட்டிலிருந்து பேசுகின்றனர், இதுவே அங்கீகரிக்கப்பட்ட நிலைப்பாடு. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள், அவரது ஒப்புரவாக்கும் புண்ணியங்களைப் பெற்றிருந்து, ஆதாமுக்குள்ளான மரணசாபத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களுடைய தற்போதைய பலவீனங்களும், முந்தைய பாவங்களும் இந்த புண்ணியத்தால் மூடப்பட்டிருக்கின்றன. தங்களை தத்தம் செய்ததன் மூலமாகவும், பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதன் மூலமாகவும் இவர்கள் கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாயிருக்கின்றனர். இதன் காரணமாக, அப்படிப்பட்டவர்களுக்கென ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நித்தியஜீவனை இவர்கள் கிறிஸ்துவின் நீதியின் ஆடையின்கீழ் தரித்திருந்து, தங்களுக்குரியதாக்குகின்றனர். இவர்கள் இப்பொழுது "நம்பிக்கையினால் இரட்சிப்பு அடைந்துள்ளனர்".

திருச்சபை தங்கள் ஆவிக்குரிய சரீரத்தை அடைந்து, முழுபரிபூரணத்தைப்பெற்று, முடிவே இல்லாத ஜீவனை பெற்றுக்கொள்வதையே பவுல் அப்போஸ்தலன் இங்கு முழு நிறைவேறுதல் என்ற நிலைப்பாட்டிலிருந்து பேசுகிறார். இது நம் உயிர்த்தெழுதலின் மூலமாக மட்டுமே அடையமுடியும். கண்டிப்பான தன்மையில் கூறுவோமாகில், எந்த ஜீவனும் என்றென்றைக்கும் நிலைத்திராவிடில், அது நித்தியத்துவம் உடையதல்ல. மேலும் நாம் நமது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்வரைக்கும் இதை தீர்மானிக்கமுடியாது. நாம் தேவன் வைத்துள்ள நிபந்தனைகளையும் வழிமுறைகளையும் உண்மையாய் எவ்வளவுதூரம் நிறைவேற்றுகிறோமோ, அவ்வளவாக அது நமக்குரியதாக மதிப்பிடமுடியும். மரணதண்டனை முற்றிலுமாக அகற்றப்பட்டபோதும், இந்த சூழ்நிலைகள் தயவு நிறைந்ததாய் இல்லை. ஆகவே தற்கால பூமிக்குரிய நிலைமைகளின்கீழ், ஜீவன் என்றென்றைக்கும் நிலைத்துநிற்க முடியாது. ஜீவன் நித்தியத்துக்கும் நிலைபெறவும், சந்தோஷத்தின் முழுமையை அடைவதற்கும் முன்பாக, நிலைமைகளும் தட்பவெட்ப சூழ்நிலைகளும் பெரும் மாற்றங்களை அடையவேண்டும்.

நாம் புதிய சிருஷ்டிகளாக ஆவியில் ஜெநிப்பிக்குதலை– அதாவது ஜீவனுக்குள்ள கருவை பெற்றோம். இது வளர்ச்சியடைந்தவரைக்கும் பூரணத்தன்மையை உடையதாய் இருந்தது. ஆனால் இது முடிவில் பரிபூரணமாகவும், முழுமையாகவும் புதுசிருஷ்டிகளாக முதலாம் உயிர்த்தெழுதலில் பிறக்கும்வரை தொடர்ச்சியாக வளரவும், அதிகரிக்கவும், மேம்பாடு அடையவும் வேண்டும்.

"முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவர்கள் பரிசுத்தவானும் பாக்கியவானுமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் இரண்டாம் மரணத்திற்கான அதிகாரம் இல்லை"

### பரிசுத்தஆவியின் கிரியை நம்முள் நிகழவேண்டும் :–

ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த வகுப்பாரைக்குறித்து அநேக புத்திமதிகள் கூறப்பட்டுள்ளன. இவை பொதுவான உலகின் ஜனங்களுக்கு பொருந்தாது. ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய புத்திரர்களாக ஏற்றவேளையில் நமது பிறப்பை அடைய, எவ்வாறு நம்மை தயார்ப்படுத்துவது என்று நமக்கு அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார். இந்த மாபெரும் ஆயத்தப்பணியை ஆவியின்மூலமாக, தேவவல்லமை மூலமாக நாம் நிறைவேற்றவேண்டும் என்று அவர் கூறுகிறார். தேவ வல்லமை அல்லது ஆவி, பல்வேறு வழிகளில் கிரியை செய்கிறது. உதாரணமாக, தேவசெய்தியாகிய சத்தியம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது, தேவனுடைய மாபெரும் திட்டத்தின் வேறுபட்ட அம்சங்களுக்கு வடிவம் கொடுக்கிறது, நம்மைக்குறித்த கர்த்தரது சித்தம் என்ன என்று காண்பிக்கிறது. இத்திட்டத்தை நாம் எந்தளவு அதிகம் கற்று புரிந்துகொள்கிறோமோ, அந்தளவு அதிகமாக இந்த பரிசுத்த தேவவல்லமை நம் இருதயங்களில் கிரியை

செய்யும். நம் உடன்படிக்கை எந்தளவு ஆழமாய் உள்ளதோ, அவ்வளவு அதிகமாக கர்த்தருடைய நோக்கங்கள் எல்லாவற்றிலும் அதிக உத்வேகம்கொண்டு, தேவனுக்கு பிரியமானவைகளை அதிக ஆர்வத்தோடு செய்ய நாம் வாஞ்சையாயிருப்போம்.

தேவன் தம் பரிசுத்தஆவியின் வழியாக, இந்த விசேஷித்த வகுப்பாரிடத்திலே தற்போது செயல்பட்டுவருகிறார். தேவனுடைய வல்லமையின் இயக்கமே பொதுவான வழிமுறையில், இயற்கையாகிய உலகில், தேவ ஆவியாகிய அவரது வல்லமையின் ஆதிக்கத்தின் விளைவாகவே அனைத்தும் நிலைத்திருக்கிறது. ஆனால் நமது திறவு வசனத்தில் அப்போஸ்தலர், ஆத்துமாமேலுள்ள தேவஆவியின் ஆதிக்கத்தைப் பற்றியே குறிப்பாய்ப் பேசுகிறார். புதிய ஏற்பாட்டின் வேத எழுத்துக்களில் பரிசுத்தஆவியின் வேலை என்பது நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளை ஏற்று தங்களை ஒப்புக்கொடுத்த தேவ பிள்ளைகளானவர்களிடத்தில் மட்டுமே நடப்பதாக கூறப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அனைவரும் கர்த்தருடைய விசேஷ பராமரிப்பின்கீழ் இருக்கின்றனர். தேவன் இந்த நற்கிரியையை நம்முள் துவங்கியிருக்கிறார். இது மனிதராலோ, மனிதரைக்கொண்டோ உண்டானதல்ல. ஆகவே தேவனால் துவங்கப்பட்ட இந்த வேலையை நிறைவேற்றிமுடிக்க, தேவனை நோக்கிப் பார்க்கவேண்டும், நமது முழுமையான, இருதயப்பூர்வமாகன ஒத்துழைப்பை அவருக்குத் தரவேண்டும்.

தேவ வசனத்திற்குள் நாம் நுழைந்து, ஜெப சிந்தனையோடு அதைப் படிக்கவும், இதற்கென அவரது பராமரிப்பு நமக்கு ஏற்பாடுசெய்துவைத்துள்ள எல்லா உதவிகளையும் பயன்படுத்தவேண்டும். இவ்வாறு, அந்த வசனத்திற்கான விளக்கத்தை கற்கத்தேடி, நமது ஜீவியத்தில் அதை வெளிப்படுத்தவேண்டும். நம் சரீரங்கள் சக்தியடையவும், போஷிக்கப்படவும் இயற்கை உணவுவகைகளை உட்கொள்வது அவசியமானது, அதுபோலவே, தேவன் ஆவிக்குரிய உணவை நமக்கு தந்திருக்கிறார். இதனால் நாம் ஆவிக்குரிய உணவையும், பலத்தையும் அடைந்து, அவரது சித்தத்தை உணர்ந்துகொள்ளமுடியும். நாம் ஜெநிப்பிக்கப்பட்டபிறகு, தேவனது பரிசுத்தஆவி மூலமாக, நம் உள்ளும் புறம்பும் நடைபெறும் அவரது செயல்பாடுகள் ஒரு படிப்படியான வேலையாகும். நம்மில் அநேகர் தங்கள் பழைய தவறான நம்பிக்கைகளின் குழப்பங்களால் சூழப்பட்டிருப்பதால் முதலாவது கண்ணோட்டத்திலேயே தேவனது ஆழமான காரியங்களைக் காணமுடியாதிருக்கிறது. ஆகவே நாம் நம்மைப்போன்ற விலையேறப்பெற்ற விசுவாசத்தில் உள்ளவர்களை சந்தித்து, அவர்களோடு இணைந்து படிக்கவேண்டியிருக்கிறது. தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் ஜீவிக்கின்ற சிலருக்கு, இது ஒருவேளை சாத்தியமில்லாதுபோனால், எழுதப்பட்ட புத்தகங்கள் வாயிலாகவாவது, சகோதரர்களை சந்திக்க அவர்களால் கூடும்.

**தத்தம் செய்தலின் முக்கியத்துவம் :–**


தேவனிடத்தில் தன்னை முழுவதும் அர்ப்பணித்தலின் முக்கியத்துவத்தைக் குறித்து நன்கு தெளிவாக புரிந்துணர்வு அடைந்தபிறகு, இப்பாடத்தைக்குறித்த நம் சிந்தனை படிப்படியாக மாற்றமடையும். தேவனிடத்தில் நாம் ஆரம்பத்தில் வந்தபொழுது, கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்வதும், அதோடுகூட, கண்ணியமான ஒரு நல்ல ஜீவியம் மற்றும், ஒழுக்கவாழ்வு இருந்து, சட்டப்பூர்வமான ஏதாவது ஒரு வழிகளில் உல்லாசமாக வாழ்தலும், நம் சரீரங்களை நன்கு பராமரித்தலும், ஞாயிற்றுக்கிழமையும் மற்ற நாட்களில் நடைபெறும் கூடுகைகளிலும் கலந்துகொள்ளுதலுமே தேவசித்தம் என்ற சிந்தனையை நம்மில் அநேகர் கொண்டிருந்தோம். இதைச்செய்யாத அனைவரையும் இழந்துபோனவர்கள் என்றும், இதனால் அவர்களுக்கு எதிர்காலத்தின் நம்பிக்கை இல்லை என்றும் கருதினோம். ஆனால் இது ஒருபோதும் தேவதிட்டமாகாது, இதை தற்போது நாம் நன்கு கற்றிருக்கிறோம். கிறிஸ்துவின் சபை மனித சுபாவத்தையும், அதன் ஆர்வங்களையும் அழிப்பதன்மூலமும், பூமிக்குரிய எல்லா நம்பிக்கைகளையும், குறிக்கோள்களையும் விட்டுவிடுவதுமே பரலோக சுதந்திரத்தை அடைய ஒரேவழி என்று தேவன் நமக்கு காண்பித்திருக்கிறார்.

நமக்கு இது ஒரு புதிய கருத்தாக ஆரம்பத்தில் இருந்தது. அதிலிருந்து ஒரு கேள்வியும் முன்வைக்கப்பட்டது; “நான் என் மனித சுபாவத்தைக் கொல்லவும், அடக்கம்பண்ணவும், தேவன் உண்மையாகவே விருப்பமாயிருக்கிறாரா ? சுபாவத்திலேயே என்னுள் இருக்கும் தாலந்துகள் அனைத்தையும் வளர்க்கவும், அவற்றில் அதிகமானவற்றை நான் வெளிக்கொணர வேண்டாமா ?” தேவனது பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்படாத ஒருவர் கூறுகிறார்; “ஒரு எல்லைக்கோட்டை நிர்ணயித்து, அதற்குள் உங்களைக் காத்துக்கொண்டு, உங்களது சுபாவத்தின்படியான பேராவல்களை பின்பற்றுங்கள்” ஒரு நல்ல திரையரங்கில் சினிமா பார்க்கவும், அல்லது பேஸ் பால் விளையாட்டு விளையாடவும் செல்; பொழுதை நன்கு செலவிடு. ஒரு கோப்பை மதுபானம் உன்னை சேதப்படுத்தாது, பருகு. இசை அல்லது ஓவியம் அல்லது மற்ற எதுவாயினும் இயல்பாகவே உனக்கு ஆற்றல் இருந்தால், அவற்றை பிரயோஜனப்படுத்துவது உன் கடமை”. இது உலகப்பூர்வமான ஆலோசனை.

தாலந்து பற்றின இயேசுவின் உவமையில், ஒரு பிரபு, தன்னிடமிருந்த பல ஊழியர்களுக்கு தாலந்துகளை கொடுத்தான். இந்த தாலந்துகள் அந்த எஜமானுக்கு செய்யும்

ஊழிய வாய்ப்புக்கள். எஜமான் ஒவ்வொரு ஊழியக்காரனது கரங்களிலும் வாய்ப்புகளைக்கொடுத்து, அதை வளர்த்துக்கொள்ளும்படி எதிர்பார்த்திருந்தார். அவ்வாறே நம் பரலோக கர்த்தரும், தன் ஊழியக்காரர்கள்முன்பாக குறிப்பிட்ட சில வாய்ப்புக்களைக் கொடுத்து, அதில் அபிவிருத்திஅடைந்து, தமக்கு மகிமை சேர்ப்பார்கள் என்றநோக்கில், அவனவனது திறனுக்குத் தக்கவாறு அதை செலவழிக்க ஏற்பாடுசெய்தார். அவனவனது சுபாவ ஆற்றலுக்கு இசைவாகவும், அதற்கு இடையூறு ஏற்படுத்தாதவாறு, இந்த வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. ஆனால் நாம் அடைந்துள்ள ஒவ்வொரு ஆற்றலையும் – அது தேவனுக்கு மகிமை வருவித்தாலும், வருவிக்காவிடினும் கட்டாயம் அபிவிருத்திசெய்யப்படவும், பயன்படுத்தப்படவும் வேண்டும் என்று இதற்கு அர்த்தமாகாது. தேவனுக்கு மகிமையை வருவிக்க, நம் எல்லா வல்லமைகளையும் புதிய சிருஷ்டிகளாக நாம் பயன்படுத்தவேண்டும். அவ்வாறு அவர்கள் உபயோகிக்கமுடியாவிடில், நாம் அவர்களுக்காக தியாகம் செய்து, நம் பலியின் உடன்படிக்கைக்கு இசைவான வழிகளில் அவர்களுக்காக செலவிடவேண்டும்.

**திராட்சத்தோட்டக்காரர் தன் திராட்ச செடியிடம் எப்படி தொடர்புகொள்கிறார் ?**



தன்னை தத்தம்செய்து இந்த பரலோக வழிக்குள் நுழைந்திருக்கிற ஒவ்வொருவரும், தேவனுடைய கரங்களில் தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்று நம்மால் கூறமுடியும். உங்கள் சிந்தையை புதுப்பித்து, உங்களை முழுமையாக மறுரூபப்படுத்தும்படி கர்த்தரிடம் நீங்கள் கேட்டுக்கொண்டுள்ளீர்கள். இதன் காரணமாக, அவர் வாக்குத்தத்தம் செய்துள்ள மகிமையுள்ள நிலைமைக்கு நீங்கள் ஆயத்தப்படுத்தப்பட்டு, பொருத்தமானவர்களாக ஆக முடியும். இதனால் உங்கள் குருவால் நீங்கள் பயிற்றுவிக்கப்படும் திசையை நோக்கி உங்கள் வல்லமைகள் அனைத்தும் திரும்பும். திராட்சத் தோட்டக்காரனின் பராமரிப்பிலிருக்கும் திராட்சச்செடி, ஒருவேளை பகுத்தறிவோடு பேசுமாகில், "இலைகளை அபரிதமாக வளர்ச்சியடையச்செய்து, கிளைகளுக்கும் , மேற்படரும் கொடிகளுக்கும் நாற்புறமும் அனுப்பி, எனக்கு உதவியாயிருக்கும்படி வளர்ச்சியடையச்செய்வது எனது சுபாவம்" என்றுகூறும். ஆனால் திராட்சத் தோட்டக்காரரோ, தாவரஉயிர்ச்சாறின் பலத்திற்கு ஊறுவிளைவிக்கிற, தேவைக்கதிகமாய் வளர்ந்துள்ள கிளைகள் மற்றும் கொடிகளை தீர்மானமாக வெட்டிவிடுகிறார். தேவையற்ற இவைகள், மரத்தையும் இலைகளையும் மட்டுமே வளர்த்து, திராட்சை செடியானது முறையற்ற ஆதாரங்கள்மேல் வளர காரணமாகின்றன. திராட்சத் தோட்டக்காரரோ கனிகளைத் தேடுகிறார், விலையேறப்பெற்ற அபரிதமான கனிகளைத் தேடுகிறார்; இந்த தகுதியை எட்டுவதற்கு தடையாய் இருக்கின்ற எதுவாயினும் பலியிடப்படவேண்டும். கீழ்நோக்கி இழுக்கப்படும் திராட்சச்செடியானது, மேல்நோக்கி வளரும்படி திராட்சத்தோட்டக்காரரால் பயிற்றுவிக்கப்படவேண்டும். அவ்வாறே நம் பரலோகத்தின் உன்னத தோட்டக்காரர் தம் ஆவிக்குரிய திராட்சச்செடியை பயிற்றுவிக்கிறார். இதனால் நாம் அவரது நாமத்திற்கென்று ஏராளமான கனிகளை உற்பத்திசெய்கிறோம்.

நாம் இனியும் உலகிற்குரியவர்களல்லர். வேதாகமத்தில் நமக்கென்று தேவன் குறித்துவைத்துள்ளதே தற்போது நமது வாழ்க்கை முறையாக இருக்கவேண்டும். நம் சரீரத்தின் செய்கைகளை கொன்று அடக்கம் செய்யாவிடில், ஜெயங்கொள்கிறவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிற நித்தியஜீவனை ஒருபோதும் நம்மால் அடையமுடியாது. நமக்கென்று வைத்திருக்கிற மகிமை, கனம், அழியாமைமையாகிய நித்திய ஜீவனை அடையவேண்டுமானால், போதகராகிய நமது மாபெரும் பயிற்சியாளர் கொடுத்திருக்கிற அறிவுரைகளோடு நாம் நம்மை இணங்கச்செய்யவேண்டும். பிரயோஜனமற்ற நமது சொந்த பலத்தால் இவற்றை நம்மால் செய்யமுடியாது, இது சாத்தியமற்றது. நாம் நம் இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படும்போது, நம் பரலோகத் தகப்பன் நம்முள் கிரியை செய்வதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

**சரீரத்தின் செய்கைகளை அழித்தல் :–**

சரீரத்தின் செய்கைகளை அழித்தல் என்ற சொற்றொடரின் உண்மைக் கருத்தானது, மற்றவர்கள் கூறும் சரீரத்தை அழித்தலின் கருத்துக்கு ஒத்திருப்பதில்லை. வரலாற்றின் பார்வையிலிருந்து பார்ப்போமானால், தற்கால நடைமுறை பழக்க வழக்கங்களின்படி, தங்கள் சரீரத்தை தண்டித்து, சித்திரவதை செய்துகொள்ள வேண்டுமென்று சிலர் கற்பனை செய்துகொண்டிருக்கின்றனர் என நாம் அறிகிறோம். அவர்கள் சரீரத்தில் இரத்தம் வரும்வரை சவுக்கால் அடிக்கின்றனர். அதன்பிறகு, அவர்கள் மயிராலான வெளிப்புற மேலங்கியை அணிந்து கொள்கின்றனர். சிலசமயங்களில் அந்த மாம்சத்தின் ஆறாதபுண்கள்மேல், மயிர் குத்தும்போது சீழ்பிடிக்கிறது. சிலர், மற்றவர்கள் தங்கள் உடலின்மேல் நடந்துபோகும்படி படுத்துக்கொண்டு, அவர்களது பாதங்களால் மிதிபட்டு, தங்கள் சரீரங்களை அவமானத்துக்குள்ளாக்குகிறார்கள். இவ்வாறு செய்பவர்கள் ஒரு நோக்கத்தின் அடிப்படையில் செயல்படுகிறார்கள் என்று நாம் கேள்வி கேட்பதிலோ, இது ஒரு மோசமான நோக்கமென்று யோசிப்பதிலோ எப்பயனுமில்லை. ஆனால் வேதாகமம் கூறும் சரீரத்தை அழிவுக்குள்ளாக்குதலைக் குறித்த கருத்துக்களை அவர்கள் முற்றிலும் தவறாக புரிந்திருக்கின்றனர்.

மாம்சீக சுபாவத்தின் இயல்பான பழக்க வழக்கங்களையே நாம் அழிக்கவேண்டிய சரீரத்தின் செய்கைகளாக அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறார். ‘‘இவ்வாறெல்லாம் செய்வது என்னுடைய சுபாவம்’’ என்று ஒருவர் கூறுகிறார். ஆனால் நாம் அனைவரும் பாவிகளாகவே பிறந்தோம், பிறந்த அதே வழியிலேயே தொடர்ந்து செல்லக்கூடாது என்று வேதாகமம் கூறுகிறது. நாம் இப்பொழுது பரிசுத்தஆவியாகிய தேவஆவியைப் பெற்றிருக்கிறோம், நாம் எந்த வழியில் செல்லவேண்டுமென்று இது நமக்கு வழிகாட்டுகிறது. நாம் பெற்றுள்ள புதிய சிந்தை முழுவதும் ஒப்புதல் அளிக்காத நம்மிடமுள்ள ஒவ்வொன்றையும் அழிக்கவேண்டும். ஏற்கனவே மரித்ததாக கருதப்பட்ட பழைய சிருஷ்டியின் மரணத்தை தடைசெய்யும் எல்லாவற்றையும் அழிக்கவேண்டும். ஏனெனில் இது புதிய சிருஷ்டியின் வளர்ச்சியை தடைபண்ணுகிறது. எல்லா சமயங்களிலும் விரோதமாகப் போர்புரிந்துவருகிற அழிவுக்குரிய சரீரத்தின் குறிப்பிட்ட சில அடிப்படைக் காரணிகள் அழிக்கப்படவேண்டும். மனித சரீரத்தின் மற்ற தன்மைகள் நீதியின் ஊழியத்திற்கு உபயோகமாகும்படி பயன்படுத்தவேண்டும். நாம் முன்பு பாவத்தின்கீழ் விற்கப்பட்டோம், ஆனாலும் திரும்பவும் விலைகொடுத்து மீட்கப்பட்டோம், தற்போதோ கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருக்கிறோம்.

நாம் இப்பொழுது நம் மனித சரீரத்தை ஒரு பூமிக்குரிய மண்பாண்டமாக உபயோகித்து, தேவனை மகிமைப்படுத்தவேண்டும். இந்த மனித மண்பாண்டத்தை எப்படி உபயோகிப்பது என்று பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலின்கீழ் நாம் அறியவேண்டும். முதலாவதாக நாம் நினைவில் கொண்டிருக்கவேண்டியது என்னவென்றால், மனித சரீரம் மரித்ததாக கருதப்படுகிறது, நாம் நம்மை தத்தம் செய்தபொழுது கிறிஸ்துவோடுகூட மரித்திருக்கிறோம், கிறிஸ்துவோடு பலியாகியிருக்கிறோம். இரண்டாவதாக, மரித்ததாகக் கருதப்பட்ட இந்த சரீரத்தை, புதிய சிருஷ்டிக்கும், அதன் உடைமைக்கும் ஊழியம்செய்யும்படி அந்த ஊழியக்காரனை உசுப்பிவிடவும், துரிதமாக செயல்படவும் புத்துயிர் அளிக்கவேண்டும். புதிய சிருஷ்டியின் நலன்களுக்காக இந்த சரீரத்தின் ஒவ்வொரு உடைமையையும் பயன்படுத்தமுடியும், அவ்வாறே உபயோகப்படுத்தப்படவேண்டும்.

‘‘நான் அடைந்திருக்கிற இயல்பான ஆற்றலை நான் உபயோகித்து, மற்றவர்களுக்கு மகிழ்ச்சியையும், தேற்றுதலையும் வருவித்தோ, அல்லது மறுசீரமைப்பின் சில வேலைகளை முன்னெடுத்துச் செல்லவோ என்னால் முடியும்’’ என்று நாம் சொல்லக்கூடாது. நமக்கு முன்பாக உள்ள கேள்வி என்னவெனில், ‘‘இந்த சுபாவ ஆற்றலை அல்லது தாலந்தைப் பயன்படுத்தி, புதிய சிருஷ்டிக்கு உதவவே அல்லது வருங்கால ஊழியத்துக்கென கிறிஸ்துவின் மணவாட்டியை ஆயத்தப்படுத்தவும், கூட்டிசேர்க்கவுமான பணியில் உதவிசெய்வேனா?’’ என்பதேயாகும். இதுவே நமது தற்போதைய பணி. மற்ற காரியங்களைச் செய்யும் திறனுள்ளோரும் இருக்கின்றனர். ஆகவே புதியசிருஷ்டிகளாக நாம் வளர்ச்சியடையும் செயல்முறையும், மகா பரிசுத்த விசுவாசத்தில் சகோதரர்களை கட்டியெழுப்ப உதவுவதற்கும், சிதறடிக்கப்படாத கவனம் செலுத்தப்படவேண்டும். மேலும் பழைய சுபாவத்தோடுகூட, தொடர்ச்சியான போராட்டம் புதுசிருஷ்டி போராடவேண்டியுள்ளது. மாம்சத்துக்கெதிராக ஆவி போர்புரிவதை, ஆவியின் யுத்தம் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் சாயலுக்கு நாம் வளர்ச்சியடைவதற்கு இங்கு, விசேஷித்தவிதமாக விசுவாசவீட்டாருக்கு நன்மை செய்வதும், நாம் தத்தம் செய்த பிரதிஷ்டையின் பொருத்தனைகளில் குறுக்கிடாமல், நமக்கு கிடைக்கும் வாய்ப்புக்கு தக்கதாக, எல்லா மனுஷருக்கும் நன்மைசெய்வதும் அத்தியாவசியமாகக் கருதப்படுகிறது.

நமது மாம்சம் மரித்ததாகக் கருதப்படுகிறது, ஆனால் நிஜமாகவே மரிக்கவில்லை. ஆகவே நாம் தொடர்ச்சியாக காவல் காக்கவேண்டியுள்ளது. நமது நாவுகள் கவனமாகவும், ஜெபத்துடனும் காக்கப்படவில்லையெனில், பழிசொற்களைப் பேசுவதால் சட்டப்படி தண்டனைக்கு உட்பட்டிருக்கும். நம் அங்கங்கள் அனைவரும் தேவனிடத்திற்கும், அவரது திட்டத்துக்கும் இணக்கமாக கொண்டுவரப்படுவார்கள். நாம் அடிக்கடி பாடுகிற பாடலிலுள்ள இவ்வார்த்தைகளின் உணர்வுகளை நாம் கொண்டிருக்கவேண்டும்.

‘‘என் கண்கள் இயேசுவை மட்டுமே பார்க்கட்டும்’’

அவர் வழிநடத்தும்படிக்கு நாம் அவரையே தொடர்ச்சியாக உற்றுநோக்கவேண்டும். நாம் இவ்வாறு அவரை காண்பதன்மூலம், அவரது மகிமைக்கொப்பாக நாம் அதிகதிகமாக இசைவாகக் காணப்படுவோம். தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து நாம் எல்லாவற்றையும் காண அதிக பிரயாசப்படவேண்டும். நாம் மாம்சத்தில் ஒருபோதும் பூரணராக முடியாது. ஆனால் இந்த சரீரமாகிய கூடாரத்தில் குடியிருக்கும் நாள்பரியந்தம், புதிய சிருஷ்டியின் சித்தம்செய்ய இந்த சரீரத்தை வற்புறுத்துவது நமது கடமையும் பாக்கியமுமாகும்.

நம் மனித சரீரம் முன்பு பாவத்துக்கு அடிமைப்பட்டுக்கிடந்தது. இந்த தற்கால தீமை உலகின் காரியங்களுக்கும் அடிமைப்பட்டுக்கிடக்கிறது. தற்போது, ‘‘இந்த சரீரம் கர்த்தருக்கு சொந்தமானது’’ என்று நாம் கூறவேண்டும். அவரது மகிமைக்கென்று நான் என்னை கட்டுப்படுத்தவேண்டும். என் ராஜாவின் ஊழியத்தில் அதிகதிகமாகவும் முழுமையாகவும் நான் இந்த சரீரத்தை பயன்படுத்துவதற்கு, இதன் வல்லமையை நாளுக்குநாள் அதிகரிக்க வேண்டும் என தீர்மானித்திருக்கிறேன். முட்டாள்தனமாக காரியத்தை செய்ய நான் முன்வரமாட்டேன்.

நான் பரலோகத்தின் விசேஷித்த தயவுபெற்றவன் என்று சோதிக்க, ஆலயத்தின் உச்சியிலிருந்து கீழேகுதிக்க முயற்சிக்கமாட்டேன். இதற்குமாறாக, பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலின் கீழிருந்து, என்னால் இயன்றஅளவு இந்த சரீரத்தை அதிகமாக பிரயோகித்து, என் புதிய எஜமானாக ஏற்றுக்கொண்டிருக்கிற கர்த்தருடைய ஊழியத்தைச் செய்வேன்.

வருங்காலத்துக்கான நம் பணியில், இவையனைத்தும் நமது குணாதிசய வளர்ச்சிக்கு மிகவும் அவசியம். வரவிருக்கின்ற யுகத்தில் மட்டுமல்ல, நித்தியகாலம் முழுவதும் தேவையாயுள்ளது. நாம் கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்திரராகும்படிக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். இதன் அர்த்தத்தை நம்மால் அரிதாகவே பற்றிக்கொள்ளமுடியும். நாம் ஜெயங்கொண்டவர்களாக நம்மை நிரூபிக்காவிடில், உயர்த்தப்படுவதற்கென நாம் ஒருபோதும் ஆயத்தப்பட்டிருக்கவில்லை. இதன்பொருள் என்னவெனில், ஜெயங்கொள்வதற்கு சிலகாரியங்கள் உண்மையாகவே உள்ளது. குணாதிசயத்தில் வளர்வதும், கர்த்தருக்குள் பலப்படுவதுமே ஜெயங்கொள்ளுதல் என்பதன் பொருள் ஆகும். இவ்வாறு ஜெயங்கொள்பவர்களை மட்டுமே அவர் அழைப்பதாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

**பலியிட்டவர்களுக்கு தெய்வீக சரிக்கட்டுதல் :–**

கர்த்தருடைய சித்தத்துக்கு இசைவாக அவர்களுடைய சரீரங்களை பரிபூரண இசைவுக்குள்ளாக கொண்டுவருவதற்கு உலகிற்கு 1000ஆண்டுகள் தரப்பட்டுள்ளது. அவர்களோ தங்கள் மாம்சத்தின் விருப்பங்களை சட்டப்பூர்வமாக பலிசெலுத்த அவசியமில்லை. ஆனால் தற்போதைய அழைப்பை ஏற்றுக்கொண்டபிறகு, நாம் மாம்சத்தின் ஆர்வங்களை பலிசெலுத்துவது அவசியமாயுள்ளது. மேலும், தேவையான குணாதிசயத்தை வளர்க்க, மிகவும் வரையறுக்கப்பட்ட காலப்பகுதியே கொடுக்கப்பட்டுள்ளது. தங்கள் ஜீவியத்தை விருப்பத்துடன் கிறிஸ்துவோடுகூட தத்தம் செய்தவர்களையே தேவன் தற்பொழுது தெரிந்தெடுத்து, வழிநடத்தி வருகிறார். அவர்கள் அவரை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்கிறார்கள். அவரும் தம் பரிசுத்தவான்களாகிய அவர்களை தம் சம்பத்து என்று அழைக்க பிரியப்படுகிறார். இவர்களுக்கு எந்த நன்மையான காரியமும் தடைபடாது. “கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. தேவனே தம்மில் அன்பு கூறுபவர்களுக்கு இவற்றை ஆயத்தப்படுத்தியுள்ளார்”. இவர்கள் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடந்து, கிருபையின்மேல் கிருபை அடையப் போகிறார்கள்.

உலகின் ஜனங்களோ, இவர்கள் நெருக்கடியான தருணத்தை எதிர்கொள்வதுபோல பார்ப்பர். “நீங்கள் அநேக உபத்திரவங்களின் வழியாய்ப் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவேண்டும்”. மீண்டுமாகக் கூறுகிறார்; “அன்றியும், கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருப்பவர்கள் யாவரும் துன்பப்படுவார்கள்” **(2தீமோ3:12).** தன்னைத்தான் வெறுத்து, தன்சிலுவையை எடுத்துக்கொண்டு, இயேசுவை பின்பற்றாத ஒரு மனிதன், அவருடைய சீஷனாக இருக்கமுடியாது. ஆனால் மற்றொருபுறத்தில், அந்த வளர்ச்சியின் அளவை அடைவது சாத்தியமே என்று உண்மை கிறிஸ்தவர்கள் அனைவரும், அப்போஸ்தலர் கூறியதற்கு இசைவாக இந்த எல்லா அனுபவங்களிலும் சந்தோஷமாயிருக்க முடியும். மாம்சம் மரித்தது, அடக்கம்பண்ணப்பட்டது என்று இவர்கள் மகிழ்ச்சியடைவார்கள். நாம் மற்ற ஜனங்களைவிட சுபாவத்திலேயே வேறுபட்டவர்கள் அதனால் அவர்களுக்கு அருவருப்பானவற்றில் நாம் சந்தோஷமடைகிறோம் என்ற எண்ணத்தால் அல்ல, மாறாக நாம் சந்தோஷமடைவதற்கான காரணத்தை காணவேண்டும். இது நமக்கான தேவதிட்டம் என்று அறிந்திருக்கிறோம். மாம்சத்துக்குரியவைகளான மாம்ச சித்தத்தை மரிக்கச் செய்வதன் மூலம் நாம் தேவ தயவில் வளர்ச்சியடைகிறோம்.

“உமது நியாயப்பிரமாணத்தை நேசிப்போர்க்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு இடறுதலில்லை”. ஆகவே இவர்கள் தங்களது இருதயங்களில் தேவசமாதானத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களது வாழ்வின் நடவடிக்கைகள் அனைத்தும் தெய்வீக பராமரிப்புக்குள்ளாக இருக்கிறது என்கிற அறிவை இவர்கள் அடைந்திருக்கிறார்கள். உலகத்திற்கு துன்பங்களும் பயங்களும் உண்டு. இந்த உலக உடைமைகளில் ஐஸ்வரியவானாயிருக்கின்ற சிலர், தாங்கள் தரித்திரக்கோலத்தை அடைந்துவிடுவோமோ என்ற அச்சத்தினால் கவலை கொள்கின்றனர். கஞ்சத்தனம் கொண்ட அநேகர், தாங்கள் பின்னாளில் வறுமைக்கோலத்தை அடைந்தால், அந்நேரத்தில் இந்த பணம் உதவும் என்ற நம்பிக்கையில் பெரும் பணத்தை இரகசியமாய் மறைத்துவைத்தபிறகு மரித்ததை கண்டிருக்கிறோம். ஆபத்துவரும் என்று பயந்து, அநேகர் பல்வேறு வகைகளில், பல்வேறு பொருட்களை பதுக்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் தங்கள் நம்பிக்கையை கர்த்தரிடம் வைத்திருப்போர், உலகம் அறிந்திராததும் தங்களைவிட்டு எடுபடாததுமான சமாதானத்தை அடைந்திருக்கிறார்கள். உலகம் தரக்கூடிய எல்லாவற்றைக் காட்டிலும் இது மேலானது.

ஆனால் அவர்களால் கிரகித்துக்கொள்ள முடியாதபோதும், உலகத்திற்கு நம்மால் இதைக்குறித்து விவரிக்கமுடியாது. “அவன் ஒரு முட்டாளா” என்று தங்களை தத்தம்செய்த கர்த்தருடைய ஜனங்களைப்பார்த்து உலகம் சிலசமயம் கூறக்கூடும். நமக்கு பெரும் ஆசீர்வாதத்தை நிஜமாய் அளிக்க காரணமாக இருக்கும் நம் நம்பிக்கைகளை அவர்களால் புரிந்துகொள்ளமுடியாது. கிறிஸ்துவின் பள்ளிக்குள் நுழைந்தவர்களும், அவரை

அறிந்திருப்பவர்களும் மட்டுமே புரிந்துகொள்வர். தற்போது நாம் நம்மையே வெறுக்கின்ற ஒவ்வொன்றிற்கும், தேவன் நம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், மகிழ்ச்சிகளையும் இங்கேயே அபரிதமாய்த் தருகிறார். அதன்பிறகு, திரைக்கப்பால் அவரது பரிசுத்தவான்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற, வாக்களிக்கப்பட்ட சொல்லொண்ணா மகிமைகளை நாம் பெற்றுக்கொள்வோம்.

நம் இருதயங்கள் நிலைத்திருக்கட்டும் நிச்சயத்தில்

உண்மையின் மகிழ்ச்சிகளை கண்டுகொண்ட இடத்தில்;

நம் அனலும் அன்பின் துதியும்

அதிகதிகமாய்ப் பெருகட்டும்!

ஆகாயங்களிலுள்ள நித்தியத்துவத்தையும்

மற்றுமுள்ள காணக்கூடாதவைகளை வியப்போடு காணவும்

மகிமையிலிருந்து மகிமைக்கு

இரட்சகரே, நாங்கள் எழும்புவோமாக!

---

R 5931 [Poem]

# தேவனின் யுத்தம்

**THE THOUGHT OF GOD**

யெருபாகால் என்ற கிதியோனின் படையே
போருக்கு ஆயத்தமாய் எழுந்து நிற்பீரே
பயந்தாங்கொள்ளிகள் அனைவருமே,
வீட்டிற்குச்செல்லட்டும் இப்பொழுதே
தேவ வைராக்கியம் உள்ளவரையே,
யேகோவாதேவன்வேண்டுகின்றாரே.
சத்தியம் உள்ளத்தில் அனலாக உள்ளவர்மட்டும்
நிற்கட்டும். உங்கள் பட்டயம் ஆவியின் பட்டயம்.
உங்களின் பந்தமோ, அவரது வார்த்தையே.
உங்களின் பாண்டங்கள் இந்தப் பூமியின் வலுவிலா
மட்பாண்டங்களே(பானை–உடல்)
உம் ஆண்டவர் குரலோ கேட்கும் போதினிலே,
பானைகள் யாவும் உடையட்டுமே,
பானையிலே எரிபந்தங்கள் நன்றாய் எரியுதா பாருங்கள்,
உங்கள் கையில் எக்காளம் குறிப்பிட்ட தொனியினையே,
தவறாது ஒலிக்குதா சோதியுங்கள்,
கர்த்தரின் பட்டயம் கிதியோனின் பட்டயம், என்றே
முழங்கி ஆர்ப்பரிப்பீரே.
எதிரிகள் படையோ குழப்பத்திலாழ்ந்தே
வாக்களிக்கப்பட்ட வெற்றி நமக்கே கிட்டிடுமே,
நமக்குகொடுக்கும் சமாதானமோ,
ஐனிலமீதினில் பெரிதாகும்
(ஐந்து நிலங்கள் : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை)
விசுவாசமிக்க மாபெரும் வீரரே,
உங்கள் நிலைதனில் நிலைநிற்பீரே,
இது உங்கள் யுத்தமல்ல, யுத்தம்செய்வதும் நீங்களல்ல.
தேவனின் யுத்தம் அறிவீரே,
உங்களுக்காக தேவன்தாமே போர்செய்வார்,
போரை அவரே நடத்திடுவார்,
வெற்றியும் கொடுப்பார், காண்பீரே.

----------------------------

**--2809--**

R 5933

# தத்தம் செய்வதற்கு முன்புஇருந்த சிறிதளவு துணிகரமான பாவங்கள்

## RE PARTIALLY WILFUL SINS BEFORE CONSECRATION

இரண்டு வேறுபட்ட நிலைப்பாடுகளால் பாவம் கண்ணோக்கப்படவேண்டும். எல்லோரும் பாவிகள் என்று வேதாகமம் பிரகடனப்படுத்துகிறது. ஏதேனின் முழு மனுக்குலமும் நியாயந்தீர்க்கப்பட்டது. முழு மனுக்குலமும் குற்றவாளிகளென்று தீர்க்கப்பட்டது.

**1)** இந்த பாவிகள், தவறு என்று அறிந்தே செய்ததன்மூலம் தங்கள் மனசாட்சியை ஏறத்தாழ கடினப்படுத்திக் கொள்ளக்கூடும். இவ்வாறாக மனதளவிலும், ஒழுக்கரீதியாகவும், சரீரரீதியாகவும் இன்னும் கூடுதலான சீர்கேட்டை ஏற்படுத்தக்கூடும். இல்லாவிடில், **2)** பாவத்துக்கெதிராகவும் அவர்களது சொந்த பலவீனத்துக்கு எதிராகவும் போராடவும், தங்களது குணாதிசயத்தையும், தங்கள் ஜீவியத்தையும் முன்னேறச் செய்யவும் முயற்சிப்பார்கள். இந்த இரண்டில் இவர்கள் எதைச்செய்தாலும், ஒன்று அவர்கள் முன்னேறுவார்கள் அல்லது சீர்கேடடைவார்கள்.

ஆனால் தேவன் தற்காலத்தில் உலகின் ஜனங்களோடு இந்த இரண்டு வழிமுறைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. திரும்பிவந்து, தம்மோடு இசைவாகின்ற அனைவரும் ஆயிரவருடயுகத்தின் தயவு நிறைந்த ஏற்பாடுகள் மூலம் தேவசாயலும் தயவும் பெற்று சீர்பொருந்த ஏற்பாடு செய்திருக்கிறார். அது அவர்களது பரீட்சையின் காலமாக இருக்கப்போகிறது. அவர்களது தற்கால வாழ்க்கை அவர்களுடைய குணாதிசயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றாலும், மனுக்குலத்தின் தற்போதைய போக்கின்படி அவர்கள் சென்றடையும் நித்திய இடம் தீர்மானிக்கப்படுவதில்லை. ஆயினும் அடுத்த யுகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்புக்களுக்கு கீழ்ப்படிய தற்கால அனுபவங்கள்அவர்களுக்கு உறுதுணையாய் இருக்கும். சிலரது தற்கால ஜீவியம் அவர்களது இருதயங்களை கடினப்படுத்தியிருப்பதாக தோன்றுவதால், வரவிருக்கும் யுகத்தில் மெய்யாகவே, ராஜ்யத்தின் ஏற்பாடுகளுக்கு அவர்களது இருதயம் இசைவாக வேண்டுமானால், அவர்கள் செவிசாய்த்து, கீழ்ப்படிதலைக் கற்கும் மனப்பாங்கின்கீழ் கொண்டுவர அவர்களுக்கு அநேக அடிகள் அவசியமாயிருக்கிறது. தற்போது மனிதனது செய்கை சீர்கேட்டையோ அல்லது குணாதிசய மேம்பாட்டையோ அடையச்செய்தாலும், அது அவர்களை நித்திய ஜீவனுக்கோ அல்லது நித்திய மரணத்திற்கோ கொண்டுசெல்லாது. உலகம் முழுவதும் தற்போது முதலாம் மரணமாகிய ஆதாமின் தண்டனையின்கீழ் உள்ளது.

வருங்கால வாழ்வு மற்றும் வருங்காலத்துக்குரிய நம்பிக்கை உண்டு என்றும், இந்த தண்டனைத்தீர்ப்பிலிருந்து எப்படி விடுவிக்கப்படப்போகின்றனர் என்றும், ஏன் இவ்வாறு நடைபெறவேண்டும் என்றும், தேவன் எளிதில் விளங்கும்படி அறிவித்திருக்கிறார். அதற்கும் மேலாக, நம்மில் சிலர் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருக்கிற இந்த தற்கால யுகத்தின்போது, ஒரு விசேஷசெய்தியை அவர் கொடுத்திருக்கிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் நித்தியஜீவனை அளிக்க தேவன் கிருபையாய் திட்டமிட்டிருப்பாரானால், அவரோடு இசைந்திருக்க விரும்புகிறவர்கள், தற்போது அதை பெற்றுக்கொள்வார்கள். பாவத்திலிருந்து விலகி அதற்கு எதிராக ஜீவிக்கிற நாம், தேவனுக்கும் அவரது நீதிக்கும் ஊழியக்காரர்களாவோம் என்று தீர்மானித்திருக்கிறோம். இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கிற அனைவரும் கர்த்தரால் வழிநடத்தப்பட்டு, அவரது வார்த்தையின்மூலமும் ஏற்பாடுகளின்மூலமும் அதன் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டு நடப்போர், கிறிஸ்துவின் அங்கங்களாக, சபைக்கூட்டத்தாராக ஆவார்கள். இவர்கள் எல்லாருடைய தேவைகளையும் போதுமானஅளவுக்கு நிறைவுசெய்கிற வகையில் தேவனுடைய ஏற்பாடுகள் மிகவும் விசாலமாயிருக்கிறது.

இப்பொழுது மட்டுமே மனப்பூர்வமான பாவமாகிய மரணத்துக்கேதுவான பாவம் என்பது நிலைத்திருந்து, அவர்களுக்கு நித்திய மரணமா அல்லது நித்திய ஜீவனா என்று தீர்மானிக்கும். கர்த்தருடைய நாவாக இருந்து அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார்; கிறிஸ்துவின் சபையாகிய நாம், இயேசுவிடத்திலிருந்த சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபிறகு, தேவனுடைய ஆவியைப்பெற்றபிறகு, பரலோக ஈவை ருசிபார்த்தபிறகு மனப்பூர்வமாக பாவம் செய்வோமேயானால், பாவத்துக்கென செலுத்தப்பட வேறொருபலி இனி இராமல், அழிவுமட்டுமே இருக்கும்(எபிரேயர்**6:4–6;10:26–31**). நாம் மனப்பூர்வமாக பாவம்செய்து, பாவமே மீந்திருக்குமானால், அதன்பிறகு நெறிபிறழ்ந்த சிந்தை பெற்றுள்ளதையும், கழுவப்பட்ட பன்றி மீண்டும் சேற்றுக்குள் புரள திரும்பினதைப்போல, நம் இருதயம் மாறுபட்ட சிந்தையைப் பெற்றிருப்பதையும் நம் ஜீவியம் சுட்டிக்காட்டுகிறது. சபை வகுப்பார் மட்டுமே மரணத்திலிருந்து ஜீவனுக்கு கடந்துசெல்லமுடியும். இவர்களைத்தவிர வேறொருவராலும் முடியாது. நாம் கர்த்தரோடு நேர்மையான ஒப்பந்தம் செய்துள்ளோம். அதை அவர் புறக்கணிக்கமாட்டார். அவர் அதனை நிறைவேற்றும்பொருட்டு, நம்மை தாங்கிப்பிடிப்பார். நாம் நம் உடன்படிக்கையை நிறைவேற்றி முடித்தாகவேண்டும் அல்லது தண்டனையாகிய நித்திய மரணத்தை சந்தித்தாகவேண்டும்.

**தர்சூசைச் சேர்ந்த பவுலின் விஷயம்**

நாம் தத்தம் செய்வதற்கு முந்தைய எந்த பாவமும் எது துணிகரமான பாவங்களாயிருந்தாலும் இரண்டாம் மரணத்திற்கு கொண்டுசெல்லாது. அப்படிப்பட்ட மனப்பூர்வமான பாவங்கள், நாம் தத்தம் செய்தபிறகு செய்யப்படுமானால், அதுவே நம்மை இரண்டாம் மரணத்திற்குக் கொண்டுசெல்லும். இதற்கு ஒரு

உதாரணமாக, தர்சூஸ் பட்டணத்தைச்சேர்ந்த பவுலின் அனுபவத்தை எடுத்துக்கொள்வோம். கிறிஸ்துவின் சபையைத் துன்புறுத்தினபொழுது, சவுல் மனப்பூர்வமான பாவம் செய்யவில்லை என்று நமக்குத் தோன்றுகிறது. ஏனெனில் இக்காரியங்களை செய்தபிறகு, அதை தாம் தேவஊழியம் செய்வதாக உண்மையாகவே எண்ணிக்கொண்டிருந்ததாக கூறுகிறார். பரிசுத்த ஸ்தேவானைக் கல்லெறியும்பொழுதும் அதே தன்மைக்கொப்பான மற்ற செயல்களைச்செய்தபோதும், தர்சூசைச்சேர்ந்த பவுல், தாம் தேவனுக்கு ஊழியம்செய்வதாக எண்ணிக்கொண்டிருந்ததால், எப்பேர்ப்பட்ட பலம் வாய்ந்த குணஇயல்பைக் கொண்டிருந்தார் என்பதை நம்மால் காணமுடிகிறது. நசரேத்தைச் சேர்ந்த இயேசுவின் பின்னடியார்கள் யூத நியாயப்பிரமாணத்தை மீறுகிறார்கள் என்றும், யூதமுறைமையை கவிழ்த்துப்போட முயல்கிறார்கள் என்றும் அவர் அனுமானித்திருந்தார். தேவன் ஏற்படுத்தின நியமங்களை தாம் தூணாக இருந்து தாங்கிப்பிடிப்பதாக அவர் எண்ணிக்கொண்டிருந்தார். தேவசித்தத்துக்கு முரணாக அவர் செய்துவந்த எந்த செயல்களைக்குறித்தும் அவர் எந்த அறிவுறுத்தலையும் பெறவில்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒளியால் அவர் சடுதியாய் சூழப்பட்டு, "சவுலே,சவுலே நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?" என்று கர்த்தர் கூறும் சத்தத்தைக்கேட்டார்.



அவர் திகைப்படைந்து, "ஆண்டவரே, நீர் யார்?" என்று கேட்டார். தாம் கர்த்தரை துன்பப்படுத்தினதாக கேள்வியுற்ற அக்கருத்து, அவருக்கு விநோதமாகத் தோன்றியது. ஏனெனில் தாம் தேவனுக்கு ஊழியஞ்செய்ததாக எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால் தமது தவறை கண்டுகொண்ட அத்தருணமே, தாம் கர்த்தருடைய ஜனங்களை துன்பப்படுத்தி வந்ததை புரிந்துகொண்டார். தெய்வீக சித்தத்துக்கு முழு இசைவாக தம்மை மாற்றிக்கொண்டார். தம்முடைய நேர்மையான இருதயத்தின்மூலம், தாம் மனப்பூர்வமாக தவறுசெய்திருக்கவில்லை என்று சாட்சியமளித்தார்.



பரிசுத்த ஸ்தேவானைக் கல்லெறிந்ததில் ஒருவேளை, சவுல் மனப்பூர்வமான பாவம் செய்திருந்தாராகில், கர்த்தர் அவருக்கு தோன்றியும், தம் ஊழியக்காரன் அனனியாவின்மூலம் அறிவுறுத்தியும் இருப்பார் என்று நாம் அனுமானிக்கக்கூடாது. இருந்த போதிலும், சவுல் தவறிழைத்திருந்தார், அதற்கான அடிகளையும், ஒரு சிட்சையையும் தக்கஅளவு அடைந்தார். சீர்திருத்துவதற்கு தகுந்த தண்டனையாக ஒரளவு பார்வை இழப்பு அவரது வாழ்க்கையில் அனுமதிக்கப்பட்டது. இது பின்னாளில் அவருக்கு கொடுக்கப்பட்ட வெளிப்படுத்தல்களின் பொருட்டு தாழ்மையை காத்துக்கெள்ளும் நோக்கில் அது இருந்தது– 2கொரிந்12:7–9.

வேதாகமம் கூறுவதை நாம் புரிந்துகொண்டவிதமாக, கிறிஸ்துவின் மரணத்தின் புண்ணியங்கள் மனப்பூர்வமாக செய்யும் எவ்வகையான பாவத்தையும் மூடுவதில்லை. மாறாக உள்நோக்கமின்றி நம்மால் செய்யப்படுகிற பாவங்களை மட்டுமே அவரது புண்ணியங்கள் மூடுகின்றன. பாவத்தை நேசிக்கிறவர்களும், பாவத்தை தெரிந்தெடுப்பவர்களும் இந்த யுகத்தின் சுவிசேஷசெய்தியால் ஈர்க்கப்படவில்லை என்று தோன்றுகிறது. தங்களுக்குள்ளாகவே நிறைவடை–யாதவர்களாயிருந்து, மாம்ச பலவீனத்தின் நிமித்தமாக மட்டுமே கஷ்டப்படுகின்ற சுபாவமுடையோர்க்கு இச்சுவிசேஷம் சென்றடைகிறது. கர்த்தரிடத்திற்கு வருமுன்பு, இந்த உத்தம இருதயமுடையோர் ஒரளவு மனப்பூர்வமான பாவங்களை எப்போதாகிலும் செய்திருப்பர்களானால், இவர்கள் அநேகமாக, ஒன்றில் தத்தம் செய்வதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ, அநேக அடிகள் அடிக்கப்படுவதற்கு ஒப்பான அனுபவங்களையும், சில பாடுகளையும் அடைந்திருக்கக்கூடும்.

**நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம்**

கிறிஸ்துவுக்குள்ளான புது சிருஷ்டிகளாக, ஒருவர் மாறும்போது, பழைய சுபாவத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் தேவபிரமாணத்தின் முன்பாக சட்டப்படி சரிசெய்யப்பட்டதாக நாம் புரிந்திருக்கிறோம். கிறிஸ்துவுக்குள் வருகிற எவரும் மனிதசுபாவத்துக்கு மரித்தவராக தேவனால் கருதப்படுகின்றனர். ஆனால் அவரது கடந்த வாழ்க்கையில் முறையற்ற ஜீவியம் ஜீவித்திருந்து, பிரமாணங்களுக்கு எதிராக ஊறுவிளைவித்திருப்பாராகில், தன் உடல் ஆரோக்கியத்தை பாவம் செய்ததன்மூலம் பாதிப்புக்குள்ளாயிருக்குமானால், அந்தப் பாவங்களின் வித்துக்கள் அவரது சரீரத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கும். மேலும் தனது ஜீவியம் முழுவதும் இந்த கடந்த காலத்து தவறுகளின் விளைவாக துன்பத்தை அனுபவிக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாக நேரிடும். அல்லது, உதாரணத்துக்கு கூறுவோமாகில், கிறிஸ்தவனாவதற்கு முன்பு தன் கட்டுக்கடங்கா உணர்ச்சியை ஒரு நொடி கட்டுப்படுத்தத் தவறியதாலோ அல்லது குடிபோதையின் ஆதிக்கத்தாலோ, அவன் செய்த கொடூரச்செயல் காரணமாக, தன் ஜீவியத்தின் இறுதிவரை அவரை பாதிக்கும். இதனால், இந்தப்பாவங்கள் கிறிஸ்துவின் புண்ணியத்தால் மூடப்பட்டிருக்கவில்லை என்று அர்த்தமாகிவிடாது. இது தெய்வீகப்பிரமாணத்தை மீறினதாலும், ஒருவேளை மனிதரது பிரமாணத்தை மீறியதாலும் செய்த தவறான செய்கைக்கு கிடைத்த தக்கதண்டனையாகும். அவனது பாவங்கள் ஆதாமின் பலவீனங்களின் விளைவாக செய்யப்பட்டதாகும். மாறாக, மனப்பூர்வமானதல்ல என்று துல்லியமாக கூறமுடியும். கர்த்தரிடத்தில் அவன் தன் இருதயத்தை ஒப்புக்கொடுக்கும்போது, அவைகள் இனிமேலும்

அவனுக்கு எதிராக நினைக்கப்படுவதில்லை.

தன்னை தத்தம்செய்வதற்கு முன்னதாக காணப்பட்ட கிறிஸ்தவனுடைய எந்தப்பாவங்களும், தன்னை அர்ப்பணித்தபின் நினைக்கப்படுவதில்லை என்றபோதிலும், அவன் மாம்சத்தில் இருக்கும்வரை, தன் முந்தைய பாவங்களின் விளைவாக ஏற்பட்ட பலவீனங்கள் அல்லது இயலாமைகள் அவனோடு நிலைத்திருக்கும் என்பதும், அவன் அல்லது அவள் எதிர்த்துப்போராடுவதற்கென, இந்த பலவீனங்களை அல்லது பாவத்தின் விளைவுகளை எப்பொழுதும் கொண்டிருப்பான் என்பதும் நமது கருத்தாக இருக்கின்றது. ஒருவன் கிறிஸ்துவின் ஈடுபலியின் மூலமாக மன்னிக்கப்பட்டு, தேவனுடைய குடும்பத்திற்குள் ஏற்கப்பட்டாலும்கூட, ‘‘ஒருமனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்’’ என்பது இப்பிரபஞ்சத்திற்கான தேவனுடைய பிரமாணமாக இருந்து, நம் வாழ்வில் செயல்பட்டுவருகிறது. இயேசுவின் மூலமாக மீட்பை அடைந்திருக்காவிடில், இப்பாவங்களனைத்தும் நித்திய மரணத்தை வருவிக்கக்கூடியதாக இருந்திருக்கும். பாவமானது ஒருவருடைய மனதிலும் சரீரத்திலும் அதன் தாக்கத்தை உண்டாக்காதவரை, பாவத்தில் மூழ்க ஒருவனாலும் கூடாது. மேலும் புதுசிருஷ்டி இதில் அதிக அளவு போராடவேண்டியிருக்கும். அவன் போராடிவரும் அந்தப் பாவங்கள் மற்றும் குறைபாடுகளுக்கு எதிராக, இரட்சகரின் புண்ணியத்தை அவன் நிலையாக பொருந்தச்செய்வானாகில், கர்த்தருடைய அனுதாபத்தைப் பெற்றிருப்பான். விலையேறப்பெற்ற இரத்தத்தின்மூலம் சுத்திகரிக்கப்படுவதற்காக தினந்தோறும் அணுகும் விதமாக அவனுக்கு கிருபாசனம் இருக்கிறது. மேலும் தேவையானபோதெல்லாம் அவன் அங்கு செல்லலாம்.

பாவங்களில் மூழ்கியவர்கள் தங்கள் மனதிலும் சரீரத்திலும் அதன் பாதிப்புக்களை பெற்றிருப்பர். இதை களைந்தெறிய பலவருடங்கள் தேவைப்படலாம். இந்த உண்மையானது, கர்த்தரிடத்தில் தங்களை தத்தம் செய்யாதவர்கள்கூட சுத்தமான, தூய்மையானதொரு வாழ்க்கை வாழவும், முடிந்தவரைக்கும் மனித வாழ்க்கைக்கு உரிய பிரமாணங்களுக்கு இசைவாய் இருக்கநாடவும் உதவும். முழுஉலகமும் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, இதனடிப்படையில் செயல்படுவார்களானால், அவர்கள் இதனையடுத்து வரவிருக்கும் யுகத்தில், முழு மனுக்குலமும் ஜீவனா அல்லது நித்திய மரணமா என்று பரீட்சிக்கப்படும்பொழுது மாபெரும் அனுகூலம் அடைவார்கள்.

---

R 5934

# மாம்சத்துக்கென்று விதைத்தலின் முடிவு, மரணமே

## SOWING TO THE FLESH - THE RESULT DEATH

"மோசம் போகாதிருங்கள்; தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்"– கலாத்தியர் 6:7.

நம்மை தேவனுக்கென்று தத்தம்செய்தல் மட்டும் போதுமானதல்ல, நமது ஜீவியத்தில் மறுரூபமாகும் வல்லமையை பெற்றிருக்கிறோம் என்பதை நமது ஊக்கமான நடக்கையின்மூலம் காண்பிக்கவேண்டும் என்ற உண்மையை இவ்வசனத்தில் அப்போஸ்தலர்கள் வலியுறுத்துவதாக தோன்றுகிறது. நாங்கள் புதுசிருஷ்டிகள் என்றுகூறி, வெளித்தோற்றத்தில் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு, மாம்சத்துக்கென்று தொடர்ச்சியாக விதைத்துக்கொண்டே வருவோமானால், முடிவு – நமது வெளித்தோற்றத்தின்படி இருக்காமல், நமது செய்கையின்படியே இருக்கும், நாம்அழிவை அறுவடைசெய்வோம். மற்றவர்கள் ஒருவேளை வஞ்சிக்கப்படலாம், நாமும் நம்மையே வஞ்சித்துக்கொள்வோம், ஆனால் தேவனோ வஞ்சனைக்குள்ளாக மாட்டார். நாம், அதற்கு எதிரிடையாக, கர்த்தரது சித்தத்தை நமது முழு ஆற்றலைப் பிரயோகித்து புரிந்துகொண்டு, நமது ஜீவியத்தை கையளித்து, ஆவிக்கென்று விதைப்போமேயானால், நித்தியஜீவனை நாம் அறுவடை செய்வோம்.

தேவனுக்கென்று தங்களை தத்தம்செய்து, தங்கள் சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்த பரிசுத்தவான்களுக்கே அப்போஸ்தலன் எழுதுகிறார். இவர்களது பலிகள் கிறிஸ்துவின் புண்ணியங்கள்மூலம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட இந்த புதுசிருஷ்டிகள், ஆவிக்குரிய நிலைமையில் பூரணத்தை அடைய முன்னேறிச்செல்லவேண்டும்.

இந்த வகுப்பாராக இருந்து, மாம்சத்தின்படி, மாம்சத்தின் விருப்பங்களின்படி நடப்போமானால் நாம் சாவோம். இப்படி சொல்லுவது, தேவபிள்ளைகளில் யாராவது, பூமிக்குரிய விருப்பங்களை பெற்றிருந்து, அல்லது சில தவறான அபிப்பிராயம் அவர்களது சிந்தைகளில் இருந்தால் அவர்கள் உடனடியாக மரிப்பர், அல்லது ஆவிக்குரிய நிலையில் வருங்காலத்தின் நம்பிக்கையிலிருந்து அறுப்புண்டுபோவர் என்று அர்த்தமாகாது. சொல்லவரும் கருத்து என்னவெனில், நாம் மாம்சத்தின்படி ஜீவிப்போமானால், மாம்ச இச்சைகளை நாடித்தேடுபவர்களாக இருப்போமானால், முடிவு மரணமே. இவ்வாறு ஒவ்வொரு வித்தும் மரணத்தை நோக்கியே விதைக்கப்படுகிறது. மாம்சத்துக்கென்று நாம் விதைத்தோமானால், மாம்சத்துக்குரியவர்களாக மாறுகிற நாம், அழிவை அறுப்போம்.

### சரீரத்துக்கென்று சிலஅக்கறை காட்டுதல் நிச்சயமாக அவசியம் :–

மாம்சத்துக்கென்று நாம் விருப்பப்பட்டு விதைக்கும்போது அப்படிப்பட்ட விதைத்தல், உண்மையாய் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிக்கும் வகுப்பார், மாம்சத்துக்கென்று விதைக்க விரும்புவதில்லை. மாறாக வேறொன்றிற்காக விதைக்க விரும்புகிறார்கள் என்று அவரே வலியுறுத்துகிறார். ஆனால் நாம் மாம்சத்துக்கென்று விதைப்போமானால் – அதாவது உணர்ச்சிப்பூர்வமாகவோ அல்லது புதிய சுபாவத்துக்கு முரண்பாட்டை வருவிக்கும் மற்ற பூமிக்குரிய விருப்பங்களுக்காகவோ விதைத்தலே, அதன் விளைவு தொடர்ந்து வரும். நாம் சிறந்த ஆடைகளையும், சுவையுள்ள உணவையும் அடைய விரும்பக்கூடும். மேலும் ஒரு நல்ல தெருவில் ஒரு அருமையான வீட்டில் குடியிருக்க நாம் விரும்பக்கூடும். இவைகள் பாவ காரியங்களாக கருதப்படவேண்டிய அவசியமில்லை. இவையனைத்துமே மாம்சத்துக்குரியவை. ஆனால் இங்கு அப்போஸ்தலன், இவைகளை மனதில் வைத்து நமது கட்டுரையின் ஆதார வசனங்களை எழுதவில்லை. ஆவிக்கு எப்பொழுதும் முரண்பாடாயிருக்கிற விழுந்துபோன மாம்சத்தின் காரியங்களையே அவர் யோசிக்கிறார்.

தேவவசனம் நமக்கு போதிக்கிறவற்றிலிருந்து கர்த்தர் அங்கீகரிக்காதவற்றை நாம் புரிந்துகொண்ட பின் பயிற்சிசெய்தால், அவைகள் மாம்சத்துக்கென்று விதைப்பதாகும். அதன் விளைவாக, நம் எண்ணத்திலோ, வார்த்தையிலோ, செயலிலோ ஆவிக்குரிய வல்லமை அதிகஅளவு குறைவுபடும். புதிய சிருஷ்டியும் பலவீனமாகும். இவை நம் உணவு, உடை, இருப்பிடம், நேரம் முதலியவைகள் அப்படிப்பட்ட சம்பவங்கள் மாம்சத்துக்கென்று விதைப்பதாக இருக்கலாம். கர்த்தருடைய சித்தத்தைக்குறித்து நாம் நிதானித்ததற்கு இசைவாக நாம் இந்த வழிமுறையை பின்பற்றி, நமது சரீரத்தை அடக்கி, சிறப்பாக ஊழியம் செய்வதற்கு ஏற்றநிலையை ஏற்படுத்தும் தருவாயில், நம் ஆவிக்குரிய நன்மைக்கு ஏதுவாயிராத சில உறுதியான காரியங்களில் நமது மாம்சமும் சரீரமும் பேராவல்கொள்ளும்போது, "இக்காரியங்கள் உனக்கு அதிக இழப்பைத்தரும் அல்லது உன்னால் இதை அடையமுடியாது" என்று புதுசிருஷ்டி கூறவேண்டும்.

தங்கள் மாம்சத்தை பலியாக்கினவர்கள் அநேகரில்லை. ஒருசிலரே உள்ளனர். இவ்வாறு பலியாக்கினவர்களைப்பார்த்து அப்போஸ்தலர்கள் பேசுகையில்; புதுசிருஷ்டியாகிய நான், பழைய சரீரத்துக்கு சொல்கிறேன் – "உனக்கு நன்மைக்கேதுவானது என்று நான் நினைப்பதை உனக்குத்தருவேன். உன்னை ஒரேதரம் கொன்றுவிடுவதை கர்த்தர் விரும்பமாட்டார் என்று நான் உணர்ந்திருக்கிறேன். ஏனெனில் உனது ஊழியம் எனக்குத் தேவை. ஆனால் சுயத்தைவெறுத்தலில் நான் சில பயிற்சிகளை கடைப்பிடிக்கவேண்டும் என்று கர்த்தர் என்னிடத்தில் விரும்புகிறார். ஏனெனில் உனக்கு தேவையில்லாததை நீ விரும்புவதால் உன்னுடைய விருப்பம் நிறைவேறாது. ஆயினும் இவை உன் நன்மைக்கேதுவாக தேவை என்று நான் நினைக்கும்போது, ஒருவேளை சிறிதுகாலம் கழித்து உனக்குத் தருவேன்".

**கொல்லனும் கழுதையும் :–**

புதிய சிருஷ்டி தன்னை இயக்கும் கடிவாளத்தை பழைய சிருஷ்டியின் கையில் கொடுத்து, என்ன அது படிக்கவேண்டும்., அல்லது உண்ணவேண்டும், எவ்வளவுநேரம் உறங்கவேண்டும், எந்தநேரத்துக்கு விழித்தெழவேண்டும், எங்குசெல்லவேண்டும், அங்கு எவ்வளவுநேரம் தங்கியிருக்கவேண்டும் என்பதுபோன்ற விஷயங்களை இயக்க அதிகாரம் கொடுக்குமானால், புதியசிருஷ்டி பழைய சிருஷ்டியின் கையில் முழுவதுமாக சிக்கிவிடும் இல்லையா ? புதுசிருஷ்டி வார்த்தையிலும் சிந்தையிலும் என்னசெய்யவேண்டும் என்று தீர்மானிப்பதிலும், எதை உண்ணவேண்டும், எங்குசெல்லவேண்டும் போன்ற எல்லா விஷயத்திலும் தேவனுடைய ஆவியே அதை இயக்கவும் கட்டுப்படுத்தவும் வேண்டும். நாம் ஆவிக்கென்று விதைத்தோமானால், நாம் ஆவியின்படி நடந்தோமானால், நாமே ஜெயங்கொண்டோராயிருந்து நித்திய ஜீவனை அறுப்போம். பழையசிருஷ்டியை விளையச்செய்ய நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது. அவ்வாறு விளையச்செய்தால் நாம் மாம்சத்துக்கென்றே விதைப்போராவோம். இதே நிலை தொடருமானால், பழைய சிருஷ்டியோ படிப்படியாய் வளர்ந்து, "அதை எனக்கே தரும் பழக்கவழக்கத்தை பெற்றுவிட்டாய், ஆகவே நான் அதை அடைந்துகொள்ள அனுமதித்துவிடு" என்று கூறும். இதன் முடிவோ புதுசிருஷ்டிக்கு பேராபத்தாக முடியும்.

இந்தக் காரியம் நமக்கு ஈசப் என்ற நீதிக்கதை எழுத்தாளர் எழுதின கதையை நினைப்பூட்டுகிறது. கடுங்குளிர் வீசும் ஒரு காலை வேளையில், ஒரு கொல்லனுடைய பணிமனையின் கதவுக்குள் ஒரு கழுதை தன் மூக்கை உள்ளே நுழைத்தது. பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்த தீ அதற்கு வெதுவெதுப்பை தந்தது. கொல்லனோ, கழுதையைப்பார்த்து, "வெளியே போ!" என்று சத்தமிட்டான். கழுதையோ பதிலுரையாக, "நான் என் மூக்கைத்தானே வெதுவெதுப்பாயிருக்கும்படி நுழைத்திருக்கிறேன்; நீ கஞ்சனாய் இருக்கிறாயே!" என்றது. சிறிதுநேரம் கழித்து, கொல்லன் சுற்றும்முற்றும் பார்க்கும்போது, கழுதை தன் முழு தலையையும் உள்ளே நுழைத்திருந்ததைக் கண்டு, "வெளியே போகிறாயா இல்லையா ?" என்று அதட்டினான். கழுதையோ, இப்போதுதான் எனக்கு ஓரளவு வெதுவெதுப்பான காற்றை சுவாசிக்கமுடிகிறது, என் தலை உள்ளே இருப்பதால், கொல்லனுக்கு நிச்சயமாய் எந்த பாதிப்பும் ஏற்படாது என்று கெஞ்சினது. இன்னும் சிறிதுநேரம் சென்றபிறகு, கொல்லன்மீண்டும் பார்த்தபொழுது, கழுதையின் பாதி உடலும் பணிமனைக்குள் வந்துவிட்டதை கண்டான். அப்பொழுது "வெளியே போ! வெளியே போ!" என்று உரக்கக் கத்தினான். ஆனால் கழுதையோ, தனக்கு ஓரளவே வெதுவெதுப்பு கிடைப்பதாக தொடர்ந்து வற்புறுத்தியது. ஆகவே கொல்லன் விட்டுவிட்டான். மீண்டும் மீண்டும் அவன் பார்த்தபொழுது, கழுதை முழுமையாக தன் பணிமனைக்குள் வந்துவிட்டதை கண்டு, எழுந்து குதித்து, பலமாய்க் கத்தி,"வெளியே போ!" என்று கத்தினான். ஆனால் கழுதையோ வெற்றி வாகை சூடியதாக; "நம்மில் யார் வெளியேறுவது ?" என்று கேட்டது.



உடனே சுற்றிலும் திரும்பி, கொல்லனை எட்டி உதைத்தது. கழுதையோ பணிமனையை முழுமையாக ஆக்கிரமித்தது.

**"முடிவோ மரணவழி" :–**

மாம்ச சிந்தை விரும்புவதை சிறிதுசிறிதாக விளையச்செய்யும் வழிமுறையை நாம் துவங்குவோமேயானால் நமக்கு அவ்வாறே நேரிடும். மாம்சம் பேராவல்கொள்ளும் வழியின் முடிவோ மரணம் என்று அப்போஸ்தலர் நமக்குப் போதிக்கிறார். அவ்வழியின் ஆரம்பமே மரணம் என்று பரிசுத்தபவுல் கூறவில்லை. மாறாக, அவ்வழியின் துவக்கம் மரணத்துக்கு வழிநடத்திச்செல்லும். பழையசிருஷ்டி அனுகூலம்பெற்று, கப்பலை காற்று அடித்துச்செல்வதுபோல் செல்லுமாகில், நாம் எடுத்த ஒவ்வொரு அடியும் பின்நோக்கி ஆய்வுசெய்யப்படவேண்டும். இல்லாவிடில் நம்பிக்கையற்ற நிலைநேரிடும். புதியசிருஷ்டி பழைய சிருஷ்டியைப் பார்த்து,"நீ என் எஜமானாக இருக்கமுடியாது!" என்று கூறவேண்டும். புதிய சிருஷ்டியே எஜமான் என்று பழைய சிருஷ்டியை அறியச்செய்யவேண்டும். பழைய சிருஷ்டியின் இழப்பில் புதிய சிருஷ்டி வளர்ச்சியடைகிறது, பழைய சுபாவமோ மரணத்துக்கு உட்படுத்தப்படவேண்டும்.

உலகிற்கு இக்காரியங்கள் தற்போது உண்மையில்லாததாய் உள்ளது, ஆனால் அவர்களது பாவ மாம்சம் படிப்படியாக உண்மை என விளங்கச்செய்யும். ஆயிரவருட அரசாட்சியின்போது, யாராகிலும் மாம்ச சிந்தையை விளையச்செய்தால், படிப்படியாக கர்த்தரிடமிருந்து விலகிச்சென்று, நாளடைவில் அவ்வழி முடிவில் மரணத்தை அடையச்செய்யும். ஆனால் பாவத்தை எதிர்த்து, நீதியில் வளருபவர்களோ, அவர்களது முயற்சிகளின் ஒவ்வொரு அடியிலும் உதவியை பெறுவார்கள். தற்போது,கிறிஸ்துவின் சபைக்கே முழுவதுமாக, நமது திறவுவசனம் பொருந்தக்கூடியதாயுள்ளது. ஆகவே, தற்போது நித்தியஜீவனா அல்லது நித்திய மரணமா என்கிற பரீட்சையில் நிற்கிற நாம், விழித்திருந்து ஜெபம்பண்ணுவோமாக!

கர்த்தாவே! எங்கள் பெலவீனங்களை நீர் காண்கிறீர்
எங்கள் இருதயங்கள் உம்மால் அறியப்பட்டிருக்கின்றன
களைப்புற்ற கரங்களை நீர் பலப்படுத்தும்
தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்தும்
உம் நிலைஉறுதிகொண்ட சத்தியம் பிரகடனப்படுத்தும்
ஜீவியத்தில், மரணபரியந்தம் –
புதுப்பிக்கப்பட்ட ஜீவமூச்சு வெளிப்படுத்தும்
உம் அன்பும், பாதுகாக்கும் அக்கறையும் எப்படிப்பட்டதென்று!

——————————

# உங்களைக்குறித்தும், சபையைக்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்

**அப்போஸ்தலர் 20:2-38**

*"என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."*
*(பிலிப்பியர் 4:13)*

கலகத்திற்குப் பின்னர்ப் பரிசுத்தவானாகிய பவுல், எபேசுவிலிருந்து போன பிற்பாடு, அவர் ஸ்தாபித்த ஐரோப்பியாவிலுள்ள சபைகளைச் சந்திக்கும்படி பிரயாணம் மேற்கொண்டார். கொரிந்து பட்டணத்தை நோக்கி, அவர் மக்கெதோனியா வழியில் செல்கையில், அவர் மீண்டும் எபேசுவுக்குத் தெற்கே 50 மைல் தொலைவில் காணப்பட்ட மிலேத்துவுக்குக் கப்பலில் வந்தார். ஆசியா மைனரிலுள்ள பல்வேறு சபையின் பிரதிநிதிகளும் அவரோடேகூடப் பிரயாணப்பட்டிருந்தார்கள். அவர் எருசலேம் நோக்கிப் பிரயாணப்பட்டிருந்தார்; எருசலேமிலுள்ளவர்கள் ஏழைகளாக இருந்தபடியால், அவர் பிரசங்கித்துக்கொண்டிருந்த நான்கு மாகாணத்திலிருந்து அவர்களுக்கு உதவிகளைச் சேகரித்தார். தெசலோனிக்கேயா, பெரோயா, தெர்பை மற்றும் எபேசு பட்டணத்திலுள்ள சபையின் பிரதிநிதிகளாகிய, ஏழு நபர்களும் பவுலோடு சேர்ந்து வழித்துணையாய்ப் பிரயாணம் பண்ணினார்கள். இந்தப் பிரயாணத்திற்குப் பல மாதக்காலம் தேவைப்பட்டிருக்கும் என அனுமானிக்கப்படுகின்றது. மேலும், அவர் இப்பொழுது மிலேத்துவை அடைந்திருந்த இத்தருணமானது எபேசு பட்டணத்துச் சபையின் மூப்பர்களுக்குப் பிரியாவிடைக் கொடுப்பதற்கான கடைசி சந்தர்ப்பமாக இருந்தது. எருசலேம் துறைமுகத்தை நோக்கிப் பிரயாணித்த அவர்கள் சென்ற கப்பலானது மிலேத்துவில் நிறுத்தினபோது பவுல், எபேசுவிலுள்ள மூப்பர்களை வரும்படி செய்தி அனுப்பினபோது அவர்கள் மிலேத்துவுக்கு வந்தார்கள்.

இந்த மூப்பர்களுக்குக் கொடுக்கப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகளைக் குறித்தே விசேஷமாக நம்முடைய பாடத்தில் நாம் பார்க்கப்போகின்றோம். அவர் இவைகளைப் பெருமையாகப் பேசினார் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது, மாறாக தான் பேசும் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் முழுமையாக ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களையே அவர் மீண்டும் எளிமையாகப் பேசினார். மேலும், இதில் பெருமைபாராட்டிக்கொள்ளுவதற்கும் ஒன்றுமில்லை. அவர் தனக்காகவோ அல்லது தன்னைப் புகழ்வதற்காகவோ இவைகளைக்குறித்து மீண்டும் பேசாமல், அந்தச் சகோதரர்களுக்கு அக்காரியங்களைக்குறித்து நினைப்பூட்டி, அக்காரியங்கள் அவர்களிடத்தில் நன்கு பதிய வேண்டும் என்பதற்காகவே பேசினார். அவர்கள் மூன்று வருட காலமாகத் தன்னைத் தனிப்பட்ட விதத்தில் அறிந்திருந்திருந்தார்கள், தனது ஜீவியத்தை அறிந்திருந்திருந்தார்கள் மற்றும் கர்த்தருக்கும், சத்தியத்திற்கடுத்த ஊழியங்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கடுத்த ஊழியங்களுக்கும், தான் கொண்டிருந்த அர்ப்பணிப்பையும் அறிந்திருந்திருந்தார்கள் என்று நினைப்பூட்டினார். தன்னுடைய தாழ்மையான மனதையும், தான் பெருமைபாராட்டாதவன் என்றும், தன்னுடைய நடத்தைகள் கர்வமற்றது, ஆணவமற்றது என்றும், சபையை "இறுமாப்பாய் ஆளுவதற்குத்" தான் நாடவில்லை என்றும் நினைப்பூட்டினார்; இன்னுமாக தனக்கு யூதர்களாலும், கள்ளச்சகோதரர்களினாலும் வந்திட்ட கஷ்டங்கள் மற்றும் அநேக சோதனைகளை அவர்களோடு அவர் சகித்ததையும் நினைப்பூட்டினார்.

பவுலுடைய வேலையைக்குறித்தும், அவர் சகித்துப் போராடினதைக்குறித்தும், சபைக்கு நன்மையாயிருக்கும் யாதொன்றையும் அவர் மறைத்துவைக்காததைக்குறித்தும், வாய்ப்புகள் அவருக்கு கிடைக்கும்பட்சத்தில் அவர் தனிப்பட்ட விதத்திலும், பொதுவாகவும் போதித்தார் என்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள். யூதர்களிடமும், கிரேக்கர்களிடமும் கிறிஸ்துவின் ஒரே ஒரு சுவிசேஷம்தான் உள்ளது என்றும், அது விசுவாசத்தின் மூலமும், பாவத்திலிருந்து திரும்புவதன் மூலமும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் பவுல் சாட்சி பகர்ந்திருந்தார். இப்படியாக தன்னுடைய குணலட்சணங்களின் இவ்வம்சங்கள் மீது அவர்களுடைய கவனத்தைத் திருப்புவதன் வாயிலாக, தன்னுடைய பக்திவைராக்கியம் மற்றும் உண்மையை அவர்களும் பின்பற்ற வேண்டும் என்ற தனது அடுத்த புத்திமதிக்கான அடித்தளத்தைப் போட்டார். அவர்

அவர்களது நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக்கொண்ட உண்மையுள்ள கண்காணியாக இருந்துள்ளார். ஆவிக்குரிய விஷயங்களில் அவர்கள் போஷிக்கப்படத்தக்கதாக பார்த்துக்கொள்வதிலும், அவர்களது நலனுக்கடுத்தவைகளில் வழிநடத்துவதிலும் உண்மையுள்ள மேய்ப்பராக இருந்துள்ளார். இவைகள் அனைத்தும் உண்மை என்று அவர்கள் அறிந்திருப்பதினால், இத்தகைய ஒருவரிடமிருந்து வரும் அவருடைய கடைசி புத்திமதியையும் - அதாவது அவர் அவர்களுக்குக் கொடுக்கப்போகும் மாபெரும் பாடத்தையும் - ஏற்றுக்கொள்ள நன்கு ஆயத்தமாயும் இருந்திருப்பார்கள்.

## ஆவியிலே கட்டுண்டவனாய்

தான் சரீரத்தில் சுதந்திரமாய் இருப்பினும், தன்னால் தட்டிவிட முடியாத அளவுக்கு தனது மனம் கட்டப்பட்டிருப்பதை உணர்ந்திருக்கின்றார் என்றும், தான் எருசலேமுக்குப் போக வேண்டும் என்றும், அப்படிச் செய்வதே தனக்கான கர்த்தருடைய வழிநடத்துதலாய் இருக்கின்றது என்றும், அதே வேளையில் கட்டுகளும், உபத்திரவங்களுமே தனக்கு எருசலேமில் வைக்கப்பட்டுள்ளது என்று "வரங்கள்" வாயிலாக மற்றவர்கள் மூலம் தனக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சகோதரர்களுக்குப் பவுல் அறிவித்தார். அப்போஸ்தலர் பின்னர்த் தைரியமான வார்த்தைகளைப் பேசுகின்றார். அதாவது, "அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:24, 25). மற்றவர்களைக்காட்டிலும், எபேசு பட்டணத்துச் சபையாரோடு அப்போஸ்தலர் மிகவும் நெருக்கமாக இருந்தார். இக்காரியமே அவர்களுக்கு மிகப்பெரிய ஐசுவரியமாக இருந்ததாக தெரிகின்றது. கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அவர்களோடு பவுல் அதிகக் காலம் செலவிட்டார் மற்றும் இதனால் உண்டாகியுள்ள பலன்களைப் பார்க்கையில், அவர் நீண்ட காலம் தங்கினதை நியாயப்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது. நண்பர்கள் பிரியும் விஷயம் மிகவும் வேதனையுடையதாகும். திரைக்கு இப்பக்கத்தில் இனி மீண்டும் பார்ப்பதற்கான நம்பிக்கையில்லாமல் பிரியும் சம்பவமானது இரட்டிப்பான கடும் வேதனையாக இருக்கும்.

## தேவனுடைய இராஜ்யத்தைப் பிரசங்கித்தல்

"தேவனுடைய இராஜ்யம் குறித்துப் பிரசங்கித்தலே"- கிறிஸ்துவினுடைய சுவிசேஷம் என்றுள்ள அப்போஸ்தலரின் விசேஷமான வலியுறுத்துதலை நாம் இங்குக் கவனிக்கின்றோம். இந்தச் சுவிசேஷத்தையே நாம் இன்று பிரசங்கித்துக்கொண்டிருக்கிறோம் என்று நம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமானால் நல்லது; ஒருவேளை இல்லையெனில், நாம் சரியானதைப் பிரசங்கிக்கவில்லை என்றதாகிவிடும். தேவனுடைய கிருபையானது, அவருடைய ஈவாகிய குமாரனிடத்தில் வெளிப்பட்டது. மேலும் தேவனுடைய கிருபையினால் குமாரனானவர் எல்லா மனுஷருக்காகவும் மரணத்தை ருசிபார்க்கிறவரானார். கிறிஸ்துவின் மரணமானது எப்படி நம்முடைய மனுக்குலத்திற்கு ஆசீர்வாதம் கொண்டுவரும்படி திட்டமிடப்பட்டுள்ளது என்பதில் - தேவனுடைய கிருபையானது இன்னுமாக வெளிப்பட்டுள்ளது. அதென்னவெனில்:-

(1) மனுக்குலத்தை ஆளுவதற்கும், பாவம் மற்றும் மரணத்தை அடக்குவதற்கும், சத்துருக்களால் கட்டுண்டவர்களைச் சீர்த்தூக்குவதற்கும், பரலோகத்தின் கீழ் இராஜ்யம் இறுதியில் ஸ்தாபிக்கப்படுவதன் மூலம் தேவனுடைய கிருபை வெளிப்படுகின்றது.

(2) "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல பூலோகத்திலும் செய்யப்படுவதாக" என்று நாம் ஜெபிக்கும் உலகத்திற்குரிய பொதுவான ஆசீர்வாதங்கள் வருவதற்கு முன்னதாக, அந்த இராஜ்யத்தில் அருமையான மீட்பரோடு உடன்சுதந்தரர்களாகிடுவதற்குச் "சிறுமந்தையினர்" முதலாவதாக தெய்வீக அறிவிப்பினால் அழைக்கப்படுகின்றனர். தேவனால் நமக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட காரியங்களை நாம் அறிந்துகொண்டு, இவ்விதமாக நமது அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்வதற்கு நாம் உதவிபெற்றிடவும்வேண்டி -

இருண்ட யுகத்தின் பாரம்பரியங்களினால் நமது பார்வையிலிருந்து நீண்ட காலமாய் மறைக்கப்பட்டிருந்த தேவனுடைய இராஜ்யம் மற்றும் தேவனுடைய கிருபைக் குறித்ததான இந்த விலையேறப்பெற்றச் சத்தியங்களானது - இப்பொழுது ஆவியினாலும், நம்முடைய கண்கள் பிரகாசிக்கப்பட்டிருப்பதினாலும் வெளியாகிக் கொண்டிருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி.

"தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்துவைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே, எல்லாருடைய இரத்தப்பழிக்கும் நீங்கி நான் சுத்தமாயிருக்கிறேனென்பதற்கு உங்களை இன்றையத்தினம் சாட்சிகளாக வைக்கிறேன்" (அப்போஸ்தலர் 20:26, 27) என்ற அழுத்தமிக்க வார்த்தைகளை அப்போஸ்தலர் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லையே. மூன்று வருடங்களாக எபேசு பட்டணத்துச் சபையாரோடு அவர் தங்கி போதித்த அதே விஷயங்களே, பல்வேறு சபைகளுக்கு அவர் எழுதிட்ட நிருபங்களின் வாயிலாகத் தெய்வீக ஏற்பாட்டினால் நமக்கும் வந்துள்ளது. பரிசுத்த பவுலின் செய்திகளில் - தெய்வீகத் திட்டத்தின் பாகமாயிராத நித்தியத்திற்குரிய சித்திரவதைக் குறித்த எந்த ஒரு வார்த்தையும் இடம் பெறாததை நாம் கவனிக்கலாம். பரிசுத்த பவுல், கர்த்தருடைய அருமையான ஜனங்களை உற்சாகப்படுத்துவதிலும், போதிப்பதிலும், கடிந்துகொள்வதிலும் மிகப் பொறுமையாக இருந்தார் என்பதை இந்த நிருபங்களின் வாயிலாக நாம் அறிந்துகொள்ளலாம். பவுல் தன்னை முற்றிலும் கர்த்தரிடத்தில் ஒப்புக்கொடுத்திருந்தபடியால் அவர் கர்த்தரால் அதிகம் பயன்படுத்தவும்பட்டிருந்தார்.

இங்குத் தேவனுடைய பரிசுத்த ஆவியின் செயல்பாட்டிற்கும், பரிசுத்தமில்லாத ஆவிகளாகிய விழுந்துபோன ஆவிகளின் செயல்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனிக்கலாம். இரண்டு விஷயங்களிலும்/பக்கத்திலும் எந்தளவுக்கு அந்த நபர் தனது சொந்த சித்தத்தை விட்டுக்கொடுக்கின்றாரோ, அவ்வளவாய் (ஆவியின்) கட்டுப்பாடும் காணப்படும். ஆனால், அதிர்ஷ்டவசமாக மனுக்குலமாகிய நாம் அனைவரும் நம்மை முற்றிலும் அர்ப்பணிக்க/ஒப்புக்கொடுக்க இயற்கையாகவே பயம் கொண்டுள்ளோம். இப்படியான சுபாவம் இல்லையெனில், சந்தேகத்திற்கிடமின்றி இன்று முழு உலகமும், அல்லது பெரும்பான்மையானவர்கள் விழுந்துபோன ஆவியின் கட்டுப்பாட்டிற்குள் போயிருந்திருப்பார்கள். ஆவியுலக ஊடகர்கள்கூடத் தங்கள் சித்தத்தைப் பகுதியளவே ஒப்புக்கொடுத்துள்ளபடியால், முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று ஆவிகள் வலியுறுத்துகின்றன. முழுமையாக சித்தத்தை ஆவிகளுக்கு ஒப்புக்கொடுத்து, இதனால் தீய ஆவிகள் முழு அதிகாரத்தையும் எடுக்க ஒப்புக்கொடுப்பது என்பது மாபெரும் அபாயம் என ஆவியுலக இடையீட்டார்களுக்கு, ஆவியுலக புத்தக வெளியீடுகளில் எச்சரிக்கைக் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தோ பரிதாபமான ஆவியுலக இடையீட்டாளர்கள்! இவர்கள் தங்கள் மூலம் தொடர்புகொள்ளும் அனைத்து ஆவிகளும் பொல்லாத ஆவிகள் என்றும், பிசாசுகள், விழுந்துபோன ஆவிகள் என்றும், மனிதர் போன்று வேஷம் தரித்த ஆவிகள் என்றும், நம்முடைய மரித்த நண்பர்கள் போன்று வேஷம்போடும் ஆவிகள் என்றும் அறியாமலிருக்கின்றார்கள்.

புருஷர்களும், மனைவிகளும்கூடத் தங்களுடைய சித்தங்களை ஒருவருக்கொருவர் முற்றிலும் ஒப்புக்கொடுக்க துணியும் விஷயத்திலும் பாதிப்புக்கேதுவான ஆபத்தில்லாமல் இல்லை. பெற்றோர்களும்கூடத் தங்களுடைய பிள்ளைகளின் விஷயத்தில், பிள்ளைகள் தங்களுக்கென்று சொந்த சித்தம் வைக்காத அளவுக்கு அவர்களைக் கட்டுப்படுத்த/வற்புறுத்த முயற்சிக்கக்கூடாது. பிள்ளைகள் எவ்வளவாய்க் கட்டுப்படுத்துகிறார்களோ, அவ்வளவாய்ப் பெற்றோர்கள் அவர்களை பாதிப்புக்குள்ளாக்கி, அவர்களின் தனிமனித பண்புகளைக் குலைத்துப்போட்டு, விழுந்துபோன ஆவிகள் எளிதில் அவர்களை வஞ்சிக்கும் நிலையில் உள்ளாக்கிவிடுவார்கள்.

நாம் நம்மை முற்றும் முழுமையாக ஒப்புக்கொடுக்க வேண்டிய ஒரே ஒருவர் கர்த்தராவார். இவரே தம்மிடத்தில் முழுமையாகச் சித்தத்தை ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கின்றார். மேலும் நாம் அவருடைய நாமத்தினால், அவருடைய ஸ்தானாபதிகளாக இருந்து, நமது பிள்ளைகளையும், நமது நண்பர்களையும், நமது அயலகத்தாரையும் கர்த்தரிடத்தில் தங்கள் இருதயத்தை முழுமையாக ஒப்புக்கொடுக்கும்படி அழைக்கலாம். எந்தளவுக்குச் சித்தங்கள் முழுமையாக அர்ப்பணிக்கப்படுகின்றதோ, அந்தளவுக்கு ஒப்புக்கொடுத்தலும் அதிகமாயிருக்கும். அத்தகைய அனுபவமும் மிக ஆசீர்வாதமாய் இருக்கும். அதாவது, கர்த்தருடைய வேலைகளில் அதிகம் பயனுள்ளவர்களாகவும் இருப்போம். இதுவே, "ஆவியினாலே நிறைந்து," உங்களைப் பரிசுத்தப்படுத்தி, முற்றிலுமாகக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுங்கள் என்ற பரிசுத்த பவுல் அவர்களின் புத்திமதியில் உள்ள சாராம்சமாகும். இந்த அர்ப்பணிப்பு அல்லது சித்தத்தை ஒப்புக்கொடுக்கும் அளவிற்கு ஏற்ப, நாம் கர்த்தருடைய

வேலைக்கு, சத்தியத்தின் வேலைக்கு, மந்தையின் வேலைக்கு ஆயத்தமாய் இருக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்படலாம். கர்த்தருக்கென்று முழுமையாகச் சுயத்தை அர்ப்பணிக்கும் விஷயத்திலும், ஆவியில் நிரப்பப்படும் விஷயத்திலும், சுயசித்தத்தை வெறுமையாக்கும் விஷயத்திலும், உலகத்திற்கும் அதன் திட்டத்திற்கும் அதன் சித்தத்திற்கும் அதன் வேலைகளுக்கும் மரிக்கும் விஷயத்திலும், பரிசுத்த பவுல் சிறந்த முன்மாதிரியாக விளங்குகின்றார்.

இப்படியாக, அப்போஸ்தலன் தான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, தன்னைச் சகோதரர்கள் பின்பற்றுங்கள் என்று சொன்னதில் ஆச்சரியமில்லையே. கிறிஸ்து பிதாவின் ஆவியினால் நிரப்பப்பட்டவராக இருந்தார். பரிசுத்த பவுல், கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை உண்மையாய்ப் பின்பற்றுகிறவராக இருந்து, அவரைப்போன்றே ஆவியில் நிரப்பப்பட்ட அனுபவம் பெற்றிருந்தார். எனினும், குறைந்த அளவிலேயே நிரப்பப்பட்டிருந்தார். மேலும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகத் தேவபக்தியாய் ஜீவிக்கிற அனைவரும்கூட அவருடைய ஆவியினால், கிறிஸ்துவின் சித்தத்தினால், பிதாவின் சித்தத்தினால் நிரப்பப்பட்டு, பூமிக்குரிய நோக்கங்களுக்கு மரித்தவர்களாயிருக்க வேண்டும். மூப்பர்களை வரவழைப்பதற்கான அப்போஸ்தலனுடைய நோக்கமானது, தன்னைப்போன்று, கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணினவர்களாக மாத்திரமல்லாமல், சபையில் போதகர்களாகவும் காணப்படும் அவர்கள், தங்களைக்குறித்தும் மற்றும் தங்களைக் கண்காணிகளாகக் கர்த்தர் ஏற்படுத்தியுள்ள சபைக்குறித்தும், இரண்டுமடங்கு பொறுப்புடையவர்களாக காணப்படுகின்றனர் எனும் உண்மையினை, அவர்களது மனதில் பதியவைப்பதற்கேயாகும். "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய (குமாரனுடைய) சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்கு பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக (கிரேக்க வார்த்தை, episcopos - bishops) வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" எனும் அவரது வார்த்தைகளைக் கவனியுங்கள் (அப்போஸ்தலர் 20:28).

"Take heed un to yourselves, and to all the flock, **<u>in which</u>** the holy spirit hath made you bishops, to feed the church of God which he purchased with the blood of his own son." (Revised Version)

"Take heed to yourselves therefore and to all the flock **<u>among whom</u>** the holy spirit made you oversees to feed the church …" (Diaglott)

அப்போஸ்தலர் 20:28-ஆம் வசனத்திலுள்ள பல்வேறு விஷயங்களானது, மிகவும் கவனமாய்க் கவனிப்பதற்குப் பாத்திரமானவைகளாகும். ரிவைஸ்ட் மொழியாக்கத்தில் "<u>In the which</u> – the Holy Spirit hath made you bishops" என்று இடம்பெறும் மொழிபெயர்ப்பானது, சபையின் மூப்பர்களானவர்கள் மேற்பட்ட வகுப்பார் அல்லது "குருமார்" வகுப்பார் எனும் விதத்தில் சபை மீது ஏற்படுத்தப்படாமல், மாறாக சபை வாயிலான கர்த்தருடைய நியமித்தலின்படி அவர்கள் சபையில் - அதன் அங்கத்தினர்களாக - மேற்பார்வையிடும் அங்கத்தினர்களாக, உதவி செய்யும் அங்கத்தினர்களாகக் காணப்படுகின்றனர் எனும் வேதவாக்கியத்தின் காரியத்திற்கு இசைவாயுள்ளது. இரண்டு விஷயங்களைக் கவனிக்கவும்:-

(1) அவர்கள் தங்களைக்குறித்தும் மற்றும் மந்தையைக்குறித்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சபையில் மேய்க்கும் பணியினைச் செய்ய முற்படும் எவரும், முதலாவதாக தான் சோதனைக்குள் விழுந்துபோகாதபடிக்கு விழிப்பாய் இருப்பது அவசியம்; ஏனெனில் அப்போஸ்தலன் கூறுவது போன்று, சபையில் மூப்பர்களுடைய - போதகர்கள், மேற்பார்வையாளர்களுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்பவர்கள் விசேஷித்த சோதனைகள், விசேஷித்த இடர்பாடுகளுக்கு உள்ளாவார்கள். மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற இவர்கள், ஆகாதவர்களாய்ப் போய்விடாதபடிக்கு, இவர்கள் முதலாவது, தங்களைக்குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

(2) "திவ்விய ஒழுங்குமுறையின் கீழ் மூப்பராகிய சகோதரர்களெனச் சபையில் ஊழியத்தினை ஏற்றுக்கொள்பவர்கள், தாங்கள் ஒரு கனமான பொறுப்பினை எடுத்துக்கொண்டுள்ளனர் என்றும், அது விஷயம் தாங்கள் தேவனுக்குக் கணக்குக்கொடுக்க வேண்டும் என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். இது சகோதரரிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கிறதைக் குறிக்கின்றதாய் இராது. இது சகோதரருக்குப் பிரசங்கம் பண்ணுவதை மாத்திரமோ அல்லது வியாதியஸ்தர்களைப் போய்ச் சந்திப்பதை மாத்திரமோ மற்றும் பிரச்சனையில் இருப்போருக்கு ஆலோசனை வழங்குவதை மாத்திரமோ குறிப்பதாகாது. இது சபையாருடைய மற்றும் அதன் தனித்தனி நபர்களுடைய - இருவருடைய நலனுக்கடுத்த

காரியங்கள்குறித்த ஓர் ஆவிக்குரிய மேற்பார்வையை, பராமரிப்பைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த ஜீவியத்திற்கடுத்த கவலைகளினால் பாரமடைந்திருப்பவர்கள், ஜீவனுள்ள தேவனுடைய சபையில் இந்த ஊழியத்திற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்குரிய நிலைமையில் எவ்விதத்திலும் காணப்படாதவர்களாய் இருப்பார்கள். மேலும் இத்தகையவர்கள் அப்பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள அழைக்கப்படவும் கூடாது, மூப்பர் என (voted) வாக்களிக்கப்படக் கூடாது. கர்த்தருடைய இராஜ்யம் மற்றும் அதன் நீதிக்கடுத்தவைகளை முதலாவது நாடுபவர்கள் மாத்திரமே எவ்விதத்திலும், சபையிலுள்ள இத்தகைய ஊழியத்திற்குப் பொருத்தமானவர்களாய் இருப்பார்கள். மற்ற அங்கத்தினர்கள் எப்படி வளர்ந்து கொண்டிருக்கின்றனர், விசேஷமாக அவர்களது ஆவிக்குரிய காரியங்களில் எப்படி வளர்ந்து கொண்டிருக்கின்றனர் என்று கவனிப்பது தங்களது பொறுப்பினுடைய ஒரு பாகமாக இருக்கின்றது என்று மூப்பர்கள் கருதிட வேண்டும். வாய்ப்புக் கிடைப்பதற்கேற்ப மற்ற அங்கத்தினர்கள் யாவருக்கும் புத்திமதி கூறுவதும், உற்சாகமூட்டுவதும், உதவிசெய்வதும் தங்களது கடமையினுடைய ஒரு பாகமாக இருக்கின்றது என்று இவர்கள் உணர்ந்திட வேண்டும்.

தாங்கள் சம்பந்தப்பட்டிருக்கும் ஏதோ தனிப்பட்ட காரியமாய் இருந்தால் ஒழிய, மற்றப்படி ஒவ்வொருவரையும் சரிப்படுத்த முயற்சிப்பது என்பது சகோதர சகோதரிகள் யாவருக்குமான சிறப்புரிமையல்ல. தனிப்பட்ட காரியமாய் இருக்கும் சந்தர்ப்பங்களில், மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான நமது கர்த்தருடைய அறிவுரையானது கண்டிப்பாய்ப் பின்பற்றப்பட வேண்டும். மூப்பர் ஒருவர் இந்தத் தனது ஊழியத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம், சபையாரின் காரியங்கள் மீதான இத்தகைய கண்காணிப்பைப் பண்ணிடவும், சந்தர்ப்பத்தினுடைய தன்மைக்கேற்ப புத்திமதி வழங்கிடவும், கடிந்துகொள்ளவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்; மேலும் இவற்றைச் செய்கையில் - தானும் ஒருவேளை இதே விஷயங்களில் சோதனைக்குள்ளாகவில்லை என்றாலும், வேறு ஏதேனும் விஷயங்களில் சோதனைக்குள்ளாகக்கூடும் என்று நினைவில் கொண்டு சாந்தத்துடன் செய்திட வேண்டும். மூப்பரும்கூட மத்தேயு 18:15-17-ஆம் வசனங்களின் காரியங்களை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

## கொடிதான ஓநாய்களும், மாறுபாடானவைகளைப் போதிப்பவர்களும்

கண்காணிக்கும் இக்கடமையினை மூப்பர்களிடத்தில் பதியவைக்கும் வண்ணமாய்க் கர்த்தர் இந்த மந்தையைத் தேவனுடைய ஆட்டுக்குட்டியானவரின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் சம்பாதித்தார் என்றும், கர்த்தருடைய பார்வையில் காணப்படும் இந்த விலையேறப்பெற்றக் காரியமானது - அவர்களால் ஏறெடுக்க முடியும் எந்த ஊழியத்திலும் சகோதரருக்கெனத் தங்கள் ஜீவியங்களைத் தியாகம் பண்ணிடுவதற்கு அவர்கள் விரும்பத்தக்கதாக - அவர்களது மனங்களில் மிக ஆழமாய்ப் பதிய பெற்றிருக்க வேண்டும் என்றும், அவர்களுக்குப் பரிசுத்த பவுல் அடிகளார் நினைப்பூட்டினார்.

முன்னமே கொடுக்கப்பட்ட எச்சரிப்பிற்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணமாக அப்போஸ்தலன் தீர்க்கத்தரிசனமாய், இவர்கள் தங்களுக்காகவும், மந்தைக்காகவும், தங்களைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பது மிகவும் அவசியம் என்றும், மூப்பர்கள் மத்தியிலிருந்து விசேஷமாக மனுஷர்கள் எழும்பிச் சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்றும் கூறினார். தலைவர்களாகிட வேண்டுமென்ற ஆசையில், தங்கள் பதவி ஆசை நிறைவேற உதவும்படிக்கு சபையில் பிரிவினையை உருவாக்கிடுவதற்கு இவர்கள் தயங்கிடமாட்டார்கள். வசனம் 30-இல் இடம் பெறும் 'perverse' (மாறுபாடானவைகள்) எனும் வார்த்தை அதன் மூல பாஷையில், திரித்துக்கூறுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஆவியினை இழக்கத் துவங்குபவர்கள், சத்தியத்தினைப் பற்றின தங்களது தெளிவான புரிந்துகொள்ளுதலையும் இழக்கத் துவங்குவார்கள் என்பதே கருத்தாகும். சுயநலமான மற்றும் தனிப்பட்ட ஆசைகளானது அவர்களது கண்பார்வையினை மறைக்கையில், அவர்கள் வேதவாக்கியங்களை மிகமிக மங்கலாய்க் காண்பார்கள் மற்றும் அவை தங்களது சொந்த ஆசையினை ஆதரிக்கத்தக்கதாக, அவற்றைத் தாராளமாய்த் திரித்திடுவார்கள்.

அப்போஸ்தலனின் வார்த்தைகள் எத்துணை உண்மையாய் உள்ளது! இவைகள் விஷயத்தில் விசேஷமாய் மூப்பர்களுக்கு, மந்தையினுடைய கண்காணிகளுக்கு எத்துணை மகா ஆபத்து உள்ளது! நிச்சயமாகவே சுயநலமான ஆசை என்பது இவர்கள் எதிர்த்துப் போராட வேண்டிய மாபெரும் சத்துருக்களில் ஒன்றாய் இருக்கின்றது. இந்தப் பதவி ஆசைகளானது,

சடுதியாய் முளைத்து, பூப்பூத்து, கனிகொடுத்துவிடுவதில்லை. இது ஒரு படிப்படியான காரியமேயாகும்; ஆகையால் மிகவும் அபாயகரமானதாகவும், மிகவும் வஞ்சனையுள்ளதாகவும், கவனிக்கத்தவறப்படுகிறதாகவும் காணப்படுகின்றது. ஆகையால் கர்த்தருடைய மந்தையில் அனைவரும், விசேஷமாக மூப்பர்கள் தங்களைக்குறித்து எச்சரிக்கையாக இருப்பதும், தங்கள் நடத்தைகளை அதிலும் குறிப்பாக தங்கள் செய்கைகளுக்குப் பின்னுள்ள நோக்கங்களைக்கூர்ந்து கவனிப்பதும் எவ்வளவு முக்கியமாயுள்ளது. சித்தத்தில் முழுமையான தூய்மை என்பது அவசியமாயுள்ளது என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. கலந்திடும் ஒவ்வொரு சுயநலமும், எவ்வளவு சிறியதாயிருப்பினும், அது கவனிக்கப்படாத பட்சத்தில், இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்திவிடும் நச்சுக்கிருமியாயிருக்கும். "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" என்பதே அப்போஸ்தலனின் எச்சரிப்பாய் இருக்கின்றது. ஏனெனில், மூப்பர்கள் மத்தியில்தான் சில மனுஷர் எழும்பி சீஷர்களைத் தங்கள் பக்கமாக இழுக்கவும், மந்தையில் தலைவர்களாக இருக்கவும், மனுஷனுடைய பாராட்டு மற்றும் கனம் பெற்றுக்கொள்ளும் காரணங்களுக்காக மாறுபாடானவைகளைப் பேசுவார்கள். ஆ! தெய்வீகக் கிருபையையும், நித்தியத்திற்குரிய ஜீவனையும் இழப்பது என்பது எத்துணைப் பெரிய விலை!

"கொடிதான ஓநாய்கள்" என்பது இரக்கமற்ற ஓநாய்களாகும். கொஞ்சக்காலம் இவர்கள் தங்கள் ஓநாய் சுபாவத்தை மூடிமறைத்துள்ள வெளிப்புறமான நடத்தையினாலும், வெளிப்புறமான அறிக்கையினாலும், செம்மறி ஆடுகளை ஏமாற்றிடலாம். மந்தையை வஞ்சிப்பதற்கான இவர்களது வெளித்தோற்றமான நடத்தையை, வேதவாக்கியங்களானது, "ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டுள்ள ஓநாய்" என்று குறிப்பிடுகின்றது (மத்தேயு 7:15, 16). இவர்களது குணலட்சணமானது, செம்மறி ஆடுகளுக்கு வெளிப்படுவதற்கு வெகுக்காலத்திற்கு முன்னதாகவே, மேய்ப்பன் அவைகளை அறிந்திருப்பார். ஆனால் ஓநாய்களானது, மந்தையைக் கடிக்கவும், பட்சிக்கவும், சிதறடிக்கவும் துவங்குவது வரையிலும் சாதுவான மற்றும் கபடற்ற ஆடுகளானது வஞ்சிக்கப்பட்டே காணப்படும். கோபத்தின், துர்க்குணத்தின், பகைமையின், பொறாமையின், சண்டைச் சச்சரவின் ஊளைகளானது, வேதவாக்கியங்களில் "மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது - இவை நீதியின், சமாதானத்தின் மற்றும் அன்பின், கர்த்தருடைய ஆவியின் கிரியைகள் அல்ல - ஓநாயானது அதன் வாயினாலே தீங்கு செய்கின்றது; அதுபோலவே "கொடிதான ஓநாய்களும்" செய்கின்றன. புறங்கூறுதல், தூற்றுதல் மற்றும் சகல பொல்லாத கிரியைகளைச் செய்கின்றனர். எவற்றை எதிர்ப்பார்த்திடலாம் என்று எபேசுவின் மூப்பர்களை அப்போஸ்தலன் எச்சரித்தார் மற்றும் அவரது வார்த்தைகள் உண்மையாகவுமானது. "இமெனே, அலேக்சந்தர், பிகெல்லு, எர்மொகெனே என்பவர்களுடைய நாமங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17). அதே கொள்கை இன்றளவும் கிரியைச் செய்கின்றது. அதே எச்சரிப்பிற்கு இன்றும் செவிக்கொடுக்கப்பட வேண்டும். ஆம் இதுபோன்றதான பல்வேறு அனுபவங்களானது, சுவிசேஷ யுகம் நிறைவடைகின்றதும், நாம் இப்பொழுது ஜீவித்துக்கொண்டிருக்கின்றதுமான, "பொல்லாத நாட்களில்" சபை மீது வருமென வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன.

## இரவும், பகலும் கண்ணீரோடே

வசனம் 31-இல், அப்போஸ்தலன் இரண்டு காரியங்களை நமக்கு முன்வைக்கின்றார். இவ்வளவுக்குச் சித்தரிக்கப்பட்டுள்ளதான இந்தத் தீமைகளுக்கு எதிராய் முதலாவதாக மூப்பர்கள் விழித்திருக்க வேண்டும். அவர்கள் ஓநாய்களுக்கு எதிராய், மந்தையினுடைய நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டும். ஆடுகளில் யாரேனும் ஓநாயினுடைய வெறிக்கடியினால் (Rabies) வெறியடைந்து, ஜலபய வியாதிக்கான (hydrophobia) அறிகுறிகளை வெளிப்படுத்திடும் நிலை ஏற்படாதபடிக்கு, மூப்பர்கள் ஆடுகளுக்குப் புத்திமதி கூறிட வேண்டும்; ஒருவரையொருவர் புறங்கூறுதல் என்பது, ஜலபய வியாதியின் வழக்கமான அறிகுறியாகும் - இதோடுகூடச் சத்தியத்திற்கு அடையாளமான தண்ணீருக்கான தாகம் இருப்பது போன்று காணப்பட்டும், அதைப் பருகிடுவதற்கு மறுத்தல் - அதாவது அதற்கு எதிராய் மாறிவிடுதல் என்பதுமாகிய அறிகுறியும் காணப்படும்.

இரண்டாவதாக மூப்பர்கள் தங்கள் மத்தியிலிருந்து, நிச்சயமாக எழும்புபவர்களுக்கு எதிராகவும் கண்காணித்துக்கொள்ள வேண்டும். சரியாய்க் கண்காணித்தல் என்பது, நம்முடைய சொந்த இருதயங்களில் துவங்குகின்றதாயிருந்து, "ஆண்டவரே நானோ?" என்று கேட்டிட

வேண்டும். இப்படியாகக் கண்காணிக்கும்போது, இமெனேயும் பிலேத்துவையும் போன்றவர்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். மேலும் சரியாய்க் கண்காணித்தலானது, உரிய காலத்தில் அத்தகைய பாத்திரங்களை அடையாளம் கண்டு கொண்டு, அத்தகையவர்களை - அவர்களின் மீதான எந்தவொரு கசப்பின் காரணமாக இல்லாமல், மாறாக மந்தையினுடைய பாதுகாப்பிற்காக அத்தகையவர்களை வெளிப்படுத்திடும் (1 தீமோத்தேயு 1:20; 2 தீமோத்தேயு 1:15; 2:17).

இப்படியாகத்தான் தன்னுடைய நடத்தைக் காணப்பட்டதாக, பரிசுத்த பவுல் அடிகளார் சகோதரருக்கு நினைப்பூட்டினார் - அதாவது அவர்கள் மீதும், ஆசியா மைனரிலுள்ள சபைகள் அனைத்தின் மீதும் மிகுந்த அக்கறையும், கவலையும், கண்காணிப்பும் உள்ள ஒன்றாய்த் தன்னுடைய நடத்தைக் காணப்பட்டதாக அவர்களுக்கு நினைப்பூட்டினார். "இரவும், பகலும் கண்ணீரோடு" எனும் வார்த்தைகளானது - கிறிஸ்துவோடு ஆயிரம் வருடங்கள் ஆளுகை செய்திடும், கிறிஸ்துவினுடைய மகிமைப்படுத்தப்பட்ட சரீரத்தின் அங்கத்தினர்களாக இருக்கப்போகின்றவர்களை அழைப்பதற்கும், ஆயத்தப்படுத்துவதற்கும் உதவி செய்யத்தக்கதாக, சபையின் மாபெரும் தலையானவரால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதான "புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரரென," கர்த்தருடைய மந்தைக்கான கண்காணியென, உடன் மேய்ப்பனென, இராஜாதி இராஜனுடைய ஸ்தானாபதியென, தேவனுடைய ஊழியக்காரனெனத் தன்மீது காணப்படும் பொறுப்பினுடைய பாரத்தினைச் சரியாய் அவர் உணர்ந்து கொண்டிருந்ததைத் தெளிவாய்ச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

## தெய்வீக உதவி அருளப்பட்டுள்ளது

அப்போஸ்தலனுடைய அறிவுரையின் இறுதி வார்த்தைகளானது, அப்போஸ்தலன் தன்னுடைய வார்த்தைகளானது, தனது இந்த உள்ளார்ந்த போதித்தல்களானது, மூப்பர்களைத் தங்களது பொறுப்புகள் குறித்து விழிப்பிற்குள்ளாக்குவது மாத்திரமல்லாமல், இப்படியாகச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதான ஆபத்தின் விஷயத்தில் எந்தப் பாதுகாப்பின் மீது தாங்கள் சார்ந்திருக்க வேண்டும் என்று விசாரித்திட அவர்களை வழிநடத்திட வேண்டும் என்று அப்போஸ்தலனின் எண்ணம் காணப்பட்டதாகத் தெரிகின்றது. நமது ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் மகா மையமாகக் காணப்படுபவரும், நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் அளிப்பவருமான தேவன் நம்முடைய சார்பிலும், அவரது ஏற்பாடுகளுடன் ஒத்துழைப்பதற்கு நாடிடும் அனைவரின் சார்பிலும் காணப்படுகின்றார் எனும் உண்மையினிடத்திற்கு அப்போஸ்தலன் கவனத்தைத் திருப்புகின்றார்.

இன்னும் விவரிக்கும் வண்ணமாக, அவர் வேதவாக்கியங்களை, தேவனுடைய கிருபையுள்ள வசனத்தை, சுவிசேஷ செய்தியினைக் குறிப்பிடுகின்றார். தேவவசனமானது நம்மைக் கட்டியெழுப்ப முடிகிறதாகவும், அவசியமான குணலட்சணத்தினுடைய வளர்ச்சியினைக் கொடுக்க முடிகிறதாகவும், இந்தச் செய்தியினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் யாவருக்குமாக தேவன் வைத்துள்ளதான மாபெரும் சுதந்தரத்தில், நமக்கு ஒரு பங்கினை இறுதியில் கொடுக்க முடிகிறதாகவும் காணப்படுகின்றது என்று அவர்களுக்கும் மற்றும் நமக்கும்கூட அவர் கூறுகின்றார். இவை அனைத்தையும் இருதயத்தில் வைத்துக்கொள்வோமாக. தேவ வசனத்தைப் புறக்கணித்தல், அவரது வாக்குத்தத்தத்தைப் புறக்கணித்தல் என்பது, நமக்கான சோதனையைச் சகிப்பதற்கான பலத்தில் குறைவுப்பட்டிருப்போம் என்பதாகும். இது நம்மைக் குழப்பத்தக்கதாக, இருளுக்குப் பதிலாக வெளிச்சத்தையும், வெளிச்சத்திற்குப் பதிலாக இருளையும் சாத்தான் முன்வைத்திடுவதற்கு அவருக்குக் கதவைத் திறப்பதையும் குறிக்கின்றதாய் இருக்கும். மேலும், இதில் எச்சரிப்பாய் இருப்பதற்குக் கவனம் செலுத்தத் தவறினவர்கள் - ஆட்டினுடைய சத்தத்திற்கும், இரவில் ஊளையிடும் ஓநாயின் சத்தத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ள முடியாத நிலைக்குப் போவதைக் குறிக்கின்றதாகிவிடும். மேலும், கர்த்தருடைய வார்த்தையாகிய எக்காளத்தைப் பற்றிப்பிடித்து ஊதுகிறவர்களுக்கும் மற்றும் மந்தையைப் பிரித்துத் தங்கள் பக்கமாக ஆடுகளை இழுத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக மாறுபாடானவைகளைப் பேசி ஆடுகளின் மத்தியில் பிரிவினைகளைக் கொண்டுவர நாடுபவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்ள முடியாத நிலைக்குப் போகின்றதைக் குறிக்கின்றதாகிவிடும்.

தவறு செய்யாதிருப்போமாக. கிறிஸ்து இயேசுவில் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் மத்தியில் பங்கு உண்டு அல்லது பங்கு இல்லை என்பதுதான் கேள்வியாகும். கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் கர்த்தரையும், பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய விஷயங்கள் தொடர்பான, அவருடைய சகல ஆசீர்வாதங்கள் தொடர்பான அவருடைய ஏற்பாடுகளை

ஏற்றுக்கொள்ளுகிறவனாயிருந்து, தொடர்ந்து வைராக்கியத்துடன் காணப்பட்டு மேய்ப்பனின் பராமரிப்பைப் பெற்றுக்கொள்வான். ஆனால், ஏற்றகாலச் சத்தியத்தையும், இந்த அறுவடை காலத்தின் விசேஷமான ஏற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளாதவனோ ஆயத்தமற்றவனாயிருந்து, தன்னை வஞ்சிக்கவும், இழுத்துக்கொள்ளவும் நாடுபவர்களால் வஞ்சிக்கப்பட்டுப் போவான்.

## மந்தைக்கான ஒரு முன்மாதிரி!

போரடிக்கிற மாடானது கூலிக்குப் பாத்திரமாய் இருப்பதுபோல, ஆவிக்குரிய விஷயங்களில் சபைக்கு ஊழியம் செய்த ஒருவன், தான் சேவித்தவர்களின் பூமிக்குரிய ஆசீர்வாதங்களின் ஒரு பங்கை நியாயமாய்ப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பரிசுத்த பவுல் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், தான் பூமிக்குரிய விஷயங்களைப்பார்க்கிலும் மிக விலையேறப்பெற்ற ஆவிக்குரிய விஷயங்களில் சபைக்கு ஊழியம் செய்திருக்கிறபடியால், தன்னுடைய பூமிக்குரிய தேவைகளைச் சந்திப்பதில் சபை புரியும் ஊழியம் சிறு காரியமே என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் சுட்டிக்காட்டியுள்ளார். இவைகள் சபையாரால் கடைப்பிடிக்க வேண்டிய நியாயமான விஷயங்கள் என்று குறிப்பிட்டிருந்தாலும், அவைகளை அவர்களிடம் அப்போஸ்தலனாகிய பவுல் எதிர்ப்பார்க்கவில்லை. இந்த விஷயங்களைச் சரியான வெளிச்சத்தில் பார்ப்பது அவர்களுக்கு அனுகூலமாயிருக்கும். ஆனால் பூமிக்குரிய விஷயங்களில் தனக்கும், சத்தியத்தின் மற்ற ஊழியர்களுக்கும் உதவிகள் புரியும் தங்களுக்குரிய சிலாக்கியங்களை அவர்கள் பார்க்கத் தவறினாலும், இதனால் அவர் சத்தியத்தின் சேவையில் சுயத்தைப் பலிச்செலுத்துவதற்கும், சுயத்தை வெறுப்பதற்கும் அதிக வாய்ப்புகளைப் பெற்றதாக உணர்ந்திருந்தார். அவர்கள் செய்யத் தவறின விஷயங்களுக்காகக் கோபம்கொண்டு நீங்கள் என் பூமிக்குரிய தேவைகளைச் சந்திக்க மறுத்தபடியினால் நானும் உங்கள் ஆவிக்குரிய தேவைகளைச் சந்திக்க மறுக்கிறேன் என்று கூறவில்லை. மாறாக, அவருடைய எண்ணம் இப்படியாக இருந்தது:- இந்த அருமையான ஆடுகளுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் தேவையாய் உள்ளது. மேலும், அவர்களுக்கு அவைகளை அளிப்பதற்கான கர்த்தருடைய ஊழியக்காரனாகும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளபடியினால் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எந்த அளவிற்கு என்னிடம் சுயத்தைப் பலிச்செலுத்தலும், சுயத்தை வெறுத்தலும் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் அது நான் அவருக்காகவும், அவருடைய சத்தியத்திற்காகவும், அவருடைய மந்தைக்காகவும் கொண்டுள்ள அன்பை நிரூபிக்கின்றதாய் இருக்கும். மேலும் தம்முடைய பலியின் மூலமாய் ஆடுகளைச் சம்பாதித்த மாபெரும் மீட்பருக்கு ஒத்து நான் அதிகம் காணப்படுவதினால், மாபெரும் மேய்ப்பனின் கிருபையையும் நான் அதிகமாய் பெற்றுக்கொள்வேன் என்பதேயாகும்.

இவ்வாறாகத் தற்பெருமைக்காக அல்லாமல், அவர்களுடைய நலனுக்காக, கர்த்தருடைய உடன் மேய்ப்பனுக்குரிய சரியான குணலட்சணங்களை அவர்கள் நன்கு புரிந்துகொள்ளத்தக்கதாகத் தன்னுடைய நடத்தையின் மீது அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பினார். "ஒருவனுடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" என்று கூறினார் (அப்போஸ்தலர் 20:33). சொத்துக்களைக் குவிப்பதற்கோ அல்லது தற்கால ஜீவியத்தின் சொகுசுகளை அடைவதற்கோ அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுக்கு ஊழியம் புரியவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களுடைய இருதயத்தையே இச்சித்தார். சபையின் மாபெரும் தலையோடு அவர்களை உறவிற்குள் கொண்டுவரும் சந்தோஷத்தையே அவர் இச்சித்தார். கிறிஸ்துவின் சரீர அங்கங்களை ஆயத்தப்படுத்துவதிலும், தேவனுடைய வார்த்தையில் வாக்களிக்கப்பட்டுள்ள மகிமையான விஷயங்களுக்கு அவர்களுடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்ள உதவுவதிலுமான புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரனான தனது சிலாக்கியங்களை அப்போஸ்தலர் பவுல் உணர்ந்திருந்தார்.

"நீங்கள் அறிந்திருக்கிறபடி, எனக்கும் என்னுடனேகூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது" (அப்போஸ்தலர் 20:34) என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். பரிசுத்த பவுலோடுகூடப் பிரயாணம் மேற்கொண்டவர்களில் சிலருக்குத் தொழில் தெரியாத காரணத்தினாலும், இலாபகரமான வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாததாலும், அப்போஸ்தலனாகிய பவுலின் கூடாரஞ்செய்யும் தொழிலானது பல்வேறு கடலோரப் பட்டணங்களில் வரவேற்கப்பட்ட நிலையில் இருந்ததினாலும், பவுலின்மீது இந்தச் சகோதரர்கள் அவர்களின் பூமிக்குரிய மற்றும் ஆவிக்குரிய தேவைகளுக்குப் பெரிதளவில் சார்ந்திருந்தார்கள் என்பது தெரிகின்றது.

அப்போஸ்தலர் பவுல் என்றுமே இதைக்குறித்து முறையிடவில்லை. இந்த வேதப்பகுதியிலும்கூட அவர் குற்றஞ்சாட்டவில்லை. மாறாக, கர்த்தருக்குப் பிரியமாய் இருக்கும் என்று தன்னால் நம்பப்பட்டதும், தன்னால் பின்பற்றப்பட்டதெனத் தான் நம்பினதுமான தகுதியான நடத்தையினை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார். அவர்களும் இதேவிதத்தில் சுயத்தைப் பலிச்செலுத்தி கர்த்தருக்காகவும், சபைக்காகவும், சத்தியத்திற்காகவும் அன்பின் ஆவியைக் கொண்டிருக்க வேண்டுமென்று தெரிவித்தார். இவ்விதமாக அவர்கள் தேவனுடைய இரக்கத்தின் உண்மையுள்ள உக்கிராணக்காரர்களாகவும், அவருடைய மந்தையை உண்மையாய்க் கண்காணிக்கிறவர்களாகவும் இருக்க முடியும். இதையே அவர் 35-ஆம் வசனத்தில் தெரியப்படுத்துகின்றார். "இப்படி பிரயாசப்பட்டு, பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப்பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றார்."

**R 5935(3159)**

# எபேசுவில் நடந்த கலகம்
## THE RIOT AT EPHESUS

ஆதார வசனங்கள் :– அப்போஸ்தலர் 19:2–40.

திறவுகோல்வசனம் :– “உண்மையுள்ள விசுவாசிகளை கர்த்தர் பாதுகாக்கிறார்” – சங்கீதம் 31:23

அப்போஸ்தலர் பவுல் எபேசுவில் ஏறக்குறைய மூன்று வருடங்கள் செலவழித்தபின்பு, எருசலேமுக்கு மீண்டும்செல்ல தீர்மானித்தார். ஆனால் அதற்கு முன்பாக, மக்கதோனியா, பிலிப்பு, பெரேயா, தெசலோனிக்கேயா மற்றும் கொரிந்து சபைகளை சந்திக்கவும் முடிவுசெய்திருந்தார். தம் இரண்டு உதவியாளர்களாகிய எராஸ்துஸ் மற்றும் தீமோத்தேயுவை முன்கூட்டியே அங்கு செல்லும்படி பவுல் அனுப்பினார்(2தீமோ4:20; 1கொரிந்4:17–19). கொரிந்து சபையை சந்திக்க இந்த சந்திப்பையே, தம் நிரூபத்தில் அவர்களுக்கு குறிப்பிட்டிருந்தார் ( 1 கொரிந் 16:1–4). அவர்களிடமிருந்து நன்கொடைகளை வாங்கி, எருசலேமிலுள்ள ஏழ்மை நிலையிலுள்ளோர்க்கு கொடுக்கவும் அவர் திட்டமிட்டிருந்தார். இதை ஒரு இலவச கொடையாக கருதாமல், கர்த்தரை நேசிப்பதற்கான சாட்சியமாக இருக்கும் என்பதே அவர்களிடத்திலான பவுலின் தேடுதலாக இருந்தது. எருசலேமிலுள்ள சகோதரர்களுக்கு உதவவேண்டும் என்ற விருப்பமுடையோராக அவர்கள் இருக்கவேண்டும். அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்ததால், சத்தியத்திற்கு உண்மையாய் நடக்க பெரும் அனுகூலமற்ற சூழ்நிலையை உருவாக்கியிருந்தது. ரோம் நகரையும் இணைத்த தம் பிந்தைய பிரயாணத்தினைக் குறித்து அப்போஸ்தலர் திட்டமிடும்போது, ரோமுக்கு சிறைகைதியாக அனுப்பப்படலாம் என்ற சிறு ஐயப்பாடு எழுந்தது.

இச்சமயத்திலேயே, இந்தப்பாடத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கலகம் நேரிட்டது. இதனால் அப்போஸ்தலர் எபேசுவைவிட்டு புறப்பட ஏற்கனவே தீர்மானித்திராதிருந்தாலும், தற்போது தீர்மானிக்கவேண்டிய கட்டாயம் எழுந்திருந்தது. ஒவ்வொரு இடத்திலிருந்தும் அவரை வெளியே செல்லும்படி, கர்த்தர் உபத்திரவங்களை அனுமதித்தார். இவ்வாறு அவரது ஊழியம் ஒவ்வொரு நிலையிலும் முடிவுக்குவர, குறித்த நேரம் வந்துவிட்டதோ என்று சுட்டிக்காட்டுவதாக தோன்றியது. அந்த வழியில் எந்த சிறு தூண்டப்படுதலும் எழவில்லை என்று பதிவுகள் கூறுகின்றன. கர்த்தரின் பிள்ளைகளது வழிகள் மற்றவர்களுடைய வழிகளிலிருந்து துல்லியமாக வித்தியாசப்படுகின்றன என்பது அவர்களது வருங்கால நம்பிக்கைகளைக்குறித்து மட்டுமல்ல, அவர்களது தற்கால வாழ்க்கை வழிமுறைகளிலும் சாட்சியமாகிறது. கிறிஸ்துவின் புது சிந்தையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அனைத்தும் புதிதாயின. இவர்களது “வழி”, அவிசுவாசிகளுக்கு குறுகலானதாயும், தொல்லையை வருவிக்கிறதாயும் தோன்றினபோதிலும், கிறிஸ்துவின் புதிய சிந்தையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு அனைத்தும் புதிதாயின. இவர்களுக்கு இவ்வழி சமாதானத்தின் வழியாயும், மகிழ்ச்சியின் வழியாயும், ஆசீர்வாதத்தின் வழியாயும், தேவனோடு இசைவாக இருக்கவும், மேலும் கடைசிமுடிவாக நித்தியஜீவனை அடையும் வழியாயும் இருக்கிறது. கர்த்தரது வசனத்தின் போதனைகளை விசுவாசித்து, அவரிடத்தில் நெருக்கமாக நடக்கின் உண்மையுள்ளவர்களுக்கு இந்நாள்வரைக்கும் இந்தவழி ஒன்றாகவே இருக்கிறது, அதில் மாறுதல் ஏதுமில்லை. அநேகருக்கு கடினமாயிருப்பது என்னவெனில், வழியிலிருந்து அவர்கள் விலகிச்சென்றிருக்கிறார்கள் என்பதே. பெயர்சபையின் வழிகளோ, உலகத்தின் நம்பிக்கைகள், குறிக்கோள்கள், முயற்சிகள் ஆகிய உலக வழிகளுக்கு ஒத்த வழிகளாயுள்ளது.

எபேசுவில் கூட்டுறவு சங்கங்கள் அல்லது தொழிற்சங்கங்கள் இருந்தன. இந்த கலகத்துக்கு தலைமையேற்றிருந்த தட்டார்களுடைய தொழிற்சங்கத்தைச் சார்ந்த தெமேத்திரியு, ஒருவேளை அதன் தலைவனாகவோ அல்லது பிரதானியாகவோ இருக்கக்கூடும். எபேசுவில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கல், தற்போது பிரிட்டனின் அருங்காட்சியகத்தில் உள்ளது. அதில் தெமேத்திரியுவைக் குறித்த நிச்சயமான குறிப்புக்கள் எழுத்துக்களாக பொறித்துவைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடத்தில் நடைபெற்ற சம்பவம் கிபி 50இலிருந்து 60க்குள் நிகழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. தெமேத்திரியுவின் பெயர் 3யோவான் 12ம் வசனத்தில் இடம்பெற்றிருக்கிறது. அங்கு, நற்கீர்த்தியை உடைய கிறிஸ்தவனாக இவரை அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். இந்த கலகத்தை முன்னின்று நடத்தின அந்த நபரையே யோவான் குறிப்பிடுவதற்கு அதிக சாத்தியக்கூறுகள் உண்டு. அப்போது தியானாளுக்கு(Diana) ஆதரவாயிருந்து, கிறிஸ்தவத்தை எதிர்த்த தெமேத்திரியு, பின்னர் ஒரு செயலாக்கம் நிறைந்த கிறிஸ்தவனாகியிருக்கலாம். பவுலும்கூட சபையை துன்புறுத்தும் வைராக்கியத்தோடிருந்தவர், பின்னர் சபையின் வைராக்கியமுள்ள ஊழியக்காரரானார். அப்.யோவான் மற்றும் இயேசுவின் தாய் மரியாளோடு எபேசுவுக்கு வந்து, அங்கேயே தங்களது இல்லமாக்கியிருந்தநிலையில், இந்த தெமேத்திரியு அவர்களோடு தங்கியிருந்து, பலப்பட்டிருக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

தெமேத்திரியு தன் கைத்திறன் வேலையை செய்கிறவர்களோடு இணைந்திருந்தாலும், ஒன்றிணைந்த கைத்திறன்வேலையை செய்பவர்களும் ஒப்பந்தத்தின் மூலம் சேர்ந்திருந்தனர். புண்ணியஸ்தலங்கள் அல்லது தியானாளின் சிறு ஆலயங்கள், வெள்ளியால் உருவாக்கப்பட்டவைகளும், மற்ற விலை மதிப்பற்ற உலோகங்களாலும், சலவைக் கற்களாலும் உருவாக்கப்பட்டவைகளாயும், விலைகுறைந்த அழகு மட்பாண்டங்களையும் இவர்கள் கைத்திறன் வேலையாக செய்தனர். நினைவுச்சின்னங்கள் வைக்கும் இந்த பேழை பல்வேறு அளவுகளில் பெரும் எண்ணிக்கையில் தயாரிக்கப்பட்டன. இது எபேசுவிலுள்ள ஜனங்களுக்கு மட்டுமல்ல, தியானாளை வழிபடும் வெளிபட்டணத்தாருக்கும்

ஏற்றுமதி செய்தனர். தெமேத்திரியு வெளிப்படுத்தியதுபோல இவர்களது வியாபாரம் நல்ல ஆதாயமளித்தது. சுயநலத்தின்பொருட்டு உண்டான உணர்ச்சிகளின் அடிப்படையில் வேலையாட்கள் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தனர். இவர்களது உணர்வுகளின் பின்னணியில், அதாவது, இந்த பவுல் தியானாள் வழிபாட்டிலிருந்த ஜனங்களை வழிவிலக்குவதாக தெமேத்திரியு தன் பலமான வாதத்தை முன்வைத்தார். எபேசுவில் மட்டுமல்ல, சுற்றிலுமுள்ள பட்டணங்கள் மற்றும் மற்ற மாகாணங்களிலும் இவ்வாறு ஜனங்களை தியானாள் வணக்கத்திலிருந்து விலக்குவதாக பவுலின்மேல் குற்றஞ்சாட்டினார். தியானாள்மீதும் அவளது ஆலயத்தின்மீதும் ஜனங்கள் வைத்திருக்கும் மதிப்பை இழந்துபோவார்களானால், அவர்கள் இனி ஒருபோதும் தியானாளின் சிறு நினைவுச்சின்னங்களைக்கூட விலைக்கு வாங்க மாட்டார்கள். வாங்குதல் வீழ்ச்சியடையுமானால், இந்த சிலைகளை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இழப்பு ஏற்படும் என்பது அவனது வாதமாயிருந்தது.

தெமேத்திரியுவின் தர்க்கமானது, நினைவுச்சின்னங்கள் செய்யும் கைத்திறனாளிகளின் சுயநலமுள்ள உணர்ச்சிகளை தூண்டிவிட்டதால், அவர்கள் மிகுந்த சீற்றங்கொண்டனர். விவாதம் அதிகரிக்க அதிகரிக்க, தியானாள் மீது அவமரியாதையை அவர்கள் உணர்வதுபோல் தோன்றியது. என்றாலும், அவர்களது சொந்த வியாபார நோக்கமே அழிவுக்குள் நடத்தியது. அவர்கள் வெறித்தனமாக; ''எபேசுவிலுள்ள தியானாளே பெரியவள்'' என்று கூச்சலிடத் துவங்கினர். ஒவ்வொருமுறை கூச்சலிடும்போதும், சந்தேகத்திற்கிடமின்றி அதிகதிகமாக தங்களையும் மற்றவர்களையும் கோபமூட்டினர். ஒரு பெரும் கூட்டம் சேரும்வரை இவ்வாறு நடந்தது. பின்பு இக்கூட்டம் ஒரு பொது மைதான அரங்கம் அல்லது விளையாட்டுகள் நடக்கும் அரங்கு நோக்கி நகர்ந்தது. சுமார் 25000 முதல் 50000 நபர்கள்வரை இக்கூட்டத்தில் இருக்கலாம் என பலதரப்பட்ட மதிப்பீடுகள் கூறுகின்றன. அவ்வாறு அவர்கள் செல்லும்போது,



பவுலின் உடன்வேலையாட்கள் இருவரைப் பிடித்து, அவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தும் நோக்கத்தில், தங்களோடு கூட்டிச் சென்றாலும், சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளாமல் அதிரடியாகவே அவர்களை நடத்தினர். பவுல் முழு உத்வேகத்துடன், தன் உடன் ஊழியர்கள் மட்டும் தனியே இந்த கடினமான சூழ்நிலையையும், பாரத்தையும் தாங்க அனுமதிக்க மனதில்லாதிருந்தார். அவர்களிடத்திற்குச் செல்லவும், திரளான கூட்டத்தாரின் கவனத்தை ஈர்க்க முயற்சிசெய்து, அவர்களோடு புத்தியறிவோடு தர்க்கம் செய்தார். ஆனால் அந்த பட்டணத்தை வழிநடத்திச்செல்வோர் பவுலின் நண்பர்களாக இருந்தபடியால், சமாதான நலன்களை முன்னிட்டு, இவ்வாறு செய்யவேண்டாம் என்று பவுலை எச்சரித்தார்கள்.

பெருங்கூச்சலும் கொந்தளிப்பும் தீவிரமடைந்தன. கூட்டத்திலிருந்த பெரும்பான்மையோர், ஏன் அங்கே கூடியிருக்கின்றனர் என்று அறியாமலும், நிச்சயப்படுத்திக்கொள்ளாமலும் கூச்சலிடுவாரோடு சேர்ந்துகொண்டு, ''எபேசுவிலுள்ள தியானாளே பெரியவள்'' என்று சத்தமிட்டனர். தங்களுடைய மதத்திற்கு ஏதோஒருவகையில் அவமானமோ அல்லது எதிர்ப்போ நிகழ்ந்திருக்கிறது என்ற அவர்கள் யூகித்தறிந்தனர். இதனிமித்தமாக, கூட்டத்திற்குள்ளிருந்த அலெக்சாந்தர் ஜனங்களை அமைதிப்படுத்தவும், ஜனங்களுக்கு உத்தரவு சொல்லவும் முயற்சித்தபோது, அவன் ஒரு யூதன் என்று ஜனங்கள் புரிந்துகொண்டாலும், ஒரு கிறிஸ்தவன் என்று அறியாதிருந்தனர். ஆயினும் யூதர்கள் எல்லோரும் தங்களது தெய்வத்துக்கும் அவளது வணக்கத்துக்கும் எதிராயிருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு, கூக்குரலிட்டபடியால், அவனால் பேசமுடியாமற்போயிற்று. அவர்கள் எல்லோரும் ஏகமாய் இரண்டுமணி நேரமாய் காரணமின்றி சத்தமிட்டதிலிருந்து, அவர்களுடைய உணர்வற்ற தன்மை தெளிவாக வெளிப்படுகிறது. தெய்வீக குணாதிசயம் மற்றும் தெய்வீக திட்டத்தின் முறையான கருத்துக்களை ஜனங்கள் அடைந்து, எந்தளவு கர்த்தருடைய ஆவியைப் பெற்றுக்கொள்கிறார்களோ, அதேஅளவுக்கு, தெளிந்த புத்தியும் பலமுள்ள ஆவியையும் அடைவார்கள் என்பது கவனிக்கத் தகுதியானது. இதன் விளைவாக, ஓரளவே கிருபையிலும் அறிவிலும் வளர்ச்சியடைந்த சில கிறிஸ்தவர்கள், அர்த்தமற்ற காரியங்களுக்கு கூச்சல்போடுவதும், அல்லது பேசுவதும் போதுமானது என்று இருந்துவிடுகிறார்கள். அதேசமயம், கிருபையிலும் அறிவிலும் வளர்பவர்கள், தெளிந்த புத்தியும் பலமுமுள்ள ஆவியில் பங்கடைகிறார்கள். அதன் தொடர்ச்சியாக, அர்ப்பணிக்கப்பட்ட தங்களது நேரங்களை அல்லது உணர்வில்லாமலும் காரணமின்றியும் ஆற்றலை வீணடிக்கும்செயல்களை மனதார செய்யமாட்டார்கள். மற்றுமொரு வார்த்தையில் கூறுவோமானால், இவ்வுலகின் ஞானத்தைத் தள்ளிவிட்டு, பரத்திலிருந்து வருகிற ஞானத்தை ஏற்றுக்கொள்வதன் முடிவாக, மிகவும் பகுத்தறிவோடு செயல்படுவார்கள்.

அப்போஸ்தலர் மற்றும் அவரது உடன்ஊழியர்கள்மேல் சாட்டப்பட்ட, தியானாள் கடவுள்மீது தூஷணஞ்சொன்னார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின்படி, அவர்கள் குற்றவாளிகளல்ல. இங்கு நமக்கு நல்ல ஒரு முக்கியமானதும் மதிப்புமிக்கதுமான ஒரு பாடம் கிடைக்கிறது. பரிசுத்தபவுல் மற்றுமொரு இடத்தில் கூறினார்; ''ஆதலால் உங்களில் ஒருவனும் அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது'' தியானாள் தேவதைமீது இரக்கமற்ற வார்த்தைபேசுவதுகூட அப்போஸ்தலருக்கு அவசியமில்லாத ஒன்று. நற்காரியங்களின் மாபெரும்

மகிழ்ச்சியைப் பிரசங்கிப்பதே அவருக்கு நியமிக்கப்பட்ட பணி, மாறாக, போலி கடவுளர்களோடு தர்க்கம்செய்வதோ, அல்லது அவர்களது வணக்கத்துக்கெதிராக சண்டையிடுவதோ அல்ல. ஆகவே சரியானவைகளை செய்ததற்காகவே துன்பங்கள் நேரிட்டன. இங்கு நமக்கு ஒருபாடம் இருக்கிறது. பாபிலோனிலுள்ள நம் நண்பர்களிடத்தில் கருணையற்ற ஒரு வார்த்தை பேசவோ அல்லது செயல்செய்வதோ அவசியமானதல்ல. அவர்களது அமைப்புக்கள் அல்லது போதனைகளுக்கு எதிராக கண்டனசொற்பொழிவு நிகழ்த்துவதோ அவசியமானதல்ல. சுவிசேஷசெய்தியை பற்றிய விவரங்களை பெறுவதற்கு நாம் ஏராளமான காரியங்களை செய்யவேண்டியுள்ளது.

இவ்வாறு கூச்சலிட்டுவந்த சமயம், அந்நகர ஆணையாளர்(பொதுமொழிபெயர்ப்பு) அங்கு வந்து ஜனங்களை அமைதிப்படுத்தி, நான்கு வாதங்களை முன்வைத்து உரையாடினார். முதலாவது, அவர்களது நாட்டுப்பற்றின்படியான உணர்வுகளைக்காட்டி, வேண்டுகோள் விடுத்தார். அதில், அவர்கள் ஒரு மாபெரும் பட்டணத்தின் பிரஜைகள் என்றும், தியானாளுக்கான ஆலயகாப்பாளராக எபேசு நகரம், அருகாமையிலும் தூரத்திலுமுள்ள ஜனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு இவையனைத்தும் நிஜம் என்று நிலைநாட்டப்பட்டிருக்கிறபடியால், கண்மூடித்தனமாக அவர்கள் செயல்படக்கூடாது என்றும், அவ்வாறு துரிதமாக செயல்படக்கூடிய அவசியம் ஏற்படவில்லை என்றும் பேசினார். தியானாளுக்கும் எபேசுவுக்கும் எது நடந்தாலும் தற்போது உடனடியான அபாயம் ஏதும் நிச்சயமாக இல்லை. தியானாளின் அந்த ஆலயம் மெய்யாகவே அற்புதமான வடிவமைப்பைக் கொண்டது. இதனைக்குறித்து வரலாறு கூறுகிறது; எபேசுவின் மகிமையின் கிரீடம் மாபெரும் ஆலயமாயிருக்கிற ஆர்மமிஸ் அல்லது தியானாளின் ஆலயம் ஆகும். உலகின் 7 அதிசயங்களில் இதுவும் ஒன்று. இது துறைமுகத்தின் தலையாக இருக்கின்ற பகுதியில் சுடரொளிவீசி அழகாகப் பிரகாசிக்கிறது. தியானாளின் ஆலயத்தைக் காட்டிலும் சூரியன் தன் வழிமுறையில் அதிக மகத்துவத்தைக் காணவில்லை என்று கூறப்பட்டிருக்கிறது. தூய்மையான சலவைக்கற்களால் உண்டாக்கப்பட்ட இதன் நீளம் 425அடியும், அகலம்220அடியுமாகும். இதன் தூண்கள் பாரியன் சலவைக்கற்களால் 60அடி உயரத்திற்கு கட்டப்பட்டும், இதில் 36 தூண்களில் அற்புதமாக செதுக்கப்பட்ட சிற்பவேலையும் செய்யப்பட்டுள்ளது. இதன் முன்அறையில் சிலைகளும், ஓவியங்களும் அலங்கார அழகூட்டுகின்றன.

நகர ஆணையாளரின் இரண்டாவது வாதம் அவர்கள் வன்முறையினால் தங்களுடனே பிடித்து வைத்திருக்கின்ற இரண்டு நபர்கள் பற்றியது. அந்த இருவருக்கெதிராக அவர்கள் சீற்றங்கொண்டதாக தோன்றுகிறது. ஆனால் அந்த இருவரும் தீய மனிதரல்ல, தியானாளின் ஆலயத்தை கொள்ளையடிக்க முயற்சிக்கவில்லை, அல்லது அவர்களது கடவுளைக்குறித்து அவதூறு பேசியிருக்கவில்லை. பட்டணத்தின் முக்கியத்துவம் வாய்ந்த மனிதர்கள் அப்போஸ்தலரால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே நிதர்சனமான உண்மை. ஆனால் அதன்மீது இங்கு இவர்கள் சாதகமான தாக்கங்களை பெற்றுக்கொண்டு, அவர்களது போதனைகள் தீய பிரஜைகளை வளர்க்கவில்லை என்றும், அதற்கு மாறாக, அவர்கள் மிகவும் கனம் வாய்ந்தோராயும், சமாதானம் உள்ளோராயும் பட்டணத்தின் சட்டங்களை மதிக்கிறவர்களாயும் இருப்பதை புரிந்துகொண்டார்கள். அவரது வார்த்தைகள் நமக்கு வேறொரு கருத்தையும் அளிக்கிறது; அதாவது அப்போஸ்தலர், தன் பிரசங்கத்தில், விசேஷமாக, புறஜாதியாரின் வணக்கமாகிய விக்கிரகஆராதனையைக் குறித்து தாக்கி பேசவில்லை. ஆனால் மற்ற எல்லாக் கடவுளர்களும் கடவுள்களல்ல என்று மறுத்துப்பேசினார். ஒன்றான மெய்தேவனையும், அவரது இரக்கத்தின் செய்தியையும், மேன்மையான வழியாகிய சுவிசேஷத்தையும் குறித்தே அவர் பிரசங்கித்தார். இன்றையநாளில் ஜீவிக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு இங்கு ஒரு பாடம் உண்டு. ''நீங்கள் போய் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்'' மற்றவர்களோ அவர்களுக்குப் பிரியமானால் பெயர்கிறிஸ்துவ அமைப்புக்களின் உள்ளும் புறம்பும்இருக்கும் பல்வேறு தீய செயல்களை தாக்கட்டும், சிலைகளை உடைக்கட்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு இந்த தற்கால யுகம் தொடரும்வரை நாம் போதிய அளவு செய்வதற்கு வாய்ப்பு பெற்றிருப்போம்.

நகர ஆணையாளரின் மூன்றாவது வாதம் என்னவெனில், இது தெமேத்திரியு மற்றும்அவனுடைய உடன் கைத்திறன் வேலையாட்களின் சண்டைசச்சரவு பற்றியதாகும். பொதுவாக ஜனங்கள் இந்த சண்டையில் ஈடுபடவில்லை. அநீதி ஊடுருவும் பட்சத்தில் அதை முறையாக எதிர்கொண்டு குறைதீர்க்கும் வழிவகைகளாக – சட்ட நீதிமன்றங்கள், வழக்கறிஞர்கள் இருக்கின்றனர்.

நான்காவது வாதமாக, தெமேத்திரியு வகுப்பாருக்கும், கிறிஸ்தவத்தை பரவச்செய்கிறவர்களுக்குமிடையேயான தர்க்கமல்ல என்போமானால், ஜனக்கூட்டத்தார் வேறு ஏதோ காரியத்தின் அடிப்படையிலேயே அவர்கள்மேல் குற்றஞ்சாட்ட முயல்கிறார்களெனில், வழக்கமாக நிகழ்கின்ற குற்றங்களை விசாரிக்கும் இடத்திற்கு, முறையான நேரத்துக்கு, அவர்கள் அவற்றை சட்டவிதிக்குட்பட்டு கொண்டுவரவேண்டும். நகர ஆணையாளர், இந்த இறுதிவாதத்தினைத் தொடர்ந்து முன்வைக்கும்போது, இக்கூட்டம் ஒரு கலகத்துக்கு சற்றும் குறைவானதல்ல, இதைக்குறித்து ரோம அதிகாரிகளிடம் அறிக்கை அளிக்கப்படுமானால், எவ்வித காரணமுமின்றி இப்படிப்பட்ட கிளர்ச்சி நடந்திருப்பதையும், தனக்கு காயம் ஏற்பட்டதையும் அதில் தெரிவித்தாரானால், பட்டணத்தின் நற்பெயருக்கு ஊறுவிளைவிக்கும் என்று சுட்டிக்காட்டினார். ''அமைதியான பட்டணம்'' என்று நீண்ட காலமாக சொல்லி மகிழ்ந்துகொண்டிருந்த சிலாக்கியத்தை இப்பட்டணம்

இழந்துபோகக்கூடிய அபாயம் இப்பொழுது நேரிட்டிருக்கிறது என்பதே அவரது அறிவிப்பாயிருந்தது. அந்நேரத்தில் அங்கிருந்த அவிசுவாசிகளிடையேகூட அவரது பேச்சு பகுத்தறிவைத் தூண்டி, தெளிந்த நிதானிப்பை அடையும்படி செய்தது.

இன்றையநாளிலும்கூட, தெமேத்திரியு மற்றும் அவனது உடன் வேலையாட்களது குணாதிசயத்தை உடையோர் ஏராளமாய் இருக்கிறார்கள். தற்கால சத்தியத்தின் கொள்கைரீதியான எதிராளிகளாக, முழுநேர சுவிசேஷ ஊழியக்காரர்களே உள்ளனர். நாம் அறிந்துணர்ந்தவரைக்கும், தெமேத்திரியு மற்றும் அவனது கூட்டாளிகளுக்கு தூண்டுதலாக அமைந்ததுபோலவே, இவர்களது எதிர்ப்பும் சுயநலஆவியினாலே எழுச்சியூட்டப்படுகிறது. அவர்களுடைய கைத்திறன்தொழில் அபாயத்திலுள்ளது, அவர்களது வருமானமும் ஆபத்தில் சிக்கியிருக்கிறது, அவர்களுடைய மதிப்பும், ஜனங்களிடத்தில் அவர்களது போதனைகளும் இடர்ப்பாட்டுக்கு உட்பட்டிருந்தது. சத்தியத்துக்கெதிராக அவர்களது எதிர்ப்பு, இறுதியாக எபேசுவில் நடந்த கலகத்துக்கு ஒப்பாக இறுதியில் வழிநடத்திச்செல்லும் என்பதில் எவருக்கும் ஆச்சரியம் இருக்காது. அவ்வேளையில், தெமேத்திரியு தனது எதிர்ப்பின் உண்மையான இரகசியத்தை வெளிப்படுத்தாமல் இருந்ததுபோல், தப்பறையின்மேலுள்ள மாபெரும் அமைப்பு, சத்தியத்தின் மீதுள்ள பகைமையை நேரடியாக வெளிப்படுத்தாதிருப்பதால், அவர்களது இரகசியத்தை நாம் அறியமுடியாதநிலை ஏற்படும். வேதாகமத்தில் பாபிலோன் என்று அறியப்பட்ட "அந்திகிறிஸ்து"வால் பிரதானமாக கட்டப்பட்ட இந்த தப்பறைகளை, "வழிவழியாக வரும் சடங்கு சம்பிரதாயங்கள்மேல் நம்பிக்கை வைத்தோர்" என தவறுதலாக நாம் எண்ணக்கூடாது.

---------------

R 5938

# மன்னிப்புப்பெற பாவத்தை அறிக்கையிடுதல் அத்தியாவசியம்

## CONFESSION OF SIN ESSENTIAL TO FORGIVENESS

“நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்” – 1யோவான் 1:9.

அப்போஸ்தலர் யோவான் அவிசுவாசமான உலகத்திற்கோ, அநீதிமான்களுக்கோ, பொதுவாக பாவிகளுக்கோ இதை எழுதவில்லை. மாறாக, கிறிஸ்துஇயேசுவுக்குள் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தப்படுத்தப்பட்டவர்களையே முன்னிலைப்படுத்தி எழுதுகிறார். அவர் தன்னையும் இந்த வகுப்பாரோடு சேர்த்துக்கொண்டு, “நாம்” என்ற பன்மைச்சொல்லை உபயோகப்படுத்துகிறார். இதையும் இதுபோன்ற மேற்கோள்களையும், பொதுவாக பாவிகளுக்கு பொருத்திப்பார்ப்பது இரண்டு முக்கியமான காரியங்களில் தீங்கை ஏற்படுத்தும்.

முதலாவதாக, இது, ஆவியில் புத்துயிர் பெறாதவர்களுக்கு தீங்கை வருவிக்கும். இதன்படி, சபைக்கும் உலகத்திற்கும் எந்த வேறுபாடும் இல்லை என்ற கருத்து சிலரால் முன்வைக்கப்படுகிறது. மேலும் அதேமாதிரியான கருத்து உடையவர்கள் தங்கள் அனுதின மீறுதல்களுக்காக மன்னிப்பு பெற தேவனிடத்தில் ஜெபத்தில் அணுகுகிறார்கள். இவ்வாறாக, இது ஒப்புரவாக்குதலின்மேல் உள்ள விசுவாசத்தின் அவசியத்தை புரிந்துகொள்வதற்கும், அதோடுகூட, கிருபையின் உடன்படிக்கையாகிய பலியின் உடன்படிக்கைக்குரிய நிபந்தனையின்கீழ், கர்த்தரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் தீர்மானமாக நுழைய சிலருக்கு தடையை ஏற்படுத்துகிறது(சங்கீதம் 50:5). மாறாக, “பிரியமானவருக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு”, “தேவபுத்திரர்களாக” நடத்தப்படும் முன்பாகவும், அது தொடர்பான சிலாக்கியங்களாகிய, ஜெபம், தேவஐக்கியம், தெய்வீக பாதுகாப்பு அல்லது அவர்களது நடவடிக்கைகளில் தெய்வீக மேற்பார்வை, அனுதின மீறுதலுக்காக நீதிபரராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்கள் மூலம் மன்னிக்கப்படுதல் போன்றவைகளை அனுபவிப்பதற்கு முன்பாக, மனந்திரும்புதலும், கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வதும் மிகவும் அவசியம் என அனைவருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கவேண்டும்.

இரண்டாவதாக, சில கிறிஸ்தவர்களுடைய கடந்தகாலத்து பாவங்கள் கர்த்தரால் கிருபையாக மன்னிக்கப்பட்டு, அவர்கள் உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைந்தபிற்பாடு, இவர்கள் தாங்கள் ஒருபோதும் பாவம்செய்வதில்லை என்று கூறிக்கொள்ளும் உச்சநிலைக்கு சென்றுவிடுவதால், இந்த மேற்பார்வையிடுதலானது அவர்களுக்கு தீங்கு விளைவிப்பதாக அமையும். ஆகவே,“பரிபூரணர்கள்” என்று தங்களை அழைத்துக்கொள்பவர்களுடைய மிகத்தவறான நோக்கங்களையும் மற்றும் போதனைகளையும் நாம் பெற்றிருக்கிறோம். எவ்வாறெனில், தற்போது வெறுமனே பரிபூரணர்களாக கருதப்படாமல், நிஜமாகவே தங்கள் சிந்தையிலும் சொற்களிலும் செயல்களிலும் பரிபூரணர்களாக இருக்கிறோம் என்று சொல்வதால் தங்களைத்தாங்களே வஞ்சித்துக்கொள்வதோடு, அப்போஸ்தலர் நம் திறவுவசனத்தில் பிரகடனம்செய்வதுபோல், அநேக கொடிதான தவறுகளுக்கு பொறுப்பாளிகளாக தங்களை நிலைநிறுத்துகிறார்கள்.

### உண்மை ஐக்கியத்தின் அடிப்படை

அப்.யோவான் இந்த நிருபத்தை எழுதுகையில், தன்னுடைய நோக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்; “உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம்” என்கிறார். கிறிஸ்தவர்களில் மிகவும் பெரும்பாலானோர், அவர்கள் அடைந்திருக்கவேண்டிய முழுமையான மகிழ்ச்சி, சமாதானம் மற்றும் ஆசீர்வாதங்களை ஒருபோதும் அனுபவிக்கவில்லை என்பது கவனிக்கத்தக்க உண்மையாயுள்ளது. மிகுதியான ஜனங்கள் கிறிஸ்தவ போதனையின் முதல் தத்துவங்களின் வீரியத்தைக் குறைத்து, நீர்த்துப்போகப் பண்ணியதில் திருப்திப்பட்டுக்கொள்கின்றனர். ஆகவே அப்படிப்பட்டவர்கள் “கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்” என்று அப்போஸ்தலர் பவுல் அறிக்கையிடுகிறார்(1கொரிந்3:1,2); எபி 5:12–14). அவர்கள் கர்த்தரிடத்தில் எந்த உறவிலிருந்தாலும் ஆசீர்வாதமடைவார்கள் என்றபோதிலும், கிறிஸ்துவின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண புருஷராகும்வரைக்கும், கிருபையிலும் அறிவிலும் வளர்ச்சிஅடையும்பொழுது கிடைக்கும் நிறைவான மகிழ்ச்சியை அவர்களால் அடையமுடியாது. அப்போஸ்தலர் அவர்களுக்கு நிருபம் எழுதியதன் நோக்கம் என்னவெனில், விசுவாசிகளின் தூய்மையான மனங்களை தூண்டிவிட்டு, அவர்கள் முன்வைக்கப்பட்டுள்ள சிலாக்கியங்கள்மேல் களிகூறவும், உற்சாகமடையவும், அதன் விளைவாக வளர்ச்சியடைந்து முன்னேறவேண்டும் என்பதேயாகும்.

அப்போஸ்தலர், சத்தியம் மற்றும் நீதியை வெளிச்சமாகவும், பாவம் மற்றும் தீமையான ஒவ்வொன்றும் எதிர்க்கும் இருளாகவும் அடையாளப்படுத்தும் கர்த்தராகிய இயேசுவின் மாதிரிகையைப் பின்பற்றினார். தேவன்தாமே பரிபூரண வெளிச்சமாக இருக்கிறார், “அவரிடத்தில் எவ்வளவேனும் இருளில்லை”, பாவமில்லை, அபூரணத்தன்மை இல்லை. இந்த சிந்தனை நம் மனதில் இருந்து, தேவனிடத்திலான ஐக்கியத்தில் நாம் வளரும்போது, அதாவது நன்மை மற்றும் தூய்மையின் வழியில் வளர பெரும்தாகம் கொள்ளும் அதேவேளையில், நமது ஜீவியத்தின் வழிமுறை பாவம் நிறைந்ததாக இருளடைந்திருக்குமானால், நாம் தேவனோடு நடக்கிறோம் என்றும், அவரோடு ஐக்கியம் கொண்டிருக்கிறோம்

என்றும் மற்றவர்களிடம் சொல்லுவதும், நம் இருதயத்தில் கற்பனை செய்வதும் பாவமாயிருக்கும். இப்படிப்பட்டவர்கள் தங்களையும் மற்றவர்களையும் வஞ்சிக்கிறார்கள். தேவனை அவர்கள் வஞ்சிப்பதில்லை, மேலும் ''வெளிச்சத்தில் நடப்பவர்கள்'' அனுபவிக்கின்ற ஆசீர்வாதங்களை இவர்கள் அடைவதில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக, தேவனோடு ஐக்கியத்திலும் இசைவாகவும் வெளிச்சத்தில் நாம் நடக்குமளவுக்கு, ஒத்த மனநிலையுள்ள மற்ற அனைவரோடும் ஐக்கியமாயிருப்பதைக் கண்டுகொள்ளமுடியும். ஆகவே நாம் ''காண்கின்ற சகோதரனை நேசியாவிடில், அதாவது அவர்களோடு ஆவிக்குரிய சந்தோஷங்களையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்திக் கொள்ளாவிடில், தேவனிடத்திலான நம் ஐக்கியத்திலும் இசைவிலும் நாம் முழுமையடையவில்லை என்பதையே காட்டுகிறது.

ஆனால், ''சகோதரர்கள்'' என்பவர் யாவர்? அவரது நாமத்தின்பேரில் உரிமை கொண்டாடுவோரில் எல்லாருமே உண்மை சகோதரர்களாக இருக்கமுடியாது என்று நம் கர்த்தர் நமக்கு கூறியிருக்கிறார். என்னைநோக்கி, ''கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை''(தம் சகோதரனாகவும், உடன்சுதந்தரவாளியாகவும் அங்கீகரிப்பதில்லை). பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பான்'' ஆகவே நமது செய்கைகளின் நிமித்தமாகவே அன்றி, நம் வெளித்தோற்றத்தில் பலர்அறிய கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதால் மட்டும் கர்த்தரால் நாம் அங்கீகரிக்கப்படமாட்டோம். ''என் சகோதரன் யார்?... பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனாய் இருக்கிறான்'' என்று மீண்டுமாக அவர் கூறுகிறார்– மத்7:21; 12:48–50.

ஆகவே நாம் கிறிஸ்துவின் நாமத்தை பிதாவுடனான ஐக்கியத்தின் ஆதாரமாக தரித்துக்கொண்டிருந்து, இதனால் ஒளியில் இருக்கிறோம் என்று கூறும் எல்லாரோடும் ஐக்கியத்தை எதிர்பார்க்கக்கூடாது. பிதாவின் சித்தம்செய்ய தேடுகிறவர்களாயும், அவர் நிமித்தமாக ஊழியஞ்செய்கிறவர்களாயும், அவரது வார்த்தையின் அறிவுரைகளுக்கேற்ப முன்மாதிரிகையாக தங்கள் செய்கைகளாலும், வெளிப்படையாக தங்களை தேவ ஊழியராக காண்பிக்கிறவர்களோடேயே இந்த உண்மை ஐக்கியத்தை நாம் எதிர்நோக்கவேண்டும். இப்படிப்பட்ட எல்லோருக்குமிடையே மறைவான அல்லது வெளிப்படையான ஐக்கியத்தின் பிணைப்பும், உறவும் இருக்கவேண்டும். இந்த பிணைப்பே கர்த்தருக்குள்ளான ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் ஆகும்.

**குணத்தில் குறைபாடுகளும், பிழைகளும் பாவங்களே**

நம் கர்த்தருக்கும், நமக்கும், அவரது ஆவியைப்பெற்ற அனைவருக்குமிடையேயான இந்த ஐக்கியமானது, நம் ஆற்றலை பிரயோகித்து அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நாம் ஒளியில் நடப்பதை அடிப்படையாகக்கொண்டே அமைகிறது. இது பாவத்தின் அபூரணத்தன்மைகளிலிருந்து முழுமையாக விடுதலை பெறுவதை குறிக்காது. நம்முடைய கிருபையின் உடன்படிக்கையின்கீழ் எந்தளவுக்கு மனப்பூர்வமான பாவம்செய்யப்பட்டிருக்கிறதோ அதுவே பாவமாக உள்ளதே தவிர, மற்றெந்த பாவமும் நமக்கெதிராக சுமத்தப்படுவதில்லை. நம் மாம்சத்தின் பலவீனங்களாலும் பலவகைப்பட்ட சோதனைகளின் காரணமாகவும், பாவத்தினிமித்தமாக சுதந்தரித்துக்கொண்ட இயல்பான சிந்தையினாலும், மீறுதல்களையும் பிழைகளையும் தவிர்ப்பது நம்மால் கூடாத காரியமாகிவிட்டது. இவைகள் நம் திறவுவசனத்தில் உள்ளதுபோன்று, பாவங்கள் என்று முறையாக அடையாளம் காணப்படலாம். உள்நோக்கமின்றி இது செய்யப்பட்டபோதிலும், ''நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம்''.

ஆனால் கிருபையின் உடன்படிக்கையின்கீழ்,

கர்த்தருடைய ஜனங்களின் நிமித்தமாக உள்ள தெய்வீக ஏற்பாட்டின்படி உள்நோக்கமற்ற தவறுகளும், மீறுதல்களும் பாவங்கள் என்று நமக்கெதிராக குற்றப்படுத்த முடியாது. அதற்கு பதிலாக, நம் மாபெரும் பிரதான ஆசாரியரிடத்தில் அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தின் புண்ணியங்கள் மூலமாக நமது விண்ணப்பம் ஏறெடுக்கப்படும்போது, சுத்திகரிக்கப்பட்டு, தூய்மையாக்கப்படுவோம். இவ்வாறாக, இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக, நம் கர்த்தர் எல்லா பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிக்கிறார். நம் மாம்சத்தின் அபூரணங்களை உணர்ந்திருப்பதனால், நாம் மன்னிப்புவேண்டி தொடர்ச்சியாக விண்ணப்பங்களை ஏறெடுக்கும்போது, பாவத்திலிருந்து நம்மை சுத்தமாக்கி பாதுகாக்கிறார்.

**எதிராளியின் ஒரு நயவஞ்சகமான கண்ணி**

இந்த நிருபத்தில் அப்போஸ்தலர் தொடர்ந்து எழுதுகையில், பாவம் என்ற வார்த்தையை மேலே கூறப்பட்டதிலிருந்து வேறுபட்ட உணர்வில் கூறுகையில்,
''அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை. பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை... பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்..தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்''. மேலும்அவர் கூறுகிறார்; ''தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்; பொல்லாங்கன் அவனைத்தொடான்'' – 1யோவா3:6–9; 5:18.

அப்போஸ்தலர் இந்த வசனப்பகுதிகளில், ''பாவம்'' என்ற வார்த்தையை அதன் முழுமையான அல்லது துல்லியமான உணர்வில் உபயோகப்படுத்துகிறார். இதன் அர்த்தமானது, மனப்பூர்வமான பாவம், பகிரங்கமான பாவம், உள்நோக்கமற்ற பாவம் என்பவையாகும். இவை குணத்தில் குறைபாடுகளோ அல்லது பிழைகளோ அல்ல. பெரும்பாலும்அல்லது முழுமையாக

இது முன்னோர்களின்மூலம் சுதந்தரித்துக்கொண்ட மாம்சத்தின் அபூரணங்களேயாகும். அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கிறபடி, கர்த்தருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறவன், பரிசுத்தஆவி மற்றும் சத்தியஆவியைப் பெற்றபின், பாவத்துக்கு இணங்கி மனப்பூர்வமாகவோ, அறிந்தோ, உள்நோக்கத்தோடோ அதில் ஈடுபட மாட்டான். சத்தியத்தை அறியும் அறிவைப் பெற்றபிறகு, பாவத்தை நேசிக்கிறவர்களாக, அதை மனப்பூர்வமாக செய்கிறவர்களாக அதை அங்கீகரிக்கின்ற அனைவரும், இருளின் பிள்ளைகளாவர். இவர்கள் இருளை நேசிப்பதன்மூலம், சாத்தானின் குணத்தை அல்லது அவனது ஆவியை பெற்றிருக்கிறார்கள் என்று வெளிப்படுத்துகிறார்கள்.

**சகோதரருக்கு செய்யும் அநீதி மன்னிக்க முடியாதது**

அநேகரின் மனதில் எழும் முதல் எண்ணம் என்னவாக இருக்குமெனில், ''அந்தப் பாவத்தை செய்யும் அபாயத்தில் நான் இல்லை; ஏனெனில் நான் மனப்பூர்வமாக உள்நோக்கத்தோடு சதித்திட்டம் செய்யும்படியான பாவம் எதுவும் செய்வதில்லை என்று நிச்சயித்திருக்கிறேன்''. ஆனால் பிரியமான நண்பர்களே, பாவங்கள் நம்மேல் வருவதற்கு ஒருவழி உண்டு என்பதை நாம் கவனிக்கவேண்டும். அது ஆரம்பத்தில் ஒரு மனப்பூர்வமான பாவமாக இராதிருக்கலாம், ஆனால் பின்னாளில் மனப்பூர்வமான பாவமாக மாறக்கூடும். உதாரணமாக, எந்த மீறுதலுக்கும் உட்படும்போது, நம் சித்தம் – ஒன்றில் மொத்தமாகவே அறியாமையிலிருந்திருக்கும் அல்லது நம் சித்தத்தின் ஒருபகுதி எதிர்ப்புக் காண்பிக்காமல் ஏற்றுக்கொண்டிருக்கும், இது ஒரு முழுமையான, மனப்பூர்வமான, வேண்டுமென்றே செய்யும் பாவமாக பின்னாளில் மாறக்கூடும். அந்தக் காரியத்தைக்குறித்து, சத்தியத்தின் தெளிவான அறிவை நாம் அடைந்திருந்து, அதற்காக கர்த்தரிடத்தில் மனம் வருந்த தவறியிருப்போம். நம் உடன் சிருஷ்டிப்புக்களிடத்தில் நம்முடைய ஆற்றலைக்கொண்டு தவறுசெய்திருப்போம். இவ்வாறு தெளிவாகவும் முழுமையாகவும் புரிந்தபிற்பாடு, பாவத்துக்கு ஒப்புதல் தெரிவித்தால், ஏனெனில் அப்பாவத்தை செய்தநேரத்தில் நாம் அதைக்குறித்த அறியாமையிலிருந்ததால், அந்தப்பிழையை திருத்த மறுத்து, இப்படியாக பாவத்துக்கு அறிவுப்பூர்வமாக சம்மதித்து, மனப்பூர்வமான பாவமாக தோற்றமளிக்கும்படி இது உண்டாகும்.

காரியத்தை இக்கோணத்தில் பார்க்கும்போது, தேவபிள்ளைகள் தங்கள் சிந்தைகளில் சிறிதளவு அநீதி அல்லது அசத்தியத்தை ஒருவருக்கொருவரோ அல்லது மற்ற எவரிடமோ அனுமதிக்கக்கூடாது. நம் கர்த்தரின் கட்டளையில் இந்த கருத்தின் சாரம் காணப்படுகிறது;

''ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்தவந்து,(கர்த்தருக்குச் செலுத்த நாம் ஏதாவது உண்டானால், ஊழியமோ அல்லது தேவனுக்கு ஆராதனை செய்யவோ, அல்லது தொழுதுகொள்ளவோ அல்லது நன்றிகூறவோ) உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைவு உண்டென்று அங்கே நினைவுகூறுவாயாகில்(உன் வார்த்தையாலோ, சிந்தனையாலோ அல்லதுசெய்கையாலோ பிறனுக்கு நீ தீங்கிழைத்திருப்பதை)அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய்(பிறருக்கு எதிராக உங்கள் இருதயத்திலோ, அல்லது வெளிப்படையாகவோ அநீதி இழைத்திருப்பதை உணரும்போது, தேவனால் இது அங்கீகரிக்கப்படும் என்று எண்ணாதிருந்து) முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்புவந்து உன் காணிக்கையைச் செலுத்து'' –மத்5:23,24.

மனப்பூர்வமாகப் பாவம் செய்தோரைக் குறித்துக் கூறுகையில், அப்போஸ்தலர் பவுல் மிக பலம் வாய்ந்த, உருவகமான மொழியை உபயோகிக்கிறார். அவர்கள் பாவத்திற்கு எதிராயிராமல், இருதயத்தில் எந்தளவு அதோடு இணக்கமாயிருக்கிறார்களோ, அவர்கள் தேவகுமாரனை எதிர்த்து நிற்போராவர். அவர் பாவத்தின் ஒவ்வொரு தன்மைக்கும் விலகி, அதற்கு இரங்காமல், நம்மை சாபத்திலிருந்தும் அதன் வல்லமையிலிருந்தும் மீட்பதற்காக தம் ஜீவனைக் கையளித்தார். அப்படிப்பட்ட மனப்பூர்வமான பாவிகள், கிறிஸ்துவின் பகைவர்களாக மதிப்பிடப்பட்டாலும், அவர்கள் அவரது நன்மையையும், அன்பையும் உருவகமாக அவரது இரக்கத்தையும், தயவையும் அதோடுகூட அவரது நீதியின் அறிவுரைகளையும் அவர்களது காலின்கீழ் மிதித்தனர். அவர்கள் ஒருமுறை பரிசுத்தமாக்கப்பட்ட காரணத்தினால், கர்த்தரது விலையேறப்பெற்ற இரத்தத்தினாலும், பாவத்திலிருந்து சுத்திகரிக்கும் அதன் தன்மையின் விளைவாகவும், அவர்கள் ஒருமுறை பரிசுத்தமாக்கப்பட்டிருந்தனர். ஆனால் தற்போது, அவர்கள் பாவத்துக்கு இசைவாக திரும்பினது, ஒப்புரவாக்கும் இரத்தத்தை புறக்கணித்துவிட்டதையும், அது பரிசுத்தமானதல்ல, பொதுவான ஒன்றே என்று எண்ணினதையும் குறிப்பாகச் சொல்கிறது. பாவத்தின் நுகத்திலிருந்தும், அதன் தண்டனையாகிய மரணத்திலிருந்தும் விடுதலையாக்கினபிறகு, கர்த்தருடைய ஜனங்களாக, நித்திய ஜீவகிரீடத்தை அடையவேண்டிய இவர்கள், தெய்வீக தயவின்ஆவியை அவமரியாதை செய்தனர் –எபி10:26–29.

**பாவத்தை அறிக்கையிடுதல் மன்னிப்பின் முன்நிகழ்வு**

நம் திறவுகோல் வசனத்தில் காணப்படுகிற, ''பாவம்'' என்ற வார்த்தையின் மற்றொரு பயன்பாட்டை நாம் கருத்தாய் கவனிப்போமாக. தேவனுடைய ஜனங்கள் தங்கள் அழிவுக்குரிய சரீரங்களில் குடிகொண்டுள்ள தவறுகள் மற்றும் அபூரணங்களுக்கு எதிராக போராடுவதற்கு இந்த பாவம் என்ற வார்த்தையின் நிபந்தனைகளைப் பொருத்திப்பார்க்கும்பொழுது, அவற்றை தங்கள் சரீரங்களிலிருந்து அகற்றத் தேடுகின்றனர். இதற்கெதிராக இவர்கள் தொடர்ந்து நல்ல போராட்டத்தைப் போராடி, தம் விலையேறப்பெற்ற இரத்தத்தால் விலைக்கு வாங்கினவர் மூலமாக, ஜெயங்கொண்டோராயும், முற்றிலும் ஜெயங்கொண்டோராயும் விளங்குகின்றனர். சிலர், தாங்கள் ஏதாகிலும் குற்றங்களை வைத்திருக்கிறோம் என்ற மிதமிஞ்சிய நிலைக்குச்சென்று, தங்களையே வஞ்சித்துக்கொண்டு, எதிராளியின் கண்ணிக்குள் சிக்கிக்கொள்கின்றனர் என்றும்,

இவ்வாறு இவர்கள் கர்த்தரை மறுதலிக்கும் அபாயத்திலிருக்கின்றனர் என்றும் அப்போஸ்தலர் அறிவுறுத்துகிறார்.

அவர்கள் தேவபக்தியாய் ஜீவிக்க தேடுவார்களானால், அது என்ன மாற்றங்களை உருவாக்கும் ? அவர்கள் பரிபூரணமாக ஜீவிப்பதாக உரிமை பாராட்டுவார்களா, அல்லது தாங்கள் அபூரணர் என்று உணர்ந்துகொண்டு, விலையேறப்பெற்ற இரத்தத்தின்மூலமாக தொடர்ந்து சுத்திகரிக்கப்பட விண்ணப்பிக்கிறார்களா ? என்று கேட்கக்கூடும். இது மாபெரும் வித்தியாசத்தை உண்டாக்கும் என்று நாம் பதில் உரைக்கிறோம். நமது பாவங்களை அறிக்கையிட்டால் மட்டுமே அவைகள் மன்னிக்கப்படும். இதன் விளைவாக தங்களிடம் எந்த பாவங்களோ தவறுகளோ அபூரணங்களோ இல்லை என்று மறுப்பவர்களுக்கு, பெரும் சுமையாக அவர்களது பாவங்களும் குறைபாடுகளும் மன்னிக்கப்படாமலும், நீக்கப்படாமலும் அவர்களுக்கு எதிராக குற்றஞ்சுமத்தப்படும். இதன் காரணமாக, விசுவாச வீட்டாருக்கென ஏற்றவேளை ஆகாரமாக அவரது வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவ ஞானம் மற்றும் அன்பின் அகலம் நீளம் ஆழம் உயரம் ஆகியவற்றுக்குள் நடத்தப்படும் பரிசுத்தஆவியின்கீழ், ஒளியின் பாதையில் முன்னேறிச்செல்வதற்கு தகுதியற்றவர்களாகின்றனர்.

இவ்வாறு விசுவாசம் மற்றும் நடக்கைக்கு ஒரே சரியான வழிமுறையே உண்டு என்று நாம் காண்கிறோம். இதில் கர்த்தரோடு நாம் ஒரு முழுமையான ஐக்கியத்தை அடையமுடியும். மற்ற வழிமுறையை தெரிந்தெடுப்போர், தேவனை ஒரு பொய்யராக ஆக்குகின்றனர். அவரும் அவர்களோடு எந்த ஐக்கியமும் வைக்கமுடியாது, மாறாக அவர்களது சொந்த வழியாகிய இருளில் நடக்கும்படி விட்டுவிடுவார். தெய்வீக நியமனமும், அங்கீகாரமும் பெற்ற ஒரே வழியில் குற்றங்களை அறிக்கையிட்டு, அவற்றை ஜெயிக்கத்தேடுகின்றனர். ஆகவே அநேகர் இருளிலும், தேவனோடு ஐக்கியமாயிருப்பதற்கான சாட்சியத்தைப்பெறாமல் ஜீவிப்பதைக்கண்டு ஆச்சரியப்படமுடியமா ?

நாம் பாவம் செய்தால் தண்டனையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும் அலட்சியத்தாலும் தெய்வீக வசனத்துக்கு கவனமாக செவிசாய்க்காமலும் தவறுகளால் ஜெயிக்கப்பட நேரிடும்போது, கர்த்தரிடத்திற்கு சென்று மன்னிப்பை பெறலாம் என்ற எண்ணத்தினை நம்முள் வளர்க்க இவைகள் எழுதப்படவில்லை. இதற்குமாறாக, தெய்வீக தயவின் நிச்சயங்களும், மன்னிக்க சித்தமாயிருப்பதும், நம் இருதயங்களில் இனிமையான ஆதிக்கத்தை செலுத்தி, அதனால் பாவத்தைத் தவிர்க்க அதிக கவனமுள்ளவர்களாய் நம் அனைவரையும் உருவாக்குவதோடு, பரிபூரண வெளிச்சமும், பரிசுத்தமுமாய் இருக்கிறவரோடு ஐக்கியத்தை சீராக வைக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. நாம் பாவம் செய்யக்கூடாது என்பதற்காகவே இக்காரியங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது, சுயபெருமையினாலும், சுயநீதியினாலும் சுய நிதானிப்பினாலும் கர்த்தருடைய பார்வையில் அருவருப்பானவர்களாக காணப்படாதபடி இருப்போமாக. அதற்குபதிலாக, நம் பலவீனங்கள் மற்றும் அபூரணங்களிலிருந்து விலகிஓடி, தங்கள் மன்னிப்புக்கென கிறிஸ்துவுக்குள்ளான தேவகிருபையை பற்றிக்கொண்டு, பாவத்துக்கு எதிராக நல்லபோராட்டம் போராட கிருபையையும் பலத்தையும் பெறுவோமாக.

**திருச்சபைக்கே இப்பாடம் பொருந்தும்**

“ஒருவன்(கிறிஸ்துவுக்குள் ஜீவிப்பவன்) பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்”– 1யோவா2:1. இங்கு, ‘ஒருவன்’ என்ற வார்த்தை, கிறிஸ்துவுக்கு புறம்பாயிருப்பவர்களை குறிக்காது. மாறாக, கிருபையின் உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கும், தகுதிகளுக்கும் உட்பட்டிருப்பவர்களையே குறிக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கிறது. பிதாவிடம் உலகின் பாவங்களுக்காக பரிந்துபேசுகிறவர் ஒருவருமில்லை. ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. அவரை ஏற்றுக்கொண்டிருப்போருக்கும், பாவத்தை ஜெயிக்கப் போராடுபவர்களுக்கு மட்டுமே அவர் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார்.

நமது பரிந்துபேசுபவர் தெய்வீக நீதிநியாயத்தின்படி பரிந்துபேசுபவருக்கும்மேலாக, பிரதிநிதிக்கும் மேலாக, நமது நலனிலும் நம்மை மன்னிப்பதிலும் ஆர்வமாயிருக்கிறார். அதோடுகூட நமக்காக தம்மையே கையளித்தும் இருக்கிறார். அவர் கல்வாரியில் நமது பாவங்களை நீக்கும் கிருபாதார பலியாக தம்மை ஏற்படுத்தி, அதன் வேலையை நிறைவேற்றி முடித்தார். இதன் காரணமாகவே நாம் தைரியத்தோடு கிருபாசனத்தண்டை வரமுடிகிறது. தேவன் நமக்காக இருக்கிறார் என்று உணர்ந்துகொள்வது மட்டும்போதாது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மேல் இரங்குகிறார் என்பதும், நமக்கு பரிந்துபேசுபவராகவும், விசேஷமாக அவர் ஏற்கனவே நீதியோடு சேர்ந்து சேமித்துவைத்திருக்கிற பலியின் புண்ணியங்களை விசேஷமாகப் புரிந்துகொள்ளவும், பிதாவின் நிபந்தனைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிவதன்மூலம் அவரை நேசித்து, அவருக்கு கீழ்ப்படிகிறவர்கள் அனைவருக்கும் அவர் முழுமையாக தம் தகுதியை அளிக்கிறார்.

ஆனால் அப்போஸ்தலர் கூறுகிறார்; “நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல(திருச்சபையின் பாவங்கள்), சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்” – 1யோவான்2:2.

இதன் அர்த்தம் என்ன ? அவர் முழு உலகிற்காகவும் பரிந்துபேசுகிறவராக இருக்கிறாரா ? இல்லை. சத்தியத்தினிடத்திற்கும், பரிசுத்தமாகுதலுக்கும் உலகம் அழைக்கப்பட்டிருக்கவில்லை. தற்கால யுகத்தின்போது,“பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் ஒருவனும் கிறிஸ்துவண்டை வரமுடியாது” தற்காலத்தில் கேட்கும்செவியை உடையோரை தன் பக்கம் இழுக்கும் வல்லமையை சத்தியம்

பெற்றுள்ளது. ஆனால் பெருந்திரளான உலக மனுக்குலமோ தேவகிருபையைக்குறித்தும் கிறிஸ்துவுக்குள் எல்லோருக்கும் அளிக்கப்படுகிற மன்னிப்பைக்குறித்தும், அவரது கிருபாதாரபலியைக் குறித்தும் எந்தவகையிலும், ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. மெய்யாகவே, விசேஷித்தவர்களாகிய சிறுகூட்டம் மட்டுமே,''கர்த்தர் கிருபையுள்ளவர் என்பதை ருசிபார்த்திருக்கிறார்கள்''.

ஆயினும் கிருபாதாரபலியானது முழு உலகத்தின் பாவங்களையும் போக்குவது எவ்வளவு நிச்சயமோ, மனுக்குல சந்ததியின் ஒவ்வொரு உறுப்பினரும் உண்மையின் அறிவை அடையும்படிக்கு கொண்டுவரப்படுவதும் அவ்வளவு நிச்சயமாயிருக்கிறது. ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அவனவன் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இந்த இலக்கை எட்டவே மாபெரும் ஆயிரவருடயுகம் வாக்களிக்கப்பட்டிருந்து, அதற்கான ஆயத்தவேலைகள் நடைபெற்றுவருகிறது. பூமியின் அனைத்துக் குடும்பங்களும் ஆசீர்வாதிக்கப்படும் அந்த யுகத்தைக்குறித்தே, கர்த்தர் தீர்க்கதரிசி மூலமாக பிரகடனப்படுத்துகையில், அந்நாளில் குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்'' என்கிறார். அக்காலகட்டத்தைக்குறித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து; ''நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்வேன்'' என்று வெளிப்படுத்துகிறார். அவரது புண்ணியத்தினால் முழு உலகத்தின் பாவங்களுக்காக கிருபாதாரபலியாகவும், பாவநிவாரணபலியாகவும் அவர் உயர்த்தப்பட்டார். இதனால் நமது மகிமையடைந்த கர்த்தர் உலகினை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாகும் சிலாக்கியம் அடைந்து, அவரிடத்தில் இருதயப்பூர்வமான கீழ்ப்படிதலைக் காண்பிப்பவர்களுக்கு பாவமன்னிப்பையும், ஒப்புரவாக்குதலையும், திரும்பக்கொடுத்தலையும் அளிக்கிறார். ''அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்'' – அப் 3:23.

**கீழ்ப்படிதலுக்கான பரீட்சை**

தற்போது பிதாவினால் இழுக்கப்படுவது கட்டாயத்தினால் அல்ல, மாறாக சத்தியத்தை அறிகிற அறிவின் மூலமாக நெருக்கப்படுவதனாலேயே ஆகும். அவ்வாறே, உலக மனுக்குலம் ஆயிரமாண்டு யுகத்தில் கூட்டி சேர்க்கப்படுதலும் வலுக்கட்டாயமானதல்ல. மாறாக, நீதி மற்றும் சத்தியத்தின் ஆதிக்கத்தால் நீதியை நேசிக்கும்படி நெருக்கப்படுவதனால் மாத்திரமே இவ்வாறு நீதியின் வெகுமதியாகிய நித்தியஜீவனை அடைவர்.

மிகவும் கணிசமான எண்ணிக்கையுடையோர் தேவனைக்குறித்த உள்ளார்ந்த அறிவினை பெற்றிருப்பதாக தவறாக உரிமை பாராட்டுகிறார்கள் என்று, அப்போஸ்தலர் நம் ஆதார வசனங்கள் எழுதப்பட்ட நிருபத்தில் அறிவுறுத்துவதாகத் தோன்றுகிறது. இதனிமித்தமாகவே எளிமையும் எதார்த்தமுமாக நமக்கு அறிவுறுத்திப்பேசுகிறார்; '' அவரை அறிந்திருக்கிறேன் என்று ஒருவன் சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை'' (1யோவா2:4). இங்கு தேவனை அறிகிற அறிவைப்பற்றி மட்டுமே அப்போஸ்தலர் பொருள்படுத்தி பேசவில்லை, மாறாக, அவரோடு ஐக்கியப்படவும் நட்புறவு கொள்வதற்கேதுவான உள்ளார்ந்த தேவஅறிவையே குறிப்பாகப் பேசுகிறார் என்பது வெளிப்படையாய்த் தெரிகிறது. நாம் கர்த்தருக்குள் புதுசிருஷ்டிகளாக இருக்கிறோமா ? இல்லையா என்றும், தேவஅன்பு நம்முள் எந்தளவு வளர்ந்திருக்கிறது என்றும் நம்மைநாமே நிதானிக்கும்படி அப்போஸ்தலர் நமக்கு பரீட்சை ஒன்றை கொடுக்கிறார். அந்த பரீட்சை கீழ்ப்படிதலேயாகும். எந்தளவு கர்த்தருடைய வார்த்தையை நாம் கடைப்பிடிக்கிறோமோ, அதே அளவுக்கு தேவஅன்பு நம்முள் பூரணப்பட்டிருக்கும். நாம் கிறிஸ்துவின் சிந்தையை, பரிசுத்தஆவியை, தேவஆவியை அடைந்திருந்தோமானால், நம் ஆற்றலின் தன்மைக்கேற்ப அவருக்கு பிரியமானவைகளையும், அவரது சித்தத்தையும் செய்யும் காரணியாக நம்மை இயக்குவிக்கும்.

இந்த ஆற்றல் வருடாவருடம் தொடர்ச்சியாக வளரவேண்டும். நமக்கு புது உயிர்த்தெழுதலின் சரீரங்கள் கொடுக்கப்பட்டு, ஆவிக்குரிய சரீரத்துக்கு மாற்றமடையும்வரை நாம் பரிபூரணரானதற்கான நம்பிக்கையை அடையமுடியாது. இருந்தபோதிலும், மாம்சத்தின் அபூரணத்தன்மைகள் நம்முள் இருப்பதை நாம் ஏற்றுக்கொண்டிருந்தாலும், நம் மாம்சத்தில் பூரணத்தன்மை குடிகொண்டிருக்காது என்பதை அறிந்தவர்களாக, நம் தவறுகளை அறிக்கையிட்டு, அவரது மன்னிப்பைப்பெறவும், நமது பிரயாணத்தின் இறுதிவரைக்கும் பாவத்திலிருந்து நம்மை தொடர்ந்து சுத்திகரித்துக்கொண்டு, நம் சிந்தைகளின்ஆவியில் கர்த்தரோடு மிக நெருக்கமாக நம்மைக் காத்துக்கொண்டு, அவரோடு தொடர்ச்சியான ஐக்கியம்அடையும்படி நாடுவோமாக!

––––––––––––––

R 5939

# உண்மையானதும், தவறானதுமான ஊழிய நியமனங்கள்

## ORDINATIONS - TRUE AND FALSE

அபிஷேகம் அல்லது ஊழிய நியமனம் என்ற வார்த்தையை கிறிஸ்தவ ஊழியங்களுக்கு பொருத்திப் பார்க்கும்பொழுது, பெரும்பாலான ஜனங்களாலும் ஊழியக்காரர்களாலும் மிக அபூரணத்தன்மையோடு புரிந்துகொள்ளப்படுவதாகத் தோன்றுகிறது. சில கிறிஸ்தவ ஜனங்களால் தங்கள் ஊழியர்களை நியமிப்பதற்காக கடைப்பிடிக்கப்பட்டுவருகிற சடங்குமுறை – தலைமேல் கைகளை வைத்தல் போன்றவை அபிஷேகப்படுத்துதல் அல்ல, மாறாக, அபிஷேகப்படுத்துதலோடு தொடர்புடைய சடங்கு மட்டுமே. அபிஷேகப்படுத்துதல், சில குறிப்பிட்ட வேலைக்கு பிரத்யேகமாக நியமித்தல், அங்கீகாரமளித்தல் என்ற பொருள்படும் வார்த்தைகளை முக்கியப்படுத்துகிறது.

ஊழிய நியமனங்கள் என்பதற்கு வேதாகமம் அளிக்கும் கருத்து என்னவெனில், அப்போஸ்தலர்கள், “ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களை நியமித்துவந்தார்கள்” என்று நாம் வாசிக்கிறோம்(அப் 14:23). அதுபோலவே, இன்றையநாளிலும், கர்த்தருடைய ஜனங்களிடையே மூப்பர்கள் தெரிந்தெடுக்கப்படும்போது, அல்லது நியமிக்கப்படும்போது அல்லது அங்கீகாரமளிக்கும்போது, சபையினர், தங்கள் கரங்களை உயர்த்துவதன்மூலம் வாக்களித்து தெரிவுசெய்யப்படுகிறார்கள். வாக்களிப்பதன்மூலமே ஒவ்வொரு மூப்பரும் ஒவ்வொரு உதவிக்காரரும் வேதாகமம் கூறுகிறபடி கரங்களை உயர்த்துதல் மூலமாக தெரிந்தெடுக்கப்பட்டு,(கைகளை வைப்பதன் மூலம் அல்ல) ஊழியம்செய்ய அபிஷேகப்படுத்தப்படுகிறார்கள் அல்லது நியமிக்கப்படுகிறார்கள் அல்லது அங்கீகரிக்கப்படுகிறர்கள்.

இவ்வாறு மூப்பர்களும் உதவிக்காரர்களும் அபிஷேகம் பண்ணப்படும்பொழுது, கர்த்தருடைய சிந்தையை அறியத்தேடவேண்டும் என்று கர்த்தருடைய ஜனங்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஒரு மூப்பர் அல்லது உதவிக்காரரை சகோதரர் மத்தியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட வாக்களிக்கும்போது, அந்நபர் ஊழியத்துக்கென சுட்டிக்காட்டப்பட்ட தெய்வீகத் தகுதிகளை அடைந்திருக்கிறார் என்று உறுதிப்படுத்திக்கொள்வதை வலியுறுத்துகிறது. பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலை அடைந்திருத்தலுக்கான அடையாளங்களை கொடுக்காத எவருக்கும் வாக்களிக்கக்கூடாது. பரிசுத்தஆவியினால் ஒருவர் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதே பிரசங்கிக்கவும், போதிக்கவுமான ஏசாயா 61:1இல் வரையறுக்கப்பட்ட தெய்வீக அங்கீகாரமாகும்;

“கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலையும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும்..” – ஏசாயா 61:1.

பொதுவாக குருவின் நாமத்தில், அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளின்படி, அற்புதமான ஜீவ வார்த்தைகளைப் பேசுவதற்கு, ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட கர்த்தருடைய ஜனங்கள் எல்லாரும் அபிஷேகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு சபையில் நியமனம் பண்ணப்படும்பொழுது, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவஜனங்கள் தங்கள் மத்தியிலிருந்து சிலரை மூப்பராகவும், சிலரை உதவிக்காரர்களாகவும் தெரிவுசெய்யும்பொழுது சிந்திக்கவேண்டியது என்னவென்றால்,தெரிந்தெடுக்கப்படுபவர் விசேஷித்த தகுதியைப் பெற்றவராக இருக்கவேண்டும், “போதிப்பதில் சமர்த்தனும்”, வார்த்தையிலும் நடக்கையிலும் முன்மாதிரிகையாயும் இருக்கவேண்டும் – 1தீமோத்3:2–4.

நியமனம் செய்வதில் தெய்வீக அபிஷேகத்தை தவிர்த்து(ஏசா61:1) வெறுமனே ஒருவருடைய கல்வித்தகுதியையும், திறமையையும் பார்த்து தேர்ந்தெடுப்பது தவறானதாகும். இவ்வாறு தெய்வீக பரீட்சையை அலட்சியப்படுத்தி, கிறிஸ்துவின் சபையின் ஊழியக்காரர்களாகவும் மூப்பர்களாகவும் பணியாற்றிவருகின்றனர். இவர்கள் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கான எந்த வெளியரங்கமான அடையாளமும், அங்கீகாரமும், தகுதியும் பெறவில்லை. இப்படிப்பட்டவர்கள் தேவனால் முறையாக நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்களல்ல. மேலும் இவர்களது தெய்வீக ஆசீர்வாதங்களையோ அல்லது தெய்வீக வல்லமையையோ கொடுப்பதில்லை.

ஊழிய நியமனம் குறித்த மிகத் தப்பறையான கருத்தை பின்பற்றிவருகிற மூன்று பழமை வாய்ந்த கிறிஸ்தவ பிரிவுகளாகிய ரோமன்கத்தோலிக்கர், இங்கிலாந்தை சேர்ந்த எபிஸ்கோப்பல் சபை, மற்றும் கிரேக்க கத்தோலிக்க சபை ஆகும். இந்த பழமைவாய்ந்த சபைகளில், ஊழிய நியமனம் முற்றிலுமாக ஒரு வேறுபட்ட அர்த்தத்தை உடையதாயிருக்கிறது. அவர்கள் அப்போஸ்தல வாரிசுரிமையை பெற்றிருப்பதாக உரிமை பாராட்டுகிறார்கள். ஆதியில் அப்போஸ்தலர்கள் மட்டுமே கற்பிக்கவும் போதிக்கவும் அதிகாரம் பெற்றிருந்தார்கள். அதன்படி மற்ற போதகர்களும், கற்பிப்போரும் அப்போஸ்தலரின் கரங்களிலிருந்து தெய்வீக வல்லமையையும், அங்கீகாரத்தையும் பெறவேண்டியது கட்டாயமாயிருந்தது. அப்போஸ்தலர்கள் மரிப்பதற்கு முன்பாக, சபையில் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்த கண்காணிகளுக்கு ஒரு விசேஷித்த கட்டளை பிறப்பிக்கப்பட்டது என்று அவர்கள் கூறுகிறார்கள். அதன்படி, அப்போஸ்தல அதிகாரமும், வல்லமையும், அங்கீகாரமும் இந்த கண்காணிகளிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறது, இப்படியாக நாம்வாழும் காலம்வரை இந்த சபைப் பிரிவுகளின் கண்காணிகள் அங்கீகாரம் பெற்றவர்களென்று உரிமை பாராட்டுகிறார்கள்.

கிறிஸ்தவ ஊழியர்களாக இவர்கள்மட்டுமே அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பதாக இவர்கள் உரிமை பாராட்டுகிறார்கள்.

ஒரு வார்த்தையில் கூறினால், இந்த மூன்று பழங்கால சபைகளும் தெய்வீக ஊழிய நியமனத்தை பரிசுத்தஆவியின் அபிஷேகத்தை முழுவதுமாக ஒருபுறம் ஒதுக்கிவைத்திருந்து, ''அப்போஸ்தல வாரிசுரிமை'' யின் வல்லமை மற்றும் அதிகாரத்தின் மூலமாக, அங்கீகாரம்பெற்று, மாற்றீடாக ஏற்படுத்தினார்கள். 12 சீஷர்கள் மட்டுமே இருந்ததாக இயேசு நமக்கு கூறியதோடு மட்டுமல்லாமல், வெளிப்படுத்தல் 2:2இல் குறிப்பிடுகிறபடி;

''அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று உரிமைபாராட்டுகிற இந்த கொடிய தவறை செய்கிற இவர்கள் பொய் சொல்லுகிறார்கள்''.

**சில முக்கிய கேள்விகள் :–**

கிறிஸ்தவ ஊழியர்களை நியமித்தல் அல்லது அபிஷேகப்படுத்துதல் என்பதன் உண்மைப்பெருள் என்ன என்ற மேற்கண்ட சுருக்கமான விளக்கத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளும்வரை, மீண்டும் மீண்டும் படிக்கவேண்டும். பின்பு கீழ்க்காணும் கேள்விகளையும் பதில்களையும் எளிதில் விளங்கிக்கொள்ளமுடியும்.

1) சபையின் மத்தியில் தெரிவுசெய்யப்படும் எல்லா மூப்பர்களும் உதவிக்காரரும் தெய்வீக நியமனம் பெற்றவர் என கருதலாமா ?

கருதமுடியாது, பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலை அடையாத எவரையும் தெய்வீக நியமனம் பெற்றவராக கருதமுடியாது. தேவனிடத்தில் முழு தத்தம்செய்த வெளிப்படையான சாட்சியத்தைப் பெற்றிராமலும், பரிசுத்தஆவியின் ஜெனிப்பிக்குதலை பெறாமலும் இருந்த எவரையேனும், சபை நியமனம் செய்யுமானால், அவர்கள் கர்த்தரது ஊழியம்செய்ய அவரால் அதிகாரம் பெறாதவர்களாயிருப்பர். அவ்வாறு தெரிந்தெடுக்கப்படும் நபர், நியமனம்செய்த சபையின் பிரதிநிதியாக மட்டுமே இருப்பாரேயல்லாமல், கர்த்தரது பிரதிநிதியாக இருக்கமாட்டார்.

ஆனால் கர்த்தருடைய அதிகாரம் பெற்ற ஒரு சகோதரனை சபையின் ஜனங்கள் அடையாளங் கண்டுகொள்ளவும், அதனைத்தொடர்ந்து, அவரது கற்பிக்கும் திறன்மூலமும், ஊழியத்துக்கு பொருத்தமான குணாதிசயங்களை தெய்வீக வசனங்களின்படி அவர் பெற்றிருப்பதன்மூலமும் சபையார் புரிந்துகொள்ளவும் முடியும். இதன் விளைவாக, அந்த சகோதரனை கர்த்தரது நாமத்தில் சபையின் பிரதிநிதியாக முறையாக தெரிந்தெடுத்து அல்லது நியமனம் செய்யவேண்டும். எந்த சகோதரனும் கர்த்தருடைய ஜனங்களடங்கிய கூட்டத்தில் அவர்களது வேண்டுகோளின்றி ஊழியம்செய்ய முயற்சிக்கக்கூடாது. சபை ஜனங்களின் வேண்டுகோள் அல்லது அவர்களது வாக்கு, அந்த சகோதரனுக்கு அந்த ஊழியம் செய்யும்படி உரிமையை ஏற்படுத்தித்தந்தது. மற்றுமொரு வார்த்தையில் கூறுவோமானால், அந்த சகோதரனை ஊழியத்துக்காக ஒரு வருடத்திற்கோ அல்லது ஒரு நாளைக்கோ ஏற்படுத்துவர்.

2) எல்லா மூப்பர்களும் உதவிக்காரரும் இவ்வாறு நியமனம் செய்யப்படுவது முறையானதாக இருக்கவேண்டும், அல்லது முறையாக நியமிக்கப்படாமல் தொடர்ச்சியாக ஊழியம் செய்ய முயற்சிக்ககூடாது என்போமானால், பவுல் அப்போஸ்தலன் கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில்;

''மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாகவும் அல்ல, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின பிதாவாகிய தேவனாலும் அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நான்..'' என்று கூறுவதன் அர்த்தமென்ன ?

அப்போஸ்தலரை தேர்ந்தெடுக்க அல்லது நியமனம்செய்ய ஒரு மனிதனுக்கோ அல்லது சபைக்கோ திறனில்லை. ஒரு சகோதரனை அப்போஸ்தலனாக உருவாக்க, சபையாரது வாக்களிப்பின் மூலம் கூடாது. தெய்வீக நியமனத்தால் மாத்திரமே அப்போஸ்தலரது விசேஷித்த ஊழியத்தை ஏற்படுத்தமுடியும். இவ்வாறு பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை மாத்திரம் கர்த்தராகிய இயேசு ஏற்படுத்தினார்.

''ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள்'' –வெளிப்படுத்தல்21:14.

தன் அப்போஸ்தலத்துவத்தை இழந்த யூதாஸின் ஸ்தானத்தை பரிசுத்தபவுல்அடைந்தார்(சங்109:8; அப்1:20). இதன் அடிப்படையிலேயே ரோமசபை, இங்கிலாந்து சபை, மற்றும் கிரேக்கசபைகள் தேவ வசனத்தின் கொள்கைகளுக்கு எதிராக ஊறுவிளைவிக்கிறார்கள். இதன் அடிப்படையிலேயே அவர்கள் அப்போஸ்தலிக்க அதிகாரமும், வல்லமையுமுள்ள அப்போஸ்தலிக்க கண்காணிகளை ஏற்படுத்துவதாக உரிமை பாராட்டுகிறார்கள். ஆனால் அவர்களால்அவ்வாறு மெய்யாகவே அப்போஸ்தல கண்காணிகளை உருவாக்கமுடியாது.

அவரது அப்போஸ்தலப் பணியைத்தவிர மற்ற பூமிக்குரிய நியமனத்தைக்குறித்து அவர் அக்கறை காண்பிக்கவில்லை என்று நாம் உணர்ந்துகொள்வதை பரிசுத்த பவுல் விரும்பவில்லை. அதற்கு மாறாக, அந்தியோக்கியா சபை, பவுல் மற்றும் சீலாவை நியமனம் செய்தது. அதற்குப்பிறகு, பவுலும் சீலாவும் அவர்களது பிரதிநிதிகளாக அவர்களது செலவிலேயே மற்றவர்களுக்கும் செய்தியை எடுத்துச்சென்றதாக தோற்றமளிக்கிறது. அப்போஸ்தலர் பவுலை அந்தியோக்கியா சபை ஒரு அப்போஸ்தலனாக நியமிக்கவில்லை. மாறாக, அவர்களது சுவிசேஷஊழியக்காரனாக வெளிநாட்டு சபைகளுக்கு செல்லும்படி அவரை நியமித்தனர். அவர்களது நியமனத்தை அப்.பவுல் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு கணக்கு ஒப்புவித்தார்– அப்14:26–28).

―――――――――――――――

# உண்மையான மற்றும் தவறான – 'ஏற்படுத்துதல்கள்'

கிறிஸ்தவ ஊழியங்களுக்குப் பொருந்துகின்றதான Ordination/*ஏற்படுத்துதல்* எனும் வார்த்தையானது, பெரும்பான்மையான ஜனங்களினால் - ஊழியக்காரர்களினால்கூட மிகவும் அரைகுறையாகவே புரிந்துகொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. தங்கள் ஊழியக்காரர்களை நியமிக்கையில் கிறிஸ்தவ ஜனங்கள் சிலரால் கடைப்பிடிக்கப்படுகின்றதான சடங்குமுறையாகிய, கைகளை வைத்தல் முதலானவைகள் *ஏற்படுத்துதலாய்* இராமல், *ஏற்படுத்துதல்* தொடர்புடைய ஒரு சடங்காய் மாத்திரமே உள்ளது. Ordination/*ஏற்படுத்துதல்* என்ற வார்த்தையானது, ஏதோ ஒரு குறிப்பிட்ட பணிக்காக அல்லது ஊழியத்திற்காகத் தெரிந்துகொள்ளப்படுவதை, அங்கீகரிக்கப்படுவதை அல்லது நியமிக்கப்படுவதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது.

அப்போஸ்தலர்கள் "அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தினதாக" நாம் வாசிக்கையில், வேதாகமத்தினால் கொடுக்கப்படும் கருத்தே, *ஏற்படுத்துதல்* சம்பந்தப்பட்ட சரியான கருத்தாகும் (அப்போஸ்தலர் 14:23). இதுபோலவே இன்றும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில், சபையாருடைய (vote) வாக்கினால் - சபையார் தங்கள் கைகளை நீட்டுவதன் மூலம், மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் அல்லது நியமிக்கப்படுகின்றனர் அல்லது அங்கீகாரமளிக்கப்படுகின்றனர். (கைகளை வைப்பதன் மூலமாக இல்லாமல், மாறாக) "கைகளை நீட்டுதல்" எனும் வாக்கினால் வேத வாக்கியங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மூப்பனும் மற்றும் ஒவ்வொரு உதவிக்காரரும், இவ்விதமாய் அந்தந்த ஊழியம் புரிவதற்கென *ஏற்படுத்தப்படுகின்றனர்* அல்லது நியமிக்கப்படுகின்றனர் அல்லது அங்கீகாரமளிக்கப்படுகின்றனர்.

இப்படியாக மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் *ஏற்படுத்திடும்* விஷயத்தில், கர்த்தருடைய ஜனங்கள், கர்த்தருடைய மனதை அறிந்துகொள்வதற்கு நாடும்படிக்கு அறிவுறுத்தப்படுகின்றனர். அவர்கள் சகோதரரில் ஒருவரை உதவிக்காரனாகவோ அல்லது மூப்பனாகவோ vote/வாக்களித்து, தேர்ந்தெடுக்கும் காரியமானது, அந்நபர் தேவனால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளதான அவ்வூழியத்திற்குரிய தகுதிகளை உடையவராய் இருக்கின்றார் என்று அவர்கள் நம்புவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஏசாயா 61:1-ஆம் வசனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பிரகாரம், பிரசங்கிப்பதற்கான அல்லது போதிப்பதற்கான திவ்விய அங்கீகாரமான பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலை அடைந்துள்ளதற்கான சாட்சியங்களைக் கொணராத எவருக்கும் வாக்களிக்கப்படக் கூடாது.

இந்த ஒரு பொதுவான விதத்தில் - கர்த்தருடைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட ஜனங்கள் யாவரும், ஆண்டவருடைய நாமத்தில், அருமையான ஜீவ வார்த்தைகளை, தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கு ஏற்ப பேசிடுவதற்கு "*ஏற்படுத்தப்பட்டுள்ளனர்".* ஆனால் இவ்விதமாய் *ஏற்படுத்தப்பட்ட,* ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள தேவனுடைய பிள்ளைகள் அடங்கின சபையார், தங்கள் மத்தியிலிருந்து சிலரை மூப்பர்களாகவும், சிலரை உதவிக்காரர்களாகவும் தேர்ந்தெடுக்கும்போது, இது இவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்தவர்கள் விசேஷித்த தகுதியுடையவர்களாகவும், "போதக சமர்த்தனாகவும்" - வார்த்தையிலும், நடத்தையிலும் சகோதரருக்கு மாதிரியாக இருப்பதாகவும் கருதுவதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது (1 தீமோத்தேயு 3:2).

*ஏற்படுத்துதல்* தொடர்புடைய விஷயத்தில், திவ்விய அபிஷேகித்தலைப் (ஏசாயா 61:1) பொருட்படுத்தாமல், தேர்ந்தெடுக்கப்படுகிறவரின் கல்வியறிவையும், தாலந்துகளையும் மாத்திரமே கண்நோக்குதல் என்பது, *ஏற்படுத்துதல்* பற்றின தவறான கருத்தாகும். இப்படியாய்த் திவ்விய பரீட்சையினைப் பொருட்படுத்தாமல், இன்று கிறிஸ்துவினுடைய சபையில் - ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதாகத் தங்களைக்குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்ளாதவர்களும், இதற்கு எந்த வெளியரங்கமான சாட்சியினைப் பகராதவர்களுமான அநேகர் ஊழியக்காரர்களாகவும், மூப்பர்களாகவும் ஊழியம் புரிந்துகொண்டு வருகின்றனர். இத்தகையவர்கள் முறையாய் *ஏற்படுத்தப்பட்டுள்ள* தேவனுடைய ஊழியக்காரர்கள் அல்ல மற்றும் இவர்களின் சபை *ஏற்படுத்துதலானது,* திவ்விய ஆசீர்வாதத்தினையோ அல்லது அதிகாரத்தினையோ இவர்களுக்கு அருளுகிறதில்லை.

*ஏற்படுத்துதல்* குறித்த மிகவும் தவறான கருத்தானது, மூன்று பழமை மிக்க கிறிஸ்தவ சபை பிரிவுகளால் முன்வைக்கப்படும் கருத்தாய் இருக்கின்றது; அச்சபைகள் - உரோம கத்தோலிக்க திருச்சபை, இங்கிலாந்தின் எபிஸ்கோப்பல் திருச்சபை மற்றும் கிரேக்க கத்தோலிக்க திருச்சபையாகும். இந்தப் பழமை வாய்ந்த சபைகளைப் பொறுத்தமட்டில்,

*ஏற்படுத்துதல்* என்பது முற்றிலும் வேறுபட்ட பொருளை உடையதாய் இருக்கின்றது. இவர்கள் தங்களுக்கு **அப்போஸ்தல வாரிசு உரிமையின்படியான அதிகாரம்** இருப்பதாக உரிமைப்பாராட்டுகின்றனர் - அதாவது ஆரம்பத்தில் அப்போஸ்தலர்களே போதிப்பதற்கான அல்லது பிரசங்கிப்பதற்கான உரிமையினைக் கொண்டிருந்தனர் என்றும், மற்றப் போதகர்கள் அல்லது பிரசங்கிப்பவர்கள், அப்போஸ்தலர்களுடைய கரங்களிலிருந்து அங்கீகாரத்தையும், திவ்விய அதிகாரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது என்றும் இவர்கள் கூறுகின்றனர். அப்போஸ்தலர்கள் மரிப்பதற்கு முன்பு, சபையில் ஒரு விசேஷித்த கண்காணிகள் வகுப்பார் *ஏற்படுத்தப்பட்டிருந்தனர்* என்றும், அப்போஸ்தல வல்லமையும், அதிகாரமும் அந்தக் கண்காணிகளுக்குக் கடந்துவந்தது என்றும் மற்றும் இவ்விதமாய் நம்முடைய நாட்கள் பரியந்தமும் கடந்துவந்து, இந்தச் சபை பிரிவுகளிலுள்ள கண்காணிகளிடத்தில் இருக்கின்றது என்றும் இவர்களால் வலியுறுத்தப்படுகின்றது. தங்களால் *ஏற்படுத்தப்படுபவர்களே*, கிறிஸ்தவ ஊழியக்காரர்களாய் இருப்பார்கள் என்றும் இவர்களால் வலியுறுத்தப்படுகின்றது.

சுருக்கமாகச் சொல்லப்போனால், இந்த மூன்று பழமைமிக்க திருச்சபைகளானது, திவ்விய *ஏற்படுத்துதலை*, பரிசுத்த ஆவியினுடைய அபிஷேகித்தலை முற்றிலுமாய்ப் புறந்தள்ளி, இதற்குப் பதிலாக அப்போஸ்தல "வாரிசுரிமையின்படியான" வல்லமை மற்றும் அதிகாரம் என்று அழைக்கப்பட்டு வருகின்றதான ஓர் அங்கீகாரத்தினைக் கொண்டுவந்துவிட்டனர். பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மாத்திரமே உண்டு என்று மாத்திரம் இயேசு நம்மோடு கூறாமல், வெளிப்படுத்தல் 2:2-ஆம் வசனத்தில், அப்போஸ்தலர் அல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலர்கள் என்று பொய்யாய் உரிமைப்பாராட்டிடும் இந்தக் கொடிதான தவற்றினைச் சுட்டிக்காட்டவும் செய்கின்றார்.

## சில முக்கியமான கேள்விகள்

கிறிஸ்தவ ஊழியக்காரர்களை *ஏற்படுத்துதல்* என்பதன் உண்மையான பொருள் என்னவென்று விளக்கும் மேற்கூறப்பட்டுள்ளதான சுருக்கமான விளக்கமானது, முழுமையாய்ப் புரிந்துகொள்ளப்படுவது வரையிலும், திரும்பத்திரும்ப வாசிக்கப்பட வேண்டும். பின்னர்க்கீழே இடம்பெறும் கேள்விகளும், பதில்களும் எளிமையாகப் புரிந்துகொள்ளப்படலாம்:

(1) தேவனுடைய ஜனங்கள் அடங்கின சபையாரால் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் திவ்விய *ஏற்படுத்துதலின் படியானவர்கள்* என்று கருதப்பட வேண்டுமா?

இல்லை, பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடையாத எவரும் தெய்வீக *ஏற்படுத்துதலின் படியானவர்கள்* என்று கருதப்பட முடியாது. தேவனுக்குத் தன்னை முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும், பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடைந்ததாகவும் தன்னைக்குறித்து அறிக்கைப்பண்ணிடாத ஒருவரைச் சபையார் ஊழியராக *ஏற்படுத்திக்கொள்வது* என்பது, சபையார் செய்திடுவதற்குக் கர்த்தரால் அங்கீகாரம் அளிக்கப்படாத காரியத்தினை, அவர்கள் செய்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அந்நபர், இப்படியாய் இவரை ஊழியராக ஏற்படுத்தின சபையாரின் பிரதிநிதியாகத்தான் இருப்பாரேயொழிய, கர்த்தருடைய பிரதிநிதியாக இருப்பதில்லை.

ஆனால் ஒரு சகோதரன் குறித்த கர்த்தருடைய அங்கீகாரத்தினை ஒரு சபையார் அடையாளம் கண்டுகொள்வார்களானால் மற்றும் இன்னுமாக அச்சகோதரன் போதக சமர்த்தனாய் இருப்பதையும், தெய்வீக வார்த்தைகளுக்கு ஏற்ப ஊழியத்திற்குப் பொருத்தமான பண்புகளை உடையவராய் இருப்பதையும் அடையாளம் கண்டுகொள்வார்களானால், கர்த்தருடைய நாமத்தில் சபையாரின் பிரதிநிதியாகிடுவதற்கு அச்சகோதரனை முறையாய்த் தேர்ந்தெடுத்திட அல்லது *ஏற்படுத்திட* வேண்டும். கர்த்தருடைய ஜனங்களின் வேண்டுகோளில்லாமல், எந்த ஒரு சகோதரனும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒரு கூட்டத்தாருக்கு ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது; சபையாருடைய வேண்டுகோள் அல்லது அவர்களது vote/வாக்குகளானது - அந்த ஊழியத்திற்குச் சகோதரனை நியமிக்கின்றதாய் இருக்கின்றது, அதாவது வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் சகோதரனை அவர்கள் ஊழியத்திற்காக ஒரு நாளோ அல்லது ஒரு வருஷக்காலமோ நியமிக்கின்றதாய் அல்லது *ஏற்படுத்துகின்றதாய்* இருக்கின்றது.

(2) இவ்விதமாய் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் *ஏற்படுத்தப்படுவது* முறையானது என்றும் மற்றும் *ஏற்படுத்தப்படாமல்* எவரும் தொடர்ச்சியாய் ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது என்போமானால், பரிசுத்த பவுல் அடிகளார் "மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயே அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நான்" என்று என்ன அர்த்தத்தில் கூறினார்? (கலாத்தியர் 1:1)

ஓர் அப்போஸ்தலனைத் தேர்ந்தெடுப்பதற்கோ அல்லது நியமிப்பதற்கோ எந்த ஒரு மனுஷனோ அல்லது சபையாரோ பொருத்தமானவர்களல்ல. எந்தச் சபையாருடைய வாக்குகளும், சகோதரரில் ஒருவரை அப்போஸ்தலனாக்கிட முடியாது. அது தெய்வீக *ஏற்படுத்துதலினால்* மாத்திரமேயான ஒரு விசேஷித்த ஊழியம் அல்லது பணியாகும். ஆகவே கர்த்தர் இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களை மாத்திரம் - "ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை" ஏற்படுத்தினார்; அப்போஸ்தல ஸ்தானத்தினை இழந்திட்டதான யூதாசின் இடத்தினை, பரிசுத்த பவுல் அடிகளார் எடுத்துக்கொண்டார் (வெளிப்படுத்தல் 21:14; சங்கீதம் 109:8; அப்போஸ்தலர் 1:20). இந்த ஒரு விஷயத்தில்தான் உரோம சபையும், இங்கிலாந்து சபையும் மற்றும் கிரேக்க சபையும், தேவனுடைய வார்த்தைகளின் கொள்கையினை மீறுகின்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது அப்போஸ்தல அதிகாரமும், வல்லமையும் உடைய கண்காணிகளை - அப்போஸ்தல கண்காணிகளை நியமிப்பதாக வலியுறுத்துகின்றனர்; ஆனால் உண்மையில் இப்படி *ஏற்படுத்திட* முடியாது.

தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தின் ஏற்படுத்துதல் ஒருபக்கமிருக்க, மற்றபடி தனக்கான பூமிக்குரிய *ஏற்படுத்துதலை* தான் பொருட்படுத்தவில்லை என்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டுமெனப் பரிசுத்த பவுல் அடிகளார் சொல்லவில்லை. மாறாக அந்தியோகியாவிலுள்ள சபையார் அநேகமாக தங்களது சொந்த செலவில் சுவிசேஷத்தினை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லும் தங்களது பிரதிநிதியாகக் காணப்படும்படிக்குப் பவுலையும், பர்னபாவையும் *ஏற்படுத்தினார்கள்* மற்றும் பின்னர்ப்பவுலையும், சீலாவையும் ஏற்படுத்தினார்கள். அப்போஸ்தலனாகிய பவுலை, அந்தியோகியா சபை அப்போஸ்தலனாக *ஏற்படுத்தாமல்,* மாறாக தங்களது சுவிசேஷ ஊழியக்காரனாக அவரை ஏற்படுத்தினார்கள் மற்றும் அவரும் அவர்களது *ஏற்படுத்துதலை* ஏற்றுக்கொண்டு, அப்போஸ்தலர் நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது போன்று, அவர்களுக்கு அறிக்கை விவரம் கொடுத்தார் என்று பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 14:26-28).

(3) வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டியானது (Watch Tower Bible and Tract Society) அறுவடை வேலைக்காக ஊழியக்காரர்களை அல்லது பிரதிநிதிகளை எப்போதேனும் *ஏற்படுத்தினதுண்டா*?

ஆம் *ஏற்படுத்தினதுண்டு*. அனைத்துப் பயண ஊழியக்காரர்களுமே ஊழியத்தின் அந்த விசேஷித்த பணிக்காக இவ்விதம் *ஏற்படுத்தப்படுகின்றனர்,* நியமிக்கப்படுகின்றனர் அல்லது தெரிந்தெடுக்கப்படுகின்றனர். சடங்கு என்பது *ஏற்படுத்துதலாய்* இராமல், மாறாக நியமித்தலும், கட்டளையிடுதலுந்தான் *ஏற்படுத்துதலாய்* இருக்கின்றது. சொசைட்டியானது, அதனுடைய பிரதிநிதிகளாகவும், அதேவேளையில் கர்த்தருடைய மற்றும் அவரது வார்த்தைகளுடைய பிரதிநிதிகளாகவும் காணப்படும் பயண ஊழியர்களை *ஏற்படுத்துகின்றது,* அங்கீகரிக்கின்றது, அவர்கள் செல்லும் இடங்களைக் குறித்துக் கட்டளையிடுகின்றது.

(4) வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டியிற்கு, ஒரு பயண ஊழியச் சகோதரனுடைய *ஏற்படுத்துதலை* நீக்கிடுவதற்கான/withdraw உரிமை உள்ளதா?

ஆம், நிச்சயமாக! அதற்கு *ஏற்படுத்திடுவதற்கும்*, கட்டளையிடுவதற்கும் அதிகாரம் இருக்குமானால், முந்தைய காலங்களில் அது செய்திட்டதான நியமித்தல்களையும், கட்டளைகளையும் நீக்கிடுவதற்கும் அதற்கு அதிகாரமுள்ளது.

(5) சொசைட்டியின் *ஏற்படுத்துதல்* அல்லது நியமித்தலானது நீக்கப்படுதல் என்பது, இப்படியாகச் சொசைட்டியினுடைய ஊழியத்தினின்று தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட்டுள்ள பயண ஊழியக்காரன், அதன் பிறகு பிரசங்கம்பண்ணிடுவதற்கு உரிமையற்றவர் என்பதைக் குறிக்குமா?

நிச்சயமாக இல்லை! பயண ஊழியக்காரனிடமிருந்து சொசைட்டியானது அதன் நியமனத்தை நீக்கிடுதல் என்பது, ஏதோ சில காரணங்களினால் அந்தப் பயண ஊழியக்காரன் இனிமேல் சொசைட்டியின் பிரதிநிதியாக இருப்பதில்லை என்பதை, அவருக்கோ அல்லது அவரது போதனைகளுக்கோ அல்லது அவரது நடத்தைக்கோ அல்லது வாழ்க்கை பராமரிப்பிற்கோ இனிமேல் சொசைட்டி பொறுப்பாய் இருக்காது என்பதை மாத்திரம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். பயண ஊழியக்காரர்களுடைய பட்டியலினின்று இப்படியாக நீக்கப்பட்டுள்ளதான அந்தப் பயண ஊழியச் சகோதரன், தொடர்ந்து சகோதரனாகவே காணப்படுவார் மற்றும் இப்படியாகவே சொசைட்டியினாலும் கருதப்படுவார்; ஆனாலும் - குணலட்சணத்தினுடைய சில பெலவீனங்களை வெளிப்படுத்துவதன் காரணமாகவோ அல்லது போதக சமத்துவத்தில் சில குறைபாடுகளின் காரணமாகவோ அல்லது ஊக்குவிக்கப்படக் கூடாது என்று சொசைட்டியானது எண்ணுகிற சில காரணங்களுக்காகவோ அல்லது சொசைட்டி பொறுப்பேற்க விரும்பிடாத சில விஷயங்களுக்காகவோ அல்லது பலதரப்பட்ட காரணங்களுக்காகவோ, நோய் முதலானவைகள் என்ற காரணங்களுக்காகவோ -

அச்சகோதரன் இனிமேல் சொசைட்டியினுடைய பிரதிநிதியாய் இருப்பதற்குப் பொருத்தமான நபராக கருதப்படுவதில்லை.

(6) V. D. M. - என்பதன் அர்த்தம் என்ன? மற்றும் V. D. M. பட்டம்/degree கொடுக்கப்படுவது எதைக் குறிக்கின்றதாய் இருக்கும்?

V. D. M. என்பது மிகவும் பழைய பெயராகும். இப்பெயருடைய பயன்பாடானது நீண்ட காலமாய் வழக்கத்தில் இல்லாதபடியினால், வெகு சிலரே இதன் அர்த்தத்தினை அறிந்தவர்களாய் இருக்கின்றனர். இந்த மூன்று எழுத்துக்களானது, Verbi Dei Minister எனும் இலத்தீன் வார்த்தைகளைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இதன் ஆங்கில வார்த்தை "Minister of Divine Word"/ "திவ்விய வார்த்தைகளினுடைய ஊழியக்காரன்" என்பதாகும். இருண்ட யுகங்களில் திவ்விய வார்த்தைகள் பயன்பாட்டில் இல்லாமல் போய், இதற்குப் பதிலாக விசுவாசப் பிரமாணங்கள் பயன்பாட்டில் காணப்பட்டப் போது, இப்பெயரும் பயன்பாட்டில் இல்லாமல் மற்றும் புறக்கணிக்கப்பட்டுப் போயிற்று. திவ்விய வார்த்தைகளுக்கு ஊழியக்காரன் யாரும் இல்லாமல் போயிற்று; காரணம் திவ்விய வார்த்தையானது பிரசங்கிக்கப்படாமல், இதற்குப் பதிலாக மனுஷருடைய விசுவாசப் பிரமாணங்கள் பிரசங்கிக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய பொது ஊழியர்கள் தொடர்புடைய விஷயத்தில், சரியான சிந்தையினை மிக அருமையாய் வெளிப்படுத்துகின்றதான இந்த எளிமையான வார்த்தைகளையுடைய இப்பெயருக்குப் பதிலாக, இன்று வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாத Reverend/ரெவரண்ட் மற்றும் Doctor of Divinity/வேதசாஸ்திரி போன்ற பகட்டான பட்டங்கள் காணப்படுகின்றது. திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் எனும் பட்டம் கொடுக்கப்படுவது என்பது, ஊழியராக ஏற்படுத்தப்படுதலைக் குறிப்பதாய் இராது; மாறாக சொசைட்டியானது இப்பட்டத்தினைக் கொடுக்கையில், அது அந்நபருடைய நற்பெயரை ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் முடிந்தமட்டும் அந்நபருடைய குணலட்சணத்தையும், விசேஷமாக அந்நபருடைய உபதேச ரீதியிலான வளர்ச்சியையும் ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் (V. D. M. கேள்விக்கான பதில்களை) மதிபீடு செய்யும் குழுவினுடைய அங்கத்தினர்களின் கணிப்பில், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியானவராய் இருக்கின்றார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் மாத்திரமே இருக்கின்றது.

(7) இத்தகைய திவ்விய வார்த்தைக்கான ஊழியர்கள் இப்போது இருக்கின்றார்களா?

ஆம், நிச்சயமாக! சொசைட்டியினால் அனுப்பப்படும் ஒவ்வொரு பயண ஊழியக்காரனும், விசுவாச பிரமாணங்களினுடைய அல்லது "அமைப்புகளுடைய/isms" ஊழியக்காரர்களாய் இல்லாமல், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான்; உண்மையில் தேவனுடைய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான். எந்த ஓர் இடத்திலுமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின சபையார், அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டுள்ள ஒரு தேவனுடைய பிள்ளையை, மூப்பராகத் தேர்ந்தெடுக்கும் போதெல்லாம், சபையார் தங்களுடைய தெரிந்துகொள்ளுதலின் வாயிலாக அல்லது தேர்ந்தெடுத்தலின் வாயிலாக, அந்த மூப்பர் திவ்விய வார்த்தைக்கான ஊழியராய் இருக்கின்றார் - அதாவது தேவனுடைய வார்த்தைகளிலுள்ள சத்தியங்களைப் பிரசங்கிப்பவர், பரப்புபவர், பகிர்ந்தளிப்பவராய் இருக்கின்றார் என்று சுட்டிக்காட்டுகின்றவர்களாய் இருக்கின்றனர்.

(8) ஒரு கேள்வி பட்டியலைத் தொகுத்து, இக்கேள்விகளுக்குச் சொசைட்டியிடம் திருப்திகரமான விதத்தில் பதிலளிக்கும் நபர், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாக கருதப்படுவார் என்று கூறுவதில், சொசைட்டியிக்குக் காணப்படும் நோக்கமென்ன?

அக்கேள்விகளானது, நீண்டகாலமாய் வாஞ்சிக்கப்பட்டதை நிறைவு செய்யும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அக்கேள்விகளானது, மதவெறியின் அடிப்படையானது அல்ல; அவை யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையினாலானதாகும். இப்பொழுது ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பயண ஊழியர்களிடமிருந்து அல்லது எதிர்க்காலத்தில் சொசைட்டியின் பிரதிநிதிகளாய், பயண ஊழியர்களாய்க் காணப்படப் போகின்றவர்களிடமிருந்து, கிறிஸ்துவின் சுவிசேஷம் தொடர்புடையதான இந்த அடிப்படையான கேள்விகள் பற்றின அவர்களது புரிந்துகொள்ளுதல்களையும், அவர்களது கருத்துக்களையும், அவர்களது சிந்தனைகளையும் அறிந்துகொள்வதற்குக் சொசைட்டியானது விரும்புகின்றது. அக்கேள்விகளுக்குப் பதிலளிக்க விரும்பிடாத எந்தச் சகோதரனும், மனதில் குழப்பம் கொண்டிருப்பவராகவும், உறுதியற்றவராகவும், இதினிமித்தம் போதிப்பதற்குத் தகுதியற்றவராக, "போதகசமர்த்தனாய்" இல்லை என்பதாகவும் கருதப்படுவார். இது அவர் தொடர்ந்து சகோதரராக இல்லை என்பதைக் குறிக்கின்றதாய் இராது; மாறாக பயண ஊழியத்திற்குப் பொருத்தமான சகோதரனாக அவர் கருதப்படுவதில்லை என்பதையே குறிக்கின்றதாய் இருக்கும். இன்னுமாக அச்சகோதரன் பிரசங்கிக்கக் கூடாது என்பதைக் குறிப்பதாய் இராது;

மாறாக சொசைட்டியானது அவரைத் திவ்விய வார்த்தையின் விரிவுரையாளராய்ப் பரிந்துரைக்காது என்பதை மாத்திரமே குறிக்கின்றதாய் இருக்கும்.

எந்த ஒரு சகோதரன் கேள்விகளுக்குப் பதிலளிக்க விருப்பமுள்ளவனாகக் காணப்பட்டும், ஆனால் தன்னுடைய பதில்களில் கொஞ்சம் குழப்பத்தினை வெளிப்படுத்துகிறவராக இருப்பாரானால், இது அவர் சொசைட்டியிக்கும், தேவனுடைய வார்த்தைத் தொடர்புடையதாக எது சத்தியம் என்று சொசைட்டியினால் நம்பப்படுபவைகளுக்கும் பிரதிநிதியாகிடுவதற்கும் முன்னதாக, இன்னும் அதிகமான போதனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்று எங்களுக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அத்தகைய சகோதரன் அநேகமாக Brooklyn/பூரூக்கிலினுக்குக் கொண்டுவரப்பட்டு, கொஞ்சக்காலம் மற்ற ஊழியங்களில் பங்கெடுப்பதற்கு வாய்ப்பு அருளப்படுவார் மற்றும் ஒவ்வொரு மதிய வேளையிலும் நடைபெறும் வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளிலும் பங்கெடுக்கும் வாய்ப்பினை அடைவார்; இன்னுமாக முழுக்காரியமும் முழுமையாய்ச் சரியாகிவிடவும், தெளிவாய்ப் பார்த்து, புரியப்படத்தக்கதாகவும் சத்தியம் தொடர்பான பாடங்களில், எவ்வகையான கேள்விகளைக் கேட்பதற்கான வாய்ப்பினை முழுச்சுயாதீனத்துடன் பெற்றிருப்பார்.

## சிநேக பாவமான ஒரு யோசனை

பெத்தேல் குடும்பத்திலுள்ள/Bethel family சகோதரிகளில் அநேகர், இக்கேள்விகளைக் குறித்துக் கேள்விப்பட்டவர்களாக, பயிற்சியாய் இருக்கும் மற்றும் அறிவடைதலாய் இருக்கும் எனும் கண்ணோட்டத்தில், இக்கேள்விகளுக்குத் தாங்கள் பதில் கொடுக்கத்தக்கதாக, தங்களுக்கு அக்கேள்வி பட்டியலைத் தரும்படிக்கு விசேஷித்த வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதைப்போலவே பல்வேறு சபைகளிலுள்ள மூப்பர்களும், உதவிக்காரர்களும் கேள்விகளுக்காக வேண்டிக்கொண்டுள்ளனர். சொசைட்டியினுடைய V.D.M. degree/ பட்டத்திற்குத் தகுதியடையத்தக்கதாக, இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடிகின்றவர்களை, மூப்பர் ஊழியத்திற்குத் தேர்ந்தெடுப்பது என்பது, அனைத்து இடங்களிலுமுள்ள வேதமாணவர்கள் அடங்கியுள்ளதான சபையார் யாவருக்கும் நன்மை பயக்கின்றதாய் இருக்கும். இது மூப்பர்கள் மத்தியில் அநேகம் மாற்றங்களைக் கொண்டுவந்திடும்; ஆனாலும் அவை நன்மையான மாற்றமாய் இருக்குமென நாங்கள் நம்புகின்றோம். இன்னுமாகச் சத்தியத்தினை, அதாவது சத்தியத்தினை மாத்திரம் போதித்திட உள்ளப்பூர்வமாய் விரும்புகின்றதான மூப்பர்கள் யாவரும், இக்கேள்விகளால் கிடைக்கப்பெறும் உதவியினைப் பெற்றுக்கொள்வதில் சந்தோஷமடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம் .

சிலசமயம் அருமையான நண்பர்களில் சிலர், தாங்கள் மூப்பர்களாகத் தெரிந்துகொள்ளும் அல்லது ஏற்படுத்தும் நபர்களின் விஷயத்தில் எவ்வளவு அஜாக்கிரதையாய்க் காணப்படுகின்றனர் என்று பார்க்கையில் - கர்த்தருடைய வார்த்தைகளின் கட்டளைக்கு முரணாகப் பெரும்பாலும் நூதன சீஷர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, இப்படியாய் நூதன சீஷனுக்கும், சபையாருக்கும் பாதகம் உண்டாக்குவதைப் பார்க்கையில் - நமக்கு ஆச்சரியமே ஏற்படுகின்றது (1 தீமோத்தேயு 3:1-7). மூப்பர் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையை மாத்திரமே தேர்ந்தெடுக்கும் விஷயத்திற்கு அடுத்தப்படியாக இருக்க வேண்டிய கேள்வி - எந்தளவுக்கு அச்சகோதரன் ஆராய்ச்சியையும், அறிவடைவதற்கான சிலாக்கியங்களையும் பயன்படுத்தியுள்ளார்? என்பதேயாகும். ஒருமுறையேனும் வேதாகம பாடங்களின் ஆறு தொகுதிகள்/volumes அனைத்தையும் வாசித்திராத அல்லது வாட்ச் டவர் இதழின் தொடர்ச்சியான வாசகனாக இராத, எந்த ஒரு சகோதரனையும் மூப்பராகத் தேர்ந்தெடுப்பது ஞானமற்ற காரியமாய் இருக்கும் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. சொசைட்டியானது எந்த அதிகாரத்தையும் செலுத்தவில்லை, எந்த விமர்சனமும் செய்யவில்லை, மாறாக கர்த்தருடைய காரணங்கள் மற்றும் கர்த்தருடைய ஜனங்களின் நலனுக்காய், அறிவுரை மாத்திரமே கொடுப்பதாக நினைவில் வைக்கப்படுவதாக.

---

R 5941

# பரிசுத்த பவுல் அடைந்த துக்கங்களும் சந்தோஷங்களும்

## ST.PAUL'S SORROWS AND JOYS

**ஆதார வசனங்கள்** : 2கொரிந்தியர்11:21–33

வெற்றி வீரனாகிய பரிசுத்த பவுல் – அவரது உண்மை, நம்பகத்தன்மை, சகிப்புத்தன்மை – கிறிஸ்துவினிமித்தமாக அவர் துன்புற்றார் – சகோதரரின் நிமித்தமாகவும்கூட – இதன்மூலம் தேவகிருபையின் செய்தியை எடுத்துச்செல்ல அவர் பிரியப்பட்டார் – இந்தப்பாடத்திலுள்ள அவரது துன்பங்கள் ஏன் கணக்கிடப்பட்டது ? நிச்சயமாகவே "ஒரு தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரம்!"

**திறவுகோல் வசனம்** : "என் கிருபை உனக்குப் போதும்; பெலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" – 2கொரிந்12:9.

பரிசுத்த பவுல் எப்பேர்ப்பட்ட அற்புத மனிதராய் இருந்தார்! தேவனிடத்தில் தன்னை முழுமையாய் ஒப்புக்கொடுத்ததே அவரது பெரும் திறமைக்கான இரகசியமாய் இருந்ததில் சந்தேகமில்லை. தம் சொந்த சித்தப்படியல்ல, பிதாவின் சித்தத்தையே செய்தார். இதனால் மற்ற எந்த மனிதரைக்காட்டிலும் அதிகபட்ச அளவில் கர்த்தர் அவரை ஒரு அப்போஸ்தலராக, தமது நாவாக, தமது ஊழியக்காரனாக பயன்படுத்தினார். இதனை அடிப்படையாகக்கொண்டு பரிசுத்தபவுல், தன் எஜமானைக் காட்டிலும் மேலானவர் என்று நாம் அர்த்தப்படுத்துவதில்லை. நம் கர்த்தர் ஊழியம் செய்யும்படி மூன்றரை வருடகாலமே பெற்றிருந்தார். ஆனால் பரிசுத்த பவுலோ தேவனுக்கென்றும் சபைக்கென்றும் ஊழியம்செய்யும்படி நீண்ட ஊழியத்தையும், நீண்ட காலப்பகுதியையும் பெற்றிருந்தார். அல்லாமலும், குருவால் தெய்வீகத்திட்டத்தின் முழு விவரத்துக்குள் செல்லமுடியாதிருந்தது. அர்ப்பணிக்கப்பட்ட அவரது சீஷர்கள்கூட, அப்போஸ்தலர்கள் உட்பட சுபாவ மனுஷராகவே இருந்தனர். அவர்கள் பெந்தெகொஸ்தே வரைக்கும் பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்படவில்லை. இதனால் இயேசுவின் போதனைகள் பிரதானமாக உவமைகளிலும் மறைபொருள்களிலும் பேசப்பட்டன என்று நாம் வாசிக்கிறோம் – 1கொரிந்2:14; மத்13:10–17.

போதகர் தன் சீஷர்களிடத்தில் ஒருமுறை அறிவித்தார்;

> "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர்வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் ... வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" – யோவா16:12,13.

பரிசுத்த பவுலுக்கும், மற்ற அப்போஸ்தலர்களுக்கும் அப்படிப்பட்ட கட்டுப்பாடு இருக்கவில்லை. அவர்களுடைய நிருபங்கள் பல்வேறு பகுதிகளில் உள்ள தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டன. அவர்கள் இரட்சிப்பின் தெய்வீகத்திட்டம் பற்றின மாபெரும் பாடத்தின் ஒவ்வொரு அம்சங்களையும் தங்கு தடையின்றி எழுதி அனுப்பினர். அவர்களது எழுத்துக்களில் சில கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருப்பவர்களுக்கு பொருத்தமானது என்று அறிவித்தார்கள். மற்றவைகளோ, தெய்வீகத்திட்டத்தின் ஆழமான காரியங்கள் பலமான ஆகாரமாக இருந்தன(எபி5:13,14; 1பேது2:1–3). ஆனால் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கே அவர்கள் எழுதினார்கள், உலகத்தாருக்கல்ல.

**பவுல் அப்போஸ்தலனின் தகுதிகள் :–**


சபை குழந்தைப் பருவத்தில் இருந்தபோதிலும், ஓரளவு பிரிவினைகள் ஏற்படும்படி சாத்தானால் தூண்டப்பட்டது ஒன்றும் விநோதமானதல்ல. பரிசுத்தபவுல் இதைக்குறித்து விமர்சித்து கருத்துக்கூறுகிறார்: சிலர் தாங்கள் பவுலைச் சார்ந்தவர்கள் என்றும், சிலர் தாங்கள் அப்பல்லோவைச் சார்ந்தவர்கள் என்றும், சிலர் தாங்கள் பேதுருவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறுகின்றனர்(1கொரிந்1:11–13; 3:1–7). ஆனால் இப்படிப்பட்ட எல்லா பிரிவினை உணர்வுகளையும் அப்போஸ்தலர் கடிந்துகொண்டார். இந்த போதகர்களில் ஒருவர்கூட அவர்களுக்காக மரித்திருக்கவில்லை என்று அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். இதனால் அவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்களாக இருந்து, போதகரின் நாமத்தைத்தவிர மற்ற எந்த நாமத்தையும் தரிப்பிக்கவேண்டாம் என்று தெரிவிக்கிறார். இந்த ஒத்தஆவி தன்னில்தானே வேறுவகையில் வெளியரங்கமானது. விசுவாசவீட்டார் அனைவரும் வளர்ச்சியடைவது அவசியமாயிருந்ததுபோலவே அப்போஸ்தலர்களும் கிருபையிலும் அறிவிலும் வளரவேண்டியது அவசியமாயிருந்தது. கர்த்தரின் விசேஷித்த ஆசீர்வாதங்களை அப்போஸ்தலர்கள் பெற்றிருந்தபோதிலும், ஒரே சமயத்தில் அவர்கள் எல்லோரும் சமஅளவு ஞானத்தை அடைந்திருக்கவில்லை.

12 அப்போஸ்தலர்களில் யூதாஸின் இடத்தைப்பெற்ற பரிசுத்த பவுல், அதிக கல்வியறிவு பெற்றவராக இருந்ததால், இயல்பாகவே பரந்துவிரிந்த கருத்துக்களுடையவராக சிறந்த வாய்ப்பைப் பெற்றிருந்தார். உண்மையாகவே தர்சூசைச் சேர்ந்த பவுல், கிறிஸ்துவையும் அவரைப் பின்பற்றுகிறவர்களையும் எதிர்க்கிற போராட்டத்தில், குருட்டுப்பிடிவாதமானவராக, குறுகிய புத்தியுடையவராக தம்மை காண்பித்திருந்தார். அவரது மனக்கண்கள் திறந்தபிற்பாடு, புதிய சிருஷ்டியாக ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டபிறகு பரிசுத்த பவுல் தெய்வீகக் காரியங்களில் ஆவிக்குரிய திறனை அற்புதமாகப் பயன்படுத்தினார். இந்த ஆவிக்குரிய திறனைக் குறித்து விளக்குகையில், கர்த்தரது மற்ற அப்போஸ்தலர்களைக்காட்டிலும், அதிக தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் பெற்றிருந்ததாக அவர் அறிவித்தார் – 2கொரிந்12:1,7,11,12.

கர்த்தர் பவுலைக்குறித்து சொன்ன வார்த்தைகளுக்கு இது இசைவாகப் பொருந்துகிறது. "அவன் நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என் நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன் என்றார்"– அப் 9:15,16. இயல்பாகவே, கர்த்தர் நன்கு தாலந்தைப் பெற்றிருந்த ஒரு மனிதனை, நன்கு கற்றறிந்த ஒருவரை உபயோகித்தார். தன் சொந்த சித்தத்தை முழுவதும் விட்டுவிட்ட அந்த மனிதனை கர்த்தர் பயன்படுத்தினார். கல்வியறிவு இல்லாத மனுஷனை கர்த்தர் உபயோகிப்பதைக்காட்டிலும், கற்றறிந்த பவுல் மூலம் சிறந்த ஆதாயம் அடையமுடியும். மேலும், அப்போஸ்தலர்களில் சிலரைக்குறித்து, திரளான ஜனங்கள் அறிந்துணர்ந்தது யாதெனில், அவர்கள் படிப்பறியாதவர்களும், பேதைமையுள்ளவர்களுமாயிருந்தார்கள்(அப்4:13). ஆயினும் பரிசுத்த பவுலிடம் அவ்வாறு காணமுடியவில்லை. அவர் கல்வியறிவையும், அற்புதமான பரந்த சிந்தையையும் பெற்றிருந்தார். ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும், வேதாகமத்தின் ஆழமான காரியங்களை புரிந்துகொள்ள திறன் பெற்றிருக்கின்றனர். இவர்கள் பரிசுத்த பவுலின் எழுத்துக்களில் உள்ள வல்லமையையும், ஞானத்தையும் அறிந்து, அதிலுள்ள பகுத்தறிவின் வாதத்தைக்கண்டு திகைப்படைந்துள்ளனர். நாம் அறிந்தவகையில், இந்த எழுத்துக்களோடு ஒப்பிட உலகில் ஒன்றும் இல்லை.

கர்த்தருடைய நாவாக புறஜாதிகளிடத்திற்கு முன்னிருத்தப்பட்ட பரிசுத்த.பவுலின் சிந்தை, மற்ற அப்போஸ்தலர்களின் சிந்தைகளைக் காட்டிலும் புதிய யுகத்திற்குரிய காரியங்களைக் குறித்து மிகவிரைவாக புரிந்து, கிரகித்துக்கொண்டது. மேலும் இராஜ்யத்தின் சிலாக்கியங்களில் புறஜாதிகள் யூதர்களோடு உடன்சுதந்திரர்களாக இருப்பர் என்பதையும் அவர் புரிந்துகொண்டார்(எபேசி3:1–12; கொலோ1:25–27). இயல்பாகவே, பரிசுத்த பவுல் எல்லைகடந்துபோகிறார் என்று சிலர் கருத்துதெரிவித்தனர். இதனால் விவாதம் அதிகரித்து, இவர் 12அப்போஸ்தலரில் ஒருவராக இருக்கமுடியாது, ஆகவே இவரை அப்போஸ்தலர் ஸ்தானத்தில் வைக்கக்கூடாது என்றனர்.

பரிசுத்த பவுலைக்குறித்து என்ன பேசப்பட்டாலும், மற்றவர்கள் அவரைப்பற்றி அவர்களது சொந்த மதிப்பீட்டை பெற்றிருந்தாலும், அவர் சத்தியத்தினிமித்தமான தன் கடமையை செய்யவேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். இது அவருக்கு நிச்சயமான நிபந்தனைகளைக்கொடுத்து, தமது அப்போஸ்தலத்தைக்குறித்து ஒரு முழு தடயத்தை நமக்கு அறிவிக்கும்படி வழிநடத்தியது. இதன்படி, தெய்வீக நிகழ்வுகளைப் புரிந்துகொள்ளுதலில் மிகவும் பிரதானமான அப்போஸ்தலர்களுக்குக் கீழாக சிறியவனாக தான் இல்லை என்பதை நிரூபித்தார். ஆம்! கர்த்தர் தாம் பேசியிருந்தவற்றை இவருக்கு மற்ற எல்லோரைக்காட்டிலும் அதிகமாக வெளிப்படுத்தினார்–யோவா16:13; 2கொரிந்11:5; கலாத்2:2–10).





**கிறிஸ்துவுக்காக அவர் பட்ட துன்பங்கள் :–**

கொரிந்து சபையில் பரிசுத்த.பவுல் கடினமாக உழைத்தார். ஆயினும் சத்தியத்தில் அவர்களை முறையாக உருவாக்கி வளர்ச்சியடையச் செய்வதில் தோல்வியடைந்தார். ஏனெனில் அவர்கள் அவரை தகுதிகுறைவான போதகர் என்று எண்ணி, அவரிடத்தில் பரிதாப உணர்வுகொண்டபடியால் இவ்வாறு நேர்ந்தது. இதனிமித்தமாகவே, "புத்தியீனமாய்ப் பேசுகிறேன்" என்று நம் பாடத்தில் அடிக்கடி அவர் எழுதுகிறார். மேன்மை பாராட்டலை அவர் அங்கீகரிக்கவில்லை. இருந்தபோதிலும் அவரிடம் சத்தியம்கேட்டவர்களின் நிமித்தமாக அவர்களுக்கு குறிப்பிட்ட சில காரியங்களை மேன்மைபாராட்டும் பாணியில் அறிவுறுத்த நேர்ந்தது. பரிசுத்தஆவி அப்போஸ்தலரை மிக நேர்த்தியாக வழிகாட்டினதில் நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறோம். இதனால் அப்பவுல், ராஜாதிராஜாவின் மேல் வைத்திருந்த உண்மையான அன்பின்மூலம் நாமும் அவரை சிறப்பாக அறிந்துகொள்ளவும், இன்றையநாளில் இருக்கும் விசுவாசவீட்டாருக்குக்கூட சத்தியத்தை வெளிப்படுத்த கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமாய் பவுல் இருக்கிறார்.

ஆனால் தம்மைக்குறித்து அப்போஸ்தலன்; தமது தாலந்துகளை குறித்தோ, தம் பிரசங்க ஆற்றலைக் குறித்தோ, ஜனங்கள் தம் சக்தியால் கட்டுண்டிருப்பதைக் குறித்தோ, தம் ஆற்றலை அநேகர் அங்கீகரித்திருப்பதைப் பற்றியோ மேன்மை பாராட்டவில்லை. அதற்கு மாறாக, தம் அவமானத்தை மற்றவர்கள் எண்ணுவதைக்குறித்தே அவர் மேன்மை பாராட்டுகிறார். சத்தியத்தின் நிமித்தமாக சவுக்கடி, இரும்புத்தடிகளால் கொடுமையாய் துன்புறுத்துதல், சிறைச்சாலை, ஆறுகளால் வந்த மோசங்கள், கள்ள சகோதரர்களால் வந்த மோசங்கள்; அந்நிய ஜனங்களால் வந்த மோசங்கள் என்று, தேவ பராமரிப்பு தாம் துன்பப்பட தமக்கு அனுமதியளித்ததை அவர்களுக்கு கூறியிருப்பார். இவைகள் தெய்வீக அன்பு மற்றும் தயவின் குறியீடுகளாக அவருக்கு இருந்தன. மேலும், தாம் கர்த்தரையும் அவரது நீதியையும் நேசிப்பவன் என்பதற்கான சாட்சியங்களையும், கர்த்தரின்பொருட்டும் சத்தியத்தின்பொருட்டும் துன்பப்பட மனதார கையளித்ததையும் சாட்சியளித்தன.

இவ்வாறாக காணும்போது, இந்தப்பாடம் கர்த்தருடைய வார்த்தையின் ஒரு மதிப்புமிக்க பகுதியாக உள்ளது. இது நமக்கு கொடுக்கும் தகவல்களை வேறு எங்கும் நாம் கண்டடையமுடியாது. சிலுவை போர்வீரன் சகித்தவற்றை நமக்கு ஊக்கமளிக்கும்பொருட்டு சித்திரமாக நம் முன்பாக இருக்கிறது. நமக்கு இது கூறுவது; "மரணபரியந்தம் உண்மையாயிரு". இயேசுவின் அடிச்சுவடுகளையும் அவரது

நேர்மையான பின்னடியாராகிய இவரையும் பின்பற்று. உன்னையே மேன்மையானவனாகக் கருதாதே, மாறாக கர்த்தரிலும், அவரது சத்தியத்தோடு தொடர்புடைய ஊழியங்களில் உனக்கு கிடைத்த சிலாக்கியங்களையும் மேன்மையாகக் கருது என்பதையே ஆகும்.

**அவரது வெற்றியின் இரகசியம் :**

நேர்மையாளராகிய பரிசுத்த.பவுலும், சற்று முக்கியத்துவம் குறைந்த கிறிஸ்துவின் பின்னடியார்களும் ஏற்றவேளையில் படிப்படியாக கர்த்தரால் நித்திய மகிமைக்கு ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். பின்பு கறைதிரையற்றவர்களாய் பிதாவின் முன்பாக ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்(எபே **5:25–30).** அந்த மகிமை நிறைந்த கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒரு உண்மையுள்ள போர்வீரராக இருப்பார்கள் என்று நாம் உறுதியாய்க் கூறலாம். மாறக, பயந்து பின்வாங்குபவரோ, கர்த்தரைக்குறித்து வெட்கப்பட்டவரோ அக்கூட்டத்தில் இருக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களைக்குறித்து வெட்கப்படாமல், அவர்களது நாமத்தை பிதாவின் முன்பாகவும், அவரது பரிசுத்த தூதர்கள் முன்பாகவும் அறிக்கை பண்ணுவேன் என்கிறார் – மத்தேயு **10:32,33.**

அப்போஸ்தலர் பவுல், கொடும் துன்பத்தையும், சிறையிருப்பையும் , பல்வேறு வகைப்பட்ட போராட்டங்களையும் தனியாகவே சகித்ததன் இரகசியத்தை நம் திறவுகோல் வசனத்தில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. கர்த்தருடைய கிருபை போதுமானதாயிருந்தது. அவரது பலவீனத்தில் கர்த்தரின் வல்லமை பூரணமாக கொடுக்கப்பட்டது. ஒவ்வொருவரின் வெற்றிகரமான கிறிஸ்தவ ஜீவியத்திற்கு இது இரகசியமாய் இருக்கிறதல்லவா ? நம் போதகரின் வாழ்விலும் இவ்வாறே நடக்கவில்லையா ? பிதாவின்ஆவி அவரிடத்தில் இருந்தது, பிதாவின்பேரிலேயே அவர் பற்றுறுதிகொண்டிருந்தார். பிதாவின் முகத்தின் வெளிச்சத்தையே அவர் உற்று நோக்கிக்கொண்டிருந்தார். உண்மையாகவே தேவவல்லமை நம் இரட்சகருக்குள் கிரியை செய்து, பிதாவுக்குப் பிரியமானவைகளை செய்யவும், சித்தங்கொள்ளவும் நடப்பித்தது.

அவரது நாள்துவக்கி, கர்த்தரின் ஒவ்வொரு பின்னடியாரிலும் இதே செயல்பாடு உண்மையாக நிறைவேறிவருகிறது. போதகர் தம் சீஷர்களைப் பார்த்து மெய்யாகவே கூறினார்; 'என்னைப்பிரிந்து உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது''. நம் கர்த்தராகிய இயேசுமூலமாக, சத்திய வார்த்தை மூலமாக இயேசுவின் பின்னடியார்கள் மூலமாக, தெய்வீக வல்லமை இயங்கிவருகிறது. இதே வல்லமை கிறிஸ்துவின் சரீரத்தின் பலவீனமான அங்கங்களுக்குள்ளும், பலமான அங்கத்தினருக்குள்ளும் செயல்படமுடியும். கர்த்தரின் கிருபை தேவை ஏற்படும் ஒவ்வொரு சமயத்திலும், எல்லோருக்கும் போதுமானதாக உள்ளது. ஆயினும் இந்த மாபெரும் கிருபை, நிபந்தனையில்லாமல் கர்த்தருடைய ஜனங்கள்மேல் பொழியப்பண்ணுவதில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. மாறாக, தெய்வீகக்கிருபையைக் கேட்டு கெஞ்சுகின்ற அவர்களது ஜெப விண்ணப்பத்துக்கு, ஒவ்வொரு சமயத்திலும் அவர்களது தேவையை உணர்ந்து அதற்கு பதிலளிக்கிறார்.

---

R 5943

# தெய்வீக புஸ்தகச்சுருளைத் திறந்துபார்க்க பாத்திரவான் யார்?

## THE DIVINE SCROLL - WHO IS WORTHY TO LOOK THEREIN?

"பாத்திரவான் யார் ?" – வெளிப்படுத்தல் 5:2.

பரலோகம் முழுவதும் கேட்கப்பட்ட கேள்வியை வெளிப்படுத்தும் பிரகடனத்தின் ஒரு பகுதியாக நம் திறவுகோல் வசனத்தின் வார்த்தைகள் உள்ளன. புஸ்தகத்தை (சுருளை)திறக்கவும், அதன் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் ? இந்த நிகழ்வில் புஸ்தகம் என்பது வேதாகமத்தை அடையாளப்படுத்துவதில்லை, மாறாக காலங்கள் மற்றும் வேளைகளடங்கிய தேவனுடைய



தெய்வீகத்திட்டத்தை குறிப்பதாகத் தோன்றுகிறது. வேதாகமம் உண்மையாகவே ஒரு பதிவேடாக உள்ளது. ஆனால் வேதாகமம் எழுதப்படுவதற்கு முன்பாகவே தேவன் இந்த திட்டத்தை வைத்திருந்தார். ஆதிமுதற்கொண்டே தேவன் இந்த திட்டத்தைக் கொண்டிருந்தார். இத்திட்டத்தை அவர் தேவதூதர்களுக்கும் லோகோசுக்கும்கூட வெளிப்படுத்தவில்லை. நம் கர்த்தராகிய இயேசு மாம்சத்தில் இருந்தபோது, அவருக்கு தேவன் தன் திட்டத்தின் காலம்பற்றிய சிறப்பம்சங்களை முழுமையாக வெளிப்படுத்தவில்லை. இயேசு இந்த காலங்களையும் வேளைகளையும் பற்றி உயிர்த்தெழுதலுக்குப்பிறகு கூறும்போது, "பிதாவானவர் தம் ஆதீனத்தில் வைத்திருந்தது" என்று கூறுகிறார் – அப் 1:7.

விழுந்துபோன மனுக்குலத்துக்கான திட்டத்தை தேவன் வைத்திருந்து, அதை ஆபிரகாமுக்கு தெரிவித்திருந்தார் என்பதே நிஜம். நிபந்தனையின்றி உலக மனுக்குலத்தை ஆசீர்வதிப்பதாக தேவன் ஆபிரகாமுக்கு அறிவித்திருந்தார். மேலும் அவர், பிற்பாடு நியாயப்பிரமாணத்தின் மாதிரிகள் மற்றும் நிழல்களில், இந்த உலகை ஆசீர்வதிக்கப்போகும் வழிமுறையின் குறிப்பிட்ட சிறப்பம்சங்களை தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தார். அங்கு ஒரு மீட்பர் இருப்பார் என்று பிரகடனப்படுத்தியிருந்த போதிலும், யார் அந்த மீட்பர் என்பது இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. தேவதூதர்களும் மனிதர்களும் அதை அறிய பேராவல் கொண்டிருந்தாலும், அந்த அறிவை அடைய அவர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. இந்த மீட்பரைப்பற்றி தீர்க்கதரிசிகளும் ஆவியினால் ஏவப்பட்டு சில காரியங்களைப் பேசியிருந்தாலும், அவைகளின் அர்த்தத்தை அவர்களால் அறிந்துகொள்ளமுடியவில்லை.

ஏற்ற சமயத்தில் லோகோஸ் அனுப்பப்பட்டார். அனுப்பப்படுவதற்கு முன் அவர் தேவனுக்கு உண்மையுள்ள குமாரனாயிருந்தார். அவர் மேசியாவாக ஆவதற்கு என்னவிலை கொடுக்க நேரிடும் என்று அறியாத நிலையிலும், பிதாவின் சித்தம் செய்வதை ஏற்றுக்கொண்டார். தேவன் அவைகளை இரகசியமாகவே வைத்திருந்தார். அவர் தாழ்மையான சுபாவத்தை எடுத்தபோதிலும், தம் விசுவாசத்தையும், தம் நம்பிக்கையையும் வெளிப்படையாக காண்பித்து, பிதாவின் சித்தம் செய்வதில் பிரியமாயிருந்தார். மேலும், தாம் முன்பிருந்த மகிமையான நிலையிலிருந்து தம்மை மிகவும் தாழ்த்தி, மனித சுபாவமெடுத்து மனிதரானார் – பாவமுள்ள மனிதராக அல்ல, ஒரு பரிபூரண மனிதராக ஆனார். பிதாவின் சிந்தையில் மட்டும் இருந்ததும், வேறு யாருக்கும் வெளிப்படுத்தாதிருந்ததுமான அந்த மாபெரும் செயல்திட்டத்தை நிறைவேற்றி முடிக்கும் பொருட்டாகவே நம் ஆண்டவர் தம்மைத் தாழ்த்தி மனிதனானார்.

இயேசு 30 வயதை அடைந்தபோது, நியாயப்பிரமாணத்துக்குக் கீழாக தம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி சரியான வயதைப்பெற்றிருந்து, யோர்தானுக்கு சென்று பிதாவின் திட்டத்திலுள்ள யாவற்றையும் செய்துமுடிப்பேன் என்ற உறுதிப்பாட்டுடன் தத்தம் செய்யும் தம்முடைய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். பரிசுத்த வேதாகமத்தில் தம்மைக்குறித்து நிழலாகவும், தீர்க்கதரிசனமாகவும் எழுதப்பட்டுள்ள யாவற்றையும் செய்து முடிக்க; "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன், புஸ்தக சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது"; "என் தேவனே உமக்கு பிரியமானதை செய்ய விரும்புகிறேன் உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்". இவைகளே அவருடைய இருதயத்தின் வெளிப்பாடுகளாக பதிவுசெய்யப்பட்டுள்ளது – எபிரே10:7–9; சங்40:6–8.

இதுவே நம் கர்த்தர் செய்த அர்ப்பணிப்பாகும். அவருடைய மனிதசுபாவமே அவருடைய பலியாயிற்று. அவர் தம் ஜீவனையே கொடுத்தார். அவர் அதை யோர்தானிலேயே கையளித்து நிறைவுசெய்யவில்லை, மாறாக தமது சித்தம் என்று இதுவரை எது இருந்ததோ அதனை அங்கே கையளித்தார் . அப்போதிலிருந்து அவர் ஆசாரியராக மாபெரும் பிரதான ஆசாரியராக ஆனார். இஸ்ரயேலரின் ஒப்புரவாகுதலின் நாளில் வருடந்தோறும் பலியிடுகிற பாவநிவாரண பலியாகிய காளையால் நிழலாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. 31/2 வருடகால ஊழியத்தில் இந்த பலியை திருப்திகரமாக நிறைவேற்றிமுடித்தார். மேலும் பிதா தமக்கு செய்துமுடிக்கும்படி தந்த எல்லாவற்றையும் சிலுவையில் நிறைவேற்றி முடித்தார்.

## யோர்தானில் வெளியாக்கப்பட்ட ஆழமான காரியங்கள்

நம்முடைய கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பெற்று தண்ணீரிலிருந்து கரையேறினபோது, பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார். அப்போது வானங்கள் அவருக்குத் திறக்கப்பட்டது. அதற்கு முன்பு தமக்குப் புரியாதிருந்த மேலான காரியங்கள் அவருக்கு தெளிவாகப் புரிந்தது. வேதாகமம் அவருடைய பார்வைக்கு மறைக்கப்படாமல், வெளிப்படுத்தப்பட்டது. அவர் சிலுவையில் அறையப்படுவதற்காக எருசலேமுக்கு கொண்டு செல்லப்படவேண்டும் என்பதை அறிந்துகொண்டார். தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட சீஷர்களில் ஒருவரால் தாம் காட்டிக் கொடுக்கப்படப் போவதை அறிந்திருந்தார். மேலும் அவர்களில் தம்மைக் காட்டிக்கொடுக்கப்போகிறவர் யார் என்பதையும் அறிந்துகொண்டார். தாம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்ததினாலும், தேவனால் அவருடைய தெய்வீகக் குமாரனாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்ததாலும், இவைகளை அவர் அறிந்துகொண்டார்.

அவர் தேவனால் அனுப்பப்பட்டவராகவும், மேசியாவாகவும் அந்த 31/2 வருடங்கள் இருந்தார். அவர் யூதா கோத்திரத்து சிங்கமாக இருந்தார். அவர் தம்முடைய சித்தத்தை பலிசெலுத்தியிருந்தார். ஆனாலும் இது போதுமானதாக இருக்கவில்லை. அவர் தம்முடைய சித்தத்தை பலியிடுவதோடுகூட, உண்மையில் அவருடைய மனித ஜீவியத்தையும் கொடுக்கவேண்டுமென்று தேவன் விரும்பினார். மேலும் குறிப்பிட்ட கடுமையான சோதனைகள்மூலம் அவர் தம்மை நிரூபிக்கவேண்டும் என்று தேவன் தீர்மானித்திருந்தார். ஆகவே தான், அவர், ''எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராக'' இருந்தார். அவர் சிலுவையில் மரித்து, அவருடைய எல்லா சோதனைகளும் நிறைவு பெற்றபோது, தேவன் அவருக்கு வானோர், பூமியில் உள்ளோர் யாவரும் வணங்கும்படி எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைக்கொடுத்தார்.

இங்குதான் நம் திறவுவசனத்திற்கான பதில் கிடைக்கப்பெறுகிறது. கேட்கப்பட்டகேள்விக்கான காலப்பகுதியாக இயேசு இந்த பூமிக்கு வருவதற்கு முன்பு துவங்கி, கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்ததுவரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வானத்தின் சகல சேனைகளில் மிகவும் மேன்மைபொருந்திய ஒருவருக்கு தேவன் தம்முடைய மாபெரும் திட்டத்தின் சுருளை அவிழ்க்கிறதற்கும், அதின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்குமான தகுதியை நிரூபிப்பதற்கு முதலாவது வாய்ப்பு கொடுத்திருந்தார். அவர் யேகோவாவின் முதற்பேரானவராக இருந்ததால், அவருக்கு இந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஊழியம்செய்யும் முதல் சிலாக்கியத்தை அவர் உரிமையாக பெற்றிருந்தார். மேலும் அவர் இந்த சிலாக்கியம் தம்மை கடந்துபோவதை அனுமதிக்காமல், அதை ஏற்றுக்கொண்டார். அதற்கு உண்மையுள்ளவராகவும் இருந்தார். அவர் மனிதசுபாவம் எடுக்கும்படி தம்மைத் தாழ்த்தினார். இவ்வாறாக, அவர் மனிதனாக பிறக்கவேண்டிய கோத்திரமான யூதா கோத்திரத்தின் சிங்கமானார். அவர் லோகோஸ் என்ற நிலையிலிருந்தபோது இந்தத் தகுதி பெற்றிருக்கவில்லை. அவர் மரியாளின் மகன் என்பதாலேயே யூதா கோத்திரத்து சிங்கமும், தாவீதின் வேரும் ஆனார்.

## தேவதூதர்களால் பறைசாற்றப்பட்ட கர்த்தரின் தகுதி

நம்முடைய கர்த்தரின் தகுதி, ''முடிந்தது'' என்று அவர் தம் கடைசிமூச்சுடன் கதறும்வரை நிரூபிக்கப்படவில்லை. ''முடிந்தது'' என்றபோதுதான் தம்மை நிரூபித்துக் காண்பித்தல் முற்றுப்பெற்றது. ஆதாம்முதல் இயேசு வரையில் மாட்சிமை பொருந்திய சுருளை திறக்கும் தகுதி எவ்வகையிலும் ஒருவரிடத்திலும் காணப்படவில்லை. ஆனால் இப்போது இயேசு தகுதியுடையவராகக் காணப்பட்டார். வெளிப்படுத்தினவராகிய யோவான் 31/2 வருடக்காலத்தில் நம் ஆண்டவர் அடிக்கப்பட்டவராக வெளிப்படுத்தப்பட்டதை தரிசனத்தில் பேசும்போது; ''அப்போது, இதோ அடிக்கப்பட்டவண்ணமாய் இருக்கிற ஓர் ஆட்டுக்குட்டி .... கண்டேன்'' என்கிறார். மேலும் பதினாயிரம் பதினாயிரமாயிருந்த தூதர்களின் சத்தம் பிரகடனப்படுத்தியதை கேட்டேன். அவர்கள், ''அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ள பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்'' என்கிறார்(வெளிப்5:12).

இயேசு தான் தேவனிடத்தில் ஞானஸ்நானத்தின்மூலம் உடன்படிக்கை செய்தபோது, இந்த மாபெரும் கனத்திற்கு தகுதியுடையவர் என்பதை நிரூபிக்கவில்லை. மாறாக, அவர் தன் மரணத்தில் தன்னுடைய ஓட்டத்தை முடித்தபிறகே, மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவரானார். அவர் உயிர்த்தெழுந்து பரத்துக்கு ஏறிய பிறகு அவர் கையில் அந்த சுருள் திறப்பதற்காக கொடுக்கப்பட்டது. இதன் பொருள் என்னவெனில், தெய்வீகத்திட்டம் முழுவதுமாக அவருக்கு அறியப் பண்ணப்பட்டிருந்தது. ஏற்கனவே அவர் அதைப்பற்றிய அறிவைப் பெற்றிருந்தார். ஆனாலும் எல்லாக் காரியங்களும் கட்டவிழ்ப்பதற்காகக் கொடுக்கப்பட்டது. அங்கே நம் ஆண்டவருக்கு சில காரியங்கள் தெரியாமலிருந்தது. ஏனெனில், ''அந்த நாளையும் நாழிகையையும் (அவருடைய இரண்டாம் வருகையின்) பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்'' என்று அவர் கூறியிருந்தார்(மாற்கு 13:32). தெய்வீகத் திட்டத்தின் ஒருபகுதி அந்த சுருளின் வெளிப்புறத்திலும் மற்றொரு பகுதி அதன் உட்புறத்திலும் எழுதப்பட்டிருந்தது. அவர் உயிர்த்தெழுந்து சகல வல்லமையும் பெற்றுக்கொள்ளும்வரை நம் கர்த்தரால் முறையாகப் புரிந்துகொள்ள இயலாதவாறு அக்காரியங்கள் முத்திரையிடப்பட்டிருந்தது. இப்பொழுது

தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர் கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**முத்திரைகள் படிப்படியாக திறக்கப்படுதல்**

சுவிசேஷயுகம் முழுவதும் முத்திரைகள் திறக்கப்படுவது வளர்ச்சியடைந்திருந்தது. தேவனுடைய திட்டம் முழுவதும் அந்தப் புஸ்தகச்சுருளில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த திட்டத்தை முழுமையாக நிறைவேற்றி முடிப்பதற்கு தற்காலயுகம் முழுவதும் தேவைப்படுவதோடு, வரவிருக்கும் யுகம் முழுவதும் தேவையாயிருக்கிறது. தேவனுடைய திட்டத்தில் முன் உரைக்கப்பட்டவைகள் அனைத்திலும் திரும்பக் கொடுத்தலும் உள்ளடங்கியிருந்தது. இப்போது நாம் இந்த அதிசயமான காரியங்களைப் பார்க்கவும் அவைகளைப்பற்றி எடுத்துக்கூறவும் முடிகிறது. ஏனென்றால் முத்தரிக்கப்பட்டிருந்த அதின் ஒவ்வொரு முத்திரையும் திறக்கப்பட்டதனால் அந்த திட்டம் ஓரளவு தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யேகோவா தேவனுடைய சமூகத்துக்கு ஏறிச்சென்றபிறகு, அந்தத் திட்டத்தின் எல்லா சிறப்பம்சங்களைப்பற்றிய விழிப்புணர்வை அடைந்தார் என்று நாம் யூகிக்கிறோம். தேவனுடைய ஜனங்களாகிய நாம் இந்தக் காரியங்களை மேலும் மேலும் முழுமையாக அறிந்துகொள்ளத்



தேடவேண்டும். பிதா அவைகளை அவருக்கு வெளிப்படுத்தினதுபோல, அவரும் அவைகளை நமக்கு வெளிப்படுத்துவதாக நம் போதகர் பிரகடனம் செய்கிறார்; ஆனாலும் இந்த வெளிப்பாடு அடுத்தடுத்த முத்திரைகள் உடைக்கப்படுவதுபோன்று படிப்படியாக இருக்கும்.

கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த சகோதரர்களே! நம்முடைய தேவன் நம்மை இந் நேரம்வரை நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின்மூலம் முத்திரைகள் திறக்கப்பட்ட தமது மாபெரும் திட்டத்தின் அதிசயிக்கத்தக்க சுருளை காண்பதற்கு தகுதியுடையோராக எண்ணியிருக்கிறார் என்பதைஉணர்ந்து, அவரது வார்த்தையின் மகிமையான காரியங்களைப் புரிந்துகொண்டு, இந்த திட்டத்தினை எல்லாவற்றிலும் ஏற்றுக்கொண்டு, விசுவாசத்தின்மூலமும், கீழ்ப்படிதல் மற்றும் உண்மையுடனும் பார்க்கத் தகுதியுள்ளவர்களென நம்மை தொடர்ந்து நிரூபிப்போமாக. மற்ற பசியுள்ள இருதயங்களுக்கு தெய்வீக சத்தியத்தை சுமந்துசெல்லும் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட ஊழியத்தினை பகிர்ந்துகொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருப்பதில் நமது அதிசயிக்கத்தக்க சிலாக்கியத்தில் நமது மதிப்பீட்டை தொடர்ந்து வளர்த்துக்கொண்டு, மற்றவர்களும் கர்த்தருக்குள் அவரது பலத்தின் வல்லமையில் சந்தோஷமடையச் செய்வோமாக!

[R5943]

# தெய்வீக சுருள் - அதை காண்பதற்குப் பாத்திரன் யார்?

**"பாத்திரன் யார்?" - வெளிப்படுத்தல் 5:2**

"புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார்?" என்று பரலோகத்தில் வந்த சத்தத்தின் வார்த்தைகளே நம்முடைய பாடத்திற்கு ஆதாரமாய் உள்ளது. இங்கு வரும் புஸ்தகம் (சுருள்) வேதாகமத்தை அடையாளப்படுத்தாமல், தெய்வீக திட்டத்தையும், அதன் காலங்களையும் வேளைகளையும் அடையாளப்படுத்துகின்றது. வேதாகமம் ஒரு பதிவேடு (ஆவணம்) ஆகும். ஆனாலும் வேதாகமம் எழுதப்படுவதற்கு முன்பதாகவே தேவன் திட்டத்தை வைத்திருந்தார். இந்த திட்டத்தை அவர் ஆதிமுதல் கொண்டிருந்தார். தேவன் இத் திட்டத்தை, தேவ தூதர்களுக்கோ, லோகாசுக்கோ கூட வெளிப்படுத்தவில்லை. நமது கர்த்தர் இயேசு மாம்சத்தில் இருக்கும்போதுகூட இதன் கால வேளைகளை தேவன் அவருக்கு முழுமையாய் வெளிப்படுத்தவில்லை. இயேசு உயிர்த்தெழுந்த பின்னர் இந்த காலங்களையும், வேளைகளையும் குறித்து, அவைகளை "பிதாவானவர் தம்முடைய ஆதினத்தில் வைத்திருந்தார்" என்று கூறினார். அப்போஸ்தலர் 1:7

விழுந்துபோன மனுக்குலம் தொடர்புடையதான ஒரு திட்டத்தை தேவன் கொண்டுள்ளார் என்பது ஆபிரகாமுக்கு தெரிவிக்கப்பட்டது. தேவன் தாம் மனுக்குலத்தின் உலகத்தை ஆசீர்வதிக்கப்போகிறதாக ஆபிரகாமிடம் கூறினார். பின்னர் நியாயப்பிரமாணத்தின் சில நிழல்கள் வாயிலாக தாம் எந்தவிதத்தில் உலகத்தை ஆசீர்வதிக்கப்போகிறார் என்பதையும் காட்டினார்/தெரியப்படுத்தினார். ஒரு மீட்பர் இருப்பார் என்று தெரியப்படுத்தினார். ஆனாலும் யார் அந்த மீட்பர் என்பது இரகசியமாகவே வைக்கப்பட்டது. தேவதூதர்களும், மனுஷர்களும் அதை அறிய விரும்பியிருந்தும், அதை அறிந்துகொள்ளும் அறிவு/ஞானம் அவர்களுக்கு அருளப்படவில்லை. இந்த மீட்பர் குறித்த சில விஷயங்களை தீர்க்கதரிசிகள் (பரிசுத்த ஆவியினால்) ஏவப்பட்டு பேசியிருந்தாலும், அவர்கள் பேசினதின் அர்த்தம் அவர்களுக்கு விளங்கவில்லை.

ஏற்றவேளையில் லோகாஸ் அனுப்பப்பட்டார். அவர் (உலகத்திற்குள்) அனுப்பப்படுவதற்கு முன்னதாக ஓர் உண்மையுள்ள குமாரனாக இருந்தார். மேசியா ஆகுவதற்கான விலை என்னவென்று தெரியாமலேயே, லோகாஸ் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படி செயலில் இறங்கினார். தேவன் சில விஷயங்களை, அதாவது, மேசியா ஆகுவதற்குரிய விலை சம்பந்தமான விஷயங்களை இரகசியமாகவே வைத்திருந்தார். லோகாஸ் தமது விசுவாசத்தையும், தமது நம்பிக்கையையும் வெளிக்காட்டினார். லோகாஸ் கீழ்மட்ட (மனித) சுபாவத்தின் நிலையை எடுக்க வேண்டியிருப்பினும், லோகாஸ் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சி கொண்டார். ஆகவே அவர் தாம் இருந்த மகிமையான நிலையிலிருந்து தன்னையே தாழ்த்தி மனித சுபாவம் எடுத்து ஒரு பரிபூரண மனுஷரானார். அவர் பாவியான மனுஷ நிலையை எடுக்கவில்லை. பிதா தம்முடைய மனதில் மாத்திரம் வைத்துக்கொண்டதும், வேறு எவருக்கும் வெளிப்படுத்தாததுமான மாபெரும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே நம்முடைய கர்த்தர் இப்படியாக தாழ்மையான நிலையை எடுத்தார்.

இயேசு முப்பதாம் வயதை எட்டிய/அடைந்தவுடன் அதாவது, நியாயப்பிரமாணத்தின்படி தம்மை தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்கும் வயதை அடைந்தவுடன், யோர்தானுக்குப் புறப்பட்டு, பிதாவின் திட்டத்தில் உள்ள யாவற்றையும் தம்மைக் குறித்து பரிசுத்த வேதவாக்கியங்களில் அடையாளமாகவும், தீர்க்கதரிசனமாகவும் எழுதப்பட்ட யாவற்றையும் நிறைவேற்ற வேண்டும் என்ற முடிவுடன்/தீர்மானத்துடன் தம்மை தேவனுக்கென்று அர்ப்பணித்தார். "அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார். தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்" (எபிரெயர் 10:7, 9) "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பாமல், என் செவிகளைத் திறந்தீர்; சர்வாங்க தகனபலியையும் பாவநிவாரணபலியையும் நீர் கேட்கவில்லை. அப்பொழுது நான். இதோ,

வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" (சங்கீதம் 40:6-8) என்பதே அவருடைய இருதயத்தின் சிந்தையாக இருந்தது.

இதுவே நம்முடைய கர்த்தரின் அர்ப்பணிப்பாகும். அவருடைய மனிதசுபாவமே அவருடைய பலியாயிற்று. அவர் தமது ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். அவருடைய ஒப்புக்கொடுத்தல் யோர்தானில் முடிவடையவில்லை. யோர்தானில் அவருடைய சித்தத்தையே ஒப்புக்கொடுத்திருந்தார். யோர்தானில் அவர் மகா பிரதான ஆசாரியன் ஆனார். மேலும் அவருடைய மாம்சத்திற்கு இஸ்ரயேலின் பாவநிவாரண நாள் அன்று பாவநிவாரண பலியாக பலி செலுத்தப்பட்ட காளை அடையாளப்படுத்தப்படுகிறது. அவருடைய மூன்றரை வருடத்தின் ஊழியப்பகுதியில் அவர் இந்த பலியை திருப்திகரமாக செலுத்தினார். மேலும் அவர் நிறைவேற்ற வேண்டுமென பிதா அவருக்குக் கொடுத்த அனைத்தையும் அவர் சிலுவையில் நிறைவேற்றினார்.

## ***ஆழமான விஷயங்கள் யோர்தானில் வெளியாக்கப்பட்டது***

நம்முடைய கர்த்தராகிய இயேசு ஞானஸ்நானம் பண்ணி தண்ணீரிலிருந்து வெளியே வந்தபோது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டார். அப்பொழுது வானங்கள் அவருக்குத் திறக்கப்பட்டது. பின்னர் அவர் முன்பு புரிந்திராத மேன்மையான/மேலான விஷயங்கள் அவருக்குத் தெளிவானது. அவர் புரிந்துகொள்ளத்தக்கதாக வேதவாக்கியங்கள் திறக்கப்பட்டன. சிலுவையில் அறையப்பட வேண்டிய அவர் எருசலேமுக்குச் செல்ல வேண்டுமென இயேசு அறிந்திருந்தார். இயேசு தாம் தெரிந்து கொண்ட சீஷர்களில் ஒருவரால் காட்டிக் கொடுக்கப்படுவார் எனவும், காட்டிக் கொடுக்கிறவன் யார் எனவும் அறிந்திருந்தார். இயேசு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டு தேவனால் தெய்வீக தளத்தில் உள்ள குமாரனாக ஏற்றுக்கொள்ளப்பட்டபடியினாலேயே இவைகளையெல்லாம் இயேசு அறிந்திருந்தார்.

அந்த மூன்றரை வருடக்காலப்பகுதியில் இயேசு தேவனால் அனுப்பப்பட்ட மேசியாவாக இருந்தார். "அவர் யூதா கோத்திரத்தின் சிங்கமாக இருந்தார்." இயேசு தமது சித்தத்தை (யோர்தானில்) பலி செலுத்தியுள்ளார். ஆனால் இது போதுமானதல்ல. இயேசு தமது சித்தத்தை ஒப்புக்கொடுப்பதோடு மாத்திரமல்லாமல், தமது மனுஷீக ஜீவியத்தையும் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமாய் இருந்தது. இயேசு சில கடினமான பரீட்சைகள் மூலம் தம்மை நிரூபித்துக் காட்ட வேண்டும் எனவும் தேவன் திட்டம் பண்ணியிருந்தார். "அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபிரெயர் 4:15) அவருடைய பரீட்சைகள் சிலுவையின் மீதான அவருடைய மரணத்தில் நிறைவடைந்தபோது, பரலோகத்திலும் பூமியிலும் சகலரும் பணிந்து கொள்ளும் ஒரு நாமத்தை தேவன் அவருக்கு தந்தருளினார்.

நம்முடைய ஆதாரவசனத்தின் கேள்விக்கான விடை இப்பொழுது நமக்கு கிடைக்கின்றது. இக்கேள்வி இயேசு உலகத்திற்கு வந்தது முதல் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தது வரையிலான காலப்பகுதிக்கு முன்பு கேட்கப்பட்டதாகும். பரலோக சேனைகளிலேயே மிகவும் கனம் பொருந்தினவருக்கு தேவனுடைய மாபெரும் திட்டம் குறித்ததான புஸ்தகச் சுருளை அவிழ்ப்பதற்கும் அதிலுள்ளவைகளை நிறைவேற்றுவதற்கும் தனது தகுதியை நிரூபித்துக் காட்டுவதற்கான வாய்ப்பு முதலாவதாக தேவனால் கொடுக்கப்பட்டது. இவ்வாய்ப்பு கொடுக்கப்பட்டதற்கான காரணம், இவர் பிதாவாகிய தேவனின் முதற்பிறப்பானபடியினால் இவருக்கே ஊழியம் புரிவதற்கான வாய்ப்பிற்குரிய உரிமை இருந்தது. இயேசுவும் இவ்வாய்ப்பை விட்டுவிடவில்லை. அவர் வாய்ப்பை ஏற்றுக்கொண்டு உண்மையுள்ளவராய் இருந்தார். அவர் தம்மையே மனித சுபாவத்திற்கு தாழ்த்தி அவர் மனுஷனாக வந்து பிறந்த யூதா கோத்திரத்திற்கு இராஜசிங்கமானார். இப்படியான பெயர்/ஸ்தானம் அவர் லோகோஸாக இருந்தபோது

அவருக்கு இல்லை. அவர் மரியாளின் குமாரனாக வந்ததினால், அவர் யூதா கோத்திரத்தின் சிங்கமாகவும், தாவீதின் வேருமாய் ஆனார்.

## ***பாத்திரவான் என்று தேவதூதர்களால் அறிவிக்கப்பட்டார்***

நமது கர்த்தரின் தகுதி, "எல்லாம் முடிந்தது" என்று அவர் தம் மரணத்தில் உரக்க சத்தமிடாத வரையிலும் நிரூபிக்கப்படவில்லை. ஆதாம் தொடங்கி இயேசு வரையிலும் மாபெரும் புஸ்தகசுருளை அவிழ்ப்பதற்கான தகுதியுடையவர்/பாத்திரவான் எவரும் இல்லை. ஆனால் இப்பொழுது இயேசு பாத்திரவானாகிவிட்டார். நம்முடைய கர்த்தரின் மூன்றரை வருடங்கள் தான் யோவானுக்குக் கிடைத்த தரிசனத்தில், "அடிக்கப்பட்ட வண்ணமாக இருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி" என கூறப்பட்டது. மேலும், "அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்." வெளிப்படுத்தல் 5:12.

இயேசு தம்மை (யோர்தானில்) அர்ப்பணித்தப்போது இல்லாமல், தமது ஓட்டத்தை மரணத்தில் முடித்தபோதுதான் இந்த கனத்திற்குப் பாத்திரவானாக தம்மை நிரூபித்துக் காட்டினார். அவர் ஓட்டத்தை மரணத்தில் முடித்த பின்னரே மகிமைக்கும், கனத்திற்கும், வல்லமைக்கும் பாத்திரமானார். அவர் உயிர்த்தெழுந்து பரமேறின பின்பு தான் புஸ்தக சுருளானது அவிழ்க்கும்படி அவருடை கரத்தில் கொடுக்கப்பட்டது. இதன் அர்த்தம் என்னவெனில், தெய்வீக திட்டமானது அவருக்கு முழுமையாக தெரிவிக்கப்பட்டது. தெய்வீக திட்டத்தின் அநேக விஷயங்களைக் குறித்த அறிவு அவருக்கு இருந்தாலும், இப்பொழுது சகலமும் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்பு நமது கர்த்தருக்கு சில விஷயங்கள் தெரியாமல் இருந்தது. "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்" மாற்கு 13:32. தெய்வீக திட்டத்தின் ஒரு பகுதி புஸ்தக சுருளின் வெளிப்பகுதியிலும், மற்றொரு பகுதி சுருளின் உட்பகுதியிலும் எழுதப்பட்டிருந்தது. நம்முடைய மீட்பர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் சகலவல்லமையையும் பெற்றுக் கொள்ளும் வரையிலும் முத்தரிக்கப்பட்டுள்ள விஷயங்களை அல்ல, அறிந்து கொள்ள/புரிந்து கொள்வதற்கு ஏற்றவைகள் அல்ல. அவர் சகல வல்லமையையும் பெற்றுக் கொண்ட பின்னர் தெய்வீக திட்டத்தை நிறைவேற்றும் பணி அவருடைய கரங்களில் ஒப்படைக்கப்பட்டது.

## ***முத்திரைகள் படிப்படியாக திறக்கப்பட்டன***

முழு சுவிசேஷ யுகத்திலும் முத்திரைகள் படிப்படியாக திறக்கப்பட்டது. புஸ்தக சுருள் முழு தெய்வீக திட்டத்தை அடையாளப்படுத்துகின்றது. அந்த திட்டம் நிறைவேறுவதற்காக முழு யுகமும் இனிவரும் முழு யுகமும் தேவைப்படும். "உரைக்கப்பட்ட அனைத்து திரும்பக்கொடுத்தலின்" விஷயங்களை இந்த தெய்வீக திட்டம் உள்ளடக்குகின்றது. இந்த அருமையான விஷயங்களை நம்மால் காணமுடிகின்றது. அவைகளைக் குறித்து கூறவும் முடிகின்றது. காரணம், ஒவ்வொரு முத்திரையும் திறக்கப்படுகையில் இது தெய்வீக திட்டத்தை இன்னும் இன்னுமாக தெளிவாகக் காட்டுகின்றது. கர்த்தர் இயேசு பிதாவாகிய தேவனுடைய பிரசன்னத்திற்கு பரமேறி சென்ற பின்னர், தெய்வீக திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் அறிந்துகொண்டார் என்று நாம் விசுவாசிக்கின்றோம். தேவனுடைய ஜனங்களாகிய நாமும் அத்திட்டத்தை அதிகமாகவும், முழுமையாகவும் அறிந்து கொள்ளும்படி நாடுகின்றோம். பிதா இவைகளை நம்முடைய எஜமானாகிய கர்த்தருக்கு தெரியப்படுத்தினதுபோல, கர்த்தரும் அவைகளை நமக்கு தெரியப்படுத்துவார் என்று கூறியுள்ளார். ஆனால், இந்த வெளிப்படுத்தல்கள் ஒவ்வொரு முத்திரையும் உடைக்கப்படும்போது, படிப்படியாகவே வெளிப்படும்.

கிறிஸ்துவுக்குள்ளான அன்பான சகோதர சகோதரிகளே, நமது கர்த்தராகிய இயேசுவினால் நமக்கென உடைக்கப்பட்ட முத்திரைகள் மாபெரும் தேவனுடைய தெய்வீக திட்டமாகிய ஆச்சரியமான புஸ்தக சுருளை பார்ப்பதற்கு நம்மையும் தகுதியுள்ளவர்களென/பாத்திரவான்களென தேவன் எண்ணியிருக்கிறபடியால், நாமும் அவைகளைப் பார்ப்பதற்கும், அவருடைய வார்த்தையின் மகிமையான விஷயங்களைப் புரிந்துகொள்வதற்கும் நம்மை பாத்திரவான்கள் என நிரூபிக்கும்படிக்கு எல்லா விஷயங்களிலும் இந்த திட்டத்திற்கு உண்மையுள்ளவர்களாகவும், கீழ்ப்படிதலுள்ளவர்களாகவும் இருப்போமாக! பசியாய் இருக்கிற இருதயங்கள் கர்த்தருக்குள் களிக்கூறத்தக்கதாகவும் அவருடைய வல்லமையில் களிக்கூறத்தக்கதாகவும் தெய்வீக சத்தியத்தை சுமந்து செல்லும் இந்த ஆசீர்வாதமான ஊழியத்தில் பங்கடையும் அருமையான வாய்ப்பு/சிலாக்கியம் நமக்கு அனுமதிக்கப்படும்படி தெய்வீக திட்டத்தைக் குறித்ததான நம்முடைய புரிந்துகொள்ளுதல் தொடர்ந்து பெருகுவதாக! ஆமென்.

---

**R 5946**

# கர்த்தரின் கட்டளைகளைக் கடைப்பிடித்தல்

## KEEPING THE LORD'S COMMANDMENTS

சீனாய் மலையில் இஸ்ரயேலருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் பத்துக்கட்டளைகளில் சுருக்கி கொடுக்கப்பட்டது, வேறு எந்த தேசத்திற்கோ அல்லது ஜனத்திற்கோ கொடுக்கப்பட்டதில்லை. தேவன் அந்த தேசத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டதால் யூதரிடத்தில் இன்னும் அந்தப் பிரமாணம் நிலைத்திருந்தது. அவர்களை அடிமைத்தனத்திற்குள்ளாகவே வைத்துள்ளது. அவர்கள் அந்தப் பிரமாணத்தை பரிபூரணமாகக் கடைப்பிடிப்பார்களானால், விசேஷித்ததும், பிரத்யேகமுமான ஆசீர்வாதங்களை அடைவார்கள். அதை கடைப்பிடிக்க அவர்கள் தவறுவார்களானால், குறிப்பிட்ட நிச்சயமான தண்டனைகள் முடிவாக வரும். ஆனால் ஒரு பரிபூரண மனிதனது ஆற்றலின் அளவாக நியாயப்பிரமாணம் இருந்தபடியால், எந்த மனுஷனும் பூரணராயில்லாததால், எந்த இஸ்ரயேலனாலும் உலக மனுக்குலத்தில் உள்ள மற்ற எவராலும், தெய்வீக நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க ஒருவராலும் கூடாதிருந்தது. அது வாக்குத்தத்தம்பண்ணின ஆசீர்வாதங்களை ஒருவனும் அடையமுடியவில்லை. அவர்களில் எல்லாரும் பயமுறுத்திவந்த நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்கத் தவறி, சாபத்தையோ அல்லது தண்டனையையோ அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ அடைந்தவர்களேயாவர்.

''உங்களில் ஒருவனும் நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லை''(யோவா7:19) என்று இயேசு கூறினார். பரிசுத்த பவுலும்; ''எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை''(ரோம3:20) என்கிறார்.

ஆயினும் இஸ்ரயேல் ஜனங்கள் அந்த நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க முயற்சி செய்யும்போது, அதிகமான ஆசீரைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று நிரூபணமாகிறது. முற்பிதாக்களில் சிலர், உண்மையோடும் விசுவாசத்தோடும் கடைப்பிடிக்க போராடினதைக்குறித்து அப்போஸ்தலர்; ''அவர்கள் உயர்ந்த வெகுமதியை அடைவார்கள்''(எபி11:38–40) என்று நமக்கு உறுதியளிக்கிறார். மேசியா ஆவிக்குரிய ராஜ்யத்தை ஸ்தாபித்தபின்பு இந்த முற்பிதாக்களை பூமி முழுவதும் ராஜாக்களாகவும் ஆளுநர்களாகவும் நியமிப்பார். கர்த்தரது ஆவிக்குரிய நிலைமையின்கீழும், தெரிந்தெடுக்கப்பட்ட அவரது சபையின்கீழும் இவர்கள் இருப்பார்கள்.

இயேசு மாம்சத்தின்படி நமது மனுக்குல சந்ததியின் ஒரு அங்கமாக எண்ணப்பட்டாலும், குறைவற்ற ஒரு ஜீவியத்தை பெற்றிருந்தபோதிலும், ஆவிக்குரிய நிலைமையிலிருந்து தமது கன்னித்தாயின் வயிற்றிற்கு உருமாற்றப்பட்டார். இவ்வாறாக பாவத்தையோ அல்லது அதன் சாபத்தையோ அவர் சுதந்தரிக்கவில்லை, மாறாக, 'பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாக'' பிறந்தார்(எபி7:26). இந்த பரிபூரணத்தன்மையின் காரணமாகவே மனித குடும்பத்தின் எந்த அங்கத்தினரும் ஒருபோதும் செய்திராததும் செய்யக்கூடாததுமானதை இயேசுவால் செய்யமுடிந்தது. நியாயப்பிரமாணத்தை அதன் ஒவ்வொரு அம்சங்களையும் முழுமையாகவும் நிறைவாகவும் நிறைவேற்ற அவரால் முடிந்தது. நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்பதைக்காட்டிலும் கூடுதலாக அவர் செய்தார். பூமிக்குரிய உரிமைகளையும் சிலாக்கியங்களையும் அனுபவிப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு என்று நியாயப்பிரமாணம் பிரகடனப்படுத்தியிருந்தும், இவற்றை பலிசெலுத்தினார். இவ்வாறாக இயேசு பூமிக்குரிய ஜீவியத்தின் உரிமையைப் பெற்றிருந்தது ஒருபுறமிருக்க, தற்போதைய அவரது ஆவிக்குரிய ஜீவியத்தின் நிலைமையாகிய புண்ணியத்தை மரணபரியந்தம், ''சிலுவையின் மரணபரியந்தமும் '' கீழ்ப்படிந்ததன் வெகுமதியாக பிதா அவருக்கு கொடுத்தார் – பிலிப் 2:8.

மகிமையடைந்த மேசியா மூலம் ஸ்தாபிப்பதற்கு தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டிற்கு அஸ்திபாரத்தை உருவாக்கியது பூமிக்குரிய ஜீவியமே ஆகும். முற்பிதாவாகிய ஆதாமின் கீழ்ப்படியாமைக்கும் மரணதண்டனைக்கும் ஈடுகட்டும் விதமாக, கிறிஸ்து தம் மனிதஜீவியத்தின் உரிமையை தம் பலியின் புண்ணியத்தை ஏற்றவேளையில் பொருந்தப்பண்ணுவார். இவ்வாறு சம விலைக்கிரயத்தைக் கொடுத்து, மனுக்குல சந்ததியை தம்முடையதாக்கிக்கொண்டு, மனிதனையும் அவனது பூமிக்குரிய வீட்டையும் தம்மால் விலைகொடுத்து வாங்கப்பட்ட உடைமையாக மாபெரும் மீட்பர் எடுத்துக்கொள்வார். ஆயிரமாண்டுகள் ஆதாமின் குடும்பத்து உறுப்பினர்கள் அனைவருக்கும் உதவிசெய்யும் சிலாக்கியம் கிடைத்ததைப் பயன்படுத்தி, பாவத்திலிருந்தும் அபூரணங்களிலிருந்தும் மரண நிலைமைகளிலிருந்தும் பரிபூரண மனித நிலைமையையும் நித்திய ஜீவனையும் அடைய உதவுவார். இப்படிப்பட்ட ஆசீர்வாதங்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழிருப்போருக்கு கிடைக்காது. ஏனெனில் மனுக்குலம் நியாயப்பிரமாண உடன்படிக்கையை கடைப்பிடிக்க முடியாத காரணத்தினாலேயே ஆகும். ஆனால் அவர்கள் இரக்கத்தையும் மன்னிப்பையும் வாக்களிக்கும் புது உடன்படிக்கையின் கிருபையின் விதிமுறைகளுக்கு மனதார கீழ்ப்படிவார்கள். யாரெல்லாம் சீர்திருத்தங்களை முறையாக பயிற்சிசெய்கிறார்களோ, அவர்கள் அவ்வாறு கீழ்ப்படியும்போது, கல்லான இருதயம் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, சதையான இருதயமும், புதுப்பிக்கப்பட்ட முறையான ஆவியும் அவர்களுக்கு மேசியாவின் ராஜ்யத்தின் சிலாக்கியங்களாக கொடுக்கப்படும்.

**மூன்று கட்டளைகளைப் பெற்றுள்ள கிறிஸ்துவர்கள் :–**

புறஜாதிகளிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள், இயேசுவின் பின்னடியார்கள் அல்லது சீஷர்கள், சீனாய் மலைமேல் கொடுக்கப்பட்ட மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ் ஒருபோதும் உட்படுவதில்லை. அவர்கள் வேறு உடன்படிக்கையின்கீழ், தேவகுடும்பத்திற்குள் புத்திரராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். அந்த உடன்படிக்கையைக் குறித்து கீழ்க்காண்கிறபடி படிக்கிறோம்; ''பலியினால் என்னோடு உடன்படிக்கை பண்ணின பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்''(சங் 50:5). இயேசு, நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உட்பட்டு பிறந்த அதன் நிபந்தனைகளையும், எதிர்பார்ப்புகள் அனைத்தையும் முழுமையாக கைக்கொண்டபிறகு, இந்த பலியின் உடன்படிக்கைக்கு இணங்கி செயல்பட அனுமதிக்கப்பட்டனர். அவரே முதலாவதாகவும், பிரதானமானவராயும், தேவனோடு பலியின் உடன்படிக்கைக்குள் நுழைந்து, பரிசுத்தவான்களடங்கிய விசுவாசவீட்டாருக்கு தலையாக இருக்கிறார். தேவசித்தம் செய்வதற்காக மரணபரியந்தம் தமது பூமிக்குரிய வாழ்க்கையையும் அதன் எல்லா உரிமைகளையும் பலியாக்க சம்மதித்தார். இவர் உண்மையாய் நடந்ததினால், தெய்வீக சுபாவமாகிய கனம் மகிமை சாகாமையை அடையும் மேலான உயிர்த்தெழுதலை ஆதாயமாக்கிக்கொண்டார்.

இந்த சுவிசேஷயுகத்தின்போது, பரிசுத்தவான்களில் சிலர் இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்கும்படி விடுக்கும் கர்த்தருடைய அழைப்புக்கு செவிமடுப்பார்கள். அவருடைய பலியின் புண்ணியத்தின் மூலமாக, அவரது மணவாட்டி வகுப்பாராகவும், உடன் சுதந்திரர்களாகவும் ஆகும்படி அழைக்கப்பட்ட இந்த வகுப்பார் அனைவரின் நிமித்தமாக பிதாவிடத்தில் பரிந்துபேசும் சிலாக்கியத்தை இயேசு பெற்றிருக்கிறார். அவர்கள் பலிசெலுத்துவதற்கு தம் புண்ணியத்தை அளிப்பதன்மூலம், பிதாவின் பார்வையில் அது முழுமையானதும் அங்கீகரிக்கப்படத்தக்கதாகச் செய்கிறார். இயேசுவின் பின்னடியார்கள் ஒவ்வொருவரும்அவரது தேவபக்தியின் ஆவியால் ஆற்றலடைந்து, தங்களுடைய மகிமையின் மீட்பரது உதவியுடன் உடன்படிக்கையை ஏற்படுத்துவதோடு மட்டுல்லாமல், அதை நிறைவேற்றவும் செய்கிறார்கள். இவ்வாறாக அவர்கள் அவர் மூலமாக, ''முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாகவும்'', இராஜ்யத்தில் உடன் வாரிசுகளாகவும் ஆகின்றனர்.

அப்போஸ்தலர் இவர்களைக்குறித்து எழுதுகிறார்; நீங்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழ்ப்பட்டவர்களல்ல. மாறாக, கிருபையின் உடன்படிக்கைக்கு உட்பட்டவர்கள். நியாயப்பிரமாண எதிர்பார்ப்பின்படி, ஒவ்வொரு அம்சத்துக்கும் முழுமையாகவும் பூரணமாகவும் கீழ்ப்படிந்து நடக்கும் யூதருடைய பிரமாணத்துக்கு உட்பட்டவர்களல்லர். இவர்கள் கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்லது தெய்வீக தயவுக்கு உட்பட்டவர்கள். இது நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றும்படி அவர்களிடம் எதிர்பார்ப்பதில்லை. இதன் தேவைகளை அவர்களால் நிறைவேற்றமுடியாது. அதற்குபதிலாக, அப்போஸ்தலர் நமக்குகூறுகிறார்; ''மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார்''(ரோமர்8:4). இவ்வாறாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிராதபோதிலும், தேவசித்தமாகிய யூதரின் நியாயப்பிரமாணத்தின் ஆவி, அதன்மேல் பெற்றிருக்கிற அறிவின் விகிதப்படி நியாயப்பிரமாணத்தின்மேல் பிணைத்திருக்கிறது.

**கிறிஸ்தவனது முதலாவதும் இரண்டாவதுமான கட்டளைகள்**

நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய அர்த்தத்தைக் குறித்து பேசும்போது, இதை இரண்டு கட்டளைகளால் இயேசு சுருக்கமாக புரிந்துகொள்ளும்படி கொடுத்தார். இவை தேவதூதர்களுக்கும் உலக மனுக்குலத்திற்கும் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்துகின்றன. இவற்றில் முதலாவது கட்டளை ''உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், முழு சிந்தையோடும், முழு பெலத்தோடும் , முழு ஆத்துமாவோடும் அன்புகூறுவாயாக''. இரண்டாவது கட்டளையாக, ''உன்னிடத்தில் அன்புகூறுவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூறுவாயாக''. இந்த நியாயப்பிரமாணத்தை ஒவ்வொரு கிறிஸ்தவனும் மற்றும் ஒவ்வொரு தேவதூதரும் ஏற்றுக்கொண்டு, தன் ஆற்றலின் அளவுக்கேற்ப அதன்மேலான பொறுப்புணர்வும் கடமையும் தன்மேல் சுமத்தப்பட்டிருப்பதை உணரவேண்டும். ஆனால் தேவதூதர்களோ அல்லது கிறிஸ்தவர்களோ நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்களல்லர், அந்த உடன்படிக்கை இஸ்ரயேல் தேசத்தோடு மட்டுமே செய்யப்பட்டது.

தெய்வீக நீதி மற்றும் சத்தியத்தின் கொடியின்கீழ் ஒருவர் தன்னை இணைத்துக்கொண்டிருப்பாரானால், சிலுவையின் ஒரு போர்வீரனாக இந்த ஊழியத்தில் தன் ஜீவியத்தை கையளிப்பதாக வாக்குறுதி அளித்திருப்பதை, இயேசுவின் ஒவ்வொரு பின்னடியாரும் உணர்ந்திருக்கவேண்டும். பரலோகப்பிதாவை தன் முழு சிந்தையிலும் ஆத்துமாவிலும் பெலத்திலும் அன்புகூர்ந்து ஊழியம் செய்பவன், எப்படி தன்னிடம் உள்ள சிறந்ததை கொடுப்பதில் குறைவுபடமுடியும் ? தன் அயலானுக்கு இரங்கி, தயாளகுணத்தோடு சுயநலமில்லாமல், தன்னைப்போல் நேசிப்பதில் ஒருவன் எப்படி இந்த தெய்வீக நிபந்தனையில் குறைவுபடமுடியும் ? மெய்யாகவே, கர்த்தரிடத்தில் தன் முழு சிந்தையையும் பலத்தையும் அர்ப்பணிப்பதில் புதுசிருஷ்டி கடினத்தை அடையக்கூடும், அதுபோலவே தன் உடன் சிருஷ்டிப்புக்கள் அனைவரிடத்திலும் பூரண நியாயமாக நடந்துகொள்வதில் கடினம் இருப்பதை கண்டடையக்கூடும். ஆனால் இது புதுசிருஷ்டியின் ஆர்வமும் நோக்கமுமாகும். இதை அடைவதற்கு அவன் அன்றாடமும் போராடவேண்டும். அவன் சுதந்தரித்துக்கொண்ட பழைய மாம்ச சுபாவத்தின் இயல்பான பலவீனங்களுக்கு எதிராக ஒரு நல்லபோராட்டம் போராடவேண்டும். இப்போராட்டத்தில் கர்த்தரிடத்தில் வைத்திருக்கிற அவனது நேசத்தின் அளவின் சரிவிகிதப்படி அவனது வைராக்கியம் இருக்கும். அதே

விகிதப்படியே அவன் அடையும் வெகுமதியும் பரலோகத்தந்தையால், ஓட்டத்தின் முடிவில் அவனுக்கு அளிக்கப்படும்.

கர்த்தருடைய பின்னடியார்கள் மத்தியில், அவர்கள் எங்கேயிருந்தாலும் காணப்படாத எப்பேர்ப்பட்ட யுத்தம் நடத்தப்பட்டுவருகிறது. இந்த முரண்பாட்டை உலகம் காணாது, அறியாது. இருந்தபோதிலும் இது நிஜத்திலும் நிஜம். தங்களுடைய நேரங்கள் , தாலந்துகள், ஆதிக்கங்கள், வருங்கால நம்பிக்கைகள் ஆகிய அனைத்தையும் பலியினால் கர்த்தரோடு உடன்படிக்கை செய்துகொண்ட இந்த உடன்படிக்கைக்காரர்களது உண்மைத்தன்மையையும், நேர்மையையும், நம்பகத்தன்மையையும் கர்த்தர் கண்ணோக்குகிறார். இவர்கள் தங்களை பலியாக்கினபடியால், தத்தம் செய்யப்பட்ட இந்த பலியின் மனப்பாங்கை அனுதினமும், ஒவ்வொரு மணிநேரமும் தங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுத்து சீராக காத்துக்கொள்ளவேண்டியுள்ளது.

“பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று... இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை” – ரோமர் 12:1.

மாம்சத்தின்படி பலவீனராகவும் அல்லது விழுந்துபோனவர்களாகவும் இருப்பார்களானால், இவர்கள் இனி மாம்சத்துக்குரியவர்களல்லர் அல்லது மனித ஜீவிகளல்லர். இதனால் பலவீனங்கள் அவர்களுடையதல்ல இவர்கள் தற்போது கிறிஸ்துஇயேசுவுக்குள் புதுசிருஷ்டிகள் என்பதை உணரவேண்டும். இவர்களுக்கு பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. இவர்கள் தேவனோடு புதுஉறவுக்குள் பிரவேசித்து, புதிய குறிக்கோள்களையும் புதிய பூரணமான கொள்கைகளையும் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் பாவத்தை நேசிக்காமல் நீதியை நேசிக்கின்றனர். இவர்கள் பாவத்தை வெறுக்கின்றனர், பாவத்துக்கெதிராக, விசேஷித்தவிதமாக, தங்களது சொந்த மாம்சத்துக்கெதிராக ஒரு நல்ல போராட்டம் போராட தங்களை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். பாவத்தை எதிர்த்து இவர்கள் தைரியத்தோடு முன்வைக்கும் முயற்சிகளையும் , போராட்டங்களையும் உடன் சகோதரர்கள் காணாதபோதிலும், அறியாதபோதிலும், கர்த்தர் இருதயத்தையே பார்க்கிறார், புறம்பான மனுஷனை காண்பதில்லை என்றும், இதனால் மாம்சத்தின்படி அல்ல, ஆவியின்படி அதாவது சிந்தை, உள்நோக்கம், முயற்சிகளின்படியே நியாயத்தீர்ப்பு நடக்கிறதென்றும் அறிந்து, இவர்கள் மனநிறைவோடு இருக்கிறார்கள். இப்படியாக இவர்களில் சிலர் சிலுவையின் மாபெரும் வீரர்களாக இருக்கிறார்கள். ஆயினும் உலகம் இவர்களை அறியாது. இவர்கள் எல்லோரும் முடிவாக கிரீடம் சூட்டப்பட்டு, இயேசுவுடன் அவரது ராஜ்யத்தில் பங்கடைவார்கள்.

**கிறிஸ்தவர்களது மூன்றாம் கட்டளை**

இயேசுவால் கொடுக்கப்பட்ட இந்த இரண்டு கட்டளைகளும் எல்லாவற்றையும் உள்ளடக்கியிருந்தாலும், அதற்கு நீதி சேர்க்கப்படவேண்டியது அவசியம் என்பதுபோல் துவக்கத்தில் காணப்பட்டது. இந்த இரண்டு கட்டளைகளோடுகூட கூடுதலாக சேர்ப்பதற்கு நீதி அவசியமில்லை. பின்பு ஏன் இயேசு மற்றொரு கட்டளையாக தெய்வீகப்பிரமாணம் எதிர்பார்க்கிற, எல்லாவற்றிற்கும் மேலான மூன்றாவது புதிய கட்டளையை கொடுத்தார் ? இந்த மூன்றாவது கட்டளை, இயேசுவின் சீஷர்களானவர்களுக்கு மட்டுமே பொருந்தும், மற்ற எவருக்கும் அல்ல என்று நாம் பதிலுரைக்கிறோம். இந்த கட்டுப்பாட்டை தாமாக முன்வந்து தம்மேல் சுமத்திக்கொண்டு, எந்தப்பிரமாணமும் நீதிகேட்டு நிர்ப்பந்தப்படுத்தாதபோதிலும், தம் ஜீவியத்தை பலிசெலுத்தினார். இயேசு இதை செய்யவேண்டும் என்று கட்டளையிடும் உணர்வில் சொல்வது பிதாவுக்கு அவசியமற்றதாயிருந்தது. அதற்கு பலியினால் உடன்படிக்கைக்குள் நுழைந்த பரிசுத்தவானுக்கு மேசியாவின் ராஜ்யத்தையும் மகிமை, கனம், சாவாமை, தெய்வீகசுபாவம் இவற்றை வாக்குத்தத்தம் செய்வதும் அவசியமாயிற்று.

ஆகவே, இயேசு, இந்த பலியின் உடன்படிக்கைக்குள் நுழைவது இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் எதிர்பார்த்ததைக்காட்டிலும் மேலானதாயிருந்தது. ஆதலால், எந்த நிபந்தனையின்கீழ் அவர்களுக்கு பரிந்துபேசுபவராக இருக்கவேண்டும், எந்த நிபந்தனையின்கீழ் பரலோகக் காரியங்களில் அவரோடு பங்குபெறுவதற்கு உத்திரவாதம் அளிக்கவேண்டும் என்று சீஷருக்கு சுட்டிக்காட்டுகையில், இந்த மூன்றாவது கட்டளையின் முக்கியத்துவத்தை அவர் தெளிவாகக் குறிப்பிடுகிறார். “ஒரு புதிய கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்; நான் உங்களை நேசித்ததுபோல, நீங்களும் ஒருவரையொருவர் நேசியுங்கள்”(யோவா13:34). நமக்காக மரிக்குமளவுக்கு கிறிஸ்து நம்மேல் அன்புகூர்ந்தார் என்று பரிசுத்த.பவுல் குறிப்பிடுகிறார். இதனால் இயேசுவின் உண்மை பின்னடியார்கள் அனைவரும் அவரது ஆவியைப் பெற்றிருந்து, அவரைப்போலவே, “சகோதரருக்காக நம் ஜீவனைக் கொடுக்க கடனாளிகளாயிருக்கிறோம்”. இதை மகிழ்ச்சியாக கருதவேண்டும்.

தேவனுடைய அன்பின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரத்தின் ஆழங்களைக் காணும்படி நமது மனக்கண்கள் படிப்படியாக விசாலமாகிக் கொண்டுவருகிறது. இதன்விளைவாக, நம் தேவனுக்கு நம் முழு இருதயத்தோடும், சிந்தையோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் ஊழியம்செய்யவும், நேசிக்கவும் நாம் அதிகதிகமாக போராடி வருகிறோம். நமது குடும்ப அங்கத்தினர்களோடும், நம் அயலாரோடும், எல்லா மனுக்குலத்தோடும் நீதியாகவும், இரக்கத்தோடும் நடந்துகொள்ளவேண்டியதன் அவசியத்தையும் நாம் கற்றிருக்கிறோம். நம் அயலாரை நம்மைப்போல் நேசிப்பதன் மதிப்பீட்டை உணர்ந்து, கற்றிருக்கிறோம். பழைய சுபாவத்துக்கெதிராகப் போராடும்போது நம் அனைவருக்கும் உற்சாகப்படுத்துதல்கள் நிச்சயம் தேவை என்பதை உணர்ந்து, நாம் அடைந்துவருகிற வளர்ச்சியைக்கண்டு நம்மை நாமே பாராட்டிக்கொள்ளவேண்டும்.

**நமது கடுமையான சோதனைகளுக்கான ஆதாரம்**

தற்போது, புதிய கட்டளையை கவனிப்போம். நம் பிதாவினுடைய சித்தத்தை செய்யவும், நம் இரட்சகரின் தலைமையை பின்பற்றவும் இன்னும் கூடுதலான அர்ப்பணிப்பு தேவையாகஉள்ளது. நம் பரலோகப்பிதாவிடத்திலும், நம் அயலார் அனைவரிடத்திலும் நீதியின் விதிமுறை கடைப்பிடிக்கப்படவேண்டும். ஆனால் விசுவாசவீட்டாராகிய சகோதரரிடத்திலோ சரியானவற்றை விட கூடுதலாக செய்யவேண்டும். அதாவது துன்பப்படவும், அவர்கள் நிமித்தமாக அவர்களது நலன்களுக்காக பலியாகவும் வேண்டும்.

"சகோதரர்களுக்காக நம் ஜீவனையும் கொடுக்க நாம் கடனாளிகளாயிருக்கிறோம்".

ஓ! ஆராய்ந்துபார்க்கவேண்டிய எப்பேர்ப்பட்ட ஆலோசனைகள் இந்த பலியின் உடன்படிக்கையில் உள்ளன! சகோதரர் நிமித்தமாக நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிற பலியின் ஜீவியம் – நம் ஜீவியத்தையே கையளிக்கவேண்டிய நிலை எத்தனை விசித்திரமானது!

உலகத்தாருக்கு செய்வதைக்காட்டிலும், சகோதரரது நலன்களுக்காக நம்மை பலியாக்கி செய்யும் காரியங்கள் மிகவும் எளிதான காரியம் என்று ஆரம்பநிலையிலுள்ள ஒரு சகோதரன் கூறக்கூடும். ஆயினும் தேவனால் நேசிக்கப்படுகிற பிள்ளைகளில் அநேகர், முதல் இரண்டு கட்டளைகளைக் கடைப்பிடிக்கவே போராடுகிறார்கள் என்பதை அனுபவங்கள் காண்பிக்கின்றன. சகோதரருக்கு ஊழியம் செய்வதைக்காட்டிலும், உலகத்திற்கு ஊழியம் செய்வதற்காக தங்கள் நேரம், செல்வாக்கு, பலம் இவற்றை பலிசெலுத்துவது மிக எளிதானது என்பதை உணர்கின்றனர். மற்றவர்களைக்காட்டிலும், சகோதரரிடமிருந்து எப்படியாயினும் அதிகமாக எதிர்பார்க்குதலில் நாம் மனவிருப்பம் கொள்கிறோம், அதேசமயம், மற்றவர்களைக்காட்டிலும் சகோதரரது பலவீனங்களை சரியான பார்வையில் பார்க்கத் தவறுவதையே நாட்டமாக கொள்கிறோம். ஆவிக்குரிய கிருபைகளைப் பொருத்தமட்டில், தேவனுடைய ஜனங்கள் ஒருவர் மற்றவரைக் காட்டிலும் அதிகமாக சோதிக்கப்படுவதனால் நிபந்தனைகளே இல்லையோ என்ற நிலைமை காணப்படுகிறது. இது வெறும் கோட்பாடுகளை மட்டுமே அடிப்படையாகக்கொண்டதல்ல. இது தன்னைத்தானே நிரூபித்துக்காண்பிக்கிறது.

உலகம் முழுவதிலும் வகுப்புக் கலவரங்கள்(class troubles) நிகழ்ந்து வருகின்றன. "கர்த்தர் தம் ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" என்றும், "உன் தேவனாகிய கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக" என்றும் நாம் மெய்யாகவே வாசிக்கிறோம். பரீட்சைகளும் தரம் பிரித்தல்களும் நடந்துகொண்டிருக்கிறது, இதில் பலியின் உடன்படிக்கை செய்த கர்த்தருடைய பரிசுத்தவான்களில் அநேகர், சகோதரரிடையேயான இந்த வகுப்பு உபத்திரவங்களை கர்த்தர் அனுமதித்து, தம் ஜனங்களுடைய குணாதிசயத்தை சோதித்து வெளியரங்கமாக்கி வருகிறார் என்பதை புரிந்து உணர்ந்ததாக காணப்படவில்லை. கர்த்தரிடத்திலான அவர்களுடைய அன்பு, அவரது வசனத்தின்பேரிலான அன்பு, அவரது சித்தம் செய்வதில் அவர்களுடைய அன்பு , எல்லா மனுஷரிடத்திலுமான அவர்களுடைய நீதி, பிறர் தங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதையே அவர்களுக்கு செய்யும் அன்பு, இவைகள் சோதிக்கப்பட்டு வருகின்றன. கடைசியாக, சகோதரர்களுக்காக தங்கள் ஜீவியத்தை கையளித்து, அவர்களுக்காக என்னசெய்யவேண்டும், எதைத்தாங்கவேண்டும் என்று சுயத்தை பலிசெலுத்துதலும் சோதிக்கப்படுகிறது.

**சகோதர அன்புக்கான புத்திமதிகள்**

கர்த்தருடைய பரிசுத்தவான்களில் சிலர், இச்சூழ்நிலையை மதிப்பிடுவதில் தவறினவர்களாக இக்காரியங்களில் ஜெயங்கொள்ளத் தவறுகிறார்கள் என்று நாம் மிகவும் ஆச்சரியப்படுகிறோம். இதனால் ராஜரீக ஆசாரியக்கூட்டத்தாராகுதலில் இவர்களது இடம் அபாயத்திற்கு உட்படுத்தப்படும். நாம் யாரையும் கடிந்துகொள்வதில்லை, எவரிடத்திலும் நாம் குற்றம் காண்பதில்லை. மாறாக, மூன்றாம் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதும், நாம் பிரவேசித்துள்ளதுமான பலியின் உடன்படிக்கையை நினைவுகூறும்படி எல்லோரையும் உற்சாகப்படுத்துகிறோம். அதன்படி, நம் போதகர் நமக்காக ஜீவனை அளிக்கும்படி நம்மை நேசித்ததுபோல, நாமும் ஒருவரையொருவர் நேசிப்போம்.

இக்காரியம் முறையாக மதிப்பிடப்படுமானால், ஒருவர் மற்றவரிடத்தில் இரங்கும் அன்பை அதிகம் வெளிப்படுத்துவோமானால், ஒருவர் மற்றவருடைய வார்த்தைகளிலும் நடக்கையிலுமுள்ள தீய நோக்கங்களின் அடிப்படையில் குற்றம் சுமத்தவிரும்பமாட்டோம். அதற்கு மாறாக, அவர்களது செய்கைகள் மற்றும் திட்டங்கள் எல்லாவற்றையும் நாம் முழுமையாக அங்கீகரித்தாலும் அல்லது அங்கீகரிக்காவிட்டாலும், அவர்கள் உண்மையுள்ளவர்களாக இருந்ததாக அனுமானிப்பதில் மகிழ்ச்சிகொள்வோம். சகோதரரிடத்தில் முழு அன்பை வைத்திருந்து, ஞானமற்றதும் வேத ஆதாரமற்றதுமான ஏற்பாடுகள் என்று நாம் யோசித்திருந்து, அவர்களோடு இணைய மறுத்திருந்தாலும், அதை இரக்கஉணர்வோடும் பரிவுள்ளத்தோடும், அவர்களது உணர்வுகளை மதித்தும் தயாளகுணத்தின் அடிப்படையிலும் அவர்களிடம் எடுத்துரைத்து, அவர்களுக்கு உதவுபவர்களாக இருப்போம்.

ஆகவே, தன்னைத்தான் சோதித்தறிய ஒவ்வொருவரும் போராடுபவர்களாக இருப்போம். ஒருவர்மேல் ஒருவர் குற்றஞ்சுமத்தாதிருப்போம். விசேஷித்தவிதமாக, நம் வாழ்வில் சகோதர்களுடன் தொடர்புகொள்கையில் நம் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு செயல்பாடும் எந்த நோக்கத்தில் செய்யப்படுகிறது என்று ஒவ்வொருவரும் நம்மைநாமே ஆராய்ந்து பார்ப்போம். நம்மைப்போலவே சபைகூடிவருபவர்களும் அன்பு நிறைந்தோராகவும், உண்மையும் நேர்மையுமாய் கர்த்தரிடத்தில் இருக்கிறார்கள் என்று நாம் அனுமானித்துக்கொள்ளவேண்டும். நேர்மறையான

கொள்கைகள் எங்கெல்லாம் மீறப்படவில்லையோ அங்கெல்லாம் நம் சொந்த முன்னுரிமைகளையும் சௌகரியங்களையும் மற்ற சகோதரர்களுடைய முன்னுரிமைகளுக்காகவும் சௌகரியங்களுக்காகவும் பலிசெலுத்துவது ஒரு சிலாக்கியம் என்பதை ஒவ்வொருவரும் நினைவில் நிறுத்துவோமாக. மேலும் சமாதானம், ஐக்கியம் சகோதரர்களது வலிமையை பாதுகாக்கும்பொருட்டு நாம் நமது சொந்த ஆர்வங்களைப்பொருத்தவரை, நீதியின் நேர்மறையான கொள்கைகளை பலிசெலுத்தவும் செய்யலாம்.

ஒருவகுப்பு ஒருவேளை பிளவுபடக்கூடிய நிலைமை வந்தாலும், பிளவுபடுவது சௌகரியமாகத் தோற்றமளித்தாலும், சகோதர அன்பு ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட பிணைப்பாக இருந்து, சேர்த்துவைக்கும். "சகோதரரை நேசி, கட்டாயம் நேசி". "ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" – எபேசி 4:32.

**"இதன்மூலம் நாம் அறிந்திருக்கிறோம்"**

கர்த்தருடைய ஜனங்கள் பரிசுத்தஆவியினால் தாங்கள் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்கான நிச்சயமான, நேர்மறையான அடையாளங்களைப்பற்றி அறிந்திருக்கவேண்டுமென அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிப்பது கவனிக்கத்தக்கதாக தோன்றுகிறது; அவர் கூறுகிறார்; "நாம் சகோதரரிடத்தில் அன்பு கூறுகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" (1யோவா3:14). வேதாகம விளக்கவுரைகளில் நாம் ஏற்கனவே குறிப்பிட்டுக் காண்பித்தபடி, சகோதர அன்பு ஒரு முக்கியமானதும், நுட்பமானதுமான பரீட்சையாக இருப்பது எவ்வளவு ஆச்சரியமாயுள்ளது. மேலும் நமது நம்பிக்கை நிறைவடைவதைநோக்கி செல்லச்செல்ல இந்த சகோதர அன்பின் பரீட்சை அதிகதிகமாக வெளியரங்கமாகும் என்பதைக்குறித்து நாம் உள்ளார்ந்த அக்கறையுடன் பயப்படுகிறோம்.

அப்போஸ்தலர் கூறியிருக்கிற பிரகாரமாக; "என்(சிறு) பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூறக்கடவோம்" (1யோவா3:18). இது தனிப்பட்ட ஒரு காரியமாயிருக்கிறது. இந்தப் பரீட்சையின்கீழ் நாம் ஒவ்வொருவரும் இருக்கிறோம். அப்படி இல்லாவிடில், கூடியவிரைவில் அல்லது பின்னாளில், மனதார சகோதரருடைய நலன்களுக்காக தங்களை பலிசெலுத்தும் அன்பு, நம் ஒவ்வொருவருடைய உண்மை மற்றும் நேர்மைத்தன்மையை அல்லது அதற்கு எதிரான அவிசுவாசத்தன்மையை நிரூபிக்கும் சகோதரருக்காக நம் ஜீவனை கையளித்து, சகோதரரை அன்புகூறும் விஷயத்தில், சத்தியத்தை கற்றல் மூலமும், நம் சொந்த இருதயங்களிலும், சிந்தைகளிலும், கருத்துக்களிலும், வார்த்தைகளிலும், செயல்பாடுகளிலும், இந்த விஷயத்தை நம் நடைமுறை வாழ்க்கையில் பொருந்தப் பண்ணுவோமாக. மேலும் இவ்விஷயத்தில் ஒருவருக்கொருவர் ஜெபித்து, புத்திமதிசொல்லி, நம் போதகரின் ஆவியால் நிரப்பப்பட போராடுவோமாக!

---

# “உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்”


## “TAKE HEED TO YOURSELVES”

ஆதார வசனம் : “**லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்**” – லூக்கா17:32.

தற்காலத்து சோதனைகள் மற்றும் பரீட்சை குறித்த நம் போதகரது தீர்க்கதரிசன எச்சரிப்புக்களோடு தொடர்புடையதாக அவரால் பேசப்பட்டதே இந்தப் பாடத்தின் ஆதார வசனமாகும். தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தில் நடக்கும் அனைவராலும் இந்த வார்த்தைகளின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளமுடியும். கர்த்தருடைய விசேஷித்த வழிகாட்டுதலின்கீழ் கர்த்தருடைய பர்வதமாகிய இராஜ்யத்தை நோக்கி பாதுகாப்புக்காக ஓடுகிறவர்களுக்கேயன்றி இந்தப் பாடம் பிறருக்கல்ல. மற்ற ஜனங்களைக்காட்டிலும், அழைக்கப்பட்ட இவர்கள் மட்டுமே மிகக் கண்டிப்பான கணக்கை கொடுக்கவேண்டும். லோத்தின் மனைவி சோதோமின் ஜனங்களுடைய தீய நடக்கைகளில் பங்குபெற்றதற்காக குற்றம் சாட்டப்படவில்லை, மாறாக, அழிவுக்கென தீர்ப்பிடப்பட்ட சோதோமைவிட்டு ஓடிப்போகும்படி, கர்த்தருடைய தூதனால் அவள் அறிவுறுத்தப்பட்டிருந்தாள்.

சோதோமைவிட்டு வெளியேறும்படி அவளுக்கு கட்டளையிடப்பட்டிருந்தும், அவள் விட்டுவந்ததை திரும்பிப் பார்த்ததே அவளது தவறாகும். சபிக்கப்பட்ட பட்டணத்திலிருந்து விலகி ஓடும்படியும், அவ்வாறு விலகிஓடும்போது, திரும்பிப் பார்க்கக்கூடாது என்றும் , மலையைநோக்கி பாதுகாப்புக்காக துரிதமாய் ஓட வேண்டுமென்றும் அவளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அவளுக்கு முன்வைக்கப்பட்டிருந்த மீட்பின்மேல் அவளது இருதயம் முழு இசைவாக இருக்கவில்லை என்பதே அவள் சோதோமை திரும்பிப் பார்த்தலுக்கான காரணமாக இருக்கும் என்று நாம் குறிப்பாய் சுட்டிக் காண்பிக்கிறோம். மாறாக, அவள் விட்டுவந்தவைகளின்மேலேயே குறிப்பிட்டஅளவு பிரியமாய் இருந்தாள். சாபத்துக்குரிய பொருட்களை,அழிவுக்கென்று சபிக்கப்பட்டிருந்தவைகளை அவளது இருதயம் இறுகப் பற்றியிருந்தபடியால், அவற்றை விட்டுவிட விருப்பமில்லாதிருந்தாள். இதன் காரணமாக, கர்த்தரால் அவளை மீட்கமுடியவில்லை. தேவன் அவர்கள் மீட்கப்பட கட்டளைகொடுத்த பிறகும் தீமையை விரும்புகிறவர்களுக்கும், தீமை செய்பவர்களுக்கும் அவள் ஒரு நினைவுச்சின்னமானாள்.

நம் கர்த்தரால் குறிப்பிடப்பட்ட இந்த அடையாளமான சம்பவத்தின் நிஜமாக, தற்காலத்தில் ஜீவிக்கின்றவர்களில் சிலர் தங்களை கவனிக்க வேண்டியுள்ளது என்று நாம் நம்புகிறோம். தெய்வீக சாபத்தின்கீழ் சென்றுவிட்டவர்களிடத்தில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையுள்ளோர் இரக்கம்காட்டி, அவர்களோடு தோழமை கொண்டுள்ளனர். சோதோமின் அழிவு ஒரு முன்மாதிரிகையாக அல்லது அடையாளமாக வைக்கப்பட்டுள்ளது என பரிசுத்த யூதா மூலம் நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்கள் கர்த்தரைக்காட்டிலும் அதிக




கிருபை காண்பிக்கிறவர்களாயும், நீடிய சகிப்புத்தன்மையை வெளிப்படுத்துவோராகவும் எண்ணிக்கொண்டு, தங்களை கர்த்தருக்கு முன்பாக எதிரிகளாக உருவாக்கிக் கொள்கின்றனர். நீதியின் கொள்கைகளுக்கு மாணவர்களாக இருப்பதற்கு பதிலாக, யேகோவாவுக்கே கற்பிக்கிறவர்களாகவும், நியாயாதிபதிகளாகவும் இருக்க முயற்சிக்கின்றனர். நம்முடைய சொந்தத் தீர்மானங்களைக்காட்டிலும், தேவனுடைய தீர்மானமே ஞானமானதும், நீதியானதுமாய் இருக்கிறது என்பதே இருதயத்தின் முறையான மனப்பான்மையாக இருக்கவேண்டும். இதன் விளைவாக, தற்கால சத்தியத்தின் வெளிச்சத்தைப் பெற்று மகிழ்கின்ற யாராகிலும், கர்த்தரால் கைவிடப்பட்டு, இருளுக்குள் வழிநடத்தப்படுவதை நாம் காணும்பொழுது, அவ்வாறு அவரால் கைவிடப்படுமுன்பாக, “ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமாகிய பொல்லாத இருதயம்” அவர்களுக்குள் கிரியை செய்திருக்கவேண்டும் என்று நாம் முடிவுக்கு வரவேண்டியவர்களாயிருக்கிறோம். “வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறாரே”. ஆகவே,“ அவருடைய (பிதாவினுடைய) சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ.. என்று அறிந்து கொள்ளுவான் ”(யோவ7:17). ஆகவே யாரெல்லாம் ஒருமுறை கிறிஸ்துவின் போதனைகளைப் பெற்றிருந்து, பின்னர் இழக்கிறார்களோ, நிச்சயமாக தங்கள் சிந்தையை குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். நாம் எவ்வளவுதூரம் அவரில் நிலைத்திருக்கிறோமோ அவ்வளவாக, இந்த “சோதனைநேரத்தின்” , “தீமையின் நாளின்” எப்பேர்ப்பட்ட கண்ணிகளிலும் சிக்கிக்கொள்ளுவது கூடாத காரியமாயிருக்கிறது. முதலாவதாக, கர்த்தரிடத்திலிருந்து அவனது இருதயம் பிரிக்கப்பட்டிருந்தாலொழிய, இக்கண்ணிகளில் சிக்காதபடி பாதுகாக்கப்படுவோம். பிதாவின் கரங்களிலிருந்து யாதொன்றும் நம்மை பிடுங்கமுடியாது. நம்மை பாதுகாப்பதற்கு அவர் முற்றிலும் வல்லவராயிருக்கிறார்.

### கிறிஸ்துவ உபதேசத்தின் அஸ்திபாரம்

எல்லா கிறிஸ்தவ போதனைகளுக்கும் மிக முக்கியமான அஸ்திபாரமாக அமைந்திருப்பது ஈடுபலியின் போதனையே ஆகும். ஆதாமின் பாவத்துக்கு தகுந்த விலையாக “ஈடுபலி” இருந்து, இதன்மூலம் “நாம் கிரயத்துக்குக் கொள்ளப் பட்டோம்”

என்று வேதாகமம் போதிக்கிறது. ஆகவே ‘‘எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்துஇயேசு அவரே. இதற்குரிய சாட்சி ஏற்றகாலங்களில் விளங்கி வருகிறது’’ என்ற அஸ்திபார போதனையை வெளிப்படையாக மறுதலிக்கிறதும் அல்லது அமைதலாக புறக்கணிக்கிறதுமான எந்த போதனையும் தேவனுடைய வெளிப்படுத்தலுக்கு வேறுபட்டதாக இருக்கும் என்பது உறுதி. இது பழையதோ அல்லது புதியதோ, நண்பர்களால் பரிந்துரைக்கப்பட்டதோ, அல்லது பகைவர்களால் பரிந்துரைக்கப்பட்டதோ, கற்றவர்களாலோ அல்லது கல்லாதவர்களால் பரிந்துரைக்கப்பட்டதோ, பரிணாமக்கொள்கையின் பெயரிலோ அல்லது மற்ற பெயர்களில் பரிந்துரைக்கப்பட்டதோ, இதனைக்குறித்த நமது நோக்கமானது முறையானதும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட எதிர்ப்பாயும் இருக்கவேண்டும். ஈடுபலி ஒரு பரீட்சையாக இருக்கிறது என்றும், இதன்மூலமே மற்ற எல்லா போதனைகளும் நிரூபிக்கப்பட வேண்டியிருக்கிறது என்று கற்றறிந்த நாம், மற்றவர்கள் நிலையின்றித் தடுமாறினாலும், நாம் நிலைதடுமாற அவசியமில்லை, தடுமாறவும் கூடாது.




ஈடுபலியை மறுக்கும் தவறான போதனைகளாகிய புதை மணலுக்குள் பெருந்திரளாக நம் நண்பர்கள் சிக்கிக்கொண்டும், மேலும் அந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருப்பதால், எங்கெல்லாம் நாம் உதவிக்கரம் நீட்டமுடியுமோ அங்கெல்லாம் அவர்களுக்கு உதவ வேண்டும். அவர்களை ‘‘அக்கினியிலிருந்து தூக்கி எடுத்து’’ அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவாகிய கன்மலையை நினைவுபடுத்தவேண்டும். அங்கேயே நமது பாதம் ஸ்திரமாக நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும் தெய்வீக வாக்குத்தத்தங்களாகிய கயிற்றை அவர்களிடத்தில் வீசி, கிறிஸ்துவின் ஈடுபலியின் இரத்தாம்பரத்தால் பின்னப்பட்ட கயிற்றைக்கொடுத்து, கன்மலையிடத்தில் வரும்படிக்கு புத்திசொல்லவேண்டும். மாறாக மற்றொரு புதை மணலின் அடித்தளமாகிய மற்றொரு கன்மலையை கண்டடைய முயற்சிக்கக்கூடாது. அவர்கள் அபாயத்திலிருப்பதை சுட்டிக்காட்டி, அதிலிருந்து விடுபடக்கூடிய வழியை நேரடியாகவும், எதார்த்தமாகவும் காண்பிக்கவேண்டும்.

தேவன் பாவியாகவே இருந்துவருகிறார், மனுஷனை அவர் ஏமாற்றிவருகிறார் என்றும் அல்லது மனுக்குலத்தின் நம்பிக்கை அவர்களுடைய சொந்த பரிணாமத்தின்படியே இருக்கிறது என்றும், மாறாக, வேதத்தில் கூறப்பட்டுள்ள ஈடுபலியினாலோ, திரும்பக்கொடுத்தலினாலோ அல்ல என்றும், மேலும், பாவமோ மரணமோ உண்மையானதல்ல, ஆகவே மனிதனுக்கு மீட்பர் அவசியமில்லை, அவனே சொந்த இரட்சகனாக தனக்குத்தான் இருந்துகொள்ளமுடியும் என்றும் உறுதியாகக் கூறிவருகிறார்கள். ஆகவே அவர்களோடு சேர்ந்து, தேவ வசனத்தை பலனற்றுப் போகச்செய்வதற்கு, மனுஷர் என்னபேசமுடியும், எழுதமுடியும் என்று பரிசோதித்துப் பார்ப்பதற்காக அவர்களோடுசேர்ந்து ஆராய்வதற்காக அவர்கள் விடுக்கும் அழைப்பை நாம் கண்டிப்பாக ஏற்கக்கூடாது. உங்களுடைய தரப்பிலிருந்து இவர்களிடத்தில் அன்பான, உண்மையுமான கண்டனத்தைத் தெரிவித்தபிறகு, அவர்கள் தங்கள் வழியில் காலூன்றிநின்று அதன் ஆராய்ச்சியைத் தொடர்வார்களானால், அவர்களுடைய வழியில் செல்ல விட்டுவிடுங்கள். அவர்களுடைய இருதயத்தில் தவறானவைகளை விதைத்திருக்கிறார்கள் என்பதை நினைவில்கொண்டு, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக இருந்திருப்பார்களேயானால், இருளின் கனியற்ற கிரியைகளில் அவர்கள் பிரியப்படமாட்டார்கள். மாறாக, அவற்றைக் கடிந்துகொள்வார்கள். தேவனுடைய யுகங்களுக்கடுத்த மாபெரும் திட்டத்திலேயே இவர்களுடைய மகிழ்ச்சி இருக்கும்.

**புறம்பான இருளுக்குள் அனுப்பப்பட்டனர்**

யாருடைய இருதயம் உண்மையும் நேர்மையுமாய் இருக்கிறதோ, அவர்களுடைய சிந்தைகளை பாதுகாக்கவும், வழிநடத்தவும் தேவன் வாக்களித்திருக்கிறார் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். கர்த்தர் ஒருவரை, தகுதியற்றவர் என்றுகண்டு, வெளிச்சத்திலிருந்து உலகத்தின் புறம்பான இருளுக்கு வெளியேற்றுவாரேயானால், இப்படிப்பட்ட அவிசுவாசிகளை மாபெரும் விரோதியின் கையில் ஒப்புவித்து, தவறான வழியில் செல்லத்தூண்ட அனுமதிப்பாராகில், அவர்களோடு கற்பதும், உரையாடுவதும் நமக்கு நியமிக்கப்பட்ட பணியல்ல. கர்த்தரோடும் வெளிச்சத்தில் நடப்பவர்களோடும் நாமும் இணைந்திருப்போமாக. மேலும் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் உடன்படிக்கைசெய்து, அதன்மூலம் ஒருமுறை பரிசுத்தமாக்கப்பட்டவர்கள், தற்போது மறுதலிப்பார்களானால் அல்லது அலட்சியப்படுத்துவார்களானால், அவர்கள் இழந்த இடங்களையும் கிரீடங்களையும் எடுத்துக்கொள்ள மற்றவர்களுக்கு உதவுவோமாக,

நம்மைவிட்டுப் பிரிந்துபோனவர்கள்பேரில் அனுதாபத்தை வீணாகக் காண்பிக்கக்கூடாது. அக்கினியிலிருந்து அவர்களை வெளியே இழுத்துவிடவோ அல்லது வெளியே வரச்சொல்லி தூண்டுவதற்கோ நம்மால் முடியுமென்று எண்ணினாலும், அவர்களை அவர்களுடைய வழியிலேயே செல்ல விட்டுவிடுவதே அதிக நன்மை பயக்கும். அதேசமயம், அதிக தகுதியாய் நடக்கின்ற மற்றவர்களிடத்தில் நம் கவனம் திருப்பப்பட்டு, உதவிபுரிவோமாக. எவரையேனும் வெளிச்சத்திலிருந்து கர்த்தர் வெளியேற்றுவாராகில்(மத் 22:13), அவர்களை திரும்பவும் கொண்டுவரும் நம்பிக்கை நம்மிடத்திலில்லை. வெளிச்சத்தில் நிலைத்திருப்பது அவர்களுக்கு முறையானதாக இருந்திருக்குமாகில், அவர்கள் அதற்கு தகுதியுடையவர்களாக இருந்திருப்பார்களாகில், அவர்களை அந்த வெளிச்சத்திலிருந்து வெளியேறுவதற்கு கர்த்தர் அனுமதித்திருக்கமாட்டார்.

**கனியற்ற கிரியைகளோடு ஐக்கியமாகாதிருங்கள்**

கிறிஸ்துவின் பள்ளியில் பயிலும் எல்லா மாணவர்களும் ஒரே மாதிரியான படியை(step) எட்டாதிருப்பதால் அல்லது ஒரே அளவிலான அறிவை அடையாதிருப்பதால், இந்த சிறிய அளவிலான வித்தியாசங்களை பொறுமையோடு கையாளவும் விவரிக்கவும் அல்லது, விட்டுவிடவும் வேண்டும். இங்கு நாம் புரிந்துகொள்வதில் சிறிய அளவான வித்தியாசங்களைக் குறித்து நாம் குறிப்பிடவில்லை. ஆனால் இங்கு நாம் அடிப்படையிலான வித்தியாசங்களைக் குறிப்பிடுகிறோம். இந்த வேறுபாடுகள் அனைத்தும் ஈடுபலியின் போதனையைக்கொண்டு பரீட்சித்துப்பார்த்தால் வெகுவிரைவில் நிரூபிக்கப்பட்டுவிடும். இந்த வேறுபாடுகளை அவர்கள் ஒப்புக்கொள்ளாவிடில், ''அவர்களுக்குள் எவ்வளவும் வெளிச்சம் இல்லை'' என்பதே உண்மை. அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் நமக்கு சகோதரர்களாகவோ, சகோதரிகளாகவோ நீடிக்கமுடியாது. மாறாக, உலகத்தாராக, புறஜாதி மனுஷரைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் எண்ணப்பட்டு, அவர்கள் நடத்தப்படவேண்டும். நமது நண்பர்களுக்குள் இவர்களையும் ஒருவராக எண்ணமுடியாது. ஏனெனில் இப்படிப்பட்டவர்களோடு நட்புறவுகொள்வது தேவனுக்கு விரோதமான பகையாகிறது. நம்முடைய வீடுகளில் இவர்களை ஏற்றுக்கொள்ளாமலிருந்தும், அவர்களை உற்சாகப்படுத்தவும் கூடாது. அவனை உற்சாகப்படுத்துகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்குள்ளவனாகிறான்(2யோவா8–11). சிலர் இப்பாடத்தைக்குறித்த தேவவசனத்தின் எளிமையான கட்டளையை அலட்சியப்படுத்துவதால், அவர்களது கீழ்ப்படியாமையினால் ஆவிக்குரியவகையில் துன்பத்தை அனுபவிக்கிறார்கள்.

ஆகவே கர்த்தரோடு அதிகதிகமாக ஒருமனப்பட்டவர்களாக இருப்போம். அவரது நண்பர்கள் நமக்கும் நண்பர்களாகவும், அவரது எதிராளிகள் நமக்கும் எதிராளிகளாகவும் இருக்கவேண்டும். கர்த்தருடைய எதிரிகளோடு நாம் இணைந்திருந்தோமானால் குறைந்தபட்சமாக வெதுவெதுப்பான நிலைமைக்குள்ளாவது பிரவேசிப்போம். இப்படி வெதுவெதுப்பாயுள்ளோரை தம் வாயினின்று வாந்தி பண்ணிவிடுவதாக தேவன் பிரகடனப்படுத்தியிருக்கிறார். விலையேறப்பெற்ற இரத்தத்தின்மேல் நம்பிக்கைவைத்து, அவரை தலையாகவும், தங்களது கர்த்தராகவும் ஏற்றுக்கொண்டு மீட்பரிடத்தில் தங்களை அர்ப்பணித்த அனைவரிடத்திலும் நாம் இருதயத்தின் அனலானநிலை உற்பத்திசெய்யப்பட வேண்டும். அங்கே வெதுவெதுப்பான நிலை காணப்படக்கூடாது. மாம்சத்தின்படி அவர்களது தனித்தன்மை எப்படியிருந்தபோதிலும், கிறிஸ்து குறிப்பாய் கூறியிருக்கிற சகோதரத்துவம், எல்லா உதவிகளை செய்வதும், பரிவு காண்பிப்பதுமாகிய ஆவியில் சகோதரர்களாக இருப்பதைவிட, வேறு எந்த நிலையிலும் நம்மால் அவர்களிடத்தில் பழகமுடியாது. தேவகிருபையை பரியாசம் செய்பவர்களோடும், வெளிச்சம் மற்றும் சத்தியத்துக்கெதிராக நிற்கும் பாவிகளுடனும், துன்மார்க்கருடனும் நாம் ஐக்கியம் கொள்ளமுடியாது, ஐக்கியங்கொள்ளக்கூடாது. அவர்கள் ஆதரவற்றவர்களாய் இருந்தால் அவர்களுக்கு போஷாக்கு அளிக்கும் அதேவேளையில், கர்த்தரின் நிமித்தமும், அவரது சத்தியத்தின் நிமித்தமும் அவர்கள் எதிர்ப்பாளர்களாகவும் விரோதிகளாகவும் நமக்கு இருப்பார்கள், நாமும் அவர்களுக்கு அவ்விதமாகவே இருப்போம். கர்த்தர் தீங்கு ஏற்படுத்தாத முற்போக்குத் தன்மையை நேசிக்கிறவராய் இருக்கிறார், அவ்விதமே அவரது சரீரமாகப்போகும் உண்மை அங்கங்களும் உண்மையாக இருக்கவேண்டுமென்று சங்கீதம் 139:19–24இல் தீர்க்கதரிசனமாக எழுதப்பட்டுள்ளது.

பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள் என்ற அழைப்பை தற்போது கேட்டு, இந்த சபிக்கப்பட்ட நகரை விட்டுவிட்ட கர்த்தருடைய பிள்ளைகளுக்கே லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள் என்ற நம் கர்த்தரின் தடை குறிப்பாகப் பொருந்துகிறது. ஆகவே, சோதோமின் அழிவுக்கு முன்னர் லோத்துவும் அவரது குடும்பத்தாரும் இருந்ததுபோல, யாரெல்லாம் தற்கால முறைமை அழிவுக்குள்ளாக்கப்படும் என்ற முன்னறிவிப்பை கேட்டு, பாதுகாப்பான இடத்திற்கு தூதர்கள்(செய்தியாளர்கள்)மூலம் வழிநடத்தப்படுகிறார்களோ, இவர்கள் திரும்பிப்பார்க்காதிருப்பார்களாக, அல்லது இன்னொருவழியில் கூறினால், கர்த்தரால் கவிழ்க்கப்பட்டு, அழிக்கப்படவிருக்கும் சபிக்கப்பட்டவைகள்பேரில் பரிவிரக்கத்தைக் காண்பிக்காதிருப்பார்களாக.

**அடுத்த யுகத்தில் நிலவும் இருதய நேர்மையும் , வெளிப்புறமான நேர்மையும்**

அடுத்த யுகத்தில் உலகம் சத்திய அறிவுக்கு கொண்டுவரப்பட்டிருக்கும்பொழுது, தேவனிடத்திலான அவர்களது நிஜமான மனப்பாங்கு எப்படி இருக்க வேண்டும் என்று காண்பிக்கப்படும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும். கர்த்தருடைய பரிவிரக்கமும் நன்மையும் இன்னதென்று காண்பதற்கு வந்தபிறகும், பாவவழியை தொடர்ந்து தெரிந்தெடுப்பர். அப்படிப்பட்டவர்கள்மேல் தேவனுடைய தீர்ப்பு மீண்டுமாக மரணத்தீர்ப்பாக – இரண்டாம் மரணமாகிய தீர்ப்பாக இருக்கும். கர்த்தரது மாபெரும் நன்மைத்தன்மையை கற்பதற்கும், நித்தியஜீவன் அடையும் அவர்களுடைய வாய்ப்புக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் அவர்களுக்குக் கொடுக்கப்படும். அவர்களுடைய சொந்த இரட்சிப்பின்மேல், அவர்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தாமலும், கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய நன்மைத்தன்மையை அறிந்து பாராட்டாமலும் இருந்திருப்பாராகில், பாவத்தையும் வீழ்ச்சியையும் விரும்புகிறார் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. இதனால் அவர்கள் பாவத்தின் இறுதி சம்பளமாகிய நித்தியஅழிவை முற்றிலுமாக இரண்டாம் மரணத்தில் அடைவர்.

அந்த சமயத்தில் ஒரு மேலான வாழ்க்கையை ஒரு நீதியான வாழ்க்கையை அடைய விரும்பி, அதற்கான உதவியை தேடுவோராக காணப்படுகிற சிலர் இருப்பார்கள். அவர்கள் ராஜ்யத்தின் சட்டங்களுக்கு வெளிப்புறமான வழியில் ஒருவேளை கீழ்ப்படிதலை கொடுப்பார்கள். இவர்கள் நாம்

புரிந்துகொண்டுள்ளவாறு,தொடர்ந்து ஜீவிக்க அனுமதிக்கப்பட்டு, படிப்படியாக, சரீர ரீதியாகவும், மனரீதியாகவும் பூரண நிலைமையை அடையும்படி கொண்டுவரப்படுவார்கள். இவர்கள் ஆயிரமாண்டுகள் முழுமையாக கிறிஸ்துவின் இராஜ்யத்தில் ஜீவிப்பார்கள். அக்காலத்தின் முடிவில் இவர்கள், அப்போது ஜீவிக்கின்ற மற்ற எல்லாரோடும் இறுதியும் கடுமையுமான பரீட்சையில் கிறிஸ்துவின்மூலம் திருப்பப்பட்டு, பிதாவிடம் வந்துசேருவார்கள். அதன்பிறகும் அவர்களுடைய சித்தங்கள் முழுமையாக தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்று நிரூபணமாகுமானால், அவர்களுடைய இரட்சிப்புக்காக கொடுக்கப்பட்ட விலையேறப்பெற்ற ஏற்பாட்டை, நீதியின் மதிப்பீட்டை அவர்கள் சரியாக மதிப்பிட தவறினதையே காண்பிக்கிறது. இவர்கள் தெய்வீக அங்கீகாரம் பெறவும், நித்தியஜீவன் பெறவும் தகுதியற்றவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டு, அழிக்கப்படுவார்கள். தேவஅன்பும், நீதிநியாயமும், ஞானமும் அவர்களுக்கு அப்பொழுது விளக்கமாக கொடுக்கப்பட்டிருந்தும், அவர்களது இருதயம் முழுமையான அர்ப்பணிப்புக்குத் திரும்பாமலும், அவரது மகிமையும் நீதியுமான சித்தத்துக்கு திரும்பாமலும் இருப்பதால், மீண்டுமாக வாய்ப்பு அளிப்பது முற்றிலும் வீணானதாய் இருக்கும். இவர்கள் பூமிக்கு பாரமாக இருப்பவர்கள்போல் கருதப்பட்டு, பூமியிலிருந்து அறுப்புண்டுபோவார்கள். நீதிமான்கள் மட்டுமே நித்திய யுகங்கள் முழுவதும் பரிசுத்தவன்களாக ஜீவிப்பார்கள்.

தேவன் தம் சித்தத்தை இவ்வுலகில் செய்வதற்கு முழு அர்ப்பணிப்பை எதிர்பார்க்கிறார். இது அவர்களுடைய முழுமையையும் உள்ளடக்கியதாகும்– அவர்களது சித்தங்கள், அவர்களது சரீரங்கள், அவர்களது முழு இருதயத்தின் பற்றுறுதியை கொடுக்க வேண்டியவர்களாயுள்ளனர். தற்போது சபையார் தங்களை மரணபரியந்தம் பலியாக ஒப்புக்கொடுப்பதுபோல, உலகின் ஜனங்களிடத்தில் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆனால் தேவனுக்கென்று முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டவர்களாக வேண்டும், தாங்கள் தேவனுக்குரியவர்கள் என்பதையும், மேலும் மரணத்திலிருந்து மீட்கப்பட்டு, அவர்கள் விலைகொடுத்து வாங்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் உணர்ந்து, ஏற்றுக்கொண்டிருக்கிற எவரும் கீழ்ப்படிந்தால் நித்தியத்துக்கும் ஜீவிக்கலாம். இந்த எதிர்பார்க்குதல் எவ்வளவு பகுத்தறிவுக்கேற்றதாய் இருக்கிறது என்று நாம் எல்லோரும் காண்கிறோம். தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்ட ஆதாம்; ‘‘நான் தேவனுக்குரியவன்; அவர் எனக்கு என்னுடைய ஜீவனைக் கொடுத்ததோடு, நான் அடைந்திருக்கிற அனைத்தையும் அவர் எனக்குக் கொடுத்தார்’’ என்று கூறியிருக்கவேண்டும். ஆனால் தன்னை உருவாக்கினவரது ஞானத்தின்மேல் நம்பிக்கை வைப்பதற்கு அவர் முழுமையாக கற்றிருக்கவில்லை. அவர் ஒரு பூரணமான அறிவையும், பூரணமான உயிர்ப்பொருளையும் பெற்றிருந்தார். ஆனாலும் கர்த்தருடைய குணாதிசயத்திலும் நீதியிலும் தனக்குத்தேவையான முழு அறிவில் குறைவுபட்டிருந்தார். ஆகவே அவரது முழுமைபெறாத அறிவு தேவபார்வையில் ஓரளவு மன்னிக்கத்தக்கதாய் இருந்தது. தன் தெளிந்த அறிவினாலும் அனுபவத்தினாலும் கர்த்தரிடத்தில் எதிர்ப்பைக் காட்டும் நிலையை அவர் எடுத்திருந்தாரானால் மீட்பை அடைய தகுதியற்றவராக எண்ணப்பட நேர்ந்திருக்கும். முழு உலகமும் அப்பொழுது அவர்கள் பரிபூரணத்தை அடையும்பொழுது, தாங்கள் தேவனுக்கு எல்லாவற்றிலும் கடன்பட்டிருக்கிறோம் என்று உணர்ந்துகொண்டு, தங்கள் இருதயத்தில் உண்மையுள்ளோராய் இருப்பார்களானால், அவரது நாமத்துக்குப் புகழ்ச்சியாக, அவரது ஊழியத்துக்கென அனைத்தையும் அவருக்கு ஒப்புவிக்க மனதாய் இருப்பார்கள்.

மனுஷன் பாவம்செய்தபடியால், தேவனது அளவிடற்கரிய அன்பினாலும் இரக்கத்தினாலும் மீட்கப்படாமல், நித்திய ஜீவனை அடையும்படிக்கு ஒரு தனிப்பட்ட முழுமையான மற்றொரு வாய்ப்பு அளிக்கப்படும். இது, அவர்கள் ஏன் தேவனுக்கு முழுமையாக தங்களை அர்ப்பணிக்கவேண்டும் என்றும், அவரது ஊழியத்துக்கு என்றென்றைக்குமாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்ற இரண்டு காரணங்களை அளிக்கிறது. இரத்தத்தால் விலைக்கு வாங்கப்பட்டவர்கள், அப்படிப்பட்ட பலியினாலே மீட்கப்பட்டவர்கள், தங்களை நேசித்த தேவனுக்கென்று நித்தியகாலமும் கட்டப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து, இப்படிப்பட்ட சிருஷ்டிகருக்கும், மீட்பருக்கும் எப்பொழுதும் துதியையும் தொழுகையையும் தேவபக்தியையும் செலுத்துவதை விலையேறப்பெற்ற சிலாக்கியமாக எண்ணவேண்டும்.

### “நான் என்னாலல்ல, இயேசுவால் இரட்சிக்கப்பட்டேன்”

‘‘நீங்கள் உங்களுடையவர்களல்ல; நீங்கள் விலைகொடுத்து வாங்கப்பட்டீர்கள்’’என்ற வல்லமையான வார்த்தையின் முக்கியத்துவத்தை கிறிஸ்துவின் சபை மட்டுமே புரிந்துகொள்ளமுடியும். மற்றவர்களால் இது கூடாது. நம்மை நேசித்து விலைக்கு வாங்கின அவருக்கு, நாம் மெய்யாகவே அடிமைகளாக மகிழ்ச்சியோடு இருப்போம் என்பதே நாம் ஏற்படுத்தின தீர்மானமாயிருக்கிறது. இனி நமக்கு யாதொரு உரிமையும் கிடையாது. நம்மிடமுள்ள அனைத்தையும் நம் கர்த்தரோடு பலிபீடத்தின்மேல் இருக்கிறது. இத்தீர்மானத்தை தேவன் ஏற்று ஒப்புதல் அளித்திருக்கிறார். நாம் தற்போது பொறுப்புணர்வின்கீழ் கட்டப்பட்டவர்களாயிருக்கிறோம். நமது ஜீவியம் நாம் தேவனோடுசெய்த ஒப்பந்தத்துடன் இசைவாக இருக்கும்படி கையளிக்கப்படாவிடில், நம்மால் நித்தியஜீவனை எந்த வளர்ச்சிநிலையையும்(plane) ஒருபோதும் அடையமுடியாது.

இந்த கடமைப்பொறுப்பை ஏற்றுக் கொண்டவர்களுள் இரண்டு வகுப்பார் இருக்கின்றனர். இவர்களுள் ஒரு வகுப்பார் தாங்கள் உடன்படிக்கையின்படி செய்யவேண்டியவற்றை முழுவதும் செய்துமுடிக்கின்றனர். இவர்கள் ‘‘பூரணபலனைப்’’ பெறுவார்கள். அடுத்து, மற்றொரு வகுப்பார், அதே உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டிருந்தாலும், தங்களுடைய ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் தவறிவிடுகிறார்கள். ஆகவே ஒப்பந்த சாசனத்தில் கையொப்பமிட்டு ஒப்புதல் தெரிவித்தவரே பொறுப்பாளியாகிறபடியால், அவர்கள் செய்துகொண்ட

உடன்படிக்கையை பலியினால் நிறைவேற்றி முடிப்பதை கர்த்தராகிய இயேசு காண்பார். அவர்களுடைய ஜீவியத்தை அடிபணியச் செய்து, பலியை நிறைவேற்றி முடிக்க வேண்டும். அவர்களுடைய மாம்சத்தை அழிக்கும்படி நிர்ப்பந்திக்கப்படும்போது, அதனை எதிர்ப்பார்களாகில், அவர்கள் மனதார பாவம்செய்பவர்களாகி, இரண்டாம் மரணத்தில் மரிப்பார்கள். அதிலிருந்து மீண்டுவர வழி எதுவுமில்லை.

உடன்படிக்கை செய்த எல்லோரும் அவரது ஊழியத்தில் உண்மையாய் தங்களை கையளித்து தங்கள் சரீரத்தின்மூலம் தேவனுக்கு மகிமை சேர்ப்பதாக வாக்களித்திருக்கின்றனர். சிறிது குறைவுபட்டாலும் அது அவரால் அங்கீகாரம் பெறாது. இதனால் குறைவாக கொடுத்தால்போதும் என்று நாம் எண்ணக்கூடாது. ஆகவே கர்த்தருக்குரிய இந்த பூமிக்குரிய சரீரங்களை பலியின் கிரியைகளை தொடர்ந்து செய்வோமாக. தற்கொலைக்குச் சமமான அழிவுக்குரிய வழியில் அவற்றை நாம் உபயோகிக்கக்கூடாது. மாம்சத்துக்கு வலி ஏற்படுவதை பொருட்படுத்தாமல், புத்தியறிவோடு நடந்து, நல்ல மனநிலையில், அனுதினமும், ஒவ்வொரு மணிநேரமும், நம் சரீரங்களால் தேவனை மகிமைப்படுத்தி, அந்த இறுதிவேளை, ஒருவேளை சில வாரங்களாக அல்லது சில மாதங்களாகவோ அல்லது சில வருடங்களாகவோ இருந்தாலும், முடிவுபரியந்தம் நமது பலியை தொடர்ந்து நிறைவேற்றுவோமாக.

---

R 5950

# அறுவடை இன்னும் முடிவடையவில்லை

## THE HARVEST IS NOT ENDED

அறுவடை தற்பொழுதே முடிவடையும் என்று நம்மில் சிலர் உறுதியாய் நம்பியிருந்தார்கள். ஆனால் உண்மை நிகழ்வுகளுக்கு எதிராக, நமது எதிர்பார்ப்புகளைவைத்து மதிப்பிட அனுமதிக்கக்கூடாது. அந்த உண்மை நிகழ்வு என்னவெனில், அறுவடைப்பணி நேர்த்தியாக நடைபெற்றுவருகிறது என்பதேயாகும், அப்பணி எவ்வகையிலும் நிறைவடையவில்லை. நமது தற்போதைய நிதானிப்பின்படி, அறுவடைப்பணி குறிப்பிடத்தக்கஅளவு இன்னும் செய்யப்படவேண்டும் என்று தோன்றுகிறது. இது நம்மை சோர்வடையச் செய்வதற்கு பதிலாக உற்சாகத்தை ஊட்டுகிறது. நாம் ஆசீர் பெற்றிருப்பதுபோலவே, தேவகிருபை மற்றவர்களுக்கும் சென்றடைந்து ஆசீரளித்திருப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். பலியின் உடன்படிக்கையின்கீழ் மற்றவர்கள்அன்றாடம் கர்த்தரிடத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட உறவுக்குள் வருகிறார்கள் என்றும், அவர்கள் பரிசுத்தஆவியால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதற்கு சாட்சியமளிக்கின்றனர் என்று அறிவதில் மகிழ்ச்சியடைகிறோம். அவர்களோடுகூட சந்தோஷமடைந்து, அவர்களும் நம்மைப்போலவே தங்களது அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும் மகிமையான வாய்ப்பில், முற்றிலும் ஜெயங்கொள்வதற்கு முதன்மையான அத்தியாவசியமாக நாம் அன்றாடம் கற்று குணதிசயங்களை வளர்த்துக்கொள்வதில் அவர்களது வைராக்கியத்தை கவனித்து மகிழ்வோமாக. நம் கர்த்தராகிய இயேசுவும் தேவனுடைய நேசகுமாரனுமானவரின் சாயலுக்கொப்பாக எல்லோரும் இருக்கவேண்டும். திரைக்கப்பால் நமது வேலைக்குள் நுழையுமுன்னர் நமது ஊழியங்களை திரையின் இப்புறத்திலிருந்து தொடர்ந்து செய்வதில் மகிழ்ந்திருப்போமாக. ஏனெனில் நம்மைக்குறித்த கர்த்தரது சித்தம் இப்படியாகவே இருக்கிறது.

கிபி 1914 அக்டோபரில் அறுவடை முடிந்தது என்றும், அறுவடைக்குப்பின்னர் நிலத்தில் சிதறியிருக்கிற மணிகளை ஒன்றுசேர்க்கும் வேலை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது என்று நாம் ஆரம்பத்தில் யூகிக்கும்படி மனம் சாய்ந்தது. ஆனால் இதற்கு ஆதாரம் இல்லை என்பதுபோல் தோன்றுகிறது. சத்தியத்தை அறிகிற அறிவுக்கு கொண்டுவரப்படுகிறவர்களின் எண்ணிக்கையும், வேலை வளர்ச்சியடைந்துவருவதையும், கர்த்தருக்கென்று பிரிந்திருக்கிறவர்கள் சிதறியிருக்கிற மணிகளைக்காட்டிலும் மிக அதிகமாய் இருக்கிறது. இது வழக்கமான அறுவடையின் ஒரு பகுதியாக இருப்பதாகவே நிரூபணமாகிறது. அதோடுகூட, எலியா எலிசாவின் நிழலான இறுதிக் காட்சியின்மூலம் நம் மனதில் அதிகதிகமாக ஆழமாகப் பதிந்திருக்கிறது. யோர்தான் ஆற்றை எலியா அடித்த விஷயம் தண்ணீர் பிரிந்து வழியை உண்டாக்குவது அதிகதிகமாக நமக்கு மனதில் பதிந்துள்ளது. தண்ணீர் பிரிவது இன்னும் நடைபெற்றிராத ஒரு வல்லமை வாய்ந்த செயலை சித்தரித்துக் காண்பிக்கிறது. இது வரும்நாட்களில் மிகவிரைவில் நடைபெறுமென்று வெளிப்படையாகத் தோன்றுகிறது. எலியா தன் சால்வையை முறுக்குதலின் நிஜம் என்னவாக இருக்கும்? அவரது வல்லமையையும் அதிகாரத்தையும் அடையாளமாகக்கொண்டு இந்த தண்ணீரை அடிக்குமுன் சால்வையை முறுக்குதல்,



எத்தனைகாலம் பிரயோகிக்கப்படும் என்பது நமக்குத்தெரியாது. நாம் அதற்காக காத்திருந்து, விழிப்பாய் கவனித்து, நம் பங்கை நிறைவேற்றவேண்டும். அதன்பிறகு, தண்ணீரை அடிக்கும் செயல்பாடு நிறைவேற எத்தனைகாலம் தேவைப்படும் என்பதும் ஒரு நிச்சயமற்றதாகவே இருக்கிறது. மேலும் ஜனங்கள் சத்தியத்தால் எவ்வளவு சீக்கிரம் பிரிக்கப்படுவர் என்பதும் நிச்சயமற்றதாகவே இருக்கிறது.

ஆனால், கர்த்தருடைய ஆசீர்வாதம் மற்றும் வழிகாட்டுதலின்கீழ், மிகக்குறுகியகாலத்திற்குள்ளாகவே மாபெரும் பணியை செய்துமுடிக்கமுடியும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இதன்முடிவுகள் 3வருடத்திற்கு குறைவாகவே நிறைவேறும் என்று நாம் எதிர்நோக்குவதில்லை. இத்தனைகாலத்தில் நிறைவேறும் என நாம் நிர்ணயிப்பதில்லை. எப்படி எலியாவும் எலிசாவும் யோர்தானைக் கடந்தபிறகு எந்த தீர்மானமான இடத்துக்கும் அனுப்பப்படாமல் இருந்தார்களோ, அதுபோலவே நமக்கு முன்பாகவும் எந்த காலஅம்சமும் பொருந்திவரும்படி நம்மால் அறியமுடியாதிருக்கிறது. நமக்கு முன்பாக ஒரு மாபெரும் பணி உள்ளது என்ற நமது அனுமானத்தை மட்டுமே தருகின்றோம். இது எப்படி மூன்று வருடத்திற்குள்ளாக நிறைவேறமுடியும் என்று நம்மால் அறியமுடியாது.

யோர்தான் நதியை அடித்தபிறகு சத்திய செய்தி வாயிலாகவும், எலியாவின் சால்வையாகிய வல்லமை வாயிலாகவும் ஜனங்களை பிரித்தபிற்பாடு சபை இரண்டுவகுப்பாகப் பிரிக்கப்படும் மாபெரும் பணி நிறைவேறலாம். இதற்குப் பிற்பாடு, சிறுமந்தை வகுப்பாராகிய எலியா வகுப்பார் திரள்கூட்டத்து வகுப்பாரிடமிருந்து பிரிந்து, தனித்தன்மை உள்ளோராக தெளிவாக வெளிப்படுவர். அக்கினி இரதமாகிய, கடினமானதும் பலமாக பரீட்சிக்கின்ற உபத்திரவங்களே இந்தப் பிரிவு ஏற்பட காரணமாக இருந்து,

உள்ளே நுழையவும், காலம் தாழ்த்தாது அங்கீகரிக்கப்படவும் காரணமாகிறது. எலிசா வகுப்பாரோ உபத்திரவங்களிலிருந்து தங்களை விலக்கிக்கொண்டாலும், பாவத்துக்கு தங்களை உட்படுத்தாமலும் அல்லது கர்த்தரை மறுதலியாமலும் இருக்கிறார்கள். சிறிது நாளுக்குப்பிறகு வரவிருக்கின்ற சுழல்காற்று(ஒருவேளை அராஜகமாயிருக்கலாம்) எலியா வகுப்பாருக்கு மாற்றத்தைக்கொண்டுவரும்.

**புறஜாதியாரின் காலங்கள் ஆதாரத்தோடு முடிவடைந்தது**

புறஜாதியாரின் காலங்கள் என்று நம்மால் அறியப்பட்டிருக்கிறதன் தீர்க்கதரிசன காலப்பகுதி, காலக்கணக்கின்படி அக்டோபர் 1914இல் முடிவடைந்தது என்பது நமக்கு இப்பொழுது தெளிவாக காணப்படுகின்றது. தேசத்தின்மேல் மாபெரும் கோபத்தின் நாள் துவங்கி, நமது எதிர்பார்ப்புக்களின்படியான நிறைவேறுதல்களின் அடையாளங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதே உண்மை. புறஜாதி தேசங்களுக்கு குறிப்பிட்ட காலப்பகுதி அளவுக்கு அவர்களது கட்டுப்பாட்டுக்கும், அவர்களது உடைமையாக கருதும்படிக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதி தற்போது காலாவதியாகிவிட்டது, அவர்களிடமிருந்து அதிகாரத்தைப் பறிக்கும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. கலகப் புயல், யுத்தப்புயல் முழு உலகத்திற்கும் பெரும் அழிவை கட்டவிழ்த்துவிட்டிருக்கின்றன. ஐரோப்பா தேசங்களின் பொருளாதார பலத்தையும், அதன் மேன்மக்களையும் பலவீனப்படுத்திவருகின்றன.

இந்தப்போர் எத்தனை காலம் நீடிக்கும் என யாரால் கூறமுடியும் ? சண்டையிடும் குணம் கொண்ட தேசங்கள் அனைத்தும் பெருமையிலும் சுய நம்பிக்கையிலும் உள்ளன. வேதாகமம் குறிப்பிடும் அடக்கமுள்ள, பணிவான நிலைமை இன்னும் நிறைவேறித் தீரவில்லை. யுத்தம் இன்னும் சிறிதுகாலத்துக்கு தொடருவது சாத்தியமே, தேசங்கள் பலவீனமடைந்து, போதுமானஅளவு தங்களை தாழ்த்தி, சமாதானத்தை விரும்பும்வரைக்கும் யுத்தம் தொடரும். பின்பு மற்ற உபத்திரவங்கள் வந்துசேரும். புரட்சிகள் பயமுறுத்தும். அரசாங்கங்கள் பெயர்சபை அமைப்புக்களோடு தங்களை இன்னும் அதிக உறுதியாக ஐக்கியப்படுத்திக்கொண்டு, இரண்டும் பாதுகாப்பையும் பலத்தையும் தேடும். அதனையடுத்து, ஆவிக்குரிய பாபிலோனின் திடீர்விழுகையை நாம் எதிர்பார்க்கலாம். இது வெளிப்படுத்தலில் கூறப்பட்ட பூமிஅதிர்ச்சியாகிய பெரும் புரட்சியைநோக்கி நடத்திச்செல்லும். ''பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சி உண்டானதில்லை''(வெளிப்16:18). இதன்விளைவு, வேதாகமம் கூறுவதை நாம் புரிந்துகொண்டதன்படி, பயங்கரமான அராஜகத்துக்கு தொடர்ச்சியாக நடத்திச்சென்று, மனிதனது கட்டுக்கடங்கா ஆசையாகிய அக்கினிக்குமுன்பாக, தற்கால அமைப்புக்கள் அனைத்தும் அடிபணியும். அவர்களது தப்பெண்ணங்களும் அழிவுறும். அதன்பிறகு, சாதகமான தருணத்தில், புறஜாதிகளின் செல்வாக்குகளும் ஆதிக்கங்களும் அகன்றுபோகும். பிற்பாடு முழுஉலகமும் ஆசீர்வதிக்கப்படும் மேசியாவின் ராஜ்யம் வெளிப்பட்டிருப்பது அதன் கிரியைகளால் அறியப்பட்டு, ''எல்லா ஜனங்களது விருப்பமும்'' என்னவாயிருந்ததோ அது அங்கே நிரூபணமாகியிருக்கும் – ஆகாய்2:7.

ஆகவே அக்டோபர் 1914இல் புறஜாதியாரின் காலங்கள் முடிவடைந்ததற்கு எதிராக, எந்த ஐயப்பாட்டின் காரணமும் எழவில்லை. இதன் தொடர்ச்சியாக இன்னும் சில காலங்களில் அவர்களது திடீர் விழுகை நிகழ்ந்து, மேசியாவின் கரங்களினால் தேவனுடைய இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவது சாட்சியமாக விளங்கும். ஆனால் அந்த நேரத்தின்போது எலியா வகுப்பார் திரைக்கப்பால் சென்றிருப்பர். ''அவர்(இயேசு) தம் மகிமையில் வெளிப்பட்டிருக்கும்போது, நாமும்(சபை) அவரோடுகூட காணப்படுவோம்''.

**அறுவடை பற்றின நமது தப்பெண்ணம்**

அறுவடைக்காலத்தைக் குறித்த நமது எதிர்பார்புகளின் அடிப்படையானது, யூதயுகத்தின் முடிவுக்கும், இந்த சுவிசேஷயுகத்தின் முடிவுக்கும் இடையிலான இணையான சம்பவமாக இருக்கிறது என்பதை நமது வாசகர்கள் 1335 நாட்கள் தீர்க்கதரிசனத்தில் தெளிவாக அடையாளங் காண்பிக்கப்பட்டுள்ளதை நாம் அறிகிறோம். மேலும் இப்பிரகடனம் தேவனுடைய ஜனங்களிடத்தில் நிறைவேறிவருகிறதை ''ஆயிரத்து முந்நூற்று முப்பந்தைத்து நாள் மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்''(தானியேல் 12:12) என்று எழுதப்பட்டிருக்கிறது. அந்நேரத்தில் , அந்த தீர்க்கதரிசனத்துக்கு முழுஇசைவாக நம் தேவனையும், அவரது மகிமைநிறைந்த நோக்கங்கள் பற்றியும் புரிந்து ஏற்றுக்கொள்ளும் மாபெரும் ஆசீர்வாதம், நம் புரிந்துகொள்ளும் மனக்கண்களில் மாபெரும் வெளிச்சம் நிச்சயமாகவே கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் வந்தது. அன்றிலிருந்து கர்த்தருடைய ஜனங்களின் நாவுகளில் புதியபாட்டு பாடப்பட்டுவருகிறது. யுகங்களுக்கடுத்த தெய்வீகத்திட்டம் மூலமாக அவர்கள் தேவனுடைய நன்மைகளை கற்றுவருகிறார்கள். யூதயுகத்தின் அறுவடைக்காலத்தில் இயேசு தம் ஊழியத்தைத் துவங்கினதற்கு இணையான சம்பவமாகவே சுவிசேஷயுகத்தின் அறுவடைக்காலம் கிபி 1874 அக்டோபரில் துவங்குவதால், இத்தேதியைக் குறித்த கேள்வி எழுவதற்கு எக்காரணமும் இல்லை என்று நாம் காண்கிறோம்.

நாம் சுட்டிக்காண்பித்த இவ்வழியிலேயே நமது தவறு நிகழ்ந்திருக்கிறது. யூதயுகம் மற்றும் சுவிசேஷ யுகத்துக்கு இடையிலான இணை சம்பவங்கள், புதிய யுகத்துடன் தொடர்புடைய எதையும் சேர்ந்ததல்ல என்பதை நம் வாசகர்களுக்கு நினைப்பூட்டுகிறோம். பெயரளவிலிருந்த யூதருடைய வீட்டிற்கு இணை சம்பவமானது பாதிப்பை ஏற்படுத்தினதுபோலவே, இங்கு பெயர் கிறிஸ்தவ வீட்டாருக்கு பாதிப்பு ஏற்படுத்தியது. அவர்களுக்கென ஏற்றவேளையில் தரப்பட்ட இவை இரண்டும் சத்தியத்தின் நிமித்தமாக, சரியான இருதய நிலைமையை அடையத் தவறியதன் காரணமாக அழிவுக்கென்று தள்ளப்பட்டனர். மதமும்–அரசியலும் கலந்ததாக

யூதருடைய அமைப்பு இருக்கிறது. இது ஐரோப்பாவின் மாபெரும் மதம்– அரசியல் அமைப்புக்கான இணையாக இருக்கிறது. இந்த அமைப்புக்களின் அழிவு கிபி 1914இல் துவங்கியது.

இயேசுவின் 31/2 வருடஊழியம் அப்போஸ்தலர்களை ஆயத்தப்படுத்தும் நாட்களாகவே இருந்து, பெந்தெகொஸ்தே நாளில் துவங்கின, இனிவரவிருக்கின்ற ஊழியத்தில் அவர்கள் கருவிகளாயிருந்து, அறுவடைசெய்வதற்கும், சத்தியமாகிய கருக்கரிவாளை கூர்மைப்படுத்தும் ஆயத்தப்பணியாக இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்வோம். பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக கோதுமை மணியை ஒன்று சேர்த்து, கொண்டுபோய் நிரப்ப களஞ்சியம் இல்லை.

**யூதர்க்கும் கிறிஸ்தவர்க்குமான இணையான காலங்கள்**

பெயரளவிலான யூத சபை பெயர் கிறிஸ்துவ சபை

கிபி 29–33 கிபி 1874 – 1878

அவர் வந்திருக்கும் காலத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை

கிபி 33–36 கிபி 1878 – 1881

இஸ்ரயேலர்கள் மகா பரிசுத்தமான அபிஷேகம் பண்ணப்பட்டவரை நிராகரித்தபின்பு அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட 70 வாரங்கள் தேவதயவு முடிவடைய வேண்டி 31/2 வருடங்கள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

கிபி 36–73 கிபி 1881 – 1918

அருவருப்புக்கள் பெருகினதினால், அது முற்றிலும் நிர்மூலமாகும்வரை அவர் அதை ஒழியப்பண்ணுவார் – தானியேல் 9:24–27.

பெந்தெகொஸ்தே நாளில் சபைக்கும், தற்போது இருக்கிற உண்மை சபைக்குமிடையே காணப்படத்தக்கதாக எந்த இணையான விஷயங்களும் இல்லை. ஆனால் சபை வகுப்பாரின் அறுவடை துவங்குமுன், இயேசுவின் உயிர்த்தெழுதல் நடந்தது, இதனை, உறக்கத்திலிருந்த சபை அங்கத்தினர் கிபி 1878இல் உயிர்த்தெழுந்ததற்கு இணையாக நாம் கருதலாம்.

சுவிசேஷயுக சபை துவக்கம் மற்றும் அது அடைந்த அனுபவங்களோடு, பரம சபையின் அறுவடையின் துவக்கத்திற்கும் மற்றும் அதன் அனுபவங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கக்கூடாது. இவற்றில் எந்த ஒப்புமையும் இல்லை. மாறாக, சுவிசேஷயுக ஆரம்பத்தில் அழிவுற்ற பெயர் யூத அமைப்புக்கும், தற்போது அழிவைநோக்கிச் சென்றுகொண்டிருக்கிற பெயர் சுவிசேஷ சபைக்குமிடையேயான ஒப்புமை உண்டு.

புறஜாதியாரின் காலங்கள் முடிவடைவதற்கு முன்பாக சபை கூட்டி சேர்க்கப்படுதலாகிய அறுவடைப்பணி நிறைவேறியிருக்கும் என்று நாம் யூகித்திருந்தோம், ஆனால் வேதாகமத்தில் அதுபற்றி கூறப்படவில்லை. நாம் கூறின கருத்து ஒரு அனுமானமாகவே கூறப்பட்டது, தற்போதோ அந்த அனுமானம் நியாயமற்றதாக நாம் காண்கிறோம். இந்த அறுவடைப்பணி, புதிய யுகத்துக்குரியது, இதை பழையதோடு ஒப்பிட்டு அடையாளங்காணக்கூடாது. எப்படியிருந்தபோதிலும் யூதயுகத்தின் அறுவடை உத்தம கபடற்ற இஸ்ரயேலரை சுவிசேஷசபைக்குள் சேர்த்தது, இந்த அறுவடை கிபி 70உடன் மூடுப்படவில்லை. மாறாக, அதன்பிறகு, உலகின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்தது. நல்ல யூதர்களில் அநேகர் அவர்களது கொடூரமான அனுபவங்கள் மூலம் ஆதாயமடைந்து, அவர்களது தேசிய ஆட்சி அமைப்பு முறை அழிவுற்றபிறகும், சுவிசேஷக்களஞ்சியத்தில் சேர்க்கப்பட நன்கு ஆயத்தமடைந்திருந்தனர். அதுபோலவே, நல்லவர்களில் அநேகர், பரலோகக் களஞ்சியத்தில் சேர்க்கப்பட உள்ளனர் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கு நேர வரைமுறை எதுவும் நாம் அறிந்திருக்கவில்லை.

யூதருடைய உபத்திரவக்காலம் கிபி 73ஏப்ரல் மாதம் முடிவுக்கு வந்ததாக சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது கிபி1918ஏப்ரல் மாதத்திற்கு தொடர்புடையதாய் உள்ளது.

அறுவடைப்பணி தொடர்ச்சியாக நடைபெற்றுவருவதற்காக நாம் துக்கப்படுகிறோமா ? நிச்சயமாக இல்லை. நம்மை இருளிலிருந்து தம் ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை ஒவ்வொரு நாளும் மகிழ்ச்சியோடு அறிவிக்கும் வாய்ப்பு கிடைத்துவருவதற்காக மிகவும் சந்தோஷமடைகிறோம். மேலும் மற்றவர்கள் அனுகூலமடைவதற்காகவும், அவர்கள் சந்தோஷமடைவதை நாம் காண்பதில் மிகவும் வாஞ்சையாயிருக்கிறோம். இப்பொழுது வந்தடைந்திருக்கிற தற்போதைய கருத்தின்மூலம், நாம் அடைந்த அனுபவங்களைக் குறித்து வருத்தப்படுகிறோமா ? இணை சம்பவங்களைக்குறித்து அதிக சிரத்தை காண்பிக்கும்படி கர்த்தர் நம்மை வலியுறுத்தவில்லை என்ற திருப்தியின்மையை நாம் கொண்டிருக்கிறோமா ? மெய்யாகவே அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. நம் கர்த்தரது வழிநடத்துதல்கள் எப்பொழுதுமே நன்மைக்கேதுவாகவே இருந்துவருகிறது. ஒருவேளை, அறுவடைவேலை கூடியவிரைவில் முடிவுறும் என்ற கருத்தால் நாம் உண்மையாகவே அனுகூலம் அடைந்திருக்கலாம். ஒருவேளை, இது கர்த்தருடைய ஊழியத்தில் இன்னும்ஆழமான பிரதிஷ்டைக்கும், பலமான வேலைகளுக்கும் நம்மையும் மற்றவர்களையும் நடத்திச்செல்லலாம். ஆகவே நாம் வருத்தப்படுவதற்கு அவசியமில்லை.

‘‘துவக்கத்தில் நம்மை நடத்தின அவர், தொடர்ந்து நம்மை நடத்துவார் அமைதலோடு அவரது சித்தத்துக்குள் நாம் மூழ்குவோம்’’

**களைகளை சுட்டெரித்தல்**

“கோதுமையும் களைகளும்” உவமையில், நம் போதகர் களைகளை ஒன்றுசேர்த்து சுட்டெரிக்கும்படி கட்டுக்களாகக் கட்டுங்கள் என்று வலியுறுத்திக்கூறினார். இந்த கோதுமை மணிகள் அனைத்தும் பரலோகக் களஞ்சியத்தில் சேர்க்கப்படும்வரை களைகளை சுட்டெரித்தல் நிகழாது என்று நாம் யூகம் செய்கிறோம். ஆனால் இக்கருத்து சரியானதல்ல என்று தோற்றத்தில் காணப்படலாம்.கோதுமை மணியை களஞ்சியத்தில் சேர்த்தல் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. ஆனால் களைகளை சுட்டெரித்தலானது யோர்தான் நதி இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கு மிக நெருக்கமான தொடர்புடையதாக நமக்குத் தோன்றுகிறது. களைகள் ஒரு வகுப்பாராயிருந்து, உலகிலிருந்து மேலெழும்பி, பிரதிபலன் எதிர்பாராமல் நற்கிரியை செய்ய விருப்பமாயுள்ள இவர்கள், நம்பிக்கையிலும் குறிக்கோள்களிலும் நிறைந்துள்ள நற்பண்பாளர்களாவர். ஆனால் தாங்களே சபை வகுப்பார் என எண்ணும்படி தவறாக வழிநடத்தப்பட்டவர்கள். களைகளின் கண்ணோக்கத்தின்படி பார்க்கும்போது, கோதுமையின் வளர்ச்சி இயற்கைக்கு மாறான வளர்ச்சியாக, எண்ணிக்கையில் சிலராகவும், உயர்வாக மதிக்கப்படாத நிலையிலும் இவர்கள் இருப்பதால், விநோதமான ஜனங்களாக தோற்றமளிக்கின்றனர். கிறிஸ்துவின் உண்மை சபை என்றால் என்ன ? என்ற விஷயத்திலும், போலியாக பாவனை செய்வது என்றால் என்ன என்றும், தண்ணீரை சால்வையால் அடித்தல் மூலம் சத்தியம் வெளியரங்கமாக்கப்படும். நேர்மையுள்ள சிந்தையுடைய களைவகுப்பார் வஞ்சிக்கப்படாதிருந்து, தாங்களே கிறிஸ்துவின் சபைவகுப்பார் என தப்பெண்ணம் கொண்டிருப்பதை உணர்ந்து, தங்களை திருத்திக்கொண்டு, இவ்வாறாக இவர்கள் சுட்டெரிக்கப்படுவர், அல்லது களைகள் நிலைமை முடிவுக்கு கொண்டுவரப்படும். ஆயினும் இவர்கள் தங்கள் நேர்மையான சிந்தையை உடைய உலக ஜனங்களாக நிலைத்திருந்து, நாம் இன்னும் ஜெபித்துவருகிற இராஜ்யத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள பொதுவான ஆசீர்வாதங்களில் பங்கடைவார்கள்.

பிரியமான சகோதரர்களே, நம் தற்கால மனப்பாங்கு எவ்வாறு இருக்கவேண்டுமெனில், தேவன் தம் அற்புதமான சத்தியத்தின் மேன்மையை நாம் சுவைக்கவும், நம்மை சத்தியத்தின் கொள்கைகளோடு சேர்த்து அடையாளம் காணும்படியான பாக்கியத்தை நமக்கு அருளியிருப்பதற்காகவும், அந்த சத்தியத்தை மற்றவர்களுக்கு கொண்டுசென்று அவர்கள் அறிவடையவும், நம் வைராக்கியத்தை அதிகப்படுத்தியதற்காகவும் தேவனிடத்தில் பெரும் நன்றியுணர்வு உடையோராக இருக்கவேண்டும் என்பதேயாகும். அதேவேளையில், சர்வவல்ல தேவனின் மகா யுத்தநாள் நெருங்கிக்கொண்டிருக்கிறதை நம்முடைய மனக்கண்கள் தெளிவாக உணர்ந்துகொள்ளவேண்டும். மேலும் தேவனுடைய வார்த்தையின்மூலம் நம் மனக்கண்களை வழிநடத்தும் நம் விசுவாசமானது, மேசியாவின் இராஜ்யமாகிய மகிமையான இராஜ்யத்தை பார்க்கமுடியவேண்டும். மேலும் அறுவடை வேலையானது எதுவரைக்கும் நீடிக்கும் என்பதை அறிவதில் மனநிறைவு அடையாமல், இரட்சிப்பின் தளபதியும் தெய்வீக நியமனத்தில் சர்வத்துக்கும் பொறுப்பாளியானவரும், எந்தத் தவறுமே செய்யாதவரும், தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கியதென்கிற வாக்குத்தத்தத்தை நமக்கு தந்தவரும் தமது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள், தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்படி விரும்புகிற அவரையே எண்ணி மனநிறைவடையலாம்.

---

**R 5951**

# மிகுதியான உபத்திரவங்கள் - மேலான வெகுமதி
# GREATER SUFFERINGS - GREATER REWARD

ஆதார வசனங்கள் : 2கொரிந்தியர்4:16–18


உபத்திரவத்தில் துவண்டுபோகாதிருத்தல் – சுபாவ மனுஷன் அழிந்துபோதல் – புதிய சிருஷ்டி வளர்ச்சியடைதல் – எவை இலேசான உபத்திரவங்கள் ? – அவைகள் எவ்வளவுகாலம் நீடிக்கும் ? – அவைகளது நோக்கம் என்ன ? இந்த நோக்கத்தை எப்படி நாம் அடைவது ?

“காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்” – 2கொரிந்தியர் 4:18

பரிசுத்த பவுலின் வார்த்தைகளும் செயல்களும் கிறிஸ்தவனுக்கு எப்பேர்ப்பட்ட தைரியத்தை வெளிப்படுத்துகின்றன ! அவர் பல்வேறு கடினங்களை சகித்திருக்கிறார். ஒரு தானியம் புடைக்கும் இயந்திரத்தின் அனுபவத்தை அவர் அடைந்ததாலேயே எழுதுகிறார்; “ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது”– 2கொரிந் 4:16. ஆ ! இது உள்ளான மனுஷனாகிய புதுசிருஷ்டி புதிதாக்கப்படுதலே இரகசியமான காரியம். புறம்பான மனிதனின் உபத்திரவங்களிலிருந்து அனுபவங்களை அடைந்து, அவைகளை வேறுபட்ட கண்ணோக்கில் பார்க்கும்படிக்கும் அதிலிருந்து விலையேறப்பெற்ற பாடங்களைக் கற்கும்படிக்கும் உள்ளான மனிதன் இல்லாதிருந்திருந்தால், புறம்பான மனிதனுக்கு நேரிடுகின்ற உபத்திரவங்கள் மெய்யாகவே, கொடிதான அனுபவங்களாக இருந்திருக்கும். தேவன் தன் பட்சத்தில் இருப்பாராகில், மற்ற எதிர்ப்புக்கள் அனைத்தும் ஒன்றுமில்லாததாகிவிடும் என்ற தேவனுடைய வாக்குறுதியை உள்ளான மனுஷன் அடைந்திருக்கிறான். தன் அனுபவங்கள் அனைத்தையும் தன் மேலான நலன்களுக்கேதுவாக மேற்பார்வையிட்டு, தேவன் பராமரிப்பார் என்ற நிச்சயத்தை அவன் பெற்றிருக்கிறான். எந்தஅளவுக்கு சோதனைகளை விசுவாசத்தோடு சகிக்கிறானோ, அதே அளவுக்கு ஒப்பாக, வருங்காலத்தின் மகிமைகளை அடைவோம் என்ற நிச்சயத்தையும் அவன் அடையப்பெற்றிருக்கிறான்.

**கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியம்**

தேவனிடத்திலும் சபையினிடத்திலும், சத்தியத்திலும் அப்போஸ்தலர் கொண்டிருந்த பெரிதான வைராக்கியத்தின் இரகசியத்தை நாம் அடையப் பெறுகிறோம். அவர் அதரிசனமானவரை தரிசிக்கிறதுபோல உறுதியாய் இருந்தார்(எபி11:27). பரிசுத்தபவுல் இருவித வாழ்க்கை வாழ்ந்தார், அதாவது – ஒரு மனிதனாக, தர்சுசைச் சேர்ந்த சவுலாகவும் ஆனால் நிஜத்தில் அவர் தேவஊழியனாகிய பவுலாக, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுசிருஷ்டியாக காணப்பட்டார். உலகம் அவரை அறியவில்லை, ஆயினும் அவர் தம்மைத்தாமே அறிந்திருந்தார், தன் தேவனையும் அறிந்திருந்தார். மேலும் தெய்வீக வல்லமையாலும், தேவவார்த்தையின் செய்தியாலும் ஆற்றலூட்டப்பட்டிருந்தார். அது கிறிஸ்துவின் மூலமாக தேவனிடத்தில் உறவுகொள்ளும்படியும் சமாதானத்தை அடையவும்




அவரிடத்தில் பேசினது. அதோடுகூட, ஓட்டத்தின்முடிவில் ஆவலோடு காத்திருக்கின்ற உண்மையுள்ள அனைவருக்கும் கனம் மகிமை சாவாமை ஆகியவற்றைக் குறித்தும் அவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இயேசுவின் அடிச்சுவடுகளில் உண்மையாய் நடந்துகொண்டிருக்கின்ற, தேவவசனத்தின்மூலம் போதிக்கப்பட்டுவருகிற, ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட தேவனுடைய குடும்பத்தின் பிள்ளைகள் அனைவருக்கும் அப்போஸ்தலரது சொந்த அனுபவங்களின் இரகசியம் திறந்த புஸ்தகமாக உள்ளது. சபையின் தலையாகிய இயேசுவுக்கும், அதன்பின் அப்போஸ்தலர்களுக்கும், ஆதிகால சபையின் அங்கத்தினர்களுக்கும் வெளிப்படுத்தப்பட்ட பெரிதான தெய்வீக தயவைப்போல் நாம் பெறவில்லை. ஆயினும் பொதுவான வழிமுறைப்படி, தேவனுடைய அதே தயவுகளை தேவனுடைய அதே வாக்குத்தத்தங்களை, அவர்கள் பெற்றிருந்த அதே எழுச்சியூட்டும் நம்பிக்கையை நாம் இப்போதும் பெற்றிருக்கிறோம். “அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது” – 2கொரிந்4:17. அவர் வார்த்தைகளில் அவர் காண்பித்த சகிப்புத்தன்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

உயிர்த்தெழுதலைக் குறித்து எழுதும்போது, அப்போஸ்தலர் ஒத்த கருத்தையே தருகிறார், உயிர்த்தெழுதலில் சபை எப்படி இருக்கப்போகிறது என்று அவர் பிரகடனப்படுத்துகிறார். உண்மையுள்ளோர்




அனைவரும் மகிமைப்படுத்தப்பட்டு, கனப்படுத்தப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு, பூரணப்படுத்தப்படுவார்கள். ஆயினும் எல்லோரும் ஒரே விகிதத்தில் ஆசீர் பெறமாட்டார்கள்.

“மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்” –1கொரிந்15:41,42.

தானியேல் தீர்க்கதரிசனத்திலும் இதே பாடம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அங்கும் உயிர்த்தெழுதலையும், உயிர்த்தெழுவோரையும் நட்சத்திரத்தை எடுத்துக்காட்டாகக் கொண்டு, அவைகளின் அழகிலும் பிரகாசிக்கும் தன்மையில் உள்ள வித்தியாசத்திற்கு ஒப்பாக உயிர்த்தெழுதல் காண்பிக்கிறது– தானி12:1–3.

தெய்வீக ஏற்பாட்டின்படி, கிறிஸ்து பட்ட துன்பங்களின் அளவுக்கேற்ப அவர் அடையவிருக்கும் மகிமையும் இருக்கும் என்பது அப்போஸ்தலரின் வாதம். எனவே வரவிருக்கின்ற மகிமையில் கர்த்தரோடுகூட பங்கேற்கும் பொருட்டு, தற்கால துன்பங்களில் அவரோடுகூட பங்கேற்க அப்போஸ்தலர் விரும்பினார். அதற்கு பதிலாக, “சுவிசேஷஊழியத்தில் என்னுடைய பங்குக்கு அதிகமாகவே நான் செய்கிறேன்” என்று மற்றவர்களிடத்தில் கூறுவதும், “உங்களில் சிலர் என்னிடத்தில் வந்து எனக்கு உதவவேண்டும், எனக்கு ஒய்வளிக்கவேண்டும்” என்று தனக்குத்தானோ அல்லது மற்றவர்களிடத்திலோ கூறுகிறார்கள். பரிசுத்தபவுலோ இவ்விஷயத்தை வேறொரு கண்ணோட்டத்தில் பார்க்கிறார். கிறிஸ்துவின் உபத்திரவங்களில் குறைவானதை, கூடுமானஅளவு நிறைவாக்க தாம் பேராவலோடும், மனப்பூர்வமாகவும் இருப்பதாக அறிவிக்கிறார் (கொலோ1:24). உபத்திரவம் அடைவது அனைத்தையும் மகிழ்ச்சியாக எண்ணுவதாகக் கூறுகிறார். ஏனெனில், உபத்திரவம் தன் குணாதிசயத்தில் பரிசுத்தஆவியின் கனிகளை வெளிக்கொணரும் என்று அறிந்திருந்தார். அதுவே தம்மை ராஜ்யத்திற்கு ஆயத்தப்படுத்தும் என்று எண்ணினார்(ரோமர்5:3–5).இதற்கிடையே, கிறிஸ்துவோடுகூட பாடுபட்டால் அவரோடுகூட ஆளுகை செய்யமுடியும். அவரோடுகூட மரிப்பவர்களே அவரோடுகூட பிழைத்திருக்கவும் முடியும் என்ற வேதாகமத்தின் நிச்சயத்தை நினைவுகூருவோம்.

**அவரது உண்மையின் இரகசியம்**

எல்லாவற்றிலும் சாதகமான சூழலில் ஒரு கிறிஸ்தவனாக தன் வழியை துவங்குவதை அநேகர் எளிதாக எண்ணுகின்றனர். சிலர் எழுச்சியோடு தங்கள் ஓட்டத்தை சிலகாலம் ஓடினாலும், அதன்பின் நற்கிரியை செய்வதில் சோர்வு அடைகின்றனர். ஆனால் அப்போஸ்தலர் ஒருபோதும் சோர்ந்துபோகவில்லை எனத் தெரிகிறது. அவருடைய சொந்தசௌகரியத்தைப் பொருத்தவரை, சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் எப்போதும் ஜாக்கிரதையாக இருந்தார். கேட்க செவியுடைய அனைவருக்கும் சுவிசேஷத்தை எங்கும் எப்பொழுதும் பிரசங்கிக்க தயாராகவே இருந்தார். அவரது விடாமுயற்சியின் இரகசியம் 18ம் வசனத்தில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

“காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்; காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்”– 2கொரிந்4:18.

இவ்வார்த்தைகள் எதை அர்த்தப் படுத்துகின்றன ? பரிசுத்தபவுல் ஆவிக்குரிய கண்களின் பார்வையைப் பெற்றிருந்தார் என்பதையே இவ்வார்த்தைகள் அர்த்தப்படுத்துகின்றன. அவர் உண்மையாகவே பூமிக்குரிய ஈர்ப்புகளை கண்டார், இருந்தபோதிலும் காணப்படாதவைகளை புரிந்துகொள்ளும் ஆற்றலால், அவரது ஆவிக்குரிய பார்வையினால், அவைகள் அவரை ஈர்க்க முடியவில்லை. விசுவாசக்கண்களால் அவர் பரலோகப்பிதாவையும், மகிமையடைந்த கர்த்தராகிய இயேசுவையும், பரம சேனைகளையும் வரவிருக்கும் ராஜ்யத்தின் மகிமை கனம் சாவாமையையும் கண்டார். விசுவாசத்தினால் தமக்கு முன்பாக பரந்து விரிகின்ற மாபெரும் ஆயிரமாண்டு ராஜ்யத்தினை கண்டார். மேலும் அந்த ராஜ்யத்தில் தன் எஜமானும் மீட்பருமானவரோடு வாரிசு உரிமையில் இணைவதற்கான தெய்வீக அழைப்பைக்கேட்டார். அந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டார். இப்படியாக தன் குருவின் கொடியின்கீழ் தன்னை இணைத்துக்கொண்டார். மேலும் தேவன் வாக்களித்திருந்த நித்தியமானவைகளோடு ஒப்பிடுகையில் இவ்வுலகத்திலுள்ள அனைத்தும் மதிப்பற்றவை என்றும் அவர் உணர்ந்துகொண்டார். தேவ வசனத்தின் பேரிலேயே அவரது நம்பிக்கை இருந்தது.

இன்றைய நாளில் ஜீவிக்கின்ற கர்த்தருடைய பிள்ளைகளிடத்திலும் அவ்வாறே இருக்கவேண்டும். அரசியல், சமுதாய அந்தஸ்து, ஆஸ்தி, வியாபாரம் போன்றவற்றில் ஈடுபடுவதன்மூலம் அடையும் அனுகூலத்தை நாம் கண்ணோக்கக்கூடும். ஆனால் நாம் பரலோகத்துக்குரியவைகளாகிய புதுசிருஷ்டியின் புதிய பார்வையில் கண்டிருக்கிறபடியால், இந்த பூமிக்குரிய குறிக்கோள்களும் இலட்சியங்களுமாகிய அனைத்தும், ஒப்பிட்டுப்பார்க்கையில், நமக்கு மதிப்பற்றவைகளாய் உள்ளன. நமது காதுகள் தேவனுடைய செய்தியைக் கேட்டிருக்கின்றன. தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கென்று ஆயத்தம் பண்ணியிருக்கிற ஆவிக்குரியவைகளை பகுத்துப் பார்க்கும் திறனை நாம் அடைந்திருக்கிறோம். இந்த ஆவிக்குரிய

காரியங்களை ஜென்ம சுபாவக்கண்கள் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் அவர்களுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை (1கொரிந்2:9). தற்கால தீமையின் உலகத்தில் உள்ள அனைத்துக் காரியங்களும் தற்காலிகமானவைகளே. தற்போது வாசலருகே நிற்கின்ற புதிய யுகம் ஸ்தாபிக்கப்படும்பொழுது, அவைகள் அகன்றுபோகும். இதன் காரணமாக, பூமிக்குரிய மேன்மைகளும் அதிகாரங்களும், வல்லமைகளும் ஒவ்வொரு நிமிடமும் மதிப்பற்றவைகளாகின்றன.

இதற்கு மாறாக, தேவன் நமக்கு அருளுகின்றவைகள் நித்தியமானவைகள் என்று நாம் காண்கிறோம். போதனைகளின் முக்கியத்துவத்தை வேதாகமம் நிர்ணயிப்பதில் ஏதாவது ஆச்சரியம் இருக்கிறதா ? யார் நிஜமான வேதாகம கண்ணோக்கத்திலிருந்து போதனைகளை தன் மனதில் ஆழமாய் பதிய வைத்திருகிறார்களோ, அவர்கள் கர்த்தருக்குள் பலப்படுகிறார்கள். யார் இராஜ்யத்தின் இந்த அறிவையும், இந்த ஆவிக்குரிய பார்வையையும், காதுகளையும் பெறவில்லையோ அவர்கள் பலவீனமடைவதைத் தவிர்க்கமுடியாது, இதனால் கிறிஸ்துஇயேசுவுக்குள்ளான புதுசிருஷ்டிகள் என்ற சாட்சியத்தை அடைவதில் குறைவுபடுகிறார்கள் – 2கொரிந்5:17.

---------------

# தோல்வியடைந்த ஒரு சதித்திட்டம்
# A PLOT THAT FAILED

ஆதார வசனங்கள் : அப்போஸ்தலர் 23:14–24

நிராகரிக்கப்பட்ட மனிதனின் சீற்றம் – ஆலோசனை சங்கத்திற்கு முன்பாக பரிசுத்த பவுல் – கடிந்துகொள்ளப்பட்ட பிரதான ஆசாரியன் –ஒரு படைத்தளபதி போல பரி.பவுல் – கருத்தில் பிளவுபட்டிருந்த ஆலோசனை சங்கம் – சங்க உறுப்பினர்கள் மத்தியில் நிலவிய மாறுபட்ட கருத்து – அப்போஸ்தலர் கோட்டைக்கு திரும்ப கொண்டு போகப்படுதல் – தரிசனத்தால் உற்சாகமடைதல் – அவருக்கு எதிரான சதித்திட்டம் – சதித்திட்டம் தொடர்பாக சேனாதிபதி லிசியாவிற்கு தகவல் கொடுத்தல் – பரி.பவுல் பாதுகாப்புக் கருதி செசரியாவுக்கு அனுப்பப்படுதல்.

''அவர்கள் உனக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் '' – எரேமியா 1:19

பரிசுத்த பவுல் கலகத்திலிருந்து ரோமப் போர்வீரர்களால் தப்புவிக்கப்பட்டதற்குப் பின், மறுநாள் காலையில் அவருடைய வழக்கை திட்டமாய் விசாரிக்கவேண்டி, மிகுந்த குழப்பத்திலிருந்த சேனாதிபதி லிசியா ஆலோசனை சங்கத்தைக் கூட்டினார். இந்தமுறை பிரச்சனை மதம் சார்ந்த ஒன்று என்றும், அவருடைய பணி சமாதானத்தை காப்பது மாத்திரமே என்பதையும் அவர் உணர்ந்தார். யூதர்களுக்கு முன்பாக, அதிலும் அவர்களில் மிகவும் படித்த அறிஞர்கள் மற்றும் மிகவும் செல்வாக்கு நிறைந்த எழுபதுபேர் அடங்கிய நியாயாசனத்திற்கு முன்பாகவும் சுவிசேஷத்திற்காக சாட்சி கொடுக்கும் மேலான வாய்ப்பு பரி.பவுலுக்கு மற்றுமொருமுறை வழங்கப்பட்டது. இந்தமுறை தன்னுடைய கடுமையான அனுபவங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கும் மேலான வாய்ப்புக்களில் தன்னை வழிநடத்தும் என்று உணர்ந்துகொள்ளத் தொடங்கினார்.

விசுவாசப் பார்வையுடன் பின்னோக்கிச்சென்று பார்க்கும்போது, அது ஆதிமுதற்கொண்டு கர்த்தர் தம்முடைய பணியை மேற்பார்வையிடுகிறதைப்போல எப்போதும் மேற்பார்வையிடுவார் என்று நாம் உணர்ந்துகொள்ளலாம். விசுவாசக்கண்ணில் நாம் பெற்றுக்கொள்ளவும் உபயோகிக்கவும்கூடிய கர்த்தருடைய வேலையை எது உருவாக்குகிறது என்பது நம் அறியும் அளவுக்கேற்பவே இருக்கும். தெய்வீக திட்டமானது இந்த நிகழ்கால யுகத்தில் உலகத்தை மாற்ற முயற்சிப்பதல்ல என்பதை நாம் கண்டிப்பாக கவனிக்கவேண்டும். மாறாக, கிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியின்போது நிறைவேற்றப்படும் அந்த பணியை, எதிர்காலத்திற்கு விட்டுவிடவேண்டும். இந்த நிகழ்காலயுகம் முழுவதிலும் அவருடைய பணி, அவருடைய மணவாட்டியாக இருக்க.. அவருடைய இராஜ்ஜியத்தில் அவருடன் கூட்டாளியாக... பிறகு முழு உலகத்திற்கும் நிறைவேற்றி முடிக்கக்கூடிய மாபெரும் பணியில், அவருடைய உடன்வேலைக்காரர்களாக இருக்கும் சபையை தெரிந்தெடுத்தல் மாத்திரமே என்பதை நாம் கண்டுணரவேண்டும்.

பரிசுத்தபவுல் தனக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பு தன்னுடைய தேசத்தின் தலைவர்களுக்கு அறிவிக்கும் வாய்ப்பு என்று உணர்ந்து, அதை ஞானமானமுறையில் பயன்படுத்திக்கொள்ள ஆவல்கொண்டார். அது முதற்கொண்டு அவருடைய பேச்சை கேட்க குழுமியிருந்த ஜனங்களிடத்தில் உறுதியான பார்வையோடு அவருடைய முகத்தோற்றம் மிகுந்த ஆவல்கொண்டிருந்தது. அவர் ஒரு உண்மை யூதனாக இருந்ததை அவர்களுக்கு நினைப்பூட்டுவதன் மூலம் ஆரம்பித்தார். அவர் சட்டதிட்டங்களை மீறுபவராயிராமல், அவர் ஆலோசனை சங்கத்தை ''சகோதரர்களாக'' முகவரியிட்டு அழைத்ததன்மூலம் மதப்பற்று மற்றும் பொதுவான கல்வியறிவு ஆகிய விஷயங்களில் தன்னை அவர்களோடு சமமாக்கிக்கொண்டார். உண்மையாக, பரிசுத்த ஸ்தேவான் கல்லெறியப்பட்ட சமயத்தில் தர்சீசின் சவுலாக இருந்து, ஆலோசனை சங்கத்தின் ஒரு உறுப்பினராகவே இருந்தவர்.

### ஒருவரையும் தீது சொல்லாயாக

பரிசுத்த பவுல் பேசஇருந்த சொற்பொழிவு பிரதான ஆசாரியரால் தடைசெய்யப்பட்டு, பவுலின் வாயில் அடிக்கும்படி அப்போஸ்தலருக்கு அருகில் நின்றிருந்தோரிடம் அவர் கட்டளையிட்டார். அது அவமதிப்பின் விசேஷக் குறியீடாகவும், பேசப்பட்ட வார்த்தைகளுக்கு எதிரான எதிர்ப்பாகவும் இருந்தது. இது குறிப்பாக, பரிசுத்த பவுலால் கண்டித்துரைக்கப்பட்ட பிரதான ஆசாரியன் தன்னுடைய சொந்த நடத்தையை உணர்ந்ததாலேயே என்று கருதுவது தவறல்ல. மாறாக நம் போதகர் அறிவித்ததுபோன்று, ''இருள் வெளிச்சத்தை பகைக்கிறது'' என்பதனாலேயாகும். பிரதான ஆசாரியனான அனனியாவை, இழிவான வகையில் பாசாங்கு மூலம் மோசடி செய்வதை அடிப்படை பாணியாக கொண்டிருந்தான் என்றும், இருப்பினும் அவனை பொதுவாக ஜனங்கள் உயர்வாக கருதவேண்டும் என்பதில் மிகவும் கைதேர்ந்தவனாயிருந்தான் என்றும் ஜோசபஸ் குற்றப்படுத்துகிறார். சடுதியில் தன் பேச்சை பரிசோதித்து, அப்போஸ்தலர், ''வெள்ளையடிக்கப்பட்ட சுவரே; தேவன் உம்மை அடிப்பார்'' என்று சத்தமிட்டு கூறினார். அந்த தீர்க்கதரிசனம் உண்மையாயிற்று. இரண்டு வருடத்திற்குள் அனனியா பதவிநீக்கம் செய்யப்பட்டான். ஆறு வருடங்களுக்குள் அவன் ஒரு கொடூரமான மரணத்தை சந்தித்தான். அவனுடைய சொந்த மகனே அவனுடைய அரசியல் சதிகாரர்களுடன் இணைந்து, அவனை அவன் பதுங்கியிருந்த இடத்திலிருந்து வெளியே இழுத்து சாக்கடைக்குள் தள்ளி அவனை கொலைசெய்தான்.

இங்கு ''வெள்ளையடிக்கப்பட்ட சுவர்'' என்ற சொல், கற்பலகைகளில் எழுதப்பட்டு மூடப்பட்டுள்ள சாதாரண கல்லறைகளில் தாங்கி நிற்பதற்காக பயன்படுத்தப்படுகிறது. இவைகள் யூத வழக்கத்தின்படி யாதொரு வழிப்போக்கர்களும்

அவைகளை காலால் மிதித்து, அதினால் தீட்டுப்படாதபடி சுலபமாக வேறுபாடு அறியும்வகையில் அடிக்கடி வெள்ளையடிக்கப்படுகிறது (எண்19:11–16). சுத்தமாகவும் பளிச்சென்றும் மின்னுகிற வெண்மைநிறக்கல் அழகானதுதான். ஆனால் அதன் கீழ்ப்புறத்தில் அழிவுக்குரியவைகளே உள்ளன. இந்த அடையாளத்தின் வலிமையானது மாய்மாலத்தை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

அப்போஸ்தலரின் அருகில் நின்றிருந்த சிலர், அவர் கூறியதைக்கேட்டு, "தேவனுடைய பிரதான ஆசாரியனை வையுகிறாயா ?" என்றனர். பரிசுத்த பவுல் மறுமொழியாக, "சகோதரரே, இவர் பிரதான ஆசாரியரென்று எனக்குத் தெரியாது; உன் ஜனத்தின் அதிபதியை தீது சொல்லாயாக என்று எழுதியிருக்கிறதே" என்றார் (யாத் 22:28). இது அப்போஸ்தலர் தமஸ்குவிற்கு போகும்வழியில் தடுத்து நிறுத்தப்பட்டபோது குருடான கண்கள் அவருக்கு இன்னும் முழுமையாக குணமடையவில்லை என்பதை நினைப்பூட்டும்(அப்9:8,9).அவருடைய மங்கலான பார்வை அவருடைய "சரீரத்தில் முள்ளாக" இருந்தது. (2கொரிந்12:7–10). கர்த்தர் அவரை அதினின்று விடுவிக்காமல், அதேசமயத்தில் அதை ஈடுசெய்யும் விதத்தில் தெய்வீக கிருபையை அதிகமாக ஈடுகட்டுவதாக வாக்களித்திருந்திருப்பார். தன் ஜெபத்திற்கான இந்த பதிலை அப்போஸ்தலர் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டார். எனவே அவர் பிரதான ஆசாரியரை அடையாளங்காண முடியவில்லை என்பதும், முன்வைக்கப்பட்ட அவமதிப்பைக்குறித்து அவர் அறிந்திருக்கவில்லை என்பதும் சாத்தியமே.

**ஒரு பொதுவான ஆனால் அபாயகரமான நடைமுறை**

அனனியா பலவந்தத்தினால் தன் அதிகாரத்தை அடைந்ததாக சிலரால் பேசப்பட்டது, இதன் காரணமாக உண்மையான பிரதான ஆசாரியனாக அவர் அங்கீகரிக்கவில்லை என்பதே அப்போஸ்தலரின் வார்த்தைகளிலிருந்து வெளிப்படும் அர்த்தமாக புரிந்துகொள்ளப்படுகிறது. பரிசுத்த பவுல் அவருடைய வார்த்தைகளுக்காக மன்னிப்பு கோராமல், உன் அதிகாரியை தீது சொல்லாயாக என்ற தெய்வீக பிரமாணத்தை முழுமையாக புரிந்துகொண்டிருப்பதாக பிந்தைய கண்ணோட்டம் குறிப்பாய் சுட்டிக் காட்டுகிறது.

இது இன்றைய நாளில் ஒவ்வொருவருக்கும் ஒரு நல்ல விதிமுறையாக உள்ளது. உயர் பதவியிலிருப்–பவர்களைப்பற்றி தீமையானவற்றை பேசுவது, அவர்களை சிறுமைப்படுத்துவது, கேலிக்குள்ளாக்குவது போன்ற மனப்பான்மை ஒரு பொதுப்படையான, எங்கும் பரவியுள்ள பாவமாக இருந்து, ஏளனம் செய்பவர்களைவிட ஒரு நல்ல ஆட்சியை மேலும் அதிகமாக பலவீனப்–படுத்துகிறார்கள். சந்தேகத்திற்கிடமின்றி, நாம் முழுவதும் ஏற்றுக்கொள்ளாத காரியங்கள், மற்றும் வழிமுறைகளுக்கு எதிராக மறுப்புதெரிவிக்க ஏற்ற சமயங்களும் வழிகளும் உள்ளன. ஆனால் தேவனுடைய ஜனம் பிரமாணங்களுக்கும் ஒழுங்குமுறைக்கும் ஒப்புயர்வற்ற நிலையில் நின்று, இராஜாதி இராஜா தன் ஆயிரவருட சிங்காசனத்தில் அமரும்வரை, எந்தஅளவிற்கு நீதியை அடைய இயலுமோ அந்தளவுக்கு, முழுமையான நீதிக்காக காத்திருக்கவேண்டும். இந்த இடைப்பட்ட காலத்தில் நமக்கு அவருடைய கட்டளையாக; "மேலான அதிகாரமுள்ளவனுக்கு கீழ்ப்படியக்கடவன்" என்றும், முடிந்த அளவு "யாவருடனும் சமாதானமாயிருக்க வேண்டும்" என்பதேயாகும் – ரோம13:1; எபி 12:14.

தற்செயலாக நாம் குறிப்பிடுவது என்னவென்றால், சிலர் கர்த்தரையும், வேதத்தையும் தாக்கும்படி வேடிக்கையாகவும் பேசுகின்றனர். இது ஒரு அபாயகரமான செயல்முறை. "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்". இந்த பயப்படுதல் நமக்குள் தொடர்ந்து செயலாற்றி, கர்த்தரை நேசிப்பவர்களுக்கும், அவருக்கு பயப்படுகிறவர்களுக்கும் தேவன் முன்கூட்டியே ஏற்பாடுசெய்து வைத்துள்ள மகிமையான காரியங்களை அடைய தங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொண்டு, வருஷங்கள் செல்வதற்கேற்ப அதில் அதிகரிக்கவும் வேண்டும்–யோபு28:28; சங் 111:10.

**பரிசுத்த.பவுலின் சமயோஜித புத்தி**

சுவிசேஷத்தை எடுத்துரைப்பதற்கு அதன் துவக்கத்தில் இந்த சம்பவம், நம்புகிறவர்களுக்கு தடையை ஏற்படுத்தியிருந்தது. பரி.பவுல் தனக்கு எதிராக இருந்த தவறான அபிப்பிராயமானது, தன் பேச்சை செவிமடுத்தவர்களிடத்தில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்று உணர்ந்துகொண்டார். அவர்கள் பிரதான ஆசாரியனால் அடக்கி ஆளப்பட்டிருந்தனர். நீதியில் குறைபாடு உள்ளவர்களாக காணப்பட்டவர்கள் அதை ஆரம்பத்திலேயே வெளிப்படுத்திக் காண்பித்தனர். ஒரு படைத்தளபதி முன்புறமாக தாக்குவதில் எந்த பலனுமில்லை என்பதைக்கண்டு, தன் படைகளை முடுக்கிவிட்டு, பக்கவாட்டில் தாக்கி, எதிரியை ஜெயிப்பதுபோல, பரி.பவுலும் தனக்கு செவிமடுத்தவர்களில் பாதியளவினரின் அனுதாபத்தை முழுமையாக பெற்றிருந்தார். அதேசமயத்தில், தான் போதித்த போதனை பரிசேயர்களின் பெரும்பான்மையான நம்பிக்கையின் தர்க்கரீதியான வெளிப்பாடாக இருக்கிறது என்பதை காண்பிக்கிறதற்கான வாய்ப்பையும் தக்கவைத்துக்கொண்டார்.

அப்போஸ்தலர் இதை மிகுந்த சத்தமிட்டு,"நான் பரிசேயனும், பரிசேயனுடைய மகனுமாயிருக்கிறேன்; மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக் குறித்து நியாயம் விசாரிக்கப்படுகிறேன்" என்று கூறினார். இவ்வாக்கியம் துல்லியமான உண்மையே ஆகும். பரிசேயன் என்ற வார்த்தை தேவனுக்கென்று முழுவதும் பரிசுத்தமாக்கப்பட்டதை உரிமை கொண்டாடுகிறவன் என்பதை அடையாளப்படுத்துகிறது. பரி.பவுல் இந்த மனப்பான்மையை ஒருபோதும் அழித்துவிடாமல் தொடர்ந்து காப்பாற்றிவந்தார். தமஸ்துவுக்கு செல்லும் வழியில் பெற்ற அவருடைய அனுபவங்கள் அவருடைய நடத்தையின் வழிமுறையை, முதலாவது தேவனுக்கு முன்பாக "எல்லா விஷயங்களிலும் நல்மனசாட்சியோடு" உண்மையாயிருப்பது என்ற அவருடைய இருதய மனப்பான்மையை மாற்றவில்லை.

ஆலோசனை சங்கமானது புராதன நம்பிக்கைகளை தீவிரமாக கடைப்பிடிக்கிற, பரிசுத்தத்தை வெளிப்படையாக

பறைசாற்றுகின்ற பரிசேயரையும், ஆசாரியர்களோடு சேர்த்து மிகவும் உயர்ந்த யூதர்கள் மத்தியில் அதிக எண்ணிக்கையிலுள்ள நாத்திகரையும், பெருமளவில் குற்றங்காண்கிற சதுசேயரையும் சமபங்காக கொண்டுள்ளது என்பது பரி.பவுலுக்கு மிகவும் நன்றாக தெரியும். அவருடைய கூக்குரலுக்கான பலன் உடனடியாக கிடைத்தது. பரிசேயர்கள் பவுல் பேசினவைகளில் சில காரியங்கள் தங்கள் நம்பிக்கைக்கு ஏற்புடையதாக உள்ளதாக ஏற்றுக்கொண்டாலும், அவருடைய எல்லா போதனைகளுக்கும் அவர்கள் உடன்படவில்லை. அதுபோலவே சமய நம்பிக்கையற்ற சதுசேயர்களுக்கும் ஒழுங்கற்ற பரிசேயர்களுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டு, அவர்கள் காலதாமதமின்றி இறுதிக்கட்ட நிகழ்விற்கு காரணமாயிருந்து, அதற்கு ஆதரவளித்தனர்.

அதன் விளைவாக, ஒரு பெரிய கலகம் உண்டானது. சிலர் அப்போஸ்தலரின் ஜீவனை எடுக்க வகைதேடினர். மற்றவர்களோ அவரை பாதுகாக்க பெருமுயற்சி செய்தனர். சண்டையிடும் தேவனுடைய ஜனங்களின் பிரிவுகளிடையே மீண்டும் ஒருமுறை தலையிட்டு தடுத்து நிறுத்த சீசரின் (Ceasar)போர்வீரர்கள் தேவைப்பட்டனர். எப்படிப்பட்ட சோகமான காட்சி இது! தெய்வீக அறிவுரைப்படி நடந்து, ஒவ்வொரு வழியிலும் அதிக அனுகூலம் பெற்றிருக்கவேண்டிய யூதர்கள், நீதியைக்குறித்தும், ஒருவருக்கொருவர் பெற்றிருக்கவேண்டிய உரிமைகளைக் குறித்தும் கூறப்பட்ட பாடங்களை புறக்கணித்ததும் எவ்வளவு துயரகரமானது! "உன்னைப்போல் உன் அயலானையும் நேசி" (லேவி19:18) என்ற தெய்வீக அறிவுரையை சுட்டிக் காண்பிக்காமல் நடந்துகொண்டதும் எத்தனை பரிதாபமானது! இது சிலசமயங்களில் உண்மைக் கிறிஸ்தவர்கள் தெய்வீக நிலைகளில் மிகுந்த மதிப்புயர்வடைந்து, உடன்படிக்கையின் உறுதிமொழியின் கீழிருந்து சகோதரர்களுக்காக தங்கள் ஜீவனை கொடுக்கவும் உண்மையாகவே உற்சாகப்படுத்தப்பட்டிருந்தாலும், அவர்கள் தங்கள் சத்துருக்களையும் சிநேகிக்கின்ற நிலையை அடையாவிட்டால், தாங்கள் நாடித்தேடிய பரிசை வெல்லமுடியாது என்ற புத்திமதி, கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் உண்மையானது என்பது எப்படிப்பட்ட வருந்தத்தக்க காரியம்!

உண்மையாகவே குத்துச்சண்டையிடுபவர்கள் இன்று நாகரீகமான ஜனங்கள் மத்தியில் மிகவும் பிரபலமற்றவர்களாகவே கருதப்படுகின்றனர். ஆனால் கையால் செய்யமுடியாத கொடூரத்தை வார்த்தையால் அதைவிடக் கொடூரமாக செய்ய முடியாதோ? கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக்கொண்டு தேவனுடைய சித்தம் செய்வதாக உடன்படிக்கையின் உறுதிமொழியை எடுத்துக்கொண்டவர்கள் மத்தியிலும், எதிராளியின் ஆவியின் தூண்டுதலின்கீழ், கோபம், விரோதம் வெறுப்பு, பொறாமை, சச்சரவு ஆகியவற்றை வெளிப்படுத்துவதால், ஒருவர் மற்றவரை மென்று விழுங்கிவிடுவது உண்மையல்லவா? இக்காரியங்களை நாம் காணும்போது, இவைகள் மூலம் விலைமதிப்பற்ற பாடத்தைக்கற்று நம்முடைய பரமபிதாவை இன்னும் நன்முறையில் மகிமைப்படுத்த நம்மைத் தூண்டாதா?

**அம்பலப்படுத்தப்பட்டதும், தோற்கடிக்கப்பட்டதுமான ஒரு சதித்திட்டம்**

அப்போஸ்தலர் பாதுகாப்புடன் திரும்பவும் கோட்டைக்கு கொண்டுவரப்பட்டபோது, தன்னுடைய சமீபத்திய அனுபவம் மூலம் எவ்வகையில் கர்த்தர் மகிமைப்படுத்தப்பட்டிருப்பார் என்பதை கண்டு வியப்படைந்தார். நம்மிடையேயும் இப்படிப்பட்ட எண்ணங்கள் அடிக்கடி எழும். ஆனால் எங்கு கர்த்தருடைய வழிநடத்துதலை அடையாளங் காணவும், அதன் பலனை காணவும் முடியவில்லையோ, அங்கு, "என்ன வந்தாலும் அவரை உறுதியாக நம்புவேன்" என்ற விசுவாசத்தை வளர்ப்பதற்கான எல்லாவிதமான சிறந்த வாய்ப்பையும் நாம் பெற்றிருக்கிறோம்.

இதற்கிடையில், தன்னுடைய கைதி சாதாரணமான மனிதன் அல்ல என்பதை சேனாதிபதி லிசியா சான்றுடன் அறிந்துகொண்டார். யார் ஒருவர் அமைதியாக, எச்சரிப்பாக, கண்ணியமாக, தாழ்மையாக, தன்னடக்கமுள்ளவராக இருந்து, தன் எதிரிகள் இவைகளுக்கு மாறாக இருக்கும்போதும், அதே நிலையிலிருக்கிறாரோ, அவர் வாத எதிர்வாதத்தில் பெரும்பாலும் நேர்மையின் பக்கத்திலிருந்து களங்கமற்ற சிந்தை உடையவராக இருப்பதற்கு சான்றாக அமையும். பரி.பவுலை நோக்கிப் பார்த்திருந்த ரோம அதிகாரியின் மனப்பான்மையில் ஏற்பட்ட இந்த மாற்றமானது, 40பேர் கொண்ட குழு பவுலின் ஜீவனை எடுக்க சதிதிட்டம் தீட்டிய செய்தியை கொண்டுவந்த, தன் சகோதரியின் மகனை மிகவும் அன்பாக நடத்தியதன் மூலம் வெளிப்பட்டது.

இந்த சதிகாரர்களாகிய மத வல்லுனர்கள் 40பேர், "உன்னிடத்தில் அன்புகூறுவதுபோல பிறனிலும் அன்புகூறுவாயாக" என்ற தெய்வீகப்பிரமாணத்தை முழுவதும் மறந்து, ஒருவரோடொருவர் கட்டப்பட்டவர்களாக, ஒரு ஆணைமூலம் தங்களை இணைத்துக்கொண்டு, தாங்கள் பவுலைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லை என்று சபதம் பண்ணிக்கொண்டனர். ஆனால் பவுலோ அவர்களுக்கு எந்த தீங்கும் இழைக்காமல், அதற்கு மாறாக, எந்த அளவு ஞானமாக செயல்பட இயலுமோ அந்தஅளவுக்கு அவர்களுக்கு நன்மை செய்ய மாத்திரமே பெருமுயற்சிசெய்தார். அப்போஸ்தலரின் சகோதரியாகிய தன் தாயின் வேண்டுகோளின்படி அந்த சிறுவன் கோட்டைக்குள் தொடர்புகொள்ளக்கூடிய வாய்ப்பைப்பெற்று, கலகத்தைப்பற்றி தன் மாமனுக்கு விவரித்து, பிறகு படைத்தலைவரிடம் அனுப்பப்பட்டான். அதன்பிறகு அந்த சிறுவனுடைய கையைப்பிடித்து தனியே அழைத்துக்கொண்டுபோய், பவுலைப்பற்றிய

விபரத்தை அறிந்து, இவைகளை ஒருவருக்கும் சொல்லாதே என்று கூறி, அவனை அனுப்பிவிட்டான்.

குறைந்தபட்சம் பாதியளவு செல்வாக்கு மிகுந்த யூதர்களோடு மோதலில் ஈடுபடவேண்டியிருக்கும் என்பதை உணர்ந்த படைத்தலைவன், செசரியாவில் ரோம தேசாதிபதியாக இருந்த பெலிக்ஸின் பாதுகாப்பின்கீழ் தன் கைதியை வைப்பது விசாரணையை நடத்த ஞானமான செயலாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்தான். ஆகையால் இரவு 9 மணியளவில், 200 காலாட்கள், 200 ஈட்டிக்காரர்கள், 70 குதிரை வீரர்களோடு அப்போஸ்தலரை ஏற்றிக்கொண்டு புதிய இடத்திற்கு அனுப்பி, அங்கே கட்டப்பட்டநிலையில் தன் மாபெரும் போதகருக்கு பிரதிநிதியாகவும், தூதுவராகவும், தன்னை எண்பித்து, புதிய வாய்ப்பை பெற்றிருந்தார்.

நமக்கு தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைக்காட்டிலும் இயற்கையானவைகளை உபயோகிக்க முன்னுரிமை அளிக்கிறார். இதனால் அவருடைய பிள்ளைகள் அனைவரும் ஒவ்வொரு கனப்பொழுதிலும் அவர் நிமித்தமாக ஊழியஞ்செய்ய விழிப்பாய் இருக்கவேண்டும் என்பதையும் காண்பிக்கிறது. தேவனுடைய நோக்கங்கள் நிறைவேறித்தீரும். ஆனால் கர்த்தருக்கோ அல்லது தன் சகோதரர்களில் மிக சிறியவருக்கோ எந்த ஊழியமும் செய்கிற சிலாக்கியத்துக்கு பாத்திரனாக எண்ணப்படுகிறவனுக்கே மகிழ்ச்சி உண்டாகும். ஆகையால், நாம் ஆராய்ந்தறியும் நோக்கமுள்ள சிந்தையோடு, தொடர்ந்து நோக்கிப்பார்த்து, தெய்வீக சித்தத்தில் முழு நம்பிக்கை வைத்திருக்கும்போது, நம்முடைய வாழ்க்கையையும் விருப்பங்களையும், நியாயமாகவும் முறையாகவும் பாதுகாத்துக் கொள்வதோடுகூட, பிறரையும் ஆதாயப்படுத்துவோம் என்ற பாடத்தை அப்போஸ்தலர் சந்தேகத்திற்கிடமின்றி கற்றுக்கொண்டார். நாம் அனைவரும் ஆதாயமடையும்படி இவற்றை சிந்தித்துப்பார்ப்போமாக!

--------------------

# சுவாரசியமான கடிதங்கள்

## *எப்போது விவாகரத்துப் பெற்றுக்கொண்டவர்கள் திருமணம் பண்ணிடுவதற்குச் சுதந்தரமாய் இருக்கின்றனர்?*

அன்புக்குரிய சகோதரர் ரசல் அவர்களே:-

வேதாகம பாடங்களுடைய 6-ஆம் தொகுதியானது, ஒவ்வொரு அனுபவங்கள், சிரமங்கள் மற்றும் புதுச்சிருஷ்டியாகிய கர்த்தருடைய ஜனங்களுக்கான சரியான வழிமுறைகள் குறித்துத் தெரிவிக்கின்றது என நான் நன்கு அறிவேன்; எனினும் ஒரு குறிப்பிட்ட கேள்வியானது எழும்பி, எங்களது சபையில் சில குழப்பங்களை உருவாக்கிக்கொண்டிருக்கின்றது மற்றும் பிரிவினையை உண்டுபண்ணிவிடும்போன்று தோன்றுகின்றது. எங்கள் சபையின் அங்கத்தினர்களாகிய ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் எங்கள் ஐக்கியத்தினை அனுபவித்து வந்தனர்; ஆனால் அச்சகோதரிக்கு முன்பும் ஒரு திருமணம் நடந்திருக்கின்றது என்றும், அவளது முதலாம் கணவன் இன்னமும் ஜீவனோடு காணப்படுகின்றார் மற்றும் மறுமணம் செய்துகொண்டுள்ளார் என்றும் எங்களுக்குத் தெரியவந்தது.

எங்கள் சபையாரில் சிலர் இந்தச் சகோதரனையும், சகோதரியையும், கூடுகைகளில் கலந்து கொள்வதற்குத் தடைப்பண்ணிட வேண்டுமென்று விரும்புகின்றனர். மத்தேயு 19:9-ஆம் வசனத்தில் இடம்பெறும் இயேசுவின் பின்வரும் வார்த்தைகளின் அடிப்படையிலேயே முக்கியப் பிரச்சனை ஏற்பட்டுள்ளது - "எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்." இவ்விஷயத்தில் அச்சகோதரியுடைய முதலாம் கணவன் வேசித்தனம் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று வலியுறுத்தப்படுகின்றது; ஆனால் இது அவள் மறுமணம் செய்துகொள்வதற்கு அவளை விடுவித்துவிடுகிறதில்லை என்று மற்றவர்கள் வலியுறுத்துகின்றனர்; ஏனெனில் (முறையே விவாகரத்துப்பண்ணியோ அல்லது இல்லாமலோ இருக்கும்) விவாகரத்தான ஸ்திரீயைத் திருமணம் பண்ணும் எவனும், வேசித்தனம் புரிந்தவனாய் இருப்பான் என்று இயேசு கூறியிருக்கின்றார். இது விஷயமாக எங்களுக்குக் கொஞ்சம் அதிகமான வெளிச்சத்தினைத் தயவாய்க் கொடுத்தருளவும்.

உங்கள்,உண்மையுள்ள சகோ, ----------------

[**பதில்:-** இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இக்காரியமானது பிரிவினையை அல்லது குழப்பத்தை உண்டுபண்ண அனுமதிப்பதில் சபையார் நிச்சயமாகவே தவறே செய்கின்றனர். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கூடுகையில் கலந்துகொள்வதற்குத் தடைப்பண்ண அவர்களுக்கு எந்த முகாந்தரமும் இல்லை. அதிகப்பட்சமாக சபையாரால், சம்மந்தப்பட்டவர்களுக்கு ஐக்கியத்தினை மறுப்பதும் மற்றும் சம்மந்தப்பட்டவர்களின் இல்லங்களுக்குச் செல்வதற்கு அல்லது சபையாரின் இல்லங்களில் அவர்களை வரவேற்பதற்கு மறுப்பதும் மற்றும் அச்சகோதரனை மூப்பர் அல்லது உதவிக்காரன் ஊழியத்திற்கு நியமிப்பதற்குச் சபையார் மறுப்பதும் கூடும். ஆனால் பொதுக்கூடுகைகளில் கலந்துகொள்ளும் சிலாக்கியங்களை அவர்களுக்கு மறுப்பது என்பது மிகவும் முரண்பாடான காரியமாய் இருக்கின்றது; ஏனெனில் எல்லா வகையான பாவங்களில் வாழும் அனைத்து வகையான ஜனங்களும் கூடுகைகளுக்கு அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றனர் மற்றும் இப்படியாக வருகையில் அவர்கள் பிரயோஜனமடைந்து, குணமடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

இவ்விஷயத்தில் வேசித்தனமே விவாகரத்திற்கான அடிப்படையாக இருக்கின்றது என்றும், தவறு கணவனிடத்தில்தான் இருந்துள்ளது என்றும் ஒப்புக்கொள்ளப்படுகின்றபடியால், இவ்விஷயமானது "வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி" என்று நமது கர்த்தரினால் குறிப்பிடுகின்ற விதிவிலக்கிற்குள்ளாகவே வந்துள்ளது. அன்றியும் ஒருவேளை இது

உண்மையிலேயே பிரிதலுக்கான காரணமாய் இல்லாமல் இருப்பினும், முன்னாள் கணவன் மறுதிருமணம் செய்துள்ள காரியமானது, அவர் திருமண பந்தம் முறிக்கப்பட்டதாகக் கருதியுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது; ஆகையால் அவனது முதல் மனைவி, அதன் கடமைகளினின்று விடுதலைப்பண்ணப்பட்டுள்ளாள். இக்கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள சகோதரியானவள் அவள் பக்கத்தில் இந்த இரண்டு நிரூபணங்களையும் பெற்றிருக்கின்றாள் மற்றும் மறுமணம் செய்வது ஞானமான மற்றும் சரியான காரியமாய் இருக்குமென அவள் எண்ணும்பட்சத்தில், மறுமணம் செய்வதற்குரிய எல்லா உரிமையையும் உடையவளாய் இருக்கின்றாள்.

கணவன் மற்றும் மனைவியின் இடையிலான ஒரு பிரிவினையை மாத்திரமே நமது கர்த்தர் குறிப்பிட்டார் என்று எண்ணிக்கொள்ள முடியாது; ஏனெனில் ஒருவேளை அவிசுவாசி பிரிந்துபோனால், பிரிந்துபோகட்டும் - அதைத் துன்பமாகக் கருதாமல், அதை ஓர் ஆசீர்வாதமாய்க் கருதுங்கள் என்று பரிசுத்த பவுலடிகளார் ஆலோசனை கூறுகின்றார். கணவனோ அல்லது மனைவியோ இப்படிப் பிரிந்து போவது, விவாகரத்தாகுவதாகும் என்று அவர் கூறவில்லை. விவாகரத்து என்பது உண்மையான திருமண ஒப்பந்தத்தை முழுமையாய் முறித்துப் போடுவதாகும். திருமண பந்தத்தை மிகவும் அக்கறையற்ற விதத்தில் கையாளப்படுவதை இயேசு குறையாய்க் கூறி, கண்டனம்பண்ணினார். வேசித்தனத்தினால் மாத்திரமே தவிர மற்றப்படி திருமண ஒப்பந்தமானது முழுமையாய் முறிக்கப்பட முடியாது.

நம்முடைய நாட்களில் இக்காரியங்களானது நீதிமன்றங்களினால் நடத்தப்படுகின்றது. இதோடுகூட வேதமாணவர்கள் தேவவசனத்தினால் தங்களைச் சரிப்படுத்திக்கொள்கின்றனர். ஆண்டவரால் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே காரணம் காணப்படும் பட்சத்தில் மாத்திரமே தவிர, மற்றப்படி நீதிமன்றமானது விவாகரத்து அளிக்கும் காரியமானது, திருமண ஒப்பந்தத்திலிருந்து விடுதலையாக்குவதாக ஒரு வேதமாணவனால் கருதப்படக்கூடாது. ஆனால் வேசித்தனத்தின் காரணமான நீதிமன்ற விவாகரத்தானது அல்லது பிரிந்திருப்பவரின் இரண்டாம் திருமணம் காரணமான நீதிமன்ற விவாகரத்தானது மதிக்கப்பட வேண்டும்].

# ஆவிக்குரிய பெருமையிலுள்ள அபாயம்

எத்தோற்றத்திலும் மற்றும் யாருக்குள்ளும் இருப்பினும், பெருமை அபாயகரமானதேயாகும். "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுகைக்கு முன்னானது மனமேட்டிமை" எனும் நீதிமொழியானது உலக ரீதியிலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது மற்றும் நியாயமாய்ப் பெருமைக்கொள்ளத்தக்கதாக, எதையாகிலும் மிகமிகச் சொற்பமானவர்களே பெற்றிருக்கின்றனர் என்பதிலும் நிச்சயமே! தாங்கள் ஏதோ சிறந்த பூமியின் தூளினின்று விசேஷமாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதுபோல் கர்வத்தின் ஆவியினுடைய பெருமையினால் இறுமாப்பாய் இருக்கும் சிலரிடத்தில், அவர்களது மூதாதையர் குறித்துப் பெருமையடித்துக்கொள்வதற்கு உண்மையில் எதுவுமிராது. கடந்த காலங்களிலுள்ள வெகுசில சந்ததியினரே பெருமைப் பாராட்டிக்கொள்வதற்கு ஏதுவானவர்களாய்க் காணப்பட்டனர்.

ஐசுவரியங்கள் குறித்துப் பெருமையடித்துக்கொள்வது ஞானமாயிராது என்று உலகம் கற்றுக்கொண்டு வருகின்றது; காரணம் எவ்வாறு மற்றும் யாரால் அந்தச் செல்வங்கள் குவிக்கப்பட்டன என்றும், அவைகள் நேர்மையாய்ச் சம்பாதிக்கப்பட்டவைகளா என்றும் யாராகிலும் கேள்விக் கேட்பார்கள் என்ற பயத்தினாலாகும். கல்வியைக் குறித்தப் பெருமையும் பொருத்தமற்றதாகும்; காரணம் பொதுவாக கல்வி என்பது மற்ற ஜனங்கள் கண்டுபிடித்துள்ளவைகளை அல்லது வரலாறாக எழுதியுள்ளவைகளைக் கற்றுக்கொள்வதையே குறிக்கின்றதாய் இருக்கின்றது. நம்முடைய நாட்களில் தங்களின் மிகுந்த கல்வியறிவு குறித்துத் தற்பெருமையடித்துக்கொள்பவர்களுக்குத் தாழ்மை அவசியமாய் உள்ளது; காரணம் அவர்கள் எதைக்குறித்துப் பெருமையடித்துக்கொண்டிருக்கிறார்களோ, அது பிந்தய கால ஆராய்ச்சிகளினால் தவறு என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. 1900-ஆம் வருடத்தின் அறிவியல் புத்தகங்களானது, இன்று தரமானவைகள் என்று ஏற்கப்படுகிறதில்லை மற்றும் அவைகளிலுள்ள கூற்றானது தற்காலத்தினுடைய அறிவின் வெளிச்சத்திற்கு முன்னாக நிலைநிற்கிறதுமில்லை. ஆகையால் அறிவைக்குறித்துப் பெருமைப்பாராட்டுவது சரி எனில், பெருமைப்பாராட்டுகிறவன் இன்று வரையிலுள்ள அறிவினைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த கவனத்துடன் காணப்படுவது அவசியமாகும்.

தன் அழகைக்குறித்தோ அல்லது சரீர ரீதியிலான பூரணம் குறித்தோ பெருமைப்பாராட்டிக் கொள்வதுகூட நியாயம் என்று சொல்ல முடியாது; ஏனெனில் வடிவம் மற்றும் முகத்தோற்றத்தின் அழகானது மரபுவழிவந்ததாகும் மற்றும் பிள்ளையை விட பெற்றோரே பெருமைப்பாராட்டிக்கொள்வதற்குக் கொஞ்சமேனும் காரணங்களைப் பெற்றிருக்கின்றனர். ஆடை, அலங்காரம் விஷயத்திலெல்லாம் பெருமையடித்துக்கொள்வது என்பது மதியீனமாகும். ஒருவேளை கைத்திறன் விஷயத்தில் ஆடையையோ அல்லது ஆபரணங்களையோ உண்டுபண்ணினவனுக்குப் பெருமைப்பாராட்டிடுவதற்குச் சில காரணங்கள் இருக்கலாம், ஆனால் நிச்சயமாய் ஆடையை அணிபவனுக்குக் காரணங்கள் இருக்காது! அவன் மற்றவர்களுடைய கைத்திறனையும் மற்றும் உழைப்பையும் சொந்தமாக்கி மாத்திரம் கொள்கின்றான்.

## ஆவிக்குரிய பெருமையே எல்லாவற்றிலும் மோசமானது

ஆனால் நம்முடைய கருப்பொருள் ஆவிக்குரிய பெருமையாகும்! நாம் அதை இரண்டு வகையாகப் பிரிக்கின்றோம்: முதலாவது பெயரளவிலான கிறிஸ்தவனாக (அ) தன்னைக் கிறிஸ்தவன் என்று அறிக்கைப்பண்ணிக்கொள்கின்றவனாக மாத்திரம் காணப்படுகின்றவனுடைய ஆவிக்குரிய பெருமை; மற்றும் இரண்டாவது உண்மை கிறிஸ்தவர்களைப் பாதிக்கக்கூடிய ஆவிக்குரிய பெருமையாகும்.

பெயர்ச்சபைக்குப் போகிறவனுடைய ஆவிக்குரிய பெருமை என்பது முற்றும் மாய்மாலமானதல்ல. அவன் ஆவிக்குரிய சடங்குகளையும், ஆச்சாரங்களையும் கவனித்துக்கொள்கின்றான்; ஆவிக்குரிய பாடல்களையும், பிரசங்கங்களையும் கேட்கின்றான் மற்றும் அநேக தருணங்களில் தன்னை உண்மை கிறிஸ்தவன் என்று உணராமல் இருக்கின்றான். அவன் சபை கூடுகைகளுக்கு ஒழுங்காய்ப் போகிறவனல்லவா? ஆராதனை ஸ்தாபனங்களுடைய செலவுகளுக்கு மாத்திரமல்லாமல், கர்த்தருக்கடுத்தக் காரியங்ளை - தருமங்கள் முதலானவைகளைச் செய்திடுவதற்கான வாய்ப்புகள் அவனுக்கு அவ்வப்போது வருகையில் இவைகளுக்காகவும் அவன் தவறாமல் நன்கொடைகள் அளிப்பவனல்லவா?

தாங்கள் வாரமுழுவதும் எப்படி ஜீவித்திருந்தாலும் சரி, இறைச்சிக் கடைக்காரனிடத்திலும் மற்றும் ரொட்டி விற்பவனிடத்திலும் எப்படி நடந்துகொண்டிருந்தாலும் சரி, பெயர்ச்சபைக்குப் போகும் பெரும்பான்மையானவர்கள் - ஆலயக் கட்டடங்கள் மீது அலைப்பாய்கின்றதான சில பகட்டான வகுப்பாருடன் இணைந்துகொள்வதில் அமோக பெருமைகொள்பவர்களாக இருக்கின்றனர். ஆவிக்குரிய பெருமைகொண்டிருப்பவர்கள் பொதுவாகவே பகட்டான மற்றும் மிகுந்த உயர்மட்ட மற்றும் உயர்பாணியுள்ள ஆராதனை ஆலயங்களையே விரும்பித் தேர்ந்தெடுக்கின்றனர். ஆராதனை முடியும்போது, அவர்கள் தங்களில் திருப்தியடைகின்றனர். தாங்கள் தேவனைத் தொழுது கொண்டிருக்கின்றார்களல்லவா? அனைத்து ஜனங்களும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டுமல்லவா? எத்தனைபேர்கள் இப்படித் தொழுதுகொள்ளாமல் இருக்கின்றனர்! கலந்துகொள்ளாதவர்களுடன் தங்களை ஒப்பிட்டுப்பார்க்கையில், அவர்கள் ஆவிக்குரிய பெருமை கொள்கின்றனர் அல்லது தங்களை மேலானவர்கள் என்று எண்ணுகின்றனர்.

அவர்கள் ஆவிக்குரிய அறிவுரையைப் பெற்றுக்கொள்வதற்காகச் செல்லவில்லை; ஒருவேளை அவர்கள் போகிற இடங்களில் ஆவிக்குரிய அறிவுரை கொடுக்கப்பட்டாலும், அவர்கள் ஆவியில் ஜெநிப்பிக்கப்படாதபடியினால், அவற்றை ஏற்றுக்கொள்ளுகிற நிலைமையிலும் அவர்கள் இல்லை. நீதிக்காகவோ, சத்தியத்திற்காகவோ, அவர்களுக்கு உண்மையான பசி ஏதுமில்லை. அவர்கள் கடமையின் ஓர் உணர்வினை மாத்திரம் திருப்திபடுத்தியுள்ளனர். அவர்கள் ஒருவிதத்தில் தங்கள் பாவங்களுக்குப் பிராயச்சித்தமே செய்துள்ளனர் மற்றும் இது ஏதோ விதத்திலும் மற்றும் எப்போதோ ஒரு காலக்கட்டத்தில் தங்களுக்கு நன்மை பயக்கும் என்று நம்புகின்றனர் - ஒருவேளை இது உத்தரிக்கும் ஸ்தலத்தினுடைய மோசமான பாடுகள் சிலவற்றிலிருந்து தங்களைத் தப்புவிக்கும் என்று - ஒருவேளை தங்களைப் பரலோகத்திற்குக்கூடப் பாத்திரவான்களாக்கிடும் என்று நம்புகின்றனர். அவர்கள் தங்களுக்கடுத்தவைகளுக்கு இடம்கொடாமல், அவரைத் தொழுதுகொள்ளுவதற்குச் செல்லத்தக்கதாக, தங்கள் விலையேறப்பெற்ற சில மணிநேரங்களைச் செலவழித்துள்ளதினிமித்தம், தேவன் தங்களிடத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பாரல்லவா? என்று எண்ணுகின்றனர்.

தாங்கள் இப்படியாக முயற்சிப்பதையெல்லாம் தேவன் கண்டுகொள்ளாமல் இருந்து மற்றும் இதற்குப் பொருத்தமான பலனை அளிக்கவில்லையெனில், அவர் மிகவும் அநீதியுள்ளவராக இருப்பார் என்று அவர்கள் எடுத்துரைக்கவில்லை என்றாலும், இப்படியாய் எண்ணிடுவார்கள். அவர்கள் ஆவிக்குரிய பெருமை கொண்டவர்களாகவும், சுயதிருப்திக் கொண்டவர்களாகவும் இருப்பார்கள் மற்றும் இந்நிலைமையில் காணப்படுமளவும், சத்தியத்தினால் இழுக்கப்படுவதில்லை. இத்தகையவர்கள் மீது மாபெரும் எதிராளியானவன் விசேஷமாய்த் தனது கவனத்தைக் கொடுத்துக்கொண்டிருப்பான் என்றும் நாம் எண்ணிட வேண்டாம்; காரணம் அவர்கள் அவனுடைய செல்வாக்கின் கீழ்ப் பாதுகாப்பாய்க் காணப்படுகின்றனர். பெருமையை முதலாவதாக வெளிப்படுத்தினவனாகி, தனது இருதயத்தில், "நான் தேவனுடைய புத்திரர்களுக்கு மேலாக என்னை உயர்த்துவேன் (மற்றவர்களுக்கு மேலாக என்னை உயர்த்துவேன்); உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" என்று சொன்னவன் அவனல்லவா. ஆவிக்குரிய பெருமைதான் நிச்சயமாகவே சாத்தானின் பெருந்தவறாகும் மற்றும் அதுவே அவனது முழுமையான வீழ்ச்சிக்கு வழிநடத்தினதாய் இருந்தது.

தேவன் மீதோ அல்லது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மீதோ அல்லது வேதாகமத்தின் மீதோ நம்பிக்கை உண்டென எவ்விதமான பாசாங்குப் பண்ணிடாத சிலர் ஒருவிதமான பெருமையைப் பெற்றிருக்க வாய்ப்புள்ளது. ஒழுக்கமுள்ள ஜீவியம் ஜீவிப்பதினிமித்தம், ஜீவியத்தில் நல்லொழுக்கத்துடனும், கண்ணியத்துடனும் தாங்கள் ஜீவிக்க முடிந்ததினிமித்தம் - ஒருபோதும் மதுபானம் பருகாததன் நிமித்தம், அநேகரால் செய்யப்படுகின்றதான சில மோசமான பாவச் செயல்களையும், கெட்டக்காரியங்களையும் செய்யாததன் நிமித்தம் - தங்களைக் குறித்துப் பெருமையாய் எண்ணுகின்றனர். பெருமையிலும், தற்பெருமையிலும் இத்தகையவர்கள்: "ஒரு சபையின் அங்கத்தினன்போலவே, நானும் நல்லவனாக இருப்பதாக என்னால் உணரமுடிகின்றது மற்றும் நான் சபைக்கு ஒருபோதும் செல்லுகிறதில்லை என்று சொல்லிடுவார்கள். இதன் அர்த்தம், 'சபையின் அங்கத்தினனைக் காட்டிலும் நான் நல்லவன்/மேம்பட்டவன் என்று நான் என்னைக் குறித்து எண்ணுகின்றேன்" என்பதேயாகும். இவர்கள் தாங்கள் சொல்வதைக் கேட்பவரிடத்தில் சிறந்த தாக்கத்தினை எது ஏற்படுத்தும் என்று எண்ணுவதற்கேற்ப பெருமையின் சிந்தனையை இவர்கள் தன்னடக்கமான வார்த்தைகளுடன் இணைக்க மாத்திரமே செய்கின்றனர்.

இவர்கள் எந்தெந்த நற்கிரியைகளைச் செய்வதில் சந்தோஷம் கொள்கிறார்களென விசாரிக்கப்பட்டால் - இவர்கள் எப்படி (odd fellows, masons) "நண்பர் கழக உறுப்பினர்களென," "உடன்பிறப்புணர்ச்சியுடன் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளும் கேண்மை கழக உறுப்பினர்களென" அவ்வளவுக்கு வியாதிப்பட்டிராதவரும், அவ்வளவுக்குக் கவனிக்கப்பட அவசியம் பெறாதவரும் மற்றும் தன்னைப் பராமரித்துக்கொள்வதற்குப் - பயிற்சிபெற்ற தாதியைப் (nurse) பெற்றிருப்பவருமான கழகத்திலுள்ள ஒரு சகோதரனுடன், தாங்கள் இராமுழுவதும் இருந்து பராமரித்தார்கள் என்றும், தாங்கள் தலைச்சிறந்த அறச்செயலைச் செய்துள்ளது போன்று உணர்ந்தார்கள் என்றும் நமக்குத் தெரிவிப்பார்கள். தாங்கள் சட்டங்களை மீறவில்லை என்பதிலும், தாங்கள் நல்லொழுக்கத்துடன், கண்ணியமாய் ஜீவித்துள்ளார்கள் என்பதிலுமே இவர்களது பெருமை காணப்படுகின்றது. இதில் பெருமைப்பாராட்டிக்கொள்வதற்கு, தன்னையே விசேஷமாய்ப் பாராட்டிக்கொள்வதற்கு உண்மையில் என்ன இருக்கின்றது? இந்தச் சட்டங்களானது நல்ல ஜனங்களுக்காக இல்லாமல், தீமை செய்பவர்களுக்கே இயற்றப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவுகூருகையில், எந்த மனுஷன் (அ) மனுஷி சட்டங்களைக் கைக்கொள்ளாமல் இருப்பான் மற்றும் அச்சட்டங்களைக் கைக்கொள்ளத் தவறினால், இதினிமித்தம் வெட்கம் அடையாமல் இருப்பான்?

## உண்மை சபையில் ஆவிக்குரிய பெருமை

இப்பொழுது இருப்பவைகளிலேயே மிக அபாயகரமான விஷயத்திற்கு வருகின்றோம்! உலகத்தாரிடமும், பெயரளவிலான கிறிஸ்தவர்களிடமும் காணப்படும் பட்சத்தில் அறிவீனமானதாகவோ அல்லது அரைப்பாசாங்காகவோ மாத்திரமே காணப்படும் பெருமையானது, ஒருவேளை தேவனுடைய பிள்ளையின் இருதயத்தையும், ஜீவியத்தையும் தாக்கும் பட்சத்தில் மிகவும் அபாயகரமான காரியமாகிவிடுகின்றது. ஆனால் ஏன் இப்படி நாம் வித்தியாசப்படுத்துகின்றோம். ஆவிக்குரிய பெருமை என்பது உலகத்தாரின் விஷயத்தில் முட்டாள்தனத்தைக்காட்டிலும் கொஞ்சம் மேலானது என்று சொல்லி, ஏன் இது கர்த்தருடைய பரிசுத்தவான்களில் ஒருவனுக்கு மிகவும் அபாயகரமானது என்று நாம் சொல்லுகின்றோம்? ஆ! வித்தியாசம் என்னவெனில் - இவர்கள் உலகத்தில் தேவனுடைய விசேஷித்த பிரதிநிதிகளாக இருக்கின்றனர் மற்றும் இவர்கள் கர்த்தரினால் அழைக்கப்பட்டுள்ளதான மகிமை, கனம் மற்றும் அழியாமையை அடைய வேண்டுமெனில் தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாக வேண்டும்.

இவர்கள் தங்களை முற்றிலுமாய்க் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, மீட்பருடைய பலியின் புண்ணியத்தின் வாயிலாகப் பாவங்களினின்று நீதிமானாக்கப்பட்டு மற்றும் இவர்கள் இப்படியாய்த் தேவனுடைய குடும்பத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டனர் மற்றும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டபோது - இவைகள் இவர்களுக்கு மிகுந்த மாற்றத்தைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. பழையவைகள் ஒழிந்துபோயின; அனைத்தும் புதிதாயின. இவர்கள் - ஆம், இவர்கள் மாத்திரமே இந்தச் சுவிசேஷ யுகத்தில் நித்திய ஜீவனா (அ) நித்திய மரணமா எனும் பரீட்சையில் காணப்படுகின்றனர். இவர்களுக்கான சோதனைகள் மற்றும் வஞ்சனைகள் அனைத்திலுமே, ஆவிக்குரிய பெருமை எனும் பாவமே, அநேகமாக அனைத்திலும் மிகவும் அபாயகரமாய் இருப்பவைகளில் ஒன்றாய் இருக்கின்றது. எந்தளவுக்கு அது உள்ளே கடந்துவருகின்றதோ, அவ்வளவாய்க் கர்த்தருடைய ஆவியானது வெளியேறுகின்றது மற்றும் அந்நபருடைய ஆவிக்குரிய தன்மையானது ஓய்ந்துவிடுகின்றது. இந்த ஆவிக்குரிய நோயானது கட்டுப்படுத்தப்படவில்லையெனில், நிச்சயமாய் இரண்டாம் மரணத்திற்கு வழிநடத்திவிடும்; ஏனெனில் "கர்த்தர் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்" (யாக்கோபு 4:6).

"ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" என்று சபைக்கு அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகையில், ஆவிக்குரிய பெருமை எனும் இந்தச் சுற்றிவளைக்கும் அபாயத்தினை அவர் மனதில் கொண்டிருந்தார் என்பது உறுதியே (1 பேதுரு 5:6). "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்று ஆண்டவர் கூறியுள்ளார் (லூக்கா 14:11).

## இந்த ஆத்தும நோய்க்கான ஓர் அறிகுறி

ஆவிக்குரிய பெருமையை நாம் எப்படிக் கண்டறிவது? என்று கேட்கப்படலாம். ஆவிக்குரிய பெருமையின் விஷயத்திலுள்ள மிக அபாயகரமான காரியம், அதனை பெற்றிருப்பவர் அதைக்குறித்து மிக அபூர்வமாகவே அறிந்திருப்பார். அவர்கள் சிலசமயம் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாகக் காணப்படுகின்றனர். இந்தத் தேவபக்தியின் வேஷமானது மற்றவர்களை மாத்திரம் வஞ்சியாமல், அவர்களையும் வஞ்சித்து, தங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றதும், மற்றவர்களால் மிகத் தெளிவாய்க் காணமுடிகின்றதுமான ஆவிக்குரிய பெருமையை அவர்கள் கண்டுகொள்வதைத் தடுத்துவிடுகின்றதாயும் இருக்கின்றது.

சபை கூடுகைகளில் நீங்கள் கலந்துகொள்ளுதல் குறித்தோ, வேதாகம பாடங்கள் ஆராய்ச்சி புத்தகத்திலிருந்து நாளொன்றிற்கு அதிகமான பக்கங்களை நீங்கள் படிப்பதுகுறித்தோ, அநேக பிரதிகளை நீங்கள் விநியோகிப்பதைக்குறித்தோ அல்லது அநேக புத்தகங்களை நீங்கள் மற்றவர்கள் படிப்பதற்கெனக் கடனாகக் கொடுக்கிறதுகுறித்தோ பெருமையடித்துக்கொள்வதற்குத் தோன்றுகின்றதா? - அப்படியானால் எச்சரிக்கையாயிருங்கள்! தற்பெருமையடித்துக் கொள்வதற்கான இந்த விருப்பம் என்பது, சாதகமான சூழ்நிலை அமைகையில், நீங்கள் ஆவிக்குரிய பெருமையினால் பிடிக்கப்படுவதற்கான அபாயத்தில் இருக்கின்றீர்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. மேற்கூறப்பட்ட செயல்பாடுகள் அனைத்தும் நற்காரியங்களும், பாராட்டத்தக்கவைகளும்தான், அனைத்தும் தகுந்த காரியங்கள்தான்; மற்றும் அன்றாட செய்தித்தாள்களையோ அல்லது நாவல்களையோ வாசிப்பதை, சிற்றுரையாடல்களை வாசிப்பதை அல்லது சிற்றுரையாடல்களை எழுதுவதை விட்டுவிட்டு, (மேலே கூறப்பட்டுள்ள செயல்பாடுகளாகிய) நியாயமான செயல்பாடுகளை, மிகவும் தகுதியான செயல்பாடுகளை, தெய்வீகச் சித்தத்திற்கு மிகவும் இசைவாகக் காணப்படும் செயல்பாடுகளைச் செய்திடுவதற்கு விருப்பம் கொண்டவராகவும் மற்றும் அப்படிச் செய்ய முடிகிறவராகவும் நீங்கள் இருப்பதை நீங்கள் காணும்போது, நீங்கள் தகுதியான விதத்தில் உங்களில் மகிழ்ச்சிகொள்ள வேண்டும். ஆனால் இச்செயல்பாடுகள் குறித்துத் தற்பெருமையடித்துக் கொள்வதற்கான தன்மையானது/விருப்பமானது காணப்படுமாயின், இதினிமித்தம் கர்த்தருடைய ஊழியத்திற்கென்றுள்ள இந்தச் செயல்பாடுகளின் பின்னால் உள்ள நோக்கங்களை - சிந்தனைகளைக் கவனமாய்ச் சோதித்தறிய நீங்கள் வழிநடத்தப்படவேண்டும்.

மற்றவர்களை உற்சாகமூட்டத்தக்கதாக அல்லது நாம் கர்த்தரை அன்புகூருகின்றோம் என்பதற்கும், அவருக்கு ஊழியம்புரிய நாம் ஆவலாய் இருக்கின்றோம் என்பதற்குமான ஆதாரமாகக் காணப்படத்தக்கதாக, இந்தச் செயல்பாடுகள் அனைத்தையும் சாட்சியாக வெளிச்சொல்வது முறையற்றது என்ற அர்த்தத்தில் நாம் சொல்லவில்லை. கர்த்தருடைய பிள்ளையென நாம் இருக்கக்கூடிய விதம் அல்லது செய்யும் எதையேனும் குறித்துத் தற்பெருமையடித்துக்கொள்ளும் விருப்பம் அல்லது ஆவிக்கு எதிராகவே நாம் எச்சரிக்கையாயிருக்கும்படிக்குக் கூறுகின்றோம். இதில் தற்பெருமையடித்துக் கொள்வதற்கு நமக்கு எதுவுமில்லை. ஆவிக்குரிய தரித்திரரைப் போஷிப்பதற்கென நம்முடைய உடைமைகள் அனைத்தையும் நாம் ஒருவேளை கொடுத்திட்டாலும், சத்தியத்தைப் பரப்புவதற்கென நம்முடைய நேரம் முழுவதையும் கொடுத்திட்டாலும், கர்த்தருடைய நாமத்தைக் கனப்படுத்துவதில் நம்முடைய சக்தி/ஆற்றல் முழுவதையும் கொடுத்திட்டாலும், அனைத்தையும் செய்து முடித்த பிற்பாடு, நம்முடைய கர்த்தருக்கு உண்மையில் நம்மால் பிரயோஜனம் ஏற்படவில்லை என்று நாம் எண்ணிட வேண்டும்; மேலும் அவருடைய கரங்களினின்று நாம் ஏற்கெனவே பெற்றுக்கொண்டுள்ளதான எண்ணற்ற ஆசீர்வாதங்களையும் மற்றும் நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கும் பட்சத்தில் நம்முடையதாய்க் காணப்படுமென அவர் வாக்களித்துள்ளதான இன்னும் அதிகமான வியக்கத்தக்க கிருபைகளையும் நன்றியோடு ஏற்றுக்கொண்டுள்ள நம்முடைய இருதயங்களின் பக்தியில் கொஞ்சத்தை அவருக்கு வெளிப்படுத்திடுவதற்கான வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்ள மாத்திரமே செய்திருக்கின்றோம் என்று நாம் எண்ணிட வேண்டும். கவிஞன் பின்வரும் வரிகளைச் சரியாய்த்தான் எழுதியுள்ளான்:

"பெருமையோ அல்லது பேராசையோ இல்லாத
ஓர் அணுகுமுறை எந்தனுக்கு வேண்டுமே!"

## இன்னும் கூடுதலான அறிகுறிகள்

ஆவிக்குரிய பெருமை எனும் இந்த நோயின் மற்றொரு வடிவமானது, குற்றம் கண்டுபிடிக்கும் மனோ நிலையில் வெளிப்படுகின்றது. ஒருவர் சாட்சி கூட்டத்திலோ அல்லது பெரோயா வகுப்பிலோ கலந்துகொள்கையில், தன்னுடைய சாட்சியைத் தவிர வேறு எந்தச் சாட்சியும் அவருக்கு உண்மையில் நல்ல சாட்சியாகத் தோன்றவில்லையெனில், கலந்தாய்வு செய்யப்படும் ஏதோ ஒரு கேள்விக்குத் தன்னுடைய பதிலைத் தவிர வேறெந்தப் பதிலும் சரியான பதிலாக அவருக்குத் தோன்றவில்லையெனில், கூடுகையை எப்படி நடத்திட வேண்டும் என்று அறிந்துள்ள (தகுதிவாய்ந்த) மூப்பரை அவரால் அங்கு ஒருபோதும் பார்க்க முடியவில்லையெனில் - இவைகள் ஆவிக்குரிய பெருமைக்கான அபாயக்கரமான அறிகுறிகளாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

மேற்கூறியவைகள் அனைத்தும் நடக்க வாய்ப்பில்லை என்று சொல்லிட முடியாது; எனினும் அப்படியாக தொடர்ந்து நடந்துகொண்டிருக்காது என்பதில் நிச்சயமே. வேதவாக்கியம் அங்கீகரியாத நடவடிக்கைகளையோ அல்லது செய்யப்படும் ஊழியங்களானது ஆற்றல்மிக்கதாய் இருப்பதற்கு இடையூறாய் அமையக்கூடியதான மிகுந்த குறைபாடுள்ள கணிப்புகள் கணிக்கப்படும் தருணங்களையோ உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளத்தக்கதாக நாம் இப்படியானதொரு கவனம் கொடுப்பதும், நன்கு விளக்கம் அறிந்தவர்களாகவும் காணப்படுவதும் முற்றிலும் தகுதியானதே. சபைக்கான சிறந்த நலனுக்கடுத்த காரியங்கள் செய்யப்படாததை நாம் எப்போதேனும் காணும் பட்சத்தில், அதுவும் கொஞ்சம் காலம் நாம் பொறுமையாய்க் காத்திருந்த பிற்பாடும்கூட, அவைகள் சரிச்செய்யப்படப்போவதில்லை என்று நாம் அறியும் பட்சத்தில், சபையார் மத்தியிலோ அல்லது மூப்பரிடத்திலோ அல்லது மிகுந்த பலனுக்கேதுவானதும், குறைவாய்ச் சுட்டிக்காட்டுகிறதுமான ஏதேனும் விதத்தில் அத்தவற்றினைச் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியில் கவனத்திற்கு நாம் கொண்டுவருவது முற்றிலும் தகுதியானதாகவே இருக்கும். "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல்," எல்லாம் தேவனுடைய மகிமைக்காகச் செய்யப்பட வேண்டும்.

இதிலும்கூட நம் கருத்துகளுக்கு இசைவாயுள்ள அனைத்தும் தேவனுக்கு மகிமை சேர்க்கும் என்றும், நம்முடைய கருத்துகளுக்கு இசைவாயிராத அனைத்தும் அவருக்குப் பிரியமாயிராது என்றுமுள்ள சிந்தனைகளுக்குள் போய்விடாதபடிக்கு நாம் கவனமாய் இருப்பது அவசியமாகும். "ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து," 'See then that ye walk circumspectly, not as fools, but as wise…" (எபேசியர் 5:15) என்று அப்போஸ்தலன் சரியாய்த்தான் எழுதியுள்ளார். இவ்வசனத்தில் இடம்பெறும் "circumspectly"/கவனமாய் எனும் வார்த்தையானது ஒவ்வொரு விஷயத்திலும், அதிலும் விசேஷமாகச் சிந்தனைகள், நோக்கங்கள், உள்நோக்கங்கள் தொடர்புடைய விஷயத்தில் கவனமான சோதித்தறிதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்பதை நாம் அறிந்துகொள்வது நலம்.

## உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக

"என் சகோதரரே அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" என்று பரிசுத்த யாக்கோபு சரியாய்த்தான் எழுதியிருக்கின்றார் (யாக்கோபு 3:1). நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்திருந்தது போல கர்த்தருடைய ஜனங்கள் அனைவருமே ஆவிக்குரிய பெருமையினால் விசேஷமாய் எளிதில் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றபோதிலும், அவருடைய சத்தியத்தைப் பிரகடனம்பண்ணும் விஷயத்தில் ஏதேனும் விதத்தில் தொடர்புபட்டிருப்பவர்கள் அனைவரையும் ஒரு விசேஷித்த அபாயம் சூழ்ந்திருப்பதாகத் தெரிகின்றது.

கேட்கும் செவிகளுடைய அனைவரிடமும் தேவனுடைய கிருபைப்பற்றின செய்தியை அறிவிப்பது என்பது உண்மையில் ஒரு விசேஷித்த சிலாக்கியமேயாகும். இந்தச் சிலாக்கியமானது - ஒரு காலத்தில் ஊகிக்கப்பட்டதுபோன்று குருமார் வகுப்பாருக்கு மாத்திரம் உரியதல்ல என்பதினாலும்; இன்னுமாகக் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாக இருப்பவர்களும் மற்றும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும் மற்றும் சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும், இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக்

காயங்கட்டவும் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டவர்களுமான அனைவருக்கும் இச்சிலாக்கியம் உரியது என்பதினாலும் நாம் எவ்வளவாய் நன்றி ஏறெடுக்கின்றோம் (ஏசாயா 61:1). அயலகத்தாருடனும், நண்பர்களுடனுமான நம்முடைய தனிப்பட்ட (சத்திய) உரையாடல்களையும் உள்ளடக்கும் இச்சிலாக்கியத்தினிமித்தம் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். தேவனுடைய ஸ்தானாபதிகளாக இருப்பதும் மற்றும் அவரது நாமத்தில் வரவிருக்கின்ற இராஜ்யம் குறித்தும், இயேசுவினுடைய மரணத்தின் மூலமாக தேவன் ஏற்கெனவே பண்ணியுள்ளதான மாபெரும் ஏற்பாடுகளைக்குறித்தும், இதன் பிரம்மாண்டமான விளைவுகுறித்தும், அந்த இராஜ்யத்திற்கான இராஜாக்களும், ஆசாரியர்களும் எப்படி இப்பொழுது உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, தங்கள் எதிர்க்கால வேலைக்காய் ஆயத்தமாகுவதற்குச் சுபாவ மாறுதலை அடைந்துவருகின்றனர் என்பது குறித்தும் அறிவிப்பது என்பதும் எப்படிப்பட்டச் சிலாக்கியமாயிருக்கிறது!

தூது/செய்தி பழையதாய் இருப்பினும், அது சரியாய் முன்வைக்கப்படுகையில் மிகவும் புதியதாகவும், வியப்பானதாகவும், கேட்கும் உத்தம இருதயத்தாரிடம் ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறதாகவும் காணப்படும். இந்தச் சாதாரணமான மனுஷன் (அ) மனுஷி எப்படி இத்தகைய வியத்தகுக் காரியங்களைப் புரிந்துகொண்டார்கள் மற்றும் இவ்வளவு அருமையாய்ச் சித்தரித்து விளக்கமுடிபவராய் இருக்கின்றனர் என்று நம்மைக்குறித்து தூதைக் கேட்ட அந்த உத்தம இருதயத்தார்கள் ஆச்சரியப்படுகின்றனர். அநேகமாக அவர்களது இந்த வியப்பை வெளிப்படுத்தவும் செய்கின்றனர். அத்தருணத்தில்தான் ஆவிக்குரிய பெருமை எனும் நோயினால் பிடிக்கப்படுவதற்கான அபாயகரமான தருணம் வருகின்றது. மனமானது கொஞ்சம் தடுமாறிவிடுகின்றது மற்றும் 'மனுக்குலத்தில் திரளான ஜனங்களானவர்கள் இவைகள் எல்லாவற்றையும் குறித்துக் கொஞ்சமேனும் அறியாமலிருக்க மற்றும் வேத வசனங்களைக் கையாளுகிற மிகுந்த திறமிக்க மற்றும் ஆற்றல்மிக்க ஊழியக்காரர்களில் சிலர்கூட வேதாகமத்தின் இக்காரியங்கள் குறித்து அறியாதிருக்க, நான் இவைகளையெல்லாம் அறிந்திருப்பது ஆச்சரியமான காரியந்தான்' என்று நீ எண்ணிடுவாய்.

ஆவிக்குரிய பெருமை எனும் நோயினை நீ உள்வாங்கிடும்போது, உன் முதுகெலும்பு சந்தேகத்திற்கிடமின்றி நிமிர்ந்திடும். உன்னை நீ மிக முக்கியமானவனாக எண்ணிடுவதற்கும் மற்றும் மிகவும் மேன்மையானவனாய்த் தோற்றமளிப்பதற்கும், பெரியவனாய் எண்ணிடுவதற்கும் நீ ஆரம்பிப்பாய். உன்னுடைய குரல்கூட இதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கும் மற்றும் நீ பேசுவதைக் கேட்கிறவன், இதனை கவனிப்பான்; அவன் நீ பேசுவது கர்த்தருடைய வார்த்தையல்ல மாறாக நீ காண்பித்துக்கொள்கிறது போல, உன்னால் உருவாக்கப்பட்ட ஏதோ காரியங்கள்தானென - உன்னால் கொடுக்கப்பட்ட ஏதோ விளக்கந்தானென எண்ணத்துவங்கிடுவான் மற்றும் இதினிமித்தம் நீ பேசினவைகளை அவன் பொருட்டாய் எடுத்துக்கொள்கிறதில்லை.

சத்தியத்தை மற்றவர்களுக்குச் சொல்வதற்கான வாய்ப்புகள் தொடர்புடைய விஷயத்தில் மிகவும் மேட்டிமை மற்றும் பெருமையடித்துக்கொள்வதற்குப் பதிலாக, கர்த்தருடைய ஜனங்கள் மிகுந்த தாழ்மைக் கொள்வது தகுதியான மனோநிலையாக இருக்குமென அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். நமது அபாத்திர நிலையை நாம் உணர்ந்திட வேண்டும். திட்டம் நம்முடையதல்ல என்றும், நாம் அதைக் குறித்துக் கேட்டறிந்தவர்களாக மாத்திரமே காணப்படுகின்றோம் என்றும், அது உண்மையில் தேவனுடைய திட்டமேயாகும் என்றும், நாம் அதைப் பிரகடனப்படுத்தும் அவரது ஊழியர்களெனக் கனப்படுத்தப்பட்டிருக்கின்றோம் என்றும் நாம் உணர்ந்திட வேண்டும். ஆனால் நம்முடைய ஏதேனும் ஞானத்தினாலோ அல்லது ஏதேனும் திறமையினாலோதான் செய்தியானது அருமையாய்த் தோற்றமளிக்கின்றதென ஏதேனும் எண்ணத்தினை வெளிப்படுத்துவோமானால், அவ்வளவாய் நாம் கர்த்தருக்கு உரியதான மகிமையை நமக்கென எடுத்துக்கொள்கிறவர்களாக இருப்போம் மற்றும் தற்காலத்திலும், எதிர்க்காலத்திலும் கர்த்தரினால் பயன்படுத்தப்படுவதற்கு நாம் பாத்திரவான்களாய் இருக்கின்றோம் என்பதை நிரூபிக்க தவறுவதற்கேற்ப, நமக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறவர்களாக இருப்போம். கர்த்தருடைய ஸ்தானாபதிகளெனப் பேசிடுவதற்கும், அவரது மகத்துவங்களையும், திட்டத்தையும் குறித்து அறிவிப்பதற்குமான அருமையான சிலாக்கியமானது - பலத்தில் மேம்பட்டிருப்பவர்களும், இந்த மிக அருமையான செய்தியை அறிவிப்பதில் அவரால் பயன்படுத்தப்பட முடிகின்றவர்களுமாகிய தேவத்தூதர்களை அவர் பெற்றிருந்த போதிலும், நமக்கு அவர் சிலாக்கியம் அருளியுள்ளார் எனும் எண்ணம் - நம்மைத் தாழ்மைக்கொள்ள செய்திட வேண்டும்.

## மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் மீதான விசேஷித்த சோதனை

சபையாரால், மூப்பர்களென மற்றும் உதவிக்காரர்களெனத் தேர்ந்தெடுக்கப்படும் அருமையான சகோதரர்கள் தங்கள் தாழ்மையின் விஷயத்தில் இன்னும் பரீட்சைக்குள்ளாகுகின்றனர். இந்த ஸ்தானத்தில் ஆவிக்குரிய பெருமை என்று அழைக்கப்படும் நோயினால் பிடிக்கப்படுவதற்குரிய மகாபெரும் அபாயமில்லாமல் எவரும் காணப்பட முடியாது. நூதன சீஷன், புதிதானவன், சத்தியத்தில் குழந்தையாய் இருப்பவன் ஒருவன், எவ்வளவுதான் அறிவுமிக்கவனாகவும், எவ்வளவுதான் படித்தவனாகவும் இருப்பினும், அவன் மூப்பனாகவோ அல்லது உதவிக்காரனாகவோ தெரிந்தெடுக்கப்படக்கூடாது என்று பரிசுத்த பவுலினால் கொடுக்கப்பட்டதான எச்சரிப்பைச் சிலசமயம் கர்த்தருடைய ஜனங்கள் முற்றிலுமாக மறந்துபோய்விடுகின்றனர்; அவன் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்பதற்கான காரணம் என்னவெனில், அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளதுபோல அவன் தேவனுடைய பிள்ளைக்குச் சத்துருவாகிய - ஆவிக்குரிய பெருமையினால் விசேஷமாய் எளிதில் பாதிக்கப்படக்கூடியவனாய் இருப்பான் (1 தீமோத்தேயு 3:6).

ஆனால் நூதன சீஷன் மாத்திரம் அபாயத்தில் இல்லை. கர்த்தருடைய ஜனங்களுக்கு ஊழியம் புரிவதற்கென நியமிக்கப்படும் அனைவரும், ஆவிக்குரிய வீழ்ச்சிக்கும், இரண்டாம் மரணத்தில் அழிவதற்கும் ஏதுவான மாபெரும் சோதனைக்குள்ளாகுகின்றனர். அநேகமாக தங்களது ஊழியக்காரர்களெனத் தேர்ந்தெடுக்கப்படப்போகிறவர்களின் விஷயத்தில், இவைகளையெல்லாம் கர்த்தருடைய ஜனங்கள் போதுமான அளவுக்குச் சிந்திக்காதவர்களாய் இருக்கின்றனர். அநேகமாக சகோதரர்களுடைய வாக்குகளின் (Votes) அடிப்படையில், ஊழியத்திற்கான இந்த ஸ்தானங்களை ஏற்றுக்கொள்பவர்களும்கூட, இதை ஏற்றுக்கொள்வதினால் தாங்கள் என்னென்ன அபாயங்களுக்குள்ளாவார்கள் என்று உணர்ந்துகொள்ளுகிறதுமில்லை. ஒருவேளை உணர்ந்திருப்பார்களானால், சந்தேகத்திற்கிடமின்றி அந்த உணர்ந்துகொள்ளுதலானது, அதனை ஏற்றுக்கொள்வதில் அவர்களைத் தயக்கம் கொள்ளச்செய்திடும்; மற்றும் ஊழியத்திற்கென அவர்கள் மிகவும் தெளிவாய்/வெளிப்படையாய் நியமிக்கப்படாதது வரையிலும், ஊழியஞ்செய்ய முற்படாமல் இருப்பதற்குத் தாழ்மையானது அவர்களை நிச்சயமாய் வழிநடத்திடும்.

ஆனால் நாம் எதைப் பார்க்க நேரிடுகின்றது? அந்தோ பரிதாபம்! மூப்பர் அல்லது உதவிக்காரர் ஸ்தானம் அடைந்திடுவதற்கான மனநிலையைச் சிலரிடத்தில் பார்க்கின்றோம். தாங்கள் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாகப் பேரம் பேசிடுவதற்கும் மற்றும் 'விரும்பியதை அடைய இரகசியமாகச் செல்வாக்கினைப் பயன்படுத்திடுவதற்குமான' மனோ நிலையைக்கூடச் சிலரில் பார்க்கின்றோம்; தாங்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லையெனில், எரிச்சலடையும் மனோநிலையைச் சிலரில் பார்க்கின்றோம்; தேர்ந்தெடுத்தலின்போது தங்களுக்கு எதிராக வாக்களிப்பவர் யாரிடத்திலும், கோபங்கொள்ளும் மனோநிலையை சிலரில் பார்க்கின்றோம். அந்தோ பரிதாபம்! அந்தோ பரிதாபம்! ஒருவேளை இந்த அருமையான சகோதரர்கள் தங்கள் மனதில் எது அரித்துக்கொண்டிருக்கின்றது என்றும் மற்றும் இப்படியெல்லாம் நடந்துகொள்ளுவதற்கு எது தூண்டிக்கொண்டிருக்கின்றது என்றும் உணர்ந்துகொள்வார்களானால் - ஓ! அவர்கள் எப்பேர்பட்ட வித்தியாசமான வழிமுறையை/போக்கினை எடுத்துக்கொள்பவர்களாய் இருப்பார்கள்! சகல சாந்தத்திலும், தாழ்மையிலும், அப்படிப்பட்டதான பொறுப்பை உடைய ஸ்தானத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, அவர்கள் அச்சம் கொள்ளவேண்டும். சபையில் உள்ள அனைவருமே, தங்களது சத்திய அறிவிற்கேற்ப போதகர்களாகுவதற்குத் தகுதிப்பட்டிருக்கவேண்டும் என்றபோதிலும், போதகர்களாய் இருப்பவர்கள் கடுமையான சோதனைக்குள்ளாவார்கள் என்று அறிந்து போதகராகாதிருப்பதே பாதுகாப்பானது என்பதுதான் எச்சரிப்பாய் இருக்கிறது. கர்த்தருக்கும் மற்றும் சகோதர சகோதரிகளுக்குமான பொறுப்புணர்வு மாத்திரமே ஒருவரை இப்படியாக ஊழியம்புரிந்திட விரும்பிடுவதற்கு, சபையில் கர்த்தருடைய பிரதிநிதியாக விரும்பிடுவதற்குத் தூண்டிட வேண்டும்.

மூப்பனாகுவதற்கான அல்லது பெரியவனாகுவதற்கான அதிகம் பிரியமும், பெருமையின் தன்மையிலுள்ள அனைத்தும், அந்நபருக்கு அபாயகரமாய் மாத்திரமல்லாமல், அவன் சம்பந்தப்பட்டுள்ளதான முழுச்சபையாருக்கும்கூட அபாயகரமானதாகும். நோயின் தொற்றுத்தன்மைபோன்று இந்த ஆவியும் தொற்றுகின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஆவிக்கு எதிரான சண்டை, வீண் பெருமை, பேராசை விரைவில் வெளிப்படும். இதைத் தொடர்ந்து கோபம், துர்க்குணம், பொறாமை, பகைமை, தீமைபேசுதல், பொல்லாத சம்சயங்கள்

கடந்து வருகின்றது. இவைகளைப் பரிசுத்த பவுல் அடிகளார், "மாம்சம் மற்றும் பிசாசின் கிரியைகள்" என்று நம்மிடம் கூறுகின்றார். இந்தப் பாதகம் அனைத்தும், எதிராளியானவனுடைய இந்த ஆவி அனைத்தும் - ஒன்றில் சபையாருடைய ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மூப்பர்களினாலோ அல்லது வழிநடத்துனர்களினாலோ, இல்லாவிடில் மூப்பர்களாகவோ, வழிநடத்துனர்களாகவோ ஆகிடுவதற்கு ஆசைகொண்டுள்ளதான ஒருவராலோ, ஒன்றிற்கு மேற்பட்டவர்களாலோ சபையாருக்குள் கொண்டுவரப்படக்கூடிய வாய்ப்புள்ளது.

இப்படியாக நடைபெறுகின்றது என்பதினால் நாம் வருத்தமடைகின்றோம்; இன்னுமாக தேவனுடைய அருமையான பிள்ளைகள் அநேகரைக்கொண்டுள்ள (பல்வேறு இடங்களிலுள்ள) அநேகம் சபைகளில், முன்மாதிரியாகக் காணப்பட்டிருந்த அநேகர், இந்நிலைக்குள்ளாகியுள்ளனர் என்பதையும் நாம் அறிவோம். கர்த்தருடைய ஆவியானது முழுக்கட்டுப்பாட்டையும் பெற்றிருப்பதற்குப் பதிலாக, தீமையான ஆவி (அ) பண்பானது, கூடுகைகளில், பல்வேறு விதங்களில் அடிக்கடி வெளிப்படுகின்றதாய் இருக்கின்றது. எண்ணிக்கையில்/விரிவாக்கத்திலும் சரி, ஆவிக்குரிய விஷயத்திலும் சரி, சபையார் வளர்வதற்குத் தவறுகின்றனர். இவைகளே ஆவிக்குரிய பெருமை எனும் இந்தத் தீமையின் கசப்பான கனிகளாக இருக்கின்றன.

வாட்ச் டவர் வெளியீட்டின் வாசகர்கள் அதன் உண்மையான தோற்றத்தையும், கொடூரமான தன்மையையும் காணத்தக்கதாக, அவர்கள் முன்பாக அதை வெளிப்படுத்துவதற்கான மொழியின் ஆற்றல் எங்களுக்கு இருக்குமானால், நிச்சயமாய் அது சீயோனில் அச்சத்தை உண்டுபண்ணியிருக்கும்! இப்படியாக ஆவிக்குரிய பெருமைக்குள்ளாகுபவர்கள் பெரும்பாலும் அருமையான பாத்திரங்களாகவும், உண்மையில் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதான தேவப் பிள்ளைகளாகவும் காணப்படுகின்றனர் என்று கவனிக்கப்படத்தக்கதாக வாட்ச் டவரிலிருந்து எச்சரிப்பு மணியடிக்க நாங்கள் விரும்புகின்றோம். அப்படியானவர்களில் சிலர் கடந்த காலங்களில் ஓட்டத்தை நேர்த்தியாய் ஓடினவர்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம். இவர்களது குணலட்சணங்களானது, தவறான திசையில் மாறியுள்ளதற்கான அறிகுறிகளைக் காண்கையில் நாம் மிகவும் வருத்தமடைகின்றோம்! "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்று சொன்னவருக்குச் செவிச் சாய்ப்போமாக (மத்தேயு 7:16).

## ஆவிக்குரிய பெருமைக்கு எதிராக விழித்திருத்தல்

ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளது போன்று, ஆவிக்குரிய பெருமை எனும் இந்த நோயின் விஷயத்திலுள்ள மிக அபாயகரமான காரியம், இந்நோயைப் பெற்றிருப்பவர்கள், தாங்கள் (நோயைப்) பெற்றிருப்பதை அறியாமல் இருப்பதேயாகும். மற்றுமொரு சிரமம் - அவர்களைத் திருத்திடுவதும் மற்றும் நோயைப் பெற்றிருப்பதை அவர்கள் அறியப்பண்ணிடுவதும் கூடாத காரியமாகும். இதுகுறித்து ஒருவேளை அவர்களிடம் பேசப்பட்டால், தங்களால் நன்மையடைந்தவன், தங்களது சத்துருவாகியுள்ளான் என்றும், தங்கள் மீது அவன் பொறாமைக்கொண்டுள்ளான் என்றும், தங்கள் ஸ்தானம், முதலானவைகளை எடுத்துக்கொள்ள விரும்புகின்றான் என்றும் உடனடியாக எண்ணிடுவார்கள். ஆகையால் ஒன்றில் சபையார் உதவிச்செய்தாலொழிய, இல்லாவிடில் கர்த்தருடைய வழிநடத்துதல் இடைப்பட்டாலொழிய, மற்றப்படி இந்நோயானது கிட்டத்தட்டக் குணப்படுத்தப்பட முடியாது.

இத்தகைய பெருமையானது வளருவதைச் சபையார் கவனிக்கும் பட்சத்தில், சபையார் உடனடியாகவும் மற்றும் அன்புடனும் மற்றும் நல்நோக்கங்களுடனும் செயல்படும் வண்ணமாக - ஆவிக்குரிய பெருமை - மேட்டிமை அடைந்துவரும் ஒரு நபரைச் சபையாருக்கென்றுள்ள எந்த ஓர் ஊழியத்திற்கென்றும் தேர்ந்தெடுக்காமல் மாத்திரம் காணப்பட வேண்டும். இப்படிச் செய்ததின் நிமித்தம் அந்நபர் கோபமடைந்தாரெனில், அவருடைய மற்றும் சபையாருடைய நன்மைக்கெனச் சுயநலவாதியான அந்நபர் அமைதியாய் தணிந்திடவும் மற்றும் பொறுமை காக்கவும் என்று அவரை விட்டுவிடுவது அவசியமெனக் கருதப்பட வேண்டும். இப்படியாய்ச் சபையார் உதவி செய்ய தவறிடும் போது, அந்நபருடைய நன்மைக்கென - ஒன்றில் தொழிலில் பின்னடைவுகள் (அ) இழப்புகள் மூலம் அல்லது சரீரப்பிரகாரமான நோய் மூலம் அல்லது அந்நபருக்குச் சிறந்ததாயிருக்குமென்றுள்ள ஏதோ ஒன்றின் மூலம், அந்நபரை கர்த்தர் சிட்சிப்பது தவிர, வேறேதும் வழியில்லை. கர்த்தருடைய பிள்ளையாயும் மற்றும் நீதியில் சரிப்பண்ணப்படுவதற்கு அவசியமான நிலையில் காணப்படுபவர்களாயும் உள்ள ஒவ்வொருவருக்கும், இதைக் கர்த்தர் செய்வார் என்று நாம் நம்பிக்கைக்கொண்டிருக்கிறோம்.

"கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து (தண்டிப்பார்)" என்று எழுதப்படவில்லையா? (உபாகமம் 32:36).

## இந்தப் பாவத்திற்கான ஒரு வேதாகம உதாரணம்

இந்தப் பாவம் தொடர்புடையதான அநேக உதாரணங்களை வேதாகமம் கொடுக்கின்றதாய் இருக்கின்றது, எனினும் நாம் மிகவும் பிரசித்திப்பெற்ற ஒருவரைத் தேர்ந்தெடுக்கின்றோம். பழைய ஏற்பாட்டின் காலங்களில் ஒரு பரிசுத்தமான, கர்த்தருக்குப் பிரியமான, உயர்பண்புகளுள்ள, சுயத்தைப் பலிச் செலுத்தின ஒரு மனுஷன், கர்த்தருடைய தீர்க்கத்தரிசியானவர் காணப்பட்டார். அவர் கர்த்தருக்கும் மற்றும் அவரது ஜனங்களுக்கும் உண்மையாயும், அருமையாயும், நாற்பது வருடக் காலங்கள் ஊழியம் புரிந்தவராவார்; ஆனால் முடிவிலோ அவர் தன்நம்பிக்கை - ஆவிக்குரிய பெருமை எனும் இந்தப் பாவத்துக்குள்ளானார். இவைகள் அனைத்திலும் ஆச்சரியம் என்னவெனில், இந்த மனுஷன் தன் ஊழியத்தினுடைய துவக்கத்தில், "பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" என்று வேதாகமத்தில் நமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதேயாகும் (எண்ணாகமம் 12:3).

ஆம்! மோசேயே அந்தப் பெரும் சிறப்புமிக்க நபராவார்; இவர் கர்த்தருடைய ஊழியக்காரரெனக் காணப்பட்ட ஆரம்பக்காலங்களில் மிகவும் சாந்தகுணமுள்ளவராகவும், மிகவும் தாழ்மையுள்ளவராகவும் காணப்பட்டார்; ஆனால் தனது ஊழியத்தின் முடிவிலோ, கர்த்தருக்கு மகிமையைச் சாற்றுவதற்குப் பதிலாக ஆவிக்குரிய பெருமை அல்லது தன்னம்பிக்கைக்கொண்டதற்கான தண்டனையாக, வாக்களிக்கப்பட்டத் தேசத்திற்குச் செல்வதில் தடைப்பண்ணப்பட்டார். அச்சூழ்நிலையினை நாம் நினைவுக்குக் கொண்டுவருகின்றோம்: கர்த்தருடைய விசேஷித்த ஊழியக்காரனாகிய மோசே, கானானை நோக்கினப் பிரயாணத்தில் இஸ்ரயேலரை எகிப்திலிருந்து, செங்கடல் வழியாய் வனாந்தரத்திற்குள் வழிநடத்தினார். கர்த்தருடைய கட்டளையின் பேரில், பிரயாணத்தின்போது, அவர் அநேகம் அற்புதங்களைச் செய்தார். இதில் ஒன்று ஜனங்கள் தண்ணீருக்காய்க் கடும் தாகம் கொண்டபோது, கன்மலையை அடித்த சம்பவமாகும். தேவன் கன்மலையை அடிக்கும்படிக்குக் கட்டளையிட்டார் மற்றும் ஜனங்கள் புத்துணர்வு அடையத்தக்கதாக, கன்மலையினின்று தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது.

வேதாகமத்தின்படி, அந்தக் கன்மலையானது கிறிஸ்துவுக்கு - "யுகங்களுக்கடுத்த கன்மலைக்கு" அடையாளமாய்க் காணப்படுகின்றது (1 கொரிந்தியர் 10:4). கர்த்தருடைய ஏற்பாட்டின்படியே - உத்தம இஸ்ரயேலர்களாகி, எகிப்தினின்று - உலத்தினின்று - கீழ்ப்படிதலுக்குள்ளும், கர்த்தருடன் ஐக்கியத்திற்குள்ளும் - கடந்துவருபவர்களாகிய ஆதாமின் சந்ததியார் யாவருக்கும் ஜீவத்தண்ணீரானது, இயேசுவிடமிருந்து வரத்தக்கதாக "யுகங்களுக்கடுத்த இந்தக் கன்மலையானது" அடிக்கப்பட்டது.

இப்படியாகக் கன்மலையை அடித்து, 40-வருடங்களுக்குப் பிற்பாடு, இஸ்ரயேலர்கள் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கான காலத்திற்காகக் காத்திருந்து, இங்கும் அங்குமாகப் பிரயாணிக்கையில், அவர்கள் மீண்டுமாக - வறண்டதும், தண்ணீரற்றதுமான இதே இடத்திற்கு வந்தார்கள். ஜனங்கள் மோசேயிடம் கூக்குரலிட்டனர் மற்றும் என்ன செய்யப்பட வேண்டுமென, ஜனங்கள் சார்பாக மோசே கர்த்தரிடத்தில் கூக்குரலிட்டார். மோசே முன்பு அடித்திட்டதான கன்மலையை நோக்கிப் பேச வேண்டும் என்றும், அப்பொழுது தண்ணீர் வரும் என்றும் கர்த்தருடைய பதில் காணப்பட்டது. ஆனால் தகப்பன் பிள்ளைகளைக் கையாளுவதுபோன்று, நாற்பது வருடங்கள் இஸ்ரயேலர்களை வழிநடத்திட்டதான மோசே, இயல்பாகவே அதிகளவில் தன்னம்பிக்கை அடைந்தவராகிவிட்டார். அவரால் இத்தகையதொரு அனுபவத்திற்குள்ளும் கடந்து சென்று, அவரால் பூமியிலேயே சாந்தமுள்ள மனிதராக தொடர்ந்து காணப்பட்டிருக்க முடியும்.

இப்பொழுது மோசே கர்த்தருடைய கட்டளையைப் புறக்கணித்தவராக, கன்மலையினிடத்திற்குச் சென்று, ஜனங்களை நோக்கி "கலகக்காரரே உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ?" என்று கூறி, கன்மலையைத் தன் கோலால் இரண்டாம் முறையாக அடித்தார் (எண்ணாகமம் 20:1-12). அந்தோ பரிதாபமான மோசே! இவர் மகிமை அனைத்தையும் கர்த்தருக்குச் சாற்றுவதற்குப் பதிலாக, தனக்கு எடுத்துக்கொண்டவரானார். தான் பண்ணின தவற்றை மோசே உடனடியாக உணர்ந்துகொண்டார். இதுவே அவர் செய்திட்ட ஒரே தவறு என்றுகூடச் சொல்லப்படலாம்;

எனினும் இதினிமித்தம் அவர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கான சிலாக்கியத்தின் விஷயத்தில், கர்த்தரால் மறுக்கப்பட்டார் மற்றும் பிரவேசிப்பதற்குப் பதிலாக யோர்தான் நதியின் ஒரு பக்கத்திலிருந்து தேசத்தைப் பார்த்திடுவதற்கும், அங்கேயே அவரை அடக்கம்பண்ணிடுவதற்கும் மாத்திரமே கர்த்தர் அனுமதி வழங்கினார்.

ஆவிக்குரிய பெருமையும், தன்னம்பிக்கையும், கர்த்தருடைய பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்கதாய் இருக்கின்றது என்று இந்த ஓர் உதாரணத்திலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம் அல்லவா? நம்முடைய எச்சரிப்பிற்காக எழுதப்பட்டுள்ளதான இந்த மாபெரும் பாடத்தினின்று வேறு ஏதேனும் கருத்துகளை நாம் அடையப்பெறலாமா?

## ஆறுதலான ஒரு வார்த்தை

மோசேயைப்பார்க்கிலும் தாங்கள் மோசமாய் நடந்துள்ளனர் என்றோ அல்லது அதிகம் தன்னம்பிக்கையுடன் தாங்கள் இருந்துள்ளனர் என்றோ அல்லது கர்த்தரைக் கனப்படுத்தும் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையற்றவர்களாக தாங்கள் இருந்துள்ளனர் என்றோ அல்லது அதிகமாய் ஆவிக்குரிய பெருமையுடன் தாங்கள் இருந்துள்ளனர் என்றோ வருந்துகின்றவர்களுக்கு ஆறுதலாக, இங்குக் குறிப்பிடப்பட்டிருக்கும் தண்டனையானது கடுமையாய் இருப்பதற்கான காரணம், அது நிழலின் ஒரு பாகமாய்க் காணப்படுவதினாலேயே ஆகும் என்பதைக் கவனத்தில் கொண்டுவருகின்றோம். கன்மலையை முதல்விசை அடிப்பது என்பது, நமது கர்த்தருடைய சிலுவை மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றபடியால், கன்மலையை இரண்டாம்விசை அடிப்பது என்பது, எபிரெயர் 6:6-ஆம் வசனத்தில் பரிசுத்த பவுலினால் விவரிக்கப்பட்டுள்ளதுபோன்று, தேவனுடைய குமாரனை மறுபடியும் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்துகிறதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. (இரண்டாம் விசை) கன்மலை அடிக்கப்படுதலானது, இயேசுவையும், அவரது போதனைகளையும், அவரது நோக்கங்களையும் வெளிப்படையாய் மறுதலிப்பதை அடையாளப்படுத்துகின்றபடியால், யோர்தானைக் கடந்து கானானுக்குச் செல்வதில் மோசே தடைப்பண்ணப்பட்டது என்பது இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. மோசே ஒருபோதும் கானானுக்கு வரமாட்டார் என்றோ, அவர் இரண்டாம் மரணம் மரித்துவிட்டார் என்றோ நாம் எண்ணிடாமல், மாறாக இந்த ஒரு நிழலானது, அவரது அனுபவங்களில் காண்பிக்க மாத்திரமேபட்டுள்ளது என்றே எண்ணிட வேண்டும்.

ஆவிக்குரிய பெருமையை வெளிப்படுத்தினவர்களாகவும், கர்த்தருடைய நாமத்திலும், சபையின் நாமத்திலும் செய்யாமல், தங்களுடைய நாமத்தினால் காரியங்களைச் செய்பவர்களாகவும் காணப்படும் சகோதரர்கள், மரணத்திற்கேதுவான பாவத்தைச் செய்துள்ளதாக நாம் எண்ணியும் விடக்கூடாது. எனினும் ஆவிக்குரிய பெருமையினால் பயங்கரமான அபாயம் ஏற்படும் என்றும், அதிலே தொடர்ந்து காணப்படும் பட்சத்தில், நிச்சயமாய் இரண்டாம் மரணம் நேரிடும் என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இதை உணர்கையில், நம்மில் காணப்படும் அதற்குரிய ஒவ்வொரு அறிகுறியை அழித்துப் போடுவதற்கு மாத்திரமல்லாமல், அந்நோய் நம்மைத் தொற்றாதபடிக்கு அல்லது ஏதேனும் விதத்தில் நாம் அதன் ஆதிக்கத்தின்/தாக்கத்தின் கீழ் வந்துவிடாதபடிக்கு அல்லது அதன் அறிகுறிகள் எதையேனும் பெற்றுவிடாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருப்பதற்கும் நாம் எவ்வளவு கவனத்துடனும், எவ்வளவு வைராக்கியத்துடனும் காணப்படுவோம்!

## ஆவிக்குரிய பெருமை - தடுப்பு மற்றும் குணப்படுத்துதலுக்கான நடவடிக்கைகள்

இந்நோய்க்கு ஆளாகிவிட்டால், இதற்கான சிகிச்சையின் விஷயத்திலுள்ள சிரமத்தை நாம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். சிரமத்தின் பிரதான அம்சம் - இந்நோய் மனசாட்சியை அழிக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதேயாகும். மனமானது - பொன்னான பிரமாணத்தினுடைய எளிமையான கொள்கைகளுக்கும், சகோதரருக்கான நமது கர்த்தருடைய புதிய கற்பனையினுடைய, இன்னும் மேலான பிரமாணத்திற்கும் - ஏறக்குறைய மந்தமாகிவிடுகின்றது. சபையாருக்கான ஊழியக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலோ அல்லது சபை கூடுகைகளை ஒழுங்குப்படுத்தும் விஷயத்திலோ சபையாரைக் கட்டாயப்படுத்துவதற்கான முயற்சிகள் ஒவ்வொன்றிலும், பொன்னான பிரமாணம் புறக்கணிக்கப்படும் காரியம் வெளிப்படுகின்றது.

கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள கட்டளைகள் தெரிந்தவைகளாயிருக்க, சபையாரிடமே அதிகாரம் உள்ளது என்பது அடையாளம் கண்டுகொள்ளப்பட்டிருக்க, இதை மூப்பர் ஒருவர் மாற்றிடுவதற்கோ அல்லது வேறுமாதிரியாக்கிடுவதற்கோ முற்படுகையில், அவன் தனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றானோ, அதை அவன் மற்றவர்களுக்குச் செய்யாமல் இருப்பது போன்று காணப்படும். சபையாரில் ஒருவனாக, அவன் எந்த ஒரு காரியத்திலும் கர்த்தர் சித்தம் குறித்த தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்கு உரிமைப் பெற்றிருக்கின்றான். அவன் தனது கணிப்பை வெளிப்படுத்துவதற்கு உரிமையுடையவனாய் இருக்கின்றான். ஆனால் மற்றவர்கள் தங்கள் கணிப்பை வெளிப்படுத்துவதைத் தடுத்திடுவதற்கு அவனுக்கு எந்த உரிமையும் இல்லை; மற்றும் இப்படிப்பட்டதான (அவனது) ஒவ்வொரு தலையிடுதலானது, பொன்னான பிரமாணத்தை மீறுவதாகவும், அன்பின் பிரமாணத்தை மீறுவதாகவும் மற்றும் தேவனைக் கனப்படுத்திட வேண்டும் என்றுள்ள முதலாம் கற்பனையை மீறுவதாகவும் இருக்கும்; ஏனெனில் இம்மாதிரியான காரியங்களுக்காக அருளப்பட்டுள்ளதான தெய்வீக ஒழுங்குமுறைகளைப் புறந்தள்ளுவதை, அவனது தலையிடுதலானது குறிக்கின்றதாயிருக்கும்.

ஆனால் மூப்பர் ஒருவர் பொன்னான பிரமாணத்தினுடைய கொள்கையினை எதிர்ப்பவராகக் காணப்பட்டு சபையார் மீது ஆதிக்கம் செலுத்தவும், தன் இஷ்டப்படி, தன் விருப்பத்தின்படி சபையார் செய்யத்தக்கதாக, அவர்களை வசப்படுத்திடவும் அல்லது கட்டாயப்படுத்திடவும் முயற்சிக்கையில், அவன் தன் மனதையே சீரழிக்கின்றவனாயிருப்பான். அவனது மனசாட்சி மழுங்கிப்போய் விடுகின்றது. தன்னிடத்திலுள்ள தவற்றைத் தெளிவாய்க் கண்ட பிற்பாடும், அதைத் திருத்திடுவதற்குரிய கொள்கைகளைப் புறக்கணிப்பதன் மூலம் தன் மனசாட்சியைத் திரும்பத் திரும்ப மீறுகிறவன், தன் மனசாட்சியைப் படிப்படியாய் அழித்துப்போடுகிறவனாய் இருப்பான்.

ஒரு விஷயத்திலுள்ள உண்மை அல்லது போலியை, நீதி அல்லது அநீதியை, சரி அல்லது தவறை உறுதிப்படுத்திக்கொள்வதற்கென்று நம்முடைய பகுத்துணர்தலுக்கு ஒப்புவிக்கப்படும் பல்வேறு காரியங்களின் விஷயத்தில் பகுத்துணர்வதற்கு உதவியாக மனசாட்சியே அளவுகோலாகக் காணப்படுகின்றது. இந்த அளவுகோலானது மிகவும் நயமற்றதாகவோ அல்லது மிகவும் நேர்த்தியானதாகவோ காணப்படலாம். இது மிகவும் நுணுக்கமாய் வேற்றுமை கண்டறியும் தன்மையுடையதாகவோ அல்லது காரியங்களை நயமற்றும், பக்குவம் இல்லாமலும் மாத்திரம் பார்க்கக்கூடியதாகவோ காணப்படலாம். கிறிஸ்தவன் ஒருவன் நீண்டகாலமாய்க் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் காணப்படுவானானால், அவன் மிகவும் உணர்வுமிக்க மனசாட்சியை உடையவனாய் இருக்க வேண்டும் மற்றும் ஜீவியத்தின் காரியங்கள் தொடர்புடையதாக எழும்பும் கேள்விகள் அனைத்தின் விஷயத்திலும் சமநிலையை அடையத்தக்கதாக தேவனுடைய வார்த்தைகளிலிருந்து அவன் (சமநிலை அடைவதற்கான) எடை கற்களை (weights) எடுக்க முடிகிறவனாகவும் மற்றும் ஜீவியத்தின் காரியங்களிலுள்ள சரி அல்லது தவறை, இவைகள் எந்தளவுக்குக் கர்த்தருக்குப் பிரியமாக அல்லது பிரியமற்றதாகக் காணப்படும் என்பதை மிகவும் துல்லியமாய்த் தீர்மானிக்க முடிகிறவனாகவும் காணப்பட வேண்டும். இந்த அளவுகோலானது வலுவற்றதாய் இருப்பது என்பது, சகல பாவங்களின் விஷயத்திலும் மகா அபாயகரமானதாகும் மற்றும் இப்படியாகவே விசேஷமாக ஆவிக்குரிய பெருமை எனும் பாவத்தின் விஷயத்திலும் காணப்படும் என்று நமக்குத் தோன்றுகின்றது. இந்த அளவுகோலானது சரிப்படுத்தப்படாதது வரையிலும், எதுவும் செய்யப்பட முடியாது.

கர்த்தருடைய ஜனங்கள் தங்கள் மனசாட்சியை முற்றிலுமாக நீதிக்குட்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்றும், தொழில் விஷயத்திலோ அல்லது ஒரு விவாதத்தின் விஷயத்திலோ அல்லது சபையின் தேர்தல் விஷயத்திலோ - ஒரு சகோதரனையோ அல்லது வேறொருவரையோ பயன்படுத்திடுவதற்கு விருப்பமற்று இருக்க வேண்டும் என்றும் எண்ணிடுவது எத்துணை முக்கியமானதாகும்! நீதியினின்றுள்ள தன் சார்பிலான சிறிதளவு மீறுதலுக்கேதுவான சிந்தனையானது, உண்மையான ஒவ்வொரு தேவபிள்ளையினுடைய இருதயத்திலும், தலையிலும் பின்வருமாறு அபாய அறிவிப்பு மணியொலியை உரக்கத் தொனிக்கச் செய்திட வேண்டும்: "நீதிக்கு இசைவாகக் காணப்படுவேன் என்று உடன்பட்டுள்ளவனாகிய நான் அநீதிக்கு இசைவாயாகியுள்ளேனோ? என்னுடைய நடக்கையிலுள்ள அநீதியான காரியம் எதையேனும் நான் கண்டுகொள்ளாமல் இருக்கின்றேனா? என் மனசாட்சியினை அசுசிப்படுத்துகிறவனாயிருந்து, அதனால் ஏற்படும் பயங்கரமான விளைவுகள் அனைத்திற்கும் நான் பொறுப்பாளியாகிவிடுவேனா?"

ஒரு தவறான போக்கினைச் சரிச்செய்து கொள்வது என்பது, இது நித்திய மரணம் அல்லது ஜீவன் சம்பந்தப்பட்டிருப்பதால், இதற்கு ஏற்ப ஜாக்கிரதையுடன் இருதயங்களிலும், மனங்களிலும் நீதியின் கொள்கைகளை மறுபடியும் நிறுவுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும். நீதியானது நம்முடைய மனங்களில் மீண்டுமாக நிறுவப்பட்டிருக்கும்போது, அது நம்முடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் கட்டுப்படுத்துகின்றதாயிருக்கும். பின்னர்ப் படிப்படியாக தவறு செய்தவர், தான் எவ்வளவு கீழ்த்தரமாய்க் கொள்கைகளை மீறியுள்ளார் என்பதையும், இராஜ்யம் பற்றின தனது எதிர்க்கால நம்பிக்கைகளை எப்படி ஆவிக்குரிய பெருமையானது கிட்டத்தட்ட அழித்துள்ளது என்பதையும் காணத் துவங்குவார். இத்தகையவர் நிச்சயமாய் இருதயத்தில் மனஸ்தாபப்பட்டு, இனிவரும் தருணங்களுக்கென முழுமையானத் தீர்மானங்களை எடுப்பவராய் இருப்பார்.

## சுயபரிசோதனைக்கான மிகுந்த அவசியம்

இந்த ஆவிக்குரிய பெருமையின் நயவஞ்சகமான தன்மைகளையும், தீயத் தாக்கங்களையும்/ஆதிக்கங்களையும் அறிந்திருக்கிற நாம், இதிலிருந்து நம்மை நாம் எப்படிப் பாதுகாத்துக்கொள்வது? நாம் நம்மைத் தேவனுடைய அன்பில்தான் காத்துக்கொண்டிருக்கின்றோம் என்றும், ஆவிக்குரிய பெருமையினிடத்திற்குத் திசைமாறிடவில்லை என்றும் எப்படி நாம் அறிந்துகொள்வது?

நம்முடைய ஆலோசனை, நாம் ஏற்கெனவே வாட்ச் டவர் வெளியீட்டில் குறிப்பிட்டுள்ள அதே ஆலோசனையாகவே உள்ளது: கர்த்தருடைய ஜனங்கள் ஒவ்வொரு நாளினுடைய துவக்கத்திலும் அவரிடத்தில் சென்று, தெய்வீக ஞானத்தையும், அவரது மேற்பார்வையையும் கேட்டுக்கொள்வதும் மற்றும் நாள்முழுவதும் ஏறெடுக்கப்பட்ட ஜெபத்திற்கேற்ப ஜீவித்திட நாடிடுவதும் மாத்திரம் போதாது; இதனோடுகூட நாளினுடைய இறுதியில், கர்த்தருக்கென்றுள்ள நமது அர்ப்பணிப்பின் வாக்குறுதிக்கேற்ப அன்றைய நாளில் செய்யப்பட்டுள்ள விஷயங்கள் குறித்தும், செய்ய வேண்டியிருக்க, ஆனால் நம்மால் செய்யாமல் விடப்பட்டுள்ள விஷயங்கள் குறித்தும், செய்யக்கூடாதவைகளாயிருக்க ஆனால் நம்மால் செய்யப்பட்டுள்ள விஷயங்கள் குறித்தும் விசேஷித்த சுயப்பரிசோதனை செய்திடுவதற்கு நாம் பரிந்துரைத்தோம். இப்படியாக ஒவ்வொரு இரவிலும் கர்த்தருடன் கணக்குகளையும், கடன்களையும் நாம் பார்ப்பது தொடரும் பட்சத்தில், அதுவும் இவைகள் உத்தமமாய்ச் செய்யப்படும் பட்சத்தில், மாறுபாடற்றதாயும், சீராயும் உள்ள மனச்சாட்சியினால் செய்யப்படும் பட்சத்தில், கர்த்தருடைய வார்த்தைகளுக்கு இசைவாய்ச் செயல்படும் இத்தகையவர்கள், தங்களைத் தேவனுடைய அன்பிலே காத்துக்கொள்பவர்களாய் இருப்பார்கள் என்று நாம் நிச்சயமாய் எண்ணலாம். இவர்கள் கிருபையில் வளருகிறவர்களாகவும், அறிவில் வளருகிறவர்களாகவும், அன்பில் வளருகிறவர்களாகவும் இருப்பார்கள் மற்றும் "பொல்லாங்கன் அவர்களைத் தொடான்."

மற்றவர்களுடைய வார்த்தைகளையும், கிரியைகளையும் கண்ணோக்கும் விஷயத்தில் மிகவும் கடுமையற்றுக் காணப்பட்டு, அவர்களிடத்தில் நல்நோக்கங்கள் வெளிப்படும் பட்சத்தில் அதை மாத்திரமே அவர்களிடத்தில் குறிப்பிடுகிறவர்களாயிருக்க, நம்முடைய சொந்த இருதயங்களையும், நம்முடைய சொந்த நோக்கங்களையும் நம்முடைய முழுப்பெலத்துடன் நாம் ஆராய்ந்திட வேண்டும் என்பதை நாம் மறவாமல் இருப்போமாக. ஏன் நான் இதைச் செய்தேன் அல்லது அதைச் செய்யவில்லை? ஏன் இதை நான் இன்னவிதத்தில் செய்தேன்? ஏன் நான் அப்படியானதொரு தொனியில் பேசினேன்? என்று நம்மிடமே கேள்விக் கேட்டுக்கொள்ள வேண்டும். இம்மாதிரியாகச் சிந்தைகளையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் கவனமாய்ச் சுயப்பரிசோதனைச் செய்வதும், நிதானிப்பதும், கர்த்தருக்கு இசைவுடன் காணப்படுவதில் விருப்பமற்றிருக்கும் ஒருவருக்கு மிகவும் பிரியமற்றதாயிருக்கும். ஆனால் கர்த்தருடன் உடன்படிக்கைப் பண்ணியுள்ளவரும், அந்த உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவராகக் காணப்படுபவருமானவருக்கு இந்த வழிமுறையானது (சுயப்பரிசோதனையானது) - மாபெரும் ஆசீர்வாதமானதாகவும், அத்தருணங்களில் அவர்களது இருதயங்களை ஆறுதல்பண்ணுகிறதாகவும், எதிர்க்காலத்தில் அவர்களைப் பலப்படுத்துகிறதாகவும் மற்றும் கர்த்தருடைய வழிநடத்துதலோடுகூடப் பரலோக இராஜ்யத்தின் ஸ்தானங்களுக்காக அவர்களைப் பொருத்தி, ஆயத்தப்படுத்துவதற்கு ஏதுவானதாகவும் காணப்படும்.

---

R 5958

# முதலிடம் தேவனுக்கு - கடைசி இடம் சுயத்துக்கு
# GOD FIRST - SELF LAST

கர்த்தருடைய உண்மை ஜனங்கள் எல்லோரும், அவரது பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள். இவர்கள் புதுசிருஷ்டிகளாக அழகான குணாதிசயங்களை உடையவர்கள். அப்போஸ்தலர் இதனை விளக்கும்போது,

“பரமஅழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரர்கள்” என்கிறார்(எபிரேயர்3:1). “பிறப்பித்தவரிடத்தில் (பரலோகப்பிதா) அன்புகூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்புகூருகிறான் (1யோவா5:1). வசனம் எவ்வகையான உணர்வில் பேசினாலும், ஒரு மனிதப்பிறவியை பரலோகப்பிதா எதுவும் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிறார், அவனை ஏற்றுக்கொள்கிறார், விசேஷமாக ஒருவனை தன் புத்திரனாக ஏற்றுக்கொண்டிருப்பாராகில் என்பது, இருதயத்தில் நேர்மையும், பிரதிஷ்டைசெய்யப்பட்ட சித்தமுமாகிய நேரிய குணாதிசயத்தை முக்கியப்படுத்துகிறது. அந்நபரிடத்தில் இக்குணங்களை வெளிப்படையான நடக்கையிலும், வார்த்தைகளிலும் நம்மால் காணமுடிந்தாலும், காணமுடியாவிட்டாலும் சரி, தேவன் அவர்களது இருதயத்தை அறிகிறார். அவர்கள் புத்திரர் நிலைமையின் குணாதிசயங்களில் இருப்பதைக் காண்கிறார் என்று நாம் அவர்களைக் குறித்து எண்ணும்போது அனுமானிக்க வேண்டும். தெய்வீக ஞானத்தில் நம்பிக்கைகொண்டுள்ள நாம், கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரையும் கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளாக ஏற்றுக்கொள்வதே முறையானதாயிருக்கும். இவர்களுக்கு பழையவைகள் ஒழிந்துபோயின, அனைத்தும் புதிதாயின. ஆனால் நாம் இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார். ஆவிக்குரிய பூரணசரீரங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட சித்தத்திற்கும் நல்ல இருதயங்களுக்கும் இன்னும் கொடுக்கப்படவுமில்லை, இயங்குவதும் இல்லை. அவர்கள் எளியவர்களும், அபூரணருமாக, மரணத்துக்கு ஒப்புக்கொடுத்த தங்கள் மாம்சத்திலிருந்துகொண்டு செயல்படவும் பேசவும் முடியும்.

ஓ! புதுசிருஷ்டியின் நிஜமான உணர்வுகளை நம் அபூரண சரீரமும் அபூரணமான நாவும் தவறாக வெளிப்படுத்திவிடுகிறது. நமது நிஜமான உணர்வுகளை திக்கிப்பேசும் நம் நாவுகள் சரியாக வெளிப்படுத்தத் தவறுவதால், நாம் பிறரால் தவறாகப் புரிந்துகொள்ளப்படுகிறோம். நம் ஏழ்மை நிலையிலுள்ள நமது மூளைத்திறன்கள், நீதி மற்றும் அன்புக்கு ஆதரவாக இயங்க, நம் புதுசிருஷ்டியை போராடச்செய்கின்றன. இதில் துயரகரமாக புரட்டிப்போடும் நிலையும் அடிக்கடி நிகழ்கின்றன. நீதிநியாயத்தை நாம்அடிக்கடி தவறாகப் புரிந்துகொள்வதால் செய்யவேண்டிய அவற்றை செய்யமுடிவதில்லை; அவ்வாறே

நாம் வெளிப்படுத்த விரும்பும் அன்பும், மற்றவர்களால் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, புரட்டப்படுவதால் நமக்கும் அதிருப்தி ஏற்படுகிறது. நமது ஆரம்பகால கிறிஸ்தவ அனுபவத்தில், நமது மடத்தனமான தவறுகளை காணத்தவறி, நாம் நன்மை செய்கிறோம் என்று தவறாக எண்ணிக்கொண்டு, அடுத்தடுத்து நமக்கு நாமே காயத்தை வருவித்துக்கொண்டோம். பிற்பாடு, நம்மிடமுள்ள அபூரணமான எண்ணங்கள், கிரியைகள், வார்த்தைகள் மற்றும் பகுத்தறிவு ஆகியவற்றை காணத்துவங்கினோம். அதினால் நாம் செய்யவிரும்பின அநேகத்தில், எவ்வளவு குறைவாக நாம் நிறைவேற்றினோம் என்று கண்டுணர்ந்து, நாம் முற்றிலும் சோர்வடையும் அபாயத்தில் இருந்தோம். ஆகவே நமக்கு கர்த்தருடைய வார்த்தையிலிருந்து உற்சாகப்படுத்துதல் தேவையாயிருந்தது. அதன்படி, தேவன் இருதயத்தைப் பார்க்கிறவர், மாறாக புறஅழகையும் தோற்றத்தையும் பாரார் என்று நமக்கு நிச்சயப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இருதயத்தில் தூய்மையுள்ளோர் ஆசீர்வதிக்கப்பட்டு, தேவனைக் காண்பார்கள். அவர்களுடைய மாம்சத்தின் பலவீனங்கள் இருந்தபோதிலும் அவற்றை தைரியத்தோடு எதிர்த்துப் போராடுவார்கள்.

**நம் இருதயங்களில் முதலாவது தேவனே**

தேவனிடத்தில் நம் உண்மையை நிரூபிக்க முயற்சிக்கவும், தன் மாம்சத்தின் அபூரணங்களை போரிட்டு வீழ்த்தி ஜெயிக்கவும், புதுசிருஷ்டிக்கு உதவிகரமாக இருப்பது அநேக ஒழுக்கவிதிகளும், பழக்கவழக்கங்களுமாகும். அதாவது, தேவனுடைய வார்த்தையைக் கற்றல், இடைவிடாத விழிப்புணர்வு, பரிசுத்தஆவியின் கனிகளை உற்பத்திசெய்ய முயற்சித்தல், ராஜரீகப் பிரமாணத்தை நினைவுகூருதல் போன்றவற்றை உள்ளடக்கிய பலதரப்பட்ட ஒழுக்கவிதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் தற்போது நாம், ஒரு பொதுவான ஒழுக்கவிதியையே கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறோம். இந்த விதியானது, நம் அனைத்து சிந்தனைகள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளுக்கும் பொருந்துமளவு விசாலமானதாக தோற்றமளிக்கிறது. இந்த ஒழுக்க விதி பின்பற்றப்படுமானால் முழு ஜீவியமும் முறைப்படுத்தப்படும். அந்த ஒழுக்கவிதி என்னவெனில், முதலிடம் தேவனுக்கே, கடைசிஇடம் சுயத்துக்கே!

பழைய சிருஷ்டியைப் பொருத்தவரை, இது கடினமான விதியாக இருக்கும். விசேஷித்தவிதமாக சுயத்துக்கு கடைசி இடம் ஒதுக்கும்போது, பழைய மனுஷன் இதற்கு எதிராக கலகம் பண்ணுவான். ஆனால் “முதலிடம் தேவனுக்கே” என்ற விதியைப் பொருத்தவரை, பழையசிருஷ்டி உண்மையாகவே ஆட்சேபம்

தெரிவிக்கமுடியாது. ஏனெனில், சிருஷ்டிகருக்கு செய்யவேண்டிய கடமைப்பொறுப்புக்கள் உண்டு என்பதை சுபாவமனிதர்கூட உணர்ந்திருக்கின்றனர். ஆனால் ஒரு புதுசிருஷ்டி இந்த கடமைப் பொறுப்பை ஒரு விசேஷ வெளிச்சத்திலிருந்து பார்க்கிறான். இந்த விசேஷவெளிச்சம் கர்த்தரிடத்தில் தன்னை முழு தத்தம் செய்ய வழிநடத்தி, மாம்சத்தில் வேரூன்றியிருக்கிற பாவத்துக்கெதிராக இயேசுவின் கொடியின்கீழ் நல்ல போராட்டம் போராடுவதற்கு தன்னை உட்படுத்துகிறான். மேலும் இந்த போராட்டத்தை மரணபரியந்தம் உண்மையோடு போராடவேண்டும். இந்த பிரதிஷ்டை செய்தபிறகு, அந்நபர் தேவனை முதலாவதாகவும் இயேசுவை அடுத்ததாகவும், தன்னை இவர்களுக்கும், அவர்களிருவருக்கும் பிரதிநிதிகளாயிருக்கின்ற கொள்கைகளுக்கும் ஊழியக்காரனாயும் ஒப்புக்கொடுக்கவேண்டும். இந்தக் கொள்கைகளுக்கு ஊழியம்செய்யும்படி, தன் மாம்சத்தை மரணபரியந்தம் ஒப்புக்கொடுத்திருக்கிறான்.

ஆனால் கொள்கைகளை புரிந்து ஏற்றுக்கொள்வது ஒருபுறமிருக்க, அன்றாட வாழ்க்கையிலும், சபையிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவது மற்றொரு காரியமாயிருக்கிறது. நம் இல்லத்திலும் தனிப்பட்ட நடவடிக்கைகளிலும் தேவனுக்கு முதலிடம் கொடுப்பது என்பதன் அர்த்தம் என்னவெனில், பூமிக்குரிய எல்லா ஆர்வங்களும், சந்தோஷங்களும் கீழ்ப்படுத்தப்படவேண்டும். தேவசித்தமும் தேவஊழியமும் தேவனுடைய நாமத்தை கனப்படுத்துவதும், நம் ஒவ்வொரு நாள் நடவடிக்கையிலும், நம் எல்லா வார்த்தைகளிலும், நம் எல்லா பரிமாற்றங்களிலும் நம் சிந்தனைகளிலும் மிக பிரதானமான பங்கை பெறவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு இக்கொள்கையை விஸ்தாரமாக்கும்போது இந்த ஆவியை எல்லா சகோதரர்களும் பெற்றிருந்தார்களேயானால், மிக உயரிய இலட்சணங்களையும் பழக்கவழக்கங்களையும் சபை கொண்டிருக்கிறது என்பதை குறிப்பாய்க் கூறும். சண்டை அல்லது வீணான புகழ்ச்சியினாலோ எவற்றையும் செய்யமுடியாது. மாறாக, தேவனை முதலாவதாகவைத்து, அவருக்கு மகிமை சேர்ப்பதன்மூலமாக மட்டுமே அடையமுடியும் என்று அப்போஸ்தலர் புத்திமதி கூறுகிறார். இப்படி செய்யும்போது, நமது தொழுகையிலும் துதித்தலிலும், வேதத்தைக் கற்றலிலும் ஆகிய எல்லாக் காரியங்களிலும் பெருமையோ அல்லது பெரும் விருப்பமோ சுயநலமோ, பாரபட்சமோ, வஞ்சனையோ அகன்றுபோகும். தேவன் முதலாவதாக இருக்கும்போது, நம் மாம்சத்தில் வேரூன்றியிருக்கிற தீமையின் குணங்கள், நம் தேவனுடைய சித்தத்துக்கு எதிராய் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்வோம்.

**கொள்கையை நடைமுறைப்படுத்துதல்**

சபையின் ஊழியர்களைத் தேர்வுசெய்யும்பொழுது, தேவனே முதலாவது என்ற கட்டளை என்ன பொருள் தருகிறதென்றால், வாக்களிக்கின்ற ஒவ்வொருவரும் தேவசித்தம் இன்னதென்று தாம் நம்புவதை தேடி ஆராய்ந்து வாக்களிக்கவேண்டும். இதனால் தன் சுய சித்தத்தையும், மற்ற சகோதர சகோதரிகளுடைய சித்தத்தையும் முழுமையாக தள்ளிவிடமுடியும். இத்தன்மைப்படி நடக்கும்போது, "தேவனே முதலாவது" என்ற சிந்தை அவனை தனிப்பட்ட நிலைப்பாட்டை எடுக்க வழிநடத்திச்செல்லும். வேதாகமம் கூறுகிற இரக்கம் மற்றும் அன்பின் நெறிப்படி பரிசுத்தஆவி அல்லது சாந்தம், தயாளகுணம், பொறுமை, நீடிய சகிப்புத்தன்மை, சகோதரசிநேகம், அன்பு ஆகிய குணநலன்களை அடையும்படி வழிநடத்தும். கர்த்தரோடு போட்டிபோடும் நமது ஈர்ப்புக்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, தேவனை முதலாவதாக வைக்கும்போது, அப்படிப்பட்ட முயற்சிக்காக நிச்சயம் ஆசீர்வாதம் பின்தொடரும்.

சுயத்தை கடைசியாக வைப்பதற்கு தீர்மானம் எடுத்தல், அப்போஸ்தலரது புத்திமதியின் சாரத்தை பொருள்படுத்துகிறது; "ஒன்றையும் வாதினாலாவது வீண் பெருமையினாலாவது செய்யாமல், மேலும், "கனம்பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள்" (பிலிப்2:3; ரோம12:10). நாம் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களது பதிவேடுகளை திருப்பிப் பார்க்கும்போது, இராஜ்யத்தில் தங்களுக்குள் யார் பெரியவனாயிருப்பான் என்றும் எவ்வாறு போராடினார்கள் என்பதையும் பார்க்கமுடிகிறது. ஆனால் பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்படு முன்னர் இந்தப்போராட்டம் நடந்தது. பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டோரிடையே அப்படிப்பட்ட ஆவி அகன்றுபோனதை வெளிப்படையாகவே காணமுடிந்ததில் எத்தனை மகிழ்ச்சியடைகிறோம்! "சுயத்துக்கு கடைசி இடம்" என்றவிதி, அப்போஸ்தலரிடையே இருந்திருக்கும். அவர்கள் கர்த்தருடைய வசனத்தின் கொள்கைகளுக்கு உண்மையாகவே ஆதரவு அளித்தார்கள். மேலும் நற்காரியம் செய்வதில் ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டி திடப்படுத்தி வந்தனர். அவர்களோடு நாம் எந்தளவு மகிழவேண்டும்!

ஆனால் நாம் வாழும் நாட்களில், பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்படுதலை அடைந்ததாக வெளிப்படையாகக் கூறுபவர்களில் சிலர், இவர்களது உடன்படிக்கைகளைக் குறித்து நாம் சந்தேகப்படாதிருந்தபோதிலும், சுயத்தை கடைசியாக்குவது தொடர்பான பாடத்தைக்

கற்கவில்லைபோல் தோற்றமளிப்பது, நம்மை எவ்வளவு துயரத்தில் ஆழ்த்துகிறது! "ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" **(1பேது5:6).** சிலர் எப்பொழுதாவது, மூப்பர்களாகவோ அல்லது உதவிக்காரர்களாகவோ பணிசெய்ய ஆவலாயிருக்கின்றதையும், இந்த ஊழியத்துக்கென்று அவர்களைத் தெரிவுசெய்யாதபட்சத்தில் அவர்கள் காயப்பட்டதைப்போன்ற உணர்வை அடைவதை நாம் கண்டறிகிறோம். இவ்விஷயத்தில் மேலானதும், விசாலமானதுமான பார்வையை அவர்களால் அடையமுடிவதில்லை என்பது எப்படிப்பட்ட பரிதாபகரமான நிலை! நாம் அவர்களுடைய இருதயங்களைக்குறித்து வினா எழுப்புகிறதில்லை; எவ்வளவுதூரம் சத்தியத்தில் தரித்திருக்கிறார்களோ, கர்த்தருடைய ஆவி அவர்களிடமிருந்து எடுக்கப்படாது என்று நாம் ஏற்றுக்கொள்ளலாம். சபையில் தலைமைத்துவ வேட்கை கொண்டு சகோதரரிடையே சுயத்தை தேடும்ஆவியை வெளிப்படுத்தும்பொழுது, "கிருபையில் எவ்வளவு குறைவாக வளர்ச்சியடைகிறோம்!

**நாம் ஸ்தானத்தைத் தேடினோமானால்**

அன்பு சகோதரரே, தேவனுடைய பலத்த கரங்களுக்குள் நாம் உண்மையாகவே அடங்கியிருப்போமாக. அவரது ஏற்பாடு நமக்கென நியமித்துள்ளதை பெற்று, அதுவே போதும் என்று நிறைவடைவோமாக. சபை நம்மை ஏதாவது காரணத்துக்காக மூப்பர் அல்லது உதவிக்காரர் ஸ்தானத்துக்கு தெரிந்தெடுப்பார்களானால், சபைக்கும் கர்த்தருக்கும் நன்றியுள்ளோராய் நடந்துகொள்வோமாக. மேலும் ஒரு சபையின் ஊழியக்காரர், அந்த சபைக்கு ஒரு மூத்தசகோதரராயிருக்கிறார் என்று நினைவுகூர்ந்து, தாழ்ச்சியுள்ள ஆவியில், நம்மிடமுள்ள சிலாக்கியங்களை ஒரு கொடையாக, ஒரு தயவாக உபயோகிப்போமாக. நம்மைக்குறித்து இறுதியில் கணக்கு ஒப்படைக்கவேண்டும் என்பதால், நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்களையும், உக்கிராணத்துவத்தையும் ஞானமாக உபயோகிக்கத் தேடுவோமாக.

மற்றுமொரு தருணத்தில், ஏதாவது ஒரு காரணத்தின்பொருட்டு சபை நம்மை ஊழியத்துக்கு தெரிந்தெடுக்கவில்லையெனில், அது சபையின் சிறப்புரிமை என்று நினைவுகூர்வோமாக. ஆம்! சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் தெய்வீக சித்தத்தைப் பொருத்தமட்டில், தங்களுடைய நிதானிப்பு இன்னதென்று அறிந்து, அதன்படி வாக்களிக்க கடமைப்பட்டுள்ளார்கள். தெய்வீக சித்தத்துக்கு எதிராக நாம் சண்டைசச்சரவு செய்யலாமா? கூடாது. தெய்வீக சித்தத்தைப் பொறுத்தவரையில், சகோதரரது நிதானிப்பை வெளிப்படுத்துவதைக் குறித்து கடும் விவாதம் செய்யலாமா? கூடாது. அப்படியானால் நாம் என்னசெய்யவேண்டும்? தெய்வீகஏற்பாட்டை நன்றியுள்ள இருதயத்துடன் ஏற்றுக்கொள்வதே முறையானது. மேலும் நமக்கு கிடைக்கும் வாய்ப்புக்களை பொருத்தமான வழிகளில் உற்சாகத்துடன் ஊழியம் செய்வதே நியாயமானதாகும். கர்த்தரது ஊழியத்துக்கென தெரிந்தெடுக்கப்பட்டி–ருக்கிறவர்களது வழியில் இடறுதலின் கல்லை நாம் ஏற்படுத்த தேடாதிருப்போமாக. அதற்கு மாறாக, அவர்களோடு கூட்டுறவோடு இயங்க, நம் ஆற்றல் அனைத்தையும் செலவிடுவோமாக.

எல்லாவற்றிலும் தகுதிவாய்ந்த ஒரு சகோதரன், சபையில் ஒரு உயரிய ஸ்தானமாகிய தயவைப்பெற்றிருந்து, பின்பு அந்த ஸ்தானத்திலிருந்து நீக்கப்பட்டு, தரம் தாழ்த்தப்படுவாராகில்,சந்தோஷமாயிருக்கக்கடவர். அந்த சகோதரனுக்காக கர்த்தரது ஏற்பாடு என்ன பாடங்களைக் கற்றுக்கொடுக்க தீர்மானித்திருக்கிறதோ, அவற்றை சந்தோஷத்தோடு கற்றுக்கொள்ளக்கடவன். வேறொரு ஸ்தானத்திலிருந்து எப்படி ஊழியம்செய்வது என்று அவர் சந்தோஷத்தோடு கற்கட்டும். தாழ்நிலையிலிருந்து உயர்த்தப்பட்ட ஒரு சகோதரன், சந்தோஷப்படக்கடவன். தெய்வீக மேற்பார்வையின்கீழ் நமக்கு எப்படிப்பட்ட அனுபவங்கள் வந்தாலும் அவற்றை பெற்றுக்கொள்வோமாக, ஏனெனில் "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்(ரோமர்**8:28).** தேவனையும் அவர் சித்தம் செய்ய ஆர்வமுடையவர்களாயும், அவருடைய பிள்ளைகளையும் சபையையும் முதலாவதாக வைத்திருக்க நாம் கவனமாயிருப்போமாக. அதேசமயம் நமது சொந்த ஆர்வங்களும் சுயமும் கடைசியாக இருக்கட்டும். அன்பு சகோதரர்களே, நம் மீட்பர் போதித்து முன்உதாரணமாக வாழ்ந்துகாட்டின இக்கொள்கைகளுக்கு இசைவாக யாரெல்லாம் அவ்வாறு உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுகிறார்களோ, படிப்படியாக மீட்பரது இராஜ்யத்தில் மேலான ஸ்தானங்களைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நாம் நிச்சயித்திருக்கலாம். தற்கால அனுபவங்களனைத்தும் தெய்வீக ஆளுகையால் மேற்பார்வையிடப்பட்டு, அந்த இராஜ்யத்தின் ஸ்தானத்தை அடைய தன்னை ஆயத்தம்பண்ணும்.

நாம் உயர்த்தப்படுவதற்கான நேரம் இதுவல்ல. நாம் தகுதியற்றவர்களாக காணப்படுகிற சில சபையின் ஊழியங்களுக்கு நேச சகோதரர்கள் நம்மை உயர்த்தக்கூடும். அந்த ஊழியப்பொறுப்புக்களை அடைவதன்மூலம், நாம் இறுமாப்பு உடையவர்களாக நம்மை மாற்றக்கூடும். அல்லது நமக்கு காயத்தை வருவிக்கக்கூடும். நம்மை இயக்குபவர் தேவனே, நாம் அவரது கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறோம் என்பதே முறையான கருத்தாயிருக்கும். இதனால் சபையாராகவும் தனிநபராகவும், நமது அனுபவங்களைக்கொண்டு நமக்கு ஆசீர்வாதங்களை பெற்றுத்தர அவரால் கூடும். நாமோ நம் போதகருடைய ஆவியின்மூலம் கர்த்தருடைய வார்த்தையை சரியாய்ப் பயிற்சிசெய்து, தேவனை முதலாவதாகவும், சுயத்தை கடைசியாகவும் வைப்பதே நமக்குரிய பணியாகும். **--2888--**

R 5959

# நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன? எப்போது? எப்படி?

# JUSTIFICATION - WHAT? WHEN? HOW?

நீதிமானாக்கப்படுதல் என்பது உண்மையாகவே ஒரேயொரு காரியத்தையே அர்த்தப்படுத்துகிறது. அது, சரியானவற்றை உண்டாக்குவது, நியாயத்தை செய்வது என்பதை அர்த்தப்படுத்துகிறது. நீதிமானாக்கப்படுதல் ஒருவேளை, பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ இருக்கலாம். ஆபிரகாமின் விஷயத்தில் இது பகுதியளவே இருந்தது. அவருடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலின் நிமித்தமாகவே தேவனோடு ஐக்கியம்கொள்ள நீதிமானாக்கப்பட்டாரேயன்றி, ஜீவனை அடைவதற்காக அல்ல. ஏனென்றால் அந்த முழுமையான நீதிமானாக்கப்படுதல் இயேசுவின் மீட்புப் பணியினாலன்றி நிறைவேற்றமுடியாது. அந்தப்பணி ஆபிரகாமின் நாட்களில் நடைபெற்றிருக்கவோ அல்லது நிறைவேற்றிமுடிக்கப்படவோயில்லை.

சுவிசேஷயுக சபையின் நீதிமானாக்கப்படுதல் என்பது உடனடியாக நிகழ்கிற பணியாக இருக்கிறது. ‘‘தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்’’. ஆனால் இந்த நீதிமானாக்கப்படுதலின் அஸ்திபாரம் கல்வாரியில் இயேசுவால் நிறைவேற்றி முடித்த பலியே ஆகும். மீட்பர் நமக்காக அவருடைய ஈடுபலியின் புண்ணியத்தை வழங்குவதற்கு முன்பாக, நாம் அவரை அறியவும், அவர்பேரில் நம்பிக்கையாய் இருக்கவும், சீஷத்துவத்துக்கான அவருடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவும், அவருடைய சீஷர்களைப்போல மரணபரியந்தம் நம்மை முழுமையாக அர்ப்பணிக்கவும் வேண்டும். அவர் தம்முடைய பலியின் புண்ணியத்தை நம்மீது அருளுகின்ற அந்தத் தருணத்தில் நம்முடைய கறைகள் மூடப்படுகிறது. நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலால் அவருடைய குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளப்படுகிறோம். இவ்வாறாக, அதன்பின்னர் பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேரானவர்களின் சர்வசங்கமாகிய சபையின் அங்கங்கள் ஆகிறோம்.

உலகஜனங்களின் நீதிமானாக்கப்படுதல் உடனடியாக நிகழ்கிற ஒன்றாக இருக்காது. மாறாக, ஆயிரவருடஅரசாட்சியின்போது, அந்த ஆயிரவருடம் முழுவதும் தொடர்ந்து முன்னேற்றமடைகிறதாய் இருக்கும். அப்போது அவர்கள் மத்தியஸ்தர் மூலமாகவும், அவருடைய இராஜ்ஜியத்தின் மூலமாகவும் தற்காலிக நீதிமானாக்கப்பட்டிருப்பதைக் கூறஇயலும். ஆனால் அவர்கள் நீதிமானாக்கப்படுவது ஆயிரவருட அரசாட்சியின் முடிவில் அவர்களுடைய முழுமையான பரிபூரணத்தில் பிதாவுக்கு முன்பாக நிறுத்தப்பட்டு, ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்போது மாத்திரமே நிறைவேற்றி முடிக்கப்படும். ‘‘தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்’’ என்றும், எந்த ஒரு ஜீவன் நிலைமையிலும் யார் பரிபூரணராகிறாரோ அவர்களை மாத்திரம் நித்திய ஜீவனுக்குள்ளும் தன்னுடைய குடும்பத்திற்குள்ளும் ஏற்றுக்கொள்வார்.

**மாம்சத்தை தூய்மையாக்குவது நீதிமானாக்கப்படுதல் அல்ல**

யார் ஒருவர் இந்த சுவிசேஷயுகத்தில் தேவனிடத்தில் திரும்ப ஆவல்கொள்கிறாரோ, படிப்படியாக அவரை தேடி கண்டறிவார். முதலாவது, எதனால் அவனை நீதிமானாக்க இயலும் என்ற ஏற்பாட்டினை தேவன் உண்டுபண்ணியிருந்ததையும், மேலும் அவரே தொடர்ந்து பாவிகளை நீதிமானாக்குகிறவர் என்பதையும் கண்டறிவார். பிறகு அவன் தன் சொந்த பலவீனங்களையும் பாவங்களையும்–– அதாவது களங்கமடைந்திருப்பதையும் கண்டறிந்து, சரியானமுறையில் அவைகளை தேடி அப்புறப்படுத்துவார். அவன் மாம்சத்தின் அசுசிகளிலிருந்து பெருமளவு தன்னை சுத்திகரித்துக்கொள்ள முடிந்தாலும், இது அவனை நீதிமானாக்காது. அவனை பரிபூரணப்படுத்தாது. ஏனென்றால் மரபுவழியாகவே அவன் பாவியாக அபூரணனாக இருக்கிறான். மேலும் அவன் பாவநிவாரணபலியின் புண்ணியத்தின் தெய்வீக பயன்பாட்டின் மூலமாக மாத்திரமே கழுவப்படமுடியும். வெண்கலத்தொட்டியில் கழுவி, மாம்சத்தின் கறைகளை அப்புறப்படுத்தினபிறகு, அந்த விசுவாசி ஆசரிப்புக்கூடாரத்தின் கதவிற்கு அருகில் நெருங்கி உடன்படிக்கையின் உறுதிமொழியால் தன்னை கட்டுப்படுத்தி கர்த்தருக்காகவும், அவரது ஊழியத்திற்காகவும் அது எதுவாக இருந்தாலும் தன்னை முற்றிலும் அர்ப்பணம்செய்து, அங்கே தன்னை பொருத்திக்கொள்ளவேண்டும்.

மேற்சொன்ன அனைத்துப் படிகளும், தேவனுடன் ஐக்கியம்கொள்ள விரும்புகிற ஒருவருக்கு அவருடைய வார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போன்று, அவைகள் முறையான படிகளாகும். யார் இந்த பயிற்சிமுறைகளை பின்பற்றுகிறார்களோ அவர்கள் தற்காலிக நீதிமானாக்கப்பட்டநிலையில் இருப்பதாக நாம் விவரிக்கிறோம். வேறுவிதமாய் கூறவேண்டுமானால், அவர் சரியான வழிமுறையில் இருக்கிறார். நீதிமானாக்கப்படுவதை அடைவதற்கு தன்னால் இயன்றதை செய்துகொண்டிருக்கிறார் என்பதாகும். இந்த வழிமுறையின்போது, அவர் மனது மற்றும் இருதயத்திற்கான ஆசீர்வாதங்களையும் தன்னுடைய மனசாட்சியின் அங்கீகரிப்பையும் பெற்றுள்ளார். மேலும் தன்னுடைய நீதிமானாக்கப்படுதலுக்கான முறையான நடைமுறை அறிவை தெய்வீக ஏற்பாடானது திறந்துவைத்திருக்கிறது என்ற வகையில், கர்த்தருடைய தயவைப் பெற்றிருக்கிறார். இது விவரித்திருக்கிற படிகளுக்கான இன்றியமையாமையை குறிப்பிட்டுக்காட்டுவதோடு, அர்ப்பணிப்பை அல்லது

ஆசரிப்புக்கூடாரத்தின் கதவில் தங்களை கட்டவேண்டியதையும் குறிப்பிட்டுக் காட்டுகிறது. ஒரு பாவி தேவனை அணுக இதைவிட வேறு எதுவும் செய்யமுடியாது. இப்போது தேவன் செயல்படக்கூடிய நேரம். பாவிகளிடத்திலான தேவனுடைய இரக்கம் முழுவதும் ''மகா பிரதான ஆசாரியராக'' நியமிக்கப்பட்டுள்ள இயேசுவின் மூலமாகவே இருக்கிறது. அர்ப்பணிக்கப்பட்ட ஒன்றை(வெள்ளாடு) ஏற்றுக்கொள்வதும், அவனை பலியாக்குவதும் இயேசுவின் பங்காக உள்ளது. தேவனுடைய பிரதான ஆசாரியராகிய இயேசு யாரை ஏற்றுக்கொண்டாரோ அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் தெய்வீக சுபாவத்திற்கென்று தேவனால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாயும் இருப்பார்கள். எப்போது இயேசுவும், இயேசுவின்மூலமாக தெய்வீகநீதியும் பாவிகளை ஏற்றுக்கொண்டாரோ, அத்தருணமே நீதிமானாக்கப்பட்ட தருணம் ஆகும்.

ஒரு பாவி பாவ வாழ்க்கையை விட்டுவிலகி, தேவனைத் தேட ஆரம்பித்து, நீதியின் வழிகளில் தன்னால் இயன்றமட்டும் சிறந்தமுறையில் நடந்து, மாம்சத்தின் அசுசியை அப்புறப்படுத்தின.. அந்த தருணத்திலிருந்து அவன் ஒரு புதிய சிந்தையை அல்லது சித்தத்தை பெற்றிருக்கிறான். அது, அவன் முன்பு பாவத்தை நேசித்து அதற்கு ஊழியம்செய்தபோது பெற்றிருந்த சிந்தை அல்லது சித்தத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கும். இந்த புதியசிந்தை, மாம்சத்தின் புதியசிந்தை எனப்படும். ஏனென்றால் அவன் இன்னும் பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்படவில்லை. அந்த தருணத்தில் பிரதான ஆசாரியர் அவனை ஏற்றுக்கொண்டு, தம்முடைய புண்ணியங்களை அவன்மீது சுமத்துகிறார். பிறகு பிதாவாகிய தேவன் அவனை பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கிறார். அந்த தருணத்தில் புதிய சிந்தையுடன் இருக்கும் அந்த ஒருவன் நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்படுகிறான்; இப்பொழுது அவன் புதுசிருஷ்டியாய் இருக்கிறான். புதுசிருஷ்டி நீதிமானாக்கப்படவேண்டியதில்லை. ஏனென்றால் புதுசிருஷ்டி பாவம் செய்திருக்கவில்லை. நீதிமானாக்கப்பட அது பாவத்தைப் பெற்றிருக்கவில்லை. புதுசிந்தையுடைய பழைய சிருஷ்டியே நீதிமானாக்கப்படும். நீதிமானாக்கப்பட்ட அந்த தருணத்தில் பழையசுபாவம் பலியின் மரணமடையும். இயேசுவைக்குறித்து சொல்லப்பட்ட அதே உணர்வில், புதுசிருஷ்டியானது நீதிமானாக்கப்பட்டதாக பேசப்படுகிறது.''ஆவியினாலே நீதியுள்ளவரென்று ... மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்''(1தீமோ3:16). நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தையின் இந்த பயன்பாட்டில்,''நியாயத்தை நிரூபித்தல்.. அல்லது பூரணமாக நிரூபித்தல் என்ற கருத்தே உள்ளது; நியாயத்தை உருவாக்குவது என்று அல்ல.

**வளர்ச்சிக்கேற்ப, சமாதானம் சரிவிகிதத்தில் இருக்கும்**

முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட, நீதிமானாக்கப்பட்ட, பரிசுத்தஆவியின் ஜெனிப்பிக்குதல் மூலமாக பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த வகுப்பாருக்கு, அப்போஸ்தலரின் கீழ்க்காணும் வார்த்தைகள் பொருந்தும்.: ''இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்''– ரோமர் 5:1. மாறாக இந்த வசனம் அர்ப்பணித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்படுதல் என்ற நிலைக்கு வராதவர்களுக்கும், வெறும் பிரகாரத்தின் மூலமாக அணுகிக்கொண்டிருக்கிறவர்களுக்கும் பயன்படுத்தக்கூடாது. எனினும் அவர்கள் பெற்றிருக்கும் சமாதானத்தின் அளவு, அவர்களின் வளர்ச்சிக்குத் தக்கதாக இருக்கும். நாம் பாவத்தை வெளியேற்றுவதற்கும், தேவனுக்கு நெருங்கி அணுகுவதற்கும் பெருமுயற்சி செய்வதினால் அவரிடம் திரும்பும் ஒரு வழி இருப்பதை கண்டறிவதன்மூலம் நமக்கு ஒரு குறிப்பிட்டஅளவு சமாதானமும் சந்தோஷமும் வரும்; ஆனால் இந்த வசனத்தில் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ள, சபையின் சமாதானமானது, யார் தேவனுடைய புத்திரர் என்ற நிலைமைக்குள் வந்திருக்கிறார்களோ அவர்களுக்கு மாத்திரம் பயன்படுத்தமுடியும். தேவன் மற்ற எவரிடமும் சமாதானத்தில் இல்லை.

நிலைமைகளின் வேறுபாடுகள் நிமித்தமாக, இந்த சுவிசேஷயுகத்தின் காலத்தில் எவர் ஒருவரும் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டதைப்போன்று அதே அனுபவத்தை துல்லியாக பெற்றிருப்பது என்பது இயலாது. ஆபிரகாம் புரிந்துகொண்டிருந்த அளவுக்கு தேவனை முழுமையாக விசுவாசித்தார். வெளிப்படையாக தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு மரணபரியந்தம் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். வேறு வார்த்தையில் கூறுவோமானால், ஒருவேளை ஆபிரகாம் இந்த சுவிசேஷ யுக காலத்தில் வாழ்ந்திருந்தாரானால், அவர் முழுமையாக அர்ப்பணித்தவராக, முழுமையான நீதிமானாக, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட ஒருவராக இருந்திருப்பார். ஆனால் கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரிப்பதற்கு முன்னரே, சுவிசேஷயுக காலத்திற்கு முன்பு ஜீவித்ததால், அவருடைய அர்ப்பணிப்பு, நீதிமானாக்கப்படுதலின் முழுமையையும், அதன் சலுகைகளையும் தர இயலாமற் போயிற்று.

சிலர், நீதிமானாக்கப்படுதலில், இருபகுதிகளாக – சட்டப்பூர்வமானதும், நிஜமானதாகவும் இருப்பதாக எண்ணுவதினால் தங்களைக் குழப்பிக்கொள்கிறார்கள். வேதத்தில் இதுபோன்ற நீதிமானாக்கப்படுதலின் பிரிவுகள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை என்று நமக்குத்தெரியும். அது

சட்டத்தின்படியும், அதேசமயம் நிஜமானதாயுமுள்ளது. ஆனால் நிஜமானதாக, அதேசமயம் சட்டப்பூர்வமில்லாததாகவும்தாயும் இருக்கமுடியாது. அதேபோல் சட்டப்பூர்வமில்லாததாகவும்தாயும், நிஜமானதாயும்,மீறுகிறதாயிருந்து, உண்மையாய் இருக்கமுடியாது.

நம்முடைய நீதிமானாக்கப்படுதல், நாம் கர்த்தருக்குரியவராக ஏற்றுக்கொள்ளப்படும்போது நம்மீது போடப்படும் ''கலியாண வஸ்திரத்தால்'' அடையாளமாக காண்பிக்கப்பட்டுள்ளது. அது புதுசிருஷ்டியை மூடுவதற்காக அல்ல, மாறாக பிரமாணத்தின்படி மரித்ததும், பலியிடப்பட்டதுமாக எண்ணப்படுகிற பழைய மாம்சத்தை மாத்திரமே மூடுகிறதாயிருக்கிறது. வேறு வார்த்தையில் கூறுவோமானால், நீதிமானாக்கப்படுதல், நியாயத்தை உருவாக்குவதன் செயல்முறை என்று அர்த்தப்படுத்தவில்லை. மாறாக, ஏற்கனவே அடையப்பெற்ற நியாயத்தின் நிலைமையை அடைந்ததை அடையாளப்படுத்துகிறது. ''கலியாண வஸ்திரத்தை'' உடுத்திக்கொள்வது, சபையின் அங்கத்தினர்களாக தேவனுடைய குடும்பத்திற்குள் நுழைவதை அடையாளப்படுத்துகிறது. அதை களைந்துவிடுவது தேவனுடைய கிருபையை மறுதலிப்பதாக அர்த்தப்படுத்துகிறது. மேலும் இது இரண்டாம் மரணத்தை சுட்டிக் காண்பிக்கிறது.

உலகத்திற்கான நீதிமானாக்கப்பட்டநிலை, ஏற்கனவே விவரித்ததைப்போன்று அது வேறுபட்ட முறையில் அடையப்பெறும். உலகத்தின் நீதிமானாக்கப்படுதல் மாபெரும் மத்தியஸ்தரின்கீழ் படிப்படியாக நிகழக்கூடிய ஒன்றாக இருக்கும் என்று கூறலாம். ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் தெய்வீக தேவைகளை பூர்த்திசெய்து, அதிகமான இசைவுக்குள் வந்து, மேலும்மேலும் திரும்பக்கொடுத்தலின் பரிபூரணத்தை பெற்றுக்கொண்டு, இவ்வாறு படிப்படியாக நீதியை நடப்பிப்பதாக இருக்கும். எனினும், ''தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்'' என்பதையும், ஆயிரவருட முடிவுவரை இந்த உலகம் தேவனுடைய கரங்களில் இல்லை என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். அதன்பிறகு எல்லோரும் பிதாவினுடைய அனுமதிபெற்று, நித்தியஜீவனுக்காக அவரில் ஏற்றுக்கொள்ளப்பட்டு முழுமையான உணர்வில் நீதிமான்களாக்கப்படுவர். அந்தசெயல் உடனடியாக நிகழ்கின்ற ஒன்றாக இருக்கும்.

———————————

R 5962

# பாவத்தைப்போக்கும் ஞானஸ்நானம் யூதர்க்கு மட்டுமே

# BAPTISM FOR REMISSION OF SINS FOR JEWS ONLY

திறவு வசனம் :"மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" – மத்தேயு 3:11

இஸ்ரயேலருக்கான ஒப்புரவாக்கும் நாளின் ஏற்பாடுகளுக்கும், அது நீக்கப்படுதலுக்கும், பாவத்தை நீக்குதலுக்கான மற்ற ஏதாவது ஏற்பாட்டிற்கும் இடையேயுள்ள தனித்தன்மையை தெளிவாக வேறுபடுத்திக் காண்பிக்கவேண்டும். ஆதி பாவத்தை தள்ளிப்போடுவதற்காக நிழலில் காண்பிக்கப்பட்ட ஒப்புரவாக்குதலின் நாளின் பலிகளுக்கு நிஜமாக, "விசேஷித்த பலிகள்"உள்ளது. ஆதாமின் பாவமே முதன்மையான பாவமாயிருந்து, அவரது குழந்தைகள் அனைவருக்கும் பாதிப்பை வருவித்தது. அந்த முதன்மையான பாவத்தின் ஆதிக்கத்தின்கீழும், அதன் தண்டனையின்கீழும் முழு சந்ததியும் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. மாபெரும் பிரதான ஆசாரியன் இயேசு மூலமாக பாவத்தையும் அதன் தண்டனையையும் நீக்கிவிட தேவன் தீர்மானித்திருந்தார்.

மாம்ச இஸ்ரயேலின் பிரதான ஆசாரியனால் நிழலாக செலுத்தப்பட்ட பலிகளைக்காட்டிலும், விசேஷித்த பலிகளை இயேசுகிறிஸ்து ஏற்கனவே மரித்து தற்போது, ஏறத்தாழ நிறைவுசெய்திருந்தார். சுவிசேஷயுகத்தின்போது சபையாருக்காக கொடுக்கப்பட்டுவருகிற கிறிஸ்துவின் புண்ணியம், ஒரு குறிப்பிட்டநேரம் வரும்போது கொடுக்கப்படாது. வரவிருக்கின்ற யுகத்தில் அவரது புண்ணியம் முழு உலகத்தின் பாவங்களுக்காக துல்லியமாக பொருந்தப் பண்ணப்படும். இதன்மூலம் ஆதாமின் பாவம் நித்தியத்துக்கும் நீக்கப்பட்டிருக்கும். ஆதி பாவத்துக்கான சாபம் ஒருவர்மீதும் எப்போதும் எங்கும் இனி ஆளுகை செய்யப்போவதில்லை. மேலும் ஆதாமின் மூலம் இழந்துபோன அனைத்தையும் கிறிஸ்துஇயேசுவினால் மீட்கப்பட்டு, எல்லோருக்கும் கிடைக்கும்படி உதவிபெறுவார்கள்.

ஆனால் ஆதி பாவத்துக்குப்பின்னால், மற்ற பாவங்களும் அடங்கியுள்ளது. இதன்படி எந்தளவு அறிவை பெற்றிருக்கிறார்களோ, அந்தளவுக்கு குற்றத்தின் தன்மை இருக்கும். நம் கரத்தரது ஜெபத்தில் "மீறுதல்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளவை, உள்நோக்கமற்ற பாவங்களையே ஆகும். ஆனால் தேவனிடத்தில் ஜெபிப்பதன்மூலம் முதன்மைப்பாவம் தள்ளிவிடப்படாது, ஈடுபலியாகும் இயேசுவின் மரணத்தின்மூலமே இது ஒதுக்கப்படும். இந்த மீட்பளிக்கும் இரத்தத்தின்மேல் விசுவாசம்வைத்து, இருதயத்தையும் ஜீவியத்தையும் கர்த்தருக்கென்று தத்தம்செய்பவர்களே தேவபுத்திரராக முடியும். தங்களுக்கும் உள்ள அபூரணங்களின் நிமித்தமாக, இந்த தேவபுத்திரர்கள் "மீறுதல்" செய்கிறார்கள். இந்த மீறுதல்கள் தங்களிடம் உள்ளதை உணரும்பொழுது, அவர்கள் "இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவீர்கள்". தேவபுத்திரரானவர்களைத் தவிர்த்து, மற்ற எவரும் கர்த்தருக்கு முன்பாக நிற்கவோ, விண்ணப்பங்களை ஏறெடுக்கவோ உரிமை பெற்றிருக்கவில்லை. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அல்லது அவரது சீஷராகி, அவரது பின்னடியார்களாக அங்கீகாரம் பெற்றிருப்பவர்கள் மட்டுமே தேவனுடைய குரலைக் கேட்கவும், அவரோடு பேசவும் முடியும். அப்படிப்பட்டவர்கள் மட்டுமே பிதாவுடனான ஆசீர்வதிக்கப்பட்ட உறவை அடையும்படி உயர்த்தப்படுகிறார்கள், புத்திரருக்கான உறவை அடையும் நிச்சயத்தன்மையை அடைந்திருக்கிறார்கள்.

இஸ்ரயேலர் தேவனுடைய ஜனங்களாக, நிழலான ஏற்பாடுகளின் மூலமாக அவரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்தார்கள். கிறிஸ்து பாவிகளுக்காக மரிக்க ஏற்றவேளை வந்திருக்காதபடியால், ஏற்றவேளையில் பாவங்களுக்காக அளிக்கப்படவிருக்கும் நிஜமான பலியை நோக்கி முன்னேறிச்செல்ல தேவன் அவர்களுக்கு அடையாளங்கள் நிறைந்த ஒரு அமைப்பைத் தந்தார். அவரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் வந்தவர்களது பாவங்கள் உண்மையாகவே மன்னிக்கப்பட்டு, நீக்கப்பட்டதுபோல் நடத்தினார். அதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். அப்போஸ்தலர் பவுல் கூறுவதுபோல, வருடாவருடம் தொடர்ச்சியாக இந்த ஒப்புரவாக்குதலின் பலிகளை அவர்கள் திரும்பத்திரும்ப செய்யவேண்டும். இவ்வாறாக, ஆதாமின் பாவம் மற்றொரு வருடத்திற்கு அவர்களிடமிருந்து அடையாளமாக நீக்கப்படும், ஏனெனில் ஒரு வருடத்திற்கு மட்டுமே பலியானது நன்மை பயப்பதாக இருக்கும். இந்த ஏற்பாட்டின் காரணமாக, உள்நோக்கமின்றி அறியாமையினால் செய்யப்படுகிற மீறுதல்கள் அடையாளமாக ஒதுக்கிவைக்கப்படுகிறது. அவர்கள் தொடர்ந்து தேவனுடைய உடன்படிக்கையின் புத்திரராக இருப்பர். ஆயினும் ஒவ்வொரு வருடத்திலும் அவர்கள் பலவீனத்தின் நிமித்தம், சிந்தனை சொல் நடக்கை இவற்றில் தவறுசெய்து விழுகைக்குள் செல்வார்கள். இவைகளனைத்தும் மீறுதல்களாகவே இருக்கும்.

**யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தின் நோக்கம் :–**

யோவான் ஸ்நானகன் தம் ஊழியத்தைத் துவங்குகையில், மேசியா வெளிப்படுவதற்கான காலம் சமீபித்திருக்கிறது, ஆகவே தேவனுடைய இராஜ்யத்துக்குள்

பிரவேசியுங்கள் என்ற அழைப்பைக்கொடுத்து, பிரசங்கத்தைத் தொடங்கினார். இதற்கென எல்லா ஜனங்களும் ஆயத்தமாக வேண்டும் என்பதே அவரது ஆலோசனையாயிருந்தது, இல்லாவிடில் அவர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கமாட்டார்கள். அடிப்படை குணமாக உங்களது வாழ்க்கையை பரீட்சித்துப் பாருங்கள் என்று அவர் கூறுகிறார். நீங்கள் நியாயப்பிரமாணத்தின்படி உங்கள் சிறந்த ஆற்றலுக்கேற்ப ஜீவிக்கிறீர்களா? இல்லையென்றால், உங்களது திறனுக்கு குறைவான நிலைப்பாட்டிலேயே ஜீவிப்பீர்களானால் நீங்கள் குற்றவாளிகள். உங்களது உயர்ந்த சாத்தியக்கூறின்



அளவின்படி உங்களால் ஜீவிக்க முடியாமற்போனால், தேவதயவை இழந்தவர்களாவீர்கள். உங்களது உடன்படிக்கைக்கும் உண்மையற்றவர்களாய் இருப்பீர்கள். இப்பொழுதிலிருந்து உங்களால் முடிந்தளவு செய்ய தீர்மானம் எடுப்பீர்களாகில், தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் இதை வெளிப்படுத்துங்கள். நீங்கள் பாவங்களுக்காக வருந்துகிறீர்கள் என்பதற்கான அத்தாட்சியாக இது விளங்கும். இவ்வாறாக உங்கள் பாவங்களிலிருந்து கழுவப்படுவீர்கள்.

ஜனங்கள் தங்கள் சொந்த பாவங்களை அடையாளமாகப் போக்கிக்கொண்டனர். யோவான்ஸ்நானகன் அவற்றை கழுவி நீக்கிவிடவில்லை. தங்கள் நியாயப்பிரமாணத்துக்கு இசைவாக ஜீவிக்காதிருந்தோர் யோவான்ஸ்நானகனது பேச்சை மகிழ்ச்சியுடன் கேட்டு, பாவத்திலிருந்து மனந்திரும்ப ஆவலாயிருந்தனர். இப்படிப்பட்ட பெரும்பாலான ஜனங்களுக்கே, வரவிருக்கும் மேசியாவைக் குறித்த யோவானின் செய்தி வேண்டுகோளாக கொடுக்கப்பட்டது. இவ்வாறாக, இவர்களும் தேவதயவையும் ஆசீர்வாதத்தையும் காத்துக்கொண்டவர்களோடு சேர்ந்துகொண்டனர். "கபடற்ற உத்தம இஸ்ரயேலரிடத்தில் எந்த வஞ்சனையும் இல்லை". இந்த பாவங்களை நீக்குவது என்பது, குற்றம்போவதற்கான உண்மையான கழுவுதல் ஆகாது, ஏனெனில், இயேசுவின் இரத்தம் மட்டுமே, அவரது ஈடுபலியின் புண்ணியம் மட்டுமே பாவத்தை நிஜமாக எடுத்துப்போடும்.

**தர்சுசைச் சேர்ந்த சவுல், யோவானின் ஸ்நானத்தைப் பெற்றிருந்தார்**

தர்சுசைச் சேர்ந்த சவுல் எந்த ஸ்நானத்தால் ஞானஸ்நானம் பெற்றார் என்று சிலர் கேட்கக்கூடும்? இயேசுவின் ஞானஸ்நானமா அல்லது யோவானின் ஞானஸ்நானமா? சவுல் தன் முந்தைய ஜீவியத்தில், தேவனுக்கு முன்பாக "எல்லா நல்மனசாட்சியிலும்" வாழ்ந்திருந்தார். பின்பு, கிறிஸ்துவால் மனமாற்றத்துக்கு உட்படும்வேளையில், எப்படி கழுவப்படவேண்டிய பாவங்களைப் பெற்றிருக்கமுடியும்? அவர் மனம்மாறின தருணத்தினை நாம் நம் நினைவுக்கு கொண்டுவருவோம். கிறிஸ்தவர்களை துன்பப்படுத்த தன்னை ஈடுபடுத்திக்கொண்ட சவுல், தமஸ்கு செல்லும் வழியில், கீழே விழத்தள்ளப்பட்டார். கர்த்தர் அவருக்கு தம்மை வெளியரங்கமாக்கினார். அதற்குப்பிறகு, பரிசுத்தபவுல் கூறுகையில், மதியவேளை சூரியப்பிரகாசத்திற்கும் மேலான பிரகாசத்தில் இயேசு பிரகாசித்ததை தாம் கண்டதாக கூறினார். இந்த மகிமைநிறைந்த வெளிப்பாட்டின் விளைவாக, அவரது கண்கள் குருடாயின. அவரோடு பிரயாணத்தில் உடன்வந்தவர்கள், அவரை தமஸ்குவிற்கு அழைத்துக் கொண்டுபோயினர். அங்கே அவர் பார்வையில்லாதவராய், மூன்றுநாட்கள் உண்ணவுமில்லை, குடிக்கவுமில்லை. பின்பு தேவனுடைய ஊழியக்காரராகிய அனனியா, கர்த்தரால் சவுலிடத்திற்கு அனுப்பப்பட்டு, அவரின் கண்பார்வையை திரும்பவும் வரப்பண்ணினார். சவுலின் பார்வை குணமடைந்ததால், அனனியா அவரைநோக்கி, "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? எழுந்து, உன் பாவங்கள் கழுவப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்" என்றார்.

பரிசுத்த பவுலுக்கு ஏற்பட்ட கண்பார்வை குறைபாடு முற்றிலுமாக ஒருக்காலும் குணமடையாதிருந்தது. அவரது பார்வையை முற்றிலும் குணப்படுத்த கர்த்தர் மறுத்திருந்தார். அவரது கண்களிலுண்டான பலவீனம் மாம்சத்தில் ஏற்பட்ட முள் என்று அவராலேயே கூறப்பட்டதாக சில வேதவசனங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் அந்த பார்வை குறைபாட்டுக்கு ஈடுகட்ட, அதற்கும் மேலான கிருபையின் ஐஸ்வரியங்கள் அவருக்கு அளிக்கப்படும் என்று கர்த்தர் அறிவித்தார்(2கொரிந்12:7–10). அதிக வெளிப்படுத்தல்கள் மூலம் அவர் கனப்படுத்தப் பட்டிருந்தபோதிலும், இந்த இன்னலானது தாழ்மையை காத்துக்கொள்ளும்படி அவருக்கு ஊழியம்செய்தது. மேலும் ஒரு காலத்தில் அவர் கர்த்தருடைய ஜனங்களை காயப்படுத்தினதை அவருக்கு நினைப்பூட்டியது.

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை அவர் துன்பப்படுத்தியபோது, தான் தேவனுக்கு ஊழியம் செய்ததாக மெய்யாகவே நினைத்திருந்து, தாம் செய்தவைகளை தன் முழு நல்மனசாட்சியின் மூலமே செய்ததாக அப்போஸ்தலர் பிரகடனப்படுத்தினார். அவிசுவாசத்தினால் தாம் அறியாமையினால் செய்ததினால் இரக்கத்தைப் பெற்றுக்கொண்டதாக அவர் கூறுகிறார். மேலும், நாம் பரிசுத்தவான்களில் மிகச்சிறியவன், பரிசுத்தவான் என்று கூற தகுதியற்றவன், ஏனெனில் "நான் தேவனுடைய சபையைத் துன்புறுத்தினவன்" என்கிறார். அவரது முந்தைய ஜீவியத்தில் தாம் நியாயப்பிரமாணத்தின் வெளித்தோற்றமான காரியங்களை கைக்கொள்ள மிக கவனமாயிருந்ததாகவும், பரிசேயர்களுக்கு ஒரு பரிசேயனாக இருந்ததாயும் கூறுகிறார். ஆனால் நியாயப்பிரமாணத்தின் ஆவியாகிய இரக்கம் மற்றும் நீதியை புறக்கணித்திருந்தார். நியாயப்பிரமாணத்தின் பேரில் அவருக்கிருந்த வைராக்கியம், தேவனோடு இசைவாயிருந்தவர்களை துன்புறுத்த அதிக ஆற்றலைக்கொடுத்தது. இதனால் அவர் பாவியானார். ஆயினும் தான் செய்வது தவறு என்ற மனசாட்சியை அடைந்திருக்கவில்லை. ஆனால் கர்த்தர் அனனியா மூலமாக அவரது பாவத்தை வெளிப்படுத்தினார். அவர் பவுலை கண்டித்து உணர்த்தி, அவரது பாவங்களை உணரச்செய்து, ஞானஸ்நானத்தால் அவைகளை கழுவிப் போக்கினார்.

**ஞானஸ்நானத்தின் மூலம் எந்த பாவங்களும் உண்மையாக மன்னிக்கப்படுவதில்லை**

எந்த வழியில் ஞானஸ்நானம் பாவத்தைப்போக்கும் என்று, இது நம்மை ஆலோசிக்கத் தூண்டுகிறது. புறஜாதியாரைப் பொருத்தமட்டில், பாவத்தைக் கழுவக்கூடிய எந்த ஞானஸ்நானமும் இல்லை என்று வேதாகமம் நமக்கு காண்பிக்கிறது. புறஜாதியாராக இருந்த நாம் அனைவரும், தண்ணீரால் அல்ல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் வைத்த விசுவாசத்தின் மூலமாக நமது பாவங்கள் கழுவப் பெற்றிருக்கிறோம். நமக்கோ ஞானஸ்நானம் என்பது யோவான் கொடுத்த ஞானஸ்நானம்போல் பாவங்கள் கழுவப்படுதலிலிருந்து வேறுபட்டது. நமக்கு கிறிஸ்துவின் சரீரத்துக்குள் சேரும் துவக்கமாக மரித்து அடக்கம் செய்யப்படுவதாக இது உள்ளது.

ஆயினும், பரிசுத்தபவுலும் மற்ற யூதர்களும் கிறிஸ்துவுக்குள் முறையாக சேர்க்கப்படவில்லை என்று இதற்கு பொருள்படாது. "யூதர்கள் மோசேக்குள்ளாக மேகங்களிலும் கடலிலும் ஞானஸ்நானம் பெற்றனர்". தேவனுக்கும் ஜனங்களுக்குமிடையே இஸ்ரயேலின் முழு தேசத்திற்கும் மோசே மத்தியஸ்தராக இருந்தார். இப்படி இருந்ததன் நிமித்தமாகவே, தேவன் அவர்களோடு உடன்படிக்கைக்குள் பிரவேசித்தார். இஸ்ரயேலரும் தேவன்கொடுத்த எல்லா கட்டளைகளையும் கடைப்பிடிப்போம் என்று வாக்களித்து, அவரோடு உடன்படிக்கைக்குள் நுழைந்தனர். அவர்களில் சிலர், யூதயுகம் முழுவதும் இந்த கட்டளைகளை முறிவுபடாமல் காத்துக்கொண்டனர். அவர்களுள் அப்போஸ்தலர்களது எண்ணிக்கையும் அடங்கும் என்று நாம் நம்புகிறோம். அவர்கள் கர்த்தருக்கு இசைவாயிருந்து, அந்நேரத்தில் நிலவின சூழ்நிலையில் எந்தளவு தங்களால் முடியுமோ அந்தளவு ஒரு நல்ல நேர்மையானதும், நீதியுள்ளதுமான ஜீவியம் ஜீவித்திருந்தனர்.

இயேசுவிடம் வந்திருந்தவர்களில் மற்றவர்கள், தாங்கள் பாவிகளாக இருந்தவர்கள் என்று உணர்ந்திருந்து மனந்திரும்பியிருந்தனர். ஸ்நானகயோவான் அனுப்பப்பட்டதற்கான பிதாவின் திட்டம், இந்த மிகமுக்கியமான நோக்கத்தினை நிறைவேற்றவே என்று நாம் நினைவுகூறுகிறோம். மேசியா அவர்களிடத்திற்கு வரவேண்டும், அவ்வாறு தாம் பிரசங்கித்த தேவராஜ்யத்துக்கு இசைவாகவேண்டும் என்று விரும்புகிற அனைவரும், நியாயப்பிரமாணத்துக்கு ஒத்திசைவாக காணப்படவேண்டும் என்றும் ஸ்நானகயோவான் யூதர்களுக்கு கற்பித்திருந்தார். சிலர் மனந்திரும்புதலுக்கென எதையும் பெற்றிருக்கவில்லை என்றும், ஞானஸ்நானத்தால் கழுவப்படும்படி தங்களிடத்தில் குறை எதுவுமில்லாதிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர், தாங்கள் தேவனோடு செய்த உடன்படிக்கைக்கு அவிசுவாசிகளாக இருந்துவந்ததை உணர்ந்திருந்து, தண்ணீர் ஞானஸ்நானம் எடுத்தனர். இந்த தண்ணீர் ஞானஸ்நானம் அவர்கள் செய்த பாவங்களை கழுவுவதற்கு அடையாளமாய் இருக்கிறது. மனந்திரும்புதலாகிய இந்த செயலானது அவர்களது நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமாக பெறக்கூடிய தயவையும் ஆசீர்வாதங்களையும் அடையும்படி வழிவகுத்தது. அவர்களது நியாயப்பிரமாணத்தின்படி சிந்தப்பட்ட காளையின் இரத்தமும் வெள்ளாடுகளின் இரத்தமும் நிஜமானவே பாவத்தை போக்கவில்லை என்றாலும், இந்த பலிகளை விசுவாசத்தின் மூலமாக முறையாக ஏற்றுக்கொள்ளும்போது, ஜனங்கள் தேவனுடனான உடன்படிக்கையின் உறவை காத்துக்கொள்ள முடிந்தது. அவ்வாறே தண்ணீர் ஞானஸ்நானம் பாவத்தைப் போக்காது என்றபோதிலும், இஸ்ரயேலருக்கான தேவனுடைய ஏற்பாடுகளுக்கு முழு இசைவாகும்படி அவர்களை சீர்பொருந்தச்செய்தது.

ஆகவே யூதர்கள், தாங்கள் தேவனுக்கு இசைவற்றவர்களாக ஜீவித்துவருவதை உணர்ந்திருந்து, ஸ்நானகயோவான் மூலம் ஞானஸ்நானம் பெறும் வாய்ப்பை ஏற்றுக்கொண்டனர். அவர்களுடைய பாவம் தண்ணீரில் அடையாளமாக கழுவப்பட்டு, இதுமுதற்கொண்டு தேவனுடைய சட்டத்தின்படி

ஜீவிப்போம் என்று உள்ளுணர்வுபெற்று, வெளிப்படையாக பிரகடனம் செய்தனர். மதத்தலைவர்களும் மற்றவர்களும் பாசாங்கு செய்பவர்களாக இருந்தனர். மேசியாவின் வருகையின்மூலம் தம் ஜனங்களில் எவரையேனும் ஆசீர்வதிக்க தேவன் நோக்கமாய் இருந்தாரானால், அவரது நியாயப்பிரமாணத்திற்கு இசைவாக தங்களைக் காத்துக்கொண்டவர்களாயும் ஆசீர்வதிப்பர் என்று அவர்கள் நிச்சயித்திருந்தனர். வேதபாரகரும் பரிசேயரும் அந்நேரத்தில் நியாயப்பிரமாணத்தில் அறிஞர்களாக இருந்தோரும், அதோடுகூட சதுசேயரும் யோவானின் பணிகுறித்து அலட்சியமான அபிப்பிராயமே கொண்டிருந்தனர். இவர்கள் மனந்திரும்பவும் தங்கள் பாவங்களிலிருந்து கழுவப்படவும் விருப்பமின்றி இருப்பதனாலேயே இவ்வாறு நடந்துகொள்கின்றனர் என்று இயேசு கூறினார். தங்களிடத்திலுள்ள பாவங்கள் ஏதாகிலும் கழுவப்பட அவர்கள் அதை அறிக்கையிட மனதில்லாதிருந்தனர். ஆகவே யோவானை அவர்கள் ஏற்றுக்கொள்ளாதது போலவே, யோவானுக்கு பின்புவந்தவரும், தன் சொந்த ஜீவனை பாவநிவாரணமாக தந்து நிஜமாகவே பாவத்தை போக்கினவரையும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை.

**எப்படி யூதர்கள் மோசேயிடமிருந்து கிறிஸ்துவிடத்துக்கு மாற்றப்பட்டனர் ?**

புறஜாதியார் மனந்திரும்புதல்மூலம் மோசேயின் பிரமாணத்தின் உறவுக்குள் வரமுடியாதிருந்தது, ஏனெனில் ஒருபோதும் அவர்கள் அந்த நியாயப்பிரமாணத்தின்கீழ் இருந்ததில்லை. மோசே கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருக்கிறார். மோசேக்குள்ளாக எல்லா யூதர்களும் ஞானஸ்நானம்பெற்றதுபோல், மோசேயின் இடத்தை இயேசு பிடித்தபொழுது, இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்ட எல்லோரும் பெற்ற மோசேக்குள்ளான ஞானஸ்நானம், கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானமாக எண்ணப்பட்டது. அப்போஸ்தலர் சுட்டிக்காண்பிக்கிறபடி(அப்3:22), "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக, உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக". மோசேயைப் போன்ற அந்த தீர்க்கதரிசி கிறிஸ்துவே. எப்படி அனைத்து இஸ்ரயேல் ஜனங்களுக்கான தேவனுடைய பிரதிநிதியாக மோசே இருந்தாரோ, அவ்வாறே அவரைப்போலவே, முழு உலக ஜனங்களுக்குமான தேவனுடைய மிக மேலான பிரதிநிதியாக இயேசுகிறிஸ்து இருப்பார்.

மோசே மூலமாக தேவனிடத்தில் முறையான உறவு கொண்டிருக்கிற எந்த யூதனாயினும், விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்பட்டான். ஆகவே அடையாளமான மோசேக்கு நிஜமாக கிறிஸ்து இருப்பதை புரிந்துகொண்ட உடனே, ஒருவன்

மோசே மூலமாக தேவனிடத்தில் முறையான உறவு கொண்டிருக்கிற எந்த யூதனாயினும், விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவுக்குள் கொண்டுவரப்பட்டான். ஆகவே அடையாளமான மோசேக்கு நிஜமாக கிறிஸ்து இருப்பதை புரிந்துகொண்ட உடனே, ஒருவன்
கிறிஸ்துவுக்குட்பட்டவனாக ஆகிறான். மேலும் மோசேக்குள்ளான ஞானஸ்நானம் மாபெரும் நிஜமான மோசேக்குள்ளான ஞானஸ்நானம் ஆகிறது. இஸ்ரயேலரின் அடையாளமான உறவை கிறிஸ்துவுக்கு ஒப்பிடும்போது, அடிக்கப்பட்ட கன்மலையின் தண்ணீரை அவர்கள் குடித்ததை; "எல்லோரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில், அவர்களோடே கூடச்சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே" –1கொரிந்10:4 என்று அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறார். அவர்கள் நிழலில் அத்தண்ணீரை குடித்தார்கள். இதனால் விசுவாசத்தினால் மேசியாவை ஏற்றுக்கொண்ட இஸ்ரயேலின் விசுவாசிகள் ஏற்றவேளை வரும்போது, அவர்கள் அடையாளமான உறவுக்கு மரித்து, நிஜமான ஆவிக்குரிய கன்மலையாகிய கிறிஸ்து இயேசுவைப் பருகத்தொடங்கினார்கள். அவர்கள் மேசியாவோடு உயிரோட்டமான உறவுக்குள் நுழைந்தார்கள்.

பாவங்களைப் போக்கும் ஞானஸ்நானம் இனிமேலும் யூதர்க்கு பயனுள்ளதாயிராது. ஏனெனில் புறஜாதியாரைக் காட்டிலும் அவர்களுக்கு முன்னுரிமை பெற்றிருந்த வழியின்மூலம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த வாய்ப்பு முடிவுக்கு வந்தது. இப்பொழுது கிறிஸ்துவிடம் வருவதற்கு மற்றதேசத்தார் அல்லது ஜனங்களைக்காட்டிலும் யூதருக்கு எந்த சுலபமான வழியும் சிலாக்கியமும் ஏற்படுத்தப்பட வில்லை.

கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு ஐந்துநாட்களுக்கு முன்பாக யூதர்கள் ஒரு தேசமாக பாழாக்கப்பட்டநிலைக்கு விடப்பட்டனர். இந்நிலை இரட்டிப்பான தண்டனை அடைந்துதீருமட்டும் (அல்லது தயவற்ற நிலை)நீடித்தது. காண்க வேதாகம விளக்கவுரை 2ம்தொகுதி பக்கம்232–248 (தமிழில்). இயேசுவின் சிலுவை மரணத்துக்குப்பிறகு நீடித்த, தனிநபர்க்கான யூதரின் விசேஷித்த தயவு 3 1/2 வருடங்கள் கழித்து முடிவுக்கு வந்தது, அதாவது, தானியேல் தீர்க்கதரிசி முன்னுரைத்த 70வார முடிவின்போது முடிவுக்கு வந்தது என்பதை நாம் புரிந்துகொள்கிறோம் (தானியேல்9:24–27). காண்க வேதாகம விளக்கவுரை தொகுதி 2, பக்கம்57–66(தமிழில்).

ஒலிவ மரத்தின் சுபாவக்கிளைகளாக இஸ்ரயேலர்கள் இருந்தபோது, ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் அதன் வேராகவும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அதன் நிஜமான அடிமரமாக இருந்தார் என்றும், இருந்தபோதிலும், சமயம் வந்தபோது, இந்தக் கிளைகளில் அநேகம் முறிந்துவிட்டன என்று

அப்போஸ்தலர் விளக்குகின்றார்(ரோமர் 11ம்அதி.) முறிந்துவிட்ட கிளைகளை மீண்டும் சீர்ப்படுத்த வேறு வித்தியாசமான வழிமுறை எதுவுமிராததால், காட்டு ஒலிவமரக்கிளையை அவற்றில் ஒட்டவைக்க வேண்டியதாயிற்று. இந்தக்கிளைகள் ஏற்கனவே முறிவுபட்டிருந்தன என்று இக்காரியத்தைக்குறித்து அப்போஸ்தலர் ரோமசபைக்கு நிருபம் எழுதும்போது குறிப்பிட்டிருக்கிறார். இதன் காரணமாக, கிறிஸ்துவுக்குள் வருகிற எந்த யூதனாயினும், ஒரு புறஜாதியான்போல ஒட்டவைக்கப்படவேண்டும். அவனுக்கு முற்பட்ட நிலை இனி இல்லை.

**பன்னிரெண்டு எபேசியருடைய முறையற்ற ஞானஸ்நானம்**

அப்போஸ்தலர் 19ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எபேசியர்களைக் குறித்த விஷயத்தை நாம் கவனிப்போம். அப்பல்லோ எபேசுவில் பிரசங்கித்திருந்து, 12 சகோதரருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். ஆனால் யூதருடைய ஞானஸ்நானத்துக்கும், புறஜாதியாருடைய ஞானஸ்நானத்துக்கும் இடையிலான வேறுபாட்டை அவர்களிடத்தில் தெளிவாக அறிவிக்காதிருந்தார், அவர்களிடத்தில் ஸ்நானக யோவானின் ஞானஸ்நானத்தை செய்வித்தார். இதன்மூலம் நியாயப்பிரமாணத்துக்கு எதிராயிருந்த அவர்களது பாவங்களை நீக்குவதற்கு வழிவகுத்தது. அதோடுகூட, மேசியாவை அவர்கள் மறுதலித்து சிலுவையிலறைந்த பாவத்தையும் நீக்கியது. ஆனால் புறஜாதியார் இந்த ஞானஸ்நானத்தை பெறுவதை தேவன் அங்கீகரிக்கவில்லை. ஏனெனில் புறஜாதியார் அவரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் ஒருபோதும் வந்திருக்கவில்லை.

பரிசுத்த பவுல் எபேசுவுக்கு வந்தபோது, அப்பொழுது விசுவாசிகள் அனைவருக்கும் பொதுவாயிருந்த ஆவியின் கொடைகளை இந்த மனுஷர்கள் பெற்றிருக்கவில்லை என்று புரிந்துகொண்டு, அவர்கள் என்ன ஞானஸ்நானத்தை பெற்றார்கள் என்று வினவினார். அதற்கு அவர்கள், “யோவான் கொடுத்த ஞானஸ்நானம்” என்றார்கள். அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மீண்டுமாக ஞானஸ்நானம் செய்விக்கப்படவேண்டியது அவசியமானது என்று அவர்களுக்கு செய்வித்தார். இது, மற்ற சீஷரைப்போலவே அவர்களையும் தேவனோடு முழு உறவுக்குள் கொண்டுவந்தது; அப்போஸ்தலர்கள் இன்னும் தெளிவாக புரிந்துகொள்ளும்பொருட்டும், இவ்விஷயத்தைக்குறித்த சத்தியம் நமக்கு வந்தடையும்பொருட்டும் இந்த தவறை கர்த்தர் அனுமதித்திருந்தார். தேவன் தம் எல்லா பரிவர்த்தனைகளிலும் எந்தளவு தெளிவாகவும், சிறப்பாகவும் கருத்தை உருவாக்கியிருக்கிறார் என்பதை இக்காரியங்கள் நமக்கு தெரிவிக்கிறது. நாம் கர்த்தரோடு உடன்படிக்கையின் உறவுக்குள் வருவதற்கு இது உறுதியான ஒரு வழியாயிருக்கிறது. மேலும் சூழ்நிலைகளை புரிந்துகொண்டு இந்த இறுதிமுடிவை நாம் காணும்படிக்கு அவர் நம்மை வற்புறுத்துகிறார்.

**சுபாவக்கிளைகள் வெட்டப்பட்டன**

யூதஜனங்கள் தேவ தயவிலிருந்தும் தேவ ஐக்கியத்திலிருந்தும் நீண்டகாலத்துக்கு துண்டிக்கப்பட்டிருந்தனர். வேதாகம விளக்கவுரையில் நாம் காண்பித்திருக்கிறதுபோல், அவர்கள் 1845 வருடங்கள் முன்பு தயவைப் பெற்றிருந்து, அதேசமஅளவு வருடங்கள் தயவற்ற காலங்கள் நிலைத்திருந்தனர். அவர்கள் நிஜமான ஒலிவ மரத்திலிருந்து துண்டிக்கப்பட்டனர். ஆனால் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறபடி, தேவன் அவர்களை மீண்டும் ஒட்டவைக்க வல்லமை மிக்கவராய் இருக்கிறார். சுவிசேஷயுகத்தின்போது புறஜாதியாரைப்போல் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் வரும் அதே சிலாக்கியத்தை யூதர் பெற்றிருக்கின்றனர். உண்மை என்னவெனில், யூதனாயிருக்கிற ஒருவர், புறஜாதி கிறிஸ்தவர்களுடைய எல்லா சிலாக்கியங்களையும்அனுபவிக்க எந்த தடையும் ஏற்படுத்தப்படவில்லை. அவர்களுக்கு தடை உண்டாக்குகிற ஒரே விஷயம், தேவனைக் குறித்த தவறான நோக்கமும், முழு உண்மையும் அறியுமுன்பே அடையும் தப்பெண்ணமுமே ஆகும்.

புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறித் தீருமளவும் யூததேசம் தெய்வீக தயவிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. நிறைவேறும் காலங்கள் தற்போது முடிவடைந்துவிட்டது என்று நாம் நம்புகிறோம். மாம்சத்தின்படி இஸ்ரயேலர்கள் தேவதயவுக்கு சீர்பொருந்துவார்கள் என்று பரிசுத்தபவுல் பிரகடனப்படுத்துகிறார். “அவர்கள் உங்களது இரக்கத்தினாலே (சுவிசேஷ சபை) இரக்கம் அடைவார்கள்” என்று அவர் உறுதியளிக்கிறார். மகிமையடைந்த திருச்சபையின் ஊழியத்தின்மூலம் அவர்கள் திரும்பவும் தயவின் நிலைமைக்கு கொண்டுவரப்படுவார்கள். ஒருதேசமாக, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதன் மூலமாக தங்கள் பாவங்களிலிருந்து விடுபடாமல், இந்த சுவிசேஷயுகத்தின் சிலாக்கியங்களை பயன்படுத்தத் தவறினர். ஆனால் புதிய முறைமை ஸ்தாபிக்கப்படும்பொழுது கிறிஸ்துவின் பலியின் புண்ணியங்கள் முழு உலகிற்கும் ஒப்புரவாக்குதலை பொருந்தப் பண்ணும்போது, யூதர்கள் மிகவும் தயையான நிலைமையை அடைந்து, கிருபையைப் பெற்றுக்கொள்வார்கள். இது யூதர்களது பாவங்களையும் உள்ளடக்கியதாகும். நாம் புரிந்திருக்கிறபடி கிபி 1878இல் அவர்களது இரட்டிப்பான தயவற்ற நிலைமை முடிவுற்றது. அவர்களுக்கான சிட்சை இன்னும் முடிவடையாதபோதிலும், யூதர்கள் மத்தியில் தேவதயவு படிப்படியாக வெளிப்பட்டுவருகிறது. அவர்கள் முழுமையாக சீர்பொருந்தும்வரை இது தொடர்ந்து அதிகரிக்கும்.

**சுபாவ இஸ்ரயேலருக்கான விசேஷித்த சிலாக்கியங்கள்**

தேவனுடைய அழைப்பும், கொடைகளும் மனம் வருந்துவதற்கான காரியங்கள் அல்ல; அவை மாறாதவைகள். புதிய யுகத்தின் ஆசீர்வாதங்கள் துவங்கப்படும்போது, சுபாவ இஸ்ரயேலருக்கு விசேஷித்த இடமும், சிலாக்கியமும் அருளப்படும். மற்றுமொரு வழியில், இந்த விசேஷித்த சிலாக்கியம் எப்படி வரவிருக்கிறது என்று நாம் காண்போம்; நியாயப்பிரமாணம் தேவ ஜனங்களாக, அவர்களது அன்றாட வாழ்க்கையில் தடையை ஓரளவு உண்டாக்கிவந்தது. அவர்கள் தேவனிடத்தில் ஓரளவு உண்மையை அடைந்திருந்ததால், மற்ற தேசங்களிலிருந்து அவர்கள் பிரிந்திருக்க ஏதுவாயிற்று.

ஆயினும் மேசியாவின் இராஜ்யத்தில் எல்லோரைக்காட்டிலும் மேலானவர்களாக கருதப்படும் இந்த விசேஷித்த சிலாக்கியம், இரத்தத்தின்படியான யூதர்களான எல்லோருக்கும் அருளப்படுவதில்லை. மாறாக, தீர்க்கதரிசிகளுக்கும், நியாயப்பிரமாணத்துக்கும் உண்மையுள்ளவர்களென நிரூபித்தவர்களுக்கு மட்டுமே – வெளிப்படையாக மட்டுமல்ல, இருதயத்தில் யூதர்களானோர்க்கு மட்டுமே அருளப்படுகிறது. அவ்வாறு நிரூபிக்காத மற்ற அனைவரும் புறஜாதியாரே ஆவர் – ரோமர் 2:28,29.

நம் கர்த்தரது முதலாம் வருகைக்கு முந்தைய யுகங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட முற்பிதாக்களைக்கொண்டு, பூமிக்குரிய ராஜ்யத்தின் நிலைமையானது உருவாக்கப்படும். ஆபேல், ஏனோக், நோவா, ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, யோபு, எபிரேய தீர்க்கதரிசிகள் மற்றும் மற்ற விசுவாசிகள் ஆகியோர் பூமியெங்கும் பிரபுக்களாக அதிகாரத்தில் நியமிக்கப்படுவர்(சங்45:16). மற்ற எந்த ஜனத்தைப்பார்க்கிலும் பாரம்பரியத்தைக் கடைப்பிடிக்கும் யூதர்கள், புதிய யுகத்தின் முறைமைகளையும், ஆசீர்வாதங்களையும் முறையாக பெற்றுக்கொள்ள அதிக ஆயத்தமாயிருப்பார்கள். ஆகவே அவர்கள் முதலாவது ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இதில் தேவன் இந்த ஜனங்களுக்கு மட்டும் பாரபட்சம் பார்த்து தயவை காண்பித்தார் என்று பகுத்தறியாமல், உண்மையுள்ள ஆபிரகாமின் பின்சந்ததியாராக அவர் அவர்களோடு உடன்படிக்கை செய்துகொண்டதன் புண்ணியத்தினாலேயே தயவுபெற்றனர்.

**அடுத்த யுகத்தில் ஞானஸ்நானம்**

புதிய யுகத்தில் ஞானஸ்நானம் நடைமுறையில் இருக்கும் என்பதற்கு எவ்வித காரணமும் இல்லை. இது அறிமுகப்படுத்தப்படும் என்பதற்கு எவ்வித வேத வசனங்களையும் நாம் அடைந்திருக்கவில்லை. ஆயினும் இது மீண்டும் ஏற்படுத்தப்படுமானால், ஆச்சரியத்தில் ஆழ்த்தாது. ஞானஸ்நானம் என்பது தேவனிடத்தில் தத்தம்செய்வதற்கான மிக நேர்த்தியான அடையாளமாகவும், அவரது ஊழியத்திற்கு தன் முழு ஜீவியத்தை தருவதையும் குறிக்கிறது. இது பாவத்தைக் கழுவும் ஒரு சின்னமாக அல்லது அர்ப்பணிப்பின் சின்னமாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக்கூடும். நாம் அறியாதவற்றைக் குறித்து கலந்துரையாடாமல் இருப்பதே நல்லது என்று நாம் எண்ணுகிறோம். சபையானது கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருப்பது அவரது மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றதாகும். இதனால் ஞானஸ்நானம் என்பது ஒரு கிறிஸ்தவனுக்கு மரணத்தின் சின்னமாக உள்ளது. ஆனால் இது எப்பொழுதும் மரணத்துக்கான சின்னமாக இருக்கவேண்டிய அவசியமில்லை. இந்த அழகான சித்திரம் அது கிறிஸ்துவின் குடும்பத்திற்குள்ளான ஞானஸ்நானமாக மாற்றியமைக்கப்படுமானால் அது முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது ஆதிப்பிதாவாகிய ஆதாமிடமிருந்து வேறுபட்டதும் தனித்தன்மை வாய்ந்ததுமான புதிய பிதாவின் சுவீகாரப் பிள்ளைகளாக வெளியரங்கமாக்கப்படுகிறோம். இதனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலம் புதிதான ஜீவனுக்கு எழுப்பப்பட்டிருக்கிறோம். விஷயம் இவ்வாறு இருக்குமானால், நாம் ஆச்சரியப்படக்கூடாது. கர்த்தர் முழுமையாக வெளிப்படுத்தாதவரை இன்னும் தெளிவாகாத அந்த விஷயங்களை விட்டுவிடுவதே நல்லது.

யோவான் முதலாவதாக ஞானஸ்நானத்தை உபயோகித்ததால் யோவானின் ஞானஸ்நானம் என்று அவரது பெயரால் அழைக்கப்பட்டது. இவர் கிறிஸ்துவுக்கு முன்னோடியாக இருந்து, ஆயத்தப்பணியை செய்வதற்கென பயன்படுத்தப்பட்டார். யோவான் மற்றும் அவரது சீஷர்கள் மட்டுமல்ல, இயேசுவும் அவரது சீஷர்களும்கூட இந்த ஞானஸ்நானத்தை யூதர்களிடையே செய்துவந்தனர்(யோவான்4:1–3). இந்த சடங்கு முறைமையானது பாவத்திலிருந்து மனந்திரும்புதற்கென்று அழைத்து, வரவிருக்கின்ற மேசியாவுடன் இசைவாகச்செய்தது. இயேசுவை, மாபெரும் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று அடையாளம் கண்டுகொள்ளப்படவேண்டியது மிகவும் அவசியமாயிருந்தது. யோவானது ஞானஸ்நானம் மோசேயுடனான உறவுக்கு யூதர்களை மீண்டும் கொண்டுவந்தது. நியாயப்பிரமாணத்துக்கு இசைவாகும்படிசெய்தது, எல்லாவற்றிற்கும் மேலாக மேசியாவை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களை இது ஆயத்தப்படுத்தியது.

பாவம்போக்குவதற்கென்று கொடுக்கப்பட்ட யூதர்களுக்கான ஞானஸ்நானம் பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு, முன்செய்யப்பட்டவாறே தொடர்ந்தது. ஆனால் ஞானஸ்நானம் செய்வித்தவர்களுக்கெதிராக யூதர்கள் குற்றஞ்சுமத்தி வந்தனர். உண்மையில்லாத நிலையில் அவர்களது மற்ற பாவங்களோடு ஜீவாதிபதியை சிலுவையில் அறைந்த குற்றமும் கூட்டப்பட்டது. அவர்கள் செய்தது தவறு என்று உணர்ந்தவுடன் அநேகர் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களை ஆளுபவர்கள்

பிரதான ஆசாரியன், உடன் ஆசாரியர்கள், 70 பேர்கொண்ட யூத ஆலோசனை சங்கம், சதுசேயர்கள், பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர் ஆகியோர் மூலமாக ஜனங்கள் செய்த தவறுகளுக்கு முழுதேசமும் குற்றவாளிகளாக இருப்பதை அவர்கள் கண்டனர்.

யூதர்களில் நொறுங்குண்ட இருதயமுடையோர், முழு ஜனத்திற்கும்மேல் உண்டாயிக்கும் சாபத்திலிருந்து தாங்கள் தப்பிக்க என்னசெய்யவேண்டும் என்று முறையாக வினவினர். அதற்கு பரிசுத்த பேதுரு பதில் கூறினார்; “நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்”

மேசியாவை சிலுவையிலறைந்த அவர்களது பாவத்துக்காக அவர்களை மன்னிக்கவேண்டும் என்பதற்கான காரணங்களை சுட்டிக்காட்டி பேதுரு பேசுகிறார் ; ‘சகோதரரே, நீங்களும் உங்கள் அதிகாரிகளும் அறியாமையினாலே இதைச்செய்தீர்களென்று அறிந்திருக்கிறேன். அறிந்திருந்தார்களானால் மகிமையின் கர்த்தரை சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்களே”– அப்2:37,38; அப்3:13–15,17. அவர்கள் வாக்குத்தத்தங்களின் பிள்ளைகள் என்று பேதுரு அப்போஸ்தலன் அவர்களுக்கு நினைப்பூட்டினார். அபிஷேகம்பெற்ற தம் குமாரன் மூலமாக தேவன் ஏற்படுத்தின இந்த ஏற்பாட்டின்படி இஸ்ரயேலர் விசேஷித்த உரிமையை பெற்றிருந்தனர். அதன்படி, அவர்களுக்கு முதலாவது வந்திருக்கவேண்டியது என்றும், அவர்கள் மனந்திரும்புதல் அவர்களுக்கு மன்னிப்பையும், பாவங்கள் நீக்கப்படுவதும் அவர்களிடத்தில் நிகழவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்திற்குள் புறஜாதிகளுக்கு மட்டுமே பொருந்தக்கூடிய புதிதாக மூழ்குதலைப்பற்றி அப்போஸ்தலர் பேசவில்லை. ஏனெனில் புறஜாதியார் யூதருக்கென அதேவழியில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார்கள். பாவங்கள் நீக்கப்படுதல் மற்றும் யூதருடைய பிரமாண ஏற்பாட்டின்கீழ், தேவதயவுக்குள் சீர்பொருந்துவதுமாகிய இஸ்ரயேலருக்கே உரிய காரியங்களுக்கு, புறஜாதியார் ஒருபோதும் உட்பட்டதில்லை. நியாயப்பிரமாணத்துக்கு எதிராக புறஜாதியார் ஒருபோதும் பாவம்செய்ததில்லை. ஆகவே யூதரை நடத்துவதுபோல் புறஜாதியாரை நடத்தமுடியாது.

### யோவானின் ஞானஸ்நானம் கிறிஸ்தவ ஞானஸ்நானமா ?

யோவானின் ஞானஸ்நானம் கிறிஸ்தவ ஞானஸ்நானமா ? என்ற கேள்வி மீண்டும் கேட்கப்படுகிறது. அல்லாவிடில், கிறிஸ்தவனுக்கு எப்பொழுதிலிருந்து கிறிஸ்தவ ஞானஸ்நானம் கொடுக்கப்பட ஆரம்பித்தது ? நாம் முன்பே உணர்ந்தவாறு, யோவானின் ஞானஸ்நானம் கிறிஸ்தவ ஞானஸ்நானம் அல்ல, மாறாக, பாவங்களை கழுவும் ஞானஸ்நானம் மட்டுமே என்று நாம் பதிலுரைக்கிறோம். யோவானால் ஞானஸ்நானம்



செய்விக்கப்பட்ட சிலர், கிறிஸ்துவைப்பற்றி எதுவும் அறியார்கள். ஆகவே இது கிறிஸ்தவ ஞானஸ்நானமாக இருக்கமுடியாது. ஆயினும் கிறிஸ்தவ ஞானஸ்நானம் பெறும் யூதர்க்கு, மோசேயிடத்தில் திரும்புகிறதும், அதன் நிஜமாக கிறிஸ்துவை புரிந்துகொள்வதும் இன்னும் அதிக வலுசேர்க்கும். இவ்வாறு அவர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்குப்பிறகு கிறிஸ்துவுக்குள் மாற்றப்பட்டார்கள்.

ஆனால் புறஜாதியாருக்கு கிறிஸ்தவ ஞானஸ்நானம் ஒரு புதிய விஷயமாயிருந்தது. இது இஸ்ரயேலராகிய ஒலிவ மரத்துக்குள் காட்டு ஒலிவக்கிளைகள் ஒட்டவைப்பதற்கு அடையாளமாக இருந்தது. இது மேசியாவின் சரீரத்திற்குள் அந்நியரை 12 கோத்திரங்களுக்குள் இணைத்து, யூதருடன் உடன்அங்கங்களாக ஆவிக்குரிய இஸ்ரயேலராக்குகிறார். ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் 12000பேராக, இந்தஆவிக்குரிய இஸ்ரயேலரின் முழு எண்ணிக்கை 1,44,000.(வெளிப்2:9; 3:9; 7:1–18; 14:1–5). புறஜாதிகளிடமிருந்து எடுக்கப்பட்டகாட்டு ஒலிவக்கிளைகள் நல்ல ஒலிவ மரத்தோடு இணைக்கப்பட்டு, கிறிஸ்துவின் சரீரத்தில் குறைவுபட்டிருக்கிற அந்த எண்ணிக்கையை பூர்த்தி செய்கிறது.

### தற்போது தண்ணீர் ஞானஸ்நானம் கடைப்பிடிக்கப்படுகிறதா ?

அக்டோபர்1914இலிருந்து தண்ணீர் ஞானஸ்நானம் கடைப்பிடிக்கப்படுவது முறையானதா ? என்பதைக் குறித்து சில நண்பர்கள் குழப்பத்தில் இருப்பதாகத் தோன்றுகிறது. அவ்வாறு கடைப்பிடிக்கப்படுமாயின், ஒரு விசுவாசியை தண்ணீரில் மூழ்கவைக்கும்போது, ஞானஸ்நான சடங்கை நடத்துபவரால் எந்த வார்த்தைகள் உபயோகிக்கப்படுகிறது ? குறிப்பாக, வயது சென்று உடன்படிக்கை செய்பவரிடத்தில் ?

இதற்கு பதிலுரையாக, முதலாவதாக, கிறிஸ்துவின் சரீர அங்கத்தில் உறுப்பினராகுதல் நிறைவடைதல்பற்றி, நாம் நேர்மறையாக தீர்மானம்செய்ய ஆற்றல் பெற்றிருக்கிறோம் என்பது சரியான கருத்தல்ல. அந்நேரம்வரை யாராகிலும் முறையான வழியில் தன்னை ஒப்புக்கொடுப்பாராகில் அவர் தகுதியுடையவராகிறார் என்று நாம் நிச்சயித்திருக்கிறோம். இரண்டாவதாக, தற்போது, மூழ்குதலுக்காக தன்னை ஒப்புக்கொடுத்தவர்களில் சிலர், முன்பே முழு அர்ப்பணிப்பு செய்திருக்கிறர்கள். அவர்கள் 5,10, அல்லது 20 வருடங்களுக்கு முன்பு தங்களை பிரதிஷ்டைசெய்தவர்களைக் குறிக்கும் அடையாளமாக இருக்கக்கூடும். மூன்றாவதாக, கிறிஸ்துவின் சரீரம் தற்போது நிறைவடைந்துவிட்டது என்று நாம் நிச்சயித்திருந்தாலும்கூட, ஏன் தேவனுடனான உடன்படிக்கை தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்க அடையாளமாக உபயோகிக்கக்கூடாது? தன்னை ஒப்படைப்பது மற்றும் தன் தனிப்பட்ட சித்தத்தை கர்த்தருடைய சித்தத்துக்குள் மூழ்கடிப்பதை இந்த அடையாளம் குறிப்பிடுகிறபடியால், இதுவே முறையான வழிமுறையாக ஒவ்வொருவரும் பின்பற்றவேண்டும். எல்லோருக்குமான வேறுபட்ட ஒரு வழிமுறையை ஆயிரமாண்டு அரசாட்சியின்போது எடுப்பது பற்றி நாம் கற்பனை செய்யமுடியாது. அப்பொழுது சுபாவ மாறுதலை அடையும்படி ஒருவரும் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்பதே வேறுபாடாக இருக்கும், ஆனால் அந்த யுகத்தில் நடைபெறும் திரும்பக்கொடுத்தலின் சிலாக்கியங்களாகிய அவரது தயவின்கீழ் பூமியில் பூரண மனித சுபாவத்துக்கு உயர்த்தப்படுதல் நடக்கும்.

தற்போது உதயமாகிவருகிற ஆயிரமாண்டு ஆட்சியின்போது, உலகத்துக்குக்குண்டான தேவனுடைய ஏற்பாட்டிற்கு இசைவாக வருபவர்கள், கிறிஸ்துவின் புத்திரராக இருப்பார்கள். அவர் அவர்களுக்கு ஜீவனளிப்பவராக, “நித்திய பிதாவாக” இருப்பார். அவர் சுவிஷேசபைக்கு பிதாவாயிராமல், அவர்களது மூத்த சகோதரராக இருக்கிறார். சுவிசேஷ யுகத்திலுள்ளோர் தேவபுத்திரராய் உள்ளனர். உலகிற்கு அளிக்கப்படும் ஜீவன், அவர்கள் நிமித்தம் இயேசு ஒப்புக்கொடுத்த பூமிக்குரிய ஜீவனாக இருக்கும். 1கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில் அவருடையவராக இருப்போர் ஆயிரமாண்டு அரசாட்சியில் அவருக்குரியவர்களாவர்.

1 கொரிந்தியர் 15:23ம் வசனம் இவ்வாறாக நாம் வாசிக்கப்படவேண்டும், ஒவ்வொரு மனுஷனும் தன் சொந்த வரிசைப்படியே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலன்களில் முதலாவதாக அபிஷேகம் பண்ணப்பட்டவர் கிறிஸ்து. அதன்பிறகு, பரொசியாவின்போது ஆயிரமாண்டு கிறிஸ்துவின் ஆளுகையில், கிறிஸ்துவுடையவர்கள் அவரது பிரசன்னத்தில் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் (கிறிஸ்து) தேவனும் பிதாவுமானவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார் **(15:24–28).** முழு மறுசீரமைக்கப்பட்ட உலகமும் கிறிஸ்துவின் பொதுவான குடும்பத்திற்குள் வந்துசேரும். மணவாளனாகிய இயேசுவும் அவரது மணவாட்டியாகிய சபையும் புத்துயிர் ஊட்டப்பட்ட மனித குடும்பத்தை பூமிக்குரிய பாகத்தில் தங்கள் புத்திரராக பெற்றிருப்பர். மனுக்குலம் தங்களை பிரதிஷ்டை செய்வதன்மூலம் கிறிஸ்துவின் புத்திரராவர். ஆதாமுக்குள் இழந்துபோனதை மனுக்குலத்திற்கு மீண்டும் தந்து சீர்ப்படுத்துவதே அவர்களைக்குறித்த பிதாவின் சித்தமாய் உள்ளது. மாறாக அவர்களுக்கு ஆவிக்குரிய சுபாவத்தைத் தருவதல்ல.

நாம் கண்ட இந்த எல்லா காரணங்களின் பொருட்டும், அடையாளமான ஞானஸ்நானத்தில் அல்லது அதன்தொடர்பான மொழியில் இந்நேரத்தில் நாம் எந்த மாற்றத்தையும் உண்டாக்காதிருப்பது முறையானது என்று நாம் காண்கிறோம். இது தேவனுக்கும் அவரது ஊழியத்துக்கும் தங்களை அர்ப்பணிப்பதற்கு பொருத்தமான சித்திரமாக தண்ணீர் ஞானஸ்நானம் உள்ளது என்று நாம் எண்ணுகிறோம். ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய ஜீவியத்தின் எந்த மட்டத்தில் ஒருவர் நித்தியத்துவத்தை செலவிட்டாலும் இந்த அடையாளமே பொருத்தமானதாக இருக்கிறது.

----------

# புதுசிருஷ்டிக்கான சோதனைகள் விசித்திரமானவை

# TEMPTATIONS PECULIAR TO THE NEW CREATION

திறவு வசனம் :"நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" – எபிரேயர் 4:15,16.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து யூதருடைய முறைமையின்படியான ஆசாரியராக இல்லாதிருந்தபோதிலும், லேவி கோத்திரத்தின் அங்கமாக இராதிருந்தபோதிலும், ஒரு விசேஷித்த தெய்வீக நியமனத்தின்படி அவர் ஒரு ஆசாரியராக இருந்தார் என்று இந்த நிருபத்தில் கொடுக்கப்பட்ட சத்திய செய்திமூலம் தன் வாசகர்கள் உணர்ந்துகொள்ள அப்.பவுல் வழிகாட்டுகிறார். யோவானால் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானத்தின்மூலம் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டு பரிசுத்தஆவியின் அபிஷேகம்பெற்ற அவ்வேளையில், தம் ஆசாரிய ஊழியத்திற்குள் பிரவேசித்தார். பிரதான ஆசாரியராக அவருடைய பணி இன்னும் நடைபெற்றுவருவதோடு, ஆயிரமாண்டு ஆளுகை முடியும்வரை முழுமை பெறாமல், அது தொடர்ந்து நடைபெற்றுவரும். அவர் தற்போது ஒரு ஆசாரியனாக உன்னதமான நிலையாகிய தெய்வீக ஸ்தானத்தில் இருந்துவருகிறார். அவரது உயிர்த்தெழுதலில் மனுக்குலத்திற்கு மேலான நிலையில் உன்னதங்களிலே உயர்த்தப்பட்டார். இருந்தபோதிலும், இந்த மாபெரும் பிரதான ஆசாரியர், எல்லா விசுவாச வீட்டின் புத்திரர்க்கும் மேலானநிலையில், பிரதானமானவராக, நமது மனித பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடியவராயிருக்கிறார். அவர் மாம்சத்திலிருந்த நாட்களில் நம்மாதிரியான சோதனைகளையும், நம்மாதிரியான கஷ்டங்களையும் அடைந்திருக்கிறபடியால், நமது பெலவீனங்களையும் நமது சோதனைகளையும் உணர்ந்திருக்கிறார்.

ஒரு தாய் படுகின்ற அதே தன்மையுடைய கஷ்டங்களை இயேசு எப்படி அடைந்தார் என்ற கேள்வி **நம்முன் எழுகிறது ? அவர் ஒருபோதும் ஒரு தாயாக இருந்ததில்லை, பின் எப்படி ஒரு தாயாக எல்லா வகையிலும் அவரை பரீட்சிக்கப்படமுடியும் ? ஒருபோதும் பூமிக்குரிய நிலையில் தகப்பனாக இருந்ததில்லை, பின் எப்படி அவர் ஒரு தகப்பனது பரீட்சைகளை அடையமுடியும் ? எப்படி ஒரு குடிகாரனாக அவர் பரீட்சிக்கப்படமுடியும் ? அவர் பரிபூரணராக இருந்தாரே, அப்படியிருக்க, அநேக வழிகளில் விழுந்துபோன மனுக்குலம் அகப்படும் சோதனைகளிலும் அவர் எப்படி பரீட்சிக்கப்படமுடியும் ?**

**இங்கு அப்போஸ்தலர் விழுந்துபோன மனுக்குலம் அடைகின்ற சோதனைகளைக் குறித்து குறிப்பிடவில்லை என்று நாம் பதிலுரைக்கிறோம். எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்..." என்று புதிய சிருஷ்டிகளைக் குறித்தே அவர் பேசியிருக்கிறார். ஒரு புதுசிருஷ்டிக்கு வரக்கூடிய சோதனைகள் மட்டுமே நம் கர்த்தருக்கு வந்ததேதவிர. மற்ற சோதனைகளை அவர் அனுபவிக்கவில்லை. கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக நாம் சோதிக்கப்படுவதுபோலவே அவர் சோதிக்கப்பட்டார். ஆதாமின் தரம்கெட்டுப்போன சந்ததியின் அங்கங்களுக்கு வருகின்ற விழுந்துபோன சுபாவத்தின் ஈர்ப்புக்களும், ஆசை இச்சைகளும் , மனப்பான்மையும் நம்மை தீவிரமாய்த் தாக்குவதால் வரும் ஒவ்வொரு சோதனைக்கும் அவர் கீழ்ப்பட்டிருக்கவில்லை. இவைகள் புதுசிருஷ்டிக்கான சோதனைகள் அல்ல. யேகோவாதேவனின் கொடியின்கீழ் தங்களை இணைத்துக்கொண்டவர்கள், நீதியைவிரும்பி அக்கிரமத்தை வெறுக்கவேண்டும். இதுவே நம் கர்த்தரின் சிந்தையாய் இருந்தது.**

**யாரெல்லாம் தன் சிந்தையில் நீதியைவெறுத்து, தவறை அங்கீகரிக்கிறார்களோ, அவர்கள் கிறிஸ்துவின் சிந்தையை அடையவில்லை என்று சாட்சியளிக்கின்றனர். ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட புதுசிருஷ்டிகள் அடையக்கூடிய சோதனைகளைப்போல், இயேசு அடையவில்லையாதலால், இவர்கள் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற, "நாம்(நந) " என்ற வகுப்பாரில் ஒருவராக ஆகமுடியாது. தங்கள் முந்தைய நாட்களில் பாவங்களில் வாழ்ந்தோர், அதன் விரும்பத்தகாத தன்மையை போதுமான அளவு உணர்ந்திருப்பார்கள். பாவத்தை பயிற்சிசெய்தவர்கள், பெரும் நாசத்தையும், அழிவையும் ஏற்படுத்தும் அதின் தாக்கத்தை உணர்ந்து, அதன் அசுத்த சுபாவத்தை போதுமான அளவு சாட்சியமாக அடைந்திருப்பர். ஆகவே பாவத்திலிருந்து தப்பியோடி தேவ குடும்பத்திற்குள் பிரவேசித்திருக்கிற நாம், "நாய் தான் கக்கினதை தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றில் புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட பழமொழியின்படி" நடவாமல் இருப்போமாக. அவைகள் நமக்கு சோதனைகளாக இருக்கமுடியாது. நமது சோதனைகள் இன்னும் மிக நுட்பமானவைகளாக இருக்கும்.**

**சுயநலத்தின்படியான சோதனைகள்**

**யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றபிறகு நம் கர்த்தரின் ஜீவியத்தை நோக்கிப்பார்த்தோமானால், அவர் எவ்வாறு சோதிக்கப்பட்டார் என்று நாம் காண்கிறோம். அவருக்கு நேர்ந்த சோதனைகளில் தேவன் கொடுத்த வல்லமையை உபயோகிப்பது குறித்து ஒரு சோதனை ஏற்பட்டது. அவருக்கு பசி உண்டாயிற்று, அவர் இருந்த இடத்தில் உணவுஎதுவும் கிடைக்கவில்லை. தம்மிடமுள்ள அற்புத வல்லமையை பயன்படுத்தி கற்களை அப்பமாக்கும்படி கட்டளையிட்டு, உணவை வருவித்துக்கொள்ளும்படி விரோதி ஆலோசனை கூறினான். இதனை அவரால் செய்திருக்கமுடியும். ஏனெனில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தருணங்களில் அவர் அற்புதமாக உணவை வருவித்து, திரளான கூட்டத்தாரை போஷிப்பித்தார். மற்றொருமுறை அவர் தண்ணீரை ருசிமிக்க இரசமாக மாற்றியிருந்தார். ஆனால் இந்தத் தருணத்தின்போது தம் சொந்த பசியைப் போக்க இந்த வல்லமையை உபயோகிக்க**

--2900--

மறுத்தார். தம் பலியின் ஊழியத்தை துவங்குவதற்கு ஆயத்தப்படுத்தும்படியாக பிதாவின்மேல் கொண்டிருந்த அர்ப்பணத்தின் ஆவியானது ஜெபிக்கவும் தியானிக்கவும் தேவ வசனத்தைக் கற்கும்படியாகவும் அவரை வனாந்தரத்திற்கு வழிநடத்தியது.

கற்களை அப்பமாக்கவோ அல்லது தண்ணீரை திராட்ச இரசமாக்கவோ வல்லமையை நாம் பெற்றிருக்கவில்லை. ஆனால் நாம் குறிப்பிட்ட சில சிலாக்கியங்களையும் வாய்ப்புக்களையும் பெற்றிருக்கிறோம். உதாரணமாக, அவரது நன்மை மற்றும் மனுக்குலத்திற்கான அவரது மகா அற்புதமான திட்டத்தையும் கர்த்தருடைய நாமத்தில் எடுத்துரைக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களுக்கு இவை அனைத்துமே சிலாக்கியங்களாகும். இக்காரியங்களை செய்யும்போது, வரும் சோதனைகள் நமது சொந்த விசேஷித்த அனுகூலத்துக்காக இருக்கும். எடுத்துக்காட்டாக, அதன்மூலம் கனம், மேன்மை அல்லது பெரும் ஊதியம் அடையலாம் என்ற எண்ணத்தோடு சத்தியத்தை பிரஸ்தாபப்படுத்த நாம் பொறுப்பேற்றிருக்கலாம். இந்த தேவனுடைய வல்லமையையும், தேவனுடைய சத்தியத்தையும் பயன்படுத்தி, தனிப்பட்ட வகையில் செல்வத்தையோ அல்லது புகழையோ திரட்டுவதற்காக, தேவனுடைய ஊழியக்காரர்களுக்கு இந்த சோதனை அடிக்கடி வரும். யார் இக்காரியங்களை எந்தளவு செய்கிறார்களோ, அந்தஅளவுக்கு அவர்கள் சோதனைக்குள் அகப்படுகிறார்கள்.

மற்றுமொருவழியில் இயேசு சோதிக்கப்பட்டது, “ஆலயத்தின் உப்பரிகையிலிருந்து தாழக்குதி” இதன் மூலம் எல்லா ஜனங்களது கவனத்தையும் தம்மிடத்தில் ஈர்க்கமுடியும் என்று ஆலோசனை தரப்பட்டது. இந்த செயலின்மூலம் அவர் மனித ஆற்றலுக்கும் மேற்பட்ட வல்லமையை அடைந்திருக்கிறார் என்று நிரூபணமாவதோடு, தேவனுடைய விசேஷித்த பராமரிப்புக்குள் இருக்கிறார் என்றும் குறிப்பாய்ச் சுட்டிக் காட்டுவதாக அமையும். விரோதியானவன், தன் வழக்கமாக கையாளும் வழிமுறைப்படி வேதாகமத்துக்கு பொருத்தமற்ற விளக்கமளித்து, அப்படிப்பட்ட சம்பவத்தில்அவர் பாதம் கல்லில் மோதாதபடி அவரை தாங்குவார் என்றும், தேவன் அவரைப் பாதுகாக்க வாக்களித்திருக்கிறார் என்றும் நம் போதகரை நம்பச்செய்ய முயற்சித்தான். ஆனால் வேதத்திற்கு எதிரான அர்த்தத்தைக்கொடுப்பதைக் கண்டு இயேசு கோபமடைந்து, “உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக” என்று சொல்லியிருக்கிறதே என்றார்”. தேவனுடைய வாக்குத்தத்தத்தை தவறான நோக்கத்திற்காக பயன்படுத்தக்கூடாது என்று அவரை பரீட்சிக்க மறுத்துவிட்டார். ஒவ்வொரு சோதனையிலும் எழுதப்பட்ட தேவவார்த்தை அவரது அடைக்கலமும் பலமுமாய் இருந்தது.

அவ்வாறே கிறிஸ்துவின் சீஷர்களில் சிலரும் முட்டாள்தனமான துணிவுள்ளவர்களாய், தங்களுடைய தீமையின் வழிமுறைகளில் தேவன் தங்களுக்கு கேடகமாய் இருந்து, இயற்கையின் பிரமாணத்திற்கு முரணான விஷயங்களில் அல்லது அதன் விளைவுகளிலிருந்து பாதுகாப்பார் என்று இப்படிப்பட்ட காரியங்களை செய்யும் சோதனைக்குள் அகப்படுகிறார்கள். தேவனுடைய குழந்தைகளது பங்கில், இது பகுத்தறியாமல் யூகத்தின் அடிப்படையில் செய்ததாகும். இப்படிப்பட்ட வழிமுறை மறைமுகமாக உணர்த்துவது என்னவென்றால்; “தேவன் என்னை பாதுகாப்பார் எனக்கு துன்பம்வர அவர் அனுமதிக்கமாட்டார்” என்பதேயாகும். தேவன் தம் வசனத்தில் ஒருபோதும் அங்கீகரிக்காதவற்றை தானாக யூகித்துசெய்து, அதன்மூலமாக விளைகின்ற தீங்கினை தடுக்க பின்பு ஏதாவது அற்புதத்தை எதிர்பார்ப்பது முற்றிலும் தவறானதும், நியாயப்படுத்த முடியாததுமாகும். குளிரான அல்லது புயற்காற்று அடிக்கும் தட்பவெப்பசூழலில் நாம் வெளியே செல்ல முறையான ஆடைகளை அணியாமல், யோசிக்காமலேயே ஏற்றுக்கொள்வோமாகில், அவ்வாறு செல்ல அவசியமில்லாதநிலையில் அதனிமித்தமாக உடல் ஆரோக்கியம் கெடுமானால், நாம் தவறுசெய்கிறோம். உத்திரவாதமில்லாத காரியத்தைச் செய்கிறோம். நமது சரீரங்கள் கர்த்தருக்குரியவையாதலால், அவசியமில்லாத எதையும் செய்ய நமக்கு உரிமையில்லை. அது காயமேற்படுத்தவோ அல்லது மரணத்தைப் பிறப்பிக்கவோ அபாயத்தை உண்டுபண்ணக்கூடும். நமது கடமையினிமித்தமோ அல்லது அலட்சியத்தினாலோ அப்படிப்பட்ட வழிமுறையை கையாளும்போது அவை மன்னிக்கப்படக்கூடும்.

### சமரசம் ஏற்படுத்தத்தூண்டும் சோதனைகள்

மற்றொரு சோதனை நம் கர்த்தருக்குக் கொடுக்கப்பட்டது. இவ்வுலகத்தின் இராஜ்யங்களையெல்லாம் அவருக்குக் காண்பித்து, கீழே சாஷ்டாங்கமாக விழுந்து சாத்தானை அவர் பணிந்துகொண்டாரானால் போதும். பாடுபட தம்மை ஒப்புவிக்காமலேயே தேவன் அவருக்கு நியமித்திருக்கிற வலிநிறைந்த பாதையை சந்திக்காமலேயே இவையனைத்தும் அவரது கட்டுப்பாட்டிற்குள் கொடுக்கப்படும். யேகோவாவின் அதிகாரத்திற்குப் பதிலாக தனக்கு கட்டுப்படவேண்டும் என்பதே அவர்முன்வைக்கப்பட்ட சோதனை. அவர் துன்பப்படவோ தேவன் எதிர்பார்க்கும் பலியை நிறைவேற்றவோ அவசியமில்லை என்பதே சாத்தானின் வார்த்தையில் இருந்த மறைமுக குறிப்பீடாகும்.இயேசு சாத்தானோடு இணக்கமாக செயல்பட்டாரானால், எல்லாக் காரியங்களும் மிருதுவாயும், வளமையாயும் நடக்கும். இதற்கு நம் நேச கர்த்தர் பதிலுரையாக;

‘பின்னாகப் போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்”. தந்திரமிகுந்த விரோதி ஒவ்வொரு வழியிலும் தோற்கடிக்கப்பட்டான். இயேசுகிறிஸ்து தேவவசனத்தை சர்வாயுத வர்க்கமாகக்கொண்டு, ஒவ்வொரு தாக்குதலிலும் தம்மை பாதுகாத்துக்கொண்டார்.

அவ்வாறே நமக்கும் சோதனைகள்

**--2901--**

வரக்கூடும்.சிறிதும் வளைந்துகொடுக்காமல் நேராக நடக்காதிருந்து, ஓரளவு உலகத்தோடும் அதன் ஆவியோடும் இணக்கமாக நடந்தோமானால், ஜனங்களிடத்தில் மாபெரும் செல்வாக்கை அடையலாம் என்று ஆலோசனைகள் நமக்கு வழங்கப்படக்கூடும். இதுவே நம் போதகருடனான சாத்தானின் வாதாடலாக இருந்தது:

"என்னோடு இசைந்து நட, அப்பொழுது நீ அவர்களுக்கு கொடுக்க எண்ணியிருக்கிற மாபெரும் ஆசீர்வாதத்தினை நாம் இருவருமாக சேர்ந்து முழு உலகத்திற்கும் கொண்டுவரமுடியும்". ஆனால் இயேசு பிதாவின் வழியிலிருந்து திசைமாறவில்லை. கர்த்தருடைய ஜனங்களுக்கு இவ்வகையான சோதனைகளும்ஆலோசனைகளும் அடிக்கடி வரநேரிடும். அவரது முழுநேர ஊழியர்களில் அநேகர் உலகத்தோடும், விரோதியோடும் சமரசம் செய்திருக்கின்றனர் என்று நாம் அச்சமடைகிறோம். விரோதியின் இந்த கண்ணிக்குள் சபை அமைப்புக்கள் விழுந்திருக்கின்றன. இது நிச்சயமாகவே படுகுழிக்குள் அமிழ்த்தக்கூடிய மாபெரும் தவறாக இருக்கிறது. கர்த்தருடைய ஜனங்களுக்கு இவ்வகையான ஆலோசனைகளும் சோதனைகளும் அடிக்கடி நேரிடும்.

தீமைக்கு தீமைசெய்ய நேரிடும் சோதனைகள்

தீமைக்கு தீமைசெய்யவும், ஏச்சுபேச்சுகளுக்கு பதிலாக வசைபாடுதலும் செய்யும்படி சோதனைகள் நமக்குள் வரக்கூடும். சிலுவை மரணத்துக்கு முன்பாக நம் கர்த்தரும் இவ்வாறு சோதிக்கப்பட்டார். பிரதான ஆசாரியர்களிடத்தில் அவர் கையளிக்கப்பட்டு, பின்பு யூதருடைய ஆலோசனைச்சங்கம் முன்பாக நிறுத்தினபொழுது, அவர்களிடத்தில் தம்மை உயர்வாக காண்பித்திருக்கலாம், ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அந்நேரத்தில் பிரதான ஆசாரியனை இயேசு மிக கடுமையாக தாக்கி, தர்க்கித்து பேசியிருக்கலாம். பிரதான ஆசாரியனின் குணாதிசயத்தைக் குறித்து அவர் உண்மையான குற்றச்சாட்டுக்களை கடுமையாக முன்வைத்திருக்கலாம். தாம்பெற்றிருந்த பேச்சுத்திறனின் வல்லமையைக்கொண்டு, பெரும்குழப்பத்தை அவர் விளைவித்திருக்கலாம். இந்த வழியில் ஒருவேளை பெரும் மனத்தூண்டுதலை அவர் பெற்றிருக்கக்கூடும். ஆனால் அவர் தம் சமாதானத்தைக் காத்துக்கொண்டு, அடிக்கப்படுவதற்கு கொண்டுசெல்லப்படும் ஆடுபோல தம்மைக் கையளித்தார். நாமும் இதற்கொத்த வகையில், ஜனங்களோடு நேர்மையாக செயல்படவேண்டும் என்ற ரீதியில், அவர்கள் இக்காரியத்தைப்பெற தகுதியுடையவர்களே என்று தீர்மானித்து, அவர்களுக்கு கொடுக்கும்படிக்கு –தீமைக்கு தீமை செய்யும்படி, சோதனைகள் நேரிடும்.

நமது கிருபாசனம்

இவ்வகையான சோதனைகளை எதிர்த்து எப்பொழுதும் ஜெயிக்க நம்மால்முடியாது என்று நாம் புரிந்துகொள்ளும்பொழுது, நமக்கு கிருபாசனம் உண்டு என்பதை நாம் உணரவேண்டும். அங்குசென்று ஏற்றவேளையில் இரக்கத்தையும் சகாயஞ்செய்யும் கிருபையையும் கண்டடைவோம். நாம் நம் மகா பிரதானஆசாரியரை அணுகலாம். பழையஏற்பாட்டு பிரதான ஆசாரியர் மிக உன்னதமும் மேன்மையுமான ஸ்தானத்தை வகித்திருந்தார். நமது பிரதான ஆசாரியரோ மிக உன்னதமான ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டார். இதை கவனத்தில் கொள்ளும்போது, எளிதில் அணுகமுடியாதவர், பழகுவதற்கு கடினமானவர் என்று முதலில் நாம் அவரைக்குறித்து எண்ணியிருக்கக்கூடும். ஆனால் இவரே நமது இரட்சகர், நமக்காக மரித்தவர், இதனால் அவர் மகா உன்னதங்களுக்கு உயர்த்தப்பட்டு, மகிமையின் சிங்காசனத்தின்மேல் அமர்ந்திருந்தாலும், அவரது சிங்காசனம் இரக்கமிகு சிங்காசனம் என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

பிதாவின் சிம்மாசனத்துக்கு நேரடியாக வருவதற்கு சமானமாக, இரட்சகரின் சிங்காசனத்துக்கு வருதல் இருப்பதில்லை. யேகோவா தேவனின் சிம்மாசனம் என்பது ஒரு நீதியின் சிம்மாசனம். ஆனால் இயேசுவின் சிம்மாசனம் கிருபையின் சிம்மாசனமாகும். நாம் மிக உயர்ந்த நிலைப்பாட்டிற்கு வருவதற்கு தவறுவோமேயானால் இங்கு நாம் இரக்கத்தைக் பெறுவோம். நாம் எவ்வகையான சோதனைகளை பெற்றுள்ளோம் என்று நம் இரக்கமிகுந்த பிரதான ஆசாரியன் அறிவார் என்பதை நினைவில்கொள்ளவேண்டும். நம்மால் முடிந்தளவு சிறப்பாக முயற்சி செய்திருந்து, தவற்றால் ஜெயிக்கப்பட்டிருப்போமாகில், நம்மை எப்படி ஊக்கப்படுத்துவது என்றும், எப்படி இரங்குவது என்றும் அவர் அறிந்திருக்கிறார். இந்த கிருபாசனம் நமக்கு இரக்கம் காண்பிக்கவேண்டும் என்ற இந்த முக்கிய நோக்கத்திற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவில் நாம் நிறுத்தவேண்டும்.

இவ்வாறாக நமது சோதனைகள் மற்றும் தூண்டுதல்கள் ஆகியவற்றில் நம் கர்த்தர் நமக்காக இருந்து, நமது ஊக்கமான போராட்டங்களையும் முயற்சிகளையும் காண்கிறார். இது மற்றுமொருமுறை அவ்வித சோதனைகளை எதிர்க்க நம்மை பலப்படுத்துகிறது. "அவர் அறிகிறார், நேசிக்கிறார், பராமரிக்கிறார்". ஆகவே நாம் ஒருபோதும் சோர்வடையக்கூடாது, அதற்கு மாறாக, நாம் அவரிடத்தில் வருவதைக்கண்டு அவர் ஒருபோதும் சோர்வுறமாட்டார், நம்மை வெறுமனே அனுப்பவும் மாட்டார் என்று அறிந்து, அவரிடத்தில் மீண்டும்மீண்டும் வரவேண்டும்.

------------------------------

**--2902--**

[R5965]

# புது சிருஷ்டிக்கு உரியதான சோதனைகள்

"நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதானஆசாரியர் நமக்கிராமல், எல்லா விதத்திலும் நம்மைபோல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." (எபிரேயர் 4:15, 16)

கர்த்தர் இயேசு லேவி கோத்திரத்தில் ஒருவர் அல்ல, மேலும் அவர் யூத முறைமையின்படி ஆசாரியராய் இல்லாதிருந்தும் விசேஷமான தெய்வீக நியமனத்தினிமித்தம் அவர் ஆசாரியராக உள்ளார் என்றே வாசகர்கள் புரிந்து கொள்ளும் விதமாக அப்போஸ்தலர் பவுல் இந்த நிரூபத்தில் பேசுகின்றார். அவர் யோவான்ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெற்ற சமயத்தில் பரிசுத்தஆவியினால் அபிஷேகம்பண்ணப்பட்டு, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட அந்த நாளிலிருந்தே அவர் இந்த ஆசாரிய அலுவலில் நுழைந்தார். மேலும், இந்த அலுவல் 1000 வருட அரசாட்சியிலும் தொடர்ந்து 1000 வருட அரசாட்சியின் முடிவில் இந்த அலுவல் நிறைவடைகின்றது. இப்பொழுதோ அவர் தெய்வீகம் என்னும் உயர்வான தளத்தில் ஆசாரியராய் உள்ளார். உயிர்த்தெழுதலின் பின்பு அவர் மிகவும் வல்லமையுள்ளவராகவும் மனுக்குலத்திற்கு மேலாக உயர்த்தப்பட்டிருந்த போதிலும் புத்திரர் வீட்டாரிலும் மிக உயர்வாகக் காணப்படும் மகாபிரதானஆசாரியன் என்ற விதத்தில் மாத்திரம் அவர் நம்மிடம் உள்ள மனிதன் சார்ந்த பெலவீனங்களைக் குறித்த உணர்வுகளால் தொடப்பட்டவராய் உள்ளார். அவர் மாம்சத்தில் இருந்தபோது நமக்கு உள்ளதுபோல் சோதனைகள் மற்றும் இடர்பாடுகள் அவருக்கு இருந்தபடியால் அவர் நம்முடைய குறைவுகள், சோதனைகள் மற்றும் இடர்பாடுகளைப் புரிந்தவராய் உள்ளார்.

அவர் தாயாக ஒருபோதும் இருந்ததில்லை, அப்படி இருக்க ஒரு தாய் என்ற விதத்தில் அவளுக்கு வரும் எல்லா சோதனைகள் போலவே அவர், எப்படி சோதிக்கப்பட்டிருக்க முடியும்? ஒரு தாய்க்கு உள்ள சோதனைகள் போலவே அவருக்கு எப்படி நேர்ந்திருக்கக் கூடும்?. மேலும் அவர் ஒரு போதும் தகப்பனாக இருந்ததில்லை. அப்படி இருக்க ஒரு தகப்பனுக்கு வரும் சோதனைகளை அவர் எப்படி பெற்றிருக்கக்கூடும்? ஒரு குடிகாரனைப்போல் அவர் எப்படி சோதிக்கப்பட்டிருக்க முடியும்? அவர் பரிபூரணராய் இருக்க, அவர் எப்படி விழுந்து போன மனுக்குலம் சோதிக்கப்படும் விதத்தில் எல்லாம் அவர் சோதிக்கப்பட முடியும்?

இங்கு அப். பவுல் குறிப்பிடுவது விழுந்துபோன மனுக்குலத்தின் சோதனைகள் அல்ல. மாறாக "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும்" என்று கூறும்போது, அவர் புதுசிருஷ்டிகளைக் குறித்துப் பேசுகின்றார். புதுசிருஷ்டியாக இருக்கும்போது, அவருக்கு வந்த சோதனைகளையே அல்லாமல் வேறு சோதனைகள் வந்தது என்று சொல்வதற்கு எங்களுக்கு எதுவும் தெரியாது. விழுகையின் நிமித்தம் சீர்கெட்டுப்போன ஆதாமின் சந்ததியான நமக்கு வரும் விழுந்துபோன விருப்பங்கள், ஆசைகள் மற்றும் மனப்போக்கினால் உண்டாகும் எல்லா சோதனைகளுக்குள் அவர் வைக்கப்படவில்லை. இவைகளெல்லாம் புதுசிருஷ்டியின் சோதனைகள் அல்ல. யெகோவாவின் கீழ் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டவர்கள் அநீதியை வெறுத்து நீதியை நேசிக்க வேண்டும், இதுவே நமது கர்த்தரின் சிந்தையாகக் காணப்பட்டது.

யார் ஒருவன் தன் இருதயத்தில் தவறானவைகளை நேசித்து, அந்த தவறானவைகளுக்கு சாதகமாய் ஒப்புதல் அளிக்கின்றானோ, அவனுக்குள், கிறிஸ்துவின் சிந்தை இல்லை என்றே தன்னைப் பற்றியே ஆதாரம் பகிர்கின்றான். இயேசுவுக்கு வந்ததான, அதாவது ஆவியில் ஜெனிபிக்கப்பட்ட புது சிருஷ்டிக்கு வருகிறதான சோதனைகள்போல் இவனுடைய சோதனைகள் இருப்பதில்லை.

ஆகையால் அவனை (நம்மை) என்று அப். பவுல் சொல்லும் வகுப்பிற்குள் பொருந்தும் நபராக இருக்க முடியாது. பாவத்தில் முன்பு வாழ்ந்தவர்கள், அது விரும்பத்தகாத ஒன்று என்று போதுமான அளவு அறிந்திருக்க வேண்டும். பாவத்தை முன்பு செய்தவர்கள் அதனுடைய விளைவான பெரும் நாசம் மற்றும் அழிவைப் பற்றியும் நிறைவான ஆதாரம் பெற்றுள்ளவர்களாய் இருந்திருக்க வேண்டும். ஆகையால், நாம்

தான் கக்கினதை மீண்டும் திண்பதுபோல், பாவத்திற்கு விலகி ஓடி தேவனுடைய குடும்பத்திற்குள்ளாக வந்திருக்கும் நாம், மறுபடியும் அதனுடைய அடிமைத்தனத்திற்குள்ளாக போக விருப்பம் கொள்ளக்கூடாது. இவைகள் எல்லாம் நம்முடைய சோதனைகள் அல்ல. நமக்கு வரும் சோதனைகள் என்பது, பார்வைக்கு தப்பும் வகையில் மிகவும் நுட்பமானது ஆகும்.

## சுயநலத்திற்கு ஏதுவான சோதனைகள்

யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்த பின்பு கர்த்தர் எவ்விதமாய் சோதிக்கப்பட்டார் என்று நாம் கர்த்தருடைய வாழ்க்கையை பின்னோக்கிப் பார்க்கும்போது காணலாம். தேவன் அவருக்குக் கொடுத்த வல்லமையை பயன்படுத்துவதே அவருக்கு வந்த சோதனைகளில் ஒன்றாகும். கல்லை அப்பமாக மாற்ற கட்டளையிட்டு உணவை உண்டாக்க தன்னிடம் உள்ள அற்புதமான வல்லமையைப் பயன்படுத்தும்படி எதிரியானவன் யோசனை கொடுத்தான். ஏற்கனவே பெரும் திரளானகூட்டத்திற்கு உணவை உருவாக்கி கொடுத்ததுபோலவும், தண்ணீரை இரசமாக மாற்றினதுபோலவும் இந்த காரியத்தையும் செய்திருக்கலாம். ஆனால் இந்த சம்பவத்தில் தன்னுடைய சொந்த பசியை ஆற்றுவதற்கு தன்னுடைய வல்லமையை பயன்படுத்துவதை மறுத்து விட்டார். தன்னுடைய தியாகம் செய்யும் வேலையைத் தொடங்கத்தக்கதாக, அதற்கு ஆயத்தமாகும் விதத்தில் பிதாவின் மேல் அவருக்கு இருந்த அன்பின் பக்தியின்ஆவி, ஜெபம் பண்ணவும், தேவனுடைய வார்தைகளைப் படிக்கவும், தியானிக்கவும் அவரை வனாந்தரத்திற்குள்ளாக வழி நடத்தியது.

நமக்கு தண்ணீரை இரசமாகவோ (அ) கல்லை அப்பமாகவோ மாற்றும் வல்லமை கிடையாது. ஆனால் கர்த்தருடைய நாமத்தில், அவருடைய நன்மைகள் மற்றும் மனிதனின் இரட்சிப்பிற்கான அருமையான அவருடைய நன்மைகள் மற்றும் மனிதனின் இரட்சிப்பிற்கான அருமையான அவருடைய திட்டத்தைக் குறித்து பேசும் சந்தர்ப்பங்கள் போன்ற சில சிறப்புரிமைகள் நமக்கு உள்ளது. இவைகள் எல்லாம் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்களுக்கான சிறப்புரிமை ஆகும். இவைகளை நம்முடைய சொந்த அனுகூலங்களுக்காகப் பயன்படுத்துவதே, நமக்கு இவற்றிலுள்ள சோதனைகள் ஆகும். (எ.கா.) பெரிய கனம் (அ) பெரிய அளவிலான சம்பளம் பெறலாம் என்ற நோக்கத்தோடு நாம் சத்தியத்தைத் தெரிவிக்கலாம். இந்த விதமான சோதனைகள் பெரும்பாலும் தேவனுடைய ஊழியக்காரருக்கு வருகின்றன. அதாவது தங்களுடைய சுயவலிமையை அதிகரிக்கும் வண்ணமாக தேவனுடைய சத்தியத்தையும், தேவனுடைய வல்லமையையும் பயன்படுத்துவது ஆகும். இதை எந்த அளவிற்கு பயன்படுத்துகிறார்களோ, அந்த அளவிற்கு சோதனைக்குள்ளாக விழுவார்கள்.

தேவாலயத்தின் உப்பரிக்கையிலிருந்து கீழே குதித்து, ஜனங்களின் கவனத்தை தன்பால் ஈர்க்க வேண்டும் என்ற யோசனையின் மூலம் இயேசு சோதிக்கப்பட்டது என்பது, இன்னொரு சோதிக்கப்பட்ட விதமாகும். இப்படி அவர் செய்திருந்தால், அவரிடம் மனிதருக்கு அப்பாற்பட்ட வல்லமை உள்ளது என்றும், அவர் தேவனுடைய பாதுகாப்பின் கீழ் உள்ளார் என்பதும் நிரூபிக்கப்பட்டிருக்கும். இவ்வாறாக அவர் தன்னை பற்றியே அற்புதவிதமான ஒரு செய்கையை செய்துகாட்டி இருக்கலாம். இதன் மூலம் அவர் வல்லமை உள்ளவர் என்றுகூட கருதப்பட்டிருக்கலாம். "உன் கால் மோதாதபடி அவர் தம்முடைய தூதரை அனுப்பி தாங்குவார்" என்று தேவன் அவரை பாதுகாக்கும் வண்ணமாக இவ்வாறு கூறியுள்ளார் என்று வசனங்களை மாற்றி தவறாய் கூறி, இயேசுவை நம்ப வைக்க எதிரியானவன் முயற்சித்தான். இது எதிரியானவனின் வழக்கமான முறையாகும். ஆனால் இயேசு இவ்வாறாக வேதத்தின் வசனங்களைத் தவறாக விளக்கப்பப்படுத்தியதற்காக சீற்றம் கொண்டவராக "உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சைப் பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே" என்று கூறினார். அவர் (இயேசு) தேவனை சோதிக்கவோ, பரீட்சிக்கவோ, அவருடைய வாக்குதத்தங்களை தவறாய் பொருத்தி தேவனை பரீட்சிக்கவோ அவர் (இயேசு) மறுத்துவிட்டார். எழுதியிருக்கிற வார்த்தைகளோ, ஒவ்வொரு சோதனையிலும் அவருக்கு புகலிடமும், பலமுமாய் இருந்தது. இயற்கையின் நியமங்களுக்கு எதிர்மாறான தங்கள் செய்கைகளின் தீய விளைவுகளிலிருந்து தாங்கள் காப்பாற்றப்படுவர் என்றோ (அ) சில செய்கையின் நிமித்தம் வரும் பின்விளைவுகளிலிருந்து தாங்கள் இரட்சிக்கப்படுவர் என்றோ நம்பி கிறிஸ்துவின் சீஷர்கள் துணிச்சலின்ஆவியினால் சிலவற்றை செய்ய சோதிக்கப்படுகின்றனர். (5966). இது தேவனுடைய பிள்ளைகளின் உத்தேசம் தான். "தேவன் என்னை பாதுகாப்பார்". "எந்தத் தீங்கும் எனக்கு வர அவர் அனுமதிக்கமாட்டார் "என்றே இவர்கள் சொல்வார்கள்.தேவன் தம்முடைய வார்த்தைகளில் அதிகாரம்

கொடுக்காத ஒன்றை. இவர்கள் ஆராயாமல் செய்து முடித்த பின்பு, அதன் விளைவான தீமையினின்று தங்களை அற்புதமாக விடுவிப்பார் என்று எண்ணுவது தவறானதும், அநீதியான காரியமுமாகும்.அவசியம் இருக்கும் போதும், வேண்டுமென்றே தேவையான உடைகளை அணியாமல் குளிர் (அ) மழையுடன் புயல் இருக்கும் பருவ நிலைகளில் வெளியே செல்வது, என்பது உடல்நிலையைப் பாதிக்கும்.அபாயத்தை ஏற்படுத்திவிடும், இவ்வாறு ஆராயாமல் உத்தேசித்து செய்வது என்பது தவறானதும், போதிய ஆதாரமற்ற காரியமுமாகும். நம்முடைய சரீரம் கர்த்தருக்கு சொந்தமானால் அதற்கு ஆபத்து (அ) மரணம் வரும் அபாயத்தை தேவையில்லாமல் நாமே உருவாக்க நமக்கு எந்த அதிகாரமும் இல்லை. இவ்வாறு செய்வதற்கு கடமை (அ) தேவை இருப்பின் நாம் அந்த குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்கலாம்.

## சமரச ஏற்பாட்டிற்கு ஏதுவான சோதனைகள்

உலகத்தின் சகல இராஜ்யங்களும் காண்பிக்கப்பட்டு, ஒருவேளை யெகோவா தேவனின் அதிகாரத்துக்குக் கீழ்ப்படாமல் மாறாக சாத்தானின் அதிகாரத்திற்கு ஒப்புகொண்டு, அவனுக்கு முன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவனை தொழுது கொண்டால், தேவன் நியமித்த துக்கம், வலிகள் நிறைந்த வழியை எடுக்காமல், கஷ்டங்களுக்கு தன்னை ஒப்புக்கொடுக்காமல், இந்த இராஜ்யங்கள் மேல் முழு அதிகாரம் கொடுக்கப்படும் என்ற காரியமே நமது கர்த்தருக்கு முன் வைக்கப்பட்ட இன்னொரு சோதனையாகும். தேவன் எதிர்பார்க்கிற பலி மற்றும் துயருதலை தான் எதிர்பார்க்கவில்லை என்றும், இயேசு மட்டும் தன்னோடு இசைந்து வந்தால் எல்லாம் தடங்கல் இன்றியும், வெற்றியுடையதாகவும் நடக்கும் என்பதே சாத்தானின் வார்த்தைகளில் இருந்த பொருளாகும். "அப்பாலே போ சாத்தானே", உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே" என்பதே நமது அன்பார்ந்த கர்த்தரின் பதிலாகும். (5966). இவ்விதமாக எதிராளியானவன் எல்லா எல்லைகளிலும் தோல்வியுற்றான். இயேசுவிடம் தேவனுடைய வார்த்தை என்னும் கவசஉடுப்பு இருந்தது, இதன் மூலம், வந்த எல்லா தாக்குதலிருந்தும் அவர் பாதுகாப்பாய் இருந்தார்.

ஆகையால் சோதனைகள் நமக்கும் வரலாம். நாம் அதிகமாக வளைவு அற்றவர்களாக காணப் படாமல், சிலவற்றில் உலகத்தோடும், அதனுடைய ஆவியோடும் இசைந்து செயல்பட்டால் நாம் ஜனங்கள் மத்தியில் மேலான செல்வாக்கைப் பயன்படுத்தலாம், இன்னும் நன்றாய் போகும் என்கிறதான யோசனைகள் நமக்கு இருக்கலாம். "என்னோடு சேர்ந்து வேலைசெய் அப்போது நீ உலகத்திற்கு ஆசீர்வாதங்களைக் கொடுக்கத்தக்கதாக, நாம் முழுஉலகத்தை மாற்றி கொண்டு வரலாம்" என்பதே எதிராளியானவனுக்கு இயேசுவுடன் கூடிய வாதமாகும். ஆனால் இயேசுவோ பிதாவின் வழியிலிருந்து திசைமாறமாட்டார் இப்படியான யோசனைகள் மற்றும், இதன்மூலம் வரும் சோதனைகள் கர்த்தருடைய ஜனங்களுக்கு அடிக்கடி வரும். அவருக்குப் பின்செல்வோம் என்று வெளிப்படையாக ஒப்புகொண்ட அநேகர் உலகத்தோடும், எதிராளியானவனோடும் உடன்படிக்கை சமாதானம் பண்ணியுள்ளார்கள் என்று நாங்கள் அஞ்சுகின்றோம் சபைகள் (பெயர்சபை) இன்று இந்த பிசாசின் இவ்விதமான வலைக்குள் கண்ணிக்குள் தான் அகப்பட்டுள்ளனர். இது இடர்மிக்க விளைவுகள் கொண்ட மற்றும் விலையுயர்ந்த தவறாகும். இவ்வகை யோசனைகளும், இதன்மூலம் வரும் சோதனைகளும் கர்த்தருடைய ஜனங்களுக்கு அடிக்கடி வரும்.

## தீமைக்குத் தீமை செய்யத்தக்கதான சோதனைகள்

தீமைக்குத் தீமை செய்வதும், பழி கூறுதலுக்கு எதிராக பழிகூறுதல் என்னும் சோதனைகளும் நமக்கு உண்டு. இவ்வாறாக சோதனை சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக நமது கர்த்தருக்கு வந்தது. பிரதானஆசாரியர்கள் மற்றும் யூத ஜெப ஆலயங்களுக்கு முன்பாக அவரைக் கூட்டிச் சென்ற போது, அவர் அவர்களைப்பற்றி (குற்றங்கள்) வெளிப்படையாகக் காட்டிக் கொடுத்திருக்கலாம், ஆனால்அவர் அப்படி செய்யவில்லை. பிரதானஆசாரியனின் குணத்தைப்பற்றி அவர் உண்மையான மற்றும் கடுமையான குறிப்பைப் பேசியிருக்கலாம், மேலும் அந்த சமயத்தில் அந்த பிரதான ஆசாரியனைக் குறித்து கடுமையான குற்றச்சாட்டுகளைத் தாக்கி பேசியிருக்கலாம் .மேலும் அவரிடம் இருந்த ஆற்றல்மிக்க மொழியால் அவர் அங்கு பெரிய கலகத்தை உண்டு பண்ணியிருக்கலாம். இவ்வாறாக செய்யத்தக்கதான தூண்டுதல் அவருக்கு ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் அவர் அமைதியைக் காத்து அடிக்கப்படும்ஆடு அழைத்து செல்லப்பட்டதுபோல் அழைத்து செல்லப்பட அனுமதித்தார். தீமைக்குத்

தீமை செய்யவும், ஒருவர் நமக்கு எதிராக செய்யும்போது அதற்கு இணையாக செய்யும் தன்மை என்றதான சோதனைகள் நமக்கும் உண்டு.

## நமக்கான இரக்கத்தின் சிங்காசனம்

இந்த சோதனைகளை எல்லாம் நாம் எதிர்ப்பதில் எப்பொழுதும் வெற்றி கிடைக்கவில்லை என்பதை நாம் உணரும்போது, நமக்கு கிருபையின் சிங்காசனம் என்ற ஒன்று உண்டு என்றும், உதவி தேவைப்படும் நேரத்தில் நாம் இந்த சிங்காசனத்திற்கு வந்து இரக்கம் மற்றும் உதவும் கிருபையைப் பெற்று கொள்ளலாம் என்பதே நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் நம்முடைய மகாபிரதான ஆசாரியரிடம் வரலாம். முற்காலங்களில் இருந்த பிரதானஆசாரியர்கள் மிகவும் உயர்ந்த மற்றும் கனம் வாய்ந்த நிலையில் காணப்பட்டனர். இவர்களைக் காட்டிலும் நம்முடைய பிரதானஆசாரியர் உயர்த்தப்பட்டிருக்கிறார். அவரை கண்டிப்பானவர் கடுமையானவர் என்றும், எளிதில் அணுக முடியாதவர் என்றும் நாம் முதலில் எண்ணி இருக்க வேண்டும். ஆனால் இவரே நம் இரட்சகர் என்றும், இவரே நமக்காக மரித்தார் என்றும், இவர் எல்லாவற்றிலும் மேலாக உயர்த்தப்பட்டு மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருந்தும், அவருடைய சிங்காசனம், இரக்கத்தின் சிங்காசனமாய் உள்ளது என நாம் நினைவு கூற வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார்.

நம்முடைய இரட்சகரின் சிங்காசனத்திற்கு நெருங்குவது என்பது பிதாவின் சிங்காசனத்தை நெருங்குவது போல் அல்ல. யெகோவா தேவனின் சிங்காசனம் என்பது நீதியின் சிங்காசனம், ஆனால் இயேசுவுடைய சிங்காசனமோ இரக்கத்தின் சிங்காசனமாகும். நாம் நல்லொழுக்கத்தை அடைவதில் தவறினாலும் இவரிடத்தில் நாம் இரக்கத்தைப் பெற்று கொள்ளலாம். நமக்கு என்ன விதமான பரீட்சைகள் சோதனைகள் உண்டு என்று நம்முடைய இரக்கமுள்ள பிரதானஆசாரியர் அறிவார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். நாம் நம்மால் இயன்ற அளவு முயற்சித்தும், தவறில் விழும்போதும், நம்மிடம் எவ்வளவாய் பொருத்து கொள்ள வேண்டும் என்றும், நம்மிடம் மிகுந்த இரக்கமுள்ளவராய் இருக்கவும் அவருக்கு தெரியும். நம்மிடம் இரக்கம் காண்பிக்கவே அதாவது இந்த நோக்கத்திற்காகவே அவர் இரக்கத்தின் சிங்காசனத்தில் உட்கார்ந்துள்ளார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறாக நம்முடைய பரீட்சைகள், மற்றும் சோதனைகளில் கர்த்தர் நம்முடைய ஊக்கமான போராடுதல்களையும், முயற்சிகளையும் பார்க்கிறார் என்றும், அவர் நமக்காய் உள்ளார் என்றும் உணரும் போது, இதுவே அடுத்த சோதனையில் எதிர்த்து நிற்க பலமளிக்கிறது. "அவர் நம்மை அறிந்திருக்கிறார், நம்மை நேசிக்கிறார் அன்பு கூறுகிறார், நம்மை பராமரிக்கிறார்". ஆகையால் நாம் ஊக்கம் இழக்காமல், நாம் அவரிடம் திரும்பத்திரும்ப வருவதினிமித்தம் அவர் ஒருபோதும் களைப்புறுவதில்லை என்றும், அவர் நம்மை வெறுமையாய் திரும்ப அனுப்புவதில்லை என்றும் நினைவில் கொண்டு அவரிடமே திரும்பதிரும்ப நாம் செல்ல வேண்டும். ஆமென்.

---

# சுயகட்டுப்பாடே மனவலிமை

## THE POWER OF THE WILL - SELFCONTROL

**ஆதார வசனங்கள் : ரோமர் 14:12–33**

**திறவுகோல் வசனம்** : “இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக, ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும், இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள்” – ரோமர் 14:13.

தெய்வபக்தி உடையவர்கள் என்று தங்களை சொல்லிக்கொள்பவர்கள், எல்லா விஷயத்திலும் தன்னடக்கத்தின் முக்கியத்துவத்தையும், தன்னடக்கமின்மையால் வரும் தீமைகளையும் கருத்தாய் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென எல்லாக் கிறிஸ்தவரையும் கேட்டுக்கொள்கிறோம். எதற்காக இப்படிப்பட்ட பாடங்கள் மிகவும் முக்கியத்துவம் உடையதாக காணப்படுகிறதென்றால், துரிதமாய்ச் செயல்படுதல், மற்றவரை இடித்துத்தள்ளி முன்செல்லுதல், அவசர கதியில் இயங்குதல் போன்ற செயல்பாடுகளை ஜனங்களது விஷயத்தில் நாம் காணும்போது, நரம்பியக்கத்தின் சக்தி அதிகமாய் வெளிப்பட்டு, மனச்சீர்குலைவுகளும் பைத்தியத்துக்கடுத்த கூறுகளும் விசாலமாகும். ஆகவே தன்னடக்கத்தைக் குறித்த பாடங்கள் மிக முக்கியமானவைகளாகத் தோன்றுகின்றன. இருதயத்தின் தயாளகுணமும், தெளிந்த நிதானிப்பும் எவ்வகையிலும் தன்னடக்கமின்மையை உற்சாகப்படுத்தாது, அல்லது அதனை ஆதரித்து வாதாடாது. ஏனெனில் கடுமையான குற்றம், கீழ்த்தரமான செயல்கள், ஒழுக்கக்கேடு போன்றவற்றின் கனிகளது ஊற்றாக தன்னடக்கமின்மை இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கும். பெரும்பாலான தென்மாகாணங்களில்(அமெரிக்கா) உள்ளூர் மாகாண சுதந்திரமும், அதே நேரத்தில் தேசிய முழுவதுமான கட்டுப்பாடுகளும் பரவியிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறோம். கட்டுப்பாடுகள், சுயாதீனத்தின் முழு நிறைவான, உச்சகட்ட கொள்கையாக இருப்பதில்லை என்பதினால் அல்ல, மாறாக, அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளின் அவசியம் இருப்பதைக்கண்டும், சுயாதீனத்தை நேசிப்போர் தங்கள் உடன்குடிமக்களது நலன் நிமித்தமாக, கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ள மனதாய் இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு முழு சுயாதீனம் கொடுக்கப்படுமானால் அது காயத்தை ஏற்படுத்தும் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. கர்த்தருடைய நாட்களிலும், அப்போஸ்தலர்கள் வாழ்ந்த நாட்களிலும் தட்பவெப்பநிலை வேறுபாடுகளினாலோ அல்லது பொருளாதார ஏற்றத்தாழ்வுகளினாலோ மற்றும் சமுதாய மாற்றங்களினாலோ குறைவாகக் காணப்பட்ட மதுபானவெறியின் மனப்பாங்கு, நாம் வாழும் நாட்களில் அதிகரித்துள்ளது. இக்காரணத்தின் நிமித்தமாகவே வேதாகமம் இதைக்குறித்து மிக அரிதாய் கூறியிருக்கிறது. ஆனால் நம் நாட்களிலோ இதுவே பிரதானமான தீமைகளுள் ஒன்றாகியிருக்கிறது.

நாம் முடிவுகளையும் அனுமானங்களையும் முறையாக எடுத்தாலும், பரிசுத்தஆவியின் ஏவுதலால் எழுதின எழுத்தாளர்கள் குறிப்பிட்டிராதவைகள்மேல், தன்னடக்கம் பற்றி கூறும் தெய்வீக வசனங்களைப் படித்து கேள்விகளை எழுப்பும் ஆர்வத்தை நாம் அனுமதிக்கக்கூடாது. முதலாவதாக, நமக்கென்று ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள பாடத்தை நாம் எவ்வாறு கண்டடைகிறோமோ அவ்வாறே ஏற்றுக்கொள்ளவேண்டும். எழுதப்பட்ட அந்தக்காலத்தில் பிரபலமாயிருந்த கேள்விகளான– சுயாதீனம், நியாயப்பிரமாணம், சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் மனசாட்சியைக் குறித்தவற்றில், அப்போஸ்தலரது கலந்துரையாடல்கள் ஒருபகுதியே உள்ளது. யூதர்கள் தங்கள் நியாயப்பிரமாணத்தை துல்லியமாகக் கடைப்பிடிக்க பழக்கப்படுத்திக்கொண்டனர், அதை முறையாகவும் செய்தனர். ஏனெனில் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிப்பதன்மூலம் நித்தியஜீவனை அடையும் நம்பிக்கையை பெற்றிருந்தனர். ஆனால் இனிமேலும் அதற்கு கீழ்ப்பட்டவர்களல்லர், மாறாக கிருபைக்கு கீழ்ப்பட்டவர்களாகி, கிறிஸ்துவின் பலியின் புண்ணியங்கள் மூலமாக அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நித்தியஜீவனை பெறவேண்டும் என்ற நம்பிக்கையைப் பற்றி கற்று கீழ்ப்படிவதற்கு இது ஒரு விநோதமான பாடமாக அவர்களுக்கு காணப்பட்டது. உதாரணமாக, ரோமாபுரியிலுள்ள யூதர்கள் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க முயற்சிப்பதன்மூலம் நீண்டகாலமாக சோதனைகளையும் கஷ்டங்களையும் அனுபவித்திருந்தனர். யூதர்களுடைய ஓய்வுநாளையும், விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டதையும் அல்லது கழுத்துநெறிக்கப்பட்டு கொல்லப்பட்ட இறைச்சியை புசிப்பதையும் தவிர்க்கவேண்டும். இவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபொழுது, நியாயப்பிரமாணத்தின்கீழ் அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தத்தேடினது முடிவுக்கு வந்தது என்பதையும், அவர்கள் தொழுதுகொள்வதிலும் ஊழியத்திலும், சுயகட்டுப்பாட்டிலும் புதிய கொள்கையின்படியான வழிகாட்டுதலை தேடவேண்டியிருந்ததால் பெரும் கடினம் நேரிட்டது. மற்றவர்களைக்காட்டிலும் சிலரால் இந்த சூழ்நிலையை இயல்பாகவே மிகவிரைவில் கிரகித்துக் கொள்ளமுடிந்தது. சிலர் யூத சடங்காச்சாரத்தின் முந்தைய அடிமைத்தனம் அனைத்தையும் உணர்ந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். மற்றவர்களோ, விசுவாசிக்கிற எவருக்கும் கிறிஸ்து நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு முடிவாக இருக்கிறார் என்றும், கிறிஸ்து ஸ்தாபித்த பிரமாணமானது, பத்து கட்டளைகள் மற்றும் யூத சடங்குகளின் ஆவியைப் பெற்றிருந்தது, மாறாக எழுத்தின் படியல்ல. ஆனால் கிறிஸ்துவுக்குள் ஜீவிப்பவருக்கு அன்பின் பிரமாணத்தைத்

தவிர வேறு பிரமாணம் இல்லை என விரிவாக புரிந்துகொண்டனர். தேவனை எல்லாவற்றிற்கும் மேலாக நேசி, சகோதரரையும் அயலாரையும் நேசி என்ற பிரமாணம் வாசிக்கும்போது மிக சுருக்கமாக காணப்பட்டபோதிலும், வெளித்தோற்றத்தில் பார்க்கும்போது தேவவீட்டின் ஊழியக்காரர்களுக்கு கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாண கட்டளைகளைக்காட்டிலும் இது வேறுபட்டதாயுள்ளது.

“புதிய கட்டளை” அல்லது புதிய அன்பின் பிரமாணம், சீனாய் மலையில் கற்பலகைகளால் எழுதப்பட்ட கட்டளைகளைக் காட்டிலும் தனிமனிதன் சுதந்திரமாய் சிந்திக்கும் உரிமையையும், நியாயந்தீர்த்தலையும் அதிகப்படியாகக் கொடுக்கிறது. இரண்டாவதாக கொடுக்கப்பட்ட அன்பின் கட்டளையில், ஒருவர் தன் சுயாதீனத்தின்படி செய்யும் உரிமை இல்லை. ஆனால் முன்புகொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தில், தீர்மானம் எடுக்கும்பொறுப்பு தனிப்பட்ட நபரிடமும், அவரது சொந்த மனசாட்சியையுமே பெருமளவில் சார்ந்திருந்தது. இதனால் சிலர், தங்கள் புத்தியறிவைக்கொண்டு விசாலமாக சிந்தித்து, தங்களுக்குள் சொல்லிக்கொண்டதாவது; “யூதர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கை முடிவுக்குவந்திருக்கிறது; அது அன்பின் பிரமாணத்தோடும் மற்றும் தெளிந்தபுத்தியும் பலமுள்ள ஆவியோடும் மோதுவதாக, அதன் கட்டுப்பாடுகள் இனியும் செயல்படுத்த மாட்டாது. ஆகவே சிலவகையான உணவு எனக்கு நலமாக இருப்பதை நான் கண்டால், அப்படிப்பட்ட தடைசெய்யப்பட்ட உணவுகளைஉண்ண இனியும் தடைவிதிக்கமுடியாது. மேலும், விசாலமாக சிந்திக்கும்போது சிந்தை வளர்ச்சியடைவதனால், விக்கிரகங்கள் கடவுள்களல்ல என்ற தீர்மானத்துக்கு வருகிறோம். இதன் காரணமாக ஜனங்கள் விக்கிரகங்களுக்கு இறைச்சியைப் படைக்கும் வழக்கத்தினால், அதை விற்பதற்கு முன்னரே விக்கிரகங்களுக்கு படைத்திருந்தாலும், இறைச்சிக்கு எந்த தீங்கையும் ஏற்படுத்துவதில்லை. இதனால், இதை தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்து, அவரால் ஏற்கப்படும்படி, தேவனுக்கு அவபக்தி ஏற்படாதவண்ணம் புசிக்கலாம்.

**பலவீனமான சகோதரர்களை கவனத்தில் கொள்ளுதல் :–**

விக்கிரகங்களுக்கு படைத்தவைகளை புசிப்பதைக்குறித்து பவுல் முன்னரே கொண்டிருந்த தீர்மானத்தில் எவ்வித ஐயப்பாடும் அப்போஸ்தலருக்கு எழாததால், இக்கேள்விக்கான காரணங்களை பகுத்தறியத்தோன்றவில்லை. விக்கிரகம் என்பது மனிதனது கைவேலையே தவிர வேறொன்றுமில்லை என்றும், ஆகவே இறைச்சியை பலியாக முன்னரே படைப்பது என்பது பொருட்படுத்த தக்கதல்ல என்றும், அவ்வாறு செய்வது இறைச்சியை தீட்டுப்படுத்தாது என்றும், வெளிச்சம் பெற்றிருந்த சிலரோடுசேர்ந்து பவுல் அப்போஸ்தலன் இருதயப்பூர்வமாக ஒப்புக்கொண்டார். ஆகவே அப்போஸ்தலருக்கு அப்படிப்பட்ட இறைச்சி கொடுக்கப்படாதபோதிலும், அவ்வாறு கிடைக்கும்பட்சத்தில், அவருக்கு நலமானதாக இருப்பின் அதை உண்ணத் தயாராயிருந்தார். அவர் புத்திசாலிகளது ஸ்தானத்துக்கு ஆதரவளிப்பதைக்காட்டிலும் குறைவான அறிவை பெற்றுள்ளோரிடத்தில் பரிவிரக்கம் காண்பித்தார். ஏனெனில் இப்பாடத்தைக் கற்று, அநேகரிடத்தில் சுபாவமாகிவிட்ட தப்பெண்ணத்தை கீழ்ப்படுத்துவதற்கும், தங்களது மனசாட்சிகளை முறையாகவும், நிச்சயத்தோடும் இயக்குவதற்கு, குறிப்பிட்ட கால அவகாசம் தேவை. மற்றுமொரு வார்த்தையில் கூறுவோமாகில், யூதர்கள் அனைவருக்கும் இவ்விஷயத்தில் போதனை தேவைப்படுகிறது. சிலர் இந்த அறிவை மற்றவர்களைக் காட்டிலும் மிகவிரைவில் அடையலாம், ஆனால் முந்தி கற்றவர்கள், பிந்தி கற்றுக்கொண்டவர்களிடத்தில் பரிவிரக்கம் காண்பித்து, அவர்கள் அந்நிலையை அடையும்வரை பொறுமை காக்கவேண்டும்.

**கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன்பாக :**

“ஒவ்வொருவனும் தன்னைக்குறித்து தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்கக்கடவன்” என்ற பிரகடனத்துடன் நமது பாடத்தின் இந்த விவாதம் துவங்குகிறது. பலவீனமான சகேதரர்கள் மற்றவர்கள்மேல் கடும்கண்டனம் கூறவோ நியாயந்தீர்க்கவோ கூடாது. அதேபோல் பலமான சகோதரர், பலவீனமான சகோதரரை நியாயந்தீர்க்கவோ, கண்டனம்செய்யவோ கூடாது என்பதே அப்போஸ்தலர் வலியுறுத்தும் கருத்தாகும். தேவனே நியாயாதிபதி என்பதை அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே ஒவ்வொருவனும் தன் சகோதரனை குறித்து தீர்ப்பிடுவதற்கு பதிலாக, தன்னிடத்திலுள்ள குறைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். தேவனிடத்திலும் மனுஷரிடத்திலும் குற்றமிழைத்த மனசாட்சி தனக்கில்லை என்று தன்னைத்தான் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் செய்யும்போது, தெய்வீக அங்கீகாரம் நிச்சயமாக கிடைப்பதை உணரலாம். அதே கருத்து முந்தின வசனத்திலும்(10ம் வசனம்) அளிக்கப்பட்டுள்ளதை வாசிப்போம்; “நாம் எல்லோரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம்”. சபை வகுப்பிலுள்ள ஒவ்வொருவரும், தற்போது சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். நம் கர்த்தராகிய இயேசு பிதாவின் பிரதிநிதியாய் இருந்து, தனது சரீரத்தின் பல்வேறு அங்கங்களது நிறைகுறைகளை மதிப்பிட்டு, சோதித்து வருகிறார். அவர்களை தன் சரீரத்தினின்று துண்டிக்கும் எண்ணத்தில் அல்ல, அதற்கு மாறாக, அவர்களுக்கு உதவவும், உற்சாகப்படுத்தவும் ஆதரிக்கவும், அறிவுறுத்தவும், இராஜ்யத்துக்கு ஆயத்தமாகவுமே. நாம் தற்போது கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிற்பதுபோல், ஆயிரவருடஅரசாட்சியின்போது முழு உலக மனுக்குலமும் அவரது நியாயாசனம் முன்பாக நிற்பர், அவர்களை வெள்ளாடுகள் செம்மறியாடுகள் என இரண்டு வகுப்பாக தனித்தனியே பிரிக்கப்படுவர். இந்த சுவிசேஷயுகத்தில் ஜெயங்கொண்டவர்கள், உலகத்தின் நியாயத்தீர்ப்பின்போது, அவர் வாக்களித்தபடி, அவரது ஆயிரமாண்டு சிம்மாசனத்தில் கர்த்தரோடு மணவாட்டிகளாக இருப்பர். “ஜெயங்கொள்கிறவனெவனோ அவனும் என்னுடைய சிம்மாசனத்தில் என்னோடேகூட ”

--2908--

உட்காரும்படிக்கு அருள்செய்வேன் . மேலும் அவர்கூறுவதாவது; "ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு.. . ஜாதிகள்மேல் அதிகாரம் கொடுப்பேன்" மீண்டுமாக கர்த்தர் கூறுகிறார்; கர்த்தரோடுகூட இணைந்து, "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா ?" – வெளிப்3:21; 2:26; 1கொரிந்6:3.

நாம் தற்போது கிறிஸ்துவின் நியாயாசனம் முன்பு நிற்பதோடு மட்டுமல்லாமல், ஒவ்வொருநாளும் நமது விசுவாசம், நேர்மை ஆகியவற்றை எந்தளவு காண்பிக்கிறோம் என்ற கணக்கை ஒப்புவித்து வருகிறோம். ஆனால் கடைசியில், இந்த யுகத்தின்முடிவின்போது, பிரபுவின் உவமையில் சித்திரமாக உரைத்ததுபோல், கர்த்தரால் தீர்மானம் எடுக்கப்படும். தூரதேசத்திலிருந்து அவன் திரும்பிவருகையில், அந்த பிரபு தன் முழு வல்லமை மற்றும் அதிகாரத்தோடு முதலீடுசெய்து, தன் சபையில் உள்ள ஒவ்வொருவருக்கும் அவனது ஊழியம் எவ்வாறிருக்கிறதோ அதற்கேற்ப தாலந்துகளையும் சிலாக்கியங்களையும் வாய்ப்புக்களையும் உண்மையாய் உபயோகிப்பதைப்பொறுத்து, "புதிய கட்டளைக்கு" கீழ்ப்படிவதையும், அவனது விசுவாசத்தையும் பொறுத்து, எல்லோருக்கும் வேலையை பகிர்ந்தளித்தான். அதாவது, தான் அவர்களை நேசித்ததுபோல் அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டும். பின்பு, ஒவ்வொரு மனுஷனுடைய கிரியையும் தற்போது தவறாக புரிந்துகொள்ளப்பட்டபோதிலும், பின்னர் வெளியரங்கமாக்கப்படும். மனுஷரால் மேன்மையாக மதிப்பிடப்பட்டவர், கர்த்தரால் குறைத்து மதிப்பிடப்படுவார், மனுஷரால் குறைத்து மதிப்பிடப்பட்டவர்க்கு இராஜ்யத்தில் மேலான கனம் மேன்மை அருளப்படும். ஆகவே நம் உடன்சகோதரர் என்ன எண்ணுவார்கள் என்று நாமே நம்மைக்குறித்து ஒரு மதிப்பீட்டை உண்டாக்காமல், கர்த்தரிடத்திலும் நம்மைக்குறித்த அவரது நிதானிப்புக்கும் விசேஷமதிப்பு அளிப்போமாக. இதனிமித்தமாகவே அப்போஸ்தலர்; நம்மில் ஒவ்வொருவரும் இனிமேலும் ஒருவர் மற்றவரை குற்றவாளிகளென்று நியாயந்தீர்க்காதிருப்போமாக என்று காரணத்தோடு வாதிடுகிறார், இதற்குமாறாக நம்மீதே நமது நிதானிப்பு இருக்கட்டும். நம் போதகர் கொடுத்த புதிய பிரமாணமாகிய அன்பின் பிரமாணத்திற்கு முரணாக, நமது நடக்கை, நமது சகோதரர்க்கெதிராக இராமல் பார்த்துக்கொள்வோமாக. அந்த பிரமாணத்தை விழிப்புடன் கவனித்துப்பார்த்து, அதை நமக்கு பொருத்திப்பார்த்து, நமது நடக்கையின் வழிமுறை ஒரு சகோதரனை இடறலடைய செய்திருக்கிறதா என சோதித்துப் பார்க்கவேண்டும். சகோதரரிடத்தில் அப்படிப்பட்ட அன்பை நாம் காண்பிக்கும்போது, நம்மை நாமே நமது சொந்த சுயாதீனங்களை, அவசியமிருப்பின் விட்டுக்கொடுக்கும்படி நம்மை வழிநடத்தும். இம்மாதிரியான செயல்கள் கர்த்தரது பார்வையிலும், பரலோகப்பிதாவின் பார்வையிலும் மிகவும் பிரியமாயிருக்கும். இதனால் மேலான கனமும் ஸ்தானமும் நமக்கு நிச்சயம் கிடைக்கும்.

**"கிறிஸ்து யாருக்காக மரித்தார் ?"**

கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளுக்கு, கர்த்தருடைய நிலைப்பாட்டின்படி சட்டப்பூர்வமாக அசுத்தமானது என்றோ அல்லது தடைசெய்யப்பட்ட உணவு என்றோ எதுவுமில்லை என்று , தம் போதனைகளைக் கேட்டோரிடத்தில் அப்போஸ்தலர் பவுல் தன் உறுதியான நிர்ணயத்தை முன்வைக்கிறார். ஆயினும் நம் சுயாதீனத்தின்படி செய்து, அதனால் சிலருக்கு காயம் ஏற்படாதவாறு சகோதர சிநேகம் நம் சொந்த சுயாதீனங்களையும் முன்னுரிமைகளையும் ஓரளவு இழக்கசெய்ய வழிகாட்டுகிறது. ஏனெனில் கிறிஸ்து அவர்களுக்காகவும் மரித்தாரே. கிறிஸ்துவின் அன்பை நாம் பெற்றிருப்போமானால், சரீரத்தின் எந்தஒரு அங்கத்துக்கும் காயம் அல்லது வடு ஏற்படுத்துகிற அல்லது மனசாட்சி இடறுவதற்கேதுவான எக்காரியத்தையும் செய்ய தயக்கம் காட்டுவோம் என்பது அவரது வாதமாயிருக்கிறது. கிறிஸ்துவின் மரணம் அவர்களது இரட்சிப்புக்காக தயாராயிருந்து, இவ்வாறு கிறிஸ்து அவர்களை நேசித்தாராகில், அவர்களுக்கு உதவுவதில் கூட்டிசைவாக செயல்படவும், அவர்கள் இடறாதபடிக்கும், தடைஏற்படாதபடிக்கும் பார்த்து, இவ்வாறு நாமும் அவர்களை நேசிக்கவேண்டும். கர்த்தருக்காகவும் அவரது நீதிக்காகவும் நிற்கும் நிலைப்பாட்டை எடுத்தபிறகு, நமது வெளிப்புறமான நடக்கையானது நம்மால் கூடுமான அதிகபட்ச எல்லையளவு அதற்கு ஒத்திருக்கவேண்டும். அதாவது, நாம் பிறருக்கு அநீதியாய் தோன்றுபவைகளை செய்யக்கூடாது என்பதே இதன் அர்த்தமாகும். "உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்" – ரோமர்14:16.

மாறாக, நன்மையான காரியங்களில் நாம் ஈடுபடும்போது, தேவபக்திக்குரிய காரியங்களுக்கு மதிப்பளிக்கின்ற எல்லோருடைய அங்கீகாரத்தையும் பெறுவோம். இக்கொள்கையை இன்றையநாளில் பொருத்திப்பார்க்கும்போது, பிறரைக்காட்டிலும் ஓய்வுநாளைக்குறித்த அர்த்தத்தைப்பற்றி தெளிவான அறிவைப் பெற்றுள்ளநாம், உதாரணத்துக்கு கூறுவோமாகில், ஞாயிற்றுக்கிழமையை அனுசரிப்பதில் நம் நடக்கை கர்த்தருக்கும் அவரது வசனத்துக்கும்அவமரியாதை ஏற்படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். ஓய்வுநாளின் முக்கியததுவத்தைக் குறித்த நம் மேலான கருத்துக்களை விவரிக்க முறையான நேரமும் சந்தர்ப்பமும் நிகழக்கூடும். ஆனால் இடைப்பட்ட நேரத்தில், ஞாயிற்றுக்கிழமையை பயபக்தியோடே அனுசரிப்போமாக. அதை நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தின் கீழிலிருந்து அல்ல, மாறாக, நமக்கு நாமே திட்டமிடுவதைக் காட்டிலும், சிறப்பாக ஆவிக்குரிய காரியங்களில் ஐக்கியமாயிருக்கும் ஒரு மாபெரும் சிலாக்கியமும் வாய்ப்புமாக எண்ணுவோமாக. இதேகொள்கை மற்ற காரியங்களிலும் வெளியரங்கமான உணர்வுகளுக்கும் பொருந்தும். இவ்வாறு வெளிப்படுத்தப்படும்போது, தேவபக்தி மற்றும் பரிசுத்த காரியங்களில் மற்றவர்களிடத்திலான நமது செல்வாக்கு நிலைநிற்க ஏதுவாகும். கர்த்தரையும் அவரது நீதியையும் நேசிப்பவர்கள் அனைவருக்கும் நற்காரியங்கள் அனைத்தின் பேரிலுமான தேவபக்தி நிச்சயமாக பொருந்தக்கூடியதாக இருக்கும். அறிவு விருத்தியடையும்போது, தேவபக்தியும் அதிகரிக்கச்செய்யும், இருதயத்தில் மட்டுமல்ல, வெளிப்படையாகவும் நிரூபணமாகும்.

**தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்தஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது :–**

**--2909--**

அப்போஸ்தலர் பவுலால் உரைக்கப்பட்ட இவ்வார்த்தையை சிலர் தவறாக புரிந்துகொண்டு, அதற்கு விளக்கமளிப்பது வேதனையளிப்பதாக உள்ளது. அந்த சிலரது கூற்றுப்படி, வரவிருக்கின்ற தேவராஜ்யம் இயேசுவை ராஜாவாகக் கொண்டும், திருச்சபையை உடன் சுதந்திரவாளிகளாகக்கொண்டும் ஆளுகை செய்யும் ஆயிரமாண்டு இராஜ்யமல்ல, ஆசீர்வாதம்பெறவும் ஆளப்படவும் உயர்த்தப்படவும் அந்த இராஜ்யத்தின்கீழ், உலகம் கீழ்ப்பட்டிராது என்கின்றனர். தேவராஜ்யம் என்ற வார்த்தைகள் வேதாகமம் முழுவதும் பயன்படுத்தப்பட்டதை அவர்கள்; இது நிஜமான இராஜ்யத்தைக் குறிக்காது என்றும், மகிழ்ச்சி சமாதானம் விசுவாசிகளின் இருதயங்களில் இருக்கும் நீதியின் ஆட்சியாகவே இருக்கும் என்கின்றனர். இது அப்போஸ்தலர் கூறின கருத்துக்கு கடுமையானதும் தவறானதுமான விளக்கத்தை தருகின்றது. அவரது வாதமோ இவ்வாறாக உள்ளது;

அன்பு சகோதரரே, மற்றவரது மனசாட்சியை திக்குமுக்காடச் செய்வதை அல்லது எவ்விதத்திலும் இடறல் உண்டாக்குவதை எங்கு நீ கண்டாலும்,, கிறிஸ்துவுக்குள்ளான சுயாதீனத்தை பயன்படுத்துவதிலிருந்து விலகியிருங்கள். நீங்கள் தெரிந்தெடுக்கும் புசிப்பிலும் குடிப்பிலுமான இந்த சுயாதீனங்கள் மூலம் கிறிஸ்துவின் நம்பிக்கை நிறைந்த இராஜ்யத்தின் அங்கங்களாகும் அனுகூலம் ஏற்படும் என்று தவறாக எண்ணாதிருங்கள். இதற்கு மாறாக, கர்த்தருடைய நீதி மற்றும் அவரது பரிசுத்தஆவியினால் உண்டாகும் இருதய சமாதானம், இருதய மகிழ்ச்சி ஆகியவைகளே தற்காலத்தில் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களாக, நாம் நம்பியிருக்கிற இராஜ்யத்தின் அங்கத்தினர்களுக்கு இருக்கும் என்று எண்ணிக்கொள்ளுங்கள். தற்காலத்து ஆசீர்வாதங்கள் இவைகளே, புசித்தலைக் குறித்த சுயாதீனங்கள் அல்ல. மற்றவர்களுடைய அனுகூலத்துக்கு இடையூறு ஏற்படுத்துமானால், அத்தகைய சுயாதீனங்களை துறந்துவிட நாம் தயாராய் இருக்கவேண்டும். அதன்விளைவாக, அப்படிப்பட்ட பலிகளின் காரணமாக, பரிசுத்தஆவியின் சமாதானமும், மகிழ்ச்சியும் அன்பும் அதிகரிப்பதை நம்மில் கண்டடையலாம். சபையானது உண்மையாகவே கருநிலையிலுள்ள தேவராஜ்யத்தின் தன்மையில் உள்ளது. அதாவது, இங்குள்ள அதன் ஒவ்வொரு அங்கமும் வரவிருக்கின்ற இராஜ்யத்தில் தங்களது கடமைகள் மற்றும் சிலாக்கியங்களைக்குறித்து அறிவுறுத்தப்பட்டு, ஆயத்தமாக்கப்பட்டுவருகிறார்கள். விசேஷமாக, அந்த இராஜ்யத்தில் பங்கடைய தனது தகுதியை உறுதிப்படுத்துவதற்காக பரீட்சிக்கப்பட்டு, வளர்ச்சியடைந்துவருகின்றனர். தேவராஜ்யம் வரவிருக்கிறது, அவ்வாறு இவ்வுலகிற்கு வரவிருக்கின்ற இராஜ்யத்தில் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல் பூலோகத்திலும் தேவசித்தம் செய்யப்படும்படியான நிலைமை உருவாகும் என்று கர்த்தரது ஜெபத்தின்மூலம் உறுதியாகிறது.

இந்தக்கருத்தை அப்போஸ்தலர் தொடர்ந்து வலியுறுத்துகையில், **(18,19** வசனங்கள்) அப்படி கிறிஸ்துவினிமித்தமாக சுயத்தை வெறுக்கும் ஊழியமானது, தேவனுக்கு மிகவும் பிரியமாயிருக்கும், அதோடுகூட, சரியாக சிந்திக்கும் மனுஷரது அங்கீகாரத்தையும் பெறுவோம். அப்படிப்பட்ட காரியங்கள் மற்றும் நிலைமைகள் அவர்களை பரிசுத்தமடைய போதித்து, பலப்படுத்தி, ஒருவரையொருவர் கட்டியெழுப்பி, இப்படியாக கர்த்தருடைய பின்னடியார்கள் அனைவரும் சமாதானத்தை உண்டுபண்ணுபவர்களாக இருப்பர். எப்பேர்ப்பட்ட விலையேறப்பெற்ற பாடம் இங்கு உள்ளது! கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகள் அனைவரும் அப்போஸ்தலருடைய புத்திமதியின் ஆவியைப் பற்றிக்கொண்டு தங்கள் மீட்பரின் மாதிரிகையைப் பின்பற்றி, மற்றவர்களுக்கு உதவும் நோக்கத்திற்காக மனப்பூர்வமாய் தங்களை வெறுத்து வாழும்போது, தேவபார்வையில் அது அழகுபொருந்தினதாய் இருக்கும். கர்த்தரைப் பின்பற்றுகிற கூட்டத்தாரிடையே இந்த ஆவி பெருமளவில் தங்கி வாசம்பண்ணும்போது, மாபெரும் ஆசீர்வாதமும், ஒருவரையொருவர் கட்டி எழுப்புவதில் பெருமளவு முன்னேற்றமும், குணாதிசயத்தில் பெரும் பலப்படுத்துதலும், ஒருவருக்கொருவர் பெருமளவு உதவுதலும், மற்றவர்களைக்காட்டிலும் தான் உயர்ந்தவன் என்ற மனப்பான்மை இல்லாமற்போவதும், தெய்வீகத்திட்டத்தின் ஒவ்வொரு பண்பைக் காணவும், மதிப்பிட முடியாமலும் இருக்கின்றவர்களை இகழ்ந்து ஒதுக்குகின்ற போலி பெருமை உள்ளோரை அகற்றுவதும் நிகழும்.

``ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளை.. நாடக்கடவோம்''. இப்படிப்பட்ட குறிப்பிடத்தக்க எண்ணிக்கையை பெற்றுள்ள கிறிஸ்துவின் பின்னடியார்கள் அடங்கிய சபை, விசேஷமாக அவர்களில் வழிகாட்டுகிறவர்கள் இருப்பார்களாகில் எப்பேர்ப்பட்ட ஆசீரைப் பெற்றிருக்கும்! இவர்களது அன்பும் சமாதானமும், ஆவியில் ஐக்கியமும், பிறரிடத்தில் கருணையோடும் தயாளகுணத்தோடும் நடந்துகொள்ளவும் அவர்களுக்கு உதவுகிறது. சத்தியத்தின் கொள்கைகளை அலட்சியப்படுத்தும்படி அல்ல, பெற்ற வெளிச்சத்தை மரக்காலின்கீழ் மூடிவைத்துவிடும்படி அல்ல, மாறாக, சத்திய மார்க்கத்தில் நடப்போர் அதை கிரகித்து, ஏற்றுக்கொள்ளவும், அதனால் பலப்படவும் சத்தியத்தை இரங்கும் சுபாவத்தோடும் பெருந்தன்மையோடும் எடுத்துரைப்பார்கள். ‘‘போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே'' என்ற அப்போஸ்தலரது வாதம் எவ்வளவு ஆற்றல்மிக்கது! முக்கியத்துவமற்ற காரியங்களை பாதுகாப்பதற்காக, சபை அல்லது ஒரு தனிப்பட்ட நபரது நலன்களுக்கு எதிராக அச்சுறுத்துவது கூடாது. அப்போஸ்தலர் தீமோத்தேயுவுக்கு புத்திமதி கூறுகையில்; ‘‘தாழ்நிலையிலுள்ள மனுஷருக்கு முன்பாக உன்னை தாழ்மையுள்ளவனாக்கிக்கொள்''.பலவீனமும் தாழ்ச்சியுமுள்ள கர்த்தருடைய உண்மை பின்னடியார்கள் மத்தியில் உன்னை தாழ்த்திக்கொள்; பேச்சிலும் நடக்கையிலும் அவர்களிடத்தில் உன்னைத் தாழ்த்தி, ஆவியில் சத்தியத்தின் ஆதிக்கத்தால் அவர்கள் வெளிச்சம்பெறவும், உயர்வடையவும்செய்து, அவர்களது தேவையை பூர்த்திசெய்யும் திறனுள்ள உதவியாளனாயிரு .

--------------------

**--2910--**

R 5967

# கிறிஸ்துவின் நிருபம்
## THE EPISTLE OF CHRIST

நம்முடைய வேதாகமத்தில் பரிசுத்தபவுல், பரி.பேதுரு, பரி.யோவான், பரி.யாக்கோபு, பரி.யூதா போன்ற பல்வேறு அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட நிருபங்கள் அல்லது கடிதங்களை நாம் பெற்றிருக்கிறோம் என்பது அனைவருக்கும் நன்கு தெரிந்த உண்மையாகும். ஆனால் கிறிஸ்துவின் நிருபத்தைப்பற்றி சிலரே ஒருவேளை கேள்விப்பட்டிருக்கக்கூடும். அப்.பவுல், தான் வாழ்ந்த நாட்களில் எழுதப்பட்டதாக நமக்குக் கூறுகிறார். அவர் அதை எழுதுவது பற்றியும், அது எவ்வாறு செய்யமுடிந்தது என்றும் விவரிக்கிறார். மேலும் இந்த நிருபம் எழுதுவது தொடர்பான விஷயத்தில் கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட கருவிகளில் ஒருவராக அவர் இருந்ததைப் பற்றியும் பிரகடனம்செய்கிறார். இதோ அவருடைய வார்த்தைகள் : ‘‘நீங்கள் எங்கள் ஊழியத்தினால் (எழுத்துக்களினால்) உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல; ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது’’ – 2கொரிந்3:3.

இங்கே வெளிப்படுத்தப்பட்ட கருத்து எவ்வளவு அழகாகவும் கவிதைநடையிலும் இருக்கிறது! இது கர்த்தருடைய விசுவாசமுள்ள ஊழியக்காரனாகிய அப்போஸ்தலருக்கும் கொரிந்துவிலுள்ள கர்த்தருடைய ஜனங்களாகிய இருவருக்கும் ஒரு அன்பளிப்பாக உள்ளது. இது வேறொரு இடத்தில், ‘‘தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்’’ (எபே2:10) என்று அப்போஸ்தலர் அறிக்கையிடுகிறார். எங்கே ஒரு உண்மை கிறிஸ்தவன் – ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவன் என்று மட்டுமல்ல, மாறாக சாந்தம், தயாளகுணம், பொறுமை, நீடிய பொறுமை, சகோதரசிநேகம், மற்றும் அன்பு ஆகிய இரட்சகரின் குணலட்சண சாயலில் ஆவிக்குரிய வளர்ச்சியை அடைந்திருக்கிறானோ அங்கு –– தேவனுடைய வல்லமை அவருக்குள் கிரியைசெய்து, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் – கட்டாயப்படுத்திஅல்ல, மாறாக தனிப்பட்ட ஒவ்வொருவரின் சித்தத்தின் ஒத்துழைப்புடன் உண்டாக்குகிறார் என்பதற்கு சான்றாக பெற்றுள்ளோம். மேலும், எங்கே ஒருசபை, ஒரு பிரித்தெடுக்கப்பட்டவர், வேத மாணவர்களின் ஒரு வகுப்பினர், கர்த்தருடைய பரிசுத்தஆவி அவர்களுக்குள் கிரியைசெய்து, அவர்களை முன்னேற்றமடைய செய்ததற்கான இந்த சாட்சியங்களை காண்பிக்கிறர்களோ, அங்கு –– அந்தகாரத்திலிருந்து தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கவும், காண்பிக்கவும்படியான கிறிஸ்துவின் நிருபமாக இருக்கிறோம்.

இந்த திறவுகோல் வசனத்தில் அப்போஸ்தலர் இதே கருத்தை சிறிது வித்தியாசமான வார்த்தையில், கர்த்தருடைய உண்மையான ஜனங்கள்,‘‘சகல மனுஷராலும் அறிந்தும் வாசிக்கப்பட்டும் இருக்கிற’’(2கொரிந்3:2) வாழும் நிருபங்களாக இருக்கிறார்கள் என்று பிரகடனம் செய்கிறார். வேதாகமம் விலைமதிப்பற்றதாக இன்றியமையாததுமாக இருக்கிறது. அதுபோல வேதாகமத்திற்கு பொருள் விளக்கமளிக்க உண்மையாக உதவுகிற புத்தகங்களும் உள்ளன. இவைகளனைத்தும் கர்த்தருடைய புகழை அறிவிக்கிறதற்கும் உலக ஜனங்களில் ஒருவேளை தேவனைக் கண்டறிய தேடுகிறவர்கள், அவர்களுக்கு சரியான திசையில் சுட்டிக்காட்ட உதவுகிறதாகவும் இருக்கின்றன. ஆனால் மனிதர்களுடைய இருதயத்தை சென்றடைவது சம்பந்தப்பட்ட விஷயத்தில்,_ஒரு சிறந்த நிருபம் என்பது, வேதாகமத்தைக் காட்டிலும்அதிக மதிப்புவாய்ந்தது. இது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான புதுசிருஷ்டியின் வாழ்க்கையாக, ஒரு உண்மை கிறிஸ்தவனுடைய வாழ்க்கையாக உள்ளது. அவனுக்கு, ‘‘பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின’’(2கொரிந்5:17).

இருந்தபோதிலும், அப்.பவுல் தன் முந்தைய கடிதத்தில் இதே கொரிந்துசபையை, முறையான ஒழுக்கத் தரங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவர்களின் கவனக்குறைவு காரணத்தினால் கடுமையாக கண்டித்திருந்தார். ஆயினும் தன்னுடைய கண்டன வார்த்தைகள் அதிக நன்மையைத்தந்து, தேவனுக்கேற்ற மனந்திரும்புதல் அடைய சபையில் கிரியை செய்து, அவர்களுக்கு நீடித்த நன்மையாக இருந்ததை நிருபிக்கும் என்று அப்போஸ்தலர் நமக்கு உறுதியளிக்கிறார். இவ்வாறு, தேவனுடைய ஏற்பாட்டில் ஆண்டவருடைய இந்த பின்னடியார்களினால் செய்த தவறுகளுக்கு தக்க கண்டனத்தை, அன்பான முறையில், பொருத்தமாகக்கொடுக்கிற, உண்மையும் தைரியமுமுள்ள அப்போஸ்தலரை பயன்படுத்துவதன் மூலமாக, அவர்கள் நலனுக்கென்று அவர்களது தீர்மானங்களை எடுக்கும்படி தேவன் அவர்களை மேற்பார்வையிடுகிறார்.

**பரிசுத்த பவுலிடமிருந்த வல்லமையின் இரகசியம்**

தேவ ஏவுதலினால் கொரிந்துசபையினருக்கு அறிவிக்கப்பட்டவைகள், இன்றையகால தேவனுடைய ஜனங்கள் சம்பந்தப்பட்ட காரியங்களிலும் உண்மையாக இருப்பதை நாம் காண்கிறோம். மேலும் இது சுவிசேஷயுகம் முழுவதும் உண்மையுள்ள சாட்சிகளாக, வாழும் நிருபங்களாக இருக்கிறது என நாம் கருதஇயலும். ஆயினும் இன்றைய நிலைமைகளில் நாம் குறிப்பாக அக்கறை கொள்கிறோம். பத்திரிக்கை ஆசிரியரும் அனைத்து சுற்றுப்பிரயாண ஊழியக்காரரும் சபையில் உள்ள மூத்த சகோதரர்களும் அப்.பவுலை விசுவாசம் மற்றும் உண்மைத்தன்மைக்கு நேரிய மாதிரிகையாகக்

கொண்டுள்ளனர். அவர் தன்னைப்பற்றி பிரசங்கம் பண்ணவில்லை, அவர் தவறுகளாகக் காணப்படுகிற மனிதர்களின் ஞானம் மற்றும் அறிவியலின் வசீகரிக்கக்கூடிய வார்த்தைகளை பிரசங்கம் பண்ணவில்லை(1கொரிந்2:1–5; 1தீமோ6:20). அவர் கர்த்தருடைய ஊழியத்திற்கு துணிந்து செயலாற்ற, தன்னையே ஒப்புக்கொடுத்தார். மேலும் அவர் தன்னுடைய சுயமகிமையைத் தேடாமல் தேவனுடைய சித்தத்தையே செய்தார். அப்போஸ்தலர் ஆண்டவருடைய திறமையான மற்றும் தகுதியான பணிவிடையாளராக அல்லது ஊழியக்காரராக மாறினார். கர்த்தர் அவரை யுகங்களைப்பற்றிய மாபெரும் தெய்வீகத்திட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டதான தேவனுடைய அன்பின் மகிமையான செய்தியை எடுத்துரைப்பதில் அதிகதிகமாகப் பயன்படுத்தினார்.

பரிசுத்த பவுலினுடைய விசுவாசம்; ‘‘ஒன்று செய்கிறேன்; பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை (தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தத்தில்) நாடி கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்கான இலக்கைநோக்கித் தொடருகிறேன்(பிலி3:13,14). என்ற வார்த்தைகளில் தெளிவாகப் புலப்படுகிறது. இதுவே அப்போஸ்தலருடைய வல்லமையின் இரகசியம். அவருடைய நிருபங்களின்மூலம் இறங்கிவந்த சத்திய சிற்றோடைகளினால், அந்நாட்கள் முதற்கொண்டு, சபையை ஆசீர்வதிப்பதில் கர்த்தர் தம்முடைய பரிசுத்தஆவியினால் அவரை மிகவும் அதிகமாகவும் திறமையாகவும் பயன்படுத்தியிருப்பதற்கு இதுவே காரணம்.

என்ன ஒரு பற்றார்வத்தை அப்போஸ்தலர் கொண்டிருந்தார்! அவருடைய வார்த்தையை கவனிப்போம்; ‘‘சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ’’(1கொரிந்9:16). தாம் மரித்தபிறகு சித்திரவதை செய்யப்படுவோமோ என்கிற பயத்தினால் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் என்று இது பொருள்படுத்துவதில்லை, மாறாக, கேட்கிற காது உள்ளவர்கள் அனைவரும் கிறிஸ்துஇயேசுவை மையமாகக்கொண்டிருந்த தேவனுடைய கிருபையின் செய்தியை அறிந்துகொள்ளச் செய்வதற்கு, தன் ஆற்றல் முழுவதையும் பிரயோகித்து, அதை செய்வதைத்தவிர வேறு எதிலும் அவர் திருப்தியடையவில்லை என்று உணர்ந்ததை அடையாளப்படுத்துகிறது. இவ்வாறு அவர் தன் நேரத்தை பிரத்தியட்சமாக, பிரசங்கிக்க மட்டும் கொடுத்ததில் வெளிப்பட்டது. இவ்வாறாக குறிப்பிட்ட நேரம், தன்னுடைய தேவைக்காக கூடாரத்தொழிலில் ஈடுபடும் கடமையை செய்தபிறகு, மாலைவேளைகளிலும் விடுமுறை நாட்களிலும் மற்றும் தன் வேலையிலும் பிரசங்கித்தார். இவ்வாறு ரோமின் சிறைக் கைதியாக இருந்தபோதும், விசேஷித்த சுயாதீனம் பெற்றிருந்து, அவரால் பிரசங்கிக்க முடிந்தது. எப்படியாயினும், எந்த இடத்திலும் தேவனுடைய வழிகாட்டுதலின்படி, கேட்கிற காதுள்ள யாவருக்கும் ‘‘நற்செய்தியை’’ பிரசங்கிப்பதற்கு அப்.பவுல் தயாராகவும், மிகுந்த மகிழ்ச்சியுடனும் இருந்தார்.

**மூப்பர்கள் ஏன் கவனமாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும்?**

இந்தஆவி, சுற்றுப்பிரயாண ஊழியர்களின் ஆவியாகவும் சபையின் மூப்பர்களின் ஆவியாகவும் மாத்திரம் இல்லாமல், கிறிஸ்துவின் சபையின் ஒவ்வொரு அங்கத்தினரின் ஆவியாக இருக்கவேண்டும். ஒரு பரந்தஉணர்வில், நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய கிருபையின் செய்தியை மற்றவர்களின் இருதயங்களில் எழுதுவதில் ஒரு ஊழியக்காரனாக அல்லது ஒரு வேலைக்காரனாக இருக்க சலுகை பெற்றிருக்கிறோம்.

ஆனால் நமது சொந்த இருதயங்களில் ஏற்கனவே எழுதியிராவிட்டால், நாம் மற்றவர்களின் இருதயங்களில் எப்படி எழுதுவது என்று அறிந்துகொள்ளமுடியாது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதிலிருந்து மூப்பர்களை தேர்ந்தெடுப்பதில் உள்ள தகுதிக்கான மிகப்பெரிய எச்சரிப்பைப் பெறுகிறோம்–– யார் ஏற்கனவே தங்கள் இருதயங்களில் கர்த்தரின் எழுத்துக்களை உடையவராக இருந்து அதன்விளைவாக, புதிய இளைய சகோதரர்கள் இருதயத்தில் கிறிஸ்துவின் குணசாயல் எழுதுவதற்கு பரிசுத்தஆவியின் வழிகாட்டுதலின்கீழ் தகுதிவாய்ந்த உதவியாளராக இருக்கிறார்களோ, அவர்களைக் கண்டறியவேண்டும்.

மேலும் பல்வேறு முகவர்கள் மூலமாக பரிசுத்தஆவியினால் நம் இருதயங்களில் எழுதப்பட்ட செய்தி என்ன? நிருபம் என்ன? அது காலக்கணக்கைக் குறித்த அறிவா? அது நிழல்கள் மற்றும் திருஷ்டாந்தங்களின் முடிச்சுக்களை கட்டவிழ்ப்பதா? வித்தியாசமாக புரிந்துகொள்ளப்பட்ட வேதாகமத்தின் பகுதிகளைக்குறித்த கடினமான இறையியல் முடிச்சுக்களை உடைப்பதா? அது யூதர்களின் சரித்திரம், உலகத்தின் சரித்திரம், சபையின் சரித்திரம் பற்றிய அறிவா? அது கடந்தகால நிகழ்கால மற்றும் வருகின்ற வெவ்வேறு உடன்படிக்கைகளை புரிந்துகொள்வதும், அதை ஏற்றுக்கொள்வதுமா? இல்லை, அது இவைகளில் ஒன்றும் இல்லை.

இந்தப் பாடங்கள் எல்லாம் ஏறத்தாழ தோராய மதிப்பு பெற்றுள்ளதாகவும், ஏறத்தாழ அவருடைய ஜனங்களின் இருதயங்களில் எழுதப்பட்டுள்ளவைகள் தொடர்பாக நம் கர்த்தரால் ஓரளவு பயன்படுத்தப்பட்டவைகளாகவும் இருக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் நிருபத்தை எழுதுவது என்பது வேறுபட்ட

ஒன்று அந்த எழுத்து, அவருடைய ஜனங்களின் இருதயங்களில், எஜமானின் குணசாயலின் மாதிரியை பிரதியெடுப்பதாகும். அது அவருடைய சாந்தம், தயவு , பொறுமை, நீடியபொறுமை, சகோதரசிநேகம், அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆகியவை ஆகும்.

நாம் காலக்கணக்கு மற்றும் சரித்திரம் சார்ந்த எல்லா அறிவையும் உடையவராக இருக்கக்கூடும். வேதத்தில் உள்ள ஒவ்வொரு வசனத்தையும் மேற்கோள் காட்ட இயலக்கூடியவராகவும் அப்படி அதை குறிப்பிடுபவராகவும் இருக்கக்கூடும். இருந்தபோதிலும், நம் இருதயங்களில் கிறிஸ்துவின் நிருபத்தை இன்னும் எழுதப்பெற்றிராதவராக இருக்கவும்கூடும். இது அப்போஸ்தலர் பேதுரு கூறுகின்ற நிருபமாக; இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும்(சோம்பலான, செயல்படாத) கனியற்றவர்களுமாயிருக்க வொட்டாது". அறிவுக்கு அதற்கேயான இடம் உண்டு. மேலும் இவ்வாறு நம்முடைய இருதயங்களில் எஜமானின் இந்த குணலட்சணங்கள் ஆழமாக செதுக்கப்பட்டு, கிறிஸ்து இயேசுவினுடைய நித்திய இராஜ்யத்திற்குட்படும் நிறைவான பிரவேசம் நமக்கு அருளப்படும்(2பேதுரு1:8,11).

**மதிப்பு மிகுந்த மூன்று பாடங்கள்**

இராஜ்யத்தின் சுதந்திரராக ஆகப்போகிறவர்களுக்கு மூன்று விலையுயர்ந்த பாடங்கள் தேவைப்படுகிறது. அவை

**1.** ஒரு முறையான முழுமையான வகையில் நீதியை புரிந்துகொள்வதும், அந்த புரிந்துகொள்ளுதலை பொன்னான கற்பனையான – உன்னைப்போல் பிறனையும் நேசி என்ற கற்பனையின் நிபந்தனைகளோடு ஒத்துப்போகிறதற்கு பெருமுயற்சிசெய்து வெளிப்படுத்திக் காண்பிப்பதும் ஆகும்.

**2.** மேலும் கூடுதலான பாடமாக, அன்பு, அனுதாபம், பரிவு, இரக்கம் பற்றியதாக உள்ளது. ஆயினும் நம்மையும் நம் சொந்த சிந்தனைகள், வார்த்தைகள், செயல்கள் சார்ந்தே கடுமையான உழைப்பும் அதிக திறனும் தேவைப்படுகிறது. மற்றவர்களை கட்டாயப்படுத்தக்கூடாது. மாறாக நம் இரட்சகர் செய்ததைப்போன்று, அவர்கள் மனமகிழ்ச்சியோடு எதைக்கொடுத்தாலும் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு விருப்பமுடையவராக இருக்கவேண்டும்.

**3.** இது கிறிஸ்துவுடன் பாடுபடுதல், அவருடைய பாடுகளில் ஐக்கியப்படுவதை அர்த்தப்படுத்துகிறது. இது வரவிருக்கின்ற அவரது இராஜ்யத்தில், நாம் கர்த்தரோடு இராஜாக்களாகவும், ஆசாரியர்களாகவும் மற்றும் நியாயாதிபதிகளாகவும் பணிபுரிவதற்கு நம்மை பொருந்தப்பண்ணவும் தகுதிப்படுத்துவதற்குமான விலையுயர்ந்த பாடங்களை கற்றுக்கொள்வதை அர்த்தப்படுத்துகிறது.

மகிமையடைந்த சபையாகப்போகிறவர்கள் அனைவரும், பிதாவின் நேசகுமாரனது சாயலை அடைந்திருத்தலே தேவனுடைய முன்குறித்தலாய் இருக்கிறபடியால், கிறிஸ்துவின் குணாதிசயத்தை நமது இருதயங்களில் செதுக்கியிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை, பரிசுத்த பவுல் வலியுறுத்தியிருக்கிறார். இவர்கள் தங்கள் இருதயங்களில் கிறிஸ்துவின் நிருபத்தை எழுதியிருப்போராக காணப்படவேண்டும்(ரோமர் 8:29,30). அவர்களுடைய சரீரங்கள் எவ்வளவு அபூரணமாக இருந்தாலும், தங்களுடைய குறிக்கோள்களை அடைவதற்கான செயல்பாடுகள் எவ்வளவு அபூரணமாக இருந்தாலும், அது ஒரு பொருட்டல்ல, அந்தக் குறிக்கோள்கள் தெய்வீக தராதரத்தின்படி இருக்கவேண்டும். மேலும் அவர்கள் அந்த குறிக்கோள்களுடன் மிகுந்த இணக்கமாக இருக்கவும், அவைகளை அடைவதற்காக பாடுபடுவதில் சந்தோஷப்படவும் வேண்டும்.

———————————

R 5970

# நாம் உபதேசிப்பதும் போதிப்பதும்
# WHAT WE PREACH AND TEACH

**திறவு வசனம் : "இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" – 1கொரிந்தியர் 2:2.**

**சபையின் சரித்திரத்தில் நம்முடைய மாபெரும் எதிராளி கள்ள உபதேசங்களை அபரிதமாகப் பெருக்குவதிலும், ஆதாயமற்றதும் பொருத்தமற்றதுமான கேள்விகளைப் புகுத்துவதின்மூலம் சத்தியத்திலிருந்து கவனத்தை திசைதிருப்புவதிலும், தற்காலத்தில் இருப்பதைப்போன்று எந்த சமயத்திலும் அதிக செயலாற்றலுடன் இருந்ததில்லை. சபை உயர்த்தப்படுதலும் மகிமையடைதலும் வெகு சீக்கிரத்தில் நிறைவேறப்போகிற இந்த நேரத்தில், உண்மையுள்ளவர்கள் கிட்டத்தட்ட தங்கள் ஆண்டவருடைய சந்தோஷத்தில் பிரவேசிக்கும் இந்த நேரத்தில், அவனுடைய ஒவ்வொரு சூழ்ச்சிதிட்டமும் தங்கள் வெகுமதியை பெறுவதில் அவர்களை ஏமாற்றி, தேவனுடைய தெய்வீகத்திட்டத்தின் அம்சத்தையும் பயனற்றதாக ஆக்கும்படியும் உபயோகிக்கப்படுகின்றது. ஆனால் தெய்வீகத்திட்டத்தின் எந்த பகுதியையும் உண்மையாகவே பயனற்றதாக்குவது என்பது கூடாதகாரியம். தேவன் ஜனங்களின் மத்தியிலிருந்து சிறுமந்தையை, "அவருடைய நாமத்திற்காக" இராஜரீக ஆசாரியக்கூட்டமாக தெரிந்துகொள்ள தீர்மானித்திருக்கிறார். மேலும் அப்படிப்பட்ட கூட்டத்தினர் ஒன்றுசேர்க்கப்படுவது உறுதி. ஆனால் தற்போது இந்த பரிசுக்கான பந்தயத்தில் உள்ள** அனைவரும் அந்த எண்ணிக்கைக்குள் இருப்பார்களா இல்லையா என்பது இன்னும் வெளிப்படையான கேள்வியாக உள்ளது. அன்பானவர்களே, ஒருவனும் உங்கள் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடி(வெளி 3:11)கவனமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். யாராவது தங்கள் சிலாக்கியங்களில் குறைவுபட்டிருந்தும் உடன் சுதந்திரவாளிக்கு தகுதியற்றவரென நிரூபிப்பாராகில், அங்கே அவர்களுக்குரிய இடத்தை மற்றவர்கள் நிரப்புவர்.

சகோதரர்களே, சுவிசேஷத்தில் உங்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ள மகிமையான நம்பிக்கையை நீங்கள் மதிப்பீடுசெய்வதுபோலவே, நீங்கள் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடாமல் இருக்க (1தீமோ4:1) உங்களை வேண்டிக்கொள்கிறோம் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார். மாறாக நம் நோக்கத்தில் நிலைத்திருந்து, அந்த இராஜரீக ஆசாரியத்துவத்தின் எதிர்கால அங்கத்தினர்களாக ஆக நீங்கள் அழைக்கப்பட்டும் சிலாக்கியங்களைப் பெற்றும் இருக்கிறீர்கள் என்ற ஒரே காரியத்திற்கு, உங்களை ஈடுபடுத்திக்கொள்ளுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்கிறோம். நாம் "அவருடைய விசேஷித்த ஜனம்" என்பதையும், பெயர்க்கிறிஸ்தவர்கள் என்ற மாபெரும் அமைப்பிலிருந்தும், மேலும் தேவனுடைய ஆழமான காரியங்களுக்குள்ளாக தெளிவான அறிவடையும் தயைபெற்று, உலகத்திலிருந்தும் வேறுபிரிக்கப்பட்டு, மேலான நம்பிக்கைகளையும், இலக்குகளையும் குறிக்கோள்களையும் உடையவர்களாக இருக்கிறோம் என்பதையும், நம் முற்கால அந்தகாரத்திலிருந்து அவருடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளதையும் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இவ்வாறு உலகத்திலிருந்தும் உலகத்தின் ஆவியில் அதிகளவு பங்கெடுத்துக்கொள்கிற பெயர்க்கிறிஸ்தவர்களிலிருந்தும் பிரிந்தபின்னர், அவர்கள் எல்லாவற்றிலும் நம்முடன் இணக்கமற்ற நிலையில் இருப்பதைக் காண்பதும், நம்மை புறக்கணிப்பதிலும் எதிர்ப்பதிலும் என்ன ஆச்சரியம் இருக்கிறது ?

## எதிர்ப்பு எதிர்பார்க்கப்படவேண்டியதே

நாம் எதிர்பார்க்கும் இந்த எதிர்ப்பானது, சந்தேகத்திற்கிடமின்றி, நம் மரணத்தில் ஓட்டத்தை முடிக்கும்வரை தொடர்ந்துகொண்டேஇருக்கும். இந்த எதிர்ப்புக்கு பொறுமையுடன் நம்மை ஒப்புக்கொடுப்பது என்பது, இயல்பான தற்கால ஜீவியத்தின் சந்தோஷங்களையும், நட்புறவுக்கான நம்முடைய சொந்த முன்னுரிமைகளையும் பலியிடுவதோடு, கர்த்தருடைய சித்தத்தையும் அவருடைய இராஜ்யத்தின் மேலுள்ள ஆர்வத்தில் முன்னேற்றமடையவும் நாம் செய்யும் முயற்சிகளில் தீங்கு எந்தவடிவில் வந்தாலும், சத்தியத்தினிமித்தம் அதற்க நல்ல போர்ச்சேவகனாக தீங்கை அனுபவிப்பதாகும். இதுவே தெய்வீகப்பணியில் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கிறோம் என்பதன் அர்த்தமாகும். உண்மையாகவே இந்த ஊழியத்தில் ஈடுபடுவதற்கு, முதலாவது, கவனத்துடன், தேவனுடைய திட்டத்தை தொடர்ச்சியாக கற்குதலும், இரண்டாவது, அதன் ஆவியை உள்வாங்கிக்கொள்வதும், மூன்றாவது, அதன் நிறைவேறுதலுக்காக ஊக்கமான வைராக்கியம் கொள்ளுதலும், அதில் எவ்வித விலையோ அல்லது பலியோ தேவையாக இருந்தாலும் அதன் பணியில் நம் திறமைக்குத் தக்கஅளவில் செயல்படுவது ஆகியவைகளை உள்ளடக்கியுள்ளது.

இந்த ஊழியத்தில் உண்மையுள்ளவர்களாக இருப்போமானால் நாம் மனப்பூர்வமாக நம்முடைய ஜீவியத்தை எதற்காக அர்ப்பணித்தோமோ, அந்தக் காரியத்தைப் பெற்றுத்தரமுடியாத தவறான போதனைகளுக்கோ அல்லது மற்ற கருத்துக்களுக்கோ கவனம் கொடுப்பதற்கு நேரமோ அல்லது மனப்பான்மையோ கொண்டிருக்கமாட்டோம். நாம் எல்லாவற்றையும் தேவனுக்கு அர்ப்பணித்திருந்தால் நம்முடைய நேரமும் நமக்கு சொந்தமாயிருக்காது. இதன்விளைவாக, வேதாகமத்தின் அஸ்திபாரங்களைவிட மற்ற அஸ்திபாரங்கள்மீது

கட்டப்பட்டுள்ள விசித்திரமான தவறான கொட்பாடுகளைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய செலவிடுவதற்கும் நேரமிருக்காது. உலகப்பூர்வமான கவனத்தை முழுவதும்கவரும் கருத்துக்களுக்கும் நாட்டங்களுக்கும் நம்நேரத்தை நாம்ஒதுக்குவோமானால், அவற்றில் அநேக காரியங்கள் தீங்கற்றதாக இருக்கலாம், ஆனால் அவைகளை அனுமதித்த நமக்கு தீங்கிழைக்கக்கூடியதாக இருந்து, நம்அர்ப்பணிப்பின் நேரத்தை ஆக்கிரமித்து, நாம் செய்ய கடமைப்பட்டுள்ள அந்தவொரு காரியத்திலிருந்து நம்முடைய கவனத்தை திசைதிருப்பிவிடும். அப்போஸ்தலர் நம்மை ‘‘சீர்கேடான வீண்பேச்சுக்கு விலகியிரு; அவைகளால் அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்’’ என்று எச்சரிக்கிறார். மேலும்‘‘நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்து படித்து கற்றுக்கொள்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு’’ என்றும் சொல்கிறார். ‘‘வேற்றுமையான உபதேசங்களை போதியாதபடிக்கும், விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல், தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும் முடிவில்லாத வம்ச வரலாறுகளையும் கவனியாதபடிக்கும் நீ சிலருக்கு கட்டளையிடும்பொருட்டு வேண்டிக்கொண்டபடியே செய்வாயாக’’ – 2தீமோ 2:1,16; 1தீமோ1:3,4.

வேத தர்க்கசாஸ்திரமும்இல்லை, பரிணாமமும் இல்லை

நம்முடைய சுவிசேஷம் வேத தர்க்கசாஸ்திரிகள் மற்றும் பரிணாமவாதிகளுடையது அல்ல. நவீன சுவிசேஷத்தின் இந்த நண்பர்கள் தங்களுடைய சுயாதீனத்தின்படி, அவர்கள் சிந்திப்பது முறையானது என்று விசுவாசிப்பார்களாகில், அப்போஸ்தலர் பவுல் கலாத்தியர் 1:6இல் கூறின எச்சரிப்பின் வார்த்தைகளை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறோம். நம்முடைய சிருஷ்டிகரின் சித்தம் மற்றும் திட்டத்தின் ஒரே தெய்வீக வெளிப்பாடாக இருக்கிற வேதத்தின்மீதுதான் நம்முடைய விசுவாசம் ஸ்திரமாக நாட்டப்பட்டுள்ளது. ஆனால் இருண்டயுகங்களின் நல்லெண்ணம்கொண்ட நம் மூதாதையர்கள், போதனைகளாக கருதிய எல்லாவற்றையும் வேதாகமம் போதித்தது என்று நாங்கள் நம்புவதாக இது அர்த்தப்படுத்தாது. அவர்கள் வேதாகமம் போதிக்கிற அவிசுவாச காரியங்களுக்காக ஒருவர் மற்றவரை கம்பத்தில் கட்டிவைத்து, எரித்துக்கொண்டனர் என்பதைக் கண்டுகொண்டோம்.

தேவனையும் வேதாகமத்தையும் குறித்து இன்று பெருகிவரும் சந்தேக மனப்பான்மையானது, பொதுவாக, நரகம் சம்பந்தப்பட்ட வேதாகம போதனையை தவறாக புரிந்துகொண்டதன் அபரீத வளர்ச்சியாக இருக்கிறதை நாம் கண்டறிந்தோம். தேவன், வறுத்தெடுக்கும் நரகத்தை முதலாவது ஏற்படுத்தி, பிறகு ஒரு சந்ததியை உருவாக்கி, கிறிஸ்துவுக்கு செவிமடுத்து பரிசுத்தவான்களாக மாறும் சிலரைத்தவிர, மற்ற அனைவரும் அந்த பயமுறுத்தும் இடத்தில் நித்தியத்துக்கும் தங்கள் வாழ்க்கையை கழிப்பார்கள் என்று அறியநேர்ந்தாலும், தெளிந்தபுத்தியுள்ள எந்த மனுஷனும் அவரை குற்றப்படுத்தமாட்டான். நம் சிருஷ்டிகரின் பரிசுத்த நாமத்திற்கு எதிரான இந்த தூஷண வார்த்தைகள் கண்டிக்கப்படவேண்டியது அவசியமானது. படித்தறிந்த குருமார்களும் பாமரமக்களும் ‘‘நரகம்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளதின் ஒரே எபிரேய வார்த்தை ஷியோல் என்றும், அதற்கு இணையான கிரேக்க வார்த்தை ஹேடிஸ் என்றும் , மேலும் அது ஒரு வேதனையளிக்கும் இடத்தை அடையாளப்படுத்துவது இல்லை, மாறாக கல்லறை, குழி, உணர்வற்றநிலை – அதாவது நல்லோரும் பொல்லாரும் மரணத்திற்குப்பிறகு மீட்பரின் இரண்டாம் வருகையைத்தொடர்ந்து நடைபெறும் உயிர்த்தெழுதல்வரை தங்கியிருக்கிற இடத்தைக்குறிக்கிறது என்று அவர்கள் ஏற்கனவே அறிந்துள்ளதை, எல்லா ஜனங்களும் அவசியம் கற்றறியவேண்டும்.

நரகத்தைப்பற்றிய இவ்விஷயத்தில், காவற்கோபுர கைப்பிரதி மற்றும் வேதாகம சங்கம் ஆயிரக்கணக்கானோருக்கு உதவியிருக்கிறது. எப்படியெனில், உவமைகள் உவமானங்கள் மற்றும் வேதாகம அடையாளங்களைக் குறித்த விளக்கங்களுக்கு நாம் செல்லும்போது, தெளிவான விளக்கங்களை கொடுத்து உதவிபுரிந்துள்ளது. ஆனால் பொதுவாக வேதாக போதகர்கள் அநேகர், நவீன காலத்து சபை நடவடிக்கைகளின் பலவகைப்பட்ட பாரத்தால் சூழப்பட்டு, இதற்கென்று நேரம் ஒதுக்குவதில்லை. வேதாகமம் தெய்வீக உணர்வுகளால் தூண்டப்பட்டது என்ற நம்பிக்கையின்மீது நம் சங்கத்தின்வேலை நடத்தப்படுகிறது. மேலும்‘‘ஞானவான்களே அறிந்துகொள்வார்கள்’’, அவர்கள்,‘‘ஏற்றகால சத்தியத்தை தேவனுடைய அதிசயமான புத்தகத்திலிருந்து பெற்றுக்கொள்வார்கள் என்று தீர்க்கதரிசிகளினால் குறிப்பிடப்பட்ட அற்புதமான நாளில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இங்கு ‘‘ஞானவான்கள்’’ என்று தேவனை நோக்கிய ஞானத்தை உடையவர்களையே நாம் இயல்பாக அர்த்தப்படுத்துகிறோமேயன்றி, உலக ஞானிகளை அல்ல.

ஆயிரமாண்டு ஆட்சிபற்றிய நமது கண்ணோட்டங்கள்

வேதாகமத்தின் போதனைகளை நாம் புரிந்துகொண்டது சரியாக இருக்குமானால், நாம் ஆயிரமாண்டு ஆட்சியின் வாசற்படியில் இருக்கிறோம். இயற்கை அறிவியல் மற்றும் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியை மட்டும் இந்த உண்மை விளக்குவதாக நில்லாமல், மாறாக, வேதத்தில் அடையளங்களிலும் நிழல்களிலும் முன்கூட்டியே சொல்லப்பட்ட நம் மனுக்குலத்திற்கான தேவனுடைய கிருபைநிறைந்த நோக்கங்கள் தொடர்பான இரகசியத்தின் நிறைவையும் விளக்குகிறது. ஆயினும்ஆயிரவருட இராஜ்யத்தைப்பற்றிய நம்முடைய எதிர்பார்ப்புகள், சிலர் யூகித்திருப்பதிலிருந்து வேறுபட்ட வழிகளை உடையதாயிருக்கிறது. நம்முடைய போற்றத்தக்க மதப்பிரச்சார முயற்சிகளினாலோ இந்த

உலகம் மனமாறுதலுக்குள்ளாகும் என்று எந்த வேதவசனமும் போதிப்பதில்லை என்பதை நாம் காண்கிறோம். இந்த உலகமனுக்குலத்தின் மனமாற்றமானது, தம் இரண்டாம்வருகையில் வந்திருந்து, தன் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையை(எல்லா பெயர்சபைகளிலிருந்தும் வந்த பரிசுத்தவான்கள்) கூட்டிசேர்த்து, அவர்கள் ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாற்றப்பட்டபிறகு, தொடர்ந்து நடைபெறும் என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறது. அவர்கள் தங்கள் கர்த்தரும் தலையுமானவருக்குக் கீழிருந்து, மீந்திருக்கும் மனுக்குலத்திற்கு போதகர்களாகவும், வழிகாட்டியாகவும் உதவிசெய்பவர்களாகவும் இருந்து, தற்போது மரித்தநிலையிலும் அதேவேளையில் உயிருள்ள நிலையிலுமுள்ள தேசங்களது ஜனங்களில், மனப்பூர்வமாகவும் மற்றும் கீழ்ப்படிதலையும் காண்பிப்பவர்களை பாவம் மற்றும் மரணத்திலிருந்து பரிபூரணத்திற்கும், அதன்பின்னர் அந்தத் திரும்பக்கொடுத்தலின் காலத்தில் இந்த பூமியின்மேல் நித்திய காலத்திற்கும் ஜீவிக்கிறவர்களாக முன்னேற்றமடைய செய்வார்கள், திரும்பக்கொடுத்தலின் காலமாகிய அவ்வேளையில், பூமி பரதீசாக சீர்படுத்தப்பட்டிருக்கும்.

ஆயிரமாண்டு இராஜ்யமானது புறஜாதிகளின் மனமாற்றத்தினால் ஸ்தாபிக்கப்படுவதில்லை என்று புள்ளிவிபரங்கள் ஆமோதிக்கின்றன. நம்முடைய அனைத்து மதப்பிரச்சார ஊழியமுயற்சிகள் இருந்தபோதிலும், ஒரு நூற்றாண்டுக்கு முன் இருந்தவர்களைக்காட்டிலும், தற்போது புறஜாதிகள் இருமடங்காக உள்ளனர். அதற்கு முற்றிலும் மாறாக, ''யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்'' என்று நமக்கு வேதத்தால் திட்டவட்டமாகக் கூறிய மாபெரும் பேராபத்து நெருங்கி அணுகுவதை காலங்களின் அறிகுறிகள் முன்னெச்சரிக்கையாக முன்னறிவிக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொண்டாகவேண்டும். மேசியாவின் இராஜ்யம் வந்து, ''பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கும்'' வழியில் நடத்தும்.

வேதாகம சொற்பாங்கும், வேதாகம நியமனமும்

ஒருவேளை நாம், ''குருமார்கள்'' மற்றும் ''பாமர மக்கள்'' என்ற பெயர்கள், ''அருள்திரு'', ''இறையியல் பேரறிஞர்'' மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள அதைப்போன்ற மற்ற பட்டப்பெயர்கள் போன்றவற்றை வேதாகமப்பெயர்களாக அங்கீகரிக்கமாட்டோம் என்று நாம் விளக்கவேண்டும். ஆயினும், இது நம்மிடமிருந்து வேறுபடுகிறவர்களுடன் ஐக்கியத்தை துண்டிக்கும்படி நம்மை வழிநடத்தாது. நாம் ''போதகர்(பாஸ்டர்), ''சுவிசேஷகர்'', ''ஆசிரியர்'', ''மூப்பர்'', ''உதவிக்காரர்'' போன்ற வேதாகமப் பெயர்களை பயன்படுத்துகிறோம். மேலும் உடன்படிக்கை செய்த தேவனுடைய எல்லா ஜனங்களும் ஊழியக்காரரென புரிந்துகொள்கிறோம் – அதாவது வேலையாட்கள்.. ஒவ்வொரு அதிகாரப்பூர்வமான வேலைக்காரரும், தங்கள் தாலந்து அனுமதிப்பதற்கு ஏற்றாற்போலும்,சகோதரர்களின் விருப்பத்திற்கு ஏற்றாற்போலவும் அவர்களுக்கு ஊழியம்செய்ய அங்கீகாரம் பெற்றுள்ளனர். நியமனத்தைப் பொருத்தவரை, ஒருகுறிப்பிட்ட வல்லமை மற்றும் அதிகாரம் ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவருக்கு வருகிறது என்ற ''அப்போஸ்தல உரிமத்தின்'' கொள்கையை, வேதாகமத்தைப்போன்றே நாமும் ஏற்றுக்கொள்வதில்லை. பரிசுத்தஆவியின் அபிஷேகம் மாத்திரமே, வேதத்தை புரிந்துகொள்வதற்கும், அதை விளக்குவதற்குமான வல்லமையையும் அதிகாரத்தையும் கொடுக்கிறது என்பதை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கிறோம்.

கடந்தகாலத்தின் தவறுகள் எப்படி மெதுவாய் நுழைந்தன ?

இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்(லூக்கா2:10,11) என்று இயேசுவின் பிறப்பின்போது தேவதூதனால் கூறப்பட்ட வேதாகம செய்தியை நாம் பிரசங்கிக்கிறோம் என்ற காரணத்திற்காக, உலகத்தின் கால் பங்கு ஊழியக்காரர்களால் பத்திரிக்கை ஆசிரியரான பாஸ்டர் ரஸ்ஸல் தற்போது தாக்கப்பட்டிருந்தார். இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தேவனுடைய அன்பு மற்றும் முழுஉலகத்தின் பாவங்களுக்காக இயேசுவின் மரணத்தின்மூலம் பிதாவானவரின் இரக்கமுள்ள ஏற்பாடு ஆகியவற்றின் நற்செய்தி, மறக்கத்தொடங்கியது. அப்போஸ்தல உரிமம் என்ற போதனை, தெய்வீக நியமனம்பெற்ற 12 சீஷர்களுக்கு பின்தோன்றல்களாக ஆயர்கள் இருக்கிறார்கள் என்று அவர்களுக்கு மரியாதை அளிக்க அக்காலத்திலிருந்த ஜனங்கள் வழிநடத்தப்பட்டனர்– அதாவது, யூதாஸின் இடத்தை எடுத்துக்கொள்ள மத்தியாசுக்கு பதிலாக அப்.பவுல் நியமிக்கப்பட்டதைப்போன்று.

அக்காலத்தில் படிப்பதற்கான திறமைபொதுவாக காணப்படாத நிலைமையில், வேதம் குறைந்த எண்ணிக்கையிலும் விலை அதிகமானதாகவும் இருந்தநிலைமையில், இந்த அப்போஸ்தல உரிமத்தின் போதனை சபையில் வேரூன்றியிருந்த அந்த சமயத்தில் ஜனங்கள், அப்போஸ்தலர் வழிவந்த ஆயர்கள் என்றழைக்கப்பட்டவர்களுக்கு செவிமடுத்ததில் வியப்பேதும் இல்லை. 14நூற்றாண்டுகளாக வேதாகமக் கல்வி இருந்ததில்லை, வெறும் விசுவாசபிரமாணங்கள் அல்லது வெறுமனே படிப்பும் ஆராதனையும் தான் இருந்தது. வேதம் வெளிப்படையாக பொதுஇடங்களில் எரிக்கப்பட்டது, யார் துணிந்து வேதத்தைப் படித்து அதன் கூற்றுக்களை ஏற்றுக்கொண்டனரோ, அவர்கள் காட்டிலுள்ள கொடிய மிருகங்களை வேட்டையாடுவதுபோல் வேட்டையாடப்பட்டனர்– இது ஸ்காட்லாந்திலும் நடைபெற்றது.

சீர்திருத்த இயக்கம் வேதாகமத்தை முன்னெடுத்துவந்தபோதிலும், அந்த இயக்கத்தின் நண்பர்கள் இருண்டயுகங்களிலிருந்து வெளிப்பட்ட புகையையே தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்களாகப் பெற்றிருந்து, அதில் நிலைத்திருந்தனர். மங்கலான வெளிச்சம் சுற்றிலும் சூழ்ந்திருந்தவேளையிலும், "வெளிச்சத்தில் தயவாய் நடத்தும்" என்று அதன் தலைவர்கள் ஒருவரையடுத்து மற்றவர் ஜெபித்ததோடு, புதிதாக துவங்கியிருந்த பிரிவினைகளை கண்களைத்தேய்த்து உற்றுநோக்கினர். எல்லோரும் வெளிச்சத்தை அடைய முயற்சித்தாலும், விசுவாசப் பிரமாணங்களை சீர்திருத்தவாதிகளின் இருதயங்களுக்கும் சிந்தைகளுக்கும் மனநிறைவை அளிக்கவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டனர்.

தற்போதைய தவறுகளும், ஒளிக்கான எதிர்ப்பும்

தேவனுடைய ஜனங்களின் பல்வேறுபட்ட பிரிவுகள் ஒன்றுக்கொன்று ஆபத்திற்குள்ளாக்கும்படி, சுட்டெரிக்கும்படியான அதிகளவு அறிவுபுகட்டுதலை பெற்றிருக்கும் காலத்திற்கு நாம் இப்போது வந்திருக்கிறோம். அவர்கள் கூட்டாக இருப்பதற்கு விருப்பங்கொள்ளும்போது, தங்கள் வேற்றுமைகளை பொருட்படுத்தாமல் இருக்கவேண்டும். இதற்கிடையில், வேதாகம திறனாய்வுகள் உள்ளேவந்து பெரும்பான்மையான கிறிஸ்தவ பிரசங்கிமார்களை முழுவதுமாக வேதத்திலிருந்து திசைதிருப்பியிருந்தன. ஆனாலும் அவர்கள் நம்பிக்கைகொள்ளாத பிரிவுகளிலும் விசுவாசப்பிரமாணங்களிலும் தொடர்ந்து கட்டப்பட்டிருக்கின்றனர்.

இதற்கிடையில், தேவனுடைய ஏற்பாட்டில் வேதாகமம் ஜனங்களின் கைகளுக்கு வந்தது. கல்வியறிவு தற்போது பொதுவானதாகவும், வேதாகம உதவிகள் மிகுதியாகவும் இருக்கிறது. இது வேதாகமம் மற்றும் அதன் உண்மையை பொறுத்தவரை, தேவனுடைய ஜனங்களுக்கு அவருடைய வார்த்தையின் முறையான அறிவை அடைவதற்கான சாதகமான காலமாக காணப்படும். மற்றவர்களோடுசேர்ந்து வேதத்தைப் படிப்பதிலும், அதன் உண்மையான அர்த்தத்தை மற்றவர்களுக்கு தெளிவுபடுத்துவதிலும் புத்தக ஆசிரியர் மாபெரும் ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறார். நாம் இதை கடந்த 40 வருடங்களாக தீவிரமான எதிர்ப்புகளின்றி சமீபத்திய வருடங்கள்வரை செய்துகொண்டுவருகிறோம். ஆனால் தற்போது எதிர்ப்பானது நமக்குள்ளே போதிப்பதும், மற்றும் சர்வதேச வேதமாணவர்கள் சங்கத்தின் நம்முடைய கூட்டாளிகள் உலகஅளவிலான செல்வாக்கை பயன்படுத்த ஆரம்பித்ததில்தான் இருக்கிறது. வேதாகம பாடத்தைக் கற்க உதவிபுரிய பல்வேறுபட்ட மொழிகளில் அச்சிட்டிருக்கிறோம். உலகின் எல்லா பகுதிகளிலும் வேதாகம பாடவகுப்புகள் நடத்துகிறோம். இது எபிஸ்கோபல் சபையினர், ஒருகாலத்தில் பிரஸ்பிட்டேரியன் சபையாரும், மெத்தடிஸ்ட் சபையாரும் தங்களுக்கு இடறுதலை உண்டாக்குகிறவர்களென்று கருதியதைப்போலவும், யூதர்கள் ஆதிகாலக் கிறிஸ்தவர்களை – தங்கள் நிறுவனங்களுக்கு இடறுதல் ஏற்படுத்துகிறவர்களாக எண்ணியதைப்போலவும், பேப்டிஸ்டு சபையினர் தங்களுக்கு இடறுதல் உண்டாக்குகிறவர்களாக மற்ற எல்லாரையும் எண்ணியதைப்போலவும், எங்கள் வேலையை சில ஊழியக்காரர்கள் இடறுதலுண்டாக்குகிறதாக கருதினர்.

இருந்தபோதிலும் நாங்கள் கர்த்தருடைய உவமைகள், மற்றும் உவமானங்களின் அர்த்தத்தை தெளிவுறசெய்து, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல்வரை உள்ள வேதத்தின் போதனைகளுடைய ஒத்திசைவையும் **காண்பித்தோம். இருண்டயுகத்தின் விசுவாசப்பிரமாணங்கள் மனதிற்கு ஒவ்வாதவைகளும் வாந்தி வரப்பண்ணுகிறவைகளுமாக ஆயின. சில சிறப்பான ஜனங்கள் இந்த விசுவாசப்பிரமாணங்களை ஒதுக்கித்தள்ளினதினால் பிரசங்கிமார்களின் ஒருபிரிவினர் மறைமுகமாக குறிப்பிட்டவைகள் கசப்பாக மாறியது. நம்முடைய வேதத்தின்படியான விவாதங்களை சந்திக்கஇயலாமல், நமக்கு செவிகொடுப்பதிலிருந்தும் நம்முடைய பிரசுரங்களை படிப்பதிலிருந்தும் ஜனங்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தவேண்டும் என்பதை கருத்தில்கொண்டு, அவர்கள் தனிப்பட்ட விதத்தில் திட்டுவதிலும் வன்சொற்களாலும் திருப்தியடைகின்றனர். ஆனால் அந்த வேலையானது, வளர்ச்சியின் வேகத்துடன் நேர்த்தியாக மேல்நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப்பெற்றவர்கள் மற்றவர்களுக்கு உதவ தயாராயிருந்தனர். நம்மீது தொடுக்கப்பட்டிருந்த தாக்குதல்களின் உண்மையான நோக்கங்களை அறிந்துகொண்ட ஜனங்கள், அந்த தாக்குதல்களை ஏற்படுத்தியவர்களிடத்தில் குறைவான இரக்கம் உடையவர்களாக இருந்து, நம்முடைய போதனைகளைக்குறித்து ஆராய்வதற்கு ஆயத்தமாயினர்.**

**தேவையான எல்லா வேதாகம உதவிகளும் தற்போது கிடைக்கிறது**

**நாங்கள் கிரேக்க மொழியிலோ எபிரேய மொழியிலோ புலமை பெற்றிருப்பதாக ஒருபோதும் உரிமைகோருவதில்லை. இதற்குமேலாக, எந்தசபை பிரிவுகளிலும் ஆயிரம் ஊழியக்காரர்களில் ஒருவர்கூட இந்த மொழிகளில் புலமைபெற்றதில்லை என உரிமை கோருகிறோம். கிரேக்க மற்றும் எபிரேய அகரவரிசைகளை படிப்பதற்கான திறமை மற்றும் இந்த மொழிகளில் உள்ள வார்த்தைகளை உச்சரிப்பது என்பது புலமை என்று ஆகிவிடாது. அல்லது இந்த மொழிகளின் அறிவைஅடைந்து, அதை பின்பற்றி ஒருவர் அவ்வாறு செயல்படுவது புலமை ஆகாது. ஒரு மொழியின் இலக்கண**

கட்டமைப்பை முழுமையாக புரிந்துகொள்வதே புலமையாக இருக்கும்என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம்.

மேலும் தேவனுடைய வழிநடத்துதலின்படி, அவருடைய வார்த்தையை சரியாக புரிந்துகொள்வதற்கு அப்படிப்பட்ட அறிவு அவசியப்படாது என்று நாம் உரிமை கோருகிறோம். வேதமாணவர்கள் இன்று வெகுசில அறிஞரால் மொழிபெயர்க்கப்பட்ட வேதத்தின் எண்ணற்ற மொழிபெயர்ப்புகளை அணுகுகிறார்கள். இதற்கு மேலாக, பிரஸ்பிடேரியன் சபையினர், யங்கின் கிரேக்க, எபிரேய மற்றும் ஆங்கில இணைவசன அகராதியை வைத்துள்ளனர். மெத்தடிஸ்டு சபையினர் ஸ்ட்ராங்கின் பகுப்பாய்வு கிரேக்கு, எபிரேய, கல்தேய மற்றும் ஆங்கில இணைவசன அகராதியை வைத்துள்ளனர். இவைகளோடுகூட ஆங்கிலேயரின் சமயப்பிரிவற்ற இதேவேலையும் இருக்கிறது. லிட்டெல் மற்றும் ஸ்காட்டின் கிரேக்க–ஆங்கில அகராதி, மெக்கிளின்டாக் மற்றும் ஸ்ட்ராங்கின் திறனாய்வுகள்(விமர்சனங்கள்), “எம்பாட்டிக் டையக்லாட்” என்ற மூல கிரேக்க வசனங்களுக்கு,வார்த்தைக்கு வார்த்தை ஆங்கில மொழிபெயர்ப்புடன்கூடிய மொழிபெயர்ப்பு, மற்றும் இணை வசன எம்பாடிக் ஆங்கில மொழிபெயர்ப்பு போன்ற பலஉள்ளன.

வேதாகமத்தை சரியாக புரிந்துகொள்ள உதவிய, இணைவசன அகராதிகளின் மதிப்பை அதிகப்படியாக மதிப்பிடமுடியாது. யங்கின் பகுப்பாய்வு இணைவசன வேதாகமத்தின் முன்னுரையில் அதன் ஆசிரியர் தன் வேலையைக்குறித்து சொல்லும்போது: ‘இதன் மாபெரும் நோக்கமானது, டின்டேல் தன்னுடைய புதிய ஏற்பாட்டில் கூறியதைப்போல, ஒவ்வொரு கடினமாக உழைக்கிற மாணவனுக்கும் மூதாதையரைவிட வேதத்தை அதிகமாக தெரிந்துகொள்வதற்கு சாத்தியப்படசெய்கிறது. அப்படி சாத்தியப்படச்செய்வதினால் உடனடியாக மூன்று தெளிவான கருத்துக்களை கண்டறிவதற்குஇயலும். அவற்றுள் முதலாவது, தன்னுடைய ஆங்கில வேதாகமத்திலுள்ள எந்தஒரு சாதாரண வார்த்தையின் மூல எபிரேய மற்றும் கிரேக்க வார்த்தை என்ன என்பதையும், இரண்டாவது, ஒவ்வொரு மூல வார்த்தையின் சொல்லுக்கு நேரடியான மற்றும் தொன்மையான அர்த்தம் என்ன என்பதையும், மூன்றாவதாக, எவை முழுவதுமாக உண்மையான மற்றும் நம்பத்தகுந்த இணையான பகுதிகள் என்பதையும் கண்டறியஇயலும்.

யாரேனும் இந்த செயல்களை தன் உடைமையாக பெற்றிருந்து அவைகளை எவ்வாறு உபயோகிப்பது என்பதை அறிந்து, அவைகளை பயன்படுத்துவாராகில், ஒருவர் எபிரேய கிரேக்க கல்தேய மொழிகளில் 4வருட படிப்பின் மூலம் பெறுகின்ற அறிவைக்காட்டிலும், மூல வேதாகமத்தின் இந்த மொழிகளில் சிறந்த செயல்அறிவை பெற்றிருப்பார். நாங்கள் இத்தகைய புத்தகங்களையும் இன்னும் மற்றவைகளையும் கொண்டிருப்பதோடு, அவற்றை பயனுள்ளமுறையில் எப்படி உபயோகிப்பது என்றும் கற்றறிந்துள்ளோம். இதன் விளைவாக வெறும் 4வருட இறையியல் பாடத்திட்டத்தினைக் கற்றறிந்த 10ல் 9 ஊழியக்காரர்களைவிட வேதாகமத்தின் மூல பாஷைகளின் அறிவை சிறந்தமுறையில் பெற்றள்ளோம். ஆயிரம் பேர்களில் ஒருவரால் மாத்திரம் புரிந்துகொண்டு மகிழ்ச்சியுறத்தக்கதான மூலபாஷையில் வார்த்தைகளை எடுத்துக்காட்டி சொல்லுதல், அதின் இலக்கணத்தின் மதிப்பீட்டின்படி அர்த்தம் கூறுதல் என்று, நேரத்தை வீணடிப்பதற்கு பதிலாக, மிக உயர்ந்த புலமையை சுட்டிக்காட்டும், நம்முடைய நாட்களின் இப்படிப்பட்ட அற்புதமான உதவிகளைப் பயன்படுத்திக்கொள்ள எல்லா வேதமாணவர்களுக்கும் நாம் அறிவுரை கூறுகிறோம். ஆயிரக்கணக்கான வேதமாணவர்கள் யங் மற்றும் ஸ்ட்ராங் இணைவசன வேதாகமங்களை பயன்படுத்துவதை வழக்கமாக கொண்டுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். மேலும் யங்கின் மொழிபெயர்ப்பு, பல்வேறு உரையாசிரியர்களின் உரைகள் கொண்ட வேதாகமம், லீஸர்(யூதர்) மொழிபெயர்ப்பு, புதிய ஏற்பாட்டின் டிஸ்சென்டர்ப், சிரியாக், ரோதர்ஹாம், எம்பாடிக் டையக்லாட் ஆகிய பல.. போன்ற வேதாகமத்தின் எண்ணற்ற மொழிபெயர்ப்புகளையும் பயன்படுத்துகின்றனர்.

**வேதாகம நியமனம்(கூைடெந டிசனயையேவடைூ)**

நியமனத்தைக்குறித்து : பொதுமக்கள் இந்த விஷயம் சார்ந்தவற்றை அறியாதவர்களாகவே இருக்கக்கூடும் என்றாலும், ஊழியக்காரர்கள் மற்றும் மத நாளேடுகளின் புத்தக ஆசிரியர்கள் இதைக்குறித்து உண்மை நிலை அறிந்தவர்களாக இருக்கிறார்கள் எனக் கருதுகிறோம். நியமனம் என்ற வார்த்தை உரிமை வழங்குதல் என்பதை எளிமையாக அடையாளப்படுத்துகிறது என்பதை இவர்கள் அனைவரும் தெரிந்திருப்பர். அவ்வண்ணமே பேப்டிஸ்டு சபையினர் தங்கள் ஊழியக்காரர்களை நியமிப்பர் அல்லது உரிமை வழங்குவர். மெத்தடிஸ்டு சபையினர் தங்களுடையவர்களை நியமிப்பர் அல்லது உரிமை வழங்குவர். இதுபோன்ற பொதுவான நியமனம் என்பது கிறிஸ்தவ ஜனங்கள் மத்தியில் கிடையாது. இதற்கு மாறாக, கத்தோலிக்கர்கள் தங்களுடையதைத்தவிர மற்ற அனைத்து நியமனங்களையும் மறுத்துப் பேசுவதோடு, புராட்டஸ்டன்ட் ஊழியக்காரர்களை நியமனமற்றவர்கள் என வெளிப்படையாக பிரகடனம்செய்வர். அதேபோன்று ஆங்கிலிகன் சபையினர், யாரை மரபுக்கிணங்காதவர்கள் என்று குறிப்பிடுகிறார்களோ, அவ்ர்களின் நியமனத்தை நிராகரிப்பர்.

ஆனால் தேவன் ஒரே சபையை மட்டும் ஏற்படுத்தியுள்ளபடியால், தன்னுடைய ஊழியக்காரர்கள்அனைவருக்கும் ஒரே நியமனத்தை மட்டும் வைத்துள்ளார். தேவன் தம்முடைய ஒரே சபைக்கு, எல்லா சபை பிரிவுகளிலிருந்தும் பரிசுத்தமான கிறிஸ்தவர்களை சேர்த்துக்கொள்கிறார். தேவனுடைய நியமன ஊழியமானது, யார் தெய்வீக அபிஷேகத்தை – பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலை பெற்றுக்கொண்டிருக்கிறார்களோ அவர்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்த சபைக்கு இயேசு தலையாகவும் முதன்மையானவராகவும் இருக்கிறார். அவரே அதன் முதன்மையான ஊழியக்காரர். அவருடைய நியமனமானது மோசேயின் நியாயப்பிரமாண நிபந்தனைகளின்கீழ், அவர் முப்பது வயதானபோது

**யோர்தானில் தன்னை அர்ப்பணித்த மற்றும் ஞானஸ்நானம்பெற்ற அந்த சமயத்தில் நடந்தது. அவருக்குள் அங்கத்தினராக வரும்அனைவரும் அவருடைய நியமனத்தின்போது பகிர்ந்தளித்த பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதலை பெற்றுக்கொள்வார்கள். "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்"(யோவா20:21) என்று ஆண்டவர் பிரகடனம்செய்கிறார்.**

**ஊழியத்துக்கு நியமிக்கும் இந்தப் பணியைக் குறித்து தீர்க்கதரிசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; கிறிஸ்து தலை மற்றும் சரீரமாக இருப்பதுபற்றி தீர்க்கதரிசி கூறுகிறார்; "கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்மேல் இருக்கிறது; சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர்** என்னை அபிஷேகம் பண்ணினார், இருதயம் நொறுங்குண்டவர்களுக்கு காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப்பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்"– ஏசாயா**61:1–3.**

பரிசுத்தஆவியானது பிரதானஆசாரியனாகிய ஆரோனின் சிரசின்மேல் ஊற்றப்பட்ட எண்ணையினால் அடையாளப்படுத்தப்படுகிறது. அதைக்குறித்து நாம்வாசிக்கும்போது, அது அவனுடைய அங்கிகளின்மேலும் அதன் ஓரங்களிலும் இறங்குகிறதுமாயிருக்கிறது. இது நம்முடைய தலையாகிய இயேசுகிறிஸ்துவின் மீது ஊற்றப்பட்ட பரிசுத்தஆவியானது, பெந்தெகொஸ்தே நாளில் துவங்கி 19 நூற்றாண்டுகள் முழுவதும்அவருடைய சரீரமாகிய சபையின்மீது – அபிஷேகமாக, நியமனமாக, அவருடைய இராஜரீக ஆசாரியர்கள் அனைவர்மேலும் இறங்கி தேவனுடைய தகுதிப்படுத்தும் வல்லமையாக இருந்து, "எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை" அறிவிக்கிறதற்கு அவர்களுக்கு அதிகாரம் தருவதை அடையாளப்படுத்துகிறது. சபையில் போதகராக இருக்க வேதத்தின்படியான தேவைகளாகிய யார் ஒருவர் பரிசுத்தஆவியின்அபிஷேகம் பெற்ற ஆதாரத்துடன் திறமை மற்றும் கிறிஸ்துவின் சாயலுக்கொத்த குணலட்சணங்களில் ஆவிக்குரிய வளர்ச்சி பெற்றுள்ளாரோ, அவரே தேவனுடைய மக்களடங்கிய சபையில், அவர்களுக்காக ஆவிக்குரிய விஷயங்களில் விசேஷமான ஊழியராக ஊழியம்செய்ய தேர்ந்தெடுக்கப்படவேண்டும். ஆனால் ஆவியின் அபிஷேகத்தைப்பெற்ற யாராக இருந்தாலும், அவர்களின் திறமை மற்றும் வாய்ப்பிற்கிணங்க தேவனுடைய செய்தியை பறைசாற்றுவதற்கு ஆவிக்குரிய விதத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் பொதுஇடங்களில் பிரசங்கிப்பது தொடர்பான அவருடைய வார்த்தையில் குறிப்பிட்டுள்ள பாலின வேறுபாடுகள் போன்ற சில தகுதிகளை மாத்திரம் கவனிக்கவேண்டும்.

ஆகையால் நம் போதனையில் உள்ள தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தைகளை நெருக்கமாக பற்றிக்கொண்டு, நம்முடைய அனுதின நடக்கை மற்றும் பேச்சுக்களில் நம் போதகரின் அடிச்சுவடுகளில் விசுவாசத்துடன் பின்பற்ற பெரும் முயற்சிசெய்து, எல்லாப் பரிசுத்தவான்களுடனும்கூட; "உம்முடைய இராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று நாம் ஜெபிப்போமாக".

––––––––––––––––––

R 5972

# மீட்கும்பொருள் பாவநிவாரணபலி அல்ல

## THE RANSOM NOT THE SIN-OFFERING

பிரியமான நம் வாசகர்களில் சிலருக்கு, மீட்கும்பொருளுக்கும் பாவநிவாரணபலிக்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவாகக் கண்டறிவது கடினமாக உள்ளதாக நமக்கு தோன்றுகிறது. நாம் இந்தப் பாடத்தை தெளிவாக்க மீண்டும்மீண்டும் முயற்சித்திருப்பினும், மறுபடியும் ஒருமுறை இப்பாடத்தை தெளிவாக்க முயல்கின்றோம்.

புதிய ஏற்பாட்டைக்காட்டிலும் பழைய ஏற்பாட்டில் “மீட்கும்பொருள்” என்ற வார்த்தை, குறைந்தஅளவு நிச்சயத்தன்மையோடு பயன்படுத்தப்பட்டுள்ளது. பழையஏற்பாட்டில் மீட்கும்பொருளுக்காக பயன்படுத்தப்பட்ட எபிரேயச்சொல்,“கோபர்(kopher) என்பதாகும். இது, மூடுதல், பாதுகாப்பு என்ற அர்த்தத்தை முக்கியப்படுத்துகிறது. அவ்வாறே நீதிமொழிகள்21:18இல் நாம் வாசிக்கிறோம்; “நீதிமானுக்கு பதிலாக துன்மார்க்கனும், செம்மையானவனுக்குப் பதிலாக துரோகியும் மீட்கும்பொருளாவார்கள்”(நீதி 21:18) என்று அவர்களது மூடுதலையும், அவர்களது பாதுகாப்பையும் பற்றி கூறுகிறது. இவ்வுலகில் நீதிமான்கள் வெகுசிலராயிருந்து, செல்வாக்கு அற்றவர்களாகவும் காணப்படுகிறார்கள், மேலும் சமுதாயத்தின் சட்டங்கள் பரிசுத்தவான்களுக்காக அல்ல, பெருந்திரளான ஜனங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டது. ஆனால் ஜனங்களுக்கென்று பொதுவாக வடிவமைக்கப்பட்ட சட்டங்கள், கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய நமக்கு ஒரு மூடுதலாக இருக்கிறது.

தன் சகோதரனை மீட்பதற்காக ஒருவனும் மீட்கும்பொருளைக் கொடுக்கமுடியாது என்று தீர்க்கதரிசியாகிய தாவீது பிரகடனப்–படுத்தியுள்ளார்(சங்49:7,8). அதாவது, ஆதாமின் விழுகை காரணமாக, மனுக்குலம் முழுவதும் அபூரணராகினர். எல்லோரும் பாவிகளாய் இருக்கிறபடியால், தங்களை நீதிமானாக்கும் உணர்வில் ஒருவனாலும் தேவன் முன்பாக நிற்கமுடியாது. இவ்வாறாக, தங்களையே நீதிமானாக்க முடியாதிருக்கையில், மற்றவரை –அவர்களது சகோதரனை நீதிமானாக்க முற்றிலும் இயலாதவர்களாக இருக்கின்றனர். இங்கு புதியஏற்பாட்டில் “மீட்கும்பொருள்” என்ற வார்த்தைக்கான கருத்தையே, பழையஏற்பாடும் பிரதிபலிக்கிறது. அதாவது மீட்கும்பொருள் அல்லது “மூடுதலுக்கு” பரிபூரணமும் நீதியும் தேவைப்படுகிறது, மனுஷனாகிய இயேசுகிறிஸ்துவையன்றி இதனை நம் சந்ததியாரில் ஒருவரும் அடைந்திருக்கவில்லை. அவர்; “பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்” இருந்தார். ஆகவே மனுஷனாகிய கிறிஸ்துஇயேசு; ‘எல்லோரையும் மீட்கும்பொருளாக தம்மை ஒப்புக்கொடுக்கும்” தகுதியை உடையவராயிருந்தார். “இதற்குரிய சாட்சி ஏற்றகாலங்களில் விளங்கிவருகிறது”– 1தீமோத் 2:6.

புதியஏற்பாட்டில் “மீட்கும்பொருளுக்காக பயன்படுத்தப்பட்ட கிரேக்க வார்த்தை மிகவும் துல்லியமாகவும், தெளிவாகவும் உள்ளது. இது ஈட்டுக்கிரயத்தொகையை அல்லது ஈடுகட்டுவதற்காக கொடுக்கப்படும் விலையை முக்கியப்படுத்துகிறது. குறிப்பாக உணர்த்துகின்ற காரியம் என்னவெனில், இழந்துபோனவற்றை மீண்டும் அடைதல், மீட்குதல் அல்லது மீண்டும் வாங்க வேண்டியுள்ளது. மீண்டும் வாங்குவதற்கான தகுதியை சட்டப்பூர்வமாகப் பெற்றிருக்கவேண்டுமானால் அது இழந்துபோன அதே சமஅளவு மதிப்பை பெற்றிருக்கவேண்டும். அந்த ஈட்டுக்கிரயத்தொகை அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கக்கூடாது.

### மீட்கும்பொருள் ஏன் அத்தியாவசியம் ?

ஆதி தகப்பனாகிய ஆதாம் தன் சொந்த ஜீவிக்கும் உரிமையை இழந்ததோடு மட்டுமல்லாமல், தன் குடும்பத்தார் அனைவருடைய ஜீவிக்கும் உரிமையையும் இழந்தார். பரிபூரண மனிதனாக இருந்ததால், அவருக்கென வைத்திருந்த தேவ ஏற்பாட்டின்படி தன் சிருஷ்டிகருக்கு முன்பாக உண்மையாய் நடந்து, கீழ்ப்படிந்திருப்பாராகில், நித்தியத்துக்கும் ஜீவிக்கும் சிலாக்கிய நிலைமையில் இருந்திருப்பார். நம்பிக்கை துரோகமும், கீழ்ப்படியாமையுமே அவரது பாவம், அதன் தண்டனை மரணம். ஜீவிக்கும் உரிமையை இழந்துபோதலாகும். இவ்வாறாக, ஆதாமின் கீழ்ப்படியாமையினால் மரணத்தீர்ப்புக்கு உட்பட்டார்;

“அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்”– ஆதி2:17.

ஆதாம் தன் ஜீவிக்கும் உரிமைகளை இழந்தபிறகு, அவருக்கு குழந்தைகள் பிறந்தன. இதனால் அவர் தான் பெற்றிருந்த மரிக்கும் சுபாவத்தையே தன் பிள்ளைகளுக்கு தரமுடிந்தது, கூடுதலாக வேறு எதுவும் தரமுடியாமற்போயிற்று.

“இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லோருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று” – ரோம5:12.

மனுக்குலத்தாரில் மனப்பூர்வமாக கீழ்ப்படிதலை காண்பிக்கின்ற எல்லோரையும் தம்மிடம் சேர்த்துக்கொள்ள தேவன் தாம் இரக்கமுள்ளவராய் இருக்கவிரும்புவதை அவரது வசனத்தில் வெளியரங்கமாக்கியிருக்கிறார். இருந்தபோதிலும், தம் சொந்த பிரமாணத்தின் கண்ணியத்தை பாதுகாப்பதற்காக அவர் ஏற்பாடுசெய்துள்ள ஈடுபலியின் நிபந்தனைகளைத் தவிர்த்து, மரணத்தீர்ப்பை ஒதுக்கிவிடமுடியாது. மரணத்தீர்ப்பிலிருந்து ஆதாமுக்கு மீட்கும்பொருள் கொடுக்கப்பட்டதானால், இனி அவரது ஜீவனுக்காக நீதி

உரிமைகோர முடியாது. மீட்கும்பொருளைக் கொடுப்பவரால் ஆதாமையும் அவரது சந்ததியாரையும் மீண்டும் பூரண நிலைக்கு சீர்பொருந்த செய்யமுடியும். ஆனால் ஒருவரும் பூரணராயிராமல், எல்லோரும் பாவிகளாகி, பாவத்தின் கறைகளை சுதந்தரித்திருந்தபடியால், மனிதகுடும்பத்திலுள்ள எல்லோரிலும் ஒருவர்கூட மீட்பளிப்பவராக காணப்படவில்லை. இதன் காரணமாக, தேவனது ஏற்பாட்டின்படி மீட்பராக தம் ஒரேபேறானகுமாரனை மீட்கும்பொருளை ஆதாமுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தரவும், அதன் உச்சகட்டவிளைவாக, இழந்துபோன அனைத்தையும் திரும்ப பெற்றுக்கொள்ளவும் முடியும்.

தெய்வீக ஏற்பாட்டை செய்து முடிப்பதற்கான இந்த ஊழியத்திற்கு மகிமை, கனம், அழியாமையாகிய மாபெரும் வெகுமதியை வைத்திருக்கிறார். தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியாயிருக்கிற ''லோகோஸ்'', சர்வ சிருஷ்டிப்புக்கும் முந்தின பேறுமானவர்–வெளிப்3:17; கொலோ1:15. தெய்வீக ஏற்பாட்டை மகிழ்ச்சியோடும் தாழ்மையோடும் ஏற்றுக்கொண்டார். தமது மேலான ஆவிக்குரிய நிலைமையில், தம் மேலான ஸ்தானங்களான மேன்மைகளையும் தயவுகளையும் விட்டுவிட்டு, தேவகிருபையால் மாம்சமாக்கப்பட்டு, ஆதாமுக்கு மீட்கும்பொருளைத் தருவதன்மூலம், ஒவ்வொரு மனிதனுக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்(எபி2:9). பரிசுத்தபவுல் அவரைக்குறித்து; 'அவர் தமக்கு முன்வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையை சகித்ததன் விளைவாக , தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்(எபி12:2). ஏற்கனவே மரித்திருந்த ஆதாம் மற்றும் அவரது சந்ததியாரை ஆசீர்வதிப்பதற்கான காலத்தை எதிர்பார்த்து, அந்நேரத்திலிருந்து காத்திருக்கிறார். மணவாட்டி வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட்டபிறகு, பிதாவின் ஏற்றவேளையில், மேசியாவின்கீழ் எல்லாவற்றையும் தமக்கு கீழ்ப்படுத்துவார். தாம் யாருக்காக மரித்தாரோ, அவர்களை உயர்த்தி ஆசீர்வதிக்கும்படியாக, மேசியா தாமே ஆயிரமாண்டுகள் ஆளுகை செய்வார்.

**மீட்கும்பொருளைக் குறித்த தத்துவம்**

ஆதாம் பூரண மனிதராயிருந்தநிலையில், தேவனோடு முழு இசைவாயும் ஐக்கியத்தோடும் இருந்தார். அவரை தேவதூதரிலும் சற்று சிறியவராக்கியிருந்தார். மகிமையினாலும் கனத்தினாலும் ஒரு பரிபூரண மனித ஜீவியாக முடிசூட்டியிருந்தார். ஆகவே ஆதாமை ஒருவர் மீட்கவேண்டுமானால், அல்லது அவருக்கு மீட்கும்பொருளைத் தருவதற்கு இந்த எல்லா தகுதிகளையும் பெற்றிருக்கவேண்டும். அவர் ஒரு மனிதனாக ஒரு பூரண மனிதனாக இருக்கவேண்டும். அவருக்குள் தேவனுடைய சாயலும், ரூபமும் முழுமையடைந்ததாய் இருக்கவேண்டும். அவர் பூரண மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டவராயிருக்கவேண்டும். மேலும் அவர்; ''பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய்'' தேவனோடு முழு ஐக்கியத்தில் இருக்கவேண்டும்.

மனிதனாகிய கிறிஸ்துஇயேசு 30 வயதானபோது, இந்த எல்லா தகுதிகளையும் உடையவராயிருந்து, அந்நேரத்தில் யோர்தானில் தம்மை முழுமையாகவும் தீர்மானமாயும் மரணபரியந்தம் ஒப்புக்கொடுத்தார். தம்மை முழு மனுக்குலத்திற்குமான ஈட்டுக்கிரயத்தொகையாக கொடுத்தார். இவைகளுக்குரிய சாட்சியம் ஏற்றவேளையில் வெளிப்படும். ஒரு காளையைக் கொல்வதன்மூலம் பாவத்தை தொலைக்கமுடியாது அல்லது ஆதாமுக்காக ஒரு தேவதூதனோ அல்லது ஒரு ஆவிக்குரிய ஜீவியோ மரித்து, பாவத்தை எடுத்துப்போட முடியாது. தெய்வீகஏற்பாட்டின்கீழ், மீட்கப்படப்போகிற ஒருவருக்கு சரிநிகர் சமான விலையை தரவேண்டும். இந்த நிபந்தனைகள் அனைத்தையும் சந்தித்தவராக இயேசு இருந்தார். முதலாம் மனிதனுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் மீட்பு தருவதற்கு, இதற்கு மேலாக கூடுதலாக கொடுக்க அவசியமோ அல்லது அதற்கு சாத்தியமோ பரிபூரண மனிதனது தகுதிகளிலே ஒன்றும்குறைவுபட்டிருக்கவில்லை. ஆகவே இவ்விஷயத்தில் சபையால் எதையாகிலும் கொடுக்கவோ அல்லது ஏதாகிலும் உதவிசெய்யவோ முடியாது. சரிநிகர் சமானவிலையை மட்டுமே நீதியானது அங்கீகரிக்கும்.

ஆதாமுக்காக கொடுக்கப்பட்ட சரிநிகர்சமான விலையாகிய மீட்கும்பொருளின் தொகை, ஏற்கனவே நீதியின் கரங்களில் கொடுக்கப்பட்டாகிவிட்டது. யோர்தானில் தம் ஞானஸ்நானத்தில் இயேசு மரணபரியந்தம் பிதாவின் சித்தத்தை செய்வதற்காக வாக்களித்தார். சிலுவையில் தொங்கும்வேளையில்; ''பிதாவே உம் கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று பிரகடனப்படுத்தினார். தம் ஜீவஆவியை, ஜீவனுக்கான தம் உரிமையை அவர் பாவத்தினாலோ அதற்கான தண்டனையாகவோ ஒப்புவிக்கவில்லை. அந்த மீட்கும்பொருளாகிய தொகை ஆதாமையும் அவன் சந்ததியாரையும் மீட்பதற்கு போதுமான அந்த விலை, நீதியின் கரங்களில் கொடுக்கப்பட்டுவிட்டது. அவ்வாறு நிரந்தர வைப்பீட்டுத்தொகையாக கொடுக்கப்பட்டதுமுதல், இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இது துண்டுதுண்டாக பிட்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் சிறிதுசிறிதாக கொடுக்கமுடியாது. இது நடைமுறைப்படுத்தப்படும்பொழுது, ஒரே தருணத்தில் எல்லோருக்குமாக பொருந்தப்பண்ணப்படவேண்டும்.

ஏன் ஒரே தருணத்தில் எல்லோருக்குமாக பொருந்தச்செய்யவேண்டும் ? ஏனெனில் எல்லாரிடத்திலும் உள்ளது ஆதாமின் மூலம் உண்டான ஒரே ஜீவன் மட்டுமே. ஆகவே தகப்பனாகிய ஆதாம் அடைந்திருந்த சாபத்தை அகற்றுவதற்கு ஆதாமின் குழந்தைகளில் எவருக்காகிலும் கிறிஸ்துவின் பலியின் முழு புண்ணியமும் தேவைப்படுகிறது. மீட்கும்பொருளை கோடிக்கணக்கான பங்காகப்பிரித்து, ஒவ்வொரு மனுக்குலத்தின் அங்கத்துக்கும் சிறுசிறு

துண்டாகக் கொடுக்கமுடியாது. மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கத்துக்கும் பொருந்தப்பண்ணும் நேரம்வரும்போது, கிறிஸ்துவின் ஈடுபலியின் பலன்கள் முழுமையும் தேவைப்படுவதால், இந்த ஈடுபலிஒன்றே முழு மனுக்குலத்திற்கும் போதுமானது. மனுக்குலத்தார் அனைவருக்கும் இது பொருந்தப்பண்ணவேண்டுமென்றாலும், மீட்பரிடத்தில் மனுக்குலத்தைத் திருப்புகின்ற தேவனுடைய நேரம் வந்திருக்கும்வரை இது நிறைவேறாது. அவர்களை பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுவித்து, கர்த்தரது ஈடுபலி பெற்றுத்தந்த, திரும்பக்கொடுத்தலின் சிலாக்கியங்கள் எல்லாவற்றையும் அவர்களுக்குக்கொடுத்து, தமது மகிமையுள்ள இராஜ்யத்தை அவர்களிடத்தில் ஸ்தாபித்து, இராஜாதிராஜாவாகவும், கர்த்தாதிகர்த்தாவாகவும் நம் மீட்பர் இருந்து, தமது உடைமையாக்கும் ஏற்ற காலம் வரும்வரைக்கும் இது நிறைவேறாது.

**பாவநிவாரணபலி**

இதற்கிடையே பரலோகப்பிதாவின் திட்டத்தின் மற்றுமொரு அம்சம் நிறைவேற்றப்பட உள்ளது. அந்த ஏற்பாட்டின்படி, ஆதாமின் பிள்ளைகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையுடையோர் கிறிஸ்துவோடுகூட தற்காலத்தில் துன்பப்பட்டு, வரவிருக்கின்ற மகிமையில் பங்கடைவார்கள். மீட்கும்பொருளைத் தருவது இந்த திட்டத்தின் அம்சமல்ல, அதற்கான ஏற்பாடு இயேசுவின் மரணத்தில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆனால் இந்த ஏற்பாட்டின்படி இரட்சகரோடு இணைந்து உடன்சுதந்திரர்களாக, இராஜரீக ஆசாரியக்கூட்டமாக இவர்களை நியமிப்பதாகும். ஆகவே பவநிவாரணபலியை மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தோடு சம்பந்தப்படுத்திப் பார்த்து குழப்பமடையக்கூடாது, மீட்கும்பொருளின் விலையானது, கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிட்டது. சுயத்தை பலியாக்கும் இந்த ஸ்தானத்துக்கு சபை அழைக்கப்படுவதற்குமுன்பே இது முழுமையடைந்துவிட்டது.

பாவநிவாரணபலியின் செயல்பாடுகள் மற்றும் அதன் ஒட்டுமொத்த பணிகள் யாவும் யூதருடைய ஒப்புரவாக்கும் நாளினை துல்லியமாக சித்தரித்துக்காட்டுகிறது. மனிதனாகிய இயேசுவுக்குள் பாவத்துக்கான இந்த நிவாரணம் துவங்குகிறது. ஒப்புரவாக்கும் நாளின்போது கொல்லப்படும் காளை, இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது. இயேசுவால் உண்டாக்கப்பட்ட பாவநிவாரணபலி, பாவத்துக்கான மிக உயர்ந்த பலியாக இருந்தது, இவ்வாறு அவர் தம்மையே பலிசெலுத்தினார். அவர் தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியராய் இருந்தது மட்டுமல்லாமல், அர்ப்பணிக்கப்பட்ட பலிப்பொருளுமானார். அந்த பலியின் புண்ணியம் எல்லா ஜனங்களுக்கும் பொருந்தக்கூடியதாயிருந்தது. அவ்வாறு அவருடைய பலியின் புண்ணியமே போதுமானதாயிருக்குமானால், கர்த்தருடைய வெள்ளாடு வகுப்பராகிய உடன் ஆசாரியர்களது பலிகளுக்கு அவசியமிருக்காது. இந்த வகுப்பாரில் உண்மையுள்ளவர்களாக காண்பிப்போர், ஆயிரவருடஅரசாட்சியில் இராஜரீக ஆசாரியத்துவத்தை படிப்படியாக அடைவார்கள். அடையாளமாக முன்னுரைக்கப்பட்டதை நோக்கும்போது, பிரதான ஆசாரியன் தம் பலியின் புண்ணியத்தை தனக்காகவும், தன் வீட்டாருக்காகவும் செலுத்தினார். தனக்காகவும் என்பது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை குறிக்கிறதாயும், தனது வீட்டாருக்காகவும் என்பது, பிரதிஷ்டை செய்த விசுவாசவீட்டாரை– அதாவது கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகத் தவறினவர்களை குறிக்கிறது. இவர்கள் ஆவிக்குரிய மட்டத்தில்,"திரள்கூட்டத்தாராக", இரவும் பகலும் தேவனுக்கும் அவரது மகிமையடைந்த திருச்சபைக்கும் முன்பாகவும் அவரது ஆலயத்தில் பணிவிடைக்காரராக இருப்பார்கள்.

**சுவிசேஷயுகத்தின்போது செலுத்தப்படும் பலிகள்**

இயேசுவின் பலியின் புண்ணியங்கள், எல்லாவற்றிற்கும் முதலாவதாக அவரது திருச்சபைக்கும், அதன்மூலமாக மற்றவர்களுக்கும் கடந்துசெல்கிறது. இவ்வாறு அளிக்கப்படுவதனால், அவரது பலியின் புண்ணியத்தின் பலம் குறைந்துவிடவோ, அதன் மதிப்பு குறைவுபடுவதோ இல்லை. அந்த புண்ணியத்தை பகிர்ந்துகொள்ளும் ஒவ்வொருவரும், தன் பூமிக்குரிய உரிமைகளை கையளித்து, இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றவேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் அதில் பங்குபெறுகிறான். ஆசாரிய வகுப்பாரில் தங்களுடைய உடன்படிக்கையின் ஏற்பாட்டை கடைப்பிடிக்கிறவர்கள், தாமாக முன்வந்து, இருதயப்பூர்வமாக தங்கள் ஜீவியத்தை கர்த்தரது ஊழியத்துக்கென்று கையளிக்கின்றனர். திரள்கூட்டத்தார், தங்களுடைய பூமிக்குரிய ஜீவியத்தையும் உரிமைகளையும் முழுமையாக ஒப்புக்கொடுக்கத் தவறினவர்கள். ஆகவே மகா உபத்திரவத்தின்போது, அவர்களிடமிருந்து பூமிக்குரிய உரிமைகள் பறிக்கப்படும். இந்த யுகத்தின்போது யாராகிலும் கர்த்தருடைய தயவைப்பெற்று, இந்த இரு வகுப்பாரில் ஏதேனும் ஒன்றில் அங்கமாகத் தவறுவாராகில், இராஜரீக ஆசாரியக்கூட்டத்தாராகவோ அல்லது லேவியராகிய ஊழியக்காரர் கூட்டத்தாரின் அங்கமாகவோ மாறாவிடில், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை அல்லது சிலாக்கியங்களை அடையமுடியாது. அதற்கு மாறாக, இரண்டாம் மரணத்தில் மரிக்கநேரிடும்.

இவ்வாறாக,, ஆதாமுக்கும் அவன் சந்ததியாருக்குமென்று திட்டமிடப்பட்ட இயேசுவின் முழுமையான புண்ணியமும், தங்களை பிரதிஷ்டைசெய்த சபை வகுப்பார் மூலமாகவே, ஆதாமையும் அவரது சந்ததியாரையும் சென்றடைகிறது. இந்த ஏற்பாட்டின் காரணமாக, நீதியினிமித்தம் கிறிஸ்துவுடன் துன்புறுவதில்

பங்குபெறும் வாய்ப்பு திருச்சபைக்கு கொடுக்கப்படுகிறது. நமது பிரதிஷ்டையின் வாழ்க்கையை, மாபெரும் பிரதான ஆசாரியன் ஏற்றுக்கொண்டு தம் பலியின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கிறார். ஈடுபலியின் விலையாக அவரது புண்ணியத்தின் முழுஅளவும் மனுக்குலத்திற்கு கொடுக்கப்பட்டு, ஆயிரமாண்டுகள் திரும்பக்கொடுத்தலின் சிலாக்கியங்களை ஆதாமுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் தருகிறார்.

இவைகளே பாவத்துக்கான பிரியமான பலிகளும், காணிக்கைகளுமாயிருந்து, நம்மால் உண்டாயிராமல், பிதாவானவர் தம் நோக்கத்திற்காக நியமித்த மகாபெரிய பிரதான ஆசாரியரால் உண்டாயிற்று. இந்த மகாபெரிய பிரதான ஆசாரியர், முதலாவது தம் சொந்த மாம்சத்தையும், அதன்பின்பு கடந்த 20 நூற்றாண்டுகளாக தம் மூலமாக பிதாவிடம் வந்துசேர்ந்த அனைவரது மாம்சத்தையும் பலிசெலுத்தி, பாவத்துக்கான தம் பலியை நிறைவேற்றி முடித்திருக்கிறார். அவர் தம் பலியின் ஊழியத்தை விரைவில் முடிக்கஇருக்கிறார். அவரோடுகூட துன்பப்படுபவர்களை தம்மோடுகூட மகிமைப்படுத்தி, மேசியாவின் இராஜ்யத்தில் தம் கூட்டாளிகளாக்கிக்கொள்கிறார். கல்வாரியில் அவர் நிறைவேற்றிமுடித்த பலியின் புண்ணியங்களை இந்த சுவிசேஷயுகத்தின்போது. சபைக்கு கடனாக அளிப்பதுபோல அல்லது சபைமேல் சுமத்துவதுபோல அருளினார். அதன்பின்பு, முழு மனுக்குலத்தார் நிமித்தமாக அவர் தம் பலியின் புண்ணியங்களை பொருந்தச்செய்கிறார்.

இந்த பலியானது ஆதி பாவத்துக்கு ஈடுசெய்ய சரியாய்ப் பொருந்தும்வகையில், நீதிக்கென்று முழுமையாகவும் மொத்தமாகவும் நித்தியத்துக்குமாக கொடுக்கப்படுகிறது. உடனடியாக ஆதாமும் அவரது எல்லா குழந்தைகளும் நீதியின் கரங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, இயேசுவின் கரங்களுக்குள் வந்து சேர்வார்கள். இனி மனுக்குலத்தோடு தெய்வீக நீதிக்கு எந்த செயல்பாடும் இராது. ஆயிரமாண்டு இராஜ்யத்தின் நிர்வாகத்தின்கீழ் எல்லோரும் இயங்குவார்கள். மீட்பர், மனுக்குலத்தின் மீட்பர் ஆயிரமாண்டுகள் அவர்களுக்கு வெகுமதியைப்பற்றியும் தண்டனையைப்பற்றியும் போதித்து, பரிபூரணமடைய திரும்பும் ஒவ்வொருவருக்கும் முழு வாய்ப்பை அளித்து, நீதியை அவர்களுக்கு படிப்பித்ததற்கிணங்க அவர்களோடு நடந்து, அவர்களை பாவம் மற்றும் மரண நிலைமையிலிருந்து விடுவிப்பார்.

ஆயிரமாண்டு முடிவின்போது, மனித சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினரையும் தம்மால் கூடுமானஅளவு ஆதாயப்படுத்தியிருந்து, பிதாவிடம் அனைவரையும் ஒப்படைத்து, செம்மறிஆட்டு வகுப்பாரைப்பார்த்து கூறுவார்; "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்பெற்றவர்களே, உலகத்தோற்றத்துக்குமுன்னே உங்களுக்கென ஆயத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தை(பூமிக்குரிய) சுதந்தரித்துக் கொள்ளுங்கள்"(மத்25:34). மற்றவர்களோ, நித்தியஜீவனடைய தகுதியற்றவர்களாக காணப்பட்டு, இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். அக்கினி பட்சிப்பதுபோல உருவகத்தில் இது கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக, மீட்கும்பொருளின் விலைக்கிரயத்துக்கும், அந்த மீட்கும்பொருளின் கிரயத்தை ஒவ்வொருவருக்கும் பொருந்தப்பண்ணுவதற்குமிடையே உள்ள தனித்தன்மைகளையும், அதுபோலவே பாவநிவாரணபலியையும் அந்த பாவநிவாரணபலிகளில் பங்கேற்கும், கிறிஸ்துவோடுகூட துன்பப்படும் சிலாக்கியத்தைப்பெற்ற திருச்சபை அடையும் ஆசீர்வாதத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகள் மற்றும் தனித்தன்மைகளை வகைப்படுத்தி எளிமையாய் புரியும்படி விளக்க பிரயாசப்பட்டிருக்கிறோம்.

**ஆர்வத்தைத்தூண்டும் மூன்று கேள்விகள்**

இதோடு தொடர்புடைய சில வினாக்களுக்கு இங்கு நம் பதிலளிக்க விரும்புகிறோம்

கேள்வி : சபையாராகும்படி அழைக்கப்பட்டிருக்கிற நாம், இந்த சுவிசேஷயுகத்தின்போது, ஒரு குறிப்பிட்ட அளவு நமது பங்கை மீட்கும்பொருளின் புண்ணியத்திலிருந்து பெறுகிறோம் என்று கூறுவது சரியா ?

பதில் : இவ்வாறு பேசுவது சரியான கருத்தாக அந்நபரது பார்வையில் தோன்றியிருக்கக்கூடும். ஆனால் அந்தக் கருத்து தவறுதலாகப் புரிந்துகொள்ளப்படுவதை தவிர்க்கவேண்டும். கிறிஸ்துவின் புண்ணியம்முழுவதும் சந்ததியார் ஒவ்வொருவருக்கும் அவசியமானது என்பதை நாம் மேலே பார்த்தோம். அந்நபர் இந்த பாணியில் பேசியிருப்பது முறையான கருத்தாக இருந்தாலும், அந்தக் கருத்தை வலியுறுத்துவதில் சரியான வார்த்தைகளை அவர் பயன்படுத்தவில்லை. ஏனெனில் அவ்வார்த்தைகள் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதை தவிர்க்கவேண்டும். மேலே காண்பித்தபடி, மனுக்குல சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கிறிஸ்துவின் புண்ணியங்கள் அனைத்தும் தேவைப்படுகின்றன. நாம் கிறிஸ்துவின் புண்ணியத்தை பங்குபோடுவோமானால் ஒருவருக்கும் போதுமான அளவு கிடைக்காமற்போகும். அனைத்தும் ஒருவருக்கே கொடுக்கப்பட்டால், மற்றவர்களுக்கு எதுவும் கிடைக்காது. ஆகவே தேவதிட்டமானது மேசியாவின் இராஜ்யம் ஏற்றவேளையில் ஸ்தாபிக்கப்படும்வரை மீட்கும்பொருளின் விலைக்கிரயத்தை தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அதன்பின்பு, அந்த விலைக்கிரயத்தை முழு மனுக்குலத்திற்கும் பொருந்தச்செய்து, இயேசுவிடம் ஒரேதடவையில் மாற்றுகிறது. பின்னர், ஆயிரமாண்டுஆட்சியில், ஒவ்வொருவரும் தன் பங்கை அல்லது ஈடுபலியின் புண்ணியத்தில் பங்கேற்குதலை, திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வார்கள் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். கண்டிப்புடன் பேசுவோமாகில், முழு உலகிற்குமான முழுமையான ஆசீர்வாதங்கள் ஈடுபலியின் ஆசீர்வாதங்களேயாகும்.

கேள்வி : ஈடுபலி மனுக்குலத்திற்காக இன்னும் நீதியின் புஸ்தகத்தில் எவருக்கும் நடைமுறையில் பயன்படுத்தப்படவோ, பகுத்துக்கொடுக்கப்படவோ இல்லையெனில், உலகின் அங்கங்களாயிருக்கிற சபை வகுப்பாராகிய நாம், ஈடுபலியின் ஆசீர்வாதங்களில் எப்படி பங்கேற்பது ?

பதில்: ஈடுபலியின் புண்ணியங்கள் முழுமையும், நீதியின் கரங்களிலேயே உள்ளது. இந்த புண்ணியத்துக்கு சொந்தக்காரராகிய இயேசு, பிதாவின் திட்டத்திற்கு இசைவுள்ளவராய், இந்த சுவிசேஷயுகத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, தங்களை பலியாக ஒப்புக்கொடுத்து, குருவின் அடிச்சுவடுகளில் நடக்கும் வகுப்பார் அனைவருக்கும் இந்த புண்ணியங்களை அளித்துவருகிறார். ஒரு மனிதனிடத்தில் 1000 டாலர்கள் கொடுப்பதற்கும், அவனிடத்தில் 1000 டாலர்கள் கொடுத்து அவனிடத்தில் ஒப்பந்த பத்திரம் எழுதி வாங்குவதற்கும் என்ன வித்தியாசம் உண்டோ, அதுபோலவே, கொடுப்பதற்கும், பொறுப்பை உடையவராக்குவதற்கும் வித்தியாசம் உண்டு. நமது உன்னதமான பரிந்துபேசுபவராகிய இயேசு, பிதாவாகிய தேவனுடன் நம் ஒப்பந்தத்தை முழுஅளவில் செய்திருக்கிறார். இயேசுவைப்போலவே, நமது பூமிக்குரிய உரிமைகளை நாம் கீழ்ப்படுத்தவேண்டும் என்பதே நமது ஒப்பந்தம் ஆகும்.

நம் பரலோகத்தகப்பன், அப்படிப்பட்ட ஒரு ஒப்பந்தத்துக்குள் நுழைய நாம் தகுதியுள்ளவர்களென்று நம்மை எண்ணுகிறதில்லை. நம் மிகப்பெரிய பரிந்துபேசுபவர் இவ்விஷயத்தில் நமக்காக உத்திரவாதம் தருகிறபடியால் அல்லது ஒப்புதல் அளிக்கிறபடியினாலே இது அங்கீகரிக்கப்படுகிறது. அவர் என்ன உத்திரவாதம் தருகிறார்? நமது பூமிக்குரிய ஜீவியத்தை முழுமையாக ஏற்றவேளையில் கையளிப்பதாக, அவர் நமக்காக உத்திரவாதம் தருகிறார்.

நாம் இதுவரை பார்த்தபிரகாரம், இயேசு மூன்று வகுப்பாருக்கு உத்திரவாதமும், பிணையமும் அளிப்பவராக ஆகிறார். முதலாவதாக, எழுத்தின்படியும், ஆவியின்படியும் தங்களது ஒப்பந்தத்தை முழுமையாகவும், நிறைவாயும் செயல்படுத்துபவர்கள், குருவின் மாதிரிகையைப் பின்பற்றி தங்கள் ஜீவியத்தை தாமாக முன்வந்து கையளித்தவர்கள். இவர்கள் "முற்றிலும் ஜெயங்கொண்டவர்களாயிருப்பர்". அபிஷேகம் பண்ணப்பட்ட சரீரத்தின் அங்கங்கள்ஆவர். அடுத்து வருபவர்கள், திரள்கூட்டத்து வகுப்பாராவர். இவர்கள் இறுதியில் ஜெயங்கொண்டவர்களாக மாறினாலும், "முற்றிலும் ஜெயங்கொள்ளவில்லை". ஏனெனில் இந்த ஜெயங்கொண்ட வகுப்பார் வைராக்கியத்திலும் அன்பிலும் குறைவுபட்டதால், ஆவிக்குரிய நிலைமையில் நித்தியஜீவன் அருளப்பட்டாலும், கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகும்படியான தேர்வில் தோல்வி அடைகின்றனர். மூன்றாவது வகுப்பார், முற்றிலும் ஜெயங்கொண்டோருமல்ல, ஜெயங்கொண்டோராயுமல்ல, மாறாக தோல்வியுற்றவர்கள், பாவத்துக்கு மீண்டும் திரும்பினவர்கள். கழுவப்பட்ட பன்றி மீண்டும் சேற்றில் புரள திரும்பினதைப்போல., இவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிவைக் காண்பார்கள். நமது மேன்மைமிக்க பரிந்துரையாளரும் பிரதான ஆசாரியருமானவர், இவர்கள் எல்லோருக்கும் உத்திரவாதம் கொடுத்திருந்தபோதிலும், எல்லோரும் மாம்சத்துக்கு மரிக்கும்போது, அவர்களுக்கான கடன்பொறுப்பிலிருந்து இறுதியில் விடுதலையாகின்றார். இவர்களில் ஒருவரும் திரும்பக்கொடுத்தலின் உரிமைகளையும் சிலாக்கியங்கயையும் பெற்றுக்கொள்வதில்லை. கிறிஸ்துவின் சரீர அங்கம் மரணத்திற்குள் செல்லும்போது, அந்த திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்கள் முழுமையாகவும், நிறைவாகவும் மனுக்குலத்தாருக்கு கொடுக்கப்படும்.

கேள்வி : சபையின் அங்கத்தினர்களில் சிலர், இன்னும் மாம்சத்தில் இருக்கும்போது, உலக மனுக்குலம் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளத்துவங்கும் என்று நாம் எண்ணுவது பொருத்தமாய் இருக்குமா?

பதில் : பொருத்தமானதாய் இருக்காது. இது நிறைவேறக்கூடாத ஒரு கருத்தாக இருக்கின்றது. இந்த யுகத்தில் உடன்படிக்கைசெய்த வகுப்பாருக்கு, இயேசு தாம் உண்டுபண்ணின தம் ஈடுபலியின் முழு புண்ணியமும் அடகுவைக்கப்பட்டிருக்கிறது. புதுசிருஷ்டி முத்திரை தரிக்கப்பட்டு, ஆதாமுக்கும் அவரது சந்ததியாருக்கும் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை செயலாக்கத்துக்கு கொண்டுவரும்போதுதான் இந்த அடமானம் முழுமையாக வெளிக்கொணரப்படும். அதுவரை, திரும்பக்கொடுத்தல் எதுவும் நிறைவேறும் என நாம் எதிர்பார்க்கக்கூடாது. சிறுமந்தைவகுப்பார் இரண்டாம் திரைக்கப்பால் செல்லும்வரை, மற்றும் திரள்கூட்டத்து வகுப்பாரும் மிகுந்த உபத்திரவத்தில் மகிமைக்குள் பிரவேசிக்கும்வரை, முற்பிதாக்கள் மற்றும் எவரும் திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களை அடைவார்கள் என நாம் எதிர்பார்க்கக்கூடாது.

---

**R 5973**

# புத்திமதிக்கு சிரமத்தோடு கீழ்ப்படிதல்

## SUFFER THE WORD OF EXHORTATION

"சகலவித கசப்பும், கோபமும், மூர்க்கமும் கூக்குரலும், தூஷணமும் மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" – எபேசியர் **4:31,32.**

நமது ஆதார வசனங்களில் உபயோகித்த வார்த்தைகளை அதே அப்போஸ்தலர் வேறு இடங்களில், இவை தீயஆவிகள் மாம்சத்தின் கிரியைகளாகவும், சாத்தானின் கிரியைகளாகவும் கணக்கிட்டு வகைப்படுத்தியுள்ளார். இவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தினை சுதந்தரிப்பதில்லை என்று அப்போஸ்தலர் நமக்குக் கூறுகிறார். இந்த குணங்கள் நமது விழுந்துபோன சுபாவத்திலிருந்து வருவதாக அவர் சுட்டிக்காண்பிக்கிறார். ஆனால் இவ்வுலகையும் அதன் ஆவியையும் துறந்திருக்கிறோம், கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளாக நாம் நமது மிக உன்னதமான கடமைகளை நிறைவேற்றும் கட்டாயத்தின் கீழிருக்கிறோம். அதன்படி, நமது விழுந்துபோன சுபாவத்தையும் தீமையை விரும்பும் அதன் மனப்பாங்கையும், புதிய சுபாவத்தின் முழு கட்டுப்பாட்டிற்குள் கீழ்ப்படுத்தவேண்டும். பரிசுத்தஆவியாகிய பரிசுத்த சித்தத்திற்குள், தேவசிந்தையின் கட்டுப்பாட்டிற்குள் பழையசிருஷ்டியை கொண்டுவந்து, மாம்சத்தை சிலுவையிலறைந்து, ஒவ்வொரு எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படிய சிறைப்படுத்துபவர்களாய் இருக்கிறோம்.

தேவ ஆவியின் விலையேறப்பெற்ற கனிகளோடு விரோதி மற்றும் விழுந்துபோன மாம்சத்தின் இந்த கனிகளுக்கு உள்ள முரண்பாடுகளை பரிசுத்தபவுல் கூறுகிறார். ஒரு ஆவி, பரலோகத்திற்குரியது, தேவத்துவமானது. மற்றதோ, பூமிக்குரியது, பேய்த்தனமானது, சிற்றின்பம் நாடுவது. பரலோகத்துக்குரிய கனிகளோ விசுவாசம், நற்குணம், சாந்தம், தயாளம், பொறுமை, சமாதானம், சுயகட்டுப்பாடு, அன்பு ஆகியவைகளாகும். இந்த கனிகளானது எதிராளியின் கனிக்கு நேர் எதிரானவை. நாம் தேவசித்தத்தை செய்ய பெருமுயற்சிஎடுத்து, பரிசுத்தஆவியின் நற்பண்புகளை உற்பத்திசெய்ய முனையும்போது, நமது விழுந்துபோன மாம்சத்தில் சுதந்தரித்துக்கொண்ட பலவீனங்களோடு இடைவிடாத போராட்டத்தை கண்டடைவோம். இந்த மாம்சத்தின் கிரியைகள் மற்றும் தீமையின் கிரியைகள் மேல் சிலர் குறுகிய காலத்திலேயே பெருமளவு வெற்றியடைகிறார்கள். ஆனால் வேறுசிலருக்கு மிகப்பெரிய போராட்டம் நேரிட்டு, தொடர்ந்து போரிட்டுவருகிறார்கள். ஆயினும் இந்த தீய குணங்களை கட்டாயம் சந்தித்து, ஜெயித்தாகவேண்டும், இல்லாவிடில், இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் பிரவேசம் ஒருபோதும் நமக்கு அருளப்படாது. விழுந்துபோன மாம்சத்தின் கிரியைகளை, இந்த தீமையின் தனிப்பண்பை அகற்றுவதற்காக நாம் வைராக்கியத்துடனும் விடாமுயற்சியுடனும் போராடுவதை கர்த்தர் கவனித்துப்பார்க்கிறார். நமது சொந்த இயல்பான பலவீனத்தை அறிந்திருந்து, நம்மில் ஒவ்வொருவரும் தன்னைத்தான் காவல்காத்து விழித்திருக்கவேண்டும். அதற்காக கர்த்தரிடம் உதவிகேட்டு கதறவேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது, கர்த்தரது வார்த்தையால் இருதயமும் சிந்தையும் நிரப்பப்படும், அவன் தன்னை பாவத்திலிருந்து விடுவித்து தூய்மையாய் காத்துக்கொள்கிறான்.

நமது ஆதார வசனங்களில் அப்போஸ்தலர் கூறும் புத்திமதியை பகுத்தாராயும்போது, சொல்லப்பட்டவைகளில் மிக மோசமான பண்பாக முதலாவது குறிப்பிடவேண்டுமென்றால், "சகலவித கசப்பு" என்பதாகவே தோன்றுகிறது. கசப்புத்தன்மை என்பது ஒரு துர்வாடை வீசும்போது ஏற்படும் மனநிலையைக் குறிக்கும். நறுமணத்தன்மையோ அதற்கு நேர் எதிரானதாக இருக்கிறது. இருதயத்தில் ஏற்படும் பெரும் வெறுப்பை இது குறிக்கின்றது. மேலும் ஆதாரவசனத்தின் இறுதியில் கூறப்பட்ட "மற்ற எந்த துர்க்குணமும்" என்ற வார்த்தையோடு இது மிக நெருக்கமாக இணைந்துள்ளது. இருதயத்தில் துர்க்குணம் ஒருவரிடம் இருக்குமானால், அது கொடுங்குணத்துக்கு வழிநடத்தும், மற்றவருக்கு காயமேற்படுத்த வழிவகைதேடும். கசப்புணர்வு மற்றும் துர்க்குணத்தின் ஆவியை இருதயத்தில் நுழைய அனுமதிப்போமானால், நம் வாழ்க்கையின் எல்லா நடவடக்கைகளிலும்அது ஊடுருவி, புதுசிருஷ்டியாகிய கப்பலையே முழுமையாக மூழ்கடித்துவிடும். இதன் விளைவு மிகவும் விஷத்தன்மை வாய்ந்ததாய் இருக்கும். கோபப்படுவது ஒருவருக்கு இயல்பானது என்றிருக்கும்போது, ஒரு நொடிப்பொழுது பழிவாங்கும் எண்ணம் ஏற்படுவதும், இது மனதில் பதிந்து கசப்புணர்வை நிரந்தரமாக ஏற்படுத்திவிடும் என்ற உணர்வில்லாதிருக்குமானால் மாம்சத்தில் கோபப்படுவதும் , மூர்க்கமும் பாவமாகும். இதை ஜெயிக்காவிடில் நிச்சயமாகவே அபாயகரமானது, இது கசப்புணர்வுக்கும் துர்க்குணத்துக்கும் வழிநடத்தவல்லது.

### மனுஷர் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதையே அவர்களுக்கு செய்யுங்கள்

"உங்கள் எரிச்சல் சூரியன் மறையுமுன்னே தணியக்கடவது" என்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு புத்திமதி கூறுகிறது. ஒருவருக்கு எந்தளவு எரிச்சல் அடைந்திருந்தாலும் அது ஒரு பொருட்டாக எண்ணாமல், எவ்வளவு விரைவில் எரிச்சலுக்கான காரியத்தை தீர்க்கமுடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்கவேண்டும். கோபத்தையும், மூர்க்கத்தையும் வளரவிடக்கூடாது, அதை

காத்து ஆதரிக்கக்கூடாது; அவ்வாறு ஆதரிக்கும்போது, நிரந்தரமான கசப்பையும் வெறுப்பையும் அடையும்படி வழிநடத்தும். கோபம் என்பது மூர்க்கத்தைப்போல பலமில்லாத வார்த்தையாக தோன்றுகிறது. மூர்க்கம் என்பது ஒரு குறைபாடுள்ள, விழுந்துபோன ஜீவியின் நிலையை, வேரூன்றின, நீடித்த கோபத்தையும் , சீற்றம் மிக்கதும் பழிக்குப் பழிவாங்கும் நிலையையும் காண்பிக்கிறது. தூஷணம் என்பது அதிக வஞ்சனையானதும், கண்ணியை வருவிப்பதும், தூய்மையின் சாயம் பூசினதுமாய், துர்க்குணங் கொண்டது. அநேக ஜனங்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் ராஜரீக பிரமாணத்தை முறையாக செயல்படுத்த அறியாதிருந்து, சமன்செய்யப்படாத மனநிலையை உடையோராய், குணாதிசயத்தில் பலவீனராகின்றனர். இப்படிப்பட்டோர், பிறரது விஷயங்களைக்குறித்து; ''மற்றவர்கள் தங்களைப்பற்றி பேசுவதை விரும்புவதில்லை'' என்கின்றனர். மற்றவர்களை இவர்கள் நடத்துகின்றவிதத்தைப்போல, இவர்களை மற்றவர்கள் நடத்துவதை விரும்புவதில்லை. தேவனுடைய பிரதிநிதிகளாக தங்களை அறிக்கை பண்ணுகின்ற, தேவனோடு பரிசுத்த உடன்படிக்கைசெய்துகொண்ட கர்த்தருடைய பிள்ளைகளிடமிருந்து இப்படிப்பட்ட நடக்கை களையப்படவேண்டும்.

நீதியான கோபம், நீதியான மூர்க்கம் என்பதே இல்லை என்று நாம் கூறவில்லை. தேவன் துன்மார்க்கரிடத்தில் ஒவ்வொருநாளும் கோபம் கொள்கிறார். இன்றைய நாளளவும் பூமியின் தேசங்கள்மேல் அவரது நீதியான கடுங்கோபம் தூண்டப்பட்டுவருகிறது, அவர் அவர்களை அவர்களது இறுதி கவிழ்ப்புக்கென அடித்துவருகிறார். கோபங்கள் அனைத்தும் தவறானதாக இருக்குமானால், தேவனும் பாவத்தின் குற்றவாளியாகிறார். ஆனால் தேவனுடைய கடுங்கோபமும், அவரது கோபமும் எப்பொழுதும் முறையான தன்மையுடையதாக இருக்கும். அது மாம்சரீதியான கோபமோ அல்லது கசப்புணர்வோ அல்ல, தேவன் தீயோர்மேல் கோபம் கொள்கிறார், அவர் அந்த தீமைக்கு தண்டனை கொடுப்பதையே அவரது கோபம் அர்த்தப்படுத்துகிறது. ஆயினும் வேதாகமம், கர்த்தர் கசப்பையோ அல்லது துர்க்குணத்தையோ உடையவராக ஒருபோதும் குறிப்பிடவில்லை. தேவன் அன்பாய் இருக்கிறார். அவர் தீயோரிடத்தில்கூட நல்லவராயும் பொறுமையுடையவராயும் இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் நீதியின்படியும் அன்பின்படியும் செய்கிறார்.

தேவன் குறிப்பிட்ட காரியங்களுக்கு கோபப்படுவது அல்லது கடுங்கோபத்தை வெளிப்படுத்துவது சரியாய், நீதியாய் இருக்குமானால், நமது விஷயத்தில், நாம் எந்த சம்பவங்களிலாவது கோபத்தை அல்லது கடுங்கோபத்தை வெளிப்படுத்துவது சரியாய் இருக்குமா? நாம் சுட்டிக்காண்பித்தபடி, ஒருவர் ஒருசில சமயங்களில் முறையாக கோபத்தை வெளிப்படுத்த நேரிடும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட அளவு கோபத்தை நமக்கெதிராகவே வெளிப்படுத்துவது முறையானதாக உணரவேண்டும். நாம் முறையாக நமது வாய்ப்புகளை மேம்பாடுஅடைய செய்யவில்லை என்று கண்டறிந்தோமானால், நாம் நமது சிந்தனைகளையும் வார்த்தைகளையும், செய்கைகளையும் விழிப்பாய் காத்துக்கொள்ளாமல், அலட்சியப்போக்கில், கவனக்குறைவாக இருந்திருப்போமானால் நமக்குநாமே கோபப்பட்டு, சினமடையவேண்டும். ஆனால் நம் இருதயம் சரியாய் இருக்குமானால், இவ்விஷயத்தில் நாம் நம்மில் அதிக சினமடையவோ, அல்லது நமது பலவீனங்களினிமித்தம் சோர்ந்துபோகவோ கூடாது. மாறாக கவனத்தோடும், கர்த்தருடைய உதவியோடும், அதிகதிகமாகப் போராடி ஜெயங்கொள்ளவேண்டும். நாம் செய்த ஒவ்வொரு தவறுக்கும் ஒரு பாடத்தைக் கற்க பெருமுயற்சி செய்யவேண்டும்.

**இருதயத்தை ஆராய்ந்தறிதல் அவசியமானது**

மற்றவருடைய இருதயத்தை நிதானிக்கும் ஆற்றல் அல்லது உரிமையை நாம் பெற்றிருக்கவில்லை, ஆகவே நாம் கோபப்படுவதில் மிக தாமதமாகவும், நம்மை பிறரிடத்தில் வெளிப்படுத்தும்போது மிக கவனமாயும் இருக்கவேண்டும். கர்த்தருக்கு மட்டுமே தண்டிக்கக்கூடிய உரிமைஉண்டு என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த மாம்சத்தின் பலவீனங்கள், மற்றும் கறைகளுக்கெதிராக கர்த்தருடைய ஜனங்கள் போராடவேண்டும். இவைகளை விரோதியானவனும் அவனது சேனைகளும், கோபம், மூர்க்கம், சண்டை, துர்க்குணம், வெறுப்பு போன்றவற்றால் தூண்டுவார்கள். ஒரு வாதை வந்தால் பயப்படுவதுபோல், இவைகளைக்கண்டு நாம் பயப்படவேண்டும்.

இந்தக் கருத்து எப்பேர்ப்பட்ட விழிப்புணர்வை, எப்பேர்ப்பட்ட கூர்ந்து ஆராய்தலை நம்முள் செய்யவேண்டும் என்பதை, எப்பேர்ப்பட்ட ஊக்கமான ஜெபத்தை உதவிவேண்டி ஏறெடுக்கவேண்டும் என்பதை நம்முள் ஏற்படுத்துகிறது! தூஷண வார்த்தைகள், புறங்கூறுதல், அவதூறுபேசுதல் போன்றவற்றிலிருந்து எப்படி நம் நாவை காத்துக்கொள்வது என்பதையும் கூறுகிறது. ஏனெனில் இப்படிப்பட்ட காரியங்கள் அன்பற்றதன்மை மற்றும் துர்க்குணத்தின் கனியைத் தருகிறது. நம் நாவை இவைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள, இந்த தீமையின் வார்த்தைகள் இருதயத்தின் நிறைவிலிருந்து வருகிறது என்பதை நினைவில் நிறுத்தவேண்டும். இதனால் நம்இருதயம் தேவனுடைய பரிசுத்தஆவியால் இயக்கப்பட்டு, அப்படிப்பட்ட கசப்பான நீரை வெளிவிடாதபடி, கிறஸ்துவுக்கு உண்மையுள்ளதாக மாற்றப்பட்டு, காக்கப்படும்.

பூமியில் தூஷணம் பேசுகிறவன் உருவாகக்கூடாது என்று சங்கீதக்காரன் கூறுகிறார். தீத்துவுக்கும் தீமோத்தேயுவுக்கும் பரிசுத்தபவுலின் ஆலோசனையை தீத்து3:2–8 மற்றும், 1தீமோத்3:11லும் நாம் காண்கிறோம். கிறிஸ்துவின் சபை அங்கங்கள் ஒவ்வொருவருக்குள்ளும், அன்பு, கருணையின் ஆவி மற்றும் பிறர் உணர்வுகளில்அக்கறைகொள்ளும் ஆவி அபரிதமாய் வாசம்பண்ணும்போது, ஒவ்வொருவரும் ஒரு

சகோதரரையோ, சகோதரியையோ குறித்து தூஷணம் பேசுவதிலிருந்து விலகுவதோடு நில்லாமல், ஒருவருடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்துகிற, குறிப்பாக, இந்த குறுகலான பாதையில் உடன் பயணிக்கும் ஒருவருக்கு களங்கம் ஏற்படுத்துகிற எந்த வார்த்தையையும் கேட்கும்போது, வேதனையை ஏற்படுத்தும். வெவ்வேறு சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும், இப்படிப்பட்ட நிலைமையை அடையும்பொழுது, எந்தளவு அதிகமாக கிறிஸ்தவ அன்பின் பிணைப்புக்களில் நெருக்கமாக கட்டப்பட்டிருப்பர்!

நாம் முன்பு கூறினதுபோல், பெரும்பாலான நம் அன்புக்குரிய நண்பர்கள் இந்த அன்பின் ஆவியிலும், ஒருவரையொருவர் கவனித்துப்பார்த்தலிலும் அதிகதிகமாக வளர்வார்கள் என்று நாம் நம்புகிறோம். ஆயினும் ஒருசிலரிடத்தில் இன்னும் இந்த மேம்பாடு அடையப்படவேண்டும். நாவினால் தீங்கு இழைக்கப்படமுடியும் என்பது ஏறக்குறைய வரையறைக்குட்படாது. எவ்வளவு விழிப்பாய், கவனமாய் இருந்தபோதிலும், நமது ஆதிக்கத்தின்கீழ் இருக்கவேண்டும். வேதாகமப் பாடங்கள் தொகுதி – 6, பக்கங்கள் 778முதல் 782(தமிழ்) வரையுள்ள பகுதிகளை வாசிக்கும்படி நாம் இங்கு வலியுறுத்துகிறோம். இவற்றை நினைவுகூர்வதன்மூலமாக நம் தூய்மையான சிந்தைகள் விழித்தெழுப்பப்படுவது நல்லது. குணாதிசய அமைப்பை கட்டி முடிப்பதற்கு நம் காலம் குறுகியதாயிருக்கிறது என்று நாம் நம்புகிறோம். கிறிஸ்துவின் சரீர அங்கங்கள் இரண்டாம் திரைக்கப்பால் ஒருவரைஅடுத்து மற்றவர் செல்வதைக் காண்கின்ற நம் மனதில் அதிகதிகமான தாக்கத்தை ஏற்படுத்தவேண்டும். எல்லாக் காரியங்களிலும் நேசகுமாரனின் சாயலுக்கு ஒப்பாக மாற, ஒவ்வொருநாளும் ஒவ்வொரு மணிநேரமும், ஜெபத்திலும் நாம் அடையத்தேடுவோமாக. அவ்வாறு தேடும்போது, ஏற்றவேளையில்; "நன்று! உத்தமஊழியனே!" என்ற நம் போதகரின் இனிமையான குரலைக் கேட்போம், ஆமென்.

————————

R 5974

# உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள்

## STRAIGHT PATHS FOR YOUR FEET

**திறவுகோல் வசனம்** : ''முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளை செவ்வைப்படுத்துங்கள்'' – எபிரேயர் 12:13.

ஓ! நம்முடைய மிகப்பெரிய எதிரியான சாத்தானை எதிர்க்க எப்புறமும் இருக்கிற கர்த்தருடைய பிள்ளைகள் விழிப்புடன் இருக்க அழைப்புவிடுக்கும் ஒரு எக்காள சத்தம் இது! சாத்தான் என்ற வார்த்தையில் பிரதான எதிரியின் எல்லாத் தந்திரங்களையும் நாம் உள்ளடக்கலாம். அவன் சிலுவைப்போர்வீரர்களை வஞ்சிப்பதற்கும் அவர்களை சிக்கவைப்பதற்கும் பதுங்கிக் காத்துக்கொண்டிருக்கிறான். தேவனுக்கும், பாவத்தின் அழிவுக்குள்ளான, கீழான மனப்பாங்குக்கு எதிராக, மனிதனின் பாதுகாப்பிற்காக தேவன் உருவாக்கியுள்ள, ஞானமான மற்றும் கிருபை நிறைந்த ஏற்பாடுகள் மற்றும் பிரமாணங்கள் எல்லாவற்றிற்கும் எதிரியாக இருப்பதில், உண்மையாகவே அவன் முழு உலகத்திற்கும் எதிரியாக இருக்கிறான்.

பல்வேறு வழிகளில் நமக்கு வந்து சேர்ந்த தகவல்களிலிருந்து, தீய ஒழுக்கம் மற்றும் சிற்றின்ப நாட்டத்தின் மாபெரும்அலை, நாகரீகமான இந்த உலகம் முழுவதிலும் கடந்துசெல்கிறது என்று நம்பக்கூடிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். போரும் இதனால் உருவான பல்வேறு புதிய நிலைமைகளும், இந்தத் தீமையான நிலைமைகளுக்குக் காரணமாய் உள்ளது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதுவன்றி வேறு காரணம் இருக்கமுடியாது. ஆனால் இன்னும் கூடுதலாக, மனுக்குலத்தை அதிலும் குறிப்பாக இந்தமனுக்குலத்தில் யார் கர்த்தரையும், அவருடைய ஜனங்களாக இருக்க அவர் ஏற்படுத்திய நீதியின் ஒழுங்குமுறைகளையும் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்களைத் தாக்குவதற்கு, சிற்றின்பத்தையும், தீய ஒழுக்கங்க ளையும் சிறந்த வழிமுறையாக பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, நம் பிரதான எதிராளி பயன்படுத்திவருகிறான்.

இஸ்ரயேலர்களுக்கு எதிராக தெய்வீகத்தீர்ப்பு கடந்து வரத்தக்கதாக, மேற்கூறப்பட்ட வழிமுறையை பிலேயாமும், பாலாக்கும் இஸ்ரயேலுக்கு எதிராய் திட்டம்தீட்டி, பெரும்வெற்றி கண்டார்கள் என்பதை நிழலான இஸ்ரயேலர்களுடைய சரித்திரத்திற்குப் பரீட்சயமான வேத மாணவர்கள் நினைவுகூருவார்கள். இதை பரிசுத்த பவுல்; முதலில் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட நம்முடைய மனுக்குலம், பெரியஅளவில் இவ்விதத்திலேயே அழிவுக்குள்ளாக விழுந்தது என்று கூறுகிறார். ''அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணராகிறார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியக்காரராகினர்... அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனை அறியும் அறிவை பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால் தகாதவைகளைச் செய்யும்படி தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும்,வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவ பகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்து பிணைக்கிறவர்களுமாய், பெற்றோருக்கு கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள்'' – ரோமர்1:21–31.

நம் மனுக்குலம், அதன் தற்போதைய கீழ்த்தரமான நிலைமைக்குள் எவ்வாறு சென்றது என்று யாரேனும் ஆச்சரியப்படுவாரேயானால், அவர் மேற்சொல்லப்பட்ட அப்போஸ்தலரின் வார்த்தைகளில் முழு விளக்கத்தை காணலாம். மேலும் தற்போது 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாய் சுவிசேஷம் பரவியபிறகு.... அதாவது, வேதாகமம் ஒவ்வொரு மொழியிலும் அச்சடிக்கப்பட்டபிறகு, கல்வி எல்லோருக்கும் பொதுவானதாகி, அதிலும் குறிப்பாக அனைவரும் வேதத்தை படிக்கஇயலக்கூடிய நடைமுறை இருக்கும்போது, ஒவ்வொரு பாடத்தின் மீதான அறிவு மிகப் பெருமளவில் அதிகரித்திருக்கும்போது, நம்முடைய எதிராளியின் ஆரம்பக்கால தந்திர உக்திகள் மறுபடியும் பரவலாக நடப்பிலிருப்பதைக் காண்பது திகைப்படையச் செய்யவில்லையா? கற்றறிந்தவர்கள் தங்களை ஞானியென்று மறுபடியும் சொல்லிக்கொண்டு, பரத்திலிருந்து வருகின்ற ஞானத்தை முட்டாள்தனமாக மறுக்கின்றனர்; ஒழுக்கக்கேடானது மறுபடியும் கட்டுக்கடங்காது வளர்ந்துவருகிறது: கோபம், குரோதம், வெறுப்பு, சண்டை, புறங்கூறுதல், அவதூறுபேசுதல், போர்கள் மற்றும் கொலைகள் பரவலாக நடப்பிலிருக்கிறது. சிலர் எதிர்பார்த்ததைப்போல, நாகரிகமும் பண்பாடும் இரட்சிப்பை அர்த்தப்படுத்தாது என்ற பாடத்தை மனுக்குலம் கற்றுக்கொள்ளும்படி தேவன் விட்டுவிட்டதாகத் தோன்றுகிறது.

மனுக்குலம் பறவைகளைப்போலவும், மாபெரும் எதிராளி அவைகளை வலையில் சிக்கவைப்பதற்கும் கொல்லுவதற்கும் தேடுகிற வேடனாகவும் வேதாகமம் சுட்டிக் காண்பிக்கிறது. ஆனால் பரிசுத்தவான்கள் குறிப்பாக வேடனைக் கவரும் விசேஷித்த அடையாளங்களையுடைய பறவைகளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களை வீழ்ச்சியடையச்செய்யும் கடுமையான உணர்வில், அவன் தன்னுடைய சூழ்ச்சிகளையும், கண்ணிகளையும் இவைகளுக்கெதிராக பயன்படுத்துகிறான்.

**கிருபையின் ஆசீர்வாதமான வழிமுறைகள்**

தேவனுடைய ஏற்பாட்டின்படி, சில வருடங்களுக்கு முன், "கர்த்தருக்குப் பொருத்தனை செய்தல்" என்ற தலைப்பில் ஒரு தொகுப்பை வெளியிட வழிநடத்தப்பட்டோம். இது அவரது பிள்ளைகளுக்குப் பெரும் நன்மையைச் செய்திருக்கிறது என்பதால், அவர்களிடத்தில் இதை ஆர்வத்துடன் பரிந்துரைக்கிறோம். ஆனால் அதற்கென்று இந்த ஒரு பொருத்தனையோ அல்லது வேறு ஏதாகிலும் ஒரு பொருத்தனையோ, கர்த்தருடைய ஜனங்களிலுள்ள ஒவ்வொருவனும், தான் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும், மற்றும் பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படுவதற்கும் முன்னதாக எடுத்துக்கொண்டதான சுயத்தை பலிசெலுத்துதல் எனும் பொருத்தனையைப் பார்க்கிலும், பெரியதாகவோ அல்லது அதன் நோக்கத்தில் பரந்துவிரிந்ததாகவோ இருக்கின்றது என்பதாக இல்லை. ஆனால் கர்த்தருடைய பரிசுத்தவான்களுக்கு இந்த பொருத்தனையானது, தங்கள் குறுகலான வழியில் நடக்கும்போது நேரிடும் குறிப்பிட்ட ஆபத்துக்களை அவர்களின் தனிப்பட்ட கவனத்திற்குக் கொண்டுவந்ததோடு, கர்த்தருடைய தயவில் அவர்கள் தொடர்ந்து நிலைத்திருப்பது சார்ந்த ஆலோசனையை வழங்குவதில் உதவுவதாக நிரூபித்திருக்கிறது. இந்த பொருத்தனையை பண்ணியுள்ள ஜனங்களோடுகூட ஏறக்குறைய 20,000க்கு மேற்பட்ட தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் சேரவிரும்புவதாக நமக்கு எழுதியிருக்கின்றனர். இந்த பொருத்தனையின் பல்வேறுஅம்சங்களை விசுவாசத்துடன் உற்றுநோக்க பெருமுயற்சி செய்ததின்மூலம் தங்களுக்கு என்ன ஆசீர்வாதங்கள் கிடைத்திருக்கிறது என்பதை இவர்களில் அநேகர் சொல்லக் கேட்டிருக்கிறோம். அதாவது தங்கள் பாதங்கள் தடுமாற்றத்திலிருந்து எவ்வாறு காக்கப்பட்டிருக்கிறது; கர்த்தருடனான தங்கள் ஐக்கியம் சார்ந்தவற்றில் எவ்வித உதவிகள் பெற்றிருக்கின்றனர்; இந்த பொருத்தனையை எடுத்த மற்ற அனைவரையும் கிருபாசனத்தின்முன்பாக அனுதினமும் நினைவுக்குக் கொண்டுவரும்போது, எந்தளவு ஆவியில் புத்துணர்வு பெற்றிருக்கின்றனர்; அறுவடைவேலையையும், அதிலுள்ள தங்கள் சிலாக்கியங்களையும் அனுதினமும் நினைவில் கொள்ளும்போது, எந்தளவிற்கு ஆசீர்வதிக்கப் – பட்டிருக்கின்றனர்; ஆவியுலகக் கோட்பாடுகள் மற்றும் மறைபொருள் ஆய்வு மற்றும் எதிர்பாலினருடனான தங்களது உறவுமுறை தொடர்பான தீர்மானங்களினால் எப்படி தாங்கள் மிகவும் முன்னெச்சரிக்கையுடையவர்களாய் உள்ளனர் போன்ற ஆசீர்வாதங்களைச் சொல்லக்கேட்டிருக்கின்றோம்.

இப்பொழுது காவற்கோபுரத்தின் வாசகர்களாய் இருக்கும் அநேகர், இந்தப் பொருத்தனை வெளியிடப்பட்டிருந்த சமயத்தில் காணப்படவில்லை என்ற சிந்தையில், நாம் இதை மீண்டும் அச்சிடுகின்றோம்.

**பிதாவாகிய தேவனிடத்தில் ஒரு பொருத்தனை**

1. பரலோகத்தில் இருக்கும் எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக....! உம்முடைய பிரமாணம் என் இருதயத்தை மென்மேலும் ஆளக்கடவதாக! உம்முடைய சித்தம் அழிவுக்குரிய என் மாம்சத்தில் நிறைவேற்றப்படுவதாக..! தேவையானபொழுதெல்லாம் எனக்கு உதவும்படியாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உம்முடைய கிருபையைச் சார்ந்து, இந்தப் பொருத்தனையை எங்கள் ஆண்டவரும் கிறிஸ்துவுமாகிய இயேசுவின்மூலம் ஏறெடுக்கிறேன்.

2. அறுவடைவேலையின் பொதுவான அக்கறையால் தூண்டப்பட்டு, அதில் குறிப்பாக என்னுடைய தனிப்பட்டசிறப்புரிமையில் மகிழ்வுற்று, என் பங்கையும், மற்றும் எல்லா இடங்களிலும் உள்ள பிரியமான உடன் வேலையாட்களின் பங்கையும் நினைவுகூர்ந்து, அனுதினமும் பரலோக கிருபாசனத்தை நாடுவேன்.

3. நான் இன்னும் அதிக கவனமாகப் பொருத்தனை செய்வது என்னவென்றால், உமக்கும், உமக்குப் பிரியமான மந்தைக்கும் சிறப்பான ஊழியம் செய்ய திராணியுள்ளவனாகும் நோக்குடன், என்னுடைய சிந்தனைகளையும், வார்த்தைகளையும், கிரியைகளையும் கூடுமானவரையில் ஆழ்ந்த பரிசோதனை செய்வேன்.

4. மேலும் நான் உம்மிடம் வாக்களிப்பது என்னவெனில், இரண்டு எஜமான்கள் இருப்பதை நினைவுகூர்ந்து, ஆவியுலகக் கோட்பாடுகள் மற்றும் மறைபொருள் ஆய்வுகள் ஆகியவற்றிற்குத் தொடர்புடையவைகளை எதிர்ப்பதற்கு விழித்திருந்து, இவைகளெல்லாம் எதிராளியானவனுடைய கண்ணிகள் என்று உணர்ந்து, எச்சரிக்கையுடன் எல்லா நியாயமான வழிகளிலும் எதிர்ப்பேன்.

5. மேலும் நான் பொருத்தனை செய்வது என்னவெனில், தேவனுடைய ஜனமாகிய சபையின் முன்னிலையில் எதிர்பாலினரோடு, எல்லா நேரத்திலும் எல்லா இடங்களிலும் எப்படி நடந்துகொள்கிறேனோ, அப்படியே தனிமையிலும் நடந்துகொள்வேன்.

6. கூடுமானவரையில் அறையின் கதவுகள் திறந்திருக்காத பட்சத்தில், எதிர்பாலினரோடு தனிமையில் இருப்பதைத் தவிர்ப்பேன்.

7. இவர்கள் மாத்திரம் விதிவிலக்கு.

சகோதரர்களாக இருந்தால் : மனைவி, மகள், தாய் மற்றும்

உடன்பிறந்த சகோதரிகளைத்தவிர

சகோதரிகளாக இருந்தால் : கணவன், மகன், தந்தை மற்றும் உடன்பிறந்த சகோதரர்களைத் தவிர.

**ஓர் எச்சரிப்பின் வார்த்தை**

நாம் சிலரிடமிருந்து கேள்விப்பட்டிருப்பது என்னவென்றால், அவர்கள் இந்தப் பொருத்தனைகளைக் கவனத்துடன் கைக்கொள்கையில், மாபெரும் ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர். இதில் அவர்கள் கவனமின்றி காணப்படுகையில் தங்கள் ஆசீர்வாதங்களை இழக்கத் துவங்கவும், தடுமாறி பாவத்தில் விழவும்செய்கின்றனர் என்பதாகும். அன்புக்குரிய சகோதரர்களே, நாம் மாம்சத்தில் இருக்கும்வரை அபாயத்துக்குட்பட்டவர்களாக இருக்கிறோம். இதனால், கர்த்தரின் பட்சத்திலும் நீதியின் பட்சத்திலும் இருந்து நம்முடைய மீட்பரின் கொடியின்கீழ் புதுசிருஷ்டிகளாக சேர்ந்திட்ட நாம் செய்ய இயலும் எல்லாவற்றையும் செய்யவேண்டும்; உலகம், மாம்சம் மற்றும் எதிராளிக்கு எதிரான போராட்டத்தில் நம் சொந்த நிலையினை தக்கவைத்துக்கொள்வதற்காகவும், நாம் சேர்ந்துள்ள படையிலுள்ள மற்றவர்களுக்கு உதவிசெய்வதற்காகவும் நம்மால் கூடுமான யாவற்றையும் செய்யவேண்டும்.

இந்தக் கட்டுரையின் தலைப்பிலுள்ள வார்த்தைகளை(உங்கள் பாதங்களுக்கான செவ்வையான வழிகள்) எந்தவொரு சிலுவைவீரனும் மறந்துவிடக்கூடாது. பலமுள்ளவர்கள் இதை ஞாபகத்தில் வைத்திருப்பது அவசியத்தேவையாய் உள்ளது. மற்றும் நிச்சயமாய்ப் பலவீனமானவர்களும் இதற்குக் கீழ்ப்படிவது அவசியமாய் உள்ளது. நாம் அனைவருமே முடமானவர்கள். கர்த்தருடைய அடிச்சுவடுகளில் ஒருவராலும் நேர்மையாகவும், பூரணமாகவும் நடக்கமுடியாது. நம்மால் முடிந்தது நொண்டி நடப்பதேயாகும். எனவே நம்முடைய பலவீனமான மாம்சத்தின் காரணத்தினால், நமக்கு விசேஷ அழுத்தம் கொடுத்துவருகிற சோதனைகளையும் தீய கவர்ச்சிகளையும் நம்மால் இயன்றவரை தவிர்ப்பது எவ்வளவு அவசியமாய் இருக்கிறதல்லவா!. தற்கால சோதனைகள் மற்றும் கஷ்டங்களைக் கடந்து போகும்போது, கர்த்தருடைய கரத்தைப் பலமாகப் பிடித்துக்கொண்டு, அவரோடு நெருங்கி நடக்க தேடவேண்டுமல்லவா.

இப்படிப்பட்ட பயிற்சியானது பெலவீனத்தையும், சார்ந்து இருப்பதையும் குறிக்கிறது என்று யாரேனும் கருத்துத் தெரிவிக்கின்றீர்களா ? நிச்சயமாகவே இதைத்தான் குறிக்கிறது. நிச்சயமாக, யாரொருவர் தன்னுடைய பலவீனத்தையும் கர்த்தர்மேல் சார்ந்திருப்பதையும் அறியவில்லையோ, அவர் தன்னுடைய தொடக்க நிலையான பாடத்தைக் கற்றிருக்கவில்லை! நம்மால் இயன்றவரை தவறான செயல்களைச் செய்யத்தூண்டும் தூண்டுதல்களைத் தவிர்க்கும்பொருட்டு, முறைப்படி நமது ஜீவியங்களை ஒழுங்குபடுத்துவதற்கு வெட்கப்படாமல் இருப்போமாக. தேவனுடைய வார்த்தை இந்த ஞானமான வழிமுறையையே புத்திமதியாகக் கூறுகிறது. பெருமை, சுயநம்பிக்கை, மற்றும் தன்மீது நம்பிக்கை வைத்திருக்க விரும்புவது – போன்ற ஆவியை உடையவர்கள், சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவர்களுக்கு, தன் முகத்தைக் காண்பிக்கின்ற தேவனோடு, நெருங்கிய ஐக்கியத்தில் இருக்கமாட்டார்கள் என்று சான்று தருகிறது.

தற்போது, கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள்மீதும், உலகத்தின்மீதும் விசேஷித்த சோதனைகள் இருக்குமானால், வருகிற நாட்களிலும், வருடங்களிலும் இவைகள் கடுமையாக அதிகரிக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம். ஆகவே கர்த்தருடைய பின்னடியார்கள் தைரியமுள்ளவர்களாக, பலமுள்ளவர்களாக, சரியானவற்றை தீர்மானிக்கிறவர்களாக, அதிலும் குறிப்பாக சுயத்தைக் கட்டுப்படுத்துகின்ற எல்லாக் காரியங்களிலும் இருக்கவேண்டியது அவசியமல்லவா! “பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை(சொந்த சிந்தையை) அடக்குகிறவன் உத்தமன் என்பது தெய்வீக ஏவுதலின் அறிவிப்பாக உள்ளது. நம்முடைய சொந்தக்காரியங்களில் மாத்திரமல்ல, கூடுதலாக நாம் எல்லோரது நலனுக்காக செய்யவேண்டியவைகளில் நம்முடைய வார்த்தைகளையும், சிந்தனைகளையும், செயல்களையும் சரியாக பாதுகாத்து, தெய்வீகக் கண்ணோட்டத்திலிருந்து உத்தமனாக– அதாவது கர்த்தரை மகிழ்விக்கிறவர்களாக இருக்க நாடுவோம். இவ்வாறு நாம் அதிகதிகமாக பிரகாசமுள்ளவர்களாகவும், ஒளிவீசுபவர்களாகவும் இருந்து, அந்தகாரத்திலிருந்து நம்மை தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிப்போமாக!

– 1பேதுரு 2:9.

---

R 5977

# கிறிஸ்துவுக்குள் நாம் எப்படி வளர்ச்சியடைவது?

## HOW WE MAY GROW UP INTO CHRIST

**திறவுகோல் வசனம்** : "அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக..." – எபேசியர் 4:15.

தேவனை அறியும்படிக்குத் தேடுகிற எவரும், எந்தளவு தேடுகிறார்களோ, அதே சரிவிகிதஅளவுக்கு அவரது நிஜமான குணாதிசயத்தைக் காண வழிநடத்தப்படுவார்கள். அவரில் பற்றுறுதியையும் அடைவார்கள். அப்படிப்பட்டவர்கள் , கர்த்தரிடத்தில் முழு அர்ப்பணிப்பு செய்யும் நிலைப்பாட்டிற்கு வந்திருந்து, பரிசுத்தஆவியினால் ஜெனிப்பிக்கப்படுதலைப் பெற்று, கிறிஸ்துஇயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்–பட்டவர்களாகவும், சபை வகுப்பாராகவும், அவருக்கென்று பிரித்தெடுக்கப்பட்டவர்களாக – அதாவது, பரிசுத்த ஆவியினால் பிரித்தெடுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இவர்களைக்குறித்து அப்போஸ்தலர் பவுல் ; "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல்..." என்று கூறுகிறார். மாம்சத்துக்குரியதும், விழுந்துபோன நிலையிலுள்ளதுமான அடிமைத்தனமாய் அடிபணியவைக்கும் ஒவ்வொரு தாக்குதலின் பயத்தையும் விரட்டியடிக்கவேண்டும். இந்தச் சுபாவ மனப்பான்மையைப் புதியசிந்தை வெற்றிகொண்டு, கர்த்தரிடத்திலான நம்பிக்கையை வளர்க்க முயலவேண்டும்.

எந்த மனிதனும் நம் பூமிக்குரிய ஜீவனை எடுப்பதைக்காட்டிலும் அதிகமாக ஒன்றும் செய்ய முடியாது. எந்த மனிதனாலும் நம் எதிர்கால ஜீவனை எடுத்துப்போடமுடியாது. "உங்கள் ஆத்துமாவைக்கொல்ல வல்லவர்களாயிராமல், உங்கள் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" – மத்10:28. ஆகவே ஒருவனும் தனக்கு தீங்கிழைக்கமுடியாது என்று கண்டு, நன்மைக்கேதுவல்லாத எதுவாயினும், தனக்கு வர தேவன் அனுமதிக்கமாட்டார் என்று அறிந்திருந்து, தேவனுடைய பிள்ளை மிகவும்திடமனதாய் இருக்கவேண்டும். வெளிச்சம் பெற்றிருக்கிற தேவனுடைய பிள்ளைக்கு நித்திய ஆக்கினைபற்றின பயமிராது, திகில் இராது. ஒரு கணவன் மனைவியினிடத்தில் அல்லது மனைவி கணவனிடத்தில் கொண்டிருக்கவேண்டிய முறையான பயம் அவனிடத்தில் இன்னும் காணப்படவே செய்யும். அதாவது தன் துணையாளருக்கு அதிருப்தி உண்டாக்கிவிடுவோமோ அல்லது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றாமல் போய்விடுவோமோ மற்றும் இதன் காரணமாக தன் துணையாளரின் நம்பிக்கையையும், மதிப்பையும் இழந்துவிடுவோமோ என்ற பயம் காணப்படும்.

நாம் இப்படிப்பட்ட பயத்தை எல்லா சகோதரர் விஷயத்திலும்கொண்டிருக்கவேண்டும். அவர் நமக்கு தீங்கு இழைப்பார் என்றோ அல்லது வேதனைக்கு உட்படுத்துவார் என்றோ அல்லது எவ்வகையிலாவது வன்முறைக்குட்படுத்துவார் என்ற பயத்தின் காரணமாக இல்லாமல், மாறாக அவருடனான ஐக்கியத்தை இழந்துவிடுவோமோ என்ற பயத்தில், நம் தேவனிடத்தில் ஒரு மகனுக்குரிய பயத்தை உடையோராய் இருக்கவேண்டும். ஆகவே, அடிமைத்தனமான பயத்தை நாம் வைத்திருந்தோமானால் அவ்வகைப்பட்ட பயம் தேவனிடமிருந்து வரவில்லை. அப்படிப்பட்ட பயம் கண்ணியை வருவிக்கும். ஆனால் தேவனுடைய உண்மை அறிவினால் தூண்டப்பட்ட அன்போ, அவரது ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்ட அன்பு, எந்தளவுக்கு நம்மில் வளர்ந்து பெருகுகின்றதோ அந்தளவுக்கு நம்மை மனுஷனுக்குப் பயப்படுகிற பயத்திலிருந்து விடுதலையாக்குகிறது.

தேவன் நமக்கு அன்பின் ஆவியையும், தெளிந்தபுத்தியுள்ள ஆவியையும், வல்லமையுள்ள ஆவியையும் கொடுத்திருக்கிறார். தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு அனைத்தும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது என்று ஒரு கிறிஸ்தவன் அறிந்திருக்கிறான். இது அவனது வல்லமை மற்றும் பலத்துக்கான ஆதாரமாய் இருக்கின்றன. மற்றவர்களை அமிழ்த்திப் போடுவதற்கு வாய்ப்புள்ள சூழ்நிலைகளும், சந்தர்ப்பங்களும் தனக்கும் வரலாம் என்று கிறிஸ்தவன் எதிர்பார்க்கலாம். இந்த ஆவி, வல்லமையின் ஆவி மட்டுமல்ல, தயாளகுணமும் கருணையின் ஆவியுங்கொண்ட அன்பின்ஆவியாகும். இந்த ஆவியானது நன்மையையும், நீதியையும், பிறருக்கு உதவியையும் செய்வதாகும். அவ்வாறே இந்த அன்பின் ஆவி மற்றும் தெளிந்தபுத்தியும் பலமுமுள்ள ஆவியுடன் ஒரு கிறிஸ்தவன் தேவ சாயலை அதிகதிகமாக அடைகிறான். யார் வழிவிலகிச் செல்கிறார்களோ, அவர்கள்மேல் அவனுக்கு அதிகதிகமாகப் பரிவிரக்கம் காண்பிக்கத் தூண்டுதல் ஏற்படுகிறது. தேவன் தம் குமாரனை அனுப்பினதுபோல், குமாரனும் வந்து, மிகப்பெரும் விலையாக தம்மையே கொடுத்து, ஜீவனுக்கான ஆசீர்வாதத்தை எல்லோருக்கும் ஏற்படுத்தினார். ஆகவே ஆவியைப்பெற்ற அனைவரும் மற்றவர்களை ஆசீர்வதிக்க பிரயாசப்படுவார்கள்.

### தெளிந்தபுத்தியும் பலமுமுள்ள ஆவிக்கான சாட்சியங்கள்

ஆதாமின் விழுகையானது மனுக்குலத்திற்கு முழு நாசத்தை கொண்டுவந்தது. "உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் அதிலே சுகமேயில்லை"(ஏசாயா1:5,6). தெளிந்த புத்தியையோ, பலமுள்ள சரீரத்தையோ உடையோர் ஒருவருமில்லை. எல்லோரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள், நீதிமான் ஒருவனாகிலும் இல்லை"(ரோமர்3:10–12). எந்தளவுக்கு நாம் கர்த்தருடைய ஆவியைப்

பெற்றிருக்கிறோமோ மற்றும் எந்த அளவுக்கு கர்த்தருடைய ஆவி நம்மில் கிரியைசெய்து, நம்மை வளரச்செய்து, ஜீவியத்தின் நடக்கைகள் யாவற்றிலும் ஆதிக்கம்செலுத்துகின்றதோ, அந்த அளவுக்கு நாம் தெளிந்த புத்தியுள்ள ஆவியைப் பெற்றவர்களாய் இருப்போம்.

நம் சரீரங்களை எப்படிச் சிறப்பாக உபயோகிப்பது என்று இந்தத் தெளிந்தபுத்தியுள்ள ஆவி நமக்கு போதிக்கும். தெளிந்தபுத்தியில்லாத ஆவியை உடைய ஒருவன், தேவைக்கதிகமாக உண்ணக்கூடும், அல்லது சரீரம் செரிமானமாகாத உணவை அவன்உண்ணக்கூடும். நாம் எநதஅளவு தெளிந்தபுத்தியும் பலமுள்ள ஆவியை அடைந்திருக்கிறோமோ, அதே சரிவிகிதஅளவுக்கு அதன் ஆதிக்கங்கள் நம்மை இயக்கி, எதை உண்பது, எதைக்குடிப்பது என்றும், மற்றும் நாம் செய்யவேண்டிய அனைத்தையும் போதிக்கிறது. அது நமக்காக எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி, நம்வாழ்க்கையை முறைப்படுத்த உதவிசெய்கிறது. மேலும் வாழ்க்கையின் எல்லா நடவடிக்கைகளிலும் பரந்த கண்ணோட்டத்தை நமக்குக் கொடுக்கிறது. மனுக்குலத்தைத் தயாளமான கண்ணோட்டத்தில் காண நமக்குக் கற்பிக்கிறது. மனுக்குலம் சாபத்தின் பிடியிலிருக்கிறது என்பதையும், நாம் அவர்களிடத்தில் பரிவிரக்க உணர்வை பெற்றிருக்கவேண்டும் என்பதையும் நாம் புரிந்து கொள்ளச்செய்கிறது. அனைத்து விதங்களிலும் நாம் அதிக அனுகூலம் அடைந்திருக்கிறோம், ஏனெனில் தேவன் நம் புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறந்திருக்கிறார்.

தெளிந்தபுத்தியும் பலமுமுள்ள ஆவி அதிக பயனுடையவர்களாக நம்மை ஆக்குகிறது. சகோதரர்கள் என்ற முறைப்படி எப்படி ஒருவரோடொருவர் நடந்துகொள்வது என்பது பற்றி சிறப்பாக அறிந்திருக்கிறோம். நம் குழந்தைகளுடனும் மற்றும்அயலாருடனும் எப்படி நடந்துகொள்வது என்றும், இறைச்சிக் கடைக்காரரிடமும், ஐஸ்கிரீம் விற்பவரிடமும் மற்றுமுள்ள எல்லாரிடமும் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்றும் நாம் நன்குஅறிவோம். இயல்பாகவே தெளிந்தபுத்தியை உடையவர்கள் அநேகருக்குச் சத்தியம் இன்னும் சென்றடையவில்லை. ஒருவர் சத்தியத்தை அடைந்து, ஓரளவு தெளிந்தபுத்தியுடையவராவதற்குக் காலம் பிடிக்கும். ஆனால் ஒருவர் சத்தியத்தை, அதன் அன்பில் பெற்றுக்கொள்ளும்போது, அது அவரது சிந்தையில் குணப்படுத்தும் தாக்கத்தினைப் பிறப்பிக்கிறது. அவர் அதிகதிகமாக சரியாக சிந்திக்கவும், ஞானமாக செயல்படவும் துவங்குகிறார் என்பதை நாம் கவனிக்கிறோம்.

பின்பு அவர் சத்தியத்தை பிரஸ்தாபப்படுத்த ஆவல்கொள்கிறார். சத்தியம் தாழ்மையாய் அதேசமயம், பயப்படாமல் பிரசங்கிக்கப்படவேண்டும். சத்தியத்துக்கு முரண்பாடாகப் பேசுவதற்குக் கிறிஸ்தவனுக்கு அதிகாரமில்லை. அவர் சுவிசேஷத்தின் முழுநேர ஊழியக்காரனாய் இருப்பாரானால், சத்தியம் அவரிடத்தில் வந்தடையும்போது, அவரை ஊழியக்காரனாய் நியமித்த சபையார் சத்தியத்தை விரும்பாதவர்களாய் இருப்பதினால், அவர் சுதந்திரமற்றவராயிருந்து, தொடர்ந்து தவறையே போதிக்கிறார். இவ்வுலக வாழ்வுக்குரியவன் பிரசங்கமேடையில் நிற்கும்போது மனசாட்சியில் தடுமாற்றத்தை அடைவதில்லை. “அவர்கள் விரும்புகிறவற்றை நான் இந்த ஜனங்களுக்கு அளிக்கிறேன், அவர்கள் எனக்கு ஊதியம் கொடுக்கிறார்கள்” என்று அவர் கூறுவார். அவர் சத்திய ஆவியைப் பெறாததினிமித்தமாக, அவரது மனப்பன்மை அப்படியாக இருககிறது.

சத்திய ஆவியை அடைந்திருக்கிற ஒருவர் கூறுவார்; “இதற்கு முன்பு நான் பலவருடங்களாக போதித்து வந்தவைகளில் சில காரியங்கள் பாதகத்தை ஏற்படுத்துவதாக, தேவனை அவமதிப்பதாக, அவரது குணாதிசயத்தைக் குறித்து தவறான எண்ணத்தை உருவாக்குவதாக , சத்தியத்திலிருந்து ஜனங்களை ஏறக்குறைய திசைதிருப்புவதாக இருந்ததை நான் தற்போது காண்கிறேன். நான் செய்ய விரும்பியது எதுவோ அதற்கு நேரெதிராக, தவறை நான் பிரசங்கித்து வந்திருக்கிறேன். இனிமேலும் என்னால் இந்தத் தவறுகளைப் பகிர்ந்தளிக்க முடியாது. நான் இந்தப் பெயர்சபை அமைப்புக்கு ஸ்தானாபதி இல்லை. நான் தேவனுடைய ஸ்தானாபதியாக இருக்கிறேன். நான் இந்தப் பெயர்சபை அமைப்புக்கு ஊழியக்காரனல்ல, தேவனுக்கும் சத்தியத்துக்கும், ஊழியக்காரன். சத்தியத்துக்கு முரணாக இருக்கிற தவறுகளை நான் பிரசங்கித்தால், தேவனுக்கு முன்பாக நான் குற்றவாளியாவேன். இதை நான் உடனே நிறுத்தியாகவேண்டும்.

இப்படிப்பட்ட மனிதன், மனிதரிடையே கனம், தயவு, ஆதிக்கம் போன்ற நிலைகளை இழந்துவிடுவான். ஆனால் இவையனைத்தும் ஒரு பொருட்டாக எண்ணப்படக்கூடாது. இராஜ்யத்தில் ஓர் இடம் கிடைக்கவேண்டுமெனில், இவைகளனைத்தும் குப்பையும், நஷ்டமும், பயனற்றதாகவும் எண்ணப்படவேண்டும் என்று பரிசுத்த பவுல் கூறுகிறார். பின்பு மாபெரும் பரிசாகிய முத்தை நாம் ஜெயங் கொண்டிருப்போம். ஆகவே ஒரு கிறிஸ்துவனுக்கு சத்தியத்தைப் பேசுவது அத்தியாவசியமானது. புனிதமான இடத்தில் வைத்துப் பாதுகாப்பதுபோல, அதை தன் சொந்த இருதயத்தில் வைத்திருக்கவேண்டும்.சத்தியத்தை அவன் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டபிறகு, அதற்கு அவன் மதிப்பளித்து அதைப் பேசுவது – ஆசீர்வதிக்கப்பட்ட சிலாக்கியம் என்று உணரவேண்டும்.

நம் சரீரத்தில் நம் நாவு மிக வல்லமைமிக்க ஓர் அவயமாகும்.இதன் ஆதிக்கமோ மற்ற எல்லா அவயவயங்களைக் காட்டிலும் மிக முக்கிய விளைவுகளை உண்டாக்கக்கூடியது. இது நன்மைக்காகவோ அல்லது காயமேற்படுத்தும் ஆதிக்கத்தையோ உண்டுபண்ணுகிறது.

இதே நாவினால் நாம் தேவனைத் துதிக்கிறோம், மனுஷருக்கு தீங்கிழைக்கிறோம். வெளியரங்கமாகவோ அல்லது தனித்தோ சத்தியத்தைப் பேசுவதும், மனுஷர் முன்பாக கிறிஸ்துவை அறிக்கையிடுவதும் ஒரு மிகப்பெரிய சிலாக்கியம் ஆனால் கர்த்தரைப் பிரியப்படுத்தும் ஊழியனாக இருக்கவேண்டுமானால், நாம் பயமின்றி, சத்தியத்தை அன்பினால் பேசவேண்டும்.

இது தொடர்புடைய விஷயத்தில், கிறிஸ்துவ மார்க்கத்தில் நாம் நுழைந்தவுடன் இவைகளில் முதிர்ச்சியடைந்துவிடுவோம் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது என்ற உண்மையை அப்போஸ்தலர் நம் கவனத்துக்குக் கொண்டுவருகிறார்.நாம் சில காலங்கள் அந்தக் குடும்பத்தில் இருந்தபிறகு உள்ள நிலைமையைக் காட்டிலும், முதலில், குடும்பத்தில் நுழைந்தபொழுது, நம்மைக்குறித்து குறைவாகவே புத்தியறிவின்படி எதிர்பார்க்கப்பட்டது. நாம் தேவனுடைய நேச குழந்தைகளாக இருந்து, நம் மூத்த சகோதரரும், நம் மாதிரிகையும், நமது தலையுமாகிய இயேசுகிறிஸ்துவின் சாயலில் வளரவேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் எல்லாவிதத்திலும் அவருக்குள் வளர வேண்டியவர்களாகிறோம். சபைக்குத் தலை அவரே என்பதை நாம் புரிந்திருக்கவேண்டும். மகிமையில் நாம் அவரது சரீர அங்கங்களாக இருக்கவேண்டுமானால், நாம் கட்டாயம் வளர்ந்தாகவேண்டும். வருங்காலத்தில் உலகை ஆசீர்வதிக்கவிருக்கும் மகிமைநிறைந்த இராஜ்யத்தில் பங்கடைவதற்கு, நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொண்டு, தகுதிபெற்று, பரிசுத்தஆவியின் கனிகளில் நாம் முதிர்ச்சியடையவேண்டும்.

**உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் முகத்தோற்றம்**

இருளிலிருந்து அவரது ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை நாம் அறிவிக்கவேண்டும். இவ்வாறு ஸ்தானாபதிகளாக நமது பணியை செய்யவேண்டும். இந்தச் செய்தியை அன்புடனும், தைரியத்தோடும் சொல்வதினால் நாம் கிருபையிலும், அறிவிலும் வளர்பவர்களாக இருக்கவேண்டும். சத்தியத்தைப் பிரகடனப்படுத்துகிற அதேவேளையில், குணாதிசயத்தில் முன்னேறி வளர்ச்சியை அதிகரிக்கவேண்டும். ஏன் குணாதிசயத்தில் வளர்ச்சியை எட்டவேண்டும் ? ஏனெனில் இது, தேவனுக்கொப்பான சாயலுக்கு நம்மை உருவாக்குகிறது. “தேவன் அன்பாக இருக்கிறார்”. அவர் வேறு இயல்புகளையும் பெற்றிருக்கிறார். ஆனால் விசேஷித்தவிதமாக, இந்த அன்பின் இயல்பு, மிஞ்சியிருந்து, அவரது குணாதிசயத்தின் ஆளும் தன்மையாக இருக்கிறது. தேவனுடைய நீதியானது, அவரது அன்புடனும் ஞானத்துடனும் இணைந்து இயங்கி, அன்பு அங்கீகரிக்காத எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முயற்சிக்காது.

அவ்வாறு நாமும் வளரும்பொழுது, அன்பின் இயல்பு அதிகதிகமாக வெளிப்படவேண்டும். அன்பினால் சத்தியம் பேசப்படவேண்டும். நாம் நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் சீக்கிரமாய் அடையவேண்டியவைகளில் இதுவும் ஒன்று. நாம் நமது நாவுகளுக்குக் கடிவாளம்போட்டு அடக்கவேண்டும். நம் வார்த்தைகள் அன்பும், இரக்கமும், தயாளமும் நிறைந்ததாய் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அன்பில் சத்தியத்தைப் பேசும்போது, மற்றவர்களுக்காக அதிகமாக காரியத்தை நிறைவேற்றுவதோடு, நமது சொந்த சிந்தைகளில், பாடம் அதிக ஆழமாய்ப் பதியும். “முகத்தோற்றம் உணர்வுகளை வெளிப்படுத்தும்” என்று நன்கு கூறப்பட்டுள்ளது. யாரெல்லாம் தேவனுடைய இந்தக் காரியங்களை அன்பில் பேசுகிறார்களோ, வியந்து பாராட்டுகிறார்களோ, அவர்கள் தன் சொந்த இருதயத்திலும் சிந்தையிலும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வர். மற்றவர்களுக்கு உதவுவதன்மூலம் ஒருவர் தனக்குத்தானே உதவிக்கொள்கிறார். “பிறருக்கு நீர் பாய்ச்சுகிறவர், தனக்குத்தானே நீர் பாய்ச்சிக்கொள்கிறார்”.

**சுபாவ குணங்கள் கட்டுப்படுத்தப்படவேண்டும்**

பலமான குணங்களையுடைய சிலர் கிறிஸ்துவுக்குள் வரும்போது, இவ்விஷயத்தில் சிரமப்படுவதை நாம் காண்கிறோம். இயற்கையாகவே சிலரது குணாதிசயங்கள் சண்டையிடும் மனப்பான்மையற்றதாக காணப்படுகின்றன. இவர்கள் தங்கள் ஸ்தானாபதிக்குரிய காரியங்களில், மற்றவர்களை கட்டாயப்படுத்தமாட்டார்கள். அவர்களது செய்தி நன்றாய் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று தோன்றினால்; “இதை அவர்கள் விரும்பவில்லை, ஆகவே அந்த பாடத்தைக்குறித்து நான் சொற்பொழிவாற்றமாட்டேன்” என்று அவர்கள் உணர்ந்துகொள்வர். ஆனால் சண்டையிடும் மனப்பான்மையுடையோர், சத்தியத்தைப் பிரசங்கிக்கும்போது, தங்களது குணஇயல்புகளைப் பலவந்தமாக வெளிப்படுத்துவர். இப்படிப்பட்டவர்கள் மிகவும் பலவந்தம் பண்ணுகிறவர்களாய் இருப்பர்,மற்றவர்களைக் கட்டாயப் படுத்தும் விதத்தில் இவர்கள் காரியங்களை முன்வைப்பர்.

ஆனால் தேவனுக்கு அர்ப்பணித்தல் என்பது, தற்போது ஒரு நிர்ப்பந்தமான விஷயமல்ல என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அது ஓர் அழைப்பு. கேட்கும் செவியுடையோரிடத்தில் மட்டுமே தற்போது தேடுதலின் பணி நடைபெறுகிறது. அவர்களுக்கு மட்டுமே ஆலோசனையின் வார்த்தை தேவையாயுள்ளது. யாராகிலும் செய்தியைப் பிரசங்கிக்க அதிக பலவந்தத்தைப் பிரயோகித்தார்களானால், அது மாபெரும் இராஜாவுக்கு நன்கு ஊழியம் செய்ததாகாது, ஆகவே அவரை அதிகம் பிரியப்படுத்தாது.

சிலரிடத்தில் பெரிதும் பாராட்டு விரும்பும் தன்மை காணப்படும்.பெருமையையும் அவர்கள் பெற்றிருந்து, தங்கள் பேசுகின்ற மொழியில் இவற்றை வெளிப்படுத்த விரும்புவர், அல்லது தங்கள் திறமையைப் பயன்படுத்தி, ஆவியின் பட்டயத்தைக் கையாளுவார்கள். மற்றவர்களைக் கிளர்ச்சியூட்டி; “எந்தளவு இவர் அறிந்திருக்கிறார் பாருங்கள், வேதாகமத்திலுள்ள புதையல்களைத் தோண்டி

எடுப்பதில் வல்லவர்'' என்று இவரைப்பற்றி கூறவேண்டும் என்ற நோக்கில், இவர்கள் செய்தியைப் பிரசங்கிப்பர். இது அநேகருக்குச் சோதனையாகக் காணப்படுகிறது. பிறர் தங்களைத்தாங்களே பிரபலமாக்கிக்கொள்வதைப்போல, இவர்களும் பொதுஜனங்கள் மத்தியில் சுயவிளம்பரம் பண்ணுகிறவர்களாக இருக்கின்றனர். ஒருவர், ஸ்தானாபதியாக பொதுஇடங்களில் முன்செல்வதற்கும், சத்தியத்தைப் பேசுவதற்கும் உந்தி தள்ளப்படவேண்டிய நிலையில் காணப்படுகின்றார். மற்றவரோ இதுதொடர்புடைய விஷயத்தில், தனக்கு கொஞ்சம் கடிவாளமிடவேண்டும். பிந்தையவருக்கு சத்தியத்தினிடத்திலான அன்பிலும், சகோதரரிடத்திலான அன்பிலும், தாழ்மையிலும் சத்தியத்தைப் பேசுவதற்குக் கற்றுக்கொள்வதே ஒரேவழியாக காணப்படுகின்றது. இது தேவ திட்டமாயுள்ளது, நாம் தற்புகழ்ச்சியடைய நம்மிடத்தில் ஒன்றுமில்லை. நாம் எப்பொழுதும் அவரது திட்டத்தை சாந்தத்திலும், தயாளகுணத்திலும், சகோதர சிநேகத்திலும், அன்பிலும் பிரசங்கிக்கவேண்டும்.

“அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படிக்கு ஒருவரையொருவர் கவனித்து...'' என்று அப்போஸ்தலர் பவுல் வலியுறுத்துகிறார். இங்கு, ''ஏவப்படும்படிக்கு...(to provoke )'' என்ற வார்த்தையின் பொருள், ''ஒருவரைச் செயல்பட ஊக்கப்படுத்துதல்'' என்பதாகும். அன்பு எளிதில் சினங்கொள்ளாது, அது நீடிய பொறுமையுள்ளது. தெளிவாய்ச் சொல்லவேண்டுமெனில், சினங்கொள்ள வழிநடத்துவது அன்பின் இயல்பே அல்ல. ஆயினும் நீதியான கோபம் அன்புடன் ஒத்துப்போக முடியாததல்ல. ''தேவன் அன்பாயிருக்கிறார்'', நாம் பெற்றிருக்கிற அன்பிற்கு தேவன் மிக உன்னதமான பிரதிநிதியாக இருக்கிறார். தேவன் தீயோரோடு ஒவ்வொரு நாளும் கோபத்திலுள்ளதாக வேதாகமம் நமக்கு நிச்சயப்படுத்துகிறது. அவரது கோபம் பாவத்துக்கெதிரான நீதியான கோபமாகும்.

உன்னதமான மாதிரியாக தேவனை நோக்கிப்பார்க்கும்போது, சிருஷ்டிகளிடத்திலான அவரது அன்பு ஆரம்பத்தில் வெளிப்பட்டது. எவ்வாறு தேவதூதர்களுக்கு அவரது அன்பு எல்லா ஆசீர்வாதங்களோடும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததோ, அதுபோல ஏதேன் தோட்டத்தில் மனுக்குலத்தின்பேரிலான அன்பு, அதன் எல்லா ஆசீர்வாதங்களோடும், பரிபூரண ஜீவனோடும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பாவம் நுழைந்தபோது, அன்பு பின்னோக்கி நகர்ந்தது, வேறு வார்த்தையில் கூறினால், தேவனுடைய விசேஷித்த இயல்பான நீதி, அப்பொழுது வெளிப்பட்டது. ஆயினும் மனுக்குலத்தின் நன்மைக்காக, பாவத்திற்கான தண்டனையாக இது கொடுக்கப்படவேண்டியதாயிற்று. மனிதன் பாவம்செய்திருந்து, தேவனுக்கு எதிரியாக மாறினபோதிலும், அன்பு சினத்துக்கு ஏவினபோதிலும், தேவஅன்பு தொடர்ந்தது. தீர்க்கதரிசி மூலமாக கர்த்தர் கூறுகிறார்; ''அவர்கள் எனக்குக் கோபமுண்டாக்கினது என்ன என்கிறார்'' – எரேமியா8:19. அநேக வசனங்கள் தேவனுடைய கோபத்தைப்பற்றி பேசுகின்றன. பாவத்துக்கெதிரான தேவனுடைய கோபமாகவே அவை உள்ளன. இந்தக் கோபம் உலகத்தின்மேல் 6000 வருடங்களாக நீடித்திருக்கின்றன. இதனால், தேவனுடைய அன்புக்கு இடையூறு ஏற்பட்டிருக்கவில்லை. ஆகவே அன்பு சினங்கொள்ளத் தூண்டும்.

“அன்பு எளிதில் சினமடையாது'' . தேவனை சினங்கொள்ளத் தூண்டுவதற்கு, ஆதி தகப்பனாகிய ஆதாமின் செயல்பாட்டில், உள்நோக்கத்தோடுகூடிய கீழ்ப்படியாமை தேவைப்பட்டது. தாயாகிய ஏவாள் வஞ்சிக்கப்பட்டதினால் உலகத்திற்கு தீர்ப்பு வந்துவிடவில்லை. ஆதி தகப்பனாகிய ஆதாம் பாவம்செய்ததினாலேயே மரணத்தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்டு, தேவகோபம் உலகத்தின்மேல் வந்தது. இந்தப் பாவத்தை முழு அறிவுடன் அவர்செய்தார். இந்தப் பாவம்நிறைந்த 6000 வருடங்களின்போது, தேவஅன்பு தற்காலிகமாக செயலற்ற நிலையிலிருந்து, அவரது அன்பை வெளிப்படுத்துவதை நிறுத்திவைத்தது.

ஆனால் இந்த நீண்டகாலங்களில் தேவனுடைய குணாதிசயம் மாறவில்லை. இருண்ட யுகங்களில் நிலவின பேய்த்தனமான நிலைமைகளுக்கு தேவன் காரணராக இருக்கவில்லை. பாவத்துக்கு ஒருபோதும் அன்பு அனுமதியளிக்காது. ''பாவத்தின் சம்பளம் மரணம்''. மரணத்தோடு கடந்துவரும் ஒவ்வொன்றும் தீர்ப்பின் தண்டனையின் ஒருபகுதியாகவே இருக்கிறது. ஆனால் இந்த நிலைமைகளை மனிதனது கடைமுடிவான நன்மைக்கே தேவன் அனுமதித்திருக்கிறார். இந்த தேவஅன்பு நம் சந்ததிக்கு வெளிப்படுத்த தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட கட்டளையிட்டிருந்தது.

ஏற்றவேளையில் தேவன் தம் குமாரனை மனிதரது மீட்பராக அனுப்பினார். அவரும் இப்பூமிக்கு வந்து, மனிதரது பாவத்திற்காக தம் ஜீவனையே மனப்பூர்வமான பலியாகத் தந்தார். ஏற்றவேளையில் சபையைக் கூட்டிச் சேர்க்கும்படிக்கு அழைப்பு சென்றுசேர்ந்தது. இந்த சுவிசேஷயுகத்தின்போது, இந்த சபை கூட்டிச்சேர்க்கப்படவிருக்கிறது. ஏற்றவேளையில் இராஜ்யத்தின் மகிமைக்குள் சபையானது உயர்த்தப்படவிருக்கிறது. ஏற்றவேளையில், அந்த இராஜ்யம், தேவனுடைய நிபந்தனைகளை மனதார ஏற்றுக்கொள்ளும் மனுக்குலத்தார் எல்லோரையும், பாவத்திலிருந்தும், இழிவான நிலையிலிருந்தும் தூக்கி எடுத்து ஜீவனுக்கு உயர்த்தும்.

**அன்பை விதைப்பது விசேஷமான தேவை**

நமது மிகப்பெரிய வருங்காலப்பணிக்கு நாம் மெய்யாகவே பொருத்தமுடையவர்களாவதற்கு, நாம் ஊக்கத்துடன் விழித்திருப்பதும், ஜெபிப்பதும் எவ்வளவு அத்தியாவசியமானது! பாவத்தின் விழுகையும், சுயநலமும் வலுவில் விஞ்சியிருக்கிறபடியால், போதுமான அளவு நம்முள் அன்பு பலமாய் இருப்பதில்லை என்ற அபாயம் இருக்கிறது. சுயநலமும் விழுகையும், 6000 வருடங்களாக மேலோங்கி ஆதிக்கம் செலுத்துவதால், அன்பு, பரிவிரக்கம்,

சகோதரசிநேகம், நீடியபொறுமை ஆகிய குணங்களில் மனிதனை குறைவுபடச் செய்திருக்கிறது. இப்பொழுது அன்பை அடைவதைக்காட்டிலும், கோபம் கலகம் பொறாமை வெறுப்பு போன்றவைகள் மாபெரும் சுபாவ மனப்பான்மையாக மாறிவருகிறது. இதன்விளைவாக, தேவன் நம்மை அவரது குடும்பத்திற்குள் ஏற்றுக்கொள்ளவேண்டுமானால், முதலாவது நிபந்தனையாக, அன்பு தேவை என்பதை நமக்கு வலியுறுத்துகிறார். நம் இருதயங்களிலும் சிந்தைகளிலும் அன்பு வளரவேண்டும். இது நம் எண்ணங்கள், வார்த்தைகள், செயல்பாடுகளில் ஊடுருவவேண்டும்.

சபையார் அடையவேண்டிய அன்பைக்குறித்து அப்.பவுல் பேசும்போது, நாம் கர்த்தருக்குப் பிரியமுள்ளோராக வேண்டுமானால், இந்தக் கிருபையில் அபரிதமாக வளரவேண்டும் என்று உறுதிபடக்கூறுகிறார். இந்த இயல்பைச் சிறப்பாகப் பெற்றிருப்பவர்கள், எளிதில் கோபப்பட தூண்டப்படமாட்டார்கள். அன்பைக் குறைவான அளவே பெற்றிருப்பவர்கள் எளிதில் கோபப்படுவார்கள். கர்த்தர் ஏற்றுக்கொள்ளும் அன்பு, நீடிய பொறுமையின் அன்பாகும். இப்படிக் கூறுகையில், தேவனுடைய பிள்ளைகளுக்குக் கோபங்கொள்ள முறையான தருணங்களே எழாது என்று அர்த்தமல்ல. அநீதி நடப்பதை நாம் காணும்போது, நீதியாய் சினங்கொள்கிற உணர்ச்சிகள் இருக்கவேண்டும். ஏன்? அநீதி தவறாக இருக்கிறபடியால் இப்படிப்பட்ட கோபம் அவசியமே. தேவன் அநீதியின்மேல் கோபம் கொள்கிறார். ஆகவே தேவபிள்ளைகள் எந்தவடிவிலுமுள்ள அநீதியோடு இணங்கி, இரக்கம் பாராட்டாதபடி இருக்கவேண்டும்.

நீதியின் சுபாவத்தைக் கர்த்தருடைய பிள்ளைகள் வளரச்செய்யாவிடில், நீதியை புரிந்துகொண்டு பாராட்டும் மனப்பான்மையையே இழந்துவிடும் நிலைக்குச் செல்ல நேரிடும். நியாயம் எது? தவறு எது என்று அறிந்திருந்து, நீதியை விரும்பும்பொழுது, நாம் அன்பின் இயல்பை வளர்க்கிறோம். தன் சொந்த மதிப்பீட்டின்படியான நீதி முற்றிலும் நியாயமானது என்றும், பிற மனிதரது நீதி தவறானது என்றும் ஒருவரும் கூறமுடியாது. "இந்த நீதியின் தன்மையை வளர்க்கும்தேவை எனக்கு இல்லை, ஆனால்என் சகேதரனுக்கு அது அவசியம்" என்று ஒருவனாலும் கூறமுடியாது. மாறாக; நான் எதிர்த்துப்போராட வேண்டியவைகளைக் காட்டிலும், "இதோ இந்தச் சகோதரன், பெரும் சாதகமற்ற சூழ்நிலையில், போராடிக் கொண்டிருக்கலாம். ஆவியின்படி அவர் என்னுடைய சகோதரர். அவர் தவறு செய்பவராக எனக்குக் காணப்பட்டபோதிலும், இது தவறு என்று அவர் ஒருவேளை உணராதிருப்பாரென்று எண்ணி, அவர்மேல் பரிவிரக்கம் கொள்கிறேன். மறுபுறத்தில், நானும்கூட ஒருவேளை தவறாக எண்ணியிருக்கவும் வாய்ப்புண்டு." என்று ஒவ்வொருவரும் சிந்திக்கவேணடும்.

**எல்லா மனுஷன் மீதும் பரிவிரக்கம் கொள்ளுவோமாக!**

தேவன் பாவத்தோடு பரிவிரக்கம் கொள்பவரல்ல. ஆனால் பாவிகள்பேரில் அவர் பரிவிரக்கம் கொண்டதினிமித்தமாக, பாவிகளை விடுவிக்கும்படி தம் ஒரேபேறான குமாரனையே கொடுத்தார். அவ்வாறு பாவிகள் விடுவிக்கப்படும் பணிக்காக ஆயிரம் ஆண்டுகள் ஒதுக்கி வைத்திருக்கிறார். நாம் அநீதியை கவனிக்கின்றோம், கண்டிப்பாக கவனிக்கவேண்டும். ஆனால் அநீதிசெய்வோரை வன்மையாகக் கண்டிப்பதும், தண்டனை அளிப்பதும் நம் வேலையல்ல. தண்டனைகள் வழங்கும் காரியத்தினை சர்வவல்லவரிடம் நாம் விட்டுவிடவேண்டும். ஆகவே நாம் காலத்துக்குமுன்னே எவரையும் நியாயந்தீர்க்காதிருப்போம். தவறுகள் செய்யப்படுவதை நாம் காண்கிறோம்; "அது குற்றம் என்று அறிவேன்; ஆனால் குற்றவாளிக்குத் தீர்ப்பு கொடுப்பது என் காரியமல்ல. அவன் இதற்கு எந்தளவுக்குப் பொறுப்பாளி? என்று தேவன் அறிவார்; நான் அறியேன். பரிவிரக்கத்தின் நிலைப்பாட்டிலிருந்து அந்தச் சகோதரனை நோக்கிப்பார்ப்பதே என் கடமையாகிறது. அவரது தவறான கண்ணோட்டத்திலிருந்து,சரியான கண்ணோட்டங்களுக்கு மாற, என் முழு வல்லமையோடு அவருக்காக ஜெபிப்பதும், அவருக்கு உதவுவதும் என் கடமையாகும். ஆனாலும் இவ்விஷயத்தில் நான் சர்ப்பத்தைப் போல் விவேகமுள்ளவனாயும், புறாவைப் போல் கபடற்றவனாயும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நடத்தை தவறு என ஒருவேளை நான் அறியக்கூடும்; ஆனால் தவறுசெய்த அந்த நபர் எந்தளவு குற்றவாளி என்று என்னால் அறியமுடியாது" என்று கூறுபவர்களாய் காணப்படவேண்டும்.

முழு உலகமும் விழுகையின்மூலம் அதிக கடினங்களை அனுபவித்துவருவதை அன்பு கவனித்துப் பார்க்கிறது. அன்பு கூறுகிறது; எல்லாரோடும் பெருந்தன்மை உள்ளவர்களாயும், சாந்தமுடையோராயும் இருங்கள். பாவம், வலி, நோய், மரணம் நிறைந்த இவ்வுலகில் நாம் ஜீவிக்கிறோம் என்பதை எப்பொழுதும் நாம் நினைவில் வைக்கவேண்டும். இந்த நிலைப்பாட்டிலிருந்து காணும்போது, அன்பு எளிதில் சினமடையாது, அதற்கு மாறாக, மற்றவர்களிடத்தில் பரிவிரக்கத்தோடும், கருணையோடும் நடந்துகொள்ளும். ஆகவே அன்பு சகோதரர்களே, "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவராகிய" நம் மகிமை நிறைந்த தலையோடு, நாம் எல்லாவற்றிலேயும் வளர்வோமாக – **யூதா24.**

காலமோ குறுகியது! காலமோ குறுகியது!

கருணை காட்டுகிறதா உன் இருதயம் உன் சகோதரனுக்காக?

கடுகளவு உதவியா? மலையளவு உதவியா? இதோ நான் இருக்கிறேன் சகோதரா என்று!

உன் பரிவிரக்கத்தையே உன் சகோதரன் எதிர்பார்க்கிறான், நன்மை செய்ய சுற்றித்திரி

ஆம்! இக்காலம், கொஞ்சக்காலம் – அது குறுகியது!

---

R 5979

# இராஜ்யத்தின் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துதல்
# PRESENTING THE MESSAGE OF THE KINGDOM

"ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும்; இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும்" – லூக்கா 10:5,6.

நம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி 70 பேரை அனுப்பினபோது, மேற்கண்ட வார்த்தைகள் அவர்களுக்கு அவர் அளித்த அறிவுரையின் ஒரு பகுதியாக இருந்தன. செல்லும்வழியில் பணத்துக்காகவோ அல்லது கூடுதலான உடைகளுக்காகவோ, விசேஷ ஆயத்தம் செய்யாமல் அவர்களை அனுப்பினார். "கபடற்ற உத்தம இஸ்ரயேலர்களுக்கு" தேவ செய்தி முன்வைக்கப்படுவதற்கு அப்போது ஏற்றகாலமாய் இருந்தபடியால், அவர்கள் இஸ்ரயேலில் தேவனுடைய செய்தியை கேட்கிறதற்குக் காதுள்ளவர்களாக கண்டடையவேண்டும். ஆனால் இஸ்ரயேலரிடத்தில் மட்டுமே அவர்கள் பிரசங்கிக்கவேண்டும். எந்தக் கட்டணமுமின்றி இலவசமாய் இவர்கள் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு வார்த்தை மூலம் புத்துணர்ச்சியளிக்கவேண்டும். இந்த விஷயத்தில் கீழ்த்திசைநாடுகள், ஐரோப்பிய மறறும் அமெரிக்க நாடுகளைக் காட்டிலும் வேறுபடுகின்றன. ஐரோப்பா மற்றும் அமெரிக்காவைக்காட்டிலும், கிழக்குத்திசை நாடுகளின் ஜனங்கள் விருந்தோம்பலை விசேஷித்த பண்பாகப் பெற்றிருந்தனர். இயேசுவின் நாட்களில், பாலஸ்தீனாவிலும் இதே தனிச்சிறப்புமிக்க பண்பு இருந்துவந்தது.

எழுபதுபேரும் தங்கள் ஊழியத்தை முடித்துத் திரும்புகையில், உங்களுக்கு ஏதாகிலும் குறைவு இருந்ததா என்று நம் கர்த்தர் அவர்களிடம் வினவினார். தாங்கள் ஒன்றிலும் குறைவுபட்டிருக்கவில்லையென அவர்கள் பதிலுரைத்தனர். அவர்களுடைய செய்தி வீட்டுக்குவீடு சென்று சொல்லும்செய்தியாக இருக்கவேண்டுமென்றும். மாறாக பொதுக்கூட்டமாகவோ, வீதிகளிலோ, பொதுஜனங்கள் கூட்டமாகக்கூடும் இடத்திலோ இருக்கக்கூடாது என இயேசு அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார். சீஷர்கள் தாங்கள் சந்தித்த ஒவ்வொரு பட்டணத்திலும் தகுதியுடையவர்களைத் தேடிச்சென்றனர். அவர்கள் ஒரு வீட்டிற்குள் நுழையும்போது, "இவ்வீட்டிற்குச் சமாதானம் உண்டாவதாக!" என்று வாழ்த்தவேண்டும். அந்தவீட்டார் இவர்களை கருணையோடு உபசரித்தால், அவர்களது சமாதானம் அங்கே தங்கியிருக்கும், இல்லாவிடில் அவர்களது சமாதானம் அவர்களிடத்திலேயே திரும்பிவிடும். அந்த வீட்டில் அது தங்கக்கூடாது.

இவ்வகையிலான வாழ்த்துதல் நமக்கு விநோதமாய் காணப்படுகிறது. இந்தப் பாணியிலான வாழ்த்துதல் சொல்லுவது நமது நடைமுறைப் பழக்கமல்ல. ஆனால் கிழக்கத்திய நாடுகளில் இவ்வாறு வீடுகளில் மட்டுமல்ல, வீதிகளிலும் அல்லது நடந்துசெல்லும் வழியிலும்கூட ஒருவரையொருவர் வாழ்த்துவது இன்னும் பழக்கத்தில் உள்ளது. ஜனங்கள் ஒருவர் மற்றவரைச் சந்திக்கும்பொழுது, "உங்களுக்கு சமாதானம் இக்காலைவேளையில் உண்டாவதாக" என்று கூறுவார்கள். பெரும்பான்மையானோர் ஒவ்வொருவரும் இவ்வகையிலான வார்த்தைகளில் ஏதாவதுகூறி வாழ்த்துகிறார்கள். நாங்கள் கிபி 1892ஆம் வருடம் பாலஸ்தீனாவுக்குச் சென்றிருந்தபோது, மிகவும் ஆச்சரியமடைந்தோம். எங்களது வழிகாட்டி, அந்த நாட்டில் நன்கு பிரபலமானவர். நாங்கள் தெருவில் நடந்துசென்றுகொண்டிருந்தபோது, ஜனங்கள் அவரைநோக்கி அரேபிய மொழியில் ஏதோ பேசினர், அதற்கு அவர் பதிலளித்தார். சிறிதுநேரம் கழித்து நாங்கள் அவரிடம்; "அவர்கள் உங்களிடம் என்ன கூறினார்கள்?" என்று கேட்டோம். அதற்கு அவர்; "உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக" அல்லது "தேவனுடைய ஆசீர்வாதம் உங்களோடு இருப்பதாக என்று கூறினார்கள்" என்று அவர் பதிலளித்தார். ஜனங்கள் பொதுவாக, இப்படி அன்பாய் பேசினது எங்களுக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஏதோ ஒருவகையான வாழ்த்துதலை ஒவ்வொரு தெருவுக்குத்தெரு திரும்புகையில் நாங்கள் கேட்கநேர்ந்தது.

நாமும் இதற்கொப்பாகவே; "இனிய நாள்" அல்லது "எப்படி இருக்கிறீர்கள்?" அல்லது இனிய நாளாக அமைய வாழ்த்துகிறேன்" என்பது போன்ற வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். நம் வாழ்த்துக்களுக்கான சொற்றொடர்களும் அதே உணர்வை வெளிப்படுத்துகின்றன. ஆனால் இயேசுவின் சீஷரது விஷயத்தில் அவர்கள் இஸ்ரயேல் முழுவதும் ஒவ்வொரு வீடாக சென்று வாழ்த்துதல் கூறினபோது, ஜனங்களுக்கு அது ஒரு பரீட்சையாக அமைந்திருந்தது. சீஷர்கள் நல்ல முறையில் தங்களை ஏற்றுக்கொண்ட வீடுகளில், அதாவது தங்களை யார் வரவேற்றார்களோ அந்தவீட்டில் தங்கினார்கள். மாறாக அவர்கள் ஓர் ஊரில் தங்கும் சூழ்நிலை ஏற்படும்போது, அவர்கள் ஒவ்வொருவீடாக தங்குவதற்கென்று மாற்றிக்கொள்ளவில்லை. சீஷரது செய்திக்கோ அல்லது அவர்களிடத்திலோ, ஜனங்கள் ஆர்வங்காண்பிக்காததை வெளிப்படுத்தினார்களானால், அவர்கள் தங்கள் பிரயாணத்தைத் தொடரவேண்டும். இவ்வழிமுறைப்படியே அவர்கள் முழுப் பட்டணத்திற்கும் செல்வார்களானால், அப்போது அவர்களை ஒருவரும் மெய்யாக உபசரிக்கவில்லையெனில், ஒருவரும் அவர்கள் பிரகடனப்படுத்தும் "தேவஇராஜ்யம் சமீபித்திருக்கிறது" செய்திக்குச் செவிசாய்க்கவில்லையெனில், அவர்கள்

தங்கள் கால்களில் படிந்துள்ள அப்பட்டணத்தின் தூசியை உதறிவிட்டு, புறப்படக்கடவர்கள். ''அதைப்பற்றி எங்களுக்குக் கூறுங்கள்'' என்று ஜனங்கள் அவர்களிடம் கேட்டால், அவர்கள் அந்த வீட்டிற்குள் நுழைந்து, இயேசுவைப்பற்றியும், அவரது மிகப்பெரிய வேலையைக்குறித்தும், அவர் செய்த அற்புதங்களைக்குறித்தும் எடுத்துரைக்கவேண்டும். அவர்களது செய்தியை அளித்தபிறகு, அவர்களுடைய சமாதானம் அந்தக் குடும்பத்தோடே தங்கியிருக்கச்செய்து, தங்கள் வழியில் செல்ல துரிதப்படவேண்டும்.

இன்றைய நாளில் நிலைமைகள் வித்தியாசப்படுகின்றன. ஆதிகால சீஷர்களது வழிமுறையைப் பின்பற்றுவதன்மூலம், தற்போதைய நோக்கம் நிறைவேறாது. தற்போது சில செய்திப்பிரசுரங்களை நம்மோடுகூட எடுத்துச்செல்வதும், அல்லது நியாயமான விலையில் சில புத்தகங்களை ஜனங்களுக்கு விற்பதும், அவர்களது ஆர்வத்தைத் தூண்டியெழுப்புவதோடு, நிரந்தரமான ஆர்வத்தையும் பிறப்பிக்கும். நம் கர்த்தரின் முதலாம் வருகையின் நாட்களில் எதிர்பார்க்கப்பட்டதைக்காட்டிலும், தற்போது முழுத் தன்மையுடன் வெகுவிரைவில் எதிர்பார்க்கிற இராஜ்யத்தினைப் பற்றிய அத்தியாவசியமான தகவல்களை அவர்களுக்கு இந்தப் புத்தகங்களோ, செய்திப்பிரசுரங்களோ கொடுக்கும். ஆரம்பக் காலத்தில் ஒருசிலரது இருதயங்களில் மட்டும் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது, தற்பொழுதோ, அது வல்லமையிலும், மாபெரும் மகிமையிலும் பூமி முழுவதும் ஸ்தாபிக்கப்படப்போகிறது. எப்படி ஆதிகால சீஷர்கள் சமாதான இராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கித்தார்களோ, அதுபோல, நாம் சமாதானத்தின் செய்தியோடு செல்லவேண்டும்.

**தேவனுடைய செய்தியாளர்களின் முறையான அணுகுமுறை**

நாம் கொடுக்கும் செய்தி, மகாபெரிய உபத்திரவக்காலத்தை பற்றினதல்ல. எல்லா ஜனங்களுக்குமான நற்செய்திகளையும், திரும்பக்கொடுத்தலின் காலங்கள் வெகுவிரைவில் வரவிருப்பதையும் நாம் கூறவேண்டும். உபத்திரவக்காலம் பற்றி நமது செய்தியில் குறிப்பிடப்படவேண்டுமானால், யுக மாறுதல் அவசியமாக நிறைவேறவேண்டும் என்பதைக் குறிப்பிடவேண்டும். ஏனெனில் இராஜ்யத்துக்கும் அதன் ஆசீர்வாதங்களுக்கும் ஆயத்தமற்றநிலையில் உலகம் உள்ளது. இராஜ்யத்தின் செய்தியைப் பிரகடனப்படுத்தும் ஊழியத்தில் நாம் முன்னேறிசெல்லுகையில், நாம் சமாதானத்தை உண்டாக்குபவர்கள் என்பதை நம் சிந்தையில் முறையாக வைத்திருக்கவேண்டும். மாறாக, சண்டையை வளர்ப்பவர்களாகவோ, சச்சரவு உண்டாக்குபவர்களாகவோ இருக்கக்கூடாது. நாம் செய்தியை எப்படிக் கொடுக்கிறோம் என்பதில் கவனமாக இருக்காவிடில், நம்மில் சிலர் சண்டையை வளர்ப்பவர்களாக ஆகிவிடக்கூடும். நாம் எந்தளவு முடியுமோ அந்தளவு சமாதானத்தை வளர்க்க நாடவேண்டும். தேவஅன்பு, இரக்கம் மற்றும் நன்மை குறித்து ஜனங்களிடம் எடுத்துரைக்கவேண்டும். இதனை அன்புடன் செய்யும்போது, கர்த்தர் தற்போது, அடையும்படி வடிவமைத்துவருகிற வகுப்பாரில் நாமும்சேர்ந்துகொள்வோம். சுயசித்தமுடையவர்களை, அதாவது கீழ்ப்படியாதவர்களை அவர் தற்போது தேடவில்லை. மணவாட்டி வகுப்பாராக ஒரு விசேஷித்த வகுப்பாரை அவர் தேடிவருகிறார்.

நாம் ஞானமுள்ளோராக இருந்தோமானால், அந்தச் செய்தியின் விசேஷப் பண்புகளுக்குச் செவிமடுப்போராக இருப்போம். அது சமாதானம் மற்றும் நல்லெண்ணத்தின் செய்தி. இந்தச் செய்தியானது, பொருத்தமான வகுப்பாருக்குச், சரியான பாதையைக் காண்பித்து வழிநடத்தும். இந்தச் செய்தி, முரட்டுத்தனமாக நடக்கிறவர்களுக்கும், சண்டைபிடிக்கிறவர்களுக்கும், சுயநலமுடையோருக்கும், தீயோருக்கும் தற்போது தரப்படுவதில்லை. தாழ்மையும் கற்கும்குணமுடையோருக்கும், நேர்மையான இருதயத்தாருக்குமே அளிக்கப்படுகிறது. யாராகிலும் நம்செய்தியை ஏற்க மறுத்தால், கசப்புணர்வையோ அல்லது எதிர்ப்பையோ நாம் வெளிப்படுத்தக்கூடாது. ''என்னிடத்தில் கேட்டிருந்த செய்தியை, ஒருநாள் நீ விருப்பமாய் கேட்க பிரியப்படுவாய்'' என்றும் நாம் கூறலாகாது. இது நமது பணியல்ல, நம் போதகர்; ஏசப்பட்டாலும், வையப்பட்டாலும் பதிலுக்கு அவர் வையாமலிருந்தார் என்று நம் போதகரைக்குறித்து குறிப்பாய் சொல்லப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில், நாம் அவரது மாதிரியைப் பின்பற்றவேண்டும்.

நம் கர்த்தரை, பரிசேயரும் சதுசேயரும் வேதபாரகரும் எதிர்த்தபோது, அவர்களிடத்தில் சாதாரணமொழியில் பேசினாரா ? அவர் அவர்களை; ''மாய்மாலக்காரரே என்றும், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே என்றும், விரியன்பாம்புக் குட்டிகளே என்றும் கூறவில்லையா ?'' என்று சிலர் கேட்கக்கூடும். ஆம்! நம் கர்த்தர் பேசினது உண்மையே, ஆனால் நம் கர்த்தராகிய இயேசு பெற்றிருந்த அதிகார ஸ்தானமானது, நமக்குரியதல்ல என்பதை நம் நினைவில் கொள்ளவேண்டும். அவர் பரிபூரணராயிருந்தார், அதேசமயம் மனிதனுக்குள் இருப்பதையும் அறிந்திருந்தார். ஆகவே தன் எதிராளிகள் ஒவ்வொருவருடைய இருதயநிலைமையையும் கண்டறிவதில் எந்தத் தவறும் இழைக்கவில்லை. இந்நிலைமையை நாம் மெய்யாகவே பெற்றிருக்கவில்லை. அதோடுகூட, இயேசு இந்த மொழிநடையை கையாண்டபொழுது, ஒரு வகுப்பாரைக்குறித்தே பேசினார், தனிநபரையல்ல. கர்த்தருடைய செய்தியை நாம் உண்மையாய் கொடுத்து முடித்தபிறகு, நாம் நமது கடமையையே செய்திருக்கிறோம் என்று நாம் உணரவேண்டும். முடிவுகளை அறுவடையின்

கர்த்தரிடத்தில் விட்டுவிடவேண்டும். சத்தியம் கருக்கான பட்டயமாயிருக்கிறபடியால், தேவையான வெட்டிவிடுதல் அனைத்தையும் அது செய்துமுடிக்கும். இன்னும் கூடுதலாக, சத்தியம் எங்கெங்கு காணப்படுகிறதோ, அங்கெல்லாம் எதிர்ப்பை கொண்டுவருகிறபடியால், எவ்விதமான முரட்டுத்தனமோ, இரக்கமற்ற வார்த்தையோ, செயலோ நம்மிடமிருந்து வரக்கூடாது. நுகர்வதன் மூலமும், சினமூட்டினாலும் நாம்பெறுமையோடு இருப்பதைக் காண்பதன்மூலமும், நாம் "இயேசுவோடு இருப்பவர்கள்" என்றும், அவரால் கற்பிக்கப்பட்டவர்கள் என்றும் கண்டுகொள்ளவேண்டும் – அப் 4:13.

விசேஷித்தவிதமாக சமாதானப்பிரபுவின் நாமத்தில் பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையிலும் மற்றும் ஒவ்வொரு ஊழியத்திலும் தூய்மைப்படுத்தும் ஆதிக்கமானது, கர்த்தருக்கும் அவரது செய்திக்கும் பிரதிநிதிகளாயுள்ள ஒவ்வொருவருடனும் கடந்துவரத் தக்கதாக, அவர்கள் ஒவ்வொருவரையும் எல்லாப்புத்திக்கும் மேலான சமாதானம் கட்டுப்படுத்த வேண்டும். அவரது உண்மையுள்ள ஜனங்களது குணாதிசயத்தை நம் போதகர்தாமே விளக்கியிருக்கிறார். அவர்கள் தங்களை தேவபுத்திரர்களென்று முறையாக அழைக்கப்பட வேண்டுமானால், சமாதானம் செய்வோராய் இருக்க வேண்டும். இவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பார்கள் என்று அவர் பிரகடனப்படுத்தியுள்ளார். அப்.பவுலும் வலியுறுத்துகிறார்;

"கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்"–ரோமர் 12:18. நீதியின் கொள்கைகளில் உண்மையாயிருந்து எல்லாரோடும் சமாதானமாய் ஜீவிப்பது கூடாதகாரியம். ஆனால் கர்த்தருக்குப் பிரதிநிதிகளாக உள்ளோரால் ஒவ்வொரு முறையான வழியிலும் சமாதானத்தின் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும்.

எந்த வீட்டிற்குள் நுழையும்போதும், அவர்களுக்குப் போதிப்பதன் வாயிலாக அல்லாமல், மாறாக நமது செய்தியினை அமைதலாகவும், எளிமையாகவும் முன்வைப்பதன் வாயிலாக, நன்மை செய்வதையும், ஆசீர்வாதத்தை சுமந்துசெல்வதையும், வீட்டினுள் தங்கியிருப்போரிடத்தில் சமாதானம் மற்றும் மகிழ்ச்சியின் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதையும் நமது நோக்கமாக நாம் கொண்டிருக்கவேண்டும். கர்த்தருடைய ஊழியர்களாக நாம் எள்ளி நகையாடப்படவும், ஏளனமாக எண்ணப்படவும், வரவேற்கப்படாமலும் இருந்தபோதிலும், உரிமையோடு உட்புகாதவர்களாக நாம் நடந்துகொள்ள கவனமாயிருக்க வேண்டும். நமது கால்களில் உள்ள தூசிகளை உதறிவிட்டு.. என்று உருவகமான தன்மையில் சொல்லப்பட்டது, கிருபையின் வார்த்தையில் பசியாயிருக்கிற இருதயங்களைக் கண்டடைய துரிதமாய்க் கடந்து செல்லவேண்டும் என்பதையே பொருள்படுத்துகிறது. சத்தியமானது முறையாகவும், அன்புடனும் முன்வைக்கப்பட்டு, எந்த மறுமொழியும் அவர்களிடமிருந்து கிடைக்காதபொழுது, அவ்வாறு சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாததற்காக அவர்களிடத்தில் நாம் மரியாதையற்ற விதத்தில் நடந்துகொள்வதைப் பிதா விரும்புவதில்லை. இவ்விஷயத்தில் நமது கர்த்தர் நமக்கு நல்லதொரு முன்மாதிரியை வைத்துள்ளார்.

**கர்த்தருக்காக பிச்சைகேட்க அதிகாரம் அளிக்கப்படவில்லை**

இராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கிக்க இயேசுவின் சீஷர்கள் அனுப்பப்பட்டபொழுது, வீடுவீடாகச்சென்று, ஒருவீட்டில் உணவும், மற்றொருவீட்டில் தங்கவும் பிச்சை கேட்கும்படியாக அனுப்பப்படவில்லை. மாறாக, தங்களை வீடுகளில் ஏற்றுக்கொண்டு உபசரிப்பவர்களிடத்தில் , கர்த்தருடைய பராமரிப்பு இருப்பதை உணர்வார்களாகில், அவ்வீட்டாரது விருந்தோம்பலுக்கேற்ற விகிதமாக ஆசீரை வழங்கவேண்டும். இந்த உபசரிப்புக்களை நன்கொடைகள் என்ற ரீதியில் சீஷர்கள் கருதக்கூடாது. அவர்கள் கர்த்தருடைய பிரதிநிதிகளாயிருந்து, அவ்வீட்டாரிடமிருந்து பெறப்போவதைக்காட்டிலும் பலமடங்கு அதிகமாக ஆசீரை அளிக்கவேண்டும். பொதுவான வேலையாட்கள் செய்யும் ஊழியம் குறைந்தபட்சமாவது தகுதிவாய்ந்ததாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்களல்லவா! இந்தக்கொள்கை ஒருவீட்டுக்கு மட்டும் அல்ல, ஒரு பட்டணத்துக்குப் பொருந்தும்படி கர்த்தர் கூறினார். சீஷர்கள் எளிதில் மனநிறைவு அடையாதவர்களாக இருக்கக்கூடாது. அதற்கு மாறாக, அவர்களுக்குக் கொடுக்க முன்வரும் எவ்வித உபசரிப்புக்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். எவரும் உபசரிக்கவில்லையெனில், அவர்கள் அப்பட்டணத்திலிருந்து வெளியேறி, யார் அவர்களை ஏற்று, கொடுக்கும்செய்தியைப் புத்தியறிவோடு ஏற்றுக்கொள்கிறார்களோ, அவர்களிடத்திற்குச் செல்லவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் எவ்விதத்திலும் பிச்சை கேட்கிறவர்களாகவோ, கர்த்தருக்காக இரைஞ்சுபவர்களாகவோ இருக்கக்கூடாது.

நாம் ஆராய்ந்து பார்த்துவருகிற லூக்கா 10ம் அதிகாரத்தில் 9ம் வசனம், யூத அறுவடைக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாக முதலாவது தோற்றத்தில் காணப்படக்கூடும். ஆனால் அப்படியல்ல. ஆவிக்குரிய பிணிகளும், அதே சமயத்தில் சரீரப்பிணிகளும் உண்டு. இன்றையநாளின் கர்த்தருடைய தூதர்கள் இதைத் தங்களது ஊழியமெனவும், தங்களது தொழிலாகவும் எண்ணி, குருடரது கண்களைத் திறக்கவும், செவிடரது காதுகளைக் கேட்கச்செய்யவும், ஆவிக்குரிய நோயில் அகப்பட்டோர்க்கு உதவவும், காயம் பட்டவர்கள்மேலும், நொறுங்குண்ட இருதயங்கள்மேலும் கிலேயாத்தின் பிசின் தைலத்தை ஊற்றவும் கருத்தாய் கவனிக்கவேண்டும். கிறிஸ்துவின் முதலாம் வருகையின் நாட்களைப் போலவே, "தேவனுடைய இராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது" என்று

இன்றும் எல்லா ஜனங்களுக்கும் பிரகடனப்படுத்துவது முறையானதாகும். இந்தச் சுவிசேஷயுகம் முழுவதும் இவ்வாறு அறிவிப்பது முறையானதாக இல்லாவிடினும், இரண்டு யுகங்களின் அறுவடையின்போதும், இரண்டுயுகங்களின் முடிவின்போதும் அறிவிப்பது பொருத்தமாக இருக்கிறது.

**சத்திய செய்தி பிரிவினையை உண்டாக்கும்**

தேவன் ஆவிக்குரிய இஸ்ரயேலரை தனியே பிரித்தெடுத்து, சேர்க்கும் இறுதிநேரத்திற்கு நாம் வந்திருக்கிறோம். இந்நேரத்தில்; இதோ, இராஜா கதவருகே நிற்கிறார் என்று பிரகடனப்படுத்தவேண்டும். இந்தச் செய்தி கடந்த 40 வருடங்களாக, புத்தியுள்ள கன்னிகையரால் அறிவிக்கப்பட்டு வருகிறது, மேலும் இச்செய்தியானது புத்தியில்லாதவர்களிடமிருந்து, புத்தியுள்ளவர்களைப் பிரித்தெடுக்கிறது. இப்பணி தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது. நம் கர்த்தர் இஸ்ரயேலின் ஒவ்வொரு பட்டணத்திற்கும் நடந்துசெல்லும்போது, இராஜ்யத்தில் உடன்சுதந்திரராவதற்கான புதிய யுகத்தின் அழைப்பைக்குறித்து வெளிப்படையாக அறிவித்தார். தம் செய்தியைப் புறக்கணித்த பட்டணங்களைப்பார்த்து அவர் கூறியதாவது; 'நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்திற்கு நேரிடுவதைப் பார்க்கிலும் சோதோம் கொமோரா நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்''(மத்10:15). தற்போதும் நாம் அதுபோலவே நடக்குமென எதிர்பார்க்கலாம். தற்போது சத்திய செய்தியைக் கேட்டு, தயவு பெற்றிருப்பவர்கள் செவிடராக பின்னிட்டுத் திரும்புவார்களாகில், தொடர்ந்து இவர்கள் கிறிஸ்துவின் பின்னடியார்களாக தங்களை முழு நேர ஊழியர்களாக காண்பித்தபோதிலும், ஒருவேளை அவர்பெயரால் போதித்துவந்தாலும், வரவிருக்கும் யுகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நிலைமைகளில், புறஜாதி ஜனங்களைக்காட்டிலும் குறைவான தயவையே கண்டடைவார்கள். ஏனெனில் புறஜாதிகள் தேவனுடைய உண்மைசெய்தியை , இராஜ்யத்தின் சுவிசேஷத்தை முன்னெப்போதும் கேட்டிராதபடியால், மிகுந்த தயவை அடைவார்கள். அப்படிப்பட்ட தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவது தற்போது மிக சமீபித்திருக்கிறது.

இந்தப் புறஜாதிகள் இராஜ்யத்தின் நிலைமைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் விரைவில் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளும் வழியில்நின்று, சிலஅடிகளே பெறுவார்கள். ஆனால் வெளிச்சத்துக்கும் அதன் வாய்ப்புக்களுக்கும் எதிராக பாவம்செய்து, தங்கள் இருதயங்களை அதிகஅளவிலோ, ஓரளவோ கடினப்படுத்திக்கொண்டவர்கள், கர்த்தரது செய்தியாளர்கள் மூலமாக அளிக்கப்பட்ட சாட்சியங்களை முறையாக மதிப்பிடவும், கேட்க தவறினதன் மூலமாகவும் அநேக அடிகளை வாங்குவார்கள். சிலர் இந்த ஜீவியத்தில் யூத மற்றும் கிறிஸ்தவ அமைப்புக்களில் மேன்மையான ஸ்தானங்களை அனுபவித்திருந்தவர்கள், வரவிருக்கின்ற காலத்தில், மிகுந்த தாழ்மையை அடையும்படி நடத்தப்படுவார்கள். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் நியாயத்தீர்ப்பு பாரபட்சமின்றி நடக்கும்,''நான் நியாயத்தை நூலும், நீதியைத் தூக்குநூலுமாக வைப்பேன்; பொய் என்னும் அடைக்கலத்தைக் கல்மழை அழித்துவிடும்'' (ஏசா28:17). தற்போது செய்துவருகிற எல்லா தீமைகளும், வஞ்சனைகளும் வெளியரங்கமாக காண்பிக்கப்பட்டு, அகற்றப்படும். அப்பொழுது அநேகர், பணிவான, கற்றுக்கொள்ளக்கூடிய, கீழ்ப்படிதலுள்ள இருதயத்தை அடையும்படி கொண்டுவரப்படுமுன், அநேக அடிகளைப் பெறுவார்கள் என்று நாம் பயப்படுகிறோம்.

**காலத்திற்கேற்ற சில எச்சரிப்பின் வார்த்தைகள்**

இந்த மாம்சத்திலிருந்துகொண்டு, நம் பணியை நிறைவேற்றிமுடிக்க இன்னும் சிலநாட்கள் அல்லது மாதங்கள் தங்கியிருக்கும் காலம்வரை, அவரது நாமத்தைச் சுமந்திருக்கிற நாம், விலையேறப்பெற்ற சத்தியத்துக்குத் தகுதிவாய்ந்த நற்குணசாலிகளாகவும், அவருக்கு தகுதியுள்ள பிரதிநிதிகளாயும் இருப்போமாக. குறுகலான வழியில் நிலைத்திராதவர்களுக்கு அபாயம் உண்டு. இவர்கள் சாந்தம், தயாளகுணம், பொறுமை மற்றும் அன்பின் பாடங்களை ஓரளவு கற்றுக்கொண்டிருந்து, முழுமையாக கற்க மனதில்லாதவர்களாய் இருப்பதனால், அவர்கள் செல்லும்வீடுகளில் நறுமணத்தை, உதவிசெய்ய ஆவலாயிருக்கும் மனப்பான்மையை வெளிப்படுத்த முடியாமற்போகும். அங்கே தீயனபேசுதலும், மற்றவர்க்கெதிராக தீமையைச் சுட்டிக்காட்டி குறைகூறுதலும், புறங்கூறுதலும், தயாளகுணமற்ற வார்த்தை அல்லது நடக்கையும், பொறுமையின்மையும் வெளிப்படும் அபாயம் உண்டு. இவர்கள் கிறிஸ்துவின் பள்ளியில் மாணாக்கர்களாக இருந்தபோதிலும், இப்படிப்பட்டவர்களது ஆதிக்கம் இம்மைக்குரியதே, ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிகுதியான பாதகத்தை ஏற்படுத்தக்கூடியது. கர்த்தரும்அவரது வார்த்தையும் வழிகாட்டுகிறபடி, சரியான வழிகளில் நடக்கத்தேடுகிற தங்களிலும், பிறரிலும் உள்ள ஆவிக்குரிய பல்வேறு கனிகளின் வளர்ச்சிக்கு ஊறுவிளைவிப்பதாகும்.

கிறிஸ்துவின் நாமம் தரிப்பிக்கப்பட்டு, அவரது பள்ளிக்குள் நுழைந்திருக்கிற அனைவரும் , நம் மாபெரும் போதகர் நமக்காக ஏற்படுத்தியிருக்கிற பாடங்களைத் தங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடிப்பது எத்தனை முக்கியமானது! கர்த்தரோடு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறோம். நமது மாபெரும் அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடப்பிப்பது எத்தனை முக்கியமானது! அதற்கு மாறாக, அவர் நிமித்தமாக நம்மை அரவணைத்திருப்பவருக்கு, நிந்தைகளை வருவிக்கக்கூடாது. தேவனுடைய பரிசுத்தஆவியின் கிருபைகளையும் விலையேறப்பெற்ற கனிகளையும் கர்த்தருடைய ஆச்சரியமிக்க வெளிச்சத்தால் இருளிலிருந்து விடுபட்டவர்களைத்தவிர, தங்கள் அனுதின

நடக்கையிலும், உரையாடலிலும் முன்மாதிரிகளாக மெய்ப்பித்தோர், பூமியின்மேல் வேறு எந்த ஜனங்களுமில்லை. நம் கர்த்தரை மகிமைப்படுத்தவும், நம் நன்றியுணர்வை அவருக்குக் காண்பிக்கவும், நம் பேரிலான அவரது பரிவிரக்கத்தை போற்றவும் நாம் பெரும் ஆர்வமுடையோராக இருப்போம் என்று நம்புகிறோம்.

இன்றைய நாளில், சபை, "மறைந்திருக்காத, மலைமேல் உள்ள பட்டணமாக" இருக்கிறது. நம்மிடமிருந்து நம் எதிராளிகளாலும்கூட அதிகதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. நம் கர்த்தரும்கூட நிச்சயமாக நம்மிடத்தில் அதிகதிகமாக எதிர்பார்ப்பார். ஆகவே பிரியமான சகோதரரே, நாம் வார்த்தையிலும் செயலிலும் உண்மையுள்ளவர்களாய் இருப்போம், இவ்வாறு நம் தேவனது நாமத்தையும், நாம் விரைவில் முகமுகமாய் தரிசிக்க நம்பியிருக்கும் நம் இரட்சகரும் இராஜாவுமான இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும் கனப்படுத்துவோமாக!

―――――――――――――

# சோதனை காலம்

இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய நிறைவு பகுதியானது முழு உலகத்தின்மேலும் கடந்துவரும் "சோதனைகாலமாய்" இருக்குமெனக் கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு அறிவுறுத்தனது வீணா? (வெளிப்படுத்தல் 3:10). நிச்சயமாகவே கர்த்தரினால் நாம் வீணாய்க் கற்பிக்கப்படவில்லை! மற்றும் அவருக்கு நேர்மையாய் இருப்போர் அனைவரும் மார்க்கவசத்தையும், தலைச்சீராவையும், பாதரட்சைகளையும் இறுக்கிக் கட்டிக்கொண்டிருக்கின்றனர் மற்றும் பட்டயத்தையும், கேடகத்தையும் கையில் எடுக்கப்பெற்றிருக்கின்றனர். ஒருவேளை நாம் இதுவரையிலும் கடுமையான போராட்டங்களுக்குள்ளாகவில்லையெனில், அவைகளைச் சீக்கரத்தில் எதிர்ப்பார்க்கலாம் என்றும், நாம் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும் என்றும், "சோதனைகாலத்தின்போது" வல்லமையுடன் எதிர்க்கொள்ளச் செய்திடும் அத்தகைய பயிற்சியினையும், அனுபவத்தையும் நாம் பெற்றிருக்க வேண்டும் என்றும் நாம் அறிவோம்.

இந்தச் "சோதனைகாலமானது" முழு உலகத்தின் மீதும், சபையின் மீதும் கடந்துவருமென்று நாம் கற்பிக்கப்பட்டிருக்கின்றபடியால், அது அனைவரையும் பாதிக்கும் வகையில், ஆகாயத்தில் சம்பவிப்பதாக இருக்க வேண்டுமென நாம் புரிந்திருக்கின்றோம். இந்தச் சோதனையானது, ஒவ்வொரு திசையிலும் படிப்படியாகப் பரவக்கூடிய ஒன்று என்றும் நாம் நம்புகின்றோம்; மற்றும் அந்த நாட்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் நிமித்தம் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதன் மூலம் குறைக்கப்படாதிருந்ததானால், மாம்சம் ஏதும் பிழைப்பதில்லை என்று ஆண்டவர் நமக்கு உறுதிப்படுத்தியும் இருக்கிறார்.

ஜாதிகள் மத்தியில் ஏற்கெனவே செயல்பட்டுவருகின்றதும் மற்றும் வணிக விஷயத்தில் மேல்நிலையை அடைய யுத்தம் புரிவதற்கென அவர்களை வெறித்தனமாய் இயக்கிக் கொண்டிருக்கின்றதுமான சுயநலம் மற்றும் பேராசையின் ஆவியானது, அதிகமதிகமாய்ப் பெருகி, அனைவரையும், அனைத்தையும் தாக்கத்திற்குள்ளாக்கிடும் என்று நாம் புரிந்திருக்கின்றோம். இந்த ஆவியானது, நம்முடைய தேசங்களில் நடைபெறும் வேலை நிறுத்தம் (strike) முதலானவைகளில் பார்க்கப்படலாம் - அனைவருமே சுயம் திருப்தி அடைவதற்கே கவலைப்படுகின்றனர் மற்றும் கனங்கள், உரிமைகள், ஸ்தானங்கள் முதலானவைகளுக்காகப் போராடுவதற்கே விரும்புகின்றனர்.

ஆனால் நாமோ சபை மீதும், எப்படி இந்தச் "சோதனைகாலம்" கர்த்தருடைய ஜனங்களுக்கு வரும் என்பதன் மீதும்தான் அதிகம் ஈர்க்கப்பட்டுள்ளோம். எப்படி நடக்குமென நாம் எண்ணுகிறவைகளுக்கு அப்பாற்பட்டவைகளையே நாம் இங்கு எழுதப்போகின்றோம்; மேலும் இதை எழுதுவது என்பது கர்த்தருடைய காரணங்கள் மற்றும் ஜனங்கள் தொடர்புடையதான நம்முடைய கடமையாக இருக்கின்றதென நமக்குத் தோன்றுகின்றது. வேத மாணவர்கள் மீது ஒரு மாபெரும் ஆபத்துக் காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம் மற்றும் அது எத்தனை சீக்கிரமாய்க் கண்டுணரப்படுகின்றதோ, அவ்வளவாய் அச்சோதனையானது மிக வெற்றிகரமாய்க் கடந்துபோகப்படும். இது பிரிவினைகளை அர்த்தப்படுத்துகின்றதாய் இருக்கலாம்; மேலும் அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உபதேசங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முறைமைகள் உணர்ந்துகொள்ளப்படத்தக்கதாகவும் மற்றும் உண்மையான போதகர்கள் மிக முழுமையாய் அடையாளம் கண்டுகொள்ளப்படத்தக்கதாகவும், அப்போஸ்தலர் கூறியுள்ளதுபோன்று பிரிவினைகள் சிலசமயம் அவசியமாகவே இருக்கின்றன (1 கொரிந்தியர் 11:18, 19).

அத்துயரளிக்கும் அம்சத்தினைக் குறிப்பிடுவதற்கு முன்னதாக, யாவரும் ஊக்கமடைவதற்கு ஏதுவான ஒன்றை நாம் குறிப்பிடுகின்றோம்; அதென்னவெனில் மாநாடுகளில் கூடிடும் நண்பர்களுடனான உரையாடல் வாயிலாக, நாம் அறிந்திருக்கிறவரை முன்னொருபோதும் இல்லாதளவுக்கு வேத மாணவர்கள் சாந்தம், தயாளம், பொறுமை, அன்பு, பக்தி, விசுவாசம், சந்தோஷம் என்பவைகளைப் பெற்றவர்களாக இப்பொழுதே காணப்படுகின்றனர்.

## உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்

சபைக்கான பெரும்பான்மையான அபாயமும், இடர்பாடும், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் வாசலருகேயே காணப்படுகின்றது என்று எழுதிடுவது உண்மையாய்த் துயரமளிக்கின்றதாய் இருக்கின்றது - எனினும் அனைவருக்கும் இப்படியாகக் காணப்படுவதில்லை என்பதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம்; திகைப்படைந்து காணப்படும் ஆடுகள், தாங்கள் மேற்கொள்ள வேண்டிய சரியான வழிமுறை குறித்த அறிவுரையினைக் கேட்டு அவ்வப்போது அலுவலகத்திற்கு எழுதி அனுப்பும் கடிதங்களை வைத்துப் பார்க்கையில், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களில் ஒரு சிறு சிறுபான்மையினரே இப்படி அபாயகரமாகக் காணப்படுகின்றனர் என்பதாகத் தெரிகின்றது. உண்மையான மூப்பர்கள், உதவிக்காரர்களுக்கும் மற்றும் உண்மையற்ற மூப்பர்கள், உதவிக்காரர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தினைக் கர்த்தருடைய ஜனங்களால் உணர்ந்துகொள்ளப்படுவதற்கேற்ப, சபையிலுள்ள உண்மையுள்ள, நேர்மையுள்ள ஊழியக்காரர்கள் கர்த்தருடைய ஜனங்களினால் மதிக்கப்படுவார்கள். உண்மையற்றவர்களைச் சோர்வுப்படுத்தும் கண்ணோட்டத்தில் நாம் எழுதாமல், மாறாக அவர்கள் எதிராளியானவனுடைய கண்ணியினின்று நீக்கப்படுவதற்கும், இடையூறாளர்களாய் இருப்பதற்குப் பதிலாகக் கர்த்தருடைய மந்தைக்கு உதவுபவர்களாகிடுவதற்கும் ஏதுவாய், உண்மையான சூழ்நிலைக்கு இவர்களது கண்கள் திறக்கப்படுவதற்கே நாம் எழுதுகின்றோம்.

"உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே (தம் குமாரன்) சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" என்று அப்போஸ்தலன் எபேசு பட்டணத்திலுள்ள சபையின் மூப்பர்களுக்கு அறிவுறுத்தினபோது, அவர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அதே சூழ்நிலைமைகளே, நாம் அறிந்திருக்கிறவரை இன்று, வேத மாணவர்கள் மத்தியில் நிலவி வருகின்றது (அப்போஸ்தலர் 20:28). "நான் போனபின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்று வருஷக்காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்திசொல்லிக்கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள். இப்பொழுதும் சகோதரரே . . . தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன்" என்று கூறின அப்போஸ்தலர் பவுலின் தீர்க்கத்தரிசனம் உண்மையாயிற்று (அப்போஸ்தலர் 20:29-32).

## தேவனுடைய இரண்டு ஊழியக்காரர்களின் வேறுபட்ட நடைமுறை

பேராசையே லூசிபரை முதலில் தவறாய் வழிநடத்தி, தேவனுடைய ஒரு மகிமையான ஊழியக்காரனை, எதிராளியானவனாக மாற்றிப்போட்டதுபோன்றே, அவனது ஆவியானது இன்றுவரையிலும் அபாயமானதாகவே இருந்துவருகிறது. இதற்கு முற்றிலும் எதிர்மாறானதாக நமது ஆண்டவருடைய ஆவி காணப்பட்டுள்ளது. பிதாவின் சித்தத்தைச் செய்வதில், "அவர் தம்மை மரணபரியந்தம் தாழ்த்தினவரானார்." பெருமை அல்லது பேராசையின் ஆவியில் அல்லது சுயநல நாட்டமான ஆவியில் எதையும், எந்த விதத்திலும், நம்முடைய ஆண்டவரிடத்தில் நம்மால் காணமுடிகிறதில்லை. நாம் அவரோடுகூட, அவருடைய இராஜ்யத்தில் உயர்த்தப்படும்படிக்கு விரும்புவோமானால், நாமும் அவரது மாதிரியின்படி, நம்மைத் தாழ்த்திக்கொள்ளும்படிக்கு, அப்போஸ்தலனால் நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளது.

ஆனால் இராஜ்யத்தில் எந்தவொரு ஸ்தானத்தை நாம் அடைவதற்கும் அவசியமாயிருக்குமென நாம் கர்த்தருடைய ஜனங்களின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவந்துள்ளதான இந்த வேதவாக்கியங்களை, எத்தனைபேர் முற்றிலும் மறந்துபோனவர்களாய்க் காணப்படுகின்றனர்! எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் தகவலின்படி, தேர்ந்தெடுத்தல் நடக்கவிருக்கும்போது, சில சபையார் மத்தியில் பயங்கரமான சூழ்நிலைகள் நிலவுகின்றன. சபையின் ஊழியக்காரர்கள் இறுமாப்பாய் ஆளுவதற்கு, சர்வாதிகாரியாய் ஆளுவதற்கு முற்படுகின்றனர் - சிலசமயங்களில் தாங்களும், தங்களது விசேஷித்த நண்பர்களும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாய்ப் பார்த்துக்கொள்ளும்படிக்குக் கூட்டங்களுக்குக்

கூட்டத்தலைவராய்த் தலைமைத்தாங்கியும் நடத்துகின்றனர். சபையாரில் ஒருவர் தனக்கு வாக்குகள் (vote) செலுத்தாததினால், அவரிடம் மூப்பர் பேச மறுத்துள்ள சம்பவங்களையும் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். எனினும் அந்தக் குறிப்பிட்ட மூப்பர், தான் தன்னடக்கத்திற்கும், தாழ்மைக்கும் மற்றும் சாந்தத்திற்கும் எடுத்துக்காட்டாய் இருப்பதாகச் சந்தேகத்திற்கிடமின்றி எண்ணுகின்றார்.

வேதவசனத்தினுடைய போதனைகள் குறித்தும், ஆண்டவரோடுகூட உடன்சுதந்தரர்களாகுவதற்கான நிபந்தனைகள் குறித்துமான எந்த அறிவையும் பெற்றிருப்பவர்கள் மத்தியில் மேல்கூறப்பட்டுள்ள இத்தகைய ஓர் ஆவி காணப்படுவது என்பது, ஓ! எத்துணை அவமானத்திற்குரியதாகும்! ஆம் நிச்சயமாகவே இம்மாதிரியான காரியங்களில், வெட்கக்கேடுகள் பல்வேறு அளவுகளில் காணப்படும். சிலர் தங்களுக்கும், தங்களது நண்பர்களுக்கும் விசேஷமாய்ச் சாதகமாய்க் காணப்படும் ஏதோ சில சமயங்களில் தேர்ந்தெடுத்தலைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக வாய்ப்புகளைப் பயன்படுத்திடுவதற்கு அமைதியாய் முயற்சிக்கின்றனர். சபையில் தொடர்ந்து கலந்துகொள்வதற்கான எந்த எண்ணமும் இல்லாமல், தங்களது நண்பர்களில் ஒருவருக்கு வாக்களிப்பதற்கென நட்பிணக்கத்தின் அடிப்படையில் மாத்திரம் வருகைத்தரும் சிலரை - தங்கள் நண்பர்களைக் கூட்டத்தில் பெற்றிருப்பதற்குச் சிலர் நாடுகின்றனர்.

இன்னுமாக இப்படியாக வழிநடத்துபவர்களாகவும், போதகர்களாகவும் ஆக வேண்டி இப்படியான பேராசையினை/இலட்சியத்தினை வெளிப்படுத்துபவர்களும், பொன்னான பிரமாணத்தினையும், புதுச்சிருஷ்டிக்கான விசேஷித்த அறிவுரைகளையும் புறக்கணிப்பவர்களுமானவர்கள் பொதுவாகவே தவறான உபதேசங்களைக் கொண்டுவருபவர்களாக இருப்பார்களென எதிர்ப்பார்க்கப்படலாம். சபையில் கனத்தினை நாடும்படிக்கு இவர்களை வழிநடத்துகின்றதான, எதிராளியானவனின் அதே பேராசையின்/இலட்சியத்தின் ஆவியானது, இவர்களை மாபெரும் போதகர்களென - புது வெளிச்சத்தைக் கொண்டுவருபவர்களெனக் காண்பித்துக்கொள்ள வழிநடத்துவதாகவும் தெரிகின்றது. இதுவும்கூடச் சாத்தானின் தன்மைகளாக இருக்கின்றதென அப்போஸ்தலன் விவரிக்கின்றார். "அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே" (2 கொரிந்தியர் 11:14). ஒளியின் பிள்ளைகள் மத்தியில் தன்னை ஒரு வழிநடத்துபவராகக் காண்பித்துக்கொள்ளுவான் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார்.

அநேகம் சந்தர்ப்பங்களில் சபையாரே, அவர்களது அறிக்கையை வைத்துப்பார்க்கையில் குற்றஞ்சாட்டப்படுவதற்கு ஏதுவாயிருக்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் கர்த்தருக்குத் தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைக்கூடப்பண்ணிடாத அல்லது தங்களது அர்ப்பணிப்பினை அடையாளப்படுத்திக் காண்பித்திடாத நபர்கள் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். ஏன்? ஏனெனில் சபையார் மத்தியில் விசேஷித்த தாலந்துடையவர்கள் யாரும் இல்லாத காரணத்தினால், சகோதரனே இல்லாத ஒருவர், கிறிஸ்துவுக்குள்ளாக புதுச்சிருஷ்டியாக இல்லாத ஒருவர், பேச்சாற்றல் சிலவற்றைப் பெற்றிருப்பதினால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். இப்படி வேதத்தின் மாணவர்கள் மத்தியில் போதகருடைய ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கும் இத்தகைய ஒரு நபரிடமிருந்து நாம் என்னதான் எதிர்ப்பார்த்திட முடியும்? கர்த்தருடைய காரணங்களுக்குத் தீங்கினையும், இவ்விதமாய்க் கர்த்தருடைய வார்த்தைகளின் கட்டளைகளுக்கு முரணாக முன்னுக்குத் தள்ளப்படுகின்ற அந்நபருக்குப் பாதகத்தினையும் மாத்திரமே ஏற்படுத்திடும் என்பதை நாம் எதிர்ப்பார்த்திட முடியும். ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் ஆவிக்குரியவைகளை நிதானிக்க முடியாதவனாய் இருக்க, அவனால் எப்படிக் கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு ஆவிக்குரியவைகளைப் பகிர்ந்தளித்திட முடியும்? இத்தகையவரை, அதாவது கர்த்தருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிடுவதற்கெனத் தனது ஜீவியத்தினையும் மற்றும் அவரது வார்த்தைகளினால் கற்பிக்கப்படும்படிக்கும் ஒப்புக்கொடுத்திடாத ஒருவரைக் கர்த்தர் வழிநடத்திடுவாரென எப்படி நம்மால் எதிர்ப்பார்த்திட முடியும்?

தகுதியற்ற வழிநடத்துபவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது நிச்சயமாகவே பாவமாகும் மற்றும் அது தகுதியற்ற வழிநடத்துபவர்களைப் பெற்றிருக்கும் சபையாருக்குப் பழிச்சொல்லுக்கு ஏதுவானதாயிருக்கும். சபையாருடைய வாக்குகள் (votes) இல்லாமல் இத்தகையவர்கள் கர்த்தருடைய ஜனங்களின் பிரதிநிதியாயிருக்கும் ஸ்தானத்திற்கு எப்படி வரமுடியும்? கூடுகைகளில் பேசிடுவதற்கான திறமை என்பது மூப்பர்களுக்கான பல தகுதிகளில் ஒன்று மாத்திரமேயாகும் என்பதைக் கர்த்தருடைய ஜனங்கள் எப்போது கற்கபோகின்றார்கள்? பெயர்ச்சபையினர் செய்வதுபோன்று, ஆவிக்குரிய ரீதியில் இல்லாமல், சரளமாகப் பேசும் ஆற்றல்

உடையவர்களை முன்நிறுத்துவதினால், எப்படிக் கர்த்தருடைய காரணங்களுக்கு இடையூறளிக்கப்பட்டிருக்கின்றது என்றும், எப்படிச் சகோதரர் மத்தியில், ஆவிக்குரிய விஷயத்தில் திணறடிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் நாம் அவ்வப்போது கவனித்திருக்கின்றோம்.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களுக்கு, சபையாரின் சார்பிலான பெருமைதானே - உலகத்திற்கு முன்பு மாம்சத்தில் பகட்டாய்க் காண்பித்துக்கொள்வதற்கான விருப்பம்தானே காரணம். இல்லை என்றால், பின்னர் ஏன் இத்தகைய நபர்களைத் தேர்ந்தெடுத்தார்கள்? ஒருவேளை அவர்கள் தவறு செய்திருந்தார்களானால், அவர்கள் ஏன் அமைதியாயும், உறுதியாயும் அதை உடனே சரிப்படுத்திடவில்லை? மூப்பர்கள் சபையாரைத் தங்கள் வல்லமை மற்றும் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவருவதற்கு நாடி, வெற்றிக் காணும்போது, இது கர்த்தர் விரும்புவதாக நம்மிடம்கூறும் அந்த ஒரு தன்மையில் - தைரியத்தில், ஜெயங்கொள்ளுதலில் - சபையார் குறைவுப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறதல்லவா? இறுமாப்பாய் ஆள விரும்பும் அவரை, வேதவாக்கியங்களுக்கு முரணான முறைமைகளில் வெற்றிக்காணும்படிக்கு அனுமதித்ததில் - அவருக்கும் மற்றும் தங்களுக்கும் சபையார் தீங்குபண்ணுகிறார்கள் அல்லவா?

## வஞ்சிப்பவர்களும் மற்றும் வஞ்சிக்கப்படுபவர்களும்

ஒழுங்கின்மைக்கு நேராய் வழிநடத்திக்கொண்டு செல்லும் உலகத்திலுள்ள பேராசை மற்றும் சுயநலமான ஆவியினை நாம் ஏற்கெனவே குறிப்பாகக் காட்டிவிட்டோம்; மற்றும் எப்படி அதே சுயநலமான, பேராசையின் ஆவியானது, சபையிலும் ஒழுங்கின்மைக்கு நேராக நடத்திக்கொண்டிருக்கின்றது என்றும் நாம் சற்று முன்புதான் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். இதன் காரணமாக உலகத்தின் மீதுவரும் ஓர் உபத்திரவக்காலத்தினையும் மற்றும் சபைமீது வரும் ஓர் உபத்திரவக்காலத்தினையும் நாம் எதிர்ப்பார்க்கின்றோம். உலகத்தாரால் இந்த வகுப்பாரிடமிருந்து, தானாகவே அதனை நீக்கப்பெற்றுக்கொள்ள முடியாது; ஏனெனில் தலைவர்களும், வழிநடத்தப்படுபவர்களும் உலகத்தின் ஆவியினைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் அது நிச்சயமாகவே மிக மோசமாய்ப் பெருகிடும். ஆனால் கிறிஸ்துவின் சபையில் இப்படியல்ல. ஆண்டவருடைய ஆவியாகவும், சத்தியத்திற்கு நேர்மையாய் இருக்கும் ஆவியாகவும், பொன்னான பிரமாணத்தினுடைய ஆவியாகவும், சகோதர அன்பின் ஆவியாகவும், சுயாதீனத்தின் ஆவியாகவும், உதவும் ஆவியாகவும், சத்தியமென்று நம்மால் நம்பப்படுகிறவைகளுக்கு உண்மையாயிருக்கும் ஆவியாகவும் - நம்முடைய ஆவிக் காணப்படுகின்றது. இந்த ஆவியினையுடைய சபையானவள் பேராசைமிக்க புருஷர்களின் (சில சமயங்களில் பேராசைமிக்க ஸ்திரீகளின்) அதிகாரத்தின் கீழ்த் தொடர்ந்துகாணப்படுவது என்பது பொறுக்க முடியாத ஒன்றாகும். சபையார் தங்கள் சபை காரியங்களைச் சரியான காரியங்களின் அடிப்படையில் நடத்திக்கொண்டு வராமல் இருந்தார்களானால், சரியாய் நடத்துவதற்கு அவர்கள் உடனே செயல்பட வேண்டுமல்லவா? இதுவே கர்த்தருடைய வீட்டை ஒழுங்கு முறைக்குள் கொண்டுவருவதற்கான காலம் என்று நாம் நம்புகின்றோம்.

ஆனால் யாராகிலும் பின்வருமாறு கூறலாம்; "எங்கள் மீது எங்களது அதிகாரிகளாகவும், வழிநடத்துபவர்களாகவும் தங்களை ஏற்படுத்திக்கொண்டவர்களின் விருப்பங்களுக்கு எதிர்மாறாக நாம் எதையேனும் செய்ய முற்படுவோமானால், அது மிகுந்த கலக்கத்தினை ஏற்படுத்திவிடும். ஒரு பிரயாசம் எடுக்க முற்பட்டாலுங்கூட அது சபை பிரிந்து போவதற்குரிய அபாயத்தைக் கொண்டுவரும் மற்றும் இத்தகைய பேரழிவை உண்டுபண்ணும் காரியத்தினைக் குறித்து எப்படி எங்களால் சிந்திக்க முடியும்?"

ஆனால் நாமோ: கர்த்தர் சுட்டிக்காட்டினவைகளுக்கு இசைவாகக் குறைந்த எண்ணிக்கையினாலான சபையைப் பெற்றிருப்பது நலமா? அல்லது கர்த்தர் அருளியுள்ளவைகளுக்கு முரணான கொள்கைகளை ஆதரித்து, தங்களைத் தீங்கிற்குள்ளாக்கி, தங்கள் செல்வாக்கிற்கு இடையூறு உண்டாக்கி மற்றும் "ஓநாயாக" அல்லது "ஓநாயின் ஆவிக்குள்ளாகத் தவறுதலாய் நடத்தப்பட்டுள்ள ஒரு செம்மறியாடாக" இருக்கும் ஒருவரை, அதாவது வழிநடத்துபவராக இருப்பவரை ஆதரிக்கும் அதிக எண்ணிக்கையிலுள்ள சபையைப் பெற்றிருப்பது நலமா? என்று கேள்விக்கேட்கின்றோம். இம்மாதிரியான பிரச்சனைக்குள் காணப்படும் அருமையான சகோதரர்கள், வீரமாய்ச் செயல்படும்படிக்கு நாம் ஊக்குவிக்கின்றோம்; எதையும் வீண்பெருமையினாலாவது அல்லது வாதினாலாவது செய்யாமலிருக்கத்தக்கதாகப் பார்த்துக்கொண்டு, தாங்கள் கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையை மீண்டுமாகப் பெற்றுக்கொள்ளத்தக்கதாவும், எந்த மனித

அடிமைத்தனத்திற்குள்ளாக மீண்டும் சிக்கிக்கொள்ளாமல் இருக்கத்தக்கதாகவும், அனைத்தையும் சாந்தம் மற்றும் அன்பின் ஆவியில் செய்யும்படி பாருங்கள்.

## உபதேச ரீதியிலான பரீட்சைகளைக்குறித்தும் நினைவில்கொள்ளுங்கள்

வாட்ச் டவர் சொசைட்டியின் வெளியீட்டுக் கட்டுரைகளை வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளில் பயன்படுத்துவதற்குத் தங்களது மூப்பர்கள் தங்களுக்குத் தடைவிதிப்பதாக அடிக்கடி வேத மாணவர்கள் நமக்கு எழுதிவருகின்றனர். இந்த மூப்பர்களில் சிலர் இந்தக் கட்டுரைகளிலுள்ள அநேக விஷயங்கள் முரணானவைகளாக இருக்கின்றன என்றும்கூடச் சபையாருக்குச் சொல்லுமளவிற்குக் காணப்படுகின்றனர். சில சமயங்களில் வகுப்புகளில் இப்புத்தகங்கள் பயன்படுத்தப்படுவதை அதிகாரிகள் போல் தடைப்பண்ணுகின்றனர். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டுமென்று நம்மிடம் கேட்கப்படுகின்றது.

இத்தகைய வழிநடத்துபவர்களைப் பின்பற்ற விரும்புகின்றவர்கள் அப்படியே செய்யட்டும் - இப்படிச் செய்வது அவர்களுக்கான உரிமையாய் இருக்கின்றது என்று நாம் பதிலளிக்கின்றோம். அவர்களுக்கு அனைத்தும் நன்றாய்க் காணப்படும்படிக்கு வாழ்த்துகின்றோம். ஆனால் நாம் அவர்களைப் பின்தொடராமலிருப்போமாக; ஒரு கணம்கூட இத்தகைய ஏற்பாடுகளுக்கு அடிப்பணியாது இருப்போமாக. இப்படியான விஷயத்தில் அந்த வழிநடத்துபவர் தலையிடுவதும் மற்றும் சபையார் என்ன செய்ய வேண்டும் என்றும், என்ன செய்யக்கூடாது என்றும் சபையாருக்குச் சொல்ல முற்படுவதும், அந்த வழிநடத்துபவரின் சார்பிலான உச்சபட்ச அவமதித்தலாகும். தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரம் சபையாரின் கரங்களில் காணப்படுவதுபோன்று, நீக்கிடுவதற்கான அதிகாரமும், அவர்களுடைய கரங்களில் காணப்படுகின்றது. அப்படிப்பட்ட மூப்பரிடம் அவரது ஊழியங்களானது இனிமேல் விரும்பப்படுகிறதில்லை என்று அன்புடன் கூறி, அவரை அவ்வூழிய ஸ்தானத்திலிருந்து நீக்கிடுவதற்குச் சபையார் வாக்குகள் (votes) செலுத்திடும்படிக்கு நாம் பரிந்துரைக்கின்றோம். அநேகமாக அவர் கொஞ்சக்காலம் பின்னிருக்கையில் அமர்ந்து, அக்காரியம் குறித்துச் சிந்திக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்கையில் அது அவருக்குப் பிரயோஜனமாய் இருக்கும் மற்றும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிடுவதற்குத் திறமையுடையவரோ அல்லது வகுப்புகளை நடத்திடுவதற்குப் பழக்கப்பட்டவரோ சபையில் யாரும் இல்லாமலிருந்தாலும் சபையார் இத்தகைய ஒரு நிலைப்பாட்டை எடுத்துக்கொண்டதின் நிமித்தம் பெரிதும் உதவப்படுவார்கள். உங்கள் சுயாதீனத்தைத் தக்கவைத்துக்கொள்ளத்தக்கதாகவும் மற்றும் ஆராதனையையும், ஆராய்ச்சி வகுப்புகளையும், உரிய ஒழுங்கின் அடிப்படையில் தொடரத்தக்கதாகவும், உங்களில் யாரையாகிலும் கூட்டத் தலைவராக நியமித்துக்கொள்வதோ அல்லது கூட்டத்தைத் துவக்கும் மற்றும் முடிக்கும் காரியத்தில் (take turns) சுழற்சியில் மாறிமாறிச் செய்திடுவதற்கு என நியமித்துக்கொள்வதோ நல்லதாய் இருக்கும்.

வேதாகமத்தை - கிறிஸ்துவின் உபதேசங்களைத் திட்டவட்டமாய்ப் போதிப்பதற்கும் மற்றும் அந்த உபதேசங்களைச் சிறிது வேறுபாடான விதத்தில் போதிப்பதற்கும் இடையிலான வேற்றுமையை வகைப்படுத்திப்பார்ப்போமாக. எந்த இரண்டு நபர்களும் ஒரேமாதிரியான வார்த்தைகளைத் துல்லியமாய்ப் பயன்படுத்திடுவார்கள் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது; ஆனால் பெரும்பான்மையான வேத மாணவர்களின் கண்ணோட்டத்தில் உறுதியானதும், அசைவுறாததுமான சில குறிப்பிட்ட உபதேசங்கள் காணப்படுகின்றன. அவைகளுக்கு நல்லிசைவுடன் காணப்படாத எவரும் கொஞ்சமேனும் ஊக்குவிக்கப்படாமல் தடைப்பண்ணப்பட வேண்டும். ஒருவேளை அவனுக்கு வேறான கண்ணோட்டங்கள் இருக்குமாயின் அவனைத் துன்புறுத்தாதீர்கள் - இருண்ட யுகத்தின் வழிமுறைகளைப் பின்பற்றாதீர்கள், மாறாக அவனைத் தனியே விட்டுவிடும் அல்லது அவன் காண்கிற விதத்தில் காரியங்களைக் காண விரும்புகிறவர்களோடு விட்டுவிடும் சரியான வழிமுறையைக் கையாளுங்கள்.

இதுவரையிலும் இத்தனை பலமான/கடுமையான அறிவுரைகளை நாம் கொடுத்ததில்லை; அருமையான ஆடுகளில் அநேகர் பாதிப்பிற்குள்ளாகி, வளர்ச்சியடைவதற்குத் தடைப்பண்ணப்பட்டுப் பலவந்தம்பண்ணப்பட்டுள்ளனர் என்று நாம் உணர்கின்றோம். இதற்கேற்ப இத்தகையதான மூப்பர்களும், உதவிக்காரர்களும் அதிகம் துணிச்சல்கொள்வதையும் நாம் பார்க்கின்றோம் மற்றும் சரியான ஆவியுடையவர்களும், யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தினுடைய நம்முடைய ஆராய்ச்சியிலுள்ள, கர்த்தருடைய வழிகாட்டுதலின் கீழ் - நாம் "தந்திரமான கட்டுக்கதைகளை" பின்பற்றினவர்களாக இருக்கவில்லையென்று உணர்ந்துகொண்டவர்களுமான அனைவரும், தங்களுக்கான

நலனுக்காகவும், தவறான ஆவியை வெளிப்படுத்தும் வழிநடத்துபவர்களுக்கான நலனுக்காகவும் மற்றும் ஒருபோதும் முன்பில்லாத அளவிற்குக் கர்த்தருடைய வழியைக்குறித்து விசாரிக்கும் ஜனங்களுடைய நலனுக்காகவும் வேண்டி, உறுதியான நிலைப்பாட்டினை இப்பொழுது எடுத்துக்கொள்வது மிகுந்த அவசியமானதாய் உள்ளது.

உறுதித்தன்மையையும், தைரியத்தையும் நாம் ஊக்குவிக்கையில், தாழ்மையான ஆவியை வெளிப்படுத்துபவர்களும், சபையாருடைய உரிமைகளுக்கும், சுயாதீனங்களுக்கும் இசைந்து செல்பவர்களும், நன்றாய் ஊழியஞ்செய்ய நாடுபவர்களுமாகிய கர்த்தருடைய உண்மையுள்ள ஊழியக்காரர்களின் மத்தியில் சண்டைச் சச்சரவு அல்லது குற்றம் கண்டுபிடிக்கும் மற்றும் குற்றம் சாட்டும் ஆவியினை ஊக்குவிக்க நாம் விரும்புகிறதில்லை. தேர்ந்தெடுக்கப்படக் கூடாதவர்களின் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டபோது சரியான நிலைமையில் காணப்பட்டும், பிற்பாடு மாறுபாடான மற்றும் பேராசையான ஆவியினை வெளிப்படுத்தினவர்களின் செல்வாக்கின் கீழிலிருந்து, சபையை மாற்றிட வேண்டும் எனும் கண்ணோட்டத்தின் அடிப்படையிலான ஒரே நோக்கத்துடன், "ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல் அனைத்தையும் தேவனுக்கு மகிமை உண்டாகும்படிச் செய்யுங்கள்" என்று கூறுகின்றோம். இன்னுமாக சபை உறுதியாய் இருப்பதோடுகூடப் பரிவையும் கொண்டிருக்க, மேற்கூறியவர்கள் மனந்திரும்பும் பட்சத்தில் இவர்களுக்கென இரக்கத்தையும் கொண்டிருக்க நாம் அறிவுரை கூறுகின்றோம், அதாவது பிற்பாடு அவர்களை நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலையில் திரும்ப ஏற்றுக்கொள்வதற்குரிய கண்ணோட்டத்தில் நீங்கள் இவைகளையும் பெற்றிருக்க நாம் அறிவுரை கூறுகின்றோம். "நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன்; உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு, மார்க்கப் பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்க வேண்டியதே" (1 கொரிந்தியர் 11:18, 19) என்று அப்போஸ்தலன் எழுதியுள்ளார். பிரிவினைகள் இங்குக் கண்டிப்பாய் வந்தாக வேண்டும்; மற்றும் அது எத்தனை சீக்கிரமாய் வருகின்றதோ அவ்வளவிற்கு அது சத்தியத்திற்கும், அதனை அன்புகூருகிற யாவருக்கும் நலம் பயக்கின்றதாய் இருக்கும்.

## என் ஆவியினாலே ஆகும் என்று கர்த்தர் கூறுகின்றார்

"ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் ஆவிக்குரிய பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரிந்தியர் 2:14) என்ற அப்போஸ்தலனின் அறிவுரையை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. பரிசுத்த ஆவியினால் நாம் ஜெநிப்பிக்கப்பட்டப் பிற்பாடுங்கூட ஆவிக்குரியவைகளைப் புரிந்துகொள்வதற்கான நமது ஆற்றலானது - நம்மை ஞானவான்களாக்கிடுவதற்கு ஏதுவான வேதவாக்கியங்களின் மீதான நம்முடைய ஆராய்ச்சியின் மீது மாத்திரம் சார்ந்ததாயிராமல், நாம் பெற்றிருக்கும் பரிசுத்த ஆவியினுடைய அளவைச் சார்ந்ததாகவும் இருக்கின்றது என்று அனுபவங்களும்கூட நமக்கு நிரூபித்துள்ளது. ஆகவேதான், "ஆவியில் நிறைந்திருங்கள்" - என்று அப்போஸ்தலர் புத்திமதி கூறுகின்றார் (எபேசியர் 5:18).

இது ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மாத்திரமே தேவனுடைய ஆழமான காரியங்களைப் புரிந்துகொள்வார்கள் என்று குறிக்கின்றதாய் இருக்கின்றது; மேலும் அவர்கள் பரிசுத்தத்தின் ஆவியினால், தேவ ஆவியினால், கிறிஸ்துவின் ஆவியினால், சத்தியத்தின் ஆவியினால் அதிகமதிகமாய் நிரம்புவதற்கேற்ப, அவர்களது புரிந்துகொள்ளுதலும் காணப்படும் என்றும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஒவ்வொரு வேத மாணவனும் புதுச்சிருஷ்டியாகிய தான், மாம்சத்தின்படியாக நடந்து ஆவியின்படியாக நடவாமலிருந்தால், அவனது மனமானது ஏறத்தாழ இருளடைந்துவிடும் மற்றும் தேவனுடைய ஆழமான காரியங்கள் குறித்துள்ள அவனது புரிந்துகொள்ளுதலின் ஆற்றலானது குறைவதோடு மாத்திரமல்லாமல் கர்த்தருடைய வசனம்குறித்த அவனது நினைவாற்றலும் குறையும் என்று உணர்ந்துகொள்ள வேண்டும்; இன்னுமாக அவன் இப்படியாக இல்லாமல் கர்த்தருக்கு நெருங்கி ஜீவித்தும், மாம்சத்தின்படியாக நடக்காமல் ஆவியின்படி நடப்பானானால், திவ்விய வார்த்தைக்குறித்த அவனது நினைவாற்றலும் மற்றும் அவ்வார்த்தையினுடைய ஆவிக்குரிய புரிந்துகொள்ளும் ஆற்றலும் பெருகிடும் என்று உணர்ந்துகொள்ள வேண்டும்.

கல்வியறிவு உடையவர்களும், தாலந்து உடையவர்களுமான அனைவரும் கர்த்தருடைய வார்த்தைக்குறித்த சரியான புரிந்துகொள்ளுதலை அடைவதில்லை. மாறாக சாந்தமுள்ள மற்றும்

கற்பிக்கப்படத்தக்கதான நிலையில் இருப்பவர்களுக்கே மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளைக் கற்றும், அதன்படி ஜீவித்தும், அதன் ஆவியை உள்வாங்கியும் இருப்பவர்களுக்கே சரியான புரிந்துகொள்ளுதல் கடந்துவருகின்றது என்று நினைவில்கொள்வோமாக. "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (சகரியா 4:6) என்ற திவ்விய வார்த்தை நமக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு சகோதரனோ (அ) சகோதரியோ அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்களாகவும், எவ்வளவு திறமையுடையவர்களாகவும் இருப்பினும், இது இவர்களைக் கர்த்தருடைய ஜனங்களுக்கு வழிநடத்துபவர்களாக்கிடுவதற்குத் தகுதியாக்கிடாது. இதோடுகூடச் சகோதரருக்கு முக்கியமான அம்சங்கள் அனைத்தும் காணப்பட வேண்டும்; அவை முதலாவதாகக் கர்த்தருடைய வார்த்தைக்குறித்த அறிவு மற்றும் இரண்டாவதாகச் சத்தியத்தின் ஆவியினைப் போதுமானளவில் பெற்றிருத்தல் - கர்த்தருடைய ஸ்தானாபதியென எப்போதும் நம்பப்படுவதற்குப் பாத்திரமாய் இருத்தல் ஆகும். வேறு எவரும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் போதகர்களாக அல்லது வழிநடத்துபவர்களாக அடையாளம் கண்டுகொள்ளப்படக்கூடாது. உயர்ந்தவர்களும், கல்விமான்களும், திறமையுடையவர்களுமாய்க் காணப்படுபவர்கள் மாத்திரந்தான் கர்த்தருடைய வார்த்தைகளுக்கான ஊழியர்களாய் இருக்க வேண்டும் என்பது திருச்சபை மயமான சார்ந்திருத்தலுக்கு (churchianity) உரிய கருத்தாய்க் காணப்படுகின்றது; ஆனால் இதற்கு எதிர்மாறானதாகவே வேதாகமம், காரியத்தை முன்வைக்கின்றதாய் இருக்கின்றது. "கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்மேல் இருக்கிறது; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" (ஏசாயா 61:1).

கர்த்தருடைய ஆவியையும், சாந்தத்தின் ஆவியையும், தயாளத்தின் ஆவியையும், பொறுமையின் ஆவியையும், நீடிய பொறுமையின் ஆவியையும், சகோதர சிநேகத்தின் ஆவியையும் மற்றும் அன்பின் ஆவியையும் வெளிப்படுத்துபவர்களும் - வேதவசனம் மற்றும் தெய்வீகத் திட்டம்குறித்து நல்லறிவைப் பெற்றிருப்பவர்களும் - சத்தியத்தின் ஆவியையும், பரிசுத்தத்தின் ஆவியையும் மதிக்கிறதை வெளிப்படுத்துபவர்களும் - போதகசமர்த்தனுமாயும் இருக்கும் மூப்பர்களை இரட்டிப்பான கனத்துடன் எண்ணிடுவதற்கும் மற்றும் மற்றவர்களை மறுத்திடுவதற்கும் எவ்விடத்திலுமுள்ள வேத மாணவர்களின் சபையாரை வலியுறுத்துவது, மேற்கூறிய கண்நோக்கங்களினுடைய கண்ணோட்டத்தின்படி பார்க்கையில் நியாயமாய் உள்ளது என்று எண்ணுகின்றோம்.

## V. D. M. கேள்விகள்

பெயர்ச் சபையால் தங்கள் ஊழியர்களுக்குச் சாற்றப்படும் பெயர்களில் அநேகமானவைகள் முற்றிலும் வேதவாக்கியங்களுக்கு முரணாக, போற்றுதலுக்குரிய (Reverend), மிகவும் போற்றுதலுக்குரிய (Most Reverend), வேதசாஸ்திரி (Doctor of Divinity) என்பதாகவெல்லாம் காணப்படுகின்றது என்று நீண்டகாலத்திற்கு முன்பாகவே நாம் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தோம். இவைகள் வேதவாக்கியங்களினுடைய எழுத்துக்களுக்கு மாத்திரமல்லாமல், அதன் ஆவிக்கும்கூட எதிரானவையாகக் காணப்படுகின்றது. மூப்பர், உதவிக்காரர் மற்றும் பாஸ்டர் எனும் வார்த்தைகளானது வேதவாக்கிய வார்த்தைகளாக இருக்கின்றது என்ற உண்மையையும் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தோம். Verbi Dei Minister (V. D. M) என்ற இலத்தீன் பெயரையும் நாம் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தோம் மற்றும் இந்தப் பெயரானது பொதுவிடங்களில் பிரசங்கிக்கும் கிறிஸ்துவின் ஒவ்வொரு பிரதிநிதியும், திவ்விய வார்த்தையினுடைய ஊழியக்காரனாய் இருக்கின்றான் - மனித விசுவாசப்பிரமாணங்களினுடைய அல்லது சுயத்தினுடைய ஊழியக்காரன் அல்ல என்ற வேதாகமத்தின் கருத்தினை அப்படியே வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. தேவனாலும், அவருடைய ஜனங்களினாலும் அங்கீகரிக்கப்படும் வேத மாணவர்கள் அனைவரும் தங்கள் தாலந்துகள், வாய்ப்புகள் மற்றும் வேதவாக்கியத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதான வரையறைகளுக்கு ஏற்ப - திவ்விய வார்த்தையினுடைய ஊழியக்காரர்களாய் இருக்கின்றனர்.

தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் தகுதிகள் தொடர்புடைய விஷயத்தில் போதுமானளவிற்கு விவரங்கள் தெரியாத நிலையில் வேத மாணவர்கள் அடங்கிய அநேகம் சபையார் காணப்படுகின்றனர் என்ற கண்ணோட்டத்தில், V.

D. M. கேள்விகள் என்று அழைக்கப்படும் அநேகம் கேள்விகளை நாங்கள் தொகுத்துள்ளோம் மற்றும் இந்தக் கேள்விகளை ஆராய்கையில் அது அனைவருக்கும் பிரயோஜனமாய் இருக்கும் என்றும், அவைகளுக்கான பதில்களானது திவ்விய வார்த்தைக்குறித்த நியாயமானதொரு அறிவைப் பெற்றிருப்பவர்களை அறிய உதவிடும் மற்றும் அத்தகையவர்களின் ஊழியங்களானது பாதகமாய் இராமல் பிரயோஜனமாய் இருக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படலாம். இந்தக் கேள்விகள் சபை பிரிவுணர்ச்சி சார்ந்தது அல்ல, எந்தவொரு பிரிவிலும் காணப்படும் எந்தவொரு ஊழியக்காரனுக்கும் பொருத்தமானதாய் இருக்கும். அவை கவனமற்றவர்களை இடறச் செய்யும் நோக்கமுடைய, சிக்கவைக்கும் கேள்விகளும் அல்ல. அவைகள் எளிமையான நல்நம்பிக்கைகளின் அடிப்படையிலான கேள்விகள் ஆகும் மற்றும் அவைகளுக்குப் பதிலளிப்பது என்பது ஒவ்வொரு தனிநபருக்கும் உதவிகரமானதாய் இருக்கும் மற்றும் கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் போதகர்களாகவும், வழிநடத்துபவர்களாகவும், இருப்பதற்குப் பொருத்தமானவர்களை நியமிப்பதற்கும் விசேஷமாய் உதவியாய் இருக்கும்.

இவைகளை நாம் ஆயத்தம்பண்ணி, பயண ஊழியர்களுக்கு - Watch Tower Bible and Tract Society-இன் சார்பிலாக அனுப்பிவைக்கப்படும் பயண பிரசங்கிமார்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது மற்றும் எங்குமுள்ள சொசைட்டியினுடைய பிரதிநிதிகள் யாவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பின்னர்ப் பல்வேறு இடங்களிலுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களிடமிருந்தும் மற்றும் வேத மாணவர்களிலுள்ள மற்றவர்களிடமிருந்தும் இக்கேள்விக்கான விண்ணப்பங்கள் வந்தது. அனைத்து வேத மாணவர்களும் கேள்விகளை வாசித்து அதற்குப் பதிலளிக்கும்படிக்கு நாம் அறிவுறுத்தினோம். நாம் அநேக விண்ணப்பங்களைப் பெற்றுக்கொண்டோம் மற்றும் கேள்விகளுக்கான பதில் நிரப்பப்பட்டு எங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. நியாயமானவிதத்தில் இக்கேள்விகளுக்குப் பதில்கூற முடியாத எந்தச் சகோதரனும் பொருத்தமான பிரதிநிதியாகக் கருதப்பட வேண்டாம் என்பது அனைத்துச் சபைகளுக்குமான நம்முடைய பரிந்துரையாகும்.

அனைத்து வேத மாணவர்களும் இக்கேள்விகளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகவும், அவற்றின் எளிமையினைக் கண்டுகொள்ளத்தக்கதாகவும் அவற்றைக் கீழே நாம் வெளியிடுகின்றோம். சகோதரர்கள் Sturgeon, Burgees மற்றும் Stephenson, பயண ஊழியர்களால் அனுப்பப்படும் பதில்களை மதிப்பிடுவதற்கென்றுள்ள குழுவினராக நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அனைவருடைய பதில்களும் திருப்திகரமாக இருக்கும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. நற்காரணங்களினால் அல்லாமல் மற்றபடி யாரும் நிராகரிக்கப்படுகிறதில்லை மற்றும் காரணங்களானது முறையாய்ச் சுட்டிக்காண்பிக்கப்படும். இந்தக் கேள்விகளுக்கு நியாயமான, திருப்திகரமான பதிலை அளிக்காதவர்கள் மூப்பர்களாகவோ அல்லது உதவிக்காரர்களாகவோ தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்று நியூயார்க் பட்டணத்திலுள்ள சபையார், வாக்கினால் (vote) தீர்மானம் எடுத்துள்ளனர். இதே மாதிரி அனைத்துச் சபையார் மத்தியிலும் பின்பற்ற நாம் யோசனை கூறுகின்றோம். கேள்விக்கான பதிலை மதிப்பிடுபவர்கள் சபையார் மத்தியிலிருந்து ஏற்படுத்தப்படும் ஒரு குழுவினராக இருக்கலாம் அல்லது மேலே கூறப்பட்டுள்ள சொசைட்டியின் பிரதிநிதியானவர்கள் பதில்களை மதிப்பிடவும் மற்றும் தங்கள் விமர்சனத்தைத் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்படலாம்.

## வளர்ச்சியடைந்துள்ள வேத மாணவர்களுக்கான V. D. M. கேள்விகள்

1. தேவனுடைய முதலாவது சிருஷ்டிப்பின் செயல்பாடு எது?

2. தேவகுமாரனோடு தொடர்புடைய லோகோஸ் (Logos) என்ற வார்த்தைக்கான அர்த்தம் என்ன? மேலும் பிதா மற்றும் குமாரன் என்ற வார்த்தைகள் எதைத் தொடர்புபடுத்துகிறது?

3. உலகில் எப்பொழுது, எப்படிப் பாவம் நுழைந்தது?

4. பாவிகள்மேல் வந்த பாவத்திற்கான தெய்வீகத் தண்டனை என்ன? மேலும் பாவிகள் யார்?

5. மாம்ச சாயலை எடுக்க, "லோகோசுக்கு" ஏன் அவசியமாயிற்று? அவர் அவதாரம் எடுத்தாரா?

6. மனிதனாகிய கிறிஸ்து இயேசு, குழந்தைப்பருவத்திலிருந்து மரணம் வரை என்ன சுபாவத்திலிருந்தார்?

7. இயேசு உயிர்த்தெழுந்தது முதல், என்ன சுபாவத்திலிருக்கிறார்? மற்றும் யேகோவா தேவனால் அவருக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் என்ன?

8. இந்தச் சுவிசேஷ யுகத்தின்போது, பெந்தெகொஸ்தே முதல் தற்போது வரை இயேசுவின் பணி என்னவாக இருக்கின்றது?

9. யேகோவா தேவனால் உலக மனுக்குலத்துக்கு இம்மட்டும் செய்யப்பட்டது என்ன? அதுபோலவே இயேசுவினால் செய்யப்பட்டது என்ன?

10. சபை நிறைவடைந்த பிறகு, அதனை குறித்த தெய்வீக நோக்கம் என்ன?

11. உலக மனுக்குலத்தைப் பொறுத்தவரையில், தெய்வீக நோக்கம் என்ன?

12. சீர்திருத்த முடியாதவர்களைக் குறித்த இறுதி முடிவு என்ன?

13. மேசியாவின் இராஜ்யத்திற்குக் கீழ்ப்படிவதன் மூலமாக, உலக ஜனங்களுக்கு வரவிருக்கின்ற வெகுமதி அல்லது ஆசீர்வாதங்கள் என்ன?

14. பரலோக பிதாவோடும், கிறிஸ்துவோடும் உறவுக்குள் நுழைய, பாவிகள் என்ன படிகளை எடுக்கவேண்டும்?

15. தேவனுடைய வசனத்தில் வழிகாட்டியபடி, ஒரு கிறிஸ்தவன் பரிசுத்த ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, அவனது நடைமுறை எப்படி இருக்க வேண்டும்?

16. ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்யும்படிக்கு நீ பாவத்திலிருந்து மனந்திரும்பியிருக்கிறாயா?

17. கர்த்தருடைய ஊழியத்துக்கு உன் எல்லா வல்லமைகளையும், தாலந்துகளையும் செலவிட, உன்னை அவருக்கு முழுத்தத்தம் செய்திருக்கிறாயா?

18. அடையாளமான தண்ணீர் முழுக்கின் வழியாக உன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருக்கிறாயா?

19. வேத மாணவரின் பரிசுத்தமான வாழ்வு வாழ வாக்குறுதி எடுத்திருக்கிறாயா?

20. வேதாகமப்பாடங்களின் ஆறு தொகுதிகளையும் முழுமையாகவும், கவனத்தோடும் படித்திருக்கிறாயா?

21. அந்த ஆறு தொகுதிகளிலிருந்து அதிக வெளிச்சமும், ஆதாயமும் பெற்றிருக்கிறாயா?

22. வேதாகமத்தின் மெய்யானதும், நிரந்தரமுமான அறிவைப் பெற்றிருக்கிறேன் என்றும், இந்த அறிவு கர்த்தருடைய ஊழியக்காரனாக, உன் எஞ்சியுள்ள வாழ்க்கையில் அதிக திறம்படச் செயல்படுவதற்கு உதவும் என்றும் நம்புகிறாயா?

குறிப்பு: இதை நிரப்பும் ஒவ்வொருவரும் தங்கள் அறிவின்படியே நிரப்ப வேண்டும். மற்றவரிடம் கேட்டோ அல்லது மற்றவரின் பதில்களைப் பார்த்தோ எழுதக்கூடாது. வேதாகமம் மற்றும் வேதாகமப்பாடங்கள் மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தின் நிழல்கள் பயன்படுத்தப்பட்டு, வேதவாக்கியங்கள் குறிப்பிடப்படலாம்.

## எதிர்ப்புகளுக்கான பதில்

இதற்கு எழுந்துள்ளது ஒரே ஒரு எதிர்ப்பு, இது பாபிலோனிய தன்மையுடையதாய், சபை பிரிவுணர்ச்சியாய் இருக்குமோ என்ற பயமாகும். ஆ! சரியானதை தவறு என்றும், வெளிச்சத்தை இருள் என்றும் காட்டுவதற்கு எப்படி மாபெரும் எதிராளியானவன் எப்போதும் நாடுவதைக் காண்கையில் வியப்பாகவே உள்ளது. எல்லா வல்லமையையும் மற்றும் அதிகாரத்தையும் தேவனுடைய ஜனங்களின் கைகளிலிருந்து எடுத்து, அதை ஒரு நபரிடமோ அல்லது கண்காணியிடமோ அல்லது மூப்பரிடமோ அல்லது போதகர்களின் குழுவிடமோ கொடுப்பதே பாபிலோனிய முறைமையாகும். ஒவ்வொரு எக்ளீஷியாவின் சுயாதீனத்தைப் பாதுகாத்திடுவதும், ஒவ்வொரு எக்ளீஷியாவும் அதன் சொந்த அதிகாரம் மற்றும் கடமையை அடையாளம் கண்டுகொள்ள செய்வதும்தான் எங்களுடைய நோக்கமாக எப்போதும் இருந்துள்ளது.

எதிர்ப்புத் தெரிவித்துள்ள சகோதரனுக்கு நாங்கள் கொடுத்த பதில் வாசகர்களுக்கு பிரயோஜனமாய் இருக்கும். ஆகவே அதை நாங்கள் கீழே கொடுத்துள்ளோம்:

அன்புள்ள சகோதரனுக்கு:-

தேவனுடைய சபையின் உரிமைகள் மற்றும் சுயாதீனம் பற்றின காரியங்களில் நீங்கள் கவனமாய் இருப்பதையும் மற்றும் சபை பிரிவுணர்ச்சியின் தன்மையில் தோற்றமளிக்கும் எதையும் எதிர்த்திட வேண்டும் என்று நீங்கள் கவனமாய் இருப்பதையும் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

சபை பிரிவுணர்ச்சி என்பது - உபதேசம் மற்றும் நடைமுறை விஷயத்தில் ஒருவரையொருவர் அடக்கி ஆளத்தக்கதாக அநேகம் கூட்டத்தார் அல்லது சபையார் ஏறெடுக்கும் முயற்சியாய் இருக்கின்றது என்று நான் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். நாங்கள் இதைப்போல் எந்த ஆலோசனையையும் முன்வைக்கவில்லை மற்றும் இதைப்போன்ற செயல்களுக்கு, உங்களைப் போன்று நாங்களும் எதிர்ப்பையே தெரிவிக்கின்றோம். நாங்கள் தேவனுடைய ஜனங்கள் காணப்படும் சபையாரை நிர்வகிக்கும் எந்தச் சட்டங்களையோ அல்லது விதிமுறைகளையோ கொண்டு வர முயற்சிக்கவில்லை மாறாக அவர்களைக் கொண்டே அவர்கள் மத்தியில் நியமத்தையும், ஒழுங்கையும் ஏற்படுத்த ஆலோசனை மாத்திரம் சொல்கின்றோம்.

உதாரணத்திற்கு ஒவ்வொரு சபையாரிலுமுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கு வாக்குகள் செலுத்திடும் விஷயத்தில், வாக்குச் செலுத்துவதற்கு முன்பு, தான் வாக்களிக்கும் நபர்களின் தகுதிகளைக் கண்டிப்பாக எண்ணிப்பார்க்க வேண்டும். அதாவது: (1) வேதத்தின் அடிப்படையான சத்தியங்கள் பற்றின அந்த நபரின் விசுவாசம் தொடர்புடையதான அறிக்கைகள் என்ன? (2) சத்தியத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு அதை மற்றவருக்கும் போதிப்பதற்கு ஏதுவாக, வாக்களிக்கபடுகிறவர் சத்தியத்தைத் தெளிவாய்ப் புரிந்துள்ளாரா அல்லது இல்லையா? (3) அந்த நபர் கர்த்தருக்குத் தன்னைத் தத்தம் செய்துள்ளாரா; மேலும் அதை அடையாளத்தில் காண்பித்துள்ளாரா அல்லது இல்லையா? (4) உயர் நன்னெறி கொள்கைகள் அவரிடத்தில் வெளிப்படுகின்றதா? மற்றும் வாக்குறுதியின் உயர்வான கொள்கைகளுக்கு உடன்பாடு தெரிவிக்கின்றாரா அல்லது இல்லையா?

இதுவரையிலும் சபையார் இந்தக் காரியங்களை ஊகித்து அறிய வேண்டிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தனர்; ஆனால், இப்பொழுதோ சபையார் ஊக மதிப்பீடு செய்யாமல் சகோதரர்களிடம் இந்த வி. டி. எம் கேள்விகளையோ அல்லது சபையார் விரும்பும் வேறே வகையான கேள்விகளையோ கேட்கலாம் என்றும், சபையாருக்குத் தகுதியான பிரதிநிதிகள், ஊழியக்காரர்கள் யார் என்று தீர்மானிக்கும் முன்பு அவர்களிடம் கேள்விகள் கேட்டு, பதில்கள் பெற்றுக்கொள்ளலாம் என்றும் நாங்கள் யோசனை கூறுகின்றோம். இப்படிச் செய்வதன் மூலம் சபையாரின் அதிகாரம் தக்க வைக்கப்படுகின்றது; இதைப்போல, பிரிவுணர்ச்சியின் அடிப்படையிலான எந்த அமைப்பும், செய்ய முடியாது; மேலும் இது சபையாரைப் பிரதிநிதிகளின் தகுதிகளை நிதானிக்க செய்து, அதை வேதத்தில் சொல்லப்பட்ட

வண்ணமாக கைகளை நீட்டி, ஒருவரைச் சபையாருக்குப் பிரதிநிதியாக ஊழியம்செய்ய அங்கீகரிக்க அல்லது ஏற்படுத்த ஏதுவாக்குகின்றது.

உங்கள் கடிதத்தில் வி.டி.எம். கேள்விக்கான பதில்களை மதிப்பீடு செய்ய நியமிக்கப்படும் மூன்று சகோதரர்களுக்கான ஏற்புடைமை பற்றிக் கேள்வி எழுப்பி உள்ளீர்கள்.

ஒவ்வொரு சபையாரும் இறுதியான முடிவை எடுக்கத்தக்கதாக - இக்கேள்விகளுக்கான பதில்களை மதிப்பீடு செய்யவும், திருப்திகரமான விதத்தில் பதில்கள் வராதபட்சத்தில் அது குறித்துத் தகவல் கொடுக்கவும் தக்கதாக, இது விஷயத்தில் நம்பிக்கைக்குப் பாத்திரமான பகுத்துணர்தலை உடைய சில சகோதரர்களை அடையாளம் கண்டுகொள்ள அல்லது நியமிக்க நிச்சயமாகவே சபையார் உரிமைபெற்றிருக்கின்றனர் என்று நான் பதிலளிக்கிறேன். வாக்கெடுப்பிற்குமுன் சபையாரிலுள்ள ஒவ்வொருவரும், கேள்விக்கான பதில்களைத் தெரிவிப்பதைவிட, இதுவே சுலபமான வழியாய்க் காணப்படும் என்று நம்புகின்றோம். எனினும் சபையாரே இதைக் குறித்துத் தீர்மானம் செய்ய வேண்டும். (NewYork City) நியூயார்க் பட்டணத்தின் சபையார் விஷயத்தில், மதிப்பீடு செய்யும் குழுவினராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மூன்று சகோதரர்களின் பரந்த மனப்பான்மையின்படியான தீர்மானத்தின் மீது, எல்லோரும் நம்பிக்கைக் கொள்வோம் என்று ஏகமனதாய் வாக்குகள் செலுத்தப்பட்டுள்ளது.

''**வாக்குறுதி**'' **பற்றி:**

இதைக் குறித்து நீங்கள் கொஞ்சம் எதிர்ப்பதும், உங்கள் கடிதத்தில் தெரிய வருகிறது மற்றும் அதனுடைய கொள்கைகளை ஏற்றுக்கொள்வது தேவையில்லை என்ற எண்ணம் இருப்பதும் தெரிகிறது. அந்த வாக்குறுதியில் எது மறுப்பிற்கிடமாய் உள்ளது என்று நேரிடையாய்த் தெரிவிப்பதற்குப்பதிலாக, வாக்குறுதியின் வார்த்தைகளானது அப்படியே வேதவாக்கியங்களில் இல்லை என்ற உங்களது கருத்திற்குப் பின்பாக ஒளிந்து நிற்கின்றீர்கள். ஆங்கிலமொழியில் காணப்படும் யாதொன்றையும் வேதவாக்கியங்களில் காணமுடியாது ஏனென்றால், அது வேறு மொழியில் எழுதப்பட்டிருந்தது என நினைவூட்ட விரும்புகிறோம். நம்முடைய பாடல்களை வேதவாக்கியங்களில் காணமுடியாது. நமது விசுவாசத்தினை அறிக்கையிடுவதற்கு நாம் பயன்படுத்தும் வார்த்தைகளை அப்படியே வேதவாக்கியங்களில் நாம் இன்று காணமுடியாது. வேதவாக்கியங்களானது, நீதியான வாழ்க்கை வாழத் தேவையான பொதுவான கொள்கைகளையும் மற்றும் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்டதான விசுவாசம் பற்றின அடிப்படை சத்தியங்களையும் நமக்கு முன்வைக்கின்றன. நாம் பாடும் பாடல்கள், போதிப்பவைகள், ஜெபங்கள், எழுதுபவைகள் மற்றும் செயல்கள் அனைத்தும் வேதம் முன்வைக்கும் இந்த அடிப்படையான கொள்கைகளுடன் இசைவாய்க் காணப்படத்தக்கதாக நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த வாக்குறுதியின் சொல்நடையானது, தேவனுடைய வார்த்தையின் ஆவி மற்றும் சாரத்திற்கு முழு இசைவுடன் இருக்கின்றது என நம்புவதாக, வாட்ச் டவரின் பெரும் திரளான வாசகர்கள் தகவல் கொடுத்துள்ளார்கள். எந்த ஒரு சகோதரனும் இதற்கு எதிர்த்து நின்றால், அவன் தேவனுடைய வார்த்தையின் ஆவிக்கு விரோதமாகச் செயல்படுகிறான் என்று அர்த்தமாகாதா? இப்படி இருப்பவர் மூப்பர் அல்லது உதவிக்காரராக வேதமாணவர்களின் சபையாருக்குத் தகுதியான பிரதிநிதியாக இருக்க முடியுமா? இல்லை என்றே நாங்கள் நினைக்கிறோம். "வாக்குறுதியில்" ஏதேனும் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால், அதாவது அது தேவனுடைய வார்த்தையின் எழுத்துக்கள் மற்றும் சாரத்திற்கு இசைவு இல்லாமல், மாறானதாகக் காணப்படுமாயின் அதை அறிய விரும்புகின்றோம் - அதை எல்லா வேதமாணவர்களும் அறிய விரும்புவார்கள். இதுவரையிலும் யாரும் இந்த வாக்குறுதியின் வார்த்தைகள் மற்றும் ஆவியானது, தேவனுடைய வார்த்தைக்கும், ஆவிக்கும் எதிராக இருக்கின்றது எனக் காண்பிக்கவில்லை. ஆகவே, ஒருவன் வாக்குறுதிக்கு இசைவாய் இருக்க மறுத்தாலும், அதைத் தன்னுடையதாக ஆக்கிக்கொள்ள விருப்பமற்று இருந்தாலும், அவனிடத்தில் ஏதோ ஒரு காரியம் உள்ளது - அவனுடைய சிந்தை அல்லது இருதயம் தேவனுடைய வார்த்தைக்கும், அதன் ஆவிக்கும் இசைவற்று இருக்கின்றது என்பது எங்களது பகுத்துணர்தலாய் இருக்கின்றபடியால், அவன் பொருத்தமான மூப்பராககோ அல்லது உதவிக்காரனாகவோ இருக்கமாட்டான் என்று எல்லாச் சபையாருக்கும் ஆலோசனை கூறுகின்றோம்.

ஆகவே அன்பான சகோதரனே, நீங்கள் இதை வாசித்து, சிந்தித்து, ஜெபம் பண்ணும்போது, நீங்கள் தவறாய் முதலில் கணித்துவிட்டீர்கள் என்று உணர்ந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன் அல்லது நான் முழுமையாகப் பதில் அளிக்கவில்லை, சிலவற்றை

விட்டுவிட்டேன் என்று நீங்கள் கண்டால், அதை எனக்கு நீங்கள் தெரிவிப்பதில் மகிழ்ச்சிக் கொள்வேன்.

நான் நினைப்பூட்டுவது என்னவென்றால்: இந்த வாக்குறுதியினை நாம் கர்த்தரிடத்தில் பண்ணுகிறோம் சகோதரரிடத்தில் அல்ல் ஆகையால் யார் ஒருவர் தான் வாக்குறுதி பண்ணினதாக அறிக்கை செய்கிறாரோ, அதன்மூலம் அவர் எந்த ஒரு சகோதரனுக்கும் அடிமையாகி விடுவதில்லை; மாறாக தான் அடையாளம் கண்டுகொண்டுள்ள கடமையினையும், அதைத் தேவனுக்கு அறிக்கைப்பண்ணியுள்ளதையும் மாத்திரம் சகோதரருக்கு அறிக்கை செய்கிறார். ஆகவே வாக்குறுதி எடுத்துள்ள சகோதரனின் காரியத்தில் தலையிட்டு ஆராய்ச்சி செய்வது, சகோதரர்களுக்கடுத்த காரியமல்ல. வாக்குறுதியை உண்மையாகத் தக்கவைப்பது என்பது, கர்த்தருக்கும் அவனுக்கும் இடையில் உள்ள காரியம். வாக்குறுதியானது அவனுடைய சகோதரர்கள் மற்றும் சபையாருக்கான அவனது பொறுப்பினைக் கூட்டவோ குறைக்கவோ செய்யாது. வாக்குறுதி பண்ணினதாக அவன் அறிக்கை பண்ணுவது என்பது நன்னெறியோடு ஜீவிப்பதற்கு, தான் அடையாளம் கண்டுகொண்டுள்ள மற்றும் பின்பற்ற நாடுகின்றதான உயர் நிலைப்பாட்டினைச் சகோதரர்களுக்குத் தெரிவிப்பதாய் மாத்திரமே இருக்கும்.

---

R 5981

# சோதனை நேரம்
## THE HOUR OF TEMPTATION

இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவுக்காலம் ஒரு சோதனை நேரமாக முழு உலகத்தின்மேலும் வரும் என்று கர்த்தர் தம் ஜனங்களுக்கு அறிவுறுத்தினது வீணான வார்த்தையா ?(வெளி3:10). நிச்சயமாக நம் கர்த்தரால் வீணானவைகள் நமக்கு கற்பிக்கப்படவில்லை. ஆகவே அவருக்கு உண்மையும் நேர்மையுமாய் இருப்பவர்கள் அனைவரும் மார்ப்பதக்கத்தை இறுகக்கட்டிக்கொண்டும், தலைச்சீராவை அணிந்தும், கால்களில் பாதரட்சைகளைத் தொடுத்தும், பட்டயத்தையும் கேடகத்தையும் பிடித்துக்கொண்டும், ஆயத்தமாயிருப்பார்கள். நாம் இன்னும் கடும் சீற்றமுடைய முரண்பாடுகளுக்குள் பிரவேசிக்கவில்லையென்றால், நாம் அவைகளை எதிர்நோக்கவேண்டும். மேலும் நாம் அதனை எதிர்நோக்க தேவையான பயிற்சியையும், அனுபவத்தையும் அடைந்து, ஆயத்தமாக இருக்கவும், அந்த சோதனைக்காலத்தை தளரா ஊக்கத்துடன் எதிர்கொண்டு நம் பணியை நிறைவேற்றி முடிக்கவேண்டும்.

இந்த ‘‘சோதனை நேரம்’’ முழு உலகின்மேலும் வருவதோடு, திருச்சபையின்மேலும் வரவிருக்கின்றது என்று நாம் போதிக்கப்படுகிறபடியால், ஆகாயத்திலிருந்தே ஏதோ ஒரு வகையில் வரக்கூடியதாயிருக்கும் என்று நாம் உணர்கிறோம். இவ்வாறு அது ஒவ்வொருவர்மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த சோதனையானது ஒவ்வொரு திசையிலும் படிப்படியாக பரவக்கூடியதாயிருக்கும் என்று நாம்கருதுகிறோம். தெரிந்து கொள்ளப்பட்டவர்–களினிமித்தம் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதன்மூலம் இந்த நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் எந்த மாம்சமும் பிழைத்திருக்கமுடியாது.

சுயநலத்தின் ஆவியும், சுயநலநோக்கங்களும் ஏற்கனவே தேசங்களில் ஆதிக்கம் செலுத்திவருகிறது, இவை அதிகமாக வளர்ச்சியுற்று, எல்லா இடங்களிலும் ஒவ்வொருவரையும் பங்குபெறச்செய்து, வாணிபத்தில் உச்ச நிலையை அடையும் யுத்தத்துக்கு தன்னிலை மறந்து இயக்கிச்செல்லும். போராட்டங்கள் நடக்கும்போது இந்த ஆவியை நாம் காணமுடியும். ஒவ்வொருவரும் சுயத்துக்கு ஊழியம்செய்ய பேராவலுடையவர்களாயிருந்து, கனத்தையும், சிறப்புரிமைகளையும், மேலான ஸ்தானங்களையும் அடைவதற்காக மனதாரப் போராடுவார்கள்.

கர்த்தருடைய ஜனங்களும் பங்கேற்கும்படிசெய்ய, எப்படி சபைக்கும் இச்‘‘சோதனைக்காலம்’’ வரும் என்று காண நாம் அதிக ஆவலாயுள்ளோம். எப்படி நடக்குமென நாம் விரும்புவதைக்காட்டிலும், எழுதஇருப்பது அதிக வித்தியாசமாயிருக்கும். ஆயினும் கர்த்தரின் நிமித்தமும் அவரது ஜனங்களின் நிமித்தமும் இதை எழுதுவது நமது கடமையாயிருக்கிறது. வேத மாணவர்கள் மேல் மாபெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதை நாம் உண்மையென ஒப்புக்கொள்கிறோம். இது வெகுவிரைவில் கண்டுணரப்படும், இது அதிக வெற்றிகரமாக கடந்து போகக்கூடும். அதாவது, பிரிவினைகள் ஏற்படப்போவதை இது அர்த்தப்படுத்தக்கூடும், ஆனால் அங்கீகரிக்கப்பட்ட போதனைகள், அங்கீகரிக்கப்பட்ட வழிமுறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குமுறைகளை உணர்ந்து கொள்ளவும், அதன்படியான போதகர்களை இனங் கண்டுகொண்டு அங்கீகரிக்கவும், பிரிவினைகள் சிலசமயங்களில் அவசியமானவை என அப்போஸ்தலர் குறிப்பிட்டார் – 1கொரிந்11:18,19.

துயரமான நிகழ்வைக்குறித்து குறிப்பிடுவதற்கு முன்பாக, ஒரு பொதுப்படையான உற்சாகத்தை நாம் குறிப்பிடவிரும்புகிறோம்; அதாவது, நாம் கண்டறிந்தவரையில், வேதமாணவர் மாநாடுகளில், நண்பர்களோடு கலந்துரையாடுவதன்மூலம், சாந்தம், தயாளகுணம், பொறுமை, அன்பு, புத்திக்கூர்மை, விசுவாசம், மகிழ்ச்சியின் ஆவி முன்னெப்போதைக்காட்டிலும் தற்போது தகுதிவாய்ந்த தரத்தில் உள்ளதைக் காண்கிறோம்.

**எச்சரிப்புணர்வு கொள்ளுங்கள்**

சபைக்கு நேரிடக்கூடிய அபாயங்கள் மற்றும் கடினமான சூழ்நிலைகளில் பெரும்பாலானவை, மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கதவுநிலையருகிலேயே காத்திருக்கிறதாக தோன்றுகிறது என்று எழுதுவது நிஜமான துயரத்தை வருவிக்கிறது. இங்கு மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவரையும் குறிப்பிடவில்லை என்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆனால் வெளிப்படையாகவே அவர்களில் ஒரு சிறு எண்ணிக்கையிலான சிறுபான்மையினர் மூலமாகவே சபைக்கு அபாயங்கள் நேரிடும். திக்குத்தெரியாத ஆடுகளிடமிருந்து, முறையான நடைமுறையை பின்பற்ற ஆலோசனைகேட்டு அந்தந்த காலகட்டங்களில் அலுவலகத்திற்கு வரும் கேள்விகளை நிதானிப்பதில் சிக்கல்கள் எழும். உண்மை மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கும், உண்மையற்ற மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளும் விகிதாச்சாரத்திற்கேற்ப, உண்மையும் நேர்மையுமுள்ள ஊழியக்காரர்கள் கர்த்தரது ஜனங்களால் அதிகம் மதிக்கப்படுவார்கள். உண்மையற்றவர்களை சோர்வுக்குள்ளாக்கும் எண்ணத்தோடு நாம் இவற்றை எழுதவில்லை, மாறாக உண்மை சூழ்நிலையை அறியும்பொருட்டு அவர்களது கண்கள் திறக்கப்படவும், விரோதியின் கண்ணியிலிருந்து அவர்கள் மீளவும், கர்த்தருடைய மந்தைக்கு தடைஏற்படுத்துபவர்களாயிராமல், உதவுபவர்களாக மாறவுமே இவற்றை எழுதுகிறோம்.

எபேசு சபையின் மூப்பர்களைப்பற்றி அப்போஸ்தலர் குறிப்பிட்ட அதே நிலைமை, இன்றையநாளில் வேதமாணவரிடையே மேலோங்கியிருப்பதை நம்மால் கூடுமானளவு நிதானிக்கமுடிகிறது. எபேசுசபையின் மூப்பர்களை அப்போஸ்தலர் கடிந்துகொள்கிறார்;

"ஆகையால் உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயஇரத்தத்தினாலே(தம் குமாரன்) சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள். "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். ஆனபடியால், நான் மூன்றுவருஷகாலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக்கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள். இப்பொழுதும் சகோதரரே... தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" என்றுகூறின அப்போஸ்தலர் பவுலின் தீர்க்கதரிசனம் உண்மையாயிற்று – அப்20:29–32.

**தேவனுடைய இரண்டு ஊழியக்காரர்களின் முற்றிலும் வேறுபட்ட நடைமுறை**

லூசிபரை முதலாவதாக, அவரது பேராவலே தவறாக வழிநடத்தி, மகிமை நிறைந்த தேவஊழியக்காரனை அவரது விரோதியாக மாற்றியது. அவனது ஆவி அப்பொழுதிலிருந்து தொடர்ந்து அபாயகரமானதாகவே இருந்துவருகிறது. நமது போதகரின் ஆவியோ இதற்கு எதிர்மறையாக இருந்தது. பிதாவின் சித்தம் செய்வதற்காக "அவர் மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தினார்". நம் போதகரிடத்தில் பெருமையின் ஆவி அல்லது புகழடைய விருப்பம் அல்லது சுயத்தைத் தேடும் ஆவியோ எதுவும் நம்மால் காணமுடியவில்லை. அவரது இராஜ்யத்தில் அவரோடுகூட உயர்த்தப்பட நாம் விரும்புவோமானால், கர்த்தரது முன்மாதிரிகையைப் பின்பற்றி நாமும் நம்மையே தாழ்த்தவேண்டும் என்று அப்போஸ்தலரால் நாம் எச்சரிக்கப்படுகிறோம்.

ஆனால் எத்தனைபேர் இந்த வேதவசனங்களை முற்றிலும் மறந்துவிடுகிறார்கள். இராஜ்யத்தில் எத்தகைய ஸ்தானத்தையாகிலும் அடைய கர்த்தருடைய ஜனங்களாகிய நமக்கு இந்த வார்த்தைகள் அத்தியாவசியமானதாக இருப்பதால், அடிக்கடி நமது கவனத்துக்கு கொண்டுவரப்படுகின்றன. நமக்குக் கொடுக்கப்பட்ட அறிக்கைகளில், சில வகுப்புக்களில் தேர்தல் நடைபெறும்போது அதிர்ச்சியூட்டும் சம்பவங்கள் நடப்பதாக கூறப்பட்டுள்ளது. சபையின் ஊழியக்காரர்கள், அதிகாரிகளாகவும் சர்வாதிகளாகவும் நடக்க முயற்சிக்கிறார்கள். தங்களுடைய நெருங்கிய நண்பர்கள், மூப்பர்களாகவும் உதவிக்காரர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தினை நிறைவேற்றும்பொருட்டு, தேர்தல் நடைபெறும் கூட்டத்தில் தலைமைப் பொறுப்பைப் பிடித்துக் கொள்கிறார்கள்(holding the chairmanship of the meeting). தனக்கு வாக்களிக்கவில்லை என்ற காரணத்தினால், ஒரு மூப்பர் குறிப்பிட்ட சபை ஐக்கியத்தில் செய்தியளிக்க மறுத்துவிட்டார் என்பதுபோன்ற சம்பவங்களை நாம் கேள்விப்படுகிறோம். ஆயினும் அந்த மூப்பர், தன்னடக்கத்துக்கும், தாழ்மைக்கும், சாந்தத்துக்கும் அடையாளமாக இருப்பதாக தனக்குத்தானே எண்ணிக்கொள்கிறார்.

ஓ! தேவனுடைய வசனத்தின்படியான போதனைகளையும் அறிவையும் அடைந்து, கர்த்தரோடு உடன்சுதந்திரராகும் நம்பிக்கையை எதிர்நோக்கி, எப்படிப்பட்ட நிபந்தனைகளை அடையவேண்டும் என்று அறிந்திருப்பவர்கள் மத்தியில் , இப்படிப்பட்ட ஆவி இடம்பிடிப்பது எத்தனை அவமானத்துக்குரியது! இப்படிப்பட்ட காரியங்களில் பல்வேறு அளவுகளில் வீம்புத்தனங்கள் நிலவுகின்றன. சிலர், தங்களுக்கும் தங்கள் நண்பர்களுக்கும் சாதகமான நேரத்தில் தேர்தலை நடத்த இரகசியமாக முயற்சித்து, சபையில் அனுகூலமடையப் பார்ப்பார்கள். மற்றவர்களோ, தேர்தல் நடக்கும்போது சபைக்கூட்டங்களில் கிரமமாக கலந்துகொள்ள எண்ணமில்லாதிருக்கிற, அந்நியர்களைப்போன்ற தங்கள் நண்பர்களை கூட்டமாக வரவழைத்து, அவர்கள் நட்புக்காக தங்களது நண்பருக்கு வாக்களிப்பார்கள்.

அதோடுகூட, இப்படிப்பட்டவர்கள் சுயநலநோக்கமுடைய தலைவர்களாகவும், போதிக்கிறவர்களாகவும் தங்களை வெளிப்படுத்தி, ராஜரீகப்பிரமாணத்தின் கொள்கைகளையும், அதோடு, புதுசிருஷ்டிக்குரிய விசேஷித்த அறிவுரைகளையும் அலட்சியப்படுத்துவதை பொதுவாக எதிர்நோக்குகிறோம். இவர்களே தவறான உபதேசங்களை கொண்டுவருகிறார்கள். விரோதியின் இந்த சுயநல நோக்கமுடைய ஆவி, சபைகளில் மேன்மையும் கனத்தையுமுடைய போராடவும், மாபெரும் போதகர்களாகவும், புதிய வெளிச்சத்தைக் கொண்டுவருபவர்களைப்போல தங்களை நிலைநிறுத்திக்கொள்ள வழிநடத்துகிறது. இதுவும் சாத்தானுடைய குணாதிசயங்களில் ஒன்று என அப்போஸ்தலர் விவரிக்கிறார். அவர் கூறுகிறார்; "இதில் வியப்பு என்ன ? சாத்தான்கூட ஒளியைச் சார்ந்த தூதனாக நடிக்கிறானே ? ஆகவே அவனுடைய ஊழியக்காரரும் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக நடிப்பதில் வியப்பு ஒன்றுமில்லை". அவர்களிடத்தில் தன்னைத் தலைவனாக அவன் தோற்றமளிக்கச் செய்கிறான்– 2கொரிந்11:14(திருவிவிலியம்).

அநேக சம்பவங்களில், வேத மாணவர் சபைகளில் உள்ளவர்கள் அறிக்கையிடுவதுபோலவே, அச்சபைகளையே குற்றம் சுமத்தலாம். சில நிகழ்வுகளை நாம் கவனிக்கும்போது, மூப்பராக தெரிவுசெய்யப்பட்டவர் கர்த்தருக்கென்று தன்னை அர்ப்பணிக்காதவராகவும், தன்னை கர்த்தருக்கென ஒப்புக்கொடுத்ததை வெளிப்படையாக காண்பிக்கும் அடையாளமான ஞானஸ்நானம்கூட எடுக்காதவராக இருக்கிறார். இவ்வாறு நடக்க காரணம் என்ன ? அந்த வகுப்பில் விசேஷித்த தாலந்தை உடையவர் ஒருவரும் இல்லாததால், ஒரு சகோதரராகக்கூட கருதமுடியாத அவரை, கிறிஸ்துவுக்குள்

புதுசிருஷ்டியாகாத ஒருவரை, அவரிடத்தில் பிரசங்கம் பண்ணும் தாலந்து மட்டும் இருக்கிறது என்பதனால் தெரிவுசெய்திருக்கிறார்கள். வேதமாணவர்களிடையே ஒரு கற்பிப்பவர் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்ட இவரிடம் எதை எதிர்பார்க்கமுடியும்? கர்த்தருடைய வசனத்தின் வழிகாட்டுதல்களுக்கு முரணாக முன்நிறுத்தப்பட்டதன்நிமித்தமாக, அந்நபரிடமிருந்து காயப்படுதலையே நாம் எதிர்பார்க்கமுடியும். ஜென்ம சுபாவமனுஷன், தான் ஆவிக்குரியவைகளை பெற்றுக்கொள்ளமுடியாதபோது, கர்த்தரோடு பிரதிஷ்டைக்குட்பட்டிருக்கும் ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு, ஆவிக்குரியவைகளை எப்படி பகிர்ந்து கொடுக்கமுடியும்? கர்த்தருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவராக தன் ஜீவியத்தை ஒப்புக்கொடுக்காத ஒருவரை, அவரது வசனத்தால் அறிவுறுத்தப்படாத ஒருவரை கர்த்தர் வழிநடத்துவார் என்று எப்படி நாம் எதிர்பார்க்கமுடியும்?

தகுதியற்ற தலைவர்களைத் தெரிவுசெய்வது, ஆதாரப்பூர்வமாக ஒரு பாவமாகும். தகுதியற்ற தலைவர்களைக் கொண்டுள்ள சத்திய சபைகளுக்கு அவப்பெயரையே கொண்டுவரும். சபைக்குள் பிந்திவந்து சேர்ந்தோருடைய வாக்குக்கள் இல்லாமல், கர்த்தருடைய பிள்ளைகளது பிரதிநிதிகளாக, இப்படிப்பட்டவர்களால் எப்படி ஸ்தானங்களைப்பெற முடியும்? பொதுமேடைகளில் பேசும் ஆற்றல், ஒரு மூப்பருக்கு இருக்கவேண்டிய பல தகுதிகளுள் ஒன்றுமட்டுமே என்பதை கர்த்தருடைய பிள்ளைகள் எப்பொழுது கற்பார்கள்? பெயர்சபைகளைப் பின்பற்றி, பேச்சளவில் வெறுஞ்சொல்லோட்டமாக உள்ள நபர்களை, ஆவிக்குரிய வகையில் குறைவுபட்டவர்களை முன்நிறுத்துவதனால், கர்த்தரின் ஊக்குவிக்கும் நோக்கம் மற்றும் நேரம் வீணடிக்கப்பட்டுள்ளது என்பதையும், சகோதரரிடையே ஆவிக்குரிய நிலை திக்குமுக்காடச் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மீண்டும் குறிப்பிடுகிறோம்.

இப்படிப்பட்ட நிலைமையில் உலகத்தின் முன்பாக மாம்சத்தின் பிரகாரம் கவர்ச்சியாக காணப்படும்படிக்கு விரும்பி, ஒரு வேதமாணவர்களது அச்சபை செய்தது பெருமையாகத் தோன்றவில்லையா? அப்படிப்பட்ட எண்ணம் இல்லாவிடில், அப்படிப்பட்ட நபர்களை ஏன் அவர்கள் தெரிந்தெடுக்கவேண்டும்? அவர்கள் தவறு செய்திருப்பார்களானால், ஏன் அமைதலான மற்றும் நேர்மறையான முறையிலும், அதை சீர்திருத்திக் கொள்வதில்லை? மூப்பர்கள் தங்கள் சபையை தங்களுடைய வல்லமை மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரத்தேடி வெற்றிபெறும்பொழுது, அந்த சபையார் ஜெயங்கொள்வோராயிருக்கவும், திடமனதாயிருக்கவும் காணவிரும்புகிற கர்த்தர், இந்த இயல்பில் குறைவுபட்டிருக்கிறதை இது காண்பிக்காதா? மேலும், வேதாகமத்தின்படி அல்லாத வழிமுறைகளை அவர் கையாண்டு வெற்றிபெற அவரை சபை அனுமதிப்பதால், அப்படிப்பட்ட அதிகாரியாகப் போகிறவரையும், தன்னையும்(சபை) காயப்படுத்திக் கொள்ளாதா?

**வஞ்சிப்பவர்களும், வஞ்சிக்கப்படுபவர்களும்**

உலகிலுள்ள சுயநலஆவியும், சுயகுறிக்கோளுடைய ஆவியும், அராஜகத்துக்கு வழிநடத்திச்செல்லும் என்று நாம் ஏற்கனவே மறைமுகமாக குறிப்பிட்டிருந்தோம். மேலும், இம்மாதிரியான சுயநலமும், சுயகுறிக்கோளை அடையும்ஆவியே, சபையில் அராஜகத்தைக் கொண்டுவர வழிநடத்திச்செல்கிறது என்றும் நாம் இப்பொழுது சுட்டிக்காண்பித்திருந்தோம். உலகத்தின்மேல் வரும் உபத்திரவக்காலம் இந்த உண்மைகளின் அடிப்படையிலேயே என்று நாம் முன்னறிந்தோம். அதுபோலவே, சபையின்மேலும் உபத்திரவக்காலம் உள்ளது. இந்த வஞ்சிக்கும் வகுப்பாரால் உலகம் துப்புரவு அடையாது, ஏனெனில் தலைவர்களும் சுயசிந்தனையற்றவர்களும் உலகத்தின் ஆவியைப் பெற்றுள்ளனர். இது நிச்சயமாக நிலைமையை மேலும் மேலும் மோசமாக்குகிறது. ஆனால் கிறிஸ்துவின் சபையில் அவ்வாறு அல்ல, நாம் பெற்றிருப்பது நம் போதகரின் ஆவி, சத்தியத்துக்கு உண்மையாயிருக்கும் ஆவி, ராஜரீகப் பிரமாணத்தின் ஆவி, சகோதர அன்பின்ஆவி, சுயாதீனம் மற்றும் உதவும் ஆவி, சத்தியம் என்று நாம் விசுவாசிப்பதில் மெய்ப்பற்றுள்ள ஆவி. இந்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறவர்கள், சுயநலநோக்கமுடைய மனிதர்களின் (சிலசமயங்களில் சுயகுறிக்கோளுள்ள ஸ்திரீகளின்) ஆதிக்கத்தின்கீழ் தொடர்ந்து நிலைத்திருந்தார்களானால், சபைக்கு இது மன்னிக்கப்பட முடியாததாகிறது. அவர்கள் முறையான வழிகளில் தங்கள் சபை நடவடிக்கைகளை நடத்திவரவில்லையெனில், அவர்கள் ஒருமுறைகூட இன்னும் துவங்கவில்லையோ? கர்த்தருடைய வீட்டை ஒழுங்குமுறைக்குள் கொண்டுவர இதுவே சரியான தருணம் என்று நாம் நம்புகிறோம்.

ஆனால் ஒருவர் கூறுகிறார்; "எங்கள்மேல் அதிகாரிகளாகவும், ஆளுபவர்களாகவுமிருந்து எங்களை இறுக கவ்விக்கொண்டிருப்பவர்களுடைய நலன்களுக்கு எதிராக நாங்கள் ஏதாவது செய்ய முயற்சித்தால், நாங்கள் பெரும் கலக்கத்தை அடைவோம். நாங்கள் ஏதாவது முயற்சி செய்தாலும்கூட, சபையில் பிளவு உண்டாகும் இடர்ஏற்படும். அப்படி திடீர் அழிவு ஏற்படுத்தும் யாதொன்றைக்குறித்தும் எப்படி எங்களால் யோசிக்கமுடியும்?

எது சிறந்ததாக இருக்கும்? கர்த்தர் அறிவுறுத்தியிருக்கிற வழியில்செல்லும் ஒரு குறைந்த எண்ணிக்கையிலான சபையை உடையோராயிருப்பதா? அல்லது கர்த்தருடைய ஏற்பாட்டுக்கு முரணான கொள்கைகளை நிலைநிறுத்துகின்ற, தங்களுக்கு காயத்தை வருவிக்கிற, தங்கள் செல்வாக்கைத் தடைசெய்கிற, ஓநாயாகவோ அல்லது அதன்ஆவியைப்பெற்று தவறாக நடத்தப்படுகின்ற, செம்மறிஆட்டைப்போன்ற தலைவரைக்கொண்டு இருக்கும் – திரளான எண்ணிக்கையுள்ள வகுப்பில் இணைந்திருப்பதா?

இப்படிப்பட்ட உபத்திரவத்திலிருக்கும் எல்லா அன்பு சகோதரர்களே, நீங்கள் மாபெரும் அருஞ்செயல்வீரர்களாக இருங்கள் என நாங்கள் உற்சாகமூட்டுகிறோம். யாதொன்றையும் வீண் பெருமைக்காகவோ, அல்லது சண்டை சச்சரவின் பொருட்டோ செய்யாமல், எல்லாவற்றையும் சாந்தம் மற்றும்அன்பின்ஆவியில் செய்யும்படி பாருங்கள். இதனால், அவர்கள் கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமைக்கு மீண்டும் வரும்படியும், எந்த மனித அடிமைத்தளைக்குள் மீண்டும் செல்லாதவாறு இருக்கவும் பாருங்கள்.

**போதனைரீதியான பரீட்சைகளும் எழும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்**

காவல் கோபுர சங்கத்தின் வெளியீடுகளை பயன்படுத்துவதற்கு தங்களது மூப்பர்கள் தடைசெய்ய முயல்வதாக, வேதமாணவர்கள் தொடர்ந்து எங்களுக்கு எழுதி வருகின்றனர். அந்த மூப்பர்களில் ஒருசிலர், தாங்கள் இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட அநேக காரியங்களுக்கு இசைவில்லாதிருப்பதாக வேதபாட வகுப்புக்களிலேயே கூறுகின்றனர். சிலசமயங்களில், ஆளுகை செய்வோராயிருந்து, இப்புத்தகங்களை தங்களது வேதபாட வகுப்புக்களில் உபயோகிக்க தடைவிதிக்கின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் என்ன செய்வது என்று எங்களிடம் சிலர் கேட்கின்றனர்.

அப்படிப்பட்ட தலைவர்களைப் பின்பற்ற விரும்புவோர், அவர்களது உரிமைப்படி அப்படியே செய்துகொள்ளட்டும் என்று அதற்கு நாங்கள் பதிலுரைக்கிறோம். நாமும் அவர்களை வாழ்த்துகிறோம். ஆனால் நாமோ அவர்களைப் பின்பற்றாமலும், அப்படிப்பட்ட ஏற்பாடுகளுக்கு ஒருகனம்கூட நம்மை ஒப்புக்கொடாமலும் இருப்போமாக. அங்கத்தினர்கள் என்னசெய்யவேண்டும், எதை செய்யக்கூடாது என்று அதிகாரமாய் பேச முயற்சிக்கிற ஒருவர், இப்படிப்பட்ட தன்மையில் உரிமையில்லாமல் தலையிடுகிற தலைவராயிருந்து, மதிப்பின்மையை தேடிக்கொள்கிறார். சபையாரின் கைகளில் தெரிந்தெடுக்கும் அதிகாரம் இருப்பதுபோல், நீக்கும் உரிமையும் அவர்களது கரங்களிலேயே உள்ளது. அப்படிப்பட்ட ஒரு மூப்பரை அவரது ஊழிய ஸ்தானத்திலிருந்து நீக்கும்படி அப்படிப்பட்ட சபை வகுப்புக்களுக்கு நாம் பரிந்துரைக்கிறோம். அவரது ஊழியங்கள் இனிமேலும் விரும்பப்படவில்லை என்பதை அன்புடன் அவரிடத்தில் தெரிவித்துவிடவேண்டும். ஒருசில காலம் அந்த மூப்பர் பின்இருக்கையில் அமர்ந்து, அக்காரியத்தைக்குறித்து சிந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்து, அதனால் தான் ஆதாயமடைவதோடுகூட, அப்படிப்பட்ட நிலைப்பாட்டை எடுத்ததால் சபைக்கும் பெரிதாக உதவிகரமாயிருக்கும். சபையில் பொதுக்கூட்டம் நடத்தவோ, அல்லது சபைகளை வழிநடத்த பழக்கப்பட்ட தகுதிவாய்ந்த வேறு எவரும் இல்லை என்பது ஒரு பொருட்டல்ல. உங்களிலிருந்து யாராவது ஒருவரைஒரு தலைவராக செயல்படும்படி நியமிப்பது மிக சிறந்ததாயிருக்கும். உங்களது சுயாதீனத்தைப் பாதுகாத்துக்கொண்டு, தொழுகையையும் சத்தியங்களை கற்பதிலும் முறையான வழிமுறைப்படி தொடர்ந்து ஈடுபடுங்கள்.

வேதாகமம் போதிக்கும் நேரிய தன்மையுள்ள கிறிஸ்துவின் போதனைகளுக்கும், அந்த போதனைகளை சிறிது மாறுபாடான வழிகளில் போதிப்பதற்குமிடையிலுள்ள வித்தியாசத்தை வகைப்படுத்திப் பார்ப்போமாக. ஒரே மாதிரியான வார்த்தைகளை எந்த இரு நபர்களும் துல்லியமாகப் பேசுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஆனால் குறிப்பிட்ட சில போதனைகள் பெரும்பாலான வேதமாணவரது கண்ணோக்கத்தின்படி, துரிதமாய் இருதயத்தை சென்றடைந்து, அசையாது இருக்கிறது. அப்படி பதிந்துள்ள அடிப்படை போதனைகளுக்கு இசைவாயிராத எவரையும் சிறிதளவுகூட உற்சாகப்படுத்தக்கூடாது, அதற்கு பதிலாக, அவர்களைத் தடைசெய்யவேண்டும். அவர் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பாராகில் இருண்ட யுகங்களில் செய்தவாறு அவரை துன்புறுத்தாமல், முறையான வழிமுறையைப் பின்பற்றி, தனக்குத்தானே மந்தையாகக்கொண்டு இயங்கும்படி அவரை விட்டுவிடவேண்டும். அல்லது அந்த நபரது கண்ணோட்டத்தை தெரிவுசெய்ய விரும்புவோரை அவர்களது விருப்பப்படி விட்டுவிடவேண்டும்.

இதற்குமுன்பு இப்படிப்பட்ட கடுமையான ஆலோசனையை நாம் கொடுத்ததில்லை. ஆனால் மந்தையின் ஆடுகளில் அநேகர் பாதிக்கப்பட்டுள்ளனர் , வளர்ச்சிக்கு தடை ஏற்பட்டுள்ளது, அவர்கள்மேல் திணிக்கப்பட்டுள்ளது என்று நாம் உணர்ந்திருக்கிறோம். இந்த விகிதாச்சாரத்திற்கேற்ப, அப்படிப்பட்ட மூப்பர்களும் உதவிக்காரர்களும் அதிக தைரியமுள்ளோராய் வளர்ந்துவருகிறதை நாம் காண்பதால், சரியான ஆவியைப் பெற்றுள்ள அனைவரும் கர்த்தருடைய வழிகாட்டுதலின்கீழ், யுகங்களைப்பற்றிய தெய்வீகத் திட்டத்தைப்பற்றின பாடங்களை கற்பதன் அவசியத்தைப் புரிந்துகொண்டிருக்கிறோம். “நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவிதக் காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்..”, தங்களுக்கு நன்மையான நேரிய சிந்தையின் நிலைப்பாட்டைத் தெரிந்துகொண்டு, தவறான ஆவியை வெளிப்படுத்தும் தலைவர்களுக்கும் அது நன்மை பயப்பதாயும், முன்னெப்போதுமிராத அளவு, கர்த்தரது வழியை விசாரிக்கிற பொதுஜனங்களுக்கும் நன்மை விளைவிப்பதாயும் அது இருக்கும்.

நாம் ஆக்கப்பூர்வமானதும், திடப்படுத்துவதுமானவற்றை உற்சாகமூட்டினாலும், எளிமையும் அடக்கமுமான ஆவியை வெளிப்படுத்துகின்றவர்களும் நன்கு ஊழியம் செய்ய தேடுபவர்களும், அந்த உண்மை வகுப்பார்க்குரிய நீதிக்கும் சுயாதீனங்களுக்கும் இசைவாக நடப்பவர்களுமாகிய கர்த்தருடைய உண்மை ஊழியர்களிடையே குற்றங் கண்டுபிடித்தலையும், நச்சரித்தலின் ஆவியையும்,

சண்டைசச்சரவின் ஆவியையும் ஊக்கப்படுத்தக்கூடாது. ஒருபோதும் தெரிந்தெடுக்கப்படாதவர்களது அல்லது முறையாக தெரிவுசெய்யப்பட்டிராத இவர்களது சுயநல நோக்கமுடையதும், புரட்டப்பட்டதுமான சிந்தையை வெளிப்படுத்தி வந்திருக்கிறபடியால், இவர்களது ஆதிக்கத்திலிருந்து சபையை சுத்திகரிப்பதை ஒரே நோக்கமாகக்கொண்டிருந்து, "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாதிருக்க நாடுங்கள்" என்று சொன்னதையே நாம் மீண்டும் சொல்கிறோம். மாறாக, தேவனுடைய மகிமைக்கென்றே எல்லாவற்றையும் செய்யுங்கள் என்று நாம் முன்பு கூறியதையே மீண்டும் கூறுகிறோம். இவர்கள் மனந்திரும்புவார்களானால், கர்த்தருடைய இரக்கத்தினால் சீர்பொருந்தி, திடநம்பிக்கையை பின்பு அடைவார்கள் என்ற நோக்கத்துடன், இவர்களுக்கு ஆக்கப்பூர்வமானதும் கருணை நிறைந்ததுமான இவைகளையே நாம் ஆலோசனையாகக் கூறுகிறோம்.

"நீங்கள் சபையிலே கூடிவந்திருக்கும்போது, உங்களில் பிரிவினைகள் உண்டென்று கேள்விப்படுகிறேன்; அதில் சிலவற்றை நம்புகிறேன்; உங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும்படிக்கு, மார்க்க பேதங்களும் உங்களுக்குள்ளே உண்டாயிருக்கவேண்டியதே" – 1கொரிந்11:18,19. இங்கு, பிரிவினை கண்டிப்பாக வந்தாகவேண்டும், வெகுவிரைவில் அது வந்தேதீரும், சத்தியத்தினிமித்தமும் அதை நேசிப்பவர்களினிமித்தமாகவும் அது வருவது நல்லதே.

**என் ஆவியினாலே ஆகும் என்று கர்த்தர் கூறுகிறார்**

"ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் ஆவிக்குரிய பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்". என்ற அப்போஸ்தலரது அறிவுரையை நாம் ஒருக்காலும் மறக்கக்கூடாது(1கொரிந்2:14). கூடுதலாக, நாம் பரிசுத்தஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தபிறகும்கூட, ஆவிக்குரியவைகளைப் புரிந்துகொள்ளும் நமது ஆற்றலானது, நம்மை ஞானவான்களாக்கும் வேதாகமப்படிப்பு மற்றும் கற்பதினால் மட்டுமல்ல, அதோடுகூட, நாம் பெற்றிருக்கிற பரிசுத்தஆவியின் அளவைப் பொறுத்ததுமாகும் என்று அனுபவம் நமக்கு நிருபித்திருக்கிறது. ஆகவேதான் அப்போஸ்தலர்; "ஆவியில் நிறைந்திருங்கள்" என்று புத்திமதி கூறியிருக்கிறார் – எபேசி 5:18.

தேவனுடைய ஆழமான காரியங்களை ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் மட்டுமே புரிந்துகொள்வர் என்பது இதன் அர்த்தம். அவர்கள் தேவஆவியும், கிறிஸ்துவின்ஆவியும், சத்தியஆவியுமாகிய பரிசுத்தஆவியால் எந்தளவு அதிகதிகமாக நிரப்பப்பட்டிருக்கிறார்களோ, அந்தஅளவைப் பொறுத்தே அவர்களது புரிந்துகொள்ளும் அளவு இருக்கும். ஒரு புது சிருஷ்டியாக, ஒருவன் ஆவியின்படி நடவாமல் மாம்சத்தின்படி நடப்பானாகில், அவனது சிந்தை ஓரளவாவது இருளடையும். தேவனுடைய ஆழமான காரியங்களை புரிந்துகொள்ளும் ஆற்றல் அவனுக்கு குறைந்துபோகும், கர்த்தருடைய வார்த்தையை நினைத்துப்பார்க்கும் ஆற்றலும் குறைந்துபோகும் என்பதை ஒவ்வொரு வேதமாணவனும் உணர்ந்துகொள்ளவேண்டும். அதற்கு மாறாக, அவன் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடந்து, கர்த்தரிடத்தில் நெருங்கி ஜீவிக்கும்போது, தெய்வீக வசனத்தைக்குறித்த அவனது நினைவாற்றலும், அதன் ஆவியை மதிப்பிடும் அவனது ஆற்றலும் அதிகரிக்கும்.

படிப்பாளிகள் மற்றும் திறமைசாலிகள் அனைவரும் கர்த்தருடைய வசனத்தை சரியாகப் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதையும் கூடுதலாக நாம் நினைவில்கொள்ளவேண்டும். பின்பு, யாருக்கு சரியான புரிந்துகொள்ளுதல் சென்றடையும்? சாந்தமும் கற்கும் இருதயமுடையோரிடத்திற்கே. இவர்கள் கர்த்தருடைய வார்த்தையை கற்று, அதன்படி வாழவும், அதன் ஆவியை அடையவும் விரும்புவர், இவ்வாறாக தெய்வீக பிரகடனம் நமக்கு தெளிவாக்குகிறபடி; "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" – சகரியா 4:6.

எந்த சகோதரனோ அல்லது சகோதரியோ, அவர்கள் எவ்வளவு உயர்ந்தவர்கள், எத்தனை திறமைசாலிகளாயிருப்பினும் அது ஒரு பொருட்டல்ல, இவைகள் இப்படிப்பட்டவர்களை கர்த்தரது பிள்ளைகளுக்கு தலைவராக தகுதிப்படுத்தாது. அவைகளோடுகூட, எல்லாவற்றைக்காட்டிலும் மிக முக்கியமானவைகள் – முதலாவதாக, கர்த்தருடைய வார்த்தையைக் குறித்த அறிவு; இரண்டாவதாக, சத்திய ஆவியை போதுமான அளவில் அடைந்திருப்பது. இவைகளே கர்த்தரது தூதுவராக இருக்கும் நம்பகத்தன்மையை எப்பொழுதும் தருகிறது. மற்ற எவரும் கர்த்தருடைய பிள்ளைகளிடையே கற்பிப்போராயும், தலைவராயும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். ஆனால் உயர்ந்தவர்களும், கற்றோரும், திறமைசாலிகளுமே கர்த்தரது வசனத்திற்கான ஊழியர்களாக இருக்கவேண்டும் என்பது, இயேசுவுக்குப் பதிலாக திருச்சபையையே மையமாக சார்ந்துள்ளோருடைய கருத்தாக உள்ளது(It is the thought of Churchianity). ஆனால் வேதாகமம் முன்னிலைப்படுத்துவதோ, இக்கருத்துக்கு எதிராக இருக்கிறது.

"கர்த்தராகிய தேவனுடைய ஆவி என்மேல் இருக்கிறது; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர்என்னை அபிஷேகம் பண்ணினார்" – ஏசாயா 61:1.

இக்காரியங்களை மனதில்கொண்டு, கர்த்தருடைய ஆவியை வெளிப்படுத்தும் அப்படிப்பட்ட மூத்த சகோதரர்களுக்கு இரட்டிப்பான கனம் அளிக்கவேண்டும் என்று எவ்விடத்திலுமிருக்கிற வேதமாணவர்களின் வகுப்புக்களை நாம் வலியுறுத்துவது நியாயமென நாம் உணர்கிறோம். அந்த மூத்த சகோதரர்கள் சாந்தத்தின் ஆவியை, தயாளகுணத்தின் ஆவியை, பொறுமையின்

ஆவியை, சகிப்புத்தன்மையின் ஆவியை, சகோதர சிநேகத்தின் ஆவியை, அன்பின்ஆவியை உடையோராயிருந்து, தெய்வீகத்திட்டத்தையும், தேவவசனத்தில் நல்ல அறிவையும் பெற்றிருப்பவர்களாயும், பரிசுத்தத்தின்ஆவியாகிய சத்தியஆவியின் மதிப்பீடுகளை வெளிப்படுத்துவோராயும், போதிக்க தகுதிபெற்றவராயும் இருப்பார்கள். இந்தஆவிக்கு முரண்பாடாயிருக்கிறவர்கள் மறுக்கப்படவேண்டும்.

**கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகிய ஊழியரது கேள்விகள்**(V.D.M. Questions)

பெயர்சபைகள் தங்கள் ஊழியக்காரர்களுக்கு சூட்டும் அநேக பெயர்கள் வேதஆதாரமற்றவை. உதாரணத்துக்கு கூறுவோமாகில், போற்றுதலுக்குரிய(Reverend), மிகவும் போற்றுதலுக்குரிய(Most Reverend), தெய்வீகத்துவத்தில் முனைவர் ( Doctor of Divinity ) என்பது போன்றவைகள். இவர்கள் வேதாகமத்தின் எழுத்தை மட்டும் எதிர்க்கிறவர்களாயிராமல், அதன் ஆவியையும் எதிர்க்கிறார்கள். மூப்பர், உதவிக்காரர், போதகர் என்பவை வேதாகம சொற்களாயுள்ளன என்ற உண்மையை நாம் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம். மேலும் கிறிஸ்துவின்பிரதிநிதிகளாகிய ஊழியர்(Verbi dei minister) என்ற லத்தீன் சிறப்புப்பெயரை பார்வைக்கு முன் நிறுத்துகிறோம். முன்கூறப்பட்ட இந்த வார்த்தை, வெளியரங்கமாக தெய்வீக வசனத்தை பிரசங்கிக்கும் ஊழியக்காரர் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் பிரதிநிதியாய் இருக்கிறார், மாறாக மனித கோட்பாடுகளையோ, அல்லது சுயத்தையோ பிரசங்கிக்கும் ஊழியரல்ல என்ற வேதாகமத்தின் கருத்தை பொருத்தமாய் உரைக்கிறது. தேவனாலும் அவரது பிள்ளைகளாலும் அங்கீகரிக்கப்பட்ட வேதமாணவர் அனைவரும், வேதாகமத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள தங்களது தாலந்துகள், வாய்ப்புக்கள் மற்றும் வரையறைகளின்படி தெய்வீக வசனத்தின் கட்டாய ஊழியக்காரராயுள்ளனர்.

அநேக வேதமாணவர்களின் நல்ல வகுப்புக்கள் தாங்கள் தங்களது பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்க இருப்பவர்களது தகுதிகளைப்பற்றின விஷயத்தில் போதுமான அளவு கவனமாகவும், நுட்பமாகவும் இருப்பதில்லை என்ற உண்மையைக் காணமுடிகிறது. நாம் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகிய ஊழியரது கேள்விகள்(V.D.M questions) என்று ஒரு சில கேள்விகளை முறைப்படுத்தியிருக்கிறோம். இந்தக் கேள்விகளைப்பற்றிய கற்றலானது, ஒவ்வொருவருக்கும் உதவிகரமாயிருக்கும் என்று நாம் நம்புகிறோம். இதற்கான பதில்கள் தெய்வீக வசனத்தின் அறிவை பகுத்துணர உதவும். இதனால் இதனைக் கற்றவர்களது ஊழியங்கள், ஆதாயமளிக்கக்கூடியதாயும், காயமேற்படுத்தாததாயும் இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந்தக் கேள்விகள் பிரிவினை சபைகளுடையதல்ல. மாறாக, எந்த சபைப்பிரிவினைச்சார்ந்த, எந்த ஊழியக்காரருக்கும் பொருத்தமானதாக இருக்கும். அவைகள் கண்ணியை வருவிக்கும் கேள்விகளோ, அல்லது விழிப்பாயிராதவர்களை பாதையிலிருந்து வழுவச்செய்யும் நோக்கமுடையவையல்ல. அவைகள் உண்மையுள்ள கேள்விகள். இதற்கான பதில்கள் ஒவ்வொரு தனிநபருக்கும் உதவிபுரியும். விசேஷமாக, கர்த்தருடைய பிள்ளைகளுக்கிடையே தலைவர்களாயும், கற்பிப்போராயும் அமர்த்தப்படுவதற்கு இவை உதவும்.

முதிர்ச்சியடைந்த கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகிய ஊழியர்க்கான கேள்விகள் :–

(V.D.M questions for Advanced Bible students)

1. தேவனுடைய முதலாவது சிருஷ்டிப்பின் செயல்பாடு எது ?

2. தேவகுமாரனோடு தொடர்புடைய லோகோஸ்((Logos) என்ற பொருளுக்கான அர்த்தம் என்ன ? மேலும், பிதா மற்றும் குமாரன் என்ற வார்த்தைகள் எதை தொடர்புபடுத்துகிறது ?

3. உலகில் எப்பொழுது, எப்படி பாவம் நுழைந்தது ?

4.பாவிகள்மேல், பாவத்திற்கான தெய்வீக தண்டனை என்ன ? மேலும் ,பாவிகள் யார் ?

5. மாம்ச சாயலை எடுக்க, “லோகோஸ”க்கு ஏன் அவசியமாயிற்று ? அவர் அவதாரம் எடுத்தாரா ?

6. மனிதனாகிய கிறிஸ்துஇயேசு, குழந்தைப்பருவத்திலிருந்து மரணம்வரை என்ன சுபாவத்திலிருந்தார் ?

7. இயேசு உயிர்த்தெழுந்ததுமுதல், என்ன சுபாவத்திலிருக்கிறார் ?

8. இந்த சுவிசேஷயுகத்தின்போது, பெந்தெகொஸ்தே முதல் தற்போதுவரை இயேசுவின் பணி என்ன ?

9. யேகோவா தேவனால் உலக மனுக்குலத்துக்கு இம்மட்டும் செய்யப்பட்டது என்ன ? அதுபோலவே இயேசு கிறிஸ்துவால் செய்யப்பட்டது என்ன ?

10. சபை நிறைவடைந்தபிறகு அதனைக்குறித்த தெய்வீக நோக்கம் என்ன ?

11. உலக மனுக்குலத்தைப் பொறுத்தவரையில், தெய்வீக நோக்கம் என்ன ?

12. சீர்திருத்த முடியாதவர்களைக் குறித்த இறுதி முடிவு என்ன ?

13. மேசியாவின் இராஜ்யத்தில், உலக ஜனங்கள் கீழ்ப்படிவதன் மூலமாக வரவிருக்கின்ற வெகுமதி அல்லது ஆசீர்வாதங்கள் என்ன ?

14. பரலோகப்பிதாவோடும் கிறிஸ்துவோடும் உறவுக்குள் நுழைய, பாவிகள் என்ன படிகளை எடுக்கவேண்டும் ?

15. தேவனுடைய வசனத்தில் வழிகாட்டியபடி, ஒரு கிறிஸ்தவன் பரிசுத்தஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டபிறகு, அவனது நடைமுறை எப்படியிருக்கவேண்டும் என்று தேவவசனம் வழிகாட்டுகிறது ?

16. ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியம் செய்யும்படிக்கு நீ பாவத்திலிருந்து மனந்திரும்பியிருக்கிறாயா ?

17. கர்த்தருடைய ஊழியத்துக்கு உன் எல்லா வல்லமைகளையும் தாலந்துகளையும் செலவிட, உன்னை அவருக்கு முழுதத்தம் செய்திருக்கிறாயா ?

18. அடையாளமான தண்ணீர் முழுக்கின் வழியாக உன் பிரதிஷ்டையை வெளிப்படுத்தியிருக்கிறாயா ?

19.வேதமாணவரின் பரிசுத்தமான வாழ்வு வாழ பொருத்தனை எடுத்திருக்கிறாயா ?

20. வேதாகம விளக்கவுரையின் ஆறு தொகுதிகளையும் முழுமையாகவும், கவனத்தோடும் படித்திருக்கிறாயா ?

21. அந்த ஆறு தொகுதிகளிலிருந்து அதிக வெளிச்சமும் ஆதாயமும் பெற்றிருக்கிறாயா ?

22. வேதாகமத்தின் மெய்யானதும் நிரந்தரமுமான அறிவை பெற்றிருக்கிறேன் என்றும், இந்த அறிவு, கர்த்தருடைய ஊழியக்காரனாக உன் எஞ்சியுள்ள வாழ்வை கையளிக்க ஆற்றலைத்தரும் என்றும் நம்புகிறாயா ?

வேதாகமம், வேதாகம விளக்கவுரைகள் மற்றும் ஆசரிப்புக்கூடார நிழல்கள் ஆகியவற்றைக்கொண்டு ஆலோசனைபண்ணி, ஒவ்வொரு சகோதரரும் இந்த அறிக்கையை தன் சொந்த அறிவின் மூலம் நிரப்பவும்.

---

## உலகளாவிய மேய்ப்பரது வேலை

அசோசியேடெட் வேத மாணவர்களின் (Associated Bible Students) 500 சபைகளானது இதழாசிரியரைத் தங்கள் மேய்ப்பனாக மனமார தேர்ந்துகொண்டு, வாட்ச் டவர் பத்திரிக்கைகளின் பக்கங்கள் வாயிலாக அவர் உண்மைகளை வெளிப்படுத்தியும், மேய்க்கும் வேலையையும் செய்துகொண்டு வருவதோடுகூட, அவர் தங்களை ஜெபத்தில் நினைவுகூரவும் மற்றும் அவர்களுக்குப் பிரயோஜனமாகவும், கர்த்தருக்கு மகிமையாகவும் காணப்படும் என்று அவர் நம்புகிற ஆலோசனைகளை அவ்வப்போது பிரதிநிதிகள் வாயிலாகவும், தந்தி வாயிலாகவும் தங்களுக்கு அனுப்பும்படிக்கும் வேண்டிக் கொண்டு, அவரை மேய்ப்பனாகத் தெரிந்தெடுத்த காரியத்தினை Watch Tower Bible Tract Society-கு தெரியப்படுத்தியுள்ளனர்.

சகோதரர்கள் மத்தியில் கர்த்தருடைய ஊழியங்கள் நடைபெற்று வருவதைக்குறித்து நாம் சந்தோஷப்பட்டிருக்கின்றோம் மற்றும் மாபெரும் இராஜாவுக்கு ஊழியம் புரியத்தக்கதான மற்றும் அவரது பின்னடியார்களுக்கு உதவத்தக்கதான ஊழியங்களை அவர்கள் செய்யத்தக்கதான வழிகளையும், வழிவகைகளையும் திறந்துகொடுப்பதில் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கின்றோம். ஆனால் சமீபத்தில் சகோதரிகள் தங்களுக்கும் மற்றும் கர்த்தருடைய நோக்கத்திற்கும் பிரயோஜனமுண்டாகும் விதத்தில் பங்கெடுக்கக்கூடிய ஒரு பெரிய வேலை எங்களது கவனத்திற்கு வந்துள்ளது.

அதைக்குறித்து வெளியூர்களில் இருக்கும் சபைகளுக்கு யோசனையாக முன்வைப்பதற்கு முன்னதாக, அதை நியூயார்க் பட்டணத்தில் நடைமுறைப்படுத்தி பரிசோதித்துப்பார்த்தோம். விளைவாகக் கிடைக்கப்பெற்ற வெற்றியானது மிகவும் தெளிவாய்க் காணப்பட்டப்படியால், தங்களது மேய்ப்பராக எங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதாகத் தகவல் தெரிவித்திருந்த சபைகள் யாவரின் கவனத்திற்குக் கொண்டுவர நினைத்து, ஒவ்வொரு சபைக்கும் பின்வரும் கடிதத்தினை - மூப்பர்கள் மற்றும் சபையாரின் பிரயோஜனத்திற்கு என்று சபையின் காரியதரிசிக்கும் ஒன்றும் மற்றும் இன்னொன்றை இந்த வேலையில் மேய்ப்பரது lieutenant/லெப்டினன்ட் - பிரதிநிதியெனத் தேர்ந்தெடுக்கப்படும் சகோதரியின் விசேஷமான பயனுக்காகவும் அனுப்பிவைக்கின்றோம். இக்கடிதங்களை இங்கு வெளியிடுவது என்பது அச்சபைகளிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் முழுக்காரியத்தையும் விளங்கப்பண்ணுகிறதாக இருக்கும்; ஏனெனில் சிலர் சபையில் வாசிக்கப்பட்டவைகளைக் கேட்காமலோ அல்லது கடிதத்தின் காரியங்களை மறந்தும் போயிருக்கலாம்.

### இவ்வேலையில் சகோதரிகளின் ஒத்துழைப்பு

பொதுக்கூட்டங்கள், Photo Drama காட்சிகள், தொகுதி விநியோகிப்பவர்கள் கொண்டிருந்த பட்டியல் முதலானவைகளிலிருந்து, மத விஷயங்களில் கொஞ்சம் ஆர்வம் கொண்டவர்களாகவும், சத்தியத்திற்கு ஏறக்குறைய இணங்குபவர்களாகவும் எண்ணப்பட்டுள்ள நபர்களின் முகவரி பெற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பாக, ஒரு முக்கியமான தொடர் வேலை (follow-up work) குறித்து வாட்ச் டவரின் வாசகர்களுடைய கவனத்திற்குச் சில மாதங்களுக்கு முன்பாகக் கொண்டுவந்திருந்தோம். அதுமுதற்கொண்டு நாம் இந்த முகவரிகளைப் பிரித்து, ஒழுங்குப்படுத்துவதற்கு முயன்றுகொண்டு வருகின்றோம்; ஆனால் அவை மிக அதிகமாகக் காணப்படுகின்றன மற்றும் நமக்கு நேரமும் மிகவும் குறைவாக இருப்பதினால், நாங்கள் வெகு சொற்பமானவைகளையே திட்டமிட்டப்படி ஒழுங்குபண்ண முடிந்தது. இந்த முக்கியமான வேலையை இன்னும் தாமதித்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாக, மேய்ப்பரது இந்த வேலையில் உதவுபவர்களாக இருப்பவர்களுக்கு முகவரி பட்டியல்களை அனுப்பிவைத்து, அதை மாவட்ட வேலையாட்கள் ஒவ்வொருவரால் பார்த்து எழுதப்பட்டு, பிரிக்கப்படலாம் என்று நாம் எண்ணினோம்.

இப்பிரிவு வேலையானது சகோதரிகளுக்காக மாத்திரமே என்று நோக்கம் கொள்ளப்பட்டிருக்கின்றது, காரணம் அவர்கள் இதில் மிக வெற்றிகரமாய்ச் செயல்பட முடிகிறவர்களாகவும், இவ்வேலையில் ஈடுபடுவதற்கென அதிகம் நேரம் உடையவர்களாகவும் காணப்படுகின்றனர் என்றபோதிலும், I. B. S. A சபைகளைப் புறக்கணிக்கும் எதையும் நாம்

முன்மொழிகிறதில்லை. எங்களால் முடிந்த மட்டும் என்னைத் தங்களது மேய்ப்பராகத் தேர்ந்தெடுத்ததாக எங்களுக்குத் தகவல் கொடுத்திட்டச் சபைகளுக்கு மாத்திரமே இந்த வேலையைக்குறித்த யோசனையை முன்வைக்கின்றோம்.

ஒவ்வொரு சபையிலும் நேரமும், இவ்வேலைக்கான வேலையாட்களென இத்திட்டத்தின்கீழ் வேலை புரிவதற்கு விருப்பமும் கொண்டிருக்கும் சகோதரிகளைக் கூட்டிச்சேர்ப்பதே திட்டமாகும். இத்தகைய கூட்டத்தில், வேலைக்கென்று அதிகமான தாலந்துடையவர்களாகச் சிலரும், குறைவான தாலந்துடையவர்களாகச் சிலரும் காணப்படுவார்கள் மற்றும் சிலர் வேலையினுடைய ஒரு பாகத்தைச் செய்ய முடிபவர்களாகவும், மற்றப் பாகத்திற்கும் முற்றிலும் பொருத்தமற்றவர்களாய் இருப்பார்கள். ஆகையால் சகோதரிகள் தங்கள் மத்தியிலிருந்து, போதுமான நேரத்தையும், போதுமான செயல்படுவதற்குரிய திறமையையும் மற்றும் தனது ஸ்தானத்தை உணர்ந்து, அதைச் சரியாய்ப் பயன்படுத்தி, தனக்கும் மற்றவர்களுக்கும் ஞானமாய் வேலையைப் பிரித்துக்கொடுக்க முடிகின்றதான பரந்த மனதையும் பெற்றிருக்கும் சகோதரியை லெப்டினன்ட்டாக தெரிந்துகொள்வது நலமாயிருக்கும். லெப்டினன்ட் - ஆக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னதாக, இது விஷயத்தில் ஞானத்திற்காகவும், வழிநடத்துதலுக்காகவும் ஜெபம் ஏறெடுக்கப்பட வேண்டும். நானும் இத்தகைய ஏற்பாடுகளின் மீது விசேஷித்த ஆசீர்வாதங்கள் வரும்படிக்கு ஏற்கெனவே கர்த்தரிடம் வேண்டிக்கொண்டுள்ளேன் மற்றும் தொடர்ந்து வேண்டிக்கொள்வேன். இவ்வேலைக்குத் தகுதியில்லாத எந்தச் சகோதரியும், நோக்கத்திற்கான நன்மைக்காக தன்னை விலக்கி வைத்துக்கொள்ளும் சிலாக்கியத்தினை, தான் பெற்றிருப்பதற்காகக் களிகூர்ந்து வேலைக்குத் தேவையான சாமார்த்தியத்தையும், மற்றத் தகுதிகளையும் உடைய வேறொரு சகோதரிக்கு உதவி செய்திடலாம். கர்த்தர் நம்முடைய இருதயங்களைப் பார்த்து, அவருக்கும், அவரது சத்தியத்திற்குமான நம்முடைய உண்மைக்கேற்ப நமக்குப் பதிலளிப்பாரே ஒழிய, நம்முடைய வேலையின் அளவிற்கு ஏற்ப அல்ல.

இக்குழுவினரின் செயல்களானது, குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளுக்குச் செல்வதும், ஆர்வம் இருப்பதை உறுதிப்படுத்துவதும், தவறான அபிப்பிராயங்களை அகற்றிடுவதும், வேதாகம பாடங்கள் புத்தகங்களை இரவலாக அளித்தல் முதலானவையாகும்; மற்றும் இவ்வேலையின் முக்கிய காரியம், முடிந்தமட்டிலும் அநேகரை ஆர்வத்திற்குள்ளாக்கி, அவர்களை வகுப்புகளாகக் கூட்டிச் சேர்ப்பதாகும் - முதலாவது தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகளைக் கேட்கவும் மற்றும் பிற்பாடு தொடர்ந்து நடக்கும் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளாக்கிடுவதாகும். காரியம் போதுமான அளவுக்குச் செய்யப்பட்டப் பிற்பாடு, லெப்டினன்ட் I. B. S. A-இன் மூப்பர்களுக்கு, அவர்கள் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகளைக் கொடுப்பதற்குரிய முற்றிலும் திறமிக்கவர்களாய்க் காணப்படும் சகோதரர்களை ஏற்பாடு பண்ணும்படிக்குத் தெரிவித்திடலாம். இதற்கிடையில் மூப்பராகிய சகோதரர் இதற்கு ஆயத்தப்பட்டிருக்க வேண்டும். சீக்கிரத்தில் "தெய்வீகத் திட்டத்தின் விளக்கவுரைக்கான குறிப்புத் தாளிற்கான" ஒரு புதிய வெளியீட்டை வெளியிடுவோம்; இது மூப்பர்களுக்கு உதவியாய் இருக்கும் மற்றும் இது இலவசமாகக் கொடுக்கப்படும். இதற்குத் தேவைப்படும் துணியிலான வரைப்படங்களையும் (cloths charts) நாங்கள் சீக்கிரமாய் ஆயத்தம்பண்ணிடுவோம்.

தெய்வீகத் திட்டத்தின் விளக்கவுரைகள் கொடுக்கப்பட்டப் பிற்பாடு மற்றும் ஆராய்ச்சி வகுப்புகள் ஏற்பாடுபண்ணப்பட்டப் பிற்பாடு, இவ்வகுப்புகளுக்குத் திறமிக்கப் போதகர்கள் தவறாமல் வழங்கப்படத்தக்கதாகச் சபையின் மூப்பர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். போதகர்களுக்கான தகுதியை - போதகசமர்த்தனாய் இருக்க வேண்டியது குறித்துக் காணப்படும் அப்போஸ்தலனின் புத்திமதிகளை நினைவில்கொள்ளுங்கள். ஒருதலைச்சார்பு/பாரபட்சம் எதையேனும் செய்வதின் மூலமாகவோ அல்லது மாம்சத்தின்படி கனத்தைக் கொடுக்கவோ, பெற்றுக்கொள்ளவோ நாடுவதன் மூலமாகவோ கர்த்தருடைய வேலையைச் சீரழித்துப் போடாதீர்கள். எல்லாவற்றிலும், "தேவனுக்கு முதலிடம்" மற்றும் சுயமும், மாம்சத்தின் அனைத்து வழிகளும் கீழ்ப்பட்டேயிருக்கும் என்பதை நம்முடைய பொன்மொழியாகக் கொண்டிருப்போமாக.

இத்திட்டமானது பிரமிக்க வைக்கும் வெற்றியுடன் பல்வேறு பெரிய பட்டணங்களில் ஏற்கெனவே நடைபெற்று வருகின்றது. இவ்வளவு காலம் இந்த வேலையின் முக்கியத்துவத்தை உணராமலும், அதைச் செயல்படுத்தாமலும் இருந்ததைக்குறித்து நாங்கள் விநோதமாகவே எண்ணுகின்றோம். ஆனால் அநேகமாக இது தற்கால வேலையினுடைய ஒரு பாகமாக இருக்கலாம் - அநேகமாக ஏதோ விதத்தில் இது எலியாவின் சால்வையைக் கொண்டு

தண்ணீரை அடித்தல் சம்பந்தப்பட்டதாக இருக்கலாம். இது நிழலை நிறைவேற்றிடும் என்று நாம் கூறவில்லை, மாறாக அது தொடர்பான விஷயங்களில் இது ஓர் அம்சமாக இருக்கலாம் என்று மாத்திரம் கூறுகின்றோம்.

இந்த வேலையினை இப்படி அறிமுகப்படுத்தி, காரியத்தினைக் கர்த்தருடைய ஜனங்களின் கரங்களில் விடுகின்றோம் மற்றும் மனப்பூர்வமாய் ஒத்துழைக்க விரும்பும் யாவர் மீதும் திவ்விய ஆசீர்வாதம் காணப்படும்படிக்கு வேண்டிக்கொள்கின்றோம்.

இதனோடுகூடச் செயல்முறைக்கான சில யோசனைக்குறிப்புகளையும் இணைத்துள்ளோம்.

கர்த்தருக்குள்ளான உங்களது சகோதரன் மற்றும் ஊழியக்காரன்,
**சி. டி. ரசல்.**

## பெரிய பட்டணத்தில் ஊழியம் புரியும் இவ்வேலையாட்களுக்கான குறிப்புகள்

சிலசமயம் விசேஷித்த பிரதிநிதிகள் வாயிலாகவும் மற்றும் சிலசமயம் சபையாரின் காரியதரிசி வாயிலாகவும் அனுப்பிவைக்கப்பட்டு, I. B. S. A-சபைகளில் வாசிக்கப்படுகின்றதான மேய்ப்பரது கடிதமானது, விவரிக்கப்பட்டுள்ள வேலைக்குரிய நேரத்தையும், பலத்தையும் பெற்றிருக்கும் சபையாரிலுள்ள சகோதரிகள் அனைவரும் ஒன்றுகூடிடுவதற்கான ஓர் அழைப்பை விடுக்கின்றதாய் இருக்கும். இவர்களது முதலாம் கூடிக்கொள்ளுதலானது, தங்கள் மத்தியில் ஒருவர் லெப்டினன்டாகவும் மற்றும் இன்னொருவர் இவ்வேலைக்கான காரியதரிசியாகவும், பொருளாளராகவும் இருப்பதற்கு யார் கர்த்தருடைய தெரிந்துகொள்ளுதலின்படியானவர்கள் என்று தங்களால் நம்பப்படுகிறவர்களின் தெரிந்தெடுத்தலுக்கானதாகும்.

[தவறான புரிந்துகொள்ளுதலின் காரணமாக எங்கள் பிரதிநிதி, மாநாடுகள் சிலவற்றில் லெப்டினன்டுகளை நியமித்துவிட்டதற்காகவும், பின்னர் லெப்டினன்டையும், காரியதரிசியையும் தேர்ந்தெடுக்கும்படியாக எங்களிடமிருந்து வந்த கடிதமானது சில குழப்பத்தை ஏற்படுத்தினது என்பதற்காகவும் நாம் வருந்துகின்றோம். சொசைட்டியின் பிரதிநிதிகள் முறையாய் நியமிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்; ஆனால் சபையார்கள் சம்பந்தப்பட்ட காரியங்கள் அனைத்திலும் அவர்களது தெரிவு அல்லது எங்களது தெரிவிற்கு அவர்களது ஒப்புதல்தான் முடிவாய் இருக்கும்.]

இவ்வூழியத்திற்கு அவசியப்படும் மிதமான செலவுகளைச் சந்தித்துக்கொள்வதைச் சபையார் சிலாக்கியமாகக் கருதுவார்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் அப்படியாக இல்லையெனில் மற்றும் அக்காரியம் கவனிக்கப்படவில்லையெனில், அதையும் மாதாந்தரத் தகவல் அறிக்கையில், மிகக் குறிப்பாய்க் குறிப்பிட்டு, கீழ் இடம்பெறும் முகவரிக்கு எழுதி தெரிவித்திடுங்கள்.

அனைத்துத் தகவல் அறிக்கைகளும் லெப்டினன்டினாலும் மற்றும் காரியதரிசி - பொருளாளரினாலும் கையெழுத்திடப்பட்டு அனுப்பப்பட வேண்டும். இந்த முதலாம் கூட்டம் நடைபெற்ற உடனே, கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கைக் குறித்தும், லெப்டினன்டாகவும், காரியதரிசி - பொருளாளராகவும் நீங்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களையும் குறித்தும் எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும்.

உங்கள் முதலாம் கூட்டமானது, நீங்கள் ஒருவரோடொருவர் பழகிடுவதற்கும், இவ்வேலைத் தொடர்பான உங்களது ஆர்வத்தைத் தூண்டிடுவதற்கும் மற்றும் எவற்றைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் மற்றும் எப்படிச் சிறப்பாய்ப் பயன்படுத்திடலாம் என்று கணக்கிடுவதற்கும் உதவுகிறதாய் இருக்கும். எங்கெல்லாம் அனுப்ப முடியுமோ, அங்கெல்லாம் ஒழுங்குப்படுத்துவதற்கும் மற்றும் பிரித்து வகைப்படுத்துவதற்கும் மற்றும் நாங்கள் வெற்றிகரமான செயல்முறையெனக் கண்டுகொண்டுள்ளவைகளை விளக்குவதற்குமென்று சகோதரி Genevieve Sanford அவர்களை நாம் அனுப்பிக்கொண்டிருக்கின்றோம். சகோதரி உங்களுடனே காணப்பட்டார்களானால், நாங்கள் இங்கு அளிக்கும் விவரங்கள் உங்களுக்கு அவ்வளவுக்கு முக்கியமாய் இராது; எனினும் சகோதரி கடந்துபோய்விட்டப் பின்பு, இவைகளைத் தகவல் குறிப்புகளாக வைத்துக்கொள்வதற்கு விரும்புவீர்கள். ஆனால் ஒருவேளை ஏதேனும் காரணத்தினால் சகோதரி Sanford அவர்களால் உங்களிடத்திற்கு வரமுடியவில்லையெனில், நீங்கள் கர்த்தரையே அதிகமாய்ச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும் என்றும், அனைத்து ஏற்பாடுகளிலும் உங்களது சிறந்த ஞானத்தையும், நீதியையும், அன்பையும் செயல்படுத்திட

வேண்டியிருக்கும் என்றும் நினைவில் கொள்ளுங்கள். "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாதிருங்கள்."

## இரண்டாம் கூட்டத்தில்

இக்கூட்டமானது நீண்ட நாள்களுக்கென்று தள்ளிப்போடப்படக்கூடாது - அதாவது "இரும்பு சூடாக இருக்கும்போது welding/வெல்டிங் பண்ண வேண்டும்." எந்தவொரு விஷயத்திலும் சிறந்த பலன்களை அடைவதற்கு ஒழுங்குமுறை அவசியமென்பதை முதலாவது நினைவில்கொள்ள வேண்டும். இரண்டாம் கூட்டத்திற்கு முன்னதாக லெப்டினனட் முடிந்தமட்டும் தெளிவாயும், துல்லியமாயுமுள்ள பட்டணங்களுக்கான நான்கு நிலப்படத்தையும் (maps) மற்றும் பட்டணத்தின் தெருக்களுக்கான நான்கு அட்டவணை புத்தகங்களையும், ஒரு சிவப்பு பென்சிலையும், ஒரு நீல பென்சிலையும், எழுதுவதற்குரிய கடினமான தாள்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும். லெப்டினனட் தனக்கென முதல் நிலப்படத்தை (map) தயார்படுத்திக்கொண்டு, பிற்பாடு மற்ற மூன்று நிலப்படங்களை ஆயத்தமாக்கிக்கொள்ளத்தக்கதாக உதவி செய்பவர்களிடம் மாதிரியாய்க் கொடுத்திட வேண்டும்.

உங்கள் பட்டணத்தை ஒரு நிற பென்சிலைக்கொண்டு பிரித்துக்கொள்ளுங்கள். இப்படியாக நிலப்படத்தைப் பிரித்துக்கொண்டப் பிற்பாடு, மற்ற நிற பென்சிலைக்கொண்டு, பல்வேறு மாவட்டங்களுக்கு எண்கள் இட்டுக்கொள்ளுங்கள்.

சொசைட்டியினால் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் சில பெயர்கள், அட்டைகளில் கொடுக்கப்பட்டிருக்கும் மற்றும் அவைகளின் முகவரியினை சகோதரிகளில் சிலர் நிலப்படத்தில் அடையாளம் கண்டுபிடிப்பதற்கெனச் சொல்லப்படலாம். அவர்கள் எந்தப் பட்டணத்தார்கள் என்று கண்டுபிடிக்கப்படும்போது, வண்ண பென்சிலினால் அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எண்ணானது, அட்டைகளில் குறித்துக்கொள்ளப்பட வேண்டும். இன்னும் உங்களுக்கு வேறு சில பெயர்கள் அட்டவணையில் அனுப்பப்பட்டிருக்கும் மற்றும் இவைகள் ஒவ்வொன்றும் ஒரு சிறு அட்டைத்தாளில் எழுதப்பட வேண்டும் மற்றும் அடுத்ததாக ஒவ்வொரு முகவரிக்கும், அதன் மாவட்டத்திற்குரிய வண்ண பென்சிலினால் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணானது குறித்துக்கொள்ளப்பட வேண்டும்.

கடினமான தாள்களை வசதியான அளவுகளுக்கு, அதாவது சிறு அஞ்சல் அட்டைகள் அளவுக்கு வெட்டப்படுவதன் வாயிலாகக் குறைந்த செலவில் கோப்பு அட்டைகளை (file cards) தயார் செய்துகொள்ளலாம். Photo Drama Card-லிருந்து அல்லது வேறெந்த நினைவுக்குறிப்புகளிலிருந்து அல்லது முகவரியிலிருந்து உடனடியாகப் பெயர்களை இந்தக் கோப்பு அட்டைகளுக்கு மாற்றிட வேண்டாம். முகவரிகளைக் கண்டுபிடித்து, அவைகளின் மாவட்டங்களைக் குறித்து மாத்திரம் கொள்ளுங்கள். அந்த முகவரியிலுள்ளவர்களின் ஆர்வம் குறித்து உறுதிப்படுத்திக்கொண்ட பிற்பாடு, முகவரியானது கோப்பு அட்டைகளுக்கு மாற்றப்படலாம்.

சபையார் மத்தியிலுள்ள ஒவ்வொரு சகோதரியினுடைய முகவரியையும் பெற்றுக்கொள்ளுங்கள் மற்றும் இவர்களுடைய பெயர்களுடன் கோப்பு அட்டைகளைத் துவங்கிடுங்கள் மற்றும் அவள் சத்தியத்தில் இருக்கிறாள் என்பதைச் சிவப்பு நிறச் சிலுவை குறியீட்டினால் குறித்துக்கொள்ளுங்கள். அவளது மாவட்டமும், நிலப்படத்தில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருக்க வேண்டும் மற்றும் ஒரு சிறு "x" குறியீடானது அவளது இடம் இருக்கும் இடத்தினைத் துல்லியமாய்ச் சுட்டிக்காண்பித்திட வேண்டும்.

திறமைக்கேற்பவும் மற்றும் பாரபட்சம் இல்லாமலும் லெப்டினனட் மாவட்ட வேலையாட்களைத் தெரிவுசெய்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு வேலையாளுக்கும், அவள் வாழும் இடத்தினை அல்லது பக்கத்து மாவட்டத்தினை அல்லது அருகாமையில் காணப்படுகின்றதான மாவட்டத்தினை, அவள் வேலை புரியும் களமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

ஒருவேளை உங்களுக்கு அதிகமான உதவியாளர்கள் இருப்பார்களானால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருவர் புத்தகங்கள் இரவலாகக் கொடுக்கும் பணியினைப் பார்த்துக்கொள்ளலாம் மற்றும் இன்னொருவர் முகவரிகளிலுள்ளவருக்கு அழைப்புகள் விடுக்கும் பணியினைச் செய்திடலாம்; ஆனால் ஒருவேளை போதுமான வேலையாட்கள் இல்லையெனில், முதலாவது அழைப்புகள் விடுக்கும் பணியானது செய்யப்படட்டும் மற்றும் புத்தகங்கள் இரவலாக கொடுக்கும் பணியானது, அடுத்தப்படியான வேலையாக இருப்பதாக; எனினும் அழைப்பு

விடுக்கப்பட்ட நபர் புத்தகங்களைப் பெற்றிராமலும், இரவலாக தொகுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்பிடும் தருணங்களில் புத்தகம் இரவலாகக் கொடுக்கும் பணியானது செய்யப்படலாம்.

சகோதரிகள் விவரங்களை லெப்டினனடுக்கு ஒரு வாரத்திற்குள்ளாக தகவல் கொடுத்திட வேண்டும். வேலையாட்களாகக் காணப்படும் சகோதரிகளில் சிலர் வியாதிப்பட்டதினாலோ அல்லது அவர்கள் எதிர்ப்பார்த்த நேரம் அவர்களுக்குக் கிடைக்காததினாலோ தடைகள் அடைந்திட்டதை நீங்கள் காணலாம் அல்லது சிலர் தளர்ந்துபோய், சாமார்த்தியமற்றவர்களாய் நிரூபிக்கப்பட்டிருக்கலாம்; சிலருக்குக் கூடுதலான விவரங்களும், ஆதரவுகளும் தேவைப்படலாம். ஒரு வாரத்திற்குள்ளாக தகவல் கொடுக்கத் தவறிடும் சகோதரி ஒருவருக்கு, அவளை உற்சாகப்படுத்தியும், அவள் ஏற்கெனவே செய்திருப்பவைகளைக்குறித்துப் பாராட்டுத் தெரிவித்தும், அவள் எதிர்க்காலத்தில் மேம்பட்ட வளர்ச்சியினைக் காட்டுவாள் என்ற உங்களது நம்பிக்கையை வெளிப்படுத்தியும் மற்றும் அவள் எதையேனும் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் காணப்பட்டால், அது தொடர்பாக அவள் உங்களைத் தொடர்புகொள்ள தெரிவித்தும் அன்புடன் கடிதம் ஒன்றை எழுதுங்கள். ஊழியங்களைக் குறைவில்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

சகோதரிகள் தங்கள் தங்கள் மாவட்டங்களில் தங்கள் சந்திப்புகளை நிறைவு செய்கையில், எவ்வித ஆர்வம் காட்டிடாதவர்களின் அட்டைகளில் அல்லது அட்டவணைகளில் உள்ள முகவரிகள் லெப்டினன்டினால் அழித்துப் போடப்பட வேண்டும். பின்னர் ஆர்வத்தினைக் காட்டுபவர்களின் முகவரிகளானது மூன்று கோப்பு அட்டைகளில் எழுதப்பட வேண்டும் - ஒன்று உங்களது கோப்பில் (file) வைத்துக்கொள்வதற்கும், ஒன்று புரூக்கிலின் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கும் மற்றும் மற்றொன்று மேலுமுள்ள பயன்பாட்டிற்கென மாவட்ட வேலையாட்களிடம் காணப்படுவதற்கும் ஆகும். எந்த முகவரிகளும் தொலைந்துபோகாதபடிக்கு, அட்டைகளைக் கவனமாய்க் கையாள வேண்டுமெனச் சகோதரிகளுக்குப் புரியவைத்திடுங்கள். இப்படி முகவரியினைக் கோப்பு அட்டையில் எழுதும் காரியமானது, முடிந்தமட்டும் காலந்தாழ்த்தாமல் செய்யப்பட வேண்டும்.

சில மாவட்டங்களில் இப்பணித் துவங்கின இரண்டு வாரத்திற்குள்ளாக தெய்வீகத் திட்டம் விளக்கவுரைக் கொடுத்திடுவதற்குச் சூழ்நிலை ஆயத்தமாகிடும். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன்,

கிறிஸ்துவுக்குள்ளான உங்களது சகோதரன் மற்றும் ஊழியக்காரன்,
**சி. டி. ரசல்.**

குறிப்பு: மாதாந்திர தகவல் அறிக்கை வெற்றுத் தாள்களை நாங்கள் உங்களுக்கு அனுப்பிவைக்கின்றோம். இதை ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் புரூக்கிலினுக்குக் கீழ் இடம்பெறும் முகவரிக்கு அனுப்பி வைத்திடுங்கள்.

Pastoral Work Department,
c/o. Mrs. Genevieve Sanford,
122 Columbia Hts., Brooklyn, N. Y.

## இவ்வேலை தொடர்புடைய விஷயத்தில் மாவட்ட வேலையாட்களுக்கான குறிப்புகள்

உங்களது முகவரி அட்டைகளையும், நினைவுக்குறிப்புகளையும் அகரவரிசையில் (alphabetically) வரிசைப்படுத்திக்கொள்ளுங்கள். அவற்றை இந்த அகர வரிசையில் ஒரு புத்தகத்தில் எழுதிக்கொள்ளுங்கள்; ஒவ்வொரு அகர எழுத்திற்கும் கீழ் நான்கு முதல் ஐந்து பெயர்களை எழுதுவதற்குரிய இடம் விட்டுக்கொள்ளுங்கள். பின்னர்த் தொடர்புக்கொள்கையில் உங்கள் சௌகரியத்திற்கேற்ப அட்டைகளை அடுக்கி வைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை அட்டைகளில் ஏதேனும் அட்டையானது அவ்வளவுக்குத் தோற்றத்தில் தெளிவாய், நேர்த்தியாய் இல்லையெனில், திருப்தியற்ற நிலைகளில் அவைகளைப் பயன்படுத்திடுவதற்குப் பதிலாக, மறுபடியுமாக புதிதாய் அட்டையில் எழுதிக்கொள்ளுங்கள்.

இந்த அட்டைகளில் அல்லது நினைவுக்குறிப்புகளில், அந்நபர் ஏற்கெனவே சத்தியம் குறித்த புத்தகங்களின் விஷயத்தில் என்ன பெற்றிருக்கின்றார் என்பது பற்றின அடிக்குறிப்பு/குறிப்புரையை முடிந்தமட்டும் பெற்றிருக்க வேண்டும்; இது நீங்கள்

தொடர்புகொள்ளும்போது, நீங்கள் என்ன பேசிடலாம் எனும் விஷயத்திற்கு உதவியாகக் காணப்படும். சந்திக்கச் செல்கையில், உங்களது நேரம் வீணாக்கப்படாத விதத்தில் அட்டைகளை ஒழுங்குப்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு சந்திப்பிற்குப் பிற்பாடு, அட்டையில் சந்திப்புக்குறித்த சிறுகுறிப்புகளை எழுதிடுங்கள்; உதாரணத்திற்கு "ஆர்வம் இருக்கின்றது; தெய்வீகத் திட்டம் விளக்கவுரைகளில் கலந்துகொள்வார்" அல்லது "ஆர்வமில்லை;" அல்லது "இடம் மாறிவிட்டனர்" என்பதுபோன்று எழுதிடலாம். ஒவ்வொரு அட்டையிலுமுள்ள இந்த விவரங்களை நீங்கள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை லெப்டினன்டிக்குக் கொடுத்திட வேண்டும்; இதை அவள் தனது கோப்பில் (file) பதிவுசெய்து, "இடம் மாறிவிட்டனர்" அல்லது "ஆர்வமில்லை" என்று காண்பிக்கும் முகவரிகளை, அழித்துப்போடுவாள்.

நடத்தப்படப்போகும் கூட்டங்களானது I. B. S. A சபையாரின் மூப்பர்களினால் மேற்பார்வையிடப்படும் என்றாலும், நாமும் தொடர்பில் காணப்பட விரும்புகின்றோம். ஆகையால் கூட்டங்களில் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கையையும் மற்றும் உதவிக்கரமாய்த் தோன்றும் எதையும், புத்தகங்களை வாங்கினவர்கள் யாரேனும் இருந்தால், அவர்கள் பெயர்களையும் அஞ்சல் அட்டை மூலம் வாரந்தோறும் லெப்டினன்டுக்குத் தயவாய்த் தகவல் அளித்திடுங்கள். ஜனங்கள் புத்தகங்களை வாசிக்கும் விஷயத்தில் மிகவும் கருத்தூன்றி கவனம்கொடுக்கத்தக்கதாக, புத்தகங்கள் விலைக்கொடுத்து வாங்கப்படும் விஷயம் நலமானதாய் இருப்பினும், சத்தியத்தை வியாபாரம்பண்ணும் எந்த எண்ணமும் அங்கீகரிக்கப்படக்கூடாது என்பதை நினைவில்கொள்ளுங்கள். புத்தகங்களை விற்பதற்கு முயற்சிக்கும் தோற்றத்தைக் கொடுப்பதற்குப்பதிலாக, இரவலாகக் கொடுக்கப்படும் என்று சொல்லிடுங்கள்; ஆனால் ஒருவேளை ஒருவர் விலைக்கொடுத்து வாங்கிட விரும்பிட்டால், அதிலும் நமக்கு மகிழ்ச்சியே.

## மாவட்ட வேலையாட்களின் ஆய்வு/Canvass

"காலை வணக்கம்! இங்குதான் திருமதி உட் அவர்கள் வாழ்ந்துவருகின்றார்களா?"

"ஆம்"

"வீட்டு வேதாகம ஆராய்ச்சிக்காக நான் உலா நூலகம் (Circulating Library) தொடர்பாக வந்திருக்கின்றேன். சில காலங்களுக்கு முன்னதாக, தாங்கள் இதில் ஆர்வம் கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளீர்கள் என்று எண்ணுகின்றேன். உங்களுக்கு விருப்பமானால், இக்காரியம் குறித்து உங்களிடம் பேச விரும்புகின்றேன்."

உள்ளே வரும்படிக்கு வரவேற்கப்பட்டப் பிற்பாடு நீங்கள் தொடர்ந்து:

"அப்போது தாங்கள் வேதாகம பாடங்கள் என்று அழைக்கப்படும் தொகுதிகளை திருமதி உட் அவர்களே வாங்கியுள்ளீர்கள் என்று நான் நம்புகின்றேன். அதில் எதுவேனும் உங்களுக்கு ஆர்வத்தைத் தூண்டினதா அல்லது இல்லையா என்று நான் தெரிந்துகொள்ளலாமா?"

இது உரையாடலுக்கான ஒரு துவக்கம் மாத்திரமே மற்றும் இது சந்தர்ப்பங்களுக்கேற்ப, அதாவது அட்டையில் குறித்துவைத்திருக்கும் குறிப்புகளுக்கேற்ப மாறிடும். இதற்கு மேலாக என்ன பேச வேண்டும் என்பது, அங்கு ஏற்படும் சூழ்நிலைப் பொறுத்ததாகும். சிலசமயம் எதுவும் அந்நபருக்கு ஆர்வம் மூட்டினதாக இருக்கவில்லை என்றும், மிகவும் ஆர்வத்துடன் காணப்படும் சிலரை அறிவார்கள் என்றும் பதில் வரலாம். இப்படியாக மற்றவர்களுடைய முகவரியையும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும். அநேகமாக சிறு ஞானமான உரையாடலின் வாயிலாக, நீங்கள் உரையாடிக் கொண்டிருக்கும் அந்நபரின் ஆர்வத்தினை நீங்கள் தூண்டிவிடலாம்; அல்லது அவர்களுக்கான சிரமம் தவறான அபிப்பிராயமாக, தவறாய் விவரம் கேட்டிருப்பதாகவோ காணப்படலாம். தவறாய் மனதில் பதியப் பெற்றவைகளைச் சரிசெய்வதற்குரிய இத்தகைய வாய்ப்புகளானது மிகவும் விலையேறப்பெற்றவையாகும். சரியானவைகளைப் பேசிடுவதற்குரிய ஞானத்திற்காகவும் மற்றும் நீதிக்கு இசைவாய் இருக்கும் யாவருக்கும் தன்னுடைய வார்த்தைகளானது சுகந்த வாசனையாகவும், அபிஷேகிக்கும் தைலமாகவும் காணப்படத்தக்கதாக இருதயத்தில் சாந்தம், பொறுமை, அன்பு எனும்

கர்த்தரிடத்திலிருந்து வரும் கிருபைக்காகவும் ஒவ்வொரு வேலையாளும் ஊக்கமாகவும், தொடர்ச்சியாகவும் ஜெபம் ஏறெடுத்திட வேண்டும்.

ஒருவேளை அந்தப் பெண்மணியிடம் வேதாகம பாடங்களினுடைய புத்தகங்கள் இல்லையெனில், தொகுதியை அப்பெண்மணி இரவலாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவியுங்கள் மற்றும் அந்த மாவட்டத்தில் சீக்கிரத்தில் "தெய்வீகத் திட்டம்" விளக்கவுரை நடைப்பெறப் போவதைக்குறித்துத் தெரிவியுங்கள். வேதாகமம் நாம் புரிந்துகொள்ளத்தக்கதாகவும் மற்றும் புதிய புத்தகமாக ஆகத்தக்கதாகவும், எப்படி யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டத்தின் வரைப்படமானது வேதாகமத்தைத் திறக்க உதவிடும் என்று அப்பெண்மணிக்கு விளக்கிடுங்கள். நீங்கள் இரவலாகக் கொடுப்பதாகக் கூறிடும் தொகுதியானது, அவளது ஆர்வத்தை வெகுவாய்த் தூண்டிடும், காரணம் அது மற்ற மதரீதியான புத்தகங்களினின்று வேறுபட்டது என்றும், அது வேறுமாதிரியானது என்று நம்மில் சிலர் ஊகித்திருப்பினும், அது வசனங்களையும், வேத அதிகாரங்களையும் குறிப்பிட்டு, அது உண்மையிலேயே தேவனுடைய வார்த்தையின் செய்தியாய் இருக்கின்றது என்று காண்பித்துத் தருகின்றது என்றும் அப்பெண்மணிக்கு உறுதிப்படுத்திடுங்கள். தெய்வீகத் திட்டம் விளக்கவுரை வகுப்பு ஏற்பாடுபண்ணப்படும் போது, அதுகுறித்துத் தகவல் தெரிவிக்கப்படுவதற்கு அவள் விரும்புகின்றாளா என்று கேட்டுக்கொள்ளுங்கள். அடுத்தமுறை வருகையில், அவள் அதிகம் வாசித்திருந்து, ஆழமாய் ஆர்வம் கொண்டவளாகக் காணப்படுவாள் என்று நீங்கள் நம்புவதாகவும் விடைப்பெறும்போது தெரிவித்துக்கொள்ளுங்கள்.

அடுத்த நபரைச் சந்திக்கப் போவதற்கு முன்னதாக உங்களது முகவரி நினைவுக்குறிப்பில் இந்தச் சந்திப்பின் சுருக்கமான விவரங்களை எழுதிடுங்கள். தெய்வீகத் திட்டம் விளக்கவுரையில் கலந்துகொள்வதற்குப் போதுமான ஆர்வம் கொண்டிருப்பவர்களை உங்களது மாவட்டத்தில் சுற்றித் தேடி அறிந்துகொள்கிற அதேவேளையில், கூட்டத்தை நடத்துவதற்கான ஓர் இடத்திற்காகக் கர்த்தருடைய வழிகாட்டுதலுக்கு நாடிடுங்கள் - அதாவது விருப்பத்தைத் தெரிவித்தவர்களாகவும், சாதகமாய்க் காணப்படும் பெரிய வரவேற்பறையை அல்லது உட்கார்ந்திருப்பதற்கான அறையை உடையவர்களாகவும் இருக்கும் ஓரிடத்திற்காக நாடிடுங்கள். ஒருவேளை அப்படிக் கண்டுகொள்ளும்போது, "நீங்கள் ஒருவேளை இங்கே கூட்டத்தை நடத்த விரும்புவீர்களானால், இத்தகைய கூட்டங்களுக்கு இந்த அறை எவ்வளவு சௌகரியமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். இது மிகவும் பொருத்தமான இடமாக இருக்கும் அல்லது இருக்காது என்று நான் திட்டவட்டமாய்ச் சொல்லிட முடியாது, எனினும் இங்குக் கூட்டம் நடத்திடுவதற்கு நீங்கள் விரும்புவதாக ஒப்பந்தம்பண்ணுவது ஏற்புடையது என்று நீங்கள் எண்ணி செய்வீர்களானால், நாங்கள் மகிழ்ச்சிக்கொள்வோம்" என்று நீங்கள் சொல்லிடலாம்.

நீங்கள் கண்டுகொண்டவைகளையும், கூட்டத்தினை நடத்துவதற்குரிய மிகப் பொருத்தமான நேரத்தையும் மற்றும் மிகப் பொருத்தமான இடத்தையும் குறித்து லெப்டினன்டிக்குத் தகவல் கொடுங்கள் மற்றும் இது விஷயத்தில் திட்டவட்டமான தீர்மானத்தை எடுக்கும் சபையினுடைய மூப்பர்களிடத்தில் தொடர்பில் காணப்படும் லெப்டினன்ட் மூப்பர்களுக்குத் தகவல் கொடுப்பார்கள்.

தெய்வீகத் திட்டம் விளக்கவுரைக்கான வகுப்புகள் தொடர்பான தீர்மானத்திற்குள் வந்தவுடன், ஆர்வத்துடன் காணப்படுவதாகத் தெரிபவர்களை மறுபடியுமாகத் தொடர்புகொள்ளுங்கள். அவர்களிடம் ஏற்பாடுகள் குறித்துத் தெரிவித்து, அவர்கள் அங்கு வருவார்களென எதிர்ப்பார்த்திடலாமா என்று கேட்டுக்கொள்ளுங்கள். இதோடுகூடக் கூட்டத்திற்கு முந்தின நாள் சென்று சேரும் நிலையில், அவர்கள் ஒவ்வொருவருக்கும் அஞ்சல் அட்டைகளை எழுதி அனுப்புங்கள். அதில் பின்வருமாறு எழுதப்படலாம்: "நாம் நாளை, வியாழன் மாலையன்று, யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரையினைக் கேட்பதற்கென 122, வெஸ்ட் சார்லஸ் தெருவிலுள்ள திருமதி உட் அவர்களின் இல்லத்தில் வைத்து 7.30 p.m.-கு சந்திக்கப்போகின்றோம் என்று நினைப்பூட்ட விரும்புகின்றேன். உங்கள் இல்லமானது திருமதி உட் அவர்களின் இல்லத்திலிருந்து ஒன்பது வீடுகள் தாண்டிதான் காணப்படுகின்றது. நீங்கள் வண்டியில் ஏறி இங்கு வந்து இறங்கிவிடலாம்" என்று எழுதி, நீங்கள் கையெழுத்திட்டுக்கொள்ளுங்கள்.

உங்கள் மாவட்டத்தில் நடைபெறும் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகள் ஒவ்வொன்றிலும் நீங்கள் நிச்சயமாய்க் கலந்துகொள்ள வேண்டும் மற்றும் ஆர்வமுடன் காணப்படுபவர்களை ஆர்வத்தில் நிலைக்கொள்ளப்பண்ணத்தக்கதாக தொடர்பு

வைத்துக்கொள்ளுங்கள்; எனினும் நீண்ட நேரமாய்ப் பேச வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு வாரமும் அஞ்சல் அட்டை அனுப்பி ஞாபகப்படுத்தவும் செய்யுங்கள்.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை தொடர் வகுப்புகள் நிறைவடைகையில், தெய்வீகத் திட்டம் வரைப்படம் தொடர்பான ஒரு கேள்வி கூட்டம் நடத்தப்படுவது முறையாய் இருக்கும் மற்றும் இது குறித்து விளக்கவுரை கொடுத்தவரே அறிவிப்புக் கொடுத்திடலாம். இந்த முக்கியமான ஊழியத்திற்கும் ஞானமுள்ள மற்றும் திறமையுள்ள சகோதரர்களை மாத்திரம் மூப்பர்கள் தெரிந்துகொள்ளும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர். ஒருவேளை அங்குக் காணப்படுபவர்களில் அதிகமானவர்கள் விரும்பும் பட்சத்தில், இந்தக் கூட்டத்தில் முதலாம் தொகுதியின் பெரோயா ஆராய்ச்சியானது துவங்கப்படும் என்று தெரிவிக்கப்படலாம்.

இதற்கிடையில் ஒருவேளை தெய்வீகத் திட்டத்திற்கான விளக்கவுரை வகுப்புகள் நடத்தப்பட்ட ஸ்திரீயின் இல்லத்தில் தொடர்ந்து பெரோயா ஆராய்ச்சிகளானது நடத்தப்படுவதற்கு ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லையெனில், பெரோயா ஆராய்ச்சியினை, தனது இல்லத்தில் வைத்து நடத்துவதற்கு விரும்பிடும் வேறு ஏதேனும் பெண்கள் இருக்கின்றார்களா என்று விசாரித்து வைத்துக்கொள்ளுங்கள். பெரோயா ஆராய்ச்சியானது, வேத மாணவர்களில் ஒருவரின் இல்லத்தில் நடத்தப்படுவது விரும்பத்தகுந்தது. கேள்விக் கூட்டத்தில், அதாவது தெய்வீகத் திட்டத்திற்கான விளக்கவுரை வகுப்புகளுக்கான நான்காவது இரவில் - நான்காவது வாரத்தில், முதலாம் தொகுத்திக்கான பெரோயா ஆராய்ச்சிக்கென்று வாக்கு (vote) எடுக்கப்படுவதாக.

பெரோயா வகுப்பு சரியாய்த் துவங்கின பிற்பாடு, நீங்கள் கொஞ்சம் சுதந்தரமாய்க் காணப்படலாம் மற்றும் வேறு ஏதேனும் முக்கியமான வேலை வந்திட்டாலும், அவற்றைச் செய்திடலாம். வகுப்புடன் தொடர்பில் காணப்படுங்கள்; மற்றும் வகுப்பில் யாரேனும் இரண்டு வாரங்களாகக் கலந்துகொள்ள தவறுவார்களானால், மூன்றாம் கூட்டத்திற்கு முன்பாக அவர்களைத் தொடர்புகொள்ள பார்த்திடுங்கள்.

இந்த வகுப்புகளில் உள்ளவர்களின் ஆர்வம் வளர்ந்து வருகையில், இவர்களுக்குச் பொது விரிவுரையாற்றல்கள் அனைத்தையும் குறித்துத் தகவல் கொடுக்கப்பட வேண்டும் மற்றும் I. B. S. A-இன் சபைக் கூட்டங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வழக்கமாய்க் கலந்துகொள்ளும் வேதமாணவர்களில் அநேகர் இந்தத் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகளிலும் மற்றும் பெரோயா ஆராய்ச்சிகளிலும் ஆரம்பத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பது விரும்பப்படத்தக்கதாகும்; ஏனெனில் இவர்களது வருகையினால், புதியவர்கள் தர்மச்சங்கடத்திற்குள்ளாகக் கூடும் மற்றும் அறையிலும் கூட்ட நெருக்கடி காணப்படக்கூடும்; மேலும் புதியவர்கள் தாராளமாய்க் கேள்விகள் கேட்கத்தக்கதாகவும், இடறலுக்குள்ளாகும் அபாயம் இல்லாமலும் காணப்படத்தக்கதாகவும், மூப்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அனுபவமுள்ள சகோதரனாலேயே வழிநடத்துதலும் மற்றும் விரிவுரைகளும் - அனைத்தும் செய்யப்படுவதாக.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகளிலும், பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளின் துவக்கத்திலும் பாடல் எதுவும் பாடப்பட வேண்டாம் என்று நாம் அறிவுரை கூறுகின்றோம். ஒவ்வொரு கூட்டமும் சுருக்கமான ஜெபம் ஒன்றுடன் முறையாய்த் துவங்கப்படுவதாக. கூட்டங்கள் உடனடியாகத் துவங்கப்பட வேண்டும் மற்றும் ஒரு மணி நேரத்திற்கு மேலாக நடத்தப்பட வேண்டாம். இவைகளை வழிநடத்துபவரின் கவனத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை கூட்டங்களில், கலந்துகொள்பவர்கள் உங்களால் அழைத்துவரப்பட்டவர்கள் என்பதற்காக அக்கூட்டத்தில் எதையும் விற்பனை செய்யாதீர்கள். அவர்கள் ஒருவேளை புத்தகங்களைப் பெற்றிருக்கவில்லையெனில், புத்தகங்களை வாங்கும்படிக்கு யோசனை கூறிடுவதற்கு அவர்களது இல்லங்களே சரியான இடமாக இருக்கும்.

இத்தகைய வகுப்புகளுக்கு, கேள்விப் புத்தகங்களை சொசைட்டியானது லெப்டினன்ட் வாயிலாக இலவசமாக அளித்திடும்.

ஒவ்வொரு மாவட்ட வேலையாளும், மாவட்டத்தில் முதலாவதாக சந்திக்கச் செல்கையில் தன்னிடத்தில் வேதாகமப் பாடங்களினுடைய முதலாம் தொகுதி ஒன்றினை வைத்திருக்க வேண்டும்; இதனால் அதைக்காட்டி, "இந்த ஆராய்ச்சியே வேதாகமத்தின் விஷயங்களிலுள்ள உங்களது கவனத்தினை ஈர்த்திடும் என்று நான் நம்புகின்றேன்" என்று கூறிடலாம். பின்னர் அப்புத்தகம் குறித்து விரிவுரை அளிப்பதற்கு வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும் மற்றும்

கேட்கிறவர் ஆர்வம் கொள்ளும் பட்சத்தில் அதை இரவலாகக் கொடுப்பதாகத் தெரிவித்திடலாம்.

நேரே சென்றோ அல்லது கடிதத்தின் மூலமாகவோ மேய்ப்பருடைய லெப்டினன்டிடம் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறையேனும் மற்றும் விரிவுரைகள் (lectures) நடந்துகொண்டிருக்கும் காலங்களில் ஒவ்வொரு வாரமும் தகவல் கொடுங்கள்.

உங்களுக்கு உதவி ஏதேனும் தேவைப்படும் பட்சத்தில் நீங்களே துணைக்கு ஒருவரை தேர்ந்தெடுக்க முற்படாதீர்கள்; ஆனால் முழுப்பொறுப்பையுடைய மேய்ப்பரது லெப்டினன்டிடம் இதைக் குறித்து தெரிவித்துக்கொள்ளுங்கள்.

உங்கள் மாவட்டத்தில் வசிக்கும் வேதமாணவர் சகோதரிகளைத் தொடர்பு கொள்ளவும். அவர்கள் உங்களுக்குச் சில தகவல்களைக் கொடுக்க முடிகிறவர்களாய் இருப்பார்கள். இப்படியாக தொடர்புகொள்ளும்போது சாதாரணமான சம்பாஷணைகளுக்கு இடம்கொடாமல் உங்களது வேலை குறித்து மாத்திரம் பேசுகிறவர்களாக இருந்து முன்மாதிரியாய் இருங்கள். ஒருவேளை சூழ்நிலைகள் சாதகமாக அமைகையில் இத்தகைய சகோதரியுடன் ஜெபம்பண்ணிடுவது சரியான காரியமாகவே இருக்கும். ஒருவேளை அச்சகோதரி எந்த ஊழியத்திலும் ஈடுபடாதவராக, ஆனால் அதற்கான நேரம் உடையவளாக இருப்பாளானால் அவள் எவ்வேலைக்கு நன்கு பொருத்தமாய் இருப்பாளென்று மனதில் சிந்தித்து வைத்துக்கொண்டு, அக்காரியத்தைக்குறித்து லெப்டினன்டின் கவனத்திற்குக்கொண்டு வாருங்கள்; மேலும் அச்சகோதரியினுடைய நேரம், ஆரோக்கியம், வயது, இனம், செயல்பாடுகள், திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா முதலானவைகள்குறித்தும், அவளது ஆவிக்குரிய நிலைமைக்குறித்தும் மற்றும் சத்தியத்தில நன்கு தேறினவளா அல்லது இல்லையா என்பதுகுறித்தும் மற்றும் சத்தியத்தைத் தெரிவித்திட திறமையுள்ளவளா என்பதுகுறித்தும் முழு விவரங்களையும் கொடுத்திடவும். இந்தத் தகவல்களையெல்லாம் அச்சகோதரியைச் சலிப்படையப்பண்ணாத விதத்தில் அல்லது துருவி கேள்விக் கேட்காத விதத்தில் பெற்றுக்கொள்வதற்கு முடிந்தமட்டும் நாடுங்கள். இன்னுமாக அச்சகோதரி சாந்தத்தின் ஆவி உடையவளாக இருக்கின்றாளா அல்லது இல்லையா என்பதையும் கவனித்துக்கொள்ளுங்கள்.

தொடர்புகொள்வதற்கும், வீட்டில் முடங்கிக் கிடப்பவர்களுக்கு வாசிப்பதற்கும், துண்டுப்பிரதிகளை மடிப்பதற்கும் அல்லது தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை வகுப்புகளில், Photo Drama-இல், விரிவுரைகள் ஆற்றப்படுகையில் தேவையானவைகள் வழங்கிடுவதற்கும் பொருத்தமான நபர்களை எதிர்க்காலத்தில் வரும் ஏதேனும் வேலைகளுக்கென்று தெரிந்தெடுப்பதற்கு மேற்கூறிய தகவல்கள் லெப்டினென்டிற்கும் பிரயோஜனமாய்க் காணப்படும்.

தெய்வீகத் திட்டத்தின் மகிமையான காரியங்கள் மற்றும் நமக்கான வியத்தகு வாய்ப்புகள் மற்றும் சிலாக்கியங்கள் தொடர்புடைய விஷயத்தில் நம்முடன் தொடர்புக்குள் வருபவர்கள் அனைவரையும் மற்றும் சத்தியத்தில் காணப்படும் சகோதரிகளையும் ஊக்கமூட்டுவது தொடர்புடையதான உங்களது சிலாக்கியத்தினைக் குறித்து எப்போதும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

இங்கு நாம் சொல்லியிருப்பவைகளிலிருந்து புத்தகங்களை இரவலாய் வழங்கும் வேலையானது முற்றிலும் வேறுபட்ட ஒரு வேலையாகும்; எனினும் எங்கு உதவிபுரிகிறவர்கள் அதிகமான எண்ணிக்கையிலும், ஆர்வம் காட்டுகிறவர்களின் முகவரி அட்டைகள் குறைவாகவும் காணப்படுகின்றதோ அங்கு மாவட்ட வேலையாட்கள் புத்தகங்களை இரவலாய்க் கொடுக்கும் வேலையையும் சேர்த்துச் செய்வதற்கு லெப்டினன்டின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தகைய வேலையை மேற்கொள்வதற்கு முன்னதாக - இந்த வேலையானது கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க அல்லது அவருக்குப் பிரியமாய் இருக்கக் காணப்படுவதற்கு முன்னதாக - இருதயமும், ஜீவியமும் கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணிப்புடன் காணப்பட வேண்டியதின் முக்கியத்துவத்தைக்குறித்து நாம் முன்வைக்கின்றோம். அர்ப்பணமானது தொடர்ந்து காணப்பட வேண்டும். ஒவ்வொரு காலையிலும் திவ்விய ஆசீர்வாதமும், வழிக்காட்டுதலும் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்; மற்றும் ஒவ்வொரு மாலையிலும் தேவையின் பொழுதெல்லாம் சகாயம் செய்யும் கிருபையை நாம் அடையத்தக்கதாக நம்முடைய மகிமையான தலையானவரிடத்தில் நம்முடைய பிரயாசங்கள் குறித்தும், தோல்விகள்குறித்தும் மற்றும் வாஞ்சைகள்குறித்தும் தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். நாம் தொடர்புகொண்ட ஒவ்வொருவரும் அன்பின் பரிசுத்த ஆவியை நாம் வெளிப்படுத்தினதில் தொடப்பட்டவர்களாகவும், பரிசுத்த ஆவி மாத்திரமே நம்முடைய சந்திப்பை ஏவியுள்ளது

என்றுமுள்ள உண்மையினாலும் தொடப்பட்டவர்களாகவும் காணப்பட வேண்டும். எவ்விதத்திலும் நல்வாஞ்சையுடையவர்களாகக் காணப்படுபவர்கள் அனைவரிடத்திலும், திருச்சபை மயமான சார்ந்திருத்தலை ஆழமாய்க் கொண்டிருப்பவர்களிடத்திலும் (churchianity) நாம் அனுதாபம் கொண்டிருக்கவேண்டும்; ஏனெனில் அவர்கள் மேலானவைகளின் மீது ஆர்வம்கொண்டிருப்பவர்களாகக் கண்டுகொள்வதில் நாம் மகிழ்கின்றோம்; திருச்சபை மயமான சார்ந்திருத்தலிலிருந்து திரும்பி வந்துள்ளவர்களிடத்திலும் நாம் அனுதாபங்கொள்ள வேண்டும். காரணம் தற்போதைய சபை சூழ்நிலைகளின் கீழ் விசுவாசத்தினைத் தக்கவைத்துக்கொள்வது என்பது எவ்வளவு கடினம் என்பதை நாம் அறிவோம்; மற்றும் தவறான அபிப்பிராயம் கொண்டுள்ள மற்றவர்களிடத்திலும் நாம் அனுதாபங்கொள்ள வேண்டும். காரணம் வெதுவெதுப்பாய் இருப்பதைக் காட்டிலும் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்க விருப்பங்கொள்ளப்படுகிறதில் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

உங்கள் உண்மையுள்ள ஊழியக்காரன்,
**சி. டி. ரசல்.**

## சில கேள்விகளுக்கான பதில்:-

இவ்வேலை தொடர்பாக நாங்கள் பெற்றுக்கொண்டதான கேள்விகள் சிலவற்றிற்கு இங்குப் பொதுவில் பதிலளிப்பதற்குரிய வாய்ப்பினை எடுத்துக்கொள்கின்றோம்.

(1) இந்த வேலையில் சகோதரர்களும் ஈடுபட்டுக்கொள்ளலாமா?

இந்த வேலையில் ஈடுபடும்படிக்குச் சகோதரர்களை நாங்கள் அழைக்கவில்லை; ஏனெனில் சகோதரிகளால் செய்யமுடியாததும், ஆனால் சகோதரர்களால் செய்யமுடிகிறதுமான அநேக மற்றக் காரியங்களைச் சகோதரர்கள் பெற்றிருக்கின்றார்கள் என்று நாம் எண்ணுகின்றோம். இந்த வேலையில் நன்மை செய்கிறதைப்பார்க்கிலும், பாதகம் செய்கிறதற்கு ஏதுவான நிலையில் சாமார்த்தியமற்றச் சகோதரிகள் இருப்பினும், மிகவும் உதவிகரமாக, மிகவும் ஞானமாக சில சகோதரர்கள் காணப்படுகின்றார்கள் என்பது உண்மையாக இருப்பினும், சகோதரர்களைப் போலவே அல்லது அவர்களுக்கும் அதிகமாகவே சாமார்த்தியத்தை வெளிப்படுத்த முடிகிறவர்களாகச் சகோதரிகள் காணப்படுகின்றார்கள் என்று நாம் நம்புகின்றோம்; நாம் பொதுப்படையான வார்த்தைகளில் மாத்திரம் பேசுகின்றோம் மற்றும் சகோதரர்களால் இவ்வேலையைச் செய்யமுடிகிறதைக் காட்டிலும் சகோதரிகள் இவ்வேலையைச் சிறப்பாய்ச் செய்ய முடியும் என நம்புகின்றோம். மற்றும் இவ்வேலையானது இராஜாவுக்கான சேவையில் விசேஷமான ஒன்றினைச் சகோதரிகள் செய்வதற்கு இடமளிக்கின்றதாய் இருக்கின்றது.

(2) இம்மாதிரியான ஒரு வேலையில் மேய்ப்பர் ஒரு சகோதரியைத் தனது லெப்டினன்டாகத் தேர்ந்தெடுப்பது சரியான மற்றும் வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரியமாக இருக்குமா?

இப்படியாகச் சகோதரிகள் பயன்படுத்தப்படலாம் என்பது கர்த்தருடைய போதனைகளுக்கு முழு இசைவிலே காணப்படுகின்றது என்று நம்புகின்றோம். ஏற்கெனவே சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது போன்று பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட அனைவருமே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு அபிஷேகம்பண்ணப்பட்டிருக்கின்றனர். ஒரு சகோதரி பிரசங்கித்திடலாம் என்பதற்கான சூழ்நிலைகளை வரையறைக்குள்ளாக்குவது தகுதியானது என்று கர்த்தர் பரிசுத்த பவுலடிகளார் வாயிலாகக் கண்டுகொண்டுள்ளார் - அதாவது அவளது பிரசங்கித்தலானது பொது இடங்களில் பண்ணப்படும் ஊழியத்தின் தன்மையில் காணப்படக்கூடாது மற்றும் அவள் சபையில் போதகராகக் கருதப்படக்கூடாது. இதில் எதுவும் இங்கு நாம் குறிப்பிட்டுள்ளதான தனிப்பட்ட வகையான இவ்வேலையில் அவள் ஈடுபடுவதில் தடைவிதிப்பதில்லை.

(3) வேதாகம ஆராய்ச்சிக்கான வகுப்புகளைச் சகோதரிகள் ஒழுங்குப்பண்ணின பிற்பாடு, ஒருவேளை சபையில் அர்ப்பணிக்கப்பட்ட சகோதரன் யாரும் இல்லையெனில் அல்லது தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைக் கொடுப்பதற்கோ அல்லது வேறு ஏதேனும்

உரைக்கொடுத்திடுவதற்கோ தகுதியானவர் யாரும் இல்லையெனில் என்ன செய்யப்பட வேண்டும்?

இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் இவ்வுதவியினை ஆற்றத்தக்கதாக அருகாமையிலுள்ள சபையார், தங்கள் மூப்பர்களில் ஒருவரை அனுப்பிவைத்திட கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். ஒருவேளை அருகாமையில் சபை இல்லையெனில் அல்லது யாரும் உதவி செய்ய வரமுடியவில்லையெனில், சகோதரிகள் தங்களில் ஒரு சகோதரியைத் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைக் கொடுப்பதற்கும், பிற்பாடு பெரோயா வேதாகம ஆராய்ச்சியினைத் தொடங்குவதற்கும், மேய்ப்பரது representative/வேலையாளாக செயல்படும்படிக்குத் தேர்ந்தெடுப்பதற்கு மேய்ப்பர் அங்கீகாரம் அளிக்கின்றார். அவள் தனது தலைக்கு முக்காடிட்டுக்கொண்டு தனது கடமைகளைச் செய்திட வேண்டும் மற்றும் இதன் முக்கியத்துவத்தைக்குறித்துக் கூட்டத்தாருக்கு விவரித்திட வேண்டும் மற்றும் சூழ்நிலையினுடைய தேவைக் காரணமாகவும், சில அர்ப்பணிக்கப்பட்ட சகோதரர் வழிநடத்துபவர் ஆகிடுவதற்கு அவசியமாய் இருக்கும் அறிவிலும், தகுதிகளிலும் வளர்வதுவரையிலும் மாத்திரமே, தான் இவ்வூழியம் புரிவதாக தெரிவித்துக்கொள்ள வேண்டும். இன்னுமாக அங்குக் கூடியிருப்பவர்கள் யாவருக்கும், சகோதரிகள் சபையில் போதிக்கக்கூடாது என்றுள்ள அப்போஸ்தலரின் கட்டளையை நினைவுபடுத்திட வேண்டும், மற்றும் கேள்விகளுடன் வந்திருக்கும் கூட்டத்தார் அடங்கிய ஒரு வகுப்பானது வேதமாணவர்களின் ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட சபையாகவோ அல்லது ஒரு எக்ளீசியாகவோ அல்லது கிறிஸ்துவின் சரீரமாகவோ புரிந்துகொள்ளப்படாமல், மாறாக சீக்கிரமாய் முதிர்ச்சி நிலைக்கு வளர்ந்திடுவார்கள் என்று நம்பப்படுகின்றதான கற்றுக்குட்டிகள் அடங்கிய வகுப்பாக மாத்திரமே புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு அவள் நினைப்பூட்டிட வேண்டும்.

(4) புதிய சகோதரர்களில் சிலரை அவ்வப்போது இவ்வகுப்புகளில் உரையாற்றிட வைப்பதின் மூலம் இவ்வேலையில் அவர்கள் பயிற்றுவிக்கப்படலாமா?

நிச்சயமாகவே இந்த வேலையில் கற்றுக்குட்டிகள் அறிமுகப்படுத்தக்கூடாது. கர்த்தர் இருதயத்தின் நல்நோக்கங்களைக் கருத்தில் எடுத்துக்கொள்கின்றார்; ஆனாலும் வசனத்தினுடைய அறிவுரைகளை வைத்துப்பார்க்கையில் நல்நோக்கங்களுக்கும் மேலாக அதிகமான விஷயங்கள் அவருக்கு ஊழியம் புரியும் விஷயத்தில் தேவைப்படுகின்றது. பொதுஊழியங்களுக்காகப் பேசுவதற்கான ஆற்றல் உடையவர்களும், இதோடுகூடச் சத்தியம் குறித்த தெளிவான அறிவைப் பெற்றிருப்பவர்களும், போதகசமர்த்தனாய் இருப்பவர்களும் மாத்திரமே - இத்தகையவர்கள் மாத்திரமே, சத்தியம் குறித்த அறிவில் சமீபக்காலமாகத்தான் கொஞ்சம் வந்திருப்பவர்களும், தப்பறையான கருத்துக்களினால் ஏறக்குறைய தவறான அபிப்பிராயமுள்ள மனங்களை உடையவர்களுமான ஜனங்களை ஆர்வமூட்டும் இந்த முக்கியமான வேலைக்காய் நியமிக்கப்பட வேண்டும். சபையிலேயே மிகவும் திறமிக்கவர்கள் இவ்வேலைக்குப் பொருத்தமானவர்களாய் இருப்பார்கள்.

சபையில் ஞாயிற்றுக்கிழமைகளிலோ அல்லது வேறு ஏதோ சமயங்களிலோ பொது விரிவுரையாற்றுவதற்குக் கற்றுக்குட்டிகளானவர்கள் அழைக்கப்படுவதும் முற்றிலும் தவறான காரியமாய் இருக்கும். கர்த்தருடைய ஜனங்களும், பொது ஜனங்களும் bore/சலிப்பூட்டப்படக்கூடாது. சில தாலந்துகளை வெளிப்படுத்தும் இத்தகைய சகோதரர்கள் கற்றுக்கொள்வதற்கும், பயிற்சி எடுப்பதற்கும் ஊக்கம் ஊட்டப்பட வேண்டும். எனினும் மற்றவர்கள் மத்தியிலில்லாமல் தங்கள் மத்தியிலேயே பயிற்சி பண்ணிக்கொள்ள வேண்டும். நாம் ஏற்கெனவே பரிந்துரைத்ததை மீண்டுமாகப் பரிந்துரைக்கின்றோம். அது என்னவெனில் கர்த்தருக்கான ஊழியத்திற்கென்று தாங்கள் தாலந்துகள் பெற்றிருப்பதாக உணர்ந்துகொள்ளும் அனுபவமற்றச் சகோதரர்கள், அவர்களைப்போன்றவர்கள் (தாலந்துகள் பெற்றிருப்பதாக உணர்ந்துகொள்ளும் அனுபவமற்றச் சகோதரர்கள்) மத்தியில் கூட்டங்கள் நடத்திட உற்சாகம் ஊட்டப்பட வேண்டும். இக்கூட்டங்களில் அவர்கள் பேசுவதைக் கேட்பதற்கும், அவர்களது பாணி, தொனி, விதம், உபதேச ரீதியான அறிவு, வாதம் முதலானவைக்குறித்து அன்பாய் விமர்சனம் அளிக்கவும், நடுவராக ஓர் அனுபவமிக்க சகோதரனைப் பெற்றுக்கொண்டிருக்கலாம். இவ்வகுப்பில் இருப்பவர்கள் ஒருவரையொருவர் விமர்சிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும், எனினும் எளியவர்கள் சோர்வடைந்து மேலும் பிரயாசம் எடுக்காமல் போய்விடாதபடிக்கு விமர்சனங்கள் மிகவும் கடுமையாய்ப் பண்ணப்படக்கூடாது.

இந்தக் கற்றுக்குட்டிகள் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரை ஆற்றுதலைப் பயிற்சி பண்ணிக்கொள்வது, அவர்களுக்கு நன்கு கற்பித்துக்கொடுக்கின்றதாய் இருக்கும் மற்றும் இது

தெய்வீகத் திட்டத்தை எப்படி முன்வைப்பது என்பதைக் கற்றுக்கொள்வதற்கான மிகவும் திறமிக்க வழிகளில் ஒன்றாய் இருக்கும் என்று நாம் பரிந்துரைக்கின்றோம். இவர்கள் தெய்வீகத் திட்டம் குறித்த செய்திகளுக்கான (outlines) குறிப்புகளைக் கவனமாய்ப் பின்பற்றிடுவதற்கு ஊக்கமூட்டப்பட வேண்டும்.

தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைக்கான வகுப்புகளின் நான்காம் இரவின்போது, கூட்டத்தார் வரைப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளதான தெய்வீகத் திட்டத்தினுடைய ஒவ்வொரு அம்சம் தொடர்பாக கேள்விகள் எழுப்பும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். மேலும் இத்தகைய ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு திறமிக்க ஆசிரியரே பதில் கொடுக்க முடிகின்றவராய் இருப்பார். இதற்குக் கற்றுக்குட்டியைவிட மிக அதிகமான நிலைமையில் காணப்பட வேண்டும் மற்றும் கர்த்தருடைய ஜனங்களில் முதிர்ச்சியடைந்து காணப்படுபவர்கள்கூடத் தொடர்ச்சியாய்ப் படிப்பதன் மூலமாய்த் தங்கள் மனங்களைப் புத்துயிர் பண்ணவேண்டியவர்களாய்க் காணப்படுகின்றனர்.

---

R 5989

# பூமி அதிர்ந்தது - விழுந்தது
## "THE EARTH TREMBLED" - AND FELL

"அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி அதைக்கண்டு அதிர்ந்தது" – சங்97:4.

தேவனுடைய பழையஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டின் பரிசுத்த தீர்க்கதரிசிகள், நமக்கு நம் நாளைக்குறித்த எண்ணற்ற காட்சிகளையும், தற்போது உலகில் நிகழ்ந்துகொண்டிருக்கிற நிகழ்வுகளையும் கொடுக்கின்றனர். சங்கீதக்காரனாகிய தாவீது, அவருடைய நாளிலிருந்து எதிர்காலத்தை உற்றுநோக்குகிற ஒரு நிலைப்பாட்டை தீர்க்கதரிசனமாக எடுத்து கூறுகிறார்; "கர்த்தர் இராஜரீகம் பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது(சங்97:1). வேதாகமப் பாடங்கள் தொகுதி 3, பாடம் 9இல் நாம் காண்பித்துள்ளபடி, நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம் இராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கு பூமிக்கு திரும்ப வந்திருந்து, தம் மாபெரும் அதிகாரத்தை எடுக்கும்போது, இந்த ஆரம்பம் உண்மையாயிருக்கும். இன்னும் தனது இராஜ்யத்தை இந்த பூமியில் முழுமையாக நிறுவும்வரைக்கும், அவருடைய மகிமை நிறைந்த ஆளுகை தெளிவாக அடையாளங் கண்டுகொள்ளப்பட மாட்டாது.

எனவே தாவீது இராஜ்யத்தின் முழு ஆரம்பம் 1878க்கு பிற்பாடு என்று தீர்க்கதரிசனமாக இந்த தற்காலத்தினை விசேஷித்தவிதமாகக் குறிப்பிடுகிறார்; "மேகமும் மந்தாரமும் அவரைச் சூழ்ந்திருக்கிறது, நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம், அக்கினி அவருக்கு முன்சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய சத்துருக்களைச் சுட்டெரிக்கிறது" என்ற அவருடைய பிந்தைய வார்த்தைகளிலிருந்து தெளிவாகிறது. யேகோவாவின் மாபெரும் நோக்கங்களை நிறைவேற்றுபவரும், அவருடைய மாபெரும் பிரதிநிதியுமானவரது இராஜாவுக்குரிய பிரசன்னத்தின் இந்த நாளில், நம்மைச் சுற்றிலுமுள்ள புயல் மேகங்கள் எல்லாம் நம்மைக் குறித்தே சொல்லப்பட்டுள்ளது என்பது எவ்வளவு உண்மையாயிருக்கிறது! யேகோவாவின் நோக்கங்களுடன் ஒன்றிணைந்து செல்லாதோர்க்கு, அனுதினமும் இருளாகிய அச்சம் மற்றும் குழப்பம் ஒவ்வொரு பக்கத்திலும் மிகுதியாகிறது.

### அக்கினி அவருக்கு முன்செல்லும்

ஏன் அவருடைய பிரசன்னத்தின் நாள், தேசங்களின்மேல் இப்படிப்பட்ட தொல்லை மற்றும் உபத்திரவக் காலமாக இருக்கிறது? என்று நாம் கேட்போமானால் "நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம் என்றும், அவர் தேசங்களை நியாயந்தீர்த்து அவைகளை தராசிலே நிறுத்துப்பார்க்கிறார் என்றும் பதில்வருகிறது. அவர் நியாயத்தை அளவு நூலாகவும், நீதியை தூக்கு நூலுமாக அமைத்திருக்கிறார்(ஏசாயா28:17). எந்த நோக்கத்திற்காகவென்றால், அவருடைய அரசாங்கத்தின் நடுநிலையான கொள்கைகள் நீண்டநாட்களுக்கு முன்பே பூமியெங்கும் ஸ்தாபிக்கப்படும்படியாக.. எல்லா அநீதிகளும் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் என்பது மட்டுமல்ல, அதோடுகூட, "அக்கினி அவருக்கு முன்சென்று, சுற்றிலும் இருக்கிற அவருடைய நீதியான நடவடிக்கைகளை மனப்பூர்வமாகவும், விடாப்பிடியாகவும் எதிர்க்கிறவர்கள் அனைவரும் "அறுப்புண்டுபோவார்கள்", "அழிக்கப்படுவார்கள்", "சுட்டெரிக்கப்படுவார்கள்", "அவருடைய எரிச்சலின் அக்கினியினால் அழிக்கப்படுவார்கள்"– செப்3:8.

இந்த நியாயத்தீர்ப்பின் பணியும், உபத்திரவக் காலமும், அதைத்தொடர்ந்து உடனடியாக வரவிருக்கிற நீதியின் மகிமை நிறைந்த ஆளுகைக்கு அவசியமான ஆயத்தப்படுத்துதலாக இருக்கிறது. மேலும் "தவறுசெய்யாதபடி மிகுந்த ஞானம் உள்ளவராகவும், இரக்கமற்றவராயிராதபடி மிகவும் நல்லவராகவும் இருக்கிற" உன்னதமானவரும் பரிசுத்தமானவருமால் அனைத்தும் ஞானமாய் இயக்கப்படுகிறது, அதில் மகிழ்ச்சி மற்றும் சந்தோஷத்திற்கான அபரிதமான காரணம் இருப்பதை நாம் ஆராய்ந்து பார்க்கும்படி தீர்க்கதரிசி அழைப்புவிடுக்கிறார்(சங்96:9–13; 98:1–9ஐ பார்க்கவும்). உண்மையாகவே பரிசுத்தவான்களிடத்தில் மாத்திரமல்ல, முழு உலகத்தினிடத்திலும், மகிழ்ச்சிக்கான மாபெரும் காரணம் இருக்கிறது. மேலும் யாரெல்லாம் கேட்கவிரும்புகிறார்களோ அவர்களுக்கு இந்த சந்தோஷத்தின் செய்தியைக் கூறுவது பரிசுத்தவான்களின் சிலாக்கியமாக இருக்கிறது.

ஆனால் மனிதர்கள் கேட்டாலும் சரி அல்லது அவர்கள் கேளாவிட்டாலும்சரி, நாம் இதை வெளிப்படுத்திக் கூறவேண்டும். மேலும் இந்த நியாயத்தீர்ப்பின் காலத்தின் மாபெரும் துயரத்தின்போது, மனிதர்களின் இதயத்தின்மீது இந்த அறிவுரைகள் முத்திரையிடப்படுதல் படிப்படியாகத் துவங்கும், பின்னர் இந்த ஆசீர்வதிக்கப்பட்ட சாட்சியம் குணமாக்கும் தைலம் போன்று இருக்கும். தம்முடைய கோபத்தினால் அடித்த அவர், கடுஞ்சினத்துடன் அவர்களை தண்டித்தவர், இரக்கமும் கிருபையுமுடையவராகவும் இருக்கிறார் என்பதை அவர்கள் காண்பார்கள். மேலும் அவர்கள் அழிவுக்குள்ளாவதை விரும்பாதஅவர், அவர்கள் தம்மிடத்தில் திரும்பவேண்டுமென்றும், தம் ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டுமென்றும் நோக்கமாயிருக்கிறார்

### சிங்காசனத்திலிருந்து மின்னல் பிரகாசிக்கும்

இந்த உபத்திரவத்தின் நாளின் மேகங்கள் மற்றும் இருளின் மத்தியில், மேசியாவின் இராஜ்யம் அமைவதற்கான நிகழ்ச்சி நடைபெறும் என்பதை,"அவருடைய மின்னல்கள் பூச்சக்கரத்தைப் பிரகாசிப்பித்தது; பூமி அதைக்கண்டு அதிர்ந்தது", என்ற தீர்க்கதரிசியின் கூற்று நிரூபிக்கிறது. இந்தக்காட்சி எவ்வளவு பொருத்தமாக உள்ளது! உண்மையாகவே இந்த மேகமூட்டமான நாளின் இருள் மற்றும் குழப்பத்தின் மத்தியில் மின்னல் பிரகாசிப்பதுபோல, மிகவும் வெளிப்படையாக இருக்கிற இந்த உலகத்தின் தற்போதைய ஒழுங்கின்மைக்கு எதிராக, சத்தியம் மற்றும் நீதி ஆகிய

மாபெரும் கொள்கைகளின் குறிப்பிடத்தக்க ஒளிக்கதிர்கள் வருகிறது. கண்ணுக்கு மறைவாயிருக்கிற சிங்காசனத்திலிருந்து வரும் மின்னலின் பிரகாசம் இங்கு ஒரு பிழையையும் அங்கு மற்றொரு தவறையும் வேறொரிடத்தில் வேறொன்றையும் வெளிப்படுத்துகிறது.

மிகவிரைவில் இந்த முழு உலகமும் தூண்டிவிடப்படும். ஏற்கனவே பெருமளவு இவ்வாறு தூண்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் உபத்திரவத்தின் தீவிரம் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. இதன் விளைவு என்னவென்று தெரியாமல் முழு உலகமும் பயத்தினால் நடுங்குகிறது. ஆனாலும் இது மோசமான திகிலாகவே இருக்கும். தற்கால சத்தியத்தின் நிலைப்பாட்டிலிருந்து எழுதப்பட்டது என்றநிலையில், நம்மிடையே பிரபலமாக வெளியாகின்ற செய்தித்தாள்களின் சில தலையங்கங்களை வாசிக்கும்போது, இந்த தற்போதைய பயங்கரமான போரை பின்பற்றுவதற்கு அவர்கள் கிட்டத்தட்ட உறுதியாக இருப்பதாக முன்னறிவிக்கின்றனர். மாபெரும் சீரமைப்புக் காலத்திற்கு முன்நிகழ்வாக, புரட்சியும் முழு அராஜகமும் இருக்கும். மாபெரும் பிரென்ச் புரட்சியும் வேறுவிதத்தில், வெப்ப மண்டலப் பகுதிக்கு அழிவை ஏற்படுத்தும் சூறாவளியுடன் ஒப்பிடும்போது, ஏப்ரல் மாதத்தின் மழைபோல குறிப்பிடப்படுகிறது. பூமியின்மேல் வரும் ஆபத்துக்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால், மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோகும்''(லூக்கா21:26) என்ற, இந்தக் காலத்தைக்குறித்த நம் போதகரின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையாய் நிறைவேறிஇருக்கிறது.

இந்த மின்னலின் பிரகாசங்கள் தேவனுடைய வார்த்தையை கவனித்திருக்கும்படியும், பொன்னான கற்பனைக்கும் மனித சகோதரத்துவத்தின் சமஉரிமைகள் மற்றும் சலுகைகளுக்கும், இயேசுகிறிஸ்துவின் மாசற்றகுணம், அன்பு மற்றும் சுயதியாக மனப்பான்மைக்கும், எங்கும் வியாபித்திருக்கிற சுயநல பிரமாணத்திற்கு எதிராக உள்ள அன்பின் பிரமாணத்திற்கு, தொடர்ந்து விழிப்பாயிருக்கும்படி அழைப்புவிடுப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த யுத்தத்தின் நாட்களிலும் மனஉளைச்சலிலும் இருக்கும் உலகப்பிரகாரமான மனிதர்கள், எப்படி வேதத்தின் தீர்க்கதரிசனங்களை கவனத்தில் கொண்டுவருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதைய நிலைமைகள் மற்றும்அறிவுத்திறம் வாய்ந்தோர் அனைவரும் எதிர்நோக்குகிற பிரச்சனைகள், இந்த வேதாகம தீர்க்கதரிசன நிறைவேறுதலாக இருக்குமா என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். ஏதாவது வழிகளில் தற்போதுள்ள தவறுகள் சரிசெய்யப்பட்டு, நீதி நிலைநாட்டப்படும் என்று மனிதர்கள் நம்பி விசுவாசிக்கும்போது, இவையனைத்தும் நீதி மற்றும் வரவிருக்கும் நியாயத்தீர்ப்புகளின் காரணத்திற்கு அவர்களை வழிநடத்துகிறது(அப் 24:25).

நம்முடைய மகிமைநிறைந்த இராஜாவின் கண்ணுக்குத் தெரியாத ஆவிக்குரிய பிரசன்னத்தை சுற்றியுள்ள புயல்மேகங்களிலிருந்து வெளிப்பட்ட ஒளியின் பிரகாசங்கள், திடீரென்று அடுத்தடுத்து அதிகரிக்கின்றதாக இருக்கின்றது. தேவனுடைய வார்த்தையின் இந்தக்கொள்கைகள் ஒளிர்கிறதாகவும், எல்லா மனிதர்களின் ஆலோசனைக்காக அவர்கள்முன்பாக கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இவைகள் தினசரி பத்திரிக்கைகளில் மட்டுமல்லது, பிரபலமான பருவ இதழ்களிலும் உத்தியோகப்பூர்வ தொழிலாளர் அமைப்புக்களில், கடைகள் மற்றும் தொழிற்சாலைகளில், வணிகர் கணக்கிடும் அறைகளில் சந்தையிடங்களில் மற்றும் பொதுவான கூட்டங்களில் விவாதிக்கப்படுகின்றன. புறஜாதி தேசங்களும்கூட இவற்றை விவாதிக்கின்றனர், அவர்கள் கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்களின் அனுதின வாழ்க்கை மற்றும் கிறிஸ்தவ தேசங்களாக இருக்கிறவற்றின் தற்போதைய போக்கு ஆகியவற்றை, கிறிஸ்தவ மார்க்கத்தின் மாபெரும் நிறுவனரின் பண்பு மற்றும் போதனைகளோடு ஒப்பிட்டுப்பார்த்து முரண்படுகின்றனர். இந்த இரண்டில், இரண்டாவதாக உள்ளதை புகழ்கின்றனர், முதலாவதை ஏளனம் செய்கின்றனர்.

**பூமி அதைக்கண்டு அதிர்ந்தது**

இந்த உலகத்தை பிரகாசிக்கச்செய்த தேவனுடைய மின்னல்பிரகாசத்தின் விளைவாக, அங்கே மாபெரும் கிளர்ச்சி எப்புறமும் வெளிப்படுத்தப்பட்டது. அதுபோன்ற நிலைமைகள் இதற்குமுன் நிலவியதில்லை. அங்கே அதிருப்தி மற்றும் அமைதியின்மையின் முன்னறிகுறியால் முணுமுணுப்புக்கள் இருந்தன. பூமி முழுவதும் இருந்து தற்போதைய பிரபலமான சிந்தை, புரட்சியின் திசையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. மின்னலின் பிரகாசம் இந்த பூமியிலுள்ள தவறுகளை உன்னத ஸ்தானங்களில் உள்ள நேர்மையின்மையை வெளிப்படுத்தியது, மேலும் மனிதத்தன்மையின் கண்ணியத்திற்கு மிகவும் கீழாக வாழ்வதை அவர்களுக்குக் காண்பித்தது. ஆனால் அவர்களால் காணஇயலாதவற்றை எவ்வாறு சரிசெய்வது: மேலும் முரண்பட்ட கருத்துக்கள், குரல்கள், கோட்பாடுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் தீர்க்கதரிசி முன்னறிவித்த உண்மைகளை வெளிப்படுத்தின. ஏனெனில் தேசங்கள் கோபப்பட்டன, ஜாதிகள்(புறஜாதிகள், ஜனங்கள்) கொந்தளித்தது, மேலும் வார்த்தைப்போரின் இரைச்சல்களிலிருந்தும், உலகத்தை எழுச்சியுற செய்ய தற்போது துவங்கியிருக்கிற தாக்குதல்களிலிருந்தும் முழுஉலகமும் திகைத்து நிற்கிறது.

**சீயோன் கேட்டு மகிழ்ந்தது**

ஆனால் உலகத்தின் இந்த குழப்பம் மற்றும் கொந்தளிப்புக்களின் மத்தியில், தேவனுடைய உண்மையாக அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் விசுவாசமுள்ள ஜனங்களின் மனப்பான்மை என்ன ? அவர்களும் பயத்திலிருக்கிறார்களா ? தேவனுடைய நியாயத்தீர்ப்பு மூர்க்கமானவர்மீதும் கீழ்ப்படியாதவர்மீதும் கனமாய் விழுந்தது. அதனால்முழு உலகமும் குடித்து வெறித்தவனைப்போல தடுமாறுகிறது(சங்107:27). அதுபோல பரிசுத்தவான்கள் துயரப்பட்டு கலக்கமடைகிறார்களா ? ஆ, இல்லை; ‘‘சீயோன் கேட்டு மகிழ்ந்தது; கர்த்தாவே உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தம் யூதாவின் குமாரத்திகள் களிகூர்ந்தார்கள்'' என்று எழுதியிருக்கிறதே. ‘‘சீயோனில் இருந்த பாவிகளே திகைத்தவர்கள்'', மற்றவர்கள் அழுதுபுலம்பும்போது, ஏன் பரிசுத்தவான்கள் களிகூர்ந்து இருதயத்தில் இளைப்பாறுகிறார்கள் என்று சங்91 மற்றும் 46 காண்பிக்கிறது. ஏனென்றால் அவர்கள், ‘‘உன்னதமானவரின் மறைவிலும் (நிழலான ஆசரிப்புக்கூடாரத்தின் பரிசுத்தஸ்தலத்தின்மூலம் குறிப்பிடப்படுகிறது),

சர்வவல்லவரின் நிழலிலும்''(நிழலான கூடாரம், பகலில் மேக ஸ்தம்பத்தினாலும் இரவில் அக்கினி ஸ்தம்பத்தினாலும் மூடப்பட்டதைப்போன்று) இருக்கிறார்கள். தேவன் அவர்களுடைய அடைக்கலமும் பெலனுமாயிருக்கிறார்''. ''கர்த்தருடைய இரகசியம் அவருக்கு பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்''– சங்25:14.

உன்னதமானவரின் மறைவில் இருக்கிற இவர்கள், இந்த கொடுமையான நேரங்களில், உலகத்தின் மீதான தெய்வீக ஒழுங்கு பற்றின தற்கால முறைக்கான அவசியத்தையும், அதோடுகூட, அதன் பலனாக இருக்கும் நீதியாகிய சமாதான கனிகள் ஆகிய இரண்டையும் காணச் செய்கின்ற தெய்வீகத் திட்டத்தின் தெளிவான அறிவை, அதின் காலங்கள் மற்றும் வேளைகளுடன் கிடைக்கப்பெற்றுள்ளனர். கர்த்தரின் இந்த மாபெரும் நாளின் புயல் மற்றும் யுத்தத்தின் மத்தியில், சேனைகளின் கர்த்தரின் கட்டளையிடுகிற சத்தத்தை அவர்கள் கேட்டு, தங்கள் இருதயங்களில் மகிழ்ச்சியடைகிறார்கள். ஏனென்றால் எல்லாக் குழப்பத்திலிருந்தும் விடுவிக்கிற அவருடைய ஆற்றலில் அவர்கள் முழுநம்பிக்கை வைத்துள்ளனர். இந்த நாளின் நியாயத்தீர்ப்புகளில் அதிகாரம் மற்றும் கட்டுப்படுத்தும் உன்னத ஸ்தானமாகிய பரலோகத்திலிருந்து கர்த்தர் பேசுகிறார் என்று அவர்கள் உணர்ந்துள்ளனர். ஆகையால் அவர்கள் அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூறுதலில் நன்றிசெலுத்துகின்றனர்(சங்30:4). எல்லாவற்றையும் நன்றாக செய்கிற அவருடைய செயலை உறுதிப்படுத்துகிற அவருடைய நீதி, ஞானம், அன்பு மற்றும் வல்லமையை கொண்டாடுகிறார்கள்.

**கவனமற்றோர் செவிகொடாதோர்**

ஆனால் உலகின் பெரும்பான்மையானவர்கள் தற்போதைய நிகழ்வுகளின் உண்மையான அறிகுறி பற்றிய அறியாமையில் இருப்பதனால் பயத்திலும் திகிலிலும் இருக்கும்போது, பரிசுத்தவான்கள் தெளிவான அறிவுடன் களிகூர்ந்து, தங்கள் தலைகளை உயர்த்துகிறவர்களாக இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் அதன் பலனைக் காண்கிறார்கள், உலகக்கவலையையும், பரலோகத்திலிருந்து பேசுகிறவரின் சத்தத்தையும் கவனியாதசிலர், தங்களுடைய விக்கிரகங்களினால் தங்களையே பெருமை பாராட்டிக்கொள்வார்கள் என்று சங்கீதக்காரன் குறிப்பிடுகிறார். மேலுமாக அவர் கூறுகிறார்; ''சொருபங்களை வணங்கி, விக்கிரகங்களைப் பற்றிப்பெருமை பாராட்டுகிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக''. இந்த வார்த்தைகள், அப்.பவுலின் எச்சரிக்கையை நம் சிந்தைக்குக் கொண்டுவருகிறது; ''பரலோகத்திலிருந்து பேசுகிறவரை விட்டு விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்''(எபி12:25). பரிசுத்த பவுல் இந்த வார்த்தைகளை கர்த்தருடைய சத்தத்தை அறிந்து, அதை அறிந்துகொண்டவர்களை முகவரியிட்டு கூறுகிறார்; கோபத்திலும் நியாயத்தீர்ப்பிலும் கர்த்தர் பேசும்போது அதை அவர்கள் எந்நேரத்திலும் கவனித்து ஏற்றுக்கொள்ளாமல் போகலாம்.என எச்சரிக்கிறார்.

ஆனால் அந்தோ! எச்சரிப்பை கவனியாத சிலரும் இருக்கிறார்கள். மேலும் கர்த்தருடைய சத்தத்தை அங்கீகரித்தபோதிலும், அதற்கு கீழ்ப்படிய நீண்டகாலமாக மறுக்கிறவர்கள் சிலரும் இருக்கிறார்கள். அவர்கள் பரலோகத்திலிருந்து பேசுகிறவரிடமிருந்து விலகி,தேவனுக்கு பதிலாக தங்கள் மூர்க்கமான இருதயங்களில் கட்டமைத்திருக்கிற விக்கிரகங்களை நோக்கித் திரும்புகிறார்கள். இந்த ''பொறிக்கப்பட்ட சொருபங்கள்'' உண்மையிலேயே அவர்களுடைய கைவேலையாக இருக்கிறது. அவைகள் இந்தத் தீமையான நாட்களில் ''பொய்யாய் அழைக்கப்படுகின்ற'' மனித தத்துவங்களும் அறிவியலுமேயாகும். ஒருவிசை தேவனுடைய சாட்சியைக் கேட்டிருந்து, அதை புறக்கணித்தவர்கள் தற்போது மிக அதிகமாக காணப்படுகின்ற விக்கிரக ஆராதனைகளின் அநேக வடிவங்களுள் ஒன்றில் தவிர்க்கமுடியாதநிலையில் விழுந்திருப்பார்கள், இல்லையேல் அவைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு அமைதியற்று அலைவார்கள்.

அப்படிப்பட்ட அனைவரும் குழப்பமடைந்துபோவார்கள். அவர்கள் வெட்கப்பட்டு குழப்பத்தில் விடப்படுவர்; அவர்கள் விக்கிரகங்கள் அழிக்கப்படும். ஒருமுறை பிரகாசிக்கப்பட்டும், சத்திய மற்றும் பரிசுத்தஆவியின் பெருக்கமான செல்வாக்குடன் ஆசீர்வதிக்கப்பட்டும், மனப்பூர்வமான பாவம் செய்கிறவர்கள், அவர்களுடைய செயல்களுக்கான நீதியான தண்டனையிலிருந்து தப்பிக்கமுடியாது என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். எபிரேயர்12:14–19 வசனப்பகுதி, தேவனுடைய பிள்ளைகளுக்கான இந்த ஆபத்தைக் குறிப்பிடுகிறது. மேலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த கட்டளையிலிருந்து விலகுவதால் நேரிடவிருக்கும் அச்சம் நிறைந்த தண்டனைகளைக் குறித்து அவர்களுக்கு எச்சரிக்கிறது. அப்.பவுல் இங்கு பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையின் துவக்கக்காட்சிகளோடு இணைத்துள்ளவற்றை சித்தரித்துக் காட்டுகிறார். மோசேயைவிட பெரியவராகிய நம் கர்த்தர் இயேசுகிறிஸ்துவின்கீழ், இந்த தற்போதைய யுகத்தின் முடிவில் ஏற்படுத்தப்படவிருக்கும், புது உடன்படிக்கைக்கு முன்னதாக நிகழும் நிகழ்வுகளோடு இதனை ஒப்பிட்டு, சித்திரமாகக் காண்பிக்கிறார்.

கர்த்தருடைய வீடாகிய பர்வதம்(இராஜ்ஜியம்), பர்வதங்களின் கொடுமுடியிலே இப்போது ஸ்தாபிக்கப்பட்டு, இந்த உலகத்தின் பெரிய இராஜ்யங்களை தள்ளி, சிறிய அரசாங்கங்களான மலைகளின்மேல் உயர்த்தப்பட்டிருக்கிறது(ஏசா2:2). மேகங்களும், அந்தகாரமும், உபத்திரவங்களும், குழப்பங்களும் தேசங்கள்மேல் கடுந்துன்பங்களும் சூழ்ந்துள்ளன. இடிமுழக்கங்களும், மின்னல்களும் சீனாய் மலையில் இஸ்ரயேலர்களுக்கு செய்ததைப்போன்று, உலகமனைத்தையும்அதிரச்செய்கின்றன(யாத்19:1–25).தற்போது, அதாவது 1878ன் வசந்த காலத்திலிருந்து, தேவன் ''தம்முடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோனிலே தம்முடைய இராஜாவை

அபிஷேகம் பண்ணிவைத்திருக்கிறார்(சங்2:6). எனவே, மோசேக்கு கீழ்ப்படிய மறுத்தும், சீனாய் மலையின் பண்டிகையின்போது நடந்த சம்பவங்களை துணிகரமாக அவமதித்தவர்கள், சடுதியிலே மரணத்தை சந்தித்திருக்க, புது உடன்படிக்கையின் மாபெரும் மத்தியஸ்தரின் சத்தத்தையும், தற்போது அது ஸ்தாபிக்கப்படும்போது உடன் நிகழும் குறிப்பிடத்தக்க சூழ்நிலைகளையும் நாம் அவமதித்தால் எப்படி தப்பிப்போம்?

**இறுதிக் கருத்துக்கள்**

நாம் உபத்திரவத்தின் ஆழ்ந்த மேகங்களைக் காண்கிறோம். கிழக்கிலிருந்து மேற்குவரை நியாயத்தீர்ப்பின் இடிமுழக்க சத்தங்களை நாம் கேட்கிறோம்; "சூரியன் உதிக்கும் திசை தொடங்கி, அது அஸ்தமிக்கும் திசை வரைக்குமுள்ள பூமியைக் கூப்பிடுகிறார்"(சங்50:1). சத்தியம் மற்றும் நீதியாகிய மின்னல் பிரகாசங்களால், முழு பூமியும் தற்போது, எப்படி அசைக்கப்படுதலின் வழிமுறையில் செல்கிறது என்று நாம் பார்க்கிறோம். இந்த அசைக்கப்படுதலானது, தற்போதுள்ள எல்லா அமைப்புக்கள், நிறுவனங்கள், மற்றும் அரசாங்கங்களை முற்றிலுமாக தூக்கி எறிதலில் சென்று முடிவடையப்போகிறது என்பதையும் நாம் கவனிக்கிறோம். தற்கால நிகழ்வுகள் உண்மையாகவே எக்காளதொனியில் பேசுகின்றன. இந்தக் காரியங்களை நாம் எவ்வாறு உன்னிப்பாக நோக்கமுடியும்? நிச்சயமாக, அன்பு சகோதர்களே, பயபக்தியும் ஆழ்ந்த சிந்தையும் கொண்டு இதை நோக்குவோமாக. நிச்சயமாக, நாம் "அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்கு.."(எபி4:1) விழிப்பாயிருந்து ஜெபிப்போம். நாம் நம்முடைய அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்படியாக, நம்முடைய நடைமுறையை மிகுந்த அக்கறையுடன் நெறிப்படுத்துவோம்.

இந்த முக்கிய சம்பவங்கள் நிறைந்த காலகட்டத்தில், அசைவுள்ளவைகள் யாவும் அசைக்கப்படும், அசையாதவைகளாகிய சத்தியம் மற்றும் நீதியின் காரியங்கள் மட்டும் நிலைத்திருக்கும்(எபி12:25–29). வரவிருக்கும் இராஜ்ஜியத்தில் பங்குபெற அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும், நீதியை நேசிக்கிறவர்களாக இருக்கவேண்டும். அதற்கெதிராக அநேகக் காரியங்கள் பேசப்பட்டாலும், நாம் தைரியத்தோடும் அன்போடும் சத்தியத்திற்காக நிற்கவேண்டும். மற்ற அனைவரும் இந்தக் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்படுவர். இந்த "தீமையின் நாளின்" கண்ணிகளும் வஞ்சகங்களும் இந்த மாபெரும் வேலையை நிறைவேற்றி முடிக்கும். இறுதியில் உண்மை மாத்திரம் நிலைத்திருக்கும். "இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள்(நாம்) கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" (2பேதுரு3:14). வரவிருக்கிற இளைப்பாறுதலுக்குள் நுழைவதற்கு தயாராயிருப்போம்.

---

R 5990

# நம் போதகரது ஆற்றலுள்ளதும், கருத்தைக் கவர்கின்றதுமான பாடங்களில் ஒன்று

## One of the Masters forceful and beautiful lessons

“காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்” – மத்தேயு 6:28.

நம்முடைய போதகர் பூமியிலிருந்தபோது செய்த ஊழியத்தில் அநேக விலையேறப்பெற்ற பாடங்களை போதித்தார். அவைகள் ஒருபோதும் பழையவைகளாய்ப் போகவில்லை. கிறிஸ்துவின் உண்மை சீஷனுக்கு அவைகள் எப்பொழுதும் புதிதாகவும் புத்துணர்ச்சியூட்டுவதாயும் இருக்கும். அவர் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட பன்னிரெண்டு சீஷர்களுடன் நடந்துசென்றபோதும், பேசினபோதும் அவர் கடற்கரையருகிலோ அல்லது மலைகள் மேலிருந்தோ அல்லது வழியருகே நின்றோ போதித்தாலும், அவரது ஞானமும் கிருபையும் நிறைந்த வார்த்தைகள் அர்த்தத்தோடுகூடிய உணர்வூட்டுவதாக நம்மை வந்தடைகிறது, இதயத்துடிப்புள்ளதாக வாழ்க்கையை மாற்றுகிறது, முழு பலத்தையும் வல்லமையையும், உற்சாகத்தையும், திடத்தையும் அளித்து, நம் இருதயங்களுக்கு ஆசீரையும் தருகிறது.

இந்த வார்த்தைகளை நாம் ஆலோசிக்கும்படி நமது கவனத்துக்குக் கொண்டுவந்த கர்த்தர், தம் வார்த்தைகளைக் கேட்கிற அனைவருக்கும் பரீட்சயமாயிருந்த ஒரு எடுத்துக்காட்டைச்சொல்லி விளக்கினார். லில்லி புஷ்பங்கள்மேல் தேவனுடைய அக்கறை, தம் சொந்த ஜனங்கள்பேரில் அவர் கொண்டுள்ள மாபெரும் அக்கறைக்கு, அவரது அனந்த ஞானம், வல்லமை, அன்புக்கு ஒரு பொருத்தமான நினைப்பூட்டுதலாய் இருக்கிறது. சாலமோன் ராஜா தன் அரசர்க்குரிய மகிமையில் உடுத்தியதைக் காட்டிலும், ஒரு நாள் மட்டுமே மலர்ந்து வாடிப்போகிற, ஒரு எளிமையான புஷ்பத்துக்கு உடுத்தி, கவனமாக மேற்பார்வையிடும் அவர், அவரிடத்தில் நம்பிக்கையோடிருப்பவர்களுக்கு நிச்சயமாக அதிகம் உடுத்த ஏற்பாடுசெய்வார்.

### அவரது வாக்குறுதியை சிலர் பெற்றிருக்கின்றனர், சிலர் பெற்றிருக்கவில்லை

சந்தேகத்திற்கிடமின்றி, நம் கர்த்தர் அதிகமான வார்த்தைகளை யூதர்களுக்கு கூறியிருந்ததோடு ஒப்பிடுகையில், புறஜாதிகளுக்கு அந்தளவு கூறியிருக்கவில்லை. ஏனெனில் முழு உலகமும் தேவனுக்கு அந்நியராக இருந்து, புறஜாதியாராக, பொதுவான சாபத்தின்கீழும் தண்டனையின் கீழும் இருந்தனர். சீனாய் மலைமீது ஏற்படுத்தப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலமாக, இஸ்ரயேல் ஜனங்கள் மட்டுமே தேவனோடு உடன்படிக்கையின் உறவுக்குள் மீண்டும் கொண்டுவரப்பட்டனர். இதன்விளைவாக, வேறுபட்ட வார்த்தைகள் அவர்களுக்கு பொருத்திக்காட்டக்கூடியதாய் உள்ளது. தேவனிடத்தில் உறவுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தபடியால், அவரது வாக்குத்தத்தங்கள் அவர்களுக்குரியதாயின. அவர்களது ஆசீர்வாதத்துக்கென்றே அனைத்தும் செயல்பட்டன. அவர்கள் அவரிடத்தில் உண்மையுள்ளவர்களாயிருப்பார்களானால், அவர்களது ஆடுமாடுகள், வயல்வெளிகள், மற்ற அனைத்தும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தது. ஆகவே தம் விசேஷித்த ஜனமாக அவர்களை அவர் தெரிந்துகொண்டபடியினால், நம் கர்த்தர், இந்த கருத்தின்படி செயல்பட்டு, தேவனிடத்தில் அதிக நம்பிக்கை வைக்கும்படியும், அதிக பற்றுறுதி வைக்கும்படியும் இஸ்ரயேலின் பிள்ளைகளுக்கு புத்திமதி கூறினார்.

நம் போதகரைப்போலவே நாமும், மற்ற எல்லாரையும்விட யாருக்கு நாம் ஆறுதலளிக்கவேண்டும், யாருக்கு தேவனுடைய அக்கறை பற்றிய நிச்சயத்தை அளிக்கவேண்டும் என்று மனிதர்க்கிடையிலான வேறுபாட்டை தெளிவாக ஏற்படுத்தவேண்டும். ஒரு சிலர் தேவ குடும்பத்திற்குள் வந்திருக்கலாம், வேறு சிலரோ வராதிருக்கலாம் , இதனால் அவரது வாக்குத்தத்தங்களை சிலர் தங்களுடையதாக்கியிருக்கக்கூடும், சிலர் அடைந்திராதிருக்கக்கூடும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். வாக்குத்தத்தங்கள் அவர்களுக்கு ஒருபோதும் கொடுக்கப்படவில்லையாதலால், அவர்கள் தங்களுக்குரியவற்றை கேட்கும் உரிமை பெற்றிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டி, மற்றவர்களை நாம் வஞ்சிக்கக்கூடாது. இதற்கு மாறாக, இந்த சுவிசேஷ யுகத்தின்போது திறக்கப்பட்டுள்ள விசேஷ ஏற்பாட்டின்கீழ், வாக்குத்தத்தங்கள் கர்த்தரோடு உடன்படிக்கை செய்வோருக்கு மட்டுமே என்றும், இந்த வாக்குத்தத்தங்கள் நிபந்தனைக்குட்பட்டவை என்று குறிப்பிட்டு சொல்வோமானால், நாம் அவர்களுக்கு அதிக நன்மை செய்தவர்களாய் இருப்போம். தேவனிடத்தில் பற்றுறுதியும், குறைவுபடாத நம்பிக்கையும் ஒரு கிறிஸ்தவனுக்கு மிக முக்கியமான ஒன்றாகும். எல்லா பயத்தையும் புறம்பே தள்ளும் அன்பின்ஆவியில், அதாவது தேவகிருபையிலும் அறிவிலும் கணிசமாக வளர்வதை கற்றறிந்திருப்பதாகும். இந்தப்பாடத்தைக் கற்று, அதன் சந்தோஷத்தை அனுபவிக்காதவர்கள், தேவனிடத்தில் நெருங்கி சேர்வதும் அவரிடத்தில் ஐக்கியம் கொள்ளுதலுமே இதன் அர்த்தமாகும்.

### உலகின் பாரமான சுமைகள்

வாழ்க்கைக்கு அவசியமான எல்லாவற்றையும் ஏற்பாடு செய்துகொடுப்பதே மிக முக்கியமான ஒன்றாகும் என போதகர் தம் ஜனங்களிடத்தில் பொதுவாக உரையாற்றினார். அவரது மறையுரையை கேட்கும் கூட்டத்தாரில், பெரிய

ஐஸ்வரியவான்களை பெற்றிருந்தது மிக குறைவு. தரித்திரரே பொதுவாக அவரைத் தேடிவந்தனர். பாலஸ்தீனாவிலுள்ள தரித்திரரும் மற்ற கிழக்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களும் உணவு மற்றும் உடைகளை அடைவதை அதிக கடினமாக கண்டனர். இன்றைய நாளின் உலகின் அநேக பகுதிகளிலும், குறிப்பாக இந்தியாவில் பசியில்லாமல் உறங்கச்செல்வது அரிதாயுள்ளது, வாழ்வுக்குரிய அத்தியாவசிய தேவைகள் இவர்களுக்கு மிக முக்கியமான நோக்கமாயுள்ளது.

நம் கர்த்தராகிய இயேசுவின் நாட்களில், அநேக ஜனங்களது நோக்கம்; எதை உண்பது எதை குடிப்பது, என்ன உடுத்துவது என்பதாகவே இருந்ததாக கர்த்தர் சுட்டிக்காட்டினார். அவர்கள் அவற்றிலேயே ஆர்வமாயும் கவலையுற்றும் இருந்தனர். இவைகளை புறஜாதியாரே நாடித்தேடுவர் என்று போதகர் கூறினார். உணவையும் உடுத்துவதையும் சேகரிப்பதே அவர்களது வாழ்வின் நோக்கமாயிருந்தது. அதுவே அவர்களது ஜெபத்தின் பாரமாக இருந்தது. தேவனுடைய ஜனமாக வெளிப்படையாக இருந்த யூதர்கள்கூட அவர்மேல் உள்ளார்ந்த நம்பிக்கை வைக்க கற்றிருக்கவில்லை. மாறாக, பொருட்களை சேகரிப்பதில் பேராசையுள்ளோராய் இருந்தனர், உண்மை ஐசுவரியத்தைக்காட்டிலும் உலக ஆதாயத்தையே பெரிதாய் பற்றிக்கொள்ளத் தேடினர். அவர்கள் கேட்பதற்கு முன்பே அவர்களுக்கு என்னதேவை என்பதை தேவன் அறிந்திருக்கிறார் என்றும் , அவர்களுடைய தற்காலிகத்தேவைகளை பூர்த்திசெய்ய தேவன் ஏற்பாடுசெய்வார் என்றுணர்ந்து, முழுமையாக அவருக்குள் மனநிறைவு கொள்ளவேண்டும் என்றும் தம் சீஷர்கள் உணர்ந்திருக்கவேண்டுமென நம் கர்த்தர்கூறினார். தேவன் அவர்களது நலன்கள் இன்னதென்று மேற்பார்வையிடுவதனால், அவர்கள் பார்வைக்கு நிஜமாகவே நன்மையானது மற்றும் அவசியமானது என்று எதையும் அவர்கள் தேடவேண்டியதில்லை என்ற நிச்சயத்தன்மையுடன் இருக்கவேண்டுமென இயேசு விரும்புகிறார்.

''காட்டுப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்' என்று நம் கர்த்தர் இயற்கையிலிருந்து உதாரணத்தை சுட்டிக் காண்பித்து, நம் மனதில் ஆழமாய்ப் பதிய வைப்பதே முழுமையான பாடமாக இருப்பதாக தோன்றுகிறது. இராஜ்யத்தின் காரியங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக, மிக உயர்ந்த முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், இவற்றை முதலாவதாகத் தேடும்போது, பூமிக்குரிய தேவைகள் அனைத்தும் அவர்களுக்குரியதாகும் என்ற உறுதியைப் பெறுகிறார்கள் என்பதே ஊக்கமிக்க நினைப்பூட்டுதலாக உள்ளது.

**காட்டுப்புஷ்பத்தின் பொருத்தமான முக்கியத்துவம்**

காட்டுப்புஷ்பங்களைக் குறித்து நாம் கருத்தில்கொள்ள என்ன இருக்கிறது ? அவை எப்படி வளர்கின்றன ? இதன் பொருள்என்ன ? இயேசு தாமே பதிலளிக்கிறார் ; ''அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும், சாலமோன்முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' – மத்6:28,29.

அதாவது, காட்டுப் புஷ்பங்கள் மிகப் பொருத்தமான வழியில் வளர்கின்றன. அவைகள் கிருபையிலும்அழகிலும் முதிர்ச்சியடைகின்றன. செயற்கையாக எதையும் சேர்க்காமலேயே அழகின் ஆடைகளால் தன்னை ஒப்பனை செய்துகொள்கின்றன. தங்களது வளர்ச்சிகுறித்து அவைகள் கவலைப்படுவதில்லை. ''தற்போது, இன்றைய நாளில் 1/4இன்ச் அளவு கூடுதலாக வளர்ந்தேனானால், நான் வியப்பார்வம் அடைவேன். பக்கத்தில் இருக்கும் காட்டுப்புஷ்பத்தைப்போல் அழகாயிருககும்படி நான் எவ்வளவு சீக்கிரம் வளரமுடியுமோ, அவ்வளவு சீக்கிரம் வளர்ந்தேனானால் ஆச்சரியமடைவேன்; என்னைக்குறித்து ஜனங்கள் என்ன நினைப்பார்கள் என்று பெருமிதங் கொள்வேன்'' என்று காட்டுப்புஷ்பம் கூறி, காலையில்எழுவதில்லை. பூமியிலிருந்தும், தேவன்அதற்கென அங்கு ஏற்பாடுசெய்துள்ள சூழ்நிலையிலிருந்து, எதை தான் உறிஞ்சுவது என்று இது எளிதாக தன்மயமாக்குகிறது. ''இங்கு என்னால் வளர்ச்சியடையமுடியாது, நான் வேறொரு இடத்துக்கு செல்வேன் என எண்ணுகிறேன்'' என்று இது கூறாமல், எங்கு என்ன நேர்ந்தாலும், தன்னால் முடிந்தளவு சிறப்பாக செய்திருப்பதாக எண்ணும்''.

நம் கர்த்தர் குறிப்பிட்ட பாலஸ்தீனாவிலுள்ள காட்டுப்புஷ்பங்கள், நாம் பொதுவாக வழக்கத்தில் பயன்படுத்தும் லில்லிப்புஷ்ப வகை அல்ல, மாறாக வேறு செடிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. இவை பல தாவர வகைகளை உள்ளடக்கியவை, எங்கும் வளரக்கூடியவை எனவும் நாம் நிதானிக்கிறோம். பாலஸ்தீனாவிலுள்ள பூக்களைப் பார்த்து பரீட்சயமானவர்கள், சிவப்பு நிற பூவே ''வயல்வெளியிலுள்ள காட்டு லில்லிபுஷ்பம்'' என சுட்டிக்காட்டுவர்.

இதில், புதிய சிருஷ்டிகளாகிய நமக்கு என்ன பாடம் எனில், கர்த்தருக்கு நம் இருதயங்களை கொடுத்திருக்கிறபடியால், தற்கால வாழ்க்கையின் காரியங்களுக்காக எதற்கும் நாம் கவலைப்படவேண்டியதில்லை, நச்சரிப்புக்கு ஆட்படவேண்டியதில்லை. அதே சமயத்தில், நமது ஆவிக்குரிய வளர்ச்சி குறித்தும், அளவுக்குமீறிய அக்கறை காட்டவேண்டியதில்லை. நம்மால் முடிந்ததை சிறப்பாக செய்து, அவரோடுகூட வளர்ச்சியடைகிறோம் என்று நம்புவோம். ஆனால் தேவன், கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளாகிய நமக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறவைகளில், குறிப்பாக ஈடுபாடு கொள்வதன் மூலமாக, நமது அழைப்பையும்

தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கிக்கொண்டு, தேவன் தம்மிடத்தில் அன்புகூறுபவர்களுக்கென்று ஆயத்தம்பண்ணின மகிமைகளை சுதந்தரித்துக்கொள்வோம். இக்காரியங்களில் ஆழ்ந்த கவனத்தை செலுத்தினோமாகில், நம் ஆவிக்குரிய வகையிலான தேவைகளிலோ, அல்லது பூமிக்குரிய வகையிலான தேவைகளிலோ நாம் குறைவுபடாதபடிக்கு, பரலோகத்தின் தகப்பன் நமது நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவார் என்று நம் போதகர் நமக்கு உறுதிபடச்சொல்கிறார். ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட தேவபிள்ளைகளாக நம் ஓட்டத்தை மகிழ்ச்சியுடன் நிறைவுசெய்யத் தேவையான, எவ்விதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், தற்கால ஆசீர்வாதங்களையும் அவர் நமக்குத் தருகிறார்.

காட்டுப்புஷ்பங்கள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை என்பதனால், நாமும் இனியும் உழைக்கவோ, நூற்கவோ அவசியமில்லையென்று கர்த்தர் கூறுவதாக நாம் எண்ணி, நம் வாழ்வின் முறையான கடமைகளை துறந்துவிடும்படி நம் கர்த்தர் பேசின வசனங்களுக்கு, நாம் தவறான உட்பொருள் அளிக்கக்கூடாது. நம் குடும்பத்தை பராமரிப்பதற்காக நம் கரங்களாலும் சிந்தையாலும் உழைக்கக்கூடாது என்று கர்த்தர் நிச்சயமாக ஒருபோதும் கூறவில்லை. தேவ வசனத்தில் கூறப்பட்ட இக்காரியங்கள் மனதில் பதிந்துள்ளன. தேவன் நமக்கென ஏற்பாடு செய்திருக்கிற வாழ்க்கை சூழல்கள் மற்றும் சுற்றுச் சூழ்நிலைகளுக்கு இசைவாக, நம் ஆற்றலை இயன்றளவு சிறப்பாய் வெளிப்படுத்தும்போது, நாம் கவலைப்படவேண்டியதில்லை என்ற சிந்தையைத் தந்து, கர்த்தர் நம் மனதில் பதிய வைக்கிறார். நம் பரலோகத் தகப்பனை விசுவாசத்தோடு நோக்கிப்பார்த்து, மனநிறைவோடிருந்து, நம் நடவடிக்கைகள் மற்றும் நலன்களை அவர் அக்கறையாய் கவனித்து, ஏற்ற ஏற்பாடு செய்வார் என்று ஏற்றுக்கொண்டு, எதிர்பார்த்திருந்து, லில்லிப் புஷ்பங்களைப்போல் நாம் கவலைப்படுவதிலிருந்து விலகியிருப்போம்.

அவரிடத்தில் எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள்;

வளர்கின்ற லில்லிபுஷ்பங்களைப்போல்;

மழையிலும் பனியிலும் அவை வளர்கின்றன!

ஆம் அவை வளர்கின்றன,

இருளிலும், இரவில் அனைத்தும்

மறைவாயிருந்தாலும் வளர்கின்றன,

சூரியக்கதிர்கள் படும்போதும், வெளிச்சத்தால்
வெளிப்படுத்தப்பட்டாலும் வளர்கின்றன

உங்களால் நடப்பட்டதா என்று அவைகள் கேள்வி
கேட்பதில்லை;

அவைகள் வளரும்போது நீங்கள் பராமரிப்பீர்களோ
என கவலைப்படுவதில்லை

பள்ளத்தாக்கிலோ, வளர்வெளியிலோ,
வேறெவ்விடத்திலும் கைவிடப்பட்டாலும்,
அவைகள் வளர்கின்றன,

தூய்மை வெண்மையில் அழகின் ஆடைகளில்
அணிவகுத்து

பரலோகத்தின் சொந்த வெளிச்சத்திலிருந்து
மகிமையின் ஒளிக்கதிர்களை வாங்கி,

இனிமையாய் வளர்கின்றன.

## பூரண நம்பிக்கையில் இளைப்பாறுதலும் சமாதானமும்

நம் சுற்றுப்புற சூழ்நிலைகள் அனைத்தையும் தேவன் அறிவார், வேறுஇடத்தில் பறித்து நடப்படும் அவசியம் ஒரு காட்டு லில்லி புஷ்பத்துக்கு நேரிட்டாலும், அது எப்படி வளர்கிறதோ, அதுபோல, எங்கு நம் புதிய சுபாவம் சிறந்து செழித்தோங்கி, பெருகமுடியுமோ அல்லது எங்கு நமது நியாயமான தற்காலிகத் தேவைகளை சிறப்பாக அடையமுடியுமோ, அங்கு அவர் முன்கூட்டியே வழிவகை பண்ணுவார். நமக்கு தற்காலிகமாகவும், ஆவிக்குரிய வகையிலும் நன்மையானது எது, சிறந்தது எது என்று அவர் அறிந்திருக்கிறார். பாதுகாப்புக் கவசத்தை நாமாக முன்வந்து நம் கரங்களில் எடுக்க முயலக்கூடாது, அல்லது நமது நிலைமைகளை கர்த்தர் ஒருபோதும் மாற்றமாட்டார் என்ற தீர்மானத்துக்கு வரக்கூடாது. அதற்கு மாறாக, கர்த்தருடைய வழிநடத்துதல்களை கவனிப்பது நமது பங்குக்கு செய்யவேண்டியதாகும். அவை மாற்றப்படவேண்டியது நமக்கு நன்மையாக இருக்குமெனில், நாம் அவரிடத்தில் நம்பிக்கை வைப்போமானால், அவைகள் மாற்றப்படும், அவர் அவைகளை மாற்றுவார். நாம் அவரது புத்திரராயிருப்போமானால், நிச்சயமாக நமது சொந்த சித்தத்தையல்ல,அவரது சித்தத்தையே நாம் விரும்புவோம். எந்த வாழ்க்கைச் சூழ்நிலையின் கீழும் அல்லது காலஇடச்சூழலின் மத்தியில் இருந்தாலும், "உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்"( மத்6:8) என்ற சிந்தையில் ஓய்ந்திருப்போமானால், பூரண ஓய்வை நாம் கண்டடைவோம்.

சில சமயங்களில், இந்த சிந்தையானது விசுவாசத்திற்கு பலமான சோதனைகளையும் சகிப்புத்தன்மையையும் கொண்டுவரும் என்று அர்த்தமாகாதா? கால இடச்சூழல்கள் துன்பத்தையும், சகிக்கக்கூடாத தன்மையையும் ஏற்படுத்தாதா? நம் கடமையை ஆற்றும்போது, அப்படிப்பட்ட கடினமான சூழ்நிலை நிலவினாலும், கர்த்தருடைய அருள் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டுமே தப்பிக்க வழியை உண்டுபண்ணாமல், நாம் அவரது சித்தத்துக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, ஒரு வித்தியாசமான வழியை குறித்துக் காண்பிக்கும்வரை அவருக்காக காத்திருந்தோமானால் அவருக்கு அந்த வழி சிறந்ததாய்த் தோன்றினால், அனைத்தும் நமது நன்மைக்கேற்றவாறே நடக்கும்படி வழிநடத்துவதை நிச்சயமாக நிரூபிக்கும். அவரால் நடப்பட்ட காட்டுப்புஷ்பங்களைப்போல், நமது பரலோக மணவாளனுடைய மகிமைக்காக மலர்ச்சியுறுவோமாக.

**அன்றாடத் தேவைகளுக்காக கேட்டல்**

“எங்கள் அன்றாட அப்பத்தை இன்றைக்கு எங்களுக்குத்தாரும்” என்று நாம் கேட்கவேண்டுமென்று இயேசு நம்மிடம் கூறுகிறார். தற்காலிகவழியில் எதை நாம் தெரிவுசெய்யவேண்டும் என்ற தனிக்குறிப்பாக இது கூறப்படவில்லை. நாம் எதை உண்ணவேண்டும் என்று நமக்கு அதிக பிரியமானதும் சுவைதருவதுமான உணவை சுட்டிக் காண்பிக்கக்கூடாது. அதை அவரிடத்திலேயே விட்டுவிடவேண்டும். வாழ்வின் தேவைகளுக்காக அவரையே சார்ந்துள்ளோம் என்பதை மட்டும் ஒப்புக்கொள்ளவேண்டும். அவரது வார்த்தையின் அறிவுரையோடு தொடர்புடைய, நமக்கு முறையாக தேவைப்படுபவற்றை அவரது ஞானம் ஏற்பாடு செய்துதரும் என்ற நம்பிக்கையில், அவரது அருளுக்காக அவரை நோக்கிப்பார்த்து காத்திருந்து, அவரளிப்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இப்படியாக நாம், தேவனுக்குள் திருப்தியடைந்தவர்களாக அன்றாடம் வளரும்போது, இராஜ்யத்துக்கு ஆயத்தமாவோம். கிறிஸ்தவர்களாயிருந்து, தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்து, தற்கால சூழ்நிலைகளிலிருந்து தற்போது கற்றுக்கொள்ள முடியாதவர்கள், மற்ற எந்த சூழ்நிலைகளிலும் இப்பாடத்தைக் கற்க மாட்டார்கள். தற்கால சூழ்நிலைகள், விசேஷித்தவிதமாக, கர்த்தரையே சார்ந்திருந்து அவர்மேலுள்ள நம்பிக்கையை பேணிவளர்த்து, உருவாக்குபவர்களுக்கு உதவிகரமாயிருக்கும். இந்த வகையில் ஐஸ்வரியவானைக் காட்டிலும் தரித்திரன் அனுகூலமடைவதை நாம் காணமுடிகிறது, மேலும் வயல்வெளியிலுள்ள காட்டுபுஷ்பங்களைப்போல தரித்திரராயிருந்தோரை குறிப்பிட்டே நம் கர்த்தராகிய இயேசு நமது திறவுவசனத்தில் பேசியிருக்கிறார். ஆவியில் தரித்திரராயிருந்தோர் தங்களிடமுள்ள இயலாமையை உணர்ந்துகொண்டு, இயேசு மட்டுமே கொடுக்கக்கூடிய சமாதானத்துக்காகவும் இளைப்பாறுதலுக்காகவும் காத்திருந்து, இந்த இளைப்பாறுதலைப் பெறும்படி அவரிடத்திற்கு வருகிறார்கள். இவர்களுக்கே நம் போதகருடைய கிருபை நிறைந்த வாக்குத்தத்தங்களும், ஞானமான பாடங்களும், தேற்றுதலும், அறிவுரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

பரலோகப் பிறப்பெய்தும் புஷ்பமே,

பூமிக்குரிய மண்ணில் பூத்துக்குலுங்கியே

சூரியன், காற்று, மழையிலிருந்து சிறந்த வண்ணம் பெறுகிறாயே,

விரைவில் உன் கிருபையின் அழகு, மேலான பரலோக ஆளுகையில் இருக்கும்

மீண்டும் துளிர்த்து, இன்னும் அழகாக பூப்பூக்கும்படி

புதிய தேசத்தில் பறித்து நடப்படும்

———————

R 5992

# மரணபரியந்தம் உண்மையாயிருத்தல்

## FAITHFUL UNTO DEATH

**திறவுகோல் வசனம்** : "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்"
– வெளிப் 2:10.

**ஆதார வசனங்கள்** : வெளிப்படுத்தின விசேஷம் 2:1–17.

வெளிப்படுத்தின விசேஷத்தில் குறிப்பிட்ட ஏழு சபைகளுக்கு கொடுக்கப்பட்ட செய்திகள், சந்தேகத்திற்கிடமின்றி அவர்களுக்கே பொருந்தக் கூடியவை. அவைகள் இன்னும் பரவலாகப் பார்க்கும்போது, முழு சுவிசேஷசபைக்கும் பொருத்திக் காட்டக் கூடியதாயுள்ளன. எண் ஏழு முழுமையைக் குறிக்கிறது. வெளிப்படுத்தின விசேஷபுத்தகம் அடையாளங்களாலான புத்தகம், இதை நம் கர்த்தர், "தம் தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு (அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்மூலம்) வெளிப்படுத்தினதுமான விசேஷம்"(வெளி1:1).

வெளிப்படுத்தின விசேஷம் அடையாளங்களினாலும் அறிகுறிகளாலும் நிரம்பியிருக்கிறது என்று வேதமாணவர் அறிவர். தவிர்க்கமுடியாத நிலையில் மட்டுமே நேரடி பாஷையில் பேசியிருப்பது விதிவிலக்காக இருக்கிறது. ஆனால் பொதுவாகவே, அடையாளங்களும் அறிகுறிகளுமே விதியாக ஏற்படுத்தப்பட்டிருப்பதால் நாம் மனநிறைவடைகிறோம்.

இதற்கிசைவாக, மீதியுள்ள புத்தகத்தோடுகூட "ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்" என்பதும் அடையாளங்களாகவே இருக்கவேண்டும். இந்த புத்தகத்தில் இனி நிகழவிருக்கிற வரலாறு, முன்னேற்பாடாக எழுதப்பட்டுள்ளது. இவைகள் கிறிஸ்தவ சபையின் வரலாற்றை அடுத்தடுத்த ஏழு நிலைமைகளாக அடையாளங் காணப்படவேண்டும். இந்த நிகழ்வு, கிறிஸ்துவின் முதல் வருகை துவக்கி, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலான வரலாற்றை உள்ளடக்கியதாக உள்ளது. இந்தத் தீர்மானம் சரியானது என்பதை இதன் நிறைவேறுதல் நிரூபிக்கிறது என்று நாம் கருதுகிறோம்.

அப்போஸ்தலர் யோவானால் காணப்பட்ட தரிசனத்தில், "ஒரு மனுஷ குமாரனுக்கொப்பாக" என்று முதலாம் அத்தியாயம் நமக்கு விரித்துரைக்கிறது. இந்த விளக்கம் சபையின் அடுத்தடுத்த ஒவ்வொரு நிலைக்கும், ஒன்று அல்லது அதிகமான அம்சங்களுக்கு விநோதமாய்ப் பொருந்துவதாய் தோற்றமளிக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் செய்தியை அனுப்புபவர் அவ்வாறு விவரிக்கிறார். ஒவ்வொரு செய்தியின் இறுதிபாகத்தில், ஜெயங்கொள்வோர்க்கு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டு, சபை வரலாற்றின் வேறுபட்ட காலப்பகுதிகளிலும் இது பொருத்தமாக்கிக் கொள்ளப்படுகிறது.

இந்த ஏற்பாட்டை கூரிய பார்வையுடன் கண்ணோக்கும்போது, அதன் காலக்கணக்கின் நிலையினை உறுதிசெய்யமுடியும். **எபேசு**, அப்போஸ்தலர்கள் வாழ்ந்த காலப்பகுதியைக் குறிக்கிறது. **சிமிர்னா** – புறஜாதியாரின் உபத்திரவக்காலம், கிபி 325வரை நீடித்தது. அப்பொழுது, கான்ஸ்டன்டைன் ரோமின் பேரரசனாக, கிறிஸ்தவத்துக்கு தயவு காண்பித்தான். **பெர்கமு** – போப்புமார்க்கம் எழுச்சியுறும் இடைப்பட்ட காலத்தைத் தழுவிக்கொண்டது. **தியத்தீரா** – உண்மை சபை வனாந்தரத்திலிருந்தபோது, போலிசபை பூமிக்குரிய ராஜாக்களோடு ராணிபோல் உட்கார்ந்து, சம்பிரமமாய் ஜீவித்தது. **சர்தை** சபை – மறுசீரமைப்புக்கு சற்று முன்னதாக ஒருசிறு கால இடைவேளையில் தரித்திருந்தது. **பிலதெல்பியா** – மறுசீரமைப்பின் காலம் துவக்கி, கிபி 1874வரை . **இலவோதிக்கேயா** சபை –இன்றைய நாளில் ஜீவிக்கிற பெயர்சபை.

### எபேசு சபைக்கான செய்தி

எபேசு என்ற வார்த்தைக்கு முதலாவது, மற்றும் விரும்பத்தக்க என்று பொருள். இக்காலப்பகுதியின்போது, நம் கர்த்தர் தம் வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்தியிருந்தார்(வெளி1:20). ஏழு சபைகளின் செய்தியாளர்களில் – பரிசுத்த பவுல், பரிசுத்த பேதுரு, பரிசுத்த யோவான் போன்றோர். இக்காலப்பகுதியில் நம் கர்த்தராகிய இயேசுவால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட்டு, வழிநடத்தப்பட்டனர். இதனால் நாம் அவர்களது போதனைகளை கர்த்தருடையதுபோல கருதி, அவர்களது வார்த்தைகள் அவரது வார்த்தைகளென்று விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறோம். இச்சபையின் காலகட்டமானது, அதின் உண்மை, நிதானமான உழைப்பு, சத்தியத்தைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் அதன் உண்மையான போதகர்களுக்காக பாராட்டப்பட்டது – அப்20:28–30; 1கொரிந்11:19. இந்தக் காலப்பகுதியின் குணாதிசயமாக, "அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அவரைப் பின்பற்றினார்கள்". அவர்கள் தங்கள் உடைமைகளை சந்தோஷமாய் செலவிட ஒப்புவித்தனர். அவர்கள் வைத்திருந்தவற்றை விற்று, தேவைப்பட்டோர்க்கு கொடுத்தனர். இந்த தற்கால வாழ்க்கையில் அப்பத்துக்கு அடிக்கடி குறைவுபட்டபோதிலும், ஜீவ அப்பத்தைப் பெற்றிருந்ததோடு, தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் வாக்குத்தத்தத்தையும் பெற்றிருந்தனர்.

ஏதேன் தோட்டத்தின் நடுவிலிருந்த விலக்கப்பட்ட விருட்சத்தைத் தவிர, மற்ற அனைத்து விருட்சங்களும் ஜீவ விருட்சங்களே என்பதை நினைவில் நிறுத்தவேண்டும். கீழ்ப்படியாமல் அந்த விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்த ஆதாமுக்கும் அவரது சந்ததிக்கும் மரணத்தை வருவித்தது. பரதீசின் மத்தியிலிருந்த அந்த விருட்சம், "நன்மை தீமையை அறியக்கூடிய விருட்சம்" என்று அழைக்கப்பட்டது. சுவிசேஷயுகத்தில் ஜெயங்கொள்வோர்க்கு மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டதும் நிறைவளிப்பதுமான சூழ்நிலையில், அந்த விருட்சத்தின் கனியை புசிக்கும் முழு சுதந்திரத்தைத் தருவதாக, இன்றைய நாளின் பாடத்தில் நம் கர்த்தர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அப்பொழுது தேவனைப்பற்றிய அறிவு அவர்களுக்கு தெய்வீக அங்கீகாரத்தின் அனுகூலத்தைப் பெற்றுத்தரும், அதற்குமாறாக, சாபத்தைக் கொண்டுவராது.

**சிமிர்னா சபைக்கு**

சிமிர்னா என்றால் கசப்பு என்ற அர்த்தமாகிறது. மிர்(Myrrh) மற்றும் மாரா(Marah) ஆகிய சொற்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவை. கிறிஸ்தவ சபையின் இக்காலக்கட்டமானது, நீரோபேரரசனில் ஆரம்பித்து, டயாக்ளிஷியன் வரையுள்ள ரோமானியப் பேரரசுகளின் கீழ், மிக கசப்பான உபத்திரவக்காலமாக இருந்தது. இந்த காலப்பிரிவிலுள்ள சபைக்கான தமது செய்தியில் நம் கர்த்தர் தம்மைக் குறித்து, "முந்தினவரும், பிந்தினவரும், மரித்திருந்து பிழைத்தவருமானவர்" என்று குறிப்பிடுகிறார். பிதாவின் ஒரே நேரடி சிருஷ்டிப்பு என்ற உணர்வில் அல்லது வகையில் அன்றி வேறு எந்தவிதத்திலும், முந்தினவரும் பிந்தினவரும்" என்ற வார்த்தை அவருக்குப் பொருந்தாது. இவர் மூலமாகவே மற்ற அனைத்தும் சிருஷ்டிக்கப்பட்டன. மற்ற எந்த கண்ணோட்டமும் வேத வசனங்களுக்கு முரண்பட்டதாக இருக்கும்–வெளிப்3:14; கொலோ1:15; 1கொரிந்8:6; யோவா1:1–3.

"நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்" – வெளிப்2:10. அவர்களுக்கு மாபெரும் உபத்திரவ நேரமாக இருக்கும் என்று, இவ்வாறாக இந்த காலப்பகுதியிலிருந்த தம் உண்மை ஊழியர்களுக்கு கர்த்தர் அறிவுறுத்தினார். புறஜாதி ரோம், இங்கு சாத்தானாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் இரத்தந் சிந்தவைக்கும் கொடூரங்களால் பூமிக்குரிய அரசாங்கங்களிலேயே மிகவும் பேய்த்தனமான தன்மையுடையதாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. ரோமப் பேரரசர்களின் தரக்குறைவான உபத்திரவங்களிலேயே மிக கொடூர உபத்திரவங்களாக, பத்து நாட்கள் அடையாளமாக குறிப்பிடப்பட்டுள்ளது. டயாக்ளோட்டின் ஆளுகை செய்த கிபி 303–313 வருடங்களே அந்த 10 வருடங்களாகும். இந்தக் காலப்பகுதியில் நிகழ்ந்த வரலாற்று சம்பவங்களை படித்தவர்களுக்கு, "நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக என்ற இவ்வார்த்தைகளின் ஆழங்களைப் புரிந்துகொள்ளமுடியும். உலகம் ஒருபோதும் கண்டிராதவைகள் சிமிர்னா சபையின் காலப்பகுதியில் நிகழ்த்தப்பட்டது, கிறிஸ்தவ சகிப்புத்தன்மையின் அஞ்சாத் தன்மைக்கான சில சாட்சிகளாகும். மரணபரியந்தம் உண்மையாயிருத்தலே இவர்களுக்கான அழைப்பாக இருந்தது, அதற்கான வாக்குத்தத்தம் என்னவெனில், ஜெயங்கொண்டோர் "இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை, மாறாக, சாகாமையாகிய ஜீவ கிரீடத்தை பெறுவார்கள்" என்பதேயாகும்.

**பெர்கமு சபைக்கு**

பெர்கமு என்ற வார்த்தையின்பொருள், பூமிக்குரிய உயர்வு என்பதாகும். செய்தியாளர் யாரெனில், "இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர்"(கிரேக்கத்தில்–இரண்டு வாய்கள்). அதாவது, தேவ வசனம் ஆகும். இந்தக் காலப்பகுதியின்போது, பெயர்சபை பிரபலமாக வளர்ந்திருந்தாலும், புற சமயத்தார் மற்றும் போப்பு மார்க்கத்தின் கொள்கைகளை அறிமுகப்படுத்தி, அதனை வளர்ச்சியடையச் செய்ததன்மூலமாக, உண்மைக் கிறிஸ்தவர்கள் பரீட்சிக்கப்பட்டு, தங்கள் விசுவாசத்தை நிரூபித்தனர். புறசமயத்து ஆசாரியர்கள், ஜனங்களிடத்திலான தங்களது செல்வாக்கையும், மேன்மையான ஸ்தானங்களையும் இழக்க மனதில்லாதிருந்து, தங்களது கொள்கைகளை வளைத்து, அதனை புதிய மதத்துக்குப் பொருந்தும்படி யுக்திசெய்தனர். இவ்வாறாக, பெயரளவு கிறிஸ்துவர்களாக தங்களை அறிக்கையிட்டவர்கள், தங்களது பழைய கொள்கைகளில் அநேகமானவைகளை கிறிஸ்தவ சபைக்குள் கொண்டுவந்தனர். இறுதியாக, இவைகள் இணைக்கப்பட்ட ஒட்டுக்கன்றாக; "பரிசுத்தவான்களுக்கென்று ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசமாகிய" உண்மை மூலத்தாவரத்தின்மேல் ஒட்டப்பட்டது – யூதா3.

இவ்வாறு சபை தவறுக்குள்ளும், தீய நடக்கைக்குள்ளும் படிப்படியாக செல்லும்படியும், தேவனைவிட்டு விலகவும் நடத்தப்பட்டது. இதுவே வெளிப்2:14ம் வசனத்திற்கான அர்த்தமாக குறிப்பிடப்படுகிறது; "ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன்பேரில் எனக்குக் குறைஉண்டு. விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரயேல் புத்திரர் முன்பாகப் போடும்படி, பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு".

பிலேயாம் தேவனுடைய தீர்க்கதரிசியாயிருந்தும், இஸ்ரயேலரை பாவத்துக்குள் விழும்படி எவ்வகையில் சோதிக்கலாம் என, புறஜாதி இராஜாவான பாலாக்குக்கு

ஆலோசனை சொன்னான். இப்படியாக இந்த ஆலோசனையை, தன்னுடைய வல்லமையினால் செய்யமுடியாததை செயல்படுத்தி வெற்றிகண்டான்(எண்23; 24 அதிகாரங்கள் மற்றும்; 31:16). அவ்வாறே, இந்த புறசமய ஆசாரியர்கள், ஆவிக்குரிய வேசித்தனத்தில் ஈடுபடும்படி சபைக்கு போதித்தனர். இவ்வாறு தேவகோபமாகிய, அழிவுக்குள்ளாக்கும் தளர்ச்சியை சபைமேல் கொண்டுவந்தனர்.

"நிக்கொலாய் மதஸ்தரின் போதனை" என்பது, சபையில் கர்த்தாக்களாக அல்லது தலைமைப்பதவி அடைவதற்கான கோட்பாட்டை உடையதாக இருக்கிறது. முக்கியத்துவம் பெற்ற சபைகளிலுள்ள கண்காணிகள் அதாவது தகப்பன்களுக்குள், யார் பெரியவன் என்ற சச்சரவு இருந்துவந்தது. அவர்களது ஆலோசனை சங்கங்களில் உச்ச உயர ஸ்தானத்துக்காக, கசப்பான சண்டை நடைபெற்றது. பூமிக்குரிய தலைமையை நோக்கியே அநேகரது தீவிர விருப்பம் மனப்போக்காக இருந்து, அதை அநேகர் அபகரித்தும்கொண்டனர். மிகப் பிரபலமாயிருந்த நகரங்களாகிய, எருசலேம், அந்தியோகியா, கான்ஸ்டான்டிநோபிள், ரோம் ஆகியவற்றின் மூப்பர்கள் இவ்வாறு தலைமைப் பதவிக்காக தீவிர நாட்டம் காண்பித்தனர். இந்தமுரண்பாட்டிலிருந்து, எருசலேம் மற்றும் அந்தியோகியா சபைகள் விலக்கப்பட்டபோதிலும், கான்ஸ்டான்டிநோபிள் மற்றும் ரோமாபுரிக்கிடையே சச்சரவு பல நூற்றாண்டுகளாக நீடித்தது. சபை பிரிக்கப்பட்டதன்மூலமே இவ்விஷயம் முடிவுக்கு வந்தது. கிழக்கத்திய அல்லது கிரேக்க சபை, கான்ஸ்டான்டிநோபிளின் கண்காணியை தலைவராக ஏற்றுக்கொண்டது, மேலும் மேற்கத்திய அல்லது போப்பு சபை, ரோமாபுரியின் கண்காணியை போப்புவாக அல்லது பிதாவாக அங்கீகரித்தது.

சபைகளில் உள்ள கர்த்தரின் உண்மையான பின்னடியார்களில் அநேகர், "ஒருவனையும் பிதா என்று அழைக்காதிருங்கள்" என்று இயேசு நேரடியாக கட்டளை கொடுத்ததற்கு எதிராக இருப்பதால் போப்புவை ஏற்கமாட்டோம் என்று மறுத்தனர்(மத்23:9). இதனிமித்தமாக, வாக்களிக்கப்பட்டிருந்த துன்பத்தையும் அடைந்தனர்(2தீமோ1:12). பெர்கமுவிலுள்ள இந்த வகுப்பார், "அந்திப்பா என் உண்மையுள்ள இரத்தசாட்சி" என்ற அடையாளத்தின்கீழ் நம் கர்த்தரால் புகழப்பட்டனர். கிரேக்க மொழியில் அந்தி(Anti) என்பதன் அர்த்தம், "எதிரானவன்" என்றும்,, பப்பா(Papas) என்றால் பிதா என்றும் பொருளாகிறது. சபை வளர்ச்சியடைந்துவரும் இந்த நிலைமையில், பிரபலமாகும்படி நாட்டங்கொண்டவர்கள், சபையினால் ஆதாயமடைந்தனர். ஆனால் ஜெயங்கொள்வோர்க்கு வாக்களிக்கப்பட்டிருந்த பேரின்பமும் கனமும் நித்தியத்துக்கும் உரியவைகளாயுள்ளன.

**தியத்தீரா சபை**

தியத்தீரா என்பதன் அர்த்தம், "பலியின் இனிமையான சுகந்த வாசனை" என்பதாகும். போப்புவினால் துன்பத்துக்குள்ளாக்கும் காலப்பகுதியாக இது இருந்தது. தூய்மையான சபையோ(the virgin church) வனாந்தரத்தில் கடின அனுபவங்களை சந்தித்துவந்தது. அதே சமயத்தில், போலி சபையோ, தன் இராஜரீக கள்ளக் காதலனாகிய அரசாங்கத்தின் துணையோடு சிங்காசனத்தில் உட்கார்ந்தது. "அக்கினி ஜுவாலை போன்ற கண்களையுடையவரிடமிருந்து" செய்தி அனுப்பப்பட்டிருந்தது, அதில், இருள்சூழ்ந்த பள்ளத்தாக்கினூடே அலைந்து திரிந்தாலும், அல்லது பூமியின் இருண்ட குகைக்குள் மறைந்திருந்தாலும் தம் உண்மையானவர்களை கவனித்து வருகிறேன் என்ற செய்தியைக் கூறுகிறார். மேலும் பிரகாசமான வெண்கலம்போன்ற பாதங்களுமுள்ளவர் அவர்களது பக்கமாக நடந்து, சத்தியத்தின் விதைகளை விதைக்க இடம்தேடி, கரடுமுரடான மலைகளில் நடந்ததால் ஏற்பட்ட புண் மற்றும் களைப்பினை கவனிக்கிறார்.

இராஜாவின், விக்கிரக ஆராதனைக்காரியாகிய மனைவியின் கோபத்திலிருந்து, தன் ஜீவனைக் காப்பாற்ற வனாந்தரத்திற்கு ஓடிப்போன உண்மையுள்ள பழைய தீர்க்கதரிசியின் மறைமுக குறிப்பை உள்ளடக்கியதாக அச்செய்தி இருக்கிறது. அந்தக் காட்சி, எலியா தீர்க்கதரிசியின் வரலாற்றிலிருக்கிறது(1இராஜா18:19). ராணியாகிய யேசபேல், பாகால் ஆசாரியர்களை பாதுகாப்பவளாக இருந்தாள். ராஜாவாக இருந்த அவளது கணவரது அதிகாரத்தைப் பயன்படுத்தி தன் தீர்மானத்தை செயல்படுத்தினாள். அங்கு நேரிட்ட மூன்றரை வருடப் பஞ்சம், ஆவிக்குரிய பஞ்சமாகிய 1260 வருடங்களுக்கு அடையாளமாயுள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தில் இது, காலமும் காலங்களும் அரைக்காலமும் என்று சொல்லப்பட்டுள்ளது. மேலும் இக்காலத்தைக்குறித்து ஆமோஸ் தீர்க்கதரிசி கூறியுள்ளார்;

"இதோ, நான் தேசத்தின்மேல் பஞ்சத்தை அனுப்பும் நாட்கள் வரும்; ஆகாரக் குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்கக்கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" – ஆமோஸ் 8:11.

**கர்த்தரது இரண்டாம் வருகை**

சர்தை என்ற வார்த்தை, மீந்திருத்தல் என்று அர்த்தப்படுகிறது. ஜீவன் அல்லது புண்ணியம் நீக்கப்பட்டிருந்தநிலையில், மீந்திருப்போர் என்பவர்கள்

பிரயோஜனமற்றவர்களாக இருப்பதை முக்கியப்படுத்துகிறது. இந்தக் காலகட்டத்திலிருந்த பெயர் கிறிஸ்தவ சபையானது, தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதற்குரிய வல்லமையின்றி காணப்பட்டது. உண்மை சபையின் மீந்திருப்பவர்கள் சர்தையில் இருந்தனர். இவர்கள் வனாந்திரத்திற்குள் செல்லும்படி துரத்தப்பட்டனர். ஆனால் உபத்திரவம் சிறிதுசிறிதாகத் தணியத்துவங்கியபேது, அவளது வைராக்கியமும் தணியத் துவங்கியது. உபத்திரவம் சபையின் திடத்தன்மையை எப்பொழுதும் அபிவிருத்தி அடையச் செய்துவந்திருக்கிறது.

இன்றைய நாளில் அநேகர், சர்தை சபையின் குணாதிசயங்களை உடையவர்களாக இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களுக்கு, வெளிப்படுத்தின விசேஷம் 3:3 அழிவுக்குரிய எச்சரிப்பைத் தருகிறது;

“நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்”. நம் கர்த்தரின் இரண்டாம் பிரசன்னத்தை, திருடனைப்போல் மறைவாக வரும் என்று ஏழு தடவை விவரிக்கப்பட்டுள்ளது. விழித்திருப்போர் மட்டுமே திருடனின் அணுகுமுறையை அறிந்திருப்பார்கள். தூங்குகிறவர்களோ தங்கள் உடைமைகளைமுற்றும் அவன் பறித்தபிறகே விழித்தெழுவார்கள், அவனது அழிவுக்குரிய வேலை நடைபெறத் தீவிரமானபிறகே உணர்வார்கள். அவர்கள் பின்பு விழித்தெழுந்தபோதிலும், காலதாமதமாகிவிட்டது. அவர்கள் எதிர்பராதவகையில் திடீரென ஜெயங்கொள்ளப்பட்டனர். இவ்வாறாகவே நம் கர்த்தர், தற்போது விழித்திருப்பவர்களைத் தவிர மற்றவர்களால் காணக்கூடாதவராக, அறியப்படாதவராக பிரசன்னமாகுவார். அவர் வந்திருந்து, சிலவருடங்களான பிறகே அவரது பிரசன்னத்தை தூங்குகிறவர்களால் உணரமுடியும். எவ்வாறெனில், பலவானின் வீட்டை இடிக்கும் சத்தம் படிப்படியாக அதிகரிக்கும்போதே உணர்வர். இது என்ன சத்தம், இதன் விளைவு என்னவாக இருக்குமென்று தாமதமாக உணர்ந்துகொள்வர்.

தங்களை தெய்வ பக்தியடையவர்கள் எனக்கூறிக்கொள்ளும் கிறிஸ்தவர்களில் அநேகர், நம் கர்த்தரது பிரசன்னத்தை ஏன் புரிந்துகொள்ளமுடிவதில்லை ? காரணம் என்னவெனில், அவரகள் மாம்சத்திலான கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பதனாலேயே. அவர்கள் தவறிழைக்காதபடி, மாம்சக் கண்களில் காணப்படுபவராக கண்கூடான தெளிவை ஏற்படுத்திக்கொள்கின்றனர். அற்புதம் நிகழ்த்தப்பட்டாலன்றி, ஆவிக்குரிய சரீரங்களை மனிதக்கண்களால் காணமுடியாது என்ற உண்மையை அவர்கள் உணரத் தவறுகின்றனர்.

“சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே..” பின்பு எப்படி அவரால் பிரசன்னமாக முடியும் எனறு அவர்களால் புரிந்துகொள்ளமுடிவதில்லை. இவ்வாறாக, அவரது திரும்ப வந்திருத்தலை வெளிப்படுத்துகிற, காலங்களின் அடையாளங்களை அவர்களால் புரிந்துகொள்ளமுடிவதில்லை.

**பிலதெல்பியா சபை**

பிலதெல்பியா என்றால் சகோதர அன்பு என்று அர்த்தமாகும் என்று எல்லோராலும்அறியப்பட்டுள்ளது. சபை வரலாற்றின் இக்காலகட்டமானது சீரமைத்தலோடு(Reformation) துவங்குவது ஆதாரப்பூர்வமாயுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள குணாதிசயங்களைப் பெற்றவர்களாக, அநேகர் தற்போதும் ஜீவித்து வருகின்றனர்.

பெந்தெகொஸ்தேநாளில் துவங்கின பணிக்கும், லூதர் தம் நண்பர்களோடு இக்காலத்தில் துவங்கின பணிக்குமிடையே குறிப்பிடத்தகுந்த ஒப்புமை உள்ளது. முதலாவது துவங்கிய சீர்திருத்தமானது(Reformation), ஒரு புதிய யுகத்தின் துவக்கமாக இருந்தது, இருளாக இருந்த எல்லாவற்றின்மீதும் விடியலின் வெளிச்சம் பிரகாசித்தது, தவறிலிருந்து உண்மை பிரிக்கப்பட்டது, சத்திய வழியில் ஒரு புதிய துவக்கம் ஏற்பட்டது. அப்பொழுது திறக்கப்பட்ட கதவை மூடுவதற்கு சாத்தான் தன் அனைத்து வல்லமைகளையும் பிரயோகித்ததில் எந்த ஐயமுமில்லை. ஆனால் உண்மையுள்ளவரோ, “ஒரு மனிதனாலும் அதைப் பூட்டமுடியாது என்று கூறியிருந்தார். அவர்களது எதிராளிகளின் பலம்மிக்க படைகளோடு ஒப்பிடுகையில், மறுசீரமைப்பாளர்களின் இந்த சிறு படையானது, குறைந்த பலத்தையே பெற்றிருந்தது. ஆயினும் தாங்கள் சத்தியத்தைப் பெற்றிருந்ததை அவர்கள் அறிந்திருந்து, அதை அளித்தவர்மேல் முழு நம்பிக்கை வைத்திருந்தனர். ஆகவேதான் அவர்களைக்குறித்து ; நீங்கள் என் வசனத்தைக் கைக்கொண்டிருந்து, என் நாமத்தை மறுதலிக்கவில்லை” என்று போதகரால் கூறமுடிந்தது.

பிலதெல்பியா காலப்பகுதியின்போது, குறிப்பாக அதன் ஆரம்ப நிலைமையிலும் அதன் முடிவு நிலைமையிலும், பெயரளவுக்கு இருந்த ஆலயத்திலிருந்து உண்மையுள்ளவர்கள் வெளியே வர கடமைப்பட்டிருந்தனர், அல்லது தங்களது நேரடியான சாட்சியத்தின் மூலம், அதிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்களுக்கு வாக்களிக்கப்பட்டிருந்த வெகுமதியானது, முக்கியமற்ற பங்காக எளியதாக இல்லாமல், உயிராதாரமான ஒன்றாக – உண்மையுள்ள நித்தியமான ஆலயத்தின் தூணாக அவர்களை ஆக்குவேன் என்பதாகும். அந்த ஆலயத்தின் அமைப்பு இருக்கும்வரை இந்த தூணானது அகற்றப்படமுடியாது. அவர்களுக்கான பரீட்சையின் காலத்தில், அவர்களது நாமங்கள் தீமையாக பேசப்பட்டு,

தள்ளப்பட்டன. துரோகிகளாகவும், மதநெறி பிறழ்ந்தவர்களாகவும் அவர்கள் பழிசுமத்தப்பட்டனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக, தேவனுடைய பிள்ளைகளாக பரலோக தேசத்தின் பிரஜைகளாக அங்கீகரிக்கப்– படவில்லை. இந்த நிலைமைகளனைத்தும் தலைகீழாய் மாறவிருக்கிறது. ''கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்''. ஏற்றவேளையில் அவர்களை முழுமையாகவும் நித்தியத்துக்கும் ஏற்றுக்கொள்வார்.

**இன்றைய நாளின் பெயர்சபை**

இலவோதிக்கேயா என்ற பெயருக்கு, பரீட்சிக்கப்பட்ட அல்லது நியாயந்தீர்க்கப்பட்ட ஜனங்கள் என்பது பொருள்விளக்கமாகும். அவர்கள் சோதிக்கப்பட்டு, தகுதியில் குறைவுபட்டவர்களாக காணப்பட்டார்கள் என்பது இதன் விளக்கமாகும். இந்த செய்தியில் கிறிஸ்து கூறும் அர்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டுமானால், தம் நாமத்தை அறிக்கையிடுகிறவர்களுக்கே குறிப்பாக இது அனுப்பப்பட்டது. ஆனால் அவர்கள் சத்தியத்தை மறுதலிப்பதை அவரே இங்கு வெளிப்படுத்துகிறார். இந்த விசேஷ செய்தியை வாசிப்போர் விசேஷ அக்கறை செலுத்தக்கடவர்கள்.

''தேவனுடைய சிருஷ்டிப்பின் துவக்கமாயிருக்கிறவர்'', ''கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவர் யாருடைய குமாரன்''(மத்தேயு22:42) – இந்தக் கேள்விகள் அநேக பதில்களை பெற்றுள்ளன. வேதாகமத்தின் அநேகக் கருத்துக்களைக்கொண்டு, அதே சமயத்தில் இறையியல் பாடல் புத்தகத்தினை விலக்கிவிட்டு இதற்கு விடைதேடும்போது, எல்லோருக்கும் இந்தப் பாடம் தெளிவாக விளங்கும். எல்லோரும் நன்கு அறிந்த 1யோவான் 5:7ம் வசனத்தில் இடைச்செருகல் விலக்கப்பட்ட பகுதியாயும், அதே சமயம் யோவான் 1:1ம் வசனம் முறையாகப் புரிந்துகொள்ளப்படும்பொழுது, திரித்துவபோதனை வேதாகமம் எதிர்க்கக்கூடிய ஒன்று, இதற்கு ஆதாரமாக, ஒரு வசனத்தைக்கூட பொருத்தமாக நாம் வேதத்தில் காணமுடியாது. இப்பாடத்தைத் தெளிவாகக் காணமுடியாத எந்த வாசகரும், பரிசுத்த யோவான் எழுதின நிருபத்தின் 17ம்அதிகாரத்தை கவனமாயும், ஜெபசிந்தையோடும் படிக்கவேண்டும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

நம் கர்த்தர் காண்கிறதுபோல் லவோதிக்கேயா காலகட்டத்திலுள்ள சபைக்கான செய்தி, இன்றைய நாளின் பெயர்கிறிஸ்தவ சபைக்கு நிஜமாக உள்ளது. ஒருவகையில் பார்க்கும்போது, அவள் குளிரல்ல, அவளிடத்தில் அதிக வைராக்கியமுண்டு, ஆனால் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. அவள் தன் படைபரிவாரங்களின் ஒழுங்கமைவிலும், நிர்வாக இயந்திரங்களிலும் வளர்ச்சியடைந்தும், அவளது பண்டக சாலையைப் பெருக்கியும் கொண்டாள். ஆனாலும் அவளது எதிரி அவள் முன்பாக விழவில்லை. அவளது முதன்மையான நோக்கம் – பாவிகளை மனந்திருப்பி, ஆவிக்குரிய பிள்ளைகளாக்குவதே என்று உரிமை பாராட்டினாள். பெயர்கிறிஸ்தவர்களது நாவில் அவர்கள் சூழ்நிலையினை உணர்ந்து, அறிவைப் பெற விழிக்கும்போது இந்த வார்த்தைகளை தீர்க்கதரிசி வைக்கிறார்;

''நாங்கள் கர்ப்பமாயிருந்து, வேதனைப்பட்டு, காற்றைப் பெற்றவர்களைப்போல் இருக்கிறோம்; தேசத்தில் ஒரு இரட்சிப்பையும் செய்யமாட்டாதிருக்கிறோம், பூச்சக்கரத்துக் குடிகள் விழுகிறதுமில்லை'' – ஏசா26:16–18.

அவர்கள் கர்த்தரது பிரசன்னத்தை உணர்ந்துகொண்டபிறகு இவ்வாறு கூறுவார்கள்.

முந்தைய மகிமையின் பிரதிபலிப்புகள் மங்கலாய் சிறிதளவு மீந்திருக்கும்போது, அந்த வெளிச்சத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கக்கூடாது. தற்போது நோயுற்ற வண்ணமாக தோற்றமளிப்பது, உமிழும் கதிர்களின் புகை மட்டுமே. இது சுவர்மேல் உயரமாக இருந்து எழுதுவதாவது; ''மேனே, மேனே, தெக்கேல் உபார்சின்''(தானியேல் 5:25–29). நம் கர்த்தர் வந்திருக்கிறார் என்பது இலவோதிக்கேயா சபையால் அறியப்படாதிருக்கிறது. அவர் கதவருகே நின்று தட்டுகிறார், அவர்கள் விழித்திருப்பார்களானால் கதவு தட்டப்பட்ட சத்தம் அவர்களுக்குக் கேட்டிருக்கும். ஒரு திருடனைப்போல் தாம் வரப்போவதாக நம் கர்த்தர் தெளிவாக முன்னுரைத்திருந்தார், ஆனால் எவ்வேளை வருவேன் என்று அவர் கூறியிருக்கவில்லை.

பெயர்க் கிறிஸ்தவ சபை இன்னும் வல்லமையோடு இருப்பதாகத் தோன்றினாலும், பழைய மகிமை இன்னும் அவளை தொற்றிக்கொண்டு இருப்பதால், அச்சபையின் அங்கத்தினராக ஒருவர் இருப்பது, மதிப்புக்கும் கனத்துக்கும் உரியதாக இருந்தாலும், சத்தியத்தைத் தேடுகிற சிறுமந்தை வகுப்பாரோ தள்ளப்பட்டவர்களாகவும், அலட்சியப்படுத்தப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். உலகப்பூர்வமாய் நடக்கும் சபையின் தப்பிதங்களை சுட்டிக்காட்டுவதன் காரணமாக, சிறுமந்தை வகுப்பார் நிந்தையை தரித்துக்கொண்டுள்ளனர். மேட்டிமையான அரசியாக உட்கார்ந்திருக்கும் அவள், சிறுமந்தையை ஏளனத்துடன் தாழப் பார்க்கிறாள். மாபெரும் வீழ்ச்சியடையவே அவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறாள். – வெளிப் 18:7,21.

---

## யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட எல்லா உயிர்களின் இரத்தமும்

யூதரின் பலி பீடத்தின்மீதே பலியிடப்பட்ட
எல்லா உயிர்களின் இரத்தமும்
பாவ நிவாரணம் தந்தில்லையே,
கறைகளைஎன்றும் கழுவியதில்லையே
ஆனால்விண்ணக ஆட்டுக்குட்டியாம் கிறிஸ்துவோ
நம் பாவமனைத்தையும் எடுத்துப்போட்டாரே,
சாந்தமுள்ள ஆட்டுக்குட்டியான பலி,
அவற்றைவிடவும் மேன்மையான இரத்தம்தானே,
என் ஆத்துமா பின்னோக்கிப்பார்க்கிறதே,
அவர் எத்தனை அதிகம் சுமை சுமந்தாரென்றே
அவர் வாழ்க்கையை முழுதும் எனக்காய் ஊற்றினாரே,
அவர்ஈடுபலிதனை அங்கே கண்டோமே.

# அங்கே இருந்தீரோ?

என் ஆண்டவரை சிலுவையிலே அறைந்திட்டபோதினிலே அங்கே இருந்தீரோ? அங்கே இருந்தீரோ?
அந்நினைவுகளால்சிலநேரத்திலே நான் நடுநடுங்கிப்போகின்றேனே,
என்னைநடுக்கமுறச்செய்கிறதே.
என் ஆண்டவரை சிலுவையிலே அறைந்திட்டபோதினிலே அங்கே இருந்தீரோ? அங்கே இருந்தீரோ?
என் ஆண்டவரை சிலுவையிலே ஆணியினால் அடித்தபோது அங்கே இருந்தீரோ? அங்கே இருந்தீரோ?
சில நேரங்களில் அதை எண்ணிடும்போதினில் என்னுள் நடுக்கம் பரவிடுதே, நடுநடுங்கச் செய்திடுதே.
என் ஆண்டவரை சிலுவையிலே ஆணியினால் அடித்தபோது அங்கே இருந்தீரோ? அங்கே இருந்தீரோ?
என் ஆண்டவரைவிலாவிலே ஈட்டியினால் குத்தினாரே, அங்கே இருந்தீரோ? அதனைக்கண்டீரோ?
சில நேரங்களில் அதன்நினைவலைகள்என்னை நடுங்கிடச்செய்திடுதே நான் நடுநடுங்கிப்போகின்றேனே.
கல்லறைதனிலே என் ஆண்டவரைக்கிடத்தி அடக்கம்செய்திட்டபோதினில் அங்கே இருந்தீரோ?
அதனைக்கண்டீரோ?
சிலநேரங்களில் அதன்நினைவாலே நான்கதிகலங்கிப்போகிறேனே.
கல்லறைதனிலே என் ஆண்டவரைக்கிடத்தி அடக்கம்செய்திட்டபோதினில் அங்கே இருந்தீரோ?
அதனைக்கண்டீரோ?
என் ஆண்டவர் மீண்டும்வெற்றிவீரராய் கல்லறைநின்றே உயிர்த்தெழுந்தபோதினில் அங்கே இருந்தீரோ?
அக்காட்சியைக்கண்டீரோ?
சில நேரங்களில் அதை எண்ணிடும்போதினில் என்னுள் நடுக்கம் பிறந்திடுதே, நான்
நடுநடுங்கிப்போகின்றேனே,என் மெய்சிலிர்த்துப்போகுதே.

## கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே.

கிறிஸ்துவின் சிலுவையிலே நான் மகிமையடைவேனே,
யுகங்கள் கடந்தபோதினிலும், அதன் மீதேறி அடைந்திடுவேனே,
அனைத்து ஒளியின் புனிதக்கதைகள் எல்லாமும்,
நம்பிக்கைகள் தளர்வுற்று பயங்கள் கோபப்படுத்தும்போதினிலே,
சிலுவை என்னை எப்போதும் கைவிட்டிடாதே,
சமாதானம், அமைதலுடனே சிலுவை ஒளிர்கின்றதே,
என் வாழ்க்கைப் பாதையில் வாழ்வின் சூரியன் ஒளிர்ந்திடும்போதினிலே,
பிரகாசமாகவே, தெளிவாகவே, என் பாதைக்கு ஒளி வீசிடுமே,
சிலுவையினின்றே அதன் ஒளிரும் தன்மையோ வெளிவந்திடும்,
ஒவ்வொரு நாளும் புதிய பிரகாசத்தைக்காட்டுகிறதே,
கடுமைமிகு நஞ்சும், ஆசீர்வாதங்களும் வலியும், துன்பமும், மகிழ்ச்சியும், சிலுவையின் மூலமே
பரிசுத்தமாக்கப்படுமே, அளவிட முடியா சமாதானம் வந்தங்கே அமர்ந்துவிடும்,
பெருமகிழ்ச்சி எல்லா நேரமும் குடிகொள்ளும்.

MM 10.

# இனிமையான தருணங்கள்:

இனிமையான தருணங்கள், செழுமையான ஆசீர்வாதம்,
சிலுவையின் முன்பாக நான் செலவிடும் நேரங்கள;
வாழ்க்கையும் ஆரோக்கியமும் சமாதானத்தில் தாபரிக்கும்,
இறக்கும் தறுவாயிலுள்ள நண்பர்கூட
இந்தத் தருணத்திலே உண்மையாகவே ஆசீர்வதிக்கப்படுவார்,
சிலுவையின் கீழாக சிரம் தாழ்த்தி வணங்கும் போதில்,
தெய்வீக இரக்கத்தை நான் காண்கின்றேன்,
அவரது இரக்கமுள்ள கண்களிலிருந்து ஒளி வீசுகின்றதே,
இங்குதான் நான் என் பரலோகத்தைக் காண்கின்றேன்,
சிலுவையை நான் ஏறிட்டு நோக்கும்போதில்
நான் அவரால் அதிகம் அன்பு செய்யப்பட்டேனே,
நான்தான் அதிகம் மன்னிப்பைப் பெற்றவன்,
நான் ஒரு கிருபையின் அற்புதம்,
அவர்அன்பும் பரிவிரக்கமும் என் இதயத்தைக் கூறுபோடுகின்றதே,
என்னுடைய கண்ணீரினால் அவர் பாதத்தைக் குளிக்க வைப்பேன்,
விசுவாசத்தில் உறுதியோடிருந்து நம்பிக்கையாயிருப்பேன்,
அவரது இறப்பிலிருந்தே எந்தன் வாழ்வு தொடங்குகின்றதே,
இங்கேபெரும் துக்கத்தால் என் மனம் கிழிந்து காணப்பட்டாலும்,
என் இரட்சகருடன் நான் தங்கிடுவேனே,
இருளை வெளிச்சமாக மாற்றும் புதிய நம்பிக்கையும் புது பெலனும் கிடைக்கலாகுமே.

# பெத்தானியாவின் மரியாள்.ப.98/138.

ஆகமங்கள் கூறியவாறேயேசு தமது நேரம் நெருங்கிவிட்டதை அறிந்தே,
எப்படி சிலுவைதனில் விரைவில் மரிக்கவேண்டும் என்றே,
விழுந்துபோன மனுக்குலத்தினை ஈடுகிரையம் கொடுத்து வாங்க வேண்டுமென்று
எருசலேம் வழி மீதினில் தம் முகத்தைத்திருப்பியே பயணித்தாரே,
குறிக்கப்பட்ட அவரது நேரத்திற்குமுன்பே,
ஒருநாளின் குறுகிய முடிவிற்கு முன்பே,
லாசரஸ், மேரி, மார்த்தாள் வீட்டிற்கே வந்தாரே,
பரிசுத்த சிந்தனைகள் மனதினில் தேக்கிவைத்தே,
இதற்கு முன்பைவிடவும் அதிகமாகவே வரவேற்றனரே.
பரலோகத்தின் கல்லறையின் கீழாகவே,
அவர்களது மரித்த சோதரன் லாசருவும் உடன் இருந்தாரே,
மரணத்தின் கோரப்பிடியிலிருந்தே மீண்டுவந்த யேசுவின் நண்பர்,
கிறீஸ்து அவரை மீண்டும் உயிரோடெழுப்பினாரே,
தேவவல்லமை பயன்படுத்தப்பட்டதே, தேவன் மகிமைபடுத்தப்பட்டாரே,
இப்போதோ, அவருக்கென்றே பிரத்யேகமாகவே விருந்தொன்றை ஆயத்தம் செய்தனரே,
லாசரு அவரோடு அங்கே அமர்ந்துவிருந்துண்டாரே,
மரியாளோ அவர் பாதம் அமர்ந்தே பாடம் கற்றுக்கொண்டிருந்தாரே,
மார்த்தாளின் சேவையும் குறைவுபட்டதல்லவே,
மரியாளின் கண்களோ அமைதியான ஜெபவீடாகுமே,
அவள் மனதுக்குள்ளே வேறெந்த எண்ணத்திற்கும் அனுமதியில்லை,
அவனோ இறந்தானே, ஆனால் திரும்ப வந்தானே,
அவனைத்திரும்பக்கொண்டுவந்தவரும் அங்கே வந்துள்ளாரே,
ஆழமான அன்போ, மற்றெல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளி விட்டதுவே,
அவள் ஆர்வமிக்கப் பார்வையோ,
வாழ்ந்துகொண்டுள்ள அவள் சோதரன் முகம் மீதே பதிந்ததுவே,
அவர் வாழ்க்கையின்மீதே வந்து நிலைநின்றேதே,
ஒடுங்கவேண்டிய நினைவுகளோ, நுண்ணிய பயங்களோ,
முழுமையான மகிழ்ச்சியிலே மிதந்துகொண்டிருந்ததுவே,
அவளோ குனிந்தே, அவள் இரட்சகர் பாதம்தன்னைக் கண்ணீரினால் குளிக்க வைத்தனளே,
விலைமதிப்பில்லா நளதம் என்னும் தைலத்தினால் குளிக்கவைத்தே தன்
தலைக்கூந்தலால் துவட்டிவிட்டாளே,
ஆனால் அங்கே ஒருவர் கடுமையாகவே இச்செயலினை எதிர்த்தாரே,
அவர் எண்ணமோ அன்பின் தெய்வீகத்தைக் குருடாக்கிவிட்டதே,
இத்தனை விலையேறப்பெற்ற தைலத்தை இங்கே வீணாய் உடைத்ததும் ஏனோ?
முற்றிலும்விற்றே முழுவதும் ஏழைக்குக் கொடுத்திடலாமே,
மனதிற்குள்ளே வேறொன்றெண்ணியே,
இப்படியாகவே யூதாஸ் சொன்னதால் கூச்சலும் குழப்பமும் நிலவியதே,
தன்னலம்மிகுந்தே, பிறர்நலன் நோக்குவதாய் பொய் சொன்னானே,
துங்கத்தைமிகவும் அதிகம் நேசித்தே, ஏழையைமிகவும் குறைவாய் நேசித்தான்,
அவனது கரத்திலே காசுப்பை இருந்ததுவே,
அதனுள்ளேயிட்ட பணத்தினையும் களவாடுதல் செய்தானே.
அவன் சுயநல இருதயமோ, பாவத்தைக்கொணர்ந்தேவைத்ததுவே,
அவனது இச்செயலோ அவனைக் கீழே விழத்தள்ளியதே.
யேசுவோமறுமொழியாகவே, அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்,
அவளைத் தனியே விட்டுவிடு, என் அடக்கத்திற்கானஅபிஷேகம் செய்தாள், --2990--
நீங்களெல்லோரும் சுவிசேஷம் அறிவித்திடும்போதினிலே,
இவளின் இச்செயலே நினைவுகூறலாகுமே,

அதிகமாகவே செய்திட்ட இச்செயலே, அன்பிலே உயர்ந்ததாய் ஆண்டவர் கற்பித்தாரே,
செயல்தான் பேசப்பட்டதே, அன்பு அதனை பேசவைத்ததே,
அன்பே பேசவைத்த செயலாய் மாறியதே,
இனிமையான நறுமணத் தைலத்தை மூடியைத்திறந்த மேரி,
யேசுவின் பாதத்தில் ஊற்றியபோதே,
ஆ மரியாளே, உன்னிடமிருந்தே நாங்கள் கற்றுக்கொண்டோமே,
நமது கர்த்தருக்கு முன்பாக எல்லாவற்றையும் கையளிக்கின்றோமே,
அவருக்கு மட்டுமே ஊழியம் செய்யவே, நாங்கள் காணும் மற்றெல்லாவற்றையும் பொருட்படுத்தாமலே.

# அவரின் மென்மையான கைகள்

மரியாள் சிறு குழந்தையை மிக நெருக்கமாய் அணைக்கையில்,
இப்பொழுது வெளிப்படுத்த முடிகிற அன்பின் மகிழ்ச்சியை உணர்ந்தாள்.
குழந்தையின் மெய்யான விரல்கள், தனது விரல்களைப் பிடித்திடவே
அன்பாய் அவளும் குழந்தையின் விரல்களைத் தழுவியே, அன்போடு வருடினாளே
**- அவரின் மென்மையான  கைகளையே.**

பன்னிரண்டாம் வயதினிலே, தனியாய் ஆலயத்தைத் தேடிச் சென்றிட்டாரே,
இப்போது, எல்லா நியாயப்பிரமாணத்தின்படி தாம் நடக்கவேண்டுமென்று அறிந்திருந்தவராய்.
ஆனால் மரியாளோ துக்கத்துடனே அவரைத் தேடினவளாய்
அவரது தேவைதனை புரிந்திடாமலேயே, தன்னோடு அழைத்து வருவதற்குப் பிடித்திட்டாளே
**- அவரின் மென்மையான கைகளையே.**

அவர் ஆயுள் சொற்பக் காலமாய் இருப்பினும், நன்மை செய்வதிலேயே கழித்திட்டாரே.
வேதனைகள் நிரம்பியிருந்த உலகம்தனிலே, எளிமையான நம்பிக்கையோடு
நோயுற்றோரும், குருடரும், முடவரும் — என அனைவரும் அவரிடம் வந்தனரே.
அவர்தம்  ஆழ்ந்த மனஉருக்கத்தினாலே, அவர்களை குணமாக்கினாரே
**- அவரின் மென்மையான கைகளினாலேயே.**

ஆனால் பொறாமை நிறைந்த மனிதர்களோ, அவரின் ஜீவனுக்கு எதிராக ஆலோசித்தனரே,
அடிமையை விலைக்கு விற்பதுபோல், அவரை விற்றுப்போட்ட  துரோகி ஒருவனை,
அவரது சொந்த சீஷர்கள் நடுவிலே — துரோகி ஒருவனைக் கண்டும் பிடித்தனரே.
அவர்கள் இரவிலே வந்து அவரைப் பிடித்து, கயிறுகளால் கட்டினார்களே
**- அவரின் மென்மையான கைகளையே.**

அந்தப் பயம் நிறைந்த இரவில் நீ அவருடன் சென்றாயோ? அதிகாலையின்,
முதல் மென்மையான ஒளி வருவதற்கு முன்பே, முள்முடி ஒன்றை
அவருடைய தலையின்மேல் வைத்தே, சாட்டையாலடித்து அவரை
துன்புறுத்தினார்களோ? ஓ!  நீ  கண்டாயோ இரத்தத்தை
**- அவரின் மென்மையான கைகளிலே.**

அவருடன் கொல்கொதா மலைக்கு  நீ சென்றாயோ?
அவரது கண்களின் உள்ளே  துன்பத்தின் ஆழத்தை நிஜமாய்ப் பார்த்திட்டாயோ?
கண்டாயோ நீ கொடூரமான, இரக்கமற்ற  அந்த ஆணிகள்
ஒவ்வொன்றாய் துழைத்த அவரது மாம்சத்தையே, ஆணி ஊடுருவின
**- அவரின் மென்மையான கைகளையே.**

கடைசியில் சுத்தியலின் பயங்கரமான ஒலிகள் ஓய்ந்தன!
அந்தப் பாரமான சிலுவையைத் தூக்கி வானுக்கு எதிரே நிறுத்தினார்களே.
அவ்வழியே கடந்து சென்றவர்களும் புண்படுத்தும் விதத்திலே அவரை கேலி செய்தனரே;
வியாகுலமான வேதனையிலும்,அவமானத்திலும்  அங்கே தொங்கினாரே ஆணி கடாவப்பட்ட
**- அவரின் மென்மையான கைகள்தனிலே.**

அவரது சரீரம் வலியினால் துடித்து, மரத்துப்போயிருக்க அனைத்தையும் சகித்தவராக,
அவரது கண்களில் பிரகாசித்த  அன்பை நீ பார்த்திட்டாயா?
அது நம்மால் புரிந்துகொள்ள முடியாத மிகவும் ஆழமான ஓர் அன்பு! **--2992--**
நீ அழுதாயோ பார்த்த மாத்திரத்தில் – இரத்தத் துளிகளைச் சிந்தின
**- அவரின் மென்மையான  கைகளையே.**

ஓ! கடுந்துயரால் அவர் சத்தமிட்டதை நீ கேட்டாயோ?
திடீரென்று சூரியன் இருளடைந்தது – குளிர்க்காற்று வீசினது!
"என் தேவனே, ஓ! ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று அவர் சத்தமிட்டதை நீ கேட்டாயோ?
எல்லாம் முடிந்தது! வலியிலிருந்து விடுதலையானது, மரத்துப்போனது மற்றும் உறைந்துபோனது
**- அவரின் மென்மையான கைகள்.**

தன் இதயத்தின் கடுமையான வலியை அடக்கமுடியாமலேயே,
மரியாள் கண்ணீர் நிறைந்த விழிகளோடு அவரைப் பார்த்தாள்,
அவள் குழந்தையைப் பெற்றெடுத்தபோதான நினைவுகளுக்குள் சென்றாள்,
நினைத்துப்பார்த்தாள் அவரை அணைத்துகொண்டதையும், அன்போடு அவளால் வருடப்பட்ட
**- அவரின் மென்மையான கைகளையுமே.**

**--2993--**

# மொட்டவிழ்ந்த தேவனின் திட்டம்.

பகட்டு பயங்கர காலமதில்
பாரினில் குடியாய் வாழக்கையதில்( பாரினில் - உலகத்தில்)
யுகாயுகங்கள் குறித்த யுகமே
இதிலே வாழ்வதில் பெருமை மிகுமே
களிமண் இரும்புடன் கலந்து நொறுங்கும்
உலக ஜாதிகள் உறுமலைக் கேளும்
ஒரு நாள் பொழுது விடியாதோ
தேம்பும் சிருஷ்டியின் சத்தமதோ.

பரியாசக்காரர் இகழ்ந்திடுவாரோ?
பரலோகம் அதனை பார்த்திடல் தகுமோ?
உமக்கு இருப்பதோ ஒருமணி நேரம்
உயிரைக் கொடுத்தும் போராட்டம் மிகுமோ?

தீர்க்கதரிசன சத்தியமனைத்தும்
மெல்ல மெல்லவே மொட்டவிழ்கிறதே
ஆடையின் வெண்மையைக் காத்துக் கொள்ளும்
உம்மில் நீரே கவனம் கொள்ளும்.
உன்னை இயக்கும் எண்ணம் எல்லாம்
உண்மைக்காக உயிர்பெற்றெழட்டும்.
ஒவ்வொரு நரம்பும் உள்ளுரம் பெறட்டும்
யுகங்களைக் குறித்த தேவனின் திட்டம்
தேவனின் சார்பாய் தேசங்கள் செல்லும்
தேசங்கள் தோறும் தெய்வீகமாகும்.

# கடைசி இராப்போஜனம் [லூக்கா 22:1-23]

பகலின் உஷ்ணமும் தணிந்தது, நேரமாகிக்கொண்டிருந்தது,
சூரியனும் மறைந்து இருள் சூழும் முன்னே,
களைப்புற்ற யாத்திரிகர்கள் அநேகர்
நகர வாயிலின் வழியே, விரைந்தனரே அலங்கத்தினுள்ளே
இளைப்பாற இடம் தேடி வாஞ்சித்தே.

நகரத்திலே ஓங்கி நின்றதான ஆலயத்தைக் காண்கையிலே,
ஓ! களைப்புற்ற கண்களுக்கு எத்துணை களிப்பு வந்ததே!
ஓ! ஆவிக்கு எத்துணை ஆனந்தம் வந்ததே!

ஒவ்வொரு யூத வீட்டிலும் அப்புனித விருந்து ஆயத்தம்பண்ணப்பட்டிருந்ததே.
பஸ்காவின் பௌர்ணமி நிலவு தோன்றியே தன் வெள்ளிச் சுடர்களை வீசினாளே —
மகிழ்ந்திருக்கும் எருசலேம் மீதும், அதன் பேரழகுள்ள ஆலயத்தின் மீதும் வீசினாளே.
யேகோவாவின் பிரசன்னம், அவர்களைச் சூழ்ந்தே, எல்லா இடத்திலும் காணப்பட்டதே.

அதோ அவர்களின் மத்தியிலே நமது அருமை ஆண்டவரும் இருந்தாரே; அவரை
அறியாமலேயே அநேகர் இருந்தனரே. அவரோ ஆயத்தமாக்கப்பட்ட மேல்வீட்டறையிலே,
கவனிக்கப்படாதவராய், மறக்கப்பட்டவராய் இருந்தாரே. தமக்கன்பான சீஷர்களோடே
விருந்தை அநுசரித்தார். சர்வத்திற்கும் ஆண்டவர், மகா எருசலேமிலே காணப்பட்டாரே.

சற்றே வாருங்கள், நாம் நகரத்திற்கு வெளிப்புறம் செல்வோம்
அதன் ஆழ்ந்த மங்கிய நிழல்களுக்குள், இயேசுவோடு சிறிது
இளைப்பாறி, அவரோடுகூட விருந்தை அநுசரிப்போம்.

*இதோ கலைஞன் காட்சி திரையை உயர்த்துகிறான்;*
*இப்போது நாம் நமது எஜமானனோடு . . . . . . . . . . . .*
அவரது இராஜ கண்களிலே கவலையைக் காண்கிறோமே.
அவரது அன்பானவர்களால் சூழப்பட்ட அவ்வமைதியான இடத்திலே . . .
ஆச்சரியமும், பயமும், கவலையும் காணப்படுகிறதே அனைவர் முகங்களிலும்.

மாலை விளக்கு ஏற்றப்பட்டு கூரையிலே தொங்கவிடப்பட்டது.
அதன் மென்மையான இதமான சுடரொளி வீசிடவே
அதன் ஏழு மடங்கான சுடர்கள் குருவின் தலையைச் சுற்றி
ஓர் அழகான வெள்ளொளி வட்டமிட்டதே.
திறந்த கதவுகளுக்கு அப்பால், மறையும் சூரியனின் கடைசி கதிர்கள்
விசுவாசமுள்ள மரியாளின், வியப்பின் பார்வையை வெளிப்படுத்துகின்றதே.

போஜனம் பரிமாறப்படவே, அவர்கள் கேட்டனரே, குரு வேதனையோடு கூறினதையே:
"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று கூறியே
அந்த துக்கம் நிறைந்த கண்கள் சுற்றி அனைவரையுமே பார்த்ததே.
"உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்றார். அவர்களும், யூதாசும்
நானோ? நானோ? என்று கேட்கிறது, நம் காதுகளிலும் விழுகின்றதே.

"உங்களில் பெரியவன், சிறியவனாயிருக்கக்கடவன்" என்ற பாடத்தை
தாங்கள் கற்றிருக்கின்றார்களல்லவா? யாரோடு விருந்தை அநுசரித்தார்களோ
அந்தப் பிரியமானவரால் தாங்கள் சுத்தப்படுத்தப்பட்டிருக்கின்றார்களல்லவா? ஆறுதலின்
வார்த்தைகளையெல்லாம் தங்களுக்குகே கூறியிருக்கிறாரல்லவா?
ஆனால், "ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்" என்று துக்கத்தோடே கூறுகிறாரே.

தண்ணீரும், குடமும், துண்டும் அங்கே இருந்தது — ஒருவர் பாரங்களை ஒருவர்
சுமக்குமாறு அந்தச் சோகக் குரல் முன்பு கூறியிருக்கிறதல்லவா?
அலமாரியில் மன்னா பாத்திரம் அங்கு இருப்பது நம் கண்களுக்குப்பட்டதே,
அன்பான பக்தியுள்ள ஒவ்வொரு யூதனுக்கும் அந்த மன்னா பாத்திரம்,
அவர்கள் பிதாக்கள் கடந்துவந்த வனாந்தரப் பிரயாணத்தை நினைவுப்படுத்துகையில்,
அது உனக்கும் எனக்குமான ஒரு செய்தியை ஒலிக்கின்றதே: "ஜீவ அப்பம்" நமக்காகப்
பிட்கப்பட்டிருக்கிறதே பூமிக்குரிய எல்லாப் பிரச்சனைகளிலிருந்து நம்மைக் காக்கவே.
மேசையில் புளிப்பில்லா அப்பமும், பாத்திரமும் நாம் பார்க்கையிலே — ஞாபகம் வருதே
"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்ற அன்பின் வார்த்தைகள்.

**--2995--**

தூணிலிருந்த விளக்கு வேகமாய் அணைவதைக் கண்டபோது, அதைப்போலவே
இரட்சகரின் வாழ்வும் வெகுவிரைவில் முடியப்போவதை நாமும் புரிந்தோமே.
அவர்கள் இனி ஒருபோதும் அவரோடு கூடிக்கொள்ளப்போவதில்லை, மேல் வீட்டறையில்.

ஒதுக்கிவைக்கப்பட்ட குருத்தோலைகள், வெற்றியின் அன்பளிப்புகளாயிருந்ததே,
கல்வாரியை அல்ல, மகிழ்ச்சியான ஒலிவத்தைக் குறிக்கின்றதாய் இருந்ததே.
விரைவில் அந்த மகிழ்ச்சியான ஓசன்னாக்கள் மறக்கப்பட்டுப்போகுமே,
அவரை சிலுவையில் அறையும்! அவரை சிலுவையில் அறையும்! என்றே மாறிடுமே.

மிகவும் பாடுகளும், வேதனையும் நிறைந்த அந்தப் பயங்கரமான கதையை அறிவோமே.
ஓ! இவ்வுலகை சற்றே புறந்தள்ளி, அவரின் பாடுகளை மீண்டும் எண்ணிப்பார்ப்போமே.
நாளை சூரியன் அஸ்தமிக்கையில் நாம் அறிவோமே:-
அவரது அந்த இனிமையான குரல் அமைதியாகிடும் என்று;
நாளை கடன் வாங்கிய கல்லறையிலேயே அவர் கிடத்தப்பட்டிருப்பார் என்று;
நகரத்தை ஒளிரச்செய்யும் சந்திரன், அவமானமான சிலுவை மீது சுடரை வீசிடும் என்று;
அவரை நேசிப்பவர்கள் அவர் நாமத்தை அறிவோம் என்று கூறிட பயமுறுவார்கள் என்று;
சூரியன் அதன் வெளிச்சத்தை நிறுத்த, இருள் அனைத்தையும் மூடிடும் என்று;
துயர் நிறைந்தக் குரல் உரத்தக்குரலாய்: "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று கூறுவதை,
பரியாசக் கூட்டத்தார் கேட்பார்கள் என்று;
அந்த அன்பின் குரல் உடையும் இருண்ட கல்வாரியில் என்று — ஆம் நாம் அறிவோமே.

நம் இரட்சகரின் பாடுகளின் காட்சியை, நாம் ஒருபோதும் மறக்கமாட்டோமே.
நாம் மீண்டும் மீண்டுமாக அக்காரியங்களைச் சிந்திப்போமே;
அந்தக் கலைஞன் எனக்கும் உனக்கும் கற்பித்த ஆழ்ந்த அப்பாடத்தை,
நாம் மீண்டும் மீண்டுமாக சிந்திப்போமே.
துயர் உற்றிருந்த அக்கூட்டத்தை நோக்கி கர்த்தர் பேசிய அதே வார்த்தைகள்
நம்மையும் சூழ்ந்து வருகிறதே, கவனமாயும் எச்சரிப்போடும் இருப்பவர்களுக்கு;
அந்த மென்மையான எச்சரிப்போ உலக பாவத்திலிருந்து நம்மை உயர்த்திவிடுகின்றதே.

நீயும் நானும் அவரைச் சூழ்ந்து அந்த ஸ்தலத்திலே
அவரை நித்திய காலமாக புகழத்தக்கதாகவும்;
அவர் முன் சென்று ஆயத்தமாக்கின அழகான ஸ்தலத்திலே,
இந்த உலகத்தை விட்டுவிட்டு, என்றென்றும் ஆசீர்வாதம் பெறுவதற்காகவுமே
ஓ! அவரது நடத்துதலை மாத்திரம் கேட்போமாக!

- Comforted of God, p. 25

**--2996--**

# பயண ஊழியர்கள், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுக்கான விசேஷ- கூட்டம்

இந்தப் பிரசங்கமானது, 1910-ஆம் வருட மாநாடு தகவல் அறிக்கையில், பக்கம்-236 முதல் இடம்பெறும் பாஸ்டர் அவர்களின் பிரசங்கமாகக் காணப்படுகின்றது.

அருமை நண்பர்களே: இவ்வுலகத்தைப் பொறுத்தமட்டில் பரதேசிகளாகவும், அந்நியர்களாகவும், அனைத்துப் பிரிவுகளிலிருந்தும் வந்துள்ள கிறிஸ்துவின் சபையிலுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களாகிய உங்களை இந்தச் சாயங்கால வேளையில் சந்திப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். உங்களுடன் சிறு உரையாடல் உரையாடிட வேண்டும் என்று நான் எண்ணினேன்; காரணம் முதலாவதாக உங்கள் மீது ஒரு மாபெரும் வேலை இருக்கின்றதெனவும் - கர்த்தருடைய அறுவடை வேலை தொடர்பான ஒரு மாபெரும் பொறுப்பு இருக்கின்றதெனவும் எனக்குத் தோன்றுகின்றது. இரண்டாவதாகக் கர்த்தருடைய வீட்டாரில் எந்த ஊழிய ஸ்தானத்திலும் காணப்படும் எவரும், இதற்கேற்ப கடுமையான சோதனைகளையும், பரீட்சைகளையும் கொண்டிருக்கின்றனர் என்று நான் நம்புகின்றேன் மற்றும் நம்மில் ஒவ்வொருவரும் ஊழிய ஸ்தானத்திற்கடுத்த பொறுப்பினைக் குறித்தும், நம்முடைய பாதங்களுக்குக் காணப்படும் அபாயங்கள் குறித்தும் உணர்ந்துகொள்ள வேண்டும். மற்ற ஜனங்களைக் குறித்தும், மற்ற ஜனங்கள் விழுவதைக்குறித்தும், மற்ற ஜனங்கள் வழுக்கிடுவதைக்குறித்தும், மற்ற ஜனங்கள் சறுக்கிடுவதைக்குறித்தும் நாம் சிந்திப்பது மிகவும் சுலபமானது என்று நீங்கள் அறிவீர்கள்; ஆனால் நம்மைக்குறித்து, நாம் சிந்தித்துப்பார்ப்பது மிக முக்கியமான காரியமாய் இருக்கின்றது என்று நான் எண்ணுகின்றேன். கர்த்தருடைய வேலையின் பொதுவான நலனுக்கடுத்தவைகளைக் கவனித்துக்கொண்டிருக்கையில், அபாயத்தில் காணப்படுபவர்களையும், சறுக்குபவர்களையும் மற்றும் வழுவிப்போகிறவர்களையும் நான் பார்த்திருக்கின்றேன்; இத்தகையவர்களில் பெரும்பாலானவர்கள் கிறிஸ்துவின் சபையில் செல்வாக்குமிக்க ஸ்தானங்களில் காணப்படுகிறவர்களாகவும் - கிறிஸ்துவினுடைய சரீரத்தில் முக்கியமான ஊழிய ஸ்தானங்களில் காணப்படுகிறவர்களாகவும் இருப்பதை நான் பல வருடங்களாகக் கவனித்து வந்துள்ளேன் மற்றும் "என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக" (யாக்கோபு 3:1) என்று அப்போஸ்தலன் கூறினபோது அவரது வார்த்தைகள் அனுபவபூர்வமானவைகளே என்று நான் எண்ணுகின்றேன். ஆகையால் கிறிஸ்துவினுடைய சரீரத்தில் ஓர் ஊழியக்காரனாய் இருப்பது என்பது மிகவும் கனமிக்க காரியமாய் இருப்பினும், அதனோடுகூடக் கனமான பொறுப்பும், அபாயமும் கடந்துவருகின்றது; மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நாம், ஆகாதவர்களாய்ப் போகாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். நான் உணராத எதையும் உங்களுக்குக்கூற விரும்புகிறதில்லை - என்னுடைய சொந்தத் தனிப்பட்ட அனுபவத்தில் - இப்பாடமானது பல வருடங்களாக எனது இருதயத்தையும், மனதையும் அழுத்திக் கொண்டிருக்கின்றது. சத்தியத்திலிருந்து சிலர் வழுவிப்போகிறதை நான் கண்டு, எனக்குள்ளாகக் கூறிக்கொள்கிறதாவது: "இப்படி வழுவிப்போனவர்களில் சிலர் நல்ல அறிவுடையவர்களாய் இருக்கின்றனர்; இவர்களில் சிலரால் காரியங்களை மிகத் தெளிவாயாகிலும் பார்க்க முடிகிறவர்களாக இருக்கின்றனர்; ஒரு காலத்தில் தெளிவாய்ப் பார்க்க முடிகிறவர்களாகவும், சத்தியத்தில் மிகுந்த அறிவுடையவர்களாகவும் காணப்பட்டவர்கள், பிற்பாடு அதை இழந்து, அவை அனைத்திற்கும் இவர்கள் குருடாகிப் போனார்கள் என்றால், இதுபோலவே நானும்கூடத் தயவின் ஸ்தானத்தினின்றும், சத்தியத்தின் அறிவினின்றும் விழுந்துபோய்விடக்கூடும் அல்லவா? மேலும் எனது இருதயம் "ஆம்" என்று பதிலளித்தது மற்றும் கர்த்தரை நோக்கி: கர்த்தாவே என்னைக் காத்துக்கொள்ளும், உம்முடைய வல்லமையுள்ள கரங்களினால் என்னைத் தாங்கிக்கொள்ளும்" என்பதேயாகும்.

யாரையாவது நியாயந்தீர்க்கவும், "நீங்கள் இப்படியாகக் காணப்படுகின்றீர்கள் மற்றும் நீங்கள் அப்படிக் காணப்படுகின்றீர்கள் மற்றும் இது உங்களுக்கு அதிகமாகக் காணப்படுகின்றது மற்றும் அது உங்களிடத்தில் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது" என்று கூறிடவும் நாம் முற்படுகிறதில்லை; எனினும் சில விஷயங்களை நாம் அசட்டையாகக் கருதிட முடியாது மற்றும் ஒருவர் வழுவிப்போகையில், "அவர் எதில் வழுவிப்போனார்" என்பதையாகிலும் சொல்வது தவறாய் இருக்காது. அவ்வேளையில் ஒருவர் வழுவிப்போய்க்கொண்டிருக்கின்றார் என்றோ அல்லது அவரது இருதயம் தவறான நிலைமையில் காணப்படுகின்றது என்றோ நாம் நியாயந்தீர்ப்பது என்பது சரியாய் இருக்காது; காரணம் நம்மால் இருதயத்தினை நியாயந்தீர்த்திட முடியாது; ஆனால் ஒருவர் வழுவிப்போனப் பிற்பாடு, எதில் அவர்

வழுவிப்போனார் என்று அறிந்துகொள்ளத்தக்கதாக பார்க்கவேண்டும் என்பது சரியானதாகவும், தகுதியானதாகவும் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்.

நான் சிறுவனாக பிட்ஸ்பர்கிலுள்ள ஒரு தெருவழியாக மாலையில், பனியானது விழுந்தப் பிற்பாடு நடந்துபோனபோதான சம்பவம் எனக்கு நினைவில் இருக்கின்றது; மெல்லிய மின்னும் பனியினால் மூடியிருந்த நிலத்தடி கிடங்கின் அந்தப் பழைய, வழவழப்பான, இரும்புக் கதவுகளின்மேல் நான் நடந்து சென்றேன். அதன்மேல் கால்களை வைத்த மாத்திரத்தில் நான் வழுக்கிவிழுந்துவிட்டேன் (விரல் முறிவு ஏற்பட்டது). மேலும் நான் விழுந்தபோது, "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதிமொழிகள் 16:18) எனும் வேதவாக்கியத்தினை நினைவுகூர்ந்தேன். நிலத்தடி கிடங்கின் கதவின்மேல் கால் வைத்த மாத்திரத்தில், இவைகள் என் தலைக்குள் ஓடினது. அப்படி விழுவதற்கு ஏதுவான மனமேட்டிமையான சிந்தை எதுவும் அப்போது காணப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை, ஆனால் அதிலிருந்து நல்லதொரு பாடம் கற்றுக்கொள்ளலாம் என்று நான் எண்ணினேன். நான் கவனித்ததும், என்னுடைய அனுபவமும் என்னவெனில் . . . ஆவிக்குரியப் பாதையில் வழுக்கலான இடங்கள் காணப்படுகின்றன மற்றும் எதையாவது சிந்தித்துக்கொண்டும் மற்றும் கால்களைக் கவனிக்காமலும், நம் கால்களை எங்கு வைத்து நடக்கிறோம் என்று கவனிக்காமலும் அவ்விடங்களில் அஜாக்கிரதையாய் நடப்போமானால், அப்போதுதான் நாம் சீக்கிரமாய் வழுக்கிவிழுகிறதான நேரமாய்க் காணப்படும். என்னால் கணிக்க முடிந்தவரை விழுந்துபோனவர்களுக்கு மிக விபரீதமாய் இருந்தது, பெருமையின் ஆவியும், சுயநலமுமேயாகும். நான் என்ன சொல்ல வருகின்றேன் என்று நீங்கள் அறிவீர்கள். இது விஷயத்தில் நாம் மிக விழிப்பாய்க் காணப்படுவது நமக்கு எப்போதும் நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்; இதினிமித்தம் யாரையேனும் குறைவாய்ப் பார்ப்பதற்கு ஏதுவான ஏதேனும் எண்ணமானது, ஏதேனும் நேரத்தில் நமக்குள் நுழைவதை நாம் கண்டுகொள்கையில், "ஏன் நான் அந்தச் சகோதரனைக் குறைவாய்ப் பார்க்கின்றேன்?" என்றும், இது அவசியம் மற்றும் சரிதானா அல்லது நான் கொண்டிருக்கும் பெருமையா? என்றும் நாம் நம்மையே கேட்டுக்கொள்ளலாம். என்ன காரியமாய் இருப்பினும் நாம் நம்மையும், நம்முடைய சொந்த இருதயங்களையும் கவனமாய்க் கவனித்துக்கொள்ள வேண்டும். நிச்சயமாக நாம் நம்முடைய நாவுகளையும், ஜீவியத்தின் நடத்தைகள் யாவற்றையும் கவனித்திருக்க வேண்டும்தான், ஆனாலும் விசேஷமாய் நம்முடைய இருதயங்களைக் கவனித்துக்கொள்ள வேண்டும். நோக்கம் என்ன? ஏன் அதைச் சொன்னாய்? ஏன் அதைச் செய்தாய்? அச்செயலுக்குப் பின்னான நோக்கமென்ன? இப்படியாக நாம் நம்மையே விமர்சனத்திற்குள்ளாக்கிடும்போது, "நீங்கள் கவனமாய் நடந்துகொள்ளப்பாருங்கள்" என்று அப்போஸ்தலன் பவுல் கூறினதைச் செய்கின்றவர்களாய் இருப்போம். கவனமாய் நடந்துகொள்ளப்பார்த்தல் என்பது, நீங்கள் எங்கு அடியெடுத்து வைக்கின்றீர்கள் என்று சுற்றிலும் பார்த்துக்கொள்வதாகும். ஆகையால் நீங்களும், நானும் என் அருமை சகோதரர்களே, மாபெரும் இராஜாவிற்கு நாம் செய்வதற்கு ஊழியம் பெற்றிருக்கும் அளவிற்கேற்ப, நமது எதிராளியான பிசாசானவன், யாரை கண்ணியில் சிக்கவைக்கலாம் மற்றும் மாட்டவைக்கலாம் மற்றும் இடறவைக்கலாம் என்று சுற்றித்திரிகிறான் என்பதை உணர்ந்துகொள்வோமாக மற்றும் ஊழியம் பெற்றிருக்கும் அளவிற்கேற்ப அவன் நமக்கு விஷேசித்த கவனம் கொடுக்கின்றவனாய் இருப்பான். அவன் எனக்கு அதிகம் கவனம் கொடுக்கின்றான் என்று நம்புகின்றேன். ஆனால் மறுபக்கத்தில் கர்த்தரும் தமது கவனத்தை நமக்குக் கொடுக்கின்றார் என்பதில் மகிழ்கின்றோம். யார் எதிராளியானவனால் விசேஷமாய்ச் சூழப்படுகின்றார்களோ அவர்கள், அவருடையவர்களாயும் மற்றும் இருதயத்தில் நேர்மையாயும் ஒருவேளைக் காணப்படுவார்களானால், கர்த்தரும் அவர்களை விசேஷமாய்ப் பராமரித்திடுவார் என்றும் நாம் நிச்சயம்கொள்ளலாம்; "கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்" (சங்கீதம் 34:7).

அடிமைத்தனத்திற்கேதுவான பயத்தின் ஆவியை மனதில் பதியப்பண்ணுவது என்னுடைய எண்ணமாக இராமல், மாறாக தேவனுக்கான மிகுந்த பயபக்தியையும், நாம் மிகவும் முக்கியமான வேலையில் காணப்படுகின்றோம் என்றும், நாம் தேவனுடைய ஊழியக்காரர்களென, சபையின் ஊழியக்காரர்களென அவ்வேலையில் காணப்படுகின்றோம் என்ற தீவிரமான உணர்வையும் பதிய வைத்திட எண்ணுகின்றோம் மற்றும் இது நம்முடைய முழு வல்லமையில் நாம் கிறிஸ்துவின் மந்தைக்கு ஊழியம் புரியவும் மற்றும் சுயநலமான நோக்கத்திலோ, தற்பெருமையின் ஆவியினாலோ அல்லது இறுமாப்பினாலோ அல்லது ஜனங்கள் முன்னிலையில் தன்னை உயர்த்திக்கொள்வதினாலோ எதையும் செய்யாமல் இருக்கவும், மாறாக கர்த்தருக்கும், அவருடையவர்களுக்கும் எப்படிச் சிறப்பாய் ஊழியம் புரியமுடியும்? என்று எண்ணவும் நம்மைக் கடமைக்குள்ளாக்குகிறது. இத்தகைய ஆவி உள்ளே காணப்படுகையில், அங்குப் பாதுகாப்பு இருக்கின்றது என்று நான் நம்புகின்றேன்; ஒருவேளை வேறு ஏதேனும் ஆவி காணப்படுமாயின், பதவி அடைவதற்கு நீங்கள் நாடுபவராக இருப்பதை நீங்கள்

**--2998--**

அடையாளம் கண்டுகொள்கின்றீர்களானால், நீங்கள் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றீர்கள் என்றும், விடுதலைக்காக நீங்கள் தேவனிடம் ஜெபிக்க வேண்டும் என்றும் நான் எண்ணுகின்றேன்.

நான் மாத்திரம் இதைக் கவனித்திடவில்லை. இதே விஷயங்கள் குறித்தும் சில அருமையான சகோதரர்கள் எனக்குக் கடிதம் எழுதியிருக்கின்றனர். "சகோதரர் ரசல் அவர்களே, பயண ஊழியர்களாகிய எங்களைப் பாதுகாத்து, காத்துக்கொள்ள உதவும் எதையேனும் வாட்ச் டவர் வெளியீட்டில் நீங்கள் வெளியிடுவதற்கு விரும்புகின்றோம்." நாங்கள் கடந்துபோகும் இடங்களிலுள்ள அருமை நண்பர்கள், எங்களை மிதமிஞ்சி எண்ணப்பண்ணுகின்றனர் என்று அநேகம் பயண ஊழியர்களாகிய சகோதரர்கள் எனக்கு எழுதியிருக்கிறது நினைவில் இருக்கின்றது. "சிலசமயம் என் தலை பெருமிதத்தினால் உப்பிக்கொள்கின்றது மற்றும் இது ஆபத்தான உணர்வு என்று நீங்களே அறிவீர்கள்" என்று ஒருவர் எழுதியிருந்தார். அவர் கூறினது சரிதான். எல்லா இடங்களிலும் காணப்படும் கர்த்தருடைய ஜனங்கள் பகுத்துணர்ந்து காணப்படுவதும், யாரையும் மிகவும் புகழும் வார்த்தைகளைப் பேசாமல் இருப்பதும், சத்தியத்தையும் மற்றும் சத்தியத்தை நமக்கு அருளின கர்த்தராகிய - மாபெரியவரையும் குறித்துப் புகழ்ச்சியான வார்த்தைகளில் பேசிடுவதும் நலமாயிருக்கும். யாரையும் அளவுக்குமீறி பெருமிதம்பண்ணிடாதீர்கள். அதை எதிர்த்து நிலைநிற்க முடிகிற சிலர் இருப்பார்கள்; மற்றும் எதிர்த்து நிலைநிற்க முடியாத மற்றவர்களும் இருப்பார்கள் மற்றும் ஏதோ ஒரு சகோதரன் இடறிவிழுவதற்கு நாம் காரணமாய் இருந்திருக்கின்றோம் என்று காணும்போது, நீங்களும், நானும் மிகவும் கவலைக்குள்ளாவோம். சகோதரர்கள் இதைக் குறிப்பிடும் காரியமானது, என்னைத் தவிர மற்றவர்களும் இச்சூழ்நிலையின் முக்கியத்துவத்தையும், ஸ்தானத்தினுடைய பொறுப்பினையும் உணர்ந்திருக்கின்றனர் என்பது தெரிகின்றது.

இந்த மாலைவேளையில் இடம்பெறும் இச்சிறு உரையாடல்குறித்து நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, வேதவாக்கியங்களிலுள்ள ஒரு குறிப்பிட்ட வசனமானது, அதாவது அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேமுக்குப் போகும் வழியில் எபேசு பட்டணத்திற்குள் போக நேரமில்லாததினால், எபேசு பட்டணத்து மூப்பர்களை ஒன்றுகூடிட அழைத்தபோது அவர் பயன்படுத்தின வார்த்தைகள் என் நினைவிற்கு வந்தது. மூப்பர்கள் கப்பல் அருகே அவரைச் சந்திக்கும்படிக்கு வந்தார்கள் மற்றும் அவர்கள் ஒன்றுகூடினபோது, கர்த்தர் இயேசுவினுடைய பிரதிநிதியென அவர்: "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்றார் (அப்போஸ்தலர் 20:28). அப்போஸ்தலன் கூறும் விதத்தைக் கவனியுங்கள் - "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்". எனது அருமை சகோதரரே, இதுவே நம் அனைவருக்கும் முதலாவது காரியமாகும். நீங்கள் மற்றவர்களுக்கு என்ன செய்கின்றீர்கள் என்பதைவிட, நீங்கள் உங்களுக்கு என்ன செய்கின்றீர்கள் என்பது உங்களுக்கு மிக முக்கியமானதாய் இருக்கத் தேவன் விரும்புகின்றார் மற்றும் இப்படியாகவே என் விஷயத்திலும் நான் இருக்க விரும்புகின்றார்; அதாவது மற்றவர்கள் யாரையும்விட அவர்கள் யாராய் இருப்பினும் அவர்களைவிட, நான் என்னைக்குறித்து மிகவும் கவனம்கொண்டிருக்க வேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரனாய் மற்றும் பிரதிநிதியாய் மற்றும் ஸ்தானபதியாய்க் காணப்படுவதற்குரிய பொறுப்பினை நான் உணர்ந்திருப்பது நலமாகும் மற்றும் நீங்கள் பேசும் அனைத்திலும் மற்றும் நீங்கள் செய்யும் அனைத்திலும், உங்களது நடத்தை அனைத்திலும் உள்ள உங்களது பொறுப்பினை உணர்ந்திருப்பது நலமாகும் - அதுவும் இவைகள் மற்றவர்களிடத்திலும், இன்னும் முக்கியமாய் உங்களிடத்திலும் நன்மைக்கேதுவாய் அல்லது தீமைக்கு ஏதுவாய்க்கொண்டிருக்கும் செல்வாக்கைக் குறித்து நினைவில்கொண்டும் உணர்ந்திருப்பது நலமாகும். இவ்விஷயமானது உங்களிலிருந்து, அதாவது உங்கள் சொந்த இருதயத்தில், எனக்கு என்னுடைய சொந்த இருதயத்திலிருந்து துவங்க வேண்டுமென்று தேவன் கூறுகின்றார். "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்." அருமையான நண்பர்களே இது நாம் செய்வதனைத்தையும் குறித்து மிகவும் கவனமாய்க் கவனிப்பதை - மிகக்கடுமையாய்க் கவனிப்பதைக் குறிக்கின்றதாயிருக்கும் - கடந்த வருடம் நீங்கள் எச்சரிக்கையாயிருந்து, ஆராய்ந்துபார்த்து, உங்கள் இருதயத்தின் நிலைமையைக் கண்டு, சரியாய் இருக்கின்றது என்று கண்டுகொள்வது மாத்திரம் போதாது. என்னுடைய அனுபவத்தை வைத்துப் பார்க்கையில், கர்த்தருடைய ஜனங்கள், அதிலும் விசேஷமாக முதன்மையான ஸ்தானங்களில் காணப்படுபவர்கள் ஒவ்வொரு இரவிலும் தங்கள் நிலைமையினை ஆராய்ந்துபார்ப்பது முக்கியமாகும். படுக்கைக்குப் போகும்முன் நீங்கள் இன்றிரவில் எப்படிக் காணப்படுகின்றீர்கள்? உங்களது இருதய நிலைமை எப்படிக் காணப்படுகின்றது? கர்த்தருக்கு எவ்வளவு அருகாமையில் நீங்கள் காணப்படுகின்றீர்கள்? உங்கள் வஸ்திரங்களில் ஏதேனும் கறைகளைப் பெற்றிருக்கின்றீர்களா மற்றும் கலியாண வஸ்திரத்தில் சுருக்கங்கள் காணப்படுகின்றதா? இருக்குமானால், அவைகளைச் சரிச் செய்திடுங்கள். ஒரே ஒரு வழிதான் உள்ளது. தனக்குவரும் கறைகளைக் கழுவிக்கொள்ளாதவன்

மற்றும் தனக்கு வரும் சுருக்கங்களைச் சரிசெய்யாதவன், இவ்விஷயம் தொடர்பான எதையும் தேவனுடைய மந்தைக்குப் போதிக்கும் எந்த ஒரு நிலைமையிலும் இருக்கிறதில்லை. இவ்விஷயம் அருமையான நண்பர்களே நம்மில்தான் துவங்குகின்றது. "உங்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்."

பின்னர் இரண்டாவதாக, தேவன் தமது சொந்த குமாரனுடைய இரத்தத்தினால் சம்பாதித்த, தேவனுடைய மந்தையைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பதற்குரிய சரியான நிலைமையில் நீங்கள் காணப்படுவீர்கள். மந்தைக்கு எந்தளவுக்குக் கவனிப்புத் தேவைப்படுகின்றது? உங்களது குறைவுள்ள வல்லமைகள் அனைத்தும், என்னுடைய குறைவுள்ள வல்லமைகள் அனைத்தும் தேவைப்படுகின்றது. தேவனுக்கான ஸ்தானபதிகளாக இருப்பது என்பதும், ஏதோ தேவன் பேசுவது போன்று பேசுவதும், ஏதோ நாம் அவரது வாய்க்கருவிகள் போன்று காணப்படுவதும் அருமையான சிலாக்கியமாகும். இது காட்சியாக்கிடுவதற்கான ஏதோ ஒன்று அல்ல அல்லது இறகு சூட்டுதலோ அல்லது பதக்கமோ அல்ல, மாறாக நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதான பொறுப்பாய்க் காணப்படுகின்றதென ஓ! இங்கு நாம் உட்கார்ந்திருக்கும் மாலைவேளையிலும் மற்றும் ஒவ்வொரு நாளும் இதை உணருவோமானால் நலமாயிருக்கும்! உங்களுக்குப் பெரிய சிலாக்கியங்கள் காணப்படுகின்றதென்றால், உங்களுக்குப் பெரிய பொறுப்புகளும் காணப்படுகின்றன. கிறிஸ்துவின் சபையானது, உங்களுக்கு ஓர் ஊழிய ஸ்தானத்தைக் கொடுத்திருக்கிறதென்றால், அப்போஸ்தலன் கூறியுள்ளதுபோன்று, நீங்கள் எச்சரிக்கையாய் இருப்பதற்கு நீங்கள் தேவனுக்குக் கடமைபட்டிருக்கின்றீர்கள்; "பரிசுத்த ஆவியானது உங்களைக் கண்காணியாக வைத்த" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் - தேவனுடைய மந்தை மாத்திரமே உங்களைக் கண்காணியாக ஏற்படுத்திடவில்லை; சபையில் நீங்கள் மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ காணப்படத்தக்கதாக அவர்கள் மாத்திரம் உங்களுக்காக வாக்களித்திடவில்லை; இக்காரியத்திற்குப் பின்னால் தேவன் இருந்துள்ளார் மற்றும் இந்த முழு ஏற்பாடும் அவருடையதேயாகும். உங்களைத் தேர்ந்தெடுத்த அந்தச் சகோதரர்களிடத்திலான உங்கள் பொறுப்பினை நீங்கள் அடையாளம் கண்டுகொண்டு, உணர்ந்துகொள்வது மாத்திரமல்லாமல், தேவன் முழு ஏற்பாட்டிற்கும் பின்னால் இருந்துள்ளார் என்றும், சகோதரர்கள் உங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவ்வேற்பாட்டிற்கு இசைவாய்ச் செயல்பட்டுள்ளனர் என்றும், தேர்ந்தெடுத்தலை நீங்கள் ஏற்றுக்கொள்கையில், கிறிஸ்துவுக்குள்ளான புதுச்சிருஷ்டிகள் அநேகரின் வாக்குகளென அவர்களது வாக்குகளுக்கு மதிப்புக்கொடுப்பது மாத்திரமல்லாமல், இப்படியாக வாக்களித்த அந்தச் சகோதரர்கள் வாயிலாக, வேதவசனத்தினுடைய வழிகாட்டுதல்களுக்கு இசைவாய்ப் பரிசுத்த ஆவியானது செயல்பட்டு, இயக்கிக் கொண்டிருக்கின்றதென நீங்கள் புரிந்துகொண்டுள்ளதாலும் மதிக்கின்றீர்கள் என்றும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்; ஆகையால் உங்களது பொறுப்பானது இரண்டு பொறுப்பாய்க் காணப்படுகின்றது - அதாவது அவர்களது வாக்களிப்பை ஏற்றுக்கொள்ளுதல் என்பது, அவர்கள் அருளியுள்ளதான ஊழியத்தினை ஏற்றுக்கொள்ளுவதாய் இருக்கும் மற்றும் கிறிஸ்துவினுடைய சபையின் காரியங்கள் அனைத்தும் தெய்வீக மேற்பார்வையின் கீழ்க்காணப்படுவதாக அடையாளம் கண்டுகொள்ளுதல் என்பது, தேவனிடத்திலான உங்கள் பொறுப்பாய் இருக்கும் என்றும் நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அப்போஸ்தலன் சுட்டிக்காட்டுவதுபோன்று, "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரிந்தியர் 12:18) மற்றும் அவர் வைத்துள்ள நிலைக்கு நாம் உண்மையாய் இருக்கவில்லையெனில், அவர் அதை மாற்றிடவும், வேறு ஏற்பாட்டினைக் கொண்டுவரவும் மிகவும் வல்லமையுள்ளவராக இருக்கின்றார். ஆகையால் தேவனிடத்திலும், பரிசுத்த ஆவியினால் நாம் கண்காணிகளாக யாருக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோமோ, அந்த மந்தையிடத்திலுமான இந்தப் பொறுப்பினை முழுமையாயும், தீவிரமாயும் கவனித்திருப்பதில் நாமே மிகவும் கவனமாய்க் காணப்பட வேண்டும்.

அப்போஸ்தலன் பரிசுத்த ஆவியானது, குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக - குறிப்பிட்ட காரணத்தின் கண்ணோட்டத்தில் நம்மைக் கண்காணிகளாக ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கின்றார். அந்த நோக்கமென்ன? உலகத்தினைச் சந்தோஷிக்கப்பண்ண வேண்டும் என்பதுதான் பரிசுத்த ஆவியானது நம்மை மந்தையினுடைய கண்காணிகளாக வைத்ததற்கான காரணமாய் இருக்குமா? இல்லை. நாம் உலகத்தைப் போஷிக்க/மேய்க்க வேண்டும் என்பதற்காகவா? இல்லை. சபைக்குச் சிரிப்பு மூட்டுவதற்காகவா? இல்லை. நாம் நம்மையே காண்பித்துக்கொண்டு, பிரகாசித்துக்கொள்வதற்காகவா? இல்லை. நம்மைக் கண்காணிகளாக வைப்பதில் பரிசுத்த ஆவியினுடைய நோக்கமென்ன? அப்போஸ்தலனின் பதில் என்னவெனில் . . . மந்தையை மேய்க்கத்தக்கதாகவே பரிசுத்த ஆவியானது நம்மைக் கண்காணிகளாக வைத்துள்ளது. மந்தையை மேய்ப்பது என்றால் என்ன? அது அவர்களுக்கு ஏற்றகால சத்தியத்தினைக் கொடுப்பதை, போஷாக்குக் கொடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகாரமளிக்கும் தங்களை, அதிகமாய் மகிமைப்படுத்திடும் ஆகாரத்தினை மந்தைக்குத் தாங்கள் கொடுக்க வேண்டும் என்றும் எண்ணுகின்ற சிலர் காணப்படுகின்றனர் மற்றும் ஆகாரம் வழங்குவதில் --3000--

தங்களை மகிமைப்படுத்திடும் வழி எதையாகிலும் தாங்கள் கண்டுபிடிப்பது வரையிலும், இவர்கள் யாருக்கும் ஆகாரம் வழங்கப் போவதில்லை. இது யாவும் தவறாகும். இது தவறு என்று நாம் அனைவரும் அறிவோம். இது தவறு என்று அவர்களும் அறிவார்கள். இத்தகையவர்கள் தங்கள் ஊழிய ஸ்தானத்திற்கடுத்த பொறுப்பினைக் குறித்துச் சிந்தித்துப்பார்க்காதவர்கள் ஆவர். என்னோடுகூட நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நான் நிச்சயம்கொண்டிருக்கின்றதான சரியான வழிமுறை அருமை சகோதரர்களே இதோ: தேவன் தம்முடைய மந்தை மேய்க்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றார்; இது விஷயத்தில் ஊழியம் புரிவதற்குரிய வாய்ப்பினை அவர் உங்களுக்கும், எனக்கும் கொடுத்திருக்கின்றார்; நமது சுயத்தை முழுமையாய்த் தள்ளிவைத்திடவும், சுயத்தைப் புறக்கணித்து, மந்தையை மேய்ப்பதற்கு நம்மால் முடிந்த அனைத்தையும் முழு ஆற்றலோடு செய்யத்தக்கதாக நம்மை நாம் ஈடுபடுத்திடவும் அவர் எதிர்ப்பார்க்கின்றார். உங்களை மதிக்கின்றார்களா அல்லது இல்லையா என்று ஒருபோதும் பார்க்காதீர்கள்; உங்களை மகிமைப்படுத்துகின்றார்களா அல்லது இல்லையா என்று ஒருபோதும் பார்க்காதீர்கள்; உள்ளே போய், மந்தையை மேய்த்திடுங்கள் - மற்றக் காரியங்களை அவைகளே பார்த்துக்கொள்ளட்டும். நீங்கள் அவர்களை மேய்த்தீர்களா அல்லது இல்லையா என்று மந்தையானது இறுதியில் அறிந்துகொள்ளும் என்பதும், இறுதியில் மந்தையானது உங்களை ஓர் ஊழியக்காரனாக மதித்திடும் என்பதும் என்னுடைய எண்ணமாக இருக்கின்றது. மந்தை உங்களைக் கர்த்தராகவும், எஜமானாகவும் மற்றும் தங்கள் மீது இராஜாவாகவும் மதிப்பதில்லை மற்றும் இப்படியாக மதித்திட வேண்டும் என்றும் விரும்பிடாதீர்கள். மந்தையினுடைய ஊழியர்களாய்க் காணப்படுவதற்குரிய சிலாக்கியத்தில் மகிழ்ச்சிக்கொள்வதே கர்த்தருடைய ஜனங்கள் அனைவருக்குமான சரியான மனோநிலையாகும் மற்றும் இயேசு சொன்னது போன்று உங்களில் பெரியவனாயிருக்கிறவன், மிகவும் உயர்வாய் எண்ணப்படுகிறவன், எப்படிப்பட்டவன்? இறுமாப்படைகிறவனா? நிச்சயமாக இல்லை! எப்படிப்பட்டவன்? மிகுந்த ஊழியம் புரிபவன் - கர்த்தருடைய காரணங்களுக்கடுத்த சேவையில் தனது ஜீவனை முற்றும் முழுமையாய் ஒப்புக்கொடுத்துவிடுகிறவன் ஆவான். இதுவே மாபெரும் போதகர் உங்களுக்கும், எனக்கும் கொடுத்திட்ட பாடமாகும்; அதாவது நாம் அவருக்குப் பிரியமாய் நடந்தால், நாம் மற்றவர்களுக்குப் பிரியமாயிருக்கிறோமா அல்லது இல்லையா என்று நீங்களும், நானும் கவலைப்பட வேண்டியதில்லை. நாம் அனைவரையும், அதிலும் விசேஷமாக தேவனுடைய மந்தையைப் பிரியப்படுத்த விரும்ப வேண்டும்தான்; இது சரியும்கூட; எனினும் நாம் நமது பரமபிதாவுக்கும், நமது கர்த்தராகிய இயேசுவுக்கும் பிரியமாய்க் காணப்பட வேண்டும் என்பதை முதலாவதாக நம்முடைய சொந்த இருதயங்களிலும் மற்றும் முதலாவதாக நம்முடைய சொந்த மனங்களிலும் நிலைநிறுத்திட வேண்டும். நாம் இவர்களுக்குப் பிரியமாய்க் காணப்படுவதாக அறிவோமால், என்ன நடந்தாலும் பரவாயில்லை, பலனில் முழுமையாய்த் திருப்திக்கொள்வதற்கு நாம் முடிகிறவர்களாக இருப்போம். இதற்கு நாம் அனைவரும் ஒப்புக்கொள்வோம் அல்லவா? நிச்சயமாக என்று நான் எண்ணுகின்றேன்.

ஆகையால் நான் கொடுக்க விரும்பும் விசேஷித்த அறிவுரை என்னவெனில் - பழைய மனுஷன் கடினமாய் உழைக்கின்றானா என்று பார்த்துக்கொள்வது தவிர, புதுச்சிருஷ்டியானது ஈடுபட்டுள்ளதான வேலை அனைத்திலும் புதுச்சிருஷ்டிக்கு உதவத்தக்கதாக, "பழைய மனுஷன்" முழுமையாய்த் தனது முதுகை வளைத்திருக்கிறாரா என்றும் பார்த்துக்கொள்வது தவிர, பழைய மனுஷனால் செய்ய முடிந்த அனைத்தையும் நீங்கள் அவனைக்கொண்டு செய்ய வைக்கின்றீர்களா - உங்களது பழைய மனுஷனை, சுபாவ மனுஷனை, மனித சரீரத்தை - எப்போதும் உங்களது அடிமையாய் வைத்துக்கொள்ளத்தக்கதாகப் பார்த்துக்கொள்வது தவிர, மற்றப்படி சுயத்தை முழுமையாய் மறந்துவிடுவோமாக. இங்குப் பேச்சாளர் (சகோ. ரசல்) எங்களது தந்தையை பழைய "மனுஷன்" என்று அழைத்து, அவமதித்ததினால் பேச்சாளரைப் பிடிக்கவில்லை என்று யாரும் கூறிடுவார்கள் என்று நான் எண்ணவில்லை. நம்முடைய பழைய மனுஷன் என்பது பழைய சுபாவமாகும் மற்றும் அப்போஸ்தலன் நமக்குக் கூறுவதுபோன்று, புதுச்சிருஷ்டிகளாகிய நமக்கு, நம்முடைய ஊழியக்காரனாய் இருக்கும்படிக்குப் பழைய சுபாவமானது கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் முந்தினகாலங்களில் நம்மில் சிலர் பாவத்திற்கும், தீய செய்கைக்கும் நம்முடைய வல்லமைகளை ஒப்புக்கொடுத்திருந்தோம், ஆனால் இப்பொழுதோ சரீரங்களிலும் மற்றும் அவருடையதாகிய நம்முடைய ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்தக்கதாக, புதுச்சிருஷ்டிகளென நாம் இந்தச் சரீரங்களை எடுத்துக்கொண்டு, நீதியானவைகள் ஒவ்வொன்றையும் செய்திடுவதற்கென அவற்றைப் பயன்படுத்திட வேண்டும்.

ஆகையால் ஊழியத்தில் சபையின் பிரதிநிதிகளென நமக்கு இருக்கும் மிகப்பெரிய பொறுப்பானது நம் அனைவருடைய இருதயங்களுக்குள்ளும் காணப்படுவதாக - அதாவது இறுமாப்பாய் ஆளுவதற்காக அல்ல, மாறாக ஊழியம் புரிவதற்கே நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், இரண்டாவதாக, கிறிஸ்துவின் மந்தையை மேய்ப்பதற்குக் கர்த்தருடைய ஊழியக்காரர்களாய்க் காணப்படும்படிக்கு அவரால் நியமிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதும், நம் அனைவருடைய இருதயங்களுக்குள்ளும் காணப்படுவதாக என்று நான் தெளிவாய்க் கூறியுள்ளேன் என்று

நம்புகின்றேன். நாம் எந்தளவுக்குச் சுயத்தை மறந்து, சத்தியத்திற்கான ஊழியத்திலும் மிக முழுமையாய் ஈடுபடுவோமோ, அவ்வளவுக்கு நமது கர்த்தரை நாம் கனப்படுத்தி, முடிந்தமட்டும் அவரைப் பிரியப்படுத்திடுவோம். ஆகையால் எப்போதேனும் உங்கள் மனங்களில் - இதை நான் செய்தேனாகில், இது எனக்கு மகிமை சேர்த்திடாது; அதைச் செய்தால், அது எனக்கு மகிமை சேர்த்திடும் என்ற எண்ணங்களானது வந்ததானால் அல்லது வருமானால், புதுச்சிருஷ்டியாகிய உங்களுக்கு இத்தகைய எண்ணங்களானது - தகுதியற்றது மற்றும் துரோகமானது என்று கருதி, முழுமையாய் ஒழித்துவிடுங்கள். நம்முடைய ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் நீங்களும், நானும் மனங்களில் கொண்டிருக்க வேண்டியது என்னவெனில் . . . நாம் யாருக்காய் ஊழியம் புரிகின்றோமோ மற்றும் உண்மையாய் இருக்கும் பட்சத்தில், யாருடைய இராஜ்யத்தில் சீக்கிரத்தில் இணைந்திடுவதற்கென எதிர்ப்பார்த்திருக்கின்றோமோ அவருக்கு, நம்முடைய ஆண்டவருக்கு எது பிரியமாய் இருக்கும்? என்பதேயாகும். நாம் நம்மையே பிரியப்படுத்த நாடுவோமானால், நாம் அவரைப் பிரியப்படுத்தமாட்டோம் என்றும், மாபெரும் பரிசினை இழப்போம் என்றும் உறுதிப்படுத்திக்கொள்ளலாம். நம்முடைய ஆண்டவருடைய சிந்தைக்கு முரணாக, அதாவது சுயத்தை நாடுபவராகவும், சுயநலமாகவும் காணப்படும் ஒரு நபரைக்கூட இராஜ்யத்தின் வகுப்பாரில் கொண்டிருக்கமாட்டார் என்பதில் நமக்கு நிச்சயமே - இதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்பதில் எனக்கு நிச்சயமே. ஆகையால்தான் தம்முடைய குமாரனுக்கு ஒத்த சாயலில் காணப்படப்போகிறவர்களின் தேர்ந்தெடுக்கப்படுதலைத் தேவன் முன்னறிவார் மற்றும் முன்குறித்துள்ளார் என்று அப்போஸ்தலன் நமக்குக் கூறுகின்றார்; ஆகையால் நீங்களும், நானும் கிறிஸ்துவுக்கு ஒத்த சாயலாகி, அவருடைய இராஜ்யத்தில், அவருடன் உடன்சுதந்தரர்களாகிட வேண்டுமெனில், அவர் அனைவருக்கும் ஊழியக்காரனாய் இருந்தார் என்ற இந்தக் குறிப்பிட்ட விதத்தில் நாம் அவருக்கு ஒத்த சாயலை அடைய வேண்டும்; மற்றும் எந்தளவுக்கு நீங்களும், நானும் அனைவருக்குமான ஊழியக்காரர்களாக அல்லது சிலருக்கான ஊழியக்காரர்களாக இருக்க முடிகின்றதோ, அந்தளவுக்கு நாம் இவ்வாய்ப்புகளுக்காகச் சந்தோஷம்கொள்ள வேண்டும்.

இப்பொழுது இன்னொரு காரியத்திற்கு வருவோம்: நான் "பிரசங்கித்தல்" எனும் வார்த்தையினைப் பயன்படுத்துகையில், சொற்பொழிவிலோ அல்லது பிரசங்கத்திலோ செய்வதுபோன்று பிரசங்கித்தல் எனும் அர்த்தத்தில் மாத்திரம் நான் குறிப்பிடுவதாகப் புரிந்துகொள்ள வேண்டாம். நாம் போதிக்கும் விதத்தில் பிரசங்கிக்கின்றோம். பெரோயா வகுப்பிலோ அல்லது வேறு ஏதாவது விதத்திலோ - பொதுவில் பேசப்படும் அனைத்துமே பிரசங்கிக்கும் விதமாகவே அல்லது செய்திக் கொடுப்பதாகவே இருக்கின்றது; இது பிரசங்கித்தல் அல்லது கர்த்தருடைய செய்தியை அனுப்புவதாகும். அருமையான நண்பர்களே நாம் பிரசங்கிக்கிறது, நாம் கொடுக்கிற செய்தியானது, மிக முக்கியமான ஒன்றாகும் மற்றும் அதிலிருந்து நம்முடைய மனங்களைத் திசைத்திருப்பிட எதிராளியானவன் மிகவும் விரும்பிடுவான் என்று உங்களுக்கு அறிவுறுத்த விரும்புகின்றேன். சபையார் தாங்கள் புதிய வெளிச்சத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர் என்று எண்ணிக்கொள்ளத்தக்கதாக, சிலர் புதிய காரியங்கள்பால் விலகிச்சென்றிட சோதனைக்குள்ளாகுகின்றனர். எந்த ஒரு புதிய வெளிச்சமும் உங்களுக்குத் தேவையாயிருக்கிறது என்று நான் எண்ணுகிறதில்லை. கர்த்தருக்கு எந்த ஒரு புது வெளிச்சமும் தேவையாயிருக்கின்றது என்று எனக்குத் தோன்றவில்லை. என் அருமையான நண்பர்களே புது வெளிச்சம் எதுவும் காணப்படுகிறதாக எனக்குத் தெரியவில்லை. நம்முடையதான மாபெரும் வெளிச்சமானது 1800-வருடங்களுக்கு முன்னதாகவே துவங்கிவிட்டது. முன்னோர்களின் பாரம்பரியங்களினால் அந்த வெளிச்சமானது தெளிவாய்த் தெரியாமல் இருந்ததே நமக்கான இடர்ப்பாடாகும் மற்றும் வெளிச்சம் பிரகாசிக்கத்தக்கதாக, கண்விழியைச் சுத்தீகரிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். நாமும், நம்மைத் தேவன் கண்காணிகளாக வைத்துள்ள தேவனுடைய மந்தை அனைத்தும், இயேசு மற்றும் அப்போஸ்தலர்களால் கூறப்பட்டதான மாபெரும் சத்தியங்களைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளத்தக்கதாக முயற்சித்துக்கொண்டிருக்கின்றோம். ஆகையால் நமக்கு ஆபத்தானதாகவும், மந்தைக்கும் ஆபத்தானதாகவும் காணப்படும் புதிய சில வெளிச்சங்களை உருவாக்க முற்படுவதை நாம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். இயேசு பிரசங்கித்த சுவிசேஷத்தில் அதிகமான வெளிச்சம் இல்லையா? அப்போஸ்தலர்கள் பிரசங்கித்த சுவிசேஷத்தில் அதிகமான வெளிச்சம் இல்லையா? இன்னும் அதிகமாய் உங்களுக்கு எவ்வளவு வேண்டுமென, நான் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்? புதிய வெளிச்சத்தை உண்டுபண்ணுபவர்களாக நீங்களும், நானும் மாறிட தேவையில்லை என்று என் அருமையான நண்பர்களே நான் எண்ணுகின்றேன் மற்றும் இத்திசையில் ஓர் அபாயம் இருப்பதாக நான் எண்ணுகிறபடியாலே, உங்களை எச்சரிக்க நான் நாடுகின்றேன். கர்த்தர் இயேசுவினுடைய செய்தியும், தூதர்களால் அறிவிக்கப்பட்ட செய்தியும்தான், உலகம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தியாய் இருக்கின்றது என்று நான் நம்புகின்றேன்; தேவனுடைய மாபெரும் அன்பு குறித்தும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாபெரும் அன்பு குறித்தும் மற்றும் அவர் எப்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் மரித்தார் என்பது குறித்தும் மற்றும்

--3002--

இப்பொழுது அவர் அழைத்துக்கொண்டிருக்கும் வகுப்பார் குறித்தும் மற்றும் எப்படி நாம் நம்முடைய அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும் உறுதிப்படுத்திக்கொள்வது என்பது குறித்தும் மற்றும் இயேசுவால் செலுத்தப்பட்ட ஈடுபலி விலைக்கிரயமானது எப்படி, இரட்சிப்பின் முழுத்திட்டத்திற்கும் அடிப்படையாயிற்று மற்றும் இயேசுவின் மரணம் எனும் அஸ்திபாரத்தின்மேல்தான் திவ்விய கிருபையின் ஒவ்வொரு அம்சமும் கட்டப்பட்டுள்ளது என்பது குறித்தும் உள்ளவைதான் அச்செய்தியாகும். பிற்பாடே அதனோடு சம்பந்தப்பட்டுள்ள கோட்பாடுகள் அனைத்தும் வருகின்றன; இவைகள் அனைத்தும் சம்பந்தப்பட்டவைகளே; ஆனால் ஈடுபலி, திரும்பக்கொடுத்தல், பலி மற்றும் திவ்விய சுபாவம் - இவைகள் என்னால் பார்க்க முடிந்தவரை கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் அடிப்படைகளாகக் காணப்படுகின்றன. இவைகளையே இயேசுவும், அப்போஸ்தலர்களும் நமக்குப் போதித்தனர் மற்றும் இது தொடர்பான மாதிரியையும் நமக்கு முன்வைத்தனர். ஆண்டவருக்கும், வெளிப்படுத்தின விசேஷத்தின் 12-ஆம் அதிகாரத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள கிரீடத்திலுள்ள தேவனால் நியமிக்கப்பட்டுள்ளதான பன்னிரண்டு நட்சத்திரங்களுக்கும் நீங்கள் மிகவும் நெருங்கி காணப்படுவதற்கேற்பவே, உங்களது நடத்தையானது தேவனுக்கு மிகப்பிரியமாய்க் காணப்படும் மற்றும் அவருடைய ஜனங்களை அவருக்கு இசைவாய்க் கொண்டுவருவதிலும், அவரது ஆவியின் ஐசுவரியத்தினால் அவர்களை ஆசீர்வதிப்பதிலும் மிகுந்த வெற்றியடைபவர்களாகக் காணப்படுவீர்கள்.

இன்னொரு காரியம்: வேதாகமத்தில் எவ்வளவுக்குக் கர்த்தர் இயேசு குறித்துக் கண்டுபிடிக்க முடிகின்றதோ, அவ்வளவுக்கு அருமையான சகோதரர்களில் சிலர் சகோதரர் ரசலையும் வேதாகமத்தில் கண்டுபிடிக்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இது மாபெரும் தவறு என்று நான் எண்ணுகின்றேன். என்னால் வேதாகமத்தில் இப்படிக் கண்டுபிடிக்க முடியவில்லை. இது விஷயத்தில் நான் குருடாக்கப்பட்டுள்ளேன் என்றும், என்னைக்காட்டிலும் அவர்கள் அனைவராலும் நன்கு காணமுடிகின்றது என்று சிலர் கூறுகின்றனர். ஒருவேளை அவர்களால் பார்க்க முடிகிறதாய் இருக்கலாம், நான் அறியேன்; எனினும் இவ்விஷயத்தில் அபாயம் ஒன்று காணப்படுகின்றதென அருமையான நண்பர்களே நான் எண்ணுகின்றேன் மற்றும் உங்களை விழிப்பாக்கிட விரும்புகின்றேன். தேவன் பயன்படுத்தும் ஒவ்வொரு கருவிகளையும் நாம் அங்கீகரித்திட வேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றதென நான் எண்ணுகின்றேன்; எனினும் தேவனுடைய எந்தக் கருவியையும், கர்த்தருக்கோ அல்லது அவரது திவ்விய ஏற்பாட்டிற்கோ போட்டியாக இருப்பதாக நாம் அங்கீகரித்துவிடக்கூடாது. அவரே ஆசீர்வாதத்தின் ஊற்றாய் இருக்கின்றார் மற்றும் அவர் மாத்திரமே மிகவும் துதிக்கப்படத்தக்கவர். இதுவே சரியான மனவுணர்வு என்று எண்ணுகின்றேன். இதை நீங்கள் அனைவரும் ஒப்புக்கொள்வீர்களென்று நம்புகின்றேன். இன்னுமாகச் சகோதரர் ரசலைப் பிரசங்கம் பண்ணும் அபாயமும் சில அருமையான நண்பர்களுக்குக் காணப்படுகின்றது. இப்படி நீங்கள் செய்வதைச் சகோதரர் ரசல் விரும்பமாட்டார். இது தேவனுக்கு மகிமையாய் இராது என்று அவர் எண்ணுகின்றார். அருமையான நண்பர்களே என்னுடைய கணிப்பின்படி, தேவனுடைய சுவிசேஷம் பற்றியும், அவரது திட்டம் பற்றியும் ஆராய்வதற்கு நமக்கு அதிக காரியங்கள் இருக்கின்றன மற்றும் அவரது புண்ணியங்களை அறிவித்திடுவதற்கான அநேக வாய்ப்புகள் காணப்படுகின்றன, ஆகையால் இவ்விதத்தில் நம்முடைய நேரம் அனைத்தையும் ஈடுபடுத்தி, செலவழிப்போமாக என்று மறுபடியுமாகச் சொல்கின்றேன். ஆகையால் இதற்கு அப்பாற்பட்ட அனைத்திற்கும் நாம் மிகக்குறைவான கவனத்தைக் கொடுப்போமாக என்பதே என் ஆலோசனையாகும். யாரைக் கனப்படுத்த வேண்டுமோ, அவர்களைக் கனப்படுத்துவோமாக என்று வேதவாக்கியங்கள் சொல்கின்றன மற்றும் இது யாவருக்கும் மற்றும் அனைவருக்குமே பொருந்தும்; உதாரணத்திற்கு நாம் திரும்பிப்பார்க்கையில், நாம் மார்ட்டின் லுத்தரைப் பார்க்கின்றோம் மற்றும் அவர் ஒரு பிரம்மாண்டமான வேலையைச் செய்திருக்கின்றார் மற்றும் அவருக்காக நாம் தேவனை ஸ்தோத்தரிக்கின்றோம்; இதே போன்றே ஜான்வெஸ்லி அவர்களையும் குறித்து உண்மையாகவே கூறிடுவோம்; தேவனுடைய ஏற்பாட்டில் அவர் காணப்பட்டார் என்பதற்காகவும், அவர் ஓர் உண்மையுள்ள மனுஷனாக இருந்திருக்கிறார் என்பதற்காகவும் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இன்னும் கர்த்தருடைய ஜனங்களில் வேறு சிலரும் கடந்தகாலங்களில் காணப்பட்டனர். அனைவருக்காகவும் நாம் மகிழ்ந்து, களிகூருவோமாக மற்றும் நமக்கு உதவுவதற்கும், மற்றவர்களுக்கு உதவுவதற்கும், தேவனது மாபெரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் வேண்டி, அவர் பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தியுள்ளதினால், நாம் தேவனை ஸ்தோத்திரிக்கின்றோம்; எனினும் மனிதரைத் தொழுதுகொள்ளும் எதற்குள்ளும் போகாதிருப்போமாக; ஏனெனில் இது கர்த்தருக்குப் பிரியமற்றதாகவும், நமக்குப் பாதகமாகவும் காணப்படும் என்பதில் உறுதியே. முப்பது வருடங்களுக்கு முன்னதாக வெளிப்படுத்தின விசேஷத்தில் சபையைச் சித்தரிக்கும் வேதவாக்கியத்தை உங்களது கவனத்திற்குக்கொண்டு வந்ததை, நான் மீண்டுமாக உங்களுக்கு நினைப்பூட்டுகின்றேன். வெளிப்படுத்தின விசேஷத்தினை எழுதின யோவான் காரியங்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அவைகளை அவருக்குக் காண்பித்துக்கொடுத்த தூதனைத் தொழுதுகொள்ளும்படிக்குப் -3003-

விழுந்தார் மற்றும் தூதனோ: "நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் உன் சகோதரரோடும் தீர்க்கத்தரிசிகளோடும், இந்தப் புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்" என்றார் (வெளிப்படுத்தல் 22:9). ஆகையால் அருமையான நண்பர்களே நம்முடைய பரம பிதாவும், நமது பரம கர்த்தரும் ஏதேனும் அளவில் சகோதரர் ரசலைப் பயன்படுத்தியுள்ளார்களெனில், அப்படிப் பயன்படுத்தப்பட்டதற்காக அவர் மிகவும் மகிழ்ச்சிகொள்கிறார் மற்றும் நன்றி ஏறெடுக்கின்றார். இன்னும் அவரைப் பயன்படுத்த கர்த்தர் பிரியப்படுவாரானால், கடைசி மூச்சு வரைக்கும், தான் பயன்படுத்தப்படுவதில் மகிழ்ச்சிக்கொள்வார்; ஆனால் அவருக்கு எந்தத் தொழுதுகொள்ளுதலும் தேவையில்லை; தகாத வணக்கம் எதுவும் அவருக்குத் தேவையில்லை; அவருக்குப் பாராட்டு எதுவும் தேவையில்லை. கர்த்தருடைய சகோதரர்களாய் இருப்பவர்கள் அனைவரின் அன்பை அவர் பெற்றுக்கொள்வதிலும் மற்றும் தேவன் வாக்களித்துள்ளதான மகிமையான காரியங்கள் அனைத்தையும் அடைய நாடுபவராகவும், நமது தேவனாகிய கர்த்தரால் அழைக்கப்படுபவர்கள் யாவருக்கும் மிகுந்த சந்தோஷத்திற்கேதுவான நற்செய்தியைச் சொல்லிட நாடுபவராகவும் காணப்படும் அனைவரோடுகூட உள்ள சக ஊழியனாகக் கருதப்படுவதிலும் அவர் மகிழ்ச்சியடைவார்.

இப்பொழுது என் அருமையான நண்பர்களே, இக்கருத்துக்களை நான் கூறி முடித்த பிற்பாடு, ஊழியம் தொடர்பான கேள்விகள் சிலவற்றை அல்லது வெவ்வேறு சபைகள் தொடர்பான கேள்விகளைக் கேட்பதற்குரிய வாய்ப்பு தரப்படும். இப்படியாகச் சில நிமிடங்கள் செலவழிப்பது அநேகமாகப் பிரயோஜனமாய் இருக்குமென நான் எண்ணுகின்றேன். கேள்விகளை எழுதிட வேண்டாம்; கேள்விகளைக் கேட்கலாம்.

**- சகோ. ரசல்.**

---

**--3004--**

# தேவனுக்கான பகல்நேரக் காணிக்கை

என் இதயத்துடிப்பை ஒவ்வொன்றையும்
உமக்கே ஒப்படைக்கின்றேன் அவை
எல்லாம் உமக்கே சொந்தமே

எனது மனித கட்டுக்கள் யாவும்
எனது மகிழ்வின் எனது வலியும்
மனதின் ஒவ்வொரு செயலுமே - அவை
எல்லாம் உமக்கே சொந்தமே

எனது நம்பிக்கை எனது பயம்
எனது சிரிப்பு எனது அழுகை
எனது பாடல் எனது இசையும் - அவை
எல்லாம் உமக்கே சொந்தமே

எல்லாவற்றையும் அளிக்கின்றேன்
எடுத்துக்கொள்ளும் தேவனே
உமதந்தரங்க கயிறுகொண்டு
கட்டிப்போடும் தேவனே

எனக்குள் நீரே மகிமையாய்
விளங்கும் மகிமை தேவனே
உமது ஒரே வார்த்தையாலே
பெருகச்செய்யும் தேவனே

பலப்படுத்தும் ஆசீர்வதியும்
அதிகரியும் என் தேவனே
துவக்க முடிவு அற்ற உம்
நிறைவுகொண்ட அன்பையே
- தொகுதி 1(ஆங்கிலம் பக்கம் 88)

------------------------------------

**--3005--**

# தேர்ந்தெடுத்தல்

**(Q232:3) மூப்பர்கள் - சபையில் அதிகாரம்.**

கேள்வி (1909)-3- சபையாரை நடத்துவதற்கும் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கும் மாத்திரமே ஒரு மூப்பர் தேர்ந்தெடுக்கப்படுகின்றாரா? அல்லது அவருக்கு இன்னும் அதிகமான பொறுப்புகள் இருக்கின்றதா?

பதில் - அதிகாரத்தை அருளியுள்ளவர்களுக்கு இருப்பதைக்காட்டிலும், அதிகாரமானது மூப்பருக்கு அதிகமாய் இருக்க முடியாது. இன்னும் வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், ஒருவேளை சபையார், ஒருவரைத் தேர்ந்தெடுப்பதின் மூலம் அவரிடம் மூப்பருக்குரிய பொறுப்பை அளிப்பார்களானால், இது - முதலில் சபையிடமே அந்த பொறுப்பு இருந்தது என்பதையும், இல்லையேல் சபையானது அப்பொறுப்பினை மூப்பருக்கு அளித்திருக்க முடியாது என்பதையும் மற்றும் இதன் காரணமாக சபையார் அனுமதியளிக்கும் அதிகாரத்தையே அந்த மூப்பர் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் தெரியப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை அவருடைய மனசாட்சியானது, சில குறிப்பிட்ட விஷயங்களைச் செய்வதற்குச் சம்மதிக்கவில்லையெனில், சபையாரிடம் தனது மனநிலையைப் பற்றி எடுத்து விவரித்துக் கூறுவது தகுதியாகவே இருக்கும் மற்றும் ஒருவேளை அவர்கள் விரும்பும் பட்சத்தில் இவ்வூழியத்திலிருந்து விலகிக் கொள்ளும்படிக்குத் தன்னிடம் கூறப்படலாம் என்றும், தானும் மகிழ்ச்சியோடு விலகிக்கொள்வார் என்றும் கூறுவது தகுதியாகவே இருக்கும். சபையாருக்கு ஊழியம் செய்யும் விஷயத்தில் மூப்பர் தனது மனசாட்சியை மீறி செயல்படக்கூடாது. மேலும் மூப்பரைத் தங்களுக்கு ஊழியம் புரியவைக்கும் விஷயத்தில், சபையாருங்கூடத் தங்களது மனசாட்சியை மீறிச் செயல்படவும் வேண்டாம். சபையாரின் விருப்பங்களுக்கு இசைவாக, அதிலும் தன்னுடைய மனசாட்சி தன்னைத் தடை செய்யாத எல்லை வரையிலும், ஒரு மூப்பர் சபையாருக்கு ஊழியம் புரிந்திடலாம்.

இன்னுமாக கரங்களை தூக்குவதன் மூலம் மூப்பர், மேற்பார்வையாளராகப் (overseer) பரிசுத்த ஆவியினால் ஏற்படுத்தப்படுகின்றார் என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுவதை நான் தெரிவிக்கின்றேன்; இவ்விதமாகப் பரிசுத்த ஆவியானது சபையாரின் மூலமாகவே செயல்படுகின்றது.

**(Q233:1) மூப்பர்கள் - சபையின் நலன்களுக்கடுத்தவைகளைக்குறித்துப் பேசுவதற்குக் கூட்டம் நடத்துதல்.**

கேள்வி (1910)-1- ஒவ்வொரு சபையிலும் அல்லது பல்வேறு சபையிலும் உள்ள மூப்பர்கள் தாங்கள் பொறுப்பேற்றுள்ள சபைகளின் நலன்களுக்கடுத்தவைகளைக் குறித்துப் பேசுவதற்கு ஒன்று கூடுவது சரியான காரியமாக இருக்கும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்களா? மற்றும் இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றனவா?

பதில் - இதனை வேதவாக்கியங்கள் ஆதரிக்கின்றன என்றும், இது பரிந்துரைக்கப்பட வேண்டியது என்றும் நான் எண்ணுகின்றேன். அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலுள்ள சபையின் மூப்பர்களை ஒன்றுகூட அழைத்தது நம்முடைய நினைவுக்கு வருகின்றது. சபையின் நலனுக்கடுத்த விஷயங்களைக் கலந்து ஆலோசிக்கும்படிக்கு அவர் மூப்பர்களை ஒன்றுகூடும்படி அழைத்தார். அவர் ஒரு மூப்பருக்கான அல்லது பாஸ்டருக்கான பொறுப்பை உடையவராய் இருந்து, சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களை அங்கே அவர்களோடு கலந்து பேசிக்கொண்டிருந்தார். ஒருவேளை சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்கள்பற்றி கலந்துபேச மூப்பர்கள் ஒன்றுகூடுவது தவறாக இருக்குமாயின், என்னுடைய கணிப்பின்படி இப்படியானதொரு கூட்டத்தை அப்போஸ்தலனாகிய பவுல் நடத்தினதும் தவறாய் இருந்திருக்கும். சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்களைக் கலந்து ஆலோசிப்பதற்கு மூப்பர்கள் ஒன்றுகூடுவது சரியென்று நான் எண்ணுகின்றேன். ஆனாலும் ஒரு விஷயத்தைக் குறித்து நான் உங்களை எச்சரிக்க வேண்டும். சபையை நடத்துவதற்கடுத்த கருத்துகளைத்

தெரிவிப்பது அல்லது இது சம்மந்தமாக முடிவு எடுப்பது தொடர்பானவிதத்தில் ஒருவேளை மூப்பர்கள் ஒன்று கூடுவார்களானால், இது கெடுதலான காரியமாக இருக்கும் என்றே நான் எண்ணுகின்றேன். இது வேறே காரியமாகும். சபையாரின் நலனுக்கடுத்த விஷயங்கள் முதலானவைகள் குறித்துச் சிந்திப்பதற்கு ஒன்றுகூடுவதும் மற்றும் பின்னர்ச்சபையை நடத்துவதற்கடுத்தவைகளை மேற்கொள்ள முற்படும் விஷயமும், இரு வேறுபட்ட காரியங்களாகும். மூப்பர்கள் ஒன்றுகூடுவதற்கான வாய்ப்பு வருகின்றது என வைத்துக்கொள்ளுங்கள், மேலும் மூப்பர்களின் கணிப்பின்படி சபையாருக்கு நலமாயிருக்கும் ஏதோ ஒரு காரியத்தை அவர்கள் மனதில் வைத்திருக்கின்றார்கள் என வைத்துக்கொள்வோம். சபையாரால் முழுமையாகப் புரிந்துகொண்டு வாக்கெடுப்பின் (vote) மூலம், மூப்பர்களிடம் விசேஷமாக ஒப்படைக்கப்பட்ட காரியமாய் இருந்தால் ஒழிய மற்றபடி - ஒருவேளை சந்தேகம் அல்லது கேள்விகள் எழும்புவதற்கு ஏதுவான புதிதான திட்டமாக இருக்கும்பட்சத்தில், இந்த மூப்பர்கள் அக்காரியத்தைச் சபையார் முன் வைத்து: "நாங்கள் சபையாரின் நலன்கருதி, இப்படிப்பட்ட ஒரு கருத்தை மனதில் கொண்டுள்ளோம், இப்பொழுது அதை உங்கள் முன் வைத்து, இதற்கான உங்கள் வாக்கை (vote) கேட்கின்றோம்" எனப் பரிந்துரைப்பது சரியான மற்றும் தகுதியான வழிமுறையாகக் காணப்படும் என்று நான் கருதுகின்றேன். இதுவே பாதுகாப்பான திட்டமாக இருக்கும். மிகச் சிறந்த நோக்கங்களையும், மிக நல்ல யோசனைகளையும் உடைய மிகச் சிறந்த சகோதரர்களில் சிலர், சபையாரிடம் கலந்து ஆலோசிக்காமலேயே அந்த ஆலோசனைகளைச் செயல்படுத்த முற்பட்டபோது, அது சபையாருடைய விருப்பத்திற்கு மாறாக இருந்துள்ளதை நான் பார்த்திருக்கின்றேன். ஊதாரணத்திற்கு நீங்கள் நாயினுடைய மயிரை எதிர்திசையில் கோதிவிட முயற்சிப்பீர்களாகில், அப்படிச் செய்வது மென்மையாக இருக்காததால், நாய்க்கு அது பிடிக்காது. இதுபோலவே சபையாரும் இப்படியாகச் செய்யப்படுவதை விரும்புவதில்லை; ஏனெனில் இப்படிச் செய்வது என்பது, அவர்களை ஆளுவது போன்றும், இன்னுமாக அவர்கள் விசேஷமாக அங்கீகாரம் கொடுக்காத ஒன்றைச் செய்வதுபோலும் அவர்களுக்குத் தோன்றும். ஒருவேளை நீங்கள் நாயின் மயிரை கோதிவிட வேண்டுமானால், மயிர் வளர்கின்ற திசையில் அதற்கு கோதிவிடுவது எப்போதும் ஞானமான காரியமாய் இருக்கும் என்பதே என்னுடைய கருத்தாகும். அதுபோல சபையாரைக் கையாளும் விஷயத்தில், மனித சுபாவம் ஒரு குறிப்பிட்ட நடைமுறையைக் கொண்டுள்ளது என்பதை நினைவில் கொண்டு, அந்நடைமுறைக்கு இசைவாகவே நடக்க முயற்சியுங்கள் மற்றும் தேவைக்கு மிஞ்சி மனித சுபாவத்தைத் தொல்லைக்குள்ளாக்காதீர்கள். சபையின் ஒவ்வொரு அங்கத்திற்கும் மனித சுபாவம் உள்ளது; அவனுக்கு அழியக்கூடிய சரீரமுள்ளது; மேலும் கொஞ்சம் அல்லது மிகுதியாக எதிர்த்துப்போரிடும் மனப்பான்மையைக் கொண்டிருப்பான்; தான் அலட்சியம் பண்ணப்படக்கூடாது எனும் விருப்பத்தை கொஞ்சமாகவோ அல்லது மிகுதியாகவோ கொண்டிருப்பான்; சத்தியத்தில் இருக்கும் அனைவரிடமும் விசேஷமாக, அதிக அளவில் இக்குணங்கள் காணப்படுவதை உங்களால் பார்க்க முடியும். இவர்கள் ஆற்றல்மிக்க குணநலன்கள் கொண்டிருக்க வேண்டும், இல்லையேல் இவர்கள் ஒருபோதும் ஜெயங்கொண்டவர்களாக ஆக முடியாது. மேலும் இன்று அவர்கள் காணப்படும் நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளதும் மற்றும் பாபிலோனிலிருந்து வெளியேறுவதற்கு அவர்களுக்கு உதவியதுமான இந்த பண்புதான் - கொஞ்சம் வாதாடவும், சிலசமயம் கொஞ்சம் போரடவும் விரும்புகின்றது. ஒருவேளை நீங்கள் பின்வருமாறு: "இப்பொழுது நாம் ஒரு புதிய திட்டம்/காரியம் வைத்திருக்கின்றோம்; அதற்கு வாக்குகள் (vote) இன்னமும் பெறப்படவில்லை. சபையார் இதை விரும்புவார்கள் என்று எங்களுக்கு நிச்சயம் உள்ளுத; அதை எங்களுடைய பரிந்துரையுடன் கூடச் சபையார் முன் வைக்கின்றோம்" என்று சொல்வீர்களானால் - இப்பொழுது சபையார் உங்களுக்கு ஆதரவாய் இருப்பார்கள்.

**(Q234:1) மூப்பர் - (Presiding Elder) தலைமை மூப்பரின் வேலை.**

கேள்வி (1913)-1- தலைமை மூப்பரின் வேலை என்ன?

பதில் - தலைமை மூப்பருக்கான பணி குறித்து வேதாகமத்தில் விவரிக்கப்படவில்லை. தலைமை மூப்பர் என்ற ஒன்று வேதவாக்கியங்களில் குறிப்பிடப்படவே இல்லை.

**(Q234:2) மூப்பராக தேர்ந்தெடுக்கப்படாததால், ஒருவர் வேறு இடங்களுக்கும் தகுதியற்றவராகிடுவாரா?**

கேள்வி (1914)-2- ஒரு சபையில் அநேக வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட மூப்பராக இருந்து வந்துள்ள சகோதரன் ஒருவர், சபையில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையின் காரணமாக, தேர்ந்தெடுத்தலில் தேர்ந்தெடுக்கப்படாத ஒரு சந்தர்ப்பத்தில் - அவர் அறிமுகமானவராகக் காணப்படும் அருகாமையிலுள்ள சபையார் - ஒருவேளை அவரது தேவ செய்திகள் பயனுள்ளதாய் இருக்கின்றதெனக் கூறி, அவர் தங்களிடத்தில் வருகைத் தருவதை விரும்பும் பட்சத்தில், அவர் தேர்ந்தெடுக்கப்படாத காரியமானது அச்சபையாருக்குத் தேவ செய்திகள் கொடுப்பதற்கு அவரைத் தகுதியற்றவராக்கிடுமா? அவர் புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலைக்கு/class extension work தகுதியற்றவராகிடுவாரா? இதோடுகூட அவர் உபதேசத்தில் ஆரோக்கியமாயும் இல்லாதிருக்கையில், அவரது சொந்த சபையாரின் சில குறிப்பிட்ட அங்கத்தினர்கள் இத்தகைய ஊழியத்தினைத் தடுப்பதற்குத் தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்துவது நியாயமாய் இருக்குமா?

பதில் - தான் ஊழியம் புரிந்துகொண்டிருந்த சபையின் தேர்ந்தெடுத்தலில் தேர்ந்தெடுக்கப்படாமல்போன அந்த மூப்பர் - ஒருவேளை மற்ற இடங்களிலுள்ள நண்பர்கள், அந்நபர் தங்களுக்கு மூப்பராக ஊழியம் புரிந்திட தகுதியான நபர் என்று நன்கு பகுத்துணர்ந்து எண்ணும்பட்சத்தில் - அவர் மற்ற இடங்களில் ஊழியம் புரிந்திடுவதற்குத் தகுதியற்றவராகிடுவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் பகுத்துணர்தலைப் பயன்படுத்திடுவதற்கு உரிமை கொண்டிருக்கின்றனர். ஒருவேளை இச்சகோதரனை மறுத்திட்டதான சபையார், அவர் ஒழுக்க ரீதியிலான குணலட்சணத்திலோ அல்லது போதனையிலோ குறைவுற்றிருப்பதன் காரணமாக, அவரை இப்படிச் செய்திருக்கின்றனர் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் அவரைத் தேர்ந்தெடுத்த மற்றச் சபையாரின் கவனத்திற்குக் காரியத்தினைக் கொண்டுவருவது இந்தச்/சொந்த சபையாரின் கடமையாகவும், சகோதர சிறப்புரிமையாகவும் இருக்கும் என்று நான் எண்ணுகிறேன். மற்றச் சபையார் அவரைத் தேர்ந்தெடுத்துள்ளார்களானால், முதலாம் சபையார் பின்வரும் வார்த்தையினை: "அச்சகோதரனுக்கு எதிராக இப்படி ஒரு காரியம் இருக்கின்றது என்று சகோதரர்கள் என உங்களுக்கு நாங்கள் முன்னெச்சரிக்கைத் தர விரும்புகின்றோம் மற்றும் இதுகுறித்து உங்களுக்குத் தகவல் கொடுப்பது எங்களுடைய கடமையாக இருக்கின்றது என்று நாங்கள் சிந்தித்தோம்" என்று தகவலாக அனுப்பிட வேண்டும்.

புதிய வகுப்புகளை உருவாக்கிடும் வேலையைப் பொறுத்தமட்டில், மூப்பராய் இல்லாத எவரும் சபையாருக்கு, புதிய வகுப்புகளை உருவாக்கிடும் ஊழியத்தினைப் புரிதல் என்பது முறையாய் இராது; ஏனெனில் சொஸைட்டியினுடைய ஒத்துழைப்போடு, மூப்பர்களாய் இருப்பவர்களை மாத்திரமே சபையார் இவ்வேலைக்கு அனுப்பி வைக்கின்றனர். இப்படி இல்லாவிடில் சொஸைட்டியானது, இவ்விதத்தில் அவர்கள் கடந்து செல்வதற்கு ஒத்துழைப்புக்கொடுக்க விரும்புகிறதில்லை. ஒருவேளை அவர் வேறொரு சபையாரிடத்திற்குச் சென்று, அவர்கள் அவரை மூப்பராய்த் தேர்ந்தெடுத்து, புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலைக்கென அவரை அனுப்பிடுவதற்கு அச்சபையார் முடிவெடுத்தார்களானால், அது அவர்களது மற்றும் அவரது காரியமாக இருக்கும். அல்லது அவர் சபையார் அல்லது சொஸைட்டியின் பொறுப்பேற்பில்லாமல் கடந்துபோக முடிவெடுத்தாரானால், அது அவரது காரியமாக இருக்கும். அவர் அவரது சொந்த பொறுப்பில்தான் வேலை புரிகிறவராக இருப்பார். அந்த உரிமையினைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். ஒருவேளை அவர் செல்வம் மற்றும் பேசுவதற்கான தாலந்தைப் பெற்றிருந்து, அவற்றைப் பயன்படுத்த விரும்புவாரானால், அப்படிச் செய்திடுவதற்கு அவருக்கு முழுமையான உரிமை இருக்கின்றதென நாம் நம்புகின்றோம். அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்தாரானால், "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்ற அழைப்பினை அவர் பெற்றவராய் இருப்பார்.

**(Q235:1) மூப்பர்கள் - ஏன் மூப்பர்கள் கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்?**

கேள்வி (1916 - Z)-1- ஏன் மூப்பர்கள் கவனமாய்த் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்?

பதில் - ஏனெனில் ஊழியம் புரிவதற்கான ஆவி, கிறிஸ்துவின் சபையினுடைய மூப்பர்களின் அல்லது பயண ஊழியர்களின் ஆவியாக மாத்திரம் இராமல், சபையின் ஒவ்வொரு அங்கத்தினருடைய ஆவியாகவும் கூட இருக்கின்றது; காரணம் நம்மில் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய இருதயங்களில் தேவனுடைய கிருபைக் குறித்த செய்தியை எழுதும் விஷயத்தில், ஊழியக்காரனாக அல்லது வேலைக்காரனாக இருப்பதற்கான சிலாக்கியம் பெற்றிருக்கின்றோம்.

நம்முடைய சொந்த இருதயங்களில் ஏற்கெனவே எழுதப்படாத விஷயங்களை, மற்றவருடைய இருதயங்களில் எப்படி எழுத வேண்டும் என்பதை நாம் அறியாதவர்களாய் இருப்போம் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம். எனவேதான் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் - ஏற்கெனவே தங்களுடைய இருதயங்களில் கர்த்தருடைய காரியங்களை எழுதப்பெற்றவர்களைக் கண்டுபிடிப்பதில் மற்றும் இதன் காரணமாக வளர்ந்துவரும் சகோதர சகோதரிகளுடைய இருதயங்களில் பரிசுத்த ஆவியினுடைய வழிநடத்துதலினால் கர்த்தருக்கு ஒத்த குணலட்சணங்களை எழுதுவதற்குத் தகுதியுள்ள உதவியாளர்களாக இருக்கக்கூடியவர்களைக் கண்டுபிடிப்பதில் மிகுந்த கவனம் அவசியமாயுள்ளது.

நம்முடைய இருதயங்களில் பல்வேறு பிரதிநிதிகள் மூலம் பரிசுத்த ஆவியினால் எழுதப்பட வேண்டியுள்ள செய்தி யாது? நிருபம் யாது? அது காலக்கணக்குப்பற்றின சத்தியமா? அது நிழல்கள் குறித்த தெளிவான காரியங்களா? அது வேறு விதமாய்ப் புரிந்துகொள்ளப்பட்டுள்ள வேதவாக்கியப் பதிவுகள் தொடர்பான விஷயத்தில், கடினமான இறையியல் கோட்பாடுகளை உடைக்கும் காரியமா? அது யூதர்களின் வரலாறு, உலகத்தின் வரலாறு, சபையின் வரலாறு குறித்த அறிவா? அது கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் வரவிருக்கின்ற காலத்தில் இருக்கும் பல்வேறு உடன்படிக்கைகள் குறித்த புரிந்துகொள்ளுதல் மற்றும் உணர்ந்துகொள்ளுதலா? இல்லை, அது இவைகளில் ஒன்றுமேயில்லை. ஆண்டவருடைய பண்பு இயல்புகளை நம்முடைய இருதயதங்களில் ஆழமாகப் பதியப் பெற்றிருப்போமாகில், "நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் நமக்கு நிறைவாக அருளப்படும்" - 2 பேதுரு 1:8,11.

இந்த அனைத்துப் பாடங்களும் ஏறக்குறைய முக்கியத்துவம் வாய்ந்தவைகள்தான். மேலும் இப்பாடங்கள், கர்த்தர் தம்முடைய ஜனங்களுடைய இருதயங்களில் எழுதப்பட வேண்டியவைகள் தொடர்பாக ஏறக்குறைய பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்துவின் நிருபத்தை எழுதுவது என்பது - ஆண்டவருடைய ஜனங்களின் இருதயங்களில் அவருடைய குணலட்சணத்திற்கு ஒத்த தடத்தைப் பதிப்பது, எழுதுவது என்பது - அதாவது அவருடைய சாந்தம், அவருடைய நற்பண்புகள், அவருடைய பொறுமை, அவருடைய நீடிய பொறுமை, அவருடைய சகோதர சிநேகம், அவருடைய அன்பு, அவருடைய சந்தோஷம், அவருடைய சமாதானம் குறித்து எழுதுவது என்பது வித்தியாசமான காரியமாகும்.

காலக்கணக்கு மற்றும் வரலாறு தொடர்பான அறிவை நாம் அனைவரும் பெற்றிருக்கலாம்; வேதாகமத்தின் ஒவ்வொரு வசனத்தையும் நம்மால் மேற்கோளிட்டுக் கூறமுடியலாம் மற்றும் வசனம் எங்குள்ளது என்றும்கூடக் கூறமுடியலாம்; ஆனாலும் கிறிஸ்துவின் நிருபத்தை நம்முடைய இருதயங்களில் எழுதப்பெறாமலும்கூட இருக்க வாய்ப்புண்டு. இந்த நிருபத்தைக் குறித்துதான் அப்போஸ்தலனாகிய பேதுரு, "இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் (சோம்பேறி, பயனற்றவர்) கனியற்றவர்களுமாய் இருக்க வொட்டாது" என்று கூறியுள்ளார்; ஏனெனில் அறிவானது அது செய்ய வேண்டியதைச் செய்திடும்.

**(Q235:2) தேர்ந்தெடுத்தல் - சபையில் பெண் போதகர்கள்.**

கேள்வி (1905)-2- அலிகெனியில் (Allegheny) உள்ள சபையில் ஸ்திரீகள் வழிநடத்துபவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களா என்பதை எனக்குத் தயவுகூர்ந்து தெரிவிக்கவும்? ஒருவேளை இல்லையெனில் ஏன் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது? ஸ்திரீகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று சொல்லப்படுகின்றதே.

பதில் - இல்லை, இப்படியாக நடந்ததில்லை. அலிகெனியிலுள்ள சபையில் எந்தச் சகோதரிகளும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. சகோதரிகளை அப்போஸ்தலர்களாகவோ அல்லது எழுபது சீஷர்களாகவோ கர்த்தர் தேர்ந்தெடுக்கவில்லை. மேலும் இயேசு, சகோதரிகளை நேசித்தார். அவர் மார்த்தாளையும், மரியாளையும் நேசித்தார். அவர்களுடைய சகோதரனாகிய லாசருவையும் நேசித்தார். கர்த்தர் ஒருபோதும் சகோதரிகளைச் சபையில் பேச்சாளர்களாக (speakers) நியமிக்கவில்லை மற்றும் இதற்கு மாறாய் வித்தியாசமாகப் பேசுவதற்கு நமக்கு அதிகாரமும் இல்லை. கர்த்தருடைய திட்டம் சிறப்பானதென நான் எப்போதும் எண்ணுகின்றேன். இங்குள்ள சபையை நடத்துவதற்கான கர்த்தருடைய திறமையை நான் சந்தேகிக்க ஆரம்பிப்பேனாகில், பரலோகத்தை நடத்துவதற்கான அவருடைய திறமையையும் நான் சந்தேகிப்பவனாகிவிடுவேன். அவருடைய வழியிலேயே நாம் நடக்க வேண்டும். மாறாக நமக்குரிய சொந்த வழியைத் தெரிந்துகொண்டு, கர்த்தரை நம்முடைய வழியில் நடக்க வரும்படி கேட்கக்கூடாது.

**(Q236:1) தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவர்/chairman.**

கேள்வி (1909)-1- மூன்று முதல் ஏழு மூப்பர்கள் இருக்கும் ஒரு சபையில் அதிக வேலைகள் குவிந்து காணப்படும் தருணங்களில் மூப்பர்களால், கூட்டத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிராக, வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்கள் ஏதேனும் உள்ளதா?

பதில் - இல்லை. உண்மை என்னவெனில், ஒழுங்கு காணப்பட வேண்டும். யார் கூட்டத்தலைவராக இருக்க வேண்டும் என்பதைச் சபையார் தீர்மானிக்காத பட்சத்தில், மூப்பர்கள் தாங்களே கூட்டத்தலைவரைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

**(Q236:2) தேர்ந்தெடுத்தல் - வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகள்.**

கேள்வி (1909)-2- மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் தேர்ந்தெடுப்பதற்கான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான தகுதிகளைக் கூறவும்.

பதில் - ஆறாம் தொகுதியை (volume) பார்க்கவும். அதில் இப்பாடம் தொடர்பாக நாற்பதுக்கு மேற்பட்ட பக்கங்கள் உள்ளன. தேர்ந்தெடுத்தல் நடைபெறுவதற்கு ஒரு மாதம் முன்னரே வழிநடத்துபவர், இவ்விஷயத்தை கவனத்திற்குக் கொண்டுவருவதும் மற்றும் அனைவரும் இக்காரியத்தை முழுமையாய் மனதில் புரிந்துகொள்ளத்தக்கதாக ஆறாம் தொகுதியில் காணப்படும் இக்காரியங்களை வாசிக்கும்படி யோசனை தெரிவிப்பதும் - நல்லது என்று எண்ணுகின்றேன்.

**(Q236:3) தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மூப்பர்களின் எண்ணிக்கை.**

கேள்வி (1910)-3- நாங்கள் சபையாராக ஆறாம் தொகுதியின் காரியங்களின்படி தேர்ந்தெடுத்தல் செய்ய முற்பட்டுள்ளோம். ஆனால் எங்கள் அனைவராலும் ஒன்றுபோல் புரிந்துகொள்ள முடியவில்லை. மூப்பர்களுக்குத் தகுதியுள்ள அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது போல் ஓரிடத்திலும், வேறொரு இடத்தில் சபையின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பது போலவும் காணப்படுகின்றது. எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது; மேலும் அதைக் குறித்து உங்களுக்கு நாங்கள் எழுதினோம். ஏன் பிரச்சனை எழும்பினது என்பதை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்தீர்கள். சிலர் புரிந்துகொண்டவிதமே பிரச்சனையாகும்; அதென்னவெனில்: சபையில் மூப்பருக்கான சமநிலை தகுதியுடன் ஆறு பேர் காணப்படுகின்றார்கள் என்றால், அனைவரையும் நாம் தேர்ந்தெடுக்கலாம்; ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பன்னிரண்டாக அல்லது இருபத்திநான்காகக் காணப்படுமாயின், சபையாரின் எண்ணிக்கையைப் பொறுத்து மாத்திரம் நாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சிலர் புரிந்திருக்கின்றனர். உதாரணத்திற்கு, ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை பத்து என்றால், நாம் ஒரு மூப்பரைத் தேர்ந்தெடுக்கலாம்.

ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை இருபத்தைந்து என்றால், நாம் இருவரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சிலர் புரிந்திருக்கின்றனர்.

பதில் - மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் இவ்விஷயத்தைக் குறித்து என்ன சொல்லலாம்? மூப்பருக்கான தகுதிகளுடைய அனைவரும் தேர்ந்தெடுக்கப்படலாமா அல்லது சபையாரின் எண்ணிக்கையில் பத்துச் சதவிகிதமாகத் தேர்ந்தெடுக்கப்படலாமா? ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை ஐம்பது என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்துச் சதவிகிதம் என்பது ஐந்து போராக இருக்கும். மேலும் ஒருவேளை சபையாரின் எண்ணிக்கை நூறு என்று வைத்துக்கொள்வோமானால், இவர்களில் பத்துச் சதவிகிதம் என்பது பத்துப் பேராக இருக்கும். என்னுடைய பதில் இதுவே: நான் புரிந்துகொண்ட வரையிலும், மூப்பருக்கான தகுதிகளை வெளிப்படுத்தும் அனைவரும் மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆகவே ஒருவேளை ஆறு என்ற எண்ணிக்கையைக் கொண்டுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பர்களாகப் பணிபுரிய சமநிலையான தகுதியுடையவர்களாக இருப்பார்களானால், நான் அவர்கள் ஆறு பேரையும் தேர்ந்தெடுப்பேன். பின்னர் அவர்கள் பணிபுரிவதற்கு turns/சுழற்சி முறையில் செயல்படும்போது, வெளியே செல்வதற்கும், கூட்டங்கள் நடத்துவதற்கும் வாய்ப்புகள் உண்டாகும். தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும் - அதிகமான மூப்பர்கள் இருக்கும் இடம் சிறப்பாய் இருக்கும்! ஆனால் ஆறு பேர் எண்ணிக்கையுள்ள சபையில், ஆறு பேரும் மூப்பருக்கான தகுதியோடு இருப்பார்கள் என்று சொல்ல முடியாது என்று நான் எண்ணுகின்றேன். ஆனால் ஒருவேளை ஆறு பேர் இருப்பார்களானால், அதிலும் ஆறு பேரும் ஊழியம் புரிய தகுதியுடையவர்களாய் இருப்பார்களானால், அவர்கள் ஆறு பேரும் ஊழியம் புரிவதையே நான் விரும்புகின்றேன். பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பெற்றுள்ள ஒவ்வொருவரும், போதிப்பதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளனர் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கின்றது என்று நான் புரிந்திருக்கின்றேன். நமது கர்த்தர் இயேசு குறித்த தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகளை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள் - கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இப்பொழுது யாரெல்லாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கின்றார்களோ, அவர்கள் போதிப்பதற்கெனப் பிதாவிடமிருந்து அபிஷேகம் பெற்றிருக்கின்றனர். இதற்காகவே அபிஷேகம் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே போதகம் பண்ணுவதற்கென அவர் கொடுத்த அதிகாரமாகும். இதுவே போதிப்பதற்கான, அவரது ordination/ஏற்படுத்துதலாகும். ஒருவேளை அவனுக்கு நல்ல குரல் வளம் இருக்கின்றது என்றால், அதுவும் இன்னொரு நல்ல விஷயந்தான். ஒருவேளை அவனுக்கு நல்ல ஞாபகசக்தி இருக்கின்றது என்றால், அதுவும் இன்னொரு நல்ல விஷயந்தான். ஒருவேளை இவைகளுக்கு இசைவாக அவனிடத்தில் இன்னும் வேறே விஷயங்கள் இருக்குமாயின், இவைகள் அனைத்தும் அவனுக்கு உதவியாக இருக்கும். மேலும் அவனுடைய தாலந்திற்கேற்ப போதகம் பண்ண அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது சகோதரிகளின் விஷயத்தில் பார்க்கும்போது சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. ஒரு சகோதரி பொதுவில் போதிக்கக்கூடாது. ஆயினும் போதிப்பதற்கான மற்றப் பல்வேறு வழிகள் ஒரு சகோதரிக்கு உண்டு. நற்செய்தியை அறிவிப்பதற்கும், உதவிகரமாய் இருப்பதற்குமான அநேக வாய்ப்புகள் அவளுக்கு இருக்கின்றன. மேடைகளில் பிரசங்கம் பண்ணுவதற்கான வாய்ப்புடையவர்கள் மாத்திரமல்ல - நாம் அனைவருமே நம்முடைய அன்றாட ஜீவியத்தின் வாயிலாக பிரசங்கிக்க முடியும்; ஏனெனில் நாம் அவனைவரும் பிரசங்கிமார்களாய் இருக்கின்றோம் மற்றும் அனைவரும் பிரசங்கிக்கின்றார்கள் என நான் நம்புகின்றேன்.

"உங்களிடம் எத்தனை பிரசங்கிமார்கள் இருக்கின்றனர்?" என்று ஒருமுறை ஒருவர் என்னிடம் கேட்டார். நானோ: "இருபதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நம்மிடத்தில் இருக்கின்றார்கள்" என்று கூறினேன். அவாரோ: "ஆச்சரியமாயிருக்கே!" என்றார். நானோ: "சகோதரரே, நீர் தவறாய்ப் புரிந்துகொள்ள வேண்டாம். என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் பிரசங்கம் பண்ணும்படி அபிஷேகம் பண்ணப்பட்டுள்ளனர். சிலசமயம் நாங்கள் பொதுவில் பிரசங்கிப்போம் மற்றும் சிலசமயம் தனியே சந்தித்துப் பிரசங்கம் பண்ணுவோம். சிலசமயம் நாங்கள் ஒரு நபருக்கு மாத்திரமே பிரசங்கம் பண்ணுவோம். மேலும் சிலசமயம் இருநூறு பேரைக் கொண்ட சபையாருக்குப் பிரசங்கம் பண்ணுவோம். மேலும் சிலசமயம் பத்தாயிரம் பேரைக் கொண்ட சபையாருக்கும் பிரசங்கம் பண்ணுவோம்" என்றேன்.

**(Q237:1) தேர்ந்தெடுத்தல் - கர்த்தருடைய சித்தம் வெளிப்படுத்தப்படுகின்றது.**

கேள்வி (1910)-1- ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சபையார் கர்த்தருடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்றார்கள் என்று நாம் புரிந்துள்ளோம். நாங்கள் ஒரு சகோதரனை எங்களுக்கு மூப்பராக ஊழியம் புரிவதற்கெனத் தேர்ந்தெடுத்த பின்னர், நாங்கள் அவரைக்குறித்து கருதினவைகளுக்கு ஏற்ப அவர் இல்லை என்று பின்நாட்களில் கண்டுபிடிக்கும்போது, அது சபையாரின் தவறு என்றா? அல்லது கர்த்தருடைய தவறு என்றா? நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்?

பதில் - யாரிடத்தில் தவறு உள்ளது என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை. சபையார் போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என்பதே தெரிகின்றது. சபையார் யாரையாவது மூப்பராகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பாகவே அவரைக் குறித்து நன்கு அறிந்திருக்க வேண்டும். நூதன சீஷனைத் (சபையில் புதிதாகச் சேர்ந்த ஒருவரை) தேர்ந்தெடுக்கக்கூடாது என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். ஒரு நூதன சீஷனைத் தேர்ந்தெடுப்பதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை. ஒருவேளை இப்படிச் செய்திருப்பீரானால், இப்பிரச்சனைகள் உமக்கு வேண்டியதே. ஒருவேளை குறிப்பிட்ட காலம் ஒரு நூதன சீஷனை மூப்பராகப் பெற்றிருப்பதின் வாயிலாக நீர் நல்ல படிப்பினையையும் பெற்றுக்கொள்வீர். மேலும் ஒருவேளை சபையிலுள்ள நண்பர்கள் இப்படியானதொரு காரியத்தைச் செய்திருப்பார்களானால், அநேகமாக இது முடிவில் நன்மையாகக் காணப்படும் மற்றும் அவர்களும் அடுத்தமுறை மிகவும் கவனமாகக் இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் இவ்விதத்தின் மூலம் அவர்கள் படிப்பினை பெற்றுக்கொள்ளத்தக்கதாக கர்த்தர் அனுமதிக்கும் காரியமானது, கர்த்தரும் அறியாமல் செய்துவிட்டார் என்பதைக் குறிக்காமல், மாறாக தமது கட்டளையைப் பின்பற்றாமல், ஒரு நூதன சீஷனைத் தேர்ந்தெடுத்ததற்காக வருங்காரியங்களை அவர்கள் அனுபவிக்கத்தக்கதாக அவர் அனுமதித்துவிட்டார் என்பதாகவே இருக்கும். நூதன சீஷன் என்பவன் சபையின் விஷயங்களில் புதிதானவன் ஆவான். மேலும் ஒருவேளை அவன் இவ்விஷயங்களில், புதிதாய் இருப்பானானால், இதைக் குறித்து சபையார் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள். ஏனெனில் அவனுக்காக வாக்களிப்பதற்கு (vote) முன்னதாகவே அவன் எப்படிப்பட்டவன் என்பதை அவர்கள் கண்டிப்பாக அறிந்திருப்பார்கள்.

**(Q237:2) தேர்ந்தெடுத்தல் - கூட்டத்தலைவியை நியமித்தல்.**

கேள்வி (1910)-2- தேர்ந்தேடுத்தல் நடைபெறும்போது, தேர்ந்தேடுத்தலை நடத்தித்தருமாறு எவரையேனும் கூட்டத்தலைவராக வைக்க ஒரு மூப்பர் விரும்பினார் என்றால், இந்நோக்கத்திற்காக ஒரு சகோதரியை அந்த ஸ்தானத்தில் வைப்பது முறையாக இருக்குமா?

பதில் - சபையில் சில தவறான புரிந்துகொள்ளுதல் காணப்பட்டு, மேலும் அங்குச் சகோதரன் அல்லது சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் இருக்கும் ஒருநிலை காணப்பட்டாலொழிய, மற்றபடி ஒரு சகோதரியை நியமனம் செய்யமாட்டேன் என்று நான் எண்ணுகின்றேன். இப்படியான மிக விநோதமான சூழ்நிலைகள் காணப்படும் பட்சத்தில் மாத்திரமே, தேர்ந்தேடுத்தல் கூட்டத்தில் ஒரு சகோதரியைக் கூட்டத்தலைவராகச் (chairman) செயல்படக் கேட்பதற்கு நான் இணங்குவேன். இப்படிப்பட்டதான ஒரு சூழ்நிலை ஒருபோதும் வராது என்று நான் கூறமாட்டேன். ஆயினும் அது அபூர்வமாய்ச் சம்பவிக்கும் சம்பவமாகத்தான் இருக்கும் என நான் எண்ணுகின்றேன்.

**(Q238:1) தேர்ந்தெடுத்தல் - அர்ப்பணம் பண்ணினவர்களும், நீதிமான்களாக்கப்பட்டவர்களும் வாக்குகள் (vote) அளிக்கலாமா?**

கேள்வி (1910)-1- சபையில் நடக்கும் தேர்ந்தேடுத்தலில், அர்ப்பணம் பண்ணியுள்ள விசுவாசிகள் மாத்திரமே வாக்குகள் (vote) செலுத்த வேண்டும் என்று எப்போதும் புரிந்துகொள்ளப்பட வேண்டுமா அல்லது நீதிமானாக்கப்பட்ட விசுவாசிகளும்கூட வாக்குகள் (vote) செலுத்தலாமா?

பதில் - கொஞ்சம் முன்புதான் இதைக் குறித்து நாம் பேசினோம். வாக்குகள் (vote) அளிக்கப்படுவதற்கு முன்பு, அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மாத்திரமே, சபை தொடர்பான எக்கேள்விகளுக்கும் அனைத்துத் தருணங்களிலும் வாக்குகள் (vote) செலுத்த உரிமை உடையவர்களாய் இருக்கின்றனர் என்பது தெளிவாய் அறிவிக்கப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஏனெனில் மற்றவர்கள் எவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின்அங்கங்கள் அல்ல. ஒருவேளை எவ்விடத்தில் கூட்டம் நடத்தலாம் என்பது தொடர்பான சில கேள்விகளைச் சபையார் கேட்க விரும்புவது என்பது வேறுபட்ட காரியமாகும்; இவ்விஷயம் தொடர்பாகக் கேள்விக் கேட்கப்படும்போது, நீங்கள்: "கூட்டத்திற்கான இந்த இடத்தை மாற்றி, வேறொரு இடத்தில் கூட்டத்தை நடத்தலாமென நாம் எண்ணுகின்றோம். மேலும் நாம் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களிடம் மாத்திரம் இல்லாமல், அனைத்து நண்பர்களிடமும் கேட்கின்றோம்; ஏனெனில் இவ்விஷயத்தில் அனைவரும் விருப்பம் கொண்டுள்ளனர்; நேரம் மற்றும் இடம் குறித்த தங்கள் கருத்தைத் தெரிவிக்கும்படி முழு விசுவாச வீட்டாரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்" என்று கூறலாம். ஆனால் சபைக்கான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயம் அல்லது இவ்விஷயம் தொடர்பான எதுவும் அர்ப்பணம் பண்ணினவர்களுக்கு மாத்திரமே உரியதாகும்.

**(Q238:2) தேர்ந்தெடுத்தல் - தொகுதிகள் (volumes) விநியோகம் பண்ணுபவர்கள் வாக்களித்தல் (vote).**

கேள்வி (1910)-2- ஒரு நகரத்தில் குறிப்பிட்ட சில காலம் தொகுதிகள் விநியோகிப்பவர்களாகக் (colporteurs) காணப்பட்டு, அந்நகரத்திலுள்ள சபைக்குச் சென்றுகொண்டிருப்பார்களானால், அவர்கள் வாக்குகள் (vote) அளிக்கலாமா?

பதில் - ஒருவேளை அவருக்கு அச்சபையாரின் சூழ்நிலைகள் குறித்தெல்லாம் எவ்விதமான விஷயமும் தெரியாமல் இருக்கும் பட்சத்தில் அவர் அவர்களை நோக்கி: சகோதரரே, என்னுடைய வாக்கை (vote) நான் அளிக்கத்தக்கதாக இங்குள்ள எவரையும் பற்றி எனக்குப் போதுமான அளவு தெரியாது. ஆகவே வாக்கு (vote) அளிக்க நான் மறுக்கின்றேன் என்று கூறுவாரானால், அவர் ஞானமாய் நடந்துகொண்டவராய் இருப்பாரென நான் எண்ணுகின்றேன். ஆனால் ஒருவேளை அவர் அவ்விடத்தில் சில நாட்கள் அல்லது சில வாரங்கள் தங்கியிருந்தாரானால், மேலும் சில வாரங்கள் அல்லது மாதங்கள் அவ்விடத்தில் தங்கும் வாய்ப்பு அவருக்கு இருக்கும் பட்சத்தில், மற்றவர்களைப் போன்று அவருக்கும் அங்கு வாக்கு (vote) செலுத்த உரிமையுண்டு என்று நான் எண்ணுகின்றேன். அவர் தொகுதிகள் விநியோகிப்பவராய் இருப்பதினால் அவர் தடைப்பண்ணப்படக்கூடாது. மாறாக அவருக்கும் நன்மை உண்டாகத்தக்கதாக, அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படலாம். அவர் தனது ஜீவியத்தை தத்தம் பண்ணினதின் மூலம், தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்டுபவராக இருக்கின்றார்.

**(Q238:3) தேர்ந்தெடுத்தல் - சபையைச் சந்திக்க வரும் சகோதர சகோதரிகள் வாக்கு (vote) அளித்தல்.**

கேள்வி (1910)-3- வாக்காளருக்கான தகுதி தொடர்பான விஷயத்தில், அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களே வாக்களிக்க (vote) வேண்டுமென்று நீங்கள் கூறினீர்கள். சபையைச் சந்திக்க வருபவர்கள் குறித்து என்ன சொல்லுகின்றீர்கள்? அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் வந்து கொண்டிருப்பதோ அல்லது அவர்கள் அங்கேயே தொடர்ந்து வரும்படியான தங்களுடைய நோக்கத்தை தெரியப்படுத்துவதோ - அவர்கள் வாக்கு (vote) அளிப்பதற்கு அவர்களைத் தகுதியுள்ளவர்கள் ஆக்குமா?

பதில் - வாக்குகள் (vote) செலுத்தும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படும்போது, "இன்று இங்குக் கூடியிருக்கும் தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்கள் அனைவரும் - இச்சபையில் கூடி வருவதற்கான விருப்பம் கொண்டுள்ளவர்கள், வாக்குகள் (vote) செலுத்தும்படிக்கு ஆவலுடன் அழைக்கப்படுகின்றார்கள் மற்றும் இச்சபையில் தொடர்ந்து கூடுவதற்கு வர வேண்டும் என்ற எண்ணம் இல்லாதவர்கள், வாக்குகள் (vote) செலுத்த வேண்டாம் மற்றும்

முழுமையாக அர்ப்பணம் பண்ணாத எவரும் வாக்குகள் (vote) செலுத்த வேண்டாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இதுவே இக்காரியம் தொடர்பான கர்த்தருடைய சித்தமாக இருக்கின்றது" என்று கூறுவது சரியாயிருக்கும் என்பது நமது எண்ணமாக இருக்கின்றது. வாக்கு என்பது ஓர்/ஒவ்வொரு இடத்தில் காணப்படும் சபையாரால் வெளிப்படுத்தப்படும் தேவசித்தமாக இருக்கின்றது. மேலும் அந்தந்த இடங்களில் அர்ப்பணம் பண்ணினவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்களோ, அவர்களே சபையாராய் இருக்கின்றனர். என்னுடைய கணிப்பின்படி, அப்பட்டணத்தில் வாழும்படிக்குப் புதிதாய் வந்துள்ள ஒரு சகோதரன் அல்லது சகோதரியின் விஷயம் எவ்விதமான வித்தியாசத்தையும் காட்டுவதில்லை. ஏனெனில் நாம் ஜேம்ஸ் டவுனில் அல்லது புரூக்ளின் அல்லது பிட்ஸ்பர்க் அல்லது நியூ ஓர்லியன் அல்லது வேறு ஏதாகிலும் இடத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் சரி, நாம் அனைவரும் கிறிஸ்துவில் ஒன்றாய் இருக்கின்றோம்.

### (Q239:1) தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களின் நடவடிக்கைகள் அங்கீகரிக்கப்படாத பட்சத்தில்.

கேள்வி (1910)-1- மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சகோதரனிடத்தில் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதெனில், அவருடைய மூப்பருக்கான பணிக்காலம் நிறைவடையும்போது, மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அவர் மறுப்புத் தெரிவிப்பது என்பது ஞானமான முறையாக இருக்குமா என்று அறிய விரும்புகின்றேன்?

பதில் - ஒருவேளை நான் இப்படிப்பட்டதான சூழ்நிலையில் காணப்பட்டால், நான் இவ்வாறாகவே நடந்துகொள்வேன் என்று நம்புகின்றேன். சபையிலுள்ள வேறொரு சகோதரனை என் மனதில் நான் கொண்டு, அவரை முன்மொழிவேன் (nominate). ஆனால் ஒருவேளை நான் முன்மொழியப்பட்டால், நான் பின்வருமாறு : "சகோதர சகோதரிகளே, என்னால் முடிந்தமட்டும் உங்களுக்கு ஊழியம் புரிந்துள்ளேன் மற்றும் உங்களைத் திருப்திப்படுத்துவதில் குறைவுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன். ஆனாலும் என்னால் முடிந்ததை உங்களுக்குச் செய்தேன் என்பதை நீங்கள் அறிய வேண்டும் என்று விரும்புகின்றேன். எனினும் நான் உங்களை திருப்திப்படுத்தவில்லை என்று அறிவேன். ஏனெனில் நான் திருப்தியாய் நடந்துகொள்ளவில்லை என்பதை உங்களில் அநேகர் என்னிடம் தெரிவித்தீர்கள். மேலும் என்னால் முடிந்தமட்டும் சீர்த்திருத்திக்கொள்ள முயற்சித்தேன். ஆனாலும் போதுமானளவு நான் முன்னேற்றம் அடையவில்லை. இதனால் உங்களில் சிலர் என்னிடத்தில் இன்னமும் குற்றத்தைக் கண்டீர்கள். நான் உங்களைக்குறித்து இப்பொழுது குற்றம் சாட்ட வரவில்லை - குற்றம் என்னிடத்தில் இருக்கின்றது என ஏற்றுக்கொள்கின்றேன். இன்னின்னப்படி இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறபடியெல்லாம் என்னால் இருக்க முடியவில்லை மற்றும் நான் உங்களுக்கு எப்படி ஊழியம் புரிய விரும்புகின்றேனோ அப்படி என்னால் ஊழியம் புரியமுடியவில்லை. ஆகவே என்னுடைய ஆலோசனையை ஏற்றுக்கொள்வது உங்களுக்கு நலமாய் இருக்குமென நான் எண்ணுகின்றேன். நான் இன்னின்ன சகோதரரை முன்மொழிந்துள்ளேன். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு - மூன்று மாதங்கள் அல்லது ஆறு மாதங்கள் அல்லது உங்கள் விருப்பத்திற்கேற்ப இச்சகோதரனை நீங்கள் தேர்ந்தெடுக்க உங்களுக்கு ஆலோசனை கூறுகின்றேன் - அநேகமாக இவர் நம் அனைவரையும் நன்கு திருப்திப்படுத்தலாம். நான் இவருக்கு உதவி செய்ய முயற்சிப்பேன் என்றும், இவருடைய கரங்களைத் தாங்கிபிடிப்பதற்கு என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன் என்றும் நான் வாக்களிக்கின்றேன்" என்று கூறிடுவேன். மேலும் மற்றச் சகோதரன் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாக நான் உண்மையாய் முயலுவேன். ஆனால் இப்படியெல்லாம் கூறின பிற்பாடும் சபையார் என்னிடம் -"இல்லை. உம்மிடத்தில் நாங்கள் குறைவுகள் கண்டுபிடித்திருந்தாலும்கூட உம்மைதான் நாங்கள் தேர்ந்தெடுக்கப்போகின்றோம்" என்று கூறுவார்களேயானால், நான் அவர்களிடம் பின்வருமாறு : "ஒருவேளை கடந்த காலத்தில் நான் செய்தவைகளைக் காட்டிலும் அடுத்தமுறை என்னால் செய்யமுடியாமல்கூட இருக்கலாம். அதற்கான பொறுப்பு உங்களிடத்திலேயே உள்ளது. காரணம் என்னால் முடிந்தவைகளையே நான் இப்பொழுது செய்து கொண்டிருக்கின்றேன் என்று நான் உங்களிடத்தில் தெரிவிக்கின்றேன். ஆகையால் ஒருவேளை நான் உங்கள் அனைவரையும் திருப்திப்படுத்தாமல் காணப்படும்போது, என்னைக் குறித்து மனஸ்தாபத்திற்குள்ளாகாதீர்கள்" என்று கூறுவேன். இவைகளை நான் சபையாரிடம் உறுதியாகப் பேசிவிடுவேன். இதனால் அவர்கள் என்னைக்குறித்த முடிவிற்கு வரமுடியும். ஆனால் ஒருவேளை அவர்களில் பெரும்பான்மையானவர்கள் (majority) உதாரணத்திற்கு, தொன்னூறு சதவிகிதம் அல்லது

சபையாரின் ஓரளவு எண்ணிக்கையானவர்கள் என்னைத் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்; நான் அதைக் கர்த்தருடைய சத்தமாகக் கருதி, இப்பொழுது நான் மறுப்புத் தெரிவிக்கமாட்டேன் என்று கூறுவேன். எந்தவிதத்திலும் உணர்வுகளைப் புண்படுத்தும் விதத்தில் நான் நிச்சயமாய் மறுப்புத் தெரிவிக்கவுமாட்டேன் மற்றும் நான்: "இல்லை. நீங்கள் என்னிடத்தில் குற்றம் கண்டுபிடித்தீர்கள், ஆகையால் இப்பொழுது மூப்பர் ஊழியத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்" என்று கூறவுமாட்டேன். இப்படிக் கூறுவது தவறாயிருக்கும். இப்படிப்பட்டதான ஆவி நம்மிடத்தில் இருக்க வேண்டாம். இச்சூழ்நிலையில் காணப்படும் சகோதரன் குற்றஞ்சாட்டுவதற்குச் சில காரணங்கள் இருக்கின்றது என நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வப்போது ஏதாகிலும் விதத்தில் குற்றம் காணப்படாமல் இருப்பதற்கு நம்மில் எவரும் பூரணர்கள் இல்லை. மேலும் ஒருவேளை சகோதரர்கள் குற்றம் கண்டுபிடிப்பார்களானால், நாம் அதைச் சகிப்போமாக மற்றும் அதன் மூலம் நன்மை பெற்றுக்கொள்ள முயற்சிப்போம். மேலும் அவ்விஷயத்தில் தாழ்மையாயிருப்போம். ஒருவேளை இது நாம் இறுமாப்பு அடையாதபடிக்கும், வீழ்ச்சிக்குள்ளாகப் போகாதபடிக்கும் நம்மைக் காத்துக்கொள்ளும்.

**(Q239:2) தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்.**

கேள்வி (1910)-2- மூப்பர்களுடைய தேர்ந்தெடுத்தலின்போது, அச்சபையாரில் ஒருவர் முன்மொழிவதற்குப் பதிலாக, தற்போது மூப்பராகக் காணப்படும் ஒருவர், முன்மொழிவது சரியாக இருக்குமென்று நீங்கள் எண்ணுகின்றீர்களா?

பதில் - தேர்ந்தெடுக்கப்பட்ட மூப்பருக்கான காலப்பகுதி முடிவடைந்த பிற்பாடு, அவர் மூப்பர் அல்ல என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே அவரும் சபையாரிலுள்ள மற்றவர்களைப் போன்றவராகவே காணப்படுகின்றார். மேலும் மற்றவர்களைப் போன்று அவரும் முன்மொழியலாம். ஏனெனில் அவரும் மற்றவர்களைப் போன்றவரே ஆவர். அவருக்கான காலம் முடிந்த பிறகு அவர் மூப்பர் இல்லை. மேலும் தேர்ந்தெடுத்தலின்போது வேறொருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருக்க வாய்ப்பு இருக்கும் பட்சத்தில், முன்பு மூப்பராய் இருந்த ஒருவர் கூட்டத்தலைவராய்ச் செயல்பட்டு, தேர்ந்தெடுத்தலை நடத்துவது என்ற காரியம் மிகவும் ஞானமற்றது என நான் எண்ணுவதை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்.

அறிவு கூர்மைமிக்க ஒரு சகோதரனை - நேர்மையுடனும், நியாயத்துடனும் நடந்துகொள்ளும் ஒரு சகோதரனை - மூப்பருக்கான தகுதியில்லாதவர் அல்லது தகுதியுடையவராகக் கருதப்படாத ஒரு சகோதரனை - கூடுமானமட்டும் கூட்டத்தலைவராக (chairman) செயல்படும்படிக்குக் கேட்டுக்கொள்வது எப்போதும் விரும்புவதற்கு ஏதுவாய்க் காணப்படும். இவ்விதமாய்ச் செய்யப்படும்போது, கூட்டத்தலைவராக இருந்ததின் மூலம் ஒருவர் தனக்கு ஆதரவு சேர்த்துக்கொண்டார் என்று எழும்ப வாய்ப்புள்ள குற்றச்சாட்டிலிருந்து (மூப்பர் தகுதியுள்ள) ஒருவர் தப்பித்துக்கொள்ளலாம்; மற்றும் சபையாரும்கூட முன்மொழியப்பட்டவராகவும், கூட்டத்தலைவராகவும் தங்களுக்கு முன்பு நின்றுகொண்டிருக்கும் ஒருவருக்கு, தங்களுடைய வாக்குகளைச் செலுத்தாத சூழ்நிலையிலிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம் மற்றும் அச்சகோதரனும்கூடச் சபையார் முன் நின்று, முன்மொழியப்பட்டிருக்கும் தனக்கு வாக்களிக்கும்படிக்குக் கேட்க வேண்டிய தர்மச்சங்கடமான நிலைமையினின்றும் தப்பித்துக்கொள்ளலாம்; மற்றும் ஒருவேளை அவர் தேர்ந்தெடுக்கப்படாமல், பெரும்பான்மையானவர்கள் தனக்கு எதிராக காணப்படுவதைப் பார்க்க வேண்டிய தர்மச்சங்கடமான நிலைமையினின்றும் தப்பித்துக்கொள்ளலாம். எப்போதும் சாத்தியமாய் இராவிட்டாலும், ஒருவேளை சாத்தியமாய் இருக்கும்பட்சத்தில் மூப்பராக முன்மொழியப்படுவதற்கான வாய்ப்புள்ள ஒருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருப்பதைப் பார்க்கிலும், வேறொருவரைக் கூட்டத்தலைவராகப் பெற்றிருப்பது விரும்பப்படுவதற்கு ஏதுவாகக் காணப்படும் என்று நான் எண்ணுகின்றேன்.

**(Q240:1) தேர்ந்தெடுத்தல் - சீட்டு மூலம் வாக்களித்தல்.**

கேள்வி (1910)-1- முன்மொழிதல் (nomination) எதுவும் பண்ணாமலேயே சீட்டு மூலம் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதும் மற்றும் இதில் பெரும்பான்மையான வாக்குகளை

உடையவர்களைத் தேர்ந்தெடுப்பதும் மிகவும் இணக்கமான நிலைக்கு வழிநடத்துவதாய் இருக்குமா?

பதில் - நம்முடைய கருத்து அநேகமாகக் கொஞ்சம் குழப்பமாய்க் காணப்படலாம். இரண்டுவிதத்தில் ஏதாகிலும் ஒன்றிற்கு ஆதரவாக என்னால் கூறமுடியும். ஆனாலும் சீட்டு மூலம் வாக்கு (vote) அளிக்கும் முறையைக் கர்த்தர் ஏற்படுத்தவில்லை என்பதே என் மனதில் உள்ளது. கைகளை மேலே உயர்த்துவதின் மூலமே வாக்குகள் (vote) அளிக்கப்படும்படிக்குக் கர்த்தர் ஏற்பாடு பண்ணியுள்ளார். சீட்டுகள் மூலம் வாக்குகள் அளிப்பது, அதாவது ஒன்றும் கூறாமலும், நீங்கள் வாக்குகள் அளித்தவிதம் குறித்து எவருக்கும் தெரியாமலும் இருப்பது என்பது எளிமையாக இருக்கும் என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். ஆனாலும் கர்த்தர் சுட்டிக்காட்டியுள்ள வழியை விட்டுவிடுவது ஞானமான காரியமாக இருக்குமா? ஒருவேளை ஓர் இடத்திலிருக்கும் சபை அங்கங்கள் சீட்டு மூலம் வாக்குகள் (vote) செலுத்த முடிவெடுத்திருந்தால், அவர்கள் விஷயத்தில் தலையிடுவது எனக்கடுத்தக் காரியமல்ல. ஒருவேளை நான் அவர்களுக்கு ஆலோசனை கொடுத்த பிற்பாடும்கூட அவர்கள் ஆலோசனையை ஏற்க மறுத்தால், அவர்கள் விஷயத்தில் தலையிடுவது இன்னமும் எனக்கடுத்தக் காரியமல்ல. மீதி பதினொரு jurors/ஜூரி உறுப்பினர்களும் மிகவும் பிடிவாதக்காரர்கள் என்று நினைக்கும் முறைக்காண் juryman/ஜூரி உறுப்பினன் போல இருக்க நான் விரும்பவில்லை. நாம் நினைப்பது போன்று மற்றவர்கள் நினைக்கவில்லை என்ற காரணத்திற்காக, மற்றவர்கள் அனைவரும் பிடிவாதக்காரர்கள் என்று நாம் எண்ணக்கூடாது; ஆகவே எல்லாவற்றையும் விளக்கின பிற்பாடு, காரியத்தைச் சபையார் பகுத்தறிவதற்கும் மற்றும் சபையார் வாக்களிப்பதற்கும் (vote) விட்டுவிடுவோமாக மற்றும் முடிவைக் கர்த்தரிடத்தில் விட்டுவிடுவோம். ஒருவேளை தாங்கள் தவறு செய்துள்ளதை அவர்கள் கண்டு கொண்டால், அதை அடுத்தமுறை நினைவுகூர்ந்து, ஜாக்கிரதையாய் இருப்பார்கள் மற்றும் பாடம் ஒன்றைக் கற்றுக்கொண்டவர்களாக இருப்பார்கள். ஒருவேளை நாம் ஞானமாகச் செய்தால், நாம் ஒரு படிப்பினையைக் கற்றுக்கொள்வோம். சகோதர சகோதரிகளே, வேதவாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கு ஆதரவாகவே என்னுடைய செல்வாக்கை நான் எப்பொழுதும் பயன்படுத்துவேன். மேலும் இம்முறையானது, சபையார் சரியான தைரியம் கொண்டிருக்க வேண்டுமென்பதைப் போதிக்கின்றது என்ற இதன் நன்மையும் எடுத்துரைக்கப்பட வேண்டும். ஒரு நபர் ஊழியத்திற்குப் பொருத்தமற்றவராய் இருந்தும்கூட, அவர் எனக்கு உறவினராக இருப்பதினால், அவருக்கு என் கரங்களை உயர்த்துவேனா? இல்லை, என்னுடைய தேவனுக்கு நான் உண்மையாய் இருக்க வேண்டும்.

**(Q240:2) தேர்ந்தெடுத்தல் - முன்மொழியப்பட்டவரைக் குறித்துக் கருத்துப்பரிமாறுதல் (discuss).**

கேள்வி (1910)-2- ஒரு சகோதரன் மூப்பராக முன்மொழியப்பட்டிருக்கும்போது, தேர்ந்தெடுத்தலுக்கு முன் அச்சகோதரனைக் குறித்து எவ்வளுக்குக் கருத்துப்பரிமாறப்படலாம்? எதுவரை வரம்பு உள்ளது?

பதில் - சபையில் ஊழியம் புரிபவர்களுக்கான தேர்ந்தெடுத்தலுக்காய் முன்மொழியப்பட்டிருப்பவர்களைக் குறித்து அதிகமாய்க் கருத்துப்பரிமாறுவது சரியென்பது என்னால் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். நாம் ஒருவேளை ஒருவரையொருவர் கடித்துப் பட்சிப்போமானால், ஒருவரால் ஒருவர் அழிக்கப்படுவோமென்று அப்போஸ்தலர் கொடுக்கும் எச்சரிப்பை நீங்கள் நினைவுகூரலாம். நீங்கள் என் சகோதரனுக்கு எதிராக, அவர் தலையைச் சீவுகிற விதத்தில் அல்லது அவர் அணியும் வஸ்திரங்களின் நிறத்தில் மற்றும் அவர் குடும்பத்தில் அவருக்கு எத்தனை குழந்தைகள் இருக்கின்றார்கள் மற்றும் இது மற்றும் அது என்று குற்றங்கண்டுபிடிக்க தொடங்கினால், ஆராய்வதற்கு/கருத்துப்பரிமாறிடுவதற்கு உங்களுக்கு அநேக காரியங்கள் இருக்கும். மேலும் நீங்கள் அவரைக்குறித்து முற்றும் முழுமையாய் கருத்துப்பரிமாறி முடியும்போது, அவர் அடுத்து, உங்களைக் குறித்து கருத்துப்பரிமாற ஆரம்பிப்பார். சபையார் அனைவரும் இப்படியான அனுபவம் பெற்றிருக்கக்கூடும்; இதனால் நன்மை உண்டாகுவதில்லை. என்னுடைய கருத்துப் பின்வருமாறு: சகோதரருடைய குணநலன்களைக் குறித்து அதிகம் கருத்துப்பரிமாறிடுவதற்கான அவசியமில்லை. ஏனெனில், சபைக்கு ஏதோ விதமான ஊழியம் புரிவதற்கென ஒரு சகோதரனுக்கு வாக்களிக்கும் (vote)

--3016--

ஒவ்வொருவரும், அவரைப் பற்றிக் கொஞ்சமாகிலும் அறிந்திருக்க வேண்டுமென்பதே ஆலோசனையாக வழங்கப்படுகின்றது. மேலும் ஒருவேளை தனிப்பட்ட பழக்கத்தின் வாயிலாக ஒருவருக்கு அவரைப்பற்றித் தெரியவில்லையென்றால், மற்றொரு சகோதரனுடைய கணிப்பை வழிக்காட்டியாகத் தனக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு, நான் சமீபத்தில் ஓர் இடத்திலுள்ள சபையாருடன் சேர்ந்துள்ளேன் மற்றும் அவர்களது எண்ணிக்கைப் பன்னிரண்டு என்று வைத்துக்கொள்ளுங்கள். மேலும் அச்சபையிலுள்ள நண்பர்களுடன் கொஞ்சம் பழக்கமே எனக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் அவர்களில் எவருடைய குறைவுகளும் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் அனைவருடைய நற்குணங்கள் சிலவற்றை நான் அறிவேன். ஒருவேளை தேர்ந்தெடுத்தலுக்கான(election) வேளை வந்துவிட்டது என்று வைத்துக்கொள்ளுங்கள்; நான் ஒன்று அல்லது இரண்டு சகோதரர்கள் மிகவும் தெளிவுள்ளவர்களாகவும், மிகவும் ஒளிவுமறைவு அற்றவர்களாகவும் இருப்பதைக் கவனித்து வந்திருக்கிறேன்; மேலும் அவர்கள் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கையும் காணப்படுகின்றது. ஒருவேளை இந்தச் சகோதரன் இன்னொரு சகோதரனை முன்மொழிந்தால், மேலும் முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்குப் பழக்கமும் இல்லை மற்றும் முன்மொழியப்பட்டவருக்கு எதிரான எந்தக் குறைவும் எனக்குத் தெரியாமலும் இருக்கும்போது, முன்மொழியப்பட்டவருக்கு நான் வாக்குகள் (vote) செலுத்துவதில் தவறில்லை என்று எண்ணுகின்றேன்; ஏனெனில் இவரை முன்மொழிந்த சகோதரன் இவருடைய நற்பண்பைப்பற்றி ஏதோ அறிந்தவராக இருக்கின்றார். ஒருவேளை இவரை முன்மொழிந்தச் சகோதரனோடு எனக்குப் பழக்கமிருக்குமாயின், முன்மொழியப்பட்ட சகோதரனோடு எனக்கும் மறைமுகமான/நேரடியற்ற பழக்கமுள்ளது. நான் சொல்வது புரிந்திருக்குமென்று நம்புகின்றேன். ஆகவே எவருடைய குணநலன்கள் குறித்து விசேஷமாகக் கருத்துப்பரிமாறப்படாமலேயே, வாக்குகள் (vote) செலுத்தப்படுவதற்கு முன்பு ஒருவரால் பின்வருபவைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும் - அதாவது வாக்குகள் அளிக்கும் உரிமையைச் செயல்படுத்தப் போகிறவர் ஒவ்வொருவரும் முதலாவதாகக் கர்த்தருடைய விசுவாசியாக இருந்து, பாவத்திலிருந்து திரும்பித் தன்னை முழுமையாக அர்ப்பணம் பண்ணினவனாக இருக்க வேண்டுமென்பதும், அச்சபையாரின் அங்கங்கள் மாத்திரமே வாக்குகள் செலுத்த வேண்டுமென்பதும் மற்றும் வாக்குகள் செலுத்துபவர்கள் தாங்கள் எவ்விதமாய் வாக்குகள் செலுத்த கர்த்தர் விரும்புவார் என்று நம்புகின்றார்களோ அவ்விதத்திலேயே அல்லாமல் வேறுவிதத்தில் செலுத்தக்கூடாது என்பதும் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

இவைகள் போதுமானதென்று நான் நம்புகின்றேன். மேலும் சபையார் ஒரு சகோதரன் குறித்து ஒன்றையும் அறியாமல் அவருக்கு நிர்விசாரமாய் வாக்குகள் செலுத்திவிடாமல், மாறாக தங்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாய் இருக்கும் ஒருவருடைய கணிப்பு அல்லது ஆலோசனையின்படி வழிநடத்தப்படுவதற்கு நாடத்தக்கதாக, மேற்கூறிய காரியங்களானது அவர்கள் மீது போதுமான பொறுப்பை ஏற்படுத்தும் என்றும் நான் நம்புகின்றேன். ஒருவேளை தவறு செய்யப்பட்டால், ஒருவேளை தவறான நபர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் என்ன சொல்வது? தவறான காரியம் நடந்துவிட்டது என்ற முடிவிற்கு நான் வருவேன். யாரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் எனும் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற படிப்பினையை அச்சபையார் கற்றுக்கொள்ளப் போகின்றார்கள் என்று எண்ணுவதே சரியான விஷயமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். ஆகவே ஒருவேளை தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் அவர்கள் கண்மூடித்தனமாகச் செயல்பட்டிருந்திருப்பார்களானால், இதனால் அவர்களுக்கு நல்லதொரு பாடம் உண்டாகும். அடுத்தமுறை தேர்ந்தெடுத்தல் வரும்போது, அநேகமாக அவர்கள் மிகவும் கவனமாய் இருப்பதற்குக் கற்றுக்கொள்வார்கள். அநேகமாக இச்சபையின் அங்கங்கள் மிகவும் கவனமாய் இருக்கத்தக்கதாக அவர்கள் இவ்விதத்திலேயே கற்றுக்கொள்ள வேண்டுமென்பது கர்த்தருடைய சித்தமாகக் கூட இருக்கலாம். எந்தச் சூழ்நிலையிலும் சரி, கர்த்தருடைய ஜனங்களில் யாரையேனும் நார்நாராகக் கிழித்துப்போடப்படக்கூடியதான எத்தகைய காரியத்திற்கும் எதிராக என்னுடைய முழுச்செல்வாக்கை எந்தச் சபையிலும் செலுத்துவேன். சகோதர சகோதரிகளுக்கு உண்மையில் குறைச்சல் உண்டாக்கும் காரியங்கள் பேசப்பட வாய்ப்புள்ள சில சம்பவங்களையும் நான் அறிவேன்; இக்குறைகள் அவர்களுடைய கடந்தகால ஜீவியத்தில் காணப்பட்டது அநேகமாக உண்மைதான்; மேலும் இவைகளை உணர்ந்த மாத்திரத்தில் அவர்கள் தங்களை முற்றிலும் மாற்றிக்கொண்டார்கள். இவ்விஷயத்திலும் சரி, வேறு விஷயத்திலும் சரி என்னுடைய கருத்து ஒன்றுதான். மேலும் கர்த்தருடைய ஆடுகளுக்கு எதிரான இத்தகைய அடிகளுக்கும், பீறிப்போடுதலுக்கும் எதிராக என்னுடைய செல்வாக்கை நான் செலுத்துவேன். இக்காரியங்கள் ஆடுகளில் ஓநாயின் ஆவியை விதைத்து, விருத்தியாக்கும் என நான் எண்ணுகின்றேன். --3017--

ஆகவே இவைகள் தடுக்கப்பட வேண்டும். ஒருவேளை சபையார் மத்தியில் முக்கியமானவராகக் காணப்படும் ஒரு சகோதரனிடம் இந்த முன்மொழிதல் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று மற்றவர்களால் கேட்கப்பட்டால் அல்லது அவர் ஏதோ விதத்தில் அதனை குறிப்பிட வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தாரானால், அவர் பின்வருமாறு: "என் அன்பு சகோதரரே, நீங்கள் கேட்ட முன்மொழிதல் குறித்து சில ஆலோசனைகளைக் கொடுக்க நான் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளேன். இதைக்குறித்து நான் சொல்ல விரும்புவது என்னவெனில், நான் இப்படியாக, அப்படியாக வாக்கு செலுத்த வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கின்றது என நான் எண்ணுகின்றேன்" என்று கூறுவது சரியாக இருக்கும். மேலும் இவ்வார்த்தைகள் இவருடைய செல்வாக்குச் செலுத்தப்படும் சகோதரர்களுக்கு ஓரளவுக்கு உதவியாக இருக்கும். மேலும் ஒருவேளை இவருக்குச் செல்வாக்கு இல்லையெனில், இவ்வார்த்தைகள் உதவியாய் இராது.

**(Q242:1) தேர்ந்தெடுத்தல் - வாக்களிக்காதவர்கள் குறித்துப் பதிவு செய்தல்.**

கேள்வி (1910)-1- வாக்களிக்க (vote) தவறுகிறவர்கள் குறித்து ஏதேனும் பதிவுகள் நாம் பதித்து வைத்திருக்க வேண்டுமா?

பதில் - வாக்குகள் (vote) அளிக்கப்படுவதற்கு முன்னதாகவே, கூடியிருக்கும் ஒவ்வொரு சகோதரனும், சகோதரியும் தங்களுக்குப் பொறுப்பு இருக்கின்றது என்று உணரத்தக்கதாக அவர்களைத் தெளிவுப்படுத்துவது என்னுடைய வழக்கமாகும்; அதென்னவெனில்: முன்மொழியப்பட்டிருப்பவருக்கு (candidate) எதிராக அல்லது ஆதரவாக வாக்கு(vote) விஷயத்தில் செயல்படுவதற்குரிய பொறுப்புத் தங்களுக்கு இருக்கின்றது என்று அவர்கள் உணர வேண்டும்; மேலும் வாக்குகள் (vote) செலுத்தத்தக்கதாக ஒருவருக்கு போதுமான அறிவு இருக்கிறதென்றால் அல்லது அவர் அர்ப்பணம் பண்ணினவராக இருந்து அச்சபையாரோடு தொடர்ந்து கூடுகைகளில் கலந்துகொள்ள நோக்கம் கொண்டிருந்தால், அவர் வாக்குச் (vote) செலுத்துவதற்கான பொறுப்பை உடையவராய் இருக்கின்றார் என்று உணர வேண்டும்; மேலும் அவர் வாக்குச் செலுத்துவாரா அல்லது இல்லையா என்பது விருப்பத்திற்கு விடப்பட்ட காரியமாக இல்லாமல், மாறாக வாக்குச் செலுத்துவது அவருக்குரிய கடமையாகும் என்று உணர வேண்டும். இக்காரியங்கள் வாக்குகள் (vote) செலுத்தப்படுவதற்கு முன்னதாகவே வலியுறுத்தப்பட்டால், அனைத்து அன்புக்குரிய நண்பர்களும் பொறுப்பை உணர்ந்துகொள்ள முடியும். வெகுசிலரே பின்வாங்குவதற்கு முயற்சிப்பார்கள். இது முன்னதாகவே மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

**(Q242:2) தேர்ந்தெடுத்தல் - ஏழு பேரைத் தேர்ந்தெடுக்கும் அப்போஸ்தலர்களின் வழக்கத்தைப் பின்பற்றுதல்.**

கேள்வி (1911)-2- சபைக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் நாம் அப்போஸ்தலர்களின் மாதிரியைப் பின்பற்றி ஏழு பேரை நியமிக்கலாமா? ஒருவேளை கூடாது என்றால் ஏன் செய்யக்கூடாது?

பதில் - ஏழு பேரை நியமிக்கும் அப்போஸ்தலரின் எந்த மாதிரியையும் நான் அறியேன். ஒருவேளை அப்படிப்பட்டதான ஏதாகிலும் மாதிரி இருக்குமாயின் அதைக்குறித்த அனைத்தையும் கண்டுபிடிக்கும் விஷயத்தில் மிகவும் மகிழ்ச்சிக்கொள்பவர்கள் மத்தியில் நானும் ஒருவராய் இருப்பேன். ஏழு உதவிக்காரர்களை அப்போஸ்தலர் நியமித்ததைக் குறித்து எனக்கு ஞாபகமுள்ளது. ஏழு மூப்பர்கள் தொடர்பாக நான் ஒருபோதும் கேட்டதில்லை. இது எனக்குப் புதிதாக இருக்கின்றது. ஒருவேளை நாம் உதவிக்காரர்களைக் குறித்துச் சிந்திக்கும்போது அதுவும் ஒவ்வாது. ஏனெனில் சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப அவர்கள் அன்று அவ்வளவு உதவிகாரர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரு சபையின் எண்ணிக்கை ஆறு என்று வைத்துக்கொள்ளுங்கள், அவர்களால் எப்படி ஏழு மூப்பர்களையும், ஏழு உதவிக்காரர்களையும் நியமிக்கமுடியும்? சபையார் இரண்டு அல்லது மூன்று பேரையுடைய சிறு கூட்டமாக இருப்பார்கள் என்று கர்த்தர் கூறுகின்றார் - "எங்கே என் நாமத்தினிமித்தம் இரண்டு அல்லது மூன்று பேர் கூடுகின்றார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருப்பேன்." இவ்விஷயம் குறித்ததான

நமது கருத்துக்கள் வேதாகமப் பாடங்களின் ஆறாம் தொகுதியில் மிகவும் குறிப்பாக முன்வைக்கப்படுவதை நீங்கள் பார்க்கலாம்.

**(Q242:3) தேர்ந்தெடுத்தல் - தகுதியுடையவர், ஆனால் ஞானஸ்நானம் பெறாதவர்.**

கேள்வி (1911)-3- ஒருவேளை மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ஒரு சகோதரன் புதிய ஏற்பாட்டின் காரியங்களுக்கு இசைவாக தகுதியுடன் காணப்பட்டபோதிலும், அவர் எவர் மூலமாகவும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவில்லையெனில், இப்படிப்பட்ட சகோதரன் மூப்பராக நியமிக்கப்படாமல் இருப்பதற்கு இதுவே போதுமான காரணமாக இருக்கும் என்பது உங்கள் கணிப்பாக இருக்குமா?

பதில் - அப்படிதான் இருக்கும். நம்முடைய பேப்டிஸ்ட் சபைபிரிவு (Baptist) நண்பர்கள் நினைக்கும் அதே கண்ணோட்டத்தில் நாம் தண்ணீர் ஞானஸ்நானம் முக்கியமானது என்று எண்ணுவதில்லை - அதனை ஓர் அடையாளமாகத் தவிர மற்றபடி நாம் எதுவும் எண்ணுவதில்லை. ஆனால் ஞானஸ்நானமாகிய மிக எளிமையான ஓர் அடையாளத்தை இதுவரையிலும் பார்க்க/உணர்ந்துகொள்ள முடியாத சகோதரன் இவ்விஷயத்தில் குருடனாகவே இருக்க வேண்டும். ஒருவேளை அவர் ஒரு விஷயத்தில் குருடனாக இருப்பாரானால், வேறு எத்தனை விஷயங்களில் அவர் குருடராக இருக்கக்கூடும்? இவரை மற்றவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு, அதாவது ஒருவேளை இவரைக்காட்டிலும் அதிகமாக ஏற்கெனவே கண்டிருக்கும் ஒருவருக்குப் போதிப்பதற்கு அனுமதிப்பதற்கு முன்பு - அவர் ஞானஸ்நானம் காரியத்தைப் பார்க்க ஆரம்பிப்பது வரையிலும் நான் காத்திருப்பேன். சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் தண்ணீர் ஞானஸ்நானத்தை ஆக்கவில்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள். ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாத ஒரு சகோதரன், நாம் புரிந்துகொண்டவரைக் கர்த்தருடைய பந்தியில் வரவேற்கபட வேண்டும் அல்லது எல்லாவிதத்திலும் கர்த்தருக்குள் சகோதரனாக வரவேற்கப்பட வேண்டும். ஆனால் ஒருவரைக் கர்த்தருடைய சகோதரனாகவும், சரீரத்தினுடைய அங்கமாகவும் எல்லாவிதத்திலும் அடையாளம் கண்டுகொள்வது என்பது ஒரு காரியமாகவும் மற்றும் அவர் போதிப்பதற்கான தகுதியுடையவர் என்று அடையாளம் கண்டுகொள்வது என்பது வேறு காரியமாகவும் உள்ளது. என்னைப் பொறுத்த வரையில் புதிய ஏற்பாட்டின் மிகவும் எளிமையான விஷயத்தை - கர்த்தரும், அனைத்து அப்போஸ்தலர்களும் உண்மையான முழுகுதலாகிய அர்ப்பணிப்பிற்கான அடையாளமாகத் தண்ணீர் ஞானஸ்நானத்தில் பங்குகொண்டதுமான விஷயத்தை - ஏற்கெனவே உணர்ந்தவனே போதிப்பதற்குத் தகுதியுடையவனாவான்.

**(Q243:1) தேர்ந்தெடுத்தல் - எப்போது வேண்டுமானாலும் நடத்தப்படலாம். விசேஷமான நாளென்று ஒன்றில்லை.**

கேள்வி (1911)-1- மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படாமலும் மற்றும் ஆவிக்குரிய தகுதிகளையுடையவராய் இருந்தும், சில பூமிக்குரிய சந்தர்ப்பச் சூழ்நிலைகளினிமித்தம் தேர்ந்தெடுக்கப்படுவது தடங்கல்பட்டுள்ள நிலையிலும் சகோதரன் ஒருவர் இருக்க, திறமைமிக்க இச்சகோதரன் விசேஷித்த தருணங்களில் ஒழுங்குச் செய்யப்பட்டிருக்கும் ஒரு கூடுகை நிகழ்ச்சியில் தூது கொடுக்க வாய்ப்பளிக்கப்படுவது குறித்த உங்களது கருத்தென்ன?

பதில் - ஒருவேளை சபையாரும் அவரைத் தேர்ந்தெடுக்க விரும்பினால், அவரைத் தேர்ந்தெடுக்கும் காரியத்தை மிகச் சுலபமாக நடத்தலாம் என்று நான் எண்ணுகின்றேன். இதனை பற்றின யோசனையை முன்வைத்து, வாக்கு (vote) எடுங்கள்; இப்படிச் செய்வது, காரியத்தை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரும். அவர் எப்போது வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கப்படலாம். குறிப்பிட்ட நாட்களில்தான் மூப்பரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று எதுவுமில்லை. அவரைச் சபையார் தகுதியான நபர் என்று ஒருவேளை கருதினால், மேலும் அவசியம் இருக்கும் பட்சத்தில் அவர் வருடத்தின் நடுவில் அல்லது அடுத்த மாதம் அல்லது வேறு எந்த நேரத்திலும் தேர்ந்தெடுக்கப்படலாம். இதுபோன்றதான சூழ்நிலைகளில், காரியத்தைச் சபையாரின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதைக்குறித்து, ஒருமாத காலமாக அல்லது இன்னும் அதிகக்காலமாகச் சிந்தித்து, பின்னர் ஒரு குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை

அன்று, இதற்காகச் சபையாரை வாக்குச் செலுத்தும்படி கேட்டுக்கொள்வது நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். இது சபையாருக்கு முழு வாய்ப்பை அளிக்கின்றது மற்றும் ஒருவேளை அவர்கள் வாக்கு (vote) செலுத்தினார்களெனில், அவ்வாக்கின்படி தீர்மானம் எடுக்கப்படும்.

**(Q243:2) தேர்ந்தெடுத்தல் - நியமிக்காமல் ஊழியம் செய்தல்.**

கேள்வி (1911)-2- ஒருவேளை தான் ஏற்றுக்கொள்ளப்படும் விஷயத்தில் எவ்விதமான மறுப்புமிராது என்று எந்த ஒரு சகோதரனுக்கு உறுதி இருப்பினும், தேர்ந்தெடுக்கப்படாத நிலையில் அவர் சபையில் வழிநடத்துபவராக, போதகராக, பிரதிநிதியாகப் பொதுப் பொறுப்புகளை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நாம் சில இடங்களில் வாசித்துள்ளோம். மற்ற இடங்களிலும் கூட இப்படியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படியாக இருக்குமானால், சபையில் பத்தொன்பது உதவிக்காரர்களையும் மற்றும் சபையாரையும் சேர்க்காமல், நம்முடைய மூப்பர்கள், கூட்டங்கூடி ஓர் உதவிக்காரரைச் சபையின் மூப்பராக அல்லது போதகராக அல்லது பிரதிநிதியாக நியமிப்பது என்பது - அதாவது முறையான விதத்தில் ஏற்படுத்தப்பட்ட மூப்பர் காணப்பட வேண்டும் என்று கர்த்தர் கூறும் மூப்பர் ஸ்தானத்திற்கு நியமிப்பது என்பது தவறுதானே?

பதில் - இக்கேள்வியைக் கருத்தில் எடுத்துக்கொள்ளும்போது, நாம் அப்போஸ்தலருடைய வார்த்தைகளையும், கொடுக்கப்பட்டுள்ள வேதாகம உதாரணத்தையும் நினைவில்கொள்ள வேண்டும். பரிசுத்தவானாகிய ஸ்தேவானின் சம்பவம் உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திலுள்ள பதிவின்படி அவர் சபையில் உதவிக்காரராகத் தெரிந்துகொள்ளப்பட்டார். மேலும் பரிசுத்தவானாகிய ஸ்தேவானுக்குப் பிரசங்கம் பண்ணுவதற்கான நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. வாய்ப்புக் கிடைத்தபோது அவர்: "சகோதரரே, நான் மூப்பனாகத் தெரிவு செய்யப்படவில்லை, அதனால் என்னால் உங்களுக்குப் பதில் தெரிவிக்க முடியாது" என்று கூறவில்லை. மாறாக அவர் நேரே சென்று பிரசங்கம் பண்ணினார் மற்றும் கர்த்தரும் அவரை அதிகளவில் ஆசீர்வதித்தார்; அவருக்கு நல்ல வாய்ப்புகள் கிடைத்தது மற்றும் பிற்பாடு கல்லெறிந்து கொல்லப்பட்டார். இன்னுமாக இவர் தனது கர்த்தருக்கு அடுத்தபடியாக, முதலில் இரத்தசாட்சியாக மரித்து, கிறிஸ்தவன் என்ற நற்சான்றும் வாங்கினார். அப்போஸ்தலர் கூறுகின்ற காரியங்களை நாம் மீண்டும் நினைவில்கொள்வோமாக - அவர் கூறின வார்த்தைகளில் கொஞ்சத்தை நான் இங்குக் குறிப்பிடுகின்றேன் - யாரொருவர் உதவிக்காரராக இருந்து, தனக்கான ஸ்தானத்தின்படி ஊழியம் புரிந்து, தன்னுடைய ஊழியத்தில் தாழ்மை காட்டுகின்றாரோ, அவர் தனக்கு நல்ல நிலையைப் பெறுவார் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார் (1 தீமோத்தேயு 3:13). அதாவது சுயாதீனம், சிலாக்கியம் மற்றும் வாய்ப்பாகிய நல்ல நிலையைப் பெறுவார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் யார் மூப்பர்களாக ஊழியம் புரியலாம் என்பதற்கு வாக்கு (vote) செலுத்தும்போது, சபையார் தாங்கள் முந்தின முறை உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுத்தவர்களையும், அந்த உதவிக்காரர்கள் எவ்வளவு கவனமாய் இருந்தார்கள் என்பதையும் மற்றும் அந்த உதவிக்காரர்கள் எவ்வளவு உண்மையுடன் இருந்தார்கள் என்பதையும் கவனித்தவர்களாய் இருக்க வேண்டும். ஏனெனில் இவர்கள் உதவிக்காரர்கள் என்ற விதத்தில், temporal/ஆவிக்குரியதல்லாத சில வேலைகளைச் செய்வதிலேயே ஒருவேளை உண்மையற்றவர்களாக இருப்பார்களானால், இவர்கள் மூப்பர்களுக்குரிய ஊழியங்களில் உண்மையுடன் இருப்பார்களென்று எவ்விதத்திலும் எதிர்பார்க்க முடியாது. இவ்விதமாக இந்த உதவிக்காரர்கள் தங்களுடைய உதவிக்காரருக்குரிய ஸ்தானத்தில் உண்மையாய் இருந்ததினிமித்தம் சபையில் கனமும், முன்னுரிமையுமாகிய நல்ல நிலையைத் தங்களுக்கென்று பெற்றுக்கொள்வார்கள் என்பதே அப்போஸ்தலனுடைய கருத்தாகும். என்னுடைய கருத்து என்னவெனில், ஆதிசபையில் உதவிக்காரர்கள் எனும் வகுப்பார் படிப்படியாக மூப்பர் ஸ்தானத்திற்கும் மற்றும் சத்தியத்திற்கு மிக முக்கியமான ஊழியம் புரியும் ஸ்தானத்திற்கும் முன்னேறுவதற்கு ஏதுவாக ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தார்கள். ஆகவே உதவிக்காரர்கள் ஆரம்பத்தில் சில விதமான வேலைகளுக்கென்று தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆனால் இவர்கள் தேவைப்படும் சமயங்களில் பயன்படுத்தப்படுபவர்களாக வைக்கப்பட்டிருப்பார்கள். ஆகையால் ஏதேனும் வேலை புரிவதற்கு ஒரு மூப்பர் இல்லாமல் இருந்தாரானால், committee/மூப்பர் குழுவினர் உதவிக்காரர்களைப்பற்றி: "இன்றைய இரவிலுள்ள கூட்டத்தில் இந்தச் சகோதரனை

நாம் பயன்படுத்திப் பார்ப்போமா?” என்றும், வேறொரு தருணத்தில் இதே committee/குழுவினர்: “இன்றைய இரவில் நடக்கும் கூட்டத்திற்கு நாம் அந்த இன்னொரு உதவிக்காரரைப் பயன்படுத்திப் பார்க்கலாமா? இன்றைய இரவு கூட்டத்தில் நமக்கு ஒருவர் அவசியம், இவருக்கு வாய்ப்புக் கொடுத்துப் பார்க்கலாம்” என்பார்கள். இவ்விதமாக உதவிக்காரர்களின் ஆற்றலைக் காணத்தக்கதாக அவர்களைப் பயன்படுத்திப் பார்த்து அறிந்துகொள்வார்கள். இல்லையேல், உதவிக்காரர்கள் வளர்வதற்கோ அல்லது சபைக்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தில் தங்களுடைய திறமை என்னவென்பதை வெளிக்காட்டுவதற்கோ வாய்ப்புகள் இல்லாமல் இருப்பார்கள். இக்கருத்துக்கு எதிரான ஒன்றும் வேதாகம ஆராய்ச்சிப் பாடங்களில் (volumes) எழுதப்படவில்லை. ஏனெனில் இக்கருத்தையே நாம் எப்போதும் கூறிவருகின்றோம். மேலும் இக்கருத்து வேதவாக்கியங்களின் அடிப்படையிலானது என்றும் நாம் நம்புகின்றோம்; இது புரூக்கிளினிலும், மற்ற இடங்களிலும் செயல்படுத்தப்பட்டும் வருகின்றது.

சகோதரன் கேள்வியில் என்ன கேட்க வருகின்றார் என்பதை என்னால் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. எனினும் என்னுடைய பதில் பின்வருமாறு உள்ளது. ஒருவேளை சபையார் தங்களுக்கு நான்கு அல்லது ஐந்து மூப்பர்களைத் தேர்ந்தெடுத்திருக்க, அந்த நான்கு அல்லது ஐந்து மூப்பர்கள் ஊழியத்திற்கு வந்த பிற்பாடு, உதவிக்காரர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அந்த உதவிக்காரரை மூப்பராக்குவது என்பது, சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவதில்லை. இப்படிச் செய்வது அவர்களுக்கடுத்த அதிகாரம் இல்லை என்று எண்ணுகின்றேன். ஒருவேளை சபையார் அந்த உதவிக்காரர் சகோதரனை மூப்பராகவும், முறையான ஊழியனாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவார்களானால், அவரை நியமிப்பது அவர்களுடைய பொறுப்பாய் இருக்கும். ஒருவேளை மூப்பர்கள் தங்களுக்குள் போதுமானவர்கள் இல்லையென்று எண்ணினால், அவர்கள் சபையார் கூடிவரும் ஒரு நாளில் இன்னொரு மூப்பர் தேவையாக இருப்பதினால், இன்னொரு மூப்பரைக் கூடுதலாகத் தேர்ந்தெடுப்பதில் சபையார் பிரியம் கொள்வார்களா எனக் கேட்கலாம். ஆனால் ஒருவேளை தேவைத் தற்காலிகமான தேவையாகதான் இருக்கும் பட்சத்தில், தற்காலிகமான அத்தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கு ஏதாவது சில திறமைகளை வெளிப்படுத்தும் உதவிக்காரர்களை அவ்வப்போது மாத்திரமே இந்த மூப்பர்கள் தெரிவுசெய்ய சபையார் விரும்புகின்றார்கள் எனில், இது சரியான காரியமாக இருக்கும் என்று நான் எண்ணுவேன். ஆனால் சபையார் ஓர் உதவிக்காரனை மூப்பராகத் தெரிந்தெடுக்காதபட்சத்தில், அவரை மூப்பராக நியமிப்பது சரியான காரியமாக இராது.

### (Q244:1) தேர்ந்தெடுத்தல் - மீண்டும் வாக்கு (vote) செலுத்துதல்.

கேள்வி (அவையோரிடமிருந்து எழும்பினது) (1911)-1- ஒரு சகோதரன் எழுபத்தைந்து சதவிகிதமாக வாக்குகளுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்குகள் (vote) குறைவாகப் பெற்றிருப்பாரானால், அவர் தேர்ந்தெடுக்கப்படத்தக்கதாகப் போதுமான அளவு வாக்குகள் பெற்றுக்கொள்ளும்படிக்கு, இரண்டாம் விசை அவர் சார்பாக வாக்கெடுப்பது ஞானமான காரியமாக இருக்குமா?

பதில் - இதைச் சபையார் ஏகமனதுடன் செய்தால் கூட இதற்கு நாம் மறுப்புத் தெரிவிப்பதில்லை. காரியம் நடந்தால்போதும் என்று நாம் எண்ணாமல், சபையாரின் கருத்தைப் பெற்றுக்கொள்வதும், சபையாருடைய விருப்பத்தைப் பூர்த்திச் செய்ய வேண்டும் என்பதும்தான் நமக்கு வேண்டிய காரியமாகும். பிணக்கு உண்டுபண்ணுவதற்கு மாத்திரமே ஏதுவான எவ்விஷயமும் கூடுமானமட்டும் தவிர்க்கப்பட வேண்டும். ஒருவேளை ஒரு சபையார் தங்களுடைய தேர்ந்தெடுத்தலில் எழுபத்தைந்து சதவிகிதமான விதியை நியமித்தார்களானால், இதே சதவிகிதமான விதிதான் அடுத்த தேர்ந்தெடுத்தலுக்கும் காணப்பட வேண்டுமென்ற கட்டாயமில்லை. மாறாக, அவ்விதி அந்த ஒருமுறைக்கு மாத்திரமே கட்டளையாக இருக்கும். ஒருவேளை அடுத்த தேர்தலிலும் சபையார் அதே எழுபத்தைந்து சதவிகிதம் விதியைத் தெரிந்துகொண்டார்களானால், இன்னுமாக ஒருவர் இந்தச் சதவிகிதமான விதிக்குக் கொஞ்சம் கிட்ட எட்டியும் முழுமைக்கு வரவில்லையெனில், அவர் அடைந்த வாக்கு சதவிகிதத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு மீண்டும் வாக்கெடுங்கள். மேலும் பின்னர் நியமிக்கப்பட்ட சதவிகிதம் விதி அளவைக் காட்டிலும் அவருக்கு வாக்குகள் அதிகம் கிடைத்திருக்குமாயின், சபையாரின் விருப்பத்திற்கு ஏற்ப சபையார் காரியங்களை முடிவு செய்ய முழு அதிகாரம் உடையவர்களாய் இருக்கின்றார்கள்.

**(Q245:1) தேர்ந்தெடுத்தல் - (ஏகமன நியதி) ஜூரி விதி.**

கேள்வி (1911)-1- வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில், சபையில் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திற்குப் பெரும்பான்மையானது போதுமாயிராது, மாறாக (ஏகமன நியதி/Jury rule) ஜூரி விதி நிலவ வேண்டுமென்று நாம் வாசிக்கின்றோம். அப்படியானால், அதுவே உதவிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுகையிலும் பின்பற்றப்பட வேண்டிய ஞானமான வழிமுறையாய் இருக்குமல்லவா? மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் இருவரின் தேர்ந்தெடுத்தலில் ஒரே ஒழுங்குமுறை நிலவ வேண்டுமென நாம் தொகுதியில்/volume வாசிக்கின்றோமே.

பதில் - இந்தக் காரியத்தில், சட்டம் ஒன்றை முன்வைத்திட நாம் நாடுகிறதில்லை; சட்டம் ஒன்றினை இயற்ற நமக்கு உரிமை இல்லை; சபைக்கு ஞானமான வழிமுறையாகக் காணப்படும் என்று நாம் நம்புகிறவற்றை நாம் யோசனையாக வழங்க மாத்திரமே செய்கின்றோம். உதாரணத்திற்கு ஒரு சபையில், (bare majority) குறைந்தளவு எண்ணிக்கையில்/வித்தியாசத்தில் பெரும்பான்மையினராகினவர்கள், காரியங்களை நிர்ணயிக்க அனுமதிக்கப்படுவார்களாகில், மிகப்பெரிய எண்ணிக்கையிலுள்ள, அதாவது பெரும்பான்மையினரைப் போன்று கிட்டத்தட்ட எண்ணிக்கையில் பெரியதாகக் காணப்படும் சிறுபான்மையினர் முழுக்க அதிருப்திக்குள்ளாவார்கள்; மற்றும் ஒரு எண்ணிக்கையில் பெரும்பான்மையினராகினவர்கள் அச்சபையை மிகவும் நியாயமற்ற விதத்தில் நடத்துபவர்களாய் இருப்பர்கள். ஆகையால் சபையார் தங்கள் வாக்குகளைச் சரிப்படுத்த முயற்சித்திட வேண்டும் மற்றும் கூடுமானால் சபையிலுள்ள அனைவரையும் பிரியப்படுத்தவும், திருப்திப்படுத்தவும்தக்கதாக மூப்பர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது எங்கள் யோசனையாக இருக்கின்றது. இப்படியாக முடிந்தமட்டும் mere majority rule/வெறும் பெரும்பான்மை விதியானது புறக்கணிக்கப்பட வேண்டும் மற்றும் முடிந்தமட்டும் (ஏகமன நியதியானது) ஜூரி விதியானது அடையப்பெறவேண்டும் - அது ஏகமன நியதியாக இருக்க வேண்டும் என்று நாம் சொல்லாமல், மாறாக முடிந்தமட்டும் சபையில் கருத்து வேறுபாடின்மையானது அடையப்பெற வேண்டும் என்று சொல்லுகின்றோம். ஒரு சபையில் யார் உதவிக்காரராக அல்லது மூப்பராக இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், முழுச்சபையாரும் ஒன்றையே சிந்திக்கும் நிலையினை அடைவது எப்போதும் சாத்தியமல்ல; ஆனால் என்ன விதி கைக்கொள்ளப்பட்டாலும், அது மூப்பர்கள் விஷயத்தில் கைக்கொள்ளப்படுவது பொருத்தமாய் இருப்பதுபோன்று, உதவிக்காரர்கள் விஷயத்திலும் கைக்கொள்ளப்படுவது பொருத்தமானதாகவே இருக்கும். எந்த ஓர் ஊழியத்திற்கும், யார் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், சபையாருக்கு ஊழியக்காரர்களாய்க் காணப்படப்போகிறவர்களிடத்தில், சபையார் அனைவரையும் திருப்தியும், பிரியமும் கொண்ட நிலையில் பெற்றிருக்க நாடும்படியாக, கொள்கைகள் சம்பந்தப்படாதவைகளில் சபையார் ஒருவருக்கொருவர் சிறு சிறு காரியங்களில் முடிந்தமட்டும் விட்டுக்கொடுக்கத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**(Q 245:2) தேர்ந்தெடுத்தல் - வர இயலாதிருக்கும் அங்கத்தினர்கள் கடிதம் மூலம் வாக்குப்பதிவு செய்தல்.**

கேள்வி (1912)-2- இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளுக்கு முன்னரே தேர்தலுக்கான முன்மொழிதல் இடம்பெற்றிருக்க, கைகளை நீட்டுவதன் மூலம் மூப்பர்களைத் தேர்ந்தெடுக்கும் போது, வகுப்பின் இரண்டு (அ) மூன்று அங்கங்கள், நேரில் வரஇயலாதிருக்கும் தருவாயில், தங்கள் வாக்குப்பதிவை கூட்டத்தலைவருக்குக் கடிதத்தின் மூலம் அனுப்புவது அனுமதிக்கத்தகுந்ததா?

பதில் - இதில் மறுப்புக்கிடமானது ஒன்றுமே இல்லை. அரசியலில் ஒரு கட்சி, மற்றக் கட்சிக்கு எதிராக சூழலைச் சாதகமாக்கிக் கொள்ளுகிற கட்சி மனப்பான்மை காணப்படுகிறது. எனினும், இது உங்களிடத்தில் இருக்கலாகாது. மூப்பருக்கான தேர்ந்தெடுத்தலுக்கென்று நீங்கள் ஒன்றுகூடும்போது, ஒவ்வொரு சகோதரன் மற்றும் சகோதரியும் தனது கருத்தைத்

வெளிப்படுத்தக்கூடிய முழுமையான வாய்ப்பைப் பெறவேண்டும் என்று நீங்கள் எண்ணிட வேண்டும். இப்படி விரும்புவது மாத்திரமல்லாமல், ஒவ்வொருவரும் தங்கள் கருத்தினைத் வெளிப்படுத்திட வேண்டும் என்று நீங்கள் காணப்பட வேண்டும். நமக்கு அவர்களுடைய சொந்தக் கருத்து மட்டுமே அவசியமானது அல்ல, மாறாக சபைக்கான தேவனுடைய சித்தம் இன்னது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். இவ்விஷயத்தில், தேவனுடைய சித்தமாக இருக்குமென நாம் நினைப்பது எதுவோ அதை நாம் அனைவரும் வெளிப்படுத்துவோமாக. வரஇயலாதிருப்பவர்கள், கூட்டத்தின் கூட்டத்தலைவரிடத்தில் தங்களின் வாக்குப்பதிவை அனுப்பிவைப்பதற்கு எந்தத் தடையும் இருப்பதாக நான் காணவில்லை. நீங்கள் வந்திருப்பீர்களேயானால், நீங்கள் எண்ணியிருப்பவருக்கு உங்கள் வாக்குப்பதிவைக்கொடுக்கலாம். ஆனால் உங்களுக்காக வேறொரு சகோதரன் அல்லது சகோதரி பதிலாளாக இருந்து, தாங்கள் சிறந்தவர்கள் என்று கருதக்கூடியவர்களுக்கு வாக்களிப்பதற்குரிய உரிமை கொடுக்கப்படலாகாது. இவ்விஷயத்தில், அதுவே என் கருத்தாகும்.

**(Q246:1) தேர்ந்தெடுத்தல் - ஆங்கில மொழிக் கூடுகைகளுக்காக வெளிநாட்டுச் சகோதரர்கள்.**

கேள்வி (1913)-1- குறைவுகளோடு ஆங்கில மொழியைப் பேசுகின்றதான ஜெர்மனிய அல்லது ஸ்வீடிஷ் மொழி பேசும் வெளிநாட்டுச் சகோதரனைப் பொதுப்பேச்சாளராகத் தேர்ந்தெடுப்பதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - ஒருவேளை வகுப்பில் அந்த வெளிநாட்டு மொழி பேசுபவர்கள் போதுமான எண்ணிக்கையில் இருப்பார்களானால், அத்தகைய ஒரு பேச்சாளர் விரும்பப்படத்தக்கவராக இருப்பார் மற்றும் அவரைத் தேர்ந்தெடுப்பது முறையாய் இருக்குமென நான் கருத்துத் தெரிவிக்கின்றேன். உதாரணத்திற்கு, புரூக்கிளின் சபையாரில் பிரெஞ்சு மொழியில் வகுப்பினை நடத்திடுவதற்கு நன்கு தகுதிவாய்ந்த பிரஞ்சு சகோதரன் ஒருவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். இத்தாலிய மொழியில் வகுப்பினை நடத்திடுவதற்கு நன்கு தகுதிவாய்ந்த இத்தாலிய சகோதரன் ஒருவரை நாங்கள் பெற்றிருக்கின்றோம். ஸ்வீடிஷ் சகோதரன் ஒருவரையும் நாங்கள் பெற்றிருக்கின்றோம். வகுப்பிலுள்ள நண்பர்கள் ஆங்கிலம் புரிந்துகொள்ள முடியாதவர்கள் என்றல்ல, மாறாக இவர்கள் தங்கள் மொழியினைக் கொஞ்சம் விரும்புவதினால், இவர்களது சொந்த மொழியினை நன்கு தெரிந்த ஒருவரைப் பெற்றிருக்க விரும்புகின்றனர். இது மிகவும் சரியே என்று நாம் எண்ணுகின்றோம். இப்படியாகவே ஐரோப்பிய இனமில்லாத சகோதரர்கள் விஷயத்திலும் காணப்படுகின்றது; நாங்கள் வெவ்வேறு தேச வகுப்புகளைப் பெற்றிருக்கின்றோம். சபையார் மத்தியில் எத்தனை வெவ்வேறு இன வகைகளைப் பெற்றிருக்கின்றார்கள் என்பது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**(Q246:2) தேர்ந்தெடுத்தல் - தகுதியற்றவர்கள் தொடர்பாக.**

கேள்வி (1913)-2- ஓர் இடத்தில் மூப்பருக்கான தகுதிகளைப் பூர்த்திச் செய்திடுவதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் இல்லாததாகத் தோன்றுகையில், மூப்பர்களைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பதற்கும் மற்றும் பாஸ்டர் ரசல் அவர்களை மூப்பராகத் தேர்ந்தெடுப்பதற்கும் நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - இம்மாதிரியான கேள்விகள் விவாதிக்கப்படுகையில் கவனமாகக் கையாளப்பட வேண்டியவைகளாக இருக்கின்றன மற்றும் எதை அறிவுறுத்துவது சிறந்ததாயிருக்குமென அறிந்துகொள்வதற்கும் கடினமாய்க் காணப்படுகின்றது. நண்பர்களே கூடுமானமட்டும் ஞானத்தோடும், விவேகத்தோடும் நடந்துகொள்ளுங்கள் என்பதே என் பொதுவான பரிந்துரையாய் இருக்கின்றது. இம்மாதிரியான விஷயங்களில் கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துக் கர்த்தருடைய ஜனங்கள் முழுமையாய் உணர்ந்துகொள்ளாததே, ஒரு பிரச்சனையாகக் காணப்பட்டு வந்தது மற்றும் அநேகமாக இன்னமும் காணப்பட்டு வருகின்றது. தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்கு எழுதுகையில் அப்போஸ்தலன் ஒரு மூப்பனுக்கான தகுதிகளை முன்வைக்கையில், அவர் திட்டவட்டமான விதிகளை முன்வைத்திடுவதாகவும் மற்றும் அந்த நிபந்தனைகள் அனைத்திலும் ஒவ்வொரு மூப்பனும் மிக உயர்ந்த நிலையில் காணப்பட வேண்டும் என்பதாகவும் கர்த்தருடைய ஜனங்கள் எண்ணம் கொண்டிருக்கின்றனர். இப்படியான நிலையில் காணப்படுபவர் பூரணமான மனுஷனாக, மிகவும் நல்லதொரு மூப்பராகத்

காணப்படுவார் என்பதில் சந்தேகமில்லை. இப்படியாகவே - அதாவது அப்போஸ்தலன் அங்கு எழுதியுள்ளவைகள் யாவற்றின் நிலையினை மற்றக் கிறிஸ்தவர்களும் அடைவார்களானால், இந்தக் கிறிஸ்தவர்கள் யாவரும்கூட இப்படியாகவே காணப்படுவார்கள். அப்போஸ்தலன் உண்மையில் தன்னுடைய வார்த்தைகளானது, நேரடியான விதத்தில் அப்படியே புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று எழுதவில்லையெனில், பின் ஏன் அவர் இப்படித் திட்டவட்டமான வார்த்தைகளைப் பேசியுள்ளார் என்று நீங்கள் கேட்கலாம்? சபை யாவரிடமும் இயேசு வேறொரு தருணத்தில், "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவைப் போன்று நீங்களும் இருக்கக்கடவீர்கள்" என்று கூறின விதத்தைப்போலவே அப்போஸ்தலனும் காரியத்தினை முன்வைக்கின்றார் என்று நாம் பதிலளிக்கின்றோம். நீங்கள் உங்கள் பிதாவைப்போன்று இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? "நான் முயற்சித்துக்கொண்டிருக்கின்றேன்" என்று நீங்கள் சொல்லுவீர்கள். என் அன்பு சகோதரனே நீங்கள் சொல்வது சரிதான். சரி உங்கள் பிதாவைப்போன்று இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? சில விதங்களில் நீங்கள் இருக்கின்றீர்கள் - அதாவது உங்கள் மனதில் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று சொல்லுவீர்கள். சரி வார்த்தைகள் மற்றும் கிரியைகள் மற்றும் சிந்தனைகள் யாவற்றிலும் நீங்கள் இருக்கின்றீர்களா என்று நான் கேட்டால்? இல்லை; நான் பிதாவைப் போன்று அனைத்திலும் இருக்கிறதில்லை; ஆனால் தேவனுக்கு ஒத்த குணலட்சணத்தை அதிகமதிகமாய் அடைந்திட நான் முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன் என்று சொல்லுவீர்கள். நல்லது. இதுபோலத்தான் அப்போஸ்தலன் இங்கு ஒரு மூப்பருக்கான தராதரத்தினை/அளவுகோலினை சபைக்கு முன்வைக்கின்றார்; அதாவது ஒரு மூப்பர் எப்படி இருக்கவேண்டும் என்று சபைக்கு முன்வைக்கின்றார். நீங்கள் மூப்பர்களைக்குறித்துச் சிந்திக்கையில், அதைப் பாருங்கள் மற்றும் சகோதரரை நீங்கள் மதிப்பிடுகையில் அதை மனதில் கொண்டிருங்கள் மற்றும் இந்தத் தகுதிகளைக் கொஞ்சம் கொண்டிராதவர்கள், பொருத்தமானவர்களாய் இருக்கமாட்டார்கள் மற்றும் உங்களால் முடிந்தவரைத் தகுதியானவரைத் தேர்ந்தெடுங்கள். பூரணமான மூப்பர்கள் கிடைக்கும் வரைக் காத்திருப்போமானால், நாம் எந்த மூப்பர்களையும் ஒருபோதும் பெற்றுக்கொள்ள மாட்டோம். ஆகையால் சகோதரர் ரசலும் சரி, வேறு எந்த நபரும் சரி பரிபூரண மூப்பராய் இருந்திடமுடியாது என்று நான் சொல்லுவேன். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் மூப்பராக எவரையும் தேர்ந்தெடுக்காமல் இருப்பது நலமாயிருக்கும் எனும் நிலைமையுள்ள சந்தர்ப்பங்களும் காணப்படக்கூடும் என்று நான் நம்புகின்றேன். அப்படியான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன, ஆனால் மிகவும் அரிதாகவே இருக்கின்றன. அப்படித்தான் என்று நான் நம்புகின்றேன். இது அறிவுரை கூறுவதற்கு மிகக் கடினமான சந்தர்ப்பங்களாய் இருப்பவைகளில் ஒன்றாய் இருக்கின்றது. இவ்விஷயத்தில் அநேகக் காரியங்கள் சம்பந்தப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு சிறு சபையாரும், சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனும், முடிந்தமட்டும் ஞானமாயும், முடிந்தமட்டும் முன்யோசனையோடும், ஜாக்கிரதையோடும், முடிந்தமட்டும் தேவனுக்கும், அவரது நீதியின் கொள்கைகளுக்கு நேர்மையாயும் காணப்பட்டு, தெய்வீக வழிநடத்துதலின்படி செய்திடுவதற்கு ஜெபத்தோடு நாடுவார்களாக. ஒருவேளை முழுச்சபையாரும் அல்லது சபையாரில் பெரும்பான்மையினர், ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையினைத் தீர்மானித்திடுவார்களானால், சபையார் வாக்குகள் செலுத்திட்டாலும், உங்கள் சித்தமே செய்யப்பட வேண்டும் என்று எண்ணாதீர்கள்; மாறாக பின்வருமாறு கூறிடுங்கள்: "சரி, பரவாயில்லை; சபையார் வாக்குகள் அளித்துள்ளனர் மற்றும் நியாயமாய்க் காரியம் தெரிவிக்கப்பட்டுள்ளது; நான் என் கருத்தைச் சொல்லியுள்ளேன் மற்றும் நான் சிந்திப்பதுபோன்று, அவர்கள் சிந்திக்கவில்லை; மற்றும் சபையாரை நான் வற்புறுத்திடக்கூடாது; நான் சிறுபான்மையாய் இருப்பவர்களில் ஒருவனாய் இருக்கின்றேன் மற்றும் சபையார் மத்தியிலுள்ள மற்றவர்களுக்கு நான் பணிந்திடுவேன் மற்றும் நான் அவர்களோடுகூட ஒத்துழைப்பேன் மற்றும் நான் சொன்ன வழிதான் சரியான வழி என்றும், ஒருவேளை சபையார் என் வழியில் வரவில்லையெனில் காரியங்கள் அனைத்தும் தவறாகிவிடும் என்றும் காண்பிப்பதற்கென, அவர்களுக்கு எதிராய் நான் காரியங்களைச் செய்திடமாட்டேன். இல்லை, நான் தேவனுக்கு இசைவாய்க் காணப்பட வேண்டும் மற்றும் சபையாரால் எது தீர்மானிக்கப்படுகின்றதோ, அதற்கு என்னுடைய பங்கினைச் சிறந்த விதத்தில் நான் செய்திட வேண்டும்; சமாதானமும், நீதியும் நிலவும்படி அனுமதிக்கத்தக்கதாகவும் மற்றும் சத்தியத்தின் காரணங்களை முன்னேற்றத்தக்கதாகவும் மற்றும் சமாதானம் பண்ணுகிறவராகிடத்தக்கதாகவும் என்னால் இயன்ற மட்டும் சிறப்பாய் இப்பொழுது ஒத்துழைத்திடுவேன்" என்பதாகும். இதை மறந்துவிட வேண்டாம். தேவனுடைய ஜனங்கள் யாவரும், "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய பு3024--

என்னப்படுவார்கள்" என்று இயேசு கூறியதைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஜெயங்கொள்பவர்களாகிடுவதற்கு, எதிர்த்துப்போராடும் மனப்பான்மையினைக் கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் ஓரளவுக்குப் பெற்றிருப்பது அவசியம் என்பதை நினைவில் கொள்வோமாக; இதைக் கொஞ்சமேனும் பெற்றிருக்கவில்லையெனில், உங்களால் ஜெயங்கொண்டவராகிட முடியாது. உலகத்தினை ஜெயங்கொள்வதற்குப் போதுமான அளவுக்கு நீங்கள் எதிர்த்துப் போராடுகிறவராயும் மற்றும் சகோதரரோடு சண்டைப்பண்ணாமல் இருப்பதற்குப் போதுமான அளவுக்கு நீங்கள் சமாதானம் பண்ணுகிறவராயும் இருத்தல் வேண்டும். சகோதரரோடு போராடிக்கொண்டிராதீர்கள்; மாறாக உங்களால் முடிகிற அளவுக்குப் பரிவாயும், அனுதாபம் உடையவர்களாயும், உதவிகரமாயும் இருங்கள்.

**(Q247:1) தேர்ந்தெடுத்தல் - யார் வாக்களிக்கலாம்?**

கேள்வி (1913-Z)-1- சபையில் வாக்களிக்க யார் உரிமை பெற்றுள்ளனர்?

பதில் - முழு அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணி மற்றும் அதை வெளிப்படையான அடையாளமாகிய - தண்ணீரில் மூழ்குதல் மூலம் வெளிப்படுத்தியவர்கள் தவிர வேறு யாரும் வாக்களிக்கக்கூடாது என்பதை எப்பொழுதும் கருத்தில்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட அர்ப்பணிப்பை அடையாளத்தில் காட்டாதவர்கள் சகோதரர்கள் அல்ல என்று தள்ளிவிடாமல், மாறாக சபைக்கு ஊழியஞ்செய்ய தகுதியானவர்கள் யார் என்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்கப் போதிய வளர்ச்சியற்றவர்கள் என்றும், சபையின் ஊழியக்காரர்களாக ஆகுவதற்குத் தகுதி பெறாதவர்கள் என்றும் கருதபட வேண்டும்.

**(Q247:2) தேர்தல் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுத்தல்.**

கேள்வி (1913 - Z.5336)-2- குறைந்தளவு எண்ணிக்கையில் (bare majority) பெரும்பான்மை என்பது தேர்தலின் விதியாக இருக்கமுடியுமா?

பதில் - சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (vote) பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில் 51-பேர்கள், சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய்

இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E - அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது. சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்கக் குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் கொடுக்கப்பட்டுள்ளதான தகுதிநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கிறன்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

**(Q248:1) தேர்ந்தெடுத்தல் - பதிலாள் மூலம் வாக்கு.**

கேள்வி (1913)-1- சபையிலுள்ள அர்ப்பணிக்கப்பட்ட சகோதரன் ஒருவர், மூப்பர் தேர்ந்தெடுக்கப்படும் கூட்டம் ஒன்றில், நோயுற்றிருப்பதன் காரணமாகக் கலந்துகொள்ள முடியாதபோது, மூப்பர் ஊழியத்திற்காக, தான் தேர்ந்தெடுப்பவரைக்குறித்துச் சபைக்கு எழுதிக்கொடுத்திடலாமா? அல்லது பதிலாள் வாயிலாக வாக்குச் செலுத்திடலாமா?

பதில் - ஒருவன் இதைச் செய்யலாம் என்று கூறும் எதுவும் வேதாகமத்தில் இல்லை மற்றும் ஒருவன் இதைச் செய்ய இயலாது என்று கூறும் எதுவும் வேதாகமத்தில் இல்லை. நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்? அதைச் சபையாரிடம் விட்டுவிடுங்கள். சபையார் முடிவெடுக்கட்டும்.

**(Q249:1) தேர்ந்தெடுத்தல் - தேர்ந்தெடுத்தலுக்கான சதவீதம்.**

கேள்வி (1913)-1- சபையின் தேர்ந்தெடுத்தல் விஷயத்தில், தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றதான வாக்குச் சதவீதத்தில், சபையாரால் பின்பற்றப்படும் அந்த விதிகளானது, உதவிக்காரராக முன்மொழியப்பட்டிருக்கின்ற சகோதரனுக்கான வாக்குகள் விஷயத்திலும் பொருந்துமென நாம் புரிந்துகொள்ள வேண்டுமா?

பதில் - நிச்சயமாக. சபையின் காரியங்களை நிர்வகிப்பது தொடர்புடையதான வேதாகம ஏற்பாடானது, அனைத்துப் பொறுப்பினையும் சபையார் மீதே வைக்கின்றது. நான் பொதுவான அர்த்தத்திலுள்ள சபையாரைக் குறிப்பிடவில்லை, மாறாக சபையை, கிறிஸ்துவின் சரீரமாகிய கூட்டத்தாரை, அதாவது அர்ப்பணிக்கப்பட்டவர்களைக் குறிப்பிடுகின்றேன். ஒவ்வொரு காரியத்தினையும் நிர்வகிக்கும் திட்டவட்டமான விதிகளைக் கர்த்தர் கொடுக்காததால், கர்த்தருடைய திருவசனத்தைக் கொண்டும் மற்றும் வேதவாக்கியங்களிலுள்ள மாதிரிகள் மற்றும் உதாரணங்களையும் கொண்டும், மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டியெழுப்பப்படும்படி நாடிடுவதற்கான பொறுப்பு ஒட்டுமொத்த சபையின் மீது விடப்பட்டுள்ளது. ஒருவேளை கர்த்தர் காரியத்தினை மிக எளிமையாயும் மற்றும் தெளிவாயும், அவரது ஜனங்களுடைய கைகளில் விட்டிருப்பாரானால், அதை ஏதோ ஒரு தனிப்பட்ட நபரின் அல்லது குருமார் வகுப்பாரின் கைகளுக்குத் திசைமாற்றிட நீங்களோ அல்லது நானோ முற்படுவது என்பது முற்றிலும் தவறான காரியமாய் இருக்கும். இதற்கு வேதாகமத்தில் எந்த அதிகாரமும் இல்லை. நிர்வாகங்கள் தவறிடுவதுபோல, ஜனங்களும் தவறிடுவது சாதாரண காரியமாய் இருக்கின்றது. உதாரணத்திற்குச், சில தீவுகளில் காணப்படும் ஜனங்கள் தாங்களாகவே நிர்வகித்துக்கொள்வதற்குப் பதிலாக, சில நிர்வாகங்களானது தங்களால் அத்தீவுகளை நன்கு நிர்வகிக்க முடியும் என்று எண்ணுகின்றனர். ஆகையால் ஒருவேளை ஜனங்கள், அதற்கு அடிபணிந்திடுவார்களானால், குருமார் என்று அழைக்கப்படுகின்றதான ஒரு குறிப்பிட்ட வகுப்பார், தங்களுக்கென அதிகாரத்தினை தகாத விதத்தில் உரிமைகொண்டாடி, சட்டங்களையும், விதிகளையும் இயற்றிவிடுகின்றனர். ஆனால் இதற்கான எளிமையான காரணம் - சபையார் தங்கள் கைகளில் கர்த்தர் அதிகாரத்தைக் கொடுத்துள்ளார் என்பதையும், ஒருபோதும் எந்த ஒரு குருமார் வகுப்பாரை அவர் அங்கீகரித்ததில்லை என்பதையும் அறியாமல் இருப்பதேயாகும். கர்த்தர்தாமே போதகராய் இருப்பார் - நீங்கள் அனைவரும் சகோதரராய் இருக்கின்றீர்கள். கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒரு கூட்டத்தாரெனச் சபையாரால் அடையாளம் கண்டுகொள்ளப்படும் வேற்றுமை தவிர, மற்றபடி சகோதரர்கள் மத்தியில் எந்த வேற்றுமையும் காணப்படக்கூடாது மற்றும் சில குறிப்பிட்ட நபர்களை மூப்பர்களாகத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்களெனில், பொறுப்புச் சபையாரிடத்திலேயே இருக்கும். சபையாரிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், மிகுந்த பகுத்துணர்தலையும் மற்றும் விவேகத்தினையும் பயன்படுத்திட வேண்டும் மற்றும் இவ்விஷயத்தில் தாங்கள் கர்த்தருக்காக வாக்களிப்பதாகவும், செயல்படுவதாகவும் நினைவில்கொள்ள வேண்டும். சபையார் தங்களது வழிநடத்துபவர்கள் முதலானவைகள் தொடர்பாக எடுக்கும் தீர்மானம், அக்காரியத்தில் இறுதி தீர்மானமாக இருக்கும் என்பதினால் சபையில் ஒழுங்குமுறைக்குரிய சரியான முறைமை தொடர்பாக, வேதவாக்கியங்களினால் முன்வைக்கப்படுபவைகளை ஆறாம் தொகுதியில் - பிரமாணமாக இல்லாமல், யோசனைகளாகச் சுட்டிக்காட்டிடுவதற்கு நாங்கள் முயற்சித்துள்ளோம்; சதவீதம் குறித்துச் சிலவற்றை நாங்கள் யோசனையாகக் கூறியிருந்தோம்; சதவீதங்கள் குறித்து எதுவும் வேதவாக்கியங்களில் கூறப்படவில்லை; எனினும் உலக ஜனங்களுடைய ஒரு சாதாரணமான கூட்டத்தில், உதாரணத்திற்கு ஒரு விஷயத்திற்கென வாக்கெடுக்கப்படுகிறதெனில், ஓர் எண்ணிக்கையில் பெரும்பான்மையாய் இருப்பவர்கள், காரியத்தைத் தீர்மானிப்பவர்களாக இருப்பார்கள்; 100 பேர்க் கொண்ட சபையார் என்று வைத்துக்கொள்ளுங்கள், இதில் 51-பேர்கள் தீர்மானிப்பவர்களாய் இருப்பார்களானால், மற்ற 49-பேரும் பிரதிநிதி என்று யாரும் இல்லாமல் விடப்படுவார்கள்; இது கர்த்தருடைய ஆவியல்ல என்பது நம்முடைய கருத்தாய் இருக்கின்றது. முழுச்சபையுமே நலனுக்கடுத்த விருப்பங்களில் ஏகத்துவத்தினை/ஒற்றுமையினை உணர்வதே கர்த்தருடைய ஆவியாய் இருக்கின்றது. ஆனால் ஒருவேளை பெரும்பான்மையினராய்க் காணப்படும் 51-பேரும் பின்வருமாறு: "ஆம், இது எங்கள் விருப்பம்; இந்தச் சகோதரனை மூப்பராய்ப் பார்த்திடுவதற்கு நாங்கள் விரும்புகின்றோம்; இவர் நன்கு தகுதியுடையவராகக் காணப்படுகின்றார் என்று நாங்கள் எண்ணுகின்றோம்; மேலும் எங்கள் சகோதரரிலுள்ள 49-பேரின் விருப்பங்கள் என்னவாக இருப்பினும், அதற்கு நாங்கள் கவனம் கொடுக்கமாட்டோம்" என்று கூறுவார்களானால், இது அன்பின் ஆவியாய்க் காணப்படாது. 51-பேருக்கு மாத்திரமல்லாமல், சிறுபான்மையினராகக் காணப்படும் 49-பேருக்கும் பொருத்தமான பிரயாசம் எடுக்கப்பட வேண்டுமென்று நாங்கள் யோசனை கூறுகின்றோம்; ஒவ்வொருவனும் தனக்கு விருப்பமானதை மாத்திரம் செய்கிறவனாய் இராமல், மாறாக ஒருவர் இன்னொருவரின் உணர்வுகளை மதிக்கவும், ஒருவரையொருவர் மதிக்கவும், ஒருவரிலொருவர் அக்கறை கொள்ளவும் முயற்சித்திட வேண்டும். ஒருவேளை 100-பேர்

எண்ணிக்கையுள்ள சபையாரில், ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையானது, உதவிக்காரர்களின் ஸ்தானத்திற்கு ஒருவரைத் தகுதியாக்கிடும் என்று தீர்மானிக்கப்படுகின்றது என்று வைத்துக்கொள்வோம். சகோதரர்கள் A, B மற்றும் C என்பவர்கள், சகோதரர்கள் D, E மற்றும் F-ஐ விட நன்கு தகுதியானவர் என்ற மிகவும் தெளிவான கருத்தினை, சபையாரில் ஒருவனாகிய நான் கொண்டிருக்கலாம் மற்றும் அந்த மூவருக்கும் வாக்கு அளிப்பதற்கு எனக்கு உரிமையும் காணப்படுகின்றது; பின்னர் ஒருவேளை யாரோ ஒருவர் சகோதரர்கள் D, E மற்றும் F-ஐ குறித்து நல்லெண்ணம் கொண்டுள்ளாரெனில், நானோ: ஆம்! அந்தச் சகோதரன் இந்த மற்றச் சகோதரர்களை விரும்புகின்றார்; இச்சகோதரர்களுக்கு எதிராக உண்மையில் ஏதாகிலும் எனக்குத் தெரியுமா? என்று எனக்குள்ளாகச் சொல்லிடுவேன். ஒருவேளை இவர்களுக்கு எதிராய் நான் எதையும் அறியேனாகில் மற்றும் மற்றச் சகோதரரில் அநேகர் இச்சகோதரர்களை விரும்புகிற காரியமானது, மற்றச் சகோதரர்கள் இச்சகோதரர்களைப் பெற்றுக்கொள்வதை நான் காண விரும்பிடுவதற்கு நல்ல காரணமாய் அமைந்திடும். ஒருவேளை நான் மூப்பனாகப்போகிறேன் என்றால், mere majority/வெறும் பெரும்பான்மையினர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பதைக் காட்டிலும், முழுச்சபையாரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பதே நலமாயிருக்கும். சபையார் யாவரும் தங்கள் மனங்களில் திருப்தியும், மனநிறைவும், மனரம்மியமும் அடைந்திட நான் விரும்பிடுவேன். நான் என்னை அவர்களுடைய இடங்களில் வைத்துப் பார்த்திட விரும்புகின்றேன். எனக்குச் சிறுபான்மையினர் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றேனோ, அதையே நானும் சிறுபான்மையினருக்குச் செய்திட வேண்டுமெனப் பொன்னான பிரமாணமானது எதிர்ப்பார்க்கின்றது. ஒருவேளை நான் சிறுபான்மையினரில் ஒருவராகக் காணப்பட்டு, அவர்கள் பெரும்பான்மையானவர்களாகக் காணப்பட்டிருந்திருப்பார்களானால், என்னைக் குறித்து அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ளும்படிக்கு நான் எவ்வளவாய் விரும்பிடுவேன்? நான் கவனிக்கப்படும்படிக்கும்கூட விரும்பிடுவேன். அப்படியானால் நாம் மற்றவர்களைப்போன்று சமமாய்ப் பெருந்தன்மையுடன் காணப்பட வேண்டும். இது உண்மையில் முக்கியமாயுள்ள ஏதாகிலும் காரியத்தைக் குறித்து நாம் கவனம் குறைவாகவோ அல்லது அக்கறையற்றோ காணப்பட வேண்டும் என்று குறிப்பதாய் இராது. ஒருவேளை ஒருவர் மோசமான மனுஷனாகவோ அல்லது அர்ப்பணிக்கப்படாத மனுஷனாகவோ அல்லது ஏதேனும் விதத்தில் மூப்பனாகுவதற்கு முற்றிலுமாய்த் தகுதியற்றவராய் இருப்பாரெனில், அப்பொழுது நான் முகமுகமாய் எதிர்த்துநின்று, குறிப்பிட்ட காரணங்களினால் என்னால் இந்தச் சகோதரனுக்கு வாக்களிக்க முடியாது என்று கூறிடுவேன். காரணங்களைத் தெரிவிப்பதை என்னால் முடிந்தமட்டும் நான் தவிர்த்துக்கொள்வேன்; ஆனால் ஒருவேளை காரணங்களைத் தெரிவிப்பது அவசியமாகுமானால், அதை என்னால் முடிந்த மட்டிலுமான அன்பான விதத்தில் செய்திடுவேன். நான் எந்தச் சகோதரனைக் குறித்துமான அன்பற்ற வார்த்தையைக் கூறிடவோ அல்லது தீமை பேசவோ மாட்டேன் என்று சகோதர சகோதரிகள் அறிந்திருக்குமளவுக்கு மற்றும் முழுமையான அவசியம் காரணமாகத்தான் ஒரு சகோதரனை எதிர்க்கும் கடமையினை - அதாவது தேவனுக்கான மற்றும் சபையிடத்திலுமுள்ள இப்படிப்பட்ட கடமையினை நான் செய்கின்றேன் என்று சகோதர சகோதரிகள் அறிந்திருக்குமளவுக்கு, அனைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலைமையினை நான் அடைந்திட முற்காலங்களில் பிரயாசம் எடுத்திடுவேன். நாம் ஒருவரிலொருவர் அந்த நம்பிக்கையினை அடைவோமானால், நாம் சொல்லுகிற எதற்கும், அனைத்து மதிப்பும், முக்கியத்துவமும் இருக்கும்.

**(Q250:1) தேர்ந்தெடுத்தல் - முன்மொழிதல்களை நிறைவுசெய்தல்.**

கேள்வி (1913)-1- ஒரு குறிப்பிட்ட ஆராய்ச்சி வகுப்பினை நடத்தும்படிக்கு மூப்பர் ஒருவரை நியமித்தல் - தொடர்புடைய விஷயத்தில், ஒருவர் முன்மொழியப்பட்ட பிற்பாடு, இன்னும் முன்மொழியப்படுவதற்கு நேரம் கொடுக்காமல், முன்மொழிதலை நிறைவு செய்வது சரியான காரியமாய் இருக்குமா? இது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட சகோதரர்களால் மூப்பர்களாக ஊழியம் புரியப்படும் ஒரு சபைக்குப் பொருந்துமா?

பதில் - பாராளுமன்ற விதிகள் என்று அழைக்கப்படுகின்ற விதிகள் காணப்படுகின்றன. அதாவது பாராளுமன்ற அவைபோன்ற குழுவினுடைய செயல்பாடுகளுக்குப் பொருந்தும் விதிகளாகும் மற்றும் இந்த விதிகளானது மகாசட்டசபைக் கூட்டங்கள் தொடர்பாகவும், சிறு கூட்டங்கள் மற்றும் பெரிய கூட்டங்கள் தொடர்பாகவும் கூடப் பயன்படுத்தப்படுகின்றன.

இவைகள் மிகவும் நல்ல விதிகளாகவும், பொதுவாய் மறுப்புத் தெரிவிக்கப்படக் கூடாதவைகளாகவும் காணப்படுகின்றன. இவைகள் பொதுவாகவே நியாயத்திற்குரிய மிகவும் ஞானமான மற்றும் பரிவுள்ள விதிகளாகக் காணப்படுகின்றன. அதேவேளையில் தேர்ந்தெடுத்தலின் விஷயத்திலும் மற்றும் கூட்டங்களுக்கான விதிகளின் விஷயத்திலும், நீதிக்கும் அதிகமாய்க் கடந்துசென்று, அன்பிற்கேற்ப நிர்வகிக்க வேண்டியவர்களாகவும் மற்றும் அன்பே நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது என்று அறிய வேண்டியவர்களாகவும், இக்காரியங்கள் தொடர்பான நீதியான மற்றும் நியாயமானவைகளுக்கும் மேலாக செய்ய வேண்டியவர்களாகவும் கர்த்தருடைய ஜனங்கள் இருப்பதினால், அவர்கள் வேறுவகையான பொதுக்கூட்டங்களுக்குப் பொருந்தக்கூடிய பிரமாணத்தின் விஷயத்தில், பிரமாணத்தினுடைய எழுத்தினைக் கடைபிடிக்க வேண்டுமென ஒருவரையொருவர் மிகவும் கடுமையாய் வற்புறுத்துகிறவர்களாய்க் காணப்படக்கூடாது. அவர்களுடைய அன்பின் அனுதாப கட்டுகளானது, அவர்கள் அனைவரையும் பிரியப்படுத்துவதற்கு விரும்புமளவுக்குக் காணப்பட வேண்டும். ஒருவேளை இது ஒரு கூட்டம் என்று வைத்துக்கொள்வோம் மற்றும் இங்கு மூப்பர்கள் சிலரை நாம் தேர்ந்தெடுக்கப்போகின்றோம். இங்கு இருப்பவர்களில் சிலர் சகோதரர் "A"-கும் மற்றும் சிலர் சகோதரர் "B"-கும் மற்றும் சிலர் சகோதரர் "C"-கும் மற்றும் சிலர் சகோதரர் "D"-கும் மிகுந்த மதிப்பு வைத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை நான் அறிவேன் என்று வைத்துக்கொள்வோம்; மற்றும் இவர்களில் சகோதரர் "A" மற்றும் "C" எனது விருப்பத்தின்படியானவர்களாய் இருக்கின்றனர்; சகோதரர்கள் "B" மற்றும் "D" குறித்து நான் அவ்வளவுக்கு எண்ணுகிறதில்லை. சகோதரர் "A" மற்றும் "C"-ஐ நான் முன்மொழிந்து, முன்மொழிதலை நிறைவுபண்ணிடுவேன் என்று நான் சொல்லிடலாம். இதனால் மிகவும் துணிவற்றவர்கள் வாய்ப்பில்லாதவர்களாய்ப் போவார்கள். இது அன்பானதாய் இருக்குமா? இல்லை. அன்பே நம்முடைய விதியாய் இருக்கின்றது மற்றும் அன்பானது உலகத்திலுள்ள பாராளுமன்ற விதிகள் அனைத்திற்கும் முன்னதாகக் கடந்துவந்து செயல்படுகின்றது. அன்பானது - இதோ அங்குக் காணப்படும் சகோதரனுக்கும், இதோ அங்குக் காணப்படும் சகோதரிக்கும் மற்றும் அனைத்துச் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் நல்ல மற்றும் நியாயமான/பாரபட்சமற்ற வாய்ப்புக் கிடைக்கவேண்டும் மற்றும் இவ்விஷயத்தில் அவர்களது கருத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகின்றேன் என்று கூறிடும். கர்த்தருடைய ஏற்பாட்டின் கீழ் அவர்களுக்கு உரியதான உரிமைகளை நான் அவர்களிடமிருந்து எடுத்துக்கொள்ள விரும்புகிறதில்லை. ஒருவேளை நான் நுணுக்கமாக ஆராய்பவராகவும், மிகவும் அனுபவமுடையவராகவும் காணப்பட்டு, எனக்குத் தகுந்தாற்போல் அனைத்தையும் மாற்றமுடிபவராகக் காணப்படலாம்; ஆனால் இளையச் சகோதரர்களை மனதில் குழப்பி, அவர்களது சித்தங்களைச் செய்ய விடாமல் ஆக்கிடுவதும், அவர்களை ஏதோ ஒன்றிற்கு வாக்களிக்க (vote) பண்ணுவதும் மற்றும் இப்படிச் செய்ததை அவர்கள் அறியாமலிருந்து, ஆனால் பிற்பாடு அதிருப்தியடைந்து,"அக்காரியத்தினை நான் சரியாய்ப் புரிந்திருப்பேனாகில், நான் வேறு மாதிரி செயல்பட்டிருப்பேனே" என்று கூறிடுவதற்கு ஏதுவான நிலையில் இளையச் சகோதரர்களை ஆளாக்குவதும், ஒரு மூத்த சகோதரனான எனக்குத் தகுதியாய் இராது. இது திருப்திகரமான கூட்டமேயல்ல. ஒரு சபையார் மூப்பர்களைத் தேர்ந்தெடுப்பதற்கெனக் கொண்டிருக்கும் கூட்டமானது, எல்லாருடைய உரிமைகளும் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட மற்றும் முடிவுகளில் அனைவருமே மகிழ்ச்சியும், திருப்தியும் உணரத்தக்கதாய் மிகவும் வெளிப்படையாயும் மற்றும் நியாயமாயும் நடைபெறும் ஒரு கூட்டமாகக் காணப்பட வேண்டும். நம் அனைவருக்குமே நம்முடைய வாய்ப்புகள் கிடைத்தது மற்றும் நான் விரும்பத்தக்க விதம் என்று எண்ணின விதத்தில் ஒருவேளை நடைபெறவில்லை என்றாலும், அது நல்லதொரு விதத்தில் செய்யப்பட்டுள்ளது என்று எண்ணிடுவேன்; ஏனெனில் எல்லாருக்கும் நியாயமான பங்குகிடைத்தது - அது ஒருவரையொருவர் கிழித்தெறிவதற்கான பிரயாசமாக இருக்கவில்லை. நாம் ஒருவரையொருவர் கிழித்தெறிய கூடாது. ஒருவேளை ஒருவரை நீங்கள் அறிந்திருக்கவில்லையெனில் மற்றும் நீங்கள் அறிந்திருக்கும் எவராலும் அவருக்குச் சான்று பகிரப்படவில்லையெனில், அவருக்கு வாக்குச் செலுத்திடாமல் இருந்துவிடுங்கள். ஒருவேளை நீங்கள் மிகுந்த நம்பிக்கைக்கொண்டிருக்கும் யாரோ ஒருவர் அங்கிருந்து, இச்சகோதரனுக்குச் சான்று பகர்ந்து, நான் அச்சகோதரரை முன்மொழிகின்றேன் என்று கூறுவாரானால்; பின்னர் நீங்களோ: "சகோதரர் ரசல் அவர்கள் சகோதரர் "W" அவர்களை முன்மொழிந்துள்ள காரியமானது, அவர் இவரைக்குறித்து அறிந்திருக்கின்றார், இல்லையேல் அவர் இவரை முன்மொழிந்திருக்க மாட்டார். எனக்குச் சகோதரர் "W" அவர்கள்

--3029--

பரிட்சயமானவரல்ல, ஆனாலும் சகோதரர் ரசல் அவர்கள் இவரை முன்மொழிந்தும் மற்றும் சகோதரர் ஹிரிஷ் அவர்கள் வழிமொழிந்தும் இருக்கின்றனர் மற்றும் அவர்கள் இருவரையும் குறித்து நான் அறிந்திருப்பதினால், சகோதரர் "W" அவர்கள் சரியானவர் என்று அறிந்துகொள்வேன்" என்று எண்ணிட வேண்டும். பிறர் வழியான கூற்றினால் (indirect) பெறப்படும் அறிவின் மீது சார்ந்திருக்கும் ஓர் உரிமையினை நாம் பெற்றிருக்கின்றோம். சகோதரர் "W"-ஐ நமக்கு நன்கு பரிட்சயமில்லை மற்றும் அவருக்கு வாக்களிக்க அவரது காரியங்கள் அனைத்தும் போதுமாய் நமக்குத் தெரியாது; அவருக்கு வாக்களிப்பதற்கு ஏதுவாகச் சுட்டிக்காட்டுவதற்கு ஏதாகிலும் நமக்குக் காணப்பட வேண்டும். ஆனால் ஒருவேளை யாரேனும் அவருக்குச் சான்று பகருவார்களானால், அது வங்கியில் நடைபெறுவது போன்றே காணப்படும்; அதாவது நீங்கள் வங்கிக்குச் செல்கின்றீர்கள் மற்றும் உங்களது பெயர் ஸ்மித் என்று வைத்துக்கொள்ளலாம்.

வங்கியில்: "திரு. ஸ்மித் அவர்களே இந்த வங்கியில் எங்களுக்கு உங்களைத் தெரியாது; மற்றும் நாங்கள் உங்கள் தரப்பினர்களை அறிந்து கொள்ளாதது வரையிலும் எங்களால் உங்களுக்கு எந்தத் தொகைகளையும் செலுத்திட முடியாது. உங்களுக்கு திரு. ஹிரிஷ் அவர்களைத் தெரியுமா?" என்று கேட்கப்படுகின்றது.

நீங்களோ: "ஆம், அவர் எனக்கு உறுதிச் சீட்டு அளிப்பார்" என்று சொல்கின்றீர்கள்.

வங்கியோ: "திரு.ஹிரிஷ் அவர்களே, நீங்கள் திரு. ஸ்மித் அவர்களுக்கு உறுதிச் சீட்டு அளிக்கின்றீர்களா?" என்று கேட்கின்றது.

திரு. ஹிரிஷ் அவர்கள்: "ஓ! ஆம், இது திரு. ஸ்மித் ஆவார்; அவருக்கு நான் உறுதிச் சீட்டு அளிக்கின்றேன்; அவருக்கு உத்தரவாதம் அளிக்கின்றேன்" என்று சொல்கின்றார்.

பின்னர் வங்கியானது: "சரி, திரு ஸ்மித் அவர்களே, உங்களை திரு. ஹிரிஷ் அவர்கள் அறிவார் என்று கூறுகின்றார்; ஆகையால் நாமும் அறிமுகமாகிக்கொள்கின்றோம்" என்று கூறிடும்.

இப்படியே சபையாரிலும்கூடக் காணப்படுகின்றது. யாரோ ஒருவர் சகோதரர் ஸ்மித் அவர்களுக்குச் சான்று பகருகின்றார் மற்றும் நீங்களோ: இச்சகோதரனுக்குச் சான்று பகரப்போகிறவர்களையும் அறிவேன் என்பீர்கள். நீங்கள் அறியாத ஒருவரை நீங்கள் ஒருபோதும் முன்மொழியக்கூடாது; யாரோ ஒருவர் ஸ்மித் என்று கூறினதற்காக மாத்திரம் நீங்கள் அவரை ஒருபோதும் முன்மொழியக்கூடாது. யாரோ ஒருவர் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக விவேகமற்று, ஸ்மித்தையோ அல்லது பிரெவுண் அவர்களையோ கூறிவிடாதீர்கள். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்று அறிந்து செயல்படுங்கள் அல்லது அதைச் செய்யாதீர்கள்.

இன்னொரு காரியம்: மூப்பர்களுக்கான இத்தகைய தேர்ந்தெடுத்தலை நாம் பெற்றிருக்கும்போது, நான் பின்வருமாறு: "எனக்குச் சகோதரர் "A" அவர்களையும், சகோதரர் "C" அவர்களையும் பிடிக்கும் மற்றும் என்னைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு சகோதரர்களே மற்றச் சகோதரரைக் காட்டிலும் மிகவும் சிறப்பானவர்களாகத் தெரிகின்றனர் மற்றும் சகோதரர்கள் "A" மற்றும் "C" மூப்பர்களாக இருந்தால்தான் மற்றும் சகோதர்கள் "B" மற்றும் "D" மூப்பர்களாக இல்லாமலும் இருந்தால்தான் சபையாருக்கு நன்கு ஊழியம் புரியப்படலாம் என்று நான் எண்ணுகின்றேன்" என்று வைத்துக்கொள்வோம். இதை நான் திணிக்க முற்பட்டு, முகஸ்துதி செய்து பணியவைத்திடலாம் மற்றும் நயமாய்ப் பேசி அவர்களது வாக்கினைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இப்படிச் செய்வது சரியாய் இருக்காது. மாறாக நான் பின்வருமாறு: "அநேகர் சகோதரர் "B" அவர்களையும் மற்றும் வேறு சிலர் சகோதரர் "D" அவர்களையும் மிகவும் விரும்புகின்றனர் என்று நான் நன்கு அறிவேன்; இவர்கள் இருவருக்குமே, சகோதரர்கள் "A" மற்றும் "C" போன்று நல்ல தகுதிகள் காணப்படுவதாக எனக்குத் தெரியவில்லை; ஆனால் சிலர் இவர்களை விரும்புகின்றனர் மற்றும் தங்களுக்கு இவர்களால் பிரயோஜனம் உண்டாகும் என்று கூறுகின்றனர் மற்றும் அவர்களது குணங்களுக்கு எதிராய்ச் சொல்லிடுவதற்கு நான் எதையும் அறியேன் மற்றும் மற்றவர்கள் அவர்களுடைய ஊழியத்தினால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்பவர்களாக இருப்பதினால், அவர்களும்

ஊழியம் புரிவதில் நான் மகிழ்ச்சிக்கொள்ள வேண்டும்" என்று எண்ணிட வேண்டும். அவர்கள் நல்ல குணலட்சணமுடைய மனிதர்கள் என்று அறிந்து, அவர்களில் யாருக்கேனும் மற்றும் அனைவருக்குமே முன்மொழிவதில் நான் பிரியம்கொள்வேன். இது அவர்கள் சிறந்தவர்கள் என்று நான் எண்ணுவதாகாது, மாறாக நான் விரும்புகிறவர்களையே நான் முன்மொழிந்திடுவேன் மற்றும் ஒருவேளை மற்றவர்களும் முன்மொழியப்பட்டிருக்க மற்றும் வழிமொழிய ஆள் இல்லாமல் இருந்தால், "நான் சகோதரர்கள் "B" மற்றும் "D" அவர்களை வழிமொழிகின்றேன்" என்று கூறிடுவேன். ஏன்? அவர்கள் நீங்கள் விரும்பினவர்கள் இல்லையே என்று நீங்கள் என்னிடம் கேள்விக் கேட்கலாம். இல்லைதான், ஆனாலும் அவர்களை மற்றச் சில சகோதரர்கள் விரும்புகின்றனர் என்று நான் அறிவேன் மற்றும் சபையார் யாவரும் ஊழியம்புரியப்பட நான் விரும்புகின்றேன். நான் சிறந்தவர்கள் என்று எண்ணினவர்களை மாத்திரம் பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை, மாறாக மற்றவர்களாலும் சிறந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்; நான் திருப்திக் கொள்வது மாத்திரமல்லாமல், சகோதரர்கள் யாவரும் திருப்தியடைய விரும்புமளவுக்குப் போதுமான அன்பையுடையவனாக நான் இருக்க வேண்டும். இந்த ஆவியே ஒவ்வொரு சபையாரிடத்திலும், ஒவ்வொரு தேர்ந்தெடுத்தலிலும் காணப்பட வேண்டும் மற்றும் அங்குக் குழப்பம் குறைவாகவே காணப்படும் என்று நான் கருதுகின்றேன்.

ஒருவேளை வேறுயாரையாகிலும் பெற்றுக்கொள்வதற்குப் பிரியப்படுகின்ற சிலர் காணப்படுகின்றனர் என்று வைத்துக்கொள்வோம். முற்றிலுமாகப் பொருத்தமற்றவர்கள் என்று நான் கருதிடும் சிலர் முன்மொழியப்பட்டிருக்கின்றனர் என்று வைத்துக்கொள்ளலாம்; அவருக்காய் யாராகிலும் வாக்களித்துவிடுவார்கள் என்று நான் அச்சமடைவேன். நானோ: "அருமையான நண்பர்களே சகோதரர் "W" அவர்கள் முன்மொழியப்பட்டிருக்கின்றார். அவருக்கு எதிராய் ஒரு வார்த்தைச் சொல்லிடுவதற்கோ அல்லது அவரைச் சத்துருப்போன்று காண்பித்திடுவதற்கோ நான் விரும்பவில்லை; எனினும் என்னுடைய கணிப்பின்படி, அவரை நாம் மூப்பர்களில் ஒருவராகப் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதே சிறந்தது என்று நான் எண்ணினேன். ஆகையால் தேர்வு செய்வது குறித்த காரியங்கள் நடந்துகொண்டிருக்கையில், நான் அவருக்கு வாக்களிப்பதில்லை என்று தெரியப்படுத்துகின்றேன். சகோதரர் "W" அவர்களே நீங்கள் மூப்பராக ஊழியம் புரியாமலிருப்பது நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகிறதினாலேயே நான் உங்களை எதிர்க்க வேண்டியிருக்கிறதேயொழிய, மற்றப்படி நான் எந்த விதத்திலும் உங்களை எதிர்க்கவில்லை" என்பேன். நான் அவரிடத்தில் முழுமையாய் ஒளிவுமறைவு இன்றிக் காணப்படுவேன் மற்றும் அவருக்கு எதிராய் ஒரு வார்த்தைக்கூடச் சொல்லமாட்டேன் மற்றும் "அவர் பட்டணத்தில் அநேகம் கடன்பட்டிருக்கின்றார் என்பதினால் நான் அவரை எதிர்க்கின்றேன் மற்றும் பட்டணம் எங்கும் இவர் கடன்பட்டிருக்கின்றார் என்பதை அறிவார்கள் மற்றும் அவரால் நம்முடைய சபைக்கு அவமானம் காணப்படுகின்றது" என்று சொல்லமாட்டேன். சகோதரர் "W" அவர்களைக் குறித்து நான் எதுவுமே பேச வேண்டியதில்லை. நானோ: "சகோதரர் 'W' அவர்கள் மூப்பராகிடுவதற்கு என்னால் வாக்கு (vote) அளித்திட முடியாது மற்றும் அவரை மூப்பராகக் காண நான் விரும்பவில்லை; மற்றவர்களால் கர்த்தருடைய காரணங்களானது நன்கு ஊழியம்புரியப்படும் என்று நான் நம்புகின்றேன்" என்று மாத்திரம் கூறிடுவேன். நாம் ஒருவரையொருவர் துண்டுத்துண்டாகக் கிழித்துப் போட அவசியமில்லை. சகோதரர் "W" அவர்கள் பட்டணத்தில் கடன்பட்டிருக்கின்றார் என்பது உண்மையாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். ஒருவேளை நாம் அவரிடத்தில் கேட்டால், அவர் சில நல்லக் காரணங்களைக் கொடுக்க முடிபவராகக் காணப்படலாம்.

### (Q253:1) கூட்டங்களில் கலந்துகொள்ளாத மூப்பர்களின் தேர்ந்தெடுத்தல்.

கேள்வி (1913)-1- வாரநாட்களில் பிற்பகல் நடக்கும் கூட்டத்திலோ, அனைத்து மாலை கூட்டங்களிலோ மற்றும் பயண ஊழியர் சபைக்கு வரும்போதுகூடக் கலந்துகொள்ளாத மூப்பரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

பதில் - ஏதோ சில வேலையின் நிமித்தமாக மதிய கூட்டத்திற்கு அவரால் வரமுடியாமல் போயிருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தச் சகோதரன், அவர் பேசக்கூடிய கூட்டத்திற்கு மாத்திரம் வருவாரானால், அவர் அனைத்துக் கூட்டத்திற்கும் வரும்வரை, அவர் தேர்ந்தெடுக்கப்படாமல் விடப்படவேண்டும் என்று நான்

நினைக்கிறேன். மற்றக் கூட்டத்திற்கு வராமல், தான் பேசக்கூடிய கூட்டத்திற்கு மாத்திரம் வருவது என்பது - அவர் மூப்பருக்குத் தகுதியானவர் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; இன்னுமாக மற்றவர்களால் போதிக்கப்படுவதற்கும், மற்றவர்களின் வார்த்தைகளைக் கேட்பதற்கும் விருப்பம் தெரிவிக்காமல், தான் மாத்திரமே பேச வேண்டும் என்றும், சபையிலுள்ள யாவரையும் காட்டிலும் தான் மேன்மையாக இருப்பவர் என்றும் அவர் எண்ணுவதைச் சுட்டிக்காட்டுவதாக நான் நினைக்கிறேன். "நாம் அனைவரும் சகோதரர்கள்." ஒருவர் "நான் சகோதரர்களில் ஒருவரல்ல" என்றும், "தனக்குப் பேசும் வாய்ப்பு இருக்கும்போது மாத்திரமே சபைக்கு வரவேண்டும்" என்றும் நினைக்கின்ற ஒரு சகோதரனுக்காக நான் அஞ்சுகிறேன். அவருடைய நன்மைக்காக அவரைத் தேர்ந்தெடுக்காமல் இருப்பது நல்லது என்று நான் கருதுகிறேன். அந்தச் சகோதரனை இராஜ்யத்திற்குத் தகுதியற்றவராக மாற்றக்கூடிய வேலையை நாம் செய்ய வேண்டாம். நாம் அந்தச் சகோதரனையும், அவருடைய நலனையும், சபை மற்றும் அதன் நலனையும் கருத்தில் கொள்ளவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

**(Q253:2) தேர்ந்தெடுத்தல் - குழப்பத்திலிருக்கும்போது வாக்களிக்காமல் இருப்பது தவறா?**

கேள்வி (1914)-2- சபையின் காரியங்களினிமித்தமாக வருத்தத்திலும், குழப்பமடைந்த நிலையிலும் காணப்பட்ட ஒரு சகோதரி, தேர்ந்தெடுத்தல் கூட்டத்தில் கலந்துகொண்டும் வாக்களிப்பதில் பங்குகொள்ளவில்லை. அச்சகோதரி வாக்குகள் ஒருவேளை செலுத்தியிருந்தால், யாருக்குச் செலுத்தியிருப்பார்களோ, அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும் விட்டார்கள். இந்தச் சகோதரி வாக்குச் செலுத்தாதது தவறா? இது பாவமா?

பதில் - அச்சகோதரி தனது சிறந்த பகுத்தறிதலின்படி இதைச் செய்திருக்கிறாள் என்று நான் அனுமானிக்கின்றேன். ஆகையால் இது பாவமல்ல என்று நாம் அறிவோம். உங்கள் மனசாட்சி உங்களை வழித்தவற செய்யக்கூடியதாய் ஒருவேளை இருந்தாலும்கூட, உங்களுடைய மனசாட்சியின்படி நடப்பதினால் ஒருபோதும் நீங்கள் குற்றவாளிகளல்ல. எத்தகைய பிரச்சனைகள் வந்தாலும், உங்கள் மனசாட்சியின்படி நீங்கள் செய்தால், நீங்கள் சரியானவைகளைச் செய்பவர்களாகவே இருப்பீர்கள். ஆகவே தான் அறிந்துகொண்டதற்கு ஏற்ப, தன்னால் முடிந்ததைச் செய்யும் ஒருவனை அல்லது ஒருத்தியைத் தேவன் பாவஞ்செய்ததற்கான பொறுப்பாளியாகக் கருதுவதில்லை. இதை இப்படியாகக் கருதி விட்டுவிடுங்கள்.

**(Q253:3) தேர்ந்தெடுத்தல் - சபைக்கான தகுதியான ஊழியர்கள்.**

கேள்வி (1915)-3- உயர்வான சமுதாய அந்தஸ்துடைய மனுஷன் ஒருவர் சத்தியத்தின் மீது ஆர்வம் அடைந்தவரானார்; ஆனால் அவர் அர்ப்பணம் பண்ணிடவில்லை. போதிய வசதி வாய்ப்புள்ளவர்களும் மற்றும் இப்போது சத்தியத்தில் இல்லாதவர்களுமான ஒரு சகோதரி மற்றும் அவளது கணவனின் செல்வாக்கினால் இம்மனுஷன் எங்களது சபையின் வழிநடத்துனனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வேறொரு சகோதரன் அவ்வளவுக்கு அறிவுடையவராக இராதபடியினால், அவரைச் சபையார் தேர்ந்தெடுக்கவில்லை. எங்கள் சபையில் இதன் தாக்கமானது அடிக்கடி உணரப்படுகின்றது மற்றும் எங்கள் சபையின் ஒழுங்கானது, வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியினுடைய காரியங்கள்படியாக இல்லை. இதற்கு உங்களது ஆலோசனை என்ன?

பதில் - அன்பார்ந்த நண்பர்களே, ஆறாம் தொகுதியானது, வேதாகமத்திற்கு முழு இசைவாகவே உள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். அது வேதாகமத்திற்கு இசைவாய்க் காணப்படுகின்றது என்று நீங்கள் நம்புகிறீர்கள் என்றால், வேதவசனத்தின் அடிப்படையிலான அந்த யோசனைகளை நடைமுறைப்படுத்துவது உங்களது கடமையாக இருக்கும். கர்த்தருக்கு முழுமையாய் அர்ப்பணித்துள்ளதாகத் தன்னைக் குறித்து அறிக்கைப்பண்ணிக்கொள்ளாத ஒரு நபரை போதிக்கும் பொறுப்புடைய எந்த ஓர் ஊழியத்திற்கும், மூப்பராகவோ அல்லது உதவிக்காரராகவோ தேர்ந்தெடுப்பது என்பது சரியான ஒழுங்காய் நிச்சயமாக இருக்காது என்பது என்னுடைய கணிப்பாய் இருக்கின்றது. அவர் கிறிஸ்துவினுடைய சபையின் அங்கத்தினனே அல்ல; ஆகையால் அவரால் சபையில் எந்த மேற்பார்வை ஊழியத்தினையும் செய்திட முடியாது மற்றும் அவரை இத்தகைய ஊழியத்தில் வைப்பது என்பது வசனத்தினுடைய

ஆவிக்கு முரணான காரியமாய் இருக்கும் மற்றும் சபையாரும் இப்படிச்செய்வது தவறாகும். அடுத்த தேர்ந்தெடுத்தலின்போது சபையார் என்ன செய்திட வேண்டும்? அவர்கள் இம்மனுஷனுக்கு வாக்கு (vote) கொடுத்திடக்கூடாது.

யாரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியாது; ஆனால் ஒருவேளை அது நானாக இருந்தாலும்சரி, எனக்கும் இப்படியே செய்யப்படவேண்டும். இம்மாதிரியான சந்தர்ப்பத்தில், நான் எவ்வளவுதான் செல்வாக்குடையவனாக இருப்பினும், சபையார் என்னைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று நான் எண்ணிடுவேன். இவ்விஷயமானது வேறொரு மூப்பனைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏதுவாய்க் சபையாருக்குக் கருத்து வேறுபாட்டினை உண்டாக்குகிறதென வைத்துக்கொள்ளுங்கள். அப்படியென்றால் இவ்விஷயம் சபையாரைப் கருத்து வேறுபாட்டிற்குள்ளாக்கட்டும். சபையானது கருத்து வேறுபாட்டிற்குள்ளாவதைக் குறித்து நாம் அக்கறையற்று இருக்க வேண்டுமென்றும், மற்றவர்களுடைய உணர்வுகளைக் குறித்து நாம் அக்கறையற்று இருக்கவேண்டுமென்றும் நான் சொல்லவில்லை; மாறாக காரியம் முழுமையாகச் சபையாருக்கு முன்வைக்கப்பட்ட பிற்பாடு, சரியான வழிமுறையைக் காண்பவர்கள், தேவனுடைய பிள்ளை என்று தன்னைக் குறித்து அறிக்கைபண்ணுகின்ற ஒருவரைத்தவிர, வேறு எவரும் எந்த ஊழியமும் செய்திடக்கூடாது என்றும், முழுமையாய் அர்ப்பணம் பண்ணாதவர்கள் தவிர மற்றபடி யாரும் வாக்களிக்கக்கூடாது என்றுமுள்ள உண்மைக்காக நின்றிடவேண்டும். ஒருவேளை இக்கருத்தானது சபையாருடைய கருத்தாகக் கொண்டுவரப்பட முடியவில்லை, உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்கள் பின்வாங்கிட வேண்டும் மற்றும் வேதாகம ஏற்பாட்டின்படி, அவர்கள் ஒரு மகத்தான ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நான் எண்ணுகின்றேன்.

**(Q254:1) தேர்ந்தெடுத்தல் - வாக்குறுதி (vow) தொடர்பாக.**

கேள்வி (1915 - Z.5793)-1- நம்மில் அநேகர் மிகவும் உதவிகரமாக உள்ளது என்று கண்டுகொண்டுள்ளதும் மற்றும் அனைவருக்கும் பரிந்துரைக்கப்பட்டதுமான விசேஷித்த வாக்குறுதியை (vow) எடுத்துக்கொள்ளாதவர்கள் சபைக்கான ஊழியக்காரராகத் தேர்ந்தெடுக்கப்படலாமா?

பதில் - கர்த்தர் தாமே விசேஷமாய் அதை இந்தக் காலக்கட்டத்தில் கொண்டு வந்துள்ளார் என்றும், அது ஓரளவுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மத்தியில் பரீட்சையாக விளங்கும்படிக்கு நோக்கம் கொண்டுள்ளார் என்றும் நாம் நம்பினாலும், வாக்குறுதியைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக நாம் ஆக்கிவிட முடியாது; அதைச் சகோதரத்துவத்திற்கான பரீட்சையாக்குவதற்கு வேதமும் நமக்கு அதிகாரம் வழங்கிடவில்லை. மூப்பர்களுக்கான தகுதிகளின் மத்தியில் குறிப்பிடப்படவில்லை என்கிறபோதிலும், முன்மொழியப்படும் சகோதரனுடைய விநோதமான பாணிகள் அல்லது சரியற்ற ஆங்கில மொழிப்பேச்சானது கவனிக்கப்படப் பாத்திரமானவைகளாய் இருப்பதுபோன்று, வாக்குறுதியும் தெய்வீகக் கட்டளையின் காரியமாய் இராமல், மாறாக பகுத்துணரும் காரியமாய்க் காணப்படுகின்றது.

எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் மத்தியிலுள்ள அன்புக்குரிய மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் அனைவருமே - வாக்குறுதி நியாயமான ஒன்று என்றும், அது தெய்வீக வார்த்தைகளுடனும், நம்முடைய அர்ப்பணிப்பின் வாக்குறுதியுடனும் இசைவாய் இருப்பதையும் மற்றும் இவைகளை நிறைவுப்படுத்தும் இளநீல தொங்கல்களாக அது இருக்கின்றது என்றுமுள்ள ஒருமித்தக் கருத்தில் பார்க்கின்றார்கள் என்று நாம் அறிவோமானால், இதனிமித்தம் நாம் பெரிதும் களிகூருவோம். அந்த வாக்குறுதிக்குக் கிறிஸ்தவ சகோதரன் அல்லது சகோதரி என்ன மறுப்புத் தெரிவிக்கக்கூடும் என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவர்களின் மறுப்பானது, அவர்களின் இருதயத்தினுடைய நோக்கங்களில் ஏதேனும் தவறு காணப்படக்கூடும் அல்லது அவர்களது புரிந்துகொள்ளுதலில் ஏதேனும் குறைபாடு இருக்கக்கூடும் என்று சுட்டிக்காட்டுகின்றது என்று நம்மில் சிலருக்குத் தோன்றலாம். எனினும் மிகவும் நன்றாய் நியாயந்தீர்ப்பதற்கு நாம் வல்லவர்களல்ல. "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

வாக்குறுதியை எடுத்துக்கொண்டுள்ளவர்களுக்கும், அதுகுறித்த ஒருமித்த கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும், மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் முன்னுரிமைக் கொடுக்கப்படலாம் என்பது எங்களுடைய

கருத்தாய் இருக்கின்றது. எனினும் ஒருவேளை சபையாரை வழிநடத்துவதற்குத் திறமிக்கவர்களாய் இருக்கும் சகோதரர்கள், மற்ற அனைத்து விதங்களிலும் ஏற்கத்தகுந்தவர்களாகவும், வாக்குறுதியினை எதிர்க்காதவர்களாகவும் இருப்பார்களானால், அவர்கள் தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படியாகவே - தங்களால் முடிந்தமட்டும், வாக்குறுதி உள்ளடக்கியுள்ள காரியங்கள் அனைத்திற்கும் இசைவாக தாங்கள் வாழ்வதாகக் கூறிக்கொண்டு, அந்த எளிமையான வாக்குறுதி மற்றவர்களுக்கு உதவியாக இருக்க, அந்த வாக்குறுதியைத் தாங்கள் எடுப்பது என்பது ஏதேனும் விதத்தில் தங்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தினால், அதை எடுக்க மறுக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுபவர்களுக்கும் பொருந்தும். நம்மால் ஒருவேளை அவர்கள் இருதயங்களினுடைய எண்ணத்தினையோ, அவர்களது மனதின் விவாதங்களையோ புரிந்துகொள்ள முடியாமல் இருக்கலாம், எனினும் இம்மாதிரியான தருணங்களில் நம்மால் புரிந்துகொள்ள அல்லது உணர்ந்துகொள்ள முடியாதவைகளை விட்டுவிடலாம்.

**(Q255:1) தேர்ந்தெடுத்தல் - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகள்.**

கேள்வி (1915 - Z.5793)-1- மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுப்பதற்குரிய விதிமுறைகள் யாவன?

பதில் - சபையாருக்கான ஊழியக்காரர்களாகிய - மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் தேர்ந்தெடுத்தல் குறித்து ஆறாம் தொகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதான யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் சகோதரர்களில் சிலர் சிரமப்படுவதை நமக்கு வந்திட்டதான அநேகம் கேள்விகளானது சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது.

தேர்ந்தெடுத்தல் காரியத்தில் மாற்ற முடியாத நிலையான விதிகளை/நியமங்களைக் கொடுத்திட வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. வேதாகமம் அப்படியாக எதையும் கொடுக்கவில்லை மற்றும் அப்படியாக நியமங்களை ஏற்படுத்திடுவதற்கு எவருக்கும் உரிமையும் இல்லை. கூடுமானமட்டும் தேர்ந்தெடுத்தலானது ஏகமனதுடன் காணப்பட வேண்டும் என்பதும், ஒரு சகோதரனுக்குச் சபையாரில் 75 அல்லது இதற்கும் அதிகமான சதவீதமானவர்கள் ஆதரவு கொடுக்காத பட்சத்தில், அந்த ஊழியத்தினை - பணியினை அவர் ஏற்றுக்கொள்வது ஞானமற்றதாய் இருக்கும் என்பதும்தான் எங்களுடைய கருத்தாய் இருந்தது. இதினிமித்தம் 25 அல்லது 30 சதவீதமானவர்களாய்க் காணப்படும் சிறுபான்மையானவர்கள், சபையாருக்குத் தடங்கல் செய்யவும் மற்றும் தேர்ந்தெடுத்தலைத் தடைப்பண்ணவும் தைரியமூட்டப்பட வேண்டும் என்ற அர்த்தத்தில் நாங்கள் சொல்கின்றோம் என்றாகாது.

சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அன்பானது, மற்றவர்களின் உணர்வுகளையும் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தும் தருணங்களைத் தவிர மற்றபடி சபையில் - ஒரு வாக்கில் (vote) பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படுபவர்களே எந்தக் காரியத்தையும் தீர்மானிக்கின்றவர்களாய் இருப்பார்கள். உதாரணத்திற்கு நூறு பேரைக் கொண்ட ஒரு சபையில் 51-பேர்கள், சபையின் ஊழியக்காரர்களாய் யார் இருக்க வேண்டும் என்பது தொடர்பான காரியத்தில், தீர்மானிப்பதற்கு உரிமை பெற்றவர்களாய் இருக்கின்றனர் மற்றும் மீதமான 49 பேரும் தாங்கள் சிறுபான்மையானவர்களாய் மாத்திரம் இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மிகவும் அமைதலுடன், ஆட்சேபணையின்றி ஒத்துக்கொண்டு, பெரும்பான்மையானவர்களின் விருப்பத்திற்கு ஆதரவு வழங்கிட உண்மையாய் நாடிட வேண்டும்.

அன்பின் ஆவியும், சபையார் யாவருடைய சிறந்த நலனுக்கடுத்தக் காரியங்களும் மாத்திரந்தான் 51 சதவீதத்திற்கு அதிகமானதை யோசனையாகத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அன்பானது ஏகமனதான வாக்கினைச் செலுத்திட நாடிட வேண்டும். ஆனால் இது எப்படி அடையப் பெறலாம்? நாங்கள் ஒரு யோசனையை முன்வைக்கின்றோம்:

ஒருவேளை ஒரு சபையில் நூறு பேர்கள் இருக்கின்றார்கள் என்றும், ஊழியத்திற்கு ஆறு மூப்பர்கள் தேவைப்படுவதாகக் கருதுகின்றார்கள் என்றும் வைத்துக்கொள்ளலாம். A, B, C, D, E, F - ஆகியோர் ஏறக்குறைய திறமையுடைய சகோதரர்களாய் அங்குக் காணப்பட்டு, முன்மொழியப்பட்டிருக்கின்றார்கள். A - அவர்களுக்கு 100-வாக்குகளும்; B - அவர்களுக்கு 90-வாக்குகளும்; C - அவர்களுக்கு 80-வாக்குகளும்; D - அவர்களுக்கு 70-வாக்குகளும்; E - அவர்களுக்கு 60-வாக்குகளும்; F - அவர்களுக்கு 50-வாக்குகளும் கிடைத்துள்ளது.

--3034--

சிறந்தவர்கள் என்ற அடிப்படையிலான வாக்குகளின்படி தேர்ந்தெடுக்க வேண்டுமானால், 90 சதவீதம் எனும் அடிப்படையில், இருவர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்படக்கூடும்; ஆனால் ஒருவேளை அந்த ஆறுபேரும் சபையார் பெற்றிருப்பதான நல்ல பாத்திரங்களெனச் சராசரியாகச் சபையாரின் மதிப்பீட்டில் காணப்படும் பட்சத்தில் மற்றும் அவர்களது நல்லொழுக்கக் குணலட்சணத்தில் குறைவற்றவர்களாக அறியப்பட்டிருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆறு-பேருமே ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது நம்முடைய யோசனையாய் இருக்கின்றது.

பரிசுத்த பவுலடிகளால் கொடுக்கப்பட்டுள்ளதான தகுதிநிலையானது, அப்படியே கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று எண்ணுவது தவறாய் இருக்கும்; ஏனெனில் எவருமே இந்தத் தகுதி அனைத்திலும் முழுமையான நிலையில் காணப்படுவதில்லை. அப்போஸ்தலன் சிறந்த ஒரு மூப்பர் எப்படி இருப்பார் என்று தெரிவித்துள்ளார். கர்த்தருடைய சித்தத்தைக் குறித்துச் சிந்திக்கையில் வாக்களிப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்த மாதிரியினை/கொள்கையினைத் தனது மனதிற்கு முன்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் கடுமையான களங்கங்கள்/குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் தவிர, மற்றப்படி சபையார் மூப்பர் அற்றவர்களாகக் காணப்படக்கூடாது.

நமது கர்த்தர் இதுபோலவே - அடைய வேண்டிய ஒரு பூரணமான நிலையினை, "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்" என்று கூறினபோது, நமக்கு முன்வைத்தவரானார் (மத்தேயு 5:48). தேவன் பூரண சற்குணராயிருப்பது போன்று, யார் பூரண சற்குணராயிருக்கிறன்றனர்? "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (உரோமர் 3:10). நாம் நம்மைக் குறைவான அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிடாமல், மாறாக பூரண அளவுகோலுடன் ஒப்பிட்டு மதிப்பிட வேண்டும் எனும் அர்த்தத்திலே ஆண்டவர் கூறியுள்ளார்; மேலும் இதன் மூலம் நாம் நம்முடைய சொந்த ஜீவியங்கள் மற்றும் குணலட்சணங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மூப்பர்களாகவும், மந்தைக்கு மாதிரிகளாகவும் இருக்கும்படிக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் விஷயத்திலும் நாம் உயர்வான கொள்கைகளைக் கொண்டிருக்க நமக்கே உதவி புரிகின்றவர்களாய் இருப்போம்.

முழுமையான அர்ப்பணம்பண்ணி, அதைத் தண்ணீர் முழுக்கு எனும் வழக்கமான அடையாளத்தின் மூலம் தெரிவித்துள்ளவர்கள் யாவரும் தவிர மற்றபடி எவரும் வாக்களிக்கக்கூடாது என்பதும் எப்போதும் நினைவில் கொள்ளப்பட வேண்டும். இப்படியாகத் தங்களது அர்ப்பணத்தினை அடையாளத்தின் மூலமாகத் தெரிவித்திடாதவர்கள், சகோதரர்கள் அல்ல என்று புறக்கணிக்கப்படக்கூடாது, மாறாக சபையாருக்கு ஊழியம் புரிவதற்கு யார் தகுதியானவர்களாய் இருப்பார்கள் என்பதில் தங்களது எண்ணத்தினை வெளிப்படுத்துவதற்கு ஆற்றலற்றவர்களாய் இருப்பதினால் மிகவும் வளர்ச்சியற்றவர்களாய் இருப்பவர்களெனக் கருதப்பட வேண்டும் மற்றும் இவர்கள் ஊழியக்காரர்களாகுவதற்கும் தகுதியற்றவர்களாய் இருப்பார்கள்.

### (Q256:1) தேர்ந்தெடுத்தல் - மற்றச் சபையார் மத்தியிலிருந்து மூப்பர்களைத் தேர்ந்டுெடுத்தல்.

கேள்வி (1916)-1- மூப்பர்களுக்கான தகுதியுடையவர்கள் சபையில் போதுமான எண்ணிக்கையில் இருக்க, சபையாருடைய மேலான நன்மைக்காக மற்றச் சபையார்கள் மத்தியில் காணப்படும் சகோதரர்களிலிருந்து தங்களுக்கான மூப்பர்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாமா?

பதில் - மூப்பர்களுக்கான தகுதியுடையவர்கள் சபையார் மத்தியில் போதுமான எண்ணிக்கையில் இருக்க, சபையார் வெளியிலிருந்து மற்ற மூப்பர்களைத் தேர்ந்தெடுக்க முற்படுவது என்பது ஞானமானதாய் இராது. இதைச் சொல்லாமலேயே புரிந்துகொள்ளலாம். ஆனால் சபையார் மத்தியில் போதுமானவர்கள் இருக்கின்றார்களா என்று தீர்மானிப்பவர்கள் யார்? சபையாரே தங்களுக்காக அதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். சபையார் மத்தியில் தங்களுக்குப் போதுமானவர்கள் இருக்கின்றார்களென யாரால் தெரிவித்திட முடியும்? சபையாரே அதைத் தீர்மானித்திட வேண்டுமேயொழிய, சகோதரர் ரசல் அவர்களோ அல்லது வேறொருவரோ அல்ல. ஒருவேளை தங்களிடத்தில் தகுதிவாய்ந்த மூப்பர்கள் இல்லையென்று சபையார் கருதுவார்களானால், அப்படி இருக்கும் பட்சத்தில் வெளியிலிருந்து தேர்ந்தெடுத்துக்கொள்வார்களாக. ஒருவேளை தகுதிவாய்ந்த மூப்பர்கள் அநேகரை அவர்கள் பெற்றிருப்பார்களாகில், தேவன் அருளியுள்ளவைகளை அவர்கள்

பயன்படுத்திக்கொள்வார்களாக மற்றும் வீட்டில் - சொந்த சபையில் இருக்கும் சகோதரரை ஊக்குவிப்பார்களாக.

## (Q256:2) தேர்ந்தெடுத்தல் - சதவீதம் தொடர்பாக.

கேள்வி (1916)-2- ஒரு குறிப்பிட்ட வாட்ச் டவர் வெளியீட்டில் (அதன் தேதி எனக்கு ஞாபகமில்லை) ஐம்பது சதவீத (nominating vote) முன்மொழிதலின் வாக்கினையாகிலும் பெற்றிருக்கும் முன்மொழியப்பட்டவர்கள் யாவரும் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனும், ஒரு தேர்ந்தெடுத்தல் வழிமுறையினை நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். பிரச்சனைகளும், பிணக்குகளும் உள்ள ஒரு சபையில் இந்த வழிமுறையைக் கையாளுவது நலமாய் இருக்குமா? அல்லது மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் 75 சதவீத வாக்குகள் வேண்டுமென்று வலியுறுத்துவது நலமாய் இருக்குமா?

பதில் - என்ன செய்யப்படலாம் என்று வேதாகமம் நமக்குத் தெரிவிக்கிறதில்லை என்று முதலாவதாக நாம் நினைவில்கொள்ள வேண்டும். இப்படியிருப்பதினால் இதைச் செய்வதில் மிகவும் அனுகூலமிக்க வழிமுறையாக எது காணப்படும் என்று கண்டுபிடிப்பதில் பகுத்தறிதலே காரியமாகும். எது சிறந்த வழி என்று கண்டுகொள்வதில் பகுத்தறிதலே காரியமாய் இருக்கின்றது. உங்களுடைய பகுத்தறிதலின் அளவிற்கு, என்னுடைய பகுத்தறிதலானது நலமாய்க் காணப்படாமல் இருக்கலாம். இதுபோன்ற எந்த ஒரு தலைப்பின் விஷயத்திலும் வாட்ச் டவர் வெளியீட்டில் எந்தவொரு ஆலோசனைகளையும் முன் வைக்கையில், அவைகள் என் அபிப்பிராயங்களாக மாத்திரமே இருக்கின்றன. சகோதரர் ரசல் கட்டளையிடுவதற்கோ அல்லது எவ்விதத்திலும் சர்வாதிகாரியாகக் காணப்படுவதற்கோ விரும்புகிறது இல்லை. வேதாகமம் எதுவும் பேசிடாத இம்மாதிரியான விஷயங்களில் அவர் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்திட முயற்சித்திட மாத்திரமே செய்கின்றார். நான் அறிந்திருக்கிறதைவிடச் சபையார் சில சிறந்த வழியை அறிந்திருப்பார்களாகில் அதில் எனக்குத் திருப்தியே. தேவனுடைய சித்தமானது சபையாரினால் தெரிவிக்கப்பட வேண்டும் மற்றும் சபையாருடைய சித்தத்தைத் தள்ளிவிடுகிறவன் தவறு செய்கிறவனாகவும், கர்த்தருடைய அங்கீகரிப்பைப் பெற்றுக்கொள்ளாதவனுமாய் இருப்பான். விரும்பியதை அடையத்தக்கதாக இரகசியமாய்ச் சிலர் தங்களது செல்வாக்கினைப் பயன்படுத்துவது குறித்தும், இப்படியாகத் தற்போதைக்குச் சபையாருடைய நலனுக்கடுத்தவைகள் குறுக்கிடப்படுகிறதைக் குறித்தும் மற்றும் இது நிச்சயமாய்ச் சரியற்றது என்பது குறித்தும் நான் அறிந்திருக்கின்றேன். கர்த்தர் ஏற்பாடுபண்ணியுள்ளவைகளுக்கு மிஞ்சி செல்வதற்கு நாம் முயற்சித்திடக்கூடாது. இப்படியான எதிலும் கர்த்தர் பிரியப்படுகிறது இல்லை. நாம் கர்த்தருக்கும், சகோதரருக்கும் நேர்மையாய்க் காணப்பட்டு, சகோதரர் அனைவரும் பின்வரும் சரியான எண்ணத்தினைப் பெற்றுக்கொள்ள உதவிட வேண்டும்; அதென்னவெனில் - "நான் மூப்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதோ, அல்லது தெரிந்தெடுக்கப்படாமலிருப்பதோ என்னுடைய காரியமல்ல. சபையாருக்கு நலமாய்த் தோன்றுகிறதை அவர்கள் செய்யட்டும். ஒருவேளை அவர்கள் என்னைத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்களானால் என்னால் முடிந்த மட்டும் அவர்களுக்கு நன்றாய் ஊழியம் புரிந்திடுவதற்கு நான் முயற்சித்திடுவேன்; ஆனால் ஒருவேளை அவர்கள் என்னைத் தேர்ந்தெடுக்காவிட்டாலும், எந்தவிதத்திலும் என்னால் முடிந்தமட்டும் அவர்களுக்கு நன்கு ஊழியம் புரிந்திட முயற்சித்திடுவேன்" என்பதேயாகும். ஒருவேளை நாம் இத்தகைய ஓர் ஆவியினைப் பெற்றிருப்போமானால் அதை நிச்சயமாய்ச் சபையார் ஏற்றகாலத்தில் காண்பார்கள். கர்த்தர் அதை எப்போதுமே கண்ணோக்கிக்கொண்டிருக்கின்றார் மற்றும் தேவனிடத்தில் நீங்கள் சரியாய்க் காணப்பட்டீர்கள் என்றால், மற்றவர்களிடத்தில் உங்களது நிலைப்பாடு எப்படிக் காணப்படுகின்றது என்பது ஒரு பொருட்டல்ல. ஒருவேளை நாம் 80 அல்லது 75 சதவீதத்தை அல்லது வேறு எதையாகிலும் வைத்துக்கொள்ளலாம் என்று நீங்கள் சொல்வீர்களானால், சதவீதம் தொடர்புடைய விஷயத்தில், அதை விதிக்குட்படுத்த எதுவுமில்லை - வேதாகமத்தில் எதுவுமில்லை. வாக்கு விஷயத்தில் 75 அல்லது 80 சதமானவர்களைப் பிரியப்படுத்துவதைக் காட்டிலும், உங்கள் மனசாட்சியினால் முடிந்தமட்டும் சபையாரிலுள்ள அனைத்துச் சகோதரர்களையும் பிரியப்படுத்துவதற்கும், அனைவருக்கும் திருப்திகரமாய் இருக்கும் ஓர் தேர்ந்தெடுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கும் விரும்புவது நலமாய் இருக்கும் என்று நாங்கள் யோசனை கூறுவோம். சபையாரிலுள்ள ஒவ்வொருவருக்காகவும் அக்கறை கொ[illegible] --3036--

வேண்டும் மற்றும் ஒவ்வொருவனும் சரி என்று தான் கருதுபவைகளைச் செய்திடவும் வேண்டும். அனைவருமே முழுமையாய்த் திருப்தி அடைய மாட்டார்கள் என்று அறிந்த நிலையில், சிறுபான்மையினரின் எண்ணங்களைப் பொருட்படுத்தாமல், பெரும்பான்மையினர் தங்கள் எண்ணங்களின்படி நடந்தேற்றுவது என்பது நிச்சயமாய்ச் சரியாய் இராது. ஒருவேளை ஒரு குறிப்பிட்ட சகோதரன் மூப்பராகிட வேண்டுமென்று நீங்கள் எண்ணுகின்றீர்கள் என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் அச்சகோதரனிடத்தில் எக்குறையினையும் நான் காண்கிறது இல்லை என்று வைத்துக்கொள்ளலாம். நீங்கள் அவர் மூப்பராகிட வேண்டுமென்று விரும்புகின்றீர்கள் என்ற காரியமே, நான் அவருக்காக வாக்களிப்பதற்கு ஒரு காரணமாக அமைகின்றது; எனினும் அவரைத் தகுதியற்றவர் என்று கருதிடுவதற்கு ஏதுவாய் அவரது குணலட்சணம் குறித்து நான் எதையேனும் அறிந்திருப்பேனானால், இச்சூழ்நிலையில் அவருக்கு நான் வாக்களிப்பது என்பது கர்த்தருடைய சித்தத்திற்கு விரோதமாய் இருக்கும். அப்படியானால் ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காக என்னால் அவருக்கு வாக்களித்திட முடியாது. (வாக்களித்தல் தொடர்புடைய விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க மாத்திரமே செய்கின்றேன்.) முடிந்தமட்டும் நம்முடைய தேர்ந்தெடுத்தலை ஏக மனதுடன் பெற்றிருக்க விரும்புகின்றேன். எனினும் ஒரு குறிப்பிட்ட காரணத்தினால் என்னால் அவருக்கு வாக்களிக்க இயலவில்லை. அச்சகோதரனும் இதைச் சரியாய் எடுத்துக்கொண்டு, அவர் பின்வருமாறு: "உங்களது நேர்மையினையும், யதார்த்தத்தையும் நான் பாராட்டுகின்றேன். நான் ஓர் உயர் தரத்திற்கு என்னையே கொண்டுவந்திடுவதற்கு முயற்சித்திடுவேன்" என்று கூறிட வேண்டும். இதுவே சரியாய் இருக்கும்; அதாவது சரியாய்ச் செயல்பட்டு, பின் முழுச்சபையாரையுமே பிரியப்படுத்துவதாயிருக்கும் என்று எதிர்ப்பார்ப்பதாகும்; அதுவும் அவர்களைப் பிரியப்படுத்துகிறதாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், சரியானவற்றைச் செய்வதாகும். அதுவும் எவ்வித சுயேட்சையான ஆவியினால் இல்லாமல், மாறாக ஒவ்வொருவரின் மற்றும் அனைவரின் கருத்துக்களையும் முறையே கருத்தில் எடுத்துக்கொள்வதற்குரிய பெருந்தன்மையின் ஆவியினால் செய்யப்பட வேண்டும். 85 சதமான விதியானது நிலைநாட்டப்பட்டும், சபையாரினுடைய சித்தம் உண்மையில் நிறைவேற்றப்படாத நிலையில் காணப்பட்ட சில சந்தர்ப்பங்களை நான் அறிவேன். அது எப்படி? 85 சதமானம் அடையப்பெற்றிருக்குமானால், ஏன் அது சபையாருடைய சித்தமாகக் காணப்பட முடியவில்லை? ஏனெனில் 15 சதமானவர்கள் கட்டுக்கடங்காதவர்களாகிடுவதற்குத் தீர்மானிக்கக்கூடும் மற்றும் 85 சதமானவர்களின் விருப்பத்தினை அடையவிடக்கூடாது என்று தீர்மானிக்கக்கூடும். பெரும்பான்மையினரைச் சிறுபான்மையினர் ஆளமுயல்கின்றனர் மற்றும் இணங்கி விட்டுக்கொடுப்பதில்லை. எனினும் சபையாரினுடைய விருப்பத்தைத் தீர்மானிப்பதற்குப் பெரும்பான்மை மாத்திரமே தேவையாய் இருக்கின்றது; 51 சதமானம் என்பது பெரும்பான்மையாகும். ஒருவேளை 85 சதவீதம் வேண்டுமென்று முன்வைக்கப்படுகிறதென்றால், அது சிறுபான்மையினரைப் பிரியப்படுத்துவதற்கென்றுள்ள பெரும்பான்மையினரின் சார்பிலான சலுகையேயாகும். 51 சதமானவர்கள் நாங்கள் தீர்மானிப்போம் என்றும், எங்கள் வழியின்படி செய்வோம் என்றும் சொல்ல முடியும், ஆனால் அது மற்றவர்களைப் புறக்கணிக்கிற காரியமாய் இருந்து பிரிவினையை உண்டுபண்ணிடலாம். இப்படிச் செய்வது ஞானமான அல்லது அன்பான காரியமாய் இராது. பெரும்பான்மையானவர்கள் சிறுபான்மையினரைக்குறித்துக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்; கூடுமானால் ஒவ்வொருவரையும் உள்ளடக்கின நிலையில் 100 சதவீதத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்றோம் என்று தெரிவித்திட வேண்டும். ஆனால் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரைக் கவனத்தில் கொள்ளாமல் இருந்து, இதனால் சிறுபான்மையினர் சபையாருடைய வேலைக்குத் தடங்கலும், இடர்பாடும் உண்டு பண்ணுவதும், இந்த 85 சதமானவர்களுக்கு இடையூறு உண்டுபண்ணத்தக்கதாக, தங்களால் முடிந்த யாவற்றையும் செய்வோம் என்று கூறுவதும், இவர்கள் - முன்னிலையிலிருந்து நல்நோக்கங்களை நிறைவேற்றுபவர்களைத் தடைச்செய்கிற நோக்கோடு அரசியலில் பயன்படுத்தப்படும் தந்திரமான முறைமைகளை எடுத்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். இது முற்றிலும் தவறாக இருக்கும். இந்தக் காரியங்கள் குறித்த சரியான கண்ணோட்டங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். புரூக்கிளினிலும், நியூயார்க்கிலும் உள்ள சபைகளில் ஏகமனதுடன் கூடிய வாக்கை எப்போதும் நாம் பெற்றிருப்போம். ஏனெனில் வேலை தொடர்புடைய விஷயத்தில் நாம் அறிந்திருக்கிற எல்லாவற்றையும் செய்திடுவதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றோம். ஒருவேளை யாரேனும் ஒருவர் ஒரு குறிப்பிட்ட சகோதரனை மூப்பனாகவோ அல்லது உதவிக்காரனாகவோ பெற்றிருக்க விரும்பினால் அவரைப் பெற்றிருப்பதற்கு நாமும் மகிழ்வோம்.

--3037--

இப்படியாகவே கிட்டத்தட்ட எல்லாவிடங்களிலும் காணப்படும் சபையார்களின் மனநிலையாக இருக்கும் என்று நாம் நம்புகின்றோம்; ஆனால் சிலசமயங்களில் நம்முடைய மனங்களானது திரித்துக் காணப்படுகின்றது. 85 சதவீதம் பெற்றுக்கொள்ளாததுவரையிலும், எங்களால் எதுவும் செய்ய முடியாது என்று சிறுபான்மையினர் கூறும்போது, நான் ஒரு மாற்றத்தை முன்வைத்து அதை 51 சதவீதமாக்கிடுவேன் மற்றும் 51 சதமானவர்கள் தங்களால் முடிந்தமட்டும் மற்றவர்களிடத்தில் அன்பாய் இருப்பார்களாக; ஆனால் கர்த்தருடைய வேலைக்குத் தடங்கல் உண்டு பண்ணும் எந்தவொரு வழிமுறையையும் நாங்கள் அனுமதிப்பது இல்லையென்று மற்றவர்கள் தெரிந்து கொள்வார்களாக. சபையாரிலுள்ள பெரும்பான்மையானவர்கள் சபையாரை நடத்திடவும், அதன் நடைமுறைகளைத் தீர்மானித்திடவும் வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்; எனினும் பெரும்பான்மையானவர்கள், சிறுபான்மையானவர்களிடத்தில் மிகவும் அன்பாய்க் காணப்படவும் கர்த்தர் விரும்புகின்றார்; அவர்கள் ஒருமித்த மனதில் காணபடமுடியுமென்றால் அது இன்னும் சிறப்பாய் இருக்கும்.

**(Q525:2) மேய்ப்பர் - நீங்கள் சபையை வந்து சந்திக்க இயலாதிருக்கும் நிலையிலிருக்க, உங்களைத் தேர்ந்தெடுத்தல்.**

கேள்வி (1912)-2- ஒரு சபையார் வாக்களிக்கத் தீர்மானித்து, மேய்ப்பர் ரசல் அவர்களை ஒருவருட காலத்திற்கு அல்லது ஏதோ ஒரு குறிப்பிட்ட நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கென்று தங்களது பாஸ்டராக/மேய்ப்பராகப் பெற்றிடுவதற்கு, அவரை முன்மொழிவது சரியாக அல்லது நல்லதாக இருக்குமா? அதாவது நீங்கள் அச்சடிக்கப்பட்ட பக்கங்கள் வாயிலாக அல்லது கடிதம் எழுதுவதன் வாயிலாக மாத்திரம்தான் அச்சபையாருடன் காணப்பட முடியும் என்பதுதான் கேள்விக்கான காரணமாகும்.

பதில் - என்னால் இக்கேள்வியினுடைய உட்கருத்தை முழுமையாய்ப் புரிந்துகொள்ள முடியவில்லை; எனினும் சில விதங்களில் அது ஒரு ஒழுங்குமுறைக் காரியமாகக் கருதப்படலாம் என்று கூறிடுவேன். தேவனால் வாட்ச் டவர் பத்திரிக்கையின் வாயிலாகவும் மற்றும் கடிதத்தொடர்பின் வாயிலாகவும் வாட்ச் டவர் பட்டியலில் இடம்பெறும் சிறுசிறு சபைகள் யாவற்றிலும் நான் மேய்ப்பனாகவே நடைமுறையில் காணப்பட்டு வருகின்றேன். ஒருவேளை நண்பர்கள் முறைப்படி வாக்களித்து, என்னை மேய்ப்பனாகத் தேர்ந்தெடுப்பார்களானால், அப்படியான விதத்தில் நான் பிரியமே கொள்வேன் மற்றும் ஒருவேளை அப்படிச் செய்ய அவர்கள் விரும்பவில்லை என்றாலும், அது அவர்களுடைய விருப்பமாகக் காணப்படுகின்றது. அவர்கள் ஒரு வருடக்காலத்திற்கு அல்லது காலவரையறை இல்லாமல் தேர்ந்தெடுக்க விரும்புவதும்கூட அவர்களுடைய விருப்பமாகவே காணப்படுகின்றது.

---

**<u>இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடுகிறேன்</u>–**
**பிலிப் 3:13**

ஏமாற்றங்கள் கடுமையாய் உணர்ந்தபோதிலும்,
உந்தன் புருவங்கள் மீதே காணும்போதும்;
நம்பிக்கை அழிந்துபோய்விட்டதாலே
உம் இருதயம் துன்பத்தால் நொறுங்கிடச் செய்திட்டாலும்;
நீர் அன்பு செய்த உம் நண்பர்கள் உம்மை விட்டே விலகிப்போயினும்,
எதிரிகள் கொடுமையாய் ஈட்டியை எறிந்து
இரக்கமின்றி இகழ்ந்து வில்லை வளைத்தாலும்
உம் இருதயத்தையே ஊடுருவக் குத்த எண்ணினாலும்;

விழிப்புடன் உறுதியாய் உண்மையாய் இருந்திடு,
ஒரு அமைதியான மனிதனாய் பொறுத்திரு;
ஜாக்கிரதையாய் தேவசித்தத்தை அறிந்திடு..
அவர் திட்டத்துக்கு ஒப்புவித்திரு;
செவிகொடாதே மனிதஆலோசனைக்கு,
அன்பாய் அவை அளிக்கப்பட்டபோதும்.
கிட்டப்பார்த்தால் அவை பொருத்தமாயிருக்கும்,
வழிவிலக்கும் தூரமாய் பரலோகப் பாதையினின்று.

தயாராயிரு கிறிஸ்துவைப் பின்பற்ற,
எங்கெல்லாம் அவர் நடத்தினாலும்;
சத்தம் அந்நியனுடையதா கேட்காதே,
சத்தம் அவருடையதா செவிகொடு.
நற்கீர்த்தியிலும் துர்க்கீர்த்தியிலும்
துளியும் அச்சமின்றி பின்பற்று;
உன் பாதம் சுயவழியை தேடாதிருக்கட்டும்,
உன் கர்த்தர் சென்றவழியோ அங்கே உண்டு.

மனிதர் சந்தேகத்தோடு பார்த்தால் என்ன
ஏளனமாய் நகைத்தாலென்ன வெறுத்து ஒதுக்கினாலென்ன ?
நீ ஒருபோதும் உணராய் திடீர்வேதனை,
உன் கர்த்தர் தாங்கியிருக்கிறார்;
சோதனைகள் தற்காலிக வாழ்வில்
ஒப்பிடத்தக்கவையல்ல – அடைவோம்
மகிமை நாம் அவரோடு பங்குபெறுவோம்,
அவரது பாடுகளை நாம் பகிர்ந்துகொண்டோம்.
– Herald Magazine

--------------

**--3039--**

# என்ன அற்புதம்!

பதிலளித்தார் என் ஜெபங்களுக்கு நிறைவாக
மகுடம் சூட்டினார் நான் படைத்த கிரியைக்கு
ஆசீர்வாதங்கள் நான் தீர்மானித்ததைவிட அதிகமே –
ஆசீர்வாதங்கள் மறைவாயில்லை,
உண்மையும், இலவசமுமாய்
நான் திகைத்து நின்றேன், இது சாத்தியமா என
காதோடு பேசினேன்
நான் தேடின எல்லா கொடைகளையும் அவர் அருளினார்
என்னே அற்புதம் ! அவர் எனக்கு பெற்றுத்தந்தது!
என்னே ஆச்சரியம்! அவர் எனக்கு பதிலளித்தது
ஓ அவிசுவாச இருதயமே! அவர் செவிமடுத்தேன் என்கிறார்
உன் எளிமையான ஜெபத்துக்கு
செவிகொடுத்தார், பதிலளித்தார்
வாக்குத்தத்தத்தை எண்பித்தார், இன்னும் பயப்படுகிறாயா?
ஏன் ஆச்சரியம்! உன் கர்த்தர் தம்
வார்த்தையை நிறைவேற்றியதால்?
நல்லவெற்றி உண்டாக்கும்
விசுவாசத்துக்கும் ஜெபத்துக்கும்
அவர்ஆசீரளிக்கவில்லையெனில்,
அது அதிக ஆச்சரியமே

-------------------------

**--3040--**

# "சிறந்த பங்கைத் தெரிந்துக்கொள்ளுதல்"

(Harvest Gleaning, Vol -2, p.80 **சில பகுதிகள் மாத்திரமே இப்பாடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது**)

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, நீ அநேகக் காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்." - லூக்கா 10:41, 42

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரமும் நாம் நல்லதும், கெட்டதுமான விருப்பங்களையும் மற்றும் திட்டங்களையும்/கோரிக்கைகளையும் சந்தித்துக்கொண்டுதான் இருக்கின்றோம். நாம் இவைகளில் ஏதேனும் ஒன்றை எப்போதும் தெரிந்தெடுத்துக்கொண்டு இருக்கின்றோம்; ஒன்றில் உற்சாகமாய்த் தெரிந்துக்கொள்கின்றோம், இல்லையேல் ஒருவேளை தெரிந்துக்கொள்ள தவிர்க்கும் பட்சத்தில், என்ன சம்பவிக்கும் என்பதை அறிந்தவர்களாக அப்படியே ஏற்றுக்கொள்கின்றவர்களாகவும் இருக்கின்றோம். இந்தப் பல்வேறு திட்டங்கள்/கோரிக்கைகளின் விஷயத்தில் சரியான தெரிந்துக்கொள்ளுதலின் முக்கியத்துவமானது இளைஞர்களால் சரிவர புரிந்துக்கொள்ளப்படுவதுமில்லை, உணர்ந்துகொள்ளப்படுவதுமில்லை. வருடங்கள் கடந்து செல்லுகையில், அனுபவப் பாடங்களை நாம் கற்றுக்கொள்ளுகையில், முடிவு எடுக்கும் திறனை அடைகின்றோம்; அதாவது சரியாய்த் தெரிந்துக்கொள்வதின் முக்கியத்துவத்தையும், நல்ல அல்லது கெட்ட தூண்டுதல்களையும், வாய்ப்புகளையும் ஏற்றுக்கொள்வது அல்லது புறக்கணிப்பது என்பதின் அடிப்படையிலேயே நமது எதிர்க்கால ஜீவியம் அமையும் என்பதையும், நமது எதிர்க்கால ஜீவியம் நம்மையே சார்ந்துள்ளது என்பதையும் நாம் கற்றுக்கொள்கின்றோம்.

இது எப்பொழுதும் ஓரளவுக்கு உண்மையாகவே இருந்துள்ளது, ஆனாலும் முன்பில்லாத அளவுக்கு, நம்முடைய நாட்களிலேயே மிகவும் உண்மையாகவும் இருந்துள்ளது, ஏனெனில் நம்முடைய முன்னோர்களைப் பார்க்கிலும், அதிகமான வாய்ப்புகளுள்ள காலத்திலேயே நாம் வாழ்ந்துக்கொண்டு இருக்கின்றவர்களாய் இருக்கின்றோம். நம்முடைய முன்னோர்களைக் காட்டிலும் நமக்கான அனுபவங்களும் வாய்ப்புகளும் கிட்டத்தட்ட ஏழு மடங்குக்குக் காணப்படத்தக்கதாக, நன்மைக்கும், தீமைக்கும் ஏதுவான நமது வாய்ப்புகளை, நவீன கண்டுபிடிப்புகளும், தொலைப்பேசிகளும், இயந்திரங்களும், அஞ்சல்களும், தந்திகளும், அச்சகங்களும் வெகுவாய்ப் பெருக்கியுள்ளது. இதினிமித்தம் நம் மீதும், அனைத்து மனுஷர்கள் மீதும், அதிலும் விசேஷமாக தெய்வீகச் சத்தியத்தினால் வெளிச்சமூட்டப்பட்டு, தேவனுடைய குடும்பத்திற்குள் தத்தெடுக்கப்பட்டுத் தேவனுடைய ஸ்தானாதிபதிகளாக இருக்கும்படிக்குப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, பரலோகத்திலுள்ள பிதாவுக்கு மகிமையாக, தங்களிடத்திலுள்ள வெளிச்சத்தை மனுஷர்கள் முன்பாகப் பிரகாசிக்கும்படியான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்களுமாய் காணப்படுபவர்கள் மீதும், எத்தகைய ஒரு பொறுப்புச் சுமத்தப்பட்டுள்ளது.

## "நல்ல தேர்ந்தெடுத்தல், சிறந்த தேர்ந்தெடுத்தல் மற்றும் மிகச்சிறந்த தேர்ந்தெடுத்தல்"

நம்முடைய பாடத்தின் ஆதார வசனமானது, இரண்டு நல்ல விஷயங்களுக்கிடையேயுள்ள தெரிந்துக்கொள்ளுதலைக் குறிக்கின்றதாகவும், கர்த்தருக்கு உண்மையாய் இருப்பவர்கள் ஒன்றில் நல்லதை அல்லது சிறந்ததைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாகவும் இருக்கின்றது. ஆதார வசனத்தின் கருத்தானது, கர்த்தருடைய ஜனங்களென உண்மையாய் ஆகுகின்றவர்களுக்கு விசேஷித்த அழுத்தத்துடன் பொருந்துகின்றதாகவும் இருக்கின்றது. மார்த்தாள் நல்ல பங்கைத்தான் தெரிந்துக்கொண்டிருந்தாள், அவள் உண்மையில், "அசதியாயிராமல், ஜாக்கிரதையாயிருந்து; ஆவியிலே அனலாயிருந்து, கர்த்தருக்கு ஊழியஞ்செய்தாள்;" மேலும் மார்த்தாளுடைய நடத்தையானது, கர்த்தரால் மிகவும் மதிக்கப்பட்டது. மரியாள் விருந்தோம்பல் வேலையில் அக்கறையற்று இருக்கிறாள் என மார்த்தாள் எண்ணிக்கொண்டு, மரியாளுக்கு எதிராக முறுமுறுக்கவில்லையெனில், நமது கர்த்தர் இரண்டு சகோதரிகளை வித்தியாசப்படுத்திக் காட்டுவதும், மரியாளின் நடத்தைக்கு நமது கர்த்தர் விசேஷித்த அங்கீகரிப்பு வழங்கினதும் வெளிப்பட்டிருக்காது. இரண்டு சகோதரிகளையும் அங்கீகரித்த நமது கர்த்தர், வாய்ப்பைப் பயன்படுத்தி, மார்த்தாளுடைய நடத்தையானது நிச்சயமாய் மதிக்கப்பட்டாலும், நிச்சயமாய்

அங்கீகரிக்கப்பட்டாலும், மரியாளுடைய போக்கே, இன்னும் அதிகமான அங்கீகரிப்பிற்கு ஏதுவானதாய் இருக்கின்றது என மார்த்தாளுக்குக் காட்டினார். மார்த்தாள், கர்த்தரை நேசித்தபடியினால் அவருக்காக அநேகவற்றைச் செய்ய வேண்டும் என்று விரும்பினாள்; மரியாள் கர்த்தரையும், கர்த்தர் விரும்பினவைகளையும் விரும்பி, அவருடன் பேசவும் விரும்பினபடியால், அவருடைய தோழமை மற்றும் ஐக்கியத்தின் இன்பத்தை விட்டுச்செல்ல முடியாமல் இருந்ததாள். கர்த்தரைக் கனப்படுத்துவதற்கெனத் பெரியதொரு விருந்தை ஆயத்தப்படுத்துவதில், தனது சகோதரியுடன் இணைந்து வேலை செய்யவும், மரியாளும் அதிகம் விரும்பியிருப்பாள். ஆனால் சமாரியாவுக்கு அருகே இருந்த கிணற்றின் அருகில், சீஷர்கள் ஆண்டவரிடம், "ரபீ போஜனம் பண்ணும்" எனும் போது, அவர் "நான் புசிப்பதற்கு நீங்கள் அறியாத ஒரு போஜனம் எனக்கு உண்டு" என்றும், "நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படிச்செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" என்றும் கூறியவற்றிற்கு ஏற்ப அவர் பரிமாறிக்கொண்டிருக்கும் ஆவிக்குரிய உணவை, மார்த்தாளைக் காட்டிலும், மரியாள் அதிகமாய் உணர்ந்தவளாக இருந்தாள்.

கர்த்தரை ஏற்கெனவே தேர்ந்தெடுத்தவர்களுக்கு, கிருபையான வாக்குத்தத்தங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களுக்கு, நீதியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டவர்களுக்கு, மேலும் இவைகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டதன் மூலமாகப் பாவத்தையும், சாத்தானையும், உலகத்தையும், சுயநலத்தையும் புறக்கணித்துக்கொண்டவர்களுக்கு, மார்த்தாளிடத்திலான நமது கர்த்தருடைய வார்த்தைகளில் படிப்பினை ஒன்று உள்ளது. இவ்வாறாக மேற்கூறியவைகள் அனைத்திலும் நாம் நல்லவைகளைத் தெரிந்துக்கொண்வர்களாக இருக்க, கர்த்தருடைய கண்ணோட்டத்தில் சிறந்தவைகளும், மிகச்சிறந்தவைகளும் மற்றும் நல்லவைகளும் இருக்கின்றன என்பதை நாம் அறிந்துக்கொள்ளவும் வேண்டும். கர்த்தருக்கான ஊழியம் தொடர்புடைய விஷயத்தின், பூமிக்குரிய காரியங்களிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் எடுக்கப்படும் பிரயாசங்கள் சரியானதாகவும், பாராட்டத்தக்கதாகவும், கர்த்தரால் அங்கீகரிக்கப்படத்தக்கதாகவும் இருக்கும், அதேசமயத்தில் கர்த்தரால் இன்னும் மேலாய் அங்கீகரிக்கப்படும் சில காரியங்களும் உண்டு என்பதே படிப்பினையாகும். நீதியின் மேல் பசிதாகம் கொள்பவர்களை, "அவருடைய வார்த்தைகளைப் புசிக்கின்றவர்களை," "அவருடைய பாதத்தருகே அமர்கின்றவர்களை," அவருடைய மகிமையான திட்டங்களில் மகிழ்ந்து, அத்திட்டம் வெளிப்படுகையில் களிகூருகின்றவர்களை, கர்த்தர் மிகவும் அங்கீகரிக்கின்றார்.

ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் சரியானவைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டியதின் முக்கியத்துவம் குறித்தும், சிறிய தவறுகள் கூட, நம்முடைய ஜீவியத்தின் காரியங்களில் தாக்கம் ஏற்படுத்துபவைகள் என்பதை உணர்ந்துக்கொள்ளுவது குறித்தும் உணர்த்துவது ஒரு பக்கமிருக்க, நாம் உணர்த்த விரும்பும் விசேஷித்த படிப்பினை என்னவெனில், நாம் அவருடைய ஊழியங்களில் ஈடுபட்டிருப்பது என்பது, கர்த்தருக்கான நமது அன்பின் அடையாளமாக இருப்பினும், அவருடன் ஜெபத்தில் ஐக்கியம்கொண்டிருப்பதும், அவருடைய வார்த்தைகளைக் கற்பதும், அவரை நாம் மதிப்பதற்கான இன்னமும் மேலான அடையாளமாக இருக்கின்றது என்பதேயாகும். மரியாள் கர்த்தருடைய பாதத்தருகே இருந்து கவனிப்பதற்குத் தன்னுடைய முழு நேரத்தையும் செலவழிக்கவில்லை, மாறாக கவனிப்பதற்கான வாய்ப்பு வந்த போது, அவள் அதை விட்டுவிடவில்லை. அவள் அதைத் தெரிந்துக்கொண்டாள், அவள் அதை அடைந்தாள்; அதனோடு அவள் ஆசீர்வாதத்தையும் அடைந்தாள், மேலும் இது, பிற்பாடு வேலைகள் செய்ய அவளை ஆயத்தப்படுத்தினதில் ஐயமில்லை. இப்படியாகவே கர்த்தருடைய ஜனங்களின் விஷயத்திலும் காணப்பட வேண்டும்; கர்த்தருடன் சம்பாஷிப்பதற்கும், அவருடைய வார்த்தைகளைப் படிப்பதற்கும் எடுக்கப்படும் நேரம் வீண் செலவழிப்பு என்று கர்த்தருடைய ஜனங்கள் எண்ணக்கூடாது. மாறாக, இவ்வாறு ஆண்டவரின் பாதத்தருகே இருந்து, அவருடைய வார்த்தைகளையும், அவருடைய ஆவியையும் பானம் பண்ணுவதற்குக் கொஞ்ச நேரம் செலவழிப்பது என்பது, தங்களை ஊழியங்களுக்கான பரீட்சைகளுக்காகவும், அதில் தாங்கள் ஞானமாய்ச் செயல்படுவதற்கு தங்களை ஆயத்தப்படுத்துவதாகவும் இருக்கும் என்றும், இப்படியான போக்கே, அவருடைய அங்கீகரிப்பிற்கு ஏதுவானது என்றும் கர்த்தருடைய ஜனங்கள் உணர்ந்துக்கொள்ள வேண்டும். எல்லா விதத்திலும் நாம் மிகச் சிறந்த பங்கை, நமது கர்த்தருக்கு மிகவும் பிரியமாய் இருக்கும் பங்கை தேர்ந்தெடுத்துக் கொள்வோமாக.

---

# "யோசேப்பும், அவரது சகோதரர்களும்"

***- சகோதரர் ராபர்ட் எஸ். ஷெக்லீமியன்***

இன்று நாம் யோசேப்பினுடைய கதையைப் பார்க்கப்போகின்றோம்; இச்சம்பவங்கள் ஆதியாகமம் புஸ்தகத்தின் 37, 39 முதல் 50-ஆம் அதிகாரங்களில் காணப்படுகின்றது. உண்மை சம்பவப் பதிவை நாம் வாசித்தோமானால், நீண்ட நேரம் எடுத்துக்கொள்ளும், ஆகையால் நாம் சம்பவங்களைச் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறிவிட்டு, பிற்பாடு அதிலிருந்து கற்க வேண்டிய படிப்பினைகளை நாம் பார்க்கலாம்.

ஆபிரகாமின் பேரனும், இஸ்ரயேல் என்று மறு பெயரிடப்பட்டவருமான யாக்கோபு, தனது மனைவியாகிய ராகேலை விசேஷமாய் நேசித்தார். அவளுடைய முதற்பிறப்பு யோசேப்பு ஆவார். ராகேல் மற்றொரு குமாரனாகிய பென்யமீனை பெற்றெடுக்கையில் மரித்துப்போனாள். ராகேலினுடைய மரணத்தினிமித்தம் யாக்கோபு மிகவும் துக்கப்பட்டார் மற்றும் ராகேல் மரித்துப்போய்விட்டதால், யாக்கோபினுடைய அதிகப்படியான அன்பானது, அவளது பிள்ளைகள் மீது, அதிலும் விசேஷமாக முதற்பேறான யோசேப்பின் மீது, பொழியப்பட்டது. யாக்கோபிற்கு யோசேப்பைத் தவிர இன்னும் பதினொரு குமாரர்கள் இருந்தார்கள், ஆனாலும் யோசேப்பே அவரது அபிமான குமாரனாக இருந்தார். யாக்கோபு தனது பாரபட்சத்தினைப் பல்வேறு விதங்களில் வெளிப்படுத்தினார். உதாரணத்திற்கு, பல வருணங்களினாலும், பல துண்டுகளினாலுமான அங்கி ஒன்றை, அதாவது பிரபுக்கள் அணிகின்றது போன்றதான அங்கி ஒன்றை யாக்கோபு, யோசேப்பிற்காகச் செய்வித்தார். இப்படியாக யோசேப்புதான் சுதந்தரவாளி என்பதைக் குடும்பத்தில் மீதமுள்ளோருக்கு யாக்கோபு அநேகமாக சுட்டிக்காண்பித்திருக்க வேண்டும். மற்றப் பத்துச் சகோதரர்களும் பொறாமை அடைந்தனர். "அவர்கள் அவனோடே பட்சமாய்ப் பேசாமல் அவனைப் பகைத்தார்கள்" என்று வசன பதிவுகள் தெரிவிக்கின்றது.

இருக்கின்ற பிரச்சனைப் போதாதது போன்று யோசேப்பு ஒரு விநோதமான சொப்பனத்தைக் கண்டவராக அதைக் கள்ளங்கபடமில்லாமல், தன்னுடைய சகோதரர்களிடத்தில் கூறினார். சொப்பனத்தில் அவர்கள் வயலில் அரிகளைக் கட்டிக்கொண்டிருக்கையில், யோசேப்பின் அரிக்கட்டானது நிமிர்ந்து நிற்க, அவரை வட்டமாகச் சுற்றி நின்ற அவரது சகோதரர்களுடைய அரிக்கட்டுகளானது, யோசேப்பினுடைய கட்டிற்கு முன்பாக வணங்கினது. இந்தச் சொப்பனத்தின் காரணமாக, "அவனை இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்" என்று பதிவுகள் தெரிவிக்கின்றது. பின்னர் மீண்டுமாக யோசேப்பு சொப்பனம் கண்டார். இம்முறை சூரியனும், சந்திரனும் மற்றும் பதினொரு நட்சத்திரங்களும் அவரை வணங்கினது. இச்சொப்பனத்தை யோசேப்பு கூறினபோது, "நீ கண்ட இந்தச் சொப்பனம் என்ன? நானும், உன் தாயாரும் உன்னை வணங்க வருவோமோ? என்று யாக்கோபு அவரைக் கடிந்துகொண்டார்." இதுவே போதும்; யோசேப்பின் சகோதரர்களுடைய பகைமையானது, பொறாமையினாலான வெஞ்சினமாய் அவதாரமெடுத்தது. இம்மனநிலைமையே, அவர்கள் தங்கள் மந்தைகளுக்காக மேய்க்கும் பகுதிகளைக் கொஞ்சம் தொலைவில் போய்க் கண்டுபிடிப்பதற்கெனத் தங்கள் வீட்டைவிட்டு வெளியேறினபோது காணப்பட்டது. அவர்கள் வெளியேறி, நீண்ட நாட்களானபோது, அவர்களது தகப்பன் அவர்களைக் குறித்துக் கவலை அடைந்தவராக, அவர்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதைப் பார்ப்பதற்கும் மற்றும் திரும்பி, தனக்குச் செய்தி கொண்டுவருவதற்கும் என்று யோசேப்பை அனுப்பி வைக்கலாமென முடிவெடுத்தார். யோசேப்பையும், அவரது மேம்பட்ட நிலை குறித்ததான சொப்பனத்தையும், அவரது சகோதரர்கள் வயல்வெளியில் முற்றிலும் விவாதம் பண்ணியிருப்பார்கள் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது. இப்படி ஒருவருக்கொருவர் மனக்குறையினால், குறைகூறினபோது, அவர்களது பகைமையினை இன்னுமாகத் தூண்டினது. இப்படியாக அவர்கள் பொறாமையினாலான வெஞ்சினத்தின் வெறியில் காணப்படுகையில், அவர்கள் கூட்டத்திற்குக் காவலாளாக நியமிக்கப்பட்டிருந்தவர் "இதோ வருகிறான்! சொப்பனக்காரன் வருகிறான்" என்று சத்தமிட்டார்.

அப்பகுதியிலுள்ள தெளிவான காற்றில், நெடுந்தொலைவில் ஒருவர் வருவதைத் தெளிவாய்க் காணமுடியும். வருவது யோசேப்பு என்று அவர்கள் எளிதில் அடையாளங்கண்டுகொண்டார்கள்; பிரகாசமான வருணங்களும், அநேகம் துண்டுகளினால் செய்யப்பட்டதுமான அவருடைய நீள

அங்கியை வைத்து, அவரை அடையாளங்கண்டு கொண்டார்கள். ஒவ்வொரு சகோதரனுக்கும் உடனடியாக, "இப்பொழுது யோசேப்பு தங்கள் வல்லமைக்குக் கீழ் இருக்கின்றார்!" என்ற ஒரே எண்ணம் உதித்தது. யோசேப்பைப் பாதுகாத்திடுவதற்கு அவரது தந்தை இங்கில்லை. தங்களால்



பகைக்கப்பட்டவர், தங்கள் கரங்களில் இப்பொழுது காணப்படுகின்றார். யோசேப்பு கள்ளங்கபடமில்லாமல் வந்து கொண்டிருக்கையில், அதுவும் அநேகமாக அவர் மகிழ்ச்சியுடன் அவர்களை நோக்கி கைகளை அசைத்துக்காட்டி வந்துகொண்டிருக்கையில், அவர்கள் அவசரமாய்க் கூட்டங்கூடி எடுத்துக்கொண்ட ஒருமித்த தீர்மானம் பின்வருமாறு: "நாம் அவனைக் கொன்று, இந்தக் குழிகள் ஒன்றில் அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள்; அவனுடைய சொப்பனங்கள் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்" (ஆதியாகமம் 37:20).

## "யோசேப்பின் சகோதரருடைய பகைமை"

அவர்களது பகைமை மிக அதிகமாய்க் காணப்பட்டது; அவர்களில் ஒருவர் மாத்திரமே இந்தத் தீர்மானத்திற்கு மாறுபட்ட கருத்துத் தெரிவித்தவராய்க் காணப்பட்டார். இவர் மூத்த குமாரனாகிய ரூபன் ஆவார். இவர் சமாதானமான ஓர் ஆலோசனையைத் தெரிவித்தார்; "யோசேப்பினுடைய இரத்தத்தை நீங்கள் சிந்தலாகாது," "யோசேப்பை இந்தக் குழிக்குள்ளே உயிரோடே போட்டுவிடுங்கள்" என்று கூறினார். பிற்பாடுவந்து, யோசேப்பைக் குழியிலிருந்து விடுவிப்பதற்கு ரூபன் சித்தங்கொண்டிருந்ததாகப் பதிவுகளானது தெரிவிக்கின்றது. இவ்வாலோசனைக்கு உடனடியாகச் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. யோசேப்பு பக்கத்தில் வந்தபோது, அவரை முரட்டுத்தனமாய் அவர்கள் பிடித்திழுத்து அவரது பலவருண அங்கியைக் கழற்றி, அவரை ஆழமான வறண்ட கிணற்றிற்குள் எறிந்தார்கள்; இக்கிணற்றிலிருந்து உதவியில்லாமல் அவரால்

வெளியே வரமுடியாது. பிற்பாடு யோசேப்பினுடைய பொறுக்க முடியாத வலியினாலான கதறல்களும், அவரது கெஞ்சுதல்களும் அவர்களது காதுகளில் தொனித்துக்கொண்டிருக்கவே, அவர்கள் உணவு உண்பதற்கென உட்கார்ந்தார்கள். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களால் உணவு உண்ண முடிகின்றதான காரியமானது, அவர்களது இருதயங்களினுடைய கடினத்தை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இக்கட்டத்தின்போது, இரக்க பண்பு கொண்டிருந்த ரூபன், அங்கிருப்பதைத் தவிர்த்துக்கொண்டு, மந்தைகளைப் பராமரிக்கும்படி போயிருந்திருக்க வேண்டும், ஏனெனில் எகிப்துக்கு ஒட்டகங்கள் மீது ஏறி போய்க்கொண்டிருக்கும் கூட்டத்தார் வந்தபோது, ரூபன் அங்கிருக்கவில்லை. யூதா ஆலோசனை ஒன்றை முன்வைத்தார். ஏன் இச்சந்தர்ப்பத்தை இலாபம் ஈட்டுவதற்கென்று பயன்படுத்திடக்கூடாது? யோசேப்பு குழியில் காணப்பட்டு மரிப்பதற்குப் பதிலாக, அவரை ஏன் அடிமையாக விற்கக்கூடாது? ஆகவே அவர்கள் குழிக்குள் கயிற்றை இறக்கினார்கள்; தனது சகோதரர்கள் மனமிரங்கி விட்டார்களென எண்ணி, ஆர்வமாய்க் கயிற்றைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்த யோசேப்பு, தான் இருபது வெள்ளிக்காசுகளுக்கு, சில மீதியானிய அடிமை வியாபாரிகளிடத்தில், கட்டப்பட்டு மிருகம் போன்று விற்கப்பட்டதையே கண்டார். அந்நாட்களில் முழு வளர்ச்சியடைந்த அடிமைக்கான விலை முப்பது வெள்ளிக்காசுகளாகும். யோசேப்பு பதினேழு வயதானவராக இருந்தபடியால், அவருக்கான விலை இருபது வெள்ளிக்காசுகளாய் இருந்தது. யோசேப்பு வியாபாரிகளினால் இழுத்துச் செல்லப்படும்போது, அவர் மீண்டும் கதறினார், இரங்கும்படியாக தனது சகோதரர்களிடம் கெஞ்சினார், ஆனால் அவர்கள் வெள்ளிக்காசுகளைப் பங்குபோடுவதில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு முழு வெள்ளிக் காசுகள் கிடைத்திருக்கும். சுற்றித்திரிந்துவிட்டு வந்த ரூபன், யோசேப்பை விடுவிப்பதற்கெனக் கிணற்றண்டைக்கு வந்தார். யோசேப்பு அங்கில்லாததைக் கண்ட இவர், உண்மையாகக் கவலைக்குள்ளானார், ஆனால் இப்பொழுது காலம் கடந்துபோய்விட்டது.

பிற்பாடு அந்தச் சகோதரர்கள் மிகவும் கொடூரமான மற்றும் மனக்கடினமுமான காரியத்தைச் செய்தார்கள். அவர்கள் யோசேப்பினுடைய பலவருண அங்கியை எடுத்து, அதை ஆட்டினுடைய இரத்தத்தில் தோய்த்து, தந்தையினால் மிகவும் நேசிக்கப்பட்ட யோசேப்பின் வருகைக்காகக் கவலையுடன் காத்துக்கொண்டிருந்த தங்கள் பாவப்பட்ட வயதான தந்தையினிடத்திற்கு எடுத்துச் சென்றார்கள். "இதை நாங்கள் கண்டெடுத்தோம்" என்றார்கள் அந்தச் சகோதரர்கள். "இது உம்முடைய குமாரனின் அங்கி அல்லவோ, பாரும்" என்றார்கள். யாக்கோபு தெளிவான முடிவிற்குள் வந்தார். யோசேப்பு ஏதோ ஒரு காட்டுவிலங்கினால் பீறப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார். அப்பகுதிகளில் சிங்கங்கள் மற்றும் கரடிகள் காணப்பட்டன. யாக்கோபின் துக்கம் ஆழமானதாய்க் காணப்பட்டது. அவர் ஆறுதலுக்கு இடம் கொடாமல், "நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன்" என்றார்.

யோசேப்பின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றமானது தீர்க்கமானதாயும், முற்றும் முழுமையானதாயும் இருந்தது. பாசத்திற்கும், பிரியத்திற்குமுரிய குமாரனாகவும், தனது தந்தையினுடைய வீட்டில் அன்பாய் வளர்க்கப்பட்டவராகவும் இருந்த யோசேப்பு திடீரென அந்நிய புறஜாதியார் தேசத்தில் அடிமை நிலைமைக்கு மாற்றப்பட்டார். இதனோடுகூட அவர் தனது சொந்த சகோதரர்களுடைய கொலைப்பாதகமான பகைமையையும், மனமார்ந்த கொடூரத்தையும் கண்டதினால் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தையும், வீட்டைப்பற்றிய ஏக்கத்தையும், தனது தகப்பன் அடையப்போகிற துக்கத்தைப் பற்றின எண்ணத்தையும் மற்றும் தனிமையையும் சுமந்தவராகக் காணப்பட்டார்.

## "எகிப்தில் யோசேப்பினுடைய அனுபவங்கள்"

எகிப்தை அடைந்தபோது, யோசேப்பு அக்காலக்கட்டத்தினுடைய வழக்கத்தின்படி திறந்த வெளிச்சந்தையில், விற்பனைக்காகப் பார்வைக்குக்கொண்டு நிறுத்தப்பட்டார். அடிமைகளை வாங்குபவர்கள் என்பவர்கள் உயர் ஸ்தானத்தில் இருப்பவர்களாகவும், உயர்க்குடியைச் சார்ந்தவர்களாகவும், இராஜாவினுடைய அதிபதிகளாகவும், ஐசுவரியமான வணிகர்களாகவும், அதிகமான நிலங்களுக்கு உரிமையாளர்களாகவும், காணப்படும் மனுஷர்களாகக் காணப்பட்டனர். அடிமைகளுக்கு அதிக விலைக்கொடுக்க வேண்டியிருந்தது. அடிமைகளின் எஜமான் மற்றவர்களைக்

காட்டிலும் யோசேப்பை மிகவும் சிறப்பானவராகக் காட்டிக்கொள்வதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றது; அவர் பின்வருமாறு கூறியிருந்திருக்க வேண்டும்:

"மேன்மக்களே, நாங்கள் இன்று மிகவும் சிறப்பானதொன்றை வைத்திருக்கின்றோம். ஓர் எபிரெய இளைஞன்! இம்மனிதன், ஓர் உயர்வான இனத்திலிருந்து வந்தவனாவான். இவன் பலசாலி மாத்திரமல்லாமல், மிகுந்த அறிவாளியுங்கூட. இவனது பெரிய நெற்றியைப் பாருங்கள்! இவனை விலைக்கு வாங்குகிறவருக்கு, இவன் தலைச்சிறந்த மற்றும் நம்பத்தக்க வேலைக்காரனாவான். மேன்மக்களே ஏலத்திற்கு என்ன விலை கூறுகின்றீர்கள்?"

இப்படியாகத்தான் யோசேப்பை, பார்வோனுடைய பிரதானியும், தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் விலைக்கு வாங்கினார்.

யோசேப்பு தனது தகப்பனிடமிருந்து அநேகம் சிறந்த பண்புகளைச் சுதந்தரித்துக் கொண்டவராகக் காணப்பட்டார். ஆபிரகாமின் தேவனிடத்திலான பலமான விசுவாசமுள்ள சூழ்நிலையில் யோசேப்பு வளர்க்கப்பட்டவர் ஆவார். குழந்தைப் பருவம் முதல், அவர் உயர் கொள்கைகளை மனதில் பதிய வைக்கப் பெற்றவராவார்; அவர் நேர்மையுள்ள, மனசாட்சிக்குக் கட்டுப்பட்ட மற்றும் உண்மையுள்ள வாலிபனாவார். இன்றுபோல் அன்றும் முற்றும் முழுமையான உண்மைத்தன்மை என்பது அபூர்வமானதாகவே காணப்பட்டது. இந்த உண்மைத்தன்மையை யோசேப்பிடம் உடனடியாக அடையாளங்கண்டுகொண்ட அவரது எஜமான், அவருக்கு அதிகமதிகமான பொறுப்புகளைக் கொடுத்தார். "யோசேப்பு செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறார்" என்பதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதையுங்கூட அவரது எஜமான் கவனித்தார். யோசேப்பு இருபத்திரண்டு வயதான போது, அவர் போத்திபாரின் வீட்டனைத்தின் மீது விசாரணைக்காரனாக்கப்பட்டார். போத்திபாருடைய முழு நம்பிக்கையையும், விசுவாசத்தையும் யோசேப்பு பெற்றுக்கொண்டார். "போத்திபார் தனக்கு உண்டானதை எல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புக்கொடுத்தார்" என்று நாம் வாசிக்கின்றோம்.

யோசேப்பு இந்தப் பொறுப்பில் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாகக் காணப்பட்டார், பிற்பாடு பெருந்துன்பம் அவர்மேல் வந்தது. யோசேப்பு திட்டமிடாமலேயே, போத்திபாருடைய மனைவியினால் விரும்பப்பட்டவரானார். யோசேப்பு கொள்கைகளுக்கு உறுதியாய் இருந்த காரியமானது, அவளைச் சினமூட்டியது. அவள் அவர்மேல் பொய்யாய்க் குற்றஞ்சாட்டினாள் மற்றும் அவர் சிறையில் போடப்பட்டார் மற்றும் அவர் மிக வெறுக்கத்தக்க குற்றம் புரிந்தவராகக் காண்பிக்கப்பட்டார்; அதாவது அவர் தனது எஜமானும், உபகாரியுமானவருக்கு நம்பிக்கைத் துரோகம் புரிந்தவராகக் காண்பிக்கப்பட்டார். இம்மாதிரியான ஒரு சந்தர்ப்பத்தை **ஷேக்ஸ்பியர்** பின்வருமாறு விளக்குகின்றார், அதாவது "**நரகத்தைவிட, பெண்ணிற்கு ஏற்படும் வெறுப்பினிமித்தமான சீற்றமே பெரிது.**" "யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்" என்பதாக நாம் வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 39:20). யோசேப்பிற்கு எதிரான தனது மனைவியின் குற்றச்சாட்டினைப் போத்திபார் தனது இருதயத்தில் உண்மையில் நம்பவில்லை என்று நான் (ஆசிரியர்) எண்ணுகின்றேன். ஒருவேளை நம்பியிருந்திருப்பாரானால், அவர் நிச்சயமாய் யோசேப்பைக் கொன்றுபோட்டிருப்பார். போத்திபார் இராஜாவின் பிரதானியாகவும், தலையாரிகளுக்கு அதிபதியாகவும் காணப்பட்டவர் ஆவார்; யோசேப்பு வெறும் அடிமை தான். (ஒருவேளை யோசேப்பைக் கொன்றுபோட்டாலும்) யாரும் போத்திபாரைக் கேள்வி கேட்கப் போவதில்லை. ஆனால் கொன்றுபோடுவதற்குப் பதிலாக யோசேப்பை, போத்திபார் சிறையில் அடைத்தார்.



சிறைச்சாலைத் தலைவன், யோசேப்பிடம் நிர்வாகத் திறமைக் காணப்பட்டபடியால் அவரைப் பெற்றுக்கொண்டதில் மகிழ்ச்சிக் கொண்டவராக, யோசேப்பின் தாலந்துகளை வேலையில் பயன்படுத்தினார். யோசேப்பு கைதியாக இருந்தப்போதிலும் அவர் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே சிறைச்சாலையின் காரியங்கள் மீதான முழுப்பொறுப்பையும் பெற்றுக் கொண்டவரானார். மீண்டுமாக, ''கர்த்தர் யோசேப்போடே இருந்தபடியால், அவர் எதைச் செய்தாரோ, அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார்'' என்பதாக நாம் வாசிக்கின்றோம்.

அது இராஜாவினுடைய சிறைச்சாலையாக இருந்தபடியால், அங்கிருந்த கைதிகள் அனைவரும் குற்றவாளிகளாக இருக்கவில்லை. சில சமயம் அங்குக் காணப்பட்ட கைதிகள் அரசியல் கைதிகளாக அல்லது இராஜாவினுடைய கோபத்திற்குத் தற்காலிகமாக ஆளானவர்களாக மாத்திரம் காணப்பட்டனர். ஒருநாள் பார்வோன் தனது பிரதானிகளில் இரண்டு பேர்மேல் கோபம் அடைந்தார்; இவர்களில் ஒருவர் பானபாத்திரக்காரரின் தலைவனாகவும், மற்றொருவர் சுயம்பாகிகளின் தலைவனாகவும் காணப்பட்டனர். பானபாத்திரக்காரரின் தலைவன் என்பவன் பார்வோனின் வீட்டாரிலேயே உயர்ந்த பிரதானி ஆவார், அதாவது இராஜ காரியதரிசி/செயலாளர் போன்றவர் ஆவார். சுயம்பாகிகளின் தலைவன் என்பவன் சமையல் சார்ந்த விஷயங்களினுடைய நிர்வாகியாகவும், இராஜ குடும்பம் மற்றும் சமையலறை மற்றும் உணவுகள் சார்ந்த விஷயத்திலான பொதுவான விசாரணைக்காரனாகவும் காணப்பட்டான். இவர்கள் இருவரும் யோசேப்போடு, அதே சிறையில் அடைக்கப்பட்டனர் மற்றும் இவர்களைக் கவனிக்கும் பொறுப்பு யோசேப்பினுடையதாய் இருந்தது. ஆகையால் இவர்களோடு யோசேப்பு நன்கு பழகி, பார்வோனின் அரசவை/அரமனையின் முறைமைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் அநேகவற்றைக் கற்றுக்கொண்டார். இந்தத் தகவல்களானது, பிற்பாடு அவருக்கு உதவப் போவதாக இருந்தது.

## ''யோசேப்பு சொப்பனங்களுக்கான அர்த்தத்தை விவரிக்கின்றார்''

ஒருநாள் காலையன்று, யோசேப்பு அந்த இரண்டு கைதிகளும் துக்கமாய் இருப்பதைக் கவனித்தவராக, ''உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது என்ன?'' என்று கனிவோடு விசாரித்தார். யோசேப்பினுடைய சொந்த அனுபவங்களானது, அவரை மற்றவர்கள்பால் மன உருக்கம் கொண்டிருக்கச் செய்தது. அவரால் மற்றக் கைதிகளினுடைய துக்கங்களையும், அவமானங்களையும் உணர்ந்துகொள்ள முடிந்தது, ஏனெனில் அவரும் இவ்வனுபவங்களுக்குள்ளாகக் கடந்து சென்றிருந்தவராய்க் காணப்பட்டார். அன்று காலையில் அவர்கள் துக்கமாய் இருந்ததை யோசேப்பு கவனித்து, அவர்கள்பால் உண்மையில் அக்கறைக் கொண்டிருந்தார்.

பானபாத்திரக்காரர்களின் தலைவனும், சுயம்பாகிகளுக்குத் தலைவனுமாகிய, இருவரும் முந்தின இரவில் சொப்பனம் கண்டார்கள் என்றும், அச்சொப்பனங்களின் அர்த்தம் என்னவாக இருக்கும் என்ற எண்ணத்தினால் தாங்கள் கவலையும், துக்கமும் கொண்டுள்ளார்கள் என்றும் யோசேப்பிடம் கூறினார்கள். தன் மூலமாக தேவன் அவர்களுக்கு அர்த்தத்தை வெளிப்படுத்தலாம் என்று கூறி, தன்னிடம் சொப்பனங்களைக் கூறுமாறு அவர்களிடம் யோசேப்பு கூறினார். பானபாத்திரக்காரன் முதலாவதாக தனது சொப்பனத்தைக் கூறினார் மற்றும் அர்த்தத்தைத் தெரிவிக்கத்தக்கதாக, தேவன் யோசேப்பினுடைய மனதை வெளிச்சமூட்டினார்; பானபாத்திரக்காரன்

பார்வோனால் மன்னிக்கப்படப் போகின்றார் என்றும், இன்னும் மூன்று நாளுக்குள்ளாக, அவர் மறுபடியும் அவரது நிலையிலே நிறுத்தப்படப்போகிறார் என்றும் யோசேப்பு அர்த்தம் கொடுத்தார். பின்னர் யோசேப்பு பானபாத்திரக்காரனிடம் பரிதாபகரமான மன்றாட்டை ஏறெடுத்தார்; இது யோசேப்பு தன்னுடைய விடுதலைக்காக எவ்வளவு ஏக்கம் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுகின்றதாய் இருக்கின்றது. யோசேப்பு பின்வருமாறு கூறினார்:

"நீ வாழ்வடைந்திருக்கும்போது என்னை நினைத்து, என்மேல் தயவுவைத்து, என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து, இந்த இடத்திலிருந்து என்னை விடுதலையாக்கவேண்டும். நான் எபிரெயருடைய தேசத்திலிருந்து களவாய்க் கொண்டுவரப்பட்டேன்; என்னை இந்தக் காவல் கிடங்கில் வைக்கும்படிக்கும் நான் இவ்விடத்தில் ஒன்றும் செய்யவில்லை" (ஆதியாகமம் 40:14, 15).

அடுத்துச் சுயம்பாகி தனது சொப்பனத்தைக் கூறினார். மீண்டுமாக தேவன் அர்த்தத்தைப் பற்றி யோசேப்பின் மனதிற்குத் தெளிவுப்படுத்தினார். அர்த்தத்தைத் தெரிவிப்பதற்கு யோசேப்பிற்கு வேதனையாக இருந்தது. இன்னும் மூன்று நாளுக்குள்ளாகச் சுயம்பாகி தூக்கிலிடப்படுவார் என்று யோசேப்பு அவரிடம் தெரிவித்தார். மூன்று நாட்களுக்குள்ளாகவே இரண்டு காரியங்களும் சொன்னப் பிரகாரமாகவே நடந்தது. பானபாத்திரக்காரன் மீண்டுமாக தனது நிலையில் நிறுத்தப்பட்டார் மற்றும் அவர் மீண்டுமாகப் பானபாத்திரத்தைப் பார்வோனின் கரங்களில் கொடுக்கும் பணியைத் தொடர்ந்தவரானார். ஆனால் பானபாத்திரக்காரன் யோசேப்பையும், அவரது வேதனை கலந்த மன்றாட்டையும் மறந்துபோனார். இதற்குப் பின்னர், யோசேப்பு இரண்டு வருடங்கள் சிறையில் காணப்பட்டார். இப்பொழுது அவருக்கு முப்பது வயதாக இருந்தது.

பிற்பாடு ஒரே இரவில் பார்வோன் இரண்டு சொப்பனங்களைக் கண்டார். இவைகள் சாதாரணமான சொப்பனங்கள் அல்ல. அச்சொப்பனங்கள் மிகவும் கவனத்தை ஈர்க்கின்றதாகவும், உணர்வுகளில் ஆழப் பதிந்தவைகளாகவும் காணப்பட்டப்படியால், அவைகளுக்கு விசேஷித்த அர்த்தம் இருக்குமெனப் பார்வோன் அறிந்துகொண்டார். முதலாம் சொப்பனத்தில் பார்வோன் ஏழு புஷ்டியுள்ள பசுக்கள் நதியிலிருந்து ஏறிவந்து நின்றதாகக் கண்டார்; கொஞ்ச நேரம் கழித்து அவலட்சணமும், கேவலமுமான வேறு ஏழு பசுக்களும் நதியிலிருந்து ஏறி வந்து நின்றதைக் கண்டார்; இவைகளைப் பார்க்கிலும் அவலட்சணமான பசுக்களை அவர் வேறு எங்குமே கண்டதில்லை. கேவலமான பசுக்கள், புஷ்டியான பசுக்களைப் பட்சித்துப்போட்டது மற்றும் பட்சித்துப்போட்ட பிற்பாடும் அந்தக் கேவலமான பசுக்கள் புஷ்டியடையவில்லை என்பதாகக் கண்டார். இரண்டாம் சொப்பனத்தில், பார்வோன் செழுமையான ஏழு கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்ததைக் கண்டார்; இன்னுமாக சாவியானதும், தீய்ந்ததுமானதும், பிரயோஜனமற்றதுமான ஏழு கதிர்கள் முளைத்ததையும் கண்டார்; இதை அவர் பார்த்துக்கொண்டிருக்கையில் சாவியான கதிர்கள், அந்தச் செழுமையான ஏழு கதிர்களையும் விழுங்கிப்போட்டது; விழுங்கின பிற்பாடும் சாவியான கதிர்கள், செழுமையாய்க் காணப்படவில்லை. பார்வோன் சொப்பனத்தின் அர்த்தத்தைத் தனக்கு விளக்கும்படிக்கு, தனது சாஸ்திரிகளையும், மந்திரவாதிகளையும் அழைத்தார். ஆனால் அவர்கள் எவராலும், அவருக்குச் சொப்பனத்தினுடைய அர்த்தத்தைக் கூற முடியாமல் இருந்த காரியமானது, அவருக்குப் பெருத்த ஏமாற்றமாய் இருந்தது. எப்போதும் பார்வோனுக்கு அருகாமையில் காணப்படுகின்ற பானபத்திரக்காரன், அப்போது இறுதியாக யோசேப்பை நினைவுகூர்ந்தார் மற்றும் இராஜாவிடம், சிறையிலுள்ள ஓர் எபிரெய வாலிபன் எப்படி, தனது மற்றும் சுயம்பாகியினுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தைத் துல்லியமாகக் கூறினான் என்பதை எடுத்துக் கூறினார்.

நான் (ஆசிரியர்) பின்வருமாறு கற்பனை செய்து பார்க்க விரும்புகின்றேன்: யோசேப்பை அழைக்கும்படிக்கு ஆட்கள் வந்தபோது, யோசேப்பு விடுதலை வேண்டி, தேவனிடம் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். சிறைத்தலைவன் தனது முகத்தில் ஆச்சரியத்தை வெளிப்படுத்தினவராக உள்ளே வந்தார். "யோசேப்பு! இராஜா உன்னை அழைத்துள்ளார்! மாபெரும் பார்வோன் உன்னைப் பார்க்க விரும்புகின்றாராம்!" யோசேப்பு ஆச்சரியத்திற்குள்ளாகவில்லை. யோசேப்பு இதற்காக மிக நீண்ட காலமாய்க் காத்துக் கொண்டிருந்தார். இருதயம் முழுக்க நன்றியினால் நிரம்பப்பெற்றவராக, வேகவேகமாய்க் குளித்தார், சவரம் பண்ணினார் மற்றும் தனது வஸ்திரங்களை மாற்றிக்கொண்டார். தேவன் மீதான விசுவாசத்தின் காரணமாக உண்டான அமைதியையும், நிச்சயத்தையும் கொண்டவராக, யோசேப்பு உலகத்தினுடைய வல்லமையுள்ள பேரரசனாகிய பார்வோனைச் சந்தித்தார். பார்வோன் யோசேப்பை நோக்கி, "சொப்பனங்களுக்கு அர்த்தம் கொடுக்கும் திறன் உனக்குள்ளது என்று நான் உணர்கின்றேன்" என்றார். யோசேப்போ தன்னடக்கத்துடன், "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு உத்தரவு அருளிச் செய்வார்" என்றார்.

"இந்நேரத்திலா தன்னடக்கம்!" என்று சிலர் கூறலாம். யோசேப்பு அடிமையாகப் பத்து வருடங்கள் காணப்பட்டிருந்திருக்கின்றார் மற்றும் சிறையில் மூன்று வருடங்கள் காணப்பட்டிருக்கின்றார். இராஜாவின் முன் மின்னிடுவதற்கான மாபெரும் வாய்ப்பு யோசேப்பிற்கு வந்தபோது, அதை அவர் தூக்கி எறிந்துவிட்டார். தன்னடக்கம் என்பது பொதுவாகக் குணலட்சணத்தினுடைய மேன்மையைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. கூர்மையாய்க் கவனிக்கும் பார்வோனின் கண்களுக்கு இக்குணம் தப்பிவிடவில்லை. பார்வோன் தனது சொப்பனங்களை யோசேப்பிடம் கூறினார். மீண்டுமாகக் கர்த்தர் யோசேப்பினுடைய மனதை வெளிச்சமூட்டினார் மற்றும் இரண்டு சொப்பனங்களுமே ஒரே காரியத்தையே குறிக்கின்றது என்றும், இரண்டு முறை ஒரே காரியம் சொப்பனமாக வந்துள்ளதான விஷயம், அதன் நிச்சயத்தை வலியுறுத்துகின்றது என்றும் யோசேப்பு பார்வோனிடம் விளக்கினார். ஏழு வருடங்கள் எகிப்து தேசத்தில், பரிபூரணமான விளைவு காணப்படும் என்றும், பிற்பாடு ஏழு வருடங்கள் பஞ்சம் காணப்பட்டு, பரிபூரணமான விளைவு காணப்பட்ட வருடங்களினுடைய திரளான விளைவுகளை முற்றிலுமாய்த் தீர்த்துப்போடும் என்றும் யோசேப்பு விளக்கம் கொடுத்தார். பரிபூரணமான விளைவுள்ள ஏழு வருடங்களின் திரளான விளைவு அனைத்தையும் வாங்கிடுவதற்கும் மற்றும் அதனை ஏழு வருட பஞ்ச காலத்திற்கான தேவைக்குப் பயன்படுத்துவதற்கெனச் சேகரித்து வைப்பதற்கும் இராஜா நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பிரதிநிதியை நியமிக்கும்படியான ஆலோசனை ஒன்றை யோசேப்பு அருளினார்.

பார்வோன் இத்திட்டத்திலுள்ள ஞானத்தினால் உடனடியாகக் கவரப்பட்டார். ஆகையால் நாம் வாசிப்பதென்னவெனில்:

"அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி: தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான். பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை. நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தில் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்" (ஆதியாகமம் 41:38-40).

இப்படியாக யோசேப்பு ஒரே நாளில் தாழ்வான கிடங்கிலிருந்து (சிறையிலிருந்து) வெளியேறி, அந்நாட்களிலுள்ள மாபெரும் சாம்ராஜ்யமாகிய எகிப்தினுடைய அதிகார நிலைமைக்கு உயர்த்தப்பட்டார். சகோதரர் ரசல் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோன்று, "யோசேப்பிற்குப் பதினான்கு வருட ஒப்பந்தம்" காணப்பட்டது.

## "யோசேப்பின் குடும்பத்தைப் பஞ்சம் தீண்டியது"

பஞ்சம் பரவலாய்க் காணப்பட்டது மற்றும் உலகத்தில் இக்குறிப்பிட்ட பகுதியில் பஞ்சம் கடுமையாகவே காணப்பட்டது. இது கானானையும், எகிப்தையுங்கூட உள்ளடக்கினதாகவே இருந்தது. தேசம்/நிலம் வறண்டது மற்றும் விதைப்பதற்கு விதைகள்கூட இல்லாமல் போகுமளவுக்கு விளைச்சல் இல்லாமல் இருந்தது. எகிப்தில் உணவு பற்றாக்குறை இல்லை என்ற செய்தி பரவினது. ஆகையால் தங்கள் தங்கள் குடும்பங்களுக்குத் தலைவர்களாகக் காணப்பட்ட தனது குமாரர்களானவர்கள் எகிப்துக்குச் சென்று, கோதுமையை வாங்கும்படியாக யாக்கோபு கட்டளையிட்டார். ஆனால் இப்பொழுது தனது பிரியமான குமாரனாகக் காணப்பட்ட பென்யமீனை, யாக்கோபு மற்றவர்களோடு அனுப்பி வைக்கவில்லை.

பத்துக் குமாரர்கள் எகிப்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் எகிப்தியர்கள் அல்லாத அந்நியர்களாய்க் காணப்பட்டபடியால், அவர்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்த யோசேப்பிடம் அவர்கள் அனுப்பப்பட்டார்கள். தன்னிடத்தில் அவர்கள் உணவுக்காக வருவார்கள் என்று அவர் அறிந்திருந்தார். இதுகூட இதற்கு முன்னதாக அவர்களைத் தொடர்புகொள்வதற்கு அவர் முயற்சிக்காததற்கான காரணமாய் இருக்கலாம். அவர்கள் யோசேப்பிடம் கொண்டு வரப்பட்டபோது, அவரை அவர்கள் அடையாளங்கண்டுகொள்ளாமல், அவரது பத்துச் சகோதரர்களும் அவர் முன் வணங்கினார்கள். அவர்களைப் பொறுத்தமட்டில், அவர் எகிப்தின் அதிபதியாய்த் தோற்றமளித்தார். அவர் முன் அவர்கள் வணங்கினபோது, அவர் கதிர்கட்டுகள் மற்றும் நட்சத்திரங்கள் பற்றியதான தனது சொப்பனத்தை நினைவுகூர்ந்தார். சேனையைக்கொண்டு வந்து தானியங்களைத் திருடிச் செல்லத்தக்கதாக, எகிப்தில் எவ்வளவு தானியங்கள் காணப்படுகின்றதெனப் பார்த்துச் செல்வதற்கு

வந்த வேவுகாரர்களாக அவர்கள் காணப்படுகின்றார்களா? என்று யோசேப்பு துபாசி வழியாய் அவர்களிடத்தில் கேட்டார். அவர்கள் தங்கள் நிலைமையைக் குறித்து உண்மையாய் விவரித்தார்கள் மற்றும் சில கேள்விகளுக்குப் பதிலளித்தபோது, தங்கள் தந்தை குறித்தும், தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனைக் குறித்தும் குறிப்பிட்டார்கள்.

இருபது வருடங்கள் தாண்டிபோன நிலையிலும், தனது தந்தையும், தனது சகோதரனாகிய பென்யமீனும் உயிரோடும், நலமாயும் இருக்கின்றார்கள் என்பதை அறிந்தபோது, யோசேப்பினுடைய இருதயம் (மகிழ்ச்சியில்) துள்ளியிருக்க வேண்டும். ஆனால் யோசேப்பு தன்னை யார் என்று அடையாளம் காட்டிக்கொள்ளவில்லை. அவர் தன்னைக் கடுமையானவராகவே காண்பித்துக்கொண்டார் மற்றும் இறுதியில் அவர்களுக்குத் தானியத்தை விற்பதற்குச் சம்மதித்தார். ஆனால் பிற்பாடு, மேலும் தானியங்கள் வாங்க வேண்டுமெனில், அவர்கள் தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனைத் தங்களோடுகூட அழைத்துக்கொண்டுவருவதன் மூலமாக, தங்கள் உண்மைத்தன்மையை நிரூபித்தாக வேண்டுமென்று அவர்களிடம் யோசேப்பு கூறினார். அதுவரையிலும் சகோதரர்களில் ஒருவராகிய சிமியோன், பிணைக் கைதியாகச் சிறையில் வைக்கப்படுவார் என்று யோசேப்பு தெரிவித்தார். இக்கட்டத்தில் பத்துச் சகோதரர்களில் ஒவ்வொருவருடைய மனதிலும் ஒரு கருத்து, ஒரே நேரத்தில் எழுந்திருக்கும். அது அவர்களது பதினேழு வயது சகோதரனாகிய யோசேப்பு, பலவருண அங்கி தரித்தவராக, இருதயத்தில் வியாகுலத்தோடே, அவர்களிடத்தில் இரக்கத்திற்காகக் கெஞ்சி மன்றாடினது பற்றின கவலையுள்ள நினைவாகும். இப்படி யோசேப்பு கெஞ்சினபோது, அவர்கள் செவிக்கொடாமல், வெள்ளிக்காசுகளுக்காக அவரை விற்றுப் போட்டுவிட்டார்கள்.

"நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது; அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக்கொண்டபோது, அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாமற்போனோமே; ஆகையால், இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது என்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள். அப்பொழுது ரூபன் அவர்களைப் பார்த்து: இளைஞனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லவில்லையா? நீங்கள் கேளாமற்போனீர்கள்; இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி நம்மிடத்தில் வாங்கப்படுகிறது என்றான்" என்பதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றது (ஆதியாகமம் 42:21, 22).

அந்தச் சகோதரர்கள் தாங்கள் செய்த தவறினிமித்தம் மனவுளைச்சலுக்குள்ளானார்கள். அவர்கள் யோசேப்பின் முன் நிற்கையில், இவ்வார்த்தைகளைப் பேசினார்கள்; அவர்களது ஒவ்வொரு வார்த்தையையும் அவர் புரிந்துகொள்கின்றார் என்பதை அறியாமல் இவ்வார்த்தைகளைப் பேசினார்கள். யோசேப்பு தன்னை அடக்கிக்கொள்ள முடியாததினால் யாருக்கும் தெரியாமல் அழத்தக்கதாக, அவர்களைவிட்டு அப்புறம் போனார். அவரது கண்ணீர்கள் சந்தோஷத்தின் மற்றும் இரக்கத்தின் கண்ணீர்களாகக் காணப்பட்டது; தனது சகோதரர்கள் தங்கள் தவறுகளுக்காக வருந்துவதை யோசேப்பு கண்டதினிமித்தமாகவும், கடந்து சென்ற வருடங்களின் அனுபவங்களானது அவர்களிடத்தில் உண்மையான மனம் வருந்துதலையும், குணலட்சணங்களில் மாற்றத்தையும் கொண்டுவந்துள்ளதை யோசேப்பு கண்டதினிமித்தமாகவும், யோசேப்பு சந்தோஷத்தின் கண்ணீர்களை வடித்தார். எனினும் அவர்களை அவர் இன்னும் சோதித்துப்பார்க்க வேண்டியிருந்தது. அழுத பிற்பாடு அவர் அவர்களிடத்தில் திரும்பி வந்து, சிமியோனைப் பிணைக் கைதியாகப் பிடித்து வைத்துக்கொண்டு, மற்றவர்களை அனுப்பி வைத்தார்.

வீட்டிற்குப் போகிற வழியில், அவர்கள் உணவிற்காக தங்கள் சாக்குகளைத் திறந்தபோது, அவர்கள் தானியத்திற்கான விலையாகக் கொடுத்திருந்த பணமானது, அவரவர் சாக்குகளில் இருந்ததைக் கண்டார்கள். அந்தச் சகோதரர்கள் கோதுமையுடன் வீடு வந்து சேர்ந்தபோது, அவர்கள் நடந்த அனைத்தையும், அதாவது தாங்கள் அதிபதியினால், வேவுகாரர்களெனச் சந்தேகிக்கப்பட்டதையும், சிமியோன் பிணைக் கைதியாக எகிப்தில் வைக்கப்பட்டதினால், சிமியோன் தங்களோடு வீடு திரும்பவில்லை என்பதையும் தங்கள் தந்தையாகிய யாக்கோபினிடத்தில் தெரிவித்தார்கள். பின்னர்த் தானியத்திற்கு விலையாக தாங்கள் செலுத்தின பணம் அவரவருடைய கோதுமை சாக்கில் திரும்ப வைக்கப்பட்டிருந்தது என்பதையும் அவர்கள் தெரிவித்தார்கள். அடுத்தமுறை கோதுமை வாங்க வேண்டுமெனில், அவர்கள் தங்களோடு பென்யமீனை அழைத்துச் செல்ல வேண்டுமென்றும் தெரிவித்தார்கள். இதற்கு யாக்கோபு மறுப்புத் தெரிவித்தவராக,

"என்னைப் பிள்ளையற்றவனாக்குகிறீர்கள்; யோசேப்பும் இல்லை; சிமியோனும் இல்லை, பென்யமீனையும் கொண்டுபோகப் பார்க்கிறீர்களா?" என்று சொன்னார் (ஆதியாகமம் 42:36). **--3050--**

யோசேப்பிற்கு எதிராக தாங்கள் செய்திட்ட குற்றமே, தங்களுக்கான இக்கட்டு நிலைக்குக் காரணம் என்பதாகவும், இந்த இக்கட்டு என்பது தங்களுக்குரிய தண்டனை என்பதாகவும் காணப்படுகின்ற அவர்களது பயங்களை, அவர்களது தந்தையாகிய யாக்கோபின் வார்த்தைகளும் எதிரொலிப்பதை அவர்கள் கேட்டபோது, அவர்கள் அதிர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

எகிப்திலிருந்து வாங்கி வந்ததான கோதுமை குறைந்தபோது, மீண்டும் போய் வாங்கி வரும்படிக்கு, யாக்கோபு தனது குமாரர்களை வற்புறுத்தினார். ஆனால் பென்யமீன் தங்களோடு வராதது வரையிலும், தாங்கள் போவதில்லை என்று அவர்கள் உறுதியுடன் மறுத்துவிட்டனர். யாக்கோபும் பலமாய் மறுப்புத் தெரிவித்தார். பின்னர் யூதா பேசி, பென்யமீனுக்கு உத்தரவாதியானார். இதே யூதாதான் பலவருடங்களுக்கு முன்னதாக, யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கான கருத்தை முன்வைத்தவர் என்பதை நாம் நினைவில்கொள்வோமாக. இப்பொழுது இவர் பென்யமீனுடைய பாதுகாப்பிற்காக, தன்னுடைய சொந்த ஜீவனையே பணையம் வைத்திட்டார். எத்துணை மாற்றம் இவரது இருதயத்தில் ஏற்பட்டிருக்கின்றது. தேவையின் நிலைக் கருதி, இறுதியாக யாக்கோபு சம்மதித்தார். யாக்கோபு எகிப்தினுடைய அதிபதிக்குத் தேன், கந்தவர்க்கங்கள், கொட்டைகள் மற்றும் வாதுமைக்கொட்டைகளாகிய காணிக்கைகளையும், இரட்டிப்பான பணத்தையும் அவர்களிடத்தில் கொடுத்தனுப்பினார். பென்யமீனை அவர் போக அனுமதித்து, பரிதாபகரமாக,

"அந்த மனிதன் அங்கிருக்கிற உங்கள் மற்றச் சகோதரனையும் (சிமியோனையும்), பென்யமீனையும் உங்களுடனே அனுப்பிவிடும்படிக்கு, சர்வவல்லமையுள்ள தேவன் அவன் சமுகத்தில் உங்களுக்கு இரக்கங்கிடைக்கப் பண்ணுவாராக; நானோ பிள்ளையற்றுப் போனவனைப்போல் இருப்பேன் என்றான்" (ஆதியாகமம் 43:14).

அவர்கள் எகிப்துக்கு வந்தபோது, தனது வீட்டில் அவர்களுக்கு இரா உணவு பரிமாறப்படுவதற்கும், சிமியோனை விடுவித்து, அவர்களோடு அனுப்பிடுவதற்கும் யோசேப்பு கட்டளைகளிட்டார். அவர்கள் சாப்பிடுவதற்கு ஆயத்தமானபோது, யோசேப்பு எகிப்திய பிரபுவுக்குரிய இராஜ வஸ்திரம் தரித்தவராய் உள்ளே வந்தார் மற்றும் மீண்டுமாக அவரை அவர்கள் பணிந்து வணங்கிக்கொண்டார்கள். யோசேப்பு கனிவாய் அவர்களது தகப்பனைக் குறித்து விசாரித்தார். யோசேப்பு தன்னுடைய தாய் பெற்றக் குமாரனும், தனது சகோதரனுமான பென்யமீனைக் கண்டார் மற்றும் அவரைக் கட்டித்தழுவிடுவதற்கு ஏங்கினார். அவருடைய உணர்வுகளை அவரால் அடக்கிக்கொள்ள முடியாததினால், அவர்கள் அவரது ஆனந்த கண்ணீரைப் பார்க்காதபடிக்கு, அவர் சிறிது நேரம் அவர்களைவிட்டு அப்புறம் செல்ல வேண்டியிருந்தது. அந்தச் சகோதரர்கள் அவர்களது இருக்கைகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் மற்றும் அவர்கள் தங்கள் வயதின் துல்லியமான வரிசையின்படி அமர்த்தப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டபோது, தங்களைக் காட்டிலும் பென்யமீனுக்கு ஐந்து பங்குகள் கொடுக்கப்பட்டதைக் கண்டும் ஆச்சரியமடைந்தார்கள். இதனால் அவர்கள் கோபம் அடைந்தார்களா? யோசேப்பின் மீது அவர்கள் முன்பு கொண்டிருந்ததுபோன்று, இப்பொழுது பென்யமீன் மீது பொறாமை கொண்டார்களா? கொஞ்சமும் இல்லை! அவர்களுக்கு அது பிடித்திருந்தது. பென்யமீனுக்கு ஐந்து பங்கு கொடுக்கப்பட்டதினிமித்தம் அவர்கள் மகிழ்ந்து சிரித்தார்கள். "பென்யமீனோடுகூட சந்தோஷமாயிருந்தார்கள்" என்பதாகப் பதிவுகள் தெரிவிக்கின்றன. அவர்களிடத்திலான இந்த ஒரு மாற்றத்தையும் யோசேப்பு கவனித்திருந்திருப்பார் என்பதில் நமக்கு நிச்சயமே.

அவர்கள் தங்கள் தந்தை மீது கொண்டிருக்கும் அனுதாபத்தையும், தங்கள் இளைய சகோதரனாகிய பென்யமீனுடைய நலனுக்கடுத்த விஷயங்கள் மீதான அவர்களது அக்கறையையும், இன்னும் சோதித்திட வேண்டுமென்று யோசேப்பு சிந்தித்தார். அவர்களது சாக்குகள் தானியங்களினால் நிரப்பப்படும்போது, தனது சொந்த வெள்ளிப்பாத்திரமானது பென்யமீனுடைய சாக்கிற்குள்ளாக மறைத்து வைக்கும்படிக்கு யோசேப்பு ஏற்பாடு பண்ணினார். காலையில் அந்தச் சகோதரர்கள் கொஞ்சம் தொலைவில் போயிருக்க, தனது பாத்திரத்தை அவர்கள் திருடியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டுடன், தனது பிரதானிகளை/ஊழியர்களை அவர்கள் பின்பாக யோசேப்பு அனுப்பி வைத்தார். தாங்கள் குற்றமற்றவர்கள் என்று கூறி, அவர்கள் குற்றச்சாட்டினை ஏற்க மறுத்தார்கள் மற்றும் "உம்முடைய அடியாருக்குள்ளே அது எவனிடத்தில் காணப்படுமோ அவன் கொலையுண்ணக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம் என்று" கூறி, பாத்திரத்தைத் தேடிப் பார்க்கும்படிக்குப் பிரதானிகளை அழைத்தார்கள் (ஆதியாகமம் 44:9).

சாக்குகள் சோதிக்கப்பட்டன மற்றும் பாத்திரமானது பென்யமீனுடைய சாக்கில் கண்டு பிடிக்கப்பட்டது. அது எத்துணை பயங்கரமான அதிர்ச்சியாய் இருந்திருக்கும்! பென்யமீனுக்காக அவர்கள் தங்கள் சொந்த ஜீவன்களை உத்தரவாதமாக்குவதாக, அவர்கள் தங்கள் தகப்பனிடம் வாக்குறுதி கொடுத்து வந்திருக்கின்றார்கள்; ஆனால் இப்பொழுதோ தங்கள் சொந்த வார்த்தையினாலேயே பென்யமீன் மரிக்கப்போகின்றார் மற்றும் தாங்களும் அடிமைகளாகப் போகின்றனர். பென்யமீனை மாத்திரம் தங்களோடு அடிமையாகக் கூட்டிச் செல்வதற்கும், மற்றவர்களை வீடு திரும்புவதற்கென அனுமதிப்பதற்குமென்று அந்த ஊழியக்காரர்கள் பெருந்தன்மையுடன் கருத்துத் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் பென்யமீனைத் தங்களிடமிருந்து பிரிப்பதற்கு அனுமதித்திடவில்லை, ஒரு கணம்கூட அனுமதித்திடவில்லை. அவர்கள் அனைவரும் துக்கத்தினால், அதிர்ச்சியுடன் பென்யமீனோடு எகிப்திற்குத் திரும்பிச் சென்றார்கள். இவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னதாக, யோசேப்பு அடிமையாக தனியே செல்வதற்கு எளிதில் அனுமதித்திட்ட அதே மனிதர்கள்தானா? இவர்கள் ஒரு வயதான மனிதனுடைய இருதயத்தை நொறுக்கிடத்தக்கதாக, யோசேப்பினுடைய அங்கியை இரத்தத்தில் தோய்த்திட்ட அதே மனிதர்கள்தானா?

அவர்கள் அரமனைக்குத் திரும்பி வந்தபோது, யோசேப்பு அவர்கள்மேல் குற்றஞ்சாட்ட, அவர்கள் யோசேப்பிற்கு முன்பாக தரையிலே விழுந்தார்கள். வார்த்தைகள் பேசுவது பயனற்றதாய் இருந்தது. அவர்களால் என்ன பேச முடியும்? சாட்சியம் இருக்க, அவர்களால் எப்படித் தங்களைக் காத்துக்கொள்வதற்கு வாதாட முடியும்? எந்த நம்பிக்கையும் இல்லை; தாங்கள் பிரச்சனையில் அகப்பட்டிருப்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் சார்பில் யூதா பேசுபவரானார்.

"அதற்கு யூதா: என் ஆண்டவனாகிய உம்மிடத்தில் நாங்கள் என்ன சொல்லுவோம்? என்னத்தைப் பேசுவோம்? எதினாலே எங்கள் நீதியை விளங்கப்பண்ணுவோம்? உம்முடைய அடியாரின் அக்கிரமத்தை தேவன் விளங்கப்பண்ணினார்; பாத்திரத்தை வைத்திருக்கிறவனும் நாங்களும் என் ஆண்டவனுக்கு அடிமைகள் என்றான்" (ஆதியாகமம் 44:16).

இப்படியாக யூதா தன்னையும், தனது சகோதரர்களையும், பென்யமீனையும், யோசேப்பினிடத்தில் அடிமையாக ஒப்புக்கொடுத்தார். பாத்திரத்தை எடுத்தவர் மாத்திரமே தனது அடிமையாகக் காணப்பட வேண்டுமென்று கூறி, அனைவரையும் அடிமையாக ஏற்றுக்கொள்வதற்கு யோசேப்பு மறுத்துவிட்டார். யோசேப்போ, "நீங்களோ சமாதானத்தோடே உங்கள் தகப்பனிடத்துக்குப் போங்கள்" என்றார். யோசேப்பு இறுதியானதும், மிகக் கடினமானதுமான பரீட்சையைத் தனது சகோதரர்கள்மேல் வைத்தார். பென்யமீன்தான் பாத்திரத்தைத் திருடியுள்ளார் என்பது அவர்கள் அறிந்திருந்த காரியமாய் இருந்தது. பென்யமீன் இதற்கான பின்விளைவைச் சந்தித்தாக வேண்டியிருக்கும் என்பதையும் அந்தச் சகோதரர்கள் புரிந்திருந்தார்கள்; இதற்கு அவர்கள் காரணமில்லை. அவர்களுக்குச் சொந்த குடும்பங்கள் இருந்தபடியால், அவர்கள் சிந்திக்க வேண்டியிருந்தது. உணவானது தங்கள் குடும்பத்தாருக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் அல்லது குடும்பத்தினர் பட்டினிக்கிடக்க நேரிடும் என்று அவர்கள் யோசித்திருக்கலாம். தந்தையைப் பொறுத்தமட்டில், தந்தைதான் சூழ்நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியாக அவர்கள் யோசிக்கின்றார்களா என்பதைப் பார்த்திடுவதற்கு யோசேப்பு ஆவலாய் இருந்தார். இது கடுமையான பரீட்சையாய் இருந்தது.

## "யூதாவினுடைய இருதய பூர்வமான மன்றாட்டு"

அனைவரின் சார்பிலுமாக யூதா பேசுகையில், சரித்திரத்தில் எங்குமே இல்லாத அளவுக்கு மிகவும் பரிதாபகரமான மற்றும் உருக்கமான மன்றாட்டுகளை ஏறெடுத்தார்.

"அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து: ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம் மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர். உங்களுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டா என்று என் ஆண்டவன் உம்முடைய அடியாரிடத்தில் கேட்டீர். அதற்கு நாங்கள்: எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனாரும், அவருக்கு முதிர்வயதிலே பிறந்த ஒரு இளைஞனும் உண்டு என்றும், அவனுடைய தமையன் இறந்துபோனான் என்றும், அவன் ஒருவன் மாத்திரமே அவனைப் பெற்ற தாயாருக்கு இருப்பதினால் தகப்பனார் அவன்மேல் பட்சமாயிருக்கிறார்

என்றும் என் ஆண்டவனுக்குச் சொன்னோம். அப்பொழுது நீர்: அவனை என்னிடத்துக்கு கொண்டுவாருங்கள்; என் கண்களினால் அவனைப் பார்க்கவேண்டும் என்று உமது அடியாருக்குச் சொன்னீர். நாங்கள் ஆண்டவனை நோக்கி: அந்த இளைஞன் தன் தகப்பனைவிட்டுப் பிரியக்கூடாது, பிரிந்தால் அவர் இறந்துபோவார் என்று சொன்னோம். அதற்கு நீர்: உங்கள் இளைய சகோதரனைக் கொண்டுவராவிட்டால், நீங்கள் இனி என் முகத்தைக் காண்பதில்லை என்று உமது அடியாருக்குச் சொன்னீர். நாங்கள் உமது அடியானாகிய என் தகப்பனாரிடத்துக்குப் போனபோது, என் ஆண்டவனுடைய வார்த்தைகளை அவருக்கு அறிவித்தோம். எங்கள் தகப்பனார் எங்களை நோக்கி: நீங்கள் திரும்பப்போய், நமக்குக் கொஞ்சம் தானியம் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதற்கு: நாங்கள் போகக்கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே வந்தால் போவோம்; எங்கள் இளைய சகோதரன் எங்களோடே வராவிட்டால், நாங்கள் அந்தப் புருஷனுடைய முகத்தைக் காணக்கூடாது என்றோம். அப்பொழுது உம்முடைய அடியானாகிய என் தகப்பனார்: என் மனைவி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்து போய்விட்டான்; அவன் பீறுண்டுபோயிருப்பான் என்றிருந்தேன், இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன், இதெல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நீங்கள் இவனையும் என்னை விட்டுப் பிரித்து அழைத்துப்போகுமிடத்தில் இவனுக்கு மோசம் நேரிட்டால், என் நரைமயிரை வியாகுலத்தோடே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றார். ஆகையால் இளையவனை விட்டு, நான் என் தகப்பனாகிய உமது அடியானிடத்துக்குப் போனால், அவருடைய ஜீவன் இவனுடைய ஜீவனோடே ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறபடியினால், அவர் இளையவன் வரவில்லை என்று அறிந்தமாத்திரத்தில் இறந்துபோவார்; இப்படி உமது அடியாராகிய நாங்கள் உமது அடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரைமயிரை வியாகுலத்துடனே பாதாளத்தில் இறங்கப்பண்ணுவோம். இந்த இளையவனுக்காக உமது அடியானாகிய நான் என் தகப்பனுக்கு உத்தரவாதி; அன்றியும், நான் இவனை உம்மிடத்துக்குக் கொண்டுவராவிட்டால், நான் எந்நாளும் உமக்கு முன்பாகக் குற்றவாளியாயிருப்பேன் என்று அவருக்குச் சொல்லியிருக்கிறேன். இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன் என்றான்" (ஆதியாகமம் 44:18-34).

யூதா பேசிக்கொண்டிருக்கையில், யோசேப்பின் மனதில் காணப்பட்ட சந்தேகங்கள் கரைந்துபோயின. அவர்கள் உண்மையில் முழுமையாய் மாறியுள்ளனர். தங்கள் இளைய சகோதரனுக்காக தங்கள் சொந்த ஜீவியங்களைத் தியாகம் பண்ணிடுவதற்கும், தங்கள் தகப்பனுடைய இருதயத்திற்குத் துக்கம் கொடுக்காமல் இருப்பதற்கும் அவர்கள் இப்பொழுது விருப்பம் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.

தன்னை வெளிப்படுத்திடுவதற்கான வேளை யோசேப்பிற்கு வந்தது. மற்றவர்களாகிய எகிப்தியர்கள் அனைவரையும் அறையை விட்டு வெளியேற்றி, கண்ணீர்கள் முகத்தில் வடிய, யோசேப்பு தன்னை தன்னுடைய சகோதரர்களிடத்தில் வெளிப்படுத்தினார். "நீங்கள் எகிப்துக்குப் போகிறவர்களிடத்தில் விற்றுப்போட்ட உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நான் தான்" என்று யோசேப்பு எபிரெய மொழியில் பேசினார். அவரது சகோதரர்களுக்கு ஏற்பட்ட வியப்பை/திகைப்பை உங்களால் கற்பனை செய்துபார்க்க முடிகின்றதா? பல வருடங்களுக்கு முன்னதாக தாங்கள் யோசேப்பிற்குச் செய்தவைகளினிமித்தமான குற்ற உணர்வினுடைய வலியினை அடைந்தார்கள். அவர்கள் அமைதி இழந்தவர்களானார்கள். இதை உடனடியாகக் கவனித்த யோசேப்பு, கிருபையாய்/இரக்கமாய், அவர்களது இருதயத்தை அமைதிபடுத்தினார் மற்றும் கிருபைக்கான/இரக்கத்திற்கான சிறந்த மாதிரியானார். அவர் கூறினதாவது:

"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்" (ஆதியாகமம் 45:5, 7).

யோசேப்பு எத்துணை பெருந்தன்மையான இருதயத்தைப் பெற்றிருந்தார்! தேவனுக்கொத்த எத்துணை மன்னிப்பைப் பெற்றிருந்தார்! அடிமையாக காலம் கழித்த வருடங்களை மறந்துவிட்டார், கிடங்கில்/சிறையில் காணப்பட்ட வருடங்களையும், தகப்பனுடைய வீட்டைப்பற்றின ஏக்கத்தினால்

தனிமை துயரத்தில் கழித்திட்ட பகல்களையும், இரவுகளையும் யோசேப்பு மறந்துவிட்டார். இப்பொழுது, எல்லாம் சரியாகிவிட்டது! பென்யமீனை அவர் முதலாவதாகக் கட்டிப் பிடித்தார். பென்யமீன் அவரால் மிகவும் அன்புகூரப்பட்ட இளைய சகோதரனாவார். பின்னர் தனது அனைத்துச் சகோதரர்களையும் யோசேப்பு கட்டிப்பிடித்து, அவர்களை முத்தம் செய்தார். அவர்கள் அனைவரும் ஆனந்த கண்ணீர்களை வடித்தார்கள். யோசேப்பு உடனடியாக தனது தகப்பனையும், தனது சகோதரர்களின் குடும்பங்களையும் அழைத்து, அவர்களைக் கோசேன் தேசத்தில் சுகமாய்க் குடியேற்றினார். நீண்ட காலத்திற்குப் பின்பாக யோசேப்பு தன்னுடைய தந்தையுடன் இணையும் சம்பவத்தின் உருக்கத்தை நம்மால் நன்கு கற்பனை செய்துபார்க்க முடிகின்றது.

இதுதான் யோசேப்பின் கதை; அருமையானதும், மனதை உருகச் செய்கிறதுமான ஒரு கதையாகும். இக்கதையானது, மனித உணர்வுகளினால் நிரம்பியிருப்பதினால், இதனை வாசிக்கையில், நமது கண்களிலிருந்து கண்ணீர்கள் வடிகின்றது. இது தீர்க்கத்தரிசனமான அர்த்தங்கள் அநேகவற்றை உள்ளடக்கினதாகவும் இருக்கின்றது. இவைகள் என்ன உணர்த்துகின்றன என்பதை உங்களால் உணர முடிகின்றதா? இது தேவன் தம்முடைய திட்டங்களை நுணுக்கமாக திட்டமிட்டுள்ளார் என்றும், பின்னர் அத்திட்டத்தின் பாகங்களைச் சித்தரிக்கத்தக்கதாக யோசேப்பினுடைய ஒவ்வொரு அனுபவங்களையும் மேற்பார்வையிட்டு, மற்றும் நன்மைக்கேதுவாய் மாற்றிப்போட்டுள்ளார் என்றும் உணர்த்துகின்றதாய் இருக்கின்றது. எப்படித் தேவன் அனைத்துச் சூழ்நிலைமைகளையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றார் என்பதையும், தம்மால் கையாளப்படுகின்றவர்களின் அனுபவங்களை அவர் எப்படி முழுமையாய்த் திட்டமிடுகின்றார் மற்றும் அடக்கி ஆளுகின்றார் என்பதையும் உணர்கையில் சிலிர்க்கின்றது.

## "யோசேப்பு, இயேசுவுக்கு நிழலாவார்"

யோசேப்பின் வாழ்க்கையில் தேவன் ஏற்படுத்தியுள்ள தீர்க்கத்தரிசனமான மற்றும் அடையாளமான காட்சிகள் சிலவற்றைப் பார்க்கலாம். யோசேப்பு இயேசுவுக்கு நிழலாவார். யோசேப்பு யாக்கோபுக்குப் பிரியமான குமாரனாகவும், எப்போதும் அவரோடுகூடத் துணைவராகவும் காணப்பட்டதுபோன்று, இயேசுவும் தேவனுடைய பிரியமுள்ள குமாரனாவார். இயேசு தேவனுடைய செல்லப்பிள்ளையாகவும், நித்தமும் தேவனுக்கு மனமகிழ்ச்சியாகவும் காணப்பட்டார் என்று கூறப்பட்டுள்ளது (நீதிமொழிகள் 8:30). தோத்தானிலுள்ள அவரது சகோதரர்களிடத்தில் யாக்கோபு, யோசேப்பை அனுப்பி வைத்தது போன்று, பரம பிதாவும் தமது பிரியமான குமாரனை இஸ்ரயேல் தேசத்தாரிடத்திற்கு அனுப்பி வைத்தார். இயேசு தம்மைக் குறித்து, "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரயேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே அன்றி, மற்றபடியல்ல வென்றார்" (மத்தேயு 15:24). யோசேப்பின் சகோதரர்கள், அவரை முகாந்தரமில்லாமல் பகைத்ததுபோன்று, இயேசுவும் தம்மைக் குறித்து, "முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் (யோவான் 15:25). தன் சகோதரர்கள்பால் யோசேப்பு செய்துவந்த வேலையானது, ஏற்றுக்கொள்ளப்படாததுபோன்று, இயேசுவும் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் வந்தபோது, அவருக்குச் சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இன்னுமாக அவர், "அசட்டைப் பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும்" ஆவார் (ஏசாயா 53:3).

யோசேப்பின் சகோதரர்கள் அவர் மீது மிகவும் பொறாமை கொண்டிருந்ததுபோன்று, இயேசுவும் பொறாமையின் காரணமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்று நாம் மத்தேயு 27:18 மற்றும் மாற்கு 15:10-ஆம் வசனங்களில் வாசிக்கின்றோம். "நாம் அவனைக் கொன்று போடுவோம், வாருங்கள்" என்று யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பைக்குறித்துக் கூறினார்கள். இம்மாதரியாகவே யூதர்களும் இயேசுவைக் கொல்லத்திட்டமிட்டு, "இவரைச் சிலுவையில் அறையும்! இவரைச் சிலுவையில் அறையும்!" என்று கத்தினார்கள். யோசேப்பு அவரது சகோதரர்களால் குழிக்குள் தள்ளப்பட்டபோது, அவர் வெளித்தோற்றமாகக் கொல்லப்பட்டதுபோன்று, இயேசு உண்மையிலேயே யூதர்களால் கொன்றுபோடப்பட்டார். யூதாவினுடைய ஆலோசனையின் பேரில் யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டதுபோல, இயேசுவும் யூதாசினால், அடிமைக்குரிய விலையாகிய முப்பது வெள்ளிக்காசுகளுக்காக விற்கப்பட்டார். உண்மையுள்ளவராகிய யோசேப்பு மூன்று வருடங்கள் சிறையில் கழித்தார்; உண்மையுள்ளவராகிய நமது கர்த்தர் இயேசுவும் மூன்று நாட்கள், மரணம் எனும் சிறைச்சாலையில் காணப்பட்டார். பார்வோன் யோசேப்பைச் சிறைச்சாலையிலிருந்து, எகிப்தின் அதிகாரியாகிய தனக்கு அடுத்த நிலைக்கு உயர்த்தினதுபோன்று, இயேசுவும் மூன்றாம் நாளில் மரணத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, அண்டசராசரத்தை ஆளும் யேகோவா தேவனுக்கு அடுத்த நிலையிலுள்ள மகா மகிமைக்கும், மற்றும் வல்லமைக்கும் உயர்த்தப்பட்டார். [illegible]

உயிர்த்தெழுதலுக்குப் பிற்பாடு இயேசு தம்மைக் குறித்து, "வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார் (மத்தேயு 28:18). அனைவரும் யோசேப்புக்கு முன்பு வணங்க வேண்டும் என்றும், அவருக்குக் கனம் செலுத்த வேண்டும் என்றும், பார்வோன் கட்டளையிட்டதுபோன்று, தேவனும், "பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ண வேண்டும்" என்று கட்டளையிட்டார் (யோவான் 5:22).

யோசேப்பின் விஷயத்தில் துன்பங்களும்/விபரீதங்களும், நம்பிக்கைத் துரோகங்களும், அவமானங்களும் எகிப்தின் அதிகாரிக்குரிய கனம் மற்றும் மகிமைக்கு நேரான வழியினை ஆயத்தப்படுத்தினது. இப்படியாகவே இயேசுவின் விஷயத்திலும் காணப்பட்டது; அவருக்கு வந்திட்டதான சோதனையான அனுபவங்களானது, அவரை உண்மையுள்ளவரெனத் தேவனுக்கு நிரூபித்துக்காட்டி, அவர் உயர்த்தப்படுவதற்கு வழிநடத்தினதாய் இருந்தது.

"அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்" (எபிரெயர் 12:2).

யோசேப்பு பார்வோனுக்காக நிலங்களையும், ஜனங்களையும் விலைக்கு வாங்கி, அனைவருக்கும் அப்பம் வழங்கினார். இயேசு மனுக்குலத்தை வாங்கியுள்ளார்; ஆயிர வருட யுகத்தின்போது கிறிஸ்து, ஜீவனை விரும்புகின்ற அனைவருக்கும் ஜீவனை (தம்முடைய புண்ணியத்தை) அருளுவார். பார்வோனின் பிரதிநிதியாகிய யோசேப்பின் மூலமே அல்லாமல் மற்றபடி ஜனங்களுக்கு ஜீவன் இல்லாமல் இருந்ததுபோன்று, பரம பிதாவின் பிரதிநிதியாகிய கிறிஸ்துவின் மூலமாயும், கிறிஸ்துவுக்குள்ளாகவும் மாத்திரமே ஒழிய, மற்றபடி உலகத்திலுள்ள எவருக்கும் ஜீவனில்லை. முதலில் யோசேப்பை நிராகரித்த அவரது சகோதரர்கள், இறுதியில் அவரை அங்கீகரித்ததுபோன்று, இயேசுவைப் புறக்கணித்து, அவரைச் சிலுவையில் அறைந்துபோட்டதான யூத தேசத்தார், யாக்கோபின் இக்கட்டுக் காலத்தினை உள்ளடக்கின கடும் சோதனை மற்றும் தாழ்மையை உருவாக்கும் பல அனுபவங்களுக்குப் பிற்பாடு, இறுதியில் இயேசுவை அங்கீகரித்து, ஏற்றுக்கொள்வார்கள். யோசேப்பு தன்னுடைய சகோதரர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தினபோது அவர்கள் அழுதார்கள். "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" என்று நாம் வாசிக்கின்றோம் (சகரியா 12:10). யோசேப்பு தன்னுடைய சகோதரர்களை, கடந்த காலத்தில் அவர்கள் தனக்குச் செய்த காரியங்களின் அடிப்படையிலோ அல்லது அவர்களது கடந்த கால பாவங்களின் அடிப்படையிலோ நியாயந்தீர்க்காமல், தற்போதுள்ள அவர்களது இருதயத்தினுடைய நிலைமையின் அடிப்படையில் நியாயந்தீர்த்ததுபோலவே, உலகத்திற்கான எதிர்காலத்திலுள்ள நியாயத்தீர்ப்பும்கூட, மனிதர்கள் அக்காலத்தின்போது கொண்டிருக்கும் மனம் மற்றும் இருதயத்தினுடைய நிலைமையின் அடிப்படையிலேயே காணப்படும்.

இவைகள் இக்கதையினுடைய சில நிழலான அம்சங்களாகும். இன்னும் அநேக அம்சங்கள் உண்டு. இந்த இணைகள்/ஒப்புமைகள் அனைத்தும் தற்செயலாய் நடந்தது என நீங்கள் எண்ணுகின்றீர்களா? இல்லை என்று நீங்கள் அறிவீர்கள். இவைகள் தேவனுடைய செயலே. இவைகள் நாம் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின்பற்றவில்லை என்பதையும், நாம் உண்மையிலேயே சத்தியத்தைப் பெற்றிருக்கின்றோம் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள உதவப்படுவதற்கும், நாம் உற்சாக மூட்டப்படுவதற்கும், அருளப்பட்டவைகளாகும் (2 பேதுரு 1:16).

## "நமக்கான தனிப்பட்ட பாடங்கள்"

யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்கள் பற்றின கதையிலுள்ள சில தனிப்பட்ட பாடங்களை நாம் பார்க்கலாம். இக்கதையானது நான் (ஆசிரியர்) சிறுபிள்ளையாக இருக்கையில் எனது தாயார் அவர்களது அர்மேனியன் வேதாகமத்திலிருந்து எனக்கு வாசிக்கும் கதைகளில் ஒன்றாகும். இக்கதையிலுள்ள உயர்தரமான அனுபவங்களினால் நான் எப்படிக் கவர்ந்து இழுக்கப்பட்டேன் என்பதை நான் நன்கு நினைவில் வைத்திருக்கின்றேன். கதை வாசிக்க ஆரம்பிக்கையில், நான் என்னை யோசேப்பின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நிறுத்திப்பார்த்துக் கற்பனைப் பண்ணிப்பார்ப்பதுண்டு. என்னால் யோசேப்பின் சகோதரர்களுடைய பகைமையைக் குறித்து அவ்வளவுக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை, காரணம் என்னுடைய சொந்த சகோதரர்கள் மிகவும் நல்லவர்களாய்க் காணப்பட்டனர். ஆனால் யோசேப்பு குழிக்குள் தள்ளப்பட்டு, அடிமை

விற்கப்பட்டதை வாசிக்கையில் நான் அழுவதுண்டு. அவருடைய அங்கியானது, இரத்தத்தில் தோய்க்கப்பட்டு, அவருடைய தகப்பனிடத்தில் கொண்டு செல்லப்படுவதை வாசிக்கையில் நான் அழுவதுண்டு. யோசேப்பு தயவு பெற்றதையும், மீண்டும் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டதையும் நான் வாசிக்கையில், நான் சந்தோஷமும், வேதனையும் அடைந்தேன். யோசேப்பு கிடங்கிலிருந்து, எகிப்தின் அதிபதியென உயர்த்தப்பட்ட தருணத்தை வாசிக்கையில் நான் உச்சக்கட்டத்தில் மெய்சிலிர்த்துப் போனதுண்டு.

கதையை வாசித்துவிட்டு, எனது தாயார் வேதாகமத்தை மூடி வைக்கையில், நான் அமர்ந்து, சிந்தனை பண்ணிக்கொண்டிருப்பேன். நான் எனக்குள்ளாகவே கேள்வி எழுப்புவது என்னவெனில்: ஏன் எனக்கு இப்படியான ஓர் ஆச்சரியமானக் காரியம் சம்பவிப்பதில்லை? என்னை இவ்வளவாய்ப் பராமரிக்கத்தக்கதாகவும், இவ்வளவு உயர்த்தத்தக்கதாகவும் தேவன் ஏன் என்னை தெரிந்துகொள்வதில்லை? நான் இதைக் குறைகூறும் வண்ணமாகக் கூறவில்லை, மாறாக ஆவலினாலும், ஏக்கத்தினாலுமே கூறுவதுண்டு; நான் யோசேப்பாக இருக்கமாட்டேனா என்று இருதய பூர்வமான விருப்பத்தினால் இப்படிக்கூறுவதுண்டு; இப்படி உண்மையில் நடந்து விடாதா எனும் விருப்பத்தினால் இப்படிக்கூறுவதுண்டு. ஆனால் பல வருடங்களுக்குப் பிற்பாடு, கர்த்தர் என்னைச் சத்தியத்திற்குக்கொண்டுவந்தபோது, யோசேப்புக்கு என்ன சம்பவித்ததோ, அது எனக்கும் சம்பவித்துள்ளது என்ற அருமையான உணர்ந்துகொள்ளுதலை நான் அடைந்தேன். தேவன் என்னைத் தெரிந்துகொண்டுள்ளார் மற்றும் யோசேப்பின் விஷயத்தில் காணப்பட்டதுபோன்று, என்னுடைய ஜீவியத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளும் தேவனால் கவனிக்கப்படுகின்றது மற்றும் என்னுடைய நன்மைக்கு ஏதுவாய் மாற்றப்படுகின்றது. எகிப்தின் அதிபதியாய் இருப்பதைக் காட்டிலும் மேலான ஓர் உயர்த்தப்படுதலை இறுதியில் நானும் அடையப்போகின்றேன் என்பதை உணர்ந்துகொண்டேன். இது அர்ப்பணிக்கப்பட்டு, பரம அழைப்பிற்கான பந்தயப்பொருளுக்காக ஓடிக்கொண்டிருக்கும் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. உங்களுக்கும் இது பொருந்தும். யோசேப்பின் கதை என்பது, உங்கள் ஜீவியம் பற்றிய கதையே ஆகும். கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினராகிய உங்களுக்குக்கூட யோசேப்பு அடையாளமாய்க் காணப்படுகின்றார்! யோசேப்பின் அனுபவங்களானது, உங்கள் அனுபவங்களுக்கு அடையாளமாய் இருக்கின்றது.

யோசேப்பை யாக்கோபு சிநேகித்தது போன்று, தேவன் இயேசுவை அன்புகூர்ந்தார். "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" என்று உங்களைக் குறித்தும் எழுதப்பட்டிருக்கின்றது (யோவான் 16:27). யோசேப்பு தன்னுடைய சகோதரர்களினால் பகைக்கப்பட்டது போன்று மற்றும் இயேசு யூதர்களால் பகைக்கப்பட்டது போன்று, உங்களைக் குறித்தும், "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்" என்று இயேசு கூறியுள்ளார் (யோவான் 15:18).

யோசேப்பு கிடங்கிலிருந்து, எகிப்தின் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டதுபோன்று, இயேசுவும் மரணத்திலிருந்து, தேவனுடைய சிங்காசனத்தினிடத்திற்கு உயர்த்தப்பட்டார். நம்மைக் குறித்து, "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்" என்று எழுதப்பட்டுள்ளது (2 தீமோத்தேயு 2:11, 12). யோசேப்போடு கர்த்தர் இருந்து, அவருடைய காரியங்கள் அனைத்தையும் மேற்பார்வையிட்டு, அனைத்தையும் முடிவில் சரி செய்ததுபோன்று மற்றும் பரம பிதாவும் தமது குமாரனாகிய இயேசுவோடுகூட அவரது பூமிக்குரிய ஊழியம் முழுவதின்போதும் காணப்பட்டு, இறுதியில் அவரை மகிமைப்படுத்தினதுபோன்று, "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களும், தேவனை அன்புகூருபவர்களுக்கும் சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடந்தேறும்" என்ற நிச்சயம் நமக்கும் வழங்கப்பட்டுள்ளது (ரோமர் 8:28). யோசேப்பினுடைய துன்ப அனுபவங்களானது அவரிடத்தில் சரியான தாக்கங்கொண்டு, அவரிடத்தில் அருமையான குணலட்சணத்தை உருவாக்கினதுபோன்று, மற்றும் இயேசுவும் தாம் பாடுபட்டதின் மூலம் தம்முடைய கீழ்ப்படிதலை விவரித்ததுபோன்று, நம்மைக் குறித்தும் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

"பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேதுரு 4:12, 13).

ஜீவன்களை இரட்சிக்கத்தக்கதாக யோசேப்பு உணவை வழங்கினதுபோன்று, மற்றும் கிறிஸ்து அவருடைய இராஜ்யத்தில் அனைவருக்கும் ஜீவ அப்பத்தை வழங்குவது போன்று, நாமும் அவருடைய சரீரத்தின் அங்கத்தினர்களெனச் சகல மனுக்குலத்தை ஜீவனுக்குச் சீர்ப்பொருத்தும் பணியில் அவருடன் பங்கடைவோம்.

ஆழமான மற்றும் இருதயத்தைச் சீர்த்தூக்கிப் பார்க்கின்ற விதமான சில படிப்பினைகளையும் இங்குக் கற்க வேண்டியுள்ளது. முதலாவதும், பிரதானமானதுமான படிப்பினை, பொறாமையினுடைய விளைவு/தாக்கம் பற்றியதாகும். நாம் ஒருபோதும் பொறாமை கொண்டிருத்தல் கூடாது. அது நம்மை அழிக்கக் கூடியதாகவும், தகர்த்தக் கூடியதாகவும் காணப்படுகின்றது. சாதாரணமான/ஒழுங்கான ஜனங்கள் பொறாமையின் தீமையான தாக்கத்தின் கீழ்க் காணப்படுகையில், அவர்கள் மிகவும் கொடிதான காரியங்களைச் செய்திடுவதற்கும், பேசிடுவதற்கும் வழிநடத்தப்பட்டுவிடுகின்றனர். "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும், சகல துர்ச் செய்கைகளுமுண்டு" என்று யாக்கோபு குறிப்பிடுகின்றார் (யாக்கோபு 3:16). இப்படியாக இருக்கின்றபடியால் சபையைத் தகர்ப்பதற்கும், அழித்துப்போடுவதற்குமெனச் சாத்தான் பொறாமையை வளர்த்திவிடுபவனாகவும், ஊக்குவிப்பவனுமாகவும் இருக்கின்றான் என்பது நிச்சயமே. கர்த்தரினால் மிகப்பெரிய அளவிலும் மற்றும் வல்லமையாகவும்/பயனுள்ள விதத்திலும் பயன்படுத்தப்படுகின்ற சகோதரர்கள், மிகுந்த பொறாமையைத் தூண்டிவிடுபவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது கவலைக்கிடமான உண்மையாகும். இந்தத் தீமையான காரியத்தினை நாம் விட்டுவிலகுவோமாக. பொறாமைக்கான சிறிய அறிகுறி நம் இருதயத்தில் காணப்படுமாகில், அது வேரோடே அழிக்கப்படுவதற்காக நாம் உண்மையாய் ஜெபம் ஏறெடுப்போமாக. அதை வளருவதற்கு அனுமதிப்போமானால், அது புதுச்சிருஷ்டியை அழித்துவிடக்கூடும்.

## "பெருமை குறித்த ஒரு படிப்பினை"

யோசேப்பு பெருமை தொடர்புடைய விஷயத்தில் விலையேறப்பெற்ற படிப்பினையைக் கொடுக்கின்றார். "கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து, சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படி செய்தார்" என்று நாம் பதிவில் வாசிக்கின்றோம் (ஆதியாகமம் 39:21). இவ்வுண்மையானது, பலமுறை யோசேப்பின் கதையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. துன்பம் நிறைந்த சூழ்நிலைகள் ஒவ்வொன்றிலும், அவர் பல்வேறு விதங்களில் தயவு பெற்றுக்கொண்டார். இந்த அனுபவங்களின் காரணமாக, யோசேப்பு தனக்குள் அதிக அளவிலான பெருமையை வளர்த்திடுவதற்கு அனுமதித்திருந்திருக்க முடியும். தான் அதிர்ஷ்டம் உள்ளவர் என்றோ (அ) தான் இயல்பாகவே அறிவுகூர்மையுள்ளவராக, கவர்ந்து இழுப்பவராக மற்றும் சாதுரியமானவராகக் காணப்பட்டதே தனது வெற்றிக்கான இரகசியமாகவும், தனது தகப்பன் தன்னை மிகவும் நேசித்ததற்கான காரணமாகவும் இருக்கின்றது என்றோ யோசேப்பால் எண்ணியிருந்திருக்க முடியும். இதன் காரணமாகவே தான் அடிமையாக விற்கப்பட்டபோது, தான் நல்ல ஓர் எஜமானால் வாங்கப்பட்டார் என்றும், தன்னுடைய சொந்த திறமையின் காரணமாகவே, போத்திபாரின் வீட்டில் தான் உயர் ஸ்தானம் பெற்றுக்கொண்டார் என்றும் யோசேப்பால் எண்ணியிருந்திருக்க முடியும். தனது உயர்தரமான திறமைகளினாலேயே, தனக்குச் சிறையில் அதிகாரம் வழங்கப்பட்டது என்றும், தன்னுடைய கூர்மையான அறிவின் காரணமாகவே, தன்னால் சொப்பனங்களுக்கு அர்த்தம் கூற முடிந்தது என்றும் யோசேப்பினால் எண்ணியிருந்திருந்திருக்க முடியும். இக்காரியங்கள் அனைத்தும் தன்னை மற்ற மனிதர்களைக் காட்டிலும் உயர்ந்து நிற்க/காணப்படப்பண்ணிற்று என்றும், தனது வெற்றிக்கான காரணமாகவும் அமைந்தது என்றும் யோசேப்பினால் எண்ணியிருந்திருக்க முடியும்.

யோசேப்பினால் இப்படியெல்லாம் எண்ணியிருந்திருக்க முடியும். இப்படி எண்ணுவதெல்லாம் மனித இயல்புதான். ஆனால் அவர், தான் நிழலாய்க் காணப்படுகின்றதான, இயேசுவின் மனப்பான்மையைப் பிரதிபலித்தவராய் இருந்தார். "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை" என்று கூறி, இயேசு அனைத்துக் கனத்தையும் தேவனுக்கு உரியதாக்கினார் (யோவான் 5:30). யோசேப்பு (இயேசுவைப்போன்றதான) இம்மனப்பான்மையைக் கொண்டிராவிட்டால், அவர் உயர்த்தப்பட்டிருந்திருக்க மாட்டார், மாறாக வீழ்ந்து போயிருப்பார். "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" என்று நாம் வாசிக்கின்றோம் (நீதிமொழிகள் 16:18). ஆகையால், "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது" என்பதை நினைவில் கொண்டவர்களாக, நாம் பெற்றுக்கொண்ட நன்மைகள் அனைத்திற்குமான கனத்தைக் கர்த்தருக்கே உரித்தாக்குவோம்.

(யாக்கோபு 1:17). "கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்" (சங்கீதம் 75:6, 7).

அடுத்துப் பொறுமையாய்ச் சகித்தல் பற்றின படிப்பினை உள்ளது. சிலசமயம் நாம் நம்மால் முடிந்தமட்டும் கர்த்தருக்கும், சகோதர சகோதரிகளுக்கும் ஊழியம் புரிகையில் மற்றும் நம்முடைய காரியங்களில் கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும், தயவுகளையும் மிகவும் குறிப்பிடத்தக்கதான விதத்தில் பெற்றுக் காணப்படுகையில், திடீரென பிரச்சனை எழும்பி, துன்பம் நம்மேல் கடந்து வந்துவிடுகின்றது. இருளின் அதிகாரங்கள் வெற்றிக்கொள்வது/ மேற்கொள்வது போன்று தோன்றலாம். நாம் தெய்வீக வழிநடத்துதல்கள் இன்றிக் காணப்படுவது போன்று தோன்றலாம். கர்த்தர் நம்மைக் கைவிட்டுவிட்டதுபோன்று தோன்றலாம். இவைகளே யோசேப்பின் அனுபவங்களாகும்; "என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்?" என்று இயேசு கதறினபோது, அவரும் இதேபோன்றதான அனுபவத்தில்தான் காணப்பட்டார் (மத்தேயு 27:46). யாருக்கு வேண்டுமானாலும் இவ்வனுபவங்கள் ஏற்படலாம். இவ்வனுபவங்கள் ஏற்படுகையில், யோசேப்பு காணப்பட்டது போன்று, நாமும் அமைதியான மற்றும் உறுதியான விசுவாசத்துடன் இருப்போமாக; காத்திருப்பது மாத்திரமல்லாமல், மாறாக நாளுக்கு நாள் நம்மால் முடிந்ததைச் செய்துகொண்டும் இருப்போமாக, அதாவது வேலை செய்து கொண்டும், காத்துக்கொண்டும் இருப்போமாக. தனது வழக்கை பார்வோனிடத்தில் குறிப்பிடும்படி பானபாத்திரக்காரனிடம் கேட்டுக்கொள்வதன் மூலமாக, சிறையிலிருந்து விடுதலை அடையும் விஷயத்தில், யோசேப்பு தன்னால் முடிந்தது அனைத்தையும் செய்தார் என்பதை நினைவில்கொள்ளுங்கள்.

இக்கதையிலுள்ள மிகவும் முதன்மையான/குறிப்பிடத்தக்கதான மற்றும் உளங்கனிந்த படிப்பினை, யோசேப்பு இரக்கத்தோடு, தனது சகோதரர்களை மன்னித்ததாகும். தனது சகோதரர்களிடத்தில் தன்னை வெளிப்படுத்தினபோது, அவர்கள் அமைதி இழந்து காணப்பட்டதைக் கண்ட யோசேப்பு, அவர் முதலாவதாகவும், உடனடியாகவும் வெளிப்படுத்தினது, அனுதாபமும், இரக்கமுமாகும். அவரது மன்னிப்பில் அவர் இரக்கமுள்ளவராய் இருந்தார். தன்னை அடிமையாக எகிப்துக்கு விற்றுப்போட்டதன் மூலமாக, அவர்கள் தனக்கு நன்மையையே செய்திருக்கின்றார்கள் என்று அவர்களை அவர் ஒரு வழியாக நம்ப வைத்துவிட்டார்! அவரது அன்புடன் கூடிய வார்த்தைகளைக் கவனியுங்கள்:

"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால், நீங்கள் சஞ்சலப்பட வேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்துதேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதியாகமம் 45:5, 7, 8).

## "யோசேப்பினுடைய இரக்கமான வார்த்தைகள்"

இவைகள் இரக்கம் நிறைந்த வார்த்தைகள் அல்லவா? அவரது சகோதரர்கள் தாங்கள் மாபெரும் பாவம், அதாவது கொலைக்குச் சமமான பாவம் செய்த குற்றவாளிகளாக இருக்கின்றனர் என்பதை அறிந்திருந்தார்கள். இதை யோசேப்பும் அறிவார். ஆனால் இவைகளையெல்லாம் மேலான நன்மைக்கு ஏதுவாய்க் கர்த்தர் மாற்றிப்போட்டுள்ளார் என்பதையும் யோசேப்பு அறிவார். ஆகையால்தான் இதை மாத்திரம் யோசேப்பு குறிப்பிட்டார். யோசேப்பு பேசிக்கொண்டிருக்கையில், குற்றத்தினிமித்தமான திகில் அவர்கள் இருதயத்தை விட்டுப்போனது மற்றும் இருபத்து மூன்று வருடங்களிலேயே முதல் முறையாக, அவர்களது மனங்கள் யோசேப்பின் விஷயத்தில் சமாதானம் அடைந்தது. நமக்கு எதிராய்ப் பாவம் செய்கிறவர்களிடத்தில், நாமும் யோசேப்பைப்போன்று இரக்கங்கொள்வோமாக. அன்புடன்கூடிய வார்த்தைகளினால் இரக்கமான/கிருபையான பதில் எப்போதும் கொடுப்பதற்கு நாம் கற்றுக் கொள்வோமாக.

ஒருவேளை யோசேப்பு இந்தச் சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவானாய்க் காணப்பட்டு இருந்திருப்பாரானால், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருந்திருப்பாரானால், வேதாகமத்தின் வெளிப்படுத்தல்களையும், எச்சரிப்புகளையும் மற்றும் தேவனுடைய குணம் மற்றும் அவரது நோக்க

பற்றி வெளிப்படுத்தும், யுகங்களுக்கடுத்த தெய்வீகத் திட்டம் பற்றின அறிவையும் பெற்றிருந்து, பரம அழைப்புக்குரிய பந்தயப் பொருளுக்காக ஓடிக்கொண்டிருப்பவராகக் காணப்பட்டிருப்பாரானால், அவரது நடத்தையானது கிறிஸ்தவ வளர்ச்சியினுடைய மிக உயர்ந்த வகையாகக் கருதப்படுவதற்குப் பாத்திரமானதாகும். ஆனால் அவரது குணலட்சணமானது வளர்க்கப்பட்டதான சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் நாம் பார்க்கும்போது, அதாவது புறஜாதி தேசத்தில் தேவன் மற்றும் அவரது திட்டம் பற்றின சிறிய வெளிப்படுத்தல்கள் மாத்திரமே உள்ள சூழ்நிலையில், அவரது குணலட்சணம் வளர்க்கப்பட்டுள்ளதை நாம் பார்க்கையில், நாம் வியந்து நிற்கின்றோம். இந்தப் பாடத்தைப் படிக்கையில் நாம் நம்மிடமே கேட்க வேண்டியதாவது, "எல்லா விதத்திலும் மிகுந்த அனுகூலமுள்ளவர்களாய் நாம் இருக்கையில், நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்? யோசேப்பைப் போன்றதான அதே சூழ்நிலைகள் மற்றும் சந்தர்ப்பங்களின் கீழ் நாம் காணப்படுவோமானால், நாம் யோசேப்பைப்போன்று பெருந்தன்மையுடன் நடந்திருப்போமா? இவைகளெல்லாம் நாம் சிந்தித்துப்பார்க்கப்பட வேண்டியவைகளாகும்.

யோசேப்பின் கதையைப் பார்க்கையில், உங்கள் இருதயம் பிரகாசமடைகின்றதா? இது உங்கள் கதை போன்றுள்ளதா? யோசேப்பின் அனுபவங்களில் உங்களை நீங்கள் அடையாளங்கண்டுகொள்ள முடிகின்றதா? அவருடைய கஷ்டங்களில் அவரோடுகூட உங்களால் அனுதாபமும், அவருடைய வெற்றியில் அவரோடுகூட உங்களால் மகிழ்ச்சியுங்கொள்ள முடிகின்றதா?

யோசேப்பு செய்தவைகள் சரியானது மற்றும் நீதியானது மற்றும் தேவனுக்கும் ஒத்ததாய் இருக்கின்றதென உங்களால் எண்ணிக்கொள்ள முடிகின்றதா? இது உங்களை இன்னும் அதிகமாய்த் தேவனை அன்புகூரவும், அவரை ஸ்தோத்தரிக்கவும் செய்கின்றதா? ஆம் என்றால் இது நீங்கள் கர்த்தரால் அன்புகூரப்படுகின்றவர்களும், அவரால் உயர்த்தப்படப் போகின்றவர்களுமான, "யோசேப்பின் வகுப்பாரில்" ஒருவராகக் காணப்படுகின்றீர்கள் என்பதற்கான சிறந்த நிரூபணமாகும்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாய்க் காணப்படுகின்றதான யோசேப்பின் மாதிரிக்காக நாம் பரம பிதாவுக்கு நன்றி ஏறெடுக்கின்றோம். நாமும் ஏற்றக்காலத்தில் உயர்த்தப்படுவதற்குப் பாத்திரவான்களாய்க் காணப்படத்தக்கதாக, இங்குச் சித்தரிக்கப்பட்டுள்ள பண்புகளையும், குணங்களையும்/தனித்தன்மைகளையும் அடைந்திடுவதற்கு உதவப்படுவோமாக.

---

# "யோசேப்பின் வெள்ளிப் பாத்திரம்"

(Beauties of the truth; volume 12, Number 1, Feb 2001)

- சகோ. யூஜின் பேர்ண்ஸ்

யோசேப்பின் கதை என்பது பழைய ஏற்பாட்டிலுள்ள நீண்ட பதிவுகள் கொண்ட கதைகளில் ஒன்றாகும். (ஆதியாகமம் 37 முதல் 50-ஆம் அதிகாரங்கள், ஆக மொத்தம் 14 அதிகாரங்களாகும்). இது பாதக செயல்களும், மாபெரும் குணலட்சணங்களும் கலந்து காணப்படுகின்றதான, ஆத்தும தேடலை தூண்டும் ஒரு கதையாகும். பகைமையும், அன்பும் இரண்டுமே இக்கதையை நடத்திச் சென்றது மற்றும் தெய்வீக வழிநடத்துதலானது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றிடத்தக்கதாக இயக்கினதாகக் காணப்பட்டது. இறுதியில் அன்பு ஜெயங்கொள்கின்றது. தேவனுடைய திட்டத்தின் அருமையான பாகம் என்பது, அன்பு இறுதியில் ஜெயங்கொள்வதாகும். யாக்கோபிற்கும் இறுதியில் மகிழ்ச்சியான முடிவு காணப்படுகின்றது. அவர் யோசேப்பு மரித்துப்போய்விட்டார் என்று நம்பிக்கொண்டிருந்தார், ஆனால் யோசேப்பை உயிரோடே எகிப்தில் கண்டார். யாக்கோபினுடைய வாழ்க்கை முடிவடைகையில், தேவனுடைய உருக்கமான இரக்கத்தின் காரணமாக, யோசேப்பே யாக்கோபினுடைய கண்களை மூடுகின்றார் (ஆதியாகமம் 46:4). யாக்கோபின் சரீரமானது வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆபிரகாம் மற்றும் ஈசாக்குடன் மக்பேலா குகையில் அடக்கம் பண்ணப்பட்டது. இது தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீதான அவரது நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றதாய் இருந்தது.

## "யோசேப்பிற்கான யாக்கோபின் அன்பு"

யோசேப்பு யாக்கோபினுடைய பிரியமுள்ள ராகேலின் குழந்தையாவார். யோசேப்பு தனது சகோதரர்கள் அநேகரைக் காட்டிலும் இளையவராகக் காணப்பட்டார், ஏனெனில் ராகேல் சில காலம் மலடியாகக் காணப்பட்டிருந்தாள். இறுதியில் ராகேல், யோசேப்பைப் பெற்றெடுத்தபோது, இதினிமித்தம் யோசேப்பு விசேஷித்த அன்பிற்குரியவரானார். இன்னும் குறிப்பாக யோசேப்பு பெருமகிழ்ச்சிக் கொடுத்த பிள்ளையாகக் காணப்பட்டார். இதன் காரணமாக, பெற்றோர்கள் யோசேப்பிற்குச் செல்லம் கொடுத்தவர்களானார்கள். இது யோசேப்பிற்கு நன்றாய் இருந்திருக்கும், ஆனால் இது அவரது சகோதரர்கள் மத்தியில் பொறாமையை உருவாக்கிற்று. எனினும் யோசேப்பு யாக்கோபுடன் நெருங்கிக் காணப்பட்டதின் காரணமாகவே, அவர் ஆபிரகாமின் வாக்குத்தத்தத்திலுள்ள தனக்கான சுதந்தரத்தைப் பற்றிக் கற்றுக்கொண்டவராகவும், உணர்ந்துகொண்டவராகவும் காணப்பட்டார் என்பதை நாம் புரிந்துகொள்வது அவசியமானதாகும். யோசேப்பு எகிப்தில் கழித்த வருடங்களில், இந்தப் பொக்கிஷமான வாக்குத்தத்தங்களை அவர் நினைவுகூராத நாளே அநேகமாக இருந்திருக்காது; எகிப்தினுடைய இரட்சகராகுவதன் வாயிலாக, ஆபிரகாமின் வாக்குத்தத்தமானது நிறைவேற ஆரம்பிக்கலாம் என்றுங்கூட அவர் அநேகமாக எண்ணியிருக்கலாம்.

## "பொறாமை/வைராக்கியம் பாதாளத்தைப்போல் கொடிதாயிருக்கிறது"

பொறாமையானது வளர ஆரம்பித்துவிட்டால், அது இயல்பாக நல்லதாய்க் காணப்பட்ட இருதயத்தை, தீமையானதாக மாற்றிப்போட்டுவிட முடியும். யோசேப்பின் சகோதரர்கள் அவரை எப்படிப் பகைத்தார்கள் என்றும், இறுதியில் அவரைக்கொன்றுபோட திட்டம் பண்ணினார்கள் என்றும் நாம் அனைவரும் நினைவுகூருகின்றோம். மூத்த குமாரனாகிய ரூபன், தனது சகோதரர்கள் யோசேப்பைக் கொன்றுபோடுவதற்கு விடவில்லை. யோசேப்பைக் குழிக்குள் அவர்கள் போட்டுவிடும்படிக்கு ரூபன் யோசனை தெரிவித்தார் மற்றும் பின்னர் வந்து

யோசேப்பை விடுவிக்கலாம் என்று எண்ணினார். இங்கு மனிதனுடைய கோபமானது, எப்படித் தேவனது மகிமையை விளங்கப்பண்ணத்தக்கதாக தேவன் மாற்றிப்போட்டார் என்று நாம் பார்க்கின்றோம். தேவனுக்கு, யோசேப்பை எகிப்திற்குக்கொண்டு செல்ல வேண்டியிருந்தது. யோசேப்பினுடைய சகோதரர்களின் கோபமானது, அவரை அடிமைத்தனத்திற்குள் விற்றுப்போடுவதற்குத் தேவன் அனுமதித்தார். யோசேப்பின் சகோதரர்கள் இப்படிச் செய்தது என்பது இழிவான மற்றும் கீழ்த்தரமானக் காரியமாகும். சகோதரர்கள் என்பவர்கள் ஒற்றுமையுடன் இணைந்து காணப்படுகின்றவர்களாகவும், ஒருவருக்கொருவர் உதவிபுரிகின்றவர்களாகவும் காணப்படுவார்கள். இந்த ஒரு படிப்பினையை நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மற்றச் சகோதரனுக்கோ (அ) சகோதரிக்கோ கெடுதல் பண்ணுவதற்கு நாம் விருப்பம் கொண்டவர்களாகக் காணப்படுவோமானால், நாம் நிச்சயமாய் சகோதரர்களிடத்தில் அன்புகூராததினால், மரணத்தினின்று ஜீவனுக்குக் கடந்து வந்தவர்களல்ல. சோதனையின் கீழ் அன்பு தோற்கையில், நாம் செய்யும் உச்சக்கட்டமான கெடுதல் நமக்கேயாகும். நாம் நமது சகோதரர்களை அன்புகூர வேண்டும். நம்முடைய பழைய சுபாவம் நம்முடன் காணப்படுகையில், எப்போதும் இது கூடாததுதான், ஆனால் நம்மிடத்தில் அன்பு இல்லையெனில் நாம் ஒன்றுமேயில்லை. முப்பது வயதிற்குக் கீழான அடிமைக்குரிய விலையாகிய இருபது வெள்ளிக்காசுகளுக்கு யோசேப்பு விற்கப்பட்டார், ஏனெனில் யோசேப்பு அப்போது பதினேழு வயதானவராக இருந்தார். இயேசு முதிர்ச்சியடைந்த மனிதனாகக் காணப்பட்டப்படியால், அவர் முப்பது வெள்ளிக்காசுகளுக்கு விற்கப்பட்டார். இவர்கள் இருவருக்கும் வயது வித்தியாசம்தான் உள்ளதே ஒழிய, மற்றப்படி இவர்களிடமிருந்து வரும் படிப்பினைகள் ஒன்றே. அவர்கள் எப்படிப் பணத்தைத் தங்களுக்குள்ளாகப் பங்குபோட்டுக் கொண்டார்கள் என்பது பற்றி நமக்குச் சொல்லப்படவில்லை. இருபது வெள்ளிக்காசுகளைச் சரிசமமாகப் பங்குபோட்டால், பத்துச் சகோதரர்களுக்கும் இரண்டு வெள்ளிக்காசுகள் கிடைத்திருக்கும். அநேகமாகக் குற்றத்தினிமித்தமான வேதனை அவர்களை ஆட்கொண்டபோது, அவர்களில் சிலர் பணப்பங்கைப் பெற்றுக்கொள்வதற்கு மறுத்திருந்திருப்பார்கள்.

## "யோசேப்பு தன்னுடைய குணலட்சணத்தை வனைந்திடுவதற்கு, தனது சூழ்நிலைகளை அனுமதித்திடவில்லை"

ஒருவருடைய கிரியைகளுக்குச் சூழ்நிலைகள் காரணமாகுகின்றது என்று நவீன காலக் கருத்துக்கள் காணப்படுகின்றது. ஜனங்கள் தங்களது சூழ்நிலைகளின் காரணமாகவே நல்லவர்களாக (அ) மோசமானவர்களாக நடந்துகொள்கின்றனர் என்று விவரிக்கப்படுகின்றது. எந்தச் சூழ்நிலைகளில் நாம் காணப்பட்டாலும், நாம் நம்முடைய உயர்வான கொள்கைகள் மற்றும் நம்பிக்கைகள் எனும் உயர்ந்த தளத்தில் வாழ முடியும். இதுவே யோசேப்பிடமிருந்ததான படிப்பினையாகும். யோசேப்பு குற்றவாளிகளுடன் சிறைச்சாலையில் காணப்பட்டபடியால், அவர் குற்றவாளியாகிவிடவில்லை. யோசேப்பின் சகோதரர்கள் கீழ்த்தரமானவர்களாகவும், பகைமை உள்ளம் கொண்டவர்களாகவும் காணப்பட்டதினிமித்தம், யோசேப்பும் அவர்களைப் போன்று காணப்படவில்லை. யோசேப்பு தன்னுடைய நேர்மையைத் தக்கவைத்துக்கொண்டார், அதுவும் இப்படி நேர்மையாய் இருப்பதற்குப் பலன் ஏதும் இல்லாமல், தண்டனை மாத்திரமே இருந்தபோதிலும், தன்னுடைய நேர்மையைத் தக்கவைத்துக் கொண்டவரானார். ஏன்? ஏனெனில் அவர் உயர்வான தளத்தில் ஜீவியம் செய்தவராய் இருந்தார் மற்றும் சண்டையும், கொடூரமும் ஆளுகைச் செய்கின்ற தளத்திற்கு இறங்கிடுவதற்கு அவர் தன்னை அனுமதித்திடவில்லை. தனக்குத் தவறு செய்தவர்களைக்கூட யோசேப்பு பழிவாங்கிடுவதற்குத் திட்டம் பண்ணிடவுமில்லை. ஆனால் அவர் கசப்புக்கொண்டிருப்பதற்கும், பழிவாங்குவதற்கும் அநேகம் காரணங்கள் இருந்தது. அவர் தனது சகோதரர்களினாலும், போத்திபாரினாலும், அவரது பொல்லாத மனைவியாலும்

மற்றும் இரண்டு வருடங்களாக யோசேப்பைப் பார்வோனிடத்தில் குறிப்பிடுவதற்கு மறந்துபோன பானப்பாத்திரக்காரனாலும் மோசமாய் நடத்தப்பட்டிருந்தார்.

தேவன் யோசேப்போடே காணப்பட்டார் என்றும், யோசேப்பு செய்த யாவையும் வாய்க்கப்பண்ணினார் என்றும் ஆதியாகமப் பதிவானது நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. யோசேப்பு எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்டபோது தேவன் அவரோடுகூட இல்லாததுபோன்று தோன்றலாம். போத்திபாருடைய மனைவி அவரைத் தவறாய்க் குற்றஞ்சாட்டினபோது, தேவன் அவரோடுகூட இல்லாததுபோன்று தோன்றலாம். யோசேப்பு சிறையில் கூடுதலாக இரண்டு வருடங்கள் காணப்பட்டபோது, தேவன் அவரோடுகூட இல்லாததுபோன்று தோன்றலாம். எனினும் தேவன் அவரோடுகூட இருந்து, யோசேப்பு எதைச் செய்தாரோ, அதைத் தேவன் வாய்க்கப்பண்ணினார். யோசேப்பு பாவம் செய்யாதவராகவும், அறிவுகூர்மையான மற்றும் நியாயமான விதத்தில் மேற்பார்வையிடுவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் வியக்கத்தக்க திறமையுடையவராகவும் காணப்பட்ட மனிதனாவார். எனினும் அவர் சிறையில் காணப்பட்டு, தனது ஜீவியத்தின் சிறந்த சில வருடங்களை அடிமையாக (அ) குற்றவாளியாகச் செலவழித்தார். இப்படிப்பட்ட துன்பமான சூழ்நிலைகளில், நம்மில் எத்தனை பேரால் ஜெயங்கொள்ள முடியும்? நமக்கு முன் இருக்கும் பர்வதங்களைத் தேவன் எடுத்துப்போட்டு விடமாட்டாரோவென ஏங்குவது/விரும்புவது மனித இயல்புதான், ஆனால் தேவனோ நாம் அவர் அருளும் பலத்தினால் பர்வதங்களில் ஏறிச்செல்வதற்கு விரும்புகின்றார்.

பார்வோனுடைய சொப்பனத்திற்கான அர்த்தத்தை விளக்குவதற்கென யோசேப்பு சிறையிலிருந்து வெளிக்கொண்டு வரப்பட்டார் என்பதையும், பிற்பாடு அவர் எகிப்தினுடைய அதிபதியானார் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். "நான் பார்வோன்; ஆனாலும் எகிப்து தேசத்திலுள்ளவர்களில் ஒருவனும் உன் உத்தரவில்லாமல் தன் கையையாவது தன் காலையாவது அசைக்கக்கூடாது" என்று நாம் ஆதியாகமம் 41:44-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். இங்குப் பார்வோன் தேவனை அடையாளப்படுத்துகின்றார். யோசேப்பு கிறிஸ்துவை அடையாளப்படுத்துகின்றார். பார்வோனுக்கும் மற்றும் யோசேப்பிற்கும் இடையில் எத்தகைய பிரம்மாண்டமான உறவு ஏற்பட்டது. முப்பது வயதை மாத்திரமே அடைந்தவராகவும், பதிமூன்று வருடங்களாக அடிமையாகவும், சிறைக்கைதியாகவும், வாடிவதங்கினவராகவும் காணப்பட்ட ஒரு மனிதனிடத்தில் (யோசேப்பினிடத்தில்) மலைக்கப்பண்ணும் எத்தகையதோர் வல்லமை வந்துள்ளதை யோசித்துப் பாருங்கள். யோசேப்பின் உத்தரவில்லாமல் ஒருவனும் தன் கையையாவது, தன் காலையாவது அசைக்கக்கூடாது என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்குமானால், அவருக்கு வழங்கப்பட்ட வல்லமை எத்துணை பரந்தது என்பதைக் கற்பனை பண்ணிப்பாருங்கள். இக்கட்டளையானது மிகைப்படுத்தின நடையிலேயே கொடுக்கப்பட்டுள்ளது, எனினும் இது யோசேப்பு முழு வல்லமையையும், அதிகாரத்தையும் கொண்டிருந்தார் என்பதைக் குறிப்பிடுகின்றதாய் இருந்தது.

பூரண விளைவுடைய ஏழு வருடங்கள் என்பது சுவிசேஷ யுகமாகிய, கிருபையின் காலத்தில் கிறிஸ்துவுக்குள்ளாக தேவனால் அருளப்பட்ட கிருபையையும், தாராளத்தையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. ஏழு வருட பஞ்ச காலம் என்பது கிறிஸ்து பிரதானமாய் ஆளுகைச் செய்யப்போகின்றதான மத்தியஸ்தர் இராஜ்யத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. அந்த இராஜ்யத்தில் ஒருவனாலும், தன்னுடைய சொந்த நீதியில் நிற்க முடியாது. மத்தியஸ்தர் ஜனங்களை, நீதியினுடைய இம்மியும் பிசகாத கோரிக்கைகளிலிருந்து பாதுகாப்பார். கிறிஸ்து ஜனங்களை ஆதரிப்பார்/தாங்குவார். பஞ்சம் கொடிதாகுகையில் ஜனங்கள் பார்வோனின் ஊழியக்காரர்களாகத்தக்கதாக தங்கள் உடைமைகளையும், தங்களையும் விற்க வேண்டியிருந்தது. இக்காரியமானது, எப்படி அனைத்து மனிதர்களும் தங்களைத் தேவனிடத்தில் அர்ப்பணிக்க வேண்டுமென்பதையும், எப்படி மனிதர்கள் அனைவரும் கிறிஸ்து இராஜ்யத்தைப் பிதாவினிடத்தில் ஒப்புவிக்கையில் முற்றிலும் தேவனுக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களாக இருப்பார்கள் என்பதையும் சித்தரித்துக் காட்டுகின்றது. --3062--

ஜனங்கள் ஜீவிப்பதற்கான ஒரே வாய்ப்பு, நிஜமான யோசேப்பு அவர்கள் மீது வைக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதன் மூலமேயாகும். மனுக்குலம் சொந்தமாய் மனித பரிபூரணத்தை அடைவது வரையிலும், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பு நிற்பதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கக்கூடிய மத்தியஸ்தரின் நீதி, அவர்களுக்கு அருளப்படுவது அவசியமாகும். நிஜமான யோசேப்பினுடைய ஏற்பாடுகளில்லாமல், அவர்கள் அனைவரும் மரித்துப்போவார்கள் மற்றும் அவர்களால் ஒருபோதும் பூரணத்தையோ அல்லது தங்களுக்குச் சொந்த நீதியையோ அடைந்திட முடியாது.

நாமோ நம்முடைய ஜீவியங்களை இக்காலத்தில் (சுவிசேஷ யுகத்தில்) அர்ப்பணிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். கிருபையின் காலத்தின்போது, நாம் நம்முடைய உடைமைகளையும், நமது சித்தங்களையும் தேவனிடத்தில் ஒப்புகொடுக்கின்றோம். இராஜ்யத்தில் நம்முடைய வேலையானது, மனிதர்களைச் சுயசித்தத்திற்குத் தரித்திரராக்குவதும், அவர்களைத் தேவனுடைய சித்தத்திற்குக் கீழாகக் கொண்டு வருவதுமாகும். (நிஜமான) யோசேப்பு வைத்திருக்கும் உணவை வாங்க வேண்டுமானால், அவர்கள் தங்கள் பொக்கிஷமான உடைமைகளையெல்லாம் கையளித்துவிட்டுக் காலியாக்கிக்கொள்ள வேண்டும் மற்றும் இறுதியாக தங்களையும் ஒப்புயர்வற்ற தேவனிடத்தில் முழுமையாய்க் கையளித்திட வேண்டும் (யோசேப்பு கொண்டிருக்கும் இந்த உணவை அவர்கள் உண்கையில், அவர்கள் நீதியில் வளருகின்றவர்களாய் இருப்பார்கள்) (ஆதியாகமம் 47:24, 25). இஸ்ரயேலர்கள் பத்தில் ஒரு பங்கை (தசமபாகமாக) ஆசாரியர்களுக்கும், லேவியர்களுக்கும் கொடுக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள். யோசேப்பு எகிப்தியர்களைப் பார்வோனுக்கு ஐந்தில் ஒரு பங்கைக் கொடுக்கப்பண்ணினார்-- தேவனுடைய இராஜ்யத்தில் இரண்டு மடங்கு தசமபாகம் கொடுத்தல் வேண்டும்.

இக்காரியங்களானது யோசேப்பைத் தாராளமானவர் போன்று காண்பிப்பதில்லை, ஆனால் இவைகளே நித்திய ஜீவனுக்கான நிபந்தனைகளாகும். "வெள்ளாடு வகுப்பார்" இவ்வேற்பாட்டினை விரும்புவதில்லை. இவர்கள் இராஜ்யத்தினுடைய நிபந்தனைகளின் கீழ்க் கொஞ்சம் எரிச்சலடைவார்கள், மற்றும் தங்களுக்குத் தாங்களே சிறந்த நிபந்தனைகளை ஏற்படுத்திக்கொள்வதற்கு விருப்பமுடையவர்களாய் இருப்பார்கள். மனுக்குலமானது உண்மையில் ஐந்தில் நான்கு பங்கு கொண்டிருப்பார்கள் என்பதையும், அது அவர்கள் தேவையைவிட மிக அதிகமானதே என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். மனுக்குலமானது தங்கள் பிரயாசங்களில் ஐந்தில் ஒரு பங்கை மாத்திரம் பொதுவான நன்மைகளுக்கென்று கொடுப்பார்களானால், இந்த உலகமானது எவ்வளவு ஐசுவரியமாய்க் காணப்படும். தேவன் எப்போதாவது பூமியிலிருந்து பணத்தை எடுத்துக்கொண்டது உண்டா? இல்லை! அவர் ஒருபோதும் அப்படிச் செய்வதுமில்லை. எனினும் மனுக்குலத்தினுடைய நன்மைக்கென்று மனுக்குலம் செய்கிறவைகளை, தேவனும், கிறிஸ்துவும் தங்களுக்கே செய்ததாகக் கருதிக்கொள்வார்கள்.

"நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர்" (ஆதியாகமம் 44:18). இவைகள் யோசேப்பிடம், யூதா பேசிட்ட வார்த்தைகளாகும். ஆம் தேவன் அருளின வல்லமையையும், அதிகாரத்தையும் கிறிஸ்து செயல்படுத்துவார். அநேகமாக யோசேப்பு இப்படியான அதிகாரத்தில் காணப்படுகின்றார் என்பதற்காக எகிப்தியர்கள் கோபம் கொண்டிருந்திருக்கலாம். எகிப்தியர்கள் யோசேப்பினுடைய அதிகாரத்தை உதறித்தள்ள முற்பட்டிருக்கலாம் என்று நான் எண்ணுகின்றேன். எனினும் யோசேப்பினுடைய அதிகாரத்தின் கீழிலிருந்து வெளியேறுவதற்குப் பார்வோன் ஒரு எகிப்தியனைக்கூட விடவில்லை. கிறிஸ்து இப்பொழுது நம்முடைய தலையாக இருக்கின்றார். நாம் இப்பொழுது/இக்காலத்தில் தலையைப் பற்றிக்கொள்ளவில்லையெனில், அக்காலத்தில் உலகம் அவரது தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் என்று நாம் எதிர்ப்பார்த்திட முடியாது. கிறிஸ்துவினுடைய மணவாட்டியாக விரும்புபவர்கள் இப்பொழுதும் மற்றும் எப்பொழுதும் கிறிஸ்துவினுடைய தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்வதற்கு விருப்பம் உள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். வேறு சிந்தையுடையவர்கள், அவருடைய மணவாட்டியாகிட முடியாது.

## ‘‘மேன்மையான அதிகாரத்திற்குக் கடும்போட்டி’’

உலகத்தில் ஏற்பட்ட பெரும்பான்மையான வலி மற்றும் பாடுகளானது, அதிகாரம் பெற்றுக்கொள்வதற்கென முயற்சி செய்கின்றதான பிசாசு மற்றும் சுயநலமான மனிதர்களிடமிருந்தே வந்ததாய் இருக்கின்றது. உலகத்தில் ஆளுகையும், அதிகாரமும் பெற்றுக்கொள்வதற்கான தேடுதலிலேயே நிம்ரோத்தினுடைய பாபேல் கோபுரம் கட்டப்பட்டது. பேராசையினால் இயக்கப்பட்டதான இந்தத் திட்டத்தினை, தேவன் குறுக்கிட்டு, தடுக்க வேண்டியதாய் இருந்தது. மனித சரித்திரத்தினுடைய ஆரம்பம் துவங்கியே ஜாதிகள்/தேசங்கள் யுத்தத்தில் காணப்படுகின்றனர். பலத்த ஜாதியார், பலமற்ற ஜாதியார்மேல் ஆளுகைச் செய்வதன் மூலமாகவும், அவர்களை அடிமைப்படுத்துவதின் மூலமாகவும், அவர்களைச் சூறையாடிப் போட்டனர். இதைப் போன்றதான ஆவியைப் பெந்தெகொஸ்தேவுக்கு முன்னதாக அப்போஸ்தலர்கள் மத்தியிலுங்கூடப் பார்க்க முடிகின்றது. ‘‘நீங்கள் வழியிலே எதைக்குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம்பண்ணினீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம்பண்ணினார்கள்’’ என்று மாற்கு 9:33, 34-ஆம் வசனங்களில் நாம் வாசிக்கின்றோம். போதகரிடம் தங்களது தர்க்கம் பற்றின உண்மையைக் கூறிடுவதற்கு அவர்கள் வெட்கப்பட்டார்கள்.

பிற்காலங்களில் கிறிஸ்தவ சபையில் கண்காணிகள் மத்தியில் போட்டி ஏற்பட்டது என்பது நம்மை ஆச்சரியப்படுத்துகிறதில்லை. கண்காணிகளினுடைய எண்ணிக்கை பெருகினபோது, கண்காணிகளுக்கெல்லாம் கண்காணியாக யார் இருக்க வேண்டும்? என்ற கேள்வி உடனடியாக எழும்பினது. பரிசுத்த திருச்சபைகள் அனைத்திற்கும், உரோமிலுள்ள கண்காணியே தலைவர் ஆவார் என்று அறிவித்து, இப்பிரச்சனையைச் சக்கரவர்த்தி ஜஸ்டீனியன் முடித்து வைத்தார். அப்போது துவங்கி, உலகத்தையும், மனித மனங்களையும் கட்டுப்படுத்தி ஆளும் ஆசையுள்ள இராஜாக்கள் மற்றும் குருமார்கள் ஆண்ட இருண்ட யுகத்திற்குள்ளாக, உலகமானது அமிழ்ந்துபோனது. இந்த இரக்கமற்ற மற்றும் கொலையாட்டமான ஆளுகைக்குச் சாத்தான் பிரதிநிதித்துவம் கொண்டுள்ளார். இந்த உலகத்தில் செலுத்தப்படும் அதிகாரமானது பாவத்தினால் மிகவும் கெடுக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அனைத்து அதிகாரங்களுமே எதிர்க்கப்பட வேண்டும் மற்றும் அகற்றப்பட வேண்டுமென்ற முடிவிற்குள்ளாகச் சிலர் கடந்து வந்துள்ளனர். இதன் காரணமாக மனித உரிமைகள் மற்றும் சிலாக்கியங்கள் தொடர்புடைய மிக அதிகப்படியான கோரிக்கைகள் எழும்பியுள்ளது. உரிமைகளுக்கான இந்தத் தேடலில், பெரும்பாலும் அனைத்து அதிகாரங்களும் எதிர்க்கப்படுகின்றன மற்றும் ஜனங்கள் மனிதனுக்கான அதிகாரம் வரையறையற்றதாக காணப்பட வேண்டுமெனக் கற்பனை பண்ணிக்கொண்டு காணப்படுகின்றனர்.

அதிகாரத்தின் மீதான கட்டுப்பாடு எதிர்க்கப்படுகின்ற மற்றும் மறுக்கப்படுகின்ற காலப்பகுதியில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். உலகத்தினுடைய இந்த ஒழுங்கின்மையின் ஆவியானது நம் இரத்தத்திற்குள் ஊடுருவுவதற்கு நாம் அனுமதித்திடக் கூடாது. கிறிஸ்துவினுடைய தலைமைத்துவத்தை விரும்புகின்றவர்களையும், ஏற்றுக்கொள்பவர்களையுந்தான் தேவன் தேடிக்கொண்டிருக்கின்றார் என்பதை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டும். நம்முடைய ஜீவியங்களில் தினந்தோறும் கிறிஸ்து நம்முடைய தலையாகக் காணப்பட வேண்டும். உயிர்த்தெழுதலிலும், நாம் சதாகாலமும் கிறிஸ்துவினுடைய தலைமையின் கீழிலேயே காணப்படுவோம்.

யோசேப்பிடமிருந்துள்ளப் படிப்பினை என்னவெனில், அவர் முழு அதிகாரத்தையும் செயல்படுத்தினவராகக் காணப்பட்டப்போதிலும், அவர் தன்னை முழுமையாகப் பார்வோனுடைய அதிகாரத்தின் கீழேயே வைத்துக்கொண்டவராகக் காணப்பட்டார், அதாவது கிறிஸ்து எப்போதும் தமது பிதாவினுடைய தலைமை அதிகாரத்தை அங்கீகரித்ததுபோல, யோசேப்பும் காணப்பட்டார். அவருக்கு எந்தக் கட்டுக்கடங்காத ஆசைகளும் இருக்கவில்லை. கட்டுப்பாடற்ற ஆசைகளானது லூசிபரை அழித்துப்போட்டது. இது தலையைப் பற்றிக் கொண்டிராத எந்தக் கிறிஸ்தவனையுங்கூட அழித்துவிடும்.

"ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் குடும்பம் அனைத்திற்கும் கர்த்தனாகவும், எகிப்து தேசம் முழுதுக்கும் அதிபதியாகவும் வைத்தார்" (ஆதியாகமம் 45:8). இது அருமையான வேதவாக்கியமாகும். யோசேப்பு அத்தேசத்தினுடைய தந்தையாகியுள்ளார்; அவர்கள் அவர் மூலமாக மாத்திரமே ஜீவித்தார்கள். கிறிஸ்து உலகத்திற்கான நித்திய பிதாவாகக் காணப்படுவார். அவர் இறுதியில் மனுக்குலத்தைத் தேவனிடத்தில் கொண்டு வருவார். யோசேப்பினுடைய தகப்பன்துவம் பஞ்சகாலத்தின் போதுதான் ஆரம்பித்ததா? பரிபூரணமான விளைவினுடைய வருஷங்களின் போது ஆரம்பித்ததா? யோசேப்பு அடிமைப்படுத்தப்பட்டு, மற்றும் கடுமையான மற்றும் வலி நிறைந்த சூழ்நிலைகளில் தேவனுடைய வழிநடத்தல்களைக் கற்றுக் கொண்டதான சிறையில் இருக்கும் காலங்களிலா ஆரம்பித்தது? மகத்துவம் அடைதலுக்கு முன்பாக தாழ்மையே உள்ளது. கர்த்தருடைய ஜனங்களாகிய நாம் இப்போதும், உண்மையான பராமரிப்பு செய்தலின் ஆவியைக் கொண்டிருத்தல் வேண்டும். இந்தக் கிருபை மற்றும் தயவின் காலங்களில் நாம் உலகத்திற்கான பொதுவான பாடுகளில் பங்கடைவதில், நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும். இது நாம் உலகத்தாரை (அக்காலத்தில்) அர்ப்பணிப்பிற்குள்ளாகக் கொண்டுவருவதற்கு ஏதுவாயிருக்கும். நாம் யோசேப்பிடம் கற்றுக்கொள்கின்ற நடைமுறை சார்ந்த பாடம் என்னவெனில், அவர் ஜனங்கள் விஷயத்தில் கடினமனதுடன் நடந்துகொண்டார் என்பதேயாகும். ஜனங்களைப் பார்வோனுடைய முழுக்கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவரும் விதத்திலேயே யோசேப்பு ஜனங்களைக் கையாண்டவராகக் காணப்பட்டார். இப்போது காண்பிக்கப்படுகின்றதான தாராளமான அன்பை அப்போது யோசேப்பு காண்பிக்கவில்லை. "ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்" என்ற வசனத்தை நினைவில் கொள்ளுங்கள் (ரோமர் 11:22). தேவன் முழுக்க இரக்கமுள்ளவர் என்பதும், கண்டிப்பே இல்லாதவர் என்பதும் தேவன் குறித்த, நவீன கால கருத்தாகும். ஆனால் நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் தேவனானவர், தயவும், கண்டிப்பும் உள்ளவர் ஆவார். இந்தப் படிப்பினையை நம்முன் வைத்துக்கொள்வோமாக.

## "யோசேப்பு தனது சகோதரர்களைக் கடினமாய் நடத்தினார்"

யோசேப்பு தனது சகோதரர்கள் தனது முன்னிலையில் வந்தபோது, முதலாவதாக அவர்களை வேவுக்காரர்களெனக் குற்றஞ்சாட்டினார். அவர்கள் தானியம் வாங்க வந்து, அநேக பிரச்சனைகளுக்குள் சிக்கிக்கொண்டார்கள். "அவர்கள் எல்லாரையும் மூன்றுநாள் காவலிலே வைத்தான். மூன்றாம் நாளிலே யோசேப்பு அவர்களை நோக்கி: நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்; நீங்கள் உயிரோடே இருக்கும்படிக்கு ஒன்று செய்யுங்கள். நீங்கள் நிஜஸ்தரானால், சகோதரராகிய உங்களில் ஒருவன் காவற்கூடத்தில் கட்டுண்டிருக்கட்டும்; மற்றவர்கள் புறப்பட்டு, பஞ்சத்தினால் வருந்துகிற உங்கள் குடும்பத்துக்குத் தானியம் கொண்டுபோய்க் கொடுக்கட்டும்" (ஆதியாகமம் 42:17-19). இங்கு நமது கர்த்தர் எப்படித் தம்முடைய எபிரெய சகோதரர்களை மூன்று நாட்கள் (தேசம் இயேசுவைப் புறக்கணித்தது துவங்கி, அவரது இரண்டாம் வருகை வரையிலான மூன்று ஆயிர வருட நாட்கள் பாகம்) சிதறிக் காணப்படப்பண்ணினதையும் மற்றும் மூன்றாம் (ஆயிரவருட) நாளில் அவர்கள் தங்கள் குடும்பங்களையும் போஷிக்கத்தக்கதாக, தங்கள் வீடுகளுக்குத் திரும்பிடுவதற்கு அனுமதித்திட்டார் என்பதையும் நாம் காண்கின்றோம். இது கிறிஸ்துவின் மரணம் துவங்கி, அவர் திரும்பிவந்து, தமது கவனத்தைத் தமது சகோதரர்கள் மீது செலுத்தி, அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்குச் சில ஏற்பாடுகளுடன் மீண்டும் திரும்பிச் செல்வதற்கு அனுமதிப்பது வரையிலுமான காலத்தை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது.

யோசேப்பு அவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தபோது, அவர்கள் தங்கள் பாவங்களை எபிரெய மொழியில் ஒப்புக்கொண்டார்கள், அதுவும் யோசேப்பால் நன்கு புரிந்துகொள்ள முடியும் என்பது தெரியாமல் ஒப்புக்கொண்டார்கள். தவறு செய்தமைக்கான அவர்களது மனவுளைச்சலையும், குற்ற உணர்வையும் குறித்து யோசேப்பு கவனித்துக் கொண்டிருந்தபோது, அவரால் அவரது கண்ணீர்களை அடக்கிக்கொள்ள முடியாததினால், அவர் அப்புறம் செல்ல வேண்டியிருந்தது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது (ஆதியாகமம்

42:24). நம்முடைய நாட்களில் எத்தனை யூதர்கள், இயேசுவுக்கு நிகழ்ந்தவைகளைக் குறித்து, தங்களது துக்கக்கரமான சரித்திரத்தை வேதனையோடு அடிக்கடி திரும்பிப்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று நான் எண்ணுவதுண்டு. அநேகருடைய இருதயங்களில் இந்தத் தவறுக்கான மனவுளைச்சல் இருக்கின்றது என்று நான் உறுதியாய் நம்புகின்றேன், ஆனால் இதை அவர்களால் வெளிப்படையாய்ப் புறஜாதிகளிடத்தில் ஒப்புக்கொண்டிட முடியாது. எபிரெய பாஷையில் மாத்திரமே தவறுக்கான இந்த மனவுளைச்சல் கேட்கப்பட்டது. உண்மையான மன்னிப்பிற்கு முன்னதாக தவற்றை ஒப்புக்கொள்ளுதல் நடைபெறுகின்றது. இக்காரியம் இரகசியமாக ஆரம்பித்துவிட்டது என்றும், சகரியா 12:10-ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் நிறைவை அடையும் என்றும் நாம் நம்புகின்றோம்; "நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." இத்தருணமே, யோசேப்பு அவர்களிடத்தில், "நான் யோசேப்பு" என்று சொல்லக்கூடிய தருணமாகும். அது எத்தகைய மகிழ்ச்சிகரமாயுள்ள மீண்டுமான ஒன்று சேருதலாகும். நிஜத்தில் கிறிஸ்து தம்மை இஸ்ரயேலுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் அவரது திறந்த கரங்களுக்குள்ளாக விழும்போது, அது ஒரு மாபெரும்/முக்கியமான தருணமாய்க் காணப்படும்.

எனினும் அவர்களைச் சிறையிலிருந்து வெளியே விட்டவுடனே, யோசேப்பு தான் யார் என்பதை, தனது சகோதரர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அவர் மிகவும் கடினமாய் நடந்துகொள்ளும் காரியம் ஒன்றைச் செய்கின்றார். அவர் சிமியோனைப் பிரிக்கின்றார்; "அவர்களில் சிமியோனைப் பிடித்து, அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கட்டுவித்தார்" என்று நாம் ஆதியாகமம் 42:24-ஆம் வசனத்தில் வாசிக்கின்றோம். ஏன் சிமியோன்? மற்றச் சகோதரர்கள் தங்கள் குடும்பங்களினிடத்திற்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கையில், ஏன் சிமியோன் இவ்வாறாகக் கட்டப்பட்டு, சிறைக்குள் தள்ளப்பட்டார்? இது மிகவும் வேதனையானதும், தாழ்மைப்படுத்துவதாகவும் காணப்பட்டது. சகோதரர்கள் மத்தியில் ரூபன் மாத்திரமே குற்றமற்றவர். இவர் தனது குற்றமற்ற நிலைமையை ஆதியாகமம் 42:22-ஆம் வசனத்தில் குறிப்பிடுகின்றார். யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கான ஆலோசனையைச் சகோதரர்களுக்குக் கொடுத்திட்ட யூதாவை, யோசேப்பு ஏன் கட்டவில்லை? (ஆதியாகமம் 37:27). ஏன் என்று நமக்கு நிச்சயமாய்த் தெரியாது, ஆனால் யோசேப்பை அவர்கள் விற்றபோது, சிமியோன்தான் யோசேப்பைக் கட்டினார் என்றும், யோசேப்பு தனது சகோதரர்களிடம் கெஞ்சினபோது, சிமியோன் கொஞ்சமும் யோசேப்பிற்கு அனுதாபம் காண்பிக்கவில்லை என்றும் நாம் எண்ணுகின்றோம். கட்டப்படும் போதுள்ள மனவேதனையை சிமியோனே இப்பொழுது உணரவேண்டியவராய் இருந்தார். சிமியோன் தனது சகோதரர்கள் விடுதலையடைந்து வீடு திரும்புவதையும், தான் சிறையில் தள்ளப்படுவதையும், கட்டப்படுவதையும் பார்க்க வேண்டியிருந்தது. சிமியோன் தனக்கான சில மருந்துகளைப் பானம் பண்ண வேண்டியிருந்தது மற்றும் அது இனிமையாய் இருப்பதில்லை. ஒருவேளை சிமியோன் போதுமானளவுக்குத் தவறுக்கான இருதயத்தின் வருந்துதலைக் காண்பிக்காமல் இருந்திருக்கலாம் மற்றும் யோசேப்பு தனது கடுமையான கையாளுதலைப் பயன்படுத்தி, சிமியோன் உண்மையாய் இருதயம் வருந்தும் நிலைக்குக்கொண்டுவரப்படுவதற்கு உதவினார். ஒரு விஷயத்தை இங்குக் கவனிக்கவும், அதென்னவெனில் யூதாவும், மற்றச் சகோதரர்களும் சிமியோனுக்காக எந்த மன்றாட்டையும் ஏறெடுக்கவில்லை; யாரும் சிமியோனுக்காக தங்களைக் கையளிக்கவில்லை.

நிஜத்தில் (யோசேப்பு அடையாளப்படுத்தும்) இயேசுவை யார் கட்டினார்கள் என்பதை நாம் அறிவோம். அது இயேசுவைப் பகைத்து, அநேக தருணங்களில் அவரைக் கொன்று போடுவதற்கு நாடின மதத்தலைவர்கள் ஆவர். இறுதியில் இவர்கள் யூதாசினுடைய உதவியினால், இயேசுவைக் கட்டி, பிலாத்துவினிடத்தில் அவரை ஒப்புக்கொடுத்தார்கள். பின்னர் இயேசுவைச் சிலுவையில் அறையும்படிக்கு இவர்கள் பிலாத்துவை நச்சரித்தார்கள். ஐந்து முறை பிலாத்து, "இவரிடத்தில் நான் ஒரு குற்றத்தையும் காணேன்" என்றார். எனினும் இந்த மதத் தலைவர்கள் இயேசுவைக் கட்டுவதில் மாத்திரம் ஜெயங்கொள்ளாமல், இயேசு

உயிர்த்தெழுவது வரையிலான காலப்பகுதி வரையிலாகிலும் அவரை ஒழித்துக்கட்டினவர்களாய் இருந்தார்கள்.

யோசேப்பின் (இயேசுவின்) சகோதரர்கள் சிதறடிக்கப்படுதல் எனும் சிறைச்சாலையினின்று விடுவிக்கப்பட்டு அவர் முன் நிற்கையில், சிமியோன் நம்முடைய நாட்களிலுள்ள யாருக்கு நிழலாக இருக்கின்றார்? இப்படிச் சிந்திக்கையில், இன்னும் கூடுதலான கடினமான அனுபவங்கள் பெற்றுக்கொள்வதற்கு அவசியமுள்ள ஒரு யூத வகுப்பார் நம்முடைய நாட்களில் காணப்படுவதாகத் தோன்றுகின்றது. யோசேப்புக்கு முன்பாக நின்ற எபிரெய சகோதரர்கள் அனைவரும் அவரைப் புறக்கணித்திருந்தவர்களாகக் காணப்பட்டனர். சிமியோனே இன்னும் கூடுதலான கடினமான அனுபவங்களுக்குள் அனுமதிக்கப்பட்டார் (ஆதியாகமம் 42:24). நம்முடைய நாட்களில் யாருக்குச் சிமியோன் அடையாளமாய் இருக்கின்றார்? கிறிஸ்துவினுடைய இராஜ்யம் எனப் போலியாய்த் தங்களைக் காண்பித்துக்கொண்டிருக்கின்றதான பெயர்க்கிறிஸ்தவ சபையுடன், தங்களை இணைத்துக் கொண்டிருக்கின்றதான யூதர்கள், இன்னும் கூடுதலான உபத்திரவத்தை அடையப்போகின்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதாகத் தோன்றுகின்றது. இவர்கள் எகிப்தில் (அ) பாபிலோனில் கட்டிப்போடப்படப் போகின்றனர். இயேசுவை மேசியாவென ஏற்றுக்கொண்டவர்களும், அதேசமயம் சபைகளுடனும், யூதர்களைக் கொடுமைப்படுத்தும் கொடுமைகளுடனும் தங்களை இணைத்துக்கொள்வதற்கு விருப்பமற்றுக் காணப்படுகின்றவர்களுமான யூதர்கள், அதாவது (Messianic Jews) மேசியாவின் வருகையை எதிர்ப்பார்த்திருக்கும் யூதர்களைக் குறித்து நான் இங்குக் கூற வரவில்லை. இவர்கள் திரித்துவம் கொள்கையினைத் தள்ளியும், கிறிஸ்தவ மண்டலத்தைத் தள்ளியும், மேசியாவில் மாத்திரம் நம்பிக்கைக்கொள்ள விரும்புகின்றவர்களாய் இருக்கின்றனர். சிமியோன் திரியேக கிறிஸ்துவையும், எரிநரகத்தில் எரிக்கும் கிறிஸ்துவையும் ஏற்றுக்கொண்டு, போலி கிறிஸ்தவ சபைகளில், அதிலும் பெரும்பாலும் இவான்சலிக்கல் சபைகளில் (Evangelical Churches) தங்களை இணைத்துக்கொள்ள விரும்புகின்றவர்களாகிய யூதர்களை அடையாளப்படுத்துகின்றார் என்று நாம் எண்ணுகின்றோம்.

பாபிலோனில் அங்கமாகியுள்ள யூதர்கள் பாபிலோன் அழிந்துபோகும்போது, இன்னும் அதிகமான உபத்திரவங்களுக்குள்ளாகக் கடந்து போவார்கள். இவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்குள்ளாகும் அந்த அமைப்பில் கட்டப்பட்டவர்களாகக் காணப்படுவார்கள். நம்முடைய நாட்களிலுள்ள இவர்களுக்கே சிமியோன் அடையாளமாய்க் காணப்படுகின்றார். ஆம் சிமியோன் வகுப்பாருடைய சகோதரர்கள் தங்கள் குடும்பங்களையும், யாக்கோபையும் போஷிக்கத்தக்கதாக, தங்கள் சொந்த தேசத்திற்குத் திரும்புகையில், இவ்வகுப்பார் கிறிஸ்தவ மண்டலத்தில் கட்டப்பட்டவர்களாய் இருப்பார்கள். பென்யமீனைத் தங்களோடுகூடக் கொண்டுவரத்தக்கதாக, ஒன்பது சகோதரர்களும், உணவுகளுடன் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.



## "இரண்டாம் சந்திப்பு"

யோசேப்பினுடைய சொந்த சகோதரனாகிய பென்யமீன் எனும் தங்களது சகோதரனோடுங்கூட, அவர்கள் யோசேப்பின் முன் நின்றபோது, யோசேப்புடனான அடுத்த சந்திப்பு நடைப்பெறுகின்றது. அவர்கள் தங்களோடுகூடப் பென்யமீனைக் கொண்டுவருவது என்பது நிறைவேற்றுவதற்கு மிகக்கடினமானக் காரியமாகும் (ஆதியாகமம் 42:16, 19). பென்யமீனை எகிப்திற்கு அனுப்ப வேண்டுமென்ற நிலை வந்தபோது, அது எவ்வளவாய் யாக்கோபினுடைய இருதயத்தை உடைத்தது என்பதை நீங்கள் அறிவீர்கள், ஆனால் பஞ்சத்தின் காரணமாக யாக்கோபுக்கு வேறு வழி இருக்கவில்லை. யோசேப்பு இயேசுவுக்கு நிழலாய் இருப்பதுபோன்று, பென்யமீன் திரள்கூட்டத்தாருக்கு நிழலாய்க் காணப்படுகின்றார். யோசேப்பு தனது ஐந்து சகோதரர்களை, தனது பத்துச் சகோதரர்களுக்கு அடையாளமாய் நிறுத்தினார். "தன் சகோதரரில் ஐந்துபேரைப் பார்வோனுக்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினான்" (ஆதியாகமம் 47:2) என்று நாம் வாசிக்கின்றோம். ஐசுவரியவான் மற்றும் ஏழை லாசரு கதையிலும் ஐந்து சகோதரர்கள், பத்துக் கோத்திரத்தை அடையாளப்படுத்துகின்றனர் (லூக்கா 16:19-31).

யோசேப்பின் சகோதரர்களுக்கும், யோசேப்பிற்குமான இரண்டாம் சந்திப்பிற்கான நிஜமானது, நிஜமான பென்யமீன் (திரள் கூட்டத்தினர்), இஸ்ரயேல் தேசத்தாருடன், கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்கையில் நடைபெறும். பென்யமீன் ஐந்து புத்தியில்லாத கன்னிகைகளை அடையாளப்படுத்துபவராய் இருப்பினும், இவர் தனது சகோதரனாகிய யோசேப்பைப் புறக்கணிக்கவில்லை என்பதைக் கவனிப்பதற்குச் சுவாரசியமாய் இருக்கின்றது. பென்யமீன் தனது சகோதரர்கள் புரிந்த குற்றத்தில், பங்குடையவர் அல்ல. திரள் கூட்டம் கிறிஸ்துவை அன்புகூர்ந்ததுபோலும், அந்தக் கற்பாறையின் மீது கட்டியெழுப்பப்பட்டவர்களாய் இருந்தது போலும், பென்யமீனும் தனது சகோதரனாகிய யோசேப்பை அன்புகூர்ந்தவராய்க் காணப்பட்டார். யோசேப்பு ஏற்பாடு பண்ணியிருந்த விருந்தில், பென்யமீன் பெற்றுக்கொண்டதான ஐந்து மடங்கு பங்கானது, விசேஷித்த தயவினை அடையாளப்படுத்துகின்றதாய் இருந்தது (ஆதியாகமம் 43:34). எப்படி "யோசேப்பு தன் கண்களை ஏறெடுத்து, தன் தாய் பெற்ற குமாரனாகிய தன் சகோதரன் பென்யமீனைக் கண்டு, நீங்கள் எனக்குச் சொன்ன உங்கள் இளைய சகோதரன் இவன்தானா என்று கேட்டு, மகனே, தேவன் உனக்குக் கிருபை செய்யக்கடவர் என்றான். யோசேப்பின் உள்ளம் தன் சகோதரனுக்காகப் பொங்கினபடியால், அவன் அழுகிறதற்கு இடம் தேடி, துரிதமாய் அறைக்குள்ளே போய், அங்கே அழுதான்" என்பதை கவனியுங்கள் (ஆதியாகமம் 43:29, 30). இங்குக் கிறிஸ்து தமது சகோதரனாகிய திரள் கூட்டத்தாருக்காக உள்ளம் பொங்குவதைப் பார்க்கின்றோம். எனினும் யோசேப்பு தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்த இன்னும் தயாராய் இல்லை.

## "யோசேப்பினுடைய வெள்ளிப் பாத்திரம்"

திட்டம் இப்பொழுது பிரம்மாண்டமடைகின்றது. யோசேப்பு தனது சகோதரர்களுடைய சாக்குகளில் பணத்தை வைக்கின்றார் மற்றும் பென்யமீனுடைய சாக்கில் (மாம்சீக இஸ்ரயேல் மற்றும் வாக்களிக்கப்பட்ட தேசம் தொடர்புடைய சத்தியமாய் அநேகமாகக் காணப்படும்) தனது வெள்ளிப்பாத்திரத்தை வைத்துவிடுகின்றார். இது அனைவருக்கும் சீர்க்குலைவை உண்டாக்கிற்று. அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர் மற்றும் இப்பொழுது பென்யமீன் இல்லாமல், அவர்கள் வீடு திரும்ப வேண்டிய நிலைமை நிலவியது. யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கான ஆலோசனையை வழங்கின அதே யூதா, இப்பொழுது தன்னுடைய ஜீவியத்தையே கையளிக்க முன்வந்தார். தனது பாத்திரம் யாரிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவரே தனக்கு வேலைக்காரனாகக் காணப்பட வேண்டுமென்று யோசேப்பு விடாப்பிடியாய் நின்றார். திரள் கூட்டத்தினர் "இரவும், பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிப்பார்கள்" என்பதை நாம் அறிவோம். "அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து: ஆ, என் ஆண்டவனே, உமது அடியேன் உம்முடைய செவிகள் கேட்க ஒரு வார்த்தை சொல்லுகிறேன் கேட்பீராக; அடியேன்மேல் உமது கோபம்

மூளாதிருப்பதாக; நீர் பார்வோனுக்கு ஒப்பாயிருக்கிறீர். இப்படியிருக்க, இளையவன் தன் சகோதரரோடேகூடப் போகவிடும்படி மன்றாடுகிறேன்; உம்முடைய அடியானாகிய நான் இளையவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாயிருக்கிறேன். இளையவனை விட்டு, எப்படி என் தகப்பனிடத்துக்குப் போவேன்? போனால் என் தகப்பனுக்கு நேரிடும் தீங்கை நான் எப்படிக் காண்பேன்" (ஆதியாகமம் 44:18, 33, 34) என்று நாம் வாசிக்கின்றோம். இத்தருணத்திற்காகவே யோசேப்பு காத்துக்கொண்டிருந்தார். ஆதியாகமம் 44:16-இல் யூதா தனது பாவங்களை யோசேப்பினிடத்தில் ஒப்புக்கொண்டார். யூதா பென்யமீனுக்குப் பதிலாக, அவரது அடிமை ஸ்தானத்தை எடுக்க விரும்பினதைப் பார்த்து, யோசேப்பினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த யூதாதான் முன்பு யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கு ஆலோசனை வழங்கினவர் ஆவார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்; ஆனால் இப்பொழுது யூதா ஓர் அருமையான நபராக மாற்றம் அடைந்துள்ளார். யூதா தனது தந்தையாகிய யாக்கோபைக் குறித்தும், தனது சகோதரனாகிய பென்யமீனைக் குறித்தும் அக்கறைகொண்டிருந்தார். பென்யமீனுக்குப் பதிலாக தன்னைக் கையளிக்க வேண்டுமானால், யூதாவிடம் மாபெரும் குணங்கள் காணப்பட்டிருந்திருக்க வேண்டும். சிமியோனுக்காக யாரும் தங்களைக் கையளிக்கவில்லை என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். யூதா அடிமையாகப் போவதில்லை. அவரது அருமையான இருதய நிலைமையானது, இறுதியில் அவரை விடுதலையாக்குகின்றது.

இது சுவாரசியமாக உள்ளது. வெளிப்படுத்தல்16-ஆம் அதிகாரத்தில் "ஏழு தூதர்கள்," "ஏழு பொற்கலசங்களை" ஊற்றுகின்றனர்; இவர்கள் "தேவனுடைய மகிமையினால் நிரம்பப்பட்டிருந்த" ஆலயத்திலிருந்து புறப்பட்டு வந்தார்கள். தெய்வீக நியாயத்தீர்ப்புகள் அடங்கின "பொற்கலசங்கள்," இந்த "ஏழு தூதர்களிடம்" கொடுக்கப்பட்டன. பொற்கலசங்கள் தேவனுடைய கோபாக்கினையால் நிரம்பி இருந்தது. ஆலயத்திலிருந்து புறப்பட்டு வருகின்றதான இந்த "ஏழு தூதர்களின்," அதாவது தேவனுடைய உண்மை சபையின் வேலையில், பென்யமீன் உள்ளடங்குவதில்லை. பொன் தெய்வீகம் சம்பந்தப்பட்டதாகும். திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்தும் பென்யமீனிடம், யோசேப்பின் வெள்ளிப்பாத்திரம் கொடுக்கப்பட்டதைக் கவனியுங்கள். ஆகையால் வெள்ளி, திரள் கூட்டத்தினர் சம்பந்தப்பட்டதாய் இருக்கின்றது. வெளிப்படுத்தல் 16:15-ஆம் வசனத்தில், திரள் கூட்டத்தினருக்கான கர்த்தருடைய செய்தி காணப்படுகின்றது; "இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்." திரள் கூட்டத்தினரைச் சுற்றி அனைத்தும் வீழ்ந்து, அழிந்துகொண்டிருக்கும்போது, அவர்கள் தங்கள் நீதியின் வஸ்திரத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதே திரள் கூட்டத்திற்குக் கொடுக்கபட்டச் செய்தியாகும். கிறிஸ்து திரள் கூட்டத்தினருக்கு வழங்குவதுபோன்றே, யோசேப்பு தனது வெள்ளிப்பாத்திரத்தை, பென்யமீனுடைய சாக்கில் வைக்கின்றார் என்பதை நாம் பார்க்கின்றோம். இது பென்யமீனுக்கு மிகுந்த உபத்திரவத்தின் மற்றும் திகைப்பின் காலத்தை ஏற்படுத்தினது. யோசேப்பின் வெள்ளிப்பாத்திரம் தன்னிடம் காணப்பட்டப்படியால், பென்யமீன் தீர்ப்பிற்குள்ளானவராகக் காணப்பட்டார். திரள் கூட்டத்தினரும் மகா உபத்திரவத்திற்குள்ளாகுவார்கள், ஏனெனில் அவர்களுடைய சாக்கில் "வெள்ளிப்பாத்திரமாகிய" சத்தியங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

எப்படி வெள்ளிப்பாத்திரமானது, பென்யமீனுடைய சாக்கில் மறைத்து வைக்கப்பட்டதோ, அப்படியே கிறிஸ்துவும் தம்முடைய சத்தியங்களைத் திரள் கூட்டத்தாரிடத்தில் வைப்பார் மற்றும் அவர்கள் யோசேப்பாகிய கிறிஸ்துவுக்குரிய சில முக்கியமான சத்தியங்களைப் பெற்றுக்கொண்டவர்களாகக் காணப்படுவார்கள். அது எந்தச் சத்தியங்களாக இருக்கும்? மாம்சீக இஸ்ரயேல் தொடர்புடையதான சத்தியங்களே, திரள் கூட்டத்தினர் பெற்றிருக்கும் சத்தியமாக இருக்குமென்று நான் எண்ணுகின்றேன். ஆகையால் இஸ்ரயேலை அழித்துப் போடுவதற்கென எடுக்கப்படும் எந்த முயற்சியும் வாய்க்காதே அழிந்துபோகும் என்பதை திரள் கூட்டத்தினர் அறிந்திருப்பார்கள். இஸ்ரயேலுக்கு எதிராக கோகும், மாகோகும் வருகையில், இந்தப் படையெடுப்பைப் பெயர்ச்சபைகளானது ஆசீர்வதிக்கும். எனினும் இந்த நோக்கம் தோல்வியைத் தழுவும் என்று திரள் கூட்டத்தினர் அறிந்திருப்பார்கள். இந்த நோக்கத்திற்கு எதிராக திரள் கூட்டத்தினர் பேசி, தங்கள் மீது கோபாக்கினியை வருவித்துக்கொள்வார்கள்.

யூதா யாரை அடையாளப்படுத்துகின்றவராய் இருப்பார்? மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியிலான உண்மையுள்ளவர்களை யூதா அடையாளப்படுத்துகின்றார்; இவர்கள் ஒரு கட்டத்தில் பெயர்ச்சபை அமைப்புகள் திரள் கூட்டத்தாருக்கு எதிராக திரும்புகையில், திரள் கூட்டமாகிய பென்யமீன் வகுப்பாரைப் பாதகத்தினின்று பாதுகாப்பதற்கெனப் பேசுபவர்களாகவும், முயற்சிக்கின்றவர்களாகவும் காணப்படுவார்கள். நிஜமான யோசேப்பு யூதாவினுடைய இருதயத்திலுள்ள தவறுக்கான உளைச்சலைக் கண்டு, தம்மை அதற்குமேல் தம்முடைய மாம்ச சகோதரர்களிடத்தில் மறைத்துக்கொள்ள முடியாத தருணமானது ஒரு மாபெரும் திசைத் திருப்பமாகக் காணப்படும். "அப்பொழுது யோசேப்பு தன் அருகே நின்ற எல்லாருக்கும் முன்பாகத் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல், யாவரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்கள் என்று கட்டளையிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்துகையில், ஒருவரும் அவன் அருகில் நிற்கவில்லை. அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள், பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள். யோசேப்பு தன் சகோதரரைப் பார்த்து: நான் யோசேப்பு" என்றார் (ஆதியாகமம் 45:1-3). தனது சகோதரர்களுக்கான தனது உணர்வுகளை, யோசேப்பு உலகமாகிய எகிப்தியர்களிடமிருந்து மறைக்க முயற்சிக்கின்றார், ஆனால் சீக்கிரத்தில் கிறிஸ்து தம்மை, தம்முடைய மாம்சீக சகோதரர்களுக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்வார்கள். இது அருமையாய் இருக்கின்றதல்லவா?

கோகினுடைய படையெடுப்பு வீழ்ச்சியடையும்போது, திரள் கூட்டத்தினர் மகா உபத்திரவத்தில், இந்தப் பூமியை விட்டுக்கடந்து போவார்கள். "இவ்விதமாய் நான் அநேக ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக என் மகத்துவத்தையும் என் பரிசுத்தத்தையும் விளங்கப்பண்ணி, அறியப்படுவேன்; அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்" (எசேக்கியேல் 38:23). இப்படியாக தனது மாம்சீக ஜனங்கள் மீதான யோசேப்பினுடைய (கிறிஸ்துவினுடைய) அன்பானது, முழு உலகத்துக்கும் தெரியவரும். (சில தனித்தன்மையான விதத்தில் திரள் கூட்டத்தினரை) பென்யமீனை, யூதா (மாம்சீக இஸ்ரயேலர்) பாதுகாக்க முற்பட்ட பின்னரே, யோசேப்பு (கிறிஸ்து) தன்னை, தனது சகோதரர்களிடத்தில் வெளிப்படுத்தினார் என்பதைக் கவனியுங்கள்.

தம்மை மாம்சத்தில் இருக்கும் தமது மாம்சீக சகோதரர்களாகிய இஸ்ரயேலர்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக, அவர்களை நீண்ட காலமாக கிறிஸ்து ஆயத்தம் பண்ணிக் கொண்டிருக்கின்றார். எனினும் முடிவில் மிகச் சடுதியாக அவர் தாமாகவே தம்மை, தமது மாம்சீக சகோதரர்களுக்கு வெளிப்படுத்துவார் என்று நம்முடைய பாடம் சுட்டிக்காண்பிக்கின்றதாய் இருக்கின்றது. மாம்சீக இஸ்ரயேல் தொடர்புடையதான சத்தியமாகிய யோசேப்பினுடைய வெள்ளிப்பாத்திரத்தைக் கொண்டிருப்பதன் காரணமாக, விசேஷித்த சோதனைக்குள் பென்யமீன் கடந்துசெல்லத்தக்கதாக, யோசேப்பு பென்யமீனை மாத்திரம் அனுமதித்திருப்பது தெரிகின்றது. யூதா பென்யமீனுடைய ஸ்தானத்தை எடுத்துக் கொள்ளத்தக்கதாக, தன்னை ஒப்புவிப்பது வரையிலும், யோசேப்பு தனது சகோதரர்களுக்கு ஆசீர்வாதங்களையும், துயரங்களையும், இரண்டையுமே கொடுத்தவராகக் காணப்படுகின்றார். (பென்யமீன் யோசேப்பினுடைய சொந்த சகோதரனாகவும், முதற்பேறான சபையின், சகோதரனாகவும் காணப்படுகின்றார் என்பதை நினைவில்கொள்ளுங்கள்). நிஜமான யூதா, திரள் கூட்டத்தாரின் பாடுகளை மாற்றிடுவதற்குச் சில சிறந்த பிரயாசங்களை எடுப்பார்கள் என்று எதிர்ப்பார்க்கலாம் என்பதற்கு இக்கதை உத்தரவாதம் அளிக்கின்றது.

இதை நான் நமக்கு முன்பாக அண்மையில் நிறைவேறப்போகின்றதான தீர்க்கத்தரிசனத்திற்கான மற்றுமொரு ஜன்னலை/திரையைத் திறப்பதற்கே குறிப்பிடுகின்றேன். யோசேப்பின் கதையானது, அநேக விதங்களில் நிழலாக இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. திரள் கூட்டத்தாருக்கும், கிறிஸ்துவுக்கும், யூதாவுக்கும், கோகின் படையெடுப்பிற்கும், அர்மகெதோனுக்கும் இடையிலான சம்பந்தங்களை நாம் புரிந்திடுவதற்கு உதவியாகவே, அநேகமாக இந்த நிழலான கதைக் கொடுக்கப்பட்டிருக்கலாம். கிறிஸ்துவின் சகோதரர்களாகிய திரள் கூட்டத்தாரைப் பாதுகாக்கத்தக்கதாக சிறந்த விதத்தில் செயல்படுவதின் மூலமே அல்லாமல், வேறெந்த விதத்தில் 'யூதா வகுப்பார்' தங்கள் தவறுக்கான உண்மையான மனவுளைச்சலையும், அருமையான இருதய நிலைமையையும் காண்பிக்க முடியும். இப்படிச் செயல்படுவதின் மூலம், திரள் கூட்ட

காப்பாற்றப்படுகிறதில்லை. "எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாயிருப்பான்" என்று யோசேப்பு கூறினதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் (ஆதியாகமம் 44:17). திரள் கூட்டத்தினர் சிங்காசனத்திற்கு முன்பாக, தேவனுடைய ஆலயத்தில் நின்று அவரைச் சேவிப்பார்கள். யூதாவினுடைய மன்றாட்டே, கிறிஸ்து தம்முடைய இருதயத்தை, தமது மாம்சீக சகோதரர்களிடத்தில் திறக்கச் செய்தது.

## "ஏழு வருடங்கள் விதைத்தல் (அ) நடுதல் இல்லை"

ஜனங்கள் ஏழு வருட பஞ்ச காலத்தின்போது, ஜீவிக்க முடிந்ததற்கான காரணங்களில் ஒன்று, அவர்கள் ஏழு வருடங்கள் விதைக்கவோ (அ) நடவோ இல்லை என்பதை அறிந்து கொள்வது முக்கியமானதாகும். ஒருவேளை ஜனங்கள் விதைத்திருந்திருப்பார்களானால், அவர்களால் தொடர்ந்து ஜீவித்திருந்திருக்க முடியாது. பஞ்சம் கொடியதாகிக் கொண்டிருந்தபோது, எகிப்தியர்களுடைய இருதயங்களைத் திகில் ஆட்கொண்டிருக்க வேண்டும் என்பதில் எனக்கு நிச்சயமே. அறுவடைக்காக அவர்கள் தானியங்களை நட விரும்புவது இயல்பே. யோசேப்பிற்குக் கீழ்ப்பட்டிருப்பதன் மூலமாக மாத்திரமே அவர்களால் தொடர்ந்து ஜீவிக்க முடியும். "தேசத்தில் இப்பொழுது இரண்டு வருஷமாகப் பஞ்சம் உண்டாயிருக்கிறது; இன்னும் ஐந்து வருஷம் உழவும் அறுப்பும் இல்லாமல் பஞ்சம் இருக்கும்" (ஆதியாகமம் 45:6) என்று நாம் வாசிக்கின்றோம். ஏழு வருட பஞ்ச காலத்தின் முடிவில் அவர்கள் அடுத்து விதைத்ததைக் குறித்து, "பின்னும் யோசேப்பு ஜனங்களை நோக்கி: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலங்களையும் பார்வோனுக்காக வாங்கிக்கொண்டேன்; இதோ, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற விதைத் தானியம், இதை நிலத்தில் விதையுங்கள்" (ஆதியாகமம் 47:23) என்று நாம் வாசிக்கின்றோம். அப்போது அவர்கள் தங்கள் அறுவடையில் ஐந்தில் ஒரு பங்கை பார்வோனுக்கு, அதாவது தேவனுக்கு (அ) பொது நலனுக்குக் கொடுக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

"விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரயேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்" (எபிரெயர் 11:22). இது யோசேப்பின் சார்பிலான முக்கியத்துவமுள்ள/ அர்த்தம் நிறைந்த செய்கையாகும். யோசேப்பால் எகிப்திலேயே மகா நினைவு தூண்களுடைய கல்லறை ஒன்றைச் சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அவரது பெயர் மிகவும் பிரஸ்தாபம் பெற்றிருந்தது மற்றும் அந்தத் தேசத்தாரும் அவருக்குக் கடமைப்பட்டிருந்தனர். எனினும் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபிற்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தத்தை யோசேப்பு ஒருபோதும் மறந்து போகாதவராகக் காணப்பட்டார். என்ன நடந்தாலும், அவர் எகிப்தில் இளைப்பாறிக்கொண்டிருக்கப் போவதில்லை.

ஒரு காலத்தில் இழிவானவர்களாகவும், வெறுக்கத்தக்கவர்களாகவும் காணப்பட்டவர்கள், அருமையான மற்றும் அன்பான/அக்கறையான ஜனங்களாக மாறிவிடலாம் என்பதை யோசேப்பின் கதை நிரூபிக்கின்றதாய் இருக்கின்றது. ஒரு மனுஷன் தான் மனம்திரும்பவும், சீர்ப்பொருந்தவும் நினைக்கும்போது எப்படியாக இருப்பானோ அப்படிப்பட்ட நிலையோடு, அவனது தற்போதைய நிலை குறுக்கிடக்கூடாது." நான் (சரியான தீர்மானங்களை எடுத்திருந்திருப்பேனானால்) இப்படியாக இருந்திருப்பேனே" எனும் வார்த்தைகளே நாவு (அ) பேனா வெளிக்கொணர்ந்த துயரம் நிறைந்த வார்த்தைகளாகும் என்று ஒரு கவிஞன் கூறியுள்ளார். மனிதர்கள் இப்பொழுது எப்படி இருக்கின்றார்கள் என்பதும், பிற்காலத்தில் எப்படியாக இருக்கப்போகின்றார்கள் என்பதும் வேறுபட்ட காரியங்களாகும். அனைத்துக் காரியங்களும் சரியான தேர்ந்தெடுத்தல்களையும், சரியான தீர்மானங்களையுமே சார்ந்துள்ளது. தவறான தேர்ந்தெடுத்தல்களையும் மற்றும் தவறான தீர்மானங்களையும் எடுத்தவர்கள், தாங்கள் ஒருவேளை வேறு மாதிரியான தீர்மானங்களை எடுத்திருந்திருப்பார்களானால் நலமாய்க் காணப்பட்டிருந்திருக்குமே என்று நொறுங்கின இருதயங்களுடன் திரும்பிப் பார்ப்பதுமுண்டு. "இப்படியாக இருந்திருப்போமே" என்ற (வருந்துகிற) கிறிஸ்தவர்களாக நாம் இருக்க விரும்பவில்லை.

## "பென்யமீனைக்குறித்து மீண்டும் பார்க்கலாம்"

சிமியோனைக் காட்டிலும், நாம் உண்மையில் பென்யமீன் மீதே அதிக கவனம் செலுத்துகின்றோம். பென்யமீனே, கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சகோதரனாகக் காணப்படுகின்றார். பென்யமீன் மீதும், மாம்சீக இஸ்ரயேலர்கள் அனைவரின் மீதும் இவ்வளவு பெரும் துயரம் கொண்டுவரத்தக்கதாக ஏன் நிஜமான யோசேப்பு, தமது வெள்ளிப்பாத்திரத்தைப் பென்யமீனுடைய சாக்கில் வைக்கின்றார்? யோசேப்பு தனது சகோதரனாகிய பென்யமீனைக் கண்டபோது, அவர்பால் யோசேப்பின் ஆத்துமா பொங்கினது என்பதும், அழத்தக்கதாக அவர் அறையைவிட்டு வெளியேற வேண்டியிருந்தது என்பதும் நமக்கு நினைவில் இருக்கின்றது (ஆதியாகமம் 43:30). யோசேப்பு தனது சகோதரனாகிய பென்யமீனுக்கு ஐந்து மடங்கு பங்கு கொடுத்தார்! யோசேப்பு பென்யமீனிடத்தில் மிகமிகப் பிரியமாய் இருந்தார். பிற்பாடு பென்யமீனுடைய சாக்கில் தனது வெள்ளிப்பாத்திரத்தை யோசேப்பு வைத்துவிட்டு, பென்யமீனைக் கள்வனைப்போன்று காணச் செய்துவிடுகின்றார். எதுவும் பொருந்தாதது போன்று தோன்றுகின்றது. பென்யமீன் சொல்லர்த்தமாகவே யோசேப்பினுடைய அடிமையாகுவதற்கான எந்த அபாயத்திலும், உண்மையில் காணப்படவில்லை, அப்படித்தானே? தான் மிகவும் நேசித்த சகோதரனுக்கு எந்தத் தீங்கும் வருவதற்கு யோசேப்பு நிச்சயமாய் அனுமதிக்க மாட்டார். தனது தந்தையாகிய யாக்கோபிடமிருந்து, தனது சகோதரர்கள் பென்யமீனை மிகவும் சிரமப்பட்டே கொண்டு வந்திருக்கின்றார்கள் என்பதையும் யோசேப்பு அறிவார். தனது தந்தைக்கு இன்னும் வேதனை உண்டாக்குகின்றதான எதையும், நிச்சயமாய் யோசேப்பு செய்யப்போகிறதில்லை. தனது சகோதரர்களைப் பரீட்சித்துப் பார்க்கவே யோசேப்பு இந்த வெள்ளிப்பாத்திரத்தைப் பென்யமீனுடைய சாக்கில் வைத்தார். பென்யமீன் மீது தீங்கு வரப்போவதுபோன்று நிலைமை காணப்பட்டால், அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?



***மன்னிக்கிறவராகிய இயேசு***

யோசேப்பை அடிமையாக விற்றுப்போடுவதற்கு ஆலோசனை தெரிவித்த அவரது சொந்த சகோதரனாகிய யூதா, அன்பும், அக்கறையுமுள்ள மனிதனாக மாறியிருப்பதை யோசேப்பு கண்டபோது, அவர் மிகுந்த மகிழ்ச்சிக்குள்ளானார். பென்யமீன் இல்லாமல் தாங்கள் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதை உணர்ந்த யூதா, தன் தகப்பனாகிய யாக்கோபிற்காக பயம்/கலக்கம் அடைந்தார். அவரது குமாரனாகிய யோசேப்பை அவர்கள் அவரிடமிருந்து ஏற்கெனவே பறித்துவிட்டனர். அவர்களால் பென்யமீன் இல்லாமல் திரும்பிச் செல்ல முடியாது, ஆகையால் பென்யமீனுக்குப் பதிலாக, யூதா தன்னைக் கையளிக்கின்றார். இக்கட்டத்தில் இதற்குமேல் ஒரு கணம்கூட யோசேப்பால் தன்னை, தன்னுடைய சகோதரர்களிடத்தில் மறைத்துக்கொள்ள முடியவில்லை. எகிப்தியர்கள் அனைவரையும் அறையிலிருந்து வெளியேற கட்டளையிட்டு, யோசேப்பு மிகவும் சத்தமிட்டு அழுதார்; எகிப்தியர்கள் அனைவரும் அவர் அழுவதைக் கேட்குமளவுக்கு, அவர் மிகவும் சத்தமாய் அழுதார்.

இதுவும் கிறிஸ்துவுக்கு நிழலே. தமது மாம்சீக சகோதரனும், இஸ்ரயேலின் முன்னணி கோத்திரமுமாகிய யூதா, செய்த தவறுக்கான மனவுளைச்சலை வார்த்தையினால் வெளிப்படுத்துவதற்கு மாத்திரமல்லாமல், தனது சகோதரனாகிய பென்யமீனைக் காப்பாற்றத்தக்கதாக, அடிமையாகப் பாடுபடுவதற்குரிய விருப்பத்தினை வெளிப்படுத்துவதற்கும், நிஜமான யோசேப்பு காத்துக்கொண்டிருக்கின்றார். --3072--

அத்தருணத்திலேயே கிறிஸ்து தம்மை, தம்முடைய சகோதரர் அனைவருக்கும் மற்றும் உலகத்துக்கும் வெளிப்படுத்திடுவார். இக்கட்டம் வருவது வரையிலும் யோசேப்பு அவர்களிடத்தில் கொஞ்சம் கடினமாகவே நடந்துகொண்டார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். யோசேப்பு அவர்களைத் தொடர்ந்து அழுத்தம் நிறைந்த மற்றும் கலக்கம் நிறைந்த சூழ்நிலைகளுக்குள்ளாக அனுமதித்தார், எனினும் அனைத்திலும் அவர் அவர்களுக்கு மிகுந்த உபகாரியாகவே காணப்பட்டார். அவருடைய தாராளத்தினால், மாத்திரமே அவர்கள் ஜீவிப்பதற்கான ஆகாரங்களை/ஏற்பாடுகளைப் பெற்றவர்களாய் இருந்தார்கள்.

இவைகளெல்லாம் எப்படி இனிவரும் நாட்களில் சம்பவிக்கும் என்பது பற்றி நமக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. அர்மகெதோன் உச்சக்கட்டம் அடைகையில் மற்றும் கிறிஸ்தவ மண்டலமான தேசங்கள் எருசலேமை எதிர்பாராத நேரத்தில் தாக்கப் போகையில், அப்போது இஸ்ரயேல் குறித்ததான சத்தியங்கள் பென்யமீனுடைய (திரள் கூட்டத்தாருடைய) சாக்கிலிருந்து வெளியே வருவதற்கு வாய்ப்புண்டு. இஸ்ரயேல் மற்றும் எருசலேமிற்கு எதிரான தங்களுடைய சிலுவைப்போரை, திரள் கூட்டத்தினர் கண்டிப்பதினிமித்தமாகப் பெயர்ச்சபைகள், திரள் கூட்டத்தினருக்கு எதிராக எழும்புவார்கள். இக்கட்டத்தின்போது, மாம்சீக இஸ்ரயேலர்கள் மத்தியிலுள்ள உண்மையுள்ளவர்களாகிய சிலர், திரள் கூட்டத்தைக் காப்பாற்றத்தக்கதாகப் பேசுவார்கள். இது திரள் கூட்டத்தினரைக் காப்பாற்றப் போகிறதில்லை, ஏனெனில், திரள் கூட்டத்தினர் இறுதியில் ஜெயங்கொண்டு, தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கத்தக்கதாக, "மகா உபத்திரவத்தின்" வழியாய் வரவேண்டும்.

மாம்சீக இஸ்ரயேலர்களிலுள்ள உண்மையுள்ளவர்களை அடையாளப்படுத்துகின்றதான "யூதா", திரள் கூட்டத்தாரை அடையாளப்படுத்தும் பென்யமீனுக்குப் பதிலாக தன்னைக் கையளிப்பது வரையிலும், கிறிஸ்து தம்மை மாம்சீக இஸ்ரயேலர்களுக்கும், உலகத்திற்கும் வெளிப்படுத்துவதில்லை என்பதே இப்பாடத்தினுடைய ஒட்டுமொத்தக் கருத்தாகும். அத்தருணத்திலேயே கிறிஸ்து, "நான் உங்கள் சகோதரனாகிய யோசேப்பு" என்று கூறுவார்.

இறுதியில் அருமையான சகோதர சகோதரிகளே நாம் இன்று ஏன் இங்கிருக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய சத்தியத்திற்கு மாத்திரமே நாம் ஜீவிக்க வேண்டும் மற்றும் அதற்காக மாத்திரமே நாம் மரிக்கவும் வேண்டும்.

ஆமென்!

## என் ஆத்துமாவே, காலம் குறைவாய் உள்ளது!

வழியில் நடக்காமல், காலங்கடத்திக்கொண்டிருப்பதற்குக் காலமில்லை,
சுகபோகமாய் இருப்பதற்குக் காலமில்லை, விளையாடித் திரிவதற்குக் காலமில்லை,
உலகப்பிரகாரமான சிநேகங்களுக்கோ (அ) சந்தோஷங்களுக்கோ காலமில்லை,
உலகப்பிரகாரமான பாரங்களுக்கோ (அ) வேடிக்கைகளுக்கோ காலமில்லை--
என் ஆத்துமாவே காலம் குறைவாய் உள்ளது!

முறுமுறுப்பதற்கோ (அ) குறை கூறிடுவதற்கோ காலமில்லை,
இருதயத்தின் வலிகளுக்குச் செவிசாய்த்திடுவதற்குக் காலமில்லை,
கண்ணீர் விடுவதற்கோ (அ) துக்க கீதம் இசைப்பதற்கோ காலமில்லை,
இன்னும் எவ்வளவு தூரம்? எவ்வளவு காலம்? என்று
கேட்பதற்குக் காலமில்லை--என் ஆத்துமாவே
காலம் குறைவாய் உள்ளது!

ஆ, ஆம் காலம் குறைவுதான்--எனினும் போதுமான நேரமுள்ளது
மிகச் செங்குத்தும், கரடுமுரடுமான உந்தன் வழியில் ஓடிடுவதற்கே.
"இரவு" வருவதற்கு முன்பு முதிர்ந்திருக்கும் வயல்களை அறுத்திடுவதற்கு
மாத்திரமே காலம் உள்ளது--இதற்கு மாத்திரமே, என் ஆத்துமாவே,
இதற்கு மாத்திரமே காலம் உள்ளது!

உந்தன் இருதயத்தைத் தூய்மைபடுத்திடுவதற்கு மாத்திரமே காலம் உள்ளது,
உந்தன் "அழைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு" மாத்திரமே காலம் உள்ளது,
கிறிஸ்துவுடன் என்றென்றும் ஆளுகை செய்திடத்தக்கதாய்க்
"கதவு" வழியாய்ப் பிரவேசித்திடுவதற்கு மாத்திரமே காலம் உள்ளது--
இதற்கு மாத்திரமே, என் ஆத்துமாவே,
இதற்கு மாத்திரமே காலம் உள்ளது!

- சகோதரி ஜெர்ட்ரூட் W. சைபெர்ட்

---

# கிறிஸ்துவோடு

வாழ்வின் ஆனந்தங்கள், அச்சுறுத்தல்களினின்று சற்றே விலகி கிறிஸ்துவோடு
அவர் முகத்தைப்பார்த்திட இன்று நீயும் நானும் அமைதி காத்து நிற்கின்றோமா?
ஒரு கணமேனும் அவர் முகத்தின் கிருபைதனை பார்த்திட வேண்டியும்
மிக உண்மையான அந்தச் சொற்ப நேர தோழமையினால் வளர்ந்திட வேண்டியும்
எல்லாம் இழந்து அவர் சித்தம் செய்திட வலிமையும் துணிவும் வேண்டியும்
கிறிஸ்துவோடு அவர் முகத்தைப்பார்த்திட இன்று
நீயும் நானும் அமைதி காத்து நிற்கின்றோமா?

நம் கரம்தனை அவர் கரத்தில் வைத்திடுவதற்கும்
அவர் சித்தத்தை நம் சித்தத்துடன் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கும்
அவர் விருப்பத்தையே நாமும் தரித்திடுவதற்கும்
இன்று நமக்கு நேரம் கிடைத்ததா சிந்தித்திடுவதற்கு?
அவருடனான அத்தகைய தொடர்பு நாள்முழுவதும்
நம்மைத் தாங்கி பாதுகாத்திடும் என்று,
புயல்கள் மற்றும் வெள்ளத்தின் மத்தியில்
நேராய் நடப்பதற்கு நமக்கு உதவும் என்று,
தெரிந்துகொள் - நன்றாய்த் தெரிந்துகொள்.
அந்தரங்க ஜீவிதத்தின் பாவங்களைக் கண்டுபிடித்து
அதன் கறைகளைக் கழுவிடும் என்று,
அவருக்கான நமது அன்பின் எண்ணங்களை
மீண்டும் புதுப்பித்திடும் என்று,
தள்ளாடுகின்ற நடைகளை உறுதிப்படுத்திடும் என்று,
எனக்கும், உனக்குமான அவரது அடிச்சுவட்டை
நாம் காண உதவிடும் என்று,
தெரிந்துகொள் - நன்றாய்த் தெரிந்துகொள்.

- Poems of the Way, p. 95

# கூட்டங்கள்

**(Q476:1) கூட்டங்கள் - Extension work/புதிய வகுப்புகள் உருவாக்கிடும் வேலைக்கான எண்ணிக்கை.**

கேள்வி (1911)-1- சமீபத்தில் வெளிவந்த வாட்ச் டவரின் பத்திரிகையில், ஆறு-கூட்டங்களைக் கொண்டதான வேதாகம புதிய வகுப்புகளை உருவாக்கிடும் வேலையானது எந்த ஒரு பட்டணத்திலும் நடத்தப்படலாம் என்று எழுதப்பட்டிருந்தது. இரண்டாம் கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேரே ஆர்வமுடையவர்களாக வருகிறார்களெனில், ஆறு கூட்டங்களையும் ஒரே இடத்தில் நடத்தப்பெறுவது நலமானதாக இருக்குமா?

பதில் - இல்லை என்றே நான் பதிலளிக்கின்றேன்; ஒருவேளை ஜனங்கள் யாரும் வரவில்லையெனில், நான் கூட்டங்களைத் தொடர்வதில்லை. நீங்கள் மாத்திரம்தான் கூட்டத்தில் கலந்துகொள்பவராகக் காணப்படுகின்றீர்களானால், கூட்டத்தினை நடத்தாதீர்கள். எத்தனை பேர்கள் கலந்துகொண்டால் கூட்டத்தை நடத்தலாம் என்பதை நீங்கள் முடிவுசெய்ய வேண்டும்.

**(Q477:1) கூட்டங்கள் - புரூக்கிளினிலுள்ள மூப்பர்கள் கூட்டங்களை நடத்துவதற்கென உதவிக்காரர்களை நியமித்தல் தொடர்பாக.**

கேள்வி (1911)-1- புரூக்கிளினிலுள்ள சபையிலுள்ள மூப்பர்கள், சபையாருடைய தேர்ந்தெடுத்தல் முதலானவைகள் இல்லாமலேயே வகுப்புகளை நடத்துவதற்கென்று உதவிக்காரர்களை நியமிப்பதுண்டா?

பதில் - அது மேய்ப்பருக்கான வேலையாகக் கருதப்படுகின்றது மற்றும் அது மூப்பர்களுக்கான வேலையல்ல. புரூக்கிளினிலுள்ள சபையாருக்கான மூப்பர்களில் ஒருவர் கூட்டங்களைப் பார்த்துக்கொள்வதற்குரிய பொறுப்பினைப் பெற்றவராய் இருக்கின்றார் மற்றும் இது விஷயத்தில் அவர் மேய்ப்பருக்கு உதவியாளராகக் காணப்படுகின்றார் மற்றும் மேய்ப்பரது ஒப்புதலின்பேரில் அவ்வப்போது இந்த ஒரு வேலைக்கு என்றும், அந்த ஒரு வேலைக்கு என்றும் உதவிக்காரர் ஒருவர் தெரிந்துகொள்ளப்படுகின்றார். இதுவே மேய்ப்பரைத் தேர்ந்தெடுப்பதற்கான நோக்கமாகக் கருதப்படுகின்றது, அதாவது சபையாருடைய தேவைகளை மேற்பார்வையிட்டு, தேவைக்கேற்ப இங்குமங்குமாய்த் தேவையைப் பூர்த்திச் செய்வதாகும். ஆனாலும் இப்படித் தெரிந்தெடுக்கப்படுபவர்கள், சபையாரினால் மூப்பர் தெரிந்தெடுக்கப்படுவது போன்று, ஓர் ஊழியத்திற்கென்று நிரந்தரமாய் நியமிக்கப்படுவார்கள் என்பதாக இல்லை. அது ஒரு தேவையைப் பூர்த்திச் செய்வதற்குரிய தற்காலிகமான காரியம் மாத்திரமே மற்றும் உதவிக்காரர் பரீட்சித்துப் பார்க்கப்படத்தக்கதாக ஒரு வாய்ப்பளிக்கும் காரியம் மாத்திரமேயாகும்.

**(Q478:1) கூட்டங்கள் - போதகர்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கப்படுதல்.**

கேள்வி (1913)-1- குறிப்பிட்ட ஆராய்ச்சிகளுக்கென்று தனி மனிதச் சிறப்பின் அடிப்படையில் இல்லாமல், மாறாக அத்தகைய ஆராய்ச்சிக்கென்று திறமையுடையவர் என்ற அடிப்படையில் ஒரு போதகருக்கான விருப்பத்தினை ஒருவர் பெற்றிருப்பது தவறான இருதய நிலைமையாகுமா?

பதில் - அது தவறான இருதய நிலைமையென்று நான் கருதுவதில்லை. போதகரென விசேஷித்த தாலந்து உடையவர்களாகச் சிலர் காணப்படுவார்கள். அதிகளவிலான அறிவுரைகளைக் கொடுக்கும் ஒருவரை ஒருவர் விரும்பிடலாம். இதில் தவறான இருதய நிலைமை காணப்படுவதாக எனக்குத் தெரியவில்லை; ஆனாலும் சபையார் தங்களது தேர்ந்தெடுத்தல்களில் விசேஷித்தத் தகுதியுடையவர்களையும், போதகசமர்த்தனாக இருப்பவர்களையும் சகோதரர்கள் மத்தியில் கண்டுபிடிக்க நாடிட வேண்டும் என்று நான் சொல்லுவேன்; ஏனெனில் இது அப்போஸ்தலர் கூறுவதுபோல மூப்பருக்கான தகுதிகளில் ஓர் அம்சமாய்க் காணப்படுகின்றது மற்றும் போதகசமர்த்தனாய் இல்லாதவர் தேர்ந்தெடுக்கப்படவே கூடாது. எனினும் வித்தியாசம் வேண்டும் என்கிற கருத்துத் தொடர்ந்து நிலவும்; ஆகையால் இந்தப் பல்வேறு வழிநடத்துபவர்களை மாறி மாறி வழங்கிடுவதே, நண்பர்களுக்கான எங்களது ஆலோசனையாகவும், புரூக்கிளினின் எங்களது நடைமுறையாகவும் இருக்கின்றது; உதாரணத்திற்கு ஒரு வகுப்பைக் குறிப்பிட்ட காலம் நடத்தினாலும்

ஒருவர், இன்னொரு வகுப்பிற்கு மாற்றப்படலாம் மற்றும் பின்னர் இன்னொரு வகுப்பிற்கு மாற்றப்படலாம்; இப்படியாகச் சுற்றிச் சுற்றி மாற்றப்படும்போது அனைத்து வகுப்புகளுக்கும் சிறந்த மற்றும் சாதாரணமான/அனைத்து வகையான ஊழியங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

**(Q472:2) கூட்டங்கள் - சந்திக்க வந்திருக்கும் சகோதரர் சபையாருக்குக் கூட்டத்தை நடத்துதல்.**

கேள்வி (1910)-2- சந்திக்க வந்திருக்கும் சகோதரர் ஒருவர், அவர் சந்திக்க வந்திருக்கையில் சபையாருக்குக் கூட்டத்தை நடத்தும்படிக்குக் கேட்டுக்கொள்ளப்படலாமா?

பதில் - சொசைட்டியால் பயண ஊழியர்களென அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்லது சபையாருக்கு விசேஷமாய் அறிமுகம்பண்ணப்பட்டவர்கள் தவிர மற்றபடி சந்திக்க வந்திருக்கும் சகோதரனிடம் இப்படிக் கேட்பது என்பது நல்லதாய் இருக்காது என்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது; ஏனெனில் அது ஒரு வழக்கமாக உருவாகிவிடும். மேலும் இரண்டாவதாகக் கூட்டத்தை யார் நடத்துவது என்பதைத் தீர்மானிக்கும் ஸ்தானத்தில் மூப்பர் வைக்கப்படவில்லை. மாறாக அவரும்கூடக் கூட்டத்தை நடத்தும்படிக்கு நியமிக்கவே பட்டிருக்கின்றார்; ஒருவேளை இத்தகைய ஒரு சகோதரனைச் சபையார் விரும்புவார்கள் என்று மூப்பர் நிச்சயமாய் உணருவாரானால், பின் அவர் தனி மனிதச் சிறப்புகள் யாவற்றையும் தாழ்த்தி, அத்தகைய ஒரு சகோதரன் அத்தருணத்தில் பேசுவதைக் கேட்பதற்குச் சபையார் விரும்புகின்றார்களா இல்லையா என்று கேட்டுக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வது என்பது அக்காரியம் தொடர்பான பொறுப்பினைச் சபையாரின் கரங்களில் வைப்பதாகவும், உறவுகள் முறிபடுவது ஏதேனும் இருக்குமாயின் அதிலிருந்து விடுதலையடைவதாகவும் மற்றும் சபையாரைச் சில சமயங்களில் பிரச்சனைக்குள்ளாக்காமல் தப்புவிக்கச் செய்கிறதாகவும் இருக்குமென்று நான் கருதுகின்றேன். சந்திக்க வருகைத் தந்திருக்கும் எந்தவொரு சகோதரனுக்கும் முன்னுரிமை எப்போதும் கொடுக்கப்படுகிற காரியமானது வழக்கமாய்க் காணப்படுமானால் அது அனுகூலமற்றதாகவே இருக்கும்; ஏனெனில் வருகைதந்திருக்கும் அந்தச் சகோதரனைச் சபையார் தேர்ந்தெடுத்திருக்கவில்லை. மாறாக தேர்ந்தெடுக்கப்பட்டவரையே தேர்ந்தெடுத்திருந்தார்கள்; ஆகையால் சபையாரால், வழிநடத்துபவருக்கு ஏதேனும் விசேஷித்த சுயாதீனம் கொடுத்திருந்தாலொழிய, மற்றப்படி தங்களுக்கு யார் கூட்டத்தை நடத்திட வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் ஒருவர் நடத்திடலாமா அல்லது இல்லையா என்பதை அச்சபையாரே கூறவேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

**(Q472:1) கூட்டங்கள் - சகோதரர்கள் இல்லாதபோது நடத்துவதற்கான வழிமுறை.**

கேள்வி (1910)-1- ஒரு சிறிய சபையார் மத்தியில் தலைமைத்தாங்க சகோதரர் யாரும் இல்லையெனில், பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளில் அல்லது ஆசரிப்புக்கூடார ஆராய்ச்சி வகுப்புகளில் போதிப்பதற்காகக் கையாளப்பட வேண்டிய வழிமுறை என்ன? அதாவது சபையாருக்கு வழிநடத்தும் சகோதரர் யாருமில்லாத ஒரு சந்தர்ப்பத்தில் ஆகும்.

பதில் - சபையாருக்கு வழிநடத்தும் சகோதரன் யாருமில்லை என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

கேள்வி - சகோதரர்கள் இல்லாமல் சகோதரிகள் மாத்திரமே காணப்படுகின்ற வகுப்பாய் இருக்கின்றதானால், என்ன செய்ய வேண்டும்?

பதில் - சகோதரன் இல்லாமல் அதைச் செய்ய வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். சகோதரர் அவர்களே இம்மாதிரியான கேள்வி ஒன்றிற்கு ஆறாம் தொகுதியில் நான் ஏற்கெனவே யோசனையாகத் தெரிவித்திருப்பது என்னவெனில், அவர்கள் விரும்புவார்களானால் தொகுதியின் ஆசிரியர் அத்தொகுதியினால் அங்கு அவர்களோடுகூடக் காணப்படுவதாகக் கருதிக்கொள்ளப்படலாம்.

கேள்வி-2- ஒரு சகோதரி கேள்விக் கேட்பது தகுதியானதா?

பதில் - நிச்சயமாக. சகோதரிகள் தொடர்பான ஒரே கருத்து என்னவெனில்: இது ஒரு சகோதரி, சகோதரிகளுக்குக் கற்பிக்கக்கூடாது என்று சொல்லுகிறதில்லை, மாறாக பவுலோ: "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை" என்று கூறுகின்றார். இது அவள் குழந்தைகளுக்கும், சகோதரிகளுக்கும்

போதிக்கக்கூடாது என்று சொல்லுகிறதில்லை, மாறாக கிறிஸ்துவின் சபையில் புருஷர்களும், ஸ்திரீகளும் காணப்படுகையில் அவள் போதிப்பது என்பது தகுதியற்றதாகவும், தலையாய் இருக்கிற கிறிஸ்து புருஷனால் அடையாளப்படுத்தப்படுகிறதும் மற்றும் சரீரமாகிய சபை ஸ்திரீயானவளில் அடையாளப்படுத்தப்படுகிறதுமான காட்சிக்கும், நிழலுக்கும் இசைவற்றதாய் இருக்கும் என்றும், ஸ்திரீயானவள் போதிப்பது என்பது சபையானவள் கிறிஸ்துவுக்குப் போதிக்கிறதைக் குறிப்பதாக இருக்கும் என்பதினால் தகுதியற்றதாய் இருக்கும் என்றும் அப்போஸ்தலன் கூறுகின்றார். ஆகையால் இதைத் தெய்வீகச் சித்தம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார் மற்றும் நாம் அதைக் கடைப்பிடிக்கின்றோம். ஆனால் ஒரு சகோதரி கேள்விக் கேட்டுக் கூட்டத்தைத் துவக்கி, ஜெபம் ஏறெடுப்பதும் நிச்சயமாகவே முற்றிலும் சரியானவைகளாக இருக்கின்றன.

**(Q477:2) உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா?**

கேள்வி (1912)-2- மிகவும் திறமிக்கவர்களாய்க் காணப்படுகையில், உதவிக்காரர்களை மூப்பர்களுக்குப் பதிலாகக் கூட்டங்களை நடத்தும்படிக்குக் கேட்டுக்கொள்வது சரியான காரியமாக இருக்குமா?

பதில் - எதிர்மாறாகவே எங்களது கருத்துக் காணப்படுகின்றது. அதென்னவெனில் மூப்பர்கள் என்பவர்கள் வழிநடத்துனர்களாய் இருக்கும்படிக்கு விசேஷமாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்பதும், உதவிக்காரர்கள் என்பவர்கள் தேவைகளைப் பூர்த்திச் செய்யத்தக்கதாக மாத்திரமே கூட்டங்களை நடத்திடுவதற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்பதும் எங்களது கருத்தாய் இருக்கின்றது. இது வேதவாக்கியங்களின் மாதிரியைப் பின்பற்றுவதாகும். உதவிக்காரருக்குரிய ஊழியத்தில், ஊழியம் புரியும் ஓர் உதவிக்காரன் தனக்கென நல்ல நிலையை அடைவான் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். அதாவது ஒருவேளை சபையில் temporal/ஆவிக்குரியதல்லாத காரியங்களில் அவர் உண்மையுள்ளவராய் இருந்தாரானால், சபைக்கடுத்த நலன்களைப் பார்த்துக்கொள்வதில் உண்மையாகவும், நேர்மையாகவும் காணப்படுவாரானால், அவர் இப்படியாகத் தன்னைப் பொருத்தமான நபர் என்று வெளிப்படுத்திச் சபையாருடைய நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளும் நல்ல நிலையை அடைவார் மற்றும் சபையாரும் பிற்பாடு அவரை மூப்பராக நியமிப்பதற்கான கண்ணோட்டத்தில் அவரைக் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கிடையில் மூப்பர் கலந்துகொள்ளமுடியாத தருணங்களும் உண்டாகும் மற்றும் இது உதவிக்காரர்களைப் பரீட்சித்துப்பார்ப்பதற்கான நல்வாய்ப்பாய் அமைகின்றது. இது அனைத்துச் சபைகளிலும் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று நான் கருதுகின்றேன். மூப்பர்கள் என்பவர்கள் சபையில் மூத்த சகோதரர்களாக இருக்கின்றனர்; வயதில் கண்டிப்பாய் அல்ல, மாறாக விசேஷமாய் ஆவிக்குரியவற்றிலே ஆகும். அவர்கள் எவ்வளவுதான் வயதானவர்களாக அல்லது இளையவர்களாக இருந்தாலும் சரி, குணலட்சணத்தில் ஆவிக்குரிய முதிர்ச்சி என்பதே அவர்களது தகுதியாய் இருக்கின்றது. மூப்பர்களுடைய வேலையின் ஒருபாகம் என்னவெனில் சபையாருடைய நலனுக்கடுத்தவைகளை அவர்கள் பார்த்துக்கொள்கையில், அவர்கள் உதவிக்காரர்களாக ஊழியம் புரிவதற்குத் தகுதியுடையவர்களாய்க் காணப்படும் இளையச் சகோதரர்களைக் கண்டுபிடிக்கவும், அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் (coach) நாட வேண்டும் மற்றும் அவர்களுக்குத் திறமையிருக்குமானால், அவர்கள் மூப்பராகிடுவதற்கு ஆயத்தமாகத்தக்கதாக முன்னே கொண்டுவர வேண்டும். சில தருணங்களில் யாரோ ஒருவர் சில திறமைகளைப் பெற்றவர்களாய்க் காணப்பட்டு, தங்கள் ஊழியத்தைப் பங்கு போட்டுக் கொள்வார்கள் என்ற பொறாமையான எண்ணங்கள் மூப்பர்களின் சார்பில் காணப்படுவதை நான் பார்த்திருக்கின்றேன். இத்தகைய ஆவியானது ஆண்டவருக்குப் பிரியமற்றதாகவும், அந்த மூப்பருக்கு அனுகூலமற்றதாகவும் காணப்படும்; காரணம் தனக்குத் தீங்கு விளைவிக்காத நிலையில் அவனால் தன்னல நாட்டமுள்ள ஆவியினைப் பெற்றிருக்க முடியாது. தன்னலத்தை நாடுபவனாக இராமல் சபையாருடைய நலனுக்கடுத்தவைகளை நாடுவதே அவனது பொறுப்பாய் இருக்கின்றது. ஊழியம் புரிவதற்குத் திறமையுடைய எச்சகோதரனும் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். வேலையானது செய்யப்படாமல் கைவிடப்படுமோ என்று பயப்படாதீர்கள். கர்த்தருக்கு ஊழியம் செய்யத்தக்கதாக எந்த ஒரு திறமையைப் பெற்றிருக்கும் ஒவ்வொருவனும் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் புரிவானாக; கர்த்தர் மற்றவர்களுக்கானவைகளைப் பார்த்துக்கொள்வார். நம்மைப்பார்க்கிலும் மிகவும் திறமிக்க விதத்தில் ஊழியம் செய்ய முடிகிறவர்கள் யாரையேனும் நாம் காண்போமானால், தேவனுக்காகச் சிறப்பான விதத்தில் அவர்களால் ஊழியம் புரியப்படுவது குறித்து நாம் சந்தோஷங்கொள்ள வேண்டும். போதுமான வேலை இல்லாமல் போய்விடும் என்ற எந்த அபாயமும் இல்லை. புதிய வகுப்புகளை உருவாக்கும் ஊழியங்களும் மற்றும் நூற்றுக்கணக்கான வேறுவிதங்களிலுள்ள மற்ற ஊழியங்களும்,

வேலையாட்களை அழைத்துக் கொண்டிருக்கின்றது. நாம் தாழ்மையான ஆவியைப் பெற்றிருப்பதற்கு ஏற்ப தேவன் நம்மைப் பயன்படுத்துவார்.

**(Q469:2) கூட்டங்கள் - பயண ஊழியர்களின் கூட்டங்கள், விளம்பரங்கள் முதலானவைகள்.**

கேள்வி (1907)-2- பயண ஊழியர்களின் கூட்டங்கள் தொடர்புடைய விஷயத்தில் உங்களது அறிவுரை என்ன? அறுவடையினுடைய இந்த ஒரு காலப்பகுதியில் அறை வாடகைகளுக்கும், விளம்பரங்களுக்கும் என்று அதிகம் செலவழிப்பது தகுதியான காரியமாய் இருக்குமா? அல்லது ஏற்கெனவே விசுவாசத்தில் காணப்படுபவர்களின் நலனுக்கடுத்த விஷயங்களில் விசேஷமாய் அதிகம் ஊழியம் புரிவது நலமானதாய் இருக்குமா? இந்த விஷயத்தில் பயண ஊழியர்கள் எந்தளவுக்கு நடவடிக்கை எடுக்கலாம்?

பதில் - அருமையான நண்பர்களே கடைசி கேள்விக்கு முதலாவதாகப் பதிலளிக்க விரும்புகின்றேன்; அதாவது பயண ஊழியர்கள் இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுக்க முற்படவே கூடாது என்று பதிலளிக்கின்றேன். இது பயண ஊழியர்களின் காரியமல்ல. இவ்விஷயம் குறித்த கிட்டத்தட்ட அதிகமான நடவடிக்கைகளை, நாம் வாட்ச் டவர் அலுவலகத்திலிருந்து செய்துவருகின்றோம். அங்கு முன்வைக்கப்பட்டுள்ளதான கொள்கைகளின் பொதுவான காரியங்களை நடைமுறைப்படுத்த வேண்டியவர்களாய்ப் பயண ஊழியர்கள் இருக்கின்றனர் மற்றும் பயண ஊழியர்களென அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள காரியமானது, அவர்கள் அப்படிச் செய்வதற்குப் பிரியப்படுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இது அடிமைத்தனத்தைக் குறிப்பதாகாது, மாறாக அந்த நிபந்தனைகளின் கீழ் பயண ஊழியர்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அவர்கள் திவ்விய மேற்பார்வையின் கீழ் அங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதான விதிமுறைகளை அடையாளங்கண்டுகொண்டுள்ளதையும் மற்றும் அதில் திருப்திகொண்டுள்ளதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் இது விஷயத்தில் பயண ஊழியர்களுக்கு எதுவும் செய்வதற்கில்லை என்று நான் கூறுகின்றேன். பயண ஊழியர்கள் இப்படிச் செய்வதாக நான் கேள்விப்படவில்லை; ஆனால் ஒருவேளை யாரேனும் இப்படியாகச் செய்திருக்கின்றார்களானால், கவனக்குறைவின் காரணமாகவே இப்படிச் செய்திருப்பார்கள் என்று நான் அனுமானிக்கின்றேன்.

எந்தளவுக்கு விளம்பரங்கள் பண்ணப்படுவது சரியாய் இருக்கும் என்பது தொடர்பாக நான் கூறிடுவது என்னவெனில்: இவ்விஷயத்தை நண்பர்களின் கரங்களிலேயே நாம் விட்டுவிட விரும்புகின்றோம். பயண ஊழியர்களுடைய வருகைகளின் விஷயத்தில் உங்களது விருப்பத்திற்கேற்ப அதிகமாய் விளம்பரங்கள் அல்லது கொஞ்சமாய் விளம்பரங்கள் கொடுங்கள். அதை உங்களது உக்கிராணத்துவத்தின் ஒரு பாகமாகக் கருதிக்கொள்ளுங்கள்; அதை நீங்கள் செய்ய வேண்டும். சொசைட்டியானது மற்றொரு பாகத்தைச் செய்கின்றது, அதாவது பயண ஊழியர்களை அனுப்பிவைத்தல், அவரது செலவுகள் முதலானவைகளைப் பார்த்தல் ஆகியவற்றைச் செய்கின்றது; மற்றும் பயண ஊழியர் மற்றொரு பாகத்தைச் செய்கின்றார். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பாகத்தினைச் செய்வார்களானால், அனைத்துமே நேர்த்தியாய்ச் செய்யப்படும். ஆகையால் இது ஒவ்வொரு சாராரும், கர்த்தருடைய சித்தம் எதுவென்று தான் பகுத்தறிந்து நம்புகின்றார்களோ, அதைச் செய்திடுவதற்குரிய பொறுப்பினை ஒவ்வொரு சாராரிடத்திலேயே விட்டுவிடுகின்றதாய் இருக்கின்றது.

அதிகமான பொதுக்கூட்டங்கள் காணப்பட வேண்டாம் என்பது எங்களுடைய அறிவுரையாய் இருக்கின்றது; ஏனெனில் பயண ஊழியர்களுடைய இத்தகைய வருகைக்கான விசேஷித்த நோக்கம், விசுவாச வீட்டாருக்கு ஊழியம் புரிவதேயாகும் மற்றும் பொது ஜனங்கள் மத்தியிலான ஊழியங்களானது, விசுவாச வீட்டாருக்கு மிகவும் பிரயோஜனமாய் எப்போதும் காணப்படுகிறதில்லை. ஆகையால் பொது மற்றும் தனிப்பட்ட கூட்டங்கள் இரண்டுமே காணப்படுகையில், (public meetings) பொதுக்கூட்டங்களானது அனைத்து நேரத்தையும் எடுத்துக்கொள்ளாதபடிக்கும், விசுவாச வீட்டாருடைய விசேஷித்த நலனுக்கடுத்த காரியங்களுக்கெனப் பாதி நேரம் அல்லது பாதிக்கும் மேலான நேரமாகிலும் கொடுக்கப்படும்படிக்கு நாம் எப்போதும் வலியுறுத்துகின்றோம்.

**(Q470:1) கூட்டங்கள் - சிறு எண்ணிக்கையுள்ள வகுப்புத் தொடர்பாக.**

கேள்வி (1909)-1- மூன்று அல்லது நான்கு பேரை எண்ணிக்கையாகக் கொண்டிருக்கும் வகுப்பிற்கு, நீங்கள் பெரோயா ஆராய்ச்சியைப் பரிந்துரைப்பீர்களா அல்லது டாண் ஆராய்ச்சியைப் பரிந்துரைப்பீர்களா?

பதில் - இரண்டையும் பெற்றிருப்பது நலமாயிருக்கும் என்று கருதுகின்றேன். நமக்கு அநேகம் வாய்ப்புகள் காணப்படுகின்றபடியால், ஒன்றோடு நிறுத்திக்கொள்ள வேண்டாம். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் என்பது, அநேகமாகப் பொதுவான கூடுகைகளுக்கு சிறந்ததாகவும், கொஞ்சம் ஒழுங்காயும் காணப்படும் மற்றும் டாண் ஆராய்ச்சி வகுப்புகளை மாலையில் பெற்றிருங்கள்.

இது விஷயத்தில் ஒருவரும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களை மறந்துவிட வேண்டாம் என்று அறிவுரை வழங்குகின்றேன்; ஏனெனில் அவைகள் சபை பெற்றிருக்கும் மிகவும் பிரயோஜனமான கூட்டங்கள் மத்தியில் அடங்குபவைகளாகக் காணப்படுகின்றன. எந்தளவுக்கு அவைகள் அதிகமாய்ச் செய்யப்படுகின்றதோ, அவ்வளவாய்ச் சபையாருடைய ஆவிக்குரிய நிலைமையானது நலமார்ந்து காணப்படுவதை நாம் பொதுவாகப் பார்க்க முடிகின்றது மற்றும் இதன் காரணமாக, முடிந்தமட்டும் ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களை மறவாமல் இருங்கள் மற்றும் பல வருடங்களுக்கு முன்பாக நடந்தவைகளைச் சாட்சியாகப் பகரும் தவற்றினையும் செய்யாதிருங்கள். ஒரு வாரத்திற்கென்று ஒரு தலைப்பைப் பெற்றிருங்கள் மற்றும் முடிந்தமட்டும் அத்தலைப்புத் தொடர்பாகவேயுள்ள சாட்சிகளையும் கொண்டிருங்கள் என்று நாம் யோசனை தெரிவிக்கின்றோம். சில இடங்களில் சபையார் வாராந்தர பிரசங்கங்களை, ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களுக்கான அடிப்படையாக வைத்துக்கொள்கின்றனர் மற்றும் இவைகளின் அடிப்படையில் சாட்சிக்கொடுப்பதற்கு முயற்சிக்கின்றனர் மற்றும் இப்படியாக அப்பாடத்தினை வாரம் முழுவதும் மனதில் பெற்றிருக்கையில், சபையார் அப்பாடத்திற்கு இசைவான சில அனுபவங்களைக் குறித்துக் கவனித்திருப்பார்கள். நியூயார்க்கிலுள்ள சபையில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் கொடுக்கப்படும் தூதை, சபையார் வாராந்தர ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டத்திற்கான பாடப்பொருளாக எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் பிற்பாடு அவர்கள் ஞாயிற்றுக்கிழமையிலும், திங்கட்கிழமையிலும், செவ்வாய்கிழமையிலும் மற்றும் புதன்கிழமையிலும் - நான்கு நாட்களாக தங்களது அனுபவங்களைப் பாடப்பொருளின் அடிப்படையில் கவனிக்கின்றனர். ஒருவேளை தலைப்புப் பொறுமை குறித்தது என்றால், தாங்கள் எந்தளவுக்குப் பொறுமையினை வளர்த்திருக்கின்றனர் என்று கவனித்துக்கொள்வார்கள் மற்றும் பொதுவாகவே அவ்வேளையில் அது தொடர்பான ஏதோ ஓர் அனுபவம் காணப்படுவதையும் காண்பார்கள். புதன்கிழமைக் கூட்டத்திற்குப் பிற்பாடு, அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை வரை அதே எண்ணங்களை மனதில்கொண்டு காணப்பட்டு, இவ்விதமாய் எப்போதும் அதை மனதில் கொண்டவர்களாய் இருக்கின்றனர். இதில் ஓர் அனுகூலம் என்னவெனில், இது நம் அனைவரையும் அப்போது வரையிலான நம் நிலவரம் குறித்து அறியும் நிலைக்குக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்தவ அனுபவம் தொடர்புடைய விஷயத்தில், நீங்கள் நோக்கமின்றிச் சென்று கொண்டிருக்க, அதுவும் நீங்கள் நோக்கமின்றிச் சென்றுகொண்டிருப்பதை அறியாதவர்களாய்க் காணப்பட்டு; இப்படியே ஒருநாள் முழுவதும் வீணாகிபோயிருக்கும் என்பதை நீங்கள் அனைவரும் உங்களது அனுபவங்களில் உணர்ந்திருப்பீர்கள் என்று நான் எண்ணுகின்றேன்; ஆகையால் இந்த அனுபவங்களைக் கவனிப்பதின் மூலம் நாம் தேடுபவைகளை அவற்றில் காணலாம். இப்படியாக உங்கள் மனதிற்கு முன்பாக நீங்கள் எதையும் நிறுத்திக்கொள்ளவில்லையெனில், உங்களுக்கு இத்தகைய அனுபவம் காணப்படாது மற்றும் கர்த்தர் உங்களை எப்படிப் பராமரித்தார் அல்லது உங்களுக்கு என்ன அனுபவங்கள் காணப்பட்டது என்பவற்றை அறியாமல் காணப்படுவீர்கள். இவைகள் மிகவும் பிரயோஜனமாய் இருப்பதை நாம் கண்டுகொண்டோம்.

**(Q471:1) கூட்டங்களுக்கான ஒழுங்கு.**

கேள்வி (1910)-1- ஒரு சபையில் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு கூட்டங்களும், மீதி வாரத்தில் இரண்டு கூட்டங்களும் இருக்க, அதாவது ஏழு நாட்களில் நான்கு கூட்டங்கள் காணப்படுகையில், அக்கூட்டங்களை நடத்திடுவதற்கு என்ன ஒழுங்குமுறையை நீங்கள் பரிந்துரைக்கின்றீர்கள் மற்றும் அவர்களுக்கு என்ன ஆராய்ச்சிகளை, எந்த அளவில் பரிந்துரைக்கின்றீர்கள்?

பதில் - வாரத்தின் நடுப்பகுதி, சாட்சிக்கூட்டத்தினை - துதிப்பதற்கும், கிறிஸ்தவ ஐக்கியத்திற்கும் மற்றும் ஒருவரோடொருவர் நெருங்கிக்கொள்வதற்குமான கூட்டத்தினைப் பெற்றிருப்பதற்கான நல்ல காலப்பகுதியாகக் காணப்படும் என்பது என்னுடைய அறிவுரையாய்க் காணப்படுகின்றது. சாட்சி மாத்திரமல்ல, இக்கூட்டங்களில் அடையப்பெறும் அனுதாபத்துடன்கூடிய இருதயத்தின் ஒன்றிணைதலே நினைவுகூரப்பட வேண்டும். பிற்பாடு நாம் பரிந்துரைத்துள்ளபடி பெரோயா ஆராய்ச்சிகளானது நல்லதாய்க் காணப்படும் என்று எண்ணுகின்றேன். பின்னர்ச்சபையில் காணப்படும் வழிவகையைச் சார்ந்து பொதுப் பிரசங்கத்தினைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது நலமானதா அல்லது இல்லையா என்பது பார்க்கப்படலாம். சில சந்தர்ப்பங்களில் அப்படிப் பெற்றிருப்பதே சரியானதாய்க் காணப்படும் மற்றும் மற்றச் சந்தர்ப்பங்களில் அது மிகவும் ஞானமற்றக் காரியமாய்க்

**--3080--**

காணப்படும் என்று எண்ணுகின்றேன். போதிப்பதற்குத் தகுதி வேண்டும் என்றும், போதகசமர்த்தனாய்க் காணப்படுபவர்கள் மாத்திரமே போதகத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும், போதகசமர்த்தனாய்க் காணப்படாதவர்கள் போதிப்பதற்கு முற்படாமலிருந்து, பெரோயா ஆராய்ச்சி போன்றவற்றில் ஈடுபடுவது நலம் என்றும் நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டுமெனக் கருதுகின்றேன். பெரோயா ஆராய்ச்சி வகுப்பிலும்கூடப் போதிப்பதற்கான திறமை அதிகம் வேண்டியிருக்கின்றது மற்றும் சபையாரின் பதில்களை வெளிக்கொணர்வது எப்படியென்று வழிநடத்துபவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கின்றது. இத்தகையக் கூட்டங்களின் அம்சங்கள் தொடர்பாய்க் குறிப்பாய்த் தெரிவிக்கத்தக்கதாக நான் உள்ளே வந்து, ஆலோசனை வழங்குவது எனக்குத் தகுதியாய் இருக்குமென்று நான் கருதுகிறதில்லை; சாட்சிக்கூட்டம் ஒன்றினை வாரத்திற்கு ஒருமுறை பெற்றிருப்பது நலமாயிருக்குமென்று கருதுகின்றேன். சபையாருடைய மிகுந்த ஆவிக்குரிய பிரயோஜனத்திற்கேதுவான விதத்தில் சில பெரோயா ஆராய்ச்சி வகுப்புகள் காணப்பட்டிருக்கின்றன மற்றும் இது குறித்துத் தெரிவித்திட சபையார் கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் ஒருவேளை தேவைப்படும் பட்சத்தில் தங்களுக்கு மிகவும் சுவாரசியமாகவும், மிகவும் பிரயோஜனமாகவும் எது காணப்படும் என்று அவர்கள் வெவ்வேறு விதங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்; மேலும் மூப்பர்களும், உதவிக்காரர்களும் சபையாரை ஆதிக்கம் செய்யவோ மற்றும் அவர்களை ஆளுவதற்கோ முயற்சிக்காமல் காணப்பட்டு, கர்த்தருடைய ஆவி வழிநடத்துகின்ற விதத்தில் சபையாருக்கு உதவவும், அவர்களை ஆதரிக்கவும் செய்யும்படிக்கு நான் விசேஷமாய் அறிவுரை வழங்குகின்றேன்.

**(Q478:2) கூட்டங்கள் - உதவிக்காரர்கள் கூட்டங்களை நடத்திடலாமா?**

கேள்வி (1914)-2- எங்கள் சபையாரில் பெரும்பான்மையானவர்கள், எங்களது உதவிக்காரர்களில் சிலர் அவ்வப்போது ஜெபக்கூட்டங்களை நடத்துவதற்கு விரும்புகின்றனர்; ஆனால் உதவிக்காரர்கள் கூட்டங்களைத் தலைமைத்தாங்கி நடத்துதல் என்பது வேதவாக்கியங்களுக்குப் புறம்பானது என்றும், வேறுயாருமல்ல, மூப்பர்களே தலைமைத் தாங்கி நடத்திட வேண்டும் என்றும், எங்களது மூப்பர்களில் சிலர் கூறுகின்றனர். அவர்கள் சொல்வது சரிதானா?

பதில் - வேதாகம அதிகாரத்தினிடத்திற்கே திரும்பிச்சென்று பாருங்கள். வேதாகமத்தில் ஆதிசபையினுடைய உதவிக்காரர்களில் சிலர் நல்ல கிறிஸ்தவ வேலைகளைப் புரிந்ததாக நாம் பார்க்கின்றோம்; உதவிக்காரன் ஸ்தேவான் மற்றும் உதவிக்காரன் பிலிப்பு மற்றும் இன்னும் மற்றவர்களை இப்படியாகக் காண்கின்றோம். இவர்கள் அப்போஸ்தலர்கள் அல்ல.

ஆகையால் வேறுயாருமல்ல, மூப்பர் மாத்திரமே கூட்டத்தினைத் தலைமைத் தாங்கி நடத்திட வேண்டுமென்று கூறினதில், மூப்பர்கள் அல்லது சபையார் தவறிழைத்துள்ளதாக எங்களது கணிப்பில் காணப்படுகின்றனர் என்று நாம் சொல்லிடுவோம். இச்சபையார் முன்வைத்திட்ட யோசனையானது மிகவும் நல்லதொரு திட்டம் என்று நாம் கருதுகின்றோம் மற்றும் சபையாரே இதைத் தெரிவித்துள்ளனர் என்ற காரியமானது இதனை சரியானதாகவும் மற்றும் தகுதியானதாகவும் ஆக்கிற்று. உதவிக்காரர்கள் ஓர் ஊழியத்திற்கு என்று தெரிந்தெடுக்கப்படுகின்றனர் மற்றும் "உதவிக்காரருடைய ஊழியத்தைச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையை அடைவார்கள்" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். எதில் நல்ல நிலை? வேலை தொடர்புடைய விஷயத்தில் சுயாதீனமாகும். அவர்கள் ஒரு விசேஷித்த வகை வேலைக்கு என்று தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்; ஆனால் ஒருவேளை அவர்கள் மற்றத் தாலந்துகளைப் பெற்றிருப்பதை வெளிப்படுத்துவார்களானால், அவைகளைப் பயன்படுத்தும்படிக்கு அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் மற்றும் சபையார் படிப்படியாக அவர்களை அறியவர வேண்டும் மற்றும் சமயம் வாய்க்கையில் அவர்களை மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒருவேளை அவர்களுக்கு எந்த வாய்ப்பும் கிடைக்கவில்லையெனில் சபையாரும் அவர்களைக்குறித்து ஒருபோதும் அறிந்துகொள்ள மாட்டார்கள்.

சபையார் தாங்கள் செய்ய வேண்டிய சரியான காரியத்தையே தெரிவித்துள்ளனர் மற்றும் அவர்கள் இன்னும் ஒருபடி மேல்சென்று, பொருத்தமானது என்று காண்கிறதற்கு ஏற்ப, கூட்டத்தினை நடத்திடுவதற்கு அல்லது ஒழுங்குப்படுத்திடுவதற்கு உதவிக்காரர் அடிக்கடி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்று கூறிடலாம் மற்றும் இந்த இளையச் சகோதரர்கள் தங்களது தாலந்துகள் மற்றும் ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்துவதில் அவர்களுக்கு உதவி புரிவதற்கு மூப்பர்கள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும்; ஒருவேளை மூப்பர்கள் இவர்களை மூப்பராகிடுவதற்கான தாலந்துடையவர்களாய்க் காண்பார்களானால் தேர்ந்தெடுத்தலின் போது, "நான் இந்தச் சகோதரனுக்கு மற்றும் அந்தச் சகோதரனுக்கு முன்மொழிகின்றேன்; இவர் மிகவும் உண்மையுள்ள உதவிக்காரராக இருந்திருக்கின்றார் மற்றும் இவரை நான் இப்பொழுது மூப்பராக முன்மொழிகின்றேன்" என்று

கூறிடுவது முற்றிலும் சரியான காரியமாய் இருக்கும். இப்படியாக மூப்பர் ஒருவர் கூறிடுவது என்பது மிகவும் அருமையான காரியமாய் இருக்கும். தனது இளையச் சகோதரன் முன்னுக்கு வருவதற்கென இவர் உதவி செய்திட வேண்டியவராய் இருக்கின்றார்.

எப்போதுமே நிறையவேலை இருக்கின்றது. மிக அதிகமாய் மூப்பர்களைப் பெற்றிருப்பதில் அச்சம் அடையாதீர்கள். "அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு." களம் இறங்குங்கள் மற்றும் உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள் மற்றும் நீங்கள் முயற்சித்துக்கொண்டிருப்பதைத் தேவன் பார்க்கையில் அவர் உங்களுக்கு மற்றக் கதவுகளைத் திறந்தருளுவார்.

**(Q482:2) கூட்டங்கள் - துணைவிதிகளைப் பயன்படுத்துதல்.**

கேள்வி (1916)-2- அலுவல் கூட்டங்கள் முதலானவைகளை நிர்வகிப்பதற்குரிய துணைவிதிகள் சிலவற்றை Los Angeles-இல் உள்ள சபையார் ஏற்படுத்திக்கொள்ள நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - சகோதரர்களில் சிலர் துணைவிதிகள் அல்லது சட்டங்களுக்கு மிகவும் ஆர்வம் கொண்டவர்களாய் இருக்கின்றனர். சில விதிகள் நிச்சயமாகவே அவசியமாய் இருக்கின்றன; ஏனெனில் அவைகள் இல்லையெனில் நாம் ஒழுங்கின்மையுடையவர்களாய் இருப்போம்; எனினும் அன்பு மற்றும் நீதியின் பிரமாணத்தை நாம் கைக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு பிரமாணங்கள் விசேஷமாய்க் கைக்கொள்ளப்பட்டால், இவை கிட்டத்தட்ட அனைத்தையுமே ஒழுங்குப்படுத்துகிறதாக இருக்கும். எனினும் நீதியானது எப்போதும் முதலாவதாக இடம்பெற வேண்டும். நான் எல்லா விஷயத்திலும் உங்களிடத்தில் நீதியுடன் காணப்பட வேண்டும்; எனினும் உங்களிடத்தில் நான் பதிலுக்கு நீதியை எதிர்ப்பார்த்து வற்புறுத்திடக்கூடாது. எனினும் நீதிக்குக் குறைவாக எதையும் எனக்குச் செய்திடுவதற்கு நீங்கள் விரும்பிடக்கூடாது மற்றும் நானும் நீதிக்குக் குறைவாய் எதையும் உங்களுக்குச் செய்திடக்கூடாது. மேலும் நான் கண்டிப்பாய் நீதியைச் செய்ய வேண்டியவனாய் இருப்பினும், அதை நான் உங்களிடத்தில் எதிர்ப்பார்த்திடக்கூடாது; உங்களிடத்தில் குறைவாகவே நான் எதிர்ப்பார்த்திடலாம். நீதி மற்றும் அன்பு எனும் இந்த இரண்டு துணைவிதிகள் செயல்பாட்டில் இருக்கையில் நமக்கு மிக அதிகப் பிரமாணங்கள் தேவைப்படாது. மிக அதிகமாய்த் துணைவிதிகளை நாம் பெற்றிருக்கலாம்; ஆனால் இவ்விரண்டு பிரமாணத்தையும் மனதில் உறுதியாய்ப் பெற்றிருக்கையில், இவைகள் அநேக சந்தர்ப்பங்களில் உதவி செய்கிறதாய் இருக்கும்.

**(Q483:1) கூட்டங்களின் வகை.**

கேள்வி (1916)-1- எவ்வகைக் கூட்டங்கள் மிகவும் பிரயோஜனமானவைகளாகக் காணப்படும்?

பதில் - இது சந்தர்ப்பங்களைச் சார்ந்ததாகக் காணப்படும். நாங்கள் அறிந்ததிலேயே மிகவும் பிரயோஜனமான கூட்டமாய்க் காணப்படுவது பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளாகும் மற்றும் மிகவும் பிரயோஜனமாய்க் காணப்படாத சில அரிதான சந்தர்ப்பங்களும் உண்டு. சில சந்தர்ப்பங்களில் ஞாயிற்றுக்கிழமை மாலையில் பிரசங்கக் கூட்டமானது மிகவும் பிரயோஜனமானதாகக் காணப்படும்; சில சமயங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு பிரசங்கக் கூட்டங்களானது காணப்படுகின்றது. எனினும் இவை அபூர்வமான சந்தர்ப்பங்களிலேயே ஆகும். பொதுவாக பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளிலிருந்தே மிகுந்த பயன் கிடைக்கின்றது என்று நாம் கருதுகின்றோம்; காரணம் இந்த வகுப்புகளுக்கு ஒவ்வொரு நபரும் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளவும், தனது பதில்களைக் கூறவும் வேண்டியுள்ளது. நான் குறிப்பாய் ஆலோசனை கொடுக்க நோக்கம்கொள்ளவில்லை, மாறாக பொதுவான விதத்திலேயே கொடுத்து, நான் இங்குக்கூறுபவைகளை ஒவ்வொரு சபையாரும், அவர்களுக்குரிய விதத்தில் நடைமுறைப்படுத்திடுவதற்கு விட்டுவிடுகின்றேன்.

நாம் எத்தனை கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது எந்த வகையான கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று வேதாகமமானது எதுவும் தெரிவிப்பதில்லை. இக்காரியமானது தெளிந்த புத்தியுள்ள ஆவியினால் தீர்மானிக்கப்படத்தக்கதாக விடப்பட்டுள்ளது. சபையாரிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினனுடைய பிரயோஜனம் மற்றும் நன்மைக்குறித்து மனதில் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். நாம் "ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்." அதிகமான கூட்டங்கள் தேவை என்று சிலர் எண்ணலாம். ஒருவேளை மிக அதிகமாய்க் கூட்டங்களை ஒழுங்குப்படுத்துவார்களானால், எத்தனை பேர்களுக்கு என்று கூட்டமானது முதலில் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்ததோ, அந்த எண்ணிக்கையைவிட, கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையானது படிப்படியாகக் குறைந்துப்போய், அதைத் தொடர்ந்து நடத்த முடியாதளவுக்குப் போவதைப் பார்க்கலாம். ஞாயிற்றுக்கிழமையில் மூன்று கூட்டங்கள் நடத்தப்படுவது போதுமானதாயிருக்கும் என்பது எனது கருத்தாகும். ஆனால் ஒவ்வொருவரும் இதில்-

சிந்திக்க வேண்டும் மற்றும் பின்னர்ச்சிந்திப்பதற்கும், செயல்படுவதற்குமான அதே சுயாதீனமும், சிலாக்கியங்களும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுவதாக. இதுவே சரியானதும், நியாயமானதுமாகும். நீதி என்கிற இந்தக் கருத்தானது, ஜீவியத்தின் காரியங்கள் அனைத்திலும் காணப்பட வேண்டும்; ஏனெனில் நீதியானது தேவனுடைய சிங்காசனத்திற்கான ஆதாரமாய் இருக்கின்றது மற்றும் ஒவ்வொரு கிறிஸ்தவ நடத்தையினுடைய ஆதாரமாய்க் காணப்பட வேண்டும்; சொல்லப்போனால் நாம் செய்யும் அனைத்திற்கும் நீதியானது ஆதாரமாய்க் காணப்பட வேண்டும். சபையாரில் யாரேனும் ஐந்து கூட்டங்களைப் பெற்றிருக்க விரும்புவார்களானால், நான்: "சரி, ஆனால் என்னால் அனைத்துக்கூட்டங்களிலும் கலந்துகொள்ள முடியாது. எனினும் உங்களுக்கு ஐந்து கூட்டங்கள் வேண்டும் என்றும், அவற்றில் போதுமானவர்கள் நன்கு கலந்துகொள்வார்களென எண்ணுகின்றீர்கள் என்றும் இருந்ததால், நான் ஐந்து கூட்டங்களுக்கென வாக்களித்திடுவேன் (vote)" என்பேன்.

**(Q483:2) கூட்டங்களின் எண்ணிக்கை.**

கேள்வி (1916)-2- Los Angeles-இன் சபையினுடைய ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்கள் பின்வருமாறு:

10.30 AM - Sunday School lesson in the Watch Tower
1.30 PM - The Watch Tower Study Article
3.00 PM - Lecture
7.00 PM - Berean Study sixth volume

சிலர் இன்னும் அதிகமாய்க் கூட்டங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்; சிலர் நாம் மிக அதிகமாய் இப்போது கூட்டங்களைப் பெற்றிருக்கின்றோம் என்று கூறுகின்றனர்; சிலர் ஒரு தூதிற்குப் பதிலாக நாம் இரண்டு தேவதூதுகளைப் பெற்றிருக்க வேண்டுமென்று கூறுகின்றனர். இது விஷயத்தில் சபையாருடைய சிறந்த நலனுக்கடுத்தவைகள் தொடர்பான உங்களது கருத்தென்ன?

பதில் - ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொரு சபையாரும் தங்களுக்கெனத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் மிக அதிகமாய்க் கூட்டங்களைக் கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. இந்த ஒரு சந்தர்ப்பத்தில், ஏற்கெனவே நடத்தப்பட்டு வரும் கூட்டங்களின் எண்ணிக்கையினைக் கூட்டிடுவதற்கு நாம் விருப்பங்கொள்ளக்கூடாது. ஒருவேளை நான் அவ்விடத்தில் காணப்பட்டு, இவ்விஷயம் தொடர்பாக வாக்களித்திருப்பேனாகில் (vote), ஐந்திற்குப் பதிலாக மூன்று கூட்டங்களைப் பெற்றிருப்பதற்கு நான் விருப்பம்கொண்டிருப்பேன். உங்களால் முடியுமானால் நான்கைக் கொண்டிருக்கலாம். ஒவ்வொருவருக்கும் வேறுபட்டுக் காணப்படும் என்றாலும், கர்த்தருடைய ஜனங்களில் அநேகர் சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது பிள்ளைகளுக்கான பூலோகக் கடமைகளைப் பெற்றிருக்கின்றனர் மற்றும் இளைப்பாறுதலுக்கும், மாற்றத்திற்கும் வேண்டி பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளதான இந்த ஒரு நாளில் கர்த்தருடைய ஜனங்கள், சத்தியத்தில் இல்லாத தங்கள் கணவன், மனைவி அல்லது குழந்தைகளுக்கு எதையாகிலும் செய்யக் கடமைப்பட்டவர்களாய்க் காணப்படுவார்கள்.

சத்தியத்தில் இல்லாதவராகவும், ஞாயிற்றுக்கிழமை மாத்திரமே இல்லத்தில் காணப்படுபவராகவும் காணப்படும் கணவன், தனது மனைவி அந்த நாளில் மிகவும் வெளியே ஆக்கிரமிக்கப்பட்டுக் காணப்படுவதைக் காண்கையில், அவள் அவரைப் புறக்கணிக்கின்றது போன்று அவருக்குத் தோன்றிடும் மற்றும் நீங்களும் இதைப் போன்ற சந்தர்ப்பங்களில், இதே பார்வையினைக் கொண்டிருப்பீர்கள்; மேலும் சத்தியத்தில் காணப்படாத மனைவி ஞாயிற்றுக்கிழமைகளிலும்கூடத் தனது கணவனை அவ்வளவுக்குக் காணமுடியாத அளவுக்கு, அவர் நாள் முழுவதும் கூட்டங்களிலேயே காணப்படுவாரெனில் அவள், அவருடனான எந்த ஐக்கியத்தினையும் பெற்றிருக்க முடியாது. நிச்சயமாகவே இது சரியாய் இருக்காது. நம்முடைய கணவன்மார்களிடத்தில் அல்லது நம்முடைய மனைவிமார்களிடத்தில் நமக்குப் பூமிக்குரிய வகையான பூலோகக் கடமைகள் காணப்படுகின்றது மற்றும் இவைகளை நாம் கவனியாமல் காணப்படக்கூடாது.

ஒருவேளை சபையார் ஞாயிற்றுக்கிழமைகளில் மிக அதிகமான எண்ணிக்கையில் கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், சில சமயங்களில் ஒரு நபர் எல்லாக் கூட்டங்களிலும் கலந்து கொள்ளாமல் காணப்படுவது ஞானமான காரியமாய் இருக்கும். தன்னால் தனது முழுநாளினையும் கர்த்தருக்கென்று கொடுக்க முடியும் நபர் விஷயத்திலும்கூடத் தனது நேரத்தினை, தான் எவ்வாறு செலவழிக்க வேண்டும் என்ற காரியமானது, அந்நபரின் கரங்களிலேயே காணப்படுகின்றது. அவன் தனது நாளில் ஒரு பகுதியைத் தன்னார்வ ஊழியத்திற்கென்றும் மற்றும் இன்னொரு பகுதியை --3083--

வேறொரு வேலையினுடைய ஒரு பாகத்திற்கென்றும் மற்றும் கொஞ்சம் பகுதியைப் பெரோயா ஆராய்ச்சிக்கென்றும், கொஞ்சம் பகுதியைப் பிரசங்கிப்பதற்கென்றும் செலவிட விரும்புகின்றவனாய்க் காணப்படுவான். இது விஷயத்தில் அவன் தனது சொந்தப் பகுத்தறிதலை முடிந்தமட்டும் பயன்படுத்திட வேண்டும். ஒருவேளை சபையார் நான்கு கூட்டங்களுக்கு அதிகமான கூட்டங்களைப் பெற்றிருப்பார்களானால், அது ஞானமாய்க் காணப்படாது; மற்றும் ஒருவேளை இந்தக் கூட்டங்கள் அனைத்திற்கும், அனைவரும் வரமுடியும் என்றாலும், "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளை நாம் நினைவில்கொண்டிருக்க வேண்டும். பக்திவிருத்திக்கு ஏதுவான கூட்டங்கள் விஷயத்திலும், மற்றக் காரியங்கள் விஷயத்திலும் மிதமாய்க் காணப்பட வேண்டும். நம்முடைய பலம் எல்லைக்குட்பட்டது என்று நாம் நினைவில் கொண்டிட வேண்டும்; மற்றும் நம்மைச் சார்ந்திருப்பவர்களுக்கு - நம்முடைய கணவன், நம்முடைய மனைவி, நம்முடைய பிள்ளை, நம்முடைய அயலார்கள், நம்முடைய உறவினர்களுக்கு நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம். அனைவருக்குமென்று நாம் சில கடமைகளைப் பெற்றவர்களாகக் காணப்படுவோம்; அதிலும் பிரதானமாய் விசுவாச வீட்டாருக்கும் மற்றும் நம்முடைய குடும்பத்தாருக்கும் என்று கடமைகளைச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம்; ஏனெனில் இவர்களே முதலாவதாகக் காணப்படுகின்றனர்.

**(Q479:1) கூட்டங்கள் - மூப்பர்கள் விசாரணை சங்கத்தில் அமர்தல்.**

கேள்வி (1960)-1- மூப்பர்கள் விசாரணை சங்கத்தில் அமர்வதுபோல் காணப்படுவதும் மற்றும் ஒழுங்கற்ற விதத்தில் நடப்பவர்களாகத் தென்படுபவர்கள், மூப்பர்கள் முன்பு ஆஜராகும்படிக்கும், நடத்தைகளுக்கான காரணத்தை விளக்கும்படிக்கும் அழைக்கப்படுவதும் மூப்பர்களுக்குத் தகுதியான காரியமாய் இருக்குமா? அல்லது மத்தேயு 18:15-18 வரையிலான வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளதான கர்த்தருடைய ஆலோசனையானது பின்பற்றப்பட வேண்டுமா?

பதில் - குறிப்பிடப்பட்டிருக்கும் வேதவாக்கிய பகுதியில் இடம்பெறும் கர்த்தருடைய கட்டளைக்கு இசைவாய்க் காரியமானது கையாளப்பட வேண்டும் என்று மேற்காணப்படும் கேள்வியின் வாயிலாய் வெளிப்படும் யோசனையை நான் அங்கீகரிக்கிறேன். மூப்பர்கள் சங்கத்தாரோ அல்லது வேறு எவரோ அந்நிய காரியங்களில் தலையிடுகிறவர்கள் ஆகிடுவதற்குக் கர்த்தருடைய வார்த்தை அங்கீகரிக்கிறதில்லை. இப்படிச் செய்வது என்பது பரிசுத்த விசாரணையின் போதான இருண்ட யுகங்களின் பழக்கங்களுக்குத் திரும்புவதாக இருக்கும் மற்றும் பரிசுத்த விசாரணையை மேற்கொண்டவர்கள் கொண்டிருந்த அதே ஆவியினை நாமும் வெளிப்படுத்துகிறவர்கள் ஆகிடுவோம். கர்த்தர் காரியத்தினை எளிமையான விதத்தில் வைத்துள்ளார் மற்றும் அதனை நாம் மேலும் சிறப்பாக்கிட முடியாது. "உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்" என்று வேதாகமம் கூறுகின்றது. இதுவே காரியத்தின் முடிவாக இருக்க வேண்டும். ஒருவேளை இதனால் பலன் உண்டாகவில்லையெனில் வேதவாக்கியங்களானது அடுத்தக்கட்ட நடவடிக்கையைத் தெரிவிக்கின்றது. "அவன் செவிகொடாமற்போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ" என்று நாம் வாசிக்கின்றோம். ஒருவேளை தவறு செய்தவர் இந்த இரண்டு அல்லது மூன்று பேரின் புத்திமதிக்குச் செவிகொடுத்துத் தனது தவறான செய்கையை நிறுத்திக்கொள்வாரானால் அதுவே காரியத்தின் முடிவாயிருக்கும். அவருக்கு ஏதேனும் வகை தண்டனை கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோ அல்லது கொடுப்பதற்கு முற்படுவதோ நமக்கு அடுத்தக் காரியமல்ல. "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்" என்று கூறும் அவருடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருவேளை தவறு செய்தவருக்குத் தண்டனை ஏதேனும் அவசியப்படுமானால், கர்த்தர் அதை அவருக்குக் கொடுப்பார் என்று நாம் நம்பிட வேண்டும் மற்றும் அக்காரியத்தினை நம்முடைய சொந்தக் கரத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது. நாம் கர்த்தரிடத்தில் நம்பிக்கைக்கொள்ள வேண்டும். நாம் தவறு செய்தவரை, தவறு செய்வதிலிருந்து நிறுத்திட முற்படுவதே நமக்கடுத்தக் காரியமாகும். ஆனால் ஒருவேளை தவறு செய்தவர் தொடர்ந்து தவறு செய்துகொண்டும், மனந்திரும்பாமலும் காணப்பட்டால் மற்றும் ஒருவேளை காரியமானது போதுமான அளவுக்கு முக்கியமானதாய்க் காணப்படுமாயின், அப்பொழுது காரியமானது சரிச்செய்யப்படத்தக்கதாக நாம் சபையாருடைய கவனத்திற்குக்கொண்டுவர வேண்டும். (மத்தேயு 18:15-18)

சிறு அல்லது அற்பத்தனமான காரியங்கள் எதையும் நாம் சபையின் முன்னிலையில் கொண்டு வரக்கூடாது. என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதான இவ்வகையான காரியங்களானது,

நான்கில் மூன்று பகுதி -கண்டுகொள்ளாமல் விட்டுவிடப்பட வேண்டியவைகளாகவும், அவைகள் விஷயத்தில் எதுவுமே செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லாதவைகளாகவும் காணப்பட்டுள்ளது. எனினும் சில விவகாரங்களில் காரியங்களானது, தனிப்பட்ட நபரைத் தாண்டி முழுச்சபையாரையும் சம்பந்தப்படுத்தும் அளவிற்குள்ள விவகாரங்களாகக் காணப்படும். இம்மாதிரியான நிகழ்வுகளில், காரியத்தினைத் தனிப்பட்ட விதத்தில் கையாளுவது கூடாத காரியமாய் இருக்கும். அப்போது மூப்பர்கள் குழு/committee ஒன்று ஏற்படுத்தப்பட்டு, அவர்களில் ஒருவர் இவ்விவகாரத்தைப் பார்த்துக்கொள்வதற்கும், தவறானது தடுக்கப்பட முடியுமா அல்லது சரிசெய்ய முடியுமா? என்று பார்த்துக்கொள்வதற்கும் என்று ஏற்பாடுபண்ணப்பட வேண்டும். காரியமானது தனிப்பட்ட நபரைத் தாண்டி கடந்துசெல்கிறதானால் தேவனுடைய வார்த்தைக்கு மிஞ்சி எங்களுக்கு எந்த ஆலோசனையும் இல்லை. பாபிலோன் போல் ஆகிடாமலிருப்பதற்கும், விசாரணைகள் நடத்திடாமல் இருப்பதற்கும் மற்றும் குழப்பங்கள் ஏற்படுத்திடாமலிருப்பதற்கும், கவனமாய் இருப்போமாக; தேவனுடைய வார்த்தை நமக்கும் போதுமானதாய் இருக்கின்றது மற்றும் நாம் அதைக் கவனமாய்க் கைக்கொண்டு இப்படியாகக் குழப்பங்களைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

**(Q482:1) கூட்டங்கள் - உதவிக்காரர்கள் வாக்களித்தல் (voting).**

கேள்வி (1916)-1- இத்தகைய (அலுவல்) கூட்டங்களில், கேள்விகளின் விஷயத்தில், உதவிக்காரர்கள் வாக்களிப்பது சரியா? அல்லது இது மேற்பார்வையாளர்களாகிய மூப்பர்களிடத்தில் விட்டுவிடப்படவேண்டுமா? ஒருவேளை மூப்பர்களைக்காட்டிலும் அதிக எண்ணிக்கையில் உதவிக்காரர்கள் இருக்கையில் மற்றும் அனைவரும் வாக்களிக்க வேண்டுமானால், பின்னர் மூப்பர்களுக்குப் பதிலாக உதவிக்காரர்கள் சபையினுடைய அலுவல் காரியங்களைக் கட்டுப்பாட்டில் கொண்டிருக்கலாமா?

பதில் - மூப்பர்கள் ஆவிக்குரிய காரியங்களைப்பார்க்க வேண்டியவர்களாகவும், வாக்களிக்க வேண்டியவர்களாகவும் (vote) இருக்கின்றனர்; ஆனால் கூட்டங்களின் எண்ணிக்கையைச் சபையார் தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சரியாய் நடத்தப்படுவதற்கும், கலந்துகொள்ளப்படுவதற்கும் ஏதுவான எண்ணிக்கையிலுள்ள கூட்டங்களைப் பெற்றிடுங்கள். இன்னொரு கூட்டத்தைக் கூடக் கூட்டிக்கொள்ளும் விஷயத்தில், ஒப்புதலளிக்க விருப்பம் இல்லாதவர்களாய்ச் சிலர் காணப்படலாம்; ஆனால் மற்றவர்களுடைய சௌகரியத்தையும், வளர்ச்சியையும் கருத்தில் எடுத்துக்கொள்வது நலமாயிருக்கும். கூடுதலாக ஒரு கூட்டத்தைப் பெற்றிடுவது உங்களுக்கு அவசியம் இல்லாமல் காணப்படலாம், ஆனால் அது அவர்களுக்கு அவசியமாய் இருக்கும். ஆகவே சபையாருடைய நபர்களின் வளர்ச்சிக்கு அவசியமானது என்று சபையாரால் கருதப்படும் எண்ணிக்கையிலான கூட்டங்களைப் பெற்றிருப்பதற்கு ஒப்புதலளிப்பது நலமானதாய் இருக்கும்.

புரூக்கிலினில் ஒருவேளை கூடுதலாகக் கூட்டம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் ஏற்பட்டால், அது குறித்தத் தகவல் சில சமயங்களில் எனக்கும் மற்றும் சில சமயங்களில் மற்றவர்களுக்கும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்விஷயத்தினைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, எத்தனை பேர் அக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என்று அறிந்துகொள்ள முற்படுவோம். கலந்துகொள்வதற்குப் போதுமான எண்ணிக்கையானவர்கள் காணப்படாதது வரையிலும் நாம் கூட்டத்தினைக்குறித்துப் பரிந்துரைக்க மாட்டோம். கலந்துகொள்வதற்கென ஏழு அல்லது எட்டுப் பேர் இல்லாததுவரையிலும் ஒரு புதியக் கூட்டத்தினைக் குறித்துப் பரிந்துரைப்பதற்கு நாம் சிந்திப்பது இல்லை மற்றும் இப்படியாகக் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை பதினைந்தாக உயரும் என்றும் நாம் எதிர்ப்பார்ப்போம். ஆனால் ஒருவேளை எண்ணிக்கை முப்பதை எட்டும்போது, ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் நன்கு வளர்ச்சியடையத்தக்கதாகக் கூட்டத்தினை இரண்டாகப் பிரித்திடுவது குறித்து நாம் சிந்திப்போம். இயல்பாகவே மந்த நிலையில் காணப்படுபவர்களாகக் கர்த்தருடைய ஜனங்களில் சிலர் காணப்படுகின்றனர் மற்றும் அதிக எண்ணிக்கையானவர்கள் காணப்படுகையில் இத்தகையவர்கள் கவனிக்கப்படாமல் காணப்படுவார்கள்; ஆனால் குறைவான எண்ணிக்கையில் காணப்படும் போது இத்தகையவர்கள் மிகுந்த கவனத்தைப் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் இது அவர்களது வளர்ச்சிக்கு ஏதுவானதாய்க் காணப்படும்.

**(Q480:2) கூட்டங்களுக்கான ஏற்பாடுகள்.**

கேள்வி (1916)-2- அதிக எண்ணிக்கையில் காணப்படும் ஒரு சபையில், மற்றவர்களுக்கு வேலையில் ஒரு குறிப்பிட்ட பாகத்தினை - அதாவது கூட்டங்களுக்காக ஏற்பாடுபண்ணுதல்,

கூட்டங்களுக்கான நேரம் மற்றும் இடத்தை நிர்ணயித்தல் மற்றும் பல்வேறு கூட்டங்களுக்கான கூட்டத்தலைவர்களை/வழிநடத்துபவர்களை நியமித்தல் போன்ற வேலைகளை மற்றவர்களிடம் ஒப்படைப்பது தகுதியானதாய் இருக்க - இம்மாதிரியான வேலைகளானது, சபையின் மேற்பார்வையாளர்களென மூப்பர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களால் மாத்திரமே செய்யப்பட வேண்டுமா அல்லது மூப்பர்களோடுகூட உதவிக்காரர்களும் இக்கடமைகளை நிறைவேற்றிட வேண்டுமா?

பதில் - இம்மாதிரியான காரியங்களில் கர்த்தருடைய வார்த்தையானது நமக்கு அதிகளவிலான சுதந்தரத்தைக் கொடுத்துள்ளதாய் இருக்கின்றது. மூப்பர்களுடைய வேலை என்னவாகக் காணப்பட வேண்டும் என்றும், உதவிக்காரர்களின் வேலை என்னவாகக் காணப்பட வேண்டும் என்றும் கர்த்தருடைய வார்த்தைகளானது குறிப்பாய்த் தெரிவிக்கிறதில்லை. அது சௌகரியத்திற்கே பெரிதும் விடப்பட்டுள்ளது என்று நாம் எண்ணுகின்றோம். சபையினுடைய ஆவிக்குரிய வேலைகளை - கூட்டங்களை மற்றும் இவ்வகையான அனைத்தையும் மூப்பர்கள் பொறுப்பேற்றுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும். இவர்கள் பொதுவில் பேசுவதற்குத் தகுதியான சகோதரர்களாகக் காணப்பட வேண்டும்; அப்போஸ்தலன் கூறுவதுபோன்று இவர்கள் "போதகசமர்த்தனாய்க்" காணப்பட வேண்டும். சிலர் பொதுவிடங்களில் பேசிடுவதற்குரிய போதகசமர்த்தர்களாய்க் காணப்படுவார்கள் மற்றும் அவர்கள் அம்மாதிரியான வேலைக்கு என்று நியமிக்கப்பட வேண்டும்; சிலர் ஒரு சிலருக்குப் போதிப்பதற்குப் போதகசமர்த்தனாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இவர்கள் பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளுக்கும் மற்றும் இல்லத்தில் நடைபெறும் கூட்டங்களுக்கும் என்று நியமிக்கப்பட வேண்டும். போதகசமர்த்தன் எனும் வார்த்தைக்குப் பரந்துவிரிந்த அர்த்தம் கொடுக்கப்பட வேண்டும். அது மேடையில் நின்று சொற்பொழிவாற்றுதலை மாத்திரம் குறிக்கிறதில்லை; மாறாக எந்தவொரு விதத்தில் போதிப்பதற்குத் திறமையுடையவராய் இருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. தாங்கள் மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது தாங்கள் பொதுவிடங்களில் பேசிட வேண்டும் என்று குறிப்பதாகச் சிலர் எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் அது அப்படியல்ல. போதகசமர்த்தனாய் இருப்பது என்பது பொதுவிலும் மற்றும் தனிமையிலும் போதிப்பதாகிய இரண்டையும் உள்ளடக்கிக் காணப்பட வேண்டும்; சிலருக்குப் பொதுவிடங்களில் (public work) போதிக்கும் பணியும் மற்றும் வேறுசிலருக்கு ஒரு சிலருக்குப் போதிக்கும் பணியும் (private work) கொடுக்கப்பட வேண்டும்; எனினும் அனைவரும் போதகசமர்த்தனாய்க் காணப்பட வேண்டும்.

மூப்பர்கள் அனைத்துக் கூட்டங்களையும் நடத்திட வேண்டும்; ஏனெனில் அனைத்துக் கூட்டங்களும் ஆவிக்குரியவைகளாகக் காணப்படுகின்றன. ஒரு நபர் மூப்பராய்க் காணப்படுவதற்குத் தகுதியற்றவராய் இருப்பாரெனில், அப்படியானால் அவர் கூட்டங்களுக்கான கூட்டத்தலைவராகக் காணப்படுவதற்கும் தகுதியற்றவர் ஆவார். உதவிக்காரர்கள் என்ன செய்ய வேண்டும்? உதவிக்காரன் எனும் வார்த்தையின் அர்த்தம், ஊழியக்காரனாகும் மற்றும் இது எவ்வகையான வேலையையும் புரிய முடிகிற ஒருவரைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. உதாரணத்திற்கு வாயிற்காவலருக்குக் காணப்படும் வேலை போன்ற வேலை அவருக்குக் கொடுக்கப்படலாம் அல்லது புத்தகங்களின் நிர்வகிப்பானது அவரிடத்தில் ஒப்படைக்கப்படலாம் அல்லது தன்னார்வ ஊழியங்களுக்கடுத்த பொறுப்பானது அவரிடத்தில் ஒப்படைக்கப்படலாம். அநேகம் வேலைகள் உதவிக்காரர்களிடத்தில் ஒப்படைக்கப்படலாம் மற்றும் மற்றவர்களைக்காட்டிலும் இவர்கள் இம்மாதிரியான வேலைகளை நன்கு செய்திடலாம். ஆகையால் அவர்களால் நன்கு செய்ய முடிகிற குறிப்பிட்ட வேலைகளை அவர்களுக்குக் கொடுங்கள். தொழிலதிபர்களாய்க் காணப்படும் சகோதரர்கள், போதகசமர்த்தனாய் இல்லையென்றாலும், உதவிக்காரர்களெனச் சிலசமயம் பயன்படுத்தப்படலாம். இம்மாதிரியான ஒருவர், மூப்பரால் செய்ய முடிகிற அளவிற்குத் தன்னார்வ ஊழியங்களைச் செய்ய முடியாதவராய் இருப்பினும், அவரிடம் இவ்வேலைக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு, அவ்வேலைக்குத் தலைவரென நியமிக்கப்படலாம். இந்த வேலையானது மூப்பர்களுக்குக் கொடுக்கப்படக்கூடாது; ஏனெனில் மூப்பர்கள் ஈடுபட்டுக் காணப்படுவதற்கு ஆவிக்குரிய வகையான வேலை போதுமானளவில் காணப்படுகின்றன.

இப்பொழுது உதவிக்காரர்கள் மற்றும் மூப்பர்கள் ஒன்றுகூடுவது குறித்தக் காரியத்திற்கு வரலாம். மூப்பர்கள் தங்களது கூட்டங்கள் அனைத்திலும் உதவிக்காரர்களை வரவேற்பது என்பது மிகவும் நல்லதொரு ஏற்பாடு என்று நான் கருதுவேன்; ஏனெனில் நல்ல உதவிக்காரர் என்பவர், தனக்கு ஒப்படைக்கப்பட்ட பல்வேறு கடமைகளில் உண்மையாய்க் காணப்படுவதன் வாயிலாக, அங்கீகரிக்கப்படத்தக்கவராகவும், "தனக்கென்று நல்ல நிலையை அடைபவராகவும்" - அதாவது சுதந்தரத்தின் நல்ல நிலையை அடைபவராகவும் காணப்படுகின்றார் (1 தீமோத்தேயு 3:13). மேலும் அவர் மூப்பர் ஆக்கப்படுவதற்குரிய வாய்ப்பினை எதிர்நோக்கினவராகவும், மூப்பருடைய வேலைக்குரிய வளர்ச்சியினையும், மேம்பாட்டையும் வெளிப்படுத்துகிறவராகவும் காணப்பட வேண்டும். உதவிக்காரர்கள் செய்வதற்கென்று ஒரு வேலை உள்ளது. அவர்கள் மூப்பர்களுக்கு மாத்திரம் வேலை

புரிகிறவர்களாய்க் காணப்படாமல், அவர்கள் சபையாருக்கும்கூட வேலை புரிகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். எப்படி மாநாடு சம்பந்தப்பட்ட விஷயத்தில் அநேகம் வேலைகள் காணப்படுகின்றதோ, அதுபோலவே சபையாருக்கான வேலையில் அநேகம் வேலை பிரிவுகள் காணப்படுகின்றன. மாநாடுகளுக்கென்று ஆயத்தப்பணிகள் அநேகம் காணப்படுகின்றன; அதாவது அறைகளை ஏற்பாடு செய்தல், இதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல், மாநாட்டில் கலந்துகொள்பவர்களின் தேவைகளைச் சந்தித்தல் முதலானவைகளாகும்.

மாநாடு தொடர்புடைய விஷயத்தில் ஒரு குழு/committee நியமிக்கப்பட்டு வருகின்றது என்பதில் ஐயமில்லை மற்றும் இந்தக் குழுவில் மூப்பர்களும் மற்றும் அலுவல் காரியங்களைப் பார்த்துக்கொள்பவர்களும், இருவருமே காணப்படுவது நலம். இவ்வேலையினை மூப்பர்களே செய்துகொள்ளலாம் அல்லது உதவிக்காரர்கள் செய்துகொள்ளலாம். வேலையினைப் புரிவதற்குரிய திறமையுள்ளவர்களின் மீது இவ்வேலையானது சார்ந்துள்ளது. சில சகோதரருக்கு அதிக அளவிலான திறமைகள் காணப்படுகின்றன மற்றும் சிலர் மிகக்குறைவான திறமைகளைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர். உதாரணத்திற்குச் செய்திதாள் வேலை காணப்படுகின்றது; ஒருவேளை ஓர் உதவிக்காரன் தகுதியுடையவராகக் காணப்படுவாரானால், அவர் இந்த வேலையினைச் செய்திடலாம்.

ஆவிக்குரிய காரியங்களுக்கான பொறுப்பு, மூப்பர்களின் கரங்களிலேயே காணப்படுகின்றது. எருசலேமுக்குப் போகையில் அப்போஸ்தலனாகிய பவுல் மிலேத்துப் பட்டணத்தில் தங்கி, எபேசு பட்டணத்திலுள்ள சபையின் மூப்பர்கள் வரும்படியாக அழைத்தனுப்பினார். அவர் அவர்களிடம்: "உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" (அப்போஸ்தலர் 20:28) என்று கூறினார். இவர்களுடைய வேலை தேவனுடைய மந்தையை மேய்ப்பதாகும். உதவிக்காரர்கள் மற்றவகையான வேலைகளைச் செய்திடலாம். மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களுடைய கூட்டங்கள் அனைத்திலும் மூப்பர்கள் ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தினுடைய பொறுப்பினை எடுத்துக்கொள்ள வேண்டும்; உதவிக்காரர்களோ temporal/ஆவிக்குரியதல்லாத காரியங்களுக்கடுத்த பொறுப்பினை எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் ஆவிக்குரியதல்லாத காரியங்களுக்கடுத்தவைகளில் ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்கிட வேண்டும். இத்தகைய ஒருங்கிணைந்த கூட்டத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் ஆலோசனை வழங்கிட வேண்டும். ஒருவர் அலுவல் காரியங்களுக்கடுத்தவைகளில் ஆலோசனையைக் கொடுத்துக்கொள்ளலாம் மற்றும் இன்னொருவர் ஆவிக்குரிய காரியங்களுக்கடுத்தவைகளில் ஆலோசனையைக் கொடுத்துக்கொள்ளலாம். இறுதி வாக்கும், பொறுப்பும் மூப்பர்களிடத்திலே காணப்பட்டாலும்கூட, வாக்கெடுப்பதற்குரிய நேரத்தில் உதவிக்காரர்களுடைய எந்த யோசனைகளையும் மூப்பர்கள் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியாய்க் காணப்பட வேண்டும். தகுதியுள்ள உதவிக்காரர்களின் கரங்களில், சபையாருடைய ஆவிக்குரியதல்லாத காரியங்களானது காணப்பட்டாலும், அவர்களுக்கு இவற்றிற்கடுத்த ஆலோசனை வழங்கிடுவதற்கு மூப்பர்கள் திறமிக்கவர்களாய்க் காணப்பட வேண்டும். வாக்கானது பரஸ்பரமானதாகக் காணப்பட வேண்டும்; முடிவு மூப்பர்களின் பொறுப்பில் இருக்கும்.

நீங்கள் மற்ற அனைத்துக் கூட்டங்களினின்றும், உங்களது அலுவல் கூட்டங்களைப் பிரித்துக் கொண்டுள்ளீர்கள் என்று நான் புரிந்துகொள்கின்றேன். அது நல்லதே. பொதுவாகவே அலுவல் கூட்டங்களானது மற்றக் கூட்டங்களிலிருந்து பிரித்துக்கொள்ளப்பட வேண்டும். சபையினுடைய நலனுக்கடுத்த காரியங்கள் முழுவதையும் மூப்பர்களின் கரங்களிலேயே விட்டுவிடாதீர்கள்; ஏனெனில் அவர்கள் கூட்டங்களைத் தாங்களாகவே நடத்திவிடக்கூடும். குறிப்பிட்ட காரியங்களைச் சபையாரின் கரங்களில் வைத்துக்கொள்ளுங்கள்; ஏனெனில் அநேகக் காரியங்கள் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களிடத்தில் விடப்படுவது நலமாயினும், சபையினுடைய காரியங்கள் அனைத்திற்குமான பொறுப்பானது, இறுதியில் சபையாருடைய கரங்களிலேயே காணப்படுகின்றது.

**(Q473:1) கூட்டங்கள் - மூப்பர்கள் அல்லாமல், மற்றவர்கள் கூட்டங்களை நடத்துதல்.**

கேள்வி (1910)-1- சபையில் மூப்பர்கள் அல்லாத வேறே சகோதரர்கள் கொஞ்சம் தலைமை தாங்கி நடத்துவதற்கு நீங்கள் பரிந்துரைப்பீர்களா?

பதில் - சபையே இதைத் தீர்மானித்திட வேண்டும். இக்காரியம் சபையினிடத்திற்கே விட்டுவிடப்பட வேண்டும். ஒரே ஒரு மூப்பரை ஒருவேளை சபைதான் தெரிந்துகொண்டுள்ளதென்றால், அப்பொழுது அது சபையினுடைய பொறுப்பாகின்றது; அதாவது இது மூப்பர்களுக்கான தகுதியுடையவர்களென வேறு எவரையும் சபை கண்டுபிடிக்கவில்லை என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. ஆனால் மூப்பரோ தனக்குச் சபையாரைக் காட்டிலும் நன்கு தெரியும் என்று கூறி, யாரையாகிலும் நியமிப்பது என்பது, சபையின் கணிப்பைக் குறைத்து மதிப்பிடுவதாக இருக்கின்றது, -3087-

ஏனெனில் மூப்பருக்கான தகுதியுடையவர்களென வேறு எவரும் இருப்பதாகக் கண்டுபிடிக்கவில்லையென்றே சபை கூறியுள்ளது. அந்த ஒரு மூப்பரை மாத்திரம் தேர்ந்தெடுத்தபோது, சபை இப்படியாகக் கூறியிருந்தது. ஆனால் சபையானது, நாங்கள் ஒரு மூப்பரை மாத்திரமே தேர்ந்தெடுப்போம், ஆனால் அந்த மூப்பனார் தனது கணிப்பைப் பயன்படுத்தி, சபையிலிருந்து மற்றச் சில சகோதரர்களை அவர் முன்கொண்டுவருவதற்கும், அவர்களைப் பல்வேறுவிதங்களில் அவர் பயன்படுத்துவதற்கும் (அ) அவர்கள் திறமைக்கு ஏற்ப ஊழியம் புரிந்திடுவதற்கு அவர் அழைப்பதற்கும் நாங்கள் விரும்புகின்றோம் என்று கூறியிருந்ததானால், இத்தகைய ஒரு பொறுப்பை, சபையே அந்த மூப்பனாருக்குக் கொடுத்தவர்களாய் இருக்கின்றார்கள் மற்றும் சபை தனக்குக்கொடுத்துள்ளதை மாத்திரமே அந்த மூப்பனார் பயன்படுத்தலாம் மற்றும் இதற்கு மேலாக எதையும் செய்யக்கூடாது. இம்மாதிரியான சூழ்நிலையில் சபையார் மற்றவர்களை உதவிக்காரர்களாய்த் தெரிந்துகொண்டு, சபையின் மூப்பரை நோக்கி: உங்களால் முடிந்தமட்டும் இந்த உதவிக்காரர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர் என்பதாகத் தயவுகூர்ந்து கருதுங்கள், ஏனெனில் இவர்கள் முன்னுக்குக் கொண்டுவரப்படுவதற்கும், ஒருவேளை போகப்போக சபையின் சில முக்கியமான ஊழியங்களுக்குக் கொண்டுவரப்படுவதற்குமெனச் சில தகுதிகள் இவர்களிடத்தில் காணப்படுவதை எங்களால் பார்க்க முடிகின்றதாக நாங்கள் எண்ணியே, இவர்களை உதவிக்காரர்களாகத் தேர்ந்தெடுத்தோம் என்று கூறுவதும் தகுதியாயிருக்கும். உதவிக்காரருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்பவர்கள், தங்களுக்கு நல்ல நிலையைச் சம்பாதித்துக்கொள்கின்றார்கள் என்று பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார்; அதாவது உதவிக்காரர்களென அல்லது உணவின் விஷயத்திலோ (அ) வேறு ஏதாகிலும் விஷயத்திலோ விசாரிப்பதிலும், சேவிப்பதிலும் ஊழியர்களென உண்மையாய் இருப்பதன் மூலம் இவர்கள் சபைக்கடுத்த ஊழியம் புரிவதற்குரிய சரியான ஆவியை வெளிப்படுத்துகிறவர்களாகவும், இன்னும் மற்ற ஊழியங்களுக்கான பொறுப்புத் தங்களிடத்தில் நம்பிக்கையுடன் ஒப்படைக்கப்படலாம் என்பதையும் வெளிப்படுத்துகின்றவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் பழங்களையோ (அ) பாலையோ அல்லது வேறு ஏதாகிலும் உணவையோ பரிமாறுவதன் மூலம், சபையாருக்கு ஊழியம் புரிந்திட ஓர் உதவிக்காரர் வெட்கப்படுவாரானால், அவர் உதவிக்காராய் இருப்பதற்குத் தகுதியற்றவர் மற்றும் மூப்பராய் இருப்பதற்கு ஆபத்தானவராகவும் இருப்பார்.

**(Q480:1) கூட்டங்கள் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கடமைகள்.**

கேள்வி (1916)-1- அதிகம் எண்ணிக்கையுள்ள சபையில், மூப்பர்கள் ஊழியத்தில் முழுமையாய் ஈடுபட்டிருக்க மற்றும் உதவிக்காரர்கள் அனைவரும் கூடத் தங்கள் வாய்ப்புகளுக்கு ஏற்ப முழுமையாய் ஊழியஞ்செய்துகொண்டிருக்க, (அதே சபையில்) வழிநடத்துகிறவர்கள் இல்லாமல் ஒரு கூட்டமானது இன்னமும் காணப்படுகிறதென்றால், மூன்று மூப்பர்கள் அடங்கின அச்சபையின் வழிநடத்துபவர்களின் குழுவானது/committee, சத்தியத்தில் தெளிவானவராக, வழிநடத்துபவராகச் செயல்படுவதற்குத் தகுதியுடையவராக, குழுவின் அங்கத்தினரால் அறியப்பட்டிருக்கும் ஒரு சகோதரனை, சபையார் மத்தியிலிருந்து, உதவியாளராக (assistant) நியமிப்பது சரியாக இருக்குமா?

பதில் - இம்மாதிரியான சூழ்நிலையின் கீழ் இப்படிச் செய்வது சரியானதாகக் காணப்படும் என்று நான் எண்ண வேண்டியவனாய் இருக்கின்றேன். கூட்டங்களை வழிநடத்துவதற்குத் தகுதியுடைய மூப்பர்களின் எண்ணிக்கையைச் சபையார் முடிவு பண்ணுவது சரியான காரியமாய் இருக்கும். எனினும் போதுமானவர்கள் இல்லையெனில் குழுவானது, அச்சூழ்நிலைக்குத் தகுதியானவர் என்று கருதும் யாரையேனும் தெரிந்தெடுக்க வேண்டியிருக்கும். எனினும் அவசரமான சூழ்நிலைகளைத் தவிர, மற்றபடி சபையார் நிர்ணயித்த எண்ணிக்கையை அவர்கள் தாண்டிவிடக்கூடாது. சாதாரணமான சூழ்நிலைகளில், நியமிக்கப்பட்ட மூப்பர்களே கூட்டங்கள் அனைத்தையும் தலைமை தாங்கி நடத்திட வேண்டும்; ஆனால் சில சந்தர்ப்பங்களில் தகுதியுடைய உதவிக்காரர் ஒருவர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அவசரமான சந்தர்ப்பத்தின்போது, வழிநடத்துவதற்கு நியமிக்கப்படலாம். ஆனால் தகுதிவாய்ந்த மூப்பர்களின் எண்ணிக்கையைச் சபையாரே நியமித்திட வேண்டும் என்பதும், சாதாரணமான சந்தர்ப்பங்களில் மூப்பர்களே கூடுகைகளை ஒழுங்குப்படுத்திட வேண்டும் என்பதும் நன்கு மனதில் நினைவுகொள்ளப்பட வேண்டும். அவசரமான சந்தர்ப்பங்களே ஒழிய மற்றப்படி, மூப்பர்களே செய்திட வேண்டும்.

**(Q473:2) சிறிய எண்ணிக்கையுள்ள சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டங்கள்.**

கேள்வி (1910)-2- புதிதாக ஆரம்பித்துள்ள சிறிய எண்ணிக்கைக் கொண்ட சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டமாக இருக்குமென நீங்கள் எதைக் கருதுகின்றீர்கள் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்?

பதில் - புதிதாய் ஆரம்பமாகும் வேத மாணவர்கள் அடங்கிய ஒரு சிறு சபையாருக்கு மிகவும் முக்கியமான கூட்டமாக நாம் எதைக் கருதுவோம்? சகோதரர்களே, வாரம் ஒருமுறை ஜெபம் மற்றும் சாட்சிக்கூட்டங்களைப் பெற்றிருப்பதையே மிக முக்கியமான கூட்டங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்று நான் கருதிடுவேன். ஆனால் இப்படியான எண்ணம் அருமையான நண்பர்கள் அனைவருக்கும் உதித்திருக்காது என்று நான் அறிவேன்; ஆனாலும் உங்களுக்குப் பிரயோஜனம் உண்டாகத்தக்கதாக பிட்ஸ்பர்கில் எங்களுக்குக் கிடைத்த அனுபவத்தை உங்களுக்குக் கூறுகின்றேன். சுமார் முப்பது அல்லது இருபது வருடங்களுக்கு முன்னதாக, சபைக்கு ஆவிக்குரிய ரீதியில் அதிகமாய்த் தேவை காணப்படுகின்றது என்பதைத் தெளிவாய்ப் பார்த்தேன் மற்றும் மற்ற வகையான போஷாக்குகள் சிலவற்றை உட்கொள்வதற்குப் பதிலாக, பலமான ஆகாரத்தை உட்கொள்வதற்கான தீவிரமான விருப்பம் காணப்பட்டதையும் நான் கண்டேன்; மேலும் துதிப்பதற்கும், ஜெபிப்பதற்கும் மற்றும் விசேஷமாய்ச் சாட்சி பகர்வதற்குமான கூட்டம் ஒன்றிற்காக ஒவ்வொரு வாரமும் ஓர் இரவினை - அதாவது நான் பரிந்துரைத்தப்படி புதன்கிழமை மாலை வேளையை அவர்கள் ஒதுக்கிக்கொள்வது மிகவும் பொருத்தமானதாக இருக்குமென நான் கருதுவதாக, அவர்களிடத்தில் கூறினேன்; அதுவும் நாம் முந்தைய காலங்களில், பல்வேறு சபை பிரிவுகளில் காணப்பட்டபோது சாட்சிக் கூறிவந்திருக்கும் வழக்கத்தின்படியாக இராமல், மாறாக சாட்சியானது புதியதாகவும், சமீபத்தில் நடந்ததாகவும் அவ்வாரத்தின் அனுபவங்களாகவும் இருப்பவைகளாகக் காணப்படும்படிக்கும், அவை கடந்த காலங்களின் அனுபவங்களுடைய சாட்சியாயிராதபடிக்கும் நான் பரிந்துரைத்தேன். அந்த வாரத்தில் நமக்கு என்ன அனுபவங்கள் காணப்பட்டன? ஞாயிற்றுக்கிழமையின் பாடமானது நம்முடைய ஜீவியத்தில் எத்தகைய தாக்கம் கொண்டிருந்தது? அவைகளை நாம் எவ்வளவுக்கு நடைமுறைப்படுத்த முடிந்தது? அப்பாடங்கள் தொடர்புடைய அனுபவங்களில் - நாம் ஜெயித்தோமா அல்லது தோல்வியைத் தழுவினோமா? என்பது பற்றின சாட்சியாயிருக்கும்படிக்கு நான் பரிந்துரைத்தேன். பிட்ஸ்பர்கின் நண்பர்கள் இதைக்குறித்து அவ்வளவு ஆர்வம் காட்டவில்லை என்பதை என்னால் காணமுடிந்தது; இது சிறந்த வகையான ஒரு கூட்டமாக இருக்குமோ என்று ஐயம் கொண்டார்கள்; இக்கூட்டம் மிகவும் சலிப்புண்டாக்கும் என்றும், இரசனையற்று இருக்கும் என்றும், எல்லாவற்றையும் ஒரு வாரத்தில் கூறி முடித்த பிற்பாடு, அதையே மறுபடியுமாக அடுத்த வாரத்திலும் திரும்பக் கூறவேண்டுமே என்றும் அஞ்சினார்கள். அவர்கள் கருத்தினை - அதாவது புதிதான, சமீபத்திய சாட்சிகளைப் பகரும் கூட்டம் எனும் கருத்தினைக் கிரகித்துக்கொள்ளவில்லை; எனினும் உங்களது ஊழியக்காரன் மற்றும் பேச்சாளராகிய என்னை மதிப்பதின் காரணமாக, நான் அறிவுறுத்தினவைகளுக்கு இசைவாக அவர்கள் வாக்குகள் (vote) அளித்தனர்; அதாவது கொஞ்சக்காலம் அல்லது மூன்று மாதங்கள் ஆகிலும் அக்கூட்டத்தினைப் பெற்றிருப்பதாகவும், ஒவ்வொரு புதன்கிழமை இரவன்று வேறு எதையுமல்ல, மாறாக சாட்சிக்கூட்டத்தினையே பெற்றுக்கொள்வார்கள் என்றும் மற்றும் அந்தவொரு குறிப்பிட்ட காலக்கட்டத்தின் முடிவில் அவர்கள் அக்கூட்டத்தினைத் தொடர்ந்து பெற்றிருக்க விரும்புகின்றார்களா என்பது தொடர்புடைய விஷயத்தில் வாக்கெடுக்கப்படும் என்றும் முடிவெடுத்தார்கள். இதன்விளைவு என்னவெனில்: அந்தவொரு குறிப்பிட்ட காலத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடைபெற்றபோது சபையார் பெருமளவில் அக்கூட்டத்தினை விரும்பும் நிலைக்கு வந்தடைந்திருந்தனர்; எனினும் மிக அதிகமான ஆவலைக்கொண்டவர்களாக அவர்கள் இன்னும் காணப்படவில்லை; ஆனால் ஒருவருடம் தாண்டினபோது அவர்கள் மிகவும் விருப்பம் அடைந்தவர்கள் ஆனார்கள் மற்றும் ஒருவேளை ஒரு வாரத்தில் எந்தக்கூட்டத்தை நடத்தாமல் விட்டுவிடலாம் என்று கேட்கப்பட்டால், பிட்ஸ்பர்க் சபையாரின் அருமையான நண்பர்களில் அநேகர் மற்றக் கூட்டங்கள் யாவற்றையும் இழக்கவும், தங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருப்பதாக தங்களால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளதான சாட்சிக் கூட்டத்தினைப் பற்றிக்கொண்டவர்களாயும் இருப்பார்கள் என்பதில் எனக்கு நிச்சயமே. இதுவே மற்ற அநேகருடைய அனுபவமாகவும் இருக்கும் என்று நான் நம்புகின்றேன் மற்றும் உங்களில் அநேகர் இது குறித்து ஆரம்பத்தில் சிந்தித்தவைகளுக்கு நேர்மாறாகவே பின்னர் ஏற்பட்ட அனுபவம் காணப்பட்டிருக்கும் என்று நான் அறிவேன். இப்படியாகவே உங்களுக்கும் காணப்படும் என்று நான் நம்புகின்றேன்; சாட்சிக்கூட்டங்களானது சமீபக்கால சாட்சியங்கள் அடங்கியதாக இருக்குமாயின், சாட்சிக்கூட்டங்களில் நாம் ஒருவர் இன்னொருவருடன் தொடர்பு கொள்கையில் ஒருவகையான ஆவிக்குரிய விருந்து காணப்படுகின்றது மற்றும் வழிநடத்துனர் கேள்விகளை எழுப்புவதின் மூலமும், ஒவ்வொருவனும் தனது வாய்ப்பு வருகையில் தனது சாட்சியினைச் சொல்ல அனுமதிப்பதின் மூலமும் -3089-

கூட்டத்தினைச் சுவாரசியமாக்கிடலாம். இதை அவர் ஒரு முனையிலிருந்து துவங்கி கலந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் சாட்சி பகருவதற்கான வாய்ப்பினை அளித்திடலாம்; இப்படியாக அவர்கள் அனைவரும் சாட்சியினை மதித்து உணர்ந்திட முடியும் மற்றும் இது அவர்களுடைய இருதயங்கள் அனைத்திற்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருகிறதாய் இருக்கும்.

இப்பொழுது இரண்டாவதாக அடுத்த மிக முக்கியமான கூட்டமாகப் பெரோயா ஆராய்ச்சி வகுப்புக் காணப்படும் என்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது. ஏன்? ஏனெனில் இக்கூட்டத்தில் ஒருவேளை நல்லதொரு வழிநடத்துனர் இருப்பாரானால் சபையாருக்கு மிகவும் சுவாரசியமாய்க் காணப்படும் விதத்தில் கேள்விகள் கொண்டுவரப்படலாம். இதற்கே வழிநடத்துனர் காணப்படுகின்றார். காரியங்களை வெளிக்கொண்டுவரும் விஷயத்தில் வழிநடத்துனருக்கு ஆர்வம் இருக்கவேண்டும், இல்லாவிட்டால் சபையார் வழிநடத்துபவர் இல்லாமலேயே நடத்திக் கொள்ளலாம் மற்றும் முழுவதுமாக, தானே அனைத்தையும் பேசிடும் ஒரு வழிநடத்துபவர், சிறந்த வழிநடத்துபவர் அல்ல. மாறாக மற்றவர்களை இக்கூட்டத்தில் பேச வைக்க முடிபவரே சிறந்ததொரு வழிநடத்துனர் ஆவார்; தான் போதுமானளவு பதில்களைப் பேசிடவில்லையென்றும், தான் அதிகமாய்ப் பேசிட வேண்டும் என்றும் வழிநடத்துபவர் எண்ணிடும் அபாயம் காணப்படுகின்றது. இது கொஞ்சம் இலட்சியங்கள் இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; அநேகமாகக் கொஞ்சம் பெருமை இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; அவன் மந்தைக்கு நன்மை செய்திட வேண்டும் என்றுள்ள தனது வாஞ்சையில், தனது தனித்துவங்கள் அனைத்தையும் மற்றும் பெருமை, இலட்சியங்கள் அனைத்தையும் அழித்துப்போட வேண்டும்; மற்றும் யாரொருவர் சபையாரைக் கேள்விகளினால் ஆர்வப்படுத்தி மற்றும் சுவாரசியம் அடையச்செய்து மற்றும் அவர்கள் யாவரிடமிருந்தும் பதிலை வரவழைத்து, இப்படியாகக் கேள்வி மற்றும் பதில் குறித்த முழுமையான புரிந்துகொள்ளுதலை அடையப்பண்ணி மற்றும் சபையாரிடமிருந்து கேள்விக்கான பதிலைப் பெற்றுக்கொண்ட பிற்பாடு பதில்களைச் சுருக்கிக் கூறுகின்றாரோ அல்லது புத்தகத்திலிருந்து பதில்களை வாசிக்கின்றாரோ அல்லது சிறந்த ஏதேனும் விதத்தில் பதிலைச் சுருக்கமாகக் கூறுகின்றாரோ - அவரே சிறந்த/வெற்றிகரமான வழிநடத்துபவர்கள் ஆவார் மற்றும் அவர்களே வெற்றிகரமான சபையாராகக் காணப்படுவார்கள்; காரணம் அவர்கள் பாடத்தைப் புரிந்துகொண்டவர்களாகவும் மற்றும் அவற்றை உணர்ந்துகொண்டவர்களாகவும் காணப்படும் நிலைக்குள் கடந்து வந்தவர்களாய் இருப்பார்கள். ஆனால் உங்களுக்குச் சரியான வழிநடத்துபவர் இல்லையெனில் காரியமானது முற்றிலும் வேறொரு காரியமாகக் காணப்படும். ஒருவேளை அவர் அக்கூட்டத்தின் நேரம் முழுவதிலும் பேச வேண்டும் என்று விரும்பினால் அல்லது கேள்விக்கான பதிலைச் சபையாரிடமிருந்து வெளிக்கொணர்வது எப்படி என்று அறியாதவராய் இருந்தாரானால், அவர் இத்தகைய ஒரு கூட்டத்திற்குத் தகுதியான வழிநடத்துனர் அல்ல. இந்தப் பாகமே எப்படிச் செய்யப்பட வேண்டும் என்று கற்றுக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஒருவேளை நம்மில் எவரேனும் கடந்தகாலங்களில் இதில் வெற்றிகரமாய்க் காணப்படவில்லையெனில், ஜனங்களை எப்படி ஆர்வமூட்டுவது, கேள்வியை இந்த ஒரு விதத்தில் மற்றும் அந்த ஒரு விதத்தில் முன்வைத்திடுவதற்கும் மற்றும் அவர்களைச் சுவாரசியப்படுத்திடுவதற்கும், அவர்களைப் பயமுறுத்தாமல் இருப்பதற்கும் கற்றுக்கொள்வோமாக. சிலர் வேறு விதத்தைக் கையாண்டு பின்வருமாறு கூறிடுவதைக் குறித்து நான் அறிவேன், அதாவது "உங்களது பாடம் உங்களுக்குப் புரியவேயில்லை; நீங்கள் இப்பாடத்தினைப் படிக்கவில்லை," என்று கூறுகின்றனர். குழந்தைகள் போல் அச்சுறுத்தப்படுத்துவதற்குச் சபையார் அங்கு வரவில்லை; அவர்கள் கர்த்தருடைய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளென அங்கும் காணப்படுகின்றனர்; அவர்கள் கூட்டத்திற்கு வந்திருக்கின்றனர் மற்றும் அவர்களுக்கு உதவிபண்ணப்பட வேண்டும்; அவர்களில் சிலருக்குப் படிப்பதற்குப் போதுமான நேரம் இருந்திருக்கவில்லை. அடுத்தக் கூட்டம் வருகையில் தாங்கள் கேள்விகளுக்கான பதிலைக் கொஞ்சம் அறிந்திருக்கத்தக்கதாக தாங்கள் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும் என்றும், "எனக்குப் பதில் தெரியாது" என்று கூறிடக்கூடாது என்றும் அவர்கள் எண்ணத்தக்கதாகச் செய்திடுங்கள். பாருங்கள் காரியத்தினைக் கையாளுவதற்கு வேறே வழிக் காணப்படுகின்றது. வழிநடத்துனனாக - "உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாய் நிறுத்தும்படிக்கு ஜாக்கிரதையாய் இரு." 'Study to shew thyself approved unto God, a workman that needeth not to be ashamed, rightly dividing the word of truth" என்று அப்போஸ்தலன் கூறுவதுபோல, கூட்டத்திற்கான வழிநடத்துனன் கற்றுவர வேண்டும். பவுல் சபையார் அனைவருக்குமாக எழுதவில்லை, ஒரு வழிநடத்துனனாகிய தீமோத்தேயுவுக்கு அவர் இவற்றை எழுதியுள்ளார். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாகவும், உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிற்கும்படி ஜாக்கிரதையாய் இரு." 'Study to shew thyself approved unto God, a workman that needeth not to be ashamed, rightly dividing the word of truth" - காரியத்தினைச் சரியாகவும், நிதானமாய்ப் பகுத்துப் போதித்தும், வெளிக்கொண்டுவர வேண்டும் மற்றும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிப்பது மாத்திரமல்ல, பாடம் தொடர்புடைய விஷயத்திலும் அனைத்தையும் வெளிக்கொண்டுவ- 3090

வேண்டும். பாருங்கள் இவையனைத்தும் ஒரு வழிநடத்துனனின் சரியான வழிமுறையின் ஒரு பாகமாய் இருக்கின்றது. வழிநடத்துனன் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் எப்படித் தன்னால் இதை நன்கு செய்யமுடியும் என்று பார்க்க வேண்டும்; எப்படி அனைத்துக் கேள்விகளின் விஷயத்திலும் சபையார் யாவரோடும் தான் ஒத்துணர்வுடன் காணப்பட வேண்டும் மற்றும் அவர்களிடமிருந்து தன்னைப் பிரித்துக் காண்பிக்காமலும் மற்றும் அவர்களைக் கீழானவர்கள் போல் நடத்தாமல், மாறாக சகோதரர்கள் என நடத்துவதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும். யார் சகோதரர்களில் ஒருவரெனச் சரியாய் நடந்துகொள்கின்றார்களோ அவர்களே மந்தை மத்தியில் மிகுந்த செல்வாக்குடையவர்களாய் இருப்பார்கள் என்று நீங்கள் கண்டுகொள்வீர்கள். நீங்களும் சகோதரர்கள்தான். நாம் அனைவரும் ஆடுகளல்லவா? நிச்சயமாகவே. நாம் மேய்ப்பர்களாகக் காணப்பட்டு மேய்க்கும் வேலையினை மாத்திரம் செய்பவர்களல்ல, மாறாக நாமும் ஆடுகளில் உள்ளடங்குபவர்களாகக் காணப்படுகின்றோம். கர்த்தருக்காக மந்தையினுடைய அவரது பிரதிநிதிகளெனப் பேசிடுவதற்கான சிலாக்கியத்தினை அவர் நமக்குக் கொடுத்துள்ளார் என்ற காரியமானது, நாம் இன்னமும் ஆடுகளாய் இருக்கின்றோம் என்ற உண்மையினை மாற்றுகிறதில்லை. நாம் மந்தையையோ அல்லது தேவனுடைய சுதந்திரத்தையோ இறுமாப்பாய் ஆளுகிறவர்களல்ல. நாம் இன்னமும் ஆடுகளாகவும், ஆட்டினுடைய சுபாவத்தைத் தொடர்ந்து பெற்றிருக்க வேண்டியவர்களாகவும் மற்றும் அதை வெளிப்படுத்த வேண்டியவர்களாகவும் காணப்படுகின்றோம். ஆகையால் இரண்டாம் முக்கியமான கூட்டம் பெரோயா ஆராய்ச்சி வகுப்பாய் இருக்குமென்று நான் கருதுகின்றேன். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளானது பல்வேறு வகைகளாகக் காணப்படக்கூடியவைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். உதாரணத்திற்கு வாட்ச் டவரில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைக்கும் உரிய அநேகக் கேள்விகளையுடைய பெரோயா ஆராய்ச்சித் தொடரினை நாம் வழங்கிவருகின்றோம். அநேகம் சபையார்கள் அப்பாடங்களுடன் இசைவுடன் வராமல் பின்தங்கிக் காணப்படுவதை நான் காண்கின்றேன். இவர்கள் தவறு செய்வதாக நான் கருதுகின்றேன். இவர்களில் சிலர் என்னிடம்: "சகோதரர் ரசல் அவர்களே நாங்கள் ஐந்தாம் தொகுதியிலேயே பின்தங்கி நின்றுகொண்டிருக்கின்றோம்; வேறு ஏதோ ஒரு தொகுதியில் பின்தங்கி நின்றுகொண்டிருக்கின்றோம். நாங்கள் முன்னேறி வந்துகொண்டிருக்கின்றோம்" என்று கூறுவதுண்டு. அது அவர்கள் காரியம்; நான் குற்றம் கண்டுபிடிக்கப் போகிறதில்லை; குற்றம் கண்டுபிடிப்பதும் எனக்கடுத்தக் காரியமல்ல. அது சபையாருடைய காரியமாகும்; அவர்கள் இப்படித்தான் பெற்றிருக்க விரும்புகின்றார்கள் என்றால், தேவன் அவர்களை ஆசீர்வதிக்கட்டும். அவர்களின் விருப்பப்படியே அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கட்டும்; ஆனால் அவர்கள் ஊர்வலத்தோடு கூடவே நடந்துவரும்படிக்கு நான் அறிவுறுத்துகின்றேன். நடன குழுவினரோடுகூட நடப்பதில் சில பயன்கள் காணப்படுகின்றது. உங்கள் நடைச் சீராக இருக்கும் மற்றும் அனைத்தும் நன்றாய் இயங்கும். இசைக்குழு முன்னே செல்கின்றது மற்றும் நீங்கள் அனைவரும் ஒருசேர சென்றுகொண்டிருக்கின்றீர்கள். கர்த்தருடைய அருமையான ஜனங்கள் அனைவரும் எங்குக் காணப்பட்டாலும் இந்தப் பாடத்தின் விஷயத்தில் ஒன்றுபோல் போய்க்கொண்டிருக்கின்றனர் என்று காண்பது அருமையாய் உள்ளது.

அநேகமாக அது மனவுணர்ச்சியின் காரியந்தான், அநேகமாக அதற்கு எந்த உண்மையான முக்கியத்துவமும் இல்லை; எனினும் மனவுணர்வின் அடிப்படையிலான ஒவ்வொரு சிறு காரியமும் அந்தக் காரியத்தில் அதன் தாக்கத்தையும், செல்வாக்கையும் பெற்றிருக்கும். நீங்கள் எந்தப் பாடம்வரை வந்திருக்கின்றீர்களோ, அதற்கும் புதிதாய் வெளியிடப்பட்டுள்ள பாடத்திற்கும் இடையிலான பாடங்களை நீங்கள் விட்டுவிடுங்கள் என்பது என்னுடைய ஆலோசனையாய் இருப்பதில்லை. மாறாக அந்த இடைப்பட்ட பாடங்களை, இன்னொரு மாலை வேளையில் கூடிப் பார்த்துக்கொள்ளுங்கள் என்பதேயாகும். தற்போதுள்ள பாடத்துடன் துவங்குங்கள் மற்றும் ஐந்தாம் தொகுதியை நீங்கள் முடிப்பது வரையிலும் மற்ற மீதிப்பாடத்தை இன்னொரு கூட்டத்தில் பாருங்கள். இதை ஒரு நல்ல ஆலோசனையாகக் காண்பீர்கள் என்று நான் நம்புகின்றேன். சகோதரர் ரசலோ அல்லது வேறு யாரோ ஆணையிட முடியாது. கர்த்தருடைய சித்தம் என்று நீங்கள் கருதிடும் எதையும் செய்திடுங்கள். வேறுவிதமாய் நீங்கள் செய்யும்படிக்குக் கர்த்தர் விரும்புவதாக நீங்கள் கருதுவீர்களானால் அதையே செய்திடுங்கள். மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபையார் என்ன செய்ய வேண்டும் என்று சகோதரர் ரசலால் தீர்மானிக்க முடியாது என்றும், சபையார் என்ன செய்ய வேண்டும் என்று சபையாரிலுள்ள யாரோ ஒருவரால் தீர்மானிக்கப்பட முடியாது என்றும், சபையாரே தங்களுக்காகத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்றும் நாம் நினைவில் கொள்வோமாக.

மேலும் அருமையான சகோதரர்களில் சிலர் கவனிக்கத் தவறும் ஒரு முக்கியமான காரியம் காணப்படுகின்றது என்று நான் கருதுகின்றேன். இவர்கள் ஆளுகிற கண்ணோட்டத்தில் மூப்பர்த்துவத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து மிகவும் அதிகமாய் எண்ணிக்கொள்கின்றனர். இது இயல்புதான்; இப்படித்தான் காணப்படும்; ஆனால் அதை அடக்கி வைத்துக்கொள்ளுங்கள்; பழைய மனுஷன் எழும்பிடுவதற்கு முயன்றுகொண்டிருப்பவனாக இருக்கின்றான்; அவனை அடக்கி வையுங்கள்; நாம் அனைவரும் புதுச்சிருஷ்டிகளென ஒரு நிலையில் காணப்படுகின்றோம் மற்றும் நாம்

--3091--

"புதுச்சிருஷ்டிகளென இங்குள்ள கர்த்தருடைய மந்தை அனைவரும், இச்சபையாரிலுள்ள அனைவரும், நான் கருத்துக்களைப் பெற்றிருப்பதுபோல அவர்களும், அவர்களது கருத்தினை வெளிப்படுத்திட நான் விரும்பிட வேண்டும்; நாம் அனைவருமே உரிமையைப் பெற்றிருக்கின்றோம்" என்று கூறிட வேண்டும். மேலும் நீங்கள் செய்பவைகளுக்கு எதிராகச் சபையார் எதிர்ப்பதில்லை மற்றும் நீங்கள் அவர்களது சுயாதீனங்களையும், உரிமைகளையும் கவனித்துக் காத்துக்கொள்வீர்களானால், இதை அவர்கள் மதித்துணர்வார்கள், மற்றும் நீங்கள் ஒருவேளை அவர்களது அறிவுரையைக் கேட்பீர்களானால், இதை அவர்கள் மதித்துணர்வார்கள். புரூக்கிளின் சபையாரின் மூப்பர், சபையாரை ஆதிக்கம் செய்ய ஒருவேளை முற்படுவாரானால், மூப்பருக்குக் கீழ்ப்படுகிற விஷயத்தில், புரூக்கிளின் சபையாரைக் காட்டிலும் வேறு எந்தவொரு சபையாரும், எந்தவொரு மூப்பருக்கும் அதிகமாய்க் கீழ்ப்படுவார்கள் என்று நான் எண்ணுகிறது இல்லை. ஆனாலும் புரூக்கிளினிலும் சரி, பிட்ஸ்பர்க்கிலும் சரி, எப்போதேனும் சகோதரர் ரசல், சபையாரை ஆதிக்கம் செய்ய முயன்றதுண்டோ? அவர் அறிந்திருக்கிறவரை ஒருபோதும் இப்படியாக அவர் செய்ததில்லை. அவர் இப்பொழுது எப்படி உங்களுக்கு ஆலோசனை கொடுத்துக்கொண்டிருக்கின்றாரோ அதுபோலவே, அவர் அவர்களுக்கும் ஆலோசனை கொடுத்திருந்திருக்கிறார்; எந்தவொரு விதத்திலும் கட்டாயப்படுத்த முற்பட்டதில்லை, மாறாக தகவல் கொடுக்கப்பட்ட பிற்பாடு சபையார் தங்கள் பகுத்துணர்வின்படி வாக்களிக்கச் செய்து மற்றும் அக்காரியம் தொடர்புடைய விஷயத்தில் சபையாருடைய தீர்ப்பே கர்த்தருடைய தீர்ப்பு என்று ஏற்றுக்கொள்ளவும் மாத்திரம் செய்திருக்கின்றார்.

**(Q161:1) மாநாடுகள் - நீங்கள் ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளுக்கு ஒப்புதலளிக்கின்றீர்களா?**

கேள்வி (1912)-1- ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளுக்கு நீங்கள் முழு ஒப்புதலளிக்கின்றீர்களா? வெகு சிலரே ஒவ்வொரு கூட்டத்திலும் பங்கெடுத்துக்கொண்டிருக்கும் நிலையில், அதிக எண்ணிக்கையில் கூட்டங்களை ஒரு சபையார் கொண்டிருக்க வேண்டுமென நீங்கள் எண்ணுகின்றீர்களா?

பதில் - ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகள் குறித்து எனக்குக் கொஞ்சம் தெளிவில்லை. ஆனால் தெளிவு இல்லாதபோது, காத்திருக்க வேண்டும் என்பதே, எனக்கு நான் கொண்டிருக்கும் கோட்பாடாகும். அவை பிரயோஜனமானதா அல்லது பிரயோஜனமற்றதா எனும் விஷயத்தினை நான் ஒப்பிட்டுப்பார்த்துக்கொண்டிருக்கின்றேன்; எனினும் நிச்சயம் இல்லாததால், அதைக்குறித்து நான் எதையும் சொல்வதற்கில்லை. ஐந்தாம் ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளைக் குறித்துக் குறிப்பிடும் கடிதம் ஒன்றினை நான் வாட்ச் டவரில் வெளியிட்டது எனக்கு ஞாபகம் இருக்கின்றது. அது சிலரால் ஒப்புதலாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. நான் கவனித்திருந்தேனாகில், கடிதத்தினுடைய அப்பகுதியினை வெளியிட்டிருந்திருக்க மாட்டேன் என்று எண்ணுகின்றேன். எனினும் என்னால் கிரகிக்க முடிந்த வரையின்படியான என்னுடைய அறிவுரை என்னவெனில்: இவ்விஷயத்தில் ஒவ்வொரு சபையாரும் பரத்திலிருந்து வரும் ஞானத்தினை நாடிடுவார்களாக; ஒருவேளை அது ஆவிக்குரிய காரியத்திற்குப் பிரயோஜனமானதாக இருப்பதாகக் கண்டுகொள்வார்களானால், அதைத் தொடருங்கள். அதன் பிரயோஜனத்தைக் குறித்து உங்களுக்கு ஐயப்பாடு இருக்குமானால், அதைத் தொடராதிருங்கள். ஒருவேளை நான் அறிவுரை கொடுக்கவேண்டுமெனில், என் அறிவுரை அதற்கு எதிராகவே காணப்படும்; எனினும் அதுகுறித்து நான் போதுமானளவுக்கு உணர்ந்துகொள்ளவில்லை என்பதால், எதிரிடையான அறிவுரையினை வழங்கிடுவதற்கு நான் ஆயத்தமாயில்லை.

ஒரு சிலரே பங்கெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், அதிக எண்ணிக்கையில் கூட்டங்களைப் பெற்றிருத்தல் தொடர்பாக நான் எண்ணுவது என்னவெனில்: சபையார் பொதுவாகக் கலந்துகொள்ளக்கூடிய பாட வகுப்புகளைப் பெற்றிருப்பது சிறந்ததாய் இருக்கும். பொதுவாகவே வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளில் அதிக எண்ணிக்கை இருப்பதில்லை. ஞாயிற்றுக்கிழமைக் கூட்டங்களைத்தவிர, மற்றப்படி நான் எப்போதுமே புதன்கிழமை இரவில் ஜெபம் மற்றும் சாட்சி கூட்டங்களைப் பெற்றிருக்க நண்பர்களை ஊக்குவிப்பதுண்டு. பின்வரும் வியாழக்கிழமையினுடைய மன்னாவினை அடுத்த கூடுகைக்கான மையக்கருத்தாகப் பயன்படுத்துவதில், தாங்கள் மிகுந்த ஆசீர்வாதத்தினை அடைவதாக அவர்கள் என்னிடம் கூறுகின்றார்கள். அவ்வாரத்தினுடைய அனுபவங்களானது, அடுத்துவரும் புதன்கிழமையன்று திரளான மற்றும் உதவிகரமான சாட்சியங்களைப் பகிர்ந்திடுவதற்கு ஏதுவாகின்றது. இந்த இடைவாரக் கூட்டங்களானது மிகவும் பரவலாக நண்பர்களினால் நடத்தப்பட்டு வருவதைக் காண்கையில் நாங்கள் மகிழ்ச்சியுறுகின்றோம்.

மற்றக் கூட்டங்கள் தொடர்பாக: பொதுவான கூடுகைகளில் வேதாகமப் பாடங்கள் வாசிக்கப்படுவதை நான் பரிந்துரைப்பதில்லை. ஒவ்வொருவரும் முன்னமே வீட்டிலோ அல்லது பேருந்தில் வரும்போதோ வாசித்துக்கொள்ள வேண்டும். சபையாராய்க் கூடி ஆராய்வது என்பது

முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். கேள்விகளை நிச்சயமாகவே நீங்கள் தனிப்பட்ட விதத்தில் படிக்கும்போது பயன்படுத்திக்கொள்ளலாம் மற்றும் அதிலிருந்து மிகுந்த நன்மையும் அடையலாம்; ஆனால் சபையாராய்க் கூடிப்படிக்கையில், கேள்விகள் பயன்படுத்தப்படுவது என்பது மிகவும் உதவிக்கரமாய் இருக்கும். நம்முடையது மிகவும் ஓட்டை ஒழுக்கான பாத்திரங்களாய் இருப்பதினால், நாம் வேதாகமத்தினைத் திரும்பத்திரும்ப வாசிப்பது பலன் தருவதாய் இருக்கும். மேலும் வேதாகமப் பாடங்களானது, வகைப்படுத்தப்பட்ட வடிவிலுள்ள வேதாகமம் மாத்திரம்தான்; தலைப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டுள்ள வடிவமைப்பானது என்று சொல்லப்படலாம். நீங்கள் டாண்களை/Dawns வாசிக்கையில், நீங்கள் வேதாகமத்தையே வாசிக்கின்றீர்கள். இவ்விதமாய் வேதாகமத்தினை வாசிப்பவர்கள், வேதாகம அறிவினை மிக அதிகமாய்ப் பெற்றுக்கொள்பவர்களாய் இருப்பார்கள். இங்குமங்குமாகத் தொடர்பில்லாமல் வேதாகமத்தினை வாசிப்பது என்பது, தலைப்புவாரியான ஆராய்ச்சி அளவுக்கு அதிகம் தகவல்களைக் கொணர்வதாய் இராது.

சகோதரர்களில் சிலர் தாங்கள் சார்ந்துள்ள சபைகளில், அவர்கள் டாண் ஆராய்ச்சி குழுக்களை/Dawn Study League உருவாக்கிக்கொண்டதாக எனக்குத் தெரிவித்தனர். இதன் ஒவ்வொரு அங்கத்தினனும், தன்னால் முடிந்தமட்டும் ஒவ்வொரு நாளும் இத்தனை பக்கங்களை வாசிப்பதாக ஒப்புக்கொள்கின்றான். இது நன்றாய்ப் போய்க்கொண்டிருக்கிறதென என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது. வாட்ச் டவரில் வெளியிட்ட கடிதம் ஒன்றில், யாரோ ஒருவர் கொடுத்திருந்த யோசனை உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அந்த யோசனையை அநேகர் பின்பற்றிக்கொண்டு ஆறு தொகுதிகளையும் ஆறு முதல் பன்னிரண்டு மாதக் காலம் - நாள் ஒன்றிற்கு இருபத்துநான்கு அல்லது பன்னிரண்டு பக்கங்கள் கொண்டு வாசித்து வருகின்றனர். தொகுதிகளை ஒவ்வொரு வருஷமும் வாசிப்பது என்பது, சத்தியத்தினை ஞாபகத்திலும், இருதயத்திலும் புத்துணர்வுடனும், தெளிவுடனும் வைத்துக்கொள்ளும். அநேகரால் தனிப்பட்ட விதத்தில் பின்பற்றப்பட்டுள்ளதான இத்திட்டமானது, சபையாராய்க் கூடி முயற்சிக்கையில், சந்தேகத்திற்கிடமின்றி நன்மையானதாய் இருக்கும்.

**(Q538:3) ஜெபம் - சாட்சிக்கூட்டம்.**

கேள்வி (1911 - Z.4833)-3- புதன்கிழமை மாலை சாட்சிக்கூட்டத்திற்கு எதைத் தலைப்பாக நீங்கள் பரிந்துரைப்பீர்கள்?

பதில் - இந்தக் கூட்டங்களுக்கு வேறுபாடற்ற தலைப்பைப் பெற்றிருப்பதின் நன்மை குறித்து நாம் பல ஆலோசனைகள் கொடுத்திருந்தோம். இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் இடம்பெறும் ஆலோசனையைத் திரும்பக்கூறும் விதமாக, சாட்சிக்கூட்டங்கள் சரியான விதத்தில் நடத்தப்படுகின்ற இடங்களிலும் மற்றும் ஒரு மாதக்காலமாகிலும் சாட்சிக்கூட்டங்களை நண்பர்கள் நடத்தின அனுபவம் காணப்படும் இடங்களிலும், சாட்சிக்கூட்டங்களைக் காட்டிலும் வேறெந்தக் கூட்டங்களும் மிகவும் உதவிகரமாக இருக்கவில்லை என்று நாம் தெரிவிக்கின்றோம். வருடங்களுக்கு முன்னதாக ஒருவர் எப்படி மனமாற்றம் அடைந்தார் அல்லது எப்படி ஒருவர் சத்திய அறிவினைப் பெற்றுக்கொண்டார் என்பது பற்றின சாட்சிகள் பகரப்படுதல் என்பது பொது மாநாடுகள் முதலானவைகளில் மிகவும் அருமையானதாய்க் காணப்படும்; ஆனால் இத்தகைய சாட்சிகளானது வாராந்திர வகுப்புகளில் மிகவும் சோர்வூட்டுகிற மற்றும் சலிப்பூட்டுகிற காரியமாய் இருக்கும் என்று நாம் நிச்சமாய்க் கருதுகின்றோம். இனிமேல் தாங்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் என்ன அனுபவங்கள் பெறப்போகின்றார்கள் என்று உங்களிடத்தில் தெரிவிப்பது என்பது நண்பர்களுக்கும்கூடச் சலிப்பூட்டுகின்றதாய்க் காணப்படும். முந்தின வாரத்தினுடைய நெஞ்சைத் தொடும் சம்பவங்களும், அனுபவங்களும் பற்றின தற்போதைய சாட்சியங்களே விரும்பப்படத்தக்கவையாகவும் மற்றும் புத்துணர்வூட்டுபவையாகவும் காணப்படும். இக்கூட்டங்களானது சபையாரிலுள்ள அனைவரையும் தேவனுடைய வழிநடத்துதல்களையும் மற்றும் தினந்தோறுமுள்ள, ஒவ்வொரு மணிநேரமுள்ள படிப்பினைகளையும் கவனிப்பதில் மிகவும் கவனம்கொள்ளச் செய்திடும். இப்படியாக தினந்தோறும் மிகவும் விலையேறப்பெற்ற அனுபவங்களானது அடையப்பெறக்கூடும் - அதாவது (ஜீவியத்தின்) அக்காரியங்களானது சற்றே கவனிக்கப்பட்டு அல்லது கவனிக்கப்படாமல் கடந்துபோவதினால் அடையப்பெறுவதைக் காட்டிலும், தினந்தோறும் மிகவும் விலையேறப்பெற்ற அனுபவங்களானது அடையப்பெறக்கூடும்.

இத்திட்டத்தினை/கூட்டத்தினைப் புதன்கிழமை மாலையில் பெற்றிருப்பதற்கு நாம் பரிந்துரைக்கின்றோம் மற்றும் ஒவ்வொரு புதிய வாரத்திற்குமான - அதாவது புதன் இரவு கூட்டத்துடன் நிறைவு பெறும் ஒவ்வொரு புதிய வாரத்திற்குமான தலைப்பாக வியாழக்கிழமையின் மன்னாவானது பயன்படுத்தப்படலாம்.

**--3093--**

இந்த யோசனையில், அடிமைத்தனத்திற்கடுத்த எதுவுமில்லை. இதை அங்கீகரிப்பவர்கள், இதை ஏற்றுக்கொண்டிடலாம் மற்றும் இதை அங்கீகரியாதவர்கள், வேறுவிதத்தில் செய்திடலாம். இது ஒவ்வொரு சபையாருடைய காரியமாய் இருக்கின்றது. vow/வாக்குறுதியும், அதன் ஜெபமும் தினந்தோறும் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரையும் கிருபையின் சிங்காசனத்திடத்திற்கு இழுத்துக்கொள்வதை அறிந்துகொள்வது நமக்கு மிகவும் அருமையானதாகக் காணப்படுவது மாத்திரமல்லாமல், இன்னுமாக இதேபோல் அனைவருமே ஒவ்வொரு வாரமும் கர்த்தருடைய வழிநடத்துதல்கள் குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்ததை அறிந்துகொள்வதும் இனிமையானதாகக் காணப்படும்.

**(Q709:2) சாட்சியம் - குறைவான சத்தமுடைய சகோதரர்கள் சாட்சியைக் கூறலாமா?**

கேள்வி (1915)-2- அனைவருக்கும் கேட்கும் விதத்தில் சத்தமாய்ப் பேசுவதற்கு விருப்பத்துடன் மற்றவர்கள் காணப்பட்டிருக்க, கேட்கும் விதத்தில் சத்தமாய்ப் பேச முடியாத ஒரு சகோதரன் அல்லது சகோதரி சாட்சிக்கூட்டத்தில் சாட்சியைச் சொல்லுவதற்காக நேரம் எடுத்துக்கொள்வது சுயநலமான காரியமாய் இருக்குமா? (இக்கேள்விக்கு அனைவரும் சிரித்தனர்).

பதில் - அதிகம் சத்தமாய்ப் பேசமுடியாதவர்கள் விஷயத்தில் கொஞ்சம் கடிந்துகொள்ளுதல் அவசியப்படுகின்றது. இப்படியாகத்தான் இக்காரியத்தினைப் பேசுவதே சரியென்று நான் எண்ணுகின்றேன். எழும்பி நின்று நீண்ட நேரம் சாட்சியினை மெல்லிய குரலில் கிசுகிசுவென்று சொல்வது, அதுவும் இது ஒரு சிலருக்கு மாத்திரமே கேட்கின்றதாகவும் மற்றும் அநேகமாக யாருக்குமே கேட்காததாகவும் இருக்கும் விதத்தில் சொல்வது கொஞ்சம் சுயநலமென்றே நாம் கருதிட வேண்டும். ஆசீர்வாதத்தினை அடையத்தக்கதாக நாட்டினுடைய பல்வேறு பாகங்கள் அனைத்திலிருந்தும் அதிகம் செலவு செய்து அருமையான நண்பர்கள் ஒன்றுகூடி வருகையில், நேரத்தினை வீணடிப்பது என்பது மிகவும் மோசமான காரியமாகும். இதே கொள்கையானது வீட்டுக்கூட்டங்களிலும் பொருந்துகின்றதாய் இருக்கின்றது. கேட்குமளவுக்குப் பேசிட முடியாதவர்களுக்கு நாம் அனுதாபங்கொள்ளுகின்றோம், ஆனால் அவர்கள் கர்த்தருடன் தனித்திருக்கையில் மெல்லிய குரலில் பேசிடுவது நலமாயிருக்கும்; இதனால் அவர்களுக்கும் பிரயோஜனமாயிருக்கும். யாருக்கும் புரியாத அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதைவிட, மற்றவர்களுக்குப் புரியும் வண்ணமான ஐந்து வார்த்தைகளைப் பேசுவதே தனக்கு விருப்பம் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறியுள்ளதை நீங்கள் அறிவீர்கள் (1 கொரிந்தியர் 14:19). இது ஒரு நல்ல படிப்பினையாகும். புரியப்படும் மொழியில் நாம் பேசிட வேண்டும் மற்றும் அனைவரும் தங்கள் குரலை எக்காளமென உயர்த்திக்கொள்வதற்குக் கற்றுக்கொள்ள முயற்சிப்பதற்கு நாம் யோசனை கூறுகின்றோம். சிலருக்கு மூன்று அல்லது நான்கு எக்காளங்கள் அளவு உயர்த்திட வேண்டியுள்ளது.

ஆனால் அன்பான சகோதரர்களே, உங்களில் யாரையாகிலும் சோர்வுக்குள்ளாக்க வேண்டுமென்று இது எதையும் நாங்கள் கூறிடவில்லை; ஏனெனில் சாட்சி பகிரப்படுவதினால் கர்த்தருடைய ஜனங்களுக்கு ஒரு மாபெரும் ஆசீர்வாதம் கடந்துவருகின்றது என்று நாம் நம்புகின்றோம். ஆகையால் ஒவ்வொருவரும் சாட்சி பகருவதற்கான சில வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது எங்களுடைய எதிர்ப்பார்ப்பாய் இருக்கின்றது. ஆனால் ஒருவேளை உங்களால் அனைவருக்கும் கேட்குமளவுக்குச் சத்தமாய்ப் பேசமுடியாதென்றால், சுமார் ஆறு வார்த்தைகளைப் பேசிவிட்டு, அமர்ந்து கொள்ளுங்கள் என்பது எங்களது அறிவுரையாக இருக்கின்றது. இப்படியாகக் கிறிஸ்துவுக்காய் எழுந்து நிற்பதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வீர்கள் மற்றும் ஓர் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக் கொள்வீர்கள் மற்றும் நீங்கள் யாருக்கும் இடையூறு பண்ணவில்லை என்பதையும் அறிந்துகொள்வீர்கள். உங்களது சாட்சியினைச் சுருக்கமாய்ப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

**(Q710:1) சாட்சி பகர்தல் - புத்திமதி கூறுவதற்கல்ல.**

கேள்வி (1911)-1- சாட்சிக் கூட்டத்தில் சகோதரர்கள் நற்கிரியைகளுக்கு ஏவப்படும்படி ஒருவருக்கொருவர் புத்திமதி கூறிட வேண்டுமா அல்லது தங்கள் சொந்த அனுபவங்கள், ஆசீர்வாதங்கள் முதலானவைகளைச் சொல்வதோடு நிறுத்திக்கொள்ளலாமா?

பதில் - புத்திமதி கூறுதல் என்பது ஒரு காரியமாகவும் மற்றும் சாட்சி பகர்தல் என்பது வேறொரு காரியமாகவும் காணப்படுகின்றது என்று நான் எண்ணுகின்றேன். சாட்சிக் கூட்டமானது, நிச்சயமாகவே புத்திமதி கூறப்படுவதற்கான கூட்டமாகக் கருதப்படக்கூடாது; உங்களது சாட்சியினை நீங்கள் பகிர்ந்து கொள்கையில், அந்தச் சாட்சியே, மற்றவர்கள் சரியான பாதையில் நடக்க முயற்சிப்பதற்கு ஏதுவாய்க் -3094-

காணப்படும் புத்திமதியாக அமையும் எனும் எண்ணத்தில்தான் சொல்லப்படுகின்றது. இது கொடுக்கப்பட முடிகின்ற மிகவும் ஆற்றல்மிக்க சாட்சியங்களில் ஒன்றாகும். பயபக்தியான வாழ்க்கை வாழ்பவனது அனுபவங்களானது அந்தப் பக்தியான ஜீவியத்திற்குச் சாட்சியைப் பகருகின்றதானால், அந்தச் சாட்சியைப் பகருதல் என்பது, நல்லதொரு ஜீவியம் ஜீவிப்பதற்கு மற்றவர்களுக்கு, இருப்பதிலேயே சிறந்த புத்திமதியைக் கொடுக்கிறதாகக் காணப்படும். அதேவேளையில் ஒருவன் தனது சாட்சியினைப் பகிர்ந்தபிற்பாடு, ஒன்று அல்லது இரண்டு புத்திமதிகளைச் சேர்த்துச் சொல்லுவது குற்றமாக இருக்கும் என்று நான் கருதுகிறதில்லை. ஆனால் சாட்சிபகிர்வது என்பது புத்திமதி கொடுப்பதாய் இராமலிருக்க, சாட்சிபகிர்வது என்பது புத்திமதி கூறுவதற்குரியது என்று எண்ணுவதில் அநேகர் தவறு செய்கின்றனர் என்பதும், அதிகமாய் அக்கூட்டங்களில் புத்திமதி கூற முற்படுவது தவறு என்பதும் உண்மையே. சாட்சியங்கள் பகிரப்படுவதே நலமென நான் எண்ணுகின்றேன்.

**(Q471:2) கூட்டங்கள் - சாட்சிக்கூட்டங்கள்.**

கேள்வி (1910)-2- இது நீங்கள் பரிந்துரைத்ததான முதலாம் கூட்டம் தொடர்புடைய கேள்வியாகும். ஒவ்வொரு இடமாகப் போய்வருகையில் சகோதரர்கள் அதைச் சரியாய்ப் புரிந்துகொள்ளாததைக் காண்கிறேன். அவர்கள் ஒரு தலைப்பைத் தெரிந்துகொண்டு அதைச் சாட்சிக்கூட்டத்திற்கான தலைப்பாகக் கலந்தாய்வு பண்ணுகின்றனர். இது சரியான கருத்தாகுமா அல்லது சரியான கருத்து எது?

பதில் - சாட்சிக்கூட்டம் தொடர்பாக: சாட்சிக்கூட்டம் என்றால் என்ன? அலிகெனியிலுள்ள நண்பர்களுக்கான நம்முடைய பரிந்துரையென அந்தவொரு கூட்டத்தில் நான் முன்பு குறிப்பிட்டிருந்தது என்னவெனில் - அவர்கள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பிரசங்கத்தினை/செய்தியினை அவ்வாரம் முழுவதும் சிந்திப்பதற்கான விதையென மனதில் பெற்றிருக்க வேண்டும்; பின்னர் அவர்கள் சாட்சிக்கூட்டத்திற்கெனப் புதன்கிழமை மாலையன்று கூடிவருகையில், அவர்கள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடம் தொடர்புடைய அனுபவங்களைப் பெற்றிருப்பார்கள்; இதனால் தாங்கள் ஞாயிற்றுக்கிழமையன்று கேட்டுக்கொண்டவைகளின் பிரயோஜனம் அனைத்தையும் மற்றும் அப்பாடத்தோடு பின்னிப்பிணைந்துள்ள தங்கள் சொந்த அனுபவங்களின் பிரயோஜனம் அனைத்தையும் பெற்றுக்கொள்வார்கள் மற்றும் அவைகள் புதன்கிழமை இரவின்போது, அவர்களது மனதில் மிக முழுமையாய்க் காணப்படும். மேலும் புதன்கிழமை இரவன்று அவர்கள் கூடிவருகையில், காய்கறிக் கடைக்காரனோடோ அல்லது இறைச்சிக் கடைக்காரனோடோ அல்லது தங்களது தொழிலிலோ அல்லது தனிப்பட்ட ஆராய்ச்சியிலோ அவர்கள் பெற்றுக்கொண்ட ஜீவியத்தின் அனுபவங்கள் அல்லது நிகழ்வுகள் எதுவாயினும், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பிரசங்கப்பாடம் தொடர்புடையதாகச் சுவாரசியமாய்க் காணப்படும் எதுவாகிலும் - அதுவே அவர்களது கிறிஸ்தவ அனுபவம் தொடர்புடையதாக அவர்கள் பகிர்ந்திடும் சாட்சியாய் இருக்கும்; ஒருவேளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடம் தொடர்பாக அவர்கள் எந்த அனுபவத்தையும் பெற்றிருக்கவில்லையெனில், அவர்கள் சொல்லவிரும்பும் எதுவும் பகிரப்படலாம்; ஆனாலும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் பாடமானது இருதயத்தில் பதியப்பெற்று என்றென்றும் நிலைத்திருக்கத்தக்கதாக, அப்பாடம் சம்பந்தமான அனுபவங்கள் பகிரப்படுவது விரும்பத்தக்கவையாகும். புதன்கிழமை மாலைக்கூட்டத்திற்குப் பிற்பாடு அதே சிந்தனைகளானது அடுத்த ஞாயிறுவரை மனதில் தொடர்ந்து சிந்தித்துக்கொள்ளப்படலாம்; இப்படியாக வாரம் முழுவதும் சிந்தனைகள் ஒருமுகப்படுத்தப்பட்டு, அவை முழுமையாக மெல்லப்பட்டு ஜீரணமாகுகின்றது. இப்படியான விதத்திலேயே அக்கூட்டம் பிரயோஜனமானதாய்க் காணப்படுகின்றது. ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு, அதைக் கலந்தாராய்வது சாட்சிக்கூட்டமே அல்ல. சாட்சி என்பது ஒரு பாடம் சம்பந்தப்பட்ட தன்னுடைய சொந்த அனுபவத்தை ஒருவர் பகிர்ந்துகொள்வதாகும்.

---

# சிறுநரிகளும், செம்மறி ஆடுகளும்.

**காட்டுக்குள்**
காட்டுக்குள்ளே சிறு நரிகள் சுத்தி வருகுது,-
விசுவாச வீட்டுக்குள்ளே நுழைந்துவிடசமயம் பாக்குது.
இலைதழை பூகாய் கனிகளெல் லாம் தின்றுவிட்டாலும்,
வேரைக்கூட விட்டிடாமல் மென்றுவிட்டதே
தின்றுதின்றுமுழுவதையும் கெட்டழிக்குதே
திராட்சைத் தோட்டம் பலன்கொடாமல் வெறிச் சோடிவிட்டதே.
நரிகள் போன்றே நமது குற்றம் பழக்கமாகிடும்
நன்மை எதையும் வளர்த் திடாமல் அமிழ்த்தி வைத்திடும்.
குற்றம் சிறிதாய் இருக்கும்போதே களைந்திடல் வேண்டும்:,
தாமதித்தால் நம்மையே அவை வீழ்த்தி விட்டிடுமே.

## சிறு நரி 1.பொய் (LIE)

பொய் கூறல் சிறுநரியில் முதல் ஆளாகும்,
பெரிய தீங்கைக் கொண்டுவரும் கவனம் வேண்டும்,
பொய்யைச் சொல்லும்போதே நீதி மான்கள் விழுவார்,
சாத்தான்தானே அப்போதே இப்பொய் உருவில் வந்தான்:,-
நீங்கள் சாகவே சாவதில்லை, முதலாம் பொய் சொன்னான்,
பொய்யைச் சொல்லி ஏவாளை முதலில் ஏமாற்றி சாகடித்தான்,
அவனை நம்பியே மோசம் போனது மனுக்குலம் அனைத்தும்,
இப்போ வருந்தி வருந்தி செத்திடுதே காரணம் என்ன?
அற்பப் பொய்யோ சின்னதுதான்,
முன்னேற்பாடாய் தடுத்திடல் வேண்டும்
பொய் மேல் பொய்யாய்சொல்லச் சொல்ல
மாபெரும் பொய்யனாய் ஆக்கிவிடும்,
கவனம் கொள்வீர் சோதரரே,
மாபெரும் பொய்யனாய் ஆகுமுன்னே
இந்தப் பழக்கம் விட்டிடுவோம், முதலாம் நரியை வெற்றி கொள்வோம், தாமதம் வேண்டாம் .
நீதி. 30:8

## சிறு நரி 2.தீமை பேசுதல். (EVIL SPEAKING)

தீயவை பேசுதல் 2ம் நரியாம், என்ன செய்திடும்?
எதுவானாலும் பார்த்ததை அப்படிக் கூறாவிட்டால் என்ன நேரிடும்?
பாதியை மறைத்து மீதியைக் கூறினால் என்ன நன்மை வந்திடும்?
தவறாய் தானே புரிந்துவிடும், உண்மை மறைந்துவிடும்.பிறகு
காணும்படியே செய்தாலுமே வஞ்சகம் தலை தூக்கிடும்,
தீயனவற்றைப் பேசாமலே உறுதியுடன் நாம் நின்றிடுவோம்,
இந்த நரியைப் பிடித்துக் கூண்டில் அடைத்தே வைத்திடுவோம்.
சங்.34:13; தீத்.3:2

## சிறு நரி 3.அகந்தை.(தற்பெருமை) (PRIDE)

3ம் நரியோ தற்பெருமை, ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும்.
எச்சரிக்கை செய்திடுமே, நமக்கோ பெரிய தீங்காகும்
அதன்வழியில் நாம் சென்றாலே நெறியில்லாமல் வழிநடத்தும்,
மனதின் நடுவில் அமர்ந்து கொள்ளும், ஆணவம்தானே தலைதூக்கிடும்,
பழைய சாத்தானைப் போன்றதுவே அவனை நன்கு அறிந்திடுவோமே
சாத்தானுக்கெதுவும் கிடைத்திடாது, அகந்தையினாலே விழுந்துவிட்டான்,
செருக்குடன் நாமே நடந்துவிட்டாலே குருடனைப்போலவே விழுந்திடுவோம்,
அகந்தை நமக்கு வேண்டாமே -அதை உள்ளே வரவிட மறுத்திடுவோமே.
நீதி16:18

## சிறு நரி 4.சோம்பேறித்தனம் (LAZINESS)

4ம் நரிதான் சோம்பல் குணம்:,
இந்தக்குற்றத்தை வெறுத்திடுவோம் ,
வேலைவருகின்ற நேரமெல்லாம்
எப்போதும் தட்டியே கழித் திடுவான்:,
சின்னச்சின்ன வேலை என்றாலும்,
தப்பித்து வெளியே ஓடிடுவான்,
தூக்கம், தூக்கம் எப்போதும்,
தூங்க வேண்டியே நேரம் பார்ப்பான்,
மனமோ சற்றே குழப்பம்கொண்டால்
காரியம் அனைத்தும் சோம்பிவிடும்,
அவனால் ஏதும் பயனில்லை
என்பது உண்மை, ஊரறியும்.
அவனைப் பள்ளத்தில் தள்ளிடுவோம்,
சுறுசுறுப்பாகவே இருந்திடுவோம் ,
காலத்தாலே பலன் பெறுவோம்,
விழிப்புடன் வேலையை செய்திடுவோம்,
சோம் பேறி சோறுகேட்டான், தின்றுவிட்டு திண்ணைக்கேட்டான் என்றில்லாமல் ,
இதனை நாம் தான் மேற் கொள் வோம்,நான்காம் நரிதனை வென்றிடுவோம் . நீதி.6:6-10

## சிறு நரி 5.கோபம். (ANGER)

5ம் நரிதான் கோபமாகும் ,இதுவோ செழித் தே வளர்ந்தோங்கிடும் ,
மனநிலை அனைத்தும் மோசமாகிடும்,எளிதில் பைத்தியம் பிடித்துவிடும்,
அடுத்தவருடனே பழகிடாமலே அவனோ தனிவழி நடந்திடுவானே,
வாக்குவாதங்கள்,அடிதடிகள், பொருட்களை எடுத்தே வீசிடுவானே,
கோபம் என்பதும் பாவமாகும், உடன் பிறந்தோரைக் கொன்றுபோடும் ,
கொஞ்சம் கொஞ்சம் இரக்கம் போதும், கோபம் இடத்தை காலி செய் திடும்,
சுயக்கட்டுப்பாட்டை இழந்துவிட்டாலே,தடுப்பாரற் றே வீழ்ந்திடுவோம்,
துன்பங்களிலே மாட்டிக் கொள் வோம்,நண்பர்களின்றியே வாழ்ந் திடுவோம் ,கோபதாப வாழ்வே வேண்டாம்,தானத்தில் சிறந்தது சமாதானம். இதனை நாமேஉணர்ந்துகொண்டாலே,வாழ்க்கை மிகவும் எளிதாகும்.
நீதி.15:1;16:32

## சிறு நரி 6.கீழ்ப்படியாமை. (DISOBEDIENCE)

இந்த நரியோ தந்திரக்காரன்,
ஆபத்து வழியிலே விளையாட அழைப்பான்,
விதிகளை மீறச்செய்திடுவான்
அவன் பெற்றோருக்கடங்கியே நடந்திடமாட்டான்,
அவர்களைவிடவும் அறிவாளி - நான்
என்றே கூறி சென்றிடுவான்.
அவனது வாழ்நாள் முடிந்ததுவே, பெருந்துன்பமாகவே அமைந்ததுவே.
எல்லைக்கப்பால் சென்றதனாலே, வேட்டைக் காரர்துரத்திச் சென்றார்,
சுற்றி வளைத்தே சுட்டுவிட்டார், யாருக்குத் தெரியும் அவனது வாழ்நாள்?
இன்னும்கூட வாழ்ந்திருக்கலாம், அவனே காலால் உதைத்து விட்டான்,
இப்போ கீழ்ப்படியக் கற்றுவிட்டான்,
கண் கெட்டபின்பே அறிவு வரும்,
அதனால் அவனுக்கெதுவும் பயனில்லை, நீயும் உணர்ந்தே திருந்தி நடந்திடுவாயே.
1சாமு.15.:22
கொலோ:3:20

## சிறு நரி 7.கவனமின்மை. (CARELESSNESS)

கவனமின்மையே 7ம் நரி, என்னசொன்னோம், என்னப் படித்தோம் ,
விழிக்கும்போதும், துயிலும்போதும், அறையில் பார்த்தால் போதும்,
அனைத்தும் சிதறிக் காட்சிதரும், அவரது வேலையில், அவரது விளையாட் டில்,
அவரது குடும்பம் அலைச்சலைக் காணும்.
கதவை அறைந்தே சாத்திடுவார், சத்தம் மிகவே எழுப்பிடுவார்
ஆடையில் கூட அலட்சியம் காட்டி, கசங்கிய ஆடைகள் அணிந்திடுவார்,
நாமோ கவனமாய் இருந்திடுவோம்,
அழகாய் காட்சி தந்திடுவோம்,
அனைத்திலும் சிறந்த எண்ணத்துடன்,
அலட்சியத்தை விலக்கிடுவோம்,
இந்தப்பழக்கம் தோற்றுவிடும், கவனம் வந்தே அமர்ந்துவிடும்.
ஏசாயா32:9, Isa 32:10

## சிறு நரி 8.தாமதம்.(LATENESS)

எப்போதுபார்த்தாலும் தாமதமே,
எந்தநாளாய் இருந்தாலும்,
முந்தியோ, பிந்தியோ,
எந்த நிலையில் இருந்தாலும்,
காலம் தாழ்த்தி, தாமதித்தே,
எப்போது பார்த்தாலும் தாமதமே, சுவற்றில் உள்ள கடிகாரம், எதற்கென்றர்த்தம் தெரியலையா?
டிக் டிக் மட்டுமே கூறிடுமோ? கடைசீ மட்டும் ஏன் காத்திருக்க வேண்டும்,
தாமதம் என்பது பெருந்துக்கம், இந்த எட்டாம் நரிதன்னின்
தலை எழுத்தை நாம்மாற்றிடுவோம்,
சீக்கிரம் பயணம் செய்திடுவோம்,
முன்பே சென்று சேர்ந்திடுவோம்
தாமதத்தை நாம் தவிர்த்திடுவோம் .
நீதி.13:4

## சிறு நரி 9.போஜனப்பிரியன். (GLUTTON)

ஒன்பதாம் நரி என்ன தெரிந்திடுவாய், இது ஒரு அடிமை விலங்காகும்,
வயிறேபோதும் என்றிருப்பான், இடைவெளியின்றியே தின்றிடுவான், கொழுப்புமிகுந்த கறிபோன்றே பெருந்தீனிக்காரன் இருந்திடுவான்,
அவனது வாழ்நாளைக் குறைத்துக்கொள்ள, இன்னும் பலவழி கண்டிடுவான். அதிகமதிகமாய் தின்னத் தின்ன,
இருதயம் முதலில் பாதிக்கும், மூளை பிறகே பாதிக்கும். பெருந்தீனி உடலை பருக்கச்செய்யும் , நொறுக்குத் தீனி வேண்டாமே,
நொறுங்கத் தின்ன முயல்வோமே. போஜனத்தை நாம் குறைத்துக்கொண்டால்,
நாம் எதற்கும் அடிமையில்லை.
நீதி.23:21

## சிறு நரி 10.திருட்டு.(STEALING)

திருடும் குணமே நரி பத்து, பணத்தின் மீதே நாட்டம்  உண்டு,
திருடுதல் என்ற பலவீனம், தைரியமுடனே தொடங்கிவிடும்,
தானே சரியென நினைத்துக்கொள்ளும்,
அவன்தான் திருடன் என்பதனை எவரும்  எளிதாய் அறிவதில்லை,
அவரின் போக்கும் சரியில்லை, அவருடன் நிற்பதும் முறையில்லை, அவரது குற்றம் கண்டு கொண்டார்
இப்போது அவரை பிடித்துவிட்டார்,  ஜாமீன் கிடைக்க வழி இல்லை, எனவே ஜெயிலில் மாட்டிக்கொண்டார்,
வெளியில் வரவும் வழியில்லை, திருடியதற்காய் மனம் வருந்தவில்லை, மாட்டிக் கொண்டு முழிக்கின்றார்,
இப்போ வருத்தம் கொள்கின்றார்.

## சிறு நரி 11.புகார். (COMPLAIN)

புகார் சொல்வதும் ஒரு நரியாம், அவருக்கேழாம் வயதினிலே
புகார் என்றே பெயர் வைத்தார், அவரது குற்றம்  என்னவென்றால், எரிச்சலூட்டி
கோள் மூட்டிவிட்டார் எனக்கிதுவேண்டாம், அது எனக்கு வேண்டாம் என்றே எப்போதும்  சொல்லிடுவார்,
நாயை வீணாய் அடித்திடுவார், பூனையைக்கூட அடித்திடுவார்,
காலை இரவு எதுவாயினும், தொடர்ந்து அதையே செய்திடுவார்.
இவரைவிட்டு விலகிடுவோம், அவரிடம் நாம் ஏன் மாட்ட வேண்டும்?
அவரைப்போன்று நாமில்லை, நாமும் புன்னகை செய்திடுவோம், முணு முணுப்பும் ஓர் பாவம் அன்றோ?

## சிறு நரி 12.வீணாக்குபவன்,ஒன்றுக்கும் உதவாதவன் (WASTER)

எதற்கும் உதவா மனிதனவன், அவனும் தானே நரியாவான்,
அவனது அவட்சிய செயல்களினால், உணவைக் கூட வீண்செய்வான். விளக்குகள் அனைத்தையும் எரியவைப்பான், தேவை இன்றியே குழாய் திறப்பான்,
நீரைத்திறந்து ஓட்டிவிடுவான், எந்தக் காரியம் தப்பானதோ,
அதையே விரும்பியே செய்திடுவான், காலத்தை வீணாய் கழித்திடுவான், பணத்தை
ஊதாரியாய் செலவழிப்பான், வாழ்நாள் முழுவதும் வீணாக்கி,
வெட்டிப்பொழுது போக்கிடுவான், இவனைக் கண்டு பிடித்தே நாம்
நம்மையே சரியாய் ஆக்கிவிட்டால், இந்தப் பழக்கம் மாறிவிடும்,
நாம் ருசிக்கும்  நன்மைகளை, எதையும்  வீணாய் ஆக்காமல், எல் லாவற்றையும் பயன்செய்வோம்.
நீதி18:9

## சிறு நரி 13.பொறாமை. (ENVY)

நல்லது செய்ய பொறாமைப்படு,
உலகத்தார்கள் சொல்வார்கள்,
வேலையிலோ, விளையாட்டினிலோ,பொறாமைகொண்டே நாள் முழுதும்,
அண்ணன், தம்பி எல்லாரிடமும் பொறாமை கொண்டே விலக்கி விடும், பொறாமை என்பதும் பாவமாகும்,
பார்வையில் பொறாமை புகுந்துவிட்டால், நண்பரைக்கூட நம்பமாட்டார், பிறரது பொருளைக் கண்டுவிட்டால்,
பேராசைக்கொண்டே பெரு மூச்சுவிட்டு, தனக்கே சொந்தம் ஆக்கிக்கொள்வார், கெட்ட எண்ணம் இப்படித்தானே
வளர்ந்துவந்தே கறையாக்கும்,
பொறாமை உன்னையும் கறைபடுத்தும்
இதனையும் விலக்கிட வேண்டுமப்பா.
நீதி.14:20; நீதி.27:4

## சிறு நரி 14.தன்னலம். (SELFISHNESS)

தடுக்க வேண்டிய மற்றொரு நரி, தன்னலம் என்பது அதன் பேராம்.
பேராசைகொண்ட சிறுநரியோ, தனக்கென அதிகம் ஒதுக்கிக்கொள்வார், யாரைப்பற்றியும் கவலையில்லை, பிறருக்கில்லை என்றுமில்லை, அடுத்தவர் எப்படி வாழ்ந்திடுவார்?
எனக்கே எனக்கு, நான் வாழ்ந்தால் போதும், எப்படி எல்லாமும் பெற்றிடலாம்? என்றே எப்போதும் யோசிப்பார், வேறெவருக்கும் கொடுக்காது. நம்மிடம் தன்னலம் இருந்துவிட்டால், விழுவது சுலபம் தெரிந்து கொள்வாய், இது ஒரு தீமை அறிந்திடுவாய் ,
விதை போட்டு மரமாய் வளர்க்க வேண்டாம்,
நன்மைகள் வருவதைத் தடுத்து விடும்,
நமது குணத்தையே மாற்றிவிடும். இந்தப் பழக்கம் நீக்க வேண்டும்,
எப்போதும் நமக்கு சுயநலம் வேண்டாம், அன்பு ஒன்று இருந்துவிட்டாலே தானாய் பிறர்நலம் பிறந் துவிடும்.
நீதி.21:26

காட்டுக்குள்ளே சுற்றும்நரிகள் ஏராளம், நம் வாழ்வில் புகுந்து விட்டால், தீப் பழக்கம் வளர்ந்திடுமே, இதனால்
ஏற்படும் தலைக் குனிவு, இன்றே நற் - பழக்கமதைக் கற்றிடுவோம், நம் வாழ்க்கைக்குள் செம்மறிகள் வளர்த்திடுவோம்."
நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால் கிடைக்கு இரண்டாடு
கேட்கும் ." நரிகளை நம்மைவிட்டே விரட்டிட வேண்டும்,
நற்பழக்கமெல்லாம் நமக்குள்ளே பழக்கிட வேண்டும்.
விட்டால், தீயப்பழக்கம் வளர்ந்திடுமே,
நாட்டுக்குள்ளே வளரவேண்டும் செம்மறிகள், நற் பழக்கம் வளர்த்திடுமே அம்மறிகள்,
நன்மைகளைச் செய்திடுமே ஒவ்வொருவரோடும் ,
தோற்றத்திலே சிறப்புடனே காட்சி கொடுக்கும்,
இனிமையான பண்புகளைப் பெற்றிருக்கும், எனவேதான் இவைகளெல்லாம்,
கருணையினை நமக்களிக்கும் நற்பண்புகளென்போம்.

## செம்மறி 1உண்மை(அ)சத்தியம்(Truth)

இந்தச் செம்மறிக்கிளமையிலே சத்தியம் என்றே பெயரிட்டார்,
ஒரு பொய்யாலே லாபம் வருமென்றால்,
இவரோ அதனைவெளிக் கொணர்வார்,
கொணரும் போதில் வலி பிறக்கும், எனினும் சத்தியம் நிலை நிற்கும்,
பொய்கள் எப்போது பிறந்தாலும்,
உண்மையை மறைக்கவியலாதே
பதிலோ ஆம் எனில் ஆம் என்கும்,
இல்லை என்றால் அது இல்லை என்கும்.

அவர் வார்த்தையோ என்றும் நிலை நிற்கும்,
நம்மைச் சுற்றிலும் பாதுகாக்கும்.
உண்மையால் நமக்கோ மனப்போராட்டமே,-ஆனால்
வாழ்க்கையோ திருப்தியாய் வாய்த்திடுமே. இந்த ஆடோ நம் எல்லாரின் பார்வையில்,
ஒழுக்கத்தின் உருவினில் பெரிதாய் வளரும்,
பொய்யை இழிவாய் கருதச்செய்யுமே,
சத்தியமே என்றும் ஜெயம் பெறுமே.
நீதி:12:7; சங் :15:1,2

## செம்மறி 2.கட்டுப்பாடு(அ) சாந்தம்(Moderation)

நம் அடுத்த ஆடோ கட்டுப்பாட்டில் வளர்த்த ஆடாகும்,
சாந்த குணம் என்பதுதான் அதனது பேராம்,
கட்டுக்கடங்கா ஆடென்பதில்லை,
தேனீயைப் போலவே சுறுசுறுப்பாகவே இருந்திடினும்,
சாந்தமும் உற்சாகமும் என்றும் குறைவதே இல்லை,
இவ்விரண்டிற்கும் இடையிலேயே சரிசமமாய்,
ஆதனதின் பகுதியினை செயல்படுத்தும்,
சூரிய ஒளிக்கற்றையிலே நாம் மூழ்கிவிடும்போதினிலே,
வெப்பம் கூடநம்மையே அதிகம் தாக்கும், மழை வந்தால், பூக்களெல்லாம் மகிழ்ச்சி கொள்ளுமே, அது
அதிகரித்தால் பூவும் கூட சோர்ந்து போய்விடும், அதிக உழைப்பும் அதிக விளையாட்டும் ஆபத்தாகலாம்,
எதுவும் ஒரு அளவுக்குள்ளே இருந்திடல் வேண்டும், சாந்தகுணம் எல்லாருமே பெற்றிடல் வேண்டும் .
பிலிப்:4:5

## செம்மறி 3.சுறுசுறுப்பு(Busy)

இந்த ஆட்டுக்குட்டியோ மேய்ப்பனைமட்டும் பின்தொடரும்,
அக்கம் பக்கம் வேலையில்லை, பச்சிலைகளை மேய்வதில் ஆசையில்லை,
வீணாய் பொழுதைக் கழிப்பதில்லை, எந்த வேலையானாலுமே, கொடுக்கப்பட்ட வேலைதனை
முழுமனத்துடனே செய்திடுவான், வேலையில் திளைப்பதே நன்மை என்பான்,
கடிகாரமுள் போல் இருந்திடுவான், சுறுசுறுவெனவே செயல்படுவான்,
அவனது தொழிலின் நேர்த்தியாலே அதிக ஊதியம் கிடைத்ததுவே,
நமக்குச் சரியென தோன்றுவதை வெளிச்சம் உள்ள போதினிலே,
முழு மனதுடனே செய்திடுவோம், முழுசாய் உழைப்போம் தேவனிலே,
இருட்டு வந்தால் உழைப்பது கடினம்,
சோம்பல் என்பது நம் வாழ்வினையே, துருப்பிடித்திடவே செய்திடுமே,
வேலையை முடிக்கும் முன்பாகவே நமை வீழ்ந்துவிடவும் செய்திடுமே
ரோ:12:11

## செம்மறி 4.தாழ்ச்சி(அ)பணிவு)(Humility)

ரோ:15:33: “கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும், மேன்மைக்கு முன்னானது தாழ்மை.”
இந்த ஆடோ மிகத்திறமையானதாம், இவனுக்கெல்லாம் தெரியுமென்பதில் இவனுக்கெதுவும்
பெருமையில்லை,
முதலாம் பரிசை வென்றுவிட்டாலும் தலைக் கனம் கொண்டே அலைவதில்லை,
மற்றவர் அறிவார் இவரது மேன்மை, தாழ்மை கண்டே வியந்திடுவாரே.
தன்னடக்கம் என்பதும் நமக்கு வேண்டுமே,
இது நாம் போற்றும் பண்பிலொன்றாகும், இதனால் நாமே சோர்வடையோமே, பணிவாய்
நடந்திடும்போதினில்
நாமே, பெருமையை நமைவிட்டே விரட்டிடலாமே,
அதனால் வருமே பாராட்டு, எனவே நமக்கே சீராட்டு.
பணிவுடன் செய்யும் ஊழியமே, அழைத்துச் செல்லும் நமை மேன்மைக்கே.

## செம்மறி 5.நேர்மை(Honest)

உண்மையும் நேர்மையும் கொண்டுள்ள இவரே,
நேர்மையானவர் என்றிடத் தகுமே.
சிறியோர் பெரியோர் எல்லாரும் இவரை ஏற்றுக்கொள்வாரே, இவர்மேல் நம்பிக்கை
வைப்பாரே. இவர்க்கே சொந்தமில்லா பொருள் தன்னை உடனே உரியோர்க்குக் கொடுத்திடுவார்,
பூங்காவுக்கே சென்றிட்டார், அங்கே மணிப்பர்ஸ் பார்த்திட்டார், நர்ஸின் மணிப்பர்ஸ் என்றறிந்தார், தேடி
அவரிடம் கொடுத்திட்டார். கவலையோடிருந்த அம்மணியோ, மணிப்பர்ஸ் கண்டே
மகிழ்ந்திட்டார். நன்றிகூறி சென்றிட்டார்.
இந்த ஆட்டுக்குட்டிதனின் இந்தப் பண்போ சிறந்தோங்கும்,
எத்தனை சோதனை வந்தாலும், சத்தியம் தன்னில் தழைத்தோங்கும், தங்கம்போலே ஜொலி ஜொலிக்கும் .

## செம்மறி6.ஈகை(அ)பரந்த மனப்பான்மை(Generosity)

தேவையுள்ளோர் அனைவருக்கும், இவரே நல்ல நண்பனாவார், தன்னையே பிறர்க்காய் ஈந்திடுவார்,
பிறரும்
வாழ வழி செய்குவார்அத்துனை தாராள குணம் கொண்டார், அவன் உடலின் மீதுள்ள கம்பளி
தருவான், பிறர்க்குப் போதவில்லை என்றால் அவன் உடலின் முடிகளைக் கம்பளி நெய்யவே
கொடுத்திடுவான்,
காலங்கள் கடந்தே சென்றிடுதே, நீயும் நானும் பிறர்க்குதவ தக்க தருணம் இதுவென
செயல்படுவோம், எல்லாரையும் விட மேலாக எல்லாவற்றிலும் தாராளகுணமாய் உதாரகுணத்தை உடையவர்
எவரோ? பரலோகத்திலுள்ள நம் பரம பிதா, தாம் நேசித்த தம் ஒரே குமாரனையே, ஈந்தார் நமக்காய்
அறிவீரே, நாம் இழந்திட்ட உயிரைத் திரும்பவுமே, கொணர்ந்திடக் கதவைத்
திறந்திட்டார்,
செம்மறியாய் ஈடுபலியாக, தன் இன்னுயிர்ஈந்தே, மனுக்குலம் வாழ கதவதனை
மீண்டும் ஒருமுறை திறந்தாரே, வாழியதேவன் வாழியவே.

## செம்மறி 7.கீழ்ப்படிதல்(அ) பணிவு(Obey)

கீழ்ப்படிதல் என்பதும் ஒரு செம்மறியாம், என்பதை நாமும் அறிந்திடலாம், அவர் எஜமான் முன்பாய்
ஒன்றினையும் நட்டம் என்றே விட்டதில்லை, சத்தியம் ஒன்றே ஜெயித்திடுமே, என்பதை இளமையில்
கற்றுவிட்டார், இளமையில் பணியக் கற்றுக்கொண்டார், பெற்றோருக்கடங்கி நடந்துவந்தார், பெற்றவர்
வார்த்தை
தட்டமாட்டார், முதிர்ந்த பின்பும் அக்குணமே, அவரில் நிலைத்தே நின்றதுவே. சரியான செயலை
செய்வதொன்றே அவரின் விருப்பமாய் இருந்ததுவே.
நாட்கள் விரைவாய் கடக்கும் இவ்வேளை, நீயும் நானும் சோதரனே, நன்றியால் பாடிட வேண்டாமோ?
தேவனை புகழ்ந்திடல் வேண்டுமன்றோ.
விசுவாசம் கொண்டே கீழ்ப்படிவோம் ,
இறுதிவரைக்கும் பணிந் திடுவோம், கீழ்ப்படியில் கால் வைத்தால்தான் மேல் படிக்கு ஏறிச்சென்றிடலாம்,
இறுதியில் கிரீடம் ஜெயித் திடலாம்.
நீதி: 1:8 எபே 6:1,2.3 ( என்பதே வாக்குத் தத் தமுள்ள முதலாம் கற்பனையாயிருக்கிறது.)

## செம்மறி 8.பொறுமை(அ)உளவலிமை, பொறையுடைமை.(Patience)

பொறுமை குணம் ஒரு நல் ஆடாம், இதை நாம் வெளியேற்றக் கூடாதே, இன்னல், துன்பம்
வந்திட்டபோதில்,
இதனை இழந்திடல் ஆகாதே, செல்லும் பாதை கரடாய் முரடாய் இருந்தாலும், முயலைப் போன்றே
இல்லாமல்,
ஆமையைப்போலே பொறுமையுடன் நிலையாய் ஓடி ஜெயம் பெறுவோம், யோபுவின்
பொறுமையைக் கற்றிடுவோம், அதனை நாமே அடைந்திடுவோம் .
நோயின் பிடியில் நாமுள்ளபோதிலும், வெயிலோ மழையோ எது வந்த போதும், கவனம் கொண்டே

பொறுமையுடன் ஓடியே நீயும் வெற்றி பெற்றிடுவாய், பரிசுப்பொருளை அடையும் வரை பொறுமையை இழக்கக்கூடாதே. மகனே திறமையுடன் செய்தாய் , என்றே தேவன் வாழ்த்தும் வரையினிலே பொறுமையை இழக்க மறுத் திடுவோம், பரிசுப்பொருளை வென்றிடுவோம்.

## செம்மறி 9.உற்சாகம் (அ)மனமகிழ்ச்சி) (Cheerful)

மனமகிழ்ச்சி என்றேதான் இதனை அழைப்பார், அழுமூஞ்சி என்றேதான் சொல்வதற்கில்லை,
விசுவாசமும் நம்பிக்கையும் எப்போதுமிவரை மகிழ்ச்சியில் வைக்கும், சோர்வுக்கிவரோ செல்வதேயில்லை, இதயத்தின் ஓசைகளோ வார்த்தைகளில் தொனித்துவிடும், இம் மனமகிழ்ச்சி கூட ஒருநற்பண்பாகும், ஒரு அரிதான பொக்கிஷமாய் கொண்டாடிடலாம், face is the index of the mind, அகத்தினழகு முகத்தினில் தெரியும் என்பார் உலகத் தார், உள்ளத்தின் நிறைவே வாய் பேசும் என்றே கற்பித்தார், துக்கம் இதனை அழித்தே
காட்டும், நல்ல மகிழ்ச்சியோ ஓர் பொக்கிஷமாம் அகிலம் அறியும், நண்பர்களோ எப்போதுமே மகிழ்வுடனிருப்பார், அவருடனே இருந்துவிட மனமோ ஏங்கும், நீயும் கூட மகிழ்ச்சியிலே திளைத்திடல் வேண்டும், எத்தனை மகிழ்ச்சி உன்னிலுள்ளது எண்ணிப்பார்ப்பாய் இத்தினமே:

## செம்மறி 10.மரியாதை(Courtesy)

திருவாளர் மரியாதை என்பதோர் ஆடு, ஓர் அன்பான செம்மறி ஆட்டுக்கிடாவாம்,
உண்மையிலே இதுவும் ஒரு கௌரவ மனிதன், எப்போதும் சாந்தமுடன் அமைதியாயிருக்கும்,
நன்றி என்றும் தயவாய் என்றும் இனிமையாய் கூறும், ஒவ்வொரு மனிதரையும் எளிதாய் அணுகும், அன்பு எனும்
வாசலையே திறந்தே வைக்கும், பிறரைக்கூட காக்கவைத்து இவருக்காய் சேவை செய்திட வைக்கும், இவர் நடத்தைகூட பிறர்க்கு ஒரு முன்மாதிரியாய் விளங்கும்,
பிரமிப்பாகவே நிமிர்ந்து பார்த்து கவனிக் கச்செய்யும், எளிமையான மனிதன் என்றே நண்பர் அழைப்பார், உலகத்தின் பள்ளிகளில் மரியாதைச் சட்டங்கள் பயிற்றுவதில்லை, எந்தப் பள்ளியிலும் இதனை யாரும் போதிப்பதுமில்லை, நாமும் பிறர்க்கு மரியாதை அளித்திட முயல்வோம், நம்மைக் காணும் அனைவருமே நம்மில் சுரக்கும் அன்பை ருசித்திடல் வேண்டும். அவரும் நம்மை பின்பற்றியே அன்பு செய்திடல்
வேண்டும் அன்றோ:

## செம்மறி 11.துப்புரவு(அ)சுத்தம்(Neat)

இந்த ஆடு எப்போதும் சுத்தம் காத்திடும். நேர்த்தியும் இனிமையுமே இவர் குணமாகும், இவர் கரமும் இவர் முகமும் ஒளி வீசிவிடும், பிரகாசமாய் ஜொலித்துவிடும்,பொலிவுகாட்டிடும் ,
ஆடைகளை எப்போதும் அழுத்திமடித்து, விரைப்புடனே அணிந்திடுவார் தினம் புத்தாடை,
தன்னைமிக சுத்தமாக பேணியே வருவார், தலைமுடியும் கலைவதில்லை, சீராய் வைத்து அழகாய் தான் ஆக்கிவைப்பார் சீப்பை வைத்து.
இவர் வேலையிலும் விளையாட்டினிலும் ஓர்நளினமிருக்கும், இவர் அறைகூட பளிச்சென்று மின்னல் காட்டும்,
சுத்தம் தான் சோறுபோடும் என்றே இருப்பார், உடலைக்கூட சுத்தமாகப் பேணியேகாப்பார், இவர் வேலைகளோ
கண்களுக்கோர் விருந்தாய் அமையும், வரைகின்ற ஓவியமோ நுட்பமாயிருக்கும்,
எழுதிவிடும் காவியமோ நிலைத்தே நிற்கும் . நடக்கின்ற நடையினிலே நளினமிருக்கும்,
இவர் படிப்பினைகள் நமக்குப்பல நலம் பயக்கும்.

## செம்மறி 12.விசுவாசம்(அ)நம்பிக்கை(Faith)

விசுவாசம் என்பதும் ஒரு செம்மறியாகும், சந்தேகமனைத்தும் மேற்கொண்டுவிட்டார், தைரியமாய் பயமின்றியே
விசுவாசம் வைத்திட்டார், மேய்ப்பனுக்கே மிக அருகினில் இருந்தார், அவரையே பின்பற்றி நடந்திட்டார், அவரது
வழியினில் இவர் சென்றிட்டார், அவரது கவனத்துள் அடங்கிட்டார், விசுவாசம் என்பதோர் வரமாகும், நம் ஆவியோ உயர்த்தப் பெறுமாகும், தேவனின் உறுதி அளித் துவிடும், நீதிமானாய் உத்தமனாய் விளங்கச் செய்திடும் .
விசுவாசம் என்பதே நம்பிக்கையாகும், சமாதானம் விடுதலை தந்திடுமாகும், நாம் காண்பதற்கப்பாலும் காணலாகுமே, எதிர்பார்த் ததைவிடவும் மிக அதிகமாய் பெறலாம்,
விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றும் பரத்தினிலிருந்தே வந்திட்டதன்றோ.

## செம்மறி 13.நம்பிக்கை(Hope) 1கொரி.13:13

நம்பிக்கை என்பதே இதனது பெயராம்,
மேலுறையாகவே விரித் தணிந்து கொண்டார்,
வாழ்க்கையின் ஆரம்ப முதலிருந்தே வாழ்வின் இறுதிவரையிலே நமக்கிருக்கும்,
நம்பிக்கைதான் நல்லதோர் வாழ்க்கை, இதுநம் வாழ்விற்கோ மிக அவசியம் தேவை
நாம் தான் மண்ணுக்கே திரும்பிடினும், நித்திய நம்பிக்கை மலர்ந்திடுமே, பழைய காலங்கள் இருட்டாய் தோன்றினும், மரணத்தின் வல்லமை இடியாய்தாக்கினும், நமக்கிருக்கும் சிறுபார்வைதனில் நீதியின் வெற்றியோ
தெரிந்துவிடும், நம்பிக்கை நமக்கே குறைவுபட்டாலே, ஆற்றல் நம்மிடம் பின்வாங்கும், நம்பிக்கை நமக்கோ மகிழ்வுதரும், இரவும் கூட பகலாய் மாறும் , வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியில் திளைக்கும்.

## செம்மறி 14.அன்பு(Love) ஏசா.11:6-9

கடைசியாக ஆனால் இறுதியில்லை, மிகமிகச் சிறந்த சிறு பிராணி ஒன்று
மிகவும் சிறிய செம்மறியாட்டுக்குட்டி, அன்பே அதனது நற்பேராகும் ,
பரத்திலிருந்தே வந்த ஆட்டுக்குட்டி, இன்றோ சிங்கமும் செம்மறி ஆடும் ஒன்றாய் கலந்தே பழகுவதில்லை, ஆனால் வேறோர் தேசமுண்டு, ஆங்கோ இரண்டும் பிரண்டாய் மாறும், ஏசாயா முன்பே கூறிச்சென்றாரே, தேவன் அன்பாய் இருக்கிறார் என்றே. அவரது அன்பில் நமை வளர்க்கின்றார், அன்புக்கென்றே விலை கேட்போமானால், அது ஓர் விலையிலா ஜீவ பலியாகும்
அதைக்கொடுத்திவிட்டாலோ
ஆயிரமாயிரமாகவே ஏற்ற காலத்திலே அறுவடை செய்யலாம், பரலோக ராஜ்ஜிய களஞ்சியம் தனிலே.

## அந்தகாரமும், விடியல் வேளையும், - கல்லறையில் ஓர் பகற்கனவு.
## மரணமே உன் மரணம் காணவே மாபெரும் ஆசை

மரண நகரமே, மரண நகரமே, நீ என்ன சொல்கிறாய்? என்ன புறங்கூறுகிறாய்?
கல்லறை சிறையினில் கைதிகளாய் வாலிபரும் வயதானவரும்,
பசுமை நிறைந்த இடம் தனிலே, பாடித்திரியும் பறவையின்கீழே,
அன்புக்கினியோர் வேதனைச் சத்தம் விண்ணைக் கிழிக்கிறதே,
ஏதும் புரியாநிலையினிலே, அசைவும் இல்லை, நினைவும் இல்லை,
அப்படிக்கிடப்பார் சில்லிட்டே,

மரண நகரமே, மரணநகரமே, உன்தலைவன் மரணம், விலைகொடுத்தே
முழு பூமியையே சுவீகரித்தே வாங்கிவிட்டார்
ஆதாமுடைய பிள்ளைகளோ ஏதுமறியாமல் திக்கற்றவரே,
அவர்கள்மீதே குறிவைத்தார், இன்னும் பிறக்காபிள்ளைக்கென்றே
இடமும் அங்கே ஒதுக்கி விட்டார்
அவன் வாழ்க்கை என்னவோ வருடமோ மாதமோ, நாள் கணக்கோ,
மரணம், தனது பசியினையே ஆற்றிக்கொள்ளவே அலைந்திடுமே,
அடுத்த இலக்கை தேடிடுமே.

சிலநேரம் மரணம், அதிர்ச்சியும் திகிலும் ஊட்டுகிறான்,
அளவிலா வலியைக் கூட்டுகிறான், படுக்கையில் உள்ளவனுக் கன்பானோர்,
அன்பும் ஆதரவும், கைகோர்த்துக்காத்தாலும், வேறெந்த முயற்சியும் வீண்தானே,
தெளிவான வானிலே திடீரென்றே தோன்றிடும் இடிதனைப்போலவே,
கண்ணீரின்றி, வார்த்தைகளின்றி, பலியுயிர் ஆங்கே போகின்றதே,
பாடையிலே கோடித்துணிதனை அணிவித்தே
மரண இராஜ்ஜியத்திற்கே மாந்தர் தமையே வரவேற்கின்றாரே.

மரண நகரமே, மரண நகரமே, தலைகுனிந்த வண்ணமே,
முகம்தனில் சோகம் கொப்பளித்திடவே வருகின்றார்,
அன்பிற்கினியோர் கரங்களைப்பற்றியே,
கடைசியாய் வீட்டினில்விடைதனை பெறுகின்றார்,
உடைந்த உள்ளத்துடன்தானே, அந்த ஏழை ஜீவன்போகின்றதே,
அவரின் அன்பானவரினுடைய அழுகையோடே,
பனியும், மழையும், புயலும் காற்றும், முன்னும் பின்னும் ஓலமிடுகின்றதே,

பூமி முழுதும் சாபத்தின் விளைவை பார்க்க ஆவலாய் திகைப்புடன் நின்றேன்,
தொண்ணூராயிரம் கல்லறைகள் தினம் தினம் கண்ணீருடன் புத்துயிர் பெறுதே,
அழிவின்ஆழத்தை கர்த்தரும் கண்டே, லாசரு கல்லறையில் கண்ணீர் விட்டனர்,
தம் ராஜ்ஜியம் தனிலே பாவத்தின் அடிமை நிலையை அகற்றவே, --3105--
அதற்கும் முன்பே தீர்மானம் கொண்டார்
இந்தத் துயரம் முடிவிலாதொடராய் பொறுக்கவியலா வேதனையோடே

தினம் தினம் தொடர்ந்தே நம் இதயத்தை அழுத்துதே.
"உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக" நம் ஒரே நம்பிக்கை அதுதானே
புண்பட்ட மாந்தர்தம் வேண்டுதல் ஆர்ப்பரிக்க,
சபையான நாம் தானே சொல்லவேண்டும், அதிகாலை அருகினிலே,
இப்புவியின் உபத்திரவ மேகமும் அகன்றோடும்,
சூரியன் முன்னின்றென்றே.

மரணமே, உன்னிடம் ஓர் வார்த்தை பேசவேண்டுமே,
இந்தக் கல்லறைகளில் மாண்டோர்தாமே உறங்குகின்றார்,
உன்னுடைய முடிவும் நெருங்கிவிட்டதே, நூற்றாண்டுகளாகவே,
இரத்தத்தால் மாந்தரை குறித்து வந்தாய், ஆனால் பரிசுத்த வார்த்தையில்தாமே,
உனக்கும் அதிகம் பீதிஉண்டே, சர்வவல்ல தேவன்தாமே
உனக்கும் அழிவைக்குறித்துவிட்டாரே,
யேகோவா தேவன் தம் ஒரே குமாரன் தனைத்தானே,
பூரணராகவே அனுப்பிவைத்தார், அவரும் சென்றார் கல்லறைக்கே,
மரணம் என்ற எதிரியிடம் மாட்டிக்கொண்ட மாந்தரை மீட்கவே.
அவர் உயிர்த்தாரே, மீண்டும் வந்தாரே, மேசியாவின் இராஜ்ஜிய ஆசீரைக்கொடுத்திடவே,
ஒரேமுறை இழந்த வாழ்வினையே மீண்டும் பெற்றார் முழுமையும் உணர்ந்தே.

ஓ மரணமே, ஓ மரணமே,
கிறிஸ்துவின் புதிய சிந்தையின் வல்லமை
ஓர் எல்லக்குள் அடங்கும் என்றெண்ணிவிடாதே,
அப்பா அவருக்கே அழிவிலா ஜீவன் ஈந்தே
உயர்த்தியே வைத்தார் மகாமேன்மைக்கே,
தெய்வீகத் தன்முயுடன்தானே அவர் பூமியை ஆள்வதும் உண்மைதானே,
ஒவ்வொரு மணியிலும் பெருகிடுதே, உன்னுடைய திறவுகோலும் அவரிடம் உண்டே,
அவரே உன்னை வென்றிடுவாரே, உன் சிரசை தரைமட்டம் ஆக்கிடுவாரே.

உந்தன் எஜமானன் இப்போது அவர்தானே, ஏற்றவேளை வந்திடுமே,
நீ கூட அவரை அறிந்திடுவாயே, அவரே உன்மீதே வல்லமை கொண்டே,
இப்புவியின் தேவன் உனைத்தானே அழிப்பார் மாபெரும் வல்லமையுடன்தானே.
உம் தூதர் மாந்தரை பழிதீர்த்தார்,
மீண்டும் கிடைக்கப்பெறாத அதிமேன்மையை தொலைத்துவிட்டார்,
பாதாளமோ உன் கொடிய அழிவினையே
உன் கல்லறைதனிலே கண்டிடுமே.

மனிதன் மரித்தால் பரவாயில்லை, மாந்தர் அவரது உடலினைச் சுற்றியே
நின்றே அழுதே புலம்பிடுவாரே, உந்தன் மரணநாளினிலே,
மாந்தர் வந்தே அழுவார் என்றே
கனவினில் கூட நினைத்திடவேண்டாம்.
உன் கல்லறை மீதே ஏறி நின்றே ஆடிப்பாடி மகிழ்ந்திடுவாரே,
நானும் கூட ஆடிடுவேனே, ஆனந்த நடனம் புரிந்திடுவேனே.

எம் முற்பிதாக்கள் அவரைத்தான் இனிதாய் நடத்தியே சென்றிடுவார்,
ஆதாமின் சந்ததி யாவருமே, ஒன்றாய் இணைந்தே வந்திடுவார்,
மரணம் மரித்தது மரித்தது என்றே உரத்த சத்தமாய் பாடிடுவார்,
பரலோக சேனை கேட்டிடுமே, பாடல்தனிலே அக்களித்திடுமே.
அவரும் உடன் சேர்ந்து பாடிடுவாரே.

விசுவாசத்தாலே நொடிப்பொழுதே அந்த நாளின் காட்சியை நான் கண்டேன்,
இப்புவியின் பொன்னான நாள் கண்டேன்,
சங்கீதக்காரனின் வார்த்தைகளும், தீர்க்கதரிசிகள் வார்த்தைகளும்,
மதிப்புடன் முழங்கும் அந்நாளில், காலம் காலமாய் குருடாக்கப்பட்ட கண்கள்
அப்போதுதான் திறந்துவிடும், இப்பூமியின் யூபிலி மகிமையடையும்,
இனியும் மானிடர் பலியுயிர் அல்லர், பாவத்தின் சம்பளம் இனியும் அவர்க்கில்லை,

இப்பூமியின் மகிமையின் நாள் நிச்சயமாய் வந்துவிடும்,
அதன் புயல்கள் யாவையும் முடிவுக்கு வந்துவிடும்,
மலைகள் பள்ளத்தாக்குகள், குன்றுகள் சமவெளிகள்,
ஒருமுனை தொடங்கி மறுமுனை மட்டும் யாவும் அழகை பிரதிபலிக்கும்,
எல்லாருடைய தேவையும் நாளுக்கு நாள் நிச்சயமாகவே நிறைவேறும்,
பயங்கரம் முன்பே கடந்ததுவே, எல்லார் வீட்டின் வாசலிலே.

பூமியெங்கினும் புது இளவரசர் நான் கண்டேன், தேவர்போன்றவர் சாயல்,
அவர் ரூபமோ மகத்துவம், பொருந்தியதே, கிருபையின் பரிபூரணமே,
கடந்த நாட்களில் தனியாளாய் விசுவாசமதிலே நடந்திட்டாரே,
பூமியின் பரிசுத்தர் ஆபேல் முதலாய் யோவான் ஈராய், பூமியின் இராஜாக்களாய்
சிங்காசனங்களிலே, மகிழ்ச்சியின் இடத்தினை அடைந்திட்டாரே.

பரலோகில் கண் திறப்போம் என்றே சிலரே ஆவியிலே எண்ணி மரித்தனரே,
பாதாளம் எனக்காய் காத்திருக்கும் என்றெண்ணியே சிலரும் மரித்தனரே,
வலி நீக்கும் நிவாரணி இம் மரணமே என்றார், வாழ்வதிலும் சாவதே மேல் என்றாரே,
இவர் யாவரும், நாமோ மீண்டும் வந்தோம், ஜீவனும் சுகமுமாய் என்றெண்ணியே
வியந்து வியந்தே போற்றுவார் தேவனை.

ஆனாலும் அதிசயம், அவர்கள் மாறிவிட்டார், புது சரீரம் ஜீவன் பெற்றுவிட்டார்
பூமியெங்கிலும் நோயுமில்லை, துன்பமில்லை, எங்கும் காணவும் முடிவதில்லை.
இனிய சமாதானம் நிறைவு நிலைத்திருக்கும்,
ஆசீரான அந்நாள் தன்னை சேதப்படுத்துவார் எவருமில்லை.

நீதியின் கட்டளைக்காய் கீழ்படிவோரே பூமியெங்கினும் நிறைந்திருப்பாரே.
நீதியாய் இருப்புக்கோலால் ஆளுகை செய்வார், அங்கோபன் நீதி வாசமாயிருக்கும்,
அவர் வழி நேர்மையும் உண்மையும் சமமும், அன்பு அங்கே ஆட்சி செய்யுமே.
விழுந்து போன மனுக்குலமோ அன்பான கரத்தினால் மகிமையாய் வழிநடத்தப்படுமே,
மகிழவும் நிற்கவும் வழியினைத்தெரிந்தெடுக்கவும், ஞானம் வழியை ஆயத்தம் செய்யுமே.

கொடுமையான போர் இனியில்லை, தடயம் கூட எங்கும் காண்பதற்கில்லை.
போர்முனையின் கருவிகளுக்கோ மரணம் தான்,
புதியதோர் தோற்றமும் அதற்குத்தான், தோட்டத்திற்கே பயன்படுமே,
வாள்களெல்லாம் இப்போ அழகிய கருவியாய்
தோட்டத்தை செதுக்க, பழத்தோட்டம் அமைக்க.

மனிதனின் சாபம் வேலையாட்களாய், அயரா உழைப்பாய்,
பாவத்தின் முதற்பலனை அறுத்தனரே,
ஏவாளின் வேதனை அவள் குமாரத்திகளுக்கே கொடுபடல் ஆயிற்றே,
நெற்றி வியர்வைக்கு பதிலாய் புலம்பலும் வருத்தமும்,
இப்போதோ தேவைகள் அனைத்தும் எளிதாய் கிடைக்குமே,
இனிமையான நேரங்களோ கடந்தனவே,
அனுபவத்தினால் சிந்தையும் இருயமும் நிறைந்ததுவே.

இவ்வுலகின் குருட்டுக்கண்கள் திறந்தன, செவிட்டுக்காதுகள் கேட்கலாயின,
மறைக்கப்பட்ட சத்தியமோ பூமியெங்கினும் பிரகாசிக்கலாகுதே,
தனது கதிரோ தெளிவாக உள்ளதே,
தேவனின் அன்பையும் அவர் நீதியும் ஞானமும்
மாந்தர் அனைவரும் புரிந்து கொண்டாரே,
அவர் நீதியைக் கண்டார் வல்லமை கண்டார் அதிர்ச்சியில் உறைந்தார்,
அவரை உயர்வாய் போற்றியே சென்றார்.

இயற்கையின் திறந்த புத்தகம்தனையே
முழுதாய் படிக்கவே புதிய வெளிச்சம் அரியணையில்,
தெய்வீக வல்லமை அவர்களைச்சுற்றியே செல்கையிலே,
இதுவரை அதிலே பழக்கமில்லை, பூரண சிந்தை, புதிய பார்வை,
இயற்கையின் இனிமையை இனிதே உணர்ந்தே
சொந்தம் கொண்டாடினரே.

முடிசூட்டப்பட்டது போன்றே எப்பேர்பட்ட மகிழ்ச்சி இது?
இதுநாள் வரையில் பார்த்திருந்தார், கல்லறைதனிலே தரித்திருந்தார்,
வருடங்கள் முழுக்க, மரணத்தின் காரிருள் இராஜ்ஜியம் தனிலே,
வெளீரென்றே உலர்ந்த எலும்புகள் வனாந்தரம் எங்கினும், சமுத்திரம் என்றென்றும்
இவர்களை வைத்துகட்கொள்ளலாம் என்றும்,
காற்றில் கரைந்த இவர்களின் சாம்பலோ மீண்டும் உயிரும் உடலும் பெற்றதே,
எத்திக்கும் ஒலிக்கும் அதிசயத்தின் ஆனந்தக் கூக்குரல்.

ஆனந்தக் கண்ணீர் அனைவரின் கண்களில், அன்பிற்கினியோர் சந்தோஷ அரவணைப்பு,
இருதயம் தொட்ட வருடங்களாகப் பிரிந்திருந்த நண்பர்களோ
நன்றியுணர்வோடே எத்திசையும்,
கசப்பான கடந்தகாலம், துன்பம், தனிமை, வேதனை மகா பயங்கள்,

--3108--

யாவும் ஆனந்தக்கண்ணீரில் கரைந்தே போயிற்றே,
இறையரசர்கள் அறிவிப்பார் இறைமகனின் ஈடுபலி, அவரது ஆட்சிமுறைதனையே,
பாவத்தின் அடிமைகளாய் பாரினில் பிறந்திட்ட ஆதாமின் சந்ததி,
இனி பாரினில் தேவனின் பாலகராய் இருப்பார்,
ஜீவனுக்கே இனி ஒருவாய்ப்பு, ஒவ்வொரு தலைக்கும் மற்றொரு வாய்ப்பு,
தேவ குமாரனின் சுவிசேஷம் கேட்பீர், கேட்டுப் பாரினில் பரிபூரணராய் வாழ்வீர்,
பெரும்பாதையான வழி - அது பரிசுத்த பாதை, யாவரும் அதிலே நடத்தப்படுவார்,
அவர் ஜெபங்கள் யாவும் உடன் நிறைவேறும், மரணத்திலிருந்தே முற்றிலும் விடைபெற்றார்.

ஒரு கூட்டம் தொடர்ந்தே மறுகூட்டம், யார் யார் என் சொந்தங்கள் வீட்டிற்குச் செல்வோம்
வாருங்கள், பூமி முழுக்க சந்தோஷமே, பொங்கிப் பொங்கி வழிந்தோடுமே.
ஓர் நாளில் யாவரும் எழுந்துவீட்டிருப்பார், கடைசி ஜோடியாக,
ஏதேனில் ஆசீரை இழந்த ஆதித் தாய்தகப்பன்,
மகா வேதனையுடன், எல்லாம் போய்விட்டது-
அரசாட்சி, வீடு, நாடோடிகளாய் வேண்டுமானால் ஜீவிக்கலாம்,
மரணமும் நம்முடன் வீறுநடை, கடைசியில் கல்லறை, விடுபடமுடியா சிறைச்சாலை,

நூற்றாண்டுகளின் உறக்கம் இனி இல்லை, மரணமே எங்கே உன் எல்லை?
அவர்களின் கல்லறை மீதே அழைக்கும் தொனி,
மரித்தோர் உயிரோடெழுந்தரிப்பார்,
இனிய தென்றல்காற்றை சுவாசித்து சந்தோஷ கீதம் பாடிடுவார்,
இடங்கொள்ளா ஜனக்கூட்டம்முன்பு தலைவனான ஆதாம் நின்றிருப்பார்.

இன்னும் என் காதுகளில் ஒலிக்கிறது அந்த கம்பீர கானம்,
அதிசயிக்கச்செய்தது என்னை, உடனே என் பகற்கனவை விட்டெழுந்தேன்,
ஓ, ஒருமுறை மீண்டும் கண்டேன்,
நிசப்தமான கல்லறைமீதில் பார்வையை செலுத்தினேன்,
உபத்திரவத்தின் மேகம் இன்னும் வானில்.

சிருஷ்டிகளின் புலம்பலும், அழுகையும் இயலாத ஏக்கமும்
இன்னமும் ஒலிக்கிறதே என் செவியில்.
ஆனால் மேகம் தாண்டி என் கண்களைச் செலுத்தினேன்,
சில ஒளிக்கதிர்களைக் கண்டேன்.

ஓ, ஆயிரமாண்டின் அதிகாலை
வேளை இப்பூமியின் மகிமையின் நாளை
முன்னறிவித்தது, புயலும் கனமான கர்ஜிப்போடு
முழங்கினாலும், தேவ இராஜ்ஜியத்தின் கதிர்களும் இன்னும் பலமாய்,
இருதயத்தில் நம்பிக்கையோடு தேவனைத் துதித்தேன்,
சுகந்த வாசனையோடும், தாழ்மையில் ஜெபத்தோடும்,

எங்கள் தேவனே, பிதாவே, அன்போடு:
முழங்காற்படியிட்டு இந்தக்கல்லறை மீதிருந்து வேண்டுகிறேன்,
நீர் கொடுத்த வார்த்தைகட்காக உமக்கே நன்றி,
இந்த இருளின் இராஜ்ஜியம் சூரியன் முன்னின்றகலும்
கார்மேகம் போல இல்லாமற்போகட்டும்,
உம்முடைய சித்தம் இப்புவிதனில் நடக்கட்டும்,
எல்லாராலும் உமதன்பு உணரப்படுமே, ஓர்நாள் இந்தக்கல்லறைக்குக் கீழும்.

## நம் சோதனை எத்துனை இலகுவாக இருக்கும்?

நம் சோதனை எத்துனை இலகுவாக இருக்கும்?
நம் யாத்ரீகப் பாதை எத்தனை குறுகியதாயிருக்கும்?
பூமியின் வாழ்க்கை நிலையற்ற கனவாக இருக்கும்,
புலரும்பொழுதில் ஓர் நம்பிக்கையாக ஆக்குமே,
பின்பு அமைதியடைவாய் என் இருதயமே,
**பூமியிலே அடக்கமாகும் வரை அடக்கமாயிரு என் அடங்கிடாத நாவே,**
**சாந்தம்கொள்வாய் எந்தன் நெஞ்சமே,**
கடந்துபோகும் ஒவ்வொரு மணித்துளியும் உன்னை
நித்திய ஜீவனுக்கே வழிநடத்திச் செல்லுதே,
என்ன நடக்குமோ என்ற தேவையற்ற ஓர் வீண் கவலை
எதற்கு உன் களைப்படைந்த இருதயத்தை அழுத்த வேண்டும்,?
ஏன் ஆத்துமமே, உன்னை நீயே காத்துக்கொள்வாய்,
உன் தந்தையின் அரியணையில் பங்குபெற விரைந்திடுவாய்,
பதினாயிரம் எதிரிகள் எழுந்து வருவார்,
பாவத்தின் தூதர்கள் நெருக்கம்கொடுப்பார்,
பரிசைப்பெறுவதினின்றே விலகிவிட நிர்பந்திப்பார்.
ஆனாலும் நீ ஜெயம் கொள்வாய் ஜீவ கிரீடம் பெற்றிடுவாய்

# அங்கே இருந்தீரோ?

என் ஆண்டவரை சிலுவையிலே அறைந்திட்டபோதினிலே அங்கே இருந்தீரோ?
அங்கே இருந்தீரோ?
அந்நினைவுகளால் சில நேரத்திலே நான் நடுநடுங்கிப் போகின்றேனே,
என்னை நடுக்கமுறச் செய்கிறதே.
என் ஆண்டவரை சிலுவையிலே அறைந்திட்டபோதினிலே அங்கே இருந்தீரோ?
அங்கே இருந்தீரோ?
என் ஆண்டவரை சிலுவையிலே ஆணியினால் அடித்தபோது அங்கே இருந்தீரோ?
அங்கே இருந்தீரோ?
சில நேரங்களில் அதை எண்ணிடும்போதினில் என்னுள் நடுக்கம் பரவிடுதே,
நடுநடுங்கச் செய்திடுதே.
என் ஆண்டவரை சிலுவையிலே ஆணியினால் அடித்தபோது அங்கே இருந்தீரோ?
அங்கே இருந்தீரோ?
என் ஆண்டவரைவிலாவிலே ஈட்டியினால் குத்தினாரே, அங்கே இருந்தீரோ?
அதனைக் கண்டீரோ?
சில நேரங்களில் அதன் நினைவலைகள் எனை நடுங்கிடச் செய்திடுதே
நான் நடுநடுங்கிப் போகின்றேனே.
கல்லறைதனிலே என் ஆண்டவரைக்கிடத்தி அடக்கம்செய்திட்டபோதினில் அங்கே
இருந்தீரோ? அதனைக்கண்டீரோ?
சில நேரங்களில் அதன் நினைவாலே நான் கதிகலங்கிப்போகிறேனே.
கல்லறைதனிலே என் ஆண்டவரைக்கிடத்தி அடக்கம்செய்திட்டபோதினில் அங்கே
இருந்தீரோ? அதனைக்கண்டீரோ?
என் ஆண்டவர் மீண்டும் வெற்றிவீரராய் கல்லறை நின்றே உயிர்த்தெழுந்தபோதினில்
அங்கே இருந்தீரோ? அக்காட்சியைக்கண்டீரோ?
சில நேரங்களில் அதை எண்ணிடும்போதினில் என்னுள் நடுக்கம் பிறந்திடுதே, நான்
நடுநடுங்கிப்போகின்றேனே, என் மெய்சிலிர்த்துப்போகுதே.

# "Before You"
# "உனக்கு முன்பாக"

உனக்கு முன்பாக அவர் அவமானத்தின் பாதைதனில் பயணித்து விட்டாரே,
கூரிய, ஊடுருவக் குத்தின காயங்களை அவர் ஏற்றுக்கொண்டார்,
ஆழ்ந்த துக்கம், வலி, வேதனை எப்படி இருக்கும் என்பதை அவரறிவார்,
விடுதலையின்றி எவ்வளவு காலம் பொறுத்திருக்க வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்,
மரணத்தின் கசப்பான ஆழத்தை அவர் எடுத்துப்போட்டார்,
அவருக்கென்று ஒரு துளி இரத்தத்தையும் இருத்தி வைத்துக்கொள்ளவில்லையே,
எல்லா இரத்தத்தையும் சிந்திவிட்டாரே, விலாப்புறத்துக் காயத்தினாலே கடைசி துளியும் சிந்திவிட்டடதே,

உனக்கு முன்பாகவே, உனக்காகவே அவர்போரில் வெற்றி சிறந்தார்,
ஒளியின் ராஜ்ஜியத்தின் பிள்ளையாகவே, உன்னை மகிமைக்குக் கொண்டுவரவே.

# நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே

நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே,
நாம் இந்த எளிய விருந்தை அநுஷ்டிக்கின்றோமே,
ஒவ்வொரு முழுதத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களையும்
இந்த விருந்துசாலைக்குள்ளே வரவேற்கின்றோமே,
விசுவாசத்தினாலே இந்த அப்பத்தை ஜீவ அப்பமாகவே எடுத்துக்கொள்வோமே,
அதையே இது அடையாளம் காட்டுமே,
இந்த பாத்திரம் அவர் இரத்தத்திற்கான அடையாளமே,
நமது விலையேறப்பெற்ற தியாக பலி இதுவே,
இந்தப் பாத்திரம் மீண்டும்மீண்டும் எப்போதும் இந்நேரத்தை நினைவு கூரலாகுமே,
இராஜ்ஜியத்தின் அதிகாரம் விரைவிலே கிட்டிச்சேரும், புதிய மகிழ்ச்சித் தழைத்தோங்கும்,
நாங்கள் இதிலே உம்முடனே பானம் பண்ணுகிறோம் எம் மீட்பரே,
எவ்வளவு கழிப்பேருவகை எமக்குக் கிட்டும் தேவனே,
உம்முடனே என்றென்றைக்கும் வாழும் பாக்கியம் கிடைக்குமே,
உயிர்த்தெழுந்தஆற்றல்களை ஆடையாகக் அணி கொண்ட நாமே,
உம்முடைய முடிவில்லாத புகழினைப்பாடிடுவோமே.

R490/170.

# கவர்ந்திழுக்கப்பட்டு சோதனைக்குட்பட்டவரே

கவர்ந்திழுக்கப்பட்டு மிதமிஞ்சிசோதிக்கப்பட்டவரே,
ஆக்ரோஷமாயும்,கட்டுக்கடங்காமலும், ஆழமாயும் இருக்கின்றதோ?
அதன்ஆக்ரோஷம்,கோபம், மூர்க்கம் அனைத்தும் வீணே,
கர்த்தர்தாங்கிக் கரம் பற்றிக் கொள்வார்.
காலா காலத்திற்கும், யுகாயுகத்திற்கும் யாவே தேவனே அரசாள்வார்,
கவர்ச்சிக்காளாகி சோதிக்கப்பட்டவரே, இருப்பினும் கர்த்தர் உன்பக்கம் உள்ளார்,
உன்னை வழிநடத்திடுவார், உன்னோடுஅவர் இருக்கின்றார்,

அவர் அன்பின் பிள்ளைகள் தம்மை நம்பி ஒப்படைத்துள்ளார்,
அவரே காப்பார், அவரே பாதுகாத்திடுவார், முடிவுவரைக்கும் அன்பு செய்வார்,
வணங்குதற்குரிய எஜமானன், மகிமைமிகுந்த நண்பனானார்,

கவர்ச்சிக்காளாகி சோதிக்கப்பட்டவரே,
என்னதான் சோதனை உச்சிமுகட்டை தொட்டாலும்,
அவர் இரகசிய கூடாரத்திற்குள்ளே
அவர் செட்டைகளின் நிழலின்கீழே மறைத்துக்கொள்வார்,
முடிவில்லா இராஜ்ஜியத்தில் அவர் குழந்தைகள் விசுவாசம் கொள்வார்,
அக்களித்துப் பாடல்கள் பாடிடுவார்,

கவர்ச்சியால் சோதிக்கப்பட்டவரே, இன்னும் கர்த்தருக்காய் காத்திரு,
உன் நம்பிக்கைக்குரிய விடுதலையாளர், பாதுகாப்பாளர், வழிநடத்துனர்,
அவரே உன் கேடகமும், பட்டயமும் ஆகிடுவார்,
உன் அதிகப்படியான பரிசும் அவரே,
அதுவே அவர் ஊழியருக்குப்போதுமானதே,
அவரேஅவர்களுக்குத்தேவனாக இருப்பாரே,

கவர்ச்சிக்காளாகி சோதிக்கப்பட்டவரே,
இறந்த அந்த மீட்பரே, உன்னைப்பாடுபட அழைத்தாரே,
அவருடனே பக்கமமர்ந்து ஆட்சி செய்திட,
அவர் சிலுவைதனை சுமந்து செல்ல,
அவர் கிரீடம்தனை நித்தியத்திற்கும் அணிந்திட,
அவர் மகிமையிலேபங்கு பெற்றிடவே அழைக்கின்றாரே.

R5208:

## கெத்சமனே (Gethsamene)

கெத்சமனே - தோட்டத்தின் தனிமையான நிழல்பகுதியை
உலகத்தின் இரட்சகர் அந்த இரவினில் தெரிந்தெடுத்தாரே,
அவர் மாத்திரம் தனிமையில் ஜெபிக்கச் சென்றாரே,
கிருபை, இரக்கம், பெலன் தேவைக்காக தம் பாத்திரத்தின் கடைசிசொட்டு இரசத்தினை
பருகிடச் சென்றாரே,

மகாத்துமாக்கள் துன்ப வேளையிலே தனித்திருக்கவே விரும்புவாரே,
அவர் மிக அன்புசெய்த அம்மூன்று சீடர்களுக்கும் கூட அந்தப் புனிதப் பகிர்தல் அளிக்கப்படவில்லையே,
அந்த ஆழ்ந்த துன்பக்கலத்தினின்று அவர்களை சற்றுவிலக்கியே வைத்தாரே,
சற்றே அப்புறம்போய், முகங்குப்புற விழுந்தே ஜெபித்தாரே.
கெத்சமெனே, ஓர் தனிமையான இடம், ஓர் ஒதுக்கப்பட்ட பகுதி,
அழிந்துபோகும் மனிதன் எவரும் அந்த இரவின் இருளில்,
அந்த பழுப்பான கருஞ்சிவப்பு நிற நிலத்தினில் கால்பதிக்கவில்லையே,
எந்த ஒருமனிதப்பிறவியோ, இல்லை எந்தவொரு இருதயமோ
அந்த வேதனையைப் பகிர்ந்துகொள்ள இயலாதே,
ஜுரம் கொதிக்கும் அக்கரத்தை எவரும் பற்றிக்கொள்ள இயலவில்லையே,
எந்த சந்தடியோ சத்தமோ இல்லை, ஆனால் தேவனின் சப்தம் மட்டுமே அந்த நிசப்தத்தை
உடைக்கக்கூடும்,
ஒவ்வொரு இதயமும் தனிமையில் குடிக்கும் ஓர் இடம்தானே,
தந்தை தம்கரத்தினால் ஊற்றிக் குழந்தைக்கு அளித்தாரே,

கெத்சமெனே, ஒரு தனிமைப்பட்ட பாலைவனப்பகுதியா,
இல்லை, இல்லை, துன்பப்பட்ட இருதயம் அங்கே வீணாகக் கதறுவது இல்லையே,
இறந்துவிழும் சிறு அடைக்கலான் குருவிகூட அவர் கண்பார்வையினின்றே தவறுவதில்லையே,
பயம் வேண்டாம், திகில் வேண்டாம், நான் உன் தேவன், நான் உன்னோடு இருப்பேன்,
உன்னை மீட்டுக்கொண்டேன், நான் உன்னைக் கைவிடுவதில்லை,
உன்னைத் தோற்க விடுவதில்லை, என் வலக்கரத்தினால் உன்னைத் தாங்குவேன்,
என் அன்பே, உன்னை நான் மறப்பதில்லை,
என் வலது கையினால் உன்னைப் பிடித்துக்கொண்டு,
என் பராக்கிரமத்தினால் உன்னைப் பற்றிக்கொண்டேன்,
வாழ்க்கையின் கடைசி எல்லை வரை.

R5214.

# கெத்சமெனே

முன்னிரவு இருட்டினிலே, நான் பயணிக்கும் போதினிலே,
கண்ணில்  படுவதெல்லாம் கருப்பாயும் இருட்டாயும் தோன்றியதே,
என் இரட்சகர் ஏன் என் அருகினில் இல்லை,என்றே நான்நோக்கி நின்றேன்,
பாதை மிகவும் செங்குத்தானதாய், கரடுமுரடாய், ஏற்ற இறக்கமாய்,
முள்ளும் கல்லும் நிறைந்திருந்ததுவே.

என்சுமக்கவியலா பலமான பாரத்தின்கீழே,
நான் செவிடாகிக், குருடாகித் தடுமாறி நின்றேன்,
என் துன்பமிகுந்த கண்ணீர் எனது கண்களில் தளும்பி,
பார்வையை மறைத்தே நின்றதுவே,
அந்த மங்கலான மறைப்பினூடே பார்க்கையிலே,
என் கர்த்தரின்முகத்தினை பார்க்க வியலாமலே, தவற விட்டேனே.

கடைசியில் என் பார்வையை பரலோகத்தின் அன்பின் மீதே  நிலை நிறுத்தினேனே,
அவர் கூறும் ஆலோசனைகளோ, பரத்திலிருந்து வரும் வெளிச்சத்திலே
எப்போதும் பளிச்சிடுமே, இதையெல்லாம் பார்த்துக்கொண்டு நடக்கையிலே,
நான்ஆர்வமுடன் முன்நோக்கிக் கடந்து வந்தேன், முட்களும் கற்களும் குத்தியதாலே
என்பாதம் கிழிந்தே களைப்படைந்ததுவே, நான் பூமியின்மீதே விழுந்துவிட்டேனே.

காலத்தாலும், புயலாலும் கிழிக்கப்பட்ட ஓர் சலவைக்கல் சிலுவைதனைக் கண்டேனே,
என்சிரசை அதன்மீதே சாற்றினேனே,
என் துன்பங்களைக்கலந்து, என் மகிழ்ச்சியையும் நான் கொடுத்து விட்டேன்,
திடீரென சக்கரத்துக்குள் சக்கரம் சுழலும் ஒலிகாற்றில் வந்ததே,
ஹா! என் அருகினில் மண்டியிட்ட பரலோகத்தூதரை நான் கண்டேன்,
நடு இரவில், அந்தத்தோட்டத்திலே பகலைப்போன்றே வெளிச்சமிகுந்ததே,
அந்த நிழல்களினூடே பார்த்த போதில் கிறிஸ்து அங்கே நின்றிருந்தாரே,
என்னுடைய கெத்சமெனேயிலே. - ஜி.டபள்யூ. செய்பர்ட்

R5815/ 374/ 514

# என் உடன்படிக்கைக்கான அடையாளம்
**சங். 116/ 12, 13.**

கர்த்தர் எனக்குச்செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்?

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்,

தேவனே, நீரே என் புகலிடம், பரிசுத்தவானாகிய நான்,

எனது பொருத்தனையை நிறைவேற்ற நீர் உதவியருளும்.

உம் கிருபைக்காக இறைஞ்சுகிறேன்,

இல்லையெனில் நான் சத்தியத்தினின்றே எளிதாக வழி விலகிடுவேனே.

நினைவினிலும், வார்த்தையிலும், எனதெல்லா வழிகளிலும்,

உம் பரிசுத்த நிலைப்பாட்டைக்காத்துக்கொள்ள வேண்டுமே

நான் எனது தற்பெருமையையும் கனத்தையும் மதிப்பையும் உயர்த்திக்கொள்ளாமல்,

உம் மகிமைக்காகவே வாழவேண்டும் பேரரசே.

பேரரசே, இன்று, நான் சிறியகாரியங்களிலோ, அல்லது பெரிய காரியங்களிலோ, எதுவாயினும்,

உண்மையுடனும், விசுவாசமாகவும், உமக்கு மட்டுமே ஊழியம் செய்திடவும் , பரிசுத்தமான

நிலைக்கு உயர்த்திக்கொண்டு ஊழியம் செய்திடவுமே வாஞ்சிக்கிறேனே.

மேன்மையான காரியங்கள் செய்திடவே நாடிடுவேன்,

அவ நம்பிக்கையை ஒதுக்கிவிட்டே, தகுதியாய் வாழ்ந்திடுவேன்,

முறுமுறுப்பும், முறையீடும் செய்திட மாட்டேன்,

நீர் வந்து வாசம் செய்ய முடியாத என் இருதயத்தை தெய்வீகமாய் மாற்றிவிடும் எந்தன் தேவனே.

- விர்ஜீனியா நோபல் ஸ்டீபன்சன்

# பெலன் தாரும் யேசுவே

ஆசீர்வதிக்கப்பட்ட இயேசுவே, எம் அநுதின சிலுவைதனை
மகிழ்வுடன் சுமந்திடவேண்டியே பெலன் தாரும் இயேசுவே.
எம் அநுதின சிலுவை, அது எத்தன்மையதாய் இருப்பினும்,
உந்தன் நாமத்தினாலே மகிழ்ச்சியுடன் சுமந்திடவே பெலன் தாருமே.
என் அன்றாடக் கடமைகளை செய்திடும் போதினிலே
உம்மை பின் சென்றிட வேண்டுமே,
தினம் தினம் யாம் பணிவுடனே கேட்டுப்பெற்றிட வேண்டுமே,
நீர் பவித்திரமாய் சுமந்திட்ட சிலுவைதனின் நினைவுகளுடனே
அன்றாடம் நாங்கள் செய்யும் பொதுவான வேலைகளை புனிதமாக்க வேண்டுமே,
பூமியிலே நாங்கள் இழக்கும் ஒவ்வொரு இழப்புகளையும்
ஆசீர்வாதமாகவே இலாபமாகத் திரும்பப்பெற வேண்டுமே.
உம் பாதம் வந்து சேர்ந்து நாம் சுமந்திட்ட சிலுவைதனை
உம் கால்களுக்கடியிலே சாற்றிடும் வரையினிலே,
எம் அன்றாட சிலுவைதனை சுமக்க உதவி தாருமையா,
உம் இரத்தத்தின் மூலமே எம் பாவத்திலிருந்தே மன்னிப்படைய வேண்டுமே,
சிலுவை மூலமே யாம் கிரீடம்தனை வென்றெடுக்க வேண்டுமே.

MM 10.

## இனிமையான தருணங்கள்:

இனிமையான தருணங்கள், செழுமையான ஆசீர்வாதம்,
சிலுவையின் முன்பாக நான் செலவிடும் நேரங்கள;
வாழ்க்கையும் ஆரோக்கியமும் சமாதானத்தில் தாபரிக்கும்,
இறக்கும் தறுவாயிலுள்ள நண்பர்கூட
இந்தத் தருணத்திலே உண்மையாகவே ஆசீர்வதிக்கப்படுவார்,
சிலுவையின் கீழாக சிரம் தாழ்த்தி வணங்கும் போதில்,
தெய்வீக இரக்கத்தை நான் காண்கின்றேன்,
அவரது இரக்கமுள்ள கண்களிலிருந்து ஒளி வீசுகின்றதே,
இங்குதான் நான் என் பரலோகத்தைக் காண்கின்றேன்,
சிலுவையை நான் ஏறிட்டு நோக்கும்போதில்
நான் அவரால் அதிகம் அன்பு செய்யப்பட்டேனே,
நான்தான் அதிகம் மன்னிப்பைப் பெற்றவன்,
நான் ஒரு கிருபையின் அற்புதம்,
அவர்அன்பும் பரிவிரக்கமும் என் இதயத்தைக் கூறுபோடுகின்றதே,
என்னுடைய கண்ணீரினால் அவர் பாதத்தைக் குளிக்க வைப்பேன்,
விசுவாசத்தில் உறுதியோடிருந்து நம்பிக்கையாயிருப்பேன்,
அவரது இறப்பிலிருந்தே எந்தன் வாழ்வு தொடங்குகின்றதே,
இங்கேபெரும் துக்கத்தால் என் மனம் கிழிந்து காணப்பட்டாலும்,
என் இரட்சகருடன் நான் தங்கிடுவேனே,
இருளை வெளிச்சமாக மாற்றும் புதிய நம்பிக்கையும் புது பெலனும் கிடைக்கலாகுமே.

# ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவை

ஒலிவ மரச்சட்டத்திலான சிலுவைதனை
துன்பத்தின் மனிதனவர் சுமந்ததையே திரள் கூட்டம் பார்த்ததுவே,
அதன் கீழாக எப்படியிருந்ததென யாருமறியாரே,
அவர் இதயத்தினுள்ளே ஓர் மறைக்கப்பட்ட சிலுவைதனைச் சுமந்து வந்தாரே,
இரத்தம் சிந்தும் முழு மனுக்குலத்தின் துன்பமான கரும் பாவத்தின்
சுமையும் கூட சுமையாக அழுத்தியதே,
தேவனின் சட்டத்தை உடைத்து மீறியதால் வந்த பாவமும் சேர்ந்தழுத்தியதே,
முட்களால் முடி பின்னி, ஏளனமாய் வெறுந்தலையில் வைத்தே,
அழுத்தி குரோதமுடன் வெறுத்தே, முகத்தினில் காறி உமிழ்ந்தனரே,
யோர்தான் கரையினில் உலக இரட்சகர் கண்டெடுத்த சிலுவையது,
கல்வாரிக்கு வரும் வரையில் எங்கேனும் சற்றே இறக்கிவைத்தாரில்லை,
பல நேரங்களில் அவர் மனித உதவி வேண்டுவது போல தோன்றினாலும்,
அக்கொடுமையான சிலுவைதனை பரிதாபத்தினால் பகிர்ந்துகொள்ள எவருமில்லை,
எருசலேமே, எருசலேமே, அந்த பாரமான சிலுவை அந்த ஏங்குகின்ற இதயத்துக்கே
எப்போது மிகபாரமாகத் தோன்றியதென்பதை நீ அறிவாயோ?
உன் ராஜா அவர் தாமே, விசுவாசத்தில் குறைந்தும், இருதயத்தில் கடினமும் கொண்டவரே,
நீர் உதவி செய்யமாட்டீர், ஆனால் இராஜாவோ உனைக் கடந்தே
அவர் வழியில் சென்றுவிட்டார், அவருடனே எவருமில்லை,
இவ்வுலகின் இருளான, வெட்கக்கேடான பெருந்துன்பப் பள்ளத்தாக்கினை
தனியே கடந்தே சென்றுவிட்டார், ஓ. தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று சீடர்களே,
ஒரு மணிநேரம்கூட உங்களால் விழித்திருந்தே இராஜாவைப் பார்த்துக்கொள்ள முடியாதா?
அந்த கெத்சமெனேயின் காரிருள் வேளையிலே,
நீவீர் அந்த பாரமான சிலுவை தன்னின் பாரம் குறைக்க முயலவில்லையே,
பற்றி எரியும் பெருந்துன்பம் தன்னை பங்கு போட்டுக்கொள்ள மனமில்லையோ?
ஐயகோ, ஐயகோ, உங்கள் கண் இமைகள் பெருந்தூக்கத்தினாலே கனத்துவிட்டதே,
நீங்கள் எல்லாம் களைப்பினாலே தூங்கிவிட்டீரே,
எனவே, களைப்படைந்த சகோதரரே,
இப்போது நிம்மதியாய் உறக்கம்கொள்வீர், ஓய்வுகொள்வீர்.

**--3122--**

ஓர் பரலோக தூதனின் இறக்கைகள் தாமே
மறைக்கப்பட்ட சிலுவைதன்னின் பாரம் குறைக்க உதவியதே,
உங்கள் எஜமான் பலம் பெற்றே, வேறோர் சிலுவையை சுமக்கவே ஆயத்தம் ஆகிவிட்டாரே,
கல்வாரிக்குக் கொண்டு செல்ல எந்த சிலுவை மிகப்பாரமாகும்?
ரோமப் போர்வீரர் ஆசீர்வதிக்கப்பெற்றவர் தோளினில் சுமத்திய மரச் சிலுவையா?
இல்லை, இல்லை.
அது பார்க்கவியலா கண்ணுக்குத் தெரியா மறைக்கப்பட்டசிலுவைதானே,
அதுவே அவரை பூமியின்மேலே மிகப்பாரமாகவே அழுத்தி நசுக்கியதே,
வெளிறிய இதழ்கள் மென்மையாய்திறந்தே, எனது தந்தையே, எனது தந்தையே,
என்னை ஏனோ கைவிட்டீரே? பூமிகூட சோகமடைந்ததே, அவர் மார்பின்மீதே
அதைச்சுமந்து கொண்டாரே, சூரியன்கூட இருளாய்மாறியதே,
எல்லாம் முடிந்தது, நிறைவேறிற்று, சரிநிகர் சமான விலை கொடுத்தாயிற்று,
மறைக்கப்பட்ட சிலுவையோ, அந்த அன்பால் தளர்ந்த இதயம் தன்னை
ஊடுருவவே குத்திக்கிழித்ததே, உன் சிலுவையை எடுத்தே என்னைப் பின்பற்றிவா-
எஜமான் சொன்னார்,
ஆம். அவர் உண்மை மணவாட்டியும் ஓர் சிலுவை தன்னை சுமந்தாக வேண்டும்,
மறைக்கப்பட்ட சிலுவை, வாழ்க்கையின் சூழ்நிலை மாற்றங்களாலே உருவானதல்ல,
அதன் நோய்கள், வலிகள், இழப்புகள், ஏழ்மை, பெருங்கூட்டம்
வெளிப்புறப் பார்வைக்காக அடையாளமாகக்கொண்டதுவே,
இல்லை, இல்லை,
எனக்கு முன்பாய்கடந்து போனவர் சென்ற இடுங்கிய பாதையில் சென்றிடுவோம்,
நாங்கள்கூட அப்பெருந்துன்பம் சுமப்போம்,
உலகத்தின் மனஉறுதியற்ற ஒழுக்கக்கேட்டின் உணர்வுகளினின்றே
மீறப்பட்ட சட்டத்தின் பாவத்தின் சாபத்தின் பாரம், நாம் அவரண்டை செல்வோம்,
தடையேதும் விதிக்காமலே, நம் வாழ் வதனை ஜீவபலியாக்கிடுவோம்

# மேய்ப்பரது வேலை

**(Q525:3) Pastoral work/மேய்ப்பரது வேலை - மூப்பர்கள் இதைக் கண்காணிப்பவர்களல்ல.**

கேள்வி (1916)-3- செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையினை, சகோதரிகள் மூப்பர்களிடம் கலந்துரையாடாமல் துவங்கலாமா; மற்றும் இவ்வேலைக்கு ஒரு மூப்பர் ஆதரவளிக்காமல் இருக்கும் பட்சத்தில் அவள் தொடரலாமா?

பதில் - மேய்ப்பரது வேலையில் மூப்பர்களுக்கு எந்தச் சம்பந்தமுமில்லை. மூப்பர்கள் மூப்பர்களாய் இருக்கின்றனர் மற்றும் மூப்பர்களுக்கான வேலையினை அவர்கள் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர். மேய்ப்பரது வேலை என்பது மேய்ப்பனுக்கான வேலை மற்றும் அதை மேய்ப்பன் செய்திட வேண்டும். செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை தொடர்பான குறிப்புகள் அடங்கின கடிதமானது, என்னைத் தங்களது மேய்ப்பனாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டுள்ளதைத் தெரிவித்துள்ளவர்களுக்கே ஒழிய, வேறு யாருக்கும் அனுப்பி வைக்கப்படவில்லை; இவர்கள் என்னைத் தங்களுடைய மேய்ப்பனாக இருக்கும்படிக்கும் கேட்டுக்கொண்டுள்ளபடியால், அந்த வேலையை அவர்களுக்காக நான் செய்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன். இப்படியான விருப்பம் இல்லாதவர்கள் யாருக்கேனும் அக்கடிதங்கள் ஒருவேளை வந்திருக்குமானால், அவைகளைத் தயவாய்த் திருப்பி அனுப்பிவைக்கும்படியாகக் கேட்டுக் கொள்கின்றேன். ஆனால் எங்கெல்லாம் நான் மேய்ப்பனாகக் காணப்படுகின்றேனோ, அங்கெல்லாம் நான் சிறந்தவர்கள் என்று கருதிடும் சகோதரிகளைப் பயன்படுத்திடுவேன் மற்றும் அச்சகோதரிகளுடன் சேர்ந்து ஊழியம் புரிந்திடுவேன்.

சந்தேகத்திற்கிடமின்றி மறுப்புத் தெரிவித்துள்ளவர் இக்காரியத்தினைப் புரிந்துகொள்ளவில்லை. இதில் மூப்பர்களின் எதிர்ப்பைத் தூண்டிடும் எதுவும் நான் அறிந்தவரை இல்லை மற்றும் தங்களை வேலையில் ஈடுபடுத்திக்கொள்வதற்குப் போதுமான வேலைகள் இல்லாமல் ஏதேனும் மூப்பர்கள் காணப்படுவார்களானால், அவர்கள் தங்களை வேலையில் ஈடுபடுத்தி வைத்துக்கொள்ள முற்படுவது நலமாயிருக்கும். மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் செய்திடுவதற்கு அநேகம் வேலைகள் இருக்கின்றன மற்றும் தங்கள் பொறுப்பில் கர்த்தர் ஒப்புவித்துள்ளதான வேலைகளைச் செய்வதில் அவர்கள் தங்களை (busy) ஈடுபடுத்திக்கொண்டு காணப்பட வேண்டும்; ஆனால் சகோதரிகளுடைய நிலைமைகள் என்பது வேறுபட்டவையாகும் மற்றும் அவர்களை ஈடுபட வைப்பதற்குரிய ஏதாகிலும் காரியங்களைக் கண்டுபிடிப்பதற்கு நாங்கள் முயற்சித்துக்கொண்டுவருகின்றோம் மற்றும் வழி இப்பொழுது திறந்து கொண்டிருப்பதினால் நாம் களிகூருகின்றோம். ஒருவேளை மூப்பர்கள் யாரேனும் இதைத் தடைச் செய்து, இவ்வேலையில் குற்றம் கண்டுபிடிப்பார்களானால், அடுத்த தேர்ந்தெடுத்தல் வரும்போது, அவர்கள் மூப்பராகத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்துக்கொள்ளும்படிக்குச் சபையாருக்கு அறிவுரை கூறுகின்றேன். ஒவ்வொருவனும் தனது வேலையினைப் பார்ப்பதற்கும், மற்றவர்களுடைய வேலையில் தலையிடாமல் இருப்பதற்கும் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இந்தவிதத்தில் - அதாவது ஒவ்வொருவனும் வேலையிலுள்ள தனக்கான பாகத்தினைப் பார்த்துக்கொண்டு செய்வதன் மூலம் - ஊழியமானது செழித்தோங்கும். கர்த்தருடைய வேலையை யாரேனும் தடுக்க முற்படுவார்களானால், அவர்கள் விலக்கிவைக்கப்படுவது நலமாயிருக்கும்; ஏனெனில் இத்தகையவர்கள் இல்லாமல், சபையார் நன்கு முன்னேறுகிறவர்களாய் இருப்பார்கள். "சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது."

**(Q526:1) Pastoral work/மேய்ப்பரது வேலையில் - மூப்பர்கள் மற்றும் சகோதரிகளின் ஒத்துழைப்பு.**

கேள்வி (1916)-1- செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையில், ஒரு சபையிலுள்ள மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் சகோதரிகளோடு ஒத்துழைத்து வேலைபுரிவது குறித்து இன்னும் கொஞ்சம் அதிகம் விளக்கம் தாருங்கள்.

**--3124--**

பதில் - அனுப்பப்பட்டிருக்கும் கடிதங்களில் ஏற்கெனவே விவரிக்கப்பட்டுள்ளவைகளுக்கும் அதிகமாக என்னால் விளக்கமளிக்க இயலாது. செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலை தொடர்பான காரியங்களையுடைய இரண்டு கடிதங்களானது, ஒவ்வொரு சபையாருக்கும் அனுப்பிவைப்பட்டுள்ளது. கடிதங்களில் ஒன்று வேலையாளாகவும், லெப்டினன்டாகவும் மேய்ப்பரின் கீழ் வேலைபுரியப்போகும் சகோதரிக்கு அனுப்பப்பட்டுள்ளது; இன்னொன்று மூப்பர்கள் மற்றும் சபையாருக்குப் பொதுவாக அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதங்களானது நான் விவரிக்க விரும்பிய அனைத்தையும் விவரிக்கின்றதாய் இருக்கின்றது மற்றும் அவைகளை விவரிக்க இப்பொழுது நேரமெடுப்பது விருதாவாகவே இருக்கும். அக்கடிதங்களானது என்னைத் தங்களது மேய்ப்பனாகத் தேர்ந்தெடுத்துள்ளதாகத் தகவல் தெரிவித்துள்ள சபையார்களுக்கு மாத்திரமே அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்பதை நான் மறுபடியுமாகக் குறிப்பிடுகின்றேன். அக்கடிதங்களானது காரியங்களை முழுமையாய் விவரிக்கின்றதாய் இருக்கின்றது. ஒருவேளை ஒருமுறை வாசித்ததில் அக்காரியங்களை உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையெனில், மறுபடியும் வாசித்துப்பாருங்கள் மற்றும் தேவைப்படும் பட்சத்தில் உங்களுக்குத் தெளிவாகும்வரைக்கும் இரண்டு, மூன்றுமுறை வாசித்துப் பாருங்கள். ஒவ்வொரு பாகத்தையும் தனித்தனியாய் எடுத்து வாசியுங்கள். அவைகளில் ஒன்று பொதுவான சபையாருக்கு உரியதாயிராமல், மாறாக இவ்வேலை திட்டத்தினை நடத்தேற்றுகிறவர்களுக்கான அறிவுரைக் குறிப்புகளையும் பெற்றிருக்கும்; மற்றொன்று மூப்பர்களுக்குரியதாகவும், அவர்கள் எப்படி அதில் ஒத்துழைப்புக்கொடுக்கலாம் என்று அவர்களுக்குக் காண்பிக்கிறதாகவும் காணப்படும்.

இந்த வேலையானது நல்லமுறையில் நடைபெறும்போது, இது மிகவும் உற்சாகமளிக்கக்கூடியதான ஊழியம் புரிவதற்கான வாய்ப்பினைச் சகோதரிகளுக்குக் கொடுக்கிறது மாத்திரமல்லாமல், இன்னுமாக மூப்பர்கள் இப்பொழுது செய்துகொண்டிருக்கும் வேலைகளைக் காட்டிலும் அதிகமாய்ச் செய்வதற்குரிய வழிகளை, மூப்பர்களுக்குத் திறந்துகொடுக்கின்றதாகவும் மற்றும் மிகவும் தகுதிவாய்ந்த உதவிக்காரர்கள் மூப்பராகிடுவதற்கான வழிகளைத் திறந்து கொடுக்கின்றதாகவும் காணப்படும். செய்யும்படிக்கு மிக அதிகமாய் வேலை காணப்படுவதினால், நாம் கர்த்தருடைய வேலை செய்வோமா அல்லது இல்லையா? என்பதுதான் கேள்வியாய் இருக்கின்றது. நாம் அறுவடையின் காலத்தில்தான் காணப்படுகின்றோம் என்பதில் நாம் மிகவும் உறுதியாய் இருப்பது போன்று, கர்த்தர் நாம் செய்யும்படிக்கு அளிக்கும் எதையும் செய்திட வேண்டும் என்றும் நாம் மிகவும் உறுதியாய் இருப்போமாக.

இவ்வகையான ஊழியத்தில் முன்பு அனுபவம் பெற்றிராத சகோதரர்களை வேலையில் ஈடுபட வைப்பதற்கு, இவ்வேலை நல்ல வாய்ப்பாக இருக்குமா என்று யாரேனும் கேள்வி எழுப்புகின்றீர்களா? இல்லை; இது அனுபவமற்றவர் வேலைபுரிவதற்குரிய வேலையல்ல என்றே எங்கள் பதில் காணப்படும். இவர்கள் முன்னதாக அனுபவம் பெற்றுக்கொள்ள வேண்டும். இம்மாதிரியான வேலையில் எங்களுக்குக் கற்றுக்குட்டிகள் வேண்டாம். உபதேசத்தின் விஷயத்திலோ அல்லது பேசுவதிலோ "கற்றுக்குட்டிகளாய்" இருப்பவர்கள் class extension work/புதிய வகுப்புகளை உருவாக்கும் இவ்வகையான வேலைகள் எதிலும் ஈடுபடுத்தப்படக்கூடாது. கற்றுக்குட்டிகள் அனுபவம் பெற்றுக்கொள்ள வேண்டும்; ஆனால் எப்படி? ஒரு சமயத்தில் பிட்ஸ்பர்கில் (இதை நியூயார்க்கில் காணப்பட்ட போது முயற்சித்தேன்) நாங்கள் தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கூடம் என்று அழைக்கப்படும் ஒன்றைத் துவங்கினோம்; இந்தப் பெயரானது ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டபோது, அதற்கிருந்த அர்த்தம் அல்ல, மாறாக புதிய ஏற்பாட்டினுடைய வெளிச்சத்தில் பார்க்கப்படும்போது நம்முன் இருக்கும் வேலைக்கு அது முற்றிலும் பொருத்தமான பெயராய்க் காணப்பட்டது. வேதாகம கோணத்தில் தீர்க்கதரிசி என்பவர் பொதுப்பேச்சாளர் ஆவார்; ஞானதிருஷ்டிக்காரனோ, வெளிப்படுத்துதல்களைப் பெற்றவரோ அல்ல, மாறாக ஒரு பொதுப்பேச்சாளராவார்; மேலும் இந்த ஒரு விதத்தில்தான், "ஞானவரங்களையும் விரும்புங்கள்; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினபோது, இந்த ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினவராய் இருந்தார்; இவ்வசனமானது பொதுப்பேச்சாளர்களெனத் திறமை பெற்றுக்கொள்ள நாம் நாடவேண்டும் எனும் கருத்தைத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். சில சகோதரர்கள் பொதுப்பேச்சாளர்களுக்கான திறமையுடையவர்களாக இருக்கின்றார்கள் என நாம் உணர்ந்துகொண்டோம் மற்றும் இவர்கள் ஒரு சிறு வகுப்பாய் ஒன்றுகூடிவரவும், பேசும் விஷயத்தில் ஒருவரையொருவர் விமர்சனம் செய்வதற்கும், குறைகளைச் சுட்டிக்காண்பிப்பதற்கும் நாம் யோசனை தெரிவித்தோம். இவர்கள் பொது ஜனங்களிடத்தில் 3125--

அல்லது சபையாரிடத்திலோ பேசவைக்கப்படவில்லை. இவர்கள் விசேஷமாகப் பேசுவதற்கான தகுதிகளைப் பெற்றவர்கள் அல்ல. வெளிக்கொண்டுவரப்படுவதற்கும், அபிவிருத்திச் செய்யப்படுவதற்கும் உரிய ஒரு தன்மையினை பெற்றிருந்தனர். தகுதியில்லாத பேச்சாளர்கள் பேசுவதைக் கேட்கவைப்பதற்குச் சபையாரை நாம் கட்டாயப்படுத்துவதற்கு விரும்பவில்லை. சபையாரையோ அல்லது வேறு யாரையோ சலிக்கப்பண்ணுவதற்கு (bore) யாரும் விரும்பிடக்கூடாது. தகுதியுடையவர்களாகவும் மற்றும் தாலந்தும், திறமையும் இருப்பதை வெளிப்படுத்தி உள்ளவர்களும் மாத்திரந்தான், சபையாருக்கு அல்லது பொது ஜனங்களுக்குப் பேசிடுவதற்கெனத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இந்நோக்கத்திற்கான நம்முடைய அறிவுரைகளும், பயிற்சிகளும் தனித்து, பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும், மற்றும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்த வகுப்புகளில் ஒருவரை விசேஷித்த விமர்சகராக/ஆய்வுபண்ணுபவராக நாங்கள் நியமித்திருந்தோம் மற்றும் அதில் பங்கெடுத்த அனைவரும் பேசுபவரை விமர்சிப்பதற்கான வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். இந்த வகுப்புகளில் கலந்துகொள்ளும் இந்த இளையப் புருஷர்களில் சிலர், அனைவரும் சோர்ந்து போவதற்கு ஏதுவாக ஒருவரையொருவர் மிகவும் கடுமையாய் விமர்சித்தவர்களாய்க் காணப்பட்டனர். ஆகையால் தோலும், எலும்புகளும் தவிர வேறெதுவும் மிஞ்சிக் காணப்படாத அளவுக்கு மிகவும் கடுமையாய் விமர்சிப்பதற்கு எதிராய் நான் அவர்களை எச்சரிக்க வேண்டியதாய் இருந்தது. சபையாருக்கும், பொதுப்பேச்சாளர்களுக்கும் பயிற்சியளிக்கத்தக்கதாக இத்தகைய பள்ளிக்கூடங்களைப் பெற்றிருப்பதும் மற்றும் தகுதியில்லாத, அனுபவமில்லாத கற்றுக்குட்டிகளைப் பேச்சாளர்களாகக் கொடுத்து பொது ஜனங்களை அல்லது சபையாரைச் சிரமத்திற்குள்ளாக்காமல் இருப்பதும் நலமாயிருக்கும் என்று நான் எண்ணுகின்றேன்.

இது மேய்ப்பரது வேலை வெற்றிகரமாய் நடப்பது தொடர்புடைய விஷயத்தில் மிக முக்கியமான காரியமாய் இருக்கும் என்று நாம் நம்புகின்றோம் மற்றும் சகோதரிகளுடன் இணைந்து வேலைபுரிய ஒத்துழைப்பதற்கும் இது சிறந்த மற்றும் மிகவும் பலனுக்கேதுவான வழிகளில் ஒன்றாய் இருக்கும் என்றும் நாம் கருதுகின்றோம்.

**(Q527:1) Pastoral work/மேய்ப்பரது வேலை - சகோதரர்களுக்குரியது அல்ல.**

கேள்வி (1916)-1- செய்யும்படிக்கு மேய்ப்பரால் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையினையும் மற்றும் தொகுதி விநியோகிக்கும் வேலையினையும் எடுத்துக்கொள்ளும்படிக்கு, ஒரு சகோதரன் மற்றும் சகோதரி, Eureka Drama மற்றும் தொகுதி விநியோகிக்கும் வேலையை விட்டுவிட்டு வர நீங்கள் அறிவுரை வழங்குவீர்களா?

பதில் - நாம் இப்படிச் செய்திடும்படிக்குச் சகோதரன் ஒருவருக்கும் அறிவுரை வழங்கிடமாட்டோம். ஏனெனில் மேய்ப்பரால் கொடுக்கப்பட்டுள்ள இக்குறிப்பிட்ட வேலையில் சகோதரன் ஒருவன் செய்திடுவதற்கு எதுவும் பெற்றிருப்பதில்லை. கேள்விக் கேட்டுள்ள சகோதரன் இக்காரியத்தைத் தவறான கண்ணோட்டத்தில் புரிந்திருக்கின்றார் என்பதில் உறுதியே. மேய்ப்பரால் கொடுக்கப்பட்டுள்ள இக்குறிப்பிட்ட வேலை, சகோதரிகளுக்கானதாகும். ஒரு காரணம் சகோதரர்களைக் காட்டிலும் சகோதரிகளுக்குப் பகல் பொழுதில் அதிக நேரம் இருக்கின்றது; சகோதரர்கள் பொதுவாகப் பகற்பொழுதில் தொழிலில் ஈடுபட்டுக் காணப்படுவார்கள்; மற்றும் இரண்டாம் காரணம் சகோதரர்களைப்பார்க்கிலும் அநேக சகோதரிகள் ஜனங்களை அணுகும் விஷயத்தில் அதிகளவு சாமார்த்தியம் உடையவர்களாய் இருக்கின்றனர். சகோதரர்களைப்பார்க்கிலும் அனைத்துச் சகோதரிகளும் அதிக சாமார்த்தியம் உடையவர்களாய் இருக்கின்றனர் என்றல்ல. மாறாக அவர்கள் இவ்வேலையில் தங்கள் பங்கினைச் செய்திடுவதற்கு இது சிறந்த வாய்ப்பாய் இருக்கின்றது மற்றும் இப்படியாகத் தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகளைக் கொடுப்பதற்கும் மற்றும் பிற்பாடு முதலாம் தொகுதியின் ஆராய்ச்சி வகுப்புகளை நடத்திடுவதற்கும் ஏதுவாய்ச் சகோதரர்களுக்குரிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றதாய் இருக்கின்றது. இந்த வேலையினுடைய துவக்கமானது முடிவாக இருக்கின்றது என்று எவ்விதத்திலும் நாம் எண்ணிவிடக்கூடாது. துவக்கம் என்பது உண்மையில் ஆரம்பமாக இருக்கின்றது மற்றும் அது ஆரம்பம் மாத்திரமேயாகும். Drama, பொதுச் சொற்பொழிவுகள் மற்றும் தொகுதி விநியோகிக்கும் ஊழியங்கள் வாயிலாக அவ்வப்போது பெறப்பட்டதான பெயர்ப் பட்டியல்களை புரூக்கிளினிலிருந்து பெற்றுக்கொள்கையில் அந்தப் பட்டியல்களை வைத்துத் துவங்கிடுங்கள் - இதுதான் துவக்கம் - ஆனால் என்னுடைய கருத்து என்னவெனில் . . . அடுத்தச் சில வருடங்களுக்குள்ளாக நடைபெறும் என்று நாம் --3126--

எதிர்ப்பார்க்கின்றதான அந்த மாபெரும் வேலையைக் கர்த்தர் செய்யப்போகிறார் என்றால், யோர்தானின் இந்த அடித்தலானது உலக முழுவதிலும் பெரும் ஆர்வத்தைத் தூண்டிடும் மற்றும் இதன் விளைவாகக் கலந்துகொள்பவர்களின் எண்ணிக்கை அதிகத் திரளாய் இருக்கும் மற்றும் அதிக எண்ணிக்கையிலான பெயர்களுள்ள பட்டியல் கிடைக்கப்பெறும் மற்றும் இதனிமித்தம் இவ்வேலைப்பாகமானது விரிவடைந்து தொடரும் மற்றும் இதனால் காலம் செல்லச் செல்ல தெய்வீகத் திட்டம் குறித்த விளக்கவுரைகள் கொடுப்பதற்கும், முதலாம் தொகுதி ஆராய்ச்சி வகுப்புகளுக்குமான வாய்ப்புகளானது பன்மடங்காகிடும். இது தேவனுடைய மாபெரும் திட்டத்தின் ஒருபாகம் என்று நான் புரிந்துகொள்கின்றேன். சகோதரி தொகுதி விநியோகிக்கும் வேலையில் தன்னைக் கர்த்தர் எவ்வளவு காலம் ஆசீர்வதிக்கச் சித்தமாயிருக்கின்றாரோ அவ்வளவு காலம் அதிலேயே தொடர்வாளாக என்பது என்னுடைய ஆலோசனையாகும் மற்றும் இது சகோதரனும் Eureka Drama வேலையில் தொடர வேண்டும் என்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படிச் செய்வது தற்காலத்தில் சிறந்ததாய் இருக்கும் மற்றும் பிற்பாடு எதிர்க்காலத்தில் கர்த்தர் அருளிடும் பட்சத்தில் மேய்ப்பருக்கு கீழாக வேலைக்குள் கடந்து வருவதோ அல்லது தற்போது இருக்கிற ஊழியத்தை விரிவாக்கின நிலையில் தொடர்வதோ அவர்களுக்கான சிலாக்கியமாயிருக்கும்.

---

**--3127--**

# நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்.

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்.
ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. -யோவான் 15:5

கனிகள் காய்த்த கிளைகளுக்குத்தானே கத்தி வெட்டுக் கடுமையாய் இருக்குமே,
மேலும் கனிகளை ஈந்தே, முழு வாழ்க்கை தனை வாழ்ந்திடவே.
மொட்டுவிட்ட கிளைகள் ஒவ்வொன்றும் கழித்துவிடப்பட்டபோதிலும்,
கொழுகொம்பைத்தேடி அலைகின்ற பற்றுக் கம்பிகள், முளைவிடும் இலைகள்,
கொழுந்துகள் யாவும் தம்மை முழுவதும் உரு இழந்து போக வேண்டுமே, உருமாறிட வேண்டுமே.
வாழ்க்கையின் மகிழ்ச்சி யாருக்கெல்லாம் இழந்ததாய் காணப்படுகிறதோ,
அவர் அழகெல்லாம் அழிக்கப்பட்டுவிட்டதோ,
அவர் ஆவல் அனைத்தும் குப்பைத்தொட்டியில், புழுதியில் வீசப்பட்டதாய் உணரப்படுதோ,
அடிபட்டுக் கன்றிவிட்டதோ, முட்களால் குத்திக் கிழிக்கப்பட்டதோ,
நீங்கள் மகிழ்ந்து களிகூருங்கள். உங்கள் ஒவ்வொரு ஆசையும், ஒவ்வொரு கனவும்,
ஒவ்வொரு நம்பிக்கையும், விழுந்திடலாம், தேய்ந்து மறைந்தே போய்விடலாம்.
அது தேவனுடைய அன்பின் கரத்தில் உள்ளதே,
அவர்தான் வெட்டும் கத்தியை அன்புடன் கையாள்கின்றாரே, தம் மென்மையான
தொடுதலினால் அந்த அனபின் வேலையைச் செய்கின்றாரே,
ஏற்கனவே கனிகொடுத்த அன்னாரின் வாழ்வும்
தற்போது மேலும் கனிகொடுக்கலாகுமே,
நம்மையும் அவ்வாறே கழித்து சுத்தம் செய்கின்றாரே,
மேலும் பல கனிதந்து, தேவனுக்காய் ஜீவபலி செலுத்திடவே.

# முதற்பேறானவர்களின் கடந்துபோகுதல்

இஸ்ரயேலர்களால் ஆசரிக்கப்பட்டதான முதன்மையான நினைவுகூருதல் என்பது பஸ்கா ஆகும். பஸ்கா என்பது இஸ்ரயேலர்களினுடைய சரித்திரத்தின் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளில் ஒன்றிற்கான ஆசரிப்பாகும். பாவநிவாரண நாளானது அவர்களது சிவில்/மதச்சார்பற்ற ஆண்டினுடைய துவக்கத்தில் இடம் பெறுவதுபோன்று, இந்தப் பஸ்காவானது அவர்களது மதச்சார்புடைய ஆண்டின் துவக்கத்தில் இடம்பெறுகின்றதாய் இருக்கின்றது. இந்தப் பஸ்கா என்பது, அவர்களது தேசத்தினுடைய பிறப்புத் தொடர்புடையதாய் இருக்கின்றது. அந்தக் குறிப்பிட்டக் காலப்பகுதியில் தேவன், எகிப்தின் அரியணையில் அடிப்பணியாத மனமுடைய பார்வோனைக் கொண்டுவந்தார் என்பதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. அரியணையை அடைவதற்கு மற்ற நபர்கள் வரிசையில் காணப்பட்டிருந்தாலுங்கூட இந்த மனிதன் அரியணையை அடையத்தக்கதாக, தேவன் விசேஷமாய் உதவினார் என்று — இம்மனுஷனுடைய இயல்பான வணங்கா கழுத்துத் தன்மையின் மூலமாகவும், வீண் பிடிவாதத்தின் மூலமாகவும், இவரது நடத்தையானது அவசியமாக்கிவிடும் மற்றும் ஏற்றதாக்கிடும் வாதைகள் ஒவ்வொன்றிலும் தெய்வீக வல்லமையானது வெளிப்படத்தக்கதாக, இம்மனுஷன் அரியணையை அடைவதற்கு, தேவன் இவருக்கு விசேஷமாய் உதவினார் என்று வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. "என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன்" (யாத்திராகமம் 9:16) என்று நாம் வாசிக்கின்றோம். எகிப்தியர்கள்மீது அனுப்பப்பட்டதான பத்து வாதைகளானது, இவர்கள் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை அநியாயமாய் நடத்தினதற்கு எதிரான தெய்வீக நீதியினுடைய வெளிப்படுத்துதல்களாயிருந்தன. பத்து வாதைகளில், இறுதியான வாதையானது, பஸ்கா/கடந்துபோகுதல் எனும் நமது பாடத்தோடு தொடர்புடையதாய் இருக்கின்றது. எகிப்தியர்களின் முதற்பேறானவர்கள் அனைவரும் மரிக்க வேண்டும் என்பதாகவும், இஸ்ரயேலர்களின் முதற்பேறானவர்கள் மரிக்கக்கூடாது என்பதாகவும் ஆணை அனுப்பிவைக்கப்பட்டது. எகிப்தில் தங்கியிருக்கின்றதான தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களோ, தங்களை எகிப்தியர்களிடமிருந்து வேறுபடுத்தி, வித்தியாசப்படுத்திக் காண்பிக்கத்தக்கதாக விசேஷமான ஏற்பாடுகளைச் செய்திடுவதற்குக் கட்டளையிடப்பட்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கென்று பழுதற்ற ஓர் ஆட்டுக்குட்டியினைத் தெரிந்துகொண்டு, அதை முதலாம் மாதத்தினுடைய பத்தாம் தேதியன்று வீட்டிற்குள் கொண்டுவர வேண்டும். அதை அவர்கள் பதினான்காம் தேதிவரை பேணி, பராமரித்து, பின்னர் அதை அடிக்க வேண்டும். அதன் இரத்தமானது வெளி வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்பட வேண்டும் மற்றும் அதன் எலும்புகள் எதுவும் முறிக்கப்படாத நிலையில், அதன் மாம்சமானது நெருப்பில் சுடப்பட வேண்டும். அது பதினான்காம் தேதி இரவிலேயே கசப்பான கீரைகளுடனும், புளிப்பில்லாத அப்பங்களுடனும் புசிக்கப்பட வேண்டும். அடுத்தநாள் காலையில் இந்த உணவினுடைய பலத்தினால், அவர்கள் எகிப்திலிருந்து, ஆபிரகாமோடு பண்ணப்பட்டதான உடன்படிக்கையின்கீழ்ச் சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாக வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குப்புறப்பட வேண்டும்.

## "சங்காரத் தூதன் கடந்துபோனார்'

மோசேயின் வாயிலாக கர்த்தர் முன்னுரைத்திருந்தவைகள் போலவே விளைவுகள் நிகழ்ந்தது. எதிப்தியர்களின் முதற்பேறானவர்கள் அந்த இரவில் மரித்தார்கள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களின் முதற்பேறானவர்களோகடந்துபோகப்பட்டார்கள் (அ) தப்புவிக்கப்பட்டனர். குறிப்பிடத்தக்கதான இந்த அற்புதமானது, தெய்வீகக் கட்டளையின் பேரில் நினைவுகூரப்பட்டது மற்றும் ஒவ்வொரு வருடமும், இதற்கான காலப்பகுதியில், ஒரு குடும்பத்திற்கு (அ) கூட்டத்தாருக்கு ஓர் ஆட்டுக்குட்டியென, இஸ்ரயேலர்களின் ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் பத்தாம் தேதி அன்று ஓர் ஆட்டுக்குட்டி கொண்டுவரப்படுகின்றது. அவர்கள் குடியிருக்கும் இடங்களிலிருந்து புளிப்புகள் அனைத்தும் அப்புறப்படுத்தப்படுகின்றன. சீர்க்கேட்டினை அடையாளப்படுத்துகின்றதான அனைத்தும் சுட்டெரித்துப்போடப்பட்டது மற்றும் புளிப்பில்லாத அப்பம் மாத்திரமே, ஆட்டுக்குட்டியின் மாம்சத்தோடு புசிக்கப்பட்டது. வருடந்தோறும் பஸ்காவானது, எட்டு நாட்கள் கொண்டாடப்படுகின்றது மற்றும் முதலாம் நாளும், எட்டாம் நாளும் பிரதான நாட்களாக இருக்கின்றன (அ) விசேஷமாய் ஆசரிக்கப்பட வேண்டிய நாட்களாய் இருக்கின்றன. சமீபத்தில் நாங்கள் எருசலேமுக்குச் சென்றபோது, பஸ்காவானது பழமையான யூத முறைமையாக மாத்திரம்

காணப்படாமல், அந்தத் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களுடைய மிகுந்த சந்தோஷகரமான பண்டிகையாகவும் காணப்படுகின்றது என்பதை நாங்கள் அறிந்திருந்தபடியால், எருசலேமில் பஸ்கா காலத்தின்போது காணப்படத்தக்கதாக காலத்தினைத் திட்டமிட்டுச் செயல்பட்டோம். இஸ்ரயேலானது அவர்களுக்கு ஆதிக்காலங்களில் பாராட்டப்பட்டதான தெய்வீகத் தயவுகளில் ஒன்றினைக் கொண்டாடுகின்றது மற்றும் இவ்வாசரிப்பானது, வேதவாக்கியங்களில் எழுதப்பட்டிருக்கிறபடி இன்னும் எதிர்க்காலத்தில் தேவன் இன்னும் குறிப்பிடத்தக்க விதத்தில் தம்மை வெளிப்படுத்துவது குறித்த தீர்க்கத்தரிசனங்களை அவர்களுக்கு நினைப்பூட்டுகின்றது; "ஆதலால், இதோ, நாட்கள் வரும், அப்பொழுது இஸ்ரயேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு இனிமேல் சத்தியம்பண்ணாமல், இஸ்ரயேல் புத்திரரை வடதேசத்திலும், தாம் அவர்களைத் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்து வரப்பண்ணின கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சத்தியம்பண்ணுவார்கள்; நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த அவர்களுடைய தேசத்துக்கு அவர்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 16:14, 15). மீண்டுமாக "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கைபண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல; ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரேமியா 31:31, 32) என்பவைகளை நினைப்பூட்டுகின்றது. இங்கு, பஸ்கா காலத்தின்போது எகிப்திலிருந்துள்ள இந்த விடுதலையானது, அதாவது தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுடைய கடந்தகால சரித்திரத்தின் மிகவும் சிறப்புமிக்க இந்நிகழ்வானது, இஸ்ரயேலுடன் புதிய உடன்படிக்கையானது ஏற்படுத்தப்படுவதற்கு ஏற்றக்காலம் வருகையில் முழுமையாய்த் திரைக்குள் மறைந்துபோய்விடும் என்பதாக மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது; புதிய உடன்படிக்கையானது பிரமாணம் மற்றும் திவ்விய கோரிக்கைகள் தொடர்புடைய விஷயத்தில் பழையது, ஆனாலும் மேன்மையான பலிகளின் காரணமாகவும், மேலான மத்தியஸ்தரின் காரணமாகவும் புதியதாயுள்ளது; சீனாயின் உடன்படிக்கையினுடைய மத்தியஸ்தராகிய மோசே, ஜனங்களுக்கு அவர்களுடைய மத்தியஸ்தராகப் பணிபுரிந்திடுவதற்கான தனது பிரயாசங்கள் அனைத்திலும் உண்மையாயிருந்து செய்தவைகளைக்காட்டிலும், இந்த மேலான மத்தியஸ்தர் இஸ்ரயேலுக்கு மேன்மையானவைகளைச் செய்வார். இந்த மேலான மத்தியஸ்தர் மற்றும் இவராலான மேன்மையான உடன்படிக்கைக்குறித்தே மோசே, "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல (ஆனால் பெரியவர் . . . என்னுடைய நிஜமானவர்) ஒரு தீர்க்கத்தரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிக்கொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கத்தரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான்" என்று கூறினார் (உபாகமம் 18:15; அப்போஸ்தலர் 3:22, 23).

## எருசலேமில் நிகழ்ந்த பஸ்கா

பஸ்கா அன்று மாலையில், ஒவ்வொரு யூத குடும்பமும், அதற்கு ஆயத்தமான நிலைமையில் காணப்பட்டனர். யூத ஆண்டு குறிப்பேட்டின்படியான (calendar) முதலாம் மாதத்தினுடைய பத்தாம் தேதியைத் தாண்டி நாங்கள் எருசலேமுக்கு வந்தபடியால், குடும்பங்கள் ஆட்டுக்குட்டிகளைத் தெரிந்தெடுப்பதை எங்களால் பார்க்க முடியவில்லை. ஆட்டுக்குட்டிகள் ஏற்கெனவே வீடுகளுக்குக் கொண்டுச்செல்லப்பட்டன. ஆசரிப்பிற்கான பல்வேறு ஆயத்தங்கள் பண்ணப்பட்டதான காலப்பகுதியில் நாங்கள் அங்குக் காணப்பட்டதால், அவைகளை நாங்கள் பார்த்தோம். ஒவ்வொரு வீட்டாரும் அவ்வாசிரிப்பிற்காக வீட்டைச் சுத்தம் செய்தனர் மற்றும் பழைய எலும்புகளும் (அ) அழுகினதும், துர்நாற்றம் வீசுகிறதுமான எந்த ஒரு பொருளும் மற்றும் அழுகின நிலையிலுள்ள எந்த ஓர் உணவும் காணப்படுகின்றதாவென மூலை முடுக்கெல்லாம் தேடப்பட்டது மற்றும் கழிவுப்பொருட்கள் அனைத்தும் சுட்டெரிக்கப்பட்டன. இவைகள் மாத்திரமல்ல, இப்படிச் சுத்தம்பண்ணின பிற்பாடு, ஓர் ஆச்சாரமான முறைமையும் செய்யப்படுகின்றது. வீட்டின் தலைவர், எரியும் மெழுகுவர்த்தியுடன், வீட்டார் பின்தொடர்ந்துவர, முழு வீட்டையும் சோதனையிடுகின்றார். ஆட்டுக்குட்டி அடிக்கப்படுவதும், சுடப்படுவதும் ஒருவிதமான முறையில் செய்யப்படுகின்றது. ஆட்டுக்குட்டியினுடைய சரீரத்திற்குள் நீளவாக்கில் ஒரு கம்பு விடப்படுகின்றது மற்றும் சிலரால் குறுக்காகவும் ஒரு கம்பு விடப்படுகின்றது மற்றும் இப்படியாக திட்டமிடாமலேயே சிலுவையின் கருத்தானது கொடுக்கப்படுகின்றது; தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் மனங்களிலும், தங்களது ஆட்டுக்குட்டியானது சிலுவையில் அறையப்பட்டதான இயேசுவையே குறிக்கின்றதாகவே இருக்கின்றது.

குடும்ப அங்கத்தினர்கள் உணவைச்சுற்றிக் கூடிக்கொள்கின்றனர் மற்றும் அநேகர் இன்று கத்திகளையும், முள் கரண்டிகளையும் (forks), கரண்டிகளையும் (spoons) பயன்படுத்தினாலும், ஜனங்களில் சிலர் ஆதிக்காலங்களினுடைய வழக்கங்களைப் பின்பற்றுகிறவர்களாக இருந்து, தங்கள் விரல்களையே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். சிலர் நவீன கால மெல்லிய, முறுகலான புளிப்பில்லாத அப்பங்களைப் (matzo) பயன்படுத்துகின்றனர்; ஆனால் அநேகர் தடிமனான அப்பம் போன்றதான பழைய வழக்கத்தின்படியான புளிப்பில்லாத அப்பத்தையே பயன்படுத்தினார்கள். இந்த அப்பங்களானது கடினமானவைகளாகவும், எளிதில் மடக்கத்தக்கவைகளாகவும் இருந்தன. அப்பங்களில் ஒன்றினை மடக்கும்போது, அது கரண்டிபோல் பயன்படுத்தப்பட்டு, உண்ணப்படுகின்றது மற்றும் சிலசமயங்களில் விசேஷித்த சுவைக்காக அவைகள் இரசங்களில் தோய்த்து உட்கொள்ளப்படுகின்றன. முதல் பஸ்கா நிகழ்வின்போது, இஸ்ரயேலர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தரித்தவர்களாகவும், வாக்களிக்கப்பட்டத் தேசத்திற்கு உடனடியாகப் புறப்படும் வண்ணம் ஆயத்தத்துடன் காணப்பட்டவர்களாகவும் இருந்ததுபோல, இதை நினைப்பூட்டும் வண்ணமாகவே புசித்தல் விஷயங்கள் அனுசரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்திலும், மோசேயால் கட்டளையிட்டதுபோல குடும்பத் தலைவர் குடும்பத்தாருக்கு இவ்வாசரிப்பிற்கான அர்த்தத்தினையும், யூத ஜாதியினுடைய ஆரம்பம் தொடர்புடையதான அதன் துவக்கத்தையும் விவரிக்கின்றார். இந்த ஆட்டுக்குட்டியினைப் புசித்தலானது, பிரமாணத்தின்படி, முதலாம் மாதத்தினுடைய பதினான்காம் தேதிக்குரியதாகும். பின்வரும் பதினைந்தாம் தேதி அன்று, பார்வோன் மற்றும் செங்கடலின் வல்லமையிலிருந்ததான மாபெரும் விடுதலையின் நிமித்தமான சந்தோஷத்தின் பண்டிகை ஆரம்பமாகுகின்றது. அந்த எட்டு நாட்கள் அளவும் எருசலேமில் தங்கும் சிலாக்கியம் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பண்டிகையினுடைய முதலாம் மகா நாளில் பரிசுத்த நகரமானது, அதன் உச்சப்பட்சமான மகிழ்ச்சியினால் நிறைந்திருந்தது.

அங்குக் காணப்பட்டதான ஜனத்தொகையில் பெரும்பான்மையானவர்களாய்க் காணப்பட்ட யூதர்களுக்கு மாத்திரமாக இந்தக் காலப்பகுதி விசேஷமானதாய்க் காணப்படாமல், ஜனத்தொகையில் அதிகளவு வகிப்பவர்களான கிரேக்க மற்றும் அர்மேனியன் கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் அக்காலமானது ஜெபிப்பதற்கான தருணமாகவும், விடுமுறைக்காலமாகவும் காணப்படுகின்றது. பழமை வாய்ந்த கிறிஸ்தவ சமுதாயத்தினர்கள் இன்னும் யூத காலக்கணக்கீட்டின்படியான, ஆதித் திருச்சபையின் பாணியிலேயே நமது கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் தேதிகளை ஆசரிக்கின்றனர்; யூதக் காலக்கணக்கீட்டின்படியான ஆதித் திருச்சபையின் பாணியிலிருந்து, பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாவே உரோம கத்தோலிக்கச் சபையும், அதன் மகள்கள் அமைப்பும் கொஞ்சம் வேறுபட்டு போய்விட்டது. இதனால்தான் இந்த வருடம் (இப்பாடம் எழுதப்பட்ட வருடம்) உரோம கத்தோலிக்கன், எபிஸ்கோப்பலியன், லூதரன் சபைகள் புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறையும் மார்ச் 25 மற்றும் 27-ஆம் தேதிகளில் கொண்டாடினார்கள்; ஆனால் நாங்கள் எருசலேமில் பார்த்ததான ஆசரிப்பானது ஒரு மாதம் தாண்டி, அதாவது ஏப்ரல் 22 - 24- ஆம் தேதிகளில் ஆசரிக்கப்பட்டன. ஆகையால் கிரேக்க மற்றும் அர்மேனியன் கிறிஸ்தவர்கள் புனித வெள்ளியையும், ஈஸ்டர் ஞாயிறையும் கொண்டாடினதையும் நாங்கள் காண முடிந்தது.

## அர்த்தம் மற்றும் விளக்கம்

முப்பத்தைந்து நூற்றாண்டுகள் காலமாக, தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள், தெய்வீகக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக "பஸ்கா" நினைவுகூருதலை, அதன் வெளித்தோற்றமான முக்கியத்துவத்தை மாத்திரம் நோக்கினவர்களாகவும், ஆனால் ஒரு கணம்கூடத் தாங்கள் ஆசரிக்கின்றதான காரியத்தினுடைய உண்மையான அர்த்தத்தைச் சிந்தித்துப்பார்க்காதவர்களாக, அதாவது தங்களுக்கும், மனுக்குலம் யாவற்றிற்கும் மிகவும் முக்கியமானதாகக் காணப்படும் தெய்வீகத் திட்டத்தினுடைய ஒரு பிரம்மாண்டமான அம்சத்திற்குப் பஸ்கா நிழலாய்க் காணப்படுகின்றது என்பதைச் சிந்தித்துப்பார்க்காதவர்களாக ஆசரித்து வந்தார்கள். அவர்கள் அடித்த ஆட்டுக்குட்டியானது, இயேசுவாகிய "தேவ ஆட்டுக்குட்டிக்கு" நிழலாய் இருக்கின்றது; இயேசுவின் மரணமனாது, முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயமாகக் காணப்படுகின்றது. ஆபிரகாமுக்கும் மற்றும் இவர் மூலமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குமான வாக்குத்தத்தமானது, நிறைவேறுவதற்கு முன்னதாக, இயேசுவின் மரணம் சம்பவிப்பது அவசியமாய் இருந்தது. பாவத்திலிருந்ததான ஒரு மீட்பானது, நித்தியமான பயனை உடையதாகக் காணப்படுவதற்கு, வருடந்தோறும் பலிச்செலுத்தப்பட்டுவரும் சொல்லர்த்தமான ஆட்டுக்குட்டியினுடைய பலியைப்பார்க்கிலும் மேன்மையான பலி அவசியமாயுள்ளது. (ஆதாம் மற்றும் அவரது சந்ததியாகிய) மனுக்குலத்திற்கான பலியாக, தமது ஜீவனை அளிக்கத்தக்கதாக இயேசு மனிதனாகுவது மாத்திரம் அவசியமாயிராமல், இன்னும்

பலியின் வேலையை முடித்தப் பிற்பாடு அவர் யேகோவா தேவனின் வலது பாரிசத்தில் ஆவிக்குரிய மேசியாவாகக் காணப்படத்தக்கதாகப் பரத்திற்கு ஏறவும் வேண்டியிருந்தது; தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் நம்புகிறதும் மற்றும் தாங்கள் மேசியாவின் ஆசீர்வாதங்களைச் சகல ஜாதிகளுக்கும், ஜனங்களுக்கும் பாஷைக்காரர்களுக்கும் வழங்குவதற்கெனப் பயன்படுத்தப்படுவார்கள் என்பதாகவுமுள்ள ஆபிரகாமுடனான உடன்படிக்கையில் தங்களுக்குப் பண்ணப்பட்டதான கிருபையான வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் இவர்களுக்காக இந்த ஆவிக்குரிய மேசியா ஏற்றக்காலத்தில் நிறைவேற்றிடுவார். பாவத்தின் நிமித்தமான ஓர் ஆக்கினைத் தீர்ப்பு உலகத்தின்மீது காணப்பட்டது; "பாவத்தின் சம்பளம் மரணம்." இந்த மரணத் தண்டனைத் தீர்ப்பானது முழுமையாகவும், என்றென்றுமாகவும் புறம்பாக்கிப்போடப்படுவதற்கு முன்னதாக, மனிதன் முற்றிலுமாகவும், என்றென்றுமாகவும் மரண நிலைமைகளிலிருந்து நித்திய ஜீவனுக்கும், அவனது சிருஷ்டிகருக்கு இசைவான நிலைக்கும் உயர்த்தப்படுவதற்கு முன்னதாக, மனிதனுக்கான தண்டனை சந்திக்கப்பட வேண்டும். தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக இயேசு முதலாவதாக தம்மை இஸ்ரயேலுக்கு, அவர்களது இராஜாவென முன்வைத்தார். ஆனால் அவரிடம் ஐசுவரியமோ, படைகளோ, செல்வாக்குமிக்க நண்பர்களோ இல்லாததினால், அவர்களால் அவரைத் தங்களது மேசியாவெனப் பார்க்கமுடியவில்லை; அவரை வஞ்சகன் என்று அலட்சியப்படுத்தினார்கள். அவர் தம்மைத் தேவகுமாரன் என்றும், அவர்களது இரட்சகர் என்றும் கூறினபோது, அவரைப் போலியானவர் என்றும், தேவனைத் தூஷிக்கிறவர் என்றும், மரணத்திற்குப் பாத்திரமானவர் என்றும் எண்ணினார்கள். அவருக்குத் தங்களது ஆலோசனை சங்கத்திற்கு முன்னதாகத் தீர்ப்பளித்தப் பிற்பாடு, அவருக்கு மரணத்தீர்ப்பை நிறைவேற்றிடுவதற்கு அவர்கள் அதிகாரம் பெற்றிராததால், உரோம தேசாதிபதியினால் செவிக்கொடுக்கப்படுகின்றதான ஒரே குற்றச்சாட்டினை, அதாவது உரோம சக்கிரவர்த்திக்கு எதிரான துரோகம் எனும் குற்றச்சாட்டினை, அவர்மேல் சுமத்தினார்கள். இராஜ துரோக விஷயத்தில் இயேசுவோடுகூடப் பிலாத்துவையும் சம்மந்தப்படுத்திவிடுவார்கள் என்று பிலாத்துவை அச்சுறுத்தி, நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியினை இறுதியில் சிலுவையில் அறைந்துபோட்டார்கள். அவர்கள் தங்களது பஸ்கா ஆட்டுக்குட்டியினைச் சுடுவதற்கெனக் குத்திக்கொல்வதுபோன்ற விதத்தில், அவர் சிலுவையின்மீது அகல கிடத்தப்பட்டார்.

## முதலாம் மாதம், பத்தாம் தேதி அன்று

முதலாம் மாதத்தின் பத்தாம் தேதியாகிய ஏற்றவேளையில் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் பஸ்காவிற்கான தங்களது ஆட்டுக்குட்டியினை எடுத்துக்கொள்வதுபோன்று, இயேசு தம்மைத் தேவ ஆட்டுக்குட்டியாக முன்வைத்தார் மற்றும் அவர் ஏற்றுக்கொள்ளப்படாமல் மறுக்கப்பட்டார் என்பதையும் நாம் கவனிப்போமாக. அவர் தம்மை முன்வைத்ததானது, துல்லியமாக அதே நாளிலும் மற்றும் சகரியா தீர்க்கத்தரிசியினால் குறிப்பிடப்பட்டுள்ள அதே விதத்திலும் துல்லியமாகக் காணப்பட்டது; "சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூரு; எருசலேம் குமாரத்தியே, கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார். அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்; அவருடைய ஆளுகை ஒரு சமுத்திரந் தொடங்கி மறுசமுத்திரம்வரைக்கும், நதிதொடங்கிப் பூமியின் எல்லைகள் பரியந்தமும் செல்லும்" (சகரியா 9:9, 10). நாம் ஏற்கெனவே பார்த்துள்ளப்படி இந்தத் தீர்க்கத்தரிசனமானது அப்படியே நிறைவேறினது. தீர்க்கத்தரிசி முன்னுரைத்ததுபோலவே இஸ்ரயேலுக்கான "இரட்டிப்பான" அனுபவங்களானது ஆரம்பித்த அதே நாளில்தானே நிறைவேறினது. சுயதிருப்தியின் காரணமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் குருடாக்கப்பட்டனர் மற்றும் தாழ்மையாய் வந்த இராஜாவினை ஏற்க மறுத்துவிட்டனர் மற்றும் அவரைத் தங்களது பஸ்கா ஆட்டுக்குட்டியாக ஏற்றுக்கொள்வதற்கும் மற்றும் அவரைத் தங்களது இருதயங்களுக்குள்ளும், இல்லங்களுக்குள்ளும் ஏற்றுக்கொள்வதற்கும் மறுத்துவிட்டனர். எனினும் அவர் இந்த அருமையான நிழலினை நிறைவேற்றிடுவதற்குத் தொடர்ந்தார். நிஜமான பஸ்கா ஆட்டுக்குட்டியென அவர் நிழலுக்கு இசைவாக, பதினான்காம் தேதி அன்று மரித்தார்.

தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களில் சிலர், அவர் வாயிலாக ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொண்டனர்; அதாவது தாழ்மையான, கீழ்ப்படிதலான, உண்மையான இருதய நிலையினைப் பெற்றிருந்தவர்களான இயேசுவின் அப்போஸ்தலர்களும், ஜனங்களில் சிலரும் மாபெரும் ஆசீர்வாதத்தினைப் பெற்றுக் கொண்டனர். இவர்கள் இயேசுவின் மூலமான தேவனுடைய கிருபையாகிய ஆட்டுக்குட்டியையும், புளிப்பில்லாத அப்பத்தையும் புசித்தார்கள். இவர்கள் இயேசுவினுடைய இரத்தம், "விசுவாச வீட்டாருடைய" இருதயங்களின் நிலைக்கால்களிலும், மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படுவதை அடையாளம் கண்டுகொண்டனர். பிற்பாடு இவர்கள் தேவ

ஆட்டுக்குட்டியினுடைய மரணத்தினை, தங்களது நம்பிக்கைகள், சந்தோஷங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் அனைத்திற்குமான அஸ்திபாரமென ஆசரிப்பதற்கு முடிகின்றவர்களானார்கள் மற்றும் இன்னும் ஆசரித்தும் வருகின்றனர். இவர்கள் தரித்திரராகவோ, ஐசுவரியவான்களாகவோ காணப்பட்டாலும் சரி, பூமிக்குரிய விஷயங்கள் சார்ந்த இவர்களது கனங்கள் அதிகமாகவோ (அ) கொஞ்சமாகவோ காணப்பட்டாலும் சரி, இவர்கள் ஆண்டவருடைய தயவில் தொடர்ந்து வலிமையூட்டுதலை அடைந்தவர்களாக இருந்தனர். உயிர்த்தெழுதலின் மூலமாக இயேசு முதற்பலன் கதிர்க்கட்டான பிற்பாடு, பெந்தெகொஸ்தே நாளின்போது, ஐம்பதாம் நாளின்போது இவர்கள் பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டார்கள். பிதா இவர்களை உயர்த்தளத்தில் ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பித்து மற்றும் இவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவதில் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், இவர்கள் தேவ ஆட்டுக்குட்டியானவரின் மாபெரும் வெற்றியிலும், பூமிக்குரிய ஆசீர்வாதங்களானது தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகிய இஸ்ரயேலுக்கு சீக்கிரத்தில் வரவிருக்கின்றதான ஆவிக்குரிய இராஜ்யத்திலும் பங்காளிகளாகக் காணப்படலாம் என்று இவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகின்றார். மேசியா யூதர்களின் இராஜாவாக மாத்திரம் காணப்படாமல், சகரியா தீர்க்கத்தரிசனம் குறிப்பிடுவதுபோன்று, "அவருடைய இராஜ்யம் ஒரு சமுத்திரந்தொடங்கி மறுசமுத்திரம் வரைக்கும் (உலகளாவ) செல்லும்," ஜாதிகள் அனைத்தும் அவரது வல்லமையையும், மகிமையையும் அடையாளங்கண்டுகொள்ளும் மற்றும் அவருக்கு முன் முழங்கால் யாவும் முழங்கிடும் மற்றும் யேகோவா தேவனுக்கு மகிமையாய் அனைத்து நாவும் அறிக்கையிடும். இந்த யுகத்தின் முடிவில் மேசியா வல்லமையிலும், மகா மகிமையிலும் வெளிப்படும்போது, இஸ்ரயேல் தங்களுக்கு வாக்களிக்கப்பட்டவரான மகிமையான மேசியாவை ஏற்றுக்கொள்வார்கள். இதற்கிடையில் (ஏசாயா 10:21-23-இல் இடம்பெறும் மீதமானவர்களைத் தவிர மற்றபடியுள்ள) இஸ்ரயேல், அவரது ஆவிக்குரிய மணவாட்டியாகுவதற்குத் தங்களுக்கு முதலாவது அளிக்கப்பட்டதான வாய்ப்பினை தவறவிட்டவர்களாய் இருப்பார்கள் (சங்கீதம் 45:9-14). தேவன் இதை முன்னறிந்தவராக, தீர்க்கத்தரிசிகள்மூலம் முன்னுரைத்தும் உள்ளார் (ஏசாயா 10:22; ஏசாயா 1:9). யேகோவா தேவன் மேசியாவின் இராஜ்யமானது, ஆவிக்குரிய ஒன்றாக இருக்கும் என்ற உண்மையினை மறைத்து வைத்தவராய்க் காணப்பட்டார். நியாயப்பிரமாணத்திலோ, தீர்க்கத்தரிசிகள் வாயிலாகவோ ஆவிக்குரிய மேசியா குறித்த எந்த ஒரு வாக்குத்தத்தமும் கொடுக்கப்படவில்லை. ஆதியாகமம் துவங்கி மல்கியாவரையிலுமான வாக்குத்தத்தம் அனைத்தும் பூமிக்குரியவையாகும். ஆபிரகாமுக்குப் பண்ணப்பட்டதான வாக்குத்தத்தம்கூட "நீ பார்க்கிற இந்தப் பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்" (ஆதியாகமம் 13:15) என்பதாக நாம் வாசிக்கின்றோம். இஸ்ரயேல் இந்த வாக்குத்தத்தத்தினை இழந்துபோகவில்லை. ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததியில் மாத்திரம் மிகவும் முதன்மையான நிலையில் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் குறிப்பிடப்படாமல், விரைவில் ஆபிரகாமும், அவர்களது உண்மையுள்ள தீர்க்கத்தரிசிகள் அனைவரும் "பூமியெங்கும் பிரபுக்களாக (ஆளுபவர்களாக) வைக்கப்படுவார்கள்" (சங்கீதம் 45:16); அப்போது ஆபிரகாமின் சந்ததி மேன்மைப்படுத்தப்பட்டு, சகல ஜனங்களுக்குமான திவ்விய ஆசீர்வாதங்களின் கால்வாயாகக் காணப்படுவார்கள். "தேவன் தாம் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை." அவர் தமது புதிய உடன்படிக்கையின்கீழ் மற்றும் மெல்கிசெதேக் என்பதினால் அடையாளப்படுத்தப்படும் அதன் மாபெரும் மத்தியஸ்தர் மற்றும் பிரம்மாண்டமான நிஜமான ஆசாரியக்கூட்டத்தின்கீழ் நல்வாக்குத்தத்தங்கள் யாவற்றையும் நிறைவேற்றிடப்போகின்றார் மற்றும் மல்கியா 3:1-3-ஆம் வசனங்களில் முன்னுரைக்கப்பட்டதுபோலவும் செய்யவும் போகின்றார்.

## மோசேயைப் போன்றவர், ஆனால் இவரிலும் பெரியவர்

யேகோவா தேவனுடைய திட்டத்தின்படி மேசியாவாகிய இராஜா, தேவனுக்கும், இஸ்ரயேலுக்கும் நடுவில் மத்தியஸ்தராக — மோசேயின் நிஜமானவராக, நீண்டகாலமாய் வாக்களிக்கப்பட்டிருந்த நிஜமான ஆசாரியனாக, இராஜாவாக, மேசியாவாக நிற்பார். அவர் மாம்சத்தில் காணப்படாமல், ஆவிக்குரிய மேசியாவாகக் காணப்படுவார் என்ற உண்மையானது அவரது மகிமையையும், வல்லமையையும் குறைத்துப்போடுவதற்குப் பதிலாக, அதிகமாக்கவே செய்யும். பூமிக்குரிய மகிமையை இஸ்ரயேலர்கள் பெற்றுக்கொள்வார்கள்; அவர்கள் கற்பனைக்கூடப் பண்ணிப்பார்க்கமுடியாத பூமிக்குரிய ஆசீர்வாதங்களை, யேகோவா தேவனால் "இஸ்ரயேலின் இராஜாவாகிய, தாவீதின் குமாரனாக" மிகவும் உயர்த்தப்பட்டவரின் கரங்களினின்று பெற்றுக்கொள்வார்கள். இப்படியாக இஸ்ரயேலிடமிருந்து, புதிய உடன்படிக்கையின்கீழ், இஸ்ரயேலின் மத்தியஸ்தர் வாயிலாக, தேவனை அணுகுவதற்கான ஒரு வழி புறஜாதியார்கள் அனைவருக்கும் திறக்கப்படும். ஆகையால்தான் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: "திரளான ஜனங்கள் புறப்பட்டு

வந்து; நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் (இராஜ்யத்துக்கும்) யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் "சீயோனிலிருந்து (ஆவிக்குரிய இராஜ்யத்திலிருந்து) வேதமும், எருசலேமிலிருந்து (சீர்ப்பொருந்தப்பட்ட இஸ்ரயேலின் பூமிக்குரிய இராஜ்யத்திலிருந்து) கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசாயா 2:3). அக்காலத்தில் எருசலேமில் தேவனுடைய இராஜ்யபாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதென அடையாளம் கண்டுகொள்ளாத ஜாதிகளுக்கு (விசேஷித்த ஆசீர்வாதம்) மழை இருப்பதில்லை.

புறஜாதிகளை ஆசீர்வதித்தல் தொடர்புடையதாக சகரியா தீர்க்கத்தரிசி குறிப்பிட்டிருப்பதைக் கவனியுங்கள். "அவர் ஜாதிகளுக்குச் சமாதானம் கூறுவார்" (KJV); "வேற்றினத்தாருக்கு அமைதியை அறிவிப்பார்" (திருவிவிலியம் சகரியா 9:10) என்று வாசிக்கின்றோம். ஆனால் சமாதானத்தின் இந்த ஆசீர்வாதமானது, முதலாவதாக தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குக் கடந்துவந்து மற்றும் இவர்கள் வாயிலாகப் புறஜாதிகளுக்குக் கடந்துசெல்லும். இது மாத்திரமல்லாமல், இதே விஷயங்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் தெரிந்துகொள்ளுதலிலும் பொருந்துகின்றதாய் இருக்கும். தீர்க்கத்தரிசி குறிப்பிட்டிருப்பதுபோல தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் "மீதியானவர்கள்" மேசியாவிற்காக ஆயத்தமாய் இருந்தார்கள் என்றும், இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள் என்றும், பெந்தெகொஸ்தே ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள் என்றும் நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம்.

இவர்களே நாம் பார்த்திருக்கிறபடி கிறிஸ்தவ சபையின் அப்போஸ்தலர்களாகவும், கிறிஸ்தவ சபையின் ஆதி பிரதிநிதிகளாகவும் காணப்பட்டனர்; ஆனால் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கான முதல் வாய்ப்பினைத் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குக் கொடுத்தப் பிற்பாடு, ஆபிரகாமினுடைய ஆவிக்குரிய சந்ததி தொடர்புடைய விஷயத்தில், மேசியா புறஜாதியார்களுக்குத் தயவு பாராட்டினார் மற்றும் சமாதானம் கூறினார். ஆகையால் கிருபையின் சுவிசேஷமானது, அதாவது ஆவிக்குரிய தளத்தில் மேசியாவுடன் பங்காளிகள் (அ) அங்கத்தினர்கள் ஆகுவதற்கான அழைப்பானது, தேவனுடைய வழிநடத்துதலின்படி புறஜாதிகளுக்கு இந்தச் சுவிசேஷ யுகம் முழுவதும் கடந்துச் சென்றது — கேட்கும் செவிகளை உடையவர்களுக்கும், புரிந்துகொண்டு, கீழ்ப்படியும் இருதயம் உடையவர்களுக்கும் கடந்துசென்றது. இப்படியாக யூதர்கள் மற்றும் புறஜாதிகளிலிருந்து, யேகோவா தேவன், தமது குமாரனாகிய மீட்பருடன் பங்காளிகளாய் இருப்பதற்குப் பாத்திரவான்களாய் இருப்பவர்களைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வருகின்றார். இவர்களே பல்லாயிரமான பெயர்க்கிறிஸ்தவர்கள் மத்தியில் "சிறு மந்தையினராகக்" காணப்படுகின்றனர். இந்தச் சிறு மந்தையினரிடமே மீட்பர், "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு இராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்" (லூக்கா 12:32) என்று கூறினார்; அது இஸ்ரயேலை ஆசீர்வதிக்கப்போகின்றதும், இஸ்ரயேல் வாயிலாகச் சகல புறஜாதியாருக்கும், ஆதாமினுடைய இனத்தின் ஒவ்வொரு அங்கத்தினனுக்கும் சமாதானம் பேசுகின்றதும், பாவம் மற்றும் மரணத்தின் நிலைமைகளிலிருந்து தேவனுடன் இசைவான நிலைமைக்கும், நித்திய ஜீவனுக்கும் திரும்பிடுவதற்கான முழு வாய்ப்பினை அருளுகின்றதுமான இராஜ்யமாகும்.

ஆ! ஆம், பஸ்காவின் நிழலிலும், நிஜத்திலும் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கு, தேவனுடைய ஏற்றவேளை வரும்போது விலையேறப்பெற்ற படிப்பினைகளும், ஆசீர்வாதங்களும் காணப்படுகின்றது. தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் மத்தியில் 18 நூற்றாண்டுகளுக்கு மேலாக நிலவும் குருடான நிலைமையும், தயவினின்று தள்ளப்பட்ட நிலைமையும் என்றென்றுமாகக் காணப்படாமல், முதலாவதாக இஸ்ரயேலிருந்தும், பின்னர் புறஜாதிகளிலிருந்தும், ஆவிக்குரிய தளத்தில், அவரது "தெரிந்துகொள்ளப்பட்ட" பங்காளிகளாக இருக்கப்போகிறவர்களைக் கூட்டிச்சேர்ப்பதுவரை மாத்திரமே நிலவுகின்றதாய் இருக்கும். பின்னர் இஸ்ரயேல், அதன் குருட்டுத் தன்மையினின்று விடுதலையடையும் மற்றும் அவர்கள்மீது ஆசீர்வாதங்கள் திரளாய்க் கடந்துவரும். அவர்கள் ஒரு ஜாதியாக குருடாக்கப்பட்டதும், புறம்பாக்கப்பட்டதுமானவைகள், அவர்கள் ஜாதிக்கே ஆசீர்வாதத்தை உண்டுபண்ணுவதற்குத் தேவனால் நோக்கம் கொண்டிருக்கப்பட்டது. அவர்கள் ஒட்டுமொத்தமாக இரக்கம் பெற்றுக்கொள்ளத்தக்கதாகக் கஷ்டமான நிலைமைகளின்கீழ் அவர்கள் ஒட்டுமொத்தமாகத் தண்டிக்கப்பட்ட ஜனங்களென ஒன்று சேர வைக்கப்பட்டிருந்தனர் (உரோமர் 25:30-32).

## முதற்பேறானவர்களின் சபை

பஸ்கா ஆட்டுக்குட்டியானது புசிக்கப்பட்ட அந்த இரவில் இஸ்ரயேலர்கள் அனைவரும் அபாயத்தில் காணப்படாமல், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களில் முதற்பேறானவர்கள் மாத்திரமே

கடந்துபோகப்பட்டார்கள் என்பது நினைவில் வைக்கப்பட வேண்டும். கொஞ்சம் காலத்திற்குப் பின்னர், அனைத்துக் குடும்பங்களிலுமுள்ள முதற்பேறானவர்களுக்குப்பதிலாக ஒரு கோத்திரத்தை முழுமையாக, அதாவது லேவி கோத்திரத்தைத் தேவன் எடுத்துக்கொண்டார். அப்போதிலிருந்து சங்காரத் தூதனினால் கடந்து போகப்பட்டதன் மூலம் காப்பாற்றப்பட்டவர்களும், ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினாலும், அதன் மாம்சத்தைக் கசப்பான கீரைகளுடனும், புளிப்பில்லா அப்பத்துடனும் புசித்ததினாலும் காப்பாற்றப்பட்டவர்களுமானவர்கள் இந்த ஒரு கோத்திரத்தினால் அடையாளப்படுத்தப்பட்டனர்.

இரண்டு நிழல்கள் இதில் கலந்து காணப்படுகின்றன; அவை:

(1) நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பற்றியதாக முதல் நிழல் உள்ளது; இவர்களில் மகிமையடைந்த மேசியா, பலிச்செலுத்தின ஆரோனுக்கும் மற்றும் ஆசாரியனாக தனது சிங்காசனத்தில் உட்கார்ந்திருந்த மெல்கிசெதேக்குக்கும் நிஜமான மாபெரும் பிரதான ஆசாரியனாய் இருப்பார். ஆரோனின் குமாரர்கள் நற்கீர்த்தியின் மத்தியிலும், துர்க்கீர்த்தியின் மத்தியிலும் தங்கள் ஆண்டவரை மரணம் வரையிலும் பலியில் உண்மையாய்ப் பின்தொடர்ந்த சொற்பமான பரிசுத்தமானவர்களுக்கு அடையாளமாய் இருக்கின்றனர். நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறபடி இவர்கள் விஷயத்தில் முதலாவதாக தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களே அழைக்கப்பட்டனர். தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களிலிருந்து போதுமான எண்ணிக்கையானவர்கள் ஆயத்தமாகாதபோது, மீதமானவர்கள் புறஜாதிகளிடமிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டனர், ஏனெனில் இவர்கள் ஆபிரகாமினுடைய விசுவாசத்தினாலும், கீழ்ப்படிதலினாலும் இயக்கப்பட்டவர்களாய்க் காணப்பட்டனர்.

(2) இன்னுமாக உண்மையுள்ள, ஆனால் குறைவான வைராக்கியம் கொண்டிருக்கும் இயேசுவினுடைய பின்னடியார்களாகிய ஒரு வகுப்பார் இருக்கின்றனர்; இவர்கள் நற்கிரியைகள் செய்திருக்கின்றனர், ஆனால் நேர்த்தியாய்ப் பலிச்செலுத்தும் ஆவியில் கொஞ்சம் குறைவுபட்டுப் போனவர்களாகக் காணப்படுகின்றனர். லேவியர்களுக்கு ஒத்திருக்கும் இவர்களும், யூதர்கள் மற்றும் புறஜாதியார்களிடமிருந்து அழைக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.

ஆசாரியர்கள் மற்றும் லேவியர்களால் அடையாளப்படுத்தப்படுகின்றதான இந்த இரண்டு வகுப்பினரும் ஒன்றாக, "பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையில்" அடங்குகின்றனர். இவர்கள் "தேவனுடைய சிருஷ்டிகளில் முதற்பலன்களாக" இருக்கின்றனர். (யாக்கோபு 1:18) முதலாவது தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களிலிருந்தும், இரண்டாவது புறஜாதிகளிலிருந்தும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய இந்த இரண்டு வகுப்பாரும், எகிப்தின் முதற்பிறப்புகள் சங்கரிக்கப்பட்ட இரவின்போது, கடந்து போகப்பட்டவர்களாகிய இஸ்ரயேலின் முதற்பிறப்புகளினால் அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஆகையால் இயேசுவின் முதலாம் வருகை முதற்கொண்டு, மேசியாவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதுவரையிலுமான காலப்பகுதியாகிய இந்தச் சுவிசேஷ யுகமானது, இருள் (நாகரிகமடைந்த பூமியை) பூமியையும், காரிருள் புறஜாதியரையும் மூடியிருக்கும் இரவுவேளையாய் இருக்கின்றது என்று நாம் பார்க்கின்றோம். பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய (1 கொரிந்தியர் 5:7) இயேசுவின் இரத்தமானது, விசுவாச வீட்டாரினால் வீட்டுவாசலின் நிலைக்கால்களில் தெளிக்கப்படுகின்றது மற்றும் அதன் பாதுகாப்பின்கீழ் அவர்கள் காணப்படுகின்றனர் மற்றும் சத்தியமாகிய புளிப்பில்லாத அப்பத்திலும், விசுவாசியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், தன்னை இணைத்துக்கொண்டதுமான பலியினாலான பலத்திலும், இலவசமான ஆசீர்வாதத்திலும் பங்குகொள்ளலாம்.

## பிற்பிறப்புகள் மற்றும் முதற்பிறப்புகள்

இந்தச் சுவிசேஷ யுகமாகிய இரவில் தெய்வாதீனமாக மரணத்திலிருந்து, ஜீவனுக்குள் வந்ததான, அதாவது கடந்துபோகப்பட்டவர்களாகிய முதற்பிறப்புகள் மாத்திரமே இரட்சிக்கப்படுவார்களென எண்ணினதில், நம்மில் அநேகர் பெரிய தவறிழைத்துள்ளோம். தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் மூலம், அவர்களது பஸ்காவில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதான நிழலை (அ) காட்சியைப் பார்க்கும்போது, வேறு கருத்து வெளிப்படுகின்றது. இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள் என்பதற்குப்பதிலாக, சம்பவப்பதிவானது அந்த இருளான இரவைத் தொடர்ந்து, முதற்பேறானவர்களுக்கு மாத்திரமல்லாமல், இஸ்ரயேலர்கள் அனைவருக்கும் அடிமைத்தனத்தினின்று வெளியேறுவதற்கும், சந்தோஷத்திற்கும், ஆசீர்வாதத்திற்குமுரிய காலை

வந்தது. நிழலில் முதற்பேறானவர்கள், இருளிலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், வெளிச்சத்திற்கும் மற்றும் விடுதலைக்கும் ஜனங்களை வழிநடத்தும் மதத் தலைவர்களாகிய ஆசாரியர்களாகவும், லேவியர்களாகவுமானதுபோல, யூதர்கள் மற்றும் புறஜாதிகளிலிருந்து இந்தச் சுவிசேஷ யுகத்தில் தெரிந்தெடுக்கப்பட்டதான மேசியாவின் சபையும் இஸ்ரயேலை, அதாவது தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களின் கோத்திரங்கள் அனைத்தையும், பாவம் மற்றும் மரணத்தினுடைய வல்லமையிலிருந்து, ஏற்றக்காலத்தில், அதாவது மேசியாவின் இராஜ்யமாகிய, புதிய யுகத்தினுடைய காலையில் வெளியே கொண்டுவருவார்கள். நிழலில் தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை வெளியே வழிநடத்தின மோசே, ஆவிக்குரிய தளத்திலுள்ள இந்த மாபெரும் மேசியாவிற்கு நிழலாய்க் காணப்படுகின்றார்; இந்த மாபெரும் மேசியா சீக்கிரத்தில் தம்முடைய ஜனங்களாகிய இஸ்ரயேலை வெளியே கொண்டுவந்து, நாம் இதுவரையிலும் உணர்ந்திருக்கின்றதான ஆபிரகாமின் வாக்குத்தத்தத்தில் அடங்கும் ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள் மற்றும் தயவுகள் அனைத்தையும் அவர்களுக்கு அருளுவார்.

தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்கள் மாத்திரமே எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டார்கள் என்பதும், இவர்கள் மாத்திரமே செங்கடலின் வெட்டாந்தரையில் கடந்துசென்றார்கள் என்பதும், மற்றும் இவர்களுக்கு மாத்திரமே வனாந்தரத்தில் விசேஷமான தெய்வீக ஏற்பாடுகள் காணப்பட்டன என்பதுமான உண்மைகளின் நிமித்தமாக, மேசியா ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாரை மாத்திரமே ஆசீர்வதிப்பார் என்று புரிந்துகொள்ளப்படக்கூடாது. பிதாக்களின் நிமித்தமாக இன்னமும் பிரியமானவர்களாகக் காணப்படுகின்றவர்களும், தேவனுடன் உடன்படிக்கை உறவிற்குள் கொண்டுவரப்பட்டவர்களுமான தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கே முதலாவதாக ஆசீர்வாதம் கடந்துவரும். மற்ற ஜாதிகள் நிழலில் குறிப்பிடப்படவில்லை, காரணம் மாபெரும் மத்தியஸ்தராகிய மேசியாவின் வாயிலாக, தேவனுடன் உறவிற்குள், ஐக்கியத்திற்குள் அவர்கள் வர வேண்டுமெனில், அவர்கள் சீயோனின் குடிமக்களாகி, அதாவது தேவனுடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களில் அங்கத்தினர்களாகிட வேண்டும்.

இது சில நல்ல கிறிஸ்தவ ஜனங்களுக்கும், நல்திறமிக்க வேதத்தின் மாணாக்கர்களுக்கும் ஆச்சரியமாய் இருக்கும்; ஏனெனில் இவர்களில் அநேகர் புதிய உடன்படிக்கைத் தொடர்புடையதான தெய்வீக வாக்குத்தத்தங்களினுடைய குறிப்பிட்ட சில அம்சங்களைக் கவனிக்கத் தவறிவிட்டனர். இந்த உடன்படிக்கையானது, தேவனுக்கும், அவரது தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்கும் இடையில் பண்ணப்படுமே ஒழிய, வேறெந்த ஜாதியாரோடும் பண்ணப்படுவதில்லை என்று நமக்குத் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளது. ஆகவே ஆபிரகாமுக்கான தேவனுடைய உடன்படிக்கை மற்றும் வாக்குத்தத்தத்திற்கு ஏற்ப இஸ்ரயேல் வாயிலாக, "பூமியிலுள்ள வசம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." இஸ்ரயேலுடன் புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கைப் பண்ணப்படுதலானது, மற்ற ஜாதியார்களை ஆசீர்வதித்திடும்; காரணம் மோசேயிலும் பெரியவரால் மத்தியஸ்தம் பண்ணப்படுகின்றதான புதிய (நியாயப்பிரமாண) உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ் வருவதற்கான வாய்ப்பானது, சகல ஜனங்களுக்கும், ஜாதிகளுக்கும் அருளப்பட்டிருக்கும். அந்த உடன்படிக்கையின்கீழ் வருவதுஎன்பது, மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றதும், அதனிலும் மேலான விளக்கம் கொண்டுள்ளதும், நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலுமான அன்பு எனும் தெய்வீகப் பிரமாணத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்பட்டிருப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கும். தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை இப்படி முதலாவது ஆசீர்வதிக்கும் மாபெரும் மேசியா, தம்முடைய தயவுகளை ஏற்றுக்கொள்வதற்கும், திவ்வியப் பிரமாணங்களுக்கு இணங்கிடுவதற்கும் விரும்புகின்ற ஜாதிகள் மற்றும் ஜனங்கள் அனைவருக்கும் ஊழியம் புரிந்திட சித்தமாயிருப்பார். இப்படியாகச் சகல ஜாதிகளும் மேசியாவினுடைய ஆளுகையின்போது, படிப்படியாக ஆபிரகாமின் சந்ததியாராகுவார்கள். மேசியாவினுடைய ஆளுகையின் முடிவில் இப்படியாக ஆபிரகாமுக்கான தேவனுடைய வாக்குத்தத்தமானது, நிறைவேறும். "உன் சந்ததி வானத்து நட்சத்திரங்கள்போலவும். கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகுவார்கள்." இங்கு இரண்டு சந்ததிகளும் தெளிவாய்க் குறிப்பிடப்பட்டுள்ளனர்; அவை: (1) ஆவிக்குரிய தளத்திலுள்ள ஆவிக்குரிய (அ) மேசியா சந்ததி, அதாவது நிஜமான ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள் நட்சத்திரத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். (2) புதிய உடன்படிக்கையினுடைய மேசியாவின் மத்தியஸ்தம்

மூலமாக, பூமியின் சகல ஜாதிகளினுடைய கீழ்ப்படிதலைத் தனக்குள் எடுத்துக்கொள்ளும் இஸ்ரயேலின் நிமித்தமாக, ஆபிரகாமினுடைய சந்ததி பெருகிவரும் மற்றும் மேசியாவினுடைய இராஜ்யத்தின் முடிவில் மனுக்குலம் முழுவதும், தேவனுடைய தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களுக்குள்ளும், தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாகவும் காணப்படுவார்கள்; ஏனெனில் மோசேயைக்காட்டிலும் பெரிய இராஜாவுக்கும், ஆசாரியனுக்கும், தீர்க்கத்தரிசிக்கும் செவிக்கொடுக்கவும், கீழ்ப்படியவும் மறுப்பவர்கள், ஜீவனிலிருந்து இரண்டாம் மரணத்திற்குள் — நித்தியமான அழிவிற்குள் அறுப்புண்டுபோவார்கள்.

*****

## நாடிடுவதற்குப் பாத்திரமானவைகள்...

சோர்வினாலோ, ஊக்கமின்மையினாலோ வீழ்த்த முடியாத
பொறுமையுடன்கூடிய விடாமுயற்சிதனை அடைய நாடிடு.

தான் செய்கையில் மகிழ்வுறுவது போலவே, பிறன் செய்யும்
மாபெரும் வேலையிலும் அகமகிழும் பட்சபாதமின்மைதனை அடைய நாடிடு.

உன்னை நீ மன்னிப்பதைக் காட்டிலும், உந்தன் சகோதரனை
மன்னிக்கத் துரிதப்படும் ஆவிதனை அடைய நாடிடு.

செய்த தவற்றில் உந்தன் பங்கினை மறைப்பதற்குப் பதிலாக,
தவறைச் சரிசெய்ய முற்படும் நீதிதனை அடைய நாடிடு.

பாதகம் தெரிந்து செய்யப்பட்டதாய்த் தோன்றியப்போதிலும்,
நல்நோக்கம் உண்டோவென எப்போதும் தேடித் திரியும் அன்புதனை அடைய நாடிடு.

உந்தன் இடறுதல்களும், தோல்விகளும்கூட உன்னை
மனம் உடையப்பண்ணாத நேர்மை/விசுவாசந்தனை அடைய நாடிடு.

உந்தன் சத்துரு தோல்வியுறுகையில் துயரமடையும் மற்றும்
நீ தாழ்த்தப்படுகையில் அகமகிழும் பணிவுள்ள ஆவிதனை அடைய நாடிடு.

எவ்வேளையில் பேசிடவும், எவ்வேளையில் அமைதி காக்கவும்
அறிந்திருக்கும் ஞானம் உடைய ஆவிதனை அடைய நாடிடு.

போதும் என்பதை அறியாத மற்றும் புகழ்ச்சியை அடைய
நாடாத, பாராட்டுகளை ஏற்றிடாத பக்திவைராக்கிய ஆவிதனை அடைய நாடிடு.

மன்னிப்பை வார்த்தையில் தெரிவித்தும், தவறை மறுபடியும் குறிப்பிடாமல்,
அதன் உண்மைதனை நிரூபிக்கும் மன்னிப்பின் ஆவிதனை வளர்த்திட நாடிடு.

மற்றச் சகோதரனுக்கு ஊழியத்தில் கனமிக்கப் பகுதியினை விட்டுக்கொடுத்து,
அற்பமான, அதிகம் விரும்பிடாத பாகந்தனை தெரிவு செய்யும் தாழ்மைதனை நாடிடு.

சகோதரர் முன்னிலையில் நடப்பது போலவே, நம்
இல்லங்களிலும் ஜீவித்திட ஜாக்கிரதைகொள்ளும் கிறிஸ்தவம்தனை நாடிடு.

- Benjamin H. Barton.

--3138--

# நம்பிக்கையின் ஆசீர்வாதம்

கொஞ்சக் காலத்தில் பூமியின் சண்டைகள் யாவும் ஓயும்
கொஞ்சக் காலத்தில் அவர் கண்ணீர் யாவும் மறையும்
கொஞ்சக்காலத்தில் இந்த இருட்டும் மறைந்தே போகும்
யோகோவா தேவனின் வல்லமையே.
இந்த பூமி ஆயிரமாண்டிற்கழைக்கும்

கொஞ்சக்காலத்தில் மனிதனின் மீளா நோய்கள் யாவும்
கடந்தக் கால நினைவலையாய். தேய்ந்தே மறந்தே
போகும். கொஞ்சக் காலத்தில். அவனை மீட்டுக்கொண்ட
அன்பு கண்ணீர் யாவும் துடைக்கும். இனி கெம்பீரித்தே பாடும்

கொஞ்சக்காலத்தில் சமீபமாய் கிட்டிச்சேர்க்கும்
மகிமை நிறைந்த நாளில் விடியலின் வெளிச்சம் வீசும்
மணிக்கு மணி பிரகாசம். அதிகமாகவே வளரும்
முற்றுப்பெறும் நாள்வரைக்கும் பிரகாசமாகுமே. வாழிய தேவன்

தொகுதி 1(ஆங்கிலம் பக்கம் 244, தமிழ் பக்கம் 345)

# நிழலிலும், நிஜத்திலும் பஸ்கா

***"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்."***
***1 கொரிந்தியர் 5:7, 8***

இஸ்ரயேல் தேசத்தின்மீதான தெய்வீகத் தயவிற்கான முதல் நிறுவுதலாய் விளங்கின பஸ்கா அனுசரிப்புகளானது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் இறுதி விருந்தில் அல்லது திருவிருந்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டதான தெய்வீகத் தயவிற்கான முதல் நிறுவுதலுக்கு நிழலாய்க் காணப்படுகின்றது. நம்முடைய ஆதார வசனத்தில் அப்போஸ்தலன் சுட்டிக்காட்டியுள்ளதுபோலவே, யூதர்களுடைய பஸ்காவானது, கிறிஸ்தவர்களாகிய நாம் ஆசரிக்கின்றதான உண்மை பஸ்காவாகிய மேலானவைகளுக்கு நிழலாக இருக்கின்றது. நமக்கான தகவல்களுக்கென்று நாம் யூதருடைய நிழலை முழுமையாய்ச் சார்ந்திருப்பதில்லை; ஏனெனில் கிறிஸ்துவுக்கும், அவரது சபைக்கும் இடையிலான உறவு தொடர்பாகவும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கான விசேஷித்த இரட்சிப்புத் தொடர்பாகவும் நமது கர்த்தர் மற்றும் அவரது அப்போஸ்தலர்களுடைய தெளிவான, திவ்விய வார்த்தைகளை நாம் பெற்றிருக்கின்றோம். எனினும் நிஜத்தைப்பற்றின புரிந்துகொள்ளுதலில் நமக்குப் பெரிதும் உதவக்கூடிய அநேக விவரங்களை நாம் நிழலான பஸ்காவில் பெற்றிருக்கின்றோம்.

பஸ்காவானது மறைமுகமாக மீதமான இஸ்ரயேலர் அனைவருடன் சம்பந்தமுடையது என்றாலும், பஸ்காவானது இஸ்ரயேலர்களின் முதற்பேறானவர்களுடனே நேரடியாய்ச் சம்பந்தம் கொண்டிருந்தது என்பதை நாம் முதலாவதாகக் கவனிக்க வேண்டும். எகிப்தின்மீதான கடைசி வாதையானது, அவர்களது முதற்பிறப்புகள் அனைவரின் மரணமாக இருந்தது மற்றும் பஸ்கா என்பது அந்த இரவின்போது கடந்துவந்ததான சங்காரத் தூதன், இஸ்ரயேலின் முதற்பிறப்புகளைக் கடந்துசென்றார் என்ற உண்மையைச் சுமக்கின்ற வார்த்தையாய் இருக்கின்றது. எகிப்தியர்களுடைய இளைய பிள்ளைகள் அபாயத்திற்குள் காணப்படாததுபோன்று, இஸ்ரயேலர்களின் இளையப் பிள்ளைகளும் அபாயத்திற்குள் காணப்படவில்லை; ஆகையால் இவர்கள் கடந்துபோகப்படவில்லை. எனினும் இவர்கள் — முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதலில் அக்கறையுடன் இருந்தார்கள் என்பதில் உறுதியே; இதற்குக் காரணம் உறவுமுறைகள் என்பது மாத்திரமல்லாமல், கர்த்தருடைய ஏற்பாடுகளின்படி அந்த முதற்பேறானவர்களே அடுத்த நாளில், இவர்கள் எகிப்திலிருந்து வெளியேறுகையில், ஜனங்களை வழிநடத்துபவர்களாகவும், விடுவிக்கிறவர்களாகவும் காணப்பட்டார்கள் (எண்ணாகமம் 8:17, 18) என்பதினாலும் ஆகும்.

இன்னுமாக தெய்வீகக் கட்டளையின்பேரில் இஸ்ரயேல் புத்திரரிலுள்ள முதற்பேறானவர்களுக்குப் பதிலாக, முழு லேவிக் கோத்திரமும் எடுத்துக்கொள்ளப்பட்டபடியால், லேவிக் கோத்திரம் அவர்களுக்கு அடையாளமானார்கள் மற்றும் பலிச்செலுத்தும் ஆசாரியர்களும், போதிக்கும் லேவியர்களும் அந்தத் தேசத்திற்கான நியாயப்பிரமாண உடன்படிக்கையின் ஊழியக்காரரானார்கள். இதன் நிஜமானது, அப்போஸ்தலனாகிய பவுலினால் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது; அதாவது இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய தெரிந்துகொள்ளப்பட்ட சபையே, "பரலோகத்தில் பேர் எழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சபையாய்" இருக்கின்றது எனச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.
இவர்களே "புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாய்" இருக்கப்போகின்றார்கள் (எபிரெயர் 12:23; 2 கொரிந்தியர் 3:6).

இந்த முதற்பேறானவர்கள் மாத்திரமே இந்தச் சுவிசேஷ யுகத்தில் அல்லது "இரவில்" கையாளப்படுகின்றனர். இவர்கள் மாத்திரமே மரணத்தண்டனைக்கான அபாயத்தில் காணப்படுகின்றனர். அப்போஸ்தலன் சொல்லுகின்றதுபோல், "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்" (எபிரெயர் 10:26, 27). மனுக்குலத்தின் முழு உலகமும்கூட — முதற்பேறானவர்களாகிய இந்தச் சபையினிடத்திலும், இவர்களை வெற்றிகரமாய்க் கடந்துபோகுதலிலும், இவர்கள் நித்தியமான ஜீவனை அடைவதிலும் அக்கறைக்கொண்டிருப்பதில் உறுதியே; ஏனெனில் இவர்கள் சீக்கிரத்தில் முதற்பேறான

இடப்படப்போகிறதும், நிபந்தனைகளுடன் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கப்போகிறதுமான புதிய உடன்படிக்கையின் ஆசாரியக்கூட்டத்தாராகவும், ஆசிரியர்களாகவும் காணப்படுகின்றனர். மனுக்குலம் முழுவதும் சத்திய அறிவின் மூலமாகவும், புதிய உடன்படிக்கையின்கீழ் ஆயிரவருட இராஜ்யத்தினுடைய ஆசீர்வாதங்கள் மூலமாகவும், தேவனுடன் ஒப்புரவாகுதலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வார்கள் (எரேமியா 31:31-34).

## பஸ்கா ஆட்டுக்குட்டியாகிய இயேசு

முதற்பேறானவர்களின் வகுப்பாரைக் குறித்து நாம் பார்த்துள்ளதினால், நாம் பஸ்கா ஆட்டுக்குட்டியையும் குறித்துத் தெளிவாய் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்; ஏனெனில் இதன் இரத்தத்தின் காரணமாகவே முதற்பேறானவர்களைக் கடந்துபோகுதல் சாத்தியமானது. ஆட்டுக்குட்டி என்பது விசேஷமாகக் கபடற்ற விலங்காகவும், தற்காத்துக்கொள்வதற்கோ அல்லது எதிர்ப்பதற்கோ முற்றிலும் தயாரற்ற விலங்காகவும் காணப்படுகின்றது மற்றும் இதன் காரணமாக நமது கர்த்தருக்குப் பொருத்தமான நிழலாகக் காணப்படுகின்றது; அதாவது எதிர்க்காதவராகவும், நம் சார்பாக — முதற்பேறானவர்களின் சார்பாக தம்முடைய பூமிக்குரிய நலன்களையும், தம்முடைய உரிமைகளையும் முழுமையாகவும், மனப்பூர்வமாகவும் ஒப்படைத்தவராகவும் காணப்பட்ட நமது கர்த்தருக்குப் பொருத்தமான நிழலாகக் காணப்படுகின்றது. முதற்பேறானவர்கள் அல்லாதவர்களும் இறுதியில் அவரது பலியினால் நலம்பெறுவார்கள் என்பது உண்மையே; எனினும் முதற்பேறானவர்களுக்கு இப்படி விசேஷமாயும், குறிப்பாயும் உள்ளது. இந்தச் சுவிசேஷ யுகத்தில், இதுவரையிலும் தேவனுடைய நடவடிக்கைகளானது இந்த வகுப்பார் மட்டிலே இருந்துள்ளது. இவர்கள் மாத்திரமே, பிதாவினிடத்தில், நீதிபரராகிய இயேசு கிறிஸ்துவைப் பரிந்துபேசுகிறவராகப் பெற்றிருக்கின்றனர் (1 யோவான் 2:1, 2). இதுவரையிலும் இவர்கள் மாத்திரமே தேவனிடம் ஒப்புரவாகியுள்ளனர்.

அவிசுவாசிகளுக்கு, தேவனுடைய ஆசீர்வாதங்கள் அனைத்துமே எதிர்க்காலத்தில், புதிய உடன்படிக்கையின்கீழ்க் கடந்துவரும்; ஏனெனில் விசுவாசிகள் மாத்திரமே விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, விசுவாச உடன்படிக்கையாகிய, ஆபிரகாமின் உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியானது", முதலாவது முதற்பேறானவர்களாகிய சபையை இரட்சிக்கின்றது மற்றும் பின்னர் ஆயிரவருடக் காலத்தின்போது, ஆபிரகாமின் சந்ததியாகப் போகிற அனைவரையும் ஆசீர்வதிக்கும்.

சபையானவள், கர்த்தரோடுகூட அவரது பலியில் பங்கெடுப்பதை அடையாளப்படுத்தும் விதத்தில் நிழல்கள் காணப்படுகின்றன; ஆனால் இந்தப் பஸ்கா நிழலானது, இப்படியானதொன்றல்ல. பஸ்கா ஆட்டுக்குட்டியானது, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக" இருப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கிறது (யோவான் 1:29). ஆனால் உலகத்தின் பாவமானது இன்னமும் போக்கப்படவில்லை. நமது கர்த்தர் தம்முடைய புண்ணியத்தினை இன்னமும் உலகத்திற்கெனச் செயலாக்கத்தில் கொண்டுவரவில்லை, மாறாக விசுவாச வீட்டாருக்காக மாத்திரமாகவும், குறிப்பாகவும் செயலாக்கத்தில் கொண்டுவந்துள்ளார். நமது கர்த்தரும், சபையும் சேர்ந்து, தலையும், சரீரமாக பலிச் செலுத்துவதை அடையாளப்படுத்துகின்றதான வேறொரு பலியில், விலங்கின் சரீரமானது, பல்வேறு துண்டுகளாக வெட்டப்பட்டு, தலையோடுகூட, பலிப்பீடத்தில் வைக்கப்படும் காரியமானது, கிறிஸ்து இயேசுவைத் தலையாகவும், சபையை, அவருடைய அங்கத்தினர்களாகவும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (யாத்திராகமம் 29:15-18). ஆனால் பஸ்காவின் பலியானது, துண்டங்களாக துண்டிக்கப்படக் கூடாது என்பதாக கட்டளையிடப்பட்டிருக்கிறது. அது முழுவதுமாகப் புசிக்கப்பட வேண்டும் — அதன் ஓர் எலும்புகூட முறிக்கப்படக்கூடாது. அது கிறிஸ்துவையும், சபையையும் குறிக்காமல், மாறாகக் கிறிஸ்துவின் பலியில், அவரை மாத்திரமாகவே அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. (யாத்திராகமம் 12:46; யோவான் 19:36)

## அந்த இரவில்

கடந்து போகுதலானது, காலை வேளையில் நடைபெறாமல், இரவிலே நடைப்பெற்றது என்பது நினைவில்கொள்ளப்பட வேண்டும். காலை வந்தபோது, இஸ்ரயேலர்கள் எகிப்து தேசத்திலிருந்து சுதந்திரமடைந்தார்கள்; அடிமைத்தனத்திலிருந்து, சுதந்திரத்திற்குள் கடந்துபோனார்கள். இரவில் அவர்கள் அடிமைத்தனத்திலேயே காணப்பட்டார்கள் மற்றும் முதற்பேறானவர்கள் கடந்து போகப்பட்ட பிற்பாடு மாத்திரமே வரக்கூடிய விடுதலைக்காகக் காத்திருந்தார்கள். நிழலில் இடம்பெறும் அந்த இரவானது, இந்தச் சுவிசேஷ யுகத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

இதே கருத்தானது, நமது கர்த்தர் பின்வருமாறு பேசுகையில் வெளிப்பட்டதாய் இருக்கின்றது: “உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது;” மீண்டுமாக, “விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத்தண்டின் மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்” (மத்தேயு 5:16, 15). இதே கருத்தையே அப்போஸ்தலனாகிய பேதுருவும் பின்வருமாறு கூறுகையில் வெளிப்படுத்துகின்றார்: “அதிக உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப்போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது நலமாயிருக்கும்” (2 பேதுரு 1:19). மீண்டுமாகச் சபையைக் குறித்துத் தீர்க்கதரிசி பேசுகையில், “உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” (சங்கீதம் 119:105) என்றார்.

இன்னும் அநேகம் வேதவாக்கியங்களானது, புதிய ஆயிரவருட யுகத்தினை பகல், என்று குறிப்பிடுகின்றது; அப்போது நீதியின் சூரியனானது, உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும் மற்றும் அதனால் மூடநம்பிக்கை எனும் நிழல்களும், அந்தகாரக் கிரியைகளும் துரத்தப்படும். இந்த அடையாளத்தின் பொருத்தமானது, சிந்திக்கிற மனதிற்குத் தெளிவாய்த் தெரிகின்றதாய் இருக்கும். தேவ ஜனங்களினுடைய நம்பிக்கைகளும், உணர்வுகளும் பாவத்தினுடைய இருளுக்குரியதாய் இராததினாலும், இரவுக்குரியதாய் இராததினாலும், பகலுக்குரியதாகவும், “உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுவதுபோல, பூலோகத்திலும் செய்யப்படுவதாக” என்று அவர்கள் ஜெபித்துக் கொண்டிருக்கின்றதான, நீதியின் ஆளுகைக்குரியதாகவும் காணப்படுவதினால், அவர்கள் பகலின் பிள்ளைகளாகக் காணப்படுகின்றனர்.

பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாக, நமது கர்த்தர், தாம் உலகத்திற்கு ஒளியாக வந்ததாகவும், மனிதர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்பினார்கள் என்பதாகவும் கூறியுள்ளார் (யோவான் 8:12; 3:19-21). இதுவரையிலும் சொற்பமானவர்கள் மாத்திரமே, அவரை “மெய்யான ஒளி” என்று அடையாளம் கண்டுகொண்டுள்ளனர். ஆனால் இறுதியில் அவர் “உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிறவராய்” இருப்பார் (யோவான் 1:9). அவரோடுகூட ஒளியைச் சுமப்பவர்களாகக் காணப்படுவதற்கென, அவரது சபையும் அழைக்கப்பட்டிருக்கின்றனர்; மேலும் இப்பொழுது தங்களது ஒளியைப் பிரகாசிக்கும் அனுபவத்தில் இவர்கள் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவார்களானால், தமது செட்டைகளினால் உலகத்தைச் சுகப்படுத்துகின்றதான அந்த மாபெரும் நீதியின் சூரியனின் பாகங்களாக அக்காலத்தில் காணப்படுவார்கள். இதை நமது கர்த்தர் கோதுமை மற்றும் களைகள் உவமையில் சுட்டிக்காண்பித்துள்ளார். இந்த யுகத்தினுடைய முடிவில் அவர் கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்த்துக்கொள்வார் என்றும், “அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்” என்றும் கூறியுள்ளார் (மத்தேயு 13:43). அந்தோ பரிதாபம், வெகு சொற்பமானவர்களே, “கேட்கிறதற்குக் காதுள்ளவர்களாகவும்” மற்றும் தெய்வீகத் திட்டத்தினுடைய அருமையான போதனைகளை ஏற்றுக்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்!

## இரவு முழுவதும் வீட்டுவாசல் நிலைக்கால்களில் இரத்தம்

அந்த இரவில் ஆட்டுக்குட்டியின் இரத்தமானது தங்களுடைய வீட்டுவாசல் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் தெளிக்கப்பட வேண்டுமென்று இஸ்ரயேலர்கள் கற்பிக்கப்பட்டிருந்தனர். இது விசுவாச வீட்டாரில் அடங்கும் யாவரும் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தில் விசுவாசிக்க வேண்டும் என்பதையும் மற்றும் இப்படியாகச் சபைப் பாகுபாடின்றி “விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுவதையும்” சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. இப்படியாக விசுவாசிப்பது என்பது, நம்மை விசுவாச வீட்டாரில் அங்கத்தினர்களாக்குகின்றது; எனினும் இது நாம் முதற்பேறானவர்களாய்க் காணப்படுவோமா (அ) இல்லையா என்பதை நிர்ணயிக்காது. உண்மையுள்ளவர்கள், பரிசுத்தவான்கள், இராஜரிக ஆசாரியக்கூட்டத்தார் விசுவாச வீட்டாரில் மூத்த ஸ்தானத்தில் காணப்படுகின்றனர்; இந்த ஸ்தானமானது, வருஷ தொகையின் காரணமாக இராமல், மாறாக ஆவிக்குரிய வளர்ச்சியின் காரணமாகவேயாகும். இவர்களது விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் சுட்டிக் காட்டுகின்றதான, மீட்பருக்கொத்த குணலட்சணத்தினுடைய வளர்ச்சியின் விஷயத்திலான இவர்களது முதன்மை நிலையின் அடிப்படையில், இவர்கள் ஆசாரியர்களாக, மூப்பர்களாகக் காணப்படுகின்றனர்.

இதுவே வேதவாக்கியங்களின் அடிப்படையிலான போதனையாய் இருக்கின்றது. இயேசு ஜீவித்தார் மற்றும் இயேசு மரித்தார் என்று மாத்திரம் நாம் விசுவாசிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. அவர் “அநீதியுள்ளவர்களுக்குப்பதிலாக நீதியுள்ளவராய்” பலியின் மரணம் மரித்தார் என்பதை நாம் விசேஷமாய் விசுவாசிக்க வேண்டும் மற்றும் அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தின் வாயிலாக

அவர் பெற்றுத் தந்ததான மீட்பில் நமது பங்கினை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நிழலில் வீட்டுவாசல் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்பட்ட காரியமானது, தேவ ஆட்டுக்குட்டியின் மரணத்திலும், நமக்கான அதன் பயனிலும், அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தை வெளிப்படையாய் அறிக்கைப்பண்ணுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

இஸ்ரயேலர்கள் இரவில் வீடுகளிலிருந்து வெளியேறக்கூடாது என்று கட்டளை இடப்பட்டிருந்தனர் என்பதை நினைவில்கொள்கின்றோம்; ஏனெனில் எகிப்தியர்களைச் சங்கரிக்கத்தக்கதாகக் கர்த்தர் கடந்துசெல்லுகையில், அவர் மேற்சட்டங்களிலும், வீட்டுவாசலினுடைய நிலைக்கால்களிலும் இரத்தத்தைக் காண்கையில், அவர் அந்த வீடுகளைச் சங்காரத்தூதன் அணுகவிடவில்லை (யாத்திராகமம் 12:1-13). இரத்தம் தெளிக்கப்பட்டுள்ள வீடுகளில் காணப்படுபவர்கள் இரவில், வீட்டிலிருந்து வெளியேறக்கூடாது என்ற கட்டளையானது, முதற்பேறானவர்களுக்கு விசேஷமாயும், அழுத்தத்துடனும் பொருந்துகின்றதாய் இருந்தது. நிஜத்தில் இதன் அர்த்தமாவது, முதற்பேறானவர்களாய்க் காணப்படும் நம்மில் எவரேனும் இரத்தத்தின் கீழிருந்து வெளியேறுவார்களானால், அதாவது இயேசுவினுடைய இரத்தத்தின் பயனை, புண்ணியத்தை மறுதலிப்பார்களானால், இத்தகைய செயல்பாட்டிற்கான தண்டனை மரணமாகும் — இரண்டாம் மரணமாகும் — நம்பிக்கையற்ற மரணமாகும். (எபிரெயர் 6:4-6; 10:26-31)

## ஆட்டுக்குட்டியைப் புசித்தல்

ஆட்டுக்குட்டியின் இரத்தமானது விசுவாச வீட்டாரிலுள்ள முதற்பேறானவர்களை மாத்திரமாக இல்லாமல், விசுவாச வீட்டாரை அடையாளமிட்டது போலவே, ஆட்டுக்குட்டியைப் புசிப்பது என்பதும் முதற்பேறானவர்களுக்கு மாத்திரமானதாய் இராமல், வீட்டார் அனைவருக்கும் உரியதாய் இருக்கின்றது. ஆகையால்தான் நமது கர்த்தர் கூறினதாவது: "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது;" மீண்டுமாக "வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான்" (யோவான் 6:55, 58). வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இயேசு சிறந்த விதத்திலான பலியின் மரணம் மரிப்பது மாத்திரம் போதாது; இன்னுமாக அவரது பலியின் வாயிலாகப் பயனடைய வேண்டியவர்கள் அனைவரும், அவரைப் புசிக்க வேண்டும் — அவரது பலியினுடைய புண்ணியத்தினைத் தங்களதாக்கிக்கொள்வதும் அவசியமாகும்.

ஆட்டுக்குட்டியைப் புசிப்பது என்பது, ஆதாமின் கீழ்ப்படியாமையின் காரணமாக இழந்துபோனதும், இயேசுவின் மரணத்தினால் மீட்கப்பட்டதுமான அந்தப் பூமிக்குரிய நலன்களையும், உரிமைகளையும் விசுவாச வீட்டார் தங்களதாக்கிக் கொள்வதற்கு நிழலாய் இருக்கின்றது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், இது பாவத்திலிருந்து, நாம் நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் விசுவாசத்தினால் புசிக்கின்றோம் மற்றும் இதன் காரணமாக, "விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகின்றோம்" என்று கூறப்பட்டுள்ளது. ஆதாமினுடைய பாவத்தினாலான அபாத்திரத்தின் காரணமாக தெய்வீகத் தயவினின்று நாம் தள்ளிவிடப்பட்டது போலவே, விசுவாசத்தின் மூலமாக நாம் கிறிஸ்துவின் பலியினுடைய புண்ணியத்தின் காரணமாக தேவத் தயவிற்குள் மீண்டும் முழுமையாய்க் கொண்டுவரப்பட்டவர்களாய் நம்மைக் குறித்து எண்ணிக்கொள்வதற்கு நாம் அனுமதிக்கப்பட்டிருக்கின்றோம். ஆட்டுக்குட்டியைப் புசிப்பது என்பது இக்காரியங்களை உணர்ந்துகொள்வதையும் மற்றும் இவைகளை நமதாக்கிக்கொள்வதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது. நாம் எந்தளவுக்கு அதிகமாய்ப் புசிக்கின்றோமோ, அந்தளவுக்குக் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்துள்ள நம்முடைய விடுதலைத் தொடர்புடைய விஷயத்திலும், நமது பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய புண்ணியத்தின் வாயிலாக தெய்வீகத் தயவிற்குள் நாம் மீண்டுமாகக் கொண்டுவரப்பட்டுள்ளது தொடர்புடைய விஷயத்திலும், நாம் அதிகமாய்த் திருப்திக்கொள்கின்றோம்.

## புதிய உடன்படிக்கையின் இரத்தம்

பதினாறு நூற்றாண்டுகளுக்கும் மேலாக யூதர்கள் தெய்வீகக் கட்டளையின் பேரில் பஸ்காவை ஆசரித்து வந்துள்ளனர்; ஆட்டுக்குட்டியைப் பலிச்செலுத்தி, இரத்தத்தை நிலைக்கால்களில் தெளித்த பிற்பாடு, அந்த இரவில்தானே அதைப் புசிப்பதை மாத்திரம் ஆசரிக்காமல், இன்னுமாக பின்வந்த ஏழு நாளளவும் பண்டிகையையும் ஆசரித்தார்கள். இந்தப் பஸ்கா பண்டிகையானது, பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய பலி மற்றும் அதைப் புசித்தலினாலான புண்ணியத்தின் அடிப்படையில் உண்டான சந்தோஷங்களையும், களிகூருதல்களையும்,

தேவனுடனான உறவின் காரணமான ஆசீர்வாதங்களையும், தயவுகளையும் அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. எனினும் யூதர்கள் தாங்கள் செய்து வந்தவைகளின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாதவர்களாய் இருந்தார்கள். அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமும் இருக்கவில்லை. தேவனுடைய ஏற்றக்காலங்கள் வருகையில், விளக்கம் அருளப்படும்.

அந்த ஏற்றக்காலமானது, நமது கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட இரவில் வந்தது — நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியானது அடிக்கப்பட்டதான இரவில் — முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதியின் இரவில் வந்தது. ஆண்டவர் தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களோடு கூடினார். அவர்கள் தங்கள் வழக்கமான பஸ்கா இராப்போஜனமாகிய, சுடப்பட்ட ஆட்டுக்குட்டியைப் புசித்தார்கள் மற்றும் இவைகளுக்குப் பிற்பாடு நமது கர்த்தர் நாம் பிரபல்யமாய் அறிந்திருக்கின்றதான "கர்த்தருடைய இராப்போஜனத்தை," அதாவது நிஜமான பஸ்காவிற்கான புதிய அடையாளங்களை அறிமுகப்படுத்தினார்.

நமது கர்த்தர் அறிமுகப்படுத்தின காரியங்களானது, தம்முடைய பின்னடியார்கள் மத்தியில் யூதர்களுடைய அனுசரிப்பிற்குப்பதிலாக இடம் பெறப்போகின்றது மற்றும் இதுவும் அதே கருத்தை, ஆனால் உயர்வான தளத்தில், காரியத்தினைப்பற்றின தெளிவான, சிறந்த புரிந்துகொள்ளுதலாய்க் காணப்படப்போகின்றது. ஆட்டுக்குட்டிக்குப் பதிலாக, நமது கர்த்தருடைய மாம்சத்தினை அடையாளப்படுத்தும் புளிப்பில்லாத அப்பம் இடம் பெற்றது. இதை அவர் தம்முடைய அப்போஸ்தலர்களிடத்தில் கொடுத்து, "இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று கூறினார் (லூக்கா 22:19). புளிப்பில்லாத அப்பத்தைப் புசிப்பது என்பது, கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியத்தினை தங்களதாக்கிக் கொள்வதை — விசுவாசத்தினாலான நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

நமது கர்த்தர் இன்னொரு அடையாளத்தை — "பாத்திரத்தைக்" கூடச் சேர்த்தார். விசுவாசிகள் அனைவரும் அப்பத்தைப் புசித்தாலும், அவரது பலியினாலான புண்ணியத்தின் வாயிலாக நீதிமானாக்கப்படுதலை உணர்ந்துகொண்டாலும், விசுவாசிகளில் ஒரு குறிப்பிட்ட வகுப்பார் மாத்திரமே, இரத்தத்தில் பங்கெடுப்பதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். பாத்திரம் மரணத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. பொதுவாக யூதருக்கான பிரமாணத்தின்கீழ் இரத்தத்தைப் பானம் பண்ணுதல் என்பது இரத்தத்தில் — குற்றமுள்ளவராய் இருப்பதை (அ) மரணத்திற்குக் காரணராய் இருப்பதை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (லேவியராகமம் 17:10-14). ஆனால் நமது கர்த்தர் தம்முடைய இரத்தத்திற்கு அடையாளமாக திராட்சப்பழரசத்தைத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார்; அதை அவர்கள் தங்களதாக்கிக்கொள்வதற்கு வலியுறுத்தும் வண்ணமாக, "இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது;" "அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது;" "நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்" என்றார் (லூக்கா 22:20; மத்தேயு 26:27, 28).

அவரது இரத்தத்தில் பங்கெடுப்பதற்கான இந்த அழைப்பானது, கிறிஸ்துவுடன் அவரது அங்கத்தினர்களென, பூமிக்குரிய ஜீவனை, பூமிக்குரிய நலன்களை, நம்பிக்கைகளை, இலட்சியங்களை, ஆசைகள் அனைத்தையுமே பலிச் செலுத்துவதில் பங்கெடுப்பதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுவதற்கான இந்த அழைப்பினை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், அவர் தம்முடைய ஜீவனை எந்த வேலைக்கென்று ஒப்புக்கொடுத்தாரோ, அதே வேலைக்கெனத் தங்களது ஜீவியங்களைக் கையளிக்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். இது யூதருக்கான பஸ்கா நிழலில் இடம் பெறாத காரியமாகும். வீட்டாரில் எவரேனும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைப் பானம்பண்ண வேண்டுமென எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் அவரது இரத்தத்தைப் பானம் பண்ணுவதற்கும், சத்தியத்திற்காக நம்முடைய ஜீவியங்களை அவரோடுகூட ஒப்புக் கொடுப்பதற்குமான நமது கர்த்தருடைய அழைப்பினை இப்பொழுது ஏற்றுக்கொள்பவர்களாகிய நாம், இவைகளின் காரணமாக விசுவாச வீட்டாரில் மூத்த சகோதரர்களாக, நமது கர்த்தருடன், நமது மீட்பருடன், முதற்பேறானவர்களின் அங்கத்தினர்களாக, வருங்கால இராஜரிக ஆசாரிய கூட்டத்தினராகக் காணப்படுகின்றோம்.

## நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே

நாம் கவனத்திற்குக்கொண்டுவந்துள்ளவைகளையே அப்போஸ்தலன் பவுல் சுட்டிக்காட்டுகின்றார். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களானவர்கள், இயேசுவைத் தலையாகப் பெற்றுள்ளதான, சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினர்களாகக் கருதப்படுகின்றனர் என்று குறிப்பிடுகின்றார். நமக்காகப் பிட்கப்பட்டுள்ள நமது கர்த்தர் இயேசுவையே, பிட்கப்பட்ட அப்பமானது முதலாவதாகக் குறிக்கின்றது என்றும், இரண்டாவதாக அது

கர்த்தருடைய காரணங்களுக்காக தங்களை மனப்பூர்வமாயும், சந்தோஷமாயும் ஒப்புக்கொடுக்கின்றவர்களாகிய கிறிஸ்துவின் சபையைக் குறிக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். நாம் பங்கெடுக்கும்படிக்கு அழைக்கப்பட்டதான கிறிஸ்துவினுடைய இரத்தமாகிய பாத்திரமானது, கிறிஸ்துவின் பாடுகளிலும், உபத்திரவங்களிலும் நம்முடைய பங்குகொள்ளுதலைக் குறிக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். (St. Paul Enterprise, ஏப்ரல் 18, 1916 மற்றும் Harvest Gleanings 3, பக்கம் 814-ஆகிய வெளியீடுகளைப் பார்க்கவும்).

ஆகையால் யார் ஒருவன் அறிந்து நினைவுகூருதலின் இராப்போஜனத்தில் பங்கு கொள்கின்றானோ, அவன் பின்வரும் இரண்டு காரியங்களைச் சுட்டிக் காண்பிக்கின்றவனாய் இருக்கின்றான்: (1) இயேசுவே பஸ்கா ஆட்டுக்குட்டியாக இருக்கின்றார் என்ற அவனது விசுவாசத்தையும்; இயேசுவின் புண்ணியத்தில் அவனது பங்கெடுத்தலையும், உணர்ந்துகொள்ளுதலையும் — விசுவாசத்தினாலான அவனது நீதிமானாக்கப்படுதலையும் சுட்டிக்காட்டுகின்றது; மற்றும் (2) கிறிஸ்துவின் சரீரத்தில் அவனது அங்கத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது; அந்தச் சரீரத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் பிட்கப்படும்படிக்கு இணங்கி இருக்கின்றனர்; ஆண்டவரோடு ஆளுகை செய்யத்தக்கதாக, அவரோடுகூடப் பாடுபடுவதின் மூலம், அவரோடுகூட அவரது பலியில் பங்கெடுப்பதின்மூலம், ஆண்டவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதன் மூலம் தங்கள் உண்மையை வெளிப்படுத்துகின்றதான அந்தச் "சிறு மந்தையில்" அவனது அங்கத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. (1 கொரிந்தியர் 10:16, 17; 2 தீமோத்தேயு 2:11, 12).

*****

# நறுமணத்தின் பெருவெள்ளம்

ஓர் உயர்ந்த மகாபெரிய வெள்ளைக்கல் பரணி, நமக்குமேல் விண்ணிலே உள்ளதே - அது
படிப்படியாய் மனுக்குலத்தின் மீது ஊற்றப்படுமே! தெய்வீகத் தன்மையின் பொருளான அது, இனிய
நறுமணதைலத்தால் நிரம்பப் பெற்றதே. ஒவ்வொரு பள்ளத்தாக்கையும் நிரப்பி
உயர்ந்த மலையின்மேல் செல்வதற்கு — அது போதுமான அளவு உள்ளதுவே!

முன்பு மனிதர்களின் வாசஸ்தலத்தை நிரப்பிய பெருமழை வெள்ளம் போலல்லாமல்,
விரைவில் வேறொரு பெருவெள்ளம் வருமே! கடலிலும், மலைகளிலும், காற்றனைத்தையும் ஊடுருவி,
அனைத்து இடத்திலும் வாசனை வீசிடுமே, வரவிருக்கும்
அந்த வெள்ளத்தின் அனைத்து இனிமையுமே!

அந்த நறுமண வருடங்களில் மனிதர்களின் மனங்கள், சிந்தைகள் இனிமையாகும் வரை,
அந்த இனிமையின் பெருக்கானது மனிதர்களின் கண்கள், காதுகளுக்குள் செல்லுமே!
மரணம், அழுகை, பிரச்சனையோடு முற்றிலும் தீமையான பாவம் நீங்கிய பின்,
வாழ்க்கையில் என்னே! ஒரு மனரம்மியம் இருக்குமே.
வாழ என்னே! ஓர் அருமையான சூழல் அமையுமே!

இந்தப் பேரின்ப பிரவாக மகிமையில், உன்னத உயரத்திலிருந்து கவனிக்கப்பட வேண்டி —
நமது தேவன் ஞானமாகக் கட்டளையிட்டுள்ளாரே.
ஆனால் தங்களது தற்போதைய குறைவுற்ற இருப்பிலுள்ள - தைலத்திலிருந்து
பலவீனமான, ஆனால் மனமார்ந்த முயற்சியில் அநுதின ஆசீர்வாதம்
இப்பொழுதும் ஊற்றப்படுகிறதே!

நம்முடைய நளதத்தையும் முற்றிலும் ஊற்றி, ஆறுதல், சமாதானம், மகிழ்ச்சி ஆகியவற்றை
நம்மைச் சுற்றியுள்ள தேவபிள்ளைக்கும் கொண்டுவருவோமாக!
அபிஷேகிக்கும் விதமான அந்த வார்த்தைகளும், கிரியைகளும் பாவத்தை ஒழித்துக்கட்டுவதில்,
இயேசுவோடு இணைந்திட பாத்திரமான இருதயம்
இருப்பதைக் காட்டுகின்றதே.

ஓ! நான் அதன் மகத்தான தொடர்ச்சியைக் கூற, நீ அதனை கேள்!
அற்புதமான இனிமை அந்நாளில் பூமியின் குடிகளின் மீது பொழியுமே.
எதன் மீது ஊற்றப்பட்டதோ அதிலிருந்து வாசனை மேலெழும்புவதுபோல்
அந்த அனைத்து வாசனையும் எவரிடமிருந்து பூமிக்கு ஊற்றப்பட்டதோ அவருக்கே திரும்புமே!

-Pilgrim Echoes, P.504

**--3146--**

# அது ஒரு பூமியின் மட்கலயம்

மிகவும் சிறியதாய் வெற்றுக்குடமாய்,
எஜமானுக்கருகினிலிருந்ததுவே, வெறுமையாகத்தான் அது இருக்க விரும்புதே,எஜமான்
அதனை நீர் வீழ்ச்சிக்கு எடுத்துச்சென்றே, விளிம்புவரை நீர் பிடித்தாரே, சிறுசேவை ஒன்றை
செய்திட்டோம் என்றே கலயமும் மகிழ்ச்சி கொண்டதுவே,அவர்கையினால் நீரினை
எடுத்துவந்தே, தாகம்கொண்டசெடிகளுக்கே ஊற்றித் தாகம் தீர்த்து வைத்தாரே,
நீர்வீழ்ச்சிக்கோர் சேதி சொல்லவே, கலயம்தன்னைப் பணித்தாரே,கலயம்அவற்றின்
காதினிலே, மெதுவாய்செய்தி கூறியதேஅவர் என்னைத்தரையினில்வைக்கையிலே, அவர்
போகிற பாதையில் கிடப்பேனே,எஜமானுக்கருகினில் இருப்பேனே, வெறுமையாகவே
கிடப்பேனே,என்றாவது ஓர்நாள் என்னைத்தான்,மீண்டும் கையினில் எடுத்துத்தான்,
பூத்துக்குலுங்கும் செடிகளுக்கே, தண்ணீர் வார்ப்பார் என்னாலே,பயன்படுத்துவார்
என்னைத்தான்" அதுவரையில்நானும்தான்பொறுத்திருப்பேன் தன்னாலே

# மனம் தளர்ந்த பயணியரே

மனம் தளர்ந்த பயணியரே, சிரம் சிலிர்த்து எழுந்திடுவீர்,
வீணான பயமனைத்தும் காற்றுக்கிரையாக்கிடுவீர்,
கல்வாரி மலைதனிலே மரித்தவரே வந்துவிட்டார்,
ஆயிரமாண்டாட்சியினை ஆனந்தமாய் நடத்திடவே.
தேவ செய்தி கொண்டுவந்த மாந்தர்களால் முன்னுரைத்த,
ஆயிரமாண்டாட்சியிலே ஆசீர்கள் புவியினுக்கே,
சீயோனின் மகிமைப்பிரகாச காலை வேளையிதுவே,
இதைத்தானே தீர்க்கரெல்லாம் முன்னுரைத்தார் ஆதியிலே.
உலகமெலாம் ஆசீர்வாதம் செல்லும் செய்தி உரைத்திடுவீர்,
நெருங்கிவரும் ஓய்வுகால நினைவதனை பேசவைப்பீர்,
பூமியிலே ஆயிரமாண்டு நிலை நிற்கும் என்றேதான்,
ஒடுக்கப்பட்ட தேசங்கள் ஒவ்வொன்றாய் கூறிடுவீர்.
ஒருபொழுதில் மேகங்கள் என்னசெய்தால் நமக்கென்ன?
நீலவானில் பரிதி உதிக்கும் காலையிலே மேகங்கள் நின்றிடுமோ?(பரிதி- சூரியன்)
வாக்களித்த சூரியனோ மகிழ்வுடனே விரைவாகத்தோன்றியதே,
ஆயிரமாண்டாட்சியிலே உதித்தெழுந்தே நடுவானில் பிரகாசிக்கும். போனர்.

# மறைக்கப்பட்டச் சிலுவை

ஒலிவ மரத்திலான சிலுவைதனைத் துன்பத்தின் மனிதனவர்
சுமந்ததையே திரள்கூட்டம் பார்த்ததுவே,
அதன் கீழாக எப்படியிருந்ததென யாரும் அறியாரே,
அவர் இருதயத்தினுள்ளே ஒரு மறைக்கப்பட்ட சிலுவைதனைச் சுமந்து வந்தாரே,
இரத்தம் சிந்தும் முழுமனுக்குலத்தின் துன்பமான
கரும் பாவத்தின் சுமையும்கூடச் சுமையாக அழுத்தியதே,
தேவனின் சட்டத்தை உடைத்து மீறியதால்
வந்த பாவமும் சேர்ந்தழுத்தியதே,
முட்களால் முடி பின்னி, ஏளனமாய் வெறுந்தலையில் வைத்தே,
அழுத்தி குரோதமுடன் வெறுத்தே, முகத்தினில்காறி உமிழ்ந்தனரே,
யோர்தான் கரையினில் உலக இரட்சகர் கண்டெடுத்த சிலுவையது,
கல்வாரிக்கு வரும்வரையில் எங்கேனும் சற்றேனும் இறக்கி வைக்கவில்லை.

பல நேரங்களில் அவர் மனித உதவி வேண்டுவதுபோல தோன்றினாலும்,
அக்கொடுமையான சிலுவைதனை
பரிதாபத்தினால் பகிர்ந்துகொள்ள எவருமில்லை,
எருசலேமே, எருசலேமே, அந்தப் பாரமான சிலுவை
அந்த ஏங்குகின்ற இருதயத்துக்கே
எப்போது மிகப் பாரமாகத் தோன்றியதென்பதை நீ அறிவாயோ?
விசுவாசக் குறைவும், கடின இருதயமும் கொண்டு உதவிசெய்யாததால்
இராஜாவோ உன்னைக் கடந்து அவர் வழியில் சென்றிட்டாரே.
அவருடனே எவருமில்லை, இவ்வுலகின் இருளான அவமானமான
பெருந்துன்ப ஆலையை தனித்தே மிதித்தாரே - ஓ,
தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று சீடர்களே, ஒரு மணி நேரம்கூட
உங்களால் எனக்காக விழித்திருக்கக் கூடாதா?
அந்தக் கெத்செமனேயின் காரிருள் வேளையிலே,
நீவீர் அந்தப் பாரமான சிலுவைதனின் பாரம் குறைக்க முயலவில்லையே,
பற்றியெரியும் பெருந்துன்பந்தனைப் பங்குபோட மனமில்லையோ?
ஐயகோ, ஐயகோ, உங்கள் கண் இமைகள் பெருந்தூக்கத்தினாலே
கனத்துவிட்டதே, நீங்கள் எல்லாம் களைப்பினாலே தூங்கிவிட்டீரே,
எனவே, களைப்படைந்த சகோதரரே, இப்போது நிம்மதியாய் உறக்கம் கொள்வீர்,
ஓய்வு கொள்வீர். ஒரு பரலோக தூதனின் இறக்கைகள் தாமே
மறைக்கப்பட்ட சிலுவைதனின் பாரம் குறைக்க உதவியதே,
உங்கள் எஜமான் பலம் பெற்றே - பலம் பெற்றே
வேறோர் சிலுவையைச் சுமக்கவே ஆயத்தம் ஆகிவிட்டாரே.

கல்வாரிக்குக் கொண்டு செல்ல எந்தச் சிலுவை மிகப் பாரமாகும்?
உரோமப் போர்வீரர், ஆசீர்வதிக்கப்பெற்றவர் தோளினில்
சுமத்திய மரச்சிலுவையா? இல்லை, இல்லை. அது பார்க்கவியலா
கண்ணுக்குத் தெரியா மறைக்கப்பட்ட சிலுவைதானே,
அதுவே அவரை பூமியின்மேலே மிகப் பாரமாகவே அழுத்தி நசுக்கியதே,
வெளறிய இதழ்கள் மென்மையாய்த் திறந்தே,
எனது தந்தையே, எனது தந்தையே, என்னை ஏனோ கைவிட்டீரே?
பூமிக்கூடச் சோகமடைந்ததே, அவர் மார்பின் மீதே
அதைச் சுமந்து கொண்டாரே, சூரியன்கூட இருளாய் மாறியதே,
எல்லாம் முடிந்தது, நிறைவேறிற்று, சரிநிகர்சமானவிலை கொடுத்தாயிற்று.
மறைக்கப்பட்ட சிலுவையோ, அன்பால் தளர்ந்த இதயம்தனை
ஊடுருவவே குத்திக் கிழித்ததே,

**--3149--**

உன் சிலுவையை எடுத்தே எனைப் பின்பற்றிவா - எஜமான் சொன்னாரே,
ஆம், அவர் உண்மை மணவாட்டியும் ஒரு சிலுவைதனைச் சுமந்தாக வேண்டும்,
மறைக்கப்பட்ட சிலுவை, வாழ்க்கையின் சூழ்நிலை மாற்றங்களாலே உருவானதல்ல,
அதன் நோய்கள், வலிகள், இழப்புகள், ஏழ்மை, பெருங்கூட்டம்
வெளிப்புறப்பார்வைக்காக அடையாளமாகக் கொண்டதுவே, இல்லை, இல்லை,
அவரோடுகூடப் பாளயத்திற்குப் புறம்பே சென்றிடுவோமே
பலியில் நம் ஜீவன்தனை அழித்திடுவோமே, தியாகமாக்கிடுவோமே.
இந்தச் சிலுவையை மார்போடு அணைத்தே
கல்வாரிக்கு நேராய்ச் சென்றிடுவோமே; அங்கே
நம் மணவாளன் காத்திருக்கின்றாரே - வேதனையின்
சிலுவையை எடுத்து, சந்தோஷத்தின் கிரீடம் கொடுத்திடவே.

- Poems of Dawn, p. 215

**--3150--**

# கெத்செமனேயும், கல்வாரியும்

பாலஸ்தீனியாவின் அந்த ஓர் இடத்தின் வரலாறு
அப்போதும், எப்போதும் மறக்கப்படுவதில்லையே —
அது கெத்செமனே தோட்டமே!
இயேசுவின் கால்கள் அடிக்கடி பதிந்ததும்,
அவர் கண்ணீர் விட்ட அந்தத் தோட்டம் நினைவில் நமக்குள்ளதே.
பூமியில் அவருடைய பணி முடியவே,
அவர் கடந்துபோகும் காலம் நெருங்கவே,
அன்பற்ற இவ்வுலகையே அவர் பிரிந்திடும் காலம் நெருங்கவே,
தம் இருதயத்திற்குப் பிரியமானவர்களுடனே
தனிமையில் நாடிட்டாரே பரிட்சயமான அவ்விடத்தையே.
அங்கே மிகத் துயரம் அடைந்தே,
கண்ணீர் முகத்தில் வடியவே  முகங்குப்புற கிடந்தாரே.
ஆவியில் மகிழ்வுடனே தம் பிதாவின்
நீதியான சித்தத்தை அதுவரை நிறைவேற்றியிருந்தாரே.
ஆனாலும் சோர்வுற்றிருந்த தம் மாம்சம் எதையேனும்
நிறைவேற்றத் தவறி இருக்குமோ?என அஞ்சினாரே.
"ஒரே மனிதனுடைய கீழ்ப்படியாமையினால்
மரணம் எல்லாருக்கும் வந்துள்ளதுவே."
மிருகங்களின்  இரத்தம் பாவத்தைச் சுத்திகரிக்காதே.
மோசேயின் பிரமாணத்தின் மூலம் தேவன்
"சரிநிகர் சமான விலை" ஒன்றை முன்வைத்திருந்தாரே.
ஆகவே பலிசெலுத்துபவர் பரிபூரண
பலியைக் கொண்டுவரவேண்டுமே.
நித்திய மரணத்தின் அச்சம் அன்றிரவு அவரைச் சூழ்ந்ததுவே.
ஓ, சிலுவை — பிதாவின் பார்வையிலிருந்து
தம்மை நித்தியமாய் புறம்பாக்குமோ?
தாம் இரட்சிக்க வந்த — இறந்தும் கொண்டிருக்கும் இவ்வுலகை
மரணத்திற்குப் பின் உள்ள வாழ்வுக்கான
நம்பிக்கை ஏதுமின்றி கைவிடும் நிலை ஏற்பட்டு விடுமோ?
இரங்கும் கண்கள் ஒன்றுகூட
இல்லா, அத்தனிமையான இரவுவேளையில் உடைந்த
உள்ளத்திலிருந்தே  மும்முறை —
"ஓ, பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு
நீங்கக்கூடுமானால், நீங்கும்படிச் செய்யும்.
நான் இதில் பானம் பண்ணினாலொழிய நீங்கக் கூடாதாகில்,
நான் பானம் பண்ணாதிருப்பேனோ?" ஆகிலும்
"என் சித்தப்படி அல்ல, உம் சித்தப்படியே ஆகக்கடவது" என்றாரே.
ஓ, சத்தமிடாதிருக்கும் ஆட்டுக்குட்டியாய்
வேதனையில் ஜெபித்துக்கொண்டிருக்கும் தேவகுமாரனை
அங்கே நாம் காண்கையிலே, நம் வாழ்வு
எத்தனை பயனற்றதாய்த் தெரிகிறதே.

-Poems of the way,p.11

**--3151--**

# பதிலாக

முட்செடிக்குப் பதிலாகத் தேவதாரு விருட்சம் முளைக்கும்,
காஞ்சொறிக்குப் பதிலாக மிருதுச்செடி எழும்பும்;
வெற்றிகரமாக தேவன் சிருஷ்டிப்பை அதன் முந்தைய
தூய்மையான அழகுக்கு மீண்டும் கொண்டு வருவார்.
வனாந்தர நீரோடைகள் வறண்ட இடங்களைக் குணமாக்கும் -
வனாந்தரத்திலுள்ள ரோஜாவின் வாசனை கமழும்;
யேகோவாவிற்குத் துதியாக மலைகளும், குன்றுகளும் துதித்திடுமே.
இருண்ட நாட்களுக்குப் பின் சூரியன் ஒளிரும்.
துக்கம் மற்றும் துயரம் ஒழிந்துபோம்.
அடையாளமும், நிழலும் சுவிசேஷத்தின் ஆனந்த கதையும்
தொய்வுற்றவனிடம் கூறுகிறது: "உங்கள் தலையை உயர்த்துங்கள்;
விரைவில் இந்தத் துன்பமிக்க உலகம் தேவனின் மகிமையால் நிறையும்.
ஆசீர்வாதம் வழங்குவார் அவர் சாபத்திற்குப் **பதிலாகவே.**"

இதோ பலிபீடத்தின் மீது ஈசாக் பலி ஆடாக,
முற்பிதா ஆபிரகாமின் உயர்த்தப்பட்ட கையில் கத்தி,
வாக்குத்தத்த உடன்படிக்கையின் குமாரனைப் பலியாக்கப்போகின்றார்
யேகோவாவின் கட்டளைக்கிணங்கவே.
பரலோகத்தின் தூதன் தோன்றியே வார்த்தைக் கூறிடவே,
பிள்ளையாண்டான் மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்ததுபோல் பிழைத்தான்.
கர்த்தர் தமக்கென்று செலுத்தப்படத்தக்கதாக – ஒரு பலியைக் கொடுக்கவே,
புதரிலே இருந்த ஆட்டுக்கடா தகனபலியிடப்பட்டதே ஈசாக்கிற்குப் **பதிலாகவே.**

தோட்டத்தில் மற்றனைவரும் உறங்குகையில், தனியாக
நமது பாவமற்ற இரட்சகர் முழங்காலிட்டு, பிராத்திக்கிறார்;
பிதாவின் இருதயத்தை நோக்கிய, அவரது ஊக்கமான பிராத்தனை, அவரது
இரத்தவியர்வை, அவரது அழுகை, அவருடைய வேதனை வெளிப்பட்டதே.
அந்தப் பாத்திரம் கசப்பாயிருந்தபோதிலும், அவர் தலையின்மேல் சுமத்தப்பட்டப் பாரமானது
பளுவாயிருந்தபோதிலும், நாம் இரட்சிப்பின் பாத்திரத்தை அடையத்தக்கதாக,
சபிக்கப்படுவதற்கும், கைவிடப்படுவதற்கும் சிலுவையை நோக்கிச் செல்கிறார் நமக்குப் **பதிலாக.**

தற்போது அவரின் முடிவில்லா புண்ணியத்தின்அடிப்படையில் இரட்சிக்கப்பட்டு
அவரின் மக்கள் ஆத்மா சுத்திகரிப்பின் இரத்தத்தில் களிப்படைகிறார்களே.
அவரது ஆவியின் வலிமையால் மறுரூபமாக்கப்பட்டு - நாள்தோறும்
தேவனுக்குப் பிரியமான கனியை அவர்கள் கொடுக்கின்றனரே.
எல்லா கனமும், மகிமையும், மாட்சிமையும் அவர்களை
மீட்ட தங்களது மகிமையான தலைக்கே கொடுக்கின்றனரே.
அவர்கள் தங்கள் மகிழ்ச்சியாக எப்பொழுதும் எண்ணுவதெல்லாம் -
இயேசுவுக்கென வாழ்வதையே, சுயத்திற்குப் **பதிலாக.**

சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து ஏங்குகின்றதான
அந்த ஆனந்தமான நாள் நெருங்குகின்றதே – விசவாசியே களிப்படைவாயாக.
கிறிஸ்து, நமது இரட்சகர், மகிமையில் வரும்போது,
தமக்கான வல்லமை மற்றும் ஆட்சியைத் தமக்கென உரிமையாக்குவாரே.
பூமியின் கடைக்கோடிக்குத் தீய துன்மார்க்கனான
சாத்தான் அகற்றப்படும்போது, கிறிஸ்துவின் இராஜ்யம் பரவுமே,
சமாதானமும், செழிப்பும் இம்மானுயேல் இயேசுவே
ஆளுகிறார் என்று இனிமையாகக் கூறிடுமே சாத்தனுக்குப் **பதிலாக.**

-Poem of the Way: pg 15

**--3152--**

# மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி

ஜீவியத்தின் பிரகாசமான வேளைதனிலும், மழை பெய்யும் வேளைதனிலும்,
என் அனைத்து துக்கங்களிலும், கசப்பான வலிகளிலும்
என் காதுகள் கேட்கின்றதே, என் இரட்சகர் சொல்வதையே:
*"யான் அறிவேன்! யான் அறிவேன்! யானும் ஒரு காலத்தில் களிமண்ணாய் இருந்துள்ளேனே;*
*நீ இப்பொழுது நடக்கின்றாயே, அதே பாதையில் யானும் நடந்துள்ளேனே;*
*மரித்தோர்க்காய் துக்கித்தவர்களோடு யானும் புலம்பியுள்ளேனே.*

*வானம்பாடியின் கானம் எத்துணை இனிமையென அறிவேன்;*
*கோடைக்கால வானம் அழகாய் இருந்ததே மனிதக் கண்களால் அதைக் காணும்போதே.*
*இளவரசியின் அறை அருகே இருந்த மலர்களைப்போலவே,*
*விவசாயியின் குடிசை அருகே இருந்த மலர்களும் மணம் வீசினதே;*
*இவையாவும் எம்மால் உண்டாக்கப்பட்டதே.*

*முன்கூட்டியே பலிபீடத்தில் பாவங்களுக்கென்று எந்தன் ஜீவனை பலியாய் யான் வைத்தேனே;*
*மாம்சமாக்கப்பட்டு யான் மனுஷர் மத்தியில் சஞ்சரித்தவனானேன்;*
*விரும்பி ஏற்பாரில்லை அங்குத் தனிமையில் நடந்தேனே –*
*எமக்குச் சொந்தமானவர்களுக்கு அந்நியனானேன்.*
*வெறுக்கப்பட்டேன், வேட்டையாடப்பட்டேன், மறுதலிக்கப்பட்டேன்,*
*இறுதியில் அவர்களால் சிலுவையில் அறையப்பட்டேன்;*

*வெகு முன்னே இதைக்குறித்து அறிவுறுத்தப்பட்ட யான்,*
*துரோகியின் முத்தத்தால் குறுகிபோகவில்லையே;*
*மரணத்தினாலான எம் உடன்படிக்கை உலகத்தோற்றத்திற்கு முன்னே ஏற்படுத்தப்பட்டதே.*
*எம் மேல் விழும் அடிகளும், உமிழ்தல்களும்,*
*எம் நாமத்தின்மேல் சுமத்தப்படும் அவமானங்களும்*
*எம் பிதா எமக்கு அறிவித்திருந்தாரே.*

*யான் சுதந்திரமாய் இருந்தபோதே இவைகளை அறிந்தபோதிலும்,*
*யான் மகிழ்ச்சியாய் நிறைவேற்றினேனே மோசேயின் நியாயப்பிரமாணத்தையே.*
*யான் ஒருமுறையேனும் திரும்பியதில்லையே,*
*ஒரு கணம்கூட யான் பண்ணின உடன்படிக்கையிலிருந்து பின்வாங்கியதில்லையே.*
*பாழாக்கப்பட்ட இனத்தை மரணத்திலிருந்து காப்பாற்றவும், பூமியை மகிமையான இடமாக்கவும்*
*செலுத்த வேண்டிய விலையை மாற்றிட முயலவுமில்லையே."*

ஆம், அவர் சுமந்த சிலுவை மிகப் பாரமானதே, அவர் கடந்தப் பாதை இருளானதே
அவர் தேவனால் சபிக்கப்பட்டவரைப் போல், தேவ அன்பிற்கு பாத்திரமற்றவர் போல்,
தேவனுடைய கிருபையை எதிர்த்த ஒரு கலகக்காரன் போல்,
நம்மைக் காப்பாற்றிட நிற்கவேண்டியது அவசியமானதே.
நம்முடைய பாவங்களுக்காக பிதா தமது முகத்தை அவரைவிட்டுத் திருப்பியதால்
அவர் கதறி அழுதாரே: "என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?"
அவர் இருதயம் நொறுங்கியே மரித்தாரே – நாம் அனைவரும் விடுவிக்கப்படும்படியே.

பலிபீடத்தின் மீது பலியாய் தம் பரிபூரண ஜீவனை வைத்திட்ட
அவருக்கான அன்பின் கடனை ஒருபோதும் நாம் செலுத்தித் தீர்த்திட முடியாதே;
இந்த அற்புதமானப் பரிசுக்காக எப்போதும் துதிசெலுத்துவோமாக.
மரணத்தையும், பாவத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து
ஆளுகை செய்யப்போகிற அவருக்கு எப்போதும் துதிசெலுத்துவோமாக.

- Poems of the Way, p.153 **--3153--**

# நமது உயிர்த்தெழுதல்

ஓ! பிரியமான கர்த்தாவே! நாங்கள் அங்கு இருந்திருந்தால்,
உதடுகளில் வேதனையான ஜெபத்தோடு
நீர் மண்டியிட்ட அந்த இரவில்
நாங்கள் உம் துயரத்தை உணர்ந்திருப்போமே
நாங்கள் அங்கு இருந்திருந்தால்.

ஓ! அருமையான கர்த்தாவே! நாங்கள் அருகில் இருந்திருந்தால்
கல்வாரியின் பாதையில் நீர் பயணிக்கையில் - நீர்
சுமந்த சிலுவையின் அடியில் நீர் விழுகையில்,
நாங்கள் சுமையைத் தாங்கியிருப்போமே
நாங்கள் அருகில் இருந்திருந்தால்.

அந்த அதிகாலையில் நாங்கள் சென்று
சுகந்தவர்க்கங்களினாலும் பரிமளத்தைலங்களினாலும்
உம்மை அபிஷேகம் பண்ண உம்முடைய
புனித கல்லறையைத் தேடிச் சென்றிருப்போமே
அந்த அதிகாலை வேளையிலே.

என்னே! எங்களது மகிழ்ச்சி, நீர் உயிர்த்தெழுந்தீர்!
இனி என்றும் நீர் மரிக்கமாட்டீர்.
நாங்கள் ஜீவனோடு வாழ, சிந்தப்பட்டது உம் இரத்தமே,
உமது நாமத்தை நாங்கள் மகிமைப்படுத்துவோமே.
என்னே! எங்களது மகிழ்ச்சி!

நாங்கள் எல்லோரும் அர்ப்பணிக்கப்படும்படி, அழைக்கப்பட்ட
தெளிவான அழைப்பைப் பின்பற்றுவோமே - ஒரு
புதிய ஜீவன் எங்களுக்குள் பெற்றதினால்
மற்றெல்லாவற்றையும் நாங்கள் கைவிடுவோமே.
நாங்கள் உம்மைப் பின்பற்றுவோமே!

வாழ்க்கை முடிந்ததும், ஒவ்வொரு சிலுவைக்கும்
ஒரு கிரீடத்தோடு, அவரோடேகூட எழுவோமே.
உயிர்த்தெழுதலின் ஆனந்தம்தனை உணரப்போகிறோமே!
நாம் அவரோடுகூட எழும்போது - நாம்
இழந்த அனைத்திற்கும் என்னே! ஓர் வெகுமதி!

-Poems of the Way, pg-91

**--3154--**

# உபத்திரவங்களினாலே பூரணப்படுதல்

பரிசுத்தரும், குற்றமற்றவரும், பாவமற்றவருமான - அவரே
உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டாரெனில்,
நீயோ - பரலோகை அடையவும், பிதாவின் அங்கீகரிப்பைப் பெற்றிடவும்,
கடினமற்ற பாதையில் நடக்க நாடிடுவாயோ?
ஆ, இல்லை! எந்தன் ஆத்துமாவே வேதனையும், துக்கமும் - உன்
அலங்கத்திற்குள் வருகையில், அவற்றை வரவேற்க விரைந்திடு;
மெல்லிய குரல்தனிலே இருதயத்தின் ஆழத்தில் சொல்லிடு — நீ
"என் இராஜாவை நான் எவ்வளவாய் நேசிக்கின்றேன்;
அவருக்காக நான் எதையும் செய்வேன்" என்று
காண்பிக்க மற்றொரு வாய்ப்பு என்றே.
துன்பத்தின் நாட்களில் நீ காணப்படுகையிலே- உந்தனை
இவ்விதமாய்க் காயப்படுத்தின அவர் கரங்களைப் பற்றிக்கொள்.
தம் குமாரனை நேசித்ததுபோல உனை நேசிக்கிறவரின் மார்புதனில் சாய்திடு.
வேண்டிடு — "கர்த்தாவே துன்பங்கள் தராமல் இருந்திடாதேயும்
மாசனைத்தையும் சுட்டெரித்திடும்" என்றே.
பற்றியெரிகின்ற சோதனையில் நான் நின்றிட எனக்கு உதவியருளுமே.
விலையுயர்ந்த கற்களைத் தீட்டுபவரே திவ்விய - அன்பின்
மகிமையின் ஒளிதனைப் பூரணமாய்ப் பிரதிபலித்திட எனைத் தீட்டிடுமே.
ஓ! உம் இராஜ மகுடத்தில் நான் பிரகாசிக்கும்படி
ஏற்ற இடத்தில் எனைக்கொண்டு பொருத்துமே.

– Poems of the Way, p. 137

**--3155--**

## நாம் அங்கே இருந்திருப்போமாகில்

நாம் இயேசுவின் நாட்களில் ஜீவித்திருப்போமாகில்
எத்தகைய விசுவாசமுள்ளவர்களாய் இருந்திருப்போம்!
நாம் அவருடன் அங்கே இருந்திருந்தால் - நாம்
நித்திரைபண்ணாமல் விழிப்புடன் இருந்திருப்போமே.

நாம் இயேசுவின் நாட்களில் ஜீவித்திருப்போமாகில்
அவரது பாதங்களைக் கழுவியிருந்திருப்போம் - அவர்
பாதம்தனை வேறுயாராகிலும் கழுவட்டும் என்று
நாம் காத்திருந்து இருக்கமாட்டோமே.

அவரது சோதனையின் மற்றும் தேவையின் நேரத்தில்
அவரோடு அவரருகில் இருந்திருப்போம் - அவர்
கைவிடப்பட்டபொழுதில் நாம் அவரோடே இருந்திருப்போமே.

அவரது கல்வாரி பயணத்தின் வழியே
அவரது பாரச்சுமையை மனமுவந்து சென்று - நாம்
சற்றே தாங்கி இருந்திருப்போமே
நாம் அங்கே இருந்திருப்போமேயாகில்.

இப்போது எல்லா வலிகளுக்கும் நீங்கலாகி அவர் தெய்வீக
உன்னதங்களிலே உயர்த்தப்பட்டிருக்கின்றார்.
அவர் மாம்சத்தில் நம்மோடில்லாதபடியால் - நாம்
அவருக்கு நேரடியாக ஊழியஞ்செய்ய இயலாது.

ஆயினும் அவர் மகிமைப்படுத்தப்பட்டிருக்கும் இப்பொழுதிலும்
அவருக்குச் சொந்தமானவர்களுக்குச் செய்யப்படுவது எதுவோ
அது அவருக்கே செய்யப்பட்டதாகும் - எனும்
அவர் வார்த்தைகள் நமக்குத் தெரிவிக்கின்றதே.

இடுக்கமான வழிதனில் இன்னமும் காணப்படுகின்ற
அவருடையவர்களின் தேவைகளுக்கு நாம் இணங்கி
அவருக்கு ஊழியம் செய்திடும் சிலாக்கியம் - மாபெரும்
சிலாக்கியம் இன்னமும் நமக்குள்ளதே.

அவருடைய பாத அங்கத்தினர்கள் இன்னமும் நம்முடன்
இருக்கின்றனரே, களைப்புள்ள பிரயாணிகளாக நடந்து
வருகின்றனரே, ஜீவதண்ணீர் கொண்டு - இவர்களைப்
புத்துணர்வு அடையப்பண்ணிடலாமே.

ஒருவருக்கொருவர் சிலுவை சுமப்பதற்கு உதவி செய்து
நம் அன்பை அவருக்குக் காண்பிப்போமே.
இப்படியாய் அவரோடு அங்கே இருந்திருப்போமானால் - நாம்
என்ன செய்திருந்திருப்போம் என்று அறிந்துகொள்வாரே!

Poems of the Way, p. 73

-------------------

**--3156--**

# பெத்தானியாவின் மரியாள்

மத்தேயு 26:6-13; யோவான் 12:1-8; மாற்கு 14:3-9

ஆகமங்கள் கூறியவாறே இயேசு தமது நேரம் நெருங்கிவிட்டதை அறிந்தே,
எப்படிச் சிலுவைதனில் விரைவில் மரிக்க வேண்டும் என்றே,
விழுந்துபோன மனுக்குலத்திற்கு ஈட்டுக்கிரயம் கொடுத்து வாங்க
எருசலேம் வழிமீதினில் தம் முகத்தைத் திருப்பியே பயணித்தாரே,
குறிக்கப்பட்ட அவரது நேரத்திற்கு முன்பே,
ஒருநாளின் குறுகிய முடிவிற்கு முன்பே,
லாசரு, மரியாள், மார்த்தாள் வீட்டிற்கே வந்தாரே - அவர்களும்
பரிசுத்த சிந்தனைகள் மனதினில் தேக்கிவைத்தே,
இதற்கு முன்பைவிடவும் அதிகமாகவே வரவேற்றனரே
அங்குதானே கல்லறைதனிலே அவர்களது சோதரன் லாசரு மரித்திருந்தாரே,
கிறிஸ்துவின் சிநேகிதன் மரணத்தின் கரத்தினால் அடிக்கப்பட்டிருந்தாரே
ஆனால் இயேசு அவரை மீண்டும் எழுப்பினாரே
தேவவல்லமை பயன்படுத்தப்பட்டதே, மகிமைப்படுத்தப்பட்டதே.

அவருக்கென்றே இப்பொழுது விருந்தொன்றை ஆயத்தம் செய்தனரே,
லாசரு அவரோடு அங்கே அமர்ந்து விருந்துண்டாரே,
மரியாளோ அவர் பாதம் அமர்ந்தே பாடம் கற்றுக்கொண்டிருந்தாளே,
மார்த்தாளின் சேவையும் குறைவுபட்டதல்லவே,
மரியாளின் கண்களோ அமைதியான ஜெபவீடாகுமே,
அவள் மனதுக்குள்ளே வேறெந்த எண்ணத்திற்கும் அனுமதியில்லை,
அவனோ இறந்தானே, ஆனால் திரும்ப வந்தானே,
அவனைத் திரும்பக்கொண்டுவந்தவரும் அங்கே வந்துள்ளாரே,
ஆழமான அன்போ, மற்றெல்லாவற்றையும் பின்னுக்குத் தள்ளிவிட்டதுவே,
அவளது ஆர்வமிக்கப் பார்வையோ - இப்போது
வாழ்ந்துக்கொண்டுள்ள அவள் சோதரன் முகம் மீதே பதிந்ததுவே,
அவன் வாழ்க்கையின் மீதே வந்து நிலைநின்றதுவே.

**--3157--**

ஒடுங்க வேண்டிய நினைவுகளோ, நுண்ணிய பயங்களோ,
முழுமையான மகிழ்ச்சியிலே மிதந்துகொண்டிருந்ததுவே,
அவளோ குனிந்தே, இரட்சகர் பாதந்தனைக் கண்ணீரில் குளிக்க வைத்தாளே,
விலைமதிப்பில்லா நளதம் என்னும் தைலத்தினால் குளிக்க வைத்தே
தன் தலைக்கூந்தலால் துவட்டி விட்டாளே - ஆனால்
அங்கே ஒருவன் கடுமையாகவே இச்செயலினை எதிர்த்தானே,
அவன் மனம் அன்பிற்குக் குருடாக்கிவிட்டதே,
இத்தனை விலையேறப்பெற்ற தைலத்தை வீணாய் உடைத்ததும் ஏனோ?
முற்றிலும் விற்றே முழுவதும் ஏழைக்குக் கொடுத்திடலாமே,
மனதிற்குள்ளே வேறொன்றை எண்ணியபடியே,
இப்படியாகவே யூதாஸ் சொன்னதால் கூச்சலும் குழப்பமும் நிலவியதே
தன்னலம் மிகுந்தே, பிறர் நலன் நோக்குவதாய்ப் பொய்ச் சொன்னானே,
பணத்தை மிக மிகக் அதிகமாய் நேசித்த - யூதாசும்
ஏழையை மிக மிகக் குறைவாய் நேசித்தானே,
அவனது கரத்திலே காசுப் பை இருந்ததுவே,
அதனுள்ளே இட்ட பணத்தினையும் களவாடுதல் செய்தானே.
அவன் சுயநல இருதயமோ, பாவத்தைக்கொணர்ந்தே வைத்ததுவே,
அவனது இச்செயலோ அவனைக் கீழே விழத்தள்ளியதே.

இயேசுவோ மறுமொழியாகவே, அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்,
அவளைத் தனியே விட்டுவிடு, என் அடக்கத்திற்கான அபிஷேகம் செய்தாள்,
நீங்களெல்லோரும் சுவிசேஷம் அறிவித்திடும்போதினிலே,
இவளினது இச்செயலும்கூட நினைவுகூரலாகுமே - அதிகமாகவே
செய்திட்ட இச்செயலே, அன்பிலே உயர்ந்ததாய் ஆண்டவர் கற்பித்தாரே,
செயல்தான் பேசப்பட்டதே, அன்பு அதனை பேசவைத்ததே,
அவளது அன்பே, இன்றும் பேச வைத்த செயலாய் மாறியதே,
இனிமையான நறுமணத் தைலத்தின் மூடியைத் திறந்த மரியாள்,
அதை இயேசுவின் பாதத்தில் ஊற்றிய போதே,
ஆ! மரியாளே, உன்னிடமிருந்தே நாங்கள் கற்றுக்கொண்டோமே,
நமது கர்த்தருக்கு முன்பாக எல்லாவற்றையும் கையளிக்கின்றோமே - அவருக்கு
மட்டுமே ஊழியஞ்செய்யவே, நாங்கள் மற்றெல்லாவற்றையும் பொருட்படுத்தாமலே.

- Poems of the Way, p. 98

**--3158--**

# நானே திராட்சச்செடி, நீங்கள் அதின் கொடிகள்

(யோவான் 15:5)

கனிகள் கொடுக்கும் கொடிகளே
நன்கு வளரவும் முழுமையடையவும் வேண்டி,
வெட்டிவிடப்படுவதற்கெனக் கத்தியின் கூர்மைதனை உணர்கின்றதே.

தேவையற்ற ஒவ்வொரு இளந்தண்டும் வெட்டிவிடப்பட்டாலும்
தேவையற்ற தளிர் இலையும், துளிர் இலையும் தறித்துப்போடப்பட்டாலும்
இலைகள் குறைந்து போயிட்டாலும் - போயிட்டாலும்.

ஓ! உந்தன் வாழ்வினுடைய சந்தோஷத்தின் அழகானது பறிக்கப்பட்டாலும்,
உந்தன் ஆவல்கள் அனைத்தும் மண்ணோடு புதைந்து, புதைத்து
அனைத்தும் கிழித்தெறியப்பட்டாலும் - எறியப்பட்டாலும்.

உந்தன் ஒவ்வொரு விருப்பமும், ஒவ்வொரு கனவும், ஒவ்வொரு நம்பிக்கையும்
தோல்வியுற்று மங்கிப்போனாலும் களிகூர்ந்திடு, மிகக்
களிகூர்ந்திடு இன்னும் - களிகூர்ந்திடு.

திவ்விய அன்பின் கரமே கத்தியைப் பிடித்திருக்கின்றது,
மென்மையாய் வெட்டுகின்றது, முறிக்கின்றது.
உந்தன் ஜீவிதம் கனிகளைக் கொடுத்திட - ஆம்
அதிக கனிகளைக் கொடுத்திடுவதற்கே.

Poems of the Way, p. 174

--3159--

# அவர்கள் மட்டும் அறிந்திருந்தால்

எருசலேமே, எருசலேமே நீ உந்தன் சந்திப்பின் நாளை அறிந்திருந்தாயானால்
மேசியாவை உந்தன் நடுவில் அடையாளம் கண்டிருப்பாயானால்
உந்தன் பரிசேயர்களும், ஏளனம் செய்யும் ஆசாரியர்களும், ஜனக்கூட்டத்தினரும்
அவரைப் பணிந்திட வந்திருப்பார்கள் அல்லவா?

போதகருக்கு அயர்வும், கால்களுக்கு சோர்வும் உள்ளதென்றால்
அவரது அழைப்பிற்கு இணங்கி இரவும் பகலும் அவருக்கு பணிபுரிய இரதங்கள்
வந்திருக்கும் அல்லவா என்று நீ எண்ணுகின்றாயோ.

ஆ, அவர்கள் அவரை அறிந்திருந்தார்களானால், சீமோன் வீட்டிலே
அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரே ஒரு விருந்திற்கும்,
அதிகமாக எத்தனையோ விருந்துகள் கொடுத்திருப்பார்கள் அல்லவா?

"பறவைகளுக்குக் கூடும், நரிகளுக்குக் குழிகளும் உண்டு,
ஆனால் மனுஷகுமாரனுக்கோ, தலைசாய்க்க இடமில்லை" என்று
அவர் சொல்லக்கூடிய நிலைமை இருந்திருக்காது அல்லவா?

எருசலேமே, உன் அரண்களின் வாசல்கள்
அவருக்காக திறந்திருக்கும் அல்லவா?
அல்பாவும், ஓமெகாவும், தீர்க்கத்தரிசியும்,
ஆசாரியரும், இராஜாவுமான அவருக்கு திறந்திருக்கும் அல்லவா?

ஆ, அவர்கள் அவரை அறிந்திருந்தார்களானால், அன்றுமுதல்
பல நூற்றாண்டுகள் காலமாக அவரது அடிச்சுவடுகளை துணிவுடன்,
பின்தொடர்ந்த தெரிந்துகொள்ளப்பட்ட சிலரை தனிமையிலும், ஏழ்மையிலும்
இந்தப் பூமிக்குரிய மாபெரியவர்கள் விட்டிருந்திருப்பார்களா?
அவர்கள் அசட்டைபண்ணப்பட்டு இருந்திருப்பார்களா?

"அவருடைய பாத அங்கங்கள்" களைப்புடன் புழுதியில் நடக்கையில்
அவர்கள் துரத்தியடிக்கப்பட்டு இருந்திருப்பார்களா?
மரியாளைப்போல் அவரின் தலையில் விலையேறப்பெற்ற தைலத்தினை
ஊற்றிட ஏங்குகின்ற அனைவரும் நினைவுகூரவேண்டிய அவரது
வார்த்தைகள் அன்றுபோல் இன்றும் பொருந்துகின்றதாய் உள்ளதே:
"இந்தச் சிறியரில் ஒருவருக்கு என்ன செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள்" - என்பதேயாகும்.

ஆ, ஆம், ஒரு கலசம் தண்ணீர் கொடுக்கப்பட்டாலும் அதற்குப்
பலனுண்டு, ஏனெனில் அது கர்த்தராகிய கிறிஸ்துவின் நாமத்தில்,
கொடுக்கப்பட்டுள்ளது, ஆகையால் அவரது "சிறியவர்களுக்கு"
ஊழியம் புரிந்திட தாழ்மையுடன் நாடுவோமாக.
ஏனெனில், நாம் செய்வது அவருக்கே செய்வதாகும்.

– Poems of the Way, p. 129

**--3160--**

# நான் அவரை அங்குக் காண்கிறேன்

ஆழ்ந்த சிந்தனையோடு கடந்தகாலங்களைப் பின் நோக்குகிறேன்,
அங்கே இதோ என் ஆண்டவர்,
கபடற்ற தாழ்மையுள்ள - நசரேயனாகிய
தேவனுடைய ஒரேபேறான குமாரன்!

இப்போது உள்ளார்வத்தில் அவரைப் பின்தொடர்ந்தேன்.
யோர்தானின் நிழலான ஆற்றங்கரையோரமாக
பணிவாக அவர் செல்ல - நான்
அங்கே அவர் நின்றதைக் காண்கிறேன்!

தேவனால் ஆயத்தப்படுத்த அனுப்பப்பட்ட
யோவான்ஸ்நானன் அங்கே நிற்கிறார்.
அவர்களின் மத்தியில் அவரின் வார்த்தையைக்
கவனித்துக் கொண்டிருக்கிறவரைப் பற்றி பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்!

தண்ணீரில் என் ஆண்டவர் இறங்கிக் கூறுகிறார்:
"என்னை ஞானஸ்நானம் செய்,
என் அர்ப்பணிப்பின் நேரம் வந்ததால்
இதற்கு இப்பொழுது இடங்கொடு!"

உலகப் பிதா இதனைக் கண்ணோக்கி
தேவ ஆவி புறாவைப்போல இறங்கி
தம் ஒரே பேறான குமாரனை அறிவிக்கும்போது
அவரின் இதயம் அன்பினால் நிரம்பி வழிந்தது!

அந்த மகா பரிசுத்தர், பாவமற்றவர்
தமக்குரிய எல்லாம் ஆனந்தமாய் தந்து,
மனுக்குலத்தைக் காத்திடவே - அவரும்
சிலுவையில் தம் உயிரை ஊற்றினார்!

நானும் அவர் வழியே நடந்து
என் சிறிய பங்கையும் தராமல் இருப்பேனோ?
நான் கொடுக்கும் காணிக்கை சிறிதாயினும் - பிதாவின்
சித்தம் செய்ய எனக்கு ஆனந்தம் அளிக்குமல்லவா!

அதினால் பிரியமான தேவப்பிள்ளையே
சொல்லப்பட்டது என்னவெனில்: "ஏன் தாமதிக்கிறாய்?"
உன் பொருத்தனையின் அடையாளமாக - எழுந்து
இன்றே ஞானஸ்நானம் பெறுவாயாக!

பாதை கரடுமுரடாயினும் பயம் வேண்டாம்
ஏனெனில் அவருக்கு நீ சொந்தம்.
உன் நுகத்தில் உன்னோடுகூட வருகிறார் - அதினால்
தனியாய் நீ என்றும் நடப்பதில்லையே!

-Poems of the Way P.164

**-3161-**

# போதகரே, சத்தியமாவது என்ன?

பிலாத்துவின் முன்னிலையில் பொல்லாதவர்களாலும், துணிகரமானவர்களாலும் நிறுத்தப்பட்டதான குற்றமற்ற போதகரிடம் பிலாத்து - சத்தியமாவது என்ன? என்று கேள்வி கேட்டிட்டது போலவே ஞானிகளும் இதைக் குறித்து யோசித்திருக்கின்றனரே, மாமனிதர்களும் இக்கேள்வியையே கேட்டிருக்கின்றனரே.

அவர் மலையோரங்களிலும், புல்வெளிகளிலும்
வருடக்கணக்காக போதித்திருக்கின்றாரே;
ஒவ்வொரு நாளும் அதன்படியே வாழ்ந்தும் இருக்கின்றாரே.
உலகத்திற்கான பிதாவின் மாபெரும் திட்டத்தை அவர் கூறியிருக்கின்றாரே -
தாம் எவ்வாறு வழியும், சத்தியமுமாய் இருக்கின்றார் எனக் கூறியிருக்கின்றாரே.

சிலர் விசுவாசித்து, மகிழ்ச்சியடைந்து, தங்கள் ஆண்டவரைப் பின்தொடர்ந்தனரே,
மற்றவர்களோ பரிகசித்துப்போய்விட்டனரே. அவர்கள் பிரமாண்டமானவரைத்
தேடிக்கொண்டிருக்க, போதகர் எளிமையானவராய் இருந்திட்டாரே,
சத்தியமாவது என்ன என்று அவர்கள் இன்னும் கூக்குரல் இடுகின்றனரே.

சத்தியம் சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் ஆபரணம் போன்றதே.
அதன் ஒவ்வொரு சுடர்களிலும் பிரமாண்டமான நிறங்கள் காணப்படுகின்றதே.
மாபெரும் கப்பல்களுக்கு அதன் வழிதனைக் காட்டிடும் –தொலைவில்
சமுத்திரத்திலுள்ள பாறைகள் மீதான கோபுரத்தினின்று வீசிடும்
ஒளி போன்றதாய்ச் சத்தியம் உள்ளதே.

கடந்த நூற்றாண்டுகளில் எல்லாம் சத்தியமானது வெகுவாய் மறைக்கப்பட்டதே.
எனினும் அதற்காய் மனிதர்கள் பலர் மரித்தனரே.
சத்தியம் தொலைந்து போனதுபோன்று இருப்பினும், அது மீண்டும் உதித்திடுமே,
அதை நாடுகிறவனின் ஆத்துமாவிற்கு வழிகாட்டிடவே.

சத்தியமாவது என்ன?
நமது ஆண்டவரும் போதகருமானவர்: "உமது சத்தியத்தினாலே அவர்களைப்
பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்று ஜெபித்திட்டப்போதே,
கிடைத்ததே தெளிவாய்ப் பதில்.

சத்தியத்தின் கொடிதனை கிழித்தெறிய அநேகர் நாடிட்டாலும்,
நாம் நடக்கையில் சத்தியக்கொடிதனை உயர்த்திப் பிடித்திடுவோமே.
முற்காலத்துப் பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்கு
நாமும் நிற்போமானால், நம் பிதா, நமக்குக் கிரீடம் அருளிடுவாரே.

- Alice M.Ripper, Poems of the Way, pg:128

**--3162--**

## பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருக்கே

பரிசுத்தரும் குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமான நம் கர்த்தருக்கே
பாடுகள்வழியேதான் பரிபூரணம் என்று நியமித்திருந்தால்,
அதைவிட சற்றே குறைவான,
செங்குத்தான வழியினில் செல்லும் பாதையை நீர்
தெரிந்திருக்க வேண்டாமோ?
உன் பரலோகத் தந்தையின் புன்னகையை வென்றெடுக்க,
பரலோக இலக்கினை அடைந்திடவே, வலிகளும் துன்பமும்இடைபடுதலே
உனக்கு வாயிற்படியாம், என் ஆத்துமாவே,
உன் இருதயத்திற்குள்ளே மெல்ல கூறிடுவாய்,
என்ராஜாவை நான் எவ்வளவு அன்பு கூர்கின்றேன்,
அவருக்காக நான் என்ன தாங்கிடுவேன்? வேறொரு சந்தர்ப்பம் கிடைத்திடுமோ?
வறண்ட நாட்கள் கடந்துபோகுமே,
உன்னைக் காயப்படுத்தும் கரங்களுக்கருகில் உன்னை இணைத்திடுமே,
உன்னை அன்பு செய்திடும் அவரது மார்பின் அருகினில் இன்னும் கிட்டி சாய்ந்திடுவாய்,
அவரன்பு குமாரனை அதிகம் அன்பு செய்திருந்தாலும்,
தேவனே என்னை அழித்திட வேண்டாம்,
என்னிலுள்ள கசடுகளை நீர் எரித்திடுவீர், வேறெதுவும் வேண்டாம்,
பரிசுத்தமான தங்கம் மட்டுமே நிலைநிற்க வேண்டும்,
தீ என்னை நிலையாகப் பற்றிக்கொள்ளாதவாறு
வெப்ப மிகுந்த தீயின் நடுவே எனக்கு உதவி புரிந்திடுவீர்,
மாபெரும் சிற்பாசாரியே, செதுக்கும் எனையே, மகிமை நிறைந்த
பேரொளியை நான் என்னுள்ளிருந்தே பரிபூரணமாகவே பிரதிபலித்திட வேண்டுமன்றோ?
தெய்வீக அன்பே, இராஜரீகக் கிரீடமதில் எனை பதித்து, நானும் ஒளி வீசிடவே,
எனக்கும் ஓர் இடம்தனை ஒதுக்கித்தாரும், தேவ தேவனே.

# பொதுவான கேள்விகள்

**(Q8:1) விளம்பரக்காரியங்கள் - மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் நடக்கை.**

**கேள்வி (1910)-1- சிறு மாநாடுகள் மற்றும் பயண ஊழியர்களின் கூட்டங்கள் (Pilgrim Meetings) குறித்து விளம்பரம் அளிக்கும் விஷயத்தில், மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் கடமைகளுக்கிடையிலான தொடர்பு என்ன?**

பதில் - விளம்பரக்காரியங்களில் யார் மேற்பார்வையிட வேண்டும் - எங்கிருந்து அறிவுரைகள் எதிர்ப்பார்க்கப்பட வேண்டும்? என்னுடைய கருத்தென்னவெனில்: விளம்பரக்காரியங்களுக்கான அறிவுரைகளானது தலைமை அலுவலகத்திலிருந்து வருவதே தகுதியானதாயிருக்கும்; காரணம் அங்கே நாங்கள் அதிகளவிலான அனுபவங்கள் பெற்றவர்களாய் இருக்கின்றோம்; காரணம் மற்ற ஜனங்களைப்பார்க்கிலும் நாங்கள் ஞானவான்கள் என்பதினால் இல்லாமல், அங்கே இப்பணியானது ஒப்படைக்கப்பெற்றவர்கள் அசாதாரணமான திறமிக்க மற்றும் அதிகளவிலான அனுபவமிக்க நபர்களாகக் கருதப்படுவதினாலேயே ஆகும்; காரணம் நாங்கள் உலகத்தின் பல்வேறு பகுதிகளில் அநேகம் விளம்பரத் திட்டங்களைத் திட்டமிட்டு, அதற்கு ஏற்பாடுகள் செய்வதினால், மற்றவர்களுக்கு இல்லாதளவுக்குக் காரியங்களைப் பகுத்தறிந்திடுவதற்கான வாய்ப்பு எங்களுடையதாய் இருப்பதினாலும் ஆகும். ஆகையால் இது விஷயமாக விசேஷித்த அறிவுரைகளானது புரூக்கிலினிலிருந்து (Brooklyn) எதிர்ப்பார்க்கப்படுவது நலமாயிருக்குமென்பது என்னுடைய கருத்தாய் இருக்கின்றது. பொறுப்பேற்பது யார் என்பது தொடர்புடைய விஷயத்தில்: மூப்பர் விசேஷமாய் ஆவிக்குரிய காரியங்களுக்காகவும், சபையினுடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களைக் கவனித்திடுவதற்காகவும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்; விளம்பரக்காரியம்கூடச் சபையாரின் ஆவிக்குரிய நலனுக்கடுத்த காரியங்களில் ஒரு பாகமாகத்தான் காணப்படுகின்றது; இக்காரியமானது சபையாருடைய ஆவிக்குரிய நலனுக்கடுத்தக் காரியத்துடன் மிகவும் தொடர்புடையதாய் இருப்பதினால், எவ்வகையான உங்களது சிறந்த ஆற்றல்களையும் பிரயோகிப்பதற்குப் பாத்திரமானதாகும். இக்காரியமானது மிகவும் ஆற்றல்மிக்க கரங்களிடத்தில் மாத்திரமே கொடுக்கப்படக்கூடாது; உண்மையில் அனைவரும் ஒன்றாய்ச் சேர்ந்து இணைந்திடுவதே சரியான ஆவியாய் இருக்கும் மற்றும் இதில் திறமிக்கவர், ஒருவேளை மூப்பர்கள் மத்தியில் இல்லாமல், உதவிக்காரர்கள் மத்தியில் காணப்படுவாரானால், இப்பணித்தொடர்புடைய விஷயத்தில் அவர் மிகவும் முக்கியமாய்ப் பங்குவகிக்கத்தக்கதாக அனுமதிப்பதில் அனைவருமே மகிழ்ச்சிகொள்ள வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில், சத்தியத்திற்கடுத்த ஒவ்வொரு ஊழியங்களிலும் நாம் அனைத்துத் தனிமனித சிறப்புகளையும் மூழ்கப்பண்ணிட வேண்டும் மற்றும் நம்முடைய கணிப்பானது நம்மை வழிநடத்துகிறதற்கேற்ப, வழிகாட்டுவதற்கேற்ப சுருக்கமான மற்றும் மிகவும் திருப்திகரமான விதத்தில் சிறந்த வழிமுறைகளைக் கொண்டிருப்பதற்கு முயற்சிப்போமாக மற்றும் அதிகமான ஞானத்திற்காக எதிர்நோக்கியிருப்போமாக.

**(Q30:1) பின்வாங்கிப் போனவர்களை - எப்படியாக வரவேற்பது?**

கேள்வி (1909)-1- சபையை விட்டுவிட்டு, நம்மைப் பாபிலோனைக்காட்டிலும் மோசமானவர்கள் என்று அழைக்கின்றவர்களை நாம் எப்படி வரவேற்பது? இப்படியானவர்கள் நம்முடைய கூட்டங்களில் கடந்துவரும்போது, இவர்களை நாம் மனமார வரவேற்றிட வேண்டுமா?

பதில் - இல்லை என்று நான் எண்ணுகின்றேன்; ஏன் நீங்கள் அப்படிச் செய்திட வேண்டும்? என் அருமை மீட்பர் போன்று விசேஷமாய்க் காணப்படுபவர்களிடம், என் மீட்பருடைய குணலட்சணத்திற்கு ஒத்திருக்கும் குணலட்சணங்களை உடையவர்களிடம் நான் விசேஷித்த அன்பார்ந்த விதத்தில் காணப்படுவேன். சபையை விட்டுப் பிரிந்துசென்றவர்கள், வித்தியாசத்தை உணரத்தக்கதாக நான் அவர்களிடம் மிகவும் அன்பார்ந்த விதத்தில் காணப்படமாட்டேன்; இல்லாவிடில், சபையார் மத்தியிலுள்ள மற்றவர்களைக்காட்டிலும் இவர்கள் தாங்கள் மேலானவர்கள்போன்று எண்ணிவிட நேரிடும்; ஏனெனில் இவர்கள் ஏதோ வகையில்

--3164--

ஒழுங்கில்லாதவர்களாகியுள்ளனர். இப்படிப்பட்டவர்கள் "பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளுக்கு ஏற்பவே நடத்தப்படவேண்டும். பிரிவினை உண்டாக்குகிறவர்களைக் கவனித்துக்கொண்டு, அப்படியானவர்களை உங்களது ஆத்துமக் கூட்டாளிகளாக்காதிருங்கள், மூப்பர்களாகத் தேர்ந்தெடுக்காதிருங்கள்; ஏனெனில் அது தவறாகும். சண்டையிடும் தன்மை உடையவர்கள் எவரையும் ஊக்கமூட்டாதீர்கள். அப்படியானவனைத் தள்ளிவைத்துவிடுங்கள் மற்றும் அவன் அவனோடே சண்டையிட்டுக்கொள்ளட்டும். இவர்களது ஆவியில் எதையேனும், நம்முடைய சொந்த இருதயங்களில் நாம் விருத்திச்செய்யாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருப்போமாக. நாம் சாந்தமாய், ஆனால் உறுதியாய் இருப்போமாக. இப்படியானவர் என்னண்டை வருகையில், நான் அவரோடு கைக்குலுக்கிக்கொள்வேன். உன்னோடு கைக்குலுக்கிக் கொள்வதில்லை என்று நான் சொல்லமாட்டேன். ஆனாலும் அந்நபரை என்னுடைய பிராண கூட்டாளியாக்கிக்கொள்வதில்லை. ஆதித்திருச்சபையில் அப்போஸ்தலர்கள் குறித்து, "அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்களென்று" கூறப்பட்டதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். நமது கர்த்தர் இயேசுவை நம்முடைய பிராண துணைவராக்கிக்கொள்ள வேண்டும். நாம் இயேசுவோடுகூட இருக்கவேண்டும் மற்றும் அவருடைய குணலட்சணத்திற்கு ஒத்த குணலட்சணத்தைப் பெருமளவில் கொண்டிருப்பவர்கள், அவரைப்போன்று பெருமளவில் காணப்படுவார்கள். இவர்களே கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிருப்பவர்களாய் இருப்பார்கள். தம்முடைய ஆவியை அதிகளவில் பெற்றிருப்பவர்கள் மத்தியிலிருந்து பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் - ஆகியோர் தம்மோடு நெருக்கமாய்க் காணப்பட வேண்டும் என்று இயேசு தேர்ந்தெடுத்தார் மற்றும் அவர்களோடு அதிக நேரம் செலவிட்டார். இந்த மூவருந்தான் அவரோடுகூட மறுரூப மலையில் காணப்பட்டார்கள் மற்றும் கெத்செமனே தோட்டத்திலும் அவருக்கு அருகாமையில் காணப்பட்டனர். கர்த்தருடைய ஆவியைப் பெற்றிருப்பவர்களுடன் கருத்துப் பரிமாற்றம் வைத்துக்கொள்ளுங்கள்.

**(Q148:1) அர்ப்பணம் - பிற்பாடு வெளியே இருப்பவர்களிடத்தில் ஐக்கியமாயிருத்தல்.**

கேள்வி (1909)-1- வாக்குறுதி (vow), உடன்படிக்கை முதலானவைகளைக் காரணம்காட்டிச் சபையாருடன் கூடுகைகளில் கலந்துகொள்ளாமல் இருப்பவர்களுடன் ஐக்கியத்தினைத் தொடர்ந்து வைத்துக்கொண்டும் மற்றும் சத்தியத்தினை எதிர்ப்பவர்களிடத்தில் தங்களுக்கு அனுதாபம் உள்ளது என்று ஒப்புக்கொண்டும் மற்றும் சத்தியத்தினுடைய உபதேச ரீதியிலான அனைத்து விஷயங்களிலும் இசைவாய் இருப்பது போன்றும் தோற்றமளிப்பவர்களிடத்தில் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

பதில் - உரோமர் 16:17-ஆம் வசனத்தில்: "சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் சுருக்கமாய்க் கூறியுள்ளதுபோன்றே, அத்தகையவர்களிடத்தில் நாம் நடந்துகொள்ள வேண்டும் என்று நான் எண்ணுவேன். அர்த்தமென்னவெனில் . . . அவர்கள் வேறே ஆவியினை வெளிப்படுத்துகையில், நாம் எப்போதும் கொண்டிருக்கும் அதே இருதயப்பூர்வமான ஐக்கியத்துடன் அவர்களை நடத்திடக்கூடாது என்பதாகும். அவர்கள்பால் கோபத்தின் ஆவியினை வெளிப்படுத்துவதோ அல்லது அவர்களுக்கு ஏதேனும் தீங்கு செய்வதோ அல்லது அவர்கள் யாரைக்குறித்தேனும் எவ்விதமான தீமை பேசுவதோ சரியாய் இராது; அவர்களுடைய நலனுக்காகவும், நம்முடைய நலனுக்காகவும் மற்றும் மற்றவர்களுடைய நலனுக்காகவும் வேண்டி, அவர்களது நடக்கைகளை நாம் ஆதரிக்காமல் இருப்பது என்பது நம் சார்பிலான சரியான நடக்கையாய் இருக்கும். அவர்களை விட்டு விலகிடுங்கள் மற்றும் சத்தியத்தினுடைய ஆவியிலும், ஐக்கியத்திலும் காணப்படுபவர்களின் தோழமையையே விரும்பிடுங்கள்.

இக்கேள்வியில் "வாக்குறுதி" எனும் வார்த்தைக் குறிப்பிடப்பட்டிருக்கின்றபடியால், ஒருவன் அல்லது ஒருவள் வாக்குறுதியினை எடுத்துக்கொள்ளாத காரணத்தினால், ஐக்கியத்தில் யாரையாவது பிரித்துப்பார்ப்பது சரியானதாகவும், முறையானதாகவும் இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயமாய் இருக்கின்றது என்று நான் சொல்லுகின்றேன்; வாக்குறுதி என்பது ஒரு பிரமாணமல்ல; அது ஒரு சிலாக்கியமாகும். ஒருவேளை நாம் வாக்குறுதியினை எடுத்துக்கொண்டு, அதனால் ஆசீர்வாதம் அடைவோமானால், தேவனுக்கு நன்றி

சொல்லுவோமாக. ஒருவேளை அவர்கள் இதைச் செய்ய தவறி, ஆசீர்வாதத்தினை இழந்துபோவார்களானால், அப்பொழுது அவர்களே அவ்விழப்பினால் சிரமப்படுவார்கள். ஆனால் ஒருவேளை அந்நபர் சபையில் மூப்பராகவோ அல்லது போதகராகவோ இருப்பாரானால், அது கொஞ்சம் வித்தியாசமான காரியமாகும். எந்த ஒரு சபையிலும் மூப்பராக இருப்பவர் அல்லது வழிநடத்துபவராகப் பார்க்கப்படும் ஒருவர் வாக்குறுதியினை எடுத்துக்கொள்ள எதிர்ப்பார்க்கப்படுகின்றார் அல்லது தான் ஏன் அதை எடுத்துக்கொள்ளவில்லை என்பதைக் கூறிடுவதற்கு நியாயமாய் எதிர்ப்பார்க்கப்படுவார்; இல்லையேல் இது வாக்குறுதிக்கு முரணான ஏதோ ஒன்று அந்த வழிநடத்தும் சகோதரனின் ஜீவியத்திலோ அல்லது நடத்தையிலோ இருக்கின்றது என்று அச்சபையார் எண்ணிடுவதற்குக் காரணமாகுகின்றது. என்னைப் பொறுத்தமட்டில் வாக்குறுதிக்கு முரண்பாடான எதையாகிலும் தனது மனதிலோ அல்லது நடத்தையிலோ கொண்டிருக்கும் எந்த ஒரு மூப்பரும் அல்லது சகோதரனும் சபையாரின் பிரதிநிதியாய்க் காணப்படுவதற்குப் பொருத்தமானவரல்ல. பகுத்தறியும் மனம் கொண்ட எந்த ஒரு சகோதரனும், வாக்குறுதிக்கு எதிராக என்ன மறுப்புக் கூறிட முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இது ஒரு கட்டாயமான கடமையல்ல என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கின்றோம்; ஆனாலும் மூப்பர்களாய் இருப்பவர்களிடத்தில் நாம் மிக அதிகமாய் எதிர்ப்பார்க்கின்றோம் மற்றும் நம் எதிர்ப்பார்ப்பில் தவறில்லை என்பது, அவர்களிடத்தில் பெருமளவில் முன்மாதிரியான நடக்கை இருப்பதைக் காண்கையில் நிரூபணமுமாகின்றது. ஒரு சபையின் பிரதிநிதியாகவோ அல்லது வழிநடத்துபவராகவோ காணப்படுபவர், அப்போஸ்தலன் கூறியுள்ள பிரகாரம் சராசரிக்கு மேலாகக் காணப்பட வேண்டும் மற்றும் சராசரி நிலைக்கு மேலாகக் காணப்படும் ஒருவர் வாக்குறுதிக்கு எதிராக என்ன மறுப்பினைக் கண்டுபிடிக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை யாரேனும் எதையாகிலும் கண்டுபிடித்தால், அவர் அதை எனக்குக் காண்பித்துத்தர நான் விரும்புவேன்.

### (Q162:1) திருத்தங்கள் - எப்படிச் செய்யப்பட வேண்டும்?

கேள்வி (1908)-1- பெரோயா வகுப்புகளிலோ அல்லது வேறு ஏதேனும் வேதாகம வகுப்புகளிலோ, வழிநடத்துபவரிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தோ வேதவாக்கியங்களுக்கு முரணானது என்று அறியப்பட்டிருக்கிற குழப்பமான கருத்துகள் வருகையில் மற்றும் அவைகள் கிறிஸ்துவுக்குள்ளான குழந்தைகளினால் சத்தியமென ஏற்றுக்கொள்ளப்படும்போது - சத்தியத்தில் உறுதியடைந்திருப்பவர்கள், ஆனால் நியாயந்தீர்க்கவோ அல்லது விமர்சிக்கவோ விருப்பமில்லாதவர்களாய் இருப்பவர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவர்கள் அமைதியுடன் காணப்படவேண்டுமா அல்லது சத்தியத்தினை வெளிக்கொண்டுவரத்தக்கதாக ஏதேனும் சில கேள்விகள் கேட்க வேண்டுமா? ஒருவேளை சத்தியமானது, யாரேனும் ஐக்கியத்தினின்று ஒதுங்கிவிடுவதற்குக் காரணமாகும் பட்சத்தில், அர்ப்பணிக்கப்பட்டவர்கள் எப்படி அணுகிட வேண்டும்?

பதில் - அன்பான நண்பர்களே, என்னுடைய பதில் என்னவெனில் . . . சில முக்கியத்துவமற்றக் காரியங்கள் இருக்கின்றன - ஒரு விதத்தில் பார்க்கும்போது, எந்தச் சத்தியமும் முக்கியத்துவமற்றதல்ல - ஆனாலும் சில சத்தியங்களானது, வேறு சில சத்தியங்களின் அளவுக்கு முக்கியமானவைகளல்ல மற்றும் அவைகள் ஒருவேளை கொஞ்சம் மீறப்பட்டாலும், கண்டுகொள்ளாமல் விடப்படலாம். சபையார் மத்தியில் பேசிக்கொண்டிருக்கும் சகோதரனோ அல்லது சகோதரியோ அல்லது பேசுவது யாராயினும், சத்தியம் தொடர்பான அவனது அல்லது அவளது கண்ணோட்டத்தினை முன்வைப்பவர்களாய் இருப்பார்கள் மற்றும் அது அவன் அல்லது அவள் கண்ணோட்டமெனச் சபையாரால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் மற்றும் பேசும் நபரும், தான் தேவ ஏவுதலால் பேசுவதாகவோ அல்லது தவறிழைக்காத தன்மையுடையவராக இருப்பதாகவோ உரிமைப்பாராட்டுவதில்லை; மாறாக அவன் அக்காரியம் தொடர்பான தனது கண்ணோட்டத்தினைத் தெரிவிப்பதாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்; மேலும் ஒவ்வொருவனும் அக்காரியம் தொடர்பான அவனது அல்லது அவளது கண்ணோட்டத்தினைத் தெரிவித்திடலாம் என்று சபையாரால் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஒருவேளை இங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது போன்றதொரு சந்தர்ப்பத்தில் நான் காணப்படுவேனாகில், அக்காரியத்தினை சரியான விதத்தில் கேள்வியாக வைக்கத்தக்கதான நிலைமையில் சபையார் காணப்படுவார்கள் என்று நான் நம்புவேன் மற்றும் நான் எதிர்த்துப் போராடும் விதத்தில், "இல்லை, நீங்கள் கூறும் கருத்திற்கு எனக்கு உடன்பாடில்லை" என்று

கூறிடுவதற்கு முயலமாட்டேன். காரியங்களைக் கவனத்திற்குக் கொண்டுவருவதற்குப் பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. நீங்கள்: "சகோதரனே, அக்காரியத்தினை இந்த ஒரு கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளலாமல்லவா? கருத்தில் எடுத்துக்கொள்வதற்கு இது முரண்பாடற்றக் கண்ணோட்டமாய் இருக்கின்றதல்லவா? சரியாய் இருக்குமென நான் எண்ணுகின்ற கண்ணோட்டத்தினை இதோ விவரிக்கின்றேன்" என்று கூறிடலாம். பின்னர் உங்கள் கண்ணோட்டத்தினைத் தெரிவியுங்கள்; அவர் தனது கண்ணோட்டத்தினைக் கூறிவிட்டார் மற்றும் உங்களது கண்ணோட்டமானது சுருக்கமாயும், அன்பான விதத்திலும் கொடுக்கப்பட்டிருந்தால், உங்கள் கண்ணோட்டத்தினை நீங்கள் கூறிடுவதற்கு அவர் மறுப்புத்தெரிவிக்க முடியாது. நீங்கள் உங்கள் கடமையினைச் செய்து முடித்துவிட்டீர்கள் மற்றும் அக்காரியத்தில் நீங்கள் சண்டையிட அவசியமில்லை மற்றும் கருத்தில் சிறு வேறுபாடு இருப்பதன் நிமித்தம் ஒருவர் ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென முடிவெடுப்பதற்கும் அவசியமில்லை. அவர் காரியம் குறித்த தன்னுடைய புரிந்துகொள்ளுதலைத் தெரிவித்திடுவதற்குரிய தனது வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டு அதைத் தெரிவித்துள்ளார்; சத்தியமானது, அதிலும் விசேஷமாக ஒருவேளை அது ஏதேனும் முக்கியமான காரியமாய் இருக்கும் பட்சத்தில், சத்தியமானது எப்போதும் தெரிவிக்கப்படுகின்றதா என்று பார்த்துக்கொள்ளுங்கள்; ஆனால் ஒருவேளை அது அதிகம் வித்தியாசமற்றவைகளாக இருக்குமானால், அதைக் கவனித்திட வேண்டாம். இப்பொழுது எனக்கு ஒரு சகோதரன் ஞாபகத்திற்கு வருகின்றார்; அவர் மிகவும் நல்ல இருதயம் கொண்ட சகோதரன் ஆவார் என்பதில் எனக்கு நிச்சயமே; ஆனால் ஒரு கருத்து முன்வைக்கப்பட்டால், அக்கருத்தோ அல்லது மற்றக் கருத்தோ, இரண்டில் ஒன்று உறுதியற்றுப்போகுமளவும் போராடிட வேண்டும் எனும் தவறான எண்ணம் கொண்டவராய் இருந்தார். அன்புக்குரிய நண்பர்களே இது தவறான எண்ணமாகும். நண்பர்கள் அனைவருமே தங்கள் சொந்த மனதில் பகுத்தறிந்திட வேண்டும் மற்றும் நீங்களும் சரி, நானும் சரி, நம்முடைய கண்ணோட்டத்தினைக் குறித்துத் தெரிவித்ததில் மிக்க மனநிறைவு கொள்ள வேண்டும் மற்றும் மற்றவர்கள் எதை விரும்புகின்றார்களோ, அக்கண்ணோட்டத்தினை அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும். இதைத்தானே நாம் நடைமுறையில் செய்துகொண்டிருக்கின்றோம்? வாட்ச் டவர் வெளியீட்டில் நீங்கள் சில கண்ணோட்டத்தினைப் பெற்றுக்கொள்கின்றீர்கள்; நீங்கள் அதை நம்பவேண்டும் என்ற கட்டாயம் உங்களுக்கில்லை; மேலும் நீங்கள் அதை நம்பவில்லை என்றால், அதற்காக நான் உங்களிடத்தில் கோபம் கொள்வதில்லை. அது உங்கள் சார்பிலான காரியமாய் இருக்கின்றது. அடுத்த வாட்ச் டவர் வெளியீட்டில் நான் தொடர்ந்து, மறுபடியுமாக எண்ணுவதை நான் தெரிவித்திடுவேன் மற்றும் நீங்கள் எனக்குக் கடிதம் எழுதிடுவதற்கும், நீங்கள் அதை நம்பவில்லை என்று கடிதத்தில் குறிப்பிடுவதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு மற்றும் நானும், "சரி நீங்கள் நம்பவேண்டிய கட்டாயம் உங்களுக்கு இல்லை" என்று சொல்லிடுவேன்.

**(Q175:1) உடன்படிக்கைகள் - கலந்தாய்விற்குப் பின் கருத்துப்பிரிவினை.**

கேள்வி (1910)-1- வாட்ச் டவர் வெளியீட்டிலிருந்து நாங்கள் பெற்றுக்கொண்ட கருத்தின் அடிப்படையில் உடன்படிக்கைகளைக்குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டபோது, மத்தியஸ்தர் குறித்துப் பார்க்கையில், குறிப்பிட்ட சில விஷயங்களானது வகுப்பில் கருத்துப்பிரிவினையைக் கொண்டுவருவதாகத் இருக்கின்றது. எதன் காரணமாகப் கருத்துப்பிரிவினைகள் வந்ததோ அதைத் தொடர்வதா அல்லது அந்த ஆராய்ச்சியினை விட்டுவிட்டு, வேறு எதையாகிலும் ஆராய்வதா, இதில் எது ஞானமானதாய் இருக்குமென நீங்கள் எண்ணுகின்றீர்கள்?

பதில் - கலந்தாய்விற்கு உடன்படிக்கைகள் எனும் தலைப்பு மிகவும் பொருத்தமானது என்று நான் எண்ணுகின்றேன் மற்றும் சபையில் வழக்கமாய்க் கலந்துகொள்ளும் சகோதரன் ஒருவர் கலந்தாய்வின்போது காணப்பட்டு, சில வேறுபட்ட கண்ணோட்டங்களைக் கொண்டிருப்பாரெனில், அவர் தான் சொல்ல விரும்புபவற்றைத் தொடர்ச்சியாய்த் தெரிவித்துக்கொண்டிருப்பதற்குரிய கண்ணோட்டத்தில் இல்லாமல் மற்றும் ஒவ்வொரு கலந்தாய்விலும் வகுப்பைத் தொடர்ச்சியாய்க் குறுக்கிடுவதற்குரிய கண்ணோட்டத்தில் இல்லாமல், மாறாக அதைத் தெரிவித்திடுவதற்கு வாய்ப்பளிக்கப்படுவது மிகவும் சரியே என்று நான் எண்ணுகின்றேன். ஒருவேளை அவர் எடுத்துக் கூறிடுவதற்கு ஏதேனும் இருக்கிறதென்றால் மற்றும் அதைச் சுவாரசியமான விதத்தில் அவரால் எடுத்துக்கூறிட முடியுமானால், கூறிடுவதற்கு அவரை விட்டுவிடுங்கள், ஏனெனில் அவருக்கு அந்த உரிமை

--3167--

இருக்கின்றது; சபையாரில் ஓர் அங்கத்தினனாக, அவர் பேசிடுவதற்கான உரிமையினை உடையவராவார்; ஆனால் ஒருவேளை சபையாரில் பெரும்பான்மையானவர்கள், அவர் முன்வைத்திட்டவைகளுக்கு ஆதரவாய் இல்லையெனில் மற்றும் அவர் அதைத் தொடர்ந்து முன்வைப்பதில் அவர்களுக்கு விருப்பமில்லையெனில், அச்சகோதரனிடம், 'சகோதரனே, நாங்கள் உங்களுக்கு ஒரு நல்வாய்ப்பினைக் கொடுத்தோம் மற்றும் நீங்கள் சொல்ல விரும்பியவற்றைச் சபையாரும் கேட்டார்கள் மற்றும் அதைத் தொடர்ந்து சிந்தித்திடுவதற்குச் சபையார் விரும்பவில்லை. ஆகையால் தயவாய் இனிமேல் நீங்கள் அத்தலைப்பின்பேரிலான எங்களது ஆராய்ச்சியினைக் குறுக்கிட வேண்டாம்" என்று கூறி, அச்சகோதரன் தன் வாதத்தினை நிறுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன். மேலும் சபையாருடைய விருப்பத்திற்கு இசைவாக, அத்தலைப்புப் பற்றின கலந்தாய்வு தொடரப்படலாம். ஒருவேளை சபையார் யாவரும், அத்தலைப்பின் பேரிலான கலந்தாய்வை நிறுத்திட விரும்புவார்களானால், ஒவ்வொரு விஷயத்திலும் சபையாரிடமே தீர்மானிப்பதற்கான உரிமை காணப்படுகின்றது என்ற புரிந்துகொள்ளுதலின் காரணமாக, சபையாருடைய அறிவுறுத்தலின்படி செய்வதைத் தவிர வேறு எதையும் நான் அறியேன்.

**(Q226:3) பிரிவினைகள் - ஒழுங்கில்லாதவர்கள் மற்றும் குழம்பியிருப்பவர்கள்.**

கேள்வி (1910)-3- உரோமர் 16:17-ஆம் வசனத்தில் பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இத்தகையவர்களுக்கும் மற்றும் வெறுமனே குழம்பிக்காணப்படுகிறவர்களுக்கும் அல்லது சத்தியத்தினுடைய ஏதோ சில மேலான கருத்தினை உடனடியாகப் பார்க்க முடியாதவர்களாகக் காணப்படுகிறவர்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அறிந்திட எக்காரியங்கள் நமக்கு உதவிடும்? தங்களுடைய கருத்துவேறுபாட்டைக் குறித்துத் தெரிவிக்கும் விஷயத்தில் வழக்கத்திற்கு மாறாக ஆவல் உள்ளவர்களாக ஒருவேளை இந்த இரண்டாம் வகுப்பார் காணப்படுவார்களானால், அவர்களை நாம் எப்படிக் கையாள வேண்டும்?

பதில் - அது ஒரு பகுத்துணரும் காரியம் என்றும், கர்த்தருடைய வழிநடத்துதலை வேண்டிக்கொண்டு நீங்கள் உங்கள் சொந்த பகுத்துணர்தலைப் பயன்படுத்திட வேண்டும் என்றும், சகோதரர்கள் யாவரோடும் ஞானமாய் நடந்துக்கொள்ளுங்கள் மற்றும் எப்போதும் இரக்கத்துடனும், அன்புடனும் நடந்துகொள்ளுங்கள் என்றும் நான் சொல்லுவேன்.

பிரிவினைகளை உண்டுபண்ணுகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி அப்போஸ்தலன் கூறினதற்கான அர்த்தமானது . . . யாரேனும் நம்மிலிருந்து வேறுபட்டுப் பேசுகிறார்கள் என்றால், நாம் அவரோடு பிரச்சனைப்பண்ணி, அவரை வெளியேற்றக்கூடாது என்று நான் புரிந்துகொள்கின்றேன். அவர்கள் தங்கள் கருத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டு அதை முன்வைத்த பிற்பாடும், போராடிக்கொண்டிருக்கும் மனப்பான்மையில் காணப்பட்டு, தொடர்ந்து மோதிக்கொண்டும், பிரிவினையை உண்டாக்கத்தக்கதாகச் செயல்பட்டுக்கொண்டும் காணப்படுவார்களானால், அவர்களை விட்டு விலகிட வேண்டும் என்ற அர்த்தத்தில் அப்போஸ்தலன் கூறியுள்ளார். அவர் விட்டுவிலக வேண்டுமென்று சொல்கையில், அவர்களைக் காட்டு விலங்குகளைப்போன்றோ, எதிர்ப்பவர்களைப்போன்றோ கருதி விட்டுவிலக வேண்டும் என்று நான் புரிந்துகொள்ளவில்லை; மாறாக இசைவான நிலையில் காணப்படுபவர்களோடு நாம் முழுமையாயும், சுதந்தரமாயும் நம் உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புவதுபோன்று நாம் யாரிடத்தில் வெளிப்படுத்திட விரும்பிடாமல் இருப்போமோ, அத்தகைய நபர்களென அவர்களைக்கருத வேண்டியதைக் குறிப்பதாகப் புரிந்துகொள்கின்றேன். உதாரணத்திற்கு, ஏதோ ஒரு வேதவாக்கியப் பகுதியின்மீது, ஏதோ சில வேறுபட்ட கருத்தினை ஒரு சகோதரன் கொண்டிருப்பதற்காக, நாம் அவரை விட்டு விலகிடுவதற்கும், அவரைச் சகோதரன் என்று மறுத்திடுவதற்கும் நாம் அனுமதிக்கப்படவில்லை. கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினனாகக் கருதப்பட்டிருக்கும் ஒருவரை ஐக்கியத்தினின்று ஒதுக்கிவைத்திடுவதற்கு ஒரு செயல்முறை, ஒரே ஒரு வழிமுறை காணப்படுகின்றது; முதலாவது சம்பந்தப்பட்டவரிடத்திற்குத் தனிமையில் செல்ல வேண்டும். ஒருவேளை காரியத்தினைக்குறித்த சரியான புரிந்துகொள்ளுதலுக்குள்ளாக வரமுடியவில்லையெனில், உங்களோடுகூட வேறு இரண்டு அல்லது மூன்று பேரை அழைத்துச் செல்லுங்கள். ஒருவேளை இன்னமும் ஒருமனப்பாட்டிற்குள் வரமுடியவில்லையெனில்

--3168--

விஷயமானது முறையான பிரதிநிதிகள் வாயிலாகச் சபையினிடத்திற்குத் தெரிவிக்கப்படலாம். இரண்டு அல்லது மூன்று பேரை அழைத்துச் செல்லும் விஷயத்தில், நீங்கள் சபையினுடைய இரண்டு அல்லது மூன்று மூப்பர்களை அழைத்துச் செல்லலாம்; ஏனெனில் அழைத்துச் செல்லப்படுவதற்கு அவர்கள் மிகப் பொருத்தமான நபர்களாய் இருப்பார்கள். ஒருவேளை அச்சகோதரன் இவர்களுக்குச் செவிக்கொடுக்க மறுப்பாரானால், பின்னர் அது சபையாருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படலாம்; மற்றும் இந்த ஒரு வழியினால் மாத்திரமே மற்றும் ஒன்றுகூடிவரும் தேவனுடைய ஜனங்கள் அடங்கின முழுச்சபையாரின் வாக்குரிமையினால், அதாவது இவ்விஷயத்தில் அவர்களது வாக்கின் (vote/voice) மூலமாக மாத்திரமே, ஒருவர் சகோதரனென ஐக்கியத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட முடியும். சகோதரர்களென நீங்கள் அடையாளம் கண்டுகொள்பவர்களின் மத்தியில், மற்றவர்களைக்காட்டிலும் சிலரிடத்தில் நீங்கள் மிகவும் நெருக்கமான ஐக்கியம் கொண்டிருப்பீர்கள் மற்றும் இவர்களுக்கு நீங்கள் விசேஷித்த கவனம் செலுத்துவீர்கள்; இதற்குக் காரணம் அவர்களது கல்வியோ அல்லது சமுதாய அந்தஸ்தோ அல்லது ஐசுவரியமோ இல்லாமல், மாறாக கர்த்தரிடத்திலான அவர்களது உறவேயாகும்; மற்றும் பிரிவினையை உண்டுபண்ணுகிற ஒருவரிடத்தில், உங்களது ஐக்கியத்தினை அதிகமாய்க் கொடாதிருங்கள்; மேலும் ஒருவேளை அவர் முழுமையான ஐக்கியத்தில் காணப்பட்டும், பிரிவினைகளை உண்டுபண்ணாமலும் இருந்திருந்தால், நீங்கள் அவரிடத்தில் எப்படி நடந்திருந்திருப்பீர்களோ அப்படி நடந்துகொள்வதற்குப் பதிலாக, இப்பொழுது கொஞ்சம் அதிகமாகவே முகம் கொடுத்துப் பேசாதீர்கள். அவர் "முரண் கோட்பாடுடையவர்" (heretics) என்று அவருக்குக் கெட்டப் பெயர் உண்டாக்கிட வேண்டுமென அப்போஸ்தலன் கூறிடவில்லை. அந்நபர் ஆபத்தான நிலையில் இருப்பதை நீங்கள் காணும்பட்சத்தில், அவரை எந்த ஓர் ஊழியத்திற்கும் அல்லது அவருக்கு விசேஷமாய் ஆதரவாகக் காணப்பட வாய்ப்புள்ள எதற்கும் நியமிப்பதைத் தவிர்த்திடுங்கள். அவரைத் தள்ளிவிடாதிருங்கள்; அவருக்கு உதவிசெய்ய ஆயத்தமாய் இருங்கள் மற்றும் அவருக்குப் பாதகம் செய்யாதிருங்கள்; இதுவே அப்போஸ்தலனின் கருத்தென்று நான் எண்ணுகின்றேன்.

**(Q704:2) போதித்தல் -ஆரோக்கியமற்றப் போதனைகளைச் சகித்துக்கொண்டிருத்தல்.**

கேள்வி (1909)-2- மூப்பர்கள் சார்பிலிருந்தோ அல்லது மற்றவர்கள் சார்பிலிருந்தோ ஆரோக்கியமற்றப் போதனைகள் வருகையில், அவற்றைச் சகோதரர்கள் எந்தமட்டும் சகித்திட வேண்டும் மற்றும் இம்மாதிரியான சூழ்நிலைகளுக்குத் தீர்வு என்ன?

பதில் - அருமையான நண்பர்களே, சகிக்க வேண்டிய சில காரியங்கள் இருக்கின்றன; ஆனாலும் ஆரோக்கியமற்றப் போதனைகளைச் சகித்துக்கொண்டிருப்பது என்பது, தவறான செய்கையில் உடன்படுவதாக இருக்கும் என்றும், நாம் ஆரோக்கியமற்றப் போதனைகளைச் சகிக்கவே கூடாது என்றும் அப்போஸ்தலன் தெரிவிக்கின்றார். இப்படியானவைகளை யாரேனும் சகித்துக் கொண்டிருப்பார்களானால், எதிர்ப்புரைப்பது அவர்களது கடமையாய் இருக்கின்றது என்று நாம் எண்ணுகின்றோம். ஆனால் இதற்கென்று அவரது கண்ணோட்டம்தான் சரி என்றும், மற்றவர்களுடைய கண்ணோட்டம் அனைத்தும் தவறு என்றும் அர்த்தமாகிறதில்லை. ஒருவேளை நான் இங்கு டென்வரிலுள்ள சபையாரின் மத்தியில் ஓர் அங்கத்தினனாகக் காணப்படுகின்றேன் என்று வைத்துக் கொள்ளலாம் மற்றும் யாரோ ஒருவர் பொதுக்கூட்டத்திலோ அல்லது ஒருசிலர் மத்தியிலோ (private) போதிக்கிற ஒரு குறிப்பிட்ட விஷயம், தவறான காரியமாகவும், விசுவாச வீட்டாருக்குப் பாதகமான காரியமாகவும் காணப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் "நான் ஒன்றும், தவறானவைகளைப் போதிக்கவில்லையே" என்று நான் கூறிக்கொண்டு, அமர்ந்துகொள்வது எனக்குத் தகுதியான காரியமாய் இராது. என்னுடைய அமைதி என்பது ஒப்புதலளிக்கின்றதாய் இருக்கும். அன்புடனும், பொறுமையுடனும், தெளிவாயும் மற்றும் உறுதியாயும் நான் தவறு என்று நம்புகிறவைகளையும் மற்றும் இது விஷயத்திலான வேதாகம போதனைகளையும் முன்வைத்திடுவதற்கான வாய்ப்பிற்காக நான் பார்ப்பது எனக்குத் தகுதியானதாய் இருக்கும். இது விஷயத்தில் என்னுடைய கடமையை நான் செய்தப் பிற்பாடு, அனைவரும் எனது கண்ணோட்டத்திற்கு வரவேண்டும் என்று நான் வலியுறுத்த வேண்டும் என்பதாகாது. நான் என் பங்கிற்குச் சொல்லியிருக்கின்றேன் மற்றும் ஒருவேளை வேறுயாரேனும் விருப்பப்படுவார்களானால், அவரும் அவர் பங்கிக்கிற்குக் கூறட்டும். கிறிஸ்துவின் சபையானது குறுகின மனப்பான்மையுடன் காணப்படக்கூடாது, மாறாக அனைவரும் சத்தியத்தினை

முன்வைத்திடுவதற்குரிய சிலாக்கியம் உடையவர்களாய்க் காணப்பட வேண்டும், ஆனாலும் அனைத்தும் நல்லொழுக்கமாகவும், கிரமமாகவும் செய்யப்பட வேண்டும். பலமுறை சொல்வதற்கு எனக்கு அவசியம் ஏற்படாதளவுக்கு, என்னுடைய விமர்சன அறிக்கைகளையும், அவைகளுக்கான காரணங்களையும் நான் சொல்லிடும் தருணத்துடன் எனது கடமை முடிந்திட வேண்டும். நான் வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்களை முன்வைத்திட வேண்டும் மற்றும் அவர்களும் அவர்கள் சார்பிலான காரணங்களை முன்வைத்திட வேண்டும். வேதவாக்கியங்களின் அடிப்படையிலான காரணங்களைக் கர்த்தருடைய ஜனங்கள் அனைவரும் உயர்வான போதனைகளென அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். ஒருவேளை சபையாரில் பெரும்பான்மையானவர்கள் இவ்விஷயத்திற்கான எனது கண்ணோட்டத்திற்கு எதிராக தீர்மானிக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம்; அப்படியானால் என்ன செய்வது? நான்: "வேதாகமத்தின் அடிப்படையில் போதிக்காத போதகர் ஒருவர் இங்குக் காணப்படுகின்றார்; ஆகையால் நான் கூட்டங்களில் கலந்துகொள்ளாமலும், சபையாரோடு கூடிக்கொள்ளாமலும் இருந்திடலாமா?" என்று எனக்குள் சொல்லிக்கொள்ளலாமா? இல்லை, நான்: "இவ்வளவாய் என்னுடைய கடமைகளைச் சபையாருக்கு நான் செய்திருக்கின்றேன். நான் தொடர்ந்து செய்வேன் மற்றும் எனது கண்ணோட்டங்களை முன்வைப்பதற்குரிய இன்னொரு வாய்ப்பு அநேகமாகக் கிடைக்கலாம்" என்றே எனக்குள் சொல்லிடுவேன். இன்னொரு வாய்ப்பு வருகையில், நான் சரி என்று கருதுகிற அளவுக்குத்தக்கதாக என்னுடைய நிலைப்பாட்டினில் நின்றிடுவேன்; ஆனாலும் என்னைக் குற்றஞ்சாட்டுவதற்கு ஏதுவாக்கிக்கொள்ள மாட்டேன்.

வகுப்பில் காணப்படாத மற்றவர்கள் விஷயம் என்ன? "நண்பர்களே, அயலார்களே, உங்களுடைய வார்த்தைகளுக்காக நன்றி; நாங்கள் இவ்விஷயத்தைக் கவனத்தில் எடுத்துப்பார்த்துள்ளோம் மற்றும் காரியத்தினை விட்டுவிட்டோம் மற்றும் இதுகுறித்து நீங்கள் மீண்டுமாகப் பேசிட வேண்டாம்" என்று கூறிடுவேன்.

இதற்கான தீர்வு என்ன? ஒருவேளை ஆரோக்கியமற்ற உபதேசம் மூப்பர் சார்பிலிருந்து வந்திருக்குமானால், தேர்ந்தெடுத்தலுக்கான காலம் சமீபமாய்க் காணப்படுகிறது என்றால் காத்திருந்து, ஆரோக்கியமற்ற/தெளிவற்ற நிலையிலுள்ள எவரையும் தேர்ந்தெடுக்காதபடிக்குப் பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவேளை அவர் தெளிவில்லாதவர் என்று அவரைத் தேர்ந்தெடுக்கும்போதே அறிந்திருந்தீர்களானால், தவறு உங்களுடையதாகும். சத்தியத்தில் தெளிவில்லாதவர் என்று நீங்கள் அறிந்திருக்கும் ஒருவருக்கு வாக்கு (vote) அளித்திட உங்களுக்கு உரிமையில்லை. இது விஷயமான அனைத்தையும் ஆறாம் தொகுதியில், இது தொடர்பான தலைப்பின் கீழ் நீங்கள் பார்க்கலாம்.

கர்த்தருடைய ஜனங்கள் தயக்கம் கொள்வதையும் மற்றும் "இன்னென்ன நபர்களுக்கு வாக்களிக்க நான் விரும்பவில்லை; இன்னென்ன நபர் மூப்பர் ஊழியத்திற்குப் பொருத்தமானவர்கள் என்று எனக்குத் தோன்றவில்லை" என்று கூறுவதைச் சிலசமயங்களில் நான் பார்த்திருக்கின்றேன். அமைதலாய் இருந்து, அவருக்கு வாக்களிப்பதில் நீங்கள் தவறு செய்பவர்களாய் இருப்பீர்கள். குணலட்சணங்களை உடையவர்களையும், கொள்கைகளை அடையாளம் கண்டுகொண்டவர்களையும் மற்றும் அந்தக் கொள்கைக்கு இசைவாய்ச் செயல்படுபவர்களையும் தம்முடைய சபையில் பெற்றிருக்கத் தேவன் விரும்புகின்றார். உங்களது துணிவின்மையை ஜெயங்கொள்வதற்கு, உங்கள் சார்பில் சில ஜெயங்கொள்ளுதல் காணப்பட வேண்டும் மற்றும் இதன் காரணமாகவே நீங்கள் உங்களது கடமையினைச் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றீர்கள்; ஏனெனில் ஜெயங்கொள்பவர்கள் தவிர வேறு எவரும் தெரிந்தெடுக்கப்படும் வகுப்பாரில் காணப்படுவதில்லை. சண்டையிடுவதற்கும், தர்க்கம் பண்ணுவதற்கும், மற்றவர்களுடைய உணர்வுகளைப் புண்படுத்துவதற்கும் விரும்பிடாத பண்புகளை நான் கண்டு வியப்பதுண்டு; நாம் இத்தன்மையினைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் காரியங்களைத் தெளிவாய் முன்வைக்கும் விதத்தில் கூறிடுவதற்கான அன்பான, தயவான விதங்கள் இருக்கின்றன மற்றும் நீங்கள் உங்கள் கடமையினைச் செய்யும்போது, நீங்கள் அன்பான நோக்கங்கள் தவிர, வேறெதுவும் பெற்றிருக்கவில்லை என்பதை அனைவரையும் நீங்கள் அறியப்பண்ணிட வேண்டும். தங்கள் மூப்பர்களாக யார் காணப்பட வேண்டும் என்பது தொடர்புடைய விஷயத்தில் சபை காலம் எடுத்து, நிதானிக்க வேண்டும். நீங்கள் கர்த்தரைப் பிரதிநிதித்துவம் பண்ணுகிறீர்கள் மற்றும் உங்களது வாக்கில் (vote) அவரை நீங்கள் பிரதிநிதித்துவம்பண்ணுகிறீர்கள். கிறிஸ்துவினுடைய சபையில், நம்முடைய வாக்கின் (vote) விஷயத்திலுள்ள பொறுப்பினை நாம் அதிகமதிகமாய் உணர்கின்றவர்களாய் இருத்தல் வேண்டும்.

**--3170--**

**(Q534:3) பயண ஊழியர்கள் - உள்ளூர் பயண ஊழியர்களின் வேலை.**

கேள்வி (1910)-3- பயண ஊழியரின் வேலைக்கொத்த ஒரு வேலையினை ஒரு சகோதரன் தானாகவே துவங்கி, பல்வேறு சபையார்களுக்குத் தகவல் கொடுத்தும், தியதிகளை நிர்ணயித்தும், கூட்டங்கள் முதலானவைகளை ஒழுங்குபடுத்திடுவதற்குக் கேட்டுக்கொண்டும் காணப்படுகையில், இது விஷயத்தில் சபையார் என்ன செய்ய வேண்டும் என்று உங்களிடம் கேட்க விரும்புகின்றேன்.

பதில் - சொசைட்டியானது முற்றிலும் சுதந்திரமாய்க் காணப்படுவதற்கும் மற்றும் அது அனைவருமே முற்றிலும் சுதந்திரமாய்க் காணப்படும்படிக்கு விட்டுவிடுவதற்கும் விரும்புகின்றபடியினால், அது வேலைக்கு விசேஷமாய்த் தகுதியுடையவர்கள் என்று நம்புபவர்களை மாத்திரமே பயண ஊழியர்களாக அனுப்புவதற்கு முயற்சிக்கின்றது. வேலைக்கான தகுதிகள் அநேகவற்றையுடைய மற்றச் சகோதரர்கள் காணப்படுகின்றார்கள் என்பதில் எங்களுக்குச் சந்தேகமில்லை மற்றும் அவர்களுக்குத் தகுதிகள் இல்லை என்றும், அவர்களால் எந்த நன்மையும் இல்லை என்றும் தீர்மானிப்பது நமக்கடுத்தக் காரியமல்ல. ஆகையால் எந்தவொரு சபையார் மீதும் அதிகாரத்தினைச் செலுத்திட நாங்கள் முற்படுகிறதில்லை. மாறாக காரியத்தினை முற்றிலுமாகச் சபையாரிடமே விட்டுவிடுகின்றோம். ஒரு சகோதரனை சொசைட்டியானது அனுப்பிவைக்கவில்லை எனும் காரியமானது, அச்சகோதரனை விசேஷமாக சொசைட்டியின் பிரதிநிதியாகக் கருதிடுவதற்கு ஏதுவானவராக, சொசைட்டி நம்பிடும் ஒருவராக - அவரைக் கண்டுகொள்ளவில்லை என்று சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. ஆனால் இது ஒருவருக்கெதிராய்ப் பழிச்சுமத்துகிறதாய் இராது. எனக்கு இரண்டு விவகாரங்கள் ஞாபகத்திற்கு வருகின்றது. ஒன்று ஒரு சகோதரனைக்குறித்தது ஆகும்; நான் அறிந்திருக்கிறவரை இவர் மிக அருமையான சகோதரர் ஆவார் மற்றும் இவர் சத்தியத்திற்கு மிகவும் நேர்மையானவர் என்றும், மிக நல்ல சகோதரர் என்றும் நான் நம்புகின்றேன்; ஆனால் அச்சகோதரனுக்குக் கல்வியறிவில் குறைபாடு இருந்தது மற்றும் அவர் ஊழியம் செய்கிறதற்குக் கல்வியறிவு பற்றின காரியம் தடையாக இருக்கும் என்று நாம் வலியுறுத்தவில்லை; எனினும் ஒருவேளை மற்றத் தகுதிகள் இருந்தபோதிலும், சரியான துல்லியத்துடன் ஆங்கில மொழியில் பேசிடும் ஆற்றலில் குறைவுப்பட்டிருக்கும் இவரைப் பயண ஊழியராக அனுப்பி வைப்பது ஞானமானதாகவும், கர்த்தருக்கு மிகமை சேர்க்கிறதாகவும் இராது என்று நாம் எண்ணுகின்றோம். இதுவே அச்சகோதரனுக்குக் காணப்பட்ட ஒரே மறுப்பதற்கு ஏதுவான காரியமாகும்; மற்றப்படி அவரது குணலட்சணத்திற்கு எதிராக எதுவும் இருக்கவில்லை. வேறொரு சகோதரன் சில ஊழியம் புரிவதற்கான வாய்ப்பு உடையவராகக் காணப்பட்டார் மற்றும் இவர் மிகவும் அருமையான சகோதரன் ஆவார் மற்றும் ஒருவேளை அவரது குடும்பம் மற்றும் வீட்டுக் காரியங்களானது அனுமதிக்கும் பட்சத்தில் அவரைப் பயண ஊழியர்களின் வேலையில் பெற்றுக் கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்போம்; இச்சகோதரன் இவ்வூழியத்திற்கென்று தனது நேரத்தைக் கொடுக்கத்தக்கதான விதத்தில் அவரது குடும்பச் சூழ்நிலைகளானது காணப்படவில்லை. ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியே சென்று நண்பர்களுக்கு ஊழியம் புரிய அவருக்கு வாய்ப்புக்கிடைக்குமானால் நாம் மிகவும் மகிழ்ச்சிக்கொள்வோம். அனைவருடைய நிலவரங்களும் இவ்விருவரின் நிலவரங்கள் போல் இருப்பதில்லை. எனினும் இவைகளை உங்கள் மனதில் நிலைநிற்கத்தக்கதாக, இந்த இரண்டு நல்ல உதாரணங்களை நான் கொடுக்கின்றேன். ஒவ்வொரு சபையாரும் இம்மாதிரியான நபர்கள் தொடர்புடைய விஷயத்தில் பகுத்தறிய வேண்டும் என்பதும், இத்தகையவர்கள் தங்களுக்கு ஊழியம் புரிவது தங்களுக்குப் பிரயோஜனமாக இருக்குமா இல்லையா என்று சபையார் அறிந்து கொள்ளும்படிக்குத் தங்களது பகுத்தறிவைப் பயன்படுத்திட வேண்டும் என்பதும் எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. ஒருவேளை பிரயோஜனமாய் இருக்குமென்று சபையார் எண்ணுவார்களானால் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்வார்களாக; ஒருவேளை தங்களுக்குப் பிரயோஜனமில்லை என்று எண்ணுவார்களானால் அவர்களை அழைக்காமலிருப்பார்களாக. நாங்கள் அனுப்பிவைக்கிறவர்களுக்குப் பொறுப்பாளிகளாக இருக்கின்றோம் என்றும், ஒருவேளை பயண ஊழியர்கள் ஒழுக்க ரீதியிலும், அறிவு ரீதியிலும், பக்தியின் ரீதியிலும் ஞானமாய் நடந்துகொள்ளவில்லையெனில் அது விஷயம் சொசைட்டிக்கு தகவல் கொடுத்திட, சொசைட்டி விரும்புகிறது என்றும் மாத்திரம் சொசைட்டி கூறிக்கொள்கின்றது. அனுப்பப்படுகிறவர்கள் இவ்வூழியத்திற்கான விஷேசித்தத் தகுதியுடையவர்களாய் இருக்கின்றார்கள் என்றும், இந்தக் காரணத்தின் நிமித்தமாகவே --3171--

அவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் நாம் நம்புகின்றோம்; ஆனால் இது மற்றவர்களுக்கு எதிராய் எதையும் சொல்வதைக் குறிக்காது; சபையார் தங்களுக்குச் சிறந்தது என்று தோன்றும் எதையும் செய்திடுவதற்கு சொசைட்டியானது விட்டுவிடுகின்றது.

**(Q535:2) பயண ஊழியர்களை உபசரித்தல் முதலானவைகளுக்கான சரியான வழிமுறை.**

கேள்வி (1913 - Z.5161)-2- சபையின் மூப்பராக இருந்தும், வாக்குறுதியோடும் (vow), சொசைட்டியின் (society) ஊழியங்களோடும் உடன்பாடு கொண்டிராத ஒருவரால், பிரயாணம் மேற்கொண்டுள்ள பயண ஊழியர் வரவேற்கப்பட்டு, உபசரிக்கப்படுவது ஞானமான அல்லது சரியான காரியமாய் இருக்குமா?

பதில் - மிகவும் உறுதியாய் இல்லை என்பதே பதில். இன்னுமாக இப்படியான மூப்பர் ஒருவரைத் தேர்ந்தெடுத்ததில் சபையார் பெரிதும் தவறுசெய்துள்ளனர் என்று சபையாருக்குப் பயண ஊழியர் தெளிவுப்படுத்திட வேண்டும் மற்றும் முடிந்தமட்டிலும் விரைவாய்த் தவறைச் சரிசெய்திடுவதற்கு அவர்களுக்கு உதவிட வேண்டும்.

சொசைட்டியினுடைய ஊழியங்களின் மீது உடன்பாடில்லாத அந்த மூப்பரை ஒருவேளை தொடர்ந்து சபையார் விரும்புவார்களானால், சபையார் பயண ஊழியர்களின் ஊழியத்திற்காக சொசைட்டியிடம் வேண்டிக்கொள்ளக்கூடாது. கர்த்தருடைய அருமையான செம்மறியாடுகளில் சிலர் மிகவும் மதியீனமாய்க் காணப்படுகின்றனர். சாந்தமும், தயவும் பாராட்டத்தகுந்தவைகளே; ஆனால் சிலசமயங்களில் இப்படிச் சாந்தத்தோடும், தயவோடும் காணப்படுவது என்பது தேவனுக்கு நேர்மையற்றிருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

---

# புறங்கூறுதல்

புறங்கூறுதலுக்குச் செவிக்கொடுக்காதீர்கள் - நீங்களும் புறங்கூறுபவர்கள் ஆகிவிடுவீர்கள்.

மற்றவரைக்குறித்துப் பேசுகிறவன், தான் நம்பிக்கைக்குப் பாத்திரமற்றவன் என்று நிரூபிக்கின்றவனாய் இருப்பான்.

புறங்கூறுபவன் என்பவன் உண்மைகள் எதையும் அறியாமல் விவரங்களை மாத்திரம் கொடுப்பவனாய் இருப்பான்.

சுவிசேஷத்திற்கும் (Gospel) மற்றும் புறங்கூறுதலுக்கும் (Gossip) இடையேயுள்ள வித்தியாசம் என்னவெனில் சுவிசேஷம் என்பது நற்செய்தியாகவும், புறங்கூறுதல் என்பது துர்ச்செய்தியாகவும் இருக்கின்றது என்பதே ஆகும்.

யாரேனும் உங்களைக் குறித்துத் தீமையாய்ப் பேசினாலும் யாரும் அதை நம்பாத அளவுக்கு ஜீவியுங்கள்.

வதந்திகளினுடைய பசைதன்மைக்கு ஈடாக எந்தவொரு பசையும் காணப்படுகிறதில்லை.

- Deep Waters and Bubbling Brook

---

--3173--

## சபை

### (Q102:1) சபை - மூப்பர்களுக்குக் கீழ்ப்படிதல்.

கேள்வி (1909)-1- மூப்பர் ஒருவரால் ஆலோசனையாகத் தெரிவிக்கப்படும் ஜெபத்திற்கான ஒழுங்குமுறையினை நாம் ஏற்றுக்கொள்வதற்கு, கீழ்ப்படிதலின் கொள்கையானது நம்மை வழிநடத்திடுமா?

பதில் - சபை ஒழுங்குமுறையின் விஷயத்தில், நாம் ஒன்றுகூடி ஆராதனை பண்ணுகையில், சபையாரின் ஏற்பாடுகளுக்கு நம்மை நாம் கீழ்ப்படுத்துவது நமக்கு மிகவும் ஏற்றகாரியமாக இருக்கும். கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட ஜனங்களாக நாம் காணப்படுவோமானால், கூட்டத்தினுடைய (meeting) முறைமை என்னவாகக் காணப்பட வேண்டும் என்று நாம் சொல்ல வேண்டியவர்களாய் இருப்போம் மற்றும் மூப்பர் இல்லாமல் இருக்கும்போது கூட்டத்தினுடைய முறைமை என்னவாகக் காணப்படவேண்டும் என்று ஒன்றுகூடி ஆராதிப்பவர்கள் சொல்லிடுவதும் தகுதியானதாகும். ஒருவேளை மூப்பர் கலந்துகொள்ள முடியாத தருணங்களில், யார் கூட்டத்தை நடத்திட வேண்டும் என்று மூப்பர் கூறிடுவதும் தகுதியானதே மற்றும் மூப்பரினால் நியமிக்கப்பட்டவர், "ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளுக்கு ஏற்ப, முடிந்தமட்டும் அன்புடன் மூப்பரின் கருத்துகளுக்குக் கீழ்ப்படிந்திடுவதும் தகுதியானதேயாகும். உதாரணத்திற்குச் சகோ. ஷெர்மன் அவர்கள் கூட்டத்தைத் துவக்கிவைத்து, "பாடல் பாடிட நாம் அனைவரும் எழும்பிடுவோமா?" என்று கூறுவாரானால், "நாங்கள் எழும்ப வேண்டும் என்று எங்களுக்குச் சொல்லிட உமக்கு சுதந்திரம் தந்தது யார்?" என்று கேட்பதற்குப் பதிலாக, நாம் எந்தச் சரீர பலவீனங்களையும் பொருட்படுத்தாமல், எழும்பிட வேண்டும். உதாரணத்திற்கு யாரேனும் "ஜெபிப்பதற்கென்று நம்முடைய தலைகளைத் தாழ்த்திடலாமா? என்கிறபோது, ஒருவர்: "நான் ஜெபிக்கும்போது எழும்பி நிற்கும் பழக்கமுடையவன். நான் எழும்பி நிற்க போகிறேன்" என்று சொல்வதற்குப் பதிலாக இசைந்திட வேண்டும். மனசாட்சி சம்பந்தப்படாத காரியங்களில் எல்லாம் இசைந்துபோவதற்கு விருப்பம் கொண்டிருப்பது நல்லதாகும். கர்த்தருடைய ஜனங்கள் அதிகளவில் எதிர்த்துப்போராடும் மனப்பான்மையைப் பெற்றிருப்பார்கள் மற்றும் இந்தத் தன்மையை நாம் பெற்றுக் கொள்ளாதவரையிலும், நாம் ஜெயங்கொண்டவர்களாக முடியாது. ஆனால் இத்தன்மையானது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவில்லையெனில், இது நம்மைச் சண்டையிடுகிறவர்களாகவும், ஒத்துப்போகச் சிரமமானவர்களாகவும், அனுசரித்துப்போகக் கஷ்டமானவர்களாகவும் ஆக்கிவிடும். நியாயமான ஒவ்வொரு ஒழுங்குகளுக்கும் நம்மால் முடிந்தமட்டும் நாம் கீழ்ப்படிந்திட வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உரிமைகளையும், சித்தங்களையும் செயல்படுத்திக் கொண்டிருப்பார்களானால், எப்போதுமே குழப்பம் காணப்படும். நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருப்பது நல்லதே; நம்மைக் கீழ்ப்படுத்துவதற்குக் கற்றுக்கொள்வதும் நல்லதே - ஆனால் விஷயம் மனசாட்சி சம்பந்தப்பட்டதாக இருக்கையில், மனசாட்சியினை நாம் மீறாதபடிக்கு, அந்த மனசாட்சிக்கு இசைவாக நிற்பதற்குப் போதுமான தைரியத்தையும் மற்றும் திடமனதையும் நாம் கொண்டிருக்க வேண்டும். மனசாட்சி சம்பந்தப்படாத அநேக காரியங்கள் உலகத்தில் காணப்படுகின்றது.

### (Q103:1) சபை - தேவன் அங்கத்தினர்களை ஏற்படுத்துகின்றார்.

கேள்வி (1909)-1- 1 கொரி. 12:28-ஆம் வசனத்தில் . . . "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும்; இரண்டாவது தீர்க்கதரிசிகளையும்; மூன்றாவது போதகர்களையும்; . . . ஊழியங்களையும், ஆளுகைகளையும் ஏற்படுத்தினார்" என்று நாம் வாசிக்கின்றோம். யார் இந்த ஆளுநர்கள் மற்றும் எந்தளவுக்கு இவர்கள் ஆளுகை செய்வார்கள்?

பதில் - ஆளுநர்கள் என்பதாக வசனம் குறிப்பிடுகிறதில்லை, மாறாக ஆளும் பிரமாணம்/விதிமுறை, ஒழுங்குமுறை அல்லது சட்டம் என்றே குறிப்பிடுகின்றது. முழுச்சபையாரும் தேவனுடைய வார்த்தைகளின் வழிகாட்டுதலில், கூட்டங்களை நடத்திடுவதற்குரிய முறையான ஒழுங்குமுறைக்கடுத்த சில விதிமுறைகளை

அங்கீகரிக்கின்றனர். தேவனுடைய பிள்ளையாகவும், கர்த்தருடைய வழியில் வளர்ந்துகொண்டிருப்பவனாகவும் காணப்படும் ஒவ்வொருவனும், கிறிஸ்துவின் சபையிலுள்ள சில ஒழுங்குமுறைகளிலுள்ள ஞானத்தைக் கண்டுகொள்ளும் நிலைக்கு வந்தாக வேண்டும். சபைக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளதான ஒழுங்குமுறைகளையும், விதிகளையும் அங்கீகரித்திட விரும்பிடாத எவனும், இவ்விதத்தில் கலகவாதியாக இருப்பான். இந்தத் தேசம் அல்லது இந்தப் பட்டணத்தினுடைய சட்டங்களில் நாம் நம்பிக்கை வைத்திருக்கின்றோம். சட்டங்களோ அல்லது விதிகளோ இல்லாமல் இருப்பதைவிட, அவைகள் பூரணமற்றவைகளாக இருப்பினும், அவைகளில் சிலவற்றைப் பெற்றிருப்பது சிறந்ததாகும். மிக அநேக பிரமாணங்களும் மற்றும் ஒழுங்குமுறைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும் இருக்கக்கூடுமென நாம் ஒப்புக்கொள்கின்றோம்; எனினும் கர்த்தருடைய சபையானது, தேவன் கொடுக்கிற சுயாதீனத்தைக்குறித்து அறிந்துகொள்வதற்கும் மற்றும் உணர்ந்துகொள்வதற்கும் மற்றும் அதைப் பயன்படுத்திடுவதற்கும் நாடிட வேண்டும் - அனைத்துமே நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு சபையாருக்கும் நன்மையாய்க் காணப்படும் அளவுக்குத்தக்கதான சுயாதீனம் காணப்பட வேண்டும் என்பதே ஒவ்வொரு சபையாருடைய நோக்கமாகக் காணப்பட வேண்டும். ஆகையால் தேவனே சபையில் ஒழுங்குமுறையினை நிலைநாட்டினவர் என்று நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

**(Q103:2) சபை - ஒரு சபையார் மத்தியில் பிரச்சனை.**

கேள்வி (1910)-2- சபையில் இரு சகோதரர்களுக்கிடையே சில சிறு கசப்புகள் ஏற்பட்டிருக்க மற்றும் அவர்கள் ஒருவருக்கொருவர் பேச மறுத்துக் காணப்படுகையில், அவர்கள் சரியான உறவுநிலையில் இல்லை என்பது சபையார் யாவருக்கும் தெரிந்திருக்க, இப்படியான சூழ்நிலையில் மூப்பர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? அவர்கள் இக்காரியத்தை ஏதேனும் விதத்தில் வெளிக்கொண்டுவர வேண்டுமா அல்லது இக்காரியமானது விசேஷமாக எவ்விதத்திலும் சபைக்கு இடையூறாக இல்லாமல் காணப்படுகையில், அப்படியே விட்டுவிடலாமா?

பதில் - சகோதரனே என்னுடைய கருத்தென்னவெனில் - சில காரியங்கள் தனிப்பட்ட காரியங்களாகக் காணப்படலாம் மற்றும் அவற்றைச் சபையார் கண்டுகொள்ளாமல் இருங்கள் மற்றும் தேவனால் சில விஷயங்களில் கையாளப்பட்ட விதம் குறித்து வேதாகமம் கூறுகின்றதான விதத்தில் கையாளுங்கள் என்பவையேயாகும். தேவன் சிலவற்றை காணாதவர்போல் இருந்தார் என்று நாம் வாசிக்கின்றோம். ஆகையால் சபையாரும் சிலவற்றை காணாதவர்கள்போல் - அதாவது சிலவற்றை கண்டுகொள்ளாமல் இருக்க வேண்டும். இரண்டு நபர்கள் இடையே சிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், ஒருவேளை சபையானது அதில் தலையிட முற்படுமாயின், சபை அநேகமாக எப்போதுமே (busy) ஓயாது குறுக்கிட்டுக்கொண்டே இருக்கும். ஆனால் காரியத்தைக் காண்பவர்கள் காரியத்தினை, பிரச்சனையில் காணப்படுபவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது தகுதியானதே மற்றும் ஒருவேளை ஒருவரோ அல்லது இருதரப்பினருமே பிரிவினைகளை உண்டாக்கக்கூடியவர்களாக இருக்கும்பட்சத்தில், இது மற்றவர்களால் கவனிக்கப்பட வேண்டும் மற்றும் மிகவும் பரிவுடன் கையாளப்படக்கூடாது - அவர்கள் சகோதர சகோதரிகள் அல்ல என்று புறக்கணிக்கப்படாமல், மாறாக சபையாருக்கான எந்தப் பணிக்கு அல்லது ஊழியத்திற்கு என்று நியமிக்கப்படக்கூடாது மற்றும் அவர்கள் வெளிப்படையாகவே விழிப்பற்று நடந்து, சில பிரிவினைகளை உண்டுபண்ணுகிறவர்களாகவும் இருப்பதினால், அவர்களிடம் கொஞ்சம் பேச்சுக்கொடுக்காமல் நடத்துங்கள். பின்பு மூப்பர்களில் யாரேனும் அந்தச் சகோதரர்களில் ஒருவரோடு தனிப்பட்டமுறையில் பேசக்கூடிய நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளதாக எண்ணி, "சகோதரனே உங்களது விவகாரத்தில் நான் உதவ முடிகிற காரியம் ஏதாகிலும் உண்டா? நீங்களும், சகோதரன் Brown/பிரவுண் அவர்களும், சுமூகமாக இல்லை என்பதை நான் கவனிக்கிறேன்; சபையின் மூப்பர் என்ற விதத்தில் நான் உங்களிடத்தில் சொல்ல விரும்புவதாவது: நீங்கள் மத்தேயு 18:15-ஆம் வசனத்தினை மறந்துவிட வேண்டாம்; ஒருவேளை சகோதரன் பிரவுண் அவர்கள் உங்களுக்கு ஏதேனும் தீங்கு செய்திருந்தால், அந்த வேதவாக்கியத்தினை மறந்துவிட வேண்டாம் மற்றும் நான் எவ்விதத்திலாவது உங்களுக்கு உதவிபுரிய வேண்டுமெனில், அதற்கு நான் எப்போதும் தயார்" என்று கூறுவதும் முறையானதேயாகும்.

**--3175--**

அச்சகோதரன் பிரதியுத்திரமாக: "நல்லது, அதைக்குறித்து நான் உங்களிடம் சொல்ல வேண்டும்" என்பாரானால்

மூப்பர்: "இல்லை சகோதரனே, அதைக்குறித்து நீங்கள் என்னிடம் சொல்வதை நான் விரும்பவில்லை; அவ்விஷயம்குறித்து நீங்கள் சொல்வதை நான் கேட்பது தவறான காரியமாயிருக்கும்; வேதவாக்கியம் முன்வைக்கிற விதத்திலேயே அவ்விஷயம் என்னிடம் வர வேண்டும். உங்களுக்கும், சகோ. பிரவுண் அவர்களுக்கும் இடையில் கருத்துவேறுபாடு காணப்படுமாயின், அதைக் கேட்பதற்கு நான் பிரியப்படவில்லை; அதை நீங்கள் என்னிடம் கூறும்படிக்கு நான் ஊக்குவிப்பது என்பது தவறான காரியமாய் இருக்கும். இயேசு மத்தேயு 18:15-17 வரையிலான வசனங்களில் கூறியுள்ளதான வழியினைத் தேவன் அருளியிருக்கின்றார். நாம் அதை எவ்வாறு செய்யலாம் என்று அவர் நமக்கு எடுத்துக்கூறுகின்றார் - அதாவது, நீங்கள் முதலாவது சகோ. பிரவுண் அவர்களிடம் சென்று, ஒப்புரவாகிக்கொள்ள முயற்சியுங்கள்; ஒருவேளை இதில் பலன் காணமுடியவில்லையெனில் மற்றும் அவர் உங்களுக்குத் தீமையான சிலவற்றைச் செய்துவருகிறவராகக் காணப்பட்டு மற்றும் அதனால் உங்களால் அவரிடத்தில் அன்புள்ள சகோதரனாகக் காணப்பட முடியவில்லை என்று உணருவீர்களானால், நீங்கள் வந்து, உங்களோடுகூட வருவதற்கு இரண்டு சகோதரர்களை அழைத்திடலாம். உங்களோடுகூட என்னை அழைத்துச்செல்ல நீங்கள் விரும்பும்பட்சத்தில், அப்படி வருவதற்கும், சமாதானத்தையும், ஒற்றுமையையும் கொண்டுவருவதற்கென்று என்னால் செய்யமுடிந்தவற்றை செய்வதற்கும் நானும் பிரியப்படுவேன். ஆனால் முன்கூட்டியே எதையும் கேட்டிட நான் விரும்பவில்லை; அப்படிக் கேட்பது சரியாய் இராது; நீங்கள் சொல்வதை நான் செவிகொடுத்துக் கேட்பேனானால், நான் இவைகளைச் செய்திட பொருத்தமற்றவனாய் இருப்பேன். ஒருவேளை சகோ. பிரவுண் அவர்கள் உங்களுக்குத் தீமை செய்திருக்கிறாரெனில், அவரிடமே செல்லுங்கள் மற்றும் இதில் பயனில்லாமல் போயிற்று என்றால் மற்றும் அவ்விஷயம் உங்கள் மனதில் உங்களுக்கும், அவருக்கும் பிளவினை ஏற்படுத்துமளவுக்கு முக்கியமானதாய் இன்னும் தோன்றுமானால், அடுத்தக்கட்டமாக வேதவாக்கியங்கள் கூறுவதுபோன்று ஒன்றோ, இரண்டோ மற்றச் சகோதரர்களை அழைத்துச் சென்று அவரிடம் உரையாடுங்கள் மற்றும் தொடர்ந்து செவிசாய்க்கப்படவில்லையெனில் மற்றும் அவராலோ அல்லது உங்களாலோ அக்காரியத்தில் இணக்கத்திற்கு வரமுடியவில்லையெனில், அடுத்தக்கட்டமாக அது - நீங்கள் விரும்பும் பட்சத்தில் சபைக்கு முன்பாகக் கொண்டுவரப்படலாம்; ஆனாலும் இக்கட்டங்களுக்கெல்லாம் முந்தி கொண்டுவரப்படக்கூடாது" என்று கூறிடலாம்.

**(Q104:1) சபை - சபையில் எதிர்ப்பு.**

கேள்வி (1910)-1- எங்களுடைய சபையில் வலிமைவாய்ந்தவர்கள் ஏற்றகால சத்தியத்திற்கு எதிரானவர்களாகக் காணப்படுகின்றனர் மற்றும் மிகவும் உண்மையாய்க் காணப்படுபவர்களோ போதகர்களாக இல்லை மற்றும் சத்தியத்திலும் இளையவர்களாய் இருக்கின்றனர். எதிர்ப்பவர்கள் பெரும்பாலும் மூப்பர்களாய் இருப்பதினால், அவர்களே கூட்டங்களைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்கள். உண்மையுள்ளவர்களும், பெரும்பான்மையினராய்க் காணப்படும் வலுவற்றவர்களும்/ weak majority என்ன செய்திட வேண்டும்?

பதில் - யாரிடமிருந்து இக்கேள்வி வந்துள்ளது என்பது குறித்து எனக்குத் தெரியவில்லை என்பதினால், மிகுந்த சுதந்திரத்துடன் இக்கேள்விக்கு என்னால் பதிலளிக்கக்கூடும். கர்த்தர் தம்முடைய ஜனங்கள் தொடர்புடைய விஷயத்தில் ஏற்படுத்தியுள்ளவைகள் யாவற்றிலும் சில கொள்கைகள் அடங்கியிருக்கின்றன என்றும், சபையார் மத்தியில் ஆண்டவருக்குப் பிரதிநிதியாகக் காணப்படுவதற்கு மிகுந்த தகுதியுடையவர்களாய் இருப்பவர்களைத் தங்கள் மத்தியிலிருந்து மூப்பர்களாக அல்லது மூப்பர் என்கிற சகோதரர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் நான் காண்கின்றேன். நீண்ட காலமாய்ச் சத்தியத்தில் இருப்பவர்களில், இயல்பாகத் திறமைமிக்கவர்களாக இருப்பவர்களில் எவரேனும், கேள்வி கேட்டுள்ள சகோதரன் எண்ணுவதுபோன்று ஆகியுள்ளாரெனில், இவர்கள் அப்போஸ்தலனின் கண்ணோட்டத்தின்படி இறுமாப்புடையவர்களாகக் கருதப்பட வேண்டும் மற்றும் அடுத்தமுறை இவர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது தேர்ந்தெடுக்காமல் இருத்தல் தொடர்புடைய விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவாக இருக்கின்றது என்று தாங்கள் நம்புகிறவற்றின்படி நடந்துகொள்வது சபையாருக்குத் தகுதியானதாய் இருக்கும். இம்மாதிரியான நிலைமையில் --3176--

காணப்படும் எந்தச் சகோதரரையும் முதன்மையான ஸ்தானங்கள் எதற்கும் தேர்ந்தெடுப்பது என்பது அச்சகோதரருக்குத் தீங்கு விளைவிக்கிறதாய் இருக்கும் என்பது என்னுடைய கருத்தாய் இருக்கிறது. இத்தகையவர்கள் சிறிதுகாலம் எவ்விதமான போதிக்கும் ஊழியங்களினின்றும் விலகிக் காணப்படும்படிக்கு அனுமதிக்கப்படுவார்களானால், அதுவும் கூட்டங்களின் ஆசீர்வாதமானது தடைபட்டுப்போனது போன்று வெளித்தோற்றத்தில் தோற்றமளித்தாலும் பரவாயில்லை, இப்படி விலகிக் காணப்படும்படிக்கு அனுமதிக்கப்படுவார்களானால், இது அவர்கள் நன்மைக்கு ஏதுவாயும், சிறந்த விதமான உதவியாயும் இருக்கும். அநேகமாய்க் கூட்டங்களின் ஆசீர்வாதமானது தடைபடாது. ஏனெனில் இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ளதான தவறான மனநிலையில் இருப்பவர் எவரும், ஒவ்வொரு நாளும் மற்றும் ஒவ்வொரு கூட்டத்திலும் நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமையையே அதிகமாய் நிச்சயமாகச் செய்திடுவார்கள் மற்றும் தாங்களும் நன்மை அடைகிறதைப்பார்க்கிலும் அதிகம் தீமையையே அடைகிறவர்களாகவும் இருப்பார்கள். இக்கேள்வியினை எழுதியுள்ளதான சகோதரனும், காரியத்தினைக்குறித்த சரியான பார்வையினைக் கொண்டிருக்கவில்லை என்பதாக தெரிகின்றது. ஒருவேளை இவர் சில தவறான கருத்துக்களைக் கொண்டிருக்கலாம்; நான் கணிப்பதற்கு அறியாதவனாய் இருக்கிறேன்; இவ்விவகாரம் குறித்து ஏதும் அறியேன்; அந்த மூப்பர்களைக் குறித்தும் அறியேன்; கேள்வியினை எழுதினவர் குறித்தும் அறியேன். மேலும் ஊழியம் புரிகின்றதான மூப்பர்களைச் சாந்தத்துடனும், பொறுமையுடனும், பரந்த மனப்பான்மையுடனும் பார்ப்பது இவரது கடமையாய் இருக்கின்றது; ஏனெனில் இப்படிச்செய்வது என்பது இவராலும் மற்றும் இது தொடர்புடைய விஷயத்தில் சபையார் யாவராலும் செய்ய இயலும் காரியமாய் இருக்கின்றது. மேலும் சரியாக இல்லை என்று இச்சகோதரனால் கருதபடுகின்றதான மூப்பர்கள் ஒவ்வொருவரையும், ஒவ்வொருவராக இவர் அழைப்பித்து, தான் அஞ்சுவதைக்குறித்து அன்பாய்த் தெரிவிப்பதும் மற்றும் தான் நியாயந்தீர்க்க விரும்பவில்லை, மாறாக தான் சில காரியங்களைக் காண்பதாகவும், அவைகளை அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள - அதாவது எதிராளியானவன் சில விதங்களில் அவர்களைப் பயன்படுத்துகின்றானா என்று சிந்தித்துப்பார்க்க, தான் யோசனை தெரிவிப்பதாகக் கூறுவதும் மற்றும் அன்பானதொரு சகோதர அல்லது சகோதரி உரையாடலைக் கொண்டிருப்பதும் ஞானமான ஒன்றாகவே அநேகமாக இருக்கும். நல்ல திட்டம் என்னவெனில் . . . நீங்கள் காரியத்தினை முன்வைத்த விதத்தில் மிகவும் அன்புடனும், பரிவுடனும் காணப்பட்டிருந்தீர்களானால் மற்றும் ஒருவேளை அவர்கள் சினமடைவார்களானால் - இது ஏதோ தவறு இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். அவர்கள் ஒத்துக்கொள்ளாமல் இருக்கலாம்; அவர்கள்: "ஏன், சகோதரனே, நீங்கள் என்னைத் தவறாய்ப் புரிந்துகொண்டுள்ளீர்கள்; நான் அப்படியான விதத்தில் பேசவேயில்லை; நீங்கள் அக்காரியத்தினை மிகவும் குற்றம் காணும் விதத்தில் பார்த்திருக்கின்றீர்கள்; நான் இன்னென்ன விதத்தில்தான் பேசினேன்" என்று சொல்லலாம். எப்படியாக இருப்பினும், இப்படியான தவறான நிலைமையில் காணப்படுவதாகக் கருதப்படுபவருக்கு உதவும் வண்ணமாகவே பிரயாசம் காணப்பட வேண்டும். இவ்வகையான எந்த ஒரு பிரயாசமும் எடுக்கப்படுவதற்கு முன்னதாக, ஒரு சகோதரனையோ அல்லது சகோதரியையோ சீர்ப்படுத்தும் வண்ணமாகவோ அல்லது யாருக்கேனும் யோசனை கூறுவதற்கோ பிரயாசம் எதையேனும் ஏறெடுக்கும் ஒவ்வொருவருக்கும் நான் அறிவுறுத்துவது என்னவெனில்: அவர்கள் முதலாவதாக இக்காரியத்தினை ஜெபத்தில் வைத்து, தங்கள் சொந்த இருதயமும், மனதும் சரியான நிலைமையில் இருக்கின்றதா என்றும், தங்களிடத்தில் எந்தக் கசப்பும் இல்லை என்றும், தாங்கள் முடிந்தமட்டும் தயவாகவே காரியங்களைக் கண்ணோக்குகின்றார்கள் என்றும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். முதலாவதாக நாம் நம்மைத் திருத்திக்கொள்வோமாக - கர்த்தர் சொன்னதுபோலவே ஒருவேளை இவ்விவகாரம் உன் கண்களினின்று உத்திரத்தை எடுத்துப்போடுவதற்குரிய விவகாரமாக இருக்குமானால், முதலாவது உன் சொந்த கண்களினின்று உத்திரத்தை எடுத்துப்போடு மற்றும் பின்னர் நீ தெளிவான பார்வையை இப்படி அடையப்பெற்று, கண்களில் உத்திரத்தைப் பெற்றிருக்கும் வேறொரு சகோதரனுக்கு நீ ஆசீர்வாதமாயிருக்க முடியும்.

**(Q119:2) சபை - சபையில் கனம்பெறுவதற்கான தகுதியான அடிப்படை.**

கேள்வி (1915)-2- "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" என்று மத்தேயு 20:27-ஆம் வசனத்தில் --3177--

வாசிக்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் முதன்மையானவனாய் இருக்க விரும்புவது என்பது முறையான விருப்பம்தானா மற்றும் பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்களானது, இங்கு நம்மால் ஏறெடுக்கப்படும் ஊழியத்தினுடைய அளவின் அடிப்படையில்தான் வழங்கப்படுமா?

பதில் - தம்முடைய சீஷர்களுக்கு, அவர்களுக்கு இருக்கும் குறிப்பிட்ட பெலவீனம் ஒன்றினை - அதாவது பெரியவர்களாய்க் காணப்படுவதற்கான ஒரு விருப்பத்தினை - அதாவது மனுஷகுடும்பத்தில் பொதுவாய்க் காணப்படுகின்றதான ஒரு விருப்பத்தினை - பேராசையின்/குறிக்கோளின் ஆவியினைக் கர்த்தர் சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தார். இவ்வசனத்தினுடைய முந்தின வசனங்களானது, புறஜாதிகள் மத்தியில், சிலர் அடக்கி ஆளும் அதிகாரம் செலுத்துபவர்களாய்க் காணப்பட்டு, மற்றவர்களைத் தங்களுக்குப் பணிவிடைச் செய்யப் பண்ணுகின்றார்கள் என்றும், ஆனால் இவ்விதமாய் இயேசுவின் சீஷர்கள் மத்தியில் காணப்படலாகாது என்றும் தெரிவிக்கின்றது. சீஷர்கள் வேறே ஆவியினால் இயக்கப்படுபவர்களாய் இருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் பின்னடியார்களிடத்தில் - இறுமாப்பாய் ஆளுவதற்குரிய, மற்றவர்களை அடக்கி ஆளுவதற்குரிய ஆவி இருத்தல் கூடாது; மாறாக மற்றவர்களுக்கு ஊழியம் புரிந்திடுவதற்கும், மற்றவர்களுக்காகக் காரியங்களைச் செய்திடுவதற்கும் நாடிடும் அன்பின் ஆவியானது மற்றும் மற்றவர்களுக்காக ஊழியம் புரிய தனது தனிப்பட்ட நலனுக்கடுத்தவைகளைப் பலிச் செலுத்திட விரும்பும் ஆவியானது காணப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் நாம் இவ்வசனத்தினுடைய மற்ற வார்த்தைகளைப் பார்க்கின்றோம். கர்த்தருடைய ஜனங்கள் மத்தியில் சிலர் முதன்மையானவர்களாய்க் காணப்படுவார்கள்; இப்படியாகவே தாலந்துகளை அதிகமாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் மற்றும் குறைவாகப்பெற்ற நிலையிலுள்ள சிலரையும் பெற்றிருக்கும் எவ்விடத்திலும் - அதாவது தாலந்துகளில் சமமாய் இராத ஜனங்கள் காணப்படும் எந்த ஒரு கூட்டத்தில் அல்லது வகுப்பில் நிச்சயமாய்க் காணப்படும். யாரோ ஒருவர் முதன்மையானவராய் நிச்சயமாய்க் காணப்பட வேண்டும். முற்றும் முழுமையான சரிசமம் என்பது கூடாத காரியமாகும்.

தேவனுடைய பரிசுத்தவான்கள் மத்தியில், சபையை வழிநடத்திடுவதற்குச் சிலர் காணப்பட வேண்டும் என்பதும்கூடத் தகுதியானதே. அப்படியானால் யார் முதன்மையானவராய் இருக்க வேண்டும் என்பதற்கான தகுதிநிலை என்னவாக இருக்கும்? மற்றவர்களைப் பயமுறுத்தக்கூடிய ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையல்ல. ஆதிக்க வல்லுநராகவும், இனிமையான சொற்களைப் பேசுபவராகவும், ஏதோ சில தாலந்துகளைப் பெற்றிருப்பதன் காரணமாக அல்லது சிறப்பான கல்வியோ, ஐசுவரியமோ பெற்றிருப்பதன் காரணமாக - இவ்வகையான எதையாகிலும் பெற்றிருப்பதன் காரணமாக மாத்திரம் ஆதிக்கம் பண்ணுபவராகவும் இருக்கும் ஒருவர் முதன்மையானவராய் இருக்கலாமா? இல்லை; இது தகுதிநிலையாக இருக்க முடியாது. அப்படியானால், சபையில் முதன்மையானவர்களென அடையாளம் கண்டுகொள்ளப்படுபவர்களுக்குரிய தகுதிநிலை என்னவாக இருக்கும்?

### சுய மகிமைக்காக எந்த ஆசையும் கொள்ளாதீர்

ஊழியம்புரிவதற்கான ஆவியினை மிகுதியாய்ப் பெற்றிருப்பவர்களை நாம் நாடித்தேடிட வேண்டும் என்பதே எங்களுடைய பதிலாய் இருக்கின்றது. பெருமளவில் ஊழியம்புரிந்து, சபையாருக்குப் பெருமளவில் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தினைக் கொண்டுவருபவன் - அதாவது உண்மையாய் ஊழியம் புரிவதற்கென மிகவும் பிரயாசம் எடுக்கிறவன் - இத்தகையவனை முதன்மையானவனாகக் கருதுங்கள். நமது கர்த்தருடைய இந்த வார்த்தைகளானது, ஒரு தனிப்பட்ட நபருக்கென்று மாத்திரம் இல்லாமல், அப்போஸ்தலர்கள் அனைவருக்குமாகப் பேசப்பட்டபோதிலும், இவ்வார்த்தைகள் தனிநபருக்கும் பொருந்தும். நம்மில் எவரேனும் ஏதேனும் விசேஷித்த விதத்தில் ஊழியம்புரிய விரும்புவோமானால், நாம் உலகப்பிரகாரமான ஜனங்கள் போன்று செய்திடக்கூடாது என்கிற சிந்தையானது நம் ஒவ்வொருவருடைய இருதயத்திற்குள்ளும் கடந்துவர வேண்டும். நாம் அவர்களுக்கு எதிர்மாறான பாதையினை எடுத்துக்கொண்டு, மனுஷரிடமிருந்து வரும் எந்தக் கனத்தையும், கருத்தில் எடுத்துக்கொள்வதற்குத் தகுதியற்றதென முற்றிலுமாய் விட்டுவிட வேண்டும். இக்காரியத்தினைத் தேவன் தமக்கு நலமாய்த் தோன்றும் விதத்தில் கையாளத்தக்கதாக, அவரிடமாய் நாம் விட்டு விட்டு, சகோதரருக்கு ஊழியக்காரனாய் இருப்பதற்கு மாத்திரம்

--3178--

திருப்தியடைந்து இருக்க வேண்டும். இப்படியான விதத்தில் ஊழியம் செய்திடுவதற்கு நீங்கள் எவ்வளவாய் விருப்பமுடையவர்களாய் இருக்கின்றீர்கள் என்று கர்த்தர் காண்பாராக. எந்தக் குறிக்கோளும்/ஆசையும் இல்லாதவர், எதையும் செய்யமாட்டார். நாம் விதைத்தாலும் அல்லது உழுதாலும் அல்லது நாம் எதைச் செய்தாலும் நமக்குக் குறிக்கோள்கள் காணப்பட வேண்டும் - நாம் செய்துகொண்டிருக்கின்ற எதையும், திருப்திகரமான விதத்தில் செய்யும்படிக்குத் தூண்டிடுவதற்கு நமக்குக் குறிக்கோள் தேவையாய் உள்ளது. ஆகையால் சத்தியத்திற்கு ஊழியம்புரிவதற்கான வாய்ப்பு நமக்குக் கிடைக்கையில், முடிந்தமட்டும் மிகவும் ஆற்றல்மிக்க விதத்தில் அதற்கு ஊழியம் செய்திட நாம் நாடிட வேண்டும். இல்லையேல் நாம் கர்த்தருக்கு ஆற்றல்மிக்க ஊழியக்காரர்களாய் இருக்க முடியாது.

ஆனால் சுய மகிமைக்காக ஆசைப்பட்டு, முதன்மையானவர்களாக விரும்பும் எந்த ஒரு விருப்பத்தினையும் நாம் புறம்பே தள்ளிட வேண்டும். நம்மால் அறிய முடிந்திருக்கும் சிறந்த விதத்தில் கர்த்தருக்கு ஊழியம்புரிந்திட நாம் நாடிட வேண்டும். என்னைக்காட்டிலும் உங்களால் சில விதங்களில் கர்த்தருக்குச் சிறப்பாய் ஊழியம்புரிய முடிகிறதாய் இருக்கும் பட்சத்தில் மற்றும் உங்களிடமிருந்து நான் சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடிகிறதென்றால், அது நல்லது, நன்மையுமாகும். பிற்பாடு உங்களால் என்னிடமிருந்து ஏதோ சிலவற்றைக் கற்றுக்கொள்ள முடிகிறதென்றால், அப்படியே காணப்படுவதாக. உண்மைதான் விசேஷமாய்ப் பாராட்டத்தக்கதாய்க் காணப்படும் எதையும் நாம் பின்பற்றுகிறவர்களாய் இருந்து, கர்த்தருடைய காரணங்களை நடந்தேற்ற நம்மால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும். மேலும் இந்த ஊழியமானது, அன்பினால் இயக்கப்பட வேண்டும். அன்பினால் இயக்கப்படாத எந்த ஊழியமும், கர்த்தருடைய பார்வையில் அங்கீகரிக்கப்படுவதில்லை.

## தாழ்மை மிக முக்கியமான தேவை

கண்காணி ஊழியத்தினை விரும்புகிறவன் நல்ல ஊழியத்தை விரும்புகின்றான் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகின்றார். அது ஓர் உயர்வான ஊழியமாகும். இந்த ஊழியமானது, இன்றைய நாட்களில், பெயர்ச்சபை அமைப்புகளில் உயர்வான அதிகாரப்பூர்வமான பதவியாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது போன்று அப்போஸ்தலனுடைய நாட்களில் இருக்கவில்லை. அந்நாட்களில் கண்காணி என்பவர், ஆடுகளின் நலனுக்கடுத்தவைகளைப் பார்த்துக்கொள்ளும் சபையின் பெயரற்ற மற்றும் தாழ்மையான ஊழியக்காரன் ஆவார். சபையின் ஒவ்வொரு ஊழியக்காரனும், தன்னால் முடிந்தமட்டும் தேவனுடைய மந்தையின் மீது திறமிக்க மேற்பார்வையாளராக இருக்க விரும்பிட, நாடிட வேண்டும். இந்த மூத்த சகோதரர்கள் - சபையாருக்கான மேய்ப்பர்கள் மத்தியில், வெவ்வேறு இயல்பான திறமைகளை உடையவர்களாய்க் காணப்படுவார்கள். ஒவ்வொருவரும் தனது தாலந்துகளை, தனது வாய்ப்புகளை, கர்த்தருக்கான, சகோதரருக்கான மற்றும் சத்தியத்திற்கான ஊழியத்தில் பயன்படுத்திடுவதற்கு நாடிட வேண்டும்.

இன்றைய நாட்களிலுள்ள கர்த்தருடைய ஜனங்களில் ஒருவர், ஆண்டவர் இங்கு முன்வைக்கின்றதான நெறிமுறைகளை மறந்துபோவது என்பது பரிதாபத்திற்குரிய காரியமாகும். இத்தகையவர்கள் தாங்கள் மூப்பர் ஊழியத்திற்குச் சபையாருடைய, கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின கூட்டத்தாருடைய vote/வாக்கினால் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், கர்த்தருடைய ஜனங்களின் வாக்கானது, சபையினுடைய குரலாய் இருக்கின்றது என்றும் உணர்ந்துகொள்வதற்குப் பதிலாக, உரிமையின் காரணமாகத் தங்களுக்கு மூப்பர் ஊழியம் கிடைத்துள்ளது என்று எண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். பிரித்தெடுக்கப்பட்டவர்களுடைய, சபையினுடைய - vote/வாக்கினை முழுமையாய் ஏற்றுக்கொள்வதற்கு விருப்பமுள்ளவர்களாக, ஒவ்வொருவருடைய மனப்பான்மையும் காணப்பட வேண்டும் என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவன் மற்றவர்களோடு அனைத்திலும் பங்குகொள்வதன்மூலம், சபையாரில் ஓர் அங்கமாகியுள்ளானெனில், இவ்விதம் அவன் அதிகமான சதவீதத்தில் அல்லது ஓர் எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்களாய்க் காணப்படும் அதிகாரமுடைய பெரும்பான்மையானவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்குகளுக்குக் கீழ்ப்பட்டவனாகுகின்றான். இதைச் செய்த பிற்பாடு, அவன் மூப்பனாகவோ அல்லது வேறொருவர் மூப்பனாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இதே மனப்பான்மையினைத் தொடர்ந்து கொண்டிருக்க நாடிட வேண்டும்.

ஏற்ற தகுதிகளைக் கொண்டிராத ஒரு சகோதரனை மூப்பனாக தேர்ந்தெடுக்கும் தவறினைச் சபையார் மிக அடிக்கடி செய்துவருகின்றனர். இது அந்தச் சபையாரில் சிலருக்குக்

அதிருப்தியை ஏற்படுத்தி, சிலர் பிரிந்துபோய், இன்னொரு சபையினை ஏற்படுத்திடுவதற்கு வழிநடத்துகின்றதாய் இருக்கின்றது. இது ஞானமான நடக்கையாய் இராது என்று நாம் எண்ணுகின்றோம். ஒருவேளை அந்தச் சபையார் தவறு செய்துவிட்டார்களெனில், அதை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிடுவதற்குக் கர்த்தர் வல்லவராய் இருக்கின்றார்; மற்றும் பிரிந்துபோய்விடுபவர்கள் தங்களுக்கு விலையேறப்பெற்றதாய்க் காணப்படுவதற்கு ஏதுவான சில அனுபவங்களை இழந்துபோகின்றவர்களாய் இருப்பார்கள்.

எனினும் சபையார் தவறு செய்துவிட்டனர் என்று நாம் எப்போதும் உறுதியாய்ச் சொல்லிட முடியாது. இவ்விஷயத்தில் கர்த்தர் படிப்பினைகள் சிலவற்றை வைத்திருக்கிறார் என்பதை நாம் எப்படி அறிவோம்? தேர்ந்தெடுக்கப்படுபவர் யாராயிருப்பினும், அவருக்காக நாம் கர்த்தருடைய ஆசீர்வாதத்தினை வேண்டியிருப்போமானால், அந்தத் தேர்வுடன் நாம் இணங்கிப்போக வேண்டும். தேர்ந்தெடுக்கப்படாதவர் ஒருவேளை சத்தியத்தினை நன்றாய் முன்வைத்திடுவதற்கான ஆற்றல் உடையவராகவும், தான் பயன்படுத்தப்படுவதற்கும், பயனாய்க் காணப்படுவதற்கும் ஏதுவான அநேகம் இடங்களை அறிவாரானால், அச்சகோதரன் தனக்கு வரும் எந்த ஒரு வாய்ப்பினையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் சபையை விட்டுப் பிரிந்து செல்ல தேவையில்லை. தன் கையில் கிட்டும் எந்த ஊழியத்தினையும் அவர் புரிந்திடலாம். அநேகமாக அவர் தனது நேரத்தையும், தாலந்துகளையும் புதிய வகுப்புகளை உருவாக்கும் வேலையில் (class extension work) பயன்படுத்திடலாம் - இதுவிஷயத்தில் தான் மூப்பராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை எனும் காரணம் தனக்குத் தடையாக இருக்கின்றது என்று கருதிட வேண்டாம். அவர் கடந்துபோய், ஊழியங்களுக்கான வாய்ப்புகளைக் கண்டடையலாம். ஆகையால் மூப்பர்களாக வேறு சகோதரர் வந்திருக்கும் காரியமானது, தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு அல்லது மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படாத சகோதரனுக்கு - அவர் பயனாகும் வேறொரு களத்தினைக் கர்த்தர் சுட்டிக்காட்டுவதைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கூடுதலாய்ப் பயன்படும் விதத்தில் கர்த்தருடைய வழிநடத்துதலானது அவரை நடத்திடலாம்.

உலகத்தின் மனுஷர்கள் நம்மைக்குறித்து என்ன சொல்லுவார்களோ அல்லது என்ன எண்ணுவார்களோ என்ற எண்ணத்தினால் நாம் தாக்கத்திற்குள்ளாகுதல் கூடாது. இது முக்கியமற்றக் காரியமாகும்; மற்றும் சபை என்ன எண்ணுமோ என்பதும் முக்கியத்துவமற்றக் காரியமாகும். நாம் கர்த்தரைப் பிரியப்படுத்திடவே நாடிட வேண்டும். நாம் நம்மைக்குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், நம்முடைய கணிப்பில் மற்றவர்களுக்கு முன்னுரிமைக் கொடுப்போமாக. பரலோக இராஜ்யத்தில் ஸ்தானங்கள் அருளப்படுவது என்பது, பரிசுத்த ஆவியினுடைய கனிகளின் வளர்ச்சியினுடைய அளவின் அடிப்படையிலேயே ஆகும் என்று நாம் புரிந்திருக்கின்றோம் மற்றும் இது கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியம் கொள்வதற்கு வழிநடத்திடும் அன்பினைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது.

**(Q125:1) சபை - சிலர் யாரையும் சார்ந்திராமல் செயல்படுதல்.**

கேள்வி (1916)-1- ஓர் இடத்திலுள்ள வேதமாணவர்கள், அவ்விடத்திலுள்ள சபையின் அங்கத்தினர்களாக இருந்து, ஒரு குழுவாக யாரையும் சார்ந்திராமல் செயல்படலாமா?

பதில் - ஐயத்திற்கிடமின்றி ஓரளவிற்குக் கிறிஸ்தவ சுயாதீனம் காணப்படவே செய்கின்றது. இதனை ஜனங்கள் செயல்படுத்துகையில் கர்த்தர் பிரியமே கொள்வார் என்று நாம் நம்புகின்றோம். உதாரணத்திற்கு ஒரு சகோதரன், இன்னொரு சகோதரனுடைய இல்லத்திற்குச் செல்கின்றார் என்று வைத்துக்கொள்வோம் மற்றும் மாலை வேளையினைச் செலவழிக்க இரண்டு அல்லது மூன்று அயலகத்தார் வருகின்றார்கள். ஒருவர்: "வாருங்கள் நாம் சதுரங்க விளையாட்டு (chess) விளையாடலாம்" என்று கூற, மற்றவரோ: "வேண்டாம், நாம் வேத ஆராய்ச்சி பண்ணிடலாம்" என்று கூறுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். ஆனால் "இல்லை, நாம் வேத ஆராய்ச்சி செய்திட முடியாது; காரணம் இதற்கு நம்முடைய சபையாரால் அதிகாரம் வழங்கப்படவில்லை; ஆகையால் நாம் சதுரங்க விளையாட்டினை விளையாடலாம்" என்று கூறிடுவது கர்த்தருடைய சித்தமாய் இருக்குமென நாம் எண்ணுகிறதில்லை. இந்த இல்லத்தில் சபையாரால் கூட்டம் ஒழுங்குபடுத்தப்படவில்லை என்றாலும், வேத ஆராய்ச்சிச் செய்திடுவதற்கோ அல்லது வேதாகமம் சம்பந்தமாய் உரையாடுவதற்கோ எந்த ஆட்சேபணையும் இல்லை என்று நாம் நியாயமாய்ப் பகுத்தறிந்திடலாம். இல்லத்தின் உரிமையாளரான சகோதரன்: "அடுத்த வாரத்தில் இன்னொரு கூட்டத்திற்கு வரும்படிக்கு நான் இன்னும் சில

அயலகத்தாரைக் கேட்டுக்கொள்வேன். இக்காரியங்களைக் குறித்தெல்லாம் நான் அவர்களிடம் கூறுவதற்கு முயற்சித்திருக்கின்றேன் மற்றும் நீங்கள் பேசுவதை அவர்களைக் கேட்கப்பண்ணுவதில் நான் சந்தோஷம் அடைவேன்" என்று கூறிடலாம். இப்படியான நடக்கையில் எந்தத் தவற்றையும் என்னால் காண முடியவில்லை. ஒருவேளை கலந்துகொள்பவர்கள், நிரந்தரமான கூட்டத்தினை விரும்புவார்களானால், அது வழிநடத்துபவர்களை அனுப்பிவைக்கும் I. B. S. A.-இன் உள்ளூர் சபையாரிடத்தில் ஒப்படைக்கப்படவேண்டும்.

ஆனால் சபையாரில் சிலர்: "நாம் வேறொரு நிரந்தர கூட்டத்தினைத் துவங்கலாம்" என்று கூறுவார்களானால், இது முற்றிலும் வேறு விவகாரமாய்க் காணப்படும். அவர்களுக்கு ஒரு புதிய சபையை உருவாக்கிடுவதற்கு உரிமை உண்டு; ஆயினும் அப்படிச்செய்யும்போது, அவர்கள் ஏற்கெனவே இங்குக் காணப்பட்ட சபையாரிடமிருந்து (original ecclesia) பிரிந்து செல்பவர்களாய் இருப்பார்கள். இவர்கள் மறுபடியும் இங்கு வந்து, "இங்கும், நாங்கள் வாக்குகள் செலுத்துவோம்" என்று கூறிட முடியாது. நாம் செய்கிற செயல்களுக்கு நிலையான தன்மை இருத்தல் வேண்டும். ஒரு சபையில் அங்கத்தினர்களாகிவிடும் அனைவரும், ஒத்துழைப்பின் பலனை அடையத்தக்கதாகக் கிட்டத்தட்ட தங்களது, தனிப்பட்ட சுயாதீனங்களை ஒப்புக்கொடுப்பவர்களாக இருக்கின்றனர். ஆனால் இது நாம் வேத ஆராய்ச்சிச் செய்யக்கூடாது, இதற்குப் பதிலாக மாலை வேளையினை விளையாட்டு விளையாடி களித்திட வேண்டும் எனும் அடிமை நிலையினைக் குறிப்பதாகாது.

**(Q101:1) சபை - கீழ்ப்படிதல் விஷயத்தில் மனசாட்சித் தவிர்க்கப்படுதல்/அடக்கிக்கொள்ளப்படுதல்.**

கேள்வி (1909)-1- நம்முடைய கணிப்புகளானது, கீழ்ப்படிதலுடைய கொள்கை சம்பந்தப்பட்ட விஷயத்தில், நம்மால் எந்தமட்டும் தவிர்க்கப்படலாம்/அடக்கிவைத்துக்கொள்ளப்படலாம்?

பதில் - நம்முடைய கணிப்புகளானது அடக்கிவைக்கப்படுவது என்பது ஒரு காரியமாகவும், நம்முடைய மனசாட்சி அடக்கிவைக்கப்படுவது இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது. நம்முடைய மனசாட்சி அல்லது நம்முடைய கணிப்புகள் - இவற்றில் எது அடக்கப்பட வேண்டும் என்று கேள்வி எழுப்பப்பட்டால், நம்முடைய கணிப்புகள் அடக்கிவைக்கப்படுவதே நலமானதாய் இருக்குமென நான் பதிலளிப்பேன்; ஏனெனில் நமது மனசாட்சியினை நாம் அடக்கிவைக்கக்கூடாது. ஒருவேளை விஷயம், கணிக்க/பகுத்தறிய வேண்டிய விஷயமாக மாத்திரமே இருக்குமானால், மேலும் அவ்விஷயத்தில் கணிக்க/பகுத்தறிய வேண்டிய பொறுப்பும் நம்மீது கடந்துவராததாய் இருக்குமானால், அதைச் சபையாரிடத்திலேயே விட்டுவிடுங்கள். நீங்கள் கணித்தவைகளை/பகுத்தறிந்தவைகளை மற்றவர்களிடத்தில் ஒப்புவியுங்கள் - உங்கள் கருத்தினை மற்றவர்களுடைய தீர்மானத்திற்கென்று ஒப்புவியுங்கள். மற்றவர்களுடையதைக்காட்டிலும், நீங்கள் பகுத்தறிந்திருப்பவைகள் மேம்பட்டுக் காணப்படும் பட்சத்தில், அதை மற்றவர்களுக்குச் சொல்வதற்கு நீங்கள் கடமைப்பட்டிருக்கின்றீர்கள் மற்றும் பிற்பாடு அமைதலாய் இருங்கள். இல்லையேல் நீங்கள் - தான் பார்ப்பதுபோன்று மற்றப் பதினொரு மனிதர்களும் பார்க்கவில்லை என்பதினால், அந்த பதினொரு பேருக்கும் அறிவில்லை என்று சொல்கிற Juryman/முறைகாண் ஆய உறுப்பினர் (நீதிமன்றத்தில் தங்களுக்கு முன்கூறப்பட்ட வழக்கில் முடிவு தெரிவிப்பதாக ஆணையிட்டு அமர்ந்திருக்கும் குழுமத்தின் உறுப்பினர்) போன்று காணப்பட்டுவிடுவீர்கள்.

---

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**1. (Q372:2) இயேசு - ஜீவ-உரிமைகள்.**

கேள்வி (1911)-2- அர்ப்பணிப்புச் செய்தபோது இயேசு தம்முடைய ஜீவ-உரிமைகளைக் laid down/கொடுத்து வைத்துவிட்டாரெனில், அவரது உயிர்த்தெழுதலில் அவர் இன்னமும் அவற்றை எப்படிப் பெற்றிருக்கிறவராகக் காணப்பட முடியும்?

பதில் - நாம் ஆங்கில மொழியினை இதுவரையிலும் சரிவர கற்றிராததாகத்தான் தோன்றுகின்றது அல்லது நாம் வெவ்வேறு பள்ளிகளில் பயின்றவர்களாகவும், வெவ்வேறு அகராதிகளைப் பெற்றிருந்தவர்களாகவும் தோன்றுகின்றது - ஏனெனில் இந்த ஒரு கருத்தினை, மனதில் ஒரேமாதிரியான சிந்தனையுடைய கர்த்தருடைய ஜனங்கள், வெவ்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தி வெளிப்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றனர். இப்பொழுதும் ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்தல் (lay down life-rights) என்றால் என்ன?

இயேசு தம்மை அர்ப்பணிக்கையில், "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன்" என்று கூறினபோது, அவர் எதை lay down/ ஒப்படைத்தார்? அவர் தமது சித்தத்தை ஒப்படைத்தார். அவருடைய சித்தத்தில் எவைகளெல்லாம் உள்ளடங்குகின்றது? அவருக்குச் சம்பவிக்கவிருக்கும் அனைத்தையும் - அவரது ஜீவனையும், எல்லா வகையான அவரது உரிமைகள் அனைத்தையும், அவரது சித்தமானது உள்ளடக்கினது; அவர் தம்முடைய முழுச்சித்தத்தை, தமது முழு இருதயத்தைத் தேவனுக்குக் கொடுத்தபோது, அது அனைத்தையும் உள்ளடக்கினதாக இருந்தது. அப்படியானால் அவரிடத்தில் ஜீவ-உரிமைகள் எஞ்சி காணப்படவில்லையா? இருதயமானது அவருக்கு எஞ்சி காணப்பட்டது மற்றும் சிலுவையில் "முடிந்தது" என்று சத்தமிடுவது வரையிலும் ஒப்படைப்பதற்கு அவரிடம் அந்த ஜீவன் எஞ்சியிருந்தது; ஆகையால் அவர் ஒருவிதத்தில் அவருடைய ஜீவனை ஒப்படைக்கவில்லை மற்றும் அவர் இன்னொரு விதத்தில் அதை ஒப்படைத்தவராகவே இருந்தார்; பிதாவின் சித்தமாக இருக்கும் எதற்கும் தாம் தடைச் சொல்வதில்லை என்றும், பிதாவின் சித்தம் என்னவாக இருப்பினும், தாம் அதைச் செய்வார் என்றும் ஒப்புக்கொண்ட விதத்தில், அவர் அதைக் கொடுத்து வைத்தவராய் இருந்தார். இந்த விதத்தில் அவர் தம்முடைய அனைத்தையும் அர்ப்பணம் பண்ணினார். ஒரு பொருளை lay it down/கொடுத்து வைப்பது என்பது ஒரு காரியமாகவும், அதனை apply/பயன்படுத்திடுவது என்பது இன்னொரு காரியமாகவும் காணப்படுகின்றது. என்னுடைய தொப்பியை இங்கு ஏதோ ஓரிடத்தில் laid down/கழற்றி வைக்கின்றேன் என்று வைத்துக்கொள்ளலாம், ஆனால் அதற்கென்று அது என்னுடைய தொப்பியல்ல என்றாகாது, அப்படித்தானே? என்னுடைய தொப்பி இப்பொழுது எங்கே காணப்படுகின்றது என்றுகூட எனக்குத் தெரியாமல் இருக்கலாம், ஆனால் என்னுடைய தொப்பியை நான் கழற்றி வைத்துள்ளேன்; அதை நான் யாரோ ஒருவர் வசத்தில் கொடுத்து வைத்துள்ளேன். இனிமேல் அந்தத் தொப்பிக்கும், எனக்கும் சம்பந்தமில்லை என்றாகாது. அந்தத் தொப்பியை நான் யார் வசத்தில் கொடுத்து வைத்திருக்கின்றேனோ, அவர் உங்களிடத்திற்கு அதைக் கொடுக்கும்படிக்கு அவரிடம் நான் கூறக்கூடாது என்றும் இல்லை. நான் அதைக் கழற்றிவைத்துவிட்டேன்; இன்னொருவர் வசத்தில் அதைக் கொடுத்து வைத்திருக்கின்றேன்; அவர் உங்களிடத்திற்கு அதைக் கொடுக்கும்படிக்கு என்னால் அவரிடம் சொல்லிட முடியும். இப்படியாகத்தான் நமது கர்த்தராகிய இயேசுவும் தமது முழு ஜீவியத்தையும் பிதாவின் கரத்தில் வைத்தவராக, ஒன்றையும் விட்டுவிடாமல் ஒவ்வொரு விஷயத்திலும் பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக தாம் ஆயத்தமாயும், விருப்பமாயும் இருப்பதாகத் தெரிவித்தார். பிதாவின் சித்தப்படி சோதனைகளும், அனுபவங்களும் அவருக்குக் கடந்துவந்தது; இறுதியானது சிலுவையில் மரணமாகும்; மற்றும் அவர் உண்மையுள்ளவராய் இருந்தார்; அவர் எதற்கும் மறுக்கவில்லை, கடைசிமட்டும் தம்முடைய ஜீவனைக் கொடுத்து வைக்கும்படியாக அனுமதித்து, கொடுத்து வைத்திடும் வேலையினை நிறைவேற்றினார்; ஆனால் அந்த ஜீவனுக்கான உரிமை அவருக்கில்லை என்றாகாது; அவர் தம்முடைய ஜீவனைத் துறந்துவிடவில்லை. ஒரு பொருளைக் கீழே வைப்பது அல்லது அதை ஒருவர் வசத்தில் ஒப்புவிப்பது என்பது துறந்துவிடுவதாகாது.

ஆகையால் இயேசு பெற்றிருந்ததும், பிதாவிடம் அவரால் ஒப்புவிக்கப்பட்டதுமான இந்த ஜீவ-உரிமைகளானது, அவரால் துறக்கப்படவில்லை, மாறாக அதைக் கொடுத்து விடுவதற்கென்று (give it away) அவர் இன்னமும் அதை வைத்துவைத்திருக்கின்றார். கொடுத்துவிடுவதற்கென்று அவர் ஒருவேளை இந்த ஜீவ-உரிமைகளைப் பெற்றிருக்கவில்லையெனில், இந்த உரிமைகள் மீது அவருக்கு ஒருவேளை எந்த அதிகாரமும் இல்லையெனில், இவைகளுக்கடுத்த எந்த உரிமைகளும் அவருக்கு ஒருவேளை இல்லையெனில், அவரால் ஒருபோதும் உலகத்தினுடைய இரட்சகராகிட முடியாது; ஏனெனில் இந்த ஜீவ-உரிமைகளைத்தான் அவர் தியாகமாக ஒப்புக்கொடுத்திட்டார் அல்லது பொல்லாத மனிதர்களினால் கல்வாரியில் வைத்துத் தம்மிடமிருந்து எடுக்கத்தக்கதாக அனுமதித்திருந்தார்; இந்த ஜீவனுக்கான உரிமைகள்தான் உலகத்திற்கு அவசியமானவையாகும் மற்றும் தேவனுக்கும், மனுஷனுக்கும் இடையில் மாபெரும் மத்தியஸ்தரென அதைப் புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின் கீழ் மனுக்குலத்தின் உலகத்திற்குக் கொடுத்துவிடுவதற்கு அவர் நோக்கம் கொண்டுள்ளார். இந்த ஒரு நோக்கத்திற்காகத்தான், உலகத்திற்கு அவர் இந்தப் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளைக் கொடுத்துவிடத்தான், தேவன் அவர் ஓர் இராஜ்யத்தைப் பெற்றிருக்க ஏற்பாடு பண்ணினார்; அவர் உலகத்தை ஆளவும், அவர்களுக்குப் போதிக்கவும், அவர்களுக்காக அவர் கொடுத்துவிடவிருக்கின்றதை, அவரது நிபந்தனைகளின் கீழ், அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தமாகத்தக்கதாக, அவர் என்ன கொடுத்துவிடவிருக்கின்றார் என்பதைக் குறித்த உணர்ந்துகொள்ளுதலுக்குள்ளாக அவர்களை அவர் கொண்டுவரவும் தேவன் ஏற்பாடுபண்ணினார்.

**2. (Q373:1) இயேசு ஜீவ-உரிமைகளைக் கொடுத்தல்.**

கேள்வி (1911)-1- யோர்தானிலும், பெந்தெகொஸ்தே நாளிலும் இயேசுவினால் எப்படித் தம்முடைய ஜீவிக்கும் உரிமைகளை, இருமுறை கொடுக்க இயலும்?

பதில் - பெந்தெகொஸ்தே நாளில் அவர் ஜீவ-உரிமைகள் எதையும் கொடுக்கவில்லை. அவர் யோர்தானில் தமது ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்துவிட்டார்/ஒப்புக்கொடுத்திட்டார். பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக அவர் தமது ஜீவ-உரிமைகளைக் கொடுத்து வைத்துவிடும் காரியத்தினைக் கல்வாரியில் நிறைவேற்றி முடித்தார். அவர் அங்குத் தம்மைக் கொடுத்து வைத்துவிடும் காரியத்தினை நிறைவேற்றி முடித்தார்; ஆனால் இப்படியாக அவர் தம்மைக் கொடுத்து வைத்துக்கொண்டிருக்கும் காரியமானது, புண்ணியத்தினைப் பயன்படுத்திடும் காரியத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட காரியமாகும். இந்த ஒரு காரியமே சில மனங்கள் கிரகித்துக்கொள்வதற்கு மிகவும் சிரமமான காரியமாய்த் தென்படுகிறது. ஏன் என்று எனக்குப் புரியவில்லை. என்னுடைய மனதிற்கு இது எளிமையாய்ப் புரிந்துகொள்ளப்படுகின்ற காரியமாய் இருக்கின்றது; ஆனால் நமது கர்த்தர் அர்ப்பணிப்பின்போது தம்முடைய ஜீவனைக் கொடுத்து வைக்க ஒப்புக்கொடுத்ததற்கும், அதைக் கல்வாரியில் உண்மையாகவே நிறைவேற்றி முடித்ததற்கும் மற்றும் புண்ணியத்தினை "மகா பரிசுத்த ஸ்தலத்தில்" அவர் பயன்படுத்துவதற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தினைக் காண்பது என்பது சில மனங்களுக்கு மிகவும் சிரமமான காரியமாய் இருக்கின்றது. இது விஷயத்தில் உங்களுக்கு உதவிச் செய்யத்தக்கதாக நான் ஒரு பூமிக்கடுத்த உதாரணத்தைப் பயன்படுத்த இருக்கின்றேன்; இதோ அது என்னவெனில்: உங்களிடத்தில் சொத்து ஒன்று இருக்கின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் அதைப் பத்தாயிரம் டாலருக்கு நீங்கள் விற்றுள்ளீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். "பத்தாயிரம் டாலருக்கென்று எனக்கொரு விசேஷித்த நோக்கம் அல்லது தேவை இருக்கின்றது மற்றும் அந்தச் சொத்தை விற்றுவிடுகின்றேன்" என்று நீங்கள் சொல்லுகின்றீர்கள். முதலாவதாக நீங்கள் (sale-deed) கிரயப்பத்திரம் கொடுப்பதாக முகவரிடம்/காரியஸ்தனிடம் ஒப்பந்தம் போட்டுக்கொள்வீர்கள். இக்காரியமானது யோர்தானில் நமது கர்த்தரினால் பண்ணப்பட்ட உடன்படிக்கை காரியத்திற்கு ஒத்திருக்கின்றது. கொஞ்சம் காலம் கழித்து, அதாவது ஒரு மாதம் கழித்து, நீங்கள் கிரயப்பத்திரத்தில் கையெழுத்திடுவீர்கள் -- அச்சொத்தின் மீதான உங்கள் விருப்பம் யாவற்றையும் விட்டுவிட்டு, பத்தாயிரம் டாலரைப் பெற்றுக்கொண்டு, அதை வங்கியில் வைப்புத் தொகையாகப் போட்டுவிடுவீர்கள் (deposit). வங்கியில் அந்தப் பணம்தான், அந்தச் சொத்தை விற்றதன் பலனாகக் காணப்படுகின்றது. அந்தப்பணம்

(வங்கியில் இருப்பினும்) அது இன்னமும் உங்களுடையதுதான்; சொத்தை விற்றுக்கிடைக்கும் பலனைக்கொண்டு ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படியாக, அச்சொத்தை நீங்கள் விற்றிருக்கின்றீர்கள்; மற்றும் அந்தப்பலன், வங்கியில் காணப்படும் பத்தாயிரம் டாலராகும். சில குறிப்பிட்ட காரணத்திற்குப் பயன்படுத்தும்படி அந்தப்பணத்தை எடுக்கத்தக்கதாக, வங்கிக்கு நீங்கள் காசோலைக் கொடுத்திடலாம் அல்லது வேண்டுகோள் விடுத்திடலாம்.

இந்த நான்கு கட்ட காரியங்களானது, நமது கர்த்தருடைய நான்கு செயல்களுக்கு ஒத்திருக்கின்றது. காரியக்காரனிடத்தில் ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவது போன்று நமது கர்த்தர் முதலாவதாகத் தம்முடைய அர்ப்பணிப்பை ஏறெடுத்தார்.

கிரயப்பத்திரத்தில் கையெழுத்திடப்பட்டு, கிரயத்தினை நிறைவேற்றுவது போன்று நமது கர்த்தர் இரண்டாவதாகக் கல்வாரியில் காரியத்தினை நிறைவேற்றி முடித்தார்.

பணமானது வங்கியில் வைக்கப்பட்டிருக்கும் கணக்கில் வந்தடைவது போன்று, மூன்றாவதாக நமது கர்த்தர் தம்மைப் பிதாவின் கரங்களில் கையளித்துவிட்டார் - "உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார்

வங்கியில் காணப்படும் பணத்தை நீங்கள் வைப்புத்தொகையாக வைத்திருப்பது (deposit) அல்லது பயன்படுத்துவதுபோன்று, நான்காவதாக நமது கர்த்தர் பிதாவின் கரங்களில் காணப்பட்ட அந்தப் புண்ணியத்தினைக் கிரயமாக (deposit) வைத்திருந்தார் அல்லது அதைப்பயன்படுத்துவார். அது உங்கள் கணக்கில் காணப்படும். உங்களால் மாத்திரமே காசோலையைக் கொடுக்க முடியும். இதுபோலவே நமது கர்த்தருடைய புண்ணியமும் பிதாவின் கரங்களில் தம்முடைய சொந்த கணக்கிலேயே காணப்பட்டது மற்றும் அவராலும் காசோலைக்கொத்த காரியத்தைச் செய்யலாம் மற்றும் அந்தப் புண்ணியத்தைச் சாற்றிடலாம் மற்றும் அப்போஸ்தலன் கூறியுள்ளது போன்று அவர் அப்புண்ணியத்தினை நமக்குச் சாற்றியுள்ளார். மேலும் அது நமக்குச் சாற்றப்பட்டுள்ளதற்கு ஆதாரம், பெந்தெகொஸ்தே நாளின்போது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் சில அங்கத்தினர்கள் மீது ஆசீர்வாதம் கடந்துவந்ததில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

**3. (Q444:1) ஜீவ-உரிமைகளுக்கான தேவை.**

கேள்வி (1911-Z4922)-1- தம் வசத்தில் ஒருவேளை பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமைகளைக் கிறிஸ்து பெற்றிருக்கவில்லையெனில், அவரால் உலகத்திற்கான நித்திய பிதாவாக முடியுமா?

பதில் - ஒருவேளை நமது கர்த்தராகிய இயேசு ஆயிரவருட ஆளுகையின்போது ஆதாமிற்கும், அவரது சந்ததிக்கும் பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை கொடுத்துவிடுவதற்கென, அந்த உரிமையினைச் சொத்தாகப் பெற்றிருக்கவில்லையெனில், அவரைக்குறித்து அந்தச் சந்ததியின் பிதா என்று கூறமுடியாது. கொடுத்துவிடுவதற்கென்று ஜீவனை - பூமிக்குரிய ஜீவன் ஒன்றை அவர் பெற்றிராதது வரையிலும் அவரால் மனுக்குலத்தின் சந்ததியை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது.

**4. (Q445:1) ஜீவ-உரிமைகளானது இயேசுவினால் சபைக்குச் சாற்றப்பட்டுள்ளதா?**

கேள்வி (1912)-1- ஜீவ-உரிமைகளை இயேசு சபைக்குத் தரிப்பித்துள்ளதாக/ சாற்றியுள்ளதாகத் தாங்கள் போதிக்கின்றீர்களா?

பதில் - உண்மையில் அப்படித்தான்! இயேசு இரண்டு ஜீவ-உரிமைகளை உடையவராயிருந்தார். மனிதனென ஜீவிப்பதற்கென உரிமை ஒன்றினை அவர் பெற்றிருந்தார். அவர் தமது பூமிக்குரிய ஜீவனை laid down/கொடுத்து வைத்திட்டார்; அது அவரிடமிருந்து forfeit/பறிமுதல் செய்யப்படவில்லை. அதை அவர் திவ்விய ஏற்பாட்டிற்கு இசைவாக "மரணபரியந்தம்" laid down/கொடுத்து வைத்திட்டார். அவரால் கொடுத்து வைக்கப்பட்ட அது இன்னமும் அவருடையதே. உதாரணத்திற்கு என்னுடைய புத்தகத்தை நான் இங்கே மேஜையில் வைத்துள்ளேன் (laid down) என்று வைத்துக்கொள்ளுங்கள் மற்றும் அது கொஞ்சம் நேரம் மேஜையிலேயே இருக்கட்டும்; எனினும் அது இன்னமும் என்னுடையதே மற்றும் நான்

திரும்பிவந்து, மீண்டும் எனது புத்தகத்தை எடுத்துக்கொள்வதற்கு முழு உரிமையுடையவனாக இருக்கின்றேன். அப்படித்தானே? இயேசு தமது ஜீவனைப் பறிக்கொடுக்கவில்லை. அவர் தாமே முன்வந்து தம் ஜீவனைக் கொடுத்து வைக்க மாத்திரமே செய்தார். "அதைக் கொடுத்து வைப்பதற்கும் மற்றும் மறுபடியுமாய் வந்து பெற்றுக்கொள்வதற்கும் அதிகாரம் காணப்படுகின்றது." மரணத்திலிருந்து அவர் உயிர்த்தெழுவதற்கான வேளை வந்தபோதோ, அவர் திவ்விய தளத்தில் தேவனுடைய குமாரனென, உயர்த்தளத்தில் ஜீவனைப் பெற்றுக்கொண்டார். அது அவர் தமது ஜீவனை ஒப்படைத்ததற்கான வெகுமானமாகும். இது "வெகுமான ஜீவனாகும்." இது அவருக்கான தேவனுடைய அன்பளிப்பாகும். இது மரணம் வரையிலுமான அவரது கீழ்ப்படிதலுக்கான வெகுமானமாகும். பூமிக்குரிய ஜீவனுக்கான உரிமையினை அவர் இன்னமும் உடையவராயிருந்தார், ஆனால் வெகுமதியாக அவருக்குத் திவ்விய ஜீவன் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திவ்விய ஜீவனை அவர் பெற்றவராயிருக்க, பூமிக்குரிய ஜீவனுக்கான அந்தப் பூமிக்குரிய உரிமையையும்கூட அவர் உடையவராயிருந்தார் மற்றும் அதை அவர் விருப்பம் போல் கையாள முடிந்தவராய்க் காணப்பட்டார். அது தேவனுடைய கரங்களில் காணப்பட்டது;"பிதாவே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கின்றேன்." இதை அவர் யாருக்கேனும் apply/பயன்படுத்தினாரா? இல்லை! இயேசு திவ்விய ஜீவனுக்கான உரிமையினை உடையவராயிருந்தது போன்று, அவர் தம்முடைய பூமிக்குரிய உரிமைகளையும் இன்னமும் உடையவராயிருந்தார். பூமிக்குரிய ஜீவனுக்கான தம்முடைய உரிமைகளை அவர் உலகத்திற்குக் கொடுத்துவிடுவதற்கு நோக்கம் கொண்டுள்ளார். பூமிக்குரிய ஜீவனுக்கான இந்த உரிமைகளை ஆதாமுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் வழங்குவதே, இந்த ஏற்பாடுகளைப் பண்ணினதற்கான தேவனுடைய நோக்கமாய்க் காணப்படுகின்றது. ஆனாலும் இப்பொழுதல்ல! அவர் இப்பொழுது ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாகிய சபையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கின்றார். இயேசுவின் மூலமாய் பிதாவினிடத்திற்கு வருகிற நம் அனைவருக்கும், இயேசு "உத்தரவாதமாகிறார்." இப்படியே அவர் - தங்கள் சரீரங்களை "ஜீவபலிகளாக" ஒப்புக்கொடுத்துள்ள அனைவருக்கும் இருக்கின்றார். இவர்களைத் தம்முடைய சொந்த புண்ணியத்தின் வாயிலாக ஏற்றுக்கொண்டு, நிறுத்துகின்றார். புண்ணியத்தினால் imputation/சாற்றப்படுவதற்கும், அது கொடுத்துவிடப்படுவதற்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகின்றது. ஒருவேளை நீங்கள் என்னிடம் பணம் கொஞ்சம் கேட்க மற்றும் நான் உங்களுக்குக் காசோலை ஒன்றின் பின்னால் சம்மதம் எழுதிக்கொடுத்தால், அந்தக் காசோலையை நீங்கள் வங்கியில் சமர்ப்பித்து, அதற்குரிய பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். இப்படியே இயேசுவின் புண்ணியத்தினுடைய விஷயத்திலும் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லலாம். அவர் தமது பூரண முழுமையினுடைய புண்ணியத்தினை நமக்குத் தரிப்பிக்கின்றார் அல்லது சாற்றுகின்றார் மற்றும் இப்படியாக நாம் நம்மைத் தேவனுக்கு முன்பு பரிசுத்தமான, ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதான நிலைமையில் ஒப்புக்கொடுத்திடலாம்.

**5. (Q446:4) ஜீவ-உரிமைகள் -- ஜீவிப்பதற்கான உரிமை.**

கேள்வி (1916-Z5881)-4- "ஜீவிப்பதற்கான உரிமை" மற்றும் "ஜீவ-உரிமைகள்" ஆகிய வார்த்தைகள் அர்த்தப்படுத்துவது என்ன? இவ்விரண்டு பதங்களுக்கு இடையிலான வித்தியாசம் என்ன?

பதில் - தேவனுடன் இசைவாய்க் காணப்படுவதன் மூலம் ஜீவிப்பதற்கான உரிமையினை ஒருவர் பெற்றுக்கொள்ளலாம்; காரணம் தம்முடைய அறிவுடைய சிருஷ்டிகள் யாவும், தம்முடைய திவ்விய பிரமாணங்களுக்கும், அதன் நிபந்தனைகளுக்கும் இசைவாய் ஜீவிக்கும் பட்சத்தில் தொடர்ந்து ஜீவிக்கலாம் என்று தேவன் ஏற்பாடு பண்ணியிருந்தார். ஆகையால் ஜீவிப்பதற்கான உரிமை என்பது ஆரம்பத்தில் தகப்பனாகிய ஆதாமினால் அனுபவிக்கப்பட்ட சிலாக்கியமாய்க் காணப்படுகின்றது. அவர் ஜீவிப்பதற்கான உரிமை ஒன்றினைப் பெற்றவராயிருந்தார் மற்றும் அவர் பாவம் செய்யாதிருந்தாரானால் அந்த உரிமையானது அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டிருக்காது. இயேசுவும்கூட ஜீவிப்பதற்கான உரிமை ஒன்றினைப் பெற்றிருந்தார். உலகத்திற்குள் வருவதற்கு முன்பு மாத்திரமல்லாமல், மனிதனாகிய இயேசுவான பிற்பாடும் அவர் அந்த உரிமையினை உடையவராயிருந்தார். அந்த உரிமையின்

காரணமாகத்தான் அவரால் தம்முடைய ஜீவனை ஆதாம் மற்றும் அவரது சந்ததிக்காகப் பலியாய்க் கொடுத்து வைக்க முடிந்தது. ஞானஸ்நானத்தின்போது அவர் தம்முடைய அர்ப்பணிப்பைப் பண்ணின பிற்பாடு, அவர் ஒரு மனிதனாக ஜீவிக்கும் உரிமை இல்லாதவராயிருந்தார்; காரணம் ஜீவிப்பதற்கான அந்த உரிமையினை அவர் விட்டுக்கொடுத்துவிட்டவராகக் காணப்பட்டார். ஆனால் ஏதோ சில திவ்விய பிரமாணத்தை மீறுவதன் மூலமோ அல்லது தம்முடைய ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையை மீறுவதன் மூலமோ தவறாதது வரையிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதன் காரணமாக அவர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட ஒரு புதுச்சிருஷ்டியென ஜீவிப்பதற்கான உரிமையினை உடையவராயிருந்தார். மனுக்குலத்தின் உலகமானது, ஆயிரவருட யுகத்திற்குப் பிற்பாடு, பூரணத்தை அவர்கள் அடைந்த பிற்பாடு, அவர்கள் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அவர்களை அவரும் ஏற்றுக்கொண்ட பிற்பாடு, அவர்கள் ஜீவிப்பதற்கான உரிமையினை உடையவர்களாய் இருப்பார்கள். தகப்பனாகிய ஆதாம் பாவம் செய்வதற்கு முன்னதாக ஆரம்பத்தில் பெற்றிருந்த ஜீவனுக்கான அதே உரிமையினை மனுக்குலம் பெற்றுக்கொண்டவர்களாய் இருப்பார்கள்.

"ஜீவ-உரிமைகள்." இந்த வார்த்தையானது பல்வேறு விதங்களில் நாம் பயன்படுத்தக்கூடியவர்களாய் இருப்போம். இவ்வார்த்தை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குப் பயன்படுத்தி, அவர் ஜீவ-உரிமைகளை உடையவர் என்று சொல்லுகையில், அவர் ஒரு மனிதனாக தம்முடைய ஜீவனை அர்ப்பணம் பண்ணினபோது, அவர் அந்த ஜீவனைப் பறிக்கொடுப்பதற்கு ஏதுவாய் உண்மையில் ஏதும் செய்திடவில்லை என்று நாம் சொல்லலாம். அதைக் lay down/ கொடுத்து வைக்க அவர் சம்மதித்திருந்தார்; அது நியாயமாய் அவருடையதாகும்; இல்லையேல் மறுபடியும் அந்த உரிமைகளை மற்றவர்களுக்குப் பயன்படுத்துவதற்கென்று அவற்றைப் பெற்றிராதவராகக் காணப்பட்டிருந்திருப்பார். அவரது தனிப்பட்ட நீதியினால் அந்த உரிமையினை அவர் தக்கவைத்துக் கொண்டவராய்க் காணப்பட்டார். ஆகையால் மனுஷீக ஜீவனுக்கான உரிமை ஒன்றினை அவர் இன்னமும் உடையவராகவே இருக்கின்றார்; காரணம் தம்மிடமிருந்து எடுக்கப்படும்படிக்கு அவர் அனுமதித்ததான இந்த ஜீவனை அவர் பறிக்கொடுத்து, இழந்துபோகவில்லை. அவருக்கென்று தனிப்பட்ட விதத்தில் இப்பொழுது மனுஷீக ஜீவனோ அல்லது ஜீவ-உரிமைகளோ தேவைப்படாது என்றபோதிலும், மனித ஜீவிக்கான ஜீவ-உரிமைகளை அவர் இன்னமும் உடையவராய் இருக்கின்றார்; அவருக்கென்று இந்த ஜீவ-உரிமைகள் தேவைப்படாததற்கான காரணம் அவர் மேலான ஒன்றைப் பெற்றுக்கொண்டவராக இருக்கின்றார் மற்றும் அவரால் ஒரே நேரத்தில் இரண்டு ஜீவன்களைப் பயன்படுத்த முடியாது. அவர் திவ்விய ஜீவ-உரிமைகளை உடையவராய் இருக்கின்றார்; ஆனால் அவர் இன்னமும் இந்த மனுஷீக ஜீவ-உரிமைகளைத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்றார்; மேலும் இதை அவர் ஆதாமுக்காகவும், அவர் வாயிலாக இழந்துபோகப்பட்டதுமான அனைத்திற்காகவுமான முழுமையான ஈடாக, விலைக்கிரயமாகப் பயன்படுத்திப் பகிர்ந்தளிக்கவிருக்கின்றார்.

### 6. (Q568:2) மீட்கும்பொருள் - எங்கே provided/அளிக்கப்பட்டது?

கேள்வி (1916-Z5879)-2- மீட்கும்பொருள் விலையானது எங்கே அளிக்கப்பட்டது?

பதில் - தெய்வீக நோக்கத்தில், மீட்கும்பொருள் விலையானது உலகத்தோற்ற முதற்கொண்டே அளிக்கப்பட்டது; ஏனெனில் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, உலக தோற்றமுதற்கொண்டு அடிக்கப்பட்ட தேவாட்டுக்குட்டியாக திவ்விய சிந்தையில் காணப்படுகின்றார் என்று வேதவாக்கியங்களானது நமக்கு உறுதிபடுத்துகின்றதாய் இருக்கின்றது (வெளிப்படுத்தல் 13:8). இரண்டாம் நிலையில் பார்க்கும்போது, யேகோவா தேவனுக்கும், அவரது கனம் பொருந்திய லோகோசுக்கும் இடையே ஒப்பந்தம் போடப்பட்டபோது, மீட்கும்பொருள் விலை அளிக்கப்பட்டதாய் இருக்கின்றது. இன்னொரு கோணத்தில் பார்க்கையில் லோகோஸ் மாம்சமாக்கப்பட்டு, முழு மனுஷீக பூரணத்தை முப்பதாம் வயதில் அடையாதது வரையிலும் மீட்கும்பொருள் விலையானது கொடுக்கப்படவில்லை என்றும் சொல்லப்படலாம்.

அப்போதுதான் நமது கர்த்தரினால் தேவ ஏற்பாட்டிற்கு இசைவாக மீட்கும்பொருள் விலையாகிட முடியும் மற்றும் தம்மையே மீட்கும்பொருள் விலையாகக் கொடுத்திட முடியும். அவர் தேவனுடன்

உடன்படிக்கைக்குள் பிரவேசித்து, மரணப்பரியந்தம் தம்முடைய ஜீவனை அர்ப்பணிப்பதை ஞானஸ்நானம் மூலம் அடையாளப்படுத்துவதற்கு முன்புவரையிலும், அவர் தம்மை இந்த மீட்கும்பொருள் விலையெனக் கொடுத்திடவில்லை. அவர் இப்படி உடன்படிக்கைக்குள் பிரவேசித்தப் பிற்பாடும், அது முழுமையாகிடவில்லை; ஏனெனில் அதனோடுகூட நிபந்தனைகள் சம்பந்தப்பட்டிருந்தன. அங்கு அவரது சித்தம் ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அது பிதாவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அவர் தமது முழுமையான கீழ்ப்படிதலை, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் காண்பிக்க வேண்டியிருந்தது. "முடிந்தது" என்று கூறி, அவர் கல்வாரியில் மரித்தபோது அவரது பலி நிறைவடைந்தது. மீட்கும்பொருள் விலையினை laid down/ கொடுத்து வைத்திடும் வேலையினை அவர் நிறைவேற்றிவிட்டார்; அதாவது மீட்கும்பொருள் விலையினை முழுமையாய்க் அளித்துவிட்டார் (provided). மீட்கும்பொருள் விலையினை அளிப்பதற்கும் (providing) மற்றும் மீட்கும்பொருள் விலையினைப் பயன்படுத்துவதற்கும் அல்லது பகிர்ந்தளிப்பதற்கும் (giving or appropriating or delivering) இடையே உள்ள வித்தியாசத்தினை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இயேசு மரித்தபோது, மீட்கும்பொருள் விலைக்கொடுத்து வைக்க மாத்திரமே பட்டது; மரணத்தினின்று மனிதனை விடுவிக்கத்தக்கதாக, அதைச் செயல்படுத்தும் விதத்தில், அது இன்னமும் பயன்படுத்தப்படவில்லை.

**7. (Q568:4) மீட்கும்பொருள் கல்வாரியில்** paid/**செலுத்தித் தீர்க்கப்பட்டுவிட்டதா?**

கேள்வி (1916-Z5879)-4- மீட்கும்பொருளானது கல்வாரியில் paid/செலுத்தித் தீர்க்கப்பட்டுவிட்டதா?

பதில் - இதைக்குறித்து நாம் ஏற்கெனவே விவரித்திருக்கின்றோம்; அதாவது மீட்கும்பொருளானது கல்வாரியில் (laid down) கொடுக்கப்பட்டது மற்றும் பிற்பாடு நீதியின் கரங்களில் வைக்கப்பட்டுள்ளது; ஆனால் ஒப்பந்தத்தை முடிக்கும் விதத்தில் அது இன்னமும் paid over/செலுத்தித் தீர்க்கப்படவில்லை - அது எதிர்க்காலத்திற்கென்று வைக்கப்பட்டுள்ளது. "பிதாவே உம்முடைய கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று இயேசு கூறினபோது, மீட்கும்பொருளானது சிலுவையில் (laid down) கொடுத்து வைக்கப்பட்டது. இப்படியாக இயேசு மீட்கும்பொருள் விலைக்கிரயத்தினைப் பயன்படுத்திடாமல், அதைச் சேமிப்பாக/வைப்பாக (deposit) வைத்துவிட்டார்.

**8. (Q569:1) மீட்கும்பொருள் - கடந்த காலத்தில் - தற்காலத்தில் - எதிர்க்காலத்தில்.**

கேள்வி (1916-Z5879)-1- மீட்கும்பொருள் விலையானது paid/செலுத்தித் தீர்க்கப்பட்டுவிட்டதா?

பதில் - இல்லை! ஏற்கெனவே நாம் கொடுத்திருக்கும் காரணங்களின் நிமித்தம் இல்லை என்று நாம் சொல்லுவோம்; இன்னுமாகச் சபை முழுமையாக அவளது கர்த்தருடன் மகிமையடைவது வரையிலும் மீட்கும்பொருள் விலைக்கிரயமானது முழுமையாய்ச் செலுத்தித் தீர்க்கப்படாது (not to be paid) என்றும் நாம் சொல்கின்றோம். மகிமையடைந்த பிற்பாடு அது முழு உலகத்தின் சார்பாகச் paid/செலுத்தித் தீர்க்கப்பட்டு, மரணத்தினின்று முழு உலகமும் விடுவிக்கப்படுவார்கள் மற்றும் ஆதாமின் காரணமான ஆக்கினைத் தீர்ப்பும் இரத்துச் செய்யப்படும்.

**9. (Q569:2) மீட்கும்பொருள் இயேசுவினால் எப்போது (dispose) பகிர்ந்தளிக்கப்படும்?**

கேள்வி (1916-Z5879)-2- இயேசு பரமேறின பிற்பாடு மீட்கும்பொருள் விலைக்கிரயத்தினை என்ன செய்தார்?

பதில் - அதை அவர் ஏற்கெனவே நீதியின் கரங்களில் சேமிப்பாக/வைப்பாக (deposit) வைத்துவிட்டார். மனுஷீக ஜீவ-உரிமையானது, விலைக்கிரயமானது இன்னும் அவர் வசத்திலேயே

உள்ளது. அதில் ஒரு பங்கை இன்னும் முழு வளர்ச்சியடையாத தம் சபைக்குத் தரிப்பிப்பதன்/சாற்றுவதன் மூலம் அதைக் கடனாக வழங்குவது அல்லது குறுகிய கால பயன்பாட்டிற்காக வழங்குவது என்பது அவரது அடுத்தக்கட்ட நடவடிக்கையாகும்.

**10. (Q574:2) மீட்கும்பொருள் - ஜீவ-உரிமைகள் என்பதன் அர்த்தம்.**

கேள்வி (1916)-2- "ஜீவ-உரிமைகள்" எனும் வார்த்தைக்கான அர்த்தம் என்ன? மனுக்குலம் எப்போதேனும் "ஜீவ-உரிமைகளை" அடையுமா?

பதில் - வெவ்வேறு மனங்களானது "ஜீவ-உரிமைகள்" எனும் வார்த்தைக்கு வெவ்வேறு அர்த்தங்களைச் சாற்றக்கூடும். நாம் ஓர் அர்த்தத்தினை இதோ தெரிவிக்கின்றோம்:- ஆதாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தபோது அவர் ஜீவ-உரிமைகளை உடையவராயிருந்தார்; காரணம் அவர் ஒருவேளை பூரணமாய்க் காணப்பட்டும், தேவனுடன் இசைவான நிலைமையினைத் தக்கவைத்தும் இருந்தாரானால் அவர் நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தேவன் திட்டம் பண்ணியிருந்தார். ஆகையால் அவர் தேவனுடைய ஏற்பாடு மற்றும் வாக்குறுதியின் கீழ் ஜீவனுக்கான உரிமை ஒன்றை உடையவராயிருந்தார். மேலும் இயேசுவும் ஆதாமின் ஜீவ-உரிமைகளை உடையவராயிருந்தார், காரணம் அவர் பரிசுத்தராயும், மாசில்லாதவராயும், குற்றமற்றவராயும், பாவிகளுக்கு விலகினவராயும், பாவம் அறியாதவராயும் இருந்தார். ஆகையால் தகப்பனாகிய ஆதாமுக்கு இருந்ததுபோன்ற ஜீவ-உரிமைகளை இயேசுவும் உடையவராயிருந்தார். என்ன நேர்ந்தாலும் மரணபரியந்தமும் பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக, இயேசு தம்முடைய பூமிக்குரிய ஜீவ-உரிமைகளைத் தாமாய் அர்ப்பணித்தபோது, அவரது **ஜீவ-உரிமைகள்** விஷயத்தில் அத்துமீறல் பண்ணப்பட அவர் அனுமதித்தவராய் மாத்திரமே காணப்பட்டார், மாறாக அதைக் கைநெகிழவிடவில்லை. அவரது ஜீவ-உரிமைகளின் விஷயத்தில் தலையிடப்படுவதற்கு எந்த அவசியமும் இல்லாதிருந்தது. தம்மைப் பாதுகாக்க அவர் பிதாவிடம் லேகியோன் தூதர்களைக் கேட்டுப் பெற்றுக்கொண்டிருந்திருக்க முடியும் என்று அவர் கூறியிருக்கின்றார். ஆனால் இப்படிச் செய்ய அவர் விரும்பவில்லை. பழைய ஏற்பாட்டின் நிழல்களினாலும், தீர்க்கத்தரிசனங்களினாலும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள தேவசித்தத்தை அவர் அறிந்திருந்தார் மற்றும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதில் அவர் பிரியங்கொண்டிருந்தார் மற்றும் தாமாய் விட்டுக்கொடுத்து, தம்முடைய **ஜீவனை** எடுப்பதற்கு மனிதர்களை அனுமதித்தார். மனுஷர்களால் **ஜீவனுக்கான அவரது உரிமைகளை** எடுத்துப்போட முடியாது; அவர்கள் அவரை மாம்சத்தில் கொலைசெய்தாலும் மற்றும் பிதா அவரை ஆவிக்குரிய தளத்தில் உயிர்த்தெழுப்பினாலும், அந்தத்தளத்திலுள்ள **ஜீவ-உரிமைகளை** அவர் உடையவராகவே இருந்தார் மற்றும் மாம்ச ஜீவனுக்கான உரிமைகளை அவர் இன்னமும் உடையவராகவே இருக்கின்றார். எப்படி? காரணம் அவற்றை அவர்களிடத்தில் இயேசு கொடுத்துவிடவில்லை. அவற்றைத் தம்மிடமிருந்து தகாதவிதமாய் எடுத்திடுவதற்கு இயேசு மனிதர்களை அனுமதிக்க மாத்திரமே செய்தார். மனுஷர்கள் அவற்றை ஆதாமிற்காகவும், அவரது சந்ததிக்காகவும் பயன்படுத்தத்தக்கதாக அவர் அவற்றை அவர்களிடத்தில் கொடுத்துவிடவில்லை. அவைகள் இன்னமும் அவரது ஜீவ-உரிமைகளாகவே இருக்கின்றது மற்றும் அவர் மரித்தபோது, "என் ஆவியை - என் ஜீவ உரிமைகளை - உம் கரத்தில் ஒப்புவிக்கிறேன்" என்றே கூறினார். **அவர் ஒப்புவித்தவைகளானது, பூமிக்குரிய ஜீவ-உரிமைகளாக இருந்தன** மற்றும் அவை இன்னமும் பிதாவின் கரங்களில் காணப்படுகின்றது மற்றும் அவை இறுதியில் ஆயிரவருட காலத்தின்போது தகப்பனாகிய ஆதாமிற்கும், அவரது சந்ததியார் யாவருக்கும் கடந்துவரும்.

---

# சகோதரிகள்

### (Q200:1) பெண் உதவிக்காரர்களின் (Deaconess) - தேர்ந்தெடுத்தல்.

கேள்வி (1912)-1- ஏதேனும் சூழ்நிலைகளுக்காக, நீங்கள் பெண் உதவிக்காரர்களின் தேர்ந்தெடுத்தல் மற்றும் நியமனத்தைப் பரிந்துரைக்கின்றீர்களா? ஆம் என்றால், எச்சூழ்நிலையின்போது?

பதில் - தற்போது புரூக்கிலின் கூடாரத்தில் நாங்கள் பெண் உதவிக்காரர்கள் யாரையும் பெற்றிருக்கவில்லை; ஆனால் முன்னே பெற்றிருந்தோம் மற்றும் அவர்களைப் பெற்றிருந்ததால் சில நன்மையும் இருந்தது என்று எண்ணுகின்றோம். செய்வதற்கு அவர்களுக்கு ஏதாகிலும் இருந்தால் அல்லது அந்த வேலைக்கு நபர்கள் பொருத்தமானவர்களாய் இருந்தால் தவிர மற்றபடி வெறுமனே ஊழியர்களைப் பெற்றிருப்பதில் எந்தப் பயனுமில்லை. டீக்கனஸ்/Deaconess எனும் வார்த்தையானது பெண் ஊழியர் எனும் அர்த்தத்தினைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. ஒரு சபையிலுள்ள சகோதரிகள் மத்தியில் சகோதரி ஒருவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது, அவர்களிடத்தில் போய், அவர்களுக்கு உதவிடுவதற்கும், அவர்களைப் பராமரித்துப் பார்த்துக்கொள்வதற்கும் ஒருவர் அவசியமாகுவார். இல்லையேல் துன்பத்தில் இருக்கும் சகோதரி ஒருவர் போய்ச் சந்திக்கப்படுவது அவசியமாயிருக்கும் மற்றும் இதைச் செய்திடுவதற்குச் சகோதரர்களுக்கு நேரம் கிடைக்காமல் இருக்கலாம். இம்மாதிரியான ஊழியங்களைச் சகோதரிகள் பெண் உதவிக்காரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோ அல்லது தேர்ந்தெடுக்கப்படாமலோ செய்திடலாம். பெண் உதவிக்காரர்களைத் தேர்ந்தெடுப்பது என்பது கர்த்தருடைய வசனத்திற்கு முரணானதல்ல. ஒரு சபையார் தங்களுக்கு இத்தகைய ஊழியர்கள் அவசியம் என்று கண்டுகொள்வார்களானால், அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான முழு அதிகாரமும் வேதவாக்கியங்களில் காணப்படுகின்றது; எனினும் மிகவும் கவனமாய் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் - அதாவது அவர்கள் செய்யும்படிக்கு அழைக்கப்படும் எந்த வேலைக்கும் பொருத்தமானவர்களாகவும், சகோதரிகளின் மத்தியில் கர்த்தருடைய ஆவியைப் பெற்றவர்களுக்கான உதாரணமாகக் குறிக்கப்பட்டவர்களாகவும், தங்களுடைய நடை, உடை, பாவனையில் சபையாருடைய நியாயமான, அதேசமயம் பட்சமான ஆதரவையும் பெற்றவர்களாகவும் காணப்படுபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

### (Q538:1) ஜெபத்தில் சகோதரிகள் வழிநடத்துதல்.

கேள்வி (1909)-1- சகோதரிகள் ஜெபத்திற்கு நேராய் வழிநடத்தலாம் என்பதையும், அவர்கள் பொது ஆராதனைகளில் ஏதேனும் பங்காற்றலாம் என்பதையும் சுட்டிக்காட்டும் வேதவாக்கியம் ஏதேனும் காணப்படுகின்றதா அல்லது இதற்கு எதிராக ஏதேனும் வேதவாக்கியம் காணப்படுகின்றதா?

பதில் - இக்கேள்விக்குப் பதிலளிப்பது என்பது அநேகம் வேதவாக்கியங்களினுடைய நீண்ட ஆய்வினைக் கொடுக்க வேண்டியதாய்க் காணப்படும் மற்றும் உங்களுக்கு வேதாகமப் பாடங்களினுடைய ஆறாம் தொகுதியினைக் குறிப்பிடுவதன் மூலம் உங்கள் கேள்விக்குச் சிறந்த பதிலளிக்கின்றேன்.

### (Q660:2) சகோதரிகள் ஜெபக்கூட்டங்களில் பங்கெடுத்தல்.

கேள்வி (1905)-2- நம்முடைய கூட்டங்களில் சகோதரிகள் ஜெபத்தில் பங்கெடுப்பதற்கு நீங்கள் அறிவுறுத்துவீர்களா?

பதில் - வேதவாக்கியங்கள் கூறுவதென்ன? சகோதரிகள் ஜெபத்தில் பங்கெடுத்தார்கள் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார். "ஜெபம்பண்ணுகிறபோதாவது தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்தச் சகோதரியும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்."

வேதவாக்கியங்கள் அங்கீகரிக்கின்றதான எந்த அதிகாரத்தையும் நான் சகோதரிகளிடமிருந்து எடுத்துப்போடுகிறதில்லை.

**(Q662:2) சகோதரிகள் ஜெபத்திற்கு நேராய் நடத்துதல்.**

கேள்வி (1911)-2- ஜெபக்கூட்டம் ஒன்றில் ஒரு சகோதரி ஜெபத்தில் நடத்துவது என்பது வேதவாக்கியங்களுக்கு முரணான காரியமா?

பதில் - பொதுவான ஆராதனை கூடுகைகளில் சகோதரர்களுக்கு இருப்பது போன்ற அதே ஒரு தலைமை நிலையைச் சகோதரிகளுக்கு, வேதவாக்கியங்களானது கொடுக்கிறதில்லை. ஸ்திரீயானவள் சபையை அடையாளப்படுத்துகிறவளாக இருக்கிறாள்; புருஷன் கிறிஸ்துவை அடையாளப்படுத்துகிறவனாக இருக்கின்றான்; "அப்போஸ்தலன் கூறுவதுபோல ஸ்திரீக்குப் புருஷன் தலையாய் இருக்கின்றான், புருஷனுக்குக் கிறிஸ்து தலையாய் இருக்கின்றார், கிறிஸ்துவுக்குத் தேவன் தலையாய் இருக்கின்றார்." இந்த வரிசைமுறைமையில் பார்க்கையில் சபைக்கு அடையாளமான ஸ்திரீ, கர்த்தருக்குச் செவிக்கொடுக்க வேண்டுமென்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றதாய் இருக்கின்றது. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமெனில் பொது ஊழியங்களில் சகோதரிகளினால் சிறிய அளவில் முதன்மை ஸ்தானங்கள் எடுக்கப்பட வேண்டும். ஆனால் இது ஒரு சகோதரி ஜெபத்தில் பங்கெடுக்கக்கூடாது என்பதைக் குறிக்கின்றதாக நான் புரிந்துகொள்ளுகிறதில்லை. இதுபோன்ற ஒரு பொதுக்கூட்டத்தில் ஒரு சகோதரி ஜெபத்திற்கு நேராய் வழிநடத்துவது என்பது மிகவும் தகுதியற்றக் காரியமாய் இருக்கும் என்று நான் எண்ணிடுவேன். ஒருவேளை வீட்டுக்கூடுகையாகவோ அல்லது சிறு கூட்டமாகவோ அல்லது குடும்பக்கூடுகையாகவோ இருக்கையில் ஜெபத்திற்கு நேராக வழிநடத்துவதற்கு அவள் கேட்டுக்கொள்ளப்பட்டால் அது முற்றிலும் சரியான காரியமாக இருக்கின்றது என்று புரிந்துகொள்வேன்; மற்றும் அவள் முக்காடிட்டுக்கொள்ள வேண்டுமா என்று கேள்விக் கேட்கப்பட்டால், அப்போஸ்தலன் "ஆம்" என்று பதிலளிக்கின்றார் என்று கூறிடுவேன் - ஒருவேளை அவள் ஜெபம் ஏறெடுத்தால் அவள் தன் தலையின் மீது முக்காடிட்டுக்கொள்ள வேண்டும்; தலைமயிர் அவளுக்கு முக்காடாக இருப்பினும், அவள் அதன்மேலும் முக்காடிட்டுக்கொள்ள வேண்டும். இது அவள் தான் தலை அல்ல என்பதை அடையாளம் கண்டு கொள்வதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும் என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் மற்றும் இந்த விதத்தில் பேசுபவளாக இல்லாமல், கர்த்தருக்குச் செவிக்கொடுக்கும் சபையை அடையாளப்படுத்துகின்றாள்.

**(Q660:3) ஆறாம் தொகுதியில் சகோதரிகளுக்கான கட்டுப்பாடுகள்.**

கேள்வி (1910)-3- ஆறாம் தொகுதியில் சகோதரிகள் மீது விதிக்கப்பட்டுள்ளதான கட்டுப்பாடுகளானது, சகோதரர்கள் கலந்துகொள்ளும் வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளையும் உள்ளடக்குமா என்பதை அறிந்து கொள்வதற்கு நாங்கள் பிரியப்படுகின்றோம். எந்தக் கூட்டங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகளானது பொருந்தும் என்பதைத் தயவாய் எங்களுக்குத் தெரிவியுங்கள்.

பதில் - எனது அன்பு நண்பர்களே, இவைகளை அப்போஸ்தலன் குறிப்பிடுகையில், அப்போஸ்தலன் எதை மனதில் கொண்டிருந்தார் என்பதை ஊகிக்க வேண்டியுள்ளது. அவரது வார்த்தைகளுக்கான நியாயமான விளக்கம் என்று நாம் நம்புவதென்னவெனில் . . . அவர் பொதுவகையான கூட்டங்களையே குறிப்பிட்டாரேயொழிய, மாறாக வேதாகம ஆராய்ச்சிக் கூட்டங்கள் வகையை அல்ல. அவர் தனிமையில் சந்தித்தலையோ அல்லது ஒரு சிலரைக் கொண்டிருக்கும் கூட்டங்களையோ குறிப்பிடாமல், பொதுக் கூட்டங்களையே குறிப்பாய்க் குறிப்பிட்டுள்ளார் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. அதேவேளையில் நான் ஒருவேளை ஒரு வேதாகம வகுப்பில் சகோதரியாகக் காணப்பட்டிருப்பேனாகில், ஒருவேளை அது ஒரு சிறிய எண்ணிக்கையிலான வகுப்பாய் இருக்குமானால், வாய்ப்பு வருகையில், நான் எந்தக் கேள்வியையும் எழுப்பிடுவதற்கு விரும்பிடுவேன் மற்றும் ஒருவேளை வகுப்பில் முன்வைக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியாகிலும் முழுமையாய்ப் பதிலளிக்கப்படவில்லை என்று என்னுடைய கணிப்பில் காணப்படுமானால், நான்: "இப்பதிலானது, இக்கருத்தானது எப்படி இன்னென்ன கேள்விக்கும் பொருந்திடும்?" என்று கூறி, மறைமுகமான விதத்தில், அப்ப[illegible] --3190--

தொடர்புடைய எனது கருத்தினை வெளிக்கொணர விரும்புவேன்; இப்படியாக அவ்விஷயம் மீது முழுச்சொற்பொழிவு ஆற்றிடுவது போன்றதற்கு இணையான ஒன்றை, நான் செய்வதுபோன்று எண்ணிடுவேன் மற்றும் இப்படியாகக் கேள்வி கேட்பதன் வாயிலாக அவைகளை மற்றவர்களுக்கு முன்வைத்திடுவேன். அப்போஸ்தலர் கொடுத்த கட்டுப்பாடுகளானது, கேள்விகள் கேட்பது விஷயத்திற்குப் பொருந்தும் என்று நான் புரிந்துகொள்ளுகிறதில்லை. ஒருவேளை நான் ஒரு சகோதரியாகக் காணப்படுவேனாகில், நான் கேள்விகள் கேட்பதற்குத் தயக்கமில்லாமலிருக்க வேண்டும் மற்றும் என்னுடைய செல்வாக்கினை நான் கவனமாய்க் கையாண்டிட வேண்டும் மற்றும் "நான் உங்கள் கருத்திற்கு ஒத்துக்கொள்கிறதில்லை; நான் இன்னென்ன விதமாய்க் கருதுகின்றேன்" என்று கூறிடுவதற்குப் பதிலாக, "இந்தக் காரியத்துடனும், அந்தக் காரியத்துடனும் எப்படி அக்கருத்து ஒத்துப்போகின்றது?" இல்லையெனில், "அதனோடும், இதனோடும் எப்படி அது ஒத்துப்போகின்றது?" என்று நன்மை பயக்கும் விதமான வடிவத்தில் கேள்வியினை முன்வைப்பதில், நான் என் செல்வாக்கினைப் பயன்படுத்துகின்றேன் என்று நான் உணரமுடிய வேண்டும். ஒருவேளை ஜனங்கள் என்னைக் கேள்விகேட்பதற்கு அனுமதிப்பார்களானால், நான் எல்லாச் சபைகளுக்கும் சென்று, அவைகளைச் சீக்கிரத்தில் தலைக் கீழாக்கிடுவேன். சகோதரிகளுக்கான கட்டுப்பாடு என்பது என்னைப் பொறுத்தவரையில், விசேஷித்தக் கட்டுப்பாடல்ல; மாறாக சகோதரிகளை இந்தப் பெண்மையின் ஸ்தானத்தில் வைத்துக்கொள்வது சகோதரிகளுக்கு உண்மையில் சிலவிதங்களில் அனுகூலமாகக் காணப்படும்.

**(Q661:1) சகோதரிகள் அதிகாரத்தை எடுத்துக்கொள்ளாமல் போதித்தல்.**

கேள்வி (1910)-1- உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. ஒருவேளை ஸ்திரீயானவள் புருஷன்மேல் அதிகாரம் செலுத்தாதவளாகக் காணப்பட்டால் அவள் போதிக்கலாம் என்ற அர்த்தத்தில் இவ்வசனம் புரிந்து கொள்ளப்படவேண்டுமா?

பதில் - ஒருவேளை நான் ஒரு சகோதரி என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் நான் ஒரு புதிய இடத்திற்குக் குடிப்பெயர்ந்துள்ளேன் மற்றும் துண்டுப் பிரதிகள் முதலானவைகளைக் கொடுத்திடுவதின் மூலம் என்னுடைய செல்வாக்கைச் செயல்படுத்திட விரும்புகின்றேன் என்று வைத்துக்கொள்ளலாம் மற்றும் என்னுடைய அயலார்களில் சிலர் ஒன்றுகூடி என்னிடம் நான் இதைக்குறித்து அதிகமாகப் பேசிட விரும்புகின்றார்கள் என்று கூறுகின்றார்கள் என்று வைத்துக்கொள்ளலாம்; தன்னடக்கத்துடன், அதாவது எந்தச் சகோதரனிடத்திலும்கூட எதிர்ப்பார்க்கப்படுகின்ற முடிந்தமட்டிலுமான தன்னடக்கத்துடன், நான் அறிந்த யாவற்றையும் கூறிடுவதே எனக்கான கர்த்தருடைய சித்தமாய் இருக்கின்றது என்று நான் புரிந்துகொள்வேன். நான் அறிந்திருக்கும் உண்மைகள் மற்றும் சத்தியங்கள் யாவற்றையும் வெளிக்கொணர முயற்சித்திடுவேன் மற்றும் ஒருவேளை அயலகத்தார் மத்தியில் சத்தியம் குறித்த அறிவில்லாதவர்களாய்க் காணப்பட்டவர்களில் சிலர் ஆண்களாய்க் காணப்பட்டு, மேலும் அவர்கள் ஒருவேளை காரியத்தினை விளக்கும்படிக்கு என்னிடத்தில் கேட்கும் பட்சத்தில், அவர்களுக்கு விளக்கம்கொடுக்க எனக்கு எந்தத் தடையுமில்லை. இப்படி விவரிப்பது முற்றிலும் சரியானதாகவே இருக்கும் என்று நான் எண்ணுவேன்.

**(Q662:1) சகோதரிகள் வேதாகம ஆராய்ச்சியில் பங்கெடுத்தல்.**

கேள்வி (1910)-1- நீங்கள் பரிந்துரைத்திருக்கும் அதிகாரம் மற்றும் வசனம் ரீதியான வேதாகம ஆராய்ச்சியில் சகோதரிகள் பங்கெடுக்கலாமா?

பதில் - ஒருவேளை இதுகுறித்து ஆறாம் தொகுதியில் நீங்கள் எதையேனும் காண்பீர்களானால் அதில் எழுதியிருப்பவைகளில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை என்பதைத் தெரியப்படுத்துகின்றேன். அப்போஸ்தலனுடைய கட்டளைக்குப் பின்பாக இருக்கும் பொதுவான கருத்து என்று நான் எண்ணுகிறது என்னவெனில், . . . சபையில் ஆண்கள் தலைக்கு அடையாளமாய்க் காணப்படுகின்றனர் மற்றும் இதனால் சபையின் தலையாகிய கிறிஸ்துவுக்கு ஒரு நிழலாய்க் காணப்படுகின்றனர். சபை கிறிஸ்துவுக்குப் போதிக்கக்கூடாது; மாறாக கிறிஸ்துவே சபைக்குப் போதிக்க வேண்டும்; இப்படியாகவே ஆண், பெண் விஷயத்திலும் **3191--**

ஸ்திரீயானவள் புருஷனுக்கு உபதேசிக்கக்கூடாது. இதையே அப்போஸ்தலன் அறிவுறுத்துவதாகத் தெரிகின்றது. இதற்கு மிஞ்சி செல்வது என்பது தவறாக இருக்கும்; அதாவது நண்பர்களில் சிலர் இது பள்ளிக்கூடங்களில் கற்பித்துக்கொடுக்கிறதையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்று கூறுவது தவறாகும். அப்போஸ்தலன் சபை பற்றிப் பேசுகின்றாரே ஒழிய குடும்பத்தைப் பற்றியல்ல. தாயானவள் குடும்பத்திற்குப் போதிப்பது சரியான காரியமாகும் மற்றும் அது செய்யப்படவும் வேண்டும் மற்றும் அப்போஸ்தலன் கூறியது எதுவும் இதற்கு முரண்படுகிறதாக என் மனதிற்குத் தோன்றவில்லை; சபையில் "உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்" என்று அப்போஸ்தலன்தான் கூறியுள்ளாரே ஒழிய, நான் இப்படிக் கூறவில்லை. நண்பர்களில் சிலர் நான்தான் இப்படிக் கூறுவதாக எண்ணுகின்றனர். நான் இப்படிச் சொல்லவில்லை என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகின்றேன். நான் மறு எல்லைக்குச் செல்வதற்கும், அவர்களுக்கு அதிகப்படியான சுயாதீனம் கொடுப்பதற்கும் விரும்புபவனாக இருந்திருப்பேன். இவ்விஷயத்தில் எனக்கும் சரி, எனது சகோதரனே அல்லது சகோதரியே - உங்களுக்கும் சரி, நமது விருப்பத்தின்படி முடிவு எடுக்க முடியாது. ஒருவேளை நான் ஒரு சகோதரியுடைய இடத்தில் காணப்பட்டிருப்பேனாகில், அவருடைய சித்தம் செய்ய நான் விரும்பிடுவேன் மற்றும் நான் அவர் சித்தம் செய்யும்பட்சத்தில் அவரும் பிரியம் கொள்வார். ஆகையால் சபையில் நடைபெறும் பொதுவான கூடுகைகளில் சகோதரிகள் இரண்டாம் இடத்தை எடுத்துக்கொள்வதும், அமைதலாய் இருப்பதும் நலமாய் இருக்கும் என்று நான் எண்ணுகின்றேன். ஒரு சிறு கூட்டத்தில், அதுவும் கேள்விகள் சுற்றிக்கேட்கப்பட்டு வரும் ஒரு கூட்டத்தில் ஒரு சகோதரி கேள்வி ஒன்றினைக் கேட்பது தவறாய் இராது என்று புரிந்திருக்கின்றேன். ஒருவேளை நான் ஒரு சகோதரியாக இருந்திருந்தால் மற்றும் கேள்விக் கேட்க அனுமதிக்கப்பட்டிருந்தால், ஒருவேளை வெளிக்கொணர்வதற்குச் சத்தியம் எதையேனும் நான் பெற்றிருக்கும் பட்சத்தில், அதை வெளிக்கொணர்வதற்கு ஏதுவான அத்தகைய கேள்விகளைச் சகஜமாய்க் கேட்டுக்கொள்வேன். ஒருவேளை பல்வேறு சபைபிரிவுகளிலுள்ள நம்முடைய நண்பர்கள் அவர்களது கூட்டங்கள் சிலவற்றிற்குள் வருவதற்கு என்னையும், உங்களையும் அனுமதிப்பார்களானால் மற்றும் சில கேள்விகளை அவர்களிடம் கேட்பதற்கு நாம் அனுமதிக்கப்படுவோமானால், அவர்கள் நமக்கு இறையியல் கருத்துகளை மாத்திரம் கூறிடுவார்கள்.

**(Q663:1) சகோதரிகள் கேட்டுக்கொள்ளப்படாமலேயே கேள்விகளுக்குப் பதில் அளித்தல்.**

கேள்வி (1912)-1- மூப்பர் ஒருவரினால் விசேஷமாகக் கேட்டுக்கொள்ளப்படாமல், சகோதரிகள் கேள்விகளுக்குப் பதிலளிப்பது அல்லது வேதவாக்கியங்களைக் குறிப்பிடுவது வேதவாக்கியங்களுக்கு இசைவாய் இருக்குமா?

பதில் - இது போதித்தல் அல்ல என்பது என் கருத்தாய் இருக்கின்றது. பெரோயா ஆராய்ச்சி வகுப்பில் கேள்விக்குப் பதில் அளிப்பது என்பது போதித்தலாய் இராது. ஒரு பள்ளிக்கூடத்தில் எந்தவொரு வகுப்பிலாகிலும் மாணவர் ஆசிரியரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், மாணவன் ஆசிரியராகிறது இல்லை. அப்படித்தானே? அவன் பதில் கொடுக்கிற காரியமானது தனது பாடங்களை எவ்வளவு மிகத் தெளிவுடன் அவன் புரிந்துகொண்டிருக்கின்றான் என்பதை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கும். பெரோயா ஆராய்ச்சி வகுப்புகளின் விஷயத்திலும், கலந்துகொள்ளும் நண்பர்களில் அனைவரும் அதில் பங்கெடுப்பது என்பது முற்றிலும் சரியான காரியமேயாகும். சகோதரிகளால் கொடுக்கப்படும் பதில்களில் சில, மிக அருமையானதாய் ஆகும். பாடம்குறித்து நாம் கொஞ்சம் தியானம் செய்வோமானால் நாம் பதிலைப் பெற்றுக்கொள்வோம் மற்றும் பதிலைப் பெற்றிருப்பவர் ஒரு சகோதரனாகவோ அல்லது சகோதரியாகவோ இருந்தால் என்ன, பதிலை ஏன் மறைத்து வைக்க வேண்டும்?

**(Q685:1) ஞாயிறு பள்ளிகளில் சகோதரிகள் போதிக்கலாமா?**

கேள்வி (1911 - Z. 4797) -1- ஞாயிறு பள்ளி வகுப்புகளில் சகோதரிகள் போதிக்கலாமா?

பதில் - பொதுவாகவே சகோதரர்களைக் காட்டிலும், சகோதரிகள் இளம் வயதினருக்கு நன்கு போதிப்பவர்களாய்க் காணப்படுகின்றனர். இத்தகைய வகுப்பாருக்கு இவர்கள்

போதிப்பதற்கு வேத வாக்கியங்களில் எதுவும் மறுப்புத் தெரிவிக்கிறதில்லை. "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறது இல்லை," என்பது அப்போஸ்தலனின் வார்த்தைகளாய் இருக்கின்றது. அவரது வார்த்தைகள் விசேஷமாய்ச் சபைக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது.

ஞாயிறு பள்ளிகள் தொடர்புடைய விஷயத்தில், வேதாகமப் பாடங்களின் ஆறாம் தொகுதிகளில் நாம் எழுதியிருப்பவைகளிலிருந்து நம்முடைய கணிப்பு மாறவில்லை.

தங்களுடைய பிள்ளைகள் ஆவிக்குரியவற்றைக் கற்றுக்கொள்ளும் விஷயத்தில், கிறிஸ்தவ பெற்றோர்களே பொறுப்பாளிகளாகத் தேவனால் கருதப்படுகின்றனர் என்றும், இதை அவர்கள் செய்கையில் அவர்கள் விசேஷித்த ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்வார்கள் என்றும் இன்னமும் நம்பிவருகின்றோம். ஒருவேளை ஞாயிறு பள்ளிகளில் தேவை ஏற்படுமாயின், அது அனாதைப் பிள்ளைகளுக்கு அல்லது உலகப் பிள்ளைகளுக்கு அல்லது இல்லத்தில் ஏற்கெனவே கற்பிக்கப்படும் பிள்ளைகளுக்கு மாத்திரமே அத்தேவைக் காணப்படும் என்று நாம் நம்புகின்றோம்.

**(Q704:1) போதித்தல் - ஸ்திரீகள் அமைதியாய் இருத்தல்.**

கேள்வி (1909)-1- "சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்கவேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ளவிரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே" (1 கொரிந்தியர் 14:34, 35).

"ஜெபம்பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறபோதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டதுபோலிருக்குமே" (1 கொரிந்தியர் 11:5).

முதலாம் வேதவாக்கியத்தை, இரண்டாம் வேதவாக்கியத்தோடு இசையப்பண்ணி விளக்கவும்?

பதில் - இந்த வேதவாக்கியங்களானது மிகவும் விலாவாரியாகவும், மிகவும் முழுமையாகவும் கையாளப்பட்டிருப்பதையும் மற்றும் இது விஷயத்திலான இன்னும் அநேக காரியங்களும் கையாளப்பட்டிருப்பதையும் ஆறாம் தொகுதியில் நீங்கள் பார்க்கலாம். நீங்கள் ஆறாம் தொகுதியினைப் போதுமான அளவிற்கு ஆராயவில்லையென்று நான் எண்ணுகின்றேன். ஏழாம் தொகுதியானது எப்போது வெளிவரும் என்று அறிய சிலர் விரும்புகின்றனர். ஆனால் ஆறாம் தொகுதியானது முழுமையாய் அதிகம் உள்வாங்கப்படுவது வரையிலும், ஏழாம் தொகுதி வருவதற்குக் கர்த்தர் அனுமதிக்க மாட்டார் என்று நான் எண்ணுகின்றேன்.

**(Q530:2) ஒரு பணம் குறிப்பது என்ன?**

கேள்வி (1917) -2- மத்தேயு 20-ஆம் அதிகாரத்தில் -------------------------------------------------------------------- முறுமுறுப்பது என்பது எதைக்குறிக்கின்றதாய் இருக்கும்?

பதில் - ----------------------------------------------------------------------------------------------------------------- --------------------------------------------------------------------------------------------------------. ஆகையால் முறுமுறுப்பதற்குரிய எந்த ஆவியையும் நாம் தவிர்த்துக்கொள்வோமாக; மற்றும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றதான நம்முடைய சிலாக்கியங்கள் அனைத்திற்குமாக நன்றியுடையவர்களாய் இருப்போமாக; மற்றும் ஒருவேளை ஊழியம் புரிவதற்கான வாய்ப்பானது சகோதரிகளுக்குக் கொடுக்கப்படுகிறதற்காக, அவர்கள் இத்தகைய வாய்ப்புப் பெற்றுக்கொண்டதின் நிமித்தம் நாம் அவர்களுக்கு எதிராய் முறுமுறுப்பதற்கு ஒருகணங்கூடச் சிந்தியாமல் இருப்போமாக.

---

# சீர்பொருந்தும் பூமி

மேகங்கள் கோபமாக வானிலிருந்து பூமிக்கே
அவன்மேலே தேவகோபம் பழிவாங்க நிற்குதே,
அவளை தேவன் ஆதியிலே அன்புடனே சிட்சித்தாலும்
எழும்போது மகிமையிலும் அழகினிலும் மூழ்கிடுவாள்.

பூமிப்பெண்ணே பூமிப்பெண்ணே நிச்சயமாய் நீ எழுவாய்
அடித்தபிதா அணைத்திடுவார், ஆற்றிடுவார், தேற்றிடுவார்,
அடக்கியாண்ட இரக்கமற்ற எதிரியையே நியாயந்தீர்ப்பார்.
கட்டுக்களைத் தகர்த்திடுவார் கயிறுகளை எறிந்திடுவார்

உனது மண் என்றும் இறவா மாறாத செழுமையுறும்
உன் மலைகள் பள்ளத்தாக்கு கெம்பீரித்து ஜெயம் பாடும்
உன் வறண்ட கன்மலைகள்தாகத்தால் கைவிடாது
உனைக்கண்டு புறஜாதி இகழ்வதில்ல, நகைப்பதில்லை

பாலை வெப்பம் கக்காது
பலன் தருமே பதின்மடங்கு
முள் குறுக்கு வீளைந்த நிலம் ஏதேனாய் பரிணமிக்கும்
வல்லண்மை கொண்ட தூதன் பொற்கோல் அசைத்துவந்து,
ஆர்ப்பரித்து இறங்குவரை இப்பொழுதே நோக்கிப்பார்

பரிவாரம் இறங்கிவரும வல்லமையின் பிரகாசம்
உன் எட்டுத்திசை எட்டும் தேசங்களை நிறுத்துப்பார்க்கும்
யூதாவின் சிங்கமவர் ஸ்திரமாக ஆண்டிடுவார்,
உடைபடாத முத்திரரையை உடைத்திடுவார் சீக்கிரமாய்....

ஹேபர்

- தொகுதி 1(ஆங்கிலம் பக்கம் 172, தமிழ் பக்கம் 385)

----------------------

**--3194--**

# ஸ்திரீயின் ஊழியம்

ஸ்திரீயின் உரிமைகள் அவைகள் - யாவை?
வேலை செய்வதும், அன்புகூருவதும், ஜெபம் செய்வதும் - அவள் உரிமையாம்;
அழுவாரோடு அழுவதற்கானது அவள் உரிமையாம்;
மற்றவர்கள் தூங்குகையில் விழித்துக்கொள்வதும் அவள் உரிமையாம்.

வடியும் கண்ணீர்தனைத் துடைத்திடுவது - அவள் உரிமையாம்;
பதறவைக்கும் சூழ்நிலைதனைத் தணிப்பது அவள் உரிமையாம்;
கவலையுற்றுத் தவிக்கும் நெற்றிதனை வருடிவிடுவது அவள் உரிமையாம்;
சோர்வில் ஆறுதலின் வார்த்தைதனை மென்மையாய் பேசிடுவதும் அவள் உரிமையாம்.

பிரியும் இறுதி மூச்சுதனைக் கூடவேயிருந்து பார்ப்பது - அவள் உரிமையாம்;
மரணப்படுக்கையில் இருப்போரை ஆற்றி உற்சாகமூட்டுவது அவள் உரிமையாம்;
பூமிக்குரிய நம்பிக்கைகள் யாவும் தளர்ந்து போகையில்;
திரைக்கு இப்பக்கம் சிலவற்றைச் சுட்டிக்காட்டுவதும் அவள் உரிமையாம்.

வழிவிலகிப் போனவரை மீட்டெடுப்பது - அவள் உரிமையாம்;
அவமானத்திற்குள் தொலைந்து போனவரை ஆதாயப்படுத்துவது அவள் உரிமையாம்;
விதவைகளையும், தகப்பனற்றவர்களையும்;
ஆற்றிடுவதற்கும், தேற்றிடுவதற்குமானதும் அவள் உரிமையாம்.

பிள்ளைகளை, நமக்காய் மரித்தவர் மீதான
எளிமையான விசுவாசந்தனில் வழிநடத்திடுவதற்கானது அவள் உரிமையாம்;
அவர்கள் வாலிப நாட்கள்தனை உள்ளார்ந்த அன்பினாலும்;
கனிவான பாராட்டுதலினாலும் ஆசீர்வதிப்பதும், உற்சாகமூட்டுவதும் அவள் உரிமையாம்.

பிள்ளைகளின் அறிவைப் பயிற்றுவிப்பது - மனதை
உயர்ந்த குறிக்கோளிடத்திற்கு நடத்திடுவது அவள் உரிமையாம்;
பூமிக்குரிய விளையாட்டுச் சாதனங்களுக்கு அப்பால் மனதை உயர்த்தக் கற்றுக்கொடுப்பது;
இருதயத்தைப் பரலோக சந்தோஷங்கள்மேல் பற்றுவைத்திட உதவிடுவதும் அவள் உரிமையாம்.

ஸ்திரீயே! நீ அன்புகூரும் அவருக்காய், ஜீவிப்பது உந்தன் உரிமையாம்;
உந்தன் அன்பை நிரூபிக்க வேண்டியே, மரித்திடுவது உந்தன் உரிமையாம்;
பூமிக்குரிய இல்லங்கள்தனை இனிமையான புன்முறுவல்களினாலும்;
கனிவான பேச்சுத்தொனிகளினாலும் ஒளிமயமாக்குவதும் உந்தன் உரிமையாம்.

ஸ்திரீயே! உந்தன் உரிமைகள் அல்லவோ இவை - பிரயோஜனப்படுத்திடு;
இவைகளின் பரிசுத்த செல்வாக்கு ஆற்றல்மிக்கது;
இவைகள் உனதாயின் - ஏன் இன்னும் வேண்டுமெனக் கேட்கிறாய்?
போதுமான உரிமைகள் உனக்கும் இருக்கின்றதுவே!

ஸ்திரீயே! உந்தன் உரிமைகள் அல்லவோ இவை - அப்படியானால் முறுமுறுக்காதே;
**ஸ்திரீகளின் ஊழியமானது,** உந்தனின் பங்காய் இருக்கின்றதுவே;
தேவன் அருளியுள்ள தாலந்துகள்தனைப் **பயன்படுத்திடு**; நீ பூலோகக்
கடமைகளை நிறைவேற்றி முடிக்கவே, பரத்தில் உந்தன் இளைப்பாறுதலும் காணப்படுமே!

- Poems of Dawn.

---

**--3195--**

# என்னிடத்தில் வா

ஆ! என் இருதயம் மிகுந்த பாரம் கொண்டுள்ளதுவே
சோர்ந்து, நொறுங்கி போயுள்ளதே . . .
என்னிடத்தில் வா என்றழைத்தவர் ஒருவர்,
வந்து இளைப்பாறு என்றாரே.

அவர் எனது வழிகாட்டியாகிடுவதற்கு — நான்
அவரிடத்தில் போக — அவர் அடையாளக் குறிகள்
ஏதேனும் வைத்திருக்கின்றாரா? ஆம்! அவர் கைகளிலும்,
பாதங்களிலும், விலாவிலும் காயங்கள் உள்ளதுவே.

இராஜாவைப்போல் அவர் சிரசிசை
அலங்கரிக்க மகுடம் இருக்கிறதா?
ஆம்! அங்கே மகுடம் உள்ளது,
ஆனால் அது முள்ளினாலான மகுடமே!

நான் அவரைக் கண்டறிந்து, பின்தொடர்ந்தேனாகில்
இங்கே எனது பங்கு என்னவோ?
ஆ! அதிக வருத்தமும், போராட்டங்களும்,
அதிக கண்ணீருமே — ஆம் இவைகளே.

நான் அவரை உறுதியாய்ப் பற்றிக்கொள்வேனாகில்
இறுதியில் நான் எதை அடைவேன்?
ஆ! துக்கம் மறைந்திருக்கும், போராட்டம் முடிந்திருக்கும்,
யோர்தானும் கடந்திருப்போமே!

என்னை ஏற்றருளுமே என நான் வேண்டினால்,
என்னை அவர் மறுப்பாரோ?
பூமியும், வானமும் ஒழிவது
வரையிலும் இல்லையே.

-விடியல் துதிப்பாடல்கள், #3

----------------------------------

**--3196--**

# இயேசு கூறுவதை நான் கேட்டேன் [விடியல் துதிப்பாடல்கள், # 108]

இந்த அருமையானப் பாடலானது முன்வைக்கும் – தனிமையின் உணர்வுகள், வெறுமையின் உணர்வுகள், நிலைவரமான நண்பனின் அவசியம் என்ற உணர்வுகள் – குறித்த அனுபவங்களானது கிட்டத்தட்ட ஒவ்வொரு மனித இருதயத்திலும் ஏதோ ஒரு தருணத்தில் கடந்துவருகிறதாகவே இருக்கும். (இவ்வனுபவங்கள் காணப்படுகையில்) ஒருவேளை ஒருவன் இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டிருந்திருப்பானானால் – அவன் மனமானது இயல்பாகவே இயேசுவினிடத்திற்குத் திரும்பிடும். ஆனால் அந்தோ பரிதாபம்! இயேசுவிடம் வருவதோ அல்லது அவரது சீஷர்கள் ஆகுவதோ என்னவென்று அறியாதவர்களாக அநேகர் காணப்படுகின்றனர். பெரும்பாலும் உச்சக்கட்டம் அடைவதற்கு முன்னதாகவும், மாபெரும் நிகழ்வுகள் நிறைவடைவதற்கு முன்னதாகவும், மன அழுத்தம் கடந்துபோய்விடுகின்றது மற்றும் அந்நபர் மீண்டுமாக தனது பழைய சிந்திக்கும் முறைமைக்கும், செய்கைக்கும் திரும்பிவிடுகின்றான்.

இயேசுவிடம் வருதல் என்பது, நம்மை நமது விழுந்துபோன, பாவமான, மரிக்கும் நிலையினின்று மீட்கத்தக்கதாக, பரம பிதாவின் பிரதிநிதியென, பரம பிதாவினால் நியமிக்கப்பட்டு, அனுப்பிவைக்கப்பட்டதான மாபெரும் மற்றும் வல்லமையுள்ள இரட்சகர் என்று ஏற்றுக்கொள்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இயேசுவிடம் வருகையில் நாம் முதலாவதாக எந்த நிபந்தனைகளின்கீழ், அவர் நம்மை ஏற்றுக்கொள்வார், நமக்குப் பரிந்துபேசுபவர் ஆவார் மற்றும் பரம பிதாவின் குடும்பத்திற்குள் கொண்டுவருவார் என்பதுபற்றி உறுதிப்படுத்திக் கொள்கின்றோம். "ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றுள்ள வார்த்தைகளை நாம் கேட்கின்றோம். (1 யோவான் 2:1; மத்தேயு 16:24)

சுயத்தை வெறுத்தல் எனும் முதலாம் படியானது, தெய்வீகச் சித்தத்திற்கு முரணான நமது மனுஷீக சித்தத்தைக் கைவிட்டுவிடுவதைக் குறிக்கின்றாய் இருக்கும். கர்த்தருக்கே ஒழிய, மற்றபடி வேறு எவருக்கும் என்று நமது சித்தங்களைக் கையளிப்பதற்கு நாம் துணிந்திடக்கூடாது. சித்தம் என்பது, நாம் பெற்றிருக்கின்ற மிகவும் விலையேறப்பெற்ற ஒன்றாகும். நமது சித்தத்தை, நமது பூமிக்குரிய சிறந்த நண்பன் வசத்திலோ, பெற்றோர்கள் வசத்திலோ, கணவன் வசத்திலோ, மனைவி வசத்திலோ கையளிப்பது என்பது பாதுகாப்பானதல்ல. ஆனால் நம்முடைய சித்தங்களை நாம் துணிந்து தேவனிடத்தில் கையளித்துவிடலாம்; ஏனெனில் அவருக்குத் தங்களை ஒப்புக்கொடுத்துள்ளவர்கள் அனைவருக்குமான ஆசீர்வாதத்தின் விஷயத்திலுள்ள அவரது தெய்வீக ஏற்பாட்டினையும், அவரது மகா அன்பையும், இரக்கத்தையும் மற்றும் ஞானத்தையும் அறிந்திருக்கின்றோம்.

ஆனால் நம்முடைய சித்தத்தைக் கையளிப்பது/ஒப்புக்கொடுப்பது என்பது, முதலாம்படி மாத்திரமேயாகும். அடுத்து வருவது – தினந்தோறும் சிலுவையை எடுத்துக்கொண்டு நம்முடைய சொந்த சித்தத்தையும், நம்முடைய நண்பர்களுடைய சித்தத்தையும் மற்றும் பல்வேறு எதிர்க்கும் செல்வாக்கையும் எதிர்த்து, கர்த்தருடைய சித்தத்தின்படி செய்வதாகும். கிறிஸ்தவனாய் இருப்பது என்பது, ஆட்டுக்குட்டியானவரின் பின்னடியாராக இருப்பதாகும். இயேசு பிதாவின் சித்தத்தைச் செய்யத்தக்கதாக, தம்முடைய சித்தத்தை ஒப்புக்கொடுத்து விட்டதுபோலவே, அவரது பின்னடியார்கள் அனைவரும்கூடக் காணப்பட வேண்டும். (யோவான் 6:38)

இப்படியாக இயேசுவினிடத்தில் வந்து, அவரது சித்தத்தையும், பிதாவின் சித்தத்தையும் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் பரிசுத்த ஆவியினுடைய ஜெநிப்பித்தலை அடைகின்றோம் மற்றும் அதுமுதல் தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய சுதந்தரவாளிகளாக, நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு உடன்சுதந்தரர்களாகக் காணப்படுவோம்; நாம் அவரோடுகூடப் பாடுபடுவோமானால், அவரோடுகூட மகிமையும் படுத்தப்படுவோம். (உரோமர் 8:17)

**--3197--**

அதுமுதற்கொண்டு வேதாகமத்தின் மூலமாகக் கர்த்தருடைய குரலானது நம்மிடம் பேசிக்கொண்டிருப்பதை நாம் கேட்க ஆரம்பிப்போம் மற்றும் மாபெரும் வெளிச்சமானது நம்முடைய ஜீவியங்களுக்குள் கடந்துவருகின்றதாய் இருக்கும். நம்முடைய புதிய கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, அனைத்துமே வித்தியாசமாய்த் தோன்ற ஆரம்பிக்கும். பரம ஆசீர்வாதங்கள், பரம நம்பிக்கைகள், பரம விருப்பங்களோடு ஒப்பிடுகையில், பூமிக்குரிய வெற்றிகள், பூமிக்குரிய சோதனைகள், பூமிக்குரிய சந்தோஷங்கள் மற்றும் பூமிக்குரிய துக்கங்கள் ஒரு பொருட்டானவைகளல்ல. "நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே." (எபிரெயர் 10:32)

- Angelophone Hymn Book.

----------------------

--3198--

# ஓ! என்னைப் போகவிடாத அன்பே

ஓ! என்னைப் போகவிடாத அன்பே -
எந்தன் சோர்ந்துபோன ஆத்துமாவினை உந்தனில் இளைப்பாற்றிடுவேனே;
கடன்பட்டிருக்கும் ஜீவிதத்தையே உம்மிடத்திலேயே கொடுத்திடுவேனே,
அது சமுத்திர அளவாய் ஆழமுள்ள உம்மில்
நிறைந்து வழிந்திடவே, நிறைந்து வழிந்திடவே.

ஓ! என் வழிகளிலெல்லாம் என்னைப் பின்தொடரும் வெளிச்சமே -
விட்டுவிட்டு எரியும் எந்தன் விளக்கினை உந்தனிடத்தில் கொடுத்திடுகின்றேனே;
எந்தன் இருதயமானது கடன் வாங்கின ஒளிக்கதிரினையே பயன்படுத்துகின்றதே,
உந்தன் சூரிய ஒளிப் பிரகாசத்தினிலே எந்தன் இருதயத்தின் பகல் பொழுதும்கூட
பிரகாசமாகவும், அழகாகவும் காணப்படுவதற்கே.

ஓ! வலியிலும் என்னைத் தொடர்ந்து தேடிவருகின்ற சந்தோஷமே -
உந்தனுக்கு எந்தன் இருதயத்தினை, அடைத்திட முடியாதே - நான்
மழையிலும் காண்கின்றேனே வானவில்லை,
உணர்கின்றேனே! வீணில்லை அந்த வாக்குத்தத்தமே,
அந்த விடியல் கண்ணீரற்று இருக்குமென்ற அந்த வாக்குத்தத்தமே.

ஓ! எந்தன் தலையைத் தூக்கிவிட்ட சிலுவையே!
உம்மிடமிருந்து பறந்தோட நான் வேண்டிட மாட்டேன்;
மரணத்தின் குளிர் அலையையும் கண்டு நான் அஞ்சிட வேண்டியதில்லையே,
ஏனெனில் சர்வ மகிமைகளுள்ள உந்தனின் இல்லத்திலேயே,
எந்தன் ஜீவிதம் முடிவில்லாமல் காணப்படுமே!

- வேத மாணாக்கர் துதிப்பாடல்கள், # 28

-------------------------

**--3199--**

# இயேசுவின் சிலுவையின் கீழே

இயேசுவின் சிலுவையின் கீழே நிற்பேனே.
அது களைப்புள்ள தேசத்தில், கன்மலையின் நிழல் போலாகுமே;
அது வனாந்தரத்தில் வீடு போலாகுமே; அது வழியில்
இளைப்பாறும் ஸ்தலம் போலாகுமே; அது சுட்டெரிக்கும் நண்பகல்
வேளையிலிருந்தும், ஒவ்வொரு நாளினுடைய பாரத்திலிருந்தும்
இளைப்பாறும் ஸ்தலம் போலாகுமே.

ஓ! அது பாதுகாப்பும், மகிழ்ச்சியுமுள்ள புகலிடமே;
ஓ! அது நாம் வாஞ்சிக்கும் இனிமையான அடைக்கலமே;
ஓ! அவ்விடத்திலேயே பரலோக அன்பும், நீதியும் சந்திக்குமே;
யாக்கோபிற்கு அருளப்பட்ட அந்த அற்புதமான கனவுபோலவே
என் இரட்சகரின் சிலுவையும் எனக்குப் பரலோகம்
செல்லும் ஏணி போன்றுள்ளதே.

ஓ! சிலுவையே உன் நிழல்தனையே
நான் அடைக்கலமாய்க் கொள்கின்றேனே.
அவர் முகம் பிரகாசம் தவிர வேறு எந்த
ஒளியையும் நான் வேண்டிடுவதில்லையே.
உலகை நான் விட்டுவிடுகின்றேனே, அதன்
இலாபமும் நஷ்டமும் நான் அறிய விரும்பவில்லையே.
என் கடந்தக்கால ஜீவியம் எல்லாம் வெட்கமே,
என் மகிமை அனைத்தும் சிலுவையே.

– வேதமாணவர்களின் துதிப்பாடல்கள், #31

-----------------------------

**--3200--**

# நன்றியுடன்கூடிய அர்ப்பணிப்பு

ஸ்தோத்திரத்திற்குரிய என் இரட்சகர் மரித்த
அவ்வியத்தகு சிலுவையினை - நான்
ஆராய்ந்துபார்க்கையிலே . . . எனக்குப் பூமியில்
இலாபமாயிருந்தவைகள் எவைகளோ அவைகளை
நஷ்டமென்று எண்ணினேன். அவைகளின்
பகட்டும், பெருமிதமும் எத்தனை வெறுமையானது!

எனக்கு ஜீவனையும், சமாதானத்தையும் வாங்க
உம்மையே நீர் பலியாக ஈந்திருக்க — இதை
நான் மறந்து, உம்மைவிட்டு விலகி
இவ்வுலக இன்பத்திலே நான்
இளைப்பாறுதலை நாடிடமாட்டேனே.

நான் எனக்குச் சொந்தமல்ல ஆண்டவரே,
எனது எல்லா பெலனும், உரிமையும்
உமக்கே உரியதாகுமே . . .
தேவனுக்குத் துதிச் சாற்றிட ஊழியம் செய்வது,
இந்த அடிமைக்குக் கிடைத்த சிலாக்கியமே.

அற்பமான எனதனைத்தையும் உமது பலியினருகே
வைத்திடுகின்றேனே. அது நலிந்ததுதான் என
நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆயினும்
அது மிகச் சிறியதல்லவே.

என்னுடைய நன்றியுடன்கூடிய காணிக்கையை
நீர் அங்கீகரிப்பீரென நான் அறிவேனே. அன்பே என்
இக்காணிக்கைக்குக் காரணமென நீர் அறிவீர் ஆண்டவரே.
ஆ! அன்பு உமக்கு சுகந்த வாசனையல்லவோ.

- விடியல் துதிப்பாடல்கள், #325

--------------------------

**--3201--**

# என் மீட்பர்

பாடிடுவேனே என் மீட்பரை
என் மீதிலுள்ள அவரது ஆச்சரியமான அன்பினையே.
கோர சிலுவையில் அவர் பாடுபட்டிட்டாரே,
சாபத்தினின்று என்னை விடுவித்திடவே.

சொல்லிடுவேனே வியத்தகு கதையினையே,
எப்படிச் சிறிய சுபாவத்திலான என்னை இரட்சித்திடவே;
தம் எல்லையில்லா அன்பிலும், இரக்கத்திலுமே
இலவசமாய் மீட்கும்பொருளைக் கொடுத்திட்டார் என்றே.

துதித்திடுவேனே எந்தன் அருமை மீட்பரை,
இரட்சித்திட அவரது வல்லமை வென்றது என்பது பற்றியே,
எப்படி வெற்றி வென்றார்
பாவம் மற்றும் மரணம் மற்றும் கல்லறை மீதினிலே என்றே.

பாடிடுவேனே எந்தன் அருமை மீட்பரை,
மகிமை சாற்றிட என் சத்தத்தை உயர்த்திடுவேனே;
மரணத்தினின்று என்னை ஜீவனுக்குள் கொண்டுவந்தவரையே,
பரலோக மகிமையைக் காண்பித்தவரையே.

பாடிடு, ஓ! பாடிடு எந்தன் மீட்பரை;
அவர் தம் இரத்தத்தினாலேயே என்னை வாங்கிட்டாரே;
சிலுவையில், எந்தனுக்கான மன்னிப்பினை முத்திரையிட்டாரே,
கடனைத் தீர்த்து என்னை விடுவித்தாரே.

–விடியல் துதிப்பாடல்கள், # 132

----------------------

**--3202--**

## சிலுவையின் அருகில்

இயேசுவே, சிலுவையின் அருகே என்னை வைத்தருளும்;
அங்கே ஒரு விலையுயர்ந்த நீரூற்று உள்ளதுவே,
குணமாக்கும் ஓடை அனைவருக்கும் இலவசமாகவே
கல்வாரி மலையிலிருந்து பாய்கின்றதே.

சிலுவையினருகே நடுங்கிய ஆத்துமாவை
அன்பும், இரக்கமும் கண்டதுவே. அங்குப்
பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரம் என்னைச்
சுற்றி அதன் ஒளியை சிதறவிட்டதே.

நதிக்கு அப்பால் இருக்கும் பொன்னான கரையை
நான் நெருங்கும்வரை, சிலுவையினருகே
விழித்திருந்து காத்திருப்பேனே! ஆம், எப்போதும்
நம்பிக்கையுடனும் எதிர்ப்பார்ப்புடனுமே.

சிலுவையை, ஆம் சிலுவையைக் குறித்தே
எப்போதும் மேன்மைப் பாராட்டிடுவேனே.
நதிக்கு அப்பால் இளைப்பாறுதலை அடையும்வரை
எந்தன் ஆன்மா காத்திருக்குமே.

- விடியல் துதிப்பாடல்கள், #135

------------------------

**--3203--**

# அங்கு நீ இருந்தாயா?

எந்தன் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
எந்தன் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
எந்தன் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?

அவரை அவர்கள் ஆணியினால் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
அவரை அவர்கள் ஆணியினால் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவரை அவர்கள் ஆணியினால் அறைந்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?

அவர்கள் அவரது விலாவில் அவரைக் குத்தினபோது, அங்கு நீ இருந்தாயா?
அவர்கள் அவரது விலாவில் அவரைக் குத்தினபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவர்கள் அவரது விலாவில் அவரைக் குத்தினபோது, அங்கு நீ இருந்தாயா?

சூரியன் பிரகாசிக்க மறுத்தபோது, அங்கு நீ இருந்தாயா?
சூரியன் பிரகாசிக்க மறுத்தபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
சூரியன் பிரகாசிக்க மறுத்தபோது, அங்கு நீ இருந்தாயா?

அவர்கள் அவரைக் கல்லறையில் வைத்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
அவர்கள் அவரைக் கல்லறையில் வைத்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவர்கள் அவரைக் கல்லறையில் வைத்திட்டபோது, அங்கு நீ இருந்தாயா?

அவர் கல்லறையினின்று எழுந்தபோது, அங்கு நீ இருந்தாயா?
அவர் கல்லறையினின்று எழுந்தபோது, அங்கு நீ இருந்தாயா?
ஓ! இது சிலசமயம் என்னை நடுங்க வைக்கின்றதே, ஆம்! நடுங்க வைக்கின்றதே!
அவர் கல்லறையினின்று எழுந்தபோது, அங்கு நீ இருந்தாயா?

-கேம்பர்ஸ் துதிப்பாடல்கள், # 8

------------------------

**--3204--**

Song 48

# இயேசு, என் கர்த்தர்

என் கர்த்தராகிய இயேசுவைப் பார்த்திருக்கின்றீர்களா?
அவர் இங்கு எளிமையான காட்சியில் காணப்படுகின்றார்!
பாருங்கள், உங்கள் கண்களைத் திறவுங்கள்;
அவரை உங்களுக்குக் காண்பித்தருளுவார்.

வானம் சிவப்பு நிறமாய் கனிந்த பின்பு,
மேகங்களை இறக்கைகளெனத் தொங்கவிட்டு,
சூரியன் அஸ்தமனமாகுவதை நீங்கள் எப்போதேனும் கண்டிருக்கிறீர்களா?
ஆ! பார்த்திருக்கின்றீர்களானால் நீங்கள் என் கர்த்தராகிய இயேசுவைக் கண்டிருக்கின்றீர்கள்
என்று நான் சொல்லிடுவேனே.

வெண்மையான நுரையானது உங்கள் பாதங்களைத் தொட்டுச் செல்ல,
முடிவில்லா ஆவேசத்துடனான சலனத்தை உணர்ந்த நிலையிலும்
சமுத்திரத்தின்முன் நீங்கள் எப்போதேனும் நின்றிருக்கிறீர்களா?
ஆ! நின்றிருக்கின்றீர்களானால் நீங்கள் என் கர்த்தராகிய இயேசுவைக் கண்டிருக்கின்றீர்கள்
என்று நான் சொல்லிடுவேனே.

தமது கண்களில் அன்பின் பார்வையுடன்,
மனதில் வலியுடன் மனிதன் தொங்கிடும்
சிலுவைதனை நீங்கள் எப்போதேனும் ஏறெடுத்துப்பார்த்திருக்கிறீர்களா?
ஆ! பார்த்திருக்கின்றீர்களானால் நீங்கள் என் கர்த்தராகிய இயேசுவைக் கண்டிருக்கின்றீர்கள்
என்று நான் சொல்லிடுவேனே.

-கேம்பர்ஸ் துதிப்பாடல்கள், # 48

---------------------------

**--3205--**

Song 2

# என்னை நினைவுகூருவாயாக

உம் கிருபையான வார்த்தைக்கேற்ப
சாந்தமான தாழ்மையுடனே
இதை நான் செய்திடுவேன், மரித்துக்கொண்டிருக்கும் என் ஆண்டவரே,
நான் உம்மை நினைவுகூர்ந்திடுவேனே.

எந்தனுக்காய்ப் பிட்கப்பட்டதான உம் சரீரமே,
வானத்திலிருந்திறங்கி எந்தனுக்காய் வந்த அப்பமாயுள்ளதே;
உம் உடன்படிக்கையின் பாத்திரந்தனை நான் எடுத்திடவே,
இப்படியாய் நான் உம்மை நினைவுகூர்ந்திடுவேனே.

எந்தன் கண்களைச் சிலுவையினிடத்திற்கு நான் திருப்பி
கல்வாரியினை நான் நோக்குகையில்,
ஓ! தேவ ஆட்டுக்குட்டியே, எனக்கான பலியே,
உம்மை நான் நினைவுகூர்ந்திட வேண்டுமே.

நினைவில் கொண்டிருப்பேனே உம்மையும், உம் வலிகள் அனைத்தையுமே,
நினைவில் கொண்டிருப்பேனே எந்தனுக்கான உம் அன்பு அனைத்தையுமே.
ஆம், கடைசி மூச்சுவரையிலுமே, கடைசி நாடித்துடிப்பு வரையிலுமே
நான் உம்மை நினைவுகூர்ந்திடுவேனே.

உம் கிருபையின் அளவை நான் புரிந்துகொள்வேனே,
உமக்கொப்பாக நான் காணப்படும்போதே.
நீர் உம் இராஜ்யத்தில் வந்திடும்போது
நீர் என்னை நினைவுகூர்ந்தருளுமே.

-விடியல் துதிப்பாடல்கள், # 2

----------------------

**--3206--**

# பெலன் தாரும் இயேசுவே

ஆசீர்வதிக்கப்பட்ட என் இயேசுவே, அனுதின சிலுவைதனை
மகிழ்வுடன் சுமக்க வேண்டிய பெலன் தாரும்.
என் அனுதின சிலுவை, எத்தன்மையதாய் இருப்பினும்,
உந்தன் நாமத்தினாலே மகிழ்ச்சியுடன் சுமந்திடவே பெலன் தாருமே.
என் அன்றாட கடமைகளைச் செய்திடும்போதினிலே
உம்மைப் பின்சென்றிட வேண்டுமே,
தினம்தினம் யான் பணிவுடனே கேட்டுப்பெற்றிட வேண்டுமே,
நீர் அருமையாய்ச் சுமந்திட்ட சிலுவைதனின் நினைவுகளுடனே
அன்றாடம் நாங்கள் செய்யும் வேலைகளைப் புனிதமாக்க வேண்டுமே,
பூமியிலே நாங்கள் இழக்கும் ஒவ்வொரு இழப்புகளையும்
ஆசீர்வாதமாகவே, இலாபமாகத் திரும்பப்பெற வேண்டுமே.
உம் பாதம் வந்துசேர்ந்து நான் சுமந்திட்ட சிலுவைதனை
உம் கால்களுக்கடியிலே சாற்றிடும் வரைதனிலே,
என் அன்றாட சிலுவைதனைச் சுமக்க உதவி தாரும் ஐயா,
உம் இரத்தத்தின் மூலமே என் பாவத்திலிருந்து மன்னிப்படைய வேண்டுமே,
சிலுவை மூலமே என் கிரீடந்தனை வென்றெடுக்க வேண்டுமே.

விடியல் துதிப்பாடல்கள், # 65A

------------------------

**--3207--**

# கிறிஸ்து நமது பஸ்கா

நம் இரட்சகர் அன்பின் நினைவலைகளினாலே,
நாம் இந்த எளிய விருந்தை அனுஷ்டிக்கின்றோமே,
ஒவ்வொரு முழுத்தத்தம் செய்திட்ட பரிசுத்தவான்களையும்
இந்த விருந்து சாலைக்குள்ளே வரவேற்கின்றோமே.

விசுவாசத்தினாலே ஜீவ அப்பத்தை எடுத்துக்கொள்வோமே,
அதையே இது அடையாளம் காட்டுமே,
இந்தப் பாத்திரம் அவர் இரத்தத்திற்கான அடையாளமே,
நமக்கான விலையேறப்பெற்ற தியாக பலி இதுவே.

இப்பாத்திரம் மீண்டும் மீண்டுமாய் நினைப்பூட்டுதே
நீர் எங்களை விடுவித்த அந்நேரத்தையே.
விரைவிலே இராஜ்யத்தின் அதிகாரத்துடனே புது மகிழ்ச்சியில்
அதை உம்முடனே பானம்பண்ணுவோமே ஆண்டவரே.

எவ்வளவு களிப்பு எமக்குக் கிட்டும் ஆண்டவரே,
உம்முடனே என்றென்றைக்கும் வாழும் பாக்கியம் கிடைக்குமே,
உயிர்த்தெழுந்த ஆற்றல்களை ஆடையாக அணிகொண்ட நாமே,
உம்முடைய முடிவில்லாத புகழினைப் பாடிடுவோமே.

- விடியல் துதிப்பாடல்கள், #122

---------------------------

**--3208--**

# உமக்கே மிகுதியான அன்பு உரித்தாகுக

உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
கேட்டிடுமே நான் ஏறெடுக்கும் ஜெபத்தினை,
நான் முழங்கால் படியிட்டு ஏறெடுக்கும் ஜெபத்தினையே.
இதுவே எந்தன் வாஞ்சையுடன் கூடிய வேண்டுகோளே,
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

ஒருகாலத்தில் பூமிக்குரிய சந்தோஷத்தை வாஞ்சித்த நானே,
நாடுகின்றேனே சமாதானத்தையும் இளைப்பாறுதலையுமே;
இப்பொழுது உம்மை மாத்திரமே நாடுகின்றேனே;
சிறந்தது எதுவோ அதையே எனக்குத் தந்திடுமே.
இதுவே எந்தன் அனைத்து ஜெபமாகும்,
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

துயரம் அதன் வேலையைச் செய்திடுவதாக,
துயரத்தையும், வலியையும் அனுப்பிவையும்.
உந்தன் தூதுவர்கள் இனிமையாய் உள்ளனர்.
இனிமையாய் உள்ளதே அவர்களின் பல்லவி
அவர்கள் என்னோடுகூடப் பாடிடும்போதே.
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

எந்தன் கடைசி மூச்சு . . .
உந்தன் துதியையே பேசிடுமே
இதுவே எந்தன் இறுதி வார்த்தையாய்
எந்தன் இருதயம் பேசிடுமே!

இதுவே எந்தன் அனைத்து ஜெபமாகும்,
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக, ஓ! கிறிஸ்துவே!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!
உமக்கே மிகுதியான அன்பு உரியதாகுவதாக!

# 172

---------------------------------

**--3209--**

Song 335

# அது சிலுவையாய் இருப்பினும்

நான் எப்போதும் ஜெபமாக பாடுவதுண்டே:
"தேவனே, உம்மண்டை நெருங்கிட வேண்டுமே" என்ற இந்த வார்த்தைகளை;
தெய்வீகமானவரின் ஐக்கியத்திற்காய் ஏங்குகின்றேனே நானே,
உந்தன் அன்பான முகந்தனைக் கண்டிடவே ஏங்குகின்றேனே நானே.
ஆனால் இந்தப் பாக்கியமான நிலைதனுக்காய்
இலாபமான அனைத்தையுமே குப்பை என்று எண்ணிடுவேனா,
உம் சித்தப்படியே என்னை இழுத்திடுவதற்கு இணங்கிடுவேனா,
"அது சிலுவையாய் இருப்பினும்?"

தேவனே, உம்மண்டை நெருங்கிட, நெருங்கிட வேண்டுமே,
இதுவே எந்தன் இருதயத்தின் வாஞ்சையாய் இருக்கிறதே;
நாள்தோறும், உந்தன் அருகில் பிரயாணம் பண்ணிடவே விரும்பிடுகின்றேனே்.
மிக அருமையான இந்தக் கனத்திற்குரிய நிலைதனை ஆதாயமாக்கிடுவதற்கே,
நான்அனைத்தையும் தூசு என எண்ணிடுகின்றேனே;
எந்த வழிவகையைக் கொண்டும் என்னைத் தூக்குவீராக!
"அது சிலுவையாய் இருப்பினும் பரவாயில்லையே."

சிலுவையை நான் சுமந்திடாதது வரையிலுமே
கிரீடம் கொடுக்கப்படுவதில்லை என்று அறிந்திருக்கின்றேனே;
நான் இங்குப் பாடுபட்டிட வேண்டுமே,
பரலோகத்தில் ஆளுகை செய்ய வேண்டுமெனில் என்று அறிந்திருக்கிறேனே.
அச்சம் கொள்கின்றேனே நான் உம்மிடமிருந்து வேறு பக்கம் பார்த்திடவே;
பார்த்திட்டாலே அனைத்தையும் இழந்திடுவேனே.
ஆகையால் உந்தன் வழிதனிலேயே, எந்தன் ஆத்துமா எழும்பட்டுமே
"அது சிலுவையாய் இருப்பினும் பரவாயில்லையே."

இதுவே எந்தன் இருதயத்தின் உண்மையான வாஞ்சையாம்,
"தேவனே உம்மண்டை நெருங்கிடவேண்டுமே" என்பதே என் வாஞ்சையாம்;
ஓ! எந்தனை நெருக்கமாய் இழுத்துக்கொள்ளுமே,
"சிலுவைதான் இழுத்துக்கொள்ளுமாயினும், அது பரவாயில்லையே."

- விடியல் துதிப்பாடல்கள், # 335

-----------------------

**--3210--**

# பழைய கரடுமுரடான சிலுவை

தூரத்தில் மலை மீதினிலே நின்றதே அந்தப் பழைய கரடுமுரடான சிலுவை,
பாடுகளின், அவமானத்தின் அந்த அடையாளமே; மிகவும் அன்புகூர்ந்தேனே –
அந்தப் பழைய சிலுவையை; அங்கே அருமையானவரும், சிறந்தவருமானவர்,
தொலைந்துபோன பாவிகளுள்ள உலகத்திற்காய் அடிக்கப்பட்டாரே.

ஓ! உலகத்தினால் அற்பமாய்ப் பார்க்கப்படுகின்ற அந்தப் பழைய கரடுமுரடான சிலுவையே,
எந்தனை வியத்தகு வண்ணம் கவருகின்றதே;
ஏனெனில் தேவனுடைய அன்பான ஆட்டுக்குட்டியோ தம் மகிமை துறந்துவந்திட்டாரே
இச்சிலுவையை, இருட்டான கல்வாரி வரைக்கும் சுமந்து சென்றிடவே.

வேகமாய் வடிந்த குருதி கறைப்படிந்த அந்தப் பழைய கரடுமுரடான சிலுவைதனிலே
விந்தையான அழகுதனை நான் காண்கின்றேனே;
ஏனென்றால் அந்தப் பழைய சிலுவைதனிலே இயேசு பாடுபட்டாரே, மரித்திட்டாரே
எந்தனை மன்னிப்பதற்கும், பரிசுத்தமாக்கிடுவதற்குமே.

அந்தப் பழைய கரடுமுரடான சிலுவைக்கு, நான் என்றென்றும் உண்மையாய் இருப்பேனே,
அதன்அவமானத்தையும், நிந்தனையையும் மகிழ்வுடனே சுமப்பேனே;
அப்போதே அவர் ஒருநாள் வெகுதூரமாயுள்ள அந்த வீட்டிற்கு எந்தனை அழைப்பாரே,
அங்கு அவர் மகிமையில் என்றென்றும் பங்கடைவேனே.

ஆகையாலே அந்தப் பழைய கரடுமுரடான சிலுவையை நான் சீராட்டிடுவேனே,
கடைசியில் எந்தன் பரிசினை நான் அடையும் வரையிலுமே.
உறுதியாய்ப் பிடித்துக்கொள்வேனே அந்தப் பழைய கரடுமுரடான சிலுவையையே,
ஒருநாள் அதைக் கொடுத்து, மாற்றிவாங்கிடுவேனே கிரீடத்தையே.

-விடியல் துதிப்பாடல்கள், # 359

----------------------------

**--3211--**

Song 173

## சிலுவையில், இன்னும் இடமுள்ளது

துயரப்படுகிறவனே, நீ யாராக இருப்பினும்,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
உந்தன் இருதயத்தின் பாரந்தனை கூறிடுவாயாக,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
உந்தன் இரட்சகரின் காதினில் கூறிடுவாயாக
உந்தன் பீதி அனைத்தையுமே இறக்கிடுவாயாக,
பேச மாத்திரம் செய்திடு; அவர் கேட்டிடுவார்,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது!

விரைந்திடு, சுற்றித்திரிந்திடாதே, தாமதித்திடாதே,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
அந்த அர்ப்பணிக்கப்பட்ட ஸ்தலத்தை நாடிடு,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது.
வெகுபாரம் சுமக்கிறவனே, தாங்கமுடியா துயருடையவனே,
உந்தன் கவலை நிறைந்த இருதயந்தனை அன்பு ஆற்றிடுமே,
இரட்சகரில் உந்தன் இளைப்பாறுதலைக் கண்டடைவாயே,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது!

அனைவருக்குமே பாக்கியமான சிந்தையாய் உள்ளதே
சிலுவையில் இன்னும் இடமுள்ளது என்பதே.
அன்பின் ஒப்புரவாகுதல் வேலை நடைப்பெற்றதே,
சிலுவையில் இன்னும் இடமுள்ளது!
-விடியல் துதிப்பாடல்கள்
சீறியே பாய்கின்றதே நதியென்ன இரக்கமே
அங்குச் செல்பவர் அனைவருக்குமே;
ஓ! உலகமனைத்தும் அறிய வேண்டுமே
சிலுவையில் இன்னும் இடமுள்ளது என்பதையே!

# 173

-------------------------

**--3212--**

# பாடல்.1/.(Abide,Sweet, Spirit)

தேவ ஆவியே, இனிய ஆவியே, பரலோகப்புறாவே,
எனக்குள் இறங்கி வாருமே.என்னுள்ளே தங்குமே,
பரத்திலிருந்து ஒளி கொணர்ந்து தேற்ற வாருமே,
எனக்குவழிகாட்டி,பாதுகாத்து வழிநடத்திச் செல்லுமே,

நான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிக்கும்,
எண்ணும் எனது ஒவ்வொரு சிந்தைக்கும்
சத்தியத்தின் மகத்துவத்தின் ஒளி எம்மீது வீசச்செய்யும்,
எமக்கு சத்தியத்தை உணர்த்தியே உம்வழியைத்தெரிந்தெடுக்கச்செய்யும்,
ஒவ்வொரு இதயத்திலும் தேவ பயம் முளைக்கச்செய்யும்,
தேவனினின்று ஒருபோதும் விலகாதவாறு பார்த்துக்கொள்ளும்,பரிசுத்தத்தில்எமை நடத்தும்,
தேவனுடன் வாசம் செய்யும் பாதையிலே வழிநடத்தும்,
கிறிஸ்துவுக்குள் நடத்திச்செல்லும்,வாழும் வழி காட்டிவிடும்,
வாழிடம் இல்லா விலங்குகளுக்கும் மேய்ச்சலைக்காட்டிவிடும்,

கவனமுடன்கூர்மையாக ஜெபத்திலிருக்க வேண்டும்,
நீர் நியமித்த மணித்துளிகள் காத்திருக்க வேண்டும்,
உம் இரக்கப்பெருக்கத்தினை பகிர்ந்துகொள்ள வேண்டும்,
வெற்றிபெற்ற ஆற்றலுடன் எக்காளம் ஊதவேண்டும்.

ஆசீர்வாதங்களின் ஊற்றான தேவனையே போற்றுங்கள்,
எல்லாபடைப்புகளே, அவரைப்புகழ்ந்தேத்துங்கள்,
பெருஞ்சத்தமுடன் உளமாறப்பாடிடுங்கள்,
அவர் குமாரனில் எப்பொழுதும் மகிழ்ச்சிகொள்ளுங்கள்.

பாடல்.2. **என்னைநினைவுகூரும்.**

உமது இரக்கப்பெருக்கத்தின்வார்த்தையின்படியே,
தாழ்மையான தன்னடக்கத்துடனே நான் செல்வேனே,
எம் அன்பான தேவனே, உம் மரணத்தில் சொன்னதை
நினைவில்கொண்டு உள்ளேனே.
எனக்காக பிட்கப்பட்ட உம் சரீரமே,
பரலோகத்திலிருந்து எனக்குக்கொடுத்த மன்னாவோ,உம் உடன்படிக்கைப்
பாததிரத்தை நானெடுத்தே,
இப்படித்தான் உம்மை நினைவுகூரச் செய்தேனோ?

என் கண்களை சிலுவையின்மீதேறெடுக்கையிலே,
கல்வாரியின்மீதுவைத்துப்பதிக்கையிலே,
எனக்காகபலியான தேவாட்டுக்குட்டியே,
நான் உம்மை நினைவுகூர்கிறேன் தேவனே.
உம்மைநினைத்து, உம் துன்பங்கள் நினைத்து,
உம் அன்பு எல்லாம் எனக்காகவே அன்றோ,
ஒருமூச்சும், ஒருதுடிப்பும் இருக்கையிலே,
உம்மையே நினைவுகூர்நதிடுவேனே.

# பாடல்.3. என்னிடத்தில் வாருங்கள்;.!(Come to me)

என் இதயம் சுமக்கவியலாபாரத்தால் கனக்கிறதே,வலுவிழந்து ஒடுக்கப்பட்டுள்ளதே,
என்னிடம் வாருங்கள் என்றே எனை அழைக்கின்றார்,
நானும்தான் வந்தேன், அவருக்குள் இளைப்பாறிடவே.

என்னை அவர் வழிநடத்தும்போதில் அவரை நோக்கி என்னை ஈர்த்துக்கொள்வாரோ,
பாதங்களுள்ளும் கரங்களுக்குள்ளும்.விலாவினுள்ளும், காயத்தின் தழும்புகளுக்குள்
என்னை அவர் ஈர்த்துக்கொள்வாரோ.
அ்குஅழகு சேர்க்கும் முடி சூட்டிய மன்னவரோ,
ஆஹா, நிச்சயமாய் அந்த கிரீடம்தான் முட்களால் தொடுக்கப்பட்டதல்லோ,

நான் அவரைக்கண்டால்,அவரைத்தொடர்ந்து சென்றால்
என்பங்கு எனக்கு இங்கே என்ன?
வருத்தம் மிகுமே, மோதல்கள்தோன்றுமே,
கண்ணீர்தான் மிஞ்சுமன்றோ,

இன்னும் நான் அவரைக்கிட்டிச்சேர்ந்தால்
இறுதியில் எனக்கென்ன கிட்டும்?இறுதியில் நான் என்ன அடைவேன்?
துன்பங்கள் மறையும், வருத்தங்கள் முடிவுறும்,யோர்தானையும் நான்தான் கடந்திடுவேன்.
என்னை ஏற்றுக்கொள்ளும் என்றே நான்வேண்டினால்
முடியாது என்றே கூறிடுவாரோ?
இந்த உலகம் கடந்து பரலோகம் மறைந்து போனாலும் மறுக்கமாட்டாரே.

பாடல் 4. கிறிஸ்துவே எனது இலககு.

உலகம் மதிப்பதாய்தோன்றும் எல்லாமும்,
தங்கமும் பொக்கிஷமும், பகட்டாய்த்தோன்றும் எதுவாக இருப்பினும்,
எனக்கெதுவும் சந்தோஷம் தராதே, ,
என் இதயம் எல்லாமும், இலக்கும் ஒன்றே,
கிறிஸ்துவை நானே அடைந்திட வேண்டுமே.
என் இதயம் தேடும், அன்பரை நாடும்,
இலக்கும் ஒன்றே, யேசுவே போதுமே, அவர் மாத்ரம் போதுமே.
இந்த உலகும், அதன் பொழுதுபோக்கு, மகிழ்ச்சிகள் யாவும் அழியும்,
அவள் அழகும் பூப்போல வாடியே மறைந்தே போகும்,

இந்த உலகின் பிரகாச தருணங்கள்யாவும் கடந்து போனதே,மணிநேரமே
தேடும் ஒவ்வொரு இதயஉம் நாடும் அவரன்பு ஒன்றிலே ஐக்கியமாகும்,நாடும், தேடும்.
கிறிஸ்துவே எனது இலக்காகும், அவரை, அடைதலே எனது மூச்சாகும்.

இக்கோட்டைக்கெதிராய் எவரும் நில்லார்,
அவரது அரசோ முடிவுபெறாது,
அவரது அரியணை உறுதியாய்நிலை நிற்கும்.
இந்நாள் முதலாய்முடிவிலாகாலமட்டும்,
எதிர்த்து நிற்பவர் எவரும் இல்லார்.

இந்த உலகின் யாத்ரீகனாய் நான் அலைந்தாலும்,
நான் அன்புசெய்யும் ஒருவரிடம் இன்னும் சேரவில்லையே,
அவர் என்னை விரைவாக வந்து அணைத்துக்கொள்வார்,
பரத்தின் மகிமையில் என்னைசேர்த்துக்கொள்வார்.
எனவேதான்நான் ஜெயிப்பேனே,எனது இலக்கு கிறிஸ்து மட்டுமே, அவர் ஒருவ
அறிர்போதுமே.

## பாடல்: 5  ஐயகோ, என்மீட்பர் இரத்தம் சிந்தினாரோ

ஐயகோ, என்மீட்பர் இரத்தம் சிந்தினாரோ.
என்இராஜன் மரித்தாரோ,
புழுவுக்கு ஒப்பான எனக்காகக்கூட
அவர் புனிதமாம் தலையை ஒப்புக்கொடுத்தாரோ?
உனக்காககிறிஸ்து மரித்தாரே,
எனக்காக இயேசு தம் ஜீவன்விட்டாரே,
இம்முழு மனுக்குலத்திற்காகவும் கிறிஸ்து மரித்தாரே,
தேவனின் ஆசீர்வாதம் மீட்பும் இலவசமாய்கிடைத்ததுவே.
நமது பிதா அறிவாரே, நமக்கு என்ன தேவை என்று,
நம் வாழ்க்கையின்அசைவுகளின் ஒவ்வொரு நொடிப்பொழுதினிலும்,
கனப்பொழுதும் அயர்வதில்லை, கண்கூட துஞ்சுவதில்லை,
நம்மை அவர் காக்கின்றார், இரவினிலும், பகலினிலும்,
அவரன்பு கண்கொண்டு நமை நாளும் காக்கின்றார்,
கண்மூடித்தூங்கமபட்டார், துயிலறியார் இரவுபகல்,
முற்றிய கதிர்களுக்கு மிக வெளிச்சம்தேவையென்று,
சில சமயம் கொடுத்திடுவார், அதிகமான ஒளிக்கற்றை,
பின்னர்தான் அனுப்பிடுவார், சமாதானம் தந்திடுவார்,
சமாதானம் வந்துவிடும், இரவுதனின் நிழல்களுடன்,
நமில் சுருட்டிடாமல் விட்டுவிட்ட பெருழமைகூட சிலநேரம்,
வீறாப்பு காட்டிவிடும்,மகிழ்ச்சிகொள்ள வைத்துவிடும்,
அவர்மட்டும் அறிந்திடுவார்,
நமக்கதனை சுட்டிக்காட்ட, நடக்கக்கூட அனுமதிப்பார், அவமானப்பள்ளத்தாக்கில்.
ஆர்வம்கொண்டே நம்கரங்கள் அலைகின்றபோதினிலே,
அமைதியோடு கரம்பற்றி தயாளமாய் ஒதுக்கிடுவார்,
அவரே அறிந்திடுவார், வேலைகள் போதுமப்பா,ஓய்வுகொள் என்று சொல்லி,
ஓய்ந்துகொள்ள அனுமதிப்பார்,வருந்தவேண்டாம், ஊக்கம்கொள்,
ஆறுதல் தேவைப்படும், வனாந்தரமும் வந்து சேரும்,
நமைபடைத்த தேவனுக்கு இதுஎல்லாமும் தெரிந்துவிடும்,
தெரிந்ததுமேகொடுக்கின்றார் அளவிலாத ஆசீர்வாதம்,
அத்தனையும் அனுபவிப்போம், எத்துனையும் சுகம்கொள்வோம்,
என்னதான் வந்தாலும் நானுள்ளேன் உன்னுடனே,
என்ற வார்த்தை நமக்குண்டு, வீண்கவலை நமக்கெதற்கு?
யாத்திரையின்வழிநெடுகநம்மையவர் நடத்திசெல்ல,விட்டிடுவோம் அவரிடமே,
தேவைகளை தந்திடுவார்.

**--3217--**

**வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள்:**-யார் அறிவாரோ? விளக்கிடுவாரோ?
அற்பமான இக்களிமண்ணிலிருந்து தேவன் எதைத்தான் மிகவும் விரும்பிடுவாரோ?
வல்லமை மிக்க தம்கரத்தாலே திறமையாகவே வனைந்துவிட்டாரே,
ஆத்தும மன உளப்பருப்பொருளாலும்,ஒறுதிகொண்ட மன விருப்பத்தினாலும்,
பிறக்கலாம், ஆனால இறக்கலாம், நிச்சயம் இறந்தே போகலாம்,
எங்கே? இதற்குமுன் வேகமாய்விட்ட உயிர் மூச்செங்கே?
துன்பம், துயரம் அனைத்தும் அடைந்து வந்தோம், இருந்தொம், இறந்தோம் என்றே,
எண்ணிலா மனிதக் கூட்டத்தில் மாண்டோர் மீண்டும் வந்தாரில்லை,
உனதும் எனதும் ஆன எதிர்காலம், தேவனின் மாபெரும் திட்டமது,
திரும்பவந்து விளக்கிச் சொல்ல யார் வருவாரோ? எவர் அறிவாரோ?
உமது வழிகளை எமது வாழ்விற்கே உணர்த்த வேண்டி புதுக்கதிர் கற்றை தாரும்,
குருட்டுவிசுவாசத்தினாலல்ல,பார்வைக்குநன்றாய்தெளிவாய் தெரிய,
இருண்ட இரவின் மேகங்களெல்லாம்,எங்களைவிட்டே அகற்றித் தாரும்,
சுந்தேகம் ஆசீர், தடுக்கும் எண்ணம் முற்றும் அகற்றித் தாரும்.

**--3218--**

# திருவிருந்து

அன்பு பிதாவே, இந்தப் புதிய நாளானது
இராவிருந்தின் அப்பமும், திராட்சரசமும் போல்
எந்தனுக்கு இருக்கட்டுமே; திராட்சரசத்தின்
உள்ளான வெளிச்சம்போல் எந்தனுக்கு இருக்கட்டுமே .
ஆவியின் சுத்திகரிப்பினுடைய இனிமைதனை அறிந்திடவே;
அப்பத்தின் உள்ளான அர்த்தம்போல் இருக்கட்டுமே.
அதினால் அதிகம் சுமை கொண்டவர்களின்
பாரந்தனில் நானும் பங்கடையவே.
உம் திட்டத்திற்கு எந்தன் ஜீவனையும், எந்தன் அனைத்தையும்
என் சக மனுஷனுக்கான ஊழியத்திற்கென்று
மீண்டுமாய் இப்படி அர்ப்பணிக்கின்றேனே.
ஒவ்வொரு மணித்துளிகளும் உந்தன் அன்பின்
நினைவுகூருதல்களால் நிரம்பட்டுமே - அதுவே
எந்தன் ஆத்துமாவைப் பற்றியெரியச்செய்து எந்தன்
கண்களை பரத்தை ஏறெடுத்துப் பார்க்கச்செய்கின்றதே.
பிரச்சனைகள் மற்றும் போராட்டங்கள் மத்தியில்
உந்தன் நித்திய கனவல்லமையை - ஆம்
விசுவாசித்து நம்பிடச் செய்கின்றதே.
உந்தன் வழியின் பிரகாசமான மகிமையை
எந்தனுக்கு காண்பித்தருளுமே - ஓ! ஆண்டவரே
இன்று உம்மோடு திருவிருந்தில் பங்கெடுப்பேனே.

– Elizabeth D. Schumann
(Songs of the Nightingale, p. 125)

--------------------------------

**--3219--**

இருதயத்தை ஆராய்கின்றதான நினைவுகூருதலானது அண்மையில் உள்ளது; வருஷத்தினுடைய துயரமான, ஆனால் மிகவும் மகிமையான அந்தக் காலப்பகுதி அண்மையில் உள்ளது. பாவமற்ற மனிதனை, இந்த அளவுக்குப் பாடுபடுத்தின உலகத்தினை நினைத்துப்பார்ப்பதற்கு மிகவும் வேதனையாய் இருக்கின்றது மற்றும் அவர் பாவமில்லாதவராகவும், அனைவருக்குமான மீட்கும்பொருளானார் என்பதையும் நினைத்துப்பார்க்கையில் களிகூரவே செய்கின்றோம். ஆம் அது துக்கமாயும், அதே நேரம் மகிமையாயும் உள்ளது; ஏனெனில் அவர் அனைத்து மனுஷர்களையும் தம்மிடத்திற்கு இழுத்துக்கொள்வார் மற்றும் அனைவருமே அவரை ஒருகாலத்தில் அறிந்துகொள்வார்கள் மற்றும் நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளான கிருபை அனைத்தையும் குறித்து அனைவரும் ஆச்சரியப்படுவார்கள். இவைகள் அனைத்தையும் சாத்தியமாக்குகிறவரும், தமது குமாரனைப் பெலப்படுத்துவதற்கும், குமாரன் இறுதியில், "முடிந்தது" என்று கூறுவது வரையிலும் அவர் முன்னேறிச் செல்வதற்கு என்று அவருக்கு உதவுவதற்கும் பரலோகத்திலிருந்து பேசினவருமான ஆச்சரியமான எகோவா தேவனை நானும் எதிர்நோக்கியிருக்கின்றேன். விலைக்கொடுக்கப்பட்டாயிற்று மற்றும் போராட்டத்தில் வெற்றி அடைந்தாயிற்று. பாழும், அவாந்திரமான வனாந்தரத்தில் அவர் கடந்துபோய், தமக்குச் சொந்தமானவர்களைத் திரும்பக்கொண்டு வந்துள்ளார் மற்றும் பரலோகத்தின் வாயில்களில், "களிகூருங்கள், என் ஆடுகளை நான் கண்டுபிடித்துள்ளேன்!" என்ற சத்தம் தொனிக்கின்றது.

அவர் நமக்குச் செய்துள்ளதான மாபெரும் மற்றும் ஆச்சரியமான காரியங்களுக்காக தேவனுக்கு, அவருக்குரிய மகிமையைச் சாற்றிடுவோமாக.

- Songs of the Nightingale, p. 128

---------------------

**--3220--**

# மணலுக்கு ஏற்பட்டத் தழும்புகள்

டாக்டர். ஜே.எப். கார்சன் அவர்கள் பாவத்திற்காக வருந்துபவருக்கு ஒரு செய்தியைக் கூறுகிறார்:

கடலின் அயரா பொறுமையைப் போன்றது தேவனின் இரக்கமாகும். குழந்தைகள் தங்களின் சிறு மண்வெட்டியின் மூலம் மணலில் ஆழமான காயங்களை உண்டாக்கி, தங்க மேற்பரப்பின் மீது தழும்புகளை ஏற்படுத்திச் சென்றுவிடுவர். பிறகு, அமைதியான பழங்கடல் திரும்பி வந்து, ஒவ்வொரு தழும்பின் அடையாளத்தையெல்லாம் முற்றிலும் நீக்கிவிட்டு, எப்போதும் போல் மணலைச் சமதளமாக்கி பளபளக்கச் செய்து விட்டு சென்றுவிடும். இக்காட்சி தினந்தோறும் நடக்கும் மற்றும் கடலானது இத்தழும்புகளைச் சரிப்படுத்துவதில் ஒருபோதும் சோர்வடைவதில்லை... இது சோர்ந்துபோகாத, இளைப்படையாத அநாதிதேவனின் சிறப்பு அடையாளமாகும்.

-- John F. Cowan.
5000 Best Modern Illustrations -- page 459.

---

--3221--

# முழங்காலில் தஞ்சம்

இரண்டு வழிகாட்டிகளோடு, ஒரு சிறந்த சமயப் போதகர் ஓர் உயர்ந்த மலையின் கொடுமுடியின் மீது ஏறிச் சென்றுகொண்டிருந்தார். பல கடினத்திற்கு பிறகு, உச்சியை அடைந்தனர், வீசிக்கொண்டிருந்த கடுங்காற்றைப் பொருட்படுத்தாது, காட்சியை எழுந்து நின்று ரசிக்கத் தொடங்கினார் சமயப் போதகர். உடனடியாக வழிகாட்டி அவரை அழைத்து கீழே இழுத்து, ‘முழங்காலிடுங்கள்; முழங்காலேயன்றி வேறு எதிலும் பாதுகாப்பு இல்லை’ என்றுரைத்தார். கிறிஸ்துவ அனுபவங்கள் மற்றும் சிலாக்கியங்களின் கொடுமுடியிலும் கூட, முழங்கால்களேயன்றி எதிலும் நாம் பாதுகாப்பாக இருக்க முடியாது. பள்ளத்தாக்குகளில் தேவைப்பட்டது போலவே, மலை உச்சியிலும் ஜெபம் தேவை.

Cyclopedia of Religious Anecdotes -- The Cheltenham Examiner.

---

**--3222--**

## அது ஒரு துன்பத்தின் காலம்

அது ஒரு துன்பத்தின் காலம்,
என்னுடைய இருதயமோ நன்மையான பகுதியை அன்பு செய்தாலும்,
அதை அறிந்திருந்தாலும்,
வாழ்க்கைக்குத்தேவையான ஒழுக்கமுறைகளையும்
முரண்பாடுகளையும் துன்பங்களையும் கண்டு விரக்தியடைந்துள்ளதே,
எனக்குக் கொடுக்கப்பட்ட இவைகளை நான் எண்ணிடும்போதினிலே,
அன்பிற்காக எனக்கு அளிக்கப்பட்ட சோதனைகள், விசுவாசத்தின் பரீட்சைகள்,
நான் எப்போதும், என் மரணபரியந்தம் நிலைத்து நிற்பேன் என்று எண்ணுதற்கில்லை,
நாம் தரிசித்து நடவாமல், விசுவாசத்தில் நடக்கிறோம் என்று சொல்லுகிறவருடைய
ஆற்றலை இனியும் நம்புவதற்கில்லை,
சந்தேகப்பட்டு முழுமையாகவே விரக்தியடைந்துவிட்டாலும்,
என் சிலுவையை என்னால் சுமக்கவே முடியவில்லை என்ற எண்ணம் எழுகின்றதே,
ஆ, அதன் சுமையோ நிச்சயமாகவே அதிகமாகவே உள்ளதுவே,
நான் தினம் தினம் சந்திக்கும் மற்றவர்கள் சுமக்கும் சிலுவையைவிடவும்
எனக்குக் கொடுக்கப்பட்ட சிலுவையோ அதிக பாரமாகவே உள்ளதுவே,
ஆனாலும் எனக்கென நியமிக்கப்பட்ட ஜீவ கிரீடத்தை இழந்துபோகவும்
கூடாதென்றே எண்ணுகின்றேனே,

ஒரு நிறைவான, பெருமிதமான அமைதி சுற்றிலுமாகவே ஆட்சி செய்யுதே,
இயற்கையின் ஒலி சிறிதளவுகூட ஒலிக்கவில்லையே,
அந்திப்பொழுதின் நிழல்கள் அமைதியை எடுத்துரைப்பதாகக் காணப்படுதே,
என்னுடைய களைப்படைந்த ஆவியின் சமாதானமோ விழுந்துவிட்டதே,
ஒருகணம் தயங்கி, ஒரு பரலோக ஒளி
முழுமையாக ஆச்சர்யத்தால் விரிந்த விழிகளால்
நான் பார்க்கும் போதில் என்மீது விழுந்ததுவே,
வெள்ளியாலான இறக்கைகளையுடைய தேவதூதுர்கள் எங்கெங்கும் காணப்பட்டனரே,
தேவதூதுர்களின் இசையோ, அந்த குணப்படுத்தத்தக்க நறுமணமுள்ளமணம்
காற்றினிலே எங்கும் பரவியதே,புளகாங்கிதமடையச் செய்ததுவே,
மற்ற யாவரும் முழங்கால்களை மடக்கிவணங்கிடும் அந்த ஒருவர்
என் அருகினில் மென்மையாகவே வந்தாரே,
நானோ நடுக்கத்துடனே விழுந்து கிடந்தேனே,
என்னைப்பின் பற்றி வா, நானே வழி என்று அவர் மொழிந்தாரே,
இவ்வாறாகவே அவர் கூறியபின்னே என்னை

அவர் வெகு உயரத்திற்கே அழைத்துச்சென்றாரே,
அங்கே, அன்பினால் வனையப்பெற்ற விதானத்தின் கீழே
என்னுடைய சிலுவையைவிட பெரியதும் சிறியதுமான
சிலுவைகள் பல அங்கே கண்டேனே,
அதில் ஒன்று பற்றிக்கொள்வதற்கு மிகவும் அழகாய்,
மிகச் சிறியதாய், தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டதாய்,
கற்கள் பதிக்கப்பட்டே மிக அழகாகவே காட்சி தந்ததுவே,
ஆஹா, இது எனக்குப்பொருத்தமாக இருக்குமோ?
சுமப்பதற்கும் மிக எளிதாய் இருக்குமோ, என்றெண்ணியே,
அந்தச்சிறு சிலுவைதனை உடனடியாக
ஓடிச்சென்று ஆவலுடன் எடுத்துக்கொண்டேன்,
ஆனாலும் எல்லாமும் ஒரேஒருகணம்தான்.
என் அடிப்படையே ஆட்டம் கண்டதுவே,
ஒளிவீசக்கூடிய அந்த காண்பதற்கினிய
இலகுவாயிருக்கும் என்றெண்ணிய ரத்தினக் கற்கள்
மிக மிக அதிகமான பாரமாகவே எனக்குக் காணப்பட்டதுவே,
இவ்வாறாக இருக்கக் கூடாதே, நான் கதறினேன், மீண்டும் திரும்பப் பார்த்தேன்,
யாராவது, ஏதாவது இந்த பாரத்தை இலகுவாக்க மாட்டார்களா?
என்றே சுற்றும் முற்றும் பார்த்தேன்,
ஆனால் ஒரு அழகாகன சிலுவையின் மீதே நான் கண்பதிக்கும் வரை நான் கடந்து சென்றேன்,
அழகான பூக்கள் செதுக்கப்பட்டவண்ணம் அதைச் சுற்றிலும், கோர்த்துப் பின்னிக் காணப்பட்டதுவே,
அதிலே கிருபையும் அழகும் ஒருங்கே அமைந்து காணப்பட்டதுவே,
ஆச்சர்யமாகவே நான் அதைப்பார்த்துக்கொண்டிருந்தபோது இன்னமும்
ஆச்சர்யப்பட்டுப்போனேன்,
அதைப் பலர் கடந்து போனார்கள் என்றே எண்ணினேன்,
ஆனால் அழகாகக் காணப்பட்ட அந்த அமைப்பின் பின்னே
மறைக்கப்பட்ட துன்பங்கள் எனக்குத் தெரியவரலானதே,
அந்த அழகான வண்ணமிகு பூக்கள் கொண்ட காரியத்தின் அடியினிலே முட்கள்
காணப்பட்டதுவே,
இந்தச் சிலுவையை என்னால் சுமக்க முடியாதே,வருத்தத்துடன் நான் கூறினேன்,
இப்படியாகவே, ஒவ்வொன்றும், அங்கே சுற்றியிருந்த எல்லாவற்றிலும்,
எந்த ஒரு சிலுவையும் என் தேவையைப் பூர்த்தி செய்வதாய் காணப்படவில்லையே,

அழுதுகொண்டே நான் ஒவ்வொரு பாரமான சுமையையும் கீழே இறக்கி வைத்தேன்,
ஆனால், என்மீது விசுவாசம்கொள், சிலுவையில்லையேல் கிரீடமில்லையே
என்னுடைய பரிபூரணமான அன்பு உன் மீது காட்டப்படுமே என்று கூறும்
என்னுடைய வழிகாட்டியின் குரல் எனக்குக் கேட்டதுவே,
அகன்ற விழிகளுடன், தன் விருப்பத்துடனும் உறுதியான மனதுடனே,
எனது பூமிக்குரிய சிலுவையை நான சுமந்திட திரும்பினேன்,
நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன நடையுமாய்,
வேறெதுவும் மறைவான தீங்கு வந்து சேர்ந்திடுமோ என்ற அச்சத்துடனே,
பின்னர், ஏற்கனவே முன்னேற்பாடாய் நியமிக்கப்பட்ட பாதையிலே,
கேட்பதற்கான செவிகளுடனே, கீழ்ப்படியவும் ஆயத்தமாகவே,
சிலுவை ஒன்று ஆடம்பரமற்ற தெளிவான வெளிப்படையான
வடிவிலே காணக்கிடைத்ததே,
அன்பினால் ஆன வார்த்தைகள் அதிலே வடிக்கப்பட்டிருந்ததே,
நன்றியுடனே அதனை நிலையிலிருந்து தூக்கி நிறுத்தனேன்,
பெருமகிழ்வுடனே, அங்கிருந்த சிலுசைகளிலேயே
இது தான் சிறந்த சிலுவை என நான் உறுதிசெய்தேனே,
இது நான் சுமப்பதற்கு ஏற்றது என்றும் கண்டுகொண்டேனே,
இவ்வாறாக நான் தெரிந்துகொண்ட சிலுவையைக்குறித்து
இரகசியமாக அறிக்கை செய்தபோதினிலே,
ஓர் பரலோக பிரகாசம் அதன்மீதுவந்த தங்கக்கண்டேனே,
நான் எனது சுமையைதாங்குவதற்காக சற்றே குனிந்த போதினிலே,
எனக்கு மீண்டும் பழையசிலுவையின் ஞாபகம் வந்ததே,
ஆனால், அது எத்தனை மாறுபாடாய் தோன்றியது?
இப்போதோ, அதன் விலைஉயர்ந்த மதிப்பை என்னால் உணர முடிந்ததே,
ஆம்,இப்போது வேறொன்று நன்றாக இருக்கும் என்று இனியும் நான்கூற மாட்டேன்,
ஆஹா, இனி எந்தன் ஒரே விருப்பம் என்னவென்றால்,
என்னைக்குறித்துநன்கு தெரிந்தவர் எனக்குத் தெரிந்தெடுத்துத் தருவார்,
எனவே, என்னதான் அவர் அன்பினால் எனக்கு அனுமதிக்கின்றாரோ,
அதுதான் சிறந்ததென்றே நான் நம்பிடுவேனே,
ஏனென்றால் அவர்மட்டுமே அறிந்திடுவார், என்னதான் முடிவு என்றே.

# நினைவுகூருதல் இராப்போஜனம்

இயேசு கழுதையின்மேல் ஏறிவந்து, தம்மை இஸ்ரயேலின் இராஜாவென முன்வைத்த ஐந்து நாளைக்குப் பின்னர், முதற்பேறானவர்களின் சபையைக் கடந்துபோகுதலுக்கான நிழலான பஸ்கா வந்தது. இயேசுவே உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக இருந்தார். அவர் இதைச் செய்ய வேண்டுமானால், அவர் பஸ்கா ஆட்டுக்குட்டியாக வேண்டும். "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. ஆதலால் பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்" என்று பரிசுத்த பவுல் அவர்கள் கூறுகின்றார். இயேசு தம்முடைய சீஷர்களோடுகூட நிழலான பஸ்கா ஆட்டுக்குட்டியினைப் புசித்தார். பின்னர்த் தம்முடைய சொந்த மாம்சத்திற்கும், தம்முடைய சொந்த இரத்தத்திற்கும் அடையாளமான புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சப்பழரசத்தையும் அவர் எடுத்து, நிஜமான பஸ்கா இராப்போஜனத்தை நிறுவினார்.

நிஜமான ஆட்டுக்குட்டியென அவரது மரணத்திற்கான நினைவுகூருதலாக, இயேசுவின் பின்னடியார்கள் இதைச் செய்ய வேண்டும். "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 6:53). உண்மைதான் இது இருதயத்தினுடைய அனுபவங்களை அடையாளப்படுத்தவில்லையெனில், வெளிப்புறமான அனுசரிப்பில் ஒரு பயனுமில்லை. இயேசுவின் பின்னடியார்கள் தங்கள் இருதயங்களில் அவரது மரணம்தான் முழு உலகத்தினுடைய பாவங்களுக்கான மீட்கும்பொருள் விலைக்கிரயம் என்றும், இது இல்லாமல், நித்திய ஜீவன் ஏதும் இருப்பதில்லை என்றும் உணர்ந்துகொள்ள வேண்டும். இத்தகைய விசுவாசிகளே, உலகத்தாருக்கு முன்னதாகவே, முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் ஜீவனுக்குள் கடந்துபோகிறவர்களாகிய முதற்பேறான சபையில் அடங்குபவர்களாய் இருப்பார்கள். (வெளிப்படுத்தல் 20:6)

பரிசுத்த பவுல் அடிகளார் நினைவுகூருதல் இராப்போஜனத்திற்கான இன்னும் ஆழமான அர்த்தத்தினை எடுத்துக்காட்டுகின்றார். இயேசுவின் பின்னடியார்கள் அனைவரும், பிட்கப்படுகின்றதான ஒரே அப்பத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்; பாடுகளின், அவமானத்தின், நிந்தனையின் மற்றும் மரணத்தின் ஒரே பாத்திரத்தில் பங்கடைபவர்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். (1 கொரிந்தியர் 10:16, 17) இப்படியானவர்கள் மாத்திரமே "மோசே போன்ற உலகத்தின் தீர்க்கத்தரிசியின்," அவரது மகிமையடைந்த "சரீரத்தின்" அங்கத்தினர்களாகவும் காணப்படுவார்கள். (அப்போஸ்தலர் 3:19-23)

சீஷர்கள் ஒருவர் ஒருவருடைய பாதங்களையும், ஆண்டவருடைய பாதங்களையும்கூடக் கழுவிடுவதைப் புறக்கணித்தனர். இயேசு சடங்காக இல்லாமல், தாழ்மைக்கான பாடம் புகட்டும் வண்ணமாக, அப்பணிவிடையைச் செய்தார். அப்பாடத்தினுடைய அர்த்தம் நாம் "கிறிஸ்துவின் அங்கத்தினர்களென" நம்மால் முடிந்த எந்தப் பணிவிடையையும் ஒருவருக்கொருவர் புரிந்திட வேண்டும் என்பதாகும். (அப்போஸ்தலர் 9:5; 1 கொரிந்தியர் 12:27)

இராப்போஜனத்திற்குப் பிற்பாடு, இயேசு பதினொரு பேருடன்கூட, யூதாஸ் அவரை முத்தத்தினால் அதிகாரிகளுக்குக் காட்டிக்கொடுத்த இடமாகிய கெத்செமனேக்குப் போனார். பின்னர்த் தொடர்ந்தது — நமது கர்த்தருடைய ஜீவியத்தின், நாம் நினைவில் வைக்கப்படத்தக்கதான இறுதி முடிவு நிகழ்வுகள்.

*****

# பஸ்கா ஏற்படுத்தப்பட்டது

மீண்டும் மீண்டுமாக மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில், "என் ஜனங்களைப் போகவிடவேண்டும்" எனும் தேவ செய்தியுடன் சென்றார்கள். மீண்டும் மீண்டுமாக வாதைகளும், ஜனங்களைப் போகவிடுவதற்கு மறுத்ததற்குமான தண்டனையாகக் கொடுக்கப்பட்டது. மீண்டும் மீண்டுமாக பார்வோன், வாதைகள் நிறுத்தப்பட்டால், தான் ஜனங்களைப் போகவிடுவதாக அறிவித்தான் மற்றும் மீண்டும் மீண்டுமாக பார்வோனும் தனது வார்த்தையின்படி நடந்துகொள்ளவில்லை. "மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது" (உரோமர் 9:17). இதன் அர்த்தமாவது, தேவனால் எகிப்தின் சிங்காசனத்தில் வேறொரு பிரபுவைக் கொண்டுவந்திருக்க முடியும்; அவர் இந்தக் குறிப்பிட்ட பார்வோனுக்குத் தயைப் பாராட்டினதற்குக் காரணம், அவனுடைய பொல்லாத சுயசித்தமும், பிடிவாதமும் மற்றும் சுயநலமுமாகும்.

கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினதாக வேதவாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இதன் விளக்கம் என்னவெனில், தேவனுடைய தயவே/காருணியமே பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினது. பார்வோன் தான் சரியாய் நடந்துகொள்வான் என்று வாக்குறுதி கொடுத்தபோதெல்லாம், உடனடியாகப் பல்வேறு வாதைகளை அப்புறப்படுத்தும் விஷயத்தில் தெய்வீகத் தயவும், பெருந்தன்மையும் வெளிப்பட்டது. இது அவனைக் கீழ்ப்படிவதற்கும், அன்புகூருவதற்கும் தூண்டிடுவதற்குப்பதிலாக, அவனை அதிகமாய்ப் பிடிவாதம் கொள்ளச் செய்தது. அவன் ஒவ்வொரு வாதைகளுக்குள்ளாக ஒன்றன்பின் ஒன்றாகக் கடந்துபோகுகையில், பின்வரும் வாதைகள் அதிகம் பாதகமானதாய் இருக்காது என்று உறுதிக்கொண்டவனாய்க் காணப்பட்டான். அவன் எதிர்த்து நின்றதற்குத்தக்கதாக துன்பத்தை அனுபவித்தான்/தண்டிக்கப்பெற்றான். (யாத்திராகமம் 4:21; 7:3; 14:4)

பத்தாவது வாதை கவலைக்கிடமானதாய்க் காணப்பட்டது. எகிப்தின் முதற்பேறானவர்கள் அனைவரும் மரித்தார்கள், ஆனால் தெளிக்கப்பட்ட இரத்தத்தின் கீழ்க் காணப்பட்ட இஸ்ரயேலின் முதற்பேறானவர்கள் பாதுகாப்பாய் இருந்தார்கள். இப்படியாய்த் தேவன் உலகத்திலிருந்து இப்பொழுது அழைக்கப்படுகின்றதான "முதற்பேறானவர்களாகிய சபையினை" அடையாளப்படுத்திக் காண்பித்துள்ளார். முதலாம் உயிர்த்தெழுதலின் வாயிலாக இவர்கள் மகிமையடைந்த பிற்பாடு, இவர்கள் இஸ்ரயேல் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்கும் மற்றும் இஸ்ரயேல் வாயிலாக, பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிப்பதற்குமான "இராஜரிக ஆசாரிய கூட்டத்தினராக," ஆவிக்குரிய லேவியர்களாக இருப்பார்கள்.

ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், முதற்பேறானவர்களின் சபை கடந்துபோகப்பட்டு அல்லது விசேஷமாய் இரட்சிக்கப்பட்டு, திவ்விய சுபாவத்தில் பங்காளிகளாகவும், மேசியாவின் ஆளுகையின்போது பிற்பிறப்புகளை ஆசீர்வதிப்பதற்கென மேசியாவின் இராஜ்யத்தில் பங்காளிகளாகவுமாக்கப்படுகின்ற காலமாகிய, 19 நூற்றாண்டுகள் காலமான இந்தச் சுவிசேஷ யுகத்திற்கு, பஸ்கா இரவானது நிழலாய் இருக்கின்றது என்று வேதத்தின் மாணவர்கள் எண்ணுகின்றனர். வீட்டுவாசல் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப்படுவதானது, கிறிஸ்துவின் இரத்தத்தின்மீதான விசுவாசத்தை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

*****

## வாழ்க்கை என்பது மாபெரும் மறைபொருள்

யார் அறிவாரோ? விளக்கிடுவாரோ?
அற்பமான இக்களிமண்ணிலிருந்து தேவன் எதைத்தான் மிகவும் விரும்பிடுவாரோ?
வல்லமை மிக்க தம் கரத்தாலே திறமையாகவே வனைந்துவிட்டாரே,
ஆத்தும மன உளப்பருப் பொருளாலும், உறுதிகொண்ட மன விருப்பத்தினாலும்,
பிறக்கலாம், ஆனால் இறக்கலாம், நிச்சயம் இறந்தே போகலாம்,
எங்கே? இதற்குமுன் வேகமாய்விடட உயிர் மூச்செங்கே?
துன்பம், துயரம் அனைத்தும் அடைந்து வந்தோம், இருந்தோம், இறந்தோம் என்றே,
எண்ணிலா மனிதக் கூட்டத்தில் மாண்டோர் மீண்டும் வந்தாரில்லை,
உனதும் எனதும் ஆன எதிர்காலம், தேவனின் மாபெரும் திட்டமது,
திரும்ப வந்து விளக்கிச் சொல்ல யார் வருவாரோ? எவர் அறிவாரோ?
உமது வழிகளை எமது வாழ்விற்கே உணர்த்த வேண்டி புதுக்கதிர் கற்றை தாரும்,
குருட்டு விசுவாசத்தினாலல்ல, பார்வைக்கு நன்றாய் தெளிவாய் தெரிய,
இருண்ட இரவின் மேகங்களெல்லாம், எங்களைவிட்டே அகற்றித் தாரும்,
சந்தேகம் ஆசீர், தடுக்கும் எண்ணம் முற்றும் அகற்றித் தாரும்.

**--3228--**

## நினைவுகூருதல் இராப்போஜனம்—ஏன் நாம் பங்கெடுக்கின்றோம்.

*கேள்வி*. (1911)—1—ஏன் நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுக்கின்றீர்கள்?

*பதில்.* ஏனெனில் அது நமது கர்த்தருடைய மரணத்திற்கான நினைவுகூருதலாய் இருக்கின்றது. மேலும் "புசித்து . . . பானம் பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்" என்று அப்போஸ்தலன் கூறும்போது, கர்த்தருடைய ஜனங்களானவர்கள், தாங்கள் மறுரூபமடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைந்து, திரைக்கு அப்பால் அவரோடுகூட மேலானவைகளில் பங்கெடுப்பதற்கான காலம்வரையிலும், கர்த்தருடைய மரணத்தைத் தங்களுடைய விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் அனைத்திற்குமான அஸ்திபாரம் என்று நினைவுகூருவது சரியானது என்று நாம் புரிந்து இருக்கின்றோம். இதை இன்னொரு நோக்கத்திற்காகவும் நாம் செய்கின்றோம். கர்த்தருடைய இராப்போஜனமானது, நமது அருமை மீட்பருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் மாத்திரம் அடையாளப்படுத்தாமல், நம்முடைய பங்கெடுத்தலையும்கூட அடையாளப்படுத்துகின்றது என்பது நம்முடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது; ஏனெனில் அப்போஸ்தலன் "கடவுளைப் போற்றித் திருவிருந்துக் கிண்ணத்திலிருந்து பருகுகிறோமே, அது கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்குகொள்ளுதல் அல்லவா! அப்பத்தைப்பிட்டு உண்ணுகிறோமே, அது கிறிஸ்துவின் உடலில் பங்குகொள்ளுதல் அல்லவா!" என்று கூறுகின்றார். (1 கொரிந்தியர் 10:16; திருவிவிலியம்) வேறு வார்த்தைகளில் கூறவேண்டுமெனில் இந்த இராப்போஜனத்தில் பங்கெடுப்பவர்கள், தாங்கள் இயேசுவோடுகூட, அவரது பாடுகளிலும், அவரது மரணத்திலும் பங்காளிகளாக இருப்பதை வெளிப்படுத்துகின்றவர்களாய் இருக்கின்றனர் என்றே அப்போஸ்தலன் கூறுகின்றார். நாம் அதே சரீரத்திலுள்ளவர்களாய் இருக்கின்றோம். ஆகையால் நாம் அவரோடுகூட ஆளுகை செய்யத்தக்கதாக, இப்பொழுது அவரோடுகூடப் பாடுபடுவது என்பது நம்முடைய தற்போதைய கடமையின் பாகமாக இருக்கின்றது.

## நினைவுகூருதல் இராப்போஜனம்—(Wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைப் பயன்படுத்துதல்.

*கேள்வி.* (1911)—2—கர்த்தருடைய இராப்போஜனம் தொடர்புடையதாக, புதிய ஏற்பாட்டில் "(புளிப்பேற்றப்பட்ட) திராட்சரசம்" (wine) என்ற வார்த்தையானது எங்கு இடம்பெறுகின்றது?

*பதில்.* (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசம் என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை நான் அறியேன். திராட்சப்பழரசம் (fruit of the vine) என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் எவரேனும் திராட்சப்பழரசம் (fruit of the vine) என்பது திராட்சப்பழச்சாறு (grape juice) என்று கருதிடுவதற்கு விரும்புவார்களானால், நான் இதற்கு மறுப்புத் தெரிவிப்பதில்லை; இதுவே நினைவுகூருதலுக்குப் பொருத்தமானது என்றும், (wine) புளிப்பேற்றப்பட்ட திராட்சரசத்தைக் காட்டிலும் சிறந்தது என்றும் நான் எண்ணுகின்றேன்.

## பஸ்கா மற்றும் பாவநிவாரண நாள்— எப்போது மற்றும் ஏன் ஆசரிக்கப்படுகின்றது?

*கேள்வி.* (1916)—1—பஸ்காவானது முதலாம் மாதத்தினுடைய 14-ஆம் தேதி மாலையிலும், வருடாந்தர பாவநிவாரண நாளானது ஏழாம் மாதத்தினுடைய 10-ஆம் தேதியிலும் ஏன் ஆசரிக்கப்படுகின்றது?

*பதில்.* ஏனெனில் தேவன் அவைகள் வெவ்வேறானவைகளாக இருப்பதற்கு விரும்பிட்டார். இந்த இரண்டு காரியங்களும் ஒன்றோடொன்று நேரடியான தொடர்பு இல்லாதவையாகும். ஒன்று முதற்பேறானவர்களின் சபையைக் கடந்துபோகுதலுக்கு நிழலாய் இருக்கின்றது; மற்றொன்றோ ஆயிரவருட யுகத்தின்போது பூமியின் குடிகள் அனைத்திற்கும் ஆசீர்வாதங்களை வழங்குவதற்கு ஆயத்தமாகவும், அடிப்படையாகவும் காணப்படத்தக்கதாகச் சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவும், சபையும் பாடுபடுகிறதற்கு நிழலாய் இருக்கின்றது. பஸ்கா ஆட்டுக்குட்டியானது, இயேசுவினுடைய

மரணத்தையும், இந்த யுகத்தில் அவரது ஜனங்களைக் கடந்துபோகுதலையும் மாத்திரமே அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் இதன் காரணமாக இயேசு மற்றும் சபையின் மரணத்தையும், வரவிருக்கும் யுகத்தில் உலகம் ஆசீர்வதிக்கப்படுவதையும் அடையாளப்படுத்தும் இன்னொரு மற்றும் வேறொரு நிழல் கொடுக்கப்பட்டது. இந்த இரண்டும் தனித்தனியாகக் காணப்பட தேவன் விரும்பிட்டார். ஒன்று இயேசுவின் மரணத்தினைக் குறிப்பிட்டது மற்றும் இன்னொன்று, வேறொரு நிழலாய்க் காணப்படத்தக்கதாகக் கொடுக்கப்பட்டது.

*****

## பஸ்கா—எத்தனைதரம் திரும்பச் செய்யப்படுகின்றது?

*கேள்வி.* (1911)—2—பஸ்கா ஆட்டுக்குட்டியினுடைய இரத்தமானது வருடந்தோறும் தொடர்ந்து தெளிக்கப்படுகின்றதா (அ) எகிப்தில் மாத்திரம் ஒரேதரம் தெளிக்கப்பட்டதா?

*பதில்.* எனக்குத் தெரியாது; அது ஓர் அடையாளமாகும். ஆரம்பத்தில் அப்படியாகத்தான் கட்டளையிடப்பட்டது மற்றும் அப்படியாகவே கைக்கொள்ளவும் பட்டது. யூதன் யாராகிலும் இங்குக் காணப்பட்டால், அவர் வீட்டுவாசலின் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கும் வழக்கத்தினை யூதர்கள் இப்பொழுதும் கொண்டிருக்கின்றார்களா என்பதை நமக்குச் சொல்வார். அவர்கள் அப்படியாய்ச் செய்வதில்லை என்று நான் எண்ணுகின்றேன். என்னால் நிச்சயமாய்க் கூற இயலாது.

## பஸ்கா—முதற்பேறானவர்கள் யாரை அடையாளப்படுத்துகின்றனர்?

*கேள்வி.* (1912)—3—ஆட்டுக்குட்டியினுடைய சிந்தப்பட்ட இரத்தத்தின் நிமித்தமாக கடந்துபோகப்பட்டவர்களாகிய முதற்பேறானவர்கள் தலையையும், சரீரமாகிய சபையையுமா (அ) சபையை மாத்திரம் அடையாளப்படுத்துகின்றனரா?

*பதில்.* ஏன்! சபை மாத்திரமே; நமது கர்த்தர் இயேசுவையல்ல. அவர் எதினாலும் கடந்துபோகப்படவில்லை. அவர் மரித்தார். அவரே ஆட்டுக்குட்டியாவார். அவரது இரத்தமே, நம்மை "முதற்பேறானவர்களின் சபையாக்கிற்று." அவரை நீதிமானாக்குகிற ஆட்டுக்குட்டி யாது? அவருக்கு ஆட்டுக்குட்டி தேவையில்லை. அவர் தம்மாலேயே கடந்துபோனார். மரணம்வரையிலுமான தம்முடைய கீழ்ப்படிதலினாலே அவர் கடந்துபோனார். இது நமக்காகக் கொடுக்கப்பட்டதான அவரது இரத்தத்தின் மூலமாக முதற்பேறானவர்களான சபையென நம்மைக் கடந்துபோகச் செய்ய அவருக்கு ஏதுவாக்கிற்று.

## பஸ்கா—பஸ்காவுக்கும், பாவநிவாரண நாளுக்கும் தொடர்பு

*கேள்வி.* (1913)—4—பஸ்கா நிழலுக்கும், வருடாந்தர பாவநிவாரண நாளுக்கும் இடையிலான தொடர்பு என்ன? பஸ்காவானது கொடுக்கப்பட்ட மீட்கும்பொருளையும், பாவநிவாரண நாளானது, மீட்கும்பொருள் பணியின் விளைவான ஜனங்களுடைய சுத்திகரிக்கப்படுதலையும் அடையாளப்படுத்துகின்றதா?

*பதில்.* இந்த இரண்டுமே தொடர்பற்றவை என்றே நான் சொல்லுவேன். தேவன் இவை இரண்டையும் வருஷத்தினுடைய எதிர்முனைகளில், ஒன்றிலிருந்து, இன்னொன்று தொலைவில் இடம்பெறப் பண்ணியுள்ளார். ஒன்று ஒரு காரியத்தினுடைய நிழலாகவும், மற்றொன்று மற்றொரு காரியத்தினுடைய நிழலாகவும் காணப்படுகின்றது.

"மீட்கும்பொருள்" எனும் வார்த்தையானது இரண்டிலும் காண்பிக்கப்படவில்லை. மீட்கும்பொருளுக்கான நிழல் இரண்டிலும் காணப்படுவதில்லை. "மீட்கும்பொருள்" எனும் வார்த்தை (அ) கருத்தானது வேறு இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

*****

# ஏற்படுத்துதல்

**(Q514:1) உண்மையான ஏற்படுத்துதல் (ordination).**

கேள்வி (1915 - Z.5807)-1- சுவிசேஷத்தின் ஊழியக்காரனாய் நீங்கள் எப்பொழுது மற்றும் யாரால் மற்றும் எப்படி *ஏற்படுத்தப்பட்டீர்கள்*?

பதில் - இக்கேள்விக்கு நான் பதிலளிக்கிறதற்கு முன்னதாக, *ஏற்படுத்துதல்* (ordination) தொடர்புடைய வேதவாக்கியங்களின் போதனைகளை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். வேதாகமத்தினுடைய கண்ணோட்டத்தின்படி இரண்டு சரியான *ஏற்படுத்துதல்கள்* காணப்படுகின்றது என்று நாம் நம்புகின்றோம். ஒன்று தேவனால் *ஏற்படுத்தப்படுதல்*; ஒன்று மனுஷனால் *ஏற்படுத்தப்படுதல்* ஆகும். பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் என்பது தேவன் சார்பிலான *ஏற்படுத்தப்படுதலாக* இருக்கின்றது. இது இல்லாமல், யாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக்கூடிய அதிகாரம் இருப்பதில்லை. இந்த *ஏற்படுத்துதல்* இல்லாமல் பிரசங்கிக்கும் எவரும், நாங்கள் புரிந்திருக்கிறவரையில் திவ்விய *ஏற்படுத்துதல்* இல்லாமல் பிரசங்கிக்கிறவர்களாய் இருப்பார்கள். இவர்கள் தாங்கள் செய்யும்படிக்கு அங்கீகாரம் பெறாத ஒன்றைச் செய்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

தாம் எப்படிப் பிரசங்கிப்பவராகுவதற்கு *ஏற்படுத்தப்பட்டார்* என்று நமது கர்த்தர் கூறியுள்ளார்; மற்றும் நாம் அவரது அடிச்சுவடுகளில் நடக்க வேண்டும் என்றும், அநேக விதங்களில் அவரைப்போன்றே அனுபவங்கள் உடையவர்களாய் இருக்க வேண்டும் என்றும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. சிலுவையின் ஊழியக்காரர்களென, நம்மால் முடிந்தமட்டும் முழுமையாக நாம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிட வேண்டும். ஆனால் அவர் பூரணராய்க் காணப்பட்டார் மற்றும் நாம் அபூரணர்களாய்க் காணப்படுகின்றோம். ஆகையால் நம்முடைய பாவங்களுக்காக நாம் மன்னிப்புப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது; ஆனால் அவருக்கோ எந்தப் பாவங்களுமில்லை. ஆகையால் அவர் தம்முடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் வாயிலாகப் பிதாவினிடத்திற்கு வருபவர்கள் யாவருடைய மன்னிப்பிற்கும் வழிவகையானார். "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்" என்று கூறி, அவர் தம்முடைய *ஏற்படுத்தப்படுதலைக்* குறித்துக் குறிப்பிடுகின்றார் (ஏசாயா 61:1). இயேசுவின் மீது வந்த அந்த *ஏற்படுத்துதலானது*, பிற்பாடு பெந்தெகொஸ்தே நாளில் சீஷர்கள் மீது கடந்துவந்ததாய் இருக்கின்றது மற்றும் சுவிசேஷ யுகம் முழுவதிலும் அந்த *ஏற்படுத்துதலானது* கிறிஸ்துவின் பின்னடியார்கள் மீது வந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக அவர்களை அபிஷேகித்ததாய் இருந்தது (லூக்கா 4:17-21; 1 யோவான் 2:27).

தேவனுடைய *ஏற்படுத்தப்படுதலைப்* பெற்றுக்கொண்டுள்ள அனைவரும் தங்கள் வாய்ப்புகள் மற்றும் திறமைகளுக்கேற்ப பிரசங்கிப்பதற்கான அதிகாரத்தினை உடையவர்களாய் இருக்கின்றனர். அவர்களில் சிலர் செவிடர்களும் - ஊமையர்களுமாய் இருந்து, மற்றவர்களுக்குக் கேட்கும் விதத்தில் பிரசங்கிக்க முடியாதவர்களாய்க் காணப்படுகின்றனர். வேறு சிலர் பாலினத்தினால் வரையறைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்; சகோதரர்கள் போன்று சகோதரிகளால் பிரசங்கம்பண்ணிட முடியாது; ஆனாலும் "அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் விதத்தில்" அவர்களால் பிரசங்கம் பண்ணிடக்கூடும் (1 பேதுரு 2:9). இன்னுமாக அவர்கள் நற்செய்தியினைத் தெரியப்படுத்திடுவதற்கு முழுமையாய் *ஏற்படுத்தப்பட்டவர்களாய்* (fully ordained) இருக்கின்றனர்; ஆனாலும் அப்போஸ்தலனாகிய பவுலினுடைய வார்த்தைகளுக்கேற்ப பொதுவிடங்களில் அல்ல. தாலந்து அல்லது வாய்ப்பு இல்லாததன் காரணமாக, பொதுவிடங்களில் பிரசங்கிக்க முடியாதவர்களாக சில புருஷர்கள் காணப்படுகின்றனர்; ஆனாலும் அனைத்துப் புருஷர்களும் தங்களை அந்தகாரத்தினின்று ஒளியினிடத்திற்கும் தூக்கியெடுத்தவரும், உளையான சேற்றினின்றும், பயங்கரமான குழியினின்றும் தூக்கியெடுத்து, தங்களது கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, தங்கள் அடிகளை உறுதிப்படுத்தினவருமான மாபெரும் மற்றும் அன்பான தேவனுடைய மகிமையையும்,

**--3232--**

கனத்தையும் தங்களது ஜீவியங்கள் வாயிலாகவும், சம்பாஷணைகள் வாயிலாகவும் அறிவித்திடலாம் (சங்கீதம் 40:2).

இப்பொழுது சுவிசேஷத்தில் ஊழியக்காரர்கள் என்று அழைக்கப்படுபவர்களுக்கான மற்றொரு விசேஷமான *ஏற்படுத்துதலுக்கு* நாம் வரலாம்; இவ்வகுப்பாரில் நானும் அடங்குபவனாகக் கருதுகின்றேன். இது சபையினால் பண்ணப்படும் *ஏற்படுத்தப்படுதலாகும்* மற்றும் இது எங்குமுள்ள சபை பிரிவினர் யாவராலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ளதாய் இருக்கின்றது; இது சிலரால் வெறும் சடங்கெனக் கருதப்படுகின்றது; சிலரினால் இது மகா புறஆச்சாரத்துடன் ஆசரிக்கப்படுகின்றது மற்றும் வேறு சிலரால் சிறு புற ஆச்சாரத்துடன் ஆசரிக்கப்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு சபையாரும் தாங்கள் தெரிந்துகொள்பவர்களை, கைகளை நீட்டுவதன் மூலம் - வாக்கு (vote) மூலம் - அதாவது வேதவாக்கியம் முன்வைக்கும் விதத்தில் *ஏற்படுத்திட* வேண்டும் என்பது எங்களுடைய புரிந்துகொள்ளுதலாய் இருக்கின்றது.

அப்போஸ்தலர் 14:23-ஆம் வசனத்தில் இடம்பெறும் காரியங்களும் மற்றும் அனைத்துச் சபைகள் தொடர்பாக மூப்பர்கள் குறித்து இடம்பெறும் மற்ற வேதவாக்கியங்களும், *ஏற்படுத்துதல்* என்பதே ஆதிசபையின் நிலையான வழக்கமாய்க் காணப்பட்டு வந்தது என்னும் கூற்றினை நியாயப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இவ்வசனத்தில் இடம்பெறும் "மூப்பர்கள்" என்னும் வார்த்தையானது சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் மற்றும் பொதுவில் விரிவுரையளிப்பவர்களாகிய தீர்க்கத்தரிசிகளையும் உள்ளடக்குகின்றதாய்க் காணப்படுகின்றது. ஆகையாலே *"ஏற்படுத்துதல்"* (ordained) எனும் வார்த்தையின் அர்த்தம் என்னவென்று நாம் கற்றுக்கொள்வது முக்கியமானதாய்க் காணப்படுகின்றது.

தற்காலத்தில் *"ஏற்படுத்துதல்"* (ordination) எனும் வார்த்தையானது, பொதுவாக ஸ்தானத்தில் அமர்த்தப்படுவதற்கான அனுசரிப்புச் சம்பந்தமாகப் பயன்படுத்தப்படுகின்றது; ஆனால் இது இவ்வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் "Cheirotoneo" எனும் கிரேக்க வார்த்தையினுடைய அர்த்தமல்ல. இதன் அர்த்தம் "கைகளை நீட்டுவதன் மூலம் தேர்ந்தெடுத்தலாகும்," vote/வாக்குக் கொடுப்பதற்கான பொதுவான வழக்கமுறையாகும். இந்த ஓர் அர்த்தமானது பேராசிரியர் Young's "Analytical Concordance to the Bible"-இல் கொடுக்கப்பட்டுள்ளது. இது Presbyterian சான்று மேற்கோளாகக் கருதப்படலாம் என்பதினால் நாம் strong's "Exhaustive Concordance of the Bible" -இல் இடம்பெறும் விளக்கத்தையும் கொடுக்கின்றோம் மற்றும் இது Methodist சான்று மேற்கோளாகக் கருதப்படலாம். Strong's இவ்வார்த்தைக்கு (கைகளை நீட்டுவதன் வாயிலாக) வாக்களிப்பவர் அல்லது கைகளை நீட்டுபவர் என்று விளக்கம் கொடுக்கின்றார்.

வாக்குச் செலுத்துவதற்கெனக் கைகளை நீட்டுவதன் வாயிலான சபையாரின் தேர்ந்தெடுத்தலே, அனைத்துச் சபைகளிலும் மூப்பர்களை *ஏற்படுத்துவதற்கான* வேதவாக்கிய முறைமையாக இருக்கின்றது. இதைத் தேர்ந்தெடுத்தலுக்கு முன்னதாகச் சபையாருக்கு வலியுறுத்துவது என்பது, வேதவாக்கிய ஒழுங்குமுறையைப் பின்பற்றுவதாக இருக்கும்; இது மூப்பரைப் பலப்படுத்திடும் மற்றும் தேவனுடைய சித்தத்தை, தேவனுடைய தெரிந்தெடுத்தலைத் தெரிவிக்கிறவர்களாய்க் கர்த்தருடைய நாமத்திலும் மற்றும் ஆவியிலும் மூப்பர்களை நியமித்தவர்களெனச் சபையார் கொண்டிருக்கும் அதன் கடமைகளையும், பொறுப்புகளையும் சபையாருக்கு நினைப்பூட்டுகின்றதாய் இருக்கும். இதோடுகூட இந்த வேதவாக்கிய ஏற்பாடானது சபையாரின் அங்கத்தினர்களை - மூப்பர்களுடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகள் யாவற்றிலும், அவர்களைத் தங்களது ஊழியக்காரர்களென மற்றும் பிரதிநிதிகளெனக் கண்டுகொள்ளச்செய்திடும். இது சபையார் மூப்பர்களுக்குச் சொந்தமானவர்கள் மற்றும் சபையாரை ஆளுகிறவர்கள் என்று நிலவும் பிரபலமான கருத்தினை எதிர்க்கின்றதாகவும், "கர்த்தருடைய ஜனங்கள்" என்பதற்குப் பதிலாக "எனது ஜனங்கள்" என்ற மூப்பர்களுடைய சிந்தைக்கு முற்றுப்புள்ளியும் வைக்கின்றதாயும் இருக்கும்.

இந்த இரண்டு விதங்களில் *ஏற்படுத்தப்படாத* எவரும் வேதவாக்கியங்களின் அடிப்படையில் சுவிசேஷத்திற்காக ஏற்படுத்தப்பட்ட ஊழியர்களல்ல. முதலாவதாகத் திவ்விய *ஏற்படுத்துதல்* அவசியமாய் இருக்கின்றது; இரண்டாவதாக பூமிக்குரிய *ஏற்படுத்துதல்* அவசியமாய் இருக்கின்றது; தேவனுடைய கிருபையினால், நான் இந்த இரண்டையும் பெற்றிருக்கின்றேன்.

Watch Tower Bible And Tract Society-இன் பெயரில் பொது ஊழியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள், மொத்தத்தில் ஏற்படுத்தப்பட்டவர்களாய் இருக்கின்றனர். இவர்கள்

சொசைட்டியின் பணியாளர்களால் அனுப்பி வைக்கப்படுகின்றனர்; மற்றும் எங்கும் காணப்படுகின்றதான பெரும்பான்மையான சபையார்கள் சொசைட்டியினால் அடையாளங்கண்டு கொள்ளப்பட்டவர்களாக இருக்கிறபடியாலும் மற்றும் அவர்களும் society-ஐ அடையாளங்கண்டு கொண்டுள்ளதினாலும், அவர்கள் சொசைட்டியின் வாயிலான இந்த *ஏற்படுத்துதல்களை* அடையாளங்கண்டு கொள்கின்றனர்.

**(Q515:1) ஏற்படுத்துதலுக்கான (ordination) அதிகாரம்.**

கேள்வி (1915 - Z.5809)-1- பிரசங்கியாளர்களை அனுப்பிடுவதற்குச் சொசைட்டிக்கு எங்கிருந்து அதிகாரம் கிடைத்தது?

பதில் - பிரசங்கிக்கச் செல்வதற்கென்று பரிசுத்த ஆவியினைப் பெற்றுக்கொண்டுள்ள தம்முடைய ஜனங்கள் அனைவரையும் அங்கீகரிக்கும் கர்த்தரிடமிருந்து, சொசைட்டியானது அதன் அதிகாரத்தினை முதலாவதாக பெற்றுக்கொள்கின்றது. இரண்டாவதாக புத்தகங்கள், பிரதிகள், வரைப்படங்கள் முதலானவைகளை அச்சிடுவதன் வாயிலாகவும் மற்றும் வாயின் வார்த்தையினாலும், அச்சிடப்பட்ட பக்கங்களினாலும், பிரசங்கிக்கும்படிக்குத் தனது பிரதிநிதிகளை அனுப்புவதன் வாயிலாகவும் கர்த்தருக்கான ஊழியத்தில் மதரீதியிலான வேலை புரிவதற்கான அலுவல் அமைப்பாய்ச் சொசைட்டி காணப்படுகின்றது. இதுவே அதன் ஒரே அலுவலாகும். அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையார் கிறிஸ்தவ சமயம் பரப்பும் ஊழியத்தினைச் செய்யும்படிக்கு விசேஷமாய்ப் பவுலையும், பர்னபாவையும் தேர்ந்தெடுத்து, சபையாருக்குரிய பிரதிநிதிகளாக இருக்கும்படிக்கு இவர்களுக்கு வாக்களித்தது (vote) போன்ற அதேவிதத்தில்தான் - சொஸைட்டியானது செயல்படுத்துகின்றதாய் இருக்கின்றது (அப்போஸ்தலர் 13:2, 3).

பவுலும், பர்னபாவும் புறப்பட்டபோது அவர்கள் "நாங்கள் எங்கள் நாமத்தில் பிரசங்கிக்கின்றோம்" என்று கூறிடவில்லை. அவர்கள் கர்த்தருடைய நாமத்தில் புறப்பட்டுச் சென்று பிரசங்கித்திடுவதற்கான உரிமையினையுடையவர்களாய் இருந்தனர் மற்றும் இதோடுகூட, அந்தயோகியா சபையாரிடமிருந்து பண ஆதரவு பெற்றிருந்தனர்; அதாவது இன்று எப்படி நம்முடைய பிரதிநிதிகளுக்கு சொசைட்டியினுடைய ஆதரவு காணப்படுவது போன்றதாகும். அவர்கள் ஓரிடத்திற்குச் செல்கையில் அவர்கள்: "நாங்கள் சொசைட்டியின் பிரதிநிதிகளெனச் செயல்படுகின்றோம் என்பதற்கான கடிதம் இதோ உள்ளது" என்று சொல்லிடலாம். ஆகையால் அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் மாத்திரமல்லாமல், சுவிசேஷ வேலையினைப் புரிந்துகொண்டிருப்பதாக அறியப்பட்டிருக்கும் இந்தச் சொசைட்டியின் பிரதிநிதிகளெனச் செல்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர்.

**(Q517:1) ஏற்படுத்துதல் (ordination) - கைகளை வைத்தல்.**

கேள்வி (1915 - Z.5807)-1- "ஒருவன்மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே," என்று தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்டதான அப்போஸ்தலனின் ஆலோசனையை நாம் எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும்? இது முறையான ஓர் *ஏற்படுத்துதலைக்* குறிக்கின்றதா?

பதில் - தீமோத்தேயுவுக்குப் பேசப்பட்டதான அப்போஸ்தலன் பவுலினுடைய வார்த்தைகளானது பல்வேறு விதங்களில் புரிந்துகொள்ளப்படலாம். ஒருவேளை நாளைய காலை செய்தித்தாளில் யாரோ ஒருவர் ஒரு மனுஷன்மீது அவசரப்பட்டுக் கைகளை வைத்துவிட்டார் என்று வாசிப்போமாகில், அம்மனுஷன் தாக்கப்பட்டிருக்கின்றார் என்று நாம் புரிந்துகொள்வோம்; ஆனால் இப்படியாக இதற்குக் கிரேக்கில் அர்த்தம் காணப்படுகிறதில்லை. சரியான அர்த்தம் என்று தாங்கள் எண்ணினவற்றை மொழிப்பெயர்ப்பாளர்கள் வழங்கியுள்ளனர் என்று நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆதி சபையினர் தங்களது மூப்பர்கள், உதவிக்காரர்கள் முதலானவர்களின் தலைகளின் மீது கைகளை வைக்கும், ஒரு வழக்கத்தின் ஆசரிப்பைப் பெற்றிருந்தனர். ஆனால் அப்போஸ்தலர்கள் இதைச் செய்த போது, அது பரிசுத்த ஆவி பகிரப்பட்டதைச் சுட்டிக்காட்டினதாய் இருந்தது. இதை அப்போஸ்தலர்கள் அல்லாமல் வேறு யாராலும் அருளிட முடியாது. ஊழியர்களை நியமிக்கும் விஷயத்தில் சபைகள் தங்கள் மத்தியில் சில ஆசரிப்பு வழக்கங்களைப் பெற்றிருந்திருக்கலாம்; அப்படியாக அவர்கள் செய்கையில் அது அவர்கள் அந்நபர்களை அங்கீகரிப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும் -3234--

வாட்ச் டவர் Bible மற்றும் Tract சொசைட்டியினால் ஏதோ ஒருவகை விசேஷித்த ஊழியத்திற்கென ஒரு பயண ஊழியரை அனுப்பிவைக்கையில், மேலே சொல்லப்பட்டுள்ள ஆசரிப்பு வழக்கத்திற்கு ஒத்த ஒன்றைக் கைக்கொள்ளுவதில் எதுவும் தவறு இருக்காது. சொசைட்டியின் பணியாளர்கள் முன்வந்து பயண ஊழியரின் தலையின் மீது தங்கள் கைகளை வைத்து, "நீங்கள் சொசைட்டியுடைய பிரதிநிதியாகக் காணப்படுகின்றீர்கள்" என்று சொல்லிடலாம். முற்காலத்தில் ஆசாரியர்கள் பலி செலுத்தப்படப் போகின்ற விலங்கானது தங்களை அடையாளப்படுத்துகின்றது என்று காண்பிக்கத்தக்கதாக, விலங்கினுடைய தலையின் மீது தங்கள் கைகளை வைத்தார்கள். ஆகையால் ஒருவர் சொசைட்டியால் அனுப்பி வைக்கப்படலாம்; மேலும் கைகளை வைத்தல் ஆசரிப்பானது, பார்வைக்குரியதாய்க் காணப்பட்டு, "நீங்கள் இன்னின்ன ஊழியங்களுக்கென்று நியமிக்கப்பட்டுள்ளீர்கள்" என்ற வார்த்தைகளைத் தவிர வேறெந்த அதிகாரத்தையும் உடையதாய் இருப்பதில்லை.

கர்த்தருடைய ஜனங்கள் அடங்கும் ஒவ்வொரு சிறுசிறு கூட்டத்தாரும், தாங்கள் தேர்ந்தெடுக்கும் எந்த ஓர் ஆசரிப்பு வழக்கத்தையும் பயன்படுத்திடலாம். எப்பிஸ்கோப்பலியன்ஸ் மற்றும் கத்தோலிக்கர்கள் அதிக அளவில் ஆசரிப்பைப் பெற்றிருக்கின்றனர்; மற்றப் பிரிவினர்கள் குறைவான ஆசரிப்பைப் பெற்றிருக்கின்றனர். நாமும் விரும்புகிறதற்கு ஏற்ப பெரிய அல்லது சிறிய ஆசரிப்பைப் பயன்படுத்துவதற்கான உரிமையினைப் பெற்றிருக்கின்றோம் என்று நாம் நம்புகின்றோம். *ஏற்படுத்துதல்* என்ற வார்த்தைக்கான அர்த்தமானது அங்கீகாரம் அளித்தலாகும். உண்மையான *ஏற்படுத்துதல்* என்பது, முதலாவதாகப் பரிசுத்த ஆவியினால் ஏற்படுவதாக இருக்கின்றது; இரண்டாவதாகச் சுவிசேஷச் செய்தியுடன் ஊழியக்காரனை அனுப்பி வைத்திடும் அமைப்பினால் ஏற்படுவதாக இருக்கின்றது.

**(Q521:2) மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்களின் ஏற்படுத்துதல் (ordination).**

கேள்வி (1916 - Z.5939)-2- தேவனுடைய ஜனங்கள் அடங்கின சபையாரால் தேர்ந்தெடுக்கப்படும் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் திவ்விய *ஏற்படுத்துதலின் படியானவர்கள்* என்று கருதப்பட வேண்டுமா?

பதில் - இல்லை, பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடையாத எவரும் தெய்வீக *ஏற்படுத்துதலின் படியானவர்கள்* என்று கருதப்பட முடியாது. தேவனுக்குத் தன்னை முழுமையாய் அர்ப்பணம்பண்ணியுள்ளதாகவும், பரிசுத்த ஆவியினாலான ஜெநிப்பித்தலை அடைந்ததாகவும் தன்னைக்குறித்து அறிக்கைப்பண்ணிடாத ஒருவரைச் சபையார் ஊழியராக *ஏற்படுத்திக்கொள்வது* என்பது, சபையார் செய்திடுவதற்குக் கர்த்தரால் அங்கீகாரம் அளிக்கப்படாத காரியத்தினை, அவர்கள் செய்வதைக் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அந்நபர், இப்படியாய் இவரை ஊழியராக *ஏற்படுத்தின* சபையாரின் பிரதிநிதியாகத்தான் இருப்பாரேயொழிய, கர்த்தருடைய பிரதிநிதியாக இருப்பதில்லை.

ஆனால் ஒரு சகோதரன் குறித்த கர்த்தருடைய அங்கீகாரத்தினை ஒரு சபையார் அடையாளம் கண்டுகொள்வார்களானால் மற்றும் இன்னுமாக அச்சகோதரன் போதக சமர்த்தனாய் இருப்பதையும், தெய்வீக வார்த்தைகளுக்கு ஏற்ப ஊழியத்திற்குப் பொருத்தமான பண்புகளை உடையவராய் இருப்பதையும் அடையாளம் கண்டுகொள்வார்களானால், கர்த்தருடைய நாமத்தில் சபையாரின் பிரதிநிதியாகிடுவதற்கு அச்சகோதரனை முறையாய்த் தேர்ந்தெடுத்திட அல்லது *ஏற்படுத்திட* வேண்டும். கர்த்தருடைய ஜனங்களின் வேண்டுகோளில்லாமல், எந்த ஒரு சகோதரனும், கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின ஒரு கூட்டத்தாருக்கு ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது; சபையாருடைய வேண்டுகோள் அல்லது அவர்களது vote/வாக்குகளானது - அந்த ஊழியத்திற்குச் சகோதரனை நியமிக்கின்றதாய் இருக்கின்றது, அதாவது வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் சகோதரனை அவர்கள் ஊழியத்திற்காக ஒரு நாளோ அல்லது ஒரு வருஷக்காலமோ நியமிக்கின்றதாய் அல்லது *ஏற்படுத்துகின்றதாய்* இருக்கின்றது.

**(Q521:1.) ஏற்படுத்துதல் (ordination) - மனிதர்களால் அல்ல.**

கேள்வி (1916 - Z.5939)-1- இவ்விதமாய் மூப்பர்கள் மற்றும் உதவிக்காரர்கள் யாவரும் *ஏற்படுத்தப்படுவது* முறையானது என்றும் மற்றும் *ஏற்படுத்தப்படாமல்* எவரும் தொடர்ச்சியாய் ஊழியம் புரிந்திட முற்படக்கூடாது என்போமானால், பரிசுத்த பவுல் அடிகளார் "மனுஷராலுமல்ல **3235--**

மனுஷன் மூலமாயுமல்ல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலேயே அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நான்" என்று என்ன அர்த்தத்தில் கூறினார்? (கலாத்தியர் 1:1)

பதில் - ஓர் அப்போஸ்தலனைத் தேர்ந்தெடுப்பதற்கோ அல்லது நியமிப்பதற்கோ எந்த ஒரு மனுஷனோ அல்லது சபையாரோ பொருத்தமானவர்களல்ல. எந்தச் சபையாருடைய வாக்குகளும், சகோதரரில் ஒருவரை அப்போஸ்தலனாக்கிட முடியாது. அது தெய்வீக *ஏற்படுத்துதலினால்* மாத்திரமேயான ஒரு விசேஷித்த ஊழியம் அல்லது பணியாகும். ஆகவே கர்த்தர் இயேசு பன்னிரண்டு அப்போஸ்தலர்களை மாத்திரம் - "ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களை" ஏற்படுத்தினார்; அப்போஸ்தல ஸ்தானத்தினை இழந்திட்டதான யூதாசின் இடத்தினை, பரிசுத்த பவுல் அடிகளார் எடுத்துக்கொண்டார் (வெளிப்படுத்தல் 21:14; சங்கீதம் 109:8; அப்போஸ்தலர் 1:20). இந்த ஒரு விஷயத்தில்தான் உரோம சபையும், இங்கிலாந்து சபையும் மற்றும் கிரேக்க சபையும், தேவனுடைய வார்தைகளின் கொள்கையினை மீறுகின்றவர்களாய் இருக்கின்றனர்; அதாவது அப்போஸ்தல அதிகாரமும், வல்லமையும் உடைய கண்காணிகளை - அப்போஸ்தல கண்காணிகளை நியமிப்பதாக வலியுறுத்துகின்றனர்; ஆனால் உண்மையில் இப்படி *ஏற்படுத்திட* முடியாது.

தன்னுடைய அப்போஸ்தல ஊழியத்தின் ஏற்படுத்துதல் ஒருபக்கமிருக்க, மற்றபடி தனக்கான பூமிக்குரிய *ஏற்படுத்துதலை* தான் பொருட்படுத்தவில்லை என்பதாக நாம் புரிந்துகொள்ள வேண்டுமெனப் பரிசுத்த பவுல் அடிகளார் சொல்லவில்லை. மாறாக அந்தியோகியாவிலுள்ள சபையார் அநேகமாக தங்களது சொந்த செலவில் சுவிசேஷத்தினை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லும் தங்களது பிரதிநிதியாகக் காணப்படும்படிக்குப் பவுலையும், பர்னபாவையும் *ஏற்படுத்தினார்கள்* மற்றும் பின்னர்ப்பவுலையும், சீலாவையும் ஏற்படுத்தினார்கள். அப்போஸ்தலனாகிய பவுலை, அந்தியோகியா சபை அப்போஸ்தலனாக *ஏற்படுத்தாமல்,* மாறாக தங்களது சுவிசேஷ ஊழியக்காரனாக அவரை ஏற்படுத்தினார்கள் மற்றும் அவரும் அவர்களது *ஏற்படுத்துதலை* ஏற்றுக்கொண்டு, அப்போஸ்தலர் நடபடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது போன்று, அவர்களுக்கு அறிக்கை விவரம் கொடுத்தார் என்று பார்க்கின்றோம் (அப்போஸ்தலர் 14:26-28).

**(Q520:4.) ஏற்படுத்துதல் (ordination) - Watch Tower Bible and tract society-இன் ஊழியர்கள்.**

கேள்வி (1916 - Z.5939)-4- வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டியானது (Watch Tower Bible and Tract Society) அறுவடை வேலைக்காக ஊழியக்காரர்களை அல்லது பிரதிநிதிகளை எப்போதேனும் *ஏற்படுத்தினதுண்டா*?

பதில் - ஆம் *ஏற்படுத்தினதுண்டு*. அனைத்துப் பயண ஊழியக்காரர்களுமே ஊழியத்தின் அந்த விசேஷித்த பணிக்காக இவ்விதம் *ஏற்படுத்தப்படுகின்றனர்,* நியமிக்கப்படுகின்றனர் அல்லது தெரிந்தெடுக்கப்படுகின்றனர். சடங்கு என்பது *ஏற்படுத்துதலாய்* இராமல், மாறாக நியமித்தலும், கட்டளையிடுதலுந்தான் *ஏற்படுத்துதலாய்* இருக்கின்றது. சொசைட்டியானது, அதனுடைய பிரதிநிதிகளாகவும், அதேவேளையில் கர்த்தருடைய மற்றும் அவரது வார்த்தைகளுடைய பிரதிநிதிகளாகவும் காணப்படும் பயண ஊழியர்களை *ஏற்படுத்துகின்றது,* அங்கீகரிக்கின்றது, அவர்கள் செல்லும் இடங்களைக் குறித்துக் கட்டளையிடுகின்றது.

**(Q520:3) ஏற்படுத்துதல் (ordination)- பயண ஊழியரின் ஏற்படுத்துதலை நீக்குதல்.**

கேள்வி (1916 - Z.5939)-3- வாட்ச் டவர் பைபிள் மற்றும் டிராக்ட் சொசைட்டிக்கு, ஒரு பயண ஊழியச் சகோதரனுடைய *ஏற்படுத்துதலை* நீக்கிடுவதற்கான/withdraw உரிமை உள்ளதா?

பதில் - ஆம், நிச்சயமாக! அதற்கு *ஏற்படுத்திடுவதற்கும்,* கட்டளையிடுவதற்கும் அதிகாரம் இருக்குமானால், முந்தைய காலங்களில் அது செய்திட்டதான நியமித்தல்களையும், கட்டளைகளையும் நீக்கிடுவதற்கும் அதற்கு அதிகாரமுள்ளது.

**(Q520:2) ஏற்படுத்துதலை (ordination) - சொசைட்டி நீக்குதல்.**

கேள்வி (1916 - Z.5939)-2- சொசைட்டியின் *ஏற்படுத்துதல்* அல்லது நியமித்தலானது நீக்கப்படுதல் என்பது, இப்படியாகக் சொசைட்டியினுடைய ஊழியத்தினின்று தற்காலிகமாகத் தள்ளிவைக்கப்பட்டுள்ள பயண ஊழியக்காரன், அதன் பிறகு பிரசங்கம்பண்ணிடுவதற்கு உரிமையற்றவர் என்பதைக் குறிக்குமா?

பதில் - நிச்சயமாக இல்லை! பயண ஊழியக்காரனிடமிருந்து சொசைட்டியானது அதன் நியமனத்தை நீக்கிடுதல் என்பது, ஏதோ சில காரணங்களினால் அந்தப் பயண ஊழியக்காரன் இனிமேல் சொசைட்டியின் பிரதிநிதியாக இருப்பதில்லை என்பதை, அவருக்கோ அல்லது அவரது போதனைகளுக்கோ அல்லது அவரது நடத்தைக்கோ அல்லது வாழ்க்கை பராமரிப்பிற்கோ இனிமேல் சொசைட்டி பொறுப்பாய் இருக்காது என்பதை மாத்திரம் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும். பயண ஊழியக்காரர்களுடைய பட்டியலினின்று இப்படியாக நீக்கப்பட்டுள்ளதான அந்தப் பயண ஊழியச் சகோதரன், தொடர்ந்து சகோதரனாகவே காணப்படுவார் மற்றும் இப்படியாகவே சொசைட்டியினாலும் கருதப்படுவார்; ஆனாலும் - குணலட்சணத்தினுடைய சில பெலவீனங்களை வெளிப்படுத்துவதன் காரணமாகவோ அல்லது போதகசமர்த்துவத்தில் சில குறைபாடுகளின் காரணமாகவோ அல்லது ஊக்குவிக்கப்படக் கூடாது என்று சொசைட்டியானது எண்ணுகிற சில காரணங்களுக்காகவோ அல்லது சொசைட்டி பொறுப்பேற்க விரும்பிடாத சில விஷயங்களுக்காகவோ அல்லது பலதரப்பட்ட காரணங்களுக்காகவோ, நோய் முதலானவைகள் என்ற காரணங்களுக்காகவோ - அச்சகோதரன் இனிமேல் சொசைட்டியினுடைய பிரதிநிதியாய் இருப்பதற்குப் பொருத்தமான நபராக கருதப்படுவதில்லை.

**(Q520:1) ஏற்படுத்துதல் (ordination) - V . D . M. தலைப்பு.**

கேள்வி (1916 - Z.5939)-1- V. D. M. - என்பதன் அர்த்தம் என்ன? மற்றும் V. D. M. பட்டம்/degree கொடுக்கப்படுவது எதைக் குறிக்கின்றதாய் இருக்கும்?

பதில் - V. D. M. என்பது மிகவும் பழைய பெயராகும். இப்பெயருடைய பயன்பாடானது நீண்ட காலமாய் வழக்கத்தில் இல்லாதபடியினால், வெகு சிலரே இதன் அர்த்தத்தினை அறிந்தவர்களாய் இருக்கின்றனர். இந்த மூன்று எழுத்துக்களானது, Verbi Dei Minister எனும் இலத்தீன் வார்த்தைகளைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. இதன் ஆங்கில வார்த்தை "Minister of Divine Word"/ "திவ்விய வார்த்தைகளினுடைய ஊழியக்காரன்" என்பதாகும். இருண்ட யுகங்களில் திவ்விய வார்த்தைகள் பயன்பாட்டில் இல்லாமல் போய், இதற்குப் பதிலாக விசுவாசப் பிரமாணங்கள் பயன்பாட்டில் காணப்பட்டபோது, இப்பெயரும் பயன்பாட்டில் இல்லாமல் மற்றும் புறக்கணிக்கப்பட்டுப் போயிற்று. திவ்விய வார்த்தைகளுக்கு ஊழியக்காரன் யாரும் இல்லாமல் போயிற்று; காரணம் திவ்விய வார்த்தையானது பிரசங்கிக்கப்படாமல், இதற்குப் பதிலாக மனுஷருடைய விசுவாசப் பிரமாணங்கள் பிரசங்கிக்கப்பட்டிருந்தது. கர்த்தருடைய பொது ஊழியர்கள் தொடர்புடைய விஷயத்தில், சரியான சிந்தையினை மிக அருமையாய் வெளிப்படுத்துகின்றதான இந்த எளிமையான வார்த்தைகளையுடைய இப்பெயருக்குப் பதிலாக, இன்று வேதவாக்கியங்களின் அடிப்படையில் இல்லாத Reverend/ரெவரண்ட் மற்றும் Doctor of Divinity/வேதசாஸ்திரி போன்ற பகட்டான பட்டங்கள் காணப்படுகின்றது. திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் எனும் பட்டம் கொடுக்கப்படுவது என்பது, ஊழியராக ஏற்படுத்தப்படுதலைக் குறிப்பதாய் இராது; மாறாக சொசைட்டியானது இப்பட்டத்தினைக் கொடுக்கையில், அது அந்நபருடைய நற்பெயரை ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் முடிந்தமட்டும் அந்நபருடைய குணலட்சணத்தையும், விசேஷமாக அந்நபருடைய உபதேச ரீதியிலான வளர்ச்சியையும் ஆராய்ந்துள்ளது என்பதையும் மற்றும் (V. D. M. கேள்விக்கான பதில்களை) மதிபீடு செய்யும் குழுவினுடைய அங்கத்தினர்களின் கணிப்பில், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரன் என்று அழைக்கப்படுவதற்குத் தகுதியானவராய் இருக்கின்றார் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றதாய் மாத்திரமே இருக்கின்றது.

**(Q519:1) தற்காலத்தில் ஊழியர்களின் ஏற்படுத்துதல் (ordination).**

கேள்வி (1916 - Z.5939)-1- இத்தகைய திவ்விய வார்த்தைக்கான ஊழியர்கள் இப்போது இருக்கின்றார்களா?

பதில் - ஆம், நிச்சயமாக! சொசைட்டியினால் அனுப்பப்படும் ஒவ்வொரு பயண ஊழியக்காரனும், விசுவாச பிரமாணங்களினுடைய அல்லது "அமைப்புகளுடைய/isms" ஊழியக்காரர்களாய் இல்லாமல், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான்; உண்மையில் தேவனுடைய வார்த்தைக்கான ஊழியக்காரனாகவே அனுப்பப்படுகின்றான். எந்த ஓர் இடத்திலுமுள்ள கர்த்தருடைய ஜனங்கள் அடங்கின சபையார், அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டுள்ள ஒரு தேவனுடைய பிள்ளையை, மூப்பராகத் தேர்ந்தெடுக்கும் போதெல்லாம், சபையார் தங்களுடைய தெரிந்துகொள்ளுதலின் வாயிலாக அல்லது தேர்ந்தெடுத்தலின் வாயிலாக, அந்த மூப்பர் திவ்விய வார்த்தைக்கான ஊழியராய் இருக்கின்றார் - அதாவது தேவனுடைய வார்த்தைகளிலுள்ள சத்தியங்களைப் பிரசங்கிப்பவராய், பரப்புபவராய், பகிர்ந்தளிப்பவராய் இருக்கின்றார் என்று சுட்டிக்காட்டுகின்றவர்களாய் இருக்கின்றனர்.

**(Q518:2) ஏற்படுத்துதல் (ordination) - சொசைட்டியின் கேள்விப்பட்டியலுக்கான நோக்கம்.**

கேள்வி (1916 - Z.5939)-2- ஒரு கேள்வி பட்டியலைத் தொகுத்து, இக்கேள்விகளுக்குச் சொசைட்டியிடம் திருப்திகரமான விதத்தில் பதிலளிக்கும் நபர், திவ்விய வார்த்தைக்கான ஊழியக்காரனாகக் கருதப்படுவார் என்று கூறுவதில், சொசைட்டிக்குக் காணப்படும் நோக்கமென்ன?

பதில் - அக்கேள்விகளானது, நீண்டகாலமாய் வாஞ்சிக்கப்பட்டதை நிறைவு செய்யும் வண்ணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அக்கேள்விகளானது, மதவெறியின் அடிப்படையானது அல்ல; அவை யாவும் வேதவாக்கியங்களின் அடிப்படையினாலானதாகும். இப்பொழுது ஊழியத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பயண ஊழியர்களிடமிருந்து அல்லது எதிர்க்காலத்தில் சொசைட்டியின் பிரதிநிதிகளாய், பயண ஊழியர்களாய்க் காணப்படப் போகின்றவர்களிடமிருந்து, கிறிஸ்துவின் சுவிசேஷம் தொடர்புடையதான இந்த அடிப்படையான கேள்விகள் பற்றின அவர்களது புரிந்துகொள்ளுதல்களையும், அவர்களது கருத்துக்களையும், அவர்களது சிந்தனைகளையும் அறிந்துகொள்வதற்குக் சொசைட்டியானது விரும்புகின்றது. அக்கேள்விகளுக்குப் பதிலளிக்க விரும்பிடாத எந்தச் சகோதரனும், மனதில் குழப்பம் கொண்டிருப்பவராகவும், உறுதியற்றவராகவும், இதினிமித்தம் போதிப்பதற்குத் தகுதியற்றவராக, "போதகசமர்த்தனாய்" இல்லை என்பதாகவும் கருதப்படுவார். இது அவர் தொடர்ந்து சகோதரராக இல்லை என்பதைக் குறிக்கின்றதாய் இராது; மாறாக பயண ஊழியத்திற்குப் பொருத்தமான சகோதரனாக அவர் கருதப்படுவதில்லை என்பதையே குறிக்கின்றதாய் இருக்கும். இன்னுமாக அச்சகோதரன் பிரசங்கிக்கக் கூடாது என்பதைக் குறிப்பதாய் இராது; மாறாக சொசைட்டியானது அவரைத் திவ்விய வார்த்தையின் விரிவுரையாளராய்ப் பரிந்துரைக்காது என்பதை மாத்திரமே குறிக்கின்றதாய் இருக்கும்.

எந்த ஒரு சகோதரன் கேள்விகளுக்குப் பதிலளிக்க விருப்பமுள்ளவனாகக் காணப்பட்டும், ஆனால் தன்னுடைய பதில்களில் கொஞ்சம் குழப்பத்தினை வெளிப்படுத்துகிறவராக இருப்பாரானால், இது அவர் சொசைட்டிக்கும், தேவனுடைய வார்த்தைத் தொடர்புடையதாக எது சத்தியம் என்று சொசைட்டியினால் நம்பப்படுபவைகளுக்கும் பிரதிநிதியாகிடுவதற்கும் முன்னதாக, இன்னும் அதிகமான போதனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்று எங்களுக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கும். அத்தகைய சகோதரன் அநேகமாக Brooklyn/புரூக்கிலினுக்குக் கொண்டுவரப்பட்டு, கொஞ்சக்காலம் மற்ற ஊழியங்களில் பங்கெடுப்பதற்கு வாய்ப்பு அருளப்படுவார் மற்றும் ஒவ்வொரு மதிய வேளையிலும் நடைபெறும் வேதாகம ஆராய்ச்சி வகுப்புகளிலும் பங்கெடுக்கும் வாய்ப்பினை அடைவார்; இன்னுமாக முழுக்காரியமும் முழுமையாய்ச் சரியாகிவிடவும், தெளிவாய்ப் பார்த்து, புரியப்படத்தக்கதாகவும் சத்தியம் தொடர்பான பாடங்களில், எவ்வகையான கேள்விகளைக் கேட்பதற்கான வாய்ப்பினை முழுச்சுயாதீனத்துடன் பெற்றிருப்பார்.

## சிநேக பாவமான ஒரு யோசனை

பெத்தேல் குடும்பத்திலுள்ள/Bethel family சகோதரிகளில் அநேகர், இக்கேள்விகளைக் குறித்துக் கேள்விப்பட்டவர்களாக, பயிற்சியாய் இருக்கும் மற்றும் அறிவடைதலாய் இருக்கும் எனும் கண்ணோட்டத்தில், இக்கேள்விகளுக்குத் தாங்கள் பதில் கொடுக்கத்தக்கதாக, தங்களுக்கு அக்கேள்வி பட்டியலைத் தரும்படிக்கு விசேஷித்த வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதைப்போலவே பல்வேறு சபைகளிலுள்ள மூப்பர்களும், உதவிக்காரர்களும் கேள்விகளுக்காக வேண்டிக்கொண்டுள்ளனர். சொசைட்டியினுடைய V.D.M. degree/ பட்டத்திற்குத் தகுதியடையத்தக்கதாக, இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க முடிகின்றவர்களை, மூப்பர் ஊழியத்திற்குத் தேர்ந்தெடுப்பது என்பது, அனைத்து இடங்களிலுமுள்ள வேதமாணவர்கள் அடங்கியுள்ளதான சபையார் யாவருக்கும் நன்மை பயக்கின்றதாய் இருக்கும். இது மூப்பர்கள் மத்தியில் அநேகம் மாற்றங்களைக் கொண்டுவந்திடும்; ஆனாலும் அவை நன்மையான மாற்றமாய் இருக்குமென நாங்கள் நம்புகின்றோம். இன்னுமாகச் சத்தியத்தினை, அதாவது சத்தியத்தினை மாத்திரம் போதித்திட உள்ளப்பூர்வமாய் விரும்புகின்றதான மூப்பர்கள் யாவரும், இக்கேள்விகளால் கிடைக்கப்பெறும் உதவியினைப் பெற்றுக்கொள்வதில் சந்தோஷமடைவார்கள் என்று நாம் நம்புகின்றோம் .

சிலசமயம் அருமையான நண்பர்களில் சிலர், தாங்கள் மூப்பர்களாகத் தெரிந்துகொள்ளும் அல்லது ஏற்படுத்தும் நபர்களின் விஷயத்தில் எவ்வளவு அஜாக்கிரதையாய்க் காணப்படுகின்றனர் என்று பார்க்கையில் - கர்த்தருடைய வார்த்தைகளின் கட்டளைக்கு முரணாக பெரும்பாலும் நூதன சீஷர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, இப்படியாய் நூதன சீஷனுக்கும், சபையாருக்கும் பாதகம் உண்டாக்குவதைப் பார்க்கையில் - நமக்கு ஆச்சரியமே ஏற்படுகின்றது (1 தீமோத்தேயு 3:1-7). மூப்பர் ஊழியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட தேவனுடைய பிள்ளையை மாத்திரமே தேர்ந்தெடுக்கும் விஷயத்திற்கு அடுத்தப்படியாக இருக்க வேண்டிய கேள்வி - எந்தளவுக்கு அச்சகோதரன் ஆராய்ச்சியையும், அறிவடைவதற்கான சிலாக்கியங்களையும் பயன்படுத்தியுள்ளார்? என்பதேயாகும். ஒருமுறையேனும் வேதாகம பாடங்களின் ஆறு தொகுதிகள்/volumes அனைத்தையும் வாசித்திராத அல்லது வாட்ச் டவர் இதழின் தொடர்ச்சியான வாசகனாக இராத, எந்த ஒரு சகோதரனையும் மூப்பராகத் தேர்ந்தெடுப்பது ஞானமற்றக் காரியமாய் இருக்கும் என்பது எங்களுடைய கருத்தாய் இருக்கின்றது. சொசைட்டியானது எந்த அதிகாரத்தையும் செலுத்தவில்லை, எந்த விமர்சனமும் செய்யவில்லை, மாறாக கர்த்தருடைய காரணங்கள் மற்றும் கர்த்தருடைய ஜனங்களின் நலனுக்காய், அறிவுரை மாத்திரமே கொடுப்பதாக நினைவில் வைக்கப்படுவதாக.

---

--3239--

## சீயோனின் தேசிய கீதம்.

**எத்தனை காலம் என் மனம் ஏங்கும்,**

Ethanai kaalam en manamEngum

Asong as the heart within

A Jewish Soul is yearning

இந்த ஆத்மா நிதம் வாஞ்சிக்கும்

Indha Aathma nitham vaanjikkum

And to the edges of the east, forward,

ஒரு முனை தொடங்கி மறுமுனைமட்டும்

Oru munai thodangi maru munai mattum

**சீயோனை நான் என்றும் கண்காணிப்பேன்**

Zionai naan endrum kankaanippen

An eye watches towards Zion

Our hope is not yet lost,

**எங்கள் நம்பிக்கை அழிந்திடவில்லை,**

Engal nambikkai azhinthida villai

**ஈராயிரம் வருஷம் விசுவாசித்தோம்,**

The hope of two thousand years,

Irendaayiram aandugal visuvaasithom

To be a free land in our own land

**எங்கள் சொந்த தேசத்திலே சுதந்திரமாகவே அரசாள்வோம்**

Engal Sontha desathile suthanthiramaagave Arasaallvom

**எங்கள் சொந்த தேசத்திலே மேசியாவுடனே நாடாள்வோம்**

The land of Zion and Jerusalem

**சீயோன் எருசலேம் நாட்டினிலே**

Zion Jerusalem naatinile Messiahvudane Naadallvom

**மேசியாவுடனே நாடாள்வோம் - ஆமென்.** **--3240--**

Engal Sontha Naatinile Messiahvudane Arasaallvom – Amen.